சிந்தனை

மலர் [illegible] இதழ் 1-6
ஜனவரி-டிசம்பர் 1972

பேராதனை
1972

DOCUMENTATION WORK

Completed

தமிழரசு

திங்கள் இருமுறை ஜூலை 1 1972 35 காசு

1

544/25.

-55'

செழுமையான விளைச்சலுக்கோர் சிரான
சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.

3

தமிழரசு

❋

மலர் 3
இதழ் 1
1.7.1972

JL
V2llm;N70
N72.3

69681

முதல்வரின்
குறளோவியம்
சிறைச்சாலைகள் அல்ல
மறுவாழ்வு இல்லங்கள்!
கண்ணிற் சிறந்ததோர் உறுப்பில்லை
கவலை தீர்த்தார்க்கு நிகரில்லை!
திருமழிசையில் சித்தரஞ்சன்
கேளுங்கள் கொடுக்கப்படும்
வீடு கிடைத்தது: வேதனை தீர்ந்தது
தஞ்சை மாவட்ட உழவர்களுக்குத்
தகுந்த சில பரிந்துரைகள்
எதிர்கால வாழ்வுக்கு எளிதான வழி
வேண்டுதல் பதிகம்
உண்மையின் சந்நிதி (தொடர்கதை)
கல்லெழுத்துக் கற்க......
வாழ்வோர் யார்? (கவிதை)
முத்து மாலை (சிறுவர் கதை)
ஆராய்ச்சி மணி (படக்கதை)
வெண்பாப் போட்டி
குறுவைச் சாகுபடிக் குறிப்புகள்



முகப்பில்
குறளோவியம்
தரும் ஓவியம்.

குறளோவியம்

தமிழக முதல்வர் கலைஞர்



யானை ஒன்று தண்ணீர் குடிப்பதற்காக ஆற்றிலே இறங்குகிறது. அப்போது அந்த யானையை முதலையொன்று பிடித்துக் கொள்கிறது. யானை உயிர் தப்ப முடியாமல் தவிக்கிறது. அலறுகிறது. கடைசியாக அந்த யானை, நாராயணா! நாராயணா!! என்று கத்துகிறது. உடனே மகாவிஷ்ணுவான நாராயணன் தோன்றி அந்த யானையை முதலையிடமிருந்து விடுவிக்கிறான். இதைத்தான் புராணிகர் "கஜேந்திர மோட்சம்" என்று சொல்வார்கள்.

மலை போன்ற யானையும் நீரில் கால் வைத்துவிட்டால் முதலையிடம் சிக்கிவிட வேண்டியிருக்கிறது என்பதை விளக்கவும் அதுபோலவே தரையிலே பலமில்லாத முதலை தண்ணீரில் இருந்தால், யானையை இழுக்கக்கூடிய பலம் பெறுவதாகவும் சொல்லப்படுவதை எடுத்துக் காட்டவும் நிகழ்ச்சிச் சித்திரம் தீட்டிய புராணிகக் கற்பனையாளர், இறுதியில் அந்த அபயக் குரல் எழுப்ப வைத்து, அனந்தசயனனையும் அங்கே வரவழைத்து– கஜேந்திர மோட்சம் என்ற கதைகக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

தண்ணீரில் இறங்கி முதலை வாயில் காலைக் கொடுத்துப் பரந்தாமனை அழைத்துப் பரகதி அடைந்த யானை, புராணிகருடைய யானை!

இதோ, இன்னொரு யானையை நமது வள்ளுவப் பெருந்தகையார் அறிமுகப்படுத்துகிறார், பாருங்கள்! வேல்கொண்டு வீரன் வருகிறான். அந்த வீரனை யானை எதிர்க்கிறது. வீரனும் யானையை வெல்லத் தரமாகப் போரிடுகிறான். தமிழனல்லவா? முதுகு காட்டாத மரபு அல்லவா?

நிமிர்ந்த நெஞ்சோடும், தூக்கிய வேலோடும் அவன் யானை மீது பாயும்போது யானையும் தந்திரமாகத் தன் தந்தங்களை நீட்டி, அந்த வீரனின் வயிற்றைக் குத்தி, அவனை மேலே தூக்கிவிடுகிறது. மரண முகப்பிலே அந்த வேலேந்தி வேதனைக் குரல் எழுப்புகிறான். அதுவும் வீரத்தோடு கலந்து வரும் குரல்தான். வீரனைக் குத்திய வேகத்திலே, அந்த வேழம் வெற்றி நடை போட்டு, ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் – அங்குமிங்கும் ஓடுகிறது. அப்படி ஓடும்போது ஒரு பாறைக்குப் பக்கத்திலே தேங்கி நிற்கும் சேறு நிரம்பிய குட்டையிலே காலை வைத்து விடுகிறது. காலை எடுக்க முடியவில்லை. கனமான மிருகம் யானை; அதன் கனம் பூமியை நோக்கி இறங்குகிறதே தவிர மேலெழுந்து கரையேற யானைக்கு உதவி செய்யும் அளவினதாய் இல்லை. யானை தவிக்கிறது. அப்போது ஒரு வேடிக்கை நடக்கிறது. என்ன அந்த வேடிக்கை? ஒரு நரி, யானையின் நிலைமையைப் பார்த்துவிடுகிறது. இதுதான் சமயமென்று, அந்த நரி யானையின் மீது பாய்ந்து தன் ஆகாரத்திற்கு வழி தேடுகிறது. யானையின் உடலெங்கும் நரி தன் பற்களாலும்—நகங்களாலும் பிராண்டி, ரத்தம் குடிக்கிறது. மாமிசமும் தின்கிறது. யானையோ, எதிர்த்திட முடியாமல் ஏங்குகிறது. வேதனை தாங்காமல் துடிக்கிறது. சேற்றிலே மட்டும் அது அகப்படவில்லையானால் அந்த நரி ஒரே மிதியில் கூழாகிவிடும். இப்போதோ, நரிக்கு ஒரே வேட்டை! நாள் முழுதும் காட்டைச் சுற்றினாலும் இதுபோல் உணவு அதற்குக் கிடைக்காது!

வீரனையே சுழற்றும் பலமுள்ள யானை, சேற்றிலே சிக்கினால் நரியிடமும் தோல்வியுறும் என்ற கருத்தை வள்ளுவர் அழகான ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார் குறள் மூலமாக! யானையின் வாயிலாக ஓர் அரசுக்கு வேண்டிய அறிவுரையை வழங்குகிறார்.

எத்துணை படைபலம் இருந்தாலும் – ஒரு பலவீனத்தின் காரணமாக அந்த அரசு பலமற்ற எதிரிகளால் பறிக்கப்படலாம் என்பதற்காகவே வள்ளுவர் யானையின் வலிமையையும், அது சேற்றிலே செல்லாக் காசாகிவிட்ட சேதியையும் சிறுநரி ஜெயித்த விந்தையையும் குறளோவியம் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

உலகிலே போற்றப்படும் பெரும் பெரும் மேதைகளும்—வீரர்களும்கூடச் சிறு தவறுகளாலேயே சிறியவர்களால் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மராட்டியம் தந்த மாவீரன் சிவாஜி, காகபட்டர் என்னும் மதத் தலைவனுக்கு மண்டியிட்டான்! உலக சரித்திரத்தின் ஜோதிவிளக்குகளான சீசரும் ஆண்டனியும் தங்கள் சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்க முடியாமல் மண்ணாகப் போனதற்குக் காரணம், அழகி கிளியோபாட்ரா தந்த இன்பச் சேற்றில் அகப்பட்டுக் கொண்டதனாலன்றோ!

இந்தச் சேற்றிலேயிருந்து நமது தேசம் தனது காலை எடுத்துத் தீர வேண்டும் என்பதற்காகத்தான் போலும், அன்றைக்கே வள்ளுவர், யானையின் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறார்!

நமக்கு மட்டுமல்ல—நாடாளும் அரசுகள் அனைத்துக்கும் நமது தமிழ்த் தலைவர் தந்த குறளறம்—இதோ தரப்படுகிறது! வேல் கொண்ட வீரனைக் குத்திக் கொன்ற யானை சேற்றிலே சிக்கினால்—அதை நரி கூட எதிர்த்து அழித்துவிடும்.

"காலாழ் களரின் நரி அடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு".

காடு வளர்ப்போம்!

காட்டுவளத்தை பற்றியும், சிங்கோனாத்துறை பற்றியும் பேசிய உறுப்பினர்களெல்லாம் பொதுவாகக் காட்டிலாக்கா நிலங்களை ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, நிலமற்றவர்களுக்குப் பிரித்துத் தர வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கிருக்கும் காட்டிலாக்காவின் தலையாய கடமை— குறிக்கோள் காட்டுக்கு இருக்கின்ற நிலங்களைப் பாதுகாத்தல் - பேணிப் பாதுகாத்தல், இரண்டாவது, காடுகளை வளர்த்தல். ஆகவே இரண்டு கொள்கைகளையும் அரசு ஏற்றுக்கொண்டு காடுகளைப் பராமரிப்பதிலேயும், புதிதாகக் காடுகளை வளர்ப்பதிலேயும் இன்றைக்கு அகில இந்தியா மட்டுமல்ல, அகில உலக அரங்கிலே சொல்லப்படும் கருத்தின் அடிப்படையிலே ஏற்று ஓரளவிற்குச் செயல்பட்டு வருகிறோம்.

நீலகிரி மலையைப்பற்றி திரு தேவராசன் அவர்கள் பேசும் பொழுது ஆண்டாண்டு தோறும் அந்த மலைப்பகுதி அழிக்கப்பட்டு மழை வளம் இல்லை என்று சொன்னார்கள். நமது ஜவ்வாது மலையைப்பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர் வந்தீப் அவர்கள்கூட இவ்வாறு மலை நாளுக்குநாள் அழிக்கப்பட்டுச் சிறுகி வந்து, விவரம் தெரிந்தகாலம்வரையில் சராசரி பருவமழை குறைந்ததாகக் கூறினார்கள். இன்றைக்கு விஞ்ஞானிகளின் கணக்கின்படி பார்த்தால் நிலப்பரப்பு 33 சதவிகிதம் தேவை என்று சொல்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 16-க்கும் 17-க்கும் இடையிலே இருக்கிறோம் என்று திரு சௌடி சுந்தரபாரதி அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வாதத்தை வைத்துப் பார்த்தால் அறிஞர்கள், காட்டிலாக்காவில் நிபுணத்துவம் உடையவர்கள், மழை பெய்ய வேண்டுமென்ற சூழ்நிலையில் நிபுணர்கள் கருத்தைப் பார்த்தால் காட்டிலாக்கா நிலங்களை மீண்டும் விநியோகிக்காமல் அதை வளர்க்கும் முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்றுதான் நம்மைப் பொறுத்தவரையில் புலனாகின்றது. ஏதோ மலைப்பகுதியில் மரங்கள் அடர்த்திருக்கின்ற காடுகளைப் பாதுகாத்தால் போதும், தரை மட்டத்திலிருக்கின்ற காடுகளாக இருக்கின்ற தரிசுகளாக இருக்கின்ற அல்லது பொட்டல்களாக இருக்கின்ற பகுதிகளை விவசாயிகளுக்கு நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவது நல்லது என்றும் சொல்கிறார்கள்.

மலையிலே பெய்யும் மழையினால் காவேரியில் வந்துவிடலாம். மேற்குத் தொடர்ச்சி மலையிலே நீலகிரியிலே பெய்வதால் பவானியாற்றிலே வந்துவிடலாம், மேற்குத் தொடர்ச்சி மலையில் தென்கோடியிலே பெய்யும் மழையின்மூலம் பெரியாற்றுக்கு வந்துவிடலாம், இப்படி மலையிலே பெய்கின்ற மழையின் காரணமாக அந்தந்தப் பகுதிகள் மட்டும் பயன்பெறலாம். எல்லாப் பகுதியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி மலைப் பகுதிகளில் மழை பெய்தும் அதனால் தண்ணீர் போதாத நிலையிலே இன்றைக்கு 75 சதவிகிதம் பகுதிகள் இருப்பதைப் பார்க்கவேண்டும்.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், வட ஆர்க்காடு மாவட்டத்தில் முக்கால் பகுதி, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முழுப்பகுதி, அதற்குப்பின் தெற்கே போனால்கூட திருச்சி மாவட்டத்திலே, தஞ்சை மாவட்டத்திலே மலைப்பகுதி அதிகமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆகவே, ஆங்காங்கேயிருக்கும் காட்டு நிலங்களைக் கொடுத்துவிட்டால் என்ன வரும் என்பதை யோசனை செய்ய வேண்டும். கண்மாய், குட்டை என்று சொல்கிறார்கள். ஊரணி என்று சொல்கிறார்கள், குளம் என்றும் சொல்வார்கள். இவைகளுக்குத் தண்ணீர் வருவது ஆங்காங்கு இருக்கும் சரளைக் காடுகளாக இருக்கும், தரிசுக் காடுகளாக இருக்கும் காட்டிலாக்காவில் பெய்யும் மழையின் மூலம் பெருக்கெடுத்தோடி சிறு ஓடைகள், கால்வாய்களில் தேங்குவதை யோசித்துப் பார்க்க வேண்டும். புதுக்கோட்டைப் பக்கத்திலே காட்டிலாக்காவிலே தரை மட்டத்திலே இருக்கும் நிலங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கிணங்க நான் சமீபத்தில் பார்வையிடச் சென்றேன். அந்தக் கால்வாய்க்கு வரும் தண்ணீர் பக்கத்திலேயிருக்கும் சிறு சிறு புதர் அடங்கியுள்ள வேறு பயனற்ற 400 ஏக்கர் பொட்டலில் பெய்யும் மழையினால் நிரம்பி 400 ஏக்கர் நஞ்சையாக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். யாருக்கும் கொடுப்பதற்கு அனுமதிக்க மாட்டோம், இந்த 400 ஏக்கரும் தரிசாகவே இருக்க வேண்டும். மேய்ச்சலுக்குப் பயன்படுகிறது, நீர்பிடிப்பதற்குத் தாயகமாக விளங்குகிறது என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே தரிசாக இருப்பதைக் கொடுத்துவிடுவது என்பது நல்லதாக எங்களைப் பொறுத்த வரையில் கருதவில்லை. சொல்லக்கூடிய நிபுணர்கள் இப்படிச் சொல்கிறார்கள். ஆங்காங்கு பெய்யும் மழையினால் வரும் தண்ணீர் குளம் குட்டைகளில் நிரப்புவதன் மூலமாக அங்கே ஊற்றுக்கள், கிணறுகளெல்லாம் வெட்டப்படுகிறது. அதன் மூலம் கிணறுகள் தோண்டி வருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கும் பொழுது இன்றைக்கு இந்தியாவிலேயே மூன்றில் ஒரு பங்கு நிலம் வேண்டுமென்று சொல்கிறார்கள். இங்கே 16·17 சதவிகிதம் என்றும் இவைகளைத் தரிசு என்றும் குற்றம் சாட்டினால், பொட்டல் என்றும் புதர் என்றும் சொன்னால், தரை மட்டத்தில் இருக்கிறது என்று சொன்னால் கொடுத்துவிடுவது நியாயமா என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுப்பதன் மூலம் ஏழைகளின் வாழ்க்கை பொங்குகிறது-குலுங்குகிறது என்றால் அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமென்று கருதினால் முதல் கடமையாக தமிழக அரசு தயங்காது கொடுக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டு 50,000 ஏக்கர் காட்டிலாக்காவுக்குச் சொந்தமான நிலத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு மத்திய அமைச்சரவையிலிருந்து தாக்கல் வந்தது. காட்டிலாக்காவில் பரம்பரை பரம்பரையாக, உலகம் தோன்றியது முதல், அரசு ஏற்பட்ட காலத்திலேயிருந்து பொது நிலமாக, அரசாங்கச் சொத்தாக, பொது நன்மைக்காக வெப்பதட்பத்தைப் பாதுகாக்க மழையை உருவாக்குவதற்காகக் காடு காக்கப்பட்டு வருகிறது: அவைகளைக் கொடுத்து விடுவது அவ்வளவு நல்லதல்ல என்று மத்திய அரசு சொல்வதிலே எல்லாம் சரி இல்லை என்று சொல்ல முடியாது, எல்லாம் சரி என்றும் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட நல்ல காரியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும் கடமையிலே இருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பள விகிதத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். 1967-ல் நாம் ஆட்சிபீடத்தை ஏற்ற பிறகு எவ்வளவு முறை சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். ஜேம்ஸ் அவர்கள் இங்கே பேசினார்கள். நானும் சட்ட அமைச்சர் அவர்களும் அறையிலே விஷயங்களை எடுத்துச் சொன்னோம். அப்போது அவர்கள் எங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அது அறையில் நடந்த விவாதம்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1966-ல் இவர்களுக்கு இருந்த கூலி விகிதம் ஆணுக்கு ரூ. 1-59; பெண்ணுக்கு ரூ. 1-20. தவிர, நடுத்தர ஆளுக்கு 0-80 காசு, ஆனால், 1967-ல் ரூ. 1-59 காசு, 2-65 காசாகவும், ரூ. 1-20 காசு ரூ. 2-35 காசாகவும், 0-80 காசு ரூ. 1-72 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் 1968-69-ல் ரூ. 2-65 காசாக இருந்தது ரூ. 2-77 காசாகவும் ரூ. 2-35 காசாக இருந்தது ரூ. 2-47 காசாகவும், ரூ. 1-72 காசாக இருந்தது ரூ. 1.85 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

தனியார் தோட்டத் தொழிலாளர் பற்றி மாண்புமிகு கே. டி. கே. அவர்கள்கூடக் கூறினார்கள். அரசுத் துறையில் கொடுக்க வேண்டுமென்று சட்டபூர்வமாகக் கட்டாயம் இல்லை. எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு எந்த அளவுக்கு அந்தத் தொழிலாளர்களுக்குத் ஊதியத்தைக் கூட்டிக் கொடுத்து வந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி வந்திருக்கிறோம். 1966-ஆம் ஆண்டில் ரூ. 1-59 காசாக இருந்ததை இன்று நாம் ரூ. 3-32 காசு அளவுக்கு ஏற்றியிருக்கிறோம். இன்னும் அங்கு நல்ல முறையில் இலாபம் வருமானால் மேலும் சம்பளத்தை ஏற்றலாம். அந்தத் தொழிலாளர்கள் படிப்படியாக நன்மை அடைவார்கள். அந்தத் தொழிலாளர்களிடையே சுமுகமான சூழ்நிலை இருக்கிறது. தொழிலாளர்களை, தலைவர்கள் அறிவார்கள். அவர்கள் கேட்டதைப் பெற்றிருக்கிறார்கள். தொழிலாளர்களிடையே சுமுகமான நல்லுறவு ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சின்கோனா பற்றி நேரம் அதிகமில்லாத காரணத்தால் விரிவாகப் பேச விரும்பவில்லை. சின்கோனா தொழிலாளர்களுடைய சம்பளம் 1966-67-ல் ரூ. 1-75 காசாக இருந்தது இன்றைக்கு 2-60 காசு அளவுக்கு நான்கு முறை அவர்களுடைய சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிங்கோனா தொழிலாளர்களுக்கு லட்ரின் போன்ற நல்ல பல வசதிகளைச் செய்து தருவதற்காக இந்த ஆண்டு 3½ இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வால்பாறையில் சரணாலயம் ஏற்படுத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதுமலை சரணாலயத்தை விஸ்தரிப்பது பற்றி நண்பர் தேவராசன் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றியும் ஆய்வில் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சாலைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மூங்கில் போன்ற மூலப் பொருட்களைக் கொடுப்பதாகக் கூறினார்கள். உதாரணத்திற்குக் கேரளாவைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு மூங்கில் டன் ஒன்று 5 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். ஆனால், நாம் 10, 15 ரூபாய்க்கு வாங்குகிறோம். இதனால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு தொழில் அதிபர் கேரளத்திற்குச் சென்று தொழிலை ஆரம்பிக்கக்கூடிய நிலைகூட ஏற்பட்டிருக்கிறது.

மின்துறை அமைச்சர் ஓ.பி.இராமன்

நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர வேண்டுமென்றால் இதுபோன்ற சலுகைகளைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஆனால், பிறகு நமக்கு சேல்ஸ்டாக்ஸ் மூலம் ஒரு வருடத்திற்கு 15 இலட்சம், 20 இலட்சம் ரூபாய் வருகிறது. அதோடு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. வெளி நாட்டுச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது. விஸ்கோசை எடுத்துக் கொண்டால் அதுவெளிநாட்டுச்செலாவணியை ஈட்டித் தருகின்ற ஒன்றாக இருப்பதால் உண்மையிலேயே நாம் அதை வரவேற்கவேண்டும். தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் போது 'நீட்பேஸ்ட்' இன்டஸ்ட்ரீஸ், என்ற அளவில் பார்த்து ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழிலமைச்சர் மாதவன் அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காடுகள் அழிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். முடிந்த வரையில் அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீண்டும் எடுக்கப்படும். பேசப்பட்ட கருத்துக்களுக்கு முழுவதுமாகப் பதில் சொல்லாவிட்டாலும் அவை நன்கு பரிசீலனை செய்யப்பட்டுத் தக்க நிவாரணம் காணப்படும். திரு குருசாமி அவர்கள் ஒரு மியூசியம் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். பரிசீலனை செய்து கொண்டிருக்கிறேன். சாத்தியக்கூறு இருந்தால் வைக்கலாம் என்று கூறிக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப்பெற்று மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலைகள் அல்ல; மறுவாழ்வு இல்லங்கள்!

சமுதாயத்தினுடைய அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கையைக் கவனிப்பதுதான் ஒரு நல்ல அரசினுடைய திட்டமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசினுடைய திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்தினால்தான் அது ஒரு நல்ல அரசாக இருக்கக்கூடும். இன்றைக்கு இருக்கின்ற அரசு பிச்சைக்காரர்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடும்பொழுது ஏசலுக்கு, இழிமொழிகளுக்கு, ஏகடியங்களுக்கு ஆளாகிற சூழ்நிலையை நாம் காண்கிறோம்.

இந்தக் கொடுமைகளை நீக்க அரசு எடுத்துக்கொண்ட முதற்கட்ட முயற்சிகளிலே ஒன்றுதான் பருகூரிலே இன்று கட்டப்பட்டிருக்கின்ற இந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்வு இல்லமாகும்.

இப்படிப்பட்ட இல்லங்களுக்கு தொழுநோய்ப் பிச்சைக்கார நண்பர்கள் தாங்களாகவே வலுவில் வருகிறார்கள். அதனையும் நான் உணருகிறேன். வேறு சிலர் அழைத்தாலும் வர மறுக்கிறார்கள். அதையும் நான் உணர்கிறேன்.

இன்றைக்குப் பத்திரிகைகளிலே செய்தி பார்த்தேன். அரியானா மாநிலத்தில் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்குச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற செய்தியைப் பார்த்தேன்.

இந்தச் சட்டம் இன்று அரியானாவிலே புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம். ஆனால் நம்முடைய தமிழ் நாட்டில் நீண்ட காலமாக இப்படியொரு சட்டமிருக்கிறது. பிச்சை எடுப்பதைத் தடுக்கின்ற சட்டம் தமிழ் நாட்டிலே இருக்கிறது. ஆனால், ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்குச் சட்டம் மாத்திரம் போதாது என்பது நம் எண்ணம்.

எனவேதான் சட்டங்கள் செய்யப்படுகின்ற நேரத்தில் அந்தச் சட்டங்கள் மனிதன் மீது கொடுமையாகப் பாயாமல் இருக்க வேண்டும். அந்தச் சட்டத்தின் துணைகொண்டு சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பாடுபடுகின்ற ஒரு அரசு கூடுமான வரையில் ஏன் இந்தச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கங்களை பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி அவர்களை நம் வழிக்குத் திருப்ப வேண்டியது மிக மிக இன்றியமையாத ஒன்றாகும். அந்த முதற்கட்ட வேலையைத்தான் இன்றைக்குத் தமிழக அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

ஆனால் அரியானா மாநில அரசாங்கத்தின் செயலாளர் சமூக சீர்திருத்தப் பணியினுடைய செயலாளர் ஒரு அறிக்கை மூலம் அந்தச் சட்டம் செயல்படுகிறது என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார். மே மாதம் இரண்டாம் தேதியிலிருந்து அந்தச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. ஏறத்தாழ 45 நாட்களில் எத்தனை பிச்சைக்காரர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அரியானா மாநிலத்திலே உள்ள ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்களில் 16 பேர்தான் போலீசாரால் அந்தச் சட்டத்தின்படி பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு பிச்சைக்காரர் தனக்குத் தாடியிருந்தால் பிச்சைக்காரன் என்று காட்டிக் கொடுத்துவிடும்; தன்னைப் போலீசார் கைது செய்ய நேரிட்டுவிடும் என்று தாடியை எடுத்துவிட்டு ரிக்ஷா இழுக்கச் சென்று விட்டார். இன்னொரு பிச்சைக்காரர் பிச்சையெடுப்பதை விட்டு விட்டுக் கை வண்டியிலே சில்லரைச் சாமான்கள் விற்கின்ற வேலைக்குச் சென்றுவிட்டார். மற்ற பிச்சைக்காரர்கள் எல்லாம் மாநிலத்தை விட்டே வெளியே ஓடிவிட்டார்கள் என்று அரியானா மாநிலம் பற்றிய செய்தி வெளிவந்திருக்கிறது.

நான் இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், சட்டம் இருக்கிறது தமிழ் நாட்டிலே கூட. ஆனால் சட்டத்தால் பிச்சைக்காரர்களைப் பிடித்து சிறையிலே போட்டு அவர்களைக் கைதிகளாக ஆக்கி அவர்களுடைய வாழ்வு கைதி வாழ்வாகவே இருக்க வேண்டும் என்று செய்வது சரியா? அல்லது அவர்களும் மனிதர்கள், மிருகங்கள் அல்ல; அவர்கள் செய்த குற்றம் வயிற்றுக்கில்லாத காரணத்தால் பசிக் கொடுமையால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பயங்கர நோயினால் வேலை கிடைக்காத காரணத்தினால் வேலை கொடுக்க யாரும் ஒப்பாத நிலைமையினால் பிச்சையெடுக்கிறார்கள். அப்படிப் பிச்சை எடுக்கின்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும். ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள்.

அவர்களையெல்லாம் இது போன்ற விடுதிகளிலே வாழச் செய்து அவர்களுடைய நோயை நீக்குவதற்கு நல்ல டாக்டர்களை வைத்து, மருந்துகளை அளித்து நோய் நீக்குகின்ற அந்தக் கட்டத்திலேயே அவர்களுக்குச் சில கைத்தொழில்களைக் கற்றுக் கொடுத்து அவர்களுக்கு நல்ல உணவு கொடுத்து அவர்கள் இருப்பது ஒரு விடுதியே தவிர, சிறைச்சாலை அல்ல! அவர்கள் மறுவாழ்வுக்கு வந்திருக்கிறார்களேயல்லாமல் தண்டனை அனுபவிப்பதற்கு வந்த குற்றவாளிகள் அல்ல என்ற உணர்வோடு அவர்களைப் பழக்கிட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விடுதிகள் கட்டப்படுகின்றன.

தெருவிலே அலைந்து கொண்டிருக்கின்ற தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் இந்தப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் திறக்கப்படுகிற நேரத்தில் ஒரு வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் வர முடியாது என்று கொஞ்ச நாள்தான் நீங்கள் மறுத்துக்கொண்டிருக்கலாம். உங்களை வலுவிலே அழைக்கிறோம்.

தன் நோயைத் தீர்த்துக் கொள்வதற்கு வழியில்லாமல் தன் உடம்பிலே ஏற்பட்டிருக்கின்ற தொழுநோய் சமுதாயத்திலே இருந்தே தன்னை நீக்கி வைக்கின்ற அளவுக்கு ஒரு பயங்கரமான தனிமையைத் தனக்கு ஏற்படுத்திவிட்டிருக்கின்ற கொடுமையிலே இருந்து அந்த மனிதனை மீட்பதற்காக நாட்டிலே நடைபெறுகின்ற ஒரு பெருந் திட்டம்தான் இந்தத் திட்டம்.

இதில் அரசாங்கத்தினுடைய நோக்கத்தை உணர வேண்டும். எந்த உள்நோக்கமும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் நாங்கள் பிச்சைக்காரர்களை அணுகுவது அவர்களெல்லாம் ஓட்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கையிலே ஓட்டிருக்கிறது என்பதற்காக அணுகவில்லை. எங்களுக்குத் தெரியும். அவர்கள் கையிலே ஓட்டு இல்லை; ஓடுதான் இருக்கிறது என்பது!

தமிழ் நாட்டில் பிச்சைக்காரர்களுடைய தொல்லை—பிச்சைக்காரர்களால் தமிழ் நாட்டுக்கு ஏற்படுகின்ற தொல்லை என்ற இரு தொல்லைகளிலிருந்தும் நம் சமுதாயம் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்கான எண்ணம் நீண்ட பல நாட்களாக பலருக்கு இருந்திருக்கிறது. கிறித்துவர்கள் வேறு பல நல்ல நோக்கம் கொண்டவர்கள் ஆங்காங்கு சில தனி நிறுவனங்களை இதற்காக அமைத்து அங்கே பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

ஆனால் எல்லா இல்லங்களும் நன்றாக நடைபெறுகின்றன என்று சொல்ல முடியாது.

அதைப் போலவே நகராட்சி மன்றங்கள் பிச்சைக்காரர் விடுதிகளை நடத்த நாம் அவர்களுக்கு ஒப்புதல் அளித்து அரசாங்கத்தின் சார்பில் பிச்சைக்காரர்களுக்குத் தலா பதினைந்து ரூபாய் உதவி செய்து வருகிறோம் என்றாலும், நகராட்சிகளின் சார்பிலே நடைபெறுகின்ற அந்த விடுதிகளெல்லாம் சரியாக நடைபெறவில்லை. ஆகவே அரசாங்கமே இதை ஒரு தீவிரத் திட்டமாக ஆக்க வேண்டும் என்று கருதி வலுவிலே வந்து சேருங்கள். உங்களுக்கு வாழ்வளிக்கின்றோம் என்று இந்த இல்லங்களைத் திறக்கிறோம்.

நீங்கள் வலுவிலே வந்து இதில் சேர வேண்டும். நீங்கள் சேர மறுத்தால் ஒளிந்து திரிந்தால் ஓடிவிடுவோம் என்று மிரட்டினால் நான் பிச்சைக்காரர் நண்பர்களையெல்லாம் கேட்டுக் கொள்வேன். இந்த விடுதிகள் கட்டி முடிந்த பிறகு உங்களுக்கு ஆறாயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குப் போதுமான இடம் தமிழ் நாட்டிலே அமைந்து விட்டது என்கின்ற முழுமையாயான எண்ணம் எங்களுக்கு ஏற்பட்ட பிறகு நான் சொல்லுவேன். அரியானாவிலே இருக்கிற சட்டத்தை விட, இங்கே ஏற்கனவே உள்ள சட்டம் தீவிரப்படுத்தப்பட்டு தெருவிலே அலைகின்ற எல்லாப் பிச்சைக்காரர்களும் கைது செய்யப்பட்டு இல்லங்களிலே கொண்டு வந்து வைக்கப்படுவார்கள் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்வேன்.

இன்று இங்கு கட்டப்பட்டிருக்கின்ற இந்த இல்லத்தில் ஐநூறு பேருக்கு இடம் போதுமான வசதியோடு அமைக்கப்பட்டிருக்கிறது. ஓசா அவர்கள் தந்த கணக்குப்படி இன்றைக்கு ஏறத்தாழ 250 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 250 பேர் சேர்க்கப்பட்டாக வேண்டும். தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் பத்துப் பன்னிரண்டு இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு விடுமேயானால் ஆறாயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களும் ஆங்காங்கே இருப்பதற்கான இடவசதி செய்து கொடுக்கப்படும்.

நோய் நீங்கி, நாங்கள் வெளியிலே சென்று வேலை செய்து பிழைப்போம் பிச்சை எடுக்க மாட்டோம் என்று உறுதியளிக்கின்றவர்கள் நிச்சயமாக விடுவிக்கப்படுவார்கள். பிச்சை எடுக்காமல் நாங்கள் வீட்டிலேயே பராமரிப்பிலேயே இருப்போம். எங்கள் வீட்டார் எங்களைக் கவனித்துக் கொள்வார்கள். எங்களை விட்டுவிடுங்கள் என்று கேட்டு அது உண்மையாக இருந்து வீட்டாரும் அவர்களைக் கவனித்துக் கொள்வார்களேயானால் நாங்கள் அதிலே தலையிடத் தயாராக இல்லை. ஆனால், தெருவிலே வீதி ஓரங்களிலே, கடைத்தெருக்களிலே, பேருந்து நிலையங்களிலே, புகைவண்டி நிலையங்களிலே போக்குவரத்திற்கு இடைஞ்சலாக—சினிமா தியேட்டர் வாசலிலே மக்கள் எங்கெங்கே நெருங்கிப் பழகுகிறார்களோ அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் இன்றைக்குப் பிச்சைக்காரர்கள் இருப்பது அந்த மக்களுக்குத் தொந்தரவு என்பதற்காகச் சொல்லவில்லை. நம்முடைய சமுதாயத்திற்கே இது பெரும் அவமானம்.

அந்த அவமானம் துடைக்கப்பட்டாக வேண்டும். ஆகவேதான் இங்கே இருக்கின்ற கேட்பாரற்றுக் கிடக்கின்ற மனிதனை—கவனிப்பாரற்றுக் கிடந்த மனிதனை—இவன் புறக்கணிக்கப்பட்ட மனிதன் என்று குப்பையிலே தூக்கி எறியப்பட்ட மனிதனை—அப்படிப்பட்ட மனிதனை அவனும் வாழப் பிறந்தவன்தான்; இந்த உலகிலே அவனுக்கும் இடமுண்டு—இந்த உலகில் உள்ள வாழ்க்கையை அனுபவிக்க அவனுக்கும் உரிமை உண்டு—ஆகவே அந்த உரிமையைத் தட்டிப் பறிக்க யாராலும் இயலாது—நம்மால் இயன்ற அளவுக்கு அவனுக்கு வாழ்க்கை தருவோம் என்கிற உறுதியோடுதான் இந்தக் காரியத்தை இன்றைக்கு அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்கு உதவியாக இருக்கின்ற எல்லா நண்பர்களையும் அரசு அலுவலாளரையும் நான் பாராட்டுகிறேன்.

குஷ்டரோகிகள் இருக்கின்ற இடங்களுக்கு வேலை பார்க்க வருவதற்குச் சில அதிகாரிகள் அஞ்சுகிறார்கள் என்ற தகவலும் என் காதுக்கு வருகிறது. நான் அந்த அதிகாரிகளுக்குச் சொல்லுவேன். அதிகாரிகள் படித்தவர்கள். அவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். தொழு நோய் என்பது தொத்து நோய் அல்ல. ஆகவே தொழுநோயானது நம்மைத் தொத்திக் கொள்ளுமோ என்ற பயம் அதிகாரிகளுக்கு இருக்குமேயானால் நாங்கள் தொழுநோய் இல்லங்களுக்குச் சென்று பணியாற்ற மாட்டோம் என்று எந்த அதிகாரியாவது அரசாங்கத்தினுடைய உத்தரவை நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ தட்டிக் கழிக்கத் தொடங்குவார்களேயானால் அவர்களுடைய பதவிக் காலத்தில் அவர்கள் பெறுகின்ற கறுப்பு மார்க்காக அது நிச்சயம் இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[18—6—1972 அன்று பருகூரில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லத்தைத் துவக்கி வைத்து முதல்வர் ஆற்றிய உரை.]

திருப்தியான தகவல்

சென்னை - மத்திய நூலகத்தைப் பற்றிய விவரங்கள் சுருக்கமாகவே தெரிவிக்கப்பட்டிருந்தாலும் தேவையானவை தெரிவிக்கப்பட்டுள்ளன என்று திருப்தி ஏற்பட்டிருக்கிறது.

—டி. ஸ்டெல்லா, சென்னை-83.

மழைக் கட்டுரை

கால்நடைக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் மனுச் செய்கின்ற இந்த நேரத்தில், அந்தக் கல்லூரியின் பணிகளைப் பற்றி அரிய முறையில் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். ' பெய்யெனப் பெய்யும் மழை ' என்று உங்களைச் சொல்லலாம் போல் தோன்றுகிறது.

—செல்வி இலக்குமி, நெல்லை.

இலக்கியக் கண்

' கண் '—கட்டுரை கண்ணைப் போல் ஒளி வீசுகிறது. அதில் காணப்படும் இலக்கிய மேற்கோள்கள் எண்ணி எண்ணிப் போற்றத் தக்கவை.

—புலவர் அழகனார், கோவை.

இலவச இணைப்பாக இருந்தால்........ .

பிற்பட்ட வகுப்பினரின் திருத்தி அமைக்கப்பட்ட பட்டியலை சூன் 16 இதழில் வெளியிட்டிருக்கிறீர்கள். நன்றி. இந்தப் பட்டியலைக் கைக்கடக்கமான முறையில் தனி ஏடாக வெளியிட்டு இலவச இணைப்பாகத் தந்திருக்கக்கூடாதா ?

—ஆர். ராகவன், ஆர்க்காடு.

எதிரொலித் துயரம் !

வழியில் இறந்து கிடந்த ' காகத்தை ' எண்ணிப் பாசொலியார் வடிக்கும் கண்ணீர்க் கவிதை எனது இதய அரங்கத்திலும் துயரத்தை எதிரொலித்து விட்டது. ஆம்! அந்தக் கவிதையைப் படித்து முடித்ததும்—என் வீட்டிலிருந்த பச்சைக் கிளி மடிந்தே போய்விட்டது ! எனக்குக் கவிதை பாட வராது—அதனால் கடிதம் எழுதியிருக்கிறேன்.

—எஸ். அரங்கநாதன், திருச்சி-1.

திருவாரூர் கோயில் மட்டும் தானா !

திருவாரூர் தியாகராச சுவாமி திருக்கோயில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற செய்தியைச் சுவைப்படத் தொகுத்துத் தந்திருக்கிறீர்கள். இதுபோல் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள தொன்மை மிகு ஆலயங்களைப் பற்றிய வரலாறுகளை அவ்வப்போது தரமாட்டீர்களா?

—கே. ஏ. கேசவன்,
திருப்பூர்.

பூரிப்புத் தரும் பயிற்சிக் கூடம்

அயல் நாட்டினராலும் பாராட்டப்படுகின்ற அளவுக்குச் சிலை செய்யும் பயிற்சிக் கூடம் சுவாமிமலையில் இருக்கின்றது என்ற சேதி பூரிப்பைத் தருகிறது !

—ராஜேந்திரன், மாயவரம்.

புதிர்தேவை !

சிறுவர் பகுதியில் சிறுகதையும், படக் கதையும் வெளியிடும் நீங்கள், சிறுவர்க்குரிய புதிர்கள், வேடிக்கை விளையாட்டுகள், பாப்பாக் கதைகள் ஆகியவற்றையும் வெளியிட்டால் என்ன ?

—எம். மீனாட்சி, மதுரை-3.

உயிரோவியம் !

முதல்வரின் சுவைமிகு குறளோவியத்தை முகப்பிலே எழில் மிகு உயிரோவியமாக்கியுள்ள உங்களுக்குப் பாராட்டு.

—கு. பொன்னப்பன்,
தூத்துக்குடி.

வெண்பாப் போட்டி-38

விடுதலை வெள்ளி விழா வெண்பா

1972 ஆகஸ்ட் 15-ஆம் நாளுடன் இந்திய நாடு விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதால் இந்த வெள்ளி விழா ஆண்டில் நமது நாட்டுக்கு இன்னும் ஆற்ற வேண்டிய பணிகளை வெண்பா வடிவில் எழுதிட வேண்டுகிறோம்.

(முடிவு நாள் 16--7--1972.)

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



தரத்தின் வயது 25

கடந்த கால் நூற்றாண்டாக இந்தியாவில் நடைமுறையில் புழக்கத்தில் இருந்து வருகிற ஒரு மூன்றெழுத்து முத்திரை ISI. இந்த மூன்றெழுத்தின் விரிவே Indian Standards Institution) என்பது. அதாவது இந்திய தர நிர்ணயக் கழகம்.

இந்தியாவில் உள்ள தொழில் துறை நிறுவனங்கள் அறிவியல் கழகங்கள் மற்றும் தொழில் நுட்பத் துறை அமைப்புகள் ஆகியவற்றின் ஆதரவோடு 1947-ஆம் ஆண்டு இந்தக் கழகம் நிறுவப் பட்டது.

உற்பத்திப் பொருட்கள், பண்டங்கள், தளவாடப் பொருள்கள் மற்றும் செய்முறைக்கான தர நிர்ணயங்களைத் தயாரித்து வழங்கல், அவ்வாறு தயாரித்து வழங்கப் பெற்ற தர நிர்ணயங்களை நாடு முழுவதும் ஏற்கும்படியாகவும், அனைத்து நாடுகளும் ஏற்கும்படியாகவும் செய்ய முனைந்து செயல்படல், தொழில் துறை உற்பத்திப் பொருட்களுக்குத் தர நிர்ணயச் சான்றிதழ் வழங்கல், நிறுவனங்கள், உற்பத்திக் கூடங்கள் தரமான பொருட்களை உற்பத்தி செய்ய உதவுதல், தர நிர்ணய சம்பந்தப்பட்ட தகவல்களைப் பரப்புதல் ஆகிய பல்வேறு நோக்கங்களோடும் இலட்சியங்களோடுமே இக் கழகம் நிறுவப் பட்டது. இப் பணிகளுக்காக, இக்கழகம் 1947-ல் நிறுவப்பட்டதெனினும், இந்தியத் தர நிர்ணயக் கழக நற்சான்று முத்திரைக்கான சட்டம், (ISI Certification Marks Act, 1952) 1952-ஆம் ஆண்டில்தான் அமல் செய்யப் பட்டது. இச் சட்டம், இந்தியத் தர வரம்புகளுக்கேற்பப் பொருட்கள் அமைந்திருந்தால் அவற்றிற்கு ISI முத்திரையிட வகை செய்கின்றது.

இக் காலத்தில் எதற்கும் போலிகள் மலிந்து, தரமான பொருட்கள் கிடைப்பது அரிதாகி விட்டது. தரக் குறைவான தின்பண்டங்கள், மின்சார சாதனங்கள் முதலியன உயிருக்கே தீங்கு விளைப்பதை நாம் அன்றாடம் கேள்விப் படுகிறோம்—நேரில்— பார்க்கிறோம். எது தரமுடையது? எது போலியானது என்பதையெல்லாம் பாகுபாடு செய்து கண்டறிய முடியாத சூழ்நிலையில் 'போலி'களே உண்மையானவைகளாக — தரமானவைகளாகப் பலநேரங்களில் தேர்ந்தெடுக்கப்படும் படுமோசமான நிலைக்கு முடிவு கட்ட இந்த ISI முத்திரை பெரிதும் உதவுகிறது. ஆம், உள்ளபடியே பொருள் இழப்பையும் ஏமாற்றத்தையும் தவிர்க்கவும் இந்த ISI முத்திரை உதவுகிறது.

தர நிர்ணயங்களை வகுத்தளிக்க இந்த இந்தியத் தர நிர்ணயக் கழகம் ஒன்பது வட்டக் குழுக்களின் மூலம் செயலாற்றுகிறது. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு துறைக்குப் பொறுப்பேற்றுத் தர நிர்ணயங்களை வகுக்கும் பணியைச் செய்கிறது. பல்வேறு துறைகளையும் சார்ந்த வகையில், இந்தியத் தர நிர்ணயக் கழகம் 2,000 தொழில் நுட்பக் கமிட்டிகளையும் துணைக் குழுக்களையும் அறிஞர் குழுக்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

உற்பத்தியாளர்கள், கொள்முதலாளர்கள், பயன்படுத்துவோர், விஞ்ஞான ஆராய்ச்சி—தொழில் நுட்ப நிறுவனங்கள், அரசாங்க இலாகாக்கள் போன்ற பல்வேறு துறையினருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் 24,000-க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் இந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முடிய இந்தக் கழகம் 6,720 இந்தியத் தர நிர்ணயங்கள் வகுத்தளித்திருக்கிறது.

2,400-க்கும் மேற்பட்ட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிஸ்கட், ஐஸ்கிரீம், குழந்தை உணவு, காப்பி பவுடர், கால்நடைத் தீவனம், கோழித் தீவனம், சிமெண்ட், பெயிண்டுகள், சோப், மை, கார்பன் பேப்பர், தெர்மா மீட்டர், கற்பூரம், வாட்டர் மீட்டர், உருக்குச் சன்னல், கதவு, ஹாக்கி மட்டை, எலக்ட்ரிக் மோட்டார், மின்சார கம்பிகள், பேட்டரிகள், ட்யூப் லைட், உருக்குத் தகடுகள், அலுமினியப் பாத்திரங்கள் இன்னும் பல் சாமான்கள் ISI முத்திரையுடன் கிடைக்கின்றன.

இந்தியத் தர நிர்ணயத்திற்கேற்பப் பொருட்களைத் தயாரிக்கும் அல்லது உற்பத்திச் செய்யும் எந்த ஒரு நிறுவனமும் ISI முத்திரைக்காக விண்ணப்பிக்கலாம். தொழில் நுட்பத் திறன் பெற்ற அதிகாரிகள் அந்த நிறுவனங்களுக்குச் சென்று அவற்றின் உற்பத்தித் திறனையும் பரிசோதனைக்கான வசதிகளையும் பார்வையிட்டுத் தரமுள்ள பொருட்களைத் தவறுமல் உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலையை நேரடியாகக் கண்டறிந்த பின்னரே ISI முத்திரையிடுவதற்கான உரிமம் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் சரிவரச் செயல்படுகிறதா என்று கண்டறிய அதிகாரிகள அவ்வப்போது, எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமதாரர்களின் தொழிற் கூடங்களுக்குச் சென்று சோதனையிடுகிறார்கள். முத்திரையிடப்பட்ட ஒரு பொருள் தரக்குறைவாக அமைந்திருக்கிறது என்று ஏதேனும் புகார் வந்தால் அது உடனுக்குடன் இந்த நிறுவனத்தால் விசாரிக்கப்படுகிறது. தரக் குறைவு என்று புகார் செய்யப்பட்ட பொருளும் அதே குறியெண் (Batch) கொண்ட வேறு சில பொருட்களும் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படும். அந்த முடிவின்படி, கழகம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்கிறது.

மிகவும், தரங் குறைந்த பொருளை வாங்கியவருக்கு மீண்டும் தரமுள்ள பொருளை இலவசமாகத் தரவும் ISI வகை செய்கிறது. உற்பத்தியாளர்கள், வேண்டுமென்றே தரக் குறைவு செய்திருந்தால் அவர்களது உரிமங்களை ரத்துச் செய்து அபராதம் விதிக்கவும் கூடும்.

இவ்வாறு தர நிர்ணயம் செய்து, உற்பத்தியாளர்களுக்கும் உபயோகிப்போருக்கும் உதவுகிற இந்தியத் தர நிர்ணயக் கழகத்தின் தலைமைச் செயலகம் புது டில்லியில் இயங்குகிறது. சென்னை, கல்கத்தா, கான்பூர், ஹைதராபாத், பெங்களூர் ஆகிய பெரு நகரங்களில் இந்நிறுவனத்தின் கிளைகள் உள்ளன.

தரங்களைக் காக்க வேண்டிய தன் இன்றியமையாமை குறித்த உணர்வைப் பரப்பி வெற்றி பெற்று வரும் இக் கழகத்தின் வெள்ளி விழா கடந்த மே மாதம் 26—30 நாட்களில் சென்னையில் சிறப்பாக நடைப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

கண்ணிற் சிறந்ததோர் உறுப்பில்லை

'நிறைசெல்வத் திருவாரூர்'
'தேராரும் திருவாரூர்'
'சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்'
'செல்வம் மல்கிய திருவாரூர்'
தேசமல்கிய தென்திருவாரூர்
'உதித்தவர்உதித்திடா ஆரூர்'

—என்று நிறைமொழி மாந்தர் மறை வழிப் புகழைக் குறைவிலாது பெற்ற திருவாரூர் திருநகரம்— சோழ மன்னருடைய தலைநகரம் ஐந்தினுள் மிகத் தொன்மையானது !

இந்நகருக்கு

கமலாலயபுரம்
க்ஷேத்ரவரபுரம்
ஆடகேசுர புரம்
தேவயாகபுரம்
கந்தபுரம்
முசுகுந்தபுரம்
கலி செலா நகரம்
அந்தர மகேசபுரம்
வன்மீகபுரம்
சமற்காரபுரம்
மூலாதாரபுரம்
சக்திபுரம்—என்று

புராணப் பெயர்கள் பலவுண்டு. இந்தப் புராணங்களுக்குக் கதைகளும் உண்டு. ஆனால் அந்தப் பெயர்களைவிட மிகச் சிறந்த பெயரை அண்மையில் திருவாரூர் பெற்றது. அந்தப் பெயர் தான்—

``கண் கொடுத்த ஊர்''

கண்ணொளி இழந்தவர்களின் கவலை தீர்த்ததால் பழுதுபட்ட பார்வைக்கு ஒளி கிடைக்காதா என்று பலகாலமாக ஏங்கிய ஏழை நெஞ்சங்களுக்கு இன்னலைத் தீர்த்ததால் இந்த இனிய பெயரைத் திருவாரூர் பெற்று விட்டது.

முதல்வர் பிறந்தநாளை ஒட்டி தமிழக அரசினர் ஆதரவோடு ஆரூரான் சர்க்கரை ஆலையினர் முன்னின்று முதல்வர் கலைஞர் கருணாநிதி பிறந்த நாள் இலவசக் கண் சிகிச்சை முகாமை நடத்தினர்.

இந்த இலவசக் கண் சிகிச்சை முகாமில் திருவாரூரிலிருந்து பத்துப் பதினைந்து மைல் தொலைவிலுள்ள சுற்றுப்புற ஊர்களான கூத்தாநல்லூர், கீழ் வேளூர், கொரடாச்சேரி. நன்னிலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்றனர்.

மூப்பினாலும் போதிய கவனமின்மையாலும் பார்வை பழுதுபட்டு, பழுதடைந்த பார்வையில் ஒளியேற்றிட வழியறியாது — வகை புரியாது தவித்த ஏழை எளிய மக்களுக்கு இந்தக் கண் சிகிச்சை முகாம் ஒரு வரப்பிரசாதம்.

ஆறாயிரம் மக்களுக்கு மேல் இந்தக் கண் சிகிச்சை முகாமுக்கு வந்து மருந்திட்டுப் பார்த்துக் கொண்டும், கண்ணாடி வாங்க எழுதிக் கொண்டும் சென்றிருக்கிறார்கள்.

ஆயிரத்து இருநூற்று ஏழு பேருக்கு 'காட்ராக்ட்' அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

திருவாரூரில் கட்டப்பட்டுள்ள அரசினர் மருத்துவ மனையை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தலைமையில் நமது ஆளுநர் கே, கே. ஷா அவர்கள் திறந்து வைத்த பொழுது, கண் சிகிச்சை செய்து கொண்டோருக்கு மூக்குக் கண்ணாடிகளை முதலமைச்சர் வழங்கினார்.

இது நாள் வரை இருண்டு கிடந்த விழிகளில் ஒளி தெரிந்ததால் அந்த ஏழை எளிய மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளம் கொஞ்சமா ?

* * *

இங்கே வாருங்கள்.

ஒரு பெரியவர் ; பெயர் கதிர் வேலு. அறுபது வயது இருக்கும்; அவர் சொன்னார் :

'' அஞ்சாறு வருஷமா கண்ணு தெரியலே. வேலைவெட்டிக்கும் போக முடியலே, வீட்டுக்குப் பாரமா எந்த வேலை செய்யணும்னாலும் எனக்கு ஒரு ஆளைத் துணை தேடிக்கிட்டு எல்லாருக்கும் தொந்தரவா இருந்தேன். ஆனால், இப்ப ஆப்ரேஷன் செஞ்சதாலே நல்லா கண்ணு தெரியுது. உடம்புக்கே புதுத் தெம்பு வந்ததைப் போல இருக்கு.

'' இந்தமாதிரி ஏழைகளுக்குக் கண் வைத்தியம் செய்த வைத்தியப் புண்ணியவான்கள் நல்லா இருக்கணும். எத்தனை பிறவி எடுத்தாலும் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனுங்க. . . . ''



கவலை தீர்த்தார்க்கு நிகரில்லை!

இப்படித்தான் அங்கே நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் சொல்கிறார்கள். அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளிலும் நன்றியுணர்ச்சியும் மகிழ்ச்சிப் பெருக்கும் நிறைந்து இருக்கிறது.

ஆளுநரும், முதல்வரும், அமைச்சர்களும் மற்றவர்களும் கண் சிகிச்சை செய்துகொண்டவர்களைப் பார்வையிடச் சென்ற பொழுது சில மூதாட்டிகள் உணர்ச்சிப் பெருக்கோடு, கண் கொடுத்தவர்களைத் தெய்வங்களாகக் கருதி வணங்கியதும் வாழ்த்தியதும் மறக்கக்கூடிய காட்சிகளா ?

• • •

கருணாகரன் என்று ஒரு பையன், திருவாரூருக்கு அருகிலுள்ள கங்களாச்சேரிக்குப் பக்கத்திலிருக்கும் பொன்மான் நத்தம் என்ற ஊரைச் சேர்ந்தவன். பதினாறு வயதாகிறது. பிறந்தது முதல் பார்வை தெரியாது. திருவாரூரில் கண் சிகிச்சை முகாமில் சிகிச்சை செய்துகொண்டதால் கண் பார்வையை இப்பொழுது பெற்றுள்ளான்.

கண் பார்வை பெற்ற 16 வயதுச் சிறுவன் கருணாகரன்

விழா மேடைக்கு வந்து ஆளுநருக்கும், தமிழக முதல்வருக்கும் (கலைஞருக்கும்) மாலை அணிவித்து, உணர்ச்சிப் பெருக்கோடு 'கண் கொடுத்த கலைஞர்' வாழ்க என்று அவன் முழங்கிய வேகத்தை எழுத்தில் வடிக்க முடியாது.

கருணாகரன் போன்று பதினாறு ஆண்டுகளுக்குப் பின் பார்வை பெற்ற மனநிலை உள்ள ஒருவரால் மட்டுமேயன்றி மற்றவர்களால் உணரமுடியாது.

பிறந்தது முதல் பெற்றவர்களைக்கூடப் பார்க்க முடியாதவனாக இருந்த அவன், கண் தெரியாமலிருந்தும் இப்பொழுது ஐந்தாவது வகுப்பு வரை படித்திருக்கிறான். ஆனால் எழுதத் தெரியாது. தமிழ் எழுத்துக்களும் தெரியாது. மற்ற சிறுவர்களின் துணையோடு பள்ளிக்குச் சென்று ஆசிரியர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கேட்டு அதை ஒப்புவித்து ஐந்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறான்.

இப்பொழுது கருணாகரனின் உயர் கல்விக்குரிய எல்லாச் செலவுகளையும் செய்வதாக உறுதியளித்துள்ளார் கண் சிகிச்சை முகாமை முன்னின்று நடத்திய திரு வி. எஸ். தியாகராஜ முதலியார்.

• • •

இந்த விழாவில் கண் சிகிச்சை முகாமை நடத்திய மதுரை கண் மருத்துவர் டாக்டர் வெங்கடசாமி, திரு வி. எஸ். தியாகராஜ முதலியார்,

ரூபாய் 15 இலட்சம் செலவில்

திருவாரூரை அடுத்த கடாரம் கொண்டானில் உருவாகியுள்ள கலைஞர் கருணாநிதி

அரசினர் கலைக் கல்லூரி

ஆரூரான் சர்க்கரை ஆலை நிருவாக இயக்குநர் திரு கோபாலரத்தினம் ஆகியோருக்கு ஆளுநர் ஷா பொன்னாடை போர்த்தினார்.

• • •

விழாவிலே உரையாற்றிய கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பழம்பாடல் ஒன்றின் கருத்தினை விளக்கினார் :

''வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய் தப்பின் தூங்கு களிறோ துயருறாது—ஆங்கது கொண்டு வளரும் எறும்பு ஒரு கோடி உய்யும் ''—என்பது பழந்தமிழ்ப் பாடல்.

ஆமாம், யானை தன் வாய்க்குள் செலுத்தும் உணவுக் கவளம் சிதறி வெளியே விழுவதால் அந்த யானை கவலைப் படுவதில்லை. ஆனால் சிதறி விழும் கவளமோ ஒரு கோடி எறும்புகளுக்கு உணவாக அமைந்து விடும். அது போலச் செல்வம் உடையவர்கள் கண் சிகிச்சை முகாம் போன்ற நற்பணிகளுக்குச் செலவிடுவதால் அவர்கள் குன்றி விடுவதில்லை. ஆனால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அக மகிழ்வைத் தருகிறது என்று குறிப்பிட்டார்கள்.

இக் கருத்தைப் பின்னால் பேசிய முதல்வர் அவர்கள் மிகச் சுவைபடக் கால மாறுதலுக்கு ஏற்ப எடுத்துரைத்தார்கள்.

இப்பொழுது யானைகள் கவளத்தைச் சிதறவிட்டால் எறும்புகள் ஏன் சிதறவில்லை என்று கேட்கும் காலம் இது.

''எங்களுக்குக் கவளம் கிடைக்காவிட்டால் யானையின் காதுக்குள் புகுந்து தொல்லை கொடுப்போம்'' என்று எறும்புகள் எண்ணக்கூடிய நிலையையும் முதல்வர் அழகாகச் சித்திரித்துக் காட்டினார்கள்.

வெளிநாட்டிலிருக்கும்பொழுது இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்த வேண்டும் என்று எடுத்துரைத்த டாக்டர் வெங்கடசாமியையும் இப்பொழுது இந்தக் கண் சிகிச்சை முகாமை நடத்தத் திட்டமிட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகனையும் திருவாரூரில் இலவசக் கண் சிகிச்சை முகாமை நடத்திய ஆரூரன் சர்க்கரை ஆலையினரையும் முதல்வர் கலைஞர் பாராட்டினார்கள்.

திருவாரூர் கண் தந்த நிகழ்ச்சியால் மட்டும் கண் கொடுத்த ஊராகவில்லை, கல்விக் கண் கொடுக்கும் ஊராகவும் மாறியது.

• • •

திருவாரூர் நாகை செல்லும் வழியில் இரண்டு கல் தொலைவில் உள்ள கடாரம் கொண்டான் என்று வழங்கப்படும் அண்ணா நகரில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி திறப்பு விழா.

நாற்பத்திரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கலைக் கல்லூரியைப் பார்க்கும் பெரியவர்கள் யாரும், நாம் இந்தக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு இல்லையே என்று ஏங்குவார்கள். அந்த அளவுக்கு வனப்புமிகு கட்டடம் இது.

கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் தலைமையில் ஆளுநர் கே. கே. ஷா இக்கல்லூரியைத் திறந்து வைத்தார். முதல்வரும் ஏனைய அமைச்சர்களும் மற்றவர்களும் கலந்து கொண்டார்கள்.

• • •

ஆரூர் விழாக்களை நினைத்துப் பார்க்கும்பொழுது நமக்குத் தோன்றும் எண்ணம் . . . . —

தஞ்சை சரசுவதி மகால் கையெழுத்துப் | படிகளிலுள்ள பாடலில் 'ஆரூர் மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே ஒருவிடத்திலுண்டோ உரை' என்று சில அடிகள் உண்டு.

அது போன்று, 'ஆரூர் விழாக்கள் போல் நெஞ்சே! ஒருவிடத்திலுண்டோ உரை?' என்பதுதான்.

• • •

திருவாரூர் விழா நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் முதல்வர் கலைஞர் பிறந்த ஊரான திருக்குவளையில் நடைபெற்ற விழா நிகழ்ச்சிகள்—

அழகான அந்தச் சிற்றூரில் வண்ண விளக்குத் தோரணங்களால் ஊரெங்கும் பந்தல்.

ஊரின் வாயிலில் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பெயரால் கட்டப்பட்டிருந்த வளைவு திறப்பு விழா.

முத்துவேலர் அஞ்சுகம் அறக்கட்டளையினர் முதல்வர் பிறந்த இல்லத்தில் அமைத்திருந்த முத்துவேலர் நூலகம், அஞ்சுகம் படிப்பகம் இரண்டையும் ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் திறந்து வைக்கிறார்.

திருக்குவளையில் அமைக்கப்பட்டுள்ள முத்துவேலர் அஞ்சுகம் அரசினர் உயர்நிலைப் பள்ளியை கல்வியமைச்சர் நாவலர் தலைமையில் கே. கே. ஷா திறந்து வைத்தார்.

இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தப் பள்ளியைப் போல அழகான கட்டடம் தஞ்சை மாவட்டத்தில் வேறு எங்கும் இல்லை என்றுகூடச் சொல்லலாம். அரைவட்டம் போன்ற இந்தக் கட்டடத்தின் ஒரு பகுதியில் தலைமையாசிரியர் இருந்தால் வகுப்புகள் அனைத்திலும் காண முடியும். அந்த அளவுக்குச் சிறப்பான கட்டடம்.

இந்த விழாவோடு, திருக்குவளையில் மருந்தகம் ஒன்றுக்கும், கால்நடை மருத்துவமனைக்கும் அடிக்கல் நாட்டப்பட்டன.

இந்த விழா நிகழ்ச்சிகளில் ஆளுநர் கே. கே. ஷா, தமிழக முதல்வர், கல்வியமைச்சர் நாவலர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர், வேளாண்மை அமைச்சர் மன்னை நாராயணசாமி, அறநிலை அமைச்சர் மு. கண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்பில் தருமலிங்கம், இராம. அரங்கண்ணல், முரசொலி மாறன், எம்.பி., பல்கலைக் கழகத் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, மருத்துவத் துறை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் முதலியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாக்களில் கலந்து கொண்ட ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் குறிப்பிட்டார்கள் :

''ஏழை எளிய மக்களுக்காகத் தமிழக அரசும் அமைச்சர்களும் செய்துவரும் பணிகளைக் காலை முதல் கண்டு வருகிறேன். தமிழக கிராம வளர்ச்சி போன்றே இந்தியக் கிராமங்கள் முன்னேற வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் வளர, வளர அவர்களுக்கும் மக்களுக்கும் இருக்கும் தொலைவும் வளர்ந்து கொண்டே போகும். ஆனால் தமிழகத்தில் அவர்களுக்கும் மக்களுக்குமுள்ள உறவு மிக மிக நெருக்கமாகி வருவதைப் பார்க்கிறேன்.

''பிச்சைக்காரர் மறுவாழ்வு'', 'இலவசக் கண் சிகிச்சை முகாம்' போன்றவை இவைகளை உறுதிப்படுத்துகின்றன.

இவ்விழாக்களில் தலைமை ஏற்பதையோ, முன்னிலையில் இருப்பதையோ விரும்பாது நன்றி சொல்பவராகவே முதல்வர் அவர்கள் உரையாற்றிய பெருமையை இந்த விழாக்கள் பெற்றிருந்தது இன்னொரு சிறப்பு.

இந்த விழா நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூற வேண்டிய முடிவுரை.

அன்றைய மூன்று நிகழ்ச்சிகளிலும் ஆளுநர் கே.கே. ஷா தொடர்ந்து கூறிய சொற்றொடர் தான்! அது, இது:

தஞ்சை மாவட்ட மக்கள் அறிவார்ந்த மக்கள்—செயல் திறன் மிக்கவர்கள்—அதிர்ஷ்டசாலிகள்.

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி
தமிழரசு அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை-2







16 இலட்சரூபாய் செலவில் திருவாரூரில் உருவாகியுள்ள அரசினர் மருத்துவமனை

மருத்துவ வசதி பெறத் தலைநகரங்களுக்குச் செல்ல, அவசியமில்லாமல் சிற்றூர்களிலும், கிராமங்களிலும் மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்து, தமிழக அரசு விரைவாகச் செயல்பட்டு வருகிறது. அதன்படி படிப்படியாக எல்லா முக்கிய ஊர்களிலும் மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1.25 கோடி ரூபாய் செலவில் மருத்துவமனைக் கட்டடங்களும், இரண்டாவது திட்டத்தில் 4 கோடி ரூபாய் செலவிலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5 கோடி ரூபாய் செலவிலும், மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம், தமிழ் நாட்டில் தஞ்சாவூர், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. இவைகள் மூலம் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவ மனையிலும் 500 படுக்கைகள் வீதம் 2,000 படுக்கை வசதிகள் கிடைப்பதுடன், நல்ல மருத்துவ வல்லுநர்களும் ஆண்டுதோறும் உருவாக்கப்படுகின்றனர்.

முன் போல ஐந்தாண்டுத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் நிலை அமையாவிடினும் மருத்துவ வசதிகளைப் பெருக்குவதில் தமிழ்நாடு அரசு எவ்வளவு தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்பதை மருத்துவத் துறைக் கட்டடங்களுக்கு ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகையைப் பார்த்தாலே விளங்கும், 1970–71-ல் பல்வேறு துறையினருக்காகக் கட்டப்பட்ட கட்டடங்களின் மொத்த மதிப்பு சுமார் 405 இலட்ச ரூபாயாகும். அதில் மருத்துவத்துறைக் கட்டடங்களுக்கு மட்டும் சுமார் 168 இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 1971–72-ல் பல்வேறு துறையினருக்காகக் கட்டப்படும் கட்டடங்களின் மொத்த மதிப்பு 461 இலட்ச ரூபாயாகும். இதில் மருத்துவத் துறைக் கட்டடங்களுக்காகமட்டும் 185இலட்ச ரூபாய் செலவு செய்யப்படும். தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையின் தேவையை நன்கு உணர்ந்து ஆண்டுதோறும், அதிகமான தொகையை மக்களின் மருத்துவ வசதிக்காகச் செலவு செய்து வருகிறது.

எல்லா வசதிகளையும் கொண்ட மருத்துவமனைகள்பல இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கியில் சுமார் 9 இலட்ச ரூபாய் செலவில் மருத்துவ மனையும் பட்டுக்கோட்டையில் 1.98 இலட்சரூபாய்செலவில் 32 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்றும், பேராவூரணியிலும், மன்னையிலும் முறையே 2 இலட்ச ரூபாய் செலவில் 32 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்றும், மன்னையில் 1.65 லட்சம் செலவில் வெளி நோயாளிகள் சிகிச்சை பெற கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் சுமார் 5 இலட்சரூபாய் செலவில் அறுவைச் சிகிச்சை நிலையத்துடன் கூடிய தாய்சேய் நல விடுதியும், இக்கட்டடத்தின் மாடியில் 1.5 இலட்ச ரூபாய் செலவில் 20 படுக்கைகள் கொண்ட குடும்ப நலத்திட்டத்தின் கீழ், அறுவைச் சிகிச்சை நிலையமும் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது. மாயூரத்தில் 38 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றும் பாபநாசத்தில் 12 படுக்கைகள் கொண்ட கட்டடமும் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் 1.45 லட்ச ரூபாயில் ' விரிவுரை ஹால் ' ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது.

மேலும் தோல் சம்பந்தமான வியாதிகளைக் குணப்படுத்த 1.8 இலட்ச ரூபாய் செலவில் தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் ஒரு சிகிச்சைப் பகுதி கட்டப்பட இருக்கிறது. 80 ஆயிர ரூபாய் செலவில் கருப்பும் பள்ளத்தில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பகுதியும், நாகையில் சுமார் 1 இலட்ச ரூபாயில் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றன.

திருவாரூரில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக் கட்டடம் ஏறத்தாழ 12 மாதங்களில் கட்டப்பட்டுள்ளது. வி. சோமசுந்தர முதலியார் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியின் பழைய விளையாட்டுத் திடலில் சுமார் 4·80 ஏக்கர் பரப்பளவில் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் முறையே (1) வெளியில் இருந்து சிகிச்சை பெறுவோர் பகுதி, (2) அவசர உதவிப் பகுதி, (3) ஆண்கள் உள் சிகிச்சைப் பகுதி, (4) சாதாரண மகப்பேறுப் பகுதி (5) அறுவைச் சிகிச்சைப் பகுதி (6)தொற்றுநோய்ப் பகுதி, (7) சமையல் பகுதி என ஏழு பிரிவுகள் உள்ளன. இம் மருத்துவ மனையில் அறுவை மகப்பேறு சிகிச்சை பெற 20 படுக்கைகளும், சாதாரண மகப்பேறுக்காக 24 படுக்கைகளும், ஆண்கள் உள்ளிருப்புச் சிகிச்சை பெற 20 படுக்கைகளும், தொற்று நோய்ச் சிகிச்சை பெற ஆறு படுக்கைகளும் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. சுமார் 4,000 சதுர மீட்டர் பரப்புள்ள இக்கட்டடத்தின் திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 16 இலட்சமாகும்.

இரத்தம் கசியாமல் அறுக்கும் கத்தி

'தோலிருக்கச் சுளை விழுங்கி', 'ஈரத் துணியால் கழுத்தறுத்தல்” போன்ற வியத்தகு செய்திகளைக் கேட்டும் சொல்லியும் பழகிப் போன நமக்கு இரத்தம் சிந்தாத அறுவைக் கத்தி பற்றிய புதிய தொரு செய்தி கிடைத்திருக்கிறது.

நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த லூயிஸ் பலமத் என்னும் பௌதிக விஞ்ஞானி ஒருவரே இந்த அதிசயக் கத்தியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இரத்தம் சிந்தாமல் அறுவைச் சிகிச்சை செய்ய வகை செய்யும் இந்தக் கத்தி, செவிப்புலனுக்குக் கேட்காத அதிர்வுடையது. ஓர் அங்குலத்தில் ஆயிரத்தில் ஐந்து பங்கு நீளத்திற்கு விநாடிக்கு 30,000 தடவை அதிர்கிறது இந்தக் கத்தி. இந்த உராய்வினால் ஏற்படும் வெப்பம், பல இரத்தக் குழாய்களை மூடிவிடுகிறது. ஆகவே, அறுவைச் சிகிச்சை நடக்கையில், இப்போது செய்வதுபோல இரத்தக் குழாய்களைக் கட்டி வைக்கத் தேவையில்லை.

இயற்கையின் பரந்த இடமும், சுத்தமான காற்றும், அமைதியான சூழ்நிலையும் ஒருங்கே அமையப் பெற்ற இவ்விடத்தில் எழுந்துள்ள மருத்துவ மனை இவ்வட்டாரத்தில் உள்ள நோயாளிகளின் இடர்களையும், பிணிகளையும் களையும் என்பதில் ஐயமுமில்லை.

இந்த மருத்துவமனை திறப்பு விழாவின் போது வடபாதி மங்கலம் திரு. வி. எஸ். தியாகராச முதலியார் தமது தந்தையாரின் பெயரிலும் தாயாரின் பெயரிலும் இந்த மருத்துவ மனையில் இரண்டு கூடங்களைக் கட்ட ஒரு இலட்சம் ரூபாயை நன்கொடையாக முதல்வர் கலைஞரிடம் அளித்தார்.

தீக்குச்சி வந்த விதம்

அன்றாட வாழ்க்கையில் தீக்குச்சிக்கு மிக இன்றியமையாத இடமுண்டு. பண்டைக் காலத்தில் சக்கிமுக்கிக் கல்லைக் கொண்டு தீ மூட்டினான்; இன்று மிக எளிதாகத் தீக்குச்சி கொண்டு ஒரு விநாடியில் தீ மூட்டிவிடுகிறான். காலத்தின் வேகம் காட்டுத் தீ போல் முன்னேறி இருப்பதையல்லவா இது காட்டுகிறது!

சக்கி முக்கிக் கல்லுக்குப் பிறகு இரசாயனப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 1781-ல் பிரான்சில் பாஸ்வர வத்தி கண்டு பிடிக்கப்பட்டது. காகிதச் சுருளின் முனையில் பாஸ்வரம் வைத்துக் கண்ணாடிக் குழாயினுள் வைத்துச் சீல் செய்துவிடுவர். பிறகு குழாயை உடைத்தவுடன் வெளிக் காற்றிலுள்ள ஆக்ஸிஜன் பாஸ்வரத்துடன் செயலாற்றித் தீப்பிடித்து எரியும். 1786-ல் இத்தாலியில் ஒரு வகைத் தீக்குச்சியைக் கண்டு பிடித்தனர். 1805-ல் பிரான்சில் கந்தக அமிலத்தில் ஊறிய நார்ப்பொருள் உள்ள புட்டியைப் பயன்படுத்தினர்.

இக்காலத்தில் பயன்படுத்தும் தீக்குச்சியைப்போல் ஒரு வகையான தீக்குச்சியை ஜான் வாக்கர் என்ற ஆங்கிலேயர் 1827-ல் முதன் முதலாகச் செய்து காண்பித்தார். அன்டிமனி சல்பைடு, பொட்டாசியம் குளோரேட்டு, வேலம் பிசின் ஆகியவற்றின் கலவையை மூன்று அங்குல நீளமுள்ள மெல்லிய குச்சியின் முனையில் பூசி இவர் தீக்குச்சியைத் தயாரித்தார். உப்புத்தாள் போன்ற ஒரு காகிதத்தின் மீது இக்குச்சி முனையைத் தேய்த்தால், இது வெடித்துக் கொண்டே எரியும்; அதோடு துர்நாற்றமும் வீசும். நச்சுப்புகை வரும் ஒரு வகைத் தீக்குச்சியை சாமுவேல் ஜோன்ஸ் என்பவர் செய்தார்.

எங்குத்தேய்த்தாலும் தீப்பற்றக் கூடிய ஒருவகைத் தீக்குச்சியை, டாக்டர் சார்லஸ் சாவுரியா என்ற பிரெஞ்சுக்காரர் செய்தார். 1830-ல் வெளிவந்த இந்தத் தீக்குச்சியின் முனையில் வெள்ளை அல்லது மஞ்சள் பாஸ்வரம் கலந்த கலவை இருக்கும். இது எரியும் போது கிளம்பிய புகை 'நெக்ரோசிஸ்' என்ற ஒரு வகை நோயை மக்களிடையே பரவச் செய்தது.

கொலைக்கும், தற்கொலைக்கும் இந்த மஞ்சள் பாஸ்வரம் பயன்பட்டது. எனவே, இந்தவிபரீதங்களைத் தடுக்க காப்புத் தீக்குச்சி (Safety Matches) என்ற ஒரு வகைத் தீக்குச்சியை 1844-ல் சுவீடன் நாட்டு விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்தார். இந்தக் குச்சி ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு நாடெங்கும் பரவின.

இரண்டாவது உலகப் போரின் போது, நீர்புகாத (Water proof) தீக்குச்சி ஒன்றை 1943-ல் அமெரிக்கர் ஒருவர் கண்டறிந்தார். இந்தக் குச்சியை எட்டு மணி நேரம் தண்ணீரிலே போட்டு வைத்து எடுத்தாலும் எரியும் தன்மையுடையது.

இந்தியாவில் முதல் தீக்குச்சித் தொழிற்சாலை 1894—1895-ல் அகமதாபாத்திலும், பிலாஸ்பூரிலும் தோன்றியது. என்றாலும் மந்தநிலையேகாணப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பிறகே இந்தியாவில் தீக்குச்சித் தொழில் பெருமளவில் வளரத் தொடங்கியது. 1923-ல் கல்கத்தாவிலும், 1925-ல் லாகூரிலும் தொழிற்சாலைகள் தொடங்கப் பெற்றன. சுவீடன் நாட்டுக் கம்பெனியார் 1926-ல்பரெலீ, அம்பர்நாத், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில், 'மேற்கிந்தியத் தீக்குச்சிக் கம்பெனி' என்ற பெயருடன் தீக்குச்சித் தொழிற்சாலைகளை நிறுவினர்.

VOLTAS

பருத்திப்பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க மிகச் சிறந்தது

ஜோலோன்®
மூலப் பொருள்
'ரோன்-பொலெங்க்'
பாரீஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால்
கண்டுபிடிக்கப்பட்ட போஸலோன்
பூச்சி மருந்து

RHÔNE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு **ரோன்—பொலெங்க்** நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட **ஜோலோன்** பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயிகளுக்கு நோயற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள், வண்டுகள் முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, **ஜோலோன்** பருத்திப்பயிர்களைக் **காய்ப்புழுக்கள்** தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் **ஜோலோன்** பயிர்ச்சிலந்தியை ஈடற்ற முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் ஸல்பரோ அல்லது வேறு எந்தப் பூச்சி மருந்தோ உபயோகப்படுத்தத் தேவைஇல்லை.

காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு கில்வால் (மூலப்பொருள் வேமிடோதியோன் ஸிஸ்டமிக் (Systemic) பூச்சிமருந்து) மிகச்சிறந்தது.

ULKA-VRP-J-TAM

பாரதத்தின் பசுமைப் புரட்சியைப்
பாதுகாப்பது
'ரோன்-பொலெங்க்'
பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரிக்குத் தயவுசெய்து தொடர்பு கொள்க:
வோல்டாஸ் லிமிடெட்
கெமிக்கல்ஸ் டிவிஷன்,
19, கிரஹாம் ரோடு, பெல்லார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.

செய்திப் பத்திரிகையின் வரலாறு

நாட்டு நடப்புகளை அவ்வப்போது தெரிந்து கொள்ள பத்திரிகை ஒரு இன்றியமையாத சாதனமாக விளங்கி வருவதைப் பார்க்கிறோம். இன்று எண்ணற்றப் பத்திரிகைகள் உலகமெங்கணுமிருந்து வெளிவருகின்றன. நாளிதழ்கள், வார, மாதமிருமுறை இதழ்கள் இன்று பார் முழுவதும் பரவி உள்ளன.

பத்திரிகை என்றதும் முதன் முதலாக வெளிவந்த பத்திரிகை எதுவாக இருக்கும் என்ற எண்ணம் எழுவது இயல்புதானே? உலகத்திலேயே முதன் முதலாக வெளிவந்த நாளிதழ் ஆறும் நூற்றாண்டில் சீனத் தலைநகர் பீகிங்கிலிருந்து, வெளிவந்த 'ட்ஸிங் பாவோ' என்பதாகும். இது அரசுச் செய்தித்தாளாகும். எழுத்துக்களைச் செதுக்கிய பிளாக்குகளைக் கொண்டு அச்சிடப்பட்ட இந்தத் தாள் 1835 வரை வெளிவந்தது.

ஐரோப்பாவில் நாளிதழ் முதன் முதல் ரோம் நகரில் தோன்றியது. ரோம் நகரில் நடக்கும் நிகழ்ச்சிகளை அங்குள்ள எழுத்தாளர்கள், பிற பகுதிகளுக்கு எழுதி அனுப்பி வந்தார்கள். அவை செய்திக் கடிதங்கள் (News Letters) என்று வழங்கப்பட்டன. இம்முறை 18-ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்றது.

கூட்டன்பர்க் என்பவர் அச்சு முறையைக் கண்டுபிடித்த பிறகு, செய்தித் துண்டுப் பிரசுரம் (News Pamplets) வெளிவந்தன. ஜெர்மனியில் வெளியான இந்த வெளியீடுகளுக்குப் போதிய ஆதரவில்லாததால் இது சரிவர நடைபெறவில்லை. ஆனால், ஜெர்மனியில் 17-ஆம் நூற்றாண்டில் பத்திரிகை ஒழுங்காக வெளிவந்தது. ஜெர்மனியில் மிகப் பழமையான பத்திரிகையின் பெயர் 'உறவு' (Relation) என்பதாகும்.

இங்கிலாந்தில் முதன் முதலாக ஒழுங்காக வெளிவந்த பத்திரிகை 'வாரச் செய்திகள்' என்பதாகும். 1665-ல் அரசுச் செய்திகளை கொண்ட 'க்ஸ்ஆபோர்ட் கெஜட்' தொடங்கப் பெற்றது. அது இன்றும் நடந்து வருகிறது. இங்கிலாந்தில் தோன்றிய முதல் நாளிதழ், 'தினசரி செய்திகள்' (Daily Courant) என்பதாகும். இது எலிசபெத் மாலெட் என்னும் அம்மையாரால் 1702-ல் தொடங்கப் பெற்றது. புகழ் பெற்று விளங்கும் 'லண்டன் டைம்ஸ்' என்னும் பத்திரிகை, முதலில் 1785-ல் ஜான் வால்டர் என்பவரால் 'தினசரி உலக ரிஜிஸ்தர்' (Daily Universal Register) என்று தொடங்கப் பெற்றது. அமெரிக்காவில் தோன்றிய முதல் பத்திரிகை எது தெரியுமா? 'பொது நிகழ்ச்சிகள்' (Public Occurrences) என்பதாகும். இது 1690-ல் பெஞ்சமின் ஹாரிஸ் என்பவரால் நிறுவப்பட்டதாகும். அரசு, இதன் முதல் இதழுக்கே தடைவிதித்தது. பிறகு 1704-ல் 'செய்திக் கடிதம்' என்ற பத்திரிகை வெளிவந்தது. பிறகு பல பத்திரிகைகள் வெளிவந்தன என்றாலும் விலை அதிகமுள்ள அவைகளை ஏழைகளால் வாங்க முடியவில்லை. 1833-ல் பெஞ்சமின் எச். டே என்பவர் ஒரு பென்னி விலையில் 'சன்' என்னும் பத்திரிகையை வெளியிட்டார். அப்பத்திரிகைக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

'மாத்திரைப் பத்திரிகை'யைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அமெரிக்காவில் 1920-ல் இப்படியொரு பத்திரிகை அதாவது மாத்திரைப் பத்திரிகை (Tabloid News Paper) வெளிவந்தது. இதன் சிறப்பு என்ன? பக்கம் சிறியது; படங்கள் நிறைந்தது; திடுக்கிடும் செய்திகள் மிகுந்தது. இந்த வகையில் தோன்றிய நாளிதழ், 'தினசரிச் செய்தி' என்பதாகும்.

கல்லூரி ஆசிரியர்களுக்குப் போதனை பயிற்சி அளிப்பதற்காகக் கோவை அருகிலுள்ள பெரிய நாயக்கன் பாளையத்தில் தனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவிருக்கின்றன. நவீன முறைகளின்படி கல்வி கற்பிப்பது எப்படி என்று கல்லூரி ஆசிரியர்களுக்கு அங்குப் போதிக்கப் படும். கல்லூரிகளில் பாடத் திட்டங்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நவீனப் படுத்த வேண்டியது அவசியம் என்றும், அச்சிடப்பட்ட' நோட்ஸ் ' வாங்கிப் படிக்கும் பழக்கத்தைக் கைவிட்டு, தங்கள் பாடப் புத்தகங்களையே மாணவர்கள் விரிவாகப் படிக்க வேண்டும் என்றும் சென்னைப் . பல்கலைக் கழகத் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் புகழ் மிக்க பத்திரிகை 'டெய்லி மெயில்' ரஷ்யாவில் முக்கியமான பத்திரிகைகளாக விளங்குபவை இஸ்வெஸ்தியா, பிராவ்தா என்பனவாகும். உலகத்தில் நாள்தோறும் ஏராளமானப் பிரதிகள் வெளியாகும் பத்திரிகை இலண்டனிலிருந்து வெளிவரும் 'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்பதாகும். இது முப்பது இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிறது. இதற்கு அடுத்தது, நியூயார்க்கில் வெளியாகும் 'டெய்லி நியூஸ்' இலண்டனில் வெளியாகும் 'டெய்லி மிர்ரர்' என்பவையாகும்.

இந்தியப் பத்திரிகைகள் பற்றி நாம் அறிவதென்ன?

ஔரங்கசீப் காலத்திலேயே செய்தித் தாள் இருந்ததாகவும், அது அரசு சம்பந்தமான செய்திகளை வெளியிட்டதாவும் கூறுகின்றனர். இந்தியாவில் கல்கத்தாவில்தான் முதல் செய்தித்தாள் தோன்றியது. ஜேம்ஸ் அகஸ்துஸ் ஹிக்கி என்பவர் வங்காள கெஜட் என்பதை 1780-ல் வெளியிட்டார்.

சென்னையில் முதன் முதல் வெளிவந்த செய்தித்தாள் 'சென்னை கூரியர்' (Madras Courier) என்பது. இது 1785-ல் வெளிவந்தது. 1789-ல் பம்பாயில் வெளிவந்த 'பாம்பே ஹெரால்டு' முதன் முதல் பம்பாயில் தோன்றிய செய்தித்தாளாகும். சென்னையில் தோன்றிய முதல் தமிழ்ப் பத்திரிகை 'தமிழ் இதழ்' என்பதாகும். இதை 1831-ல் கிறித்தவச் சங்கத்தார் தொடங்கினர். முதல் தமிழ் வார இதழ் 'தினவர்த்தனி' 1856-ல் இது வெளிவந்தது. முதல் தமிழ் மாத இதழ் 'ஜனவிநோதினி'. அரசு கல்வி இலாகா 1870-ல் இதைத் தொடங்கியது. முதல் தமிழ் நாளிதழ் 'சுதேசமித்திரன்' 1882-ல் ' இது வெளிவந்தது. சென்னையில் முதன் முதல் இந்தியரால் வெளியிடப்பட்ட ஆங்கில இதழ் 'இந்து' ஆகும்.

வீடு கிடைத்தது! வேதனை தீர்ந்தது!

"பறவைக்கும் கூடு உண்டு! பாம்புக்கும் புற்று உண்டு! பூச்சிப் பூரான்களுக்கும் பொந்து உண்டு! ஆனால் ஆறறிவு படைத்த மனித இனத்தில் நம் போன்ற ஏழை எளியவர்களுக்கு ஒரு வீடு இல்லையே என்று குறைபட்டுக் கொள்வாயே அம்மா! அந்தக் குறை இனி இல்லை அம்மா! நமக்கென்று ஒரு வீடு கிடைத்து விட்டது! எனது வேதனை தீர்ந்து விட்டது! நான் மகிழ்ச்சியில் திளைத்துள்ளேன். என் மகிழ்ச்சியில் பங்குபெற நீ இல்லையே அம்மா! இத்தகைய ஒரு வீடு ஏழாண்டுகளுக்கு முன்பு கிடைத்திருக்குமானால், 'உன்னை இழந்திருக்க மாட்டேனே அம்மா! இன்று எல்லாரையும் போல், நீயும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருப்பாயே அம்மா!'' என்ற குரல் கேட்டு, என் நண்பனைக் காணச் சென்ற நான் திகைத்து நின்றேன். சற்று நேரத்தில் தேம்பித் தேம்பி அழும் குரலும் கேட்டது. என் நண்பன் அழுவதைத் தடுத்து, ஆறுதல் கூற விரும்பிய நான் அவன் வீட்டுக் கதவைத் தட்டினேன். ஒரு சில வினாடிகள் வரை கதவு திறக்கப் படவில்லை. பிறகு மீண்டும் பலமாகத் தட்டினேன். கதவு திறந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தலை குனிந்து நின்றான் என் நண்பன். ஆனால், அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்துக் கொண்டிருந்தது. அவன் நிலை கண்டு என் மனம் வேதனைப்பட்பட்டது.

''என்ன குமார் இன்னும் நீ சின்னக் குழந்தை மாதிரி அம்மாவை நினைத்து அழுகிறாயே! புது மனைப் புகு விழாவான இன்று மகிழ்ச்சியாக இருக்க வேண்டாமா? நடந்ததை நினைத்து இப்போது கவலைப்படுகிறாயே'' என்றேன்.

''உனக்குத்தெரியாது இளங்கோ! என் அம்மா எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து சம்பாதித்து அதைக் கொண்டு என்னை வளர்த்து, படிக்க வைத்தார்கள் என்று உனக்குத் தெரியாது'' என்று கூறி மீண்டும் தேம்பினான். நான் என் கைக்குட்டையை எடுத்து அவன் கண்ணீரைத் துடைத்து விட்டேன். ஆனால் அடுத்த வினாடியே அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

''குமார் நீ அழக்கூடாது! நீ அழுதால் எனக்கும் அழுகை வந்து விடும் போலிருக்கிறது! அழாமல் இரு! நீ அழுவதாக இருந்தால், அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது! நான் வெளியே போய் இருக்கிறேன். நண்பர்கள் வந்தபின் வருகின்றேன்'' என்றேன்.

''இளங்கோ! ஏழையின் கண்ணீரை யாராலும் நிறுத்த முடியாது! அவர்கள் மனத்தில் உள்ள வேதனைகளை யாரிடமாவது சொல்லி முடித்தால்தான் அவர்களது கண்ணீர் நிற்கும். தயவு செய்து என் கண்ணீரை நிறுத்துவதற்காக வேணும் நான் சொல்வதைக் கவனமாய்க் கேள் இளங்கோ!'' என்றான்.

''நான் கேட்கிறேன்! ஆனால் நீ அழாமல் அமைதியாக இருந்து சொல்ல வேண்டும்.''

''சரி'' என்று கூறி விட்டுக் குமார் கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு பாயை எடுத்துக் கீழே போட்டு விரித்து உட்காரச் சொன்னான். நான் பேசாமல் உட்கார்ந்தேன். என் அருகே அவன் அமர்ந்து பேச முயன்றான். ஆனால் அவனுடைய விசுமல், அவனைப் பேசவிடவில்லை. என் கண்களிலும் கண்ணீர் வடிந்தது. அதைக் கண்டவுடன் அவன், ''இளங்கோ!'' நீ அழாதே. நான் என் கதையைச் சொல்கிறேன்'' என்று கூறி என் கண்ணீரை அவனது துண்டினால் துடைத்து விட்டான். நான் காலிலிருந்த ஷூவை கழற்றி ஓரத்தில் வைத்து விட்டு வசதியாக அமர்ந்தேன்.

''1957-ஆம் ஆண்டு புயல் அடித்து பெருமழை பெய்து குப்பங்களெல்லாம் வெள்ளத்தில் மூழ்கிய போது, 'சன்' தியேட்டர் அருகிலிருந்த எங்கள் குடிசையும் தண்ணீரில் மூழ்கிப் போய்விட்டது. நாங்கள் ஜி. என். செட்டி சாலையின் ஓரத்தில் குடியேறினோம். அதன்பிறகு எங்களால் புதிதாகக் குடிசை கட்டிக் கொள்ள முடியவில்லை. என் அப்பா கொளுத்தும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் வண்டி இழுப்பார். என் அம்மா வண்டியின் பின்னாலிருந்து தள்ளுவார். வண்டி வாடகைப் போக மீதியிருந்த பணத்தைக் கொண்டு ஏதோ கஞ்சி காய்ச்சிக் குடித்துக் குடும்பம் நடந்து வந்தது. அந்தக் கஷ்டத்திலும் என்னைப் படிக்க வைத்து வந்தனர். 1962-ஆம் ஆண்டில் என் அப்பா 'நிமோனியா' காய்ச்சலில் இறந்து விட்டார். எலும்பும் தோலுமாக வாழ்ந்த அவர் சாக்கடை ஓரத்திலேயே கொஞ்சம் நல்ல இடத்தில் என்னையும், என் அம்மாவையும் உறங்க வைத்துவிட்டு, சாக்கடை அருகிலேயே ஈரத்தில் படுத்து உறங்கியதால் அவருக்கு 'நிமோனியா' காய்ச்சல் வந்து விட்டது என்பது மற்றவர்கள் சொல்லித்தான் எங்களுக்குத் தெரிந்தது. என்னையும், என் அம்மாவையும் காப்பாற்றுவதற்காக என் அப்பா தன்னையே பலிகொடுத்துக் கொண்டார்.

அதன்பின் என் அம்மா வண்டி இழுத்து எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். நானும் பள்ளி சென்ற நேரம் போக மீதி நேரத்தில் அம்மாவுக்கு உதவியாக வேலை செய்தேன். அப்படி, இப்படி மீதம் பிடித்து, மீண்டும் 'சன்' தியேட்டர் அருகில் இருந்த எங்கள் குடிசையைப் புதுப்பித்தோம். 1965-ஆம் ஆண்டில் பெய்த அடைமழையில் எங்கள் குடிசைப் பாழடைந்தது. நானும் அம்மாவும் மீண்டும் ஜி. என். செட்டி சாலையின் ஓரத்தில் நடைபாதை வாசிகளாகக் குடியேறினோம். கொஞ்ச நாட்களில் என் அம்மாவும் 'நிமோனியா'வினால் இறந்து விட்டார். நான் அனாதையானேன். வாடகைக்குக் கட்டை வண்டி கொடுத்துக் கொண்டிருந்த முதலாளியின் உதவியுடன் நான் இடிந்த குடிசையைப் புதுப்பித்துக் கொண்டு, படித்துக் கொண்டும் வண்டி இழுத்துக் கொண்டும், பிழைப்பை நடத்தி வந்தேன்.

1967-ஆம் ஆண்டில் கொடியவர்கள் குடிசைகளுக்கெல்லாம் தீ வைத்தார்கள்! அப்பொழுது என் குடிசையும் எரிந்து சாம்பலாகி விட்டது. நான் மீண்டும் ஜி. என். செட்டி சாலையில் ஒரு வீட்டின் முன்னால் ஒரு கித்தானை கட்டிக் கொண்டு வசித்து வந்தேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்ற 'பேரறிஞர் அண்ணா' எரியாத வீடு கட்டும் திட்டத்தைக்கொண்டு வந்தார். எனக்கு அதில் ஒரு வீடு கிடைத்தது. ஓய்வு நேரங்களில் வேலை செய்து சம்பாதித்து, நான் பள்ளி இறுதி வகுப்பை முடித்துவிட்டுக் கல்லூரியில் சேர்ந்தேன். உன் போன்ற நண்பர்களின் உதவியுடன் பி. ஏ. படித்து வெற்றிபெற்று, ஒரு வேலையிலும் சேர்ந்து சம்பாதித்து வருகின்றேன்.

அண்ணா வழியில் ஏழை எளியவர்களின் வாழ்வை வளமாக்கி வரும் இன்றைய தமிழ்நாடு அரசின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குடிசைமாற்று வாரியம் அமைத்தார். அதன் பயனாய், கோட்டூர் புரத்தில் கட்டப்பட்ட பல அடுக்கு மாளிகையில் எனக்கும் ஒரு வீடு கிடைத்தது.

நல்ல வேலையும், நல்ல வீடும் கிடைத்த இந்த நேரத்தில் என் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள என் அப்பா, அம்மா இல்லையே என்ற கவலைதான் என்னை அழ வைத்து விட்டது'' என்று கூறி முடித்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டான் குமார். அவன் கதை கேட்டு என் கண்களிலும் வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

அப்பொழுது எங்கள் நண்பன் சேகரின் கார் ஒலி கேட்டது.

''சேகர் வந்து விட்டான்! அவனுடைய கார் ஒலி கேட்கிறது'' என்று கூறி எழுந்தேன். குமாரும் என்னுடன் எழுந்து வந்தான். மாடியில் உள்ள வராண்டாவிலிருந்து கீழே எட்டிப் பார்த்தோம். சேகர், மூர்த்தி, ரவி ஆகிய மூவரும் காரை விட்டு இறங்கிக் கொண்டிருந்தனர். குமார் கீழே இறங்கி ஓடி அவர்களை அன்புடன் வரவேற்று அழைத்து வந்தான்.

''என்னடா குமார்! நீயும் இளங்கோவும் அழுத மாதிரி இருக்கின்றீர்கள்?'' என்று சேகர் கேட்டான்.





''அதெல்லாம் ஒன்றுமில்லையே" என்றுகூறி குமார் சமாளித்தான்;

''குமார்! வீடு பரவாயில்லையே! அழகாகவும், வசதியாகவும் இருக்கிறதே!'', என்றான் மூர்த்தி.

"ஒரு பொது அறை, சமையல் அறை, சமையல் அறைக்குள்ளே சாமான்கள் வைக்க வசதியுள்ளன. மேலும் குளிப்பதற்கென்று தனியாக ஒரு அறை, இவைகளோடு ஒரு கழிவறை இத்தனையும் இருக்கிறதே, இந்த வீட்டிற்கு எவ்வளவு வாடகை?'' என்று கேட்டான் ரவி.

''மாதம் ரூபாய் 15 தான் வாடகை!'' என்றான் குமார்.

"உண்மையாகவாடா?'' என்று கேட்டான் சேகர்.

''ஆமாம்'' என்றான் குமார்.

''அப்படியானால் நாமும் கூட இங்கே குடி வந்துவிடலாம்! '' என்றான் மூர்த்தி.

''உன்போன்ற பணக்காரர்களுக்கு இது கிடைக்காதப்பா! குடிசையில் வாழ்ந்த ஏழை எளியவர்களுக்குத்தானப்பா இந்த குடியிருப்புகள்'' என்றேன் நான்·

"டேய் இளங்கோ, நான் விளையாட்டுக்குத்தானடா சொன்னேன். நீ அதற்குள் நான் பணக்காரன் என்பதைக் கூறி மட்டம் தட்டுகிறாயே!'' என்றான் சேகர்.

'' நானும் விளையாட்டுக்குத் தானடா சொன்னேன் '' என்று கூறினேன் நான்.

'' சரி ! சரி ! அந்தப் பேச்சை விடுங்கள்! நமக்குள் ஏழை! பணக்காரன் என்ற வேறுபாடு கூடாது! நாம் அனைவரும் சமம்! '' என்றான் சேகர்.

'' மாதம் ரூபாய் 15 வாடகை என்பது மிகவும் குறைவாச்சே! அரசுக்கு நட்டம் வருமே! '' என்றான் ரவி.

'' ஒவ்வொரு குடியிருப்புக்கும், கட்டடச் செலவு, நிலத்தின் விலை உட்பட ரூபாய் 8,000 ஆகிறதாம். மாதம் ரூபாய் 55 வாடகையாக வசூலித்தால் தான் அரசுக்கு நட்டம் வராமலிருக்கும். இதே குடியிருப்பை நிச்சயம் ரூபாய் 80 வாடகைக்கு விடலாம். ஆனால் ஏழை எளியவர்களால் இவ்வளவு வாடகை தர முடியாதென்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குடியிருப்புக்கும் மாதம் ரூபாய் 15 வாடகை வாங்குமாறு உத்திரவிட்டுள்ளது '' ! என்றான் குமார்.

"குடிசை மாற்று வாரியம் ஒன்றைத் தனியே அமைப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடே முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டை இதற்காகப் பாராட்ட வேண்டும். இந்த குறுகிய காலத்தில் 13 திட்டங்களை இவ் வாரியம் மேற்கொண்டு 2,560 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. இந்த முன்னேற்றத்தின் வேகம், 30 நிமிடங்களுக்கு ஒரு வீடு என அமைகிறது. இது பிறர் கண்டு பொறாமைப்படத்தக்கச் சாதனையாகும். 'சென்னையின் அடிச்சுவட்டை இந்தியாவின் இதர நகரங்களும் பின்பற்றுமானால், அடையாளம் தெரியாத அளவுக்கு இந் நகரங்களெல்லாம், மாற்றம் பெற்று விடும்' என்று மைய அரசு திட்டக் குழுவின் செயலாளர் திரு அசோக் மித்ரா கூறியிருப்பதையே நான் இங்கு மீண்டும் உங்களிடம் கூற விரும்புகின்றேன். '' "இம்மாதிரியான ஒருவாரியத்தை அமைத்து குடிசை மாற்றுத் திட்டங்களை நிறைவேற்றிடத் தேவையான நிதியை ஒதுக்கித் தந்து, குறைந்த வாடகைக்கு குடியிருப்புகள் அமைய தீர்க்க தரிசனத்தோடு திட்டமிட்டுச் செயலாற்றியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்களையும், தமிழ்நாடு அரசையும் நான் பாராட்டுகின்றேன். குடிசை மாற்று வாரியத் தலைவருக்கும், ஊழியர்களுக்கும் என் பாராட்டுக்கள். முடிவாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன். மைய அரசானது, தமிழ் நாட்டில் நிறைவேறி வரும் இந்த குடிசை மாற்றுப் பணிகளுக்காக ஆகின்ற செலவில் பாதியையாகிலும் மானியமாக கொடுக்க வேண்டும். தேவையான உருக்கு இரும்பு இல்லை, சிமெண்ட் இல்லை என்று ஒரு நாளும் இந்த வேலைகள் தடைபடக் கூடாது.''

[—கோட்டூர் புரத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளை 11-6-72-ல் திறந்து வைத்து சர்வோதயத் தலைவர் திரு ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் ஆற்றிய உரை.]

'' ஏழை எளியவர்களின் வாழ்வை உயர்த்துவதில் தமிழ்நாடு அரசுக்கு ஈடு இணை கிடையாதப்பா! '' என்றான் சேகர்.

'' சரி வாங்கடா ! மாடி வீடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்து வரலாம் ! '' என்றான் ரவி.

எல்லாரும் கோட்டூர்புரத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள பல அடுக்கு மாடிகளைப் பார்த்துக் கொண்டே வந்தனர்.

'' வளர்ந்து வரும் சென்னை மாநகரின் சுற்றுப்புறச் சிற்றூர்களில் ஒன்று கோட்டூர்புரம். சைதாப்பேட்டைத் தொகுதியில் அடையாறு ஆற்றங்கரையோரம், மாமரங்களும், பனை மரங்களும் மிகுதியாக உள்ள சோலை வனம் இது. இயற்கையின் எழில் மிக்க இந்த இடம் செல்வந்தர்களின் ஓய்வுக்குரிய உல்லாச இடமாக இருந்து வந்தது. தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான 580 மனைகள் அளவு பரப்புள்ள நிலம் அடையாற்றின் ஓரம் திடலாக இருந்தது. அடையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தால் திடல் நிரம்பும். கரை போட்டு வெள்ளத்தைத் தடுத்து மக்கள் வாழ்வதற்கேற்ற நல்லூராக இப்போது ஆக்கப்பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம் நிறுவிய பின்பு தமிழ்நாடு அரசு இந்த இடத்தில் பல அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கட்டி அருகிலுள்ள குடிசைப் பகுதிகளைத் திருத்தி அமைக்க முடிவு செய்தது. அதன் விளைவாக இந்த இடத்தில் 1848 குடியிருப்புகள் (Tenements) கட்டப்பட்டுள்ளன. இதற்குத் தமிழ்நாடு அரசு 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது. இக்குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில், சர்வோதயத் தலைவர் திருமிகு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் 11—6—1972 அன்று திறந்து வைத்தார்கள் '' — இவ்வாறு குமார் நண்பர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

மேலும் கோட்டூர்புரம் குடியிருப்புகளில் வாழ்வோருக்குச் செய்யப்பட்டுள்ள குடிநீர் வசதியையும், மின்சார வசதியையும், கழிவு நீர்ப் போக்கிகளையும் விளக்கிக் கூறினான் குமார்.

'' மருத்துவமனை ஏதும் இங்கு இல்லையா?'' என்று மூர்த்தி கேட்டான்.

'' ரூபாய் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் செலவில் ஒரு மருத்துவ மனையைக் குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது. அதை இக்குடியிருப்புத் திறப்பு விழாவன்று மாண்புமிகு தமிழக வீட்டு வசதி அமைச்சர் திரு ராஜாராம் அவர்கள் திறந்து வைத்துள்ளார். இப்பகுதியில் டாக்டர் சஞ்சீவி அவர்கள் அரிய சேவை செய்து, ஏழை எளியவர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். அவருக்கு நமது முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்'' என்று கூறிவிட்டு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று காட்டினான் குமார்.

' மருத்துவ மனையின் மேல் பகுதியில் அமைந்துள்ள நூலகத்தை, மாண்புமிகு தமிழ்நாடு மேலவையின் துணைத் தலைவர் மா. பொ. சிவஞானம் அவர்கள் திறந்து வைத்தார். என்பதைக் கூறி அதையும் சுற்றிக் காட்டினான் குமார்.

'' சிறுவர் பூங்கா, ஆரம்பப் பள்ளி, சமூகக்கூடம், அங்காடிகள் ஆகிய அனைத்தும் உள்ளதால் கோட்டூர்புரம் குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியத்தின் ஒரு மாபெரும் சாதனை என்பதில் தவறில்லை! '' என்றான் சேகர்.

'' இங்குள்ள 246 குடியிருப்புகளைத் தவணை முறையின் மூலம் குடியிருப்புக்காரர்களுக்குச் சொந்தமாக்கித் தரவும் குடிசை மாற்று வாரியம் முடிவு செய்துள்ளது. இக் குடியிருப்புகளில், குடியேற விரும்பும் குடிசை வாழ் மக்களிடமிருந்து ரூபாய் 500 முன் பணமாகப் பெற்றுக் கொண்டு, பிறகு ரூபாய் 40 மாதத் தவணையாக 25 ஆண்டு காலத்திற்கு வசூலித்துக் கொண்டு, அதன்பின் அக்குடியிருப்பை அவர்களுக்கே சொந்தமாக்கி விடும் திட்டமும் உள்ளது. தவணை முறையிலே மாத வருவாய் ரூபாய் 250-க்கு குறைவாக உள்ள, சமுதாயத்தின் பல தரப்பட்ட மக்களுக்கும், எடுத்துக் காட்டாக புரோகிதக் குருக்கள், சிகையலங்காரம் செய்யும் மருத்துவ குலத்தவர், சலவையாளர், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் முதலிய அனைவருக்கும் தவணை முறையிலே குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் '' என்று குமார் கூறியவுடன் '' நீயும் அத்திட்டத்தில் சேர்ந்தாலென்ன?'' என்று ரவி கேட்டான்.

'' அதிக ஆசை கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக சம்பாதித்துக் கொண்டு, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன் '' என்றான் குமார்.

'' அதுதான் சரி குமார்! '' என்றேன் நான்.

'' சரி வாருங்கள் வீட்டிற்குப் போவோம்· நீங்கள் வருவீர்கள் என்று பிஸ்கட், பழங்களெல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன் சாப்பிடலாம் '' என்றான் குமார்.

'' ஏழை எளியவர்களின் வாழ்வை வளமாக்க வேண்டுமென்பதற்காக முயன்று வரும் தமிழ்நாடு அரசு ஏழு ஆண்டுகளுக்குள் குடிசைகளையெல்லாம் மாற்றி அமைத்து மாடி வீடுகளாகக் கட்டி விட முயன்று வருகிறது. மாநில அரசு நிதியிலிருந்தே இதுவரை இத்திட்டங்களுக்குச் செலவிடப்பட்டு வருகிறது. ஆனால் ஒரு பத்திரிகை மாநில அரசு நிதி உதவியிலேயே இத்திட்டங்கள் நடைபெறுகின்றன என்று படம் போட்டுக் கேலி செய்துள்ளதே ! '' என்றான் ரவி.

மாநில நிதியாக இருந்தாலென்ன அல்லது மைய அரசு நிதியாக இருந்தாலென்ன, மற்ற மாநிலங்களில் நடைபெறாத திட்டத்தை [illegible] தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறதே! சிங்கப்பூரில் குடிசைகளை மாற்றுவதற்காக ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை நேரத்திற்கு ஒரு வீடு என்ற விகிதத்தில் கட்டப்படுகிறது. இங்கு கட்டப்படும் வீடுகளை ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை விதம் கணக்கிடும் பொழுது 30 நிமிடங்களுக்கு ஒரு வீடு விதம் கட்டப்படுவது கண்டு, உலகின் பல நாட்டு நிபுணர்களும் பாராட்டுகிறார்கள் '' என்று சேகர் கூறினான்.

நாங்கள் குமாரின் வீட்டிற்குத் திரும்பி பிஸ்கட், பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். குமார் அதற்குள் சூடாகத் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தான்.

'' எப்படியோ குமாருக்கு வீடு கிடைத்தது! அவன் வேதனை தீர்ந்தது! வாருங்கள் புறப்படுவோம் '' என்றான் மூர்த்தி.

'' டேய்! மூர்த்தி ஏண்டா பிரித்தே பேசுகிறாய்? அவனுக்கு மட்டும் தான் வேதனை தீர்ந்ததா நமக்கும் தான்· நமக்குள் இன்பத்திலும் துன்பத்திலும் எப்போதும் பங்கு இருக்கவேண்டும். 'எல்லார்க்கும் எல்லாம்!' என்ற பொது நோக்கு நம்மிடையே இருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு ஆக்கப்பணிகளுக்கு நம்மைப் போன்ற பணக்காரர்களும் உதவ வேண்டும். அப்பொழுதுதான் நாடு செழிக்கும்! நாமும் உயர்வோம்! '' என்றான் சேகர்.

'' சரி! குமாருக்கு வீடு கிடைத்ததால் நம் வேதனை தீர்ந்தது '' என்றான் மூர்த்தி.

" ஆம் ! இளங்கோவிடம் மனம் விட்டுப் பேசியதால், உண்மையிலேயே என் வேதனையெல்லாம் தீர்ந்தது'' என்றான் குமார்.



திருமழிசையில் சித்தரஞ்சன்

தமிழக அரசு, பொது மக்களின் நல்வாழ்வுக்கு எத்தனையோ அருந்தொண்டுகளைச் செய்து வருகிறது; அந்தப் புனிதத் தொண்டுகளில் ஒன்றுதான் 'சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவ நிலையத்தை' உருவாக்கிய பாங்கு.

நாகரிகமும்—நெருக்கமும் பின்னிக் கிடக்கும் நகர்ப்புறங்களில் அல்லது அறியாமையும் அலட்சியமும் குவிந்துகிடக்கும் கிராமப் புறத்துக்குச் சென்று அங்குள்ள மக்களின் உடல்நிலையைக் கவனித்து, அவர்களுக்குற்ற நோயை நீக்கப் பாடுபடுகிறது சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவ நிலையம்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் மருத்துவ நிலையம், செங்கற்பட்டு மாவட்டிலுள்ள கும்முடிப்பூண்டி, காட்டாங்குளம் ஆகிய பகுதிகளில் தனது முகாம்களை முடித்துவிட்டுத் தற்போது திருபெரும்புதூர்த் தொகுதியிலுள்ள திருமழிசைக்கு வருகை புரிந்திருக்கிறது. இதனை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 14—6—1972 அன்று துவக்கி வைத்தார்கள்.

திருமழிசையில் இயங்கிவரும் இந்த முகாம் ஏனைய இரு முகாம்களைவிடச் சிறப்பு வாய்ந்தது என்று குறிப்பிட வேண்டும். ஏனென்றால் பொது மக்கள் இந்த முகாமில், நடமாடும் மருத்துவ மனையை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்ள முன் வருகிறார்கள்.

நாள்தோறும் 454 பேர்கள் இங்கு மருத்துவம் பார்த்துக் கொள்ள வருகிறார்கள். சூன் 14-ஆம் நாளன்று மட்டும் 628 பேர்கள் மருத்துவம் பார்த்துக் கொள்ள வந்திருக்கிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன? பொது மக்கள் இந்த நடமாடும் மருத்துவ மனையை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள்—அதன் முக்கியத்தைத் தக்க விதத்தில் உணர்ந்து செயலாற்றுகிறார்கள் என்பதுதான்.

புறநோய்ப் பிரிவு நோயாளிகளுக்கும், உள்ளிருப்பு நோய்ப் பிரிவு நோயாளிகளுக்குமாக மொத்தம் 25 கூடாரங்கள் உள்ளன. நோயாளிகளுக்கு 50 படுக்கைகள் உள்ளன. இந்தப் படுக்கைகளை எளிதில் மடக்கிக் கொள்ள இயலும்.

சமையலறை, சாப்பாட்டுக் கூடம், ஆய்வுக் கூடம், எக்ஸ்ரே நிலையம் அனைத்தும் உண்டு. யாவும் கூடாரங்கள்தான்.

இந்தக் கூடாரங்களில் கை கழுவும் பேசின், மின் விளக்குகள், மின் விசிறிகள் முதலியவை உண்டு. எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய ஆர். சி. டைப் மலம் கழிக்கும் அறைகள் உண்டு. இங்குள்ளோருக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக ஒரு மேல் நிலை நீர்த் தேக்கம் ஒன்று உள்ளது. இதனை இடம் பெயர்த்து எடுத்துக் கொண்டு செல்லலாம். மூன்று குதிரை ஆற்றல் உள்ள பம்ப் செட்டும் உள்ளது. இதன் உதவியால் தண்ணீரை மேல்நிலை நீர்த் தேக்கத்தில் தேக்கி வைத்துக் கொள்கிறார்கள்.

அறுவை அரங்கம் ஒன்று இருக்கிறது.

பல் நோய், நீரிழிவு, தொழு நோய், யானைக்கால் நோய் போன்ற நோய்களுக்கு இங்கு சிகிச்சை செய்யப்படுகிறது. பல்வகைப் பணிகளுக்கு உதவும் 'வேன்' ஒன்று உள்ளது. பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனமாகவும், ஆம்புலன்சாகவும் இது பயன்படுகிறது.

இது வரை நடைபெற்ற இரண்டு முகாம்களில் இடம் பெறாத கண், மூக்கு, தொண்டை மருத்துவப் பகுதி, இந்த மூன்றாவது முகாமில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் அதிகம் பரவியுள்ள யானைக் கால் நோய்க்கு மருத்துவம் செய்யும் பகுதி இந்த முகாமில் பெரும்பணியாற்றத் தொடங்கியிருக்கிறது.

ஒரு முகாமை முடித்துக் கொண்டு மற்றொரு முகாமிற்குச் சென்று, கூடாரங்களையும் ஏனைய கருவிகளையும் இயக்க வைப்பதற்குச் சுமார் ஒரு இலட்ச ரூபாய் செலவாகிறது. அது மட்டுமல்ல—ஒரு முகாமில் இவ்வளவு காலம் பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளும் நிறைவேற்ற முடியாமல் போய் விடுகிறது.

கும்முடிப்பூண்டியில் தொடங்கப் பெற்ற முதல் முகாம்—அங்குள்ள மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தனது மூன்று மாத காலம் என்ற குறிக்கோளை ஒத்தி வைத்துவிட்டு, 9 மாத காலம் பணியாற்றியிருக்கிறது. அதுபோல், காட்டாங்குளத்தில் 7 மாத காலம் பணியாற்றியிருக்கிறது. இந்த முகாமும் 3 மாத காலம் என்றுதான் மருத்துவ அதிகாரிகள் கூறுகிறார்கள்—பொது மக்களின் வேண்டுகோள் எப்படி இருக்கப் போகிறதோ?

இந்த முகாமிற்குச் செவ்வாய் தோறும் கண் மருத்துவர்கள் வந்து பணிபுரிகிறார்கள்; இரண்டாவது சனிக்கிழமை தோறும் தோல் மருத்துவர் வருகிறார். காச நோய் வராமல் தடுப்பதற்கும், காச நோய் இருக்கிறதா என்று கண்டறிவதற்கும் எக்ஸ்ரே எடுப்பதற்குரிய சிறப்பு ஏற்பாடுகள் இங்கே உள்ளன. பள்ளி மாணவர்களின் உடல் பரிசோதனைத் திட்டமும் இங்கே நிறைவேற்றப்படவிருக்கிறது.

இந்த மூன்றாவது முகாமைத் துவக்கி வைத்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''ஒன்றிரண்டு நோய்கள் தவிர ஏனைய நோய்களுக்கு மருந்து கண்டு பிடித்திருக்கிறார்கள் மருத்துவர்கள். ஆகவே நோயாளிகள் அஞ்சத் தேவையில்லை. என்றாலும் மருந்து மட்டும் நோயைக் குணப்படுத்துவதில்லை. மருத்துவர்கள் சொல்கின்றபடி உணவு முறைகளையும் கையாளவேண்டும். மருத்துவரின் மருந்தைத் தோற்கடிப்பது நோயாளியின் இலட்சியமாக இருக்கக் கூடாது.

''இந்த முகாமில் வந்து பணியாற்றும் ஸ்டான்லி மருத்துவ மனை மருத்துவர்கள் இங்கு வர வேண்டும் என்ற அவசியம் இல்லை; அவர்கள், நோயாளிகளின் பஞ்சத்தினால் இந்தக் கிராமத்தை நாடி வரவில்லை. அவர்கள் இங்கு வந்து பணியாற்றுவதற்குரிய காரணம், புனிதத் தொண்டு செய்ய வேண்டும் என்ற அருள் நோக்கமே. மக்களுக்காக மருத்துவர்களே தவிர, மருத்துவர்களுக்காக மக்கள் அல்ல!''

உள்ளிருப்பு நோயாளிகள் பிரிவில் ஒரு குழந்தையை நல்வாழ்வுத் துறை அமைச்சர் பார்வையிடுகிறார்

''இந்த நடமாடும் மருத்துவ மனை உருவானதனால் நமது கிராம மக்களுக்கு, தங்கள் உடல் நலத்தைப் பேணிக் கொள்ளும் உணர்வு உருவாகியிருக்கிறது. இது மிகச் சிறந்த செயலாகும்.

முன்பெல்லாம் அதிகமான நோய் கண்டால், அடிக்கடி கோயிலுக்குச் செல்வார்கள். சைவர்கள் என்றாலும், வைணவர்கள் என்றாலும் அன்று நோய் கண்டால் ஆலயம் செல்வார்கள். ஆனால் இன்று அப்படியில்லை. திருமழிசை ஆழ்வார் வாழ்ந்த இடமென்றாலும் இங்கேயும் மருத்துவமனை தேவைப்படுகிறது. அன்று கடவுளின் மீது பாரத்தைப் போட்டு வந்தார்கள். இன்று மருத்துவர்களின் மேல் பாரத்தைப் போடுகிறார்கள். மருத்துவர்கள் சிகிச்சை வழங்க முடியுமே தவிர துணையாக இருக்க முடியாது. மக்கள்தான் தங்களது பொறுப்பை உணர்ந்து உயிர் நலம் பேணிக் கொள்ள வேண்டும்.

"An apple a day
Doctor is away"

என்பது மேல்நாட்டுப் பழமொழி. தினமும் உணவுப் பொருட்களுடன், பழமும் சாப்பிட்டு வந்தால் ரத்தம் சுத்தப்படுகிறது. மருந்து கால் பங்கு, உண்ணும் உணவு முக்கால் பங்கு என்பது நம்மவர்கள் அடிக்கடி சொல்லும் வாசகம்.

இன்று பல நோய்கள், வராமலேயே தடுத்துவிட முடியும் என்கின்ற அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. அம்மை வராமல் இருக்க தடுப்பு ஊசி போடப்படுகிறது. காலராவைத் தடுப்பு ஊசியினால் கட்டுப்படுத்துகிறோம்.

இந்தத் தடுப்பு முறைக்குத் தமிழக அரசு தீவிர முயற்சி செய்து வருகிறது. அண்மையில் காஞ்சிபுரத்தில் காலரா கண்டிருப்பதாகத் தெரிந்து அறுபதாயிரம் பேருக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் திருப்பூரில் பிளேக் பரவத் தொடங்கியது. அது உடனடியாகத் தடுப்பு ஊசியால் தடுக்கப்பட்டு விட்டது. இவ்வாறு அவசரத்துக்குப் பயன்படக் கூடிய அளவு திறமை நம்மிடம் இருக்கிறது. அகில இந்தியாவில், தமிழ்நாட்டைப் போலச் சமாளிக்கும் ஆற்றல் வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லை.

தமிழ்நாடு அரசு, மருத்துவத் துறைக்கு, ஆண்டொன்றுக்கு 35 கோடி செலவிடுகிறது. மொத்த வருமானத்தில் இது 8¼ சதவிகிதம். அதாவது ஒரு தனி நபருக்கு ரூ. 8 செலவாகிறது ; என்றாலும் இது போதுமானதாக இல்லை.

தற்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இரண்டு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இதற்கு மத்திய அரசின் உதவியை நாடி இருக்கிறோம்.

பரங்கிமலையில் தானே விரும்பிச் செய்யும் சுகாதாரத் தொண்டு (Voluntary Health Service) என்று ஒரு திட்டம் தொடங்கப் பெற்றிருக்கிறது. 100 ரூபாய் மாத வருமானம் உள்ள ஒருவர், மாதத்திற்கு 50 காசு கொடுத்தால் போதும். அவர்கள் ஒரு குடும்ப அட்டை (Family Card) தருகிறார்கள். குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, அவர்களுக்கு அவ்வப்போது வருகின்ற நோய்களை அறிந்து மருந்து தருவார்கள். இதுபோன்ற திட்டம் அவினாசி வட்டம், ஈரோடு அருகில், பவானி வட்டம் ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இது போன்ற திட்டங்கள் எல்லா உட்பிரிவுகளிலும் உருவானால், மிகவும் நல்லது.

தமிழக அரசு மக்கள் நலம் நாடும் அரசு. நல் வாழ்வு நடத்த வேண்டும், என்ற தூய எண்ணம் மக்களிடம் பரவ வேண்டும் என்ற எண்ணத்துடன் பணியாற்றி வருகிறது. இதனை இந்த வட்டாரத்து மக்களும் உணர்ந்து, அரசு தரும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து இந்த நடமாடும் மருத்துவ மனையை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்''.

இந்த விழாவின் போது, அனைவரையும் வரவேற்றுப் பேசிய ஸ்டான்லி மருத்துவ மனையின் முதல்வர், "பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்'' என்று குறிப்பிட்டார்.

இந்த நடமாடும் மருத்துவ மனையின் முக்கிய நோக்கங்கள் மூன்று :

1. கிராமப்புறத்து மக்கள் வாழும் பகுதியில் அவர்களின் இல்லங்களுக்கே மருத்துவ உதவிகளைக் கொண்டு செல்வது.

2. எங்கெங்கு தடுக்க முடிகிறதோ அங்கெல்லாம் நோய் வராது தடுப்பது.

3. கிராம மக்களின் அறியாமையை நீக்கி அவர்களுக்குக் கல்வியுணர்வு தருவது.

இந்த மூன்று குறிக்கோள்களும் கொண்டிருக்கும் 'சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவ நிலையம்' எதிர்காலத்தில் எத்தனையோ முகாம்கள் இடப் போகின்றது. கிராமப் புறத்து மக்களின் இதயத்தில் நீங்காத இடம் பெறப் போகின்றது என்பது உறுதி.


வெளிநாட்டார் போற்றும்
பயன்பொருள்
கலைக்கூடம்

குறளகம்
கதர் கைத்தொழில் அங்காடி, சென்
கைவண்ணப் பொருள்களி
களஞ்சியம்

☎
20461
20462 20463
20464 20465

குறுவைச் சாகுபடி குறிப்புகள்



"பருவத்தே பயிர் செய்!" என்ற பழமொழிக்கு ஏற்பப் பருவத்திலேயே, பருவத்திற்கேற்ற ரகத்தைப் பயிரிட்டால் பயன்மிகப் பெறலாம். ஆனி பிறந்து விட்டது! தமிழகமெங்கும் உழவர் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்யத் தண்ணீரை எதிர்பார்த்துத் தயாராக இருப்பார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க அயராது உழைத்துவரும் உழவர் பெருமக்களுக்கு இந்த நேரத்திலே, குறுவைச் சாகுபடிக் குறிப்புகளைத் தெரிவித்தால், உழவர் பெருமக்களுக்கு அவை உறுதுணையாக அமையும் என்று கருதியே, கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளைக் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

குருவைக்கேற்ற ரகங்கள்

குறுவைப்பட்டத்தில் 'ஐ.ஆர். 8', 'ஜெயா', 'ஐ. ஆர். 20' போன்ற நடுத்தரக் கால உயர் விளைச்சல் தரும் ரகங்களையும், 'கருணை', 'ஆடுதுறை-27', 'கோ-29', 'காஞ்சி' 'காவேரி' போன்றகுறுகிய கால உயர் விளைச்சல் ரகங்களையும் பயிரிடுவதே அதிக மகசூல் பெறுவதற்கு வழிகோலும். உங்களுக்கு இருக்கும் தண்ணீர்வசதிக்கும், நிலத்தின் தன்மைக்கும், நீங்கள் அடுத்துப் பயிரிடவிருக்கும் பயிருக்கும் ஏற்ப மேற்கூறிய ரகங்களில் உங்களுக்குத் தகுந்தவற்றைக் கீழே குறிப்பிட்டுள்ள ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு பயிரிட்டால் குறுவையில் அதிக மகசூல்பெற்று அதிக வருவாய் அடையலாம்.

ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

ரகத்தின் பெயர்.	வயது (நாட்கள்)
ஐ. ஆர். 8.	130 முதல் 135
ஜெயா	125 முதல் 130
ஐ. ஆர். 20	135
கருணை	108
ஆடுதுறை-27	105
கோ-29	110 முதல் 115
காஞ்சி	115 முதல் 120
காவேரி	110 முதல் 115

நாற்றுவிட வேண்டிய காலம்

ஐ. ஆர். 8 ஜெயா	ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17).
ஐ. ஆர். 20	,,
கருணை ஆடுதுறை-27. காஞ்சி கோ-29 காவேரி	ஜூன் 15-ஆம் தேதி (ஆனி 2) முதல் ஜூலை 15-ஆம் தேதிக்குள் (ஆனி 32) நாற்று விடுவது மிகச் சிறந்தது.

மழைக்கு முன் அறுவடை செய்ய ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17) நாற்று விடவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஜூலை 27 (ஆடி 12) ஆம் தேதிக்குப் பிறகு நாற்று விடுதல் நல்லதல்ல.

விதையளவு

ஒரு ஏக்கர் நடவுசெய்ய 18 கிலோ விதையை நாற்று விட வேண்டும். தரமான விதைகளை வேளாண்மைத் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

விதையுடன் மருந்து கலக்குதல்

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'திராம்' அல்லது 'காப்டான்' அல்லது 'டீ. எம். டீ. டி.' மருந்து வீதம் கலந்து விதை கலக்கும் கருவியில் இட்டுச் சுற்றி, மருந்து விதைகளுடன் நன்கு கலக்குமாறு செய்யவும்.

நாற்றங்கால் தயாரித்தல்

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 செண்ட் நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்க வேண்டும். 12 செண்ட் நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு அல்லது ஒரு வண்டி தழை எரு வீதம் இடவேண்டும். நாற்றுகளைப் பறிக்கும் போது வேர்கள் அறுந்து விடாமல் பறிக்க இவ்வாறு எருவிடுதல் அவசியம். நாற்றங்காலை ஒவ்வொன்றும் ஒரு செண்ட் (54'× 8') பரப்புள்ள 12 பாத்திகளாகப் பிரித்துக் கொண்டு, அவைகளை மேடைப் பாத்திகளாக (Raised beds) அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். புழுதி நாற்றங்கால் அமைத்தலும் சிறந்தது.

விதைத்தல்

ஒவ்வொரு மேடைப்பாத்திக்கும் 1½ கிலோ அளவு விதைகளை விதைக்க வேண்டும். மூன்றுங்கொம்பு விதைகளை விதைப்பது நல்லது. புழுதி நாற்றங்காலில் விதைகளை முளைக்க வைக்காமல் நேரடியாக விதைக்க வேண்டும்.

நடவு வயல் தயாரித்தல்

நடவுவயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்க வேண்டும். 'பில்லிப்பசரா' போன்ற பசுந்தாள் உரப்பயிர் வளர்ந்துள்ள



நிலமாக இருந்தால் அப்படியே இரும்புக் கலப்பையால் உழுது விட்டுப் பின்னர் 'பர்மிய செட்டுன்' அல்லது 'தழைமிதிக்கும் கருவிகொண்டு அழுத்தி உழவு செய்யவும் கூண்டுச் சக்கரம் (Cage Wheel) இணைக்கப்பட்ட டிராக்டரைக் கொண்டு உழுது, நிலத்தின் குறுக்கும் நெடுக்குமாக இருமுறை உழவு செய்து, பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப் படுத்தவும்.

அடியுரமிடுதல்

அதிக மகசூல் பெருவதற்குத் தேவையான அளவு தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது தழை எருக்களையும், இரசாயன உரங்களையும் இட வேண்டும். பொதுவாக மேற் கூறிய எல்லா ரகங்களுக்கும் ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது 10 வண்டி கம்போஸ்ட் எரு அல்லது 5 வண்டி (2,300 கிலோ) பசுந்தழை அல்லது பசுந்தாள் உரம் இட்டு, உழுது சேற்றுடன் கலக்குமாறு செய்ய வேண்டும்.

மண்ணின் தன்மைக்கும் ரகத்திற்கும், ஏற்ப உரமிடுவதே நல்லது. மண் பரிசோதனை செய்து, சோதனை முடிவில் குறிப்பிட்ட அளவில் உரமிடுவதே அதிக மகசூலுக்கு வழிவகுக்கும். மண் பரிசோதனை செய்து, அதன்படி இரசாயன உரமிடமுடியாத உழவர்கள் வேளாண்மைத் துறையினர் ரகத்திற்கு ஏற்பப் பொதுவாகப் பரிந்துரைக்கும் அளவில் இரசாயன உரமிடவேண்டும்.

அடியுரமாக இரசாயன உரமிடுவதை ரகத்திற்கும், மாவட்டத்திற்கும் பரிந்துரைக்கப்படும் அளவில் இட வேண்டும். ஆகவே, கீழே ரகத்திற்கு ஏற்பப் பொதுவான ஓர் உர அளவும், தஞ்சை மாவட்டத்திற்கெனத்தனியே ஓர் அளவும் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவான உர அளவைத் தஞ்சை மாவட்டம் தவிர்த்த மற்ற மாவட்டங்களில் பயன்படுத்த வேண்டும். ஆனால், தஞ்சை மாவட்ட உழவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ள உர அளவிலேயே இரசாயன உரங்களை இட வேண்டும்.

''ஐ. ஆர். 8'', ''ஜெயா'' ரகங்களுக்குப் பொதுவான உர அளவு

கடைசி உழவில் ஏக்கருக்கு 35 கிலோ மணிச்சத்தும், 35 கிலோ சாம்பல் சத்தும் அடியுரமாக அளிக்கப்பட வேண்டும். ஏக்கருக்கு இந்த அளவு சத்துக்களை அளிக்க, கடைசி உழவில் பின்கண்ட அளவில் இரசாயன உரங்களை இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 220 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 60 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியா உரத்தை அடியுரமாக இடவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 8'', ''ஜெயா'' ரகங்களுக்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 8''. ''ஜெயா''ரகங்களைப் பயிரிடக் கடைசி உழவிற்கு முன், ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். உரங்களைக் குறைந்த செலவில் அளிக்கப் பின்கண்ட உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுதுவிடவேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட் 54 கிலோ.

யூரியா 44 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 42 கிலோ.

''ஐ. ஆர். 20'' ரகத்திற்குப் பொதுவான உர அளவு

''ஐ. ஆர். 20'' ரகத்திற்குக் கடைசி உழவில் ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து வீதம் அளிக்கப் பின்கண்ட அளவு இரசாயன உரங்ளை அடியுரமாக இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 155 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 42 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து அளிக்க 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 65 கிலோ யூரியாவைப் போட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 20'' ரகத்திற்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 20'' ரகம் பயிரிட ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக்களை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின்கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுது விட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட் 88 கிலோ

யூரியா 80 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 25 கிலோ.

''கருணா'' ரகத்திற்குப் பொதுவான உர அளவு.

''கருணா'' ரகத்திற்கு ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாகக் கடைசி உழவில் இட, பின்கண்ட அளவு உரமிடுதல் வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 155 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 42 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து அளிக்க, 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 65 கிலோ யூரியாவை அடியுரமாக இடவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ''கருணா'' ரகத்திற்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் ''கருணா'' பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து, ஆகியவைகளை அளிக்கவும், இச்சத்துக்களைக் குறைந்த செலவில் இடவும் கீழ்க்கண்ட அளவில் இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்குமுன் இட்டு உழுது விட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட் 85 கிலோ

யூரியா 20 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 25 கிலோ.



''ஆடுதுறை-27'', ''கோ-20'' ரகங்களுக்குப் பொதுவான உர அளவு

கடைசி உழவில் ஏக்கருக்கு 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்கப் பின்கண்ட அளவில் உரமிட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 130 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 23 கிலோ

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 17 கிலோ தழைச்சத்து அளிக்க 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியாவை இட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ''ஆடுதுறை-27'' ரகத்திற்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் ''ஆடுதுறை-27'' ரகத்திற்கு அடியுரமாக ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்த அளவில் சத்துக்களை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின்கண்ட அளவில் இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழ வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—45 கிலோ.

யூரியா—14 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 24 கிலோ.

''காஞ்சி'', ''காவேரி'' ரகங்களுக்குப் பொதுவான உர அளவு

கடைசி உழவில் ஏக்கருக்கு 21 கிலோ மணிச்சத்து, 21 கிலோ சாம்பல் சத்து அளிக்கப் பின்கண்ட அளவு உரமிட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 130 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 35 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 27 கிலோ தழைச்சத்து அளிக்க 135 கிலோ அமோனியம் சல்பேட், அல்லது 60 கிலோ யூரியாவை இட வேண்டும்.

நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்

நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக 12 செண்ட் நாற்றங்காலுக்கு 24 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 24 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

நாற்றின் வயது

அதிக வயதுடைய நாற்றுகள் நல்ல பலனை அளிக்காது. எனவே, நாற்றுகளைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் பறித்து நட்டுவிட வேண்டும். நெல் ரகத்திற்கு ஏற்பக் கீழே குறிப்பிட்ட நாட்களில் நாற்றைப் பறித்து நட்டுவிட வேண்டும்.

ரகத்தின் பெயர்	நாட்கள்
ஐ.ஆர். 8, ஜெயா — —	26 முதல் 28
கருணா — —	24 முதல் 26
ஆடுதுறை-27, கோ-29 —	24 முதல் 25
காஞ்சி, காவேரி — —	22 முதல் 25
ஐ. ஆர். 20 — —	25 முதல் 28

'தபாக்' முறையில் நாற்றுவிட்டால், நாற்று விட்ட 14-ஆம் நாளே நாற்றைப் பறித்து நடவு செய்ய முடியும்.

நடவும் இடைவெளியும்

நாற்றுகளைக் கூடுமானவரை வரிசை வரிசையாக நடவு செய்ய வேண்டும்.

களிமண் நிலங்களில் வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட வேண்டும்.

மணற் பாங்கான நிலத்தில் வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட வேண்டும். இரண்டு, இரண்டு பயிர்களாக வைத்து நடுவதே சிறந்தது.

களையெடுத்தல்

நாற்று நட்ட 15-ஆம் நாளும், 30-ஆம் நாளும் இடை உழவுக் கருவியால், (Intercultivator) பயிர் வரிசைகளுக்கிடையில் மண்ணைக் கிளறிவிட்டுக்களையெடுக்கவும் வரிசையில் பயிர்களுக்கு இடையில் உள்ள களைகளைக் கைகளால் பிடுங்கி அப்புறப்படுத்தவும். ஐ.ஆர். 8, ஜெயா, ஐ. ஆர். 20 ரகங்களுக்கு நாற்று நட்ட 40-ஆம் நாள், 2-ஆம் களையெடுத்தால் போதுமானது.

மேலுரமிடுதல்

பொது :—ஐ. ஆர். 8, ஜெயா ரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம், நாள் முதல் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 3 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும். நடவுசெய்த 49 நாளிலிருந்து 54 நாளுக்குள் அதாவது தண்டு உருளும் தருணத்தில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு, 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும்.

ஐ. ஆர். 20 ரகத்திற்கு நடவுசெய்த 21-ஆம் நாளில் ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். நடவு செய்த 40 முதல் 42 நாளில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

கருணா ரகத்திற்கு நடவுசெய்த 21-ஆம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 100 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 44 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

ஆடுதுறை-27, கோ-29 ரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாளில் ஏக்கருக்கு 11 கிலோ தழைச்சத்து அளிக்க 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

காஞ்சி, காவேரி ரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாள் ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து அளிக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்:—ஐ.ஆர். 8, ஜெயா ஆகிய ரகங்களைப் புதிய ஆற்றுப் பாசனப் பகுதியில் நட்டிருந்தால் நடவு செய்த 15-ஆம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். நடவு செய்த 50-55 நாட்களில் இரண்டாம் தடவையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். பழைய ஆற்றுப் பாசனப் பகுதிக்கு நடவுசெய்த 50-55 நாட்களில் (தண்டு உருளும் தருணம்) ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை இடவும்.

ஐ.ஆர். 20 நட்டிருந்தால் புதிய ஆற்றுப்பாசனப் பகுதியில் நடவு செய்த 15-ஆம் நாள் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும், நடவுசெய்த 50-55நாட்களில் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும் மேலுரமாக இட வேண்டும். பழைய ஆற்றுப்பாசனப் பகுதியில் நடவு செய்த 50-55 நாட்களில் ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

கருணா ரகம் பயிரிட்டிருந்தால் நடவு செய்த 15-ஆம் நாள் முதல் தடவையாக 8 கிலோ தழைச்சத்து அளிக்க 18 கிலோ யூரியாவையும், நடவு செய்த 30-ஆம் நாள் 2-ஆம் தடவையாக ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்து அளிக்க 18 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடவும்.

பயிர்ப் பாதுகாப்பு

நடவு செய்த 15-ஆம் நாள் வருமுன் தடுப்பாக (Prophylactic treatment) ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியானை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து (10 பெரிய மண்ணெண்ணெய் டின் அளவு) கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் பயன்படுத்துவதனால் ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியானை 40 முதல் 60 லிட்டர் தண்ணீரில் (2 முதல் 3 பெரிய மண்ணெண்ணெய் டின் அளவு) கலந்து தெளிக்க வேண் வேண்டும்.

நடவு செய்த 30-ஆம் நாள் மேற்கூறிய அளவு மருந்துடன், 200 கிராம் டைத்தியோ கார்பேட் மருந்தையும் கலந்து தெளிக்க வேண்டும்.

தண்டு உருளும் தருணத்திலேயும், நடவு செய்த 15-நாள் தெளித்தது போலவே, தெளிக்க வேண்டும்.

நெற்பூவில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத்தூளைத் தூவி விடவேண்டும்.

எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு பெரும்பயன் அடையுமாறு குறுவைச் சாகுபடி செய்யும் உழவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

எதிர்கால வாழ்வுக்கு எளிதான வழி

எறும்பு சேமிக்கிறது.

தேனீ சேமிக்கிறது. ஆனால், நாம் சேமிக்கிறோமா?

இந்த வினாவை ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அதற்கு விடை கிடைக்கும். நூறு காசு சம்பாதிப்பவன் ஆறு காசு சேமிக்கலாம்; சேமிக்க முடியும். 'முடியாது என்பது என் அகராதியில் இல்லை' என்றான் ஒரு வீரன். அதைப்போல மனிதனால் எதையும் சாதிக்க முடியும். முயற்சியும் உழைப்பும் இருந்தால் வெற்றி கிட்டுவது உறுதி.

சேமிப்பது என்பது ஒரு கலை; அக்கலை நிலையாக வர முயன்றால், வாழ்க்கையும் நிலை பெற்றுத் திகழும். வரவுக்கு மீறிச் செலவு செய்வதைவிட, வருவது அறிந்து செலவைக் குறைப்பதுதான் புத்திசாலித்தனம். 'சிக்கனம் இருந்தால் யாவரும் செல்வராகலாம்.' என்று மேலை நாட்டு அறிஞர் ஒருவர் சொன்னது பொய்யில்லை.

பெரிய குடும்பமானாலும் சரி, சிறிய குடும்பமானாலும் சரி சேமிக்கும் பழக்கம் அவர்களிடையே இருந்தால், அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நம் நாட்டில் சேமிப்பை ஊக்குவிக்க அஞ்சலகச் சேமிப்பு வங்கிகள். மற்றும் அரசுரிமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை அயராது செயல்படுகின்றன. இவற்றுள், ஒரு சிறு கிராமக் குடிமகனும் எளிதாகச் சேமிக்க உறுதுணை புரிந்து சிறந்த முறையில் பல சலுகைகள் அளிப்பது அஞ்சலகச் சேமிப்பு வங்கியே. அஞ்சலகம் இல்லாத இடமே இல்லையென்று கூறலாம். பேரூர்களிலும், நகரங்களிலும்தான் வங்கிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆதலால், மிகச் சிறிய கிராமத்திலும் சேமிக்கும் ஆர்வமுள்ளவர்களின் தேவைகளைச் செவ்வனே பூர்த்தி செய்து பெரும் பயன்தரும் அஞ்சலக வங்கியில் சேமிப்பது சாலச் சிறந்தது.

அஞ்சலகத்துடன் பலவிதங்களில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள நாம் சேமிப்புக்கென்று தனியே ஓரிடத்தை நாடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும், அஞ்சலகச் சேமிப்பு வங்கி மூலம் சேர்க்கப்படும் மொத்தச் சிறு சேமிப்புத் தொகையில் 2/3 பங்கு ஒவ்வோர் ஆண்டும் அந்தந்த மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மேற்கொண்டுள்ள மாபெரும் ஆக்கப் பணிகளை ஊக்குவிக்க அஞ்சலக வங்கி மூலம் சேர்க்கப்படும் சிறு சேமிப்புத் தொகை பேருதவியாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் எவ்வயதினரும் பணம் சேர்க்கலாம். தனி நபரோ இருவர் அல்லது மூவர் கூட்டாகவோ சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கலாம். தனி நபருக்கும், கூட்டுச் சேமிப்புக்கும் முறையே ரூ. 25,000, ரூ. 50,000 உச்ச வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்து கொண்ட சங்கங்கள், நிறுவனங்கள், சொந்தமாகத் தொழில் நடத்துபவர் ஆகியோரும் சேம நிதித் தொகைகளைத் தங்கள் நிறுவனங்கள் பேரில் முதலீடு செய்யலாம்.

அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் முதலீடு செய்யப்படுகின்ற தொகைக்கு 1971, சனவரி 1 முதல் 4 சதவிகிதம் உயர் வட்டி வழங்கப்படுகிறது. மேலும், நிதியாண்டு முழுவதும் குறைந்தது ரூ. 100 சேமிப்புக் கணக்கில் இருந்தால் 4½ சதவிகிதம் வட்டியும், "அடைப்பு வைப்புத் தொகை" திட்டத்தின் மூலம் 4½ சதவிகிதம் வட்டியும் பெறலாம். இவை சேமிப்புக்குக் கிடைக்கும் மிக உயர்ந்த வட்டி விகிதங்களாகும்.

சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கவும், முதலீடு செய்பவருக்கு மேலும் ஊக்கமளிக்கவும், 'அடைப்புவைப்புத்தொகைத்திட்டம்' (Blocked Deposit Scheme) அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் இயங்கி வருகிறது இத் திட்டத்தின் கீழ் சேமிப்பில் குறைந்தது ரூ. 100 அல்லது அதன் பெருக்குத் தொகைகளை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு எடுக்காமல் இருப்பதாக அஞ்சலக அதிகாரிக்கு எழுதித் தெரிவித்துக் கொண்டால் 4½ சதவிகிதம் வட்டி வழங்கப்படுகிறது. இதன் மூலம் ரூ. 100 இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 109.20 ஆகவும், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 144 ஆகவும் வளருகிறது. "அடைப்பு வைப்புத் தொகை" போகக் கணக்கில் மீதியுள்ள பணத்திற்கு 4½ சதவிகிதம் அல்லது 4 சதவிகிதம் வரையில் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு வட்டி கிடைக்கும்.

முதலீட்டைக் 'காசோலை' (செக்) மூலம் பெறவும் வசதியுள்ளது. கணக்கில் ரூ. 100-க்கு மேலிருந்தால், காசோலை மூலம் பற்று, வரவு வைத்துக் கொள்ளலாம். ஆனால் வைத்துள்ள கணக்கில் எப்போதும் ரூ. 50-க்கு குறையாமல் இருப்பு இருக்க வேண்டும். காசோலைப் புத்தகத்தை அஞ்சலகத்தில் கிடைக்கும் விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்து கொடுத்து இலவசமாகப் பெறலாம். காசோலைக்கு உடனுக்குடன் இரசீது கொடுக்கப்படும். பணமாக்கிய தேதியில் முதலீடு செய்பவரின் கணக்கில் வரவு வைக்கப்படும். உள்ளூர் காசோலைகளைப் பணமாக்க அஞ்சலகம் கட்டணம் வசூலிப்பதில்லை. வெளியூர் காசோலைகளுக்கு மட்டும் நூற்றுக்குப் பத்து காசு வீதம் (குறைந்த அளவு ஒரு ரூபாய், அதிக அளவு ஐந்து ரூபாய்) கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

அஞ்சலகச் சேமிப்பு வங்கியின் மூலம் கிடைக்கும் வட்டிக்கு வருமான வரி கிடையாது. அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் முதலீடு செய்யப்படும் இதர சிறு சேமிப்புத் திட்டங்களுடன் சேர்த்த மொத்த மதிப்பீடு ரூ. 1,50,000 வரை செல்வ வரி விலக்கு உண்டு.

சேமிப்பிலிருந்து எப்பொழுது வேண்டுமானாலும், எவ்வளவு தொகை வேண்டுமானாலும் (அடைப்பு வைப்புத் தொகையின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருக்கும் தொகை தவிர) எத்தனை முறை வேண்டுமானா

லும் பணம் எடுக்கலாம், சேமிப்புக் கணக்கை ஒரு அஞ்சலகத்திலிருந்து நாட்டிலுள்ள எந்த அஞ்சலகத்திற்கு வேண்டுமானாலும் கட்டணமெதுவுமின்றி மாற்றிக் கொள்ளலாம். கணக்கு வைத்திருப்பவர் ஒருவர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டோரைப் பணம் பெற நியமனம் செய்திருந்தால், அவர் மரணமடைய நேர்ந்தால், பணம் பெற நியமிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதத் தாக்கீதும் இல்லாமல் பணம் உடனடியாக வழங்கப்படும்.

கணக்கை எப்படி ஆரம்பிப்பது ?

சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பது மிக மிகச் சுலபம். எல்லா அஞ்சலகங்களிலும் கிடைக்கும் இலவச விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்து குறைந்த செலவுத் தொகையான ரூபாய் ஐந்துடன் அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் கொடுக்க வேண்டும். கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பற்று, வரவுப் புத்தகம் (பாஸ் புத்தகம்) கொடுக்கப்படும்.

பொது சேம நிதித் திட்டம்

, அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரிபவர் தங்கள் ஊதியத்திலிருந்து ஒரு சிறு தொகையை மாதா மாதம் வருங்காலச் சேம நிதிக்குக் கட்டாயமாகச் செலுத்தி வருகின்றனர். இத்தொகை அவர்கள் ஓய்வு பெறுகின்ற காலத்தில் வட்டியுடன் கூடிய ஒரு கணிசமான தொகையாகத் தரப்படுகிறது. பல ஆண்டுகள் சேவைக்குப் பிறகு, ஓய்வு பெறும் காலத்தில் நிம்மதியான வாழ்க்கை நடத்துவதற்கு இச் சேமநிதி பெரிதும் உதவுகிறது.

இத்தகைய ஒரு வசதி சொந்தமாகத் தொழில் நடத்துபவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதுவரை இல்லாதிருந்தது, ஒரு பெரும் குறையாகவே இருந்து வந்தது. சேமிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் சேமித்து வைத்திருந்த பணத்தைஎடுத்துச்செலவுசெய்து விடுகிறோம். இக் குறையைப் போக்கவே பொது மக்கள் அனைவருக்கும் பயனளிக்கக் கூடியவகையில், 15 ஆண்டு பொது சேம நிதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தனிச்சிறப்பு

இந்தியாவிலேயே, தமிழ் நாட்டில்தான் பிற்பட்டோர் நலத்துறை என்ற ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறைக்கென ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டிருப்பதும் தமிழ் நாட்டில்தான். வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது.

சேமநிதி கணக்கை வயது வந்த யார் வேண்டுமானாலும் அவர் பேரிலாவது அல்லது வயது வராத ஒருவர் பேரிலாவது துவக்கலாம். இத்திட்டம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எல்லாக் கிளை அலுவலகங்கள் மற்றும் துணை நிறுவனங்கள் ஆகியவற்றில் மட்டுமே இயங்கி வருகிறது. கணக்கைத் துவக்கியவுடன் ஒரு சேமிப்புப் புத்தகம் (பாஸ் புத்தகம்) தரப்படுகிறது. இதில் எல்லாப் பற்று-வரவு விவரங்களும் அவ்வப்போது குறிக்கப்பட்டு வருகின்றன.

இது ஒரு 15 ஆண்டுக் கணக்கு. நீங்கள் செலுத்தி வந்த முதலீடும் அதற்கு வட்டியும் சேர்ந்து 15 ஆண்டுகள் இறுதியில், அரசுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகை ஏதாவது இருந்தால் அது போக, மீதி திரும்பக் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக, நிதியாண்டு 1971-72-ல் ஒரு சேம நிதிக் கணக்கை ஆரம்பித்திருந்தால், 1-4-1987க்குப் பிறகு சேமிப்பிலிருக்கும் முழுத் தொகையையும் வட்டியுடன் சேர்த்துப் பெறலாம். காலவரைக்குப் பிறகும் விரும்பினால், சலுகைகளில் எவ்வித இழப்பும் இல்லாமல் கணக்கைத் தொடரலாம்.

இத்திட்டத்தில் ரூபாய் ஐந்து அல்லது அதன் பெருக்குத் தொகைகளில் வரையறையின்றி முதலீடு செய்யலாம். ஆனால், ஒரு குறிப்பிட்ட நிதி ஆண்டில் (ஏப்ரல்-மார்ச்சு) செலுத்தப்படுகின்ற தொகை ரூ. 100க்குக் குறைவாகவோ அல்லது ரூ. 15,000க்கு அதிகமாகவோ இருக்கக்கூடாது.

இத் திட்டத்தின் தனிச் சலுகை என்னவெனில், ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் அவரவர் வசதிக்கேற்ப எவ்வளவு தொகை வேண்டுமானாலும், எத்தனைத் தவணைகளில் வேண்டுமானாலும் செலுத்தலாம். அந்த நிதியாண்டில் நீங்கள் கட்டவேண்டிய மொத்தத் தொகையையும் ஓரே தவணையிலும் கட்டலாம்.

முதலீட்டுத் தொகைக்கு அரசினரால் அவ்வப்போது அறிவிக்கப்படும் வட்டி விகிதம் அளிக்கப்படுகிறது. தற்போது 5 சத விகிதம் கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது. வட்டிக்கு வருமான வரியும் செல்வ வரியும் கிடையாது

கணக்குத் தொடங்கி மூன்று ஆண்டுகள் கழிந்த பிறகு முதன் முதலாகக் கடன் வாங்கலாம். நீங்கள் கடன் கேட்கும் தேதிக்கு முந்திய மார்ச்சு மாதம் 31-ஆம் நாள் உங்கள் கணக்கில் உள்ள முதலீட்டுத் தொகையில், 25 சத விகிதம் அதிக அளவுத் தொகை பணமாகக் கிடைக்கும். கடனை 2 சத விகிதம் சாதாரண வட்டியுடன் 24 மாதத் தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் கட்டப்படவேண்டிய கடன் தொகைமீது 6 சத விகிதம் வட்டி வசூலிக்கப்படும். முதலில் வாங்கிய கடன், வட்டியும் முதலுமாகத் திருப்பிச் செலுத்தபட்ட பிறகு நீங்கள் இரண்டாவது கடன் பெறலாம். கணக்கைத்தொடங்கி 5 ஆண்டுகள் முடிவடைந்த பிறகு கடன் பெற இயலாது.

காலவரை முற்றுப்பெறும் முன்னரே (அதாவது 15 ஆண்டுகள் முடியுமுன்) சேமிப்புப் பணத்தைத் திரும்பப் பெற வசதி உண்டு. ஆனால், கணக்கைத் தொடங்கிய ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் முதலீட்டில் பாதித் தொகையைத் திரும்பப் பெறலாம். முதல் முறை பணம் எடுத்த மூன்றாண்டுகளுக்குப் பிறகு, தேவைப்பட்டால், மறுமுறை பணம் எடுக்கலாம்.

பணம் போட்டிருக்கும் வங்கியில் கிடைக்கக் கூடிய பணம் எடுக்கும் விண்ணப்பத்தாளைப் பூர்த்திசெய்து அதனுடன் பற்று, வரவு புத்தகத்தையும் கொடுக்க வேண்டும். பணம் பெற எக்காரணமும் காட்ட வேண்டிய அவசியமில்லை. கோரிக்கை வங்கியினால் உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பணம் கொடுக்கப்படும்.

இச் சேமநிதி மற்றும் ஆயுள் இன்சூரன்ஸ், அங்கீகரிக்கப்பட்ட சேமநிதி, 10 அல்லது 15 ஆண்டு வளரும் மாதச் சேமிப்புக் கணக்கு ஆகிய திட்டங்களில் முதலீடு செய்யும் மொத்தத் தொகைக்குக் கூட்டாகச் சேர்த்து வரி விலக்கு அளிக்கப்படுகிறது

கீழ்க்கண்ட உதாரணத்தின் மூலம் வருமான வரி விலக்கு எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்று அறியலாம்.

ஒருவர் ஆண்டு வருமானம் ரூ. 20,000 ஆக இருப்பின் அவர் ரூ. 6,000 வரையில் (அதாவது அவர் ஆண்டு வருமானத்தில் 30 சத விகிதம்) மேற்குறிப்பிட்டுள்ள சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யலாம். இந்த ரூ. 6,000 சேமிப்புத் தொகையில் ரூ. 3,500 வரை வரி விலக்குக் கோரலாம். அதாவது சேமிப்புத் தொகையில் முதல் ரூ. 1,000 வரை 100 சத விகிதம் வரி விலக்கும், மீதமுள்ள ரூ. 5,000-க்கு 50 சத விகிதம் வரி விலக்கும் அளிக்கப்படுகிறது. வரிவிலக்குக் கோருவதற்குத் தேவையான சான்றிதழ் வங்கி அஞ்சல் மூலம் அனுப்பும். ஆதலால், சரியான முகவரியை வங்கிக்கு அவ்வப்போது தெரிவிக்க வேண்டும். கணக்கை ஸ்டேட் பேங்கின் எந்தக் கிளைக்கும் மாற்றிக் கொள்ள வசதி உள்ளது

ஒருவர் தமக்குப் தம் சேமிப்பை யாருக்கு அளிக்க விரும்புகிறாரோ அவரைப் பணம் பெறுவதற்கு நியமனம் செய்து வைத்தல் நல்லது. சேமிப்பவர் திடீரென்று மரணமடைந்தால் கணக்கிலுள்ள தொகை முழுவதும் நியமனம் செய்யப்பட்டவருக்குக் காலவரை (அதாவது 15 ஆண்டுகள்) முடியுமுன்னரே திருப்பி அளிக்கப்படும்.

சேமநிதியில் உள்ள பணம் எக்காரணத்தைக் கொண்டும் ஜப்தி செய்யப்படுவதற்கு எந்த நீதி மன்றத்தின் தீர்ப்பாணைக்கும் உட்பட்டதல்ல. தமிழ்நாடு அரசு சிறு சேமிப்புத் துறையின் கள அதிகாரிகளும் மற்றும் மத்திய அரசு தேசியச் சேமிப்பு நிறுவன அதிகாரிகளும் உங்கள் இல்லங்கள் தோறும் வந்து சேமிப்புத் திட்டத்தை விளக்கவும் சேவை புரியவும் காத்திருக்கின்றனர்.

சம்பளப் பட்டியல் சேமிப்பைப் பற்றி தெரிந்து கொள்வோமா ?

“ சம்பளம் வாங்கியவுடன் செலவுகளை ஈடு கட்டவே முடியவில்லையே, பிறகு எப்படி சேமிப்பது ?’ என்று அலுத்துக் கொள்பவர்களுக்கு இத் திட்டம் மிகுந்த பயனளிக்கக் கூடியது. சம்பளம் வழங்கும் அதிகாரியே உங்களுக்காக நீங்கள் குறிப்பிட்ட தொகையினை உங்கள் சம்பளத்திலிருந்து பிடித்து அஞ்சலக வங்கியில் மாதந்தோறும் கட்டி விடுகிறார். 5 ஆண்டுகள் இறுதியில் நீங்கள் கட்டிய தொகையும் வட்டியும் சேர்ந்து (6¾ சத விகிதம்) கீழ்க்கண்டவாறு நிறைவெய்தும்.

கட்டும் தொகை.	ஐந்து ஆண்டு இறுதியில் கிடைக்கும் தொகை.
ரூ.	ரூ.
5	355
10	710
15	1,065
20	1,420
30	2,130
35	2,485

திருச்சியில் ஒரு தொழிற்பேட்டை

திருச்சியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கத் தமிழ்நாடு அரசு ரூ. 15 இலட்சம் அனுமதித்துள்ளது.

தற்போது 10 கூடங்களைக் கொண்டு இயங்கி வரும் சிறு தொழிற்பேட்டையருகே இந்தப் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். திருவெறும்பூரில் உள்ள கொதிகலன் தொழிற்சாலைக்குத் தேவையான உறுப்புகள், சாதனங்களைத் தயாரிக்கத் துணைத்தொழில்களைத் துவக்கும் தொழில் முயற்சியாளர்களுக்காக 29 கூடங்கள் அமைக்கப்படும்.

இந்தத் தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்கக் கொதிகலன் ஆலை உறுதியளித்துள்ளது. சுமார் 400 ஏக்கர் மனையில் 100-க்கும் அதிகமான கூடங்களுடன் கூடியதாக இந்தத் தொழிற்பேட்டை படிப்படியாக விரிவாக்கப்படும். தற்போது தமிழ்நாட்டில் 50 தொழிற்பேட்டைகள் உள்ளன.

இத்திட்டத்திற்கு ஐந்தாண்டு அஞ்சலகத் தொடர் வைப்புத் தொகைத் திட்டம் என்று பெயர் (ரெகரிங் டெபாசிட் திட்டம்).

ஒருவர், இத்திட்டத்தில் ரூ. 5-ம் அதன் பெருக்குத் தொகையிலும் வரையறையின் தொகையிலும் வரையறையின்றி முதலீடு செய்யலாம். கணக்கைத் துவங்கி ஓராண்டுக் காலம் முடிவடைந்தவுடன் சேர்ந்த பணத்தில் பாதித் தொகையைக் கடனாகப் பெறலாம்.

தவணைகள் தவறினால் போட்ட பணம் கிடைக்குமா ? நிச்சயம் கிடைக்கும். ஓராண்டுத் தவணைகள் தவறினால் முதலீட்டைக் குறைந்த வட்டியுடன் கட்டலாம். மேற்கொண்டு தவணைகள் கட்ட முடியாத நிலை ஏற்பட்டாலும், வரையறை முடிந்தவுடன், அதாவது 5 ஆண்டுகள் முடிவில் முதலும் வட்டியும் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

உங்களுக்குப் பிறகு சேமிப்பில் உள்ள தொகை வட்டியோடு நீங்கள் நியமிக்கும் வாரிசுக்கு எந்தவிதத் தாக்கீதும் இல்லாமல் வழங்கப்படும். சிறுசேமிப்பு மற்றும் தேசியச் சேமிப்பு அலுவலர்கள் உங்களை அணுகி ஒப்புதல் பத்திரங்களில் உங்கள் கையெழுத்துக்களைப் பெற்று உங்கள் அலுவலகத்தில் சம்பளம் வழங்கும் அதிகாரியிடம் சேர்த்துவிடுவார்கள். பிறகு, மாதா மாதம் உங்கள் சம்பளத்திலிருந்து நீங்கள் குறிப்பிட்டுள்ள தொகையைப் பிடித்து அஞ்சலக வங்கியில் உங்கள் கணக்கில் சேர்த்து வருவார்கள். உங்கள் பெயரில் ‘பாஸ்’ புத்தகம் உங்களுக்குச் சம்பளம் வழங்கும் அதிகாரியே வைத்திருப்பார். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அதனைக் கேட்டு வாங்கிக் கணக்கைச் சரி பார்த்துக் கொள்ளலாம்.

அஞ்சலகக் குறிப்பிட்ட கால (டைம்) டெபாசிட் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. அது என்ன ?

ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பணத்தைச் சேமித்து வைக்க விரும்புவோருக்கு உதவுமாறு இத்திட்டம் 1970-ல் துவங்கப்பட்டது. சேமிப்பு வங்கி கொண்ட எல்லா அஞ்சலகத்திலும் இத் திட்டத்திலடங்கிய குறிப்பிட்ட கால டெபாசிட் கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

ஒன்றிலிருந்து மூன்று, ஐந்து ஆண்டுகள் வரையில் கால வரம்புகள் கொண்ட இத் திட்டத்தில் 50-ஆல் பெருக்கக் கூடிய எந்தத் தொகையையும் டெபாசிட் செய்யலாம். டெபாசிட் தொகைக்கு உச்ச வரம்பு கிடையாது.

வயது வந்தோர் தனியாகவும், மற்றொருவருடன் கூட்டாகவும் பணம் டெபாசிட் செய்யலாம். கால வரம்பு முடிந்த பின்னர் (அ) கூட்டாளிகள் இருவருமே அல்லது உயிருடனிருப்பவர், (ஆ) இருவரில் ஒருவர் அல்லது உயிருடனிருப்பவர், பணத்தைப் பெறலாம். மைனரும் இத் திட்டத்தில் தன் பெயரில் பணம் டெபாசிட் செய்யலாம். மைனர் அல்லது புத்தி சுவாதீனமில்லாதவருக்காக அவர்களுடைய காப்பாளர் பணம் டெபாசிட் செய்யலாம்.

குறிப்பிட்ட கால டெபாசிட்டில் 50-ஆல் பெருக்கக் கூடிய எந்தத் தொகையுடனும் கணக்கு ஆரம்பிக்கலாம்.

ஓராண்டு, மூன்றாண்டு, ஐந்தாண்டு ஆகிய மூன்று வித டெபாசிட்கள் கொண்ட இத் திட்டத்தில் ஒருவர் தனியாகவோ அல்லது இன்னொருவருடன் கூட்டாகவோ ஒருவித டெபாசிட்டில் ஒரே கணக்குத்தான் வைத்துக் கொள்ளலாம்.

அஞ்சலகத்தில் கிடைக்கும் விவரங்களடங்கிய விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்து, அத்துடன் டெபாசிட் செய்ய எண்ணியுள்ள தொகையையும் அஞ்சலகத்தில் சேர்க்க வேண்டும். டெபாசிட் தொகையை ரொக்கமாக அல்லது தன் பெயருக்கு அல்லது அஞ்சலக அதிகாரியின் பெயருக்கெழுதிய காசோலையாகவோ செலுத்தலாம்.

ஒன்று, மூன்று அல்லது ஐந்தாண்டுக் கால வரம்புகள் கொண்ட திட்டங்களில் டெபாசிட் செய்யப்பட்ட தொகையைக் கால வரம்பு முடிந்த பின்னர் திரும்பப் பெறலாம்.

குறிப்பிட்ட கால டெபாசிட் பணத்தை அடமானம் வைக்கலாமா ?

மத்திய, மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகள், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா, ஷெட்யூல்ட் பாங்க், கூட்டுறவு பாங்க் அல்லது கூட்டுறவுச் சங்கம், நிறுவனம், அரசாங்கக் கம்பெனி, உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரி ஆகியோருக்கு இந்த டெபாசிட்டிலுள்ள பணத்தை அடமானம் வைக்கலாம். அடமானம் வைக்கும்போது அடமானம் வைப்பவரின் கணக்கில் ஒரே டெபாசிட்தான் இருக்க வேண்டும்.

'சிறு துளி பெருவெள்ளம்' என்பது போலச் சிறுகச் சிறுகச் சேமித்துத் தங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். பக்குவமாகச் செலவழித்தால் பற்றுக்குறையே இருக்காது. பிறரிடம் பல்லிளித்துக் கடன் கேட்க வேண்டிய அவசியமும் இராது. எனவே, சேமிப்போம்! சேமமுற வாழ்வோம் !

கேலிச்சித்திரம்

இன்று கார்ட்டூன் வெளிவராத பத்திரிகையே இல்லை எனலாம். நகைச் சித்திரம் அல்லது கேலிச் சித்திரம் எனப்படும் கார்ட்டூன் தமிழகத்திற்கு மேலை நாட்டிலிருந்து 'இறக்குமதி' செய்யப்பட்டது! இது முதன் முதலில் இத்தாலியில் உருவெடுத்தது. பிறகு பிரான்ஸ், பிரிட்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது. ஆனால் இன்று உலகெங்கணுமுள்ள பத்திரிகைகளில் முக்கிய இடம் பெற்றுத் திகழ்கிறது.

இந்தியாவில் இதை முதன் முதலில் வெளியிட்டவர் யார் தெரியுமா? திரு போத்தன் ஜோசப். தில்லியிலிருந்து வெளியாகும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையும், பம்பாயிலிருந்து வெளியாகும் 'ஃப்ரீ பிரஸ் ஜர்னல்' என்ற பத்திரிகையும் கார்ட்டூனை வெளியிட்டு, மற்றப் பத்திரிகைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தன.

இத்தகைய சித்திரங்கள் அரசியல் அல்லது சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறுவதாக அமைந்திருக்கும். அமெரிக்காவில் நாஸ்ட் (1840–1902) என்னும் ஓவியர் ஜனநாயகக் கட்சியின் அடையாளமாகக் கழுதையையும், குடியரசுக் கட்சியின் அடையாளமாக யானையையும் வரைந்தார். இப்போதும் அக்கட்சிகள் இந்த அடையாளங்களையே சுட்டிக்காட்டுகின்றனவாம்! பொதுவாகப் பத்திரிகைகளில் மற்ற செய்திகளோடு கார்ட்டூன் மட்டும் இடம் பெறுவதுண்டு. ஆனால் முழுக்க முழுக்கக் கார்ட்டூன் மட்டுமே வெளியாகும் பத்திரிகைகளும் இருக்கின்றன. இங்கிலாந்தில் 1841-ல் தொடங்கிய 'பன்ச்' என்னும் கார்ட்டூன் பத்திரிகை இந்த வகையைச் சார்ந்ததாகும். இதற்கு முன்மாதிரியாக இருந்தவை. சார்லஸ் பெலபான் என்பவர் 1830-ல் தொடங்கிய கார்ட்டூன் வார இதழும், 1832-ல் தொடங்கிய கார்ட்டூன் நாளிதழுமாகும். இவைகளே உலகில் முதன் முதலாகத் தோன்றிய கார்ட்டூன் இதழ்களாகும்.

இந்த இதழ்களில் கேலிச் சித்திரங்கள் வரைந்த ஆனூரே டோமியே என்பவர் இத்துறையில் மிகச் சிறந்தது விளங்கி, பிரெஞ்சு மக்களைத்தட்டி எழுப்பினூர். இன்று உலகில் சிறந்த கேலிச் சித்திரக்காரராக டேவிட்லோ என்பவர் புகழ்பெற்று விளங்குகிறார். இவரது சித்திரங்களைத் தாங்கிச் சில இந்திய இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. கேலிச் சித்திர இதழ்களில் 'சங்கர்ஸ் வீக்லி' குறிப்பிடத் தக்கதாகும்.

பத்திரிகையைத் தவிர, திரைப்படக் கேலிச் சித்திரங்களையும் நாம் பார்த்திருக்கிறோம். இதனை முதன் முதலாகத் தயாரித்தவர் எமீல் கோல் என்னும் பிரெஞ்சு ஓவியராவார். இவர் முதலில் தயாரித்த படம் 'பொம்மைகள் நாடகம்' என்பதாகும். இவ்வகைக் கேலிச் சித்திரப் படமெடுப்பதில் புகழ் பெற்றவர் வால்ட் டிஸ்னி என்னும் அமெரிக்க ஓவியராவார். இவருடைய 'மிக்கி எலி' உலகப் புகழ் பெற்றது. அமெரிக்காவில் இத்தகைய சித்திரங்களைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிகள் நிறைய இருக்கின்றன.

தஞ்சை மாவட்ட உழவர்களுக்குத் தகுந்த சில பரிந்துரைகள்

அதிக மகசூல் !

அதிக வருவாய் !

இவையே தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் குறிக்கோள். இக் குறிக்கோளை எய்தப் பலபயிர் சாகுபடித்திட்டம்(Multiple Cropping Scheme) பெருந்துணையாக இருக்கும். பல பயிர்களை ஒரே நிலத்தில் தொடர்ந்து சாகுபடி செய்வதுடன், ஒவ்வொரு பயிருக்கும் வேளாண்மைத் துறையால் பரிந்துரைக்கப்படும் ஒருமித்த செய் நேர்த்தி முறைகளை (Package of Practices) விழுமிய முறையில் மேற்கொண்டால் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் குறிக்கோளை எளிதில் எய்திட இயலும். அதனுல் தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல, தமிழகமே உயர்வடையும் !

இந்த ஆண்டில் (1972–73) தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தியை மேலும் 5 சதம் உயர்த்தவும், பணப் பயிரான பருத்தியின் சாகுபடியைத் தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள 12½ இலட்சம் ஏக்கர் நன்செய் நிலங்களிலே, கீழ்க்கண்டவாறு, 21 இலட்சம் ஏக்கர் அளவில் பயிரிட வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

நெற்பயிர்:	பரப்பு. (இலட்சம் ஏக்கரில்).
குறுவை	5.00
சம்பா	7.50
தாளடி	4.00
நெல் மொத்தம்	16.50
நெற்பயிரை அடுத்துக் கோடைப் பயிர்.	
பயறுகள்	3.50
நிலக்கடலை	0.65
பருத்தி	0.15
மக்காச்சோளம், இதர சிறு தானியங்கள்.	0.17
எள்	0·03
கோடைப் பயிர் மொத்தம்	4.50
கூடுதல் மொத்தம்	21.00

கோடைப் பயிர்களுக்காக இந்த ஆண்டில் 3,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கவும், தீவிரச் சாகுபடித் திட்ட அலுவலகத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

நடப்பு ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 14.50 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் ரகங்களைப் பின்கண்டவாறு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரகம்.	பரப்பு (இலட்சம் ஏக்கரில்).
கருணு	2.75
ஐ. ஆர். 8	1.50
ஆடுதுறை-27	1.50
கோ-25	4.40
ஐ. ஆர். 20	2.20
பொன்னி	2.15
மொத்தம்	14.50

துவரை உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக நிலக்கடலையுடனும், நன்செய் வரப்புகளிலும் துவரை பயிரிடத் திட்டமிடப்பட்டு உள்ளது.

எனவே, தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை விளைபொருட்களின், உற்பத்தியை உயர்த்தவும், அதன் மூலம் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கவும் வேண்டிப் பின்கண்ட யோசனைகளைத் 'தமிழரசு' இதழின் சார்பில் படைக்கின்றோம்.

பலபயிர் செய்வீர்!

தஞ்சை மாவட்டத்தில் முதற் போகத்திலும், இரண்டாம் போகத்திலும் உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளைப் பயிரிட்டு, இரண்டாம் போக அறுவடைக்குப் பின் கோடையில் நிலத்தைத் தரிசாகப் போடாமல் பருத்தி, நிலக்கடலை, மக்காச்சோளம், கம்பு, எள், பயறு வகைகள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை நிலத்திற்கும், நீர்ப்பாசன வசதிக்கும் ஏற்பத் தவறாது பயிர் செய்தால், தரணியே வியக்கும் அளவுக்குத் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள் உயர்வு பெறலாம்!

''மூன்று போகம் பயிரிடத் தண்ணீர் வசதி எல்லாருக்கும் இல்லையே! வடிமுனைக் குழாயோ அல்லது ஆழ்குழாய்க் கிணறோ அல்லது சாதாரண கிணறோ இருந்தால்தானே நீங்கள் சொல்லும் முறையில் முப்போகம் பயிரிட முடியும். அவ்வசதி இல்லாத உழவர்கள் முப்போகம் பயிரிடுவது எப்படி? '' என்று பலர் கேட்கலாம்.

வடிமுனைக் குழாயோ அல்லது ஆழ்குழாய்க் கிணறோ அல்லது சாதாரணக் கிணறோ இல்லாவிட்டாலும், காவிரியாற்று நீரைக் கொண்டே இருபோகம் நெல் பயிரிட்டு அறுவடை செய்து

விட்டு, மூன்றும் போகத்தில் நெல் வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டே பயறு வகைகளைப் பயிரிட்டுப் பயன் பெறமுடியும்.

வழக்கமாக மேட்டூர் அணை ஜூன் மாதம் முதல் தேதி பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டு, ஜனவரி இறுதியில் மூடப்படுகிறது. மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லையானால், பாசனத்திற்குத் திறந்துவிடப்படும் நாள் தள்ளியே போகும். அதுபோலவே மேட்டூர் அணை மூடப்படும் நாளும் தள்ளிப் போகக்கூடும். இதை மனத்திற் கொண்டு, பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படும் காலத்திற்குள்ளாகவே முதல் போகத்தையும், இரண்டாம் போகத்தையும் தண்ணீர் தட்டுப்பாடின்றி சாகுபடி செய்து அறுவடையை முடித்துவிட வேண்டும். இதற்கு, முன்கூட்டியே திட்டமிட்டு என்னென்ன ரகங்களை, எவ்வப்போது பயிரிடுவதென்று முடிவு செய்து கொள்ளவேண்டும்.

என்னென்ன ரகங்களைப் பயிரிடலாம்?

''தாயைப் போல பிள்ளை! நூலைப் போல சேலை!'' என்பது போல, வித்தைப் பொருத்தே விளைச்சலும் இருக்கும்! ஆகவே அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் அடைய, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டில் கீழ்க்கண்ட ரகங்களைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது :—

தமிழிலே மனு !

புகைவண்டியில் நீண்ட தூரம் பயணம் செய்கிறவர்கள் படுக்கை—இருப்பிடம் ஆகியவற்றை பதிவு செய்து கொள்வதற்கு முன்னதாகவே ஒரு மனுவைப் பூர்த்தி செய்து தரவேண்டும். இந்த மனு இதுவரை ஆங்கிலத்தில் மட்டுமே அச்சடிக்கப் பெற்றுவந்தது. இப்போது தமிழிலும் இந்த மனுவை ரயில் துறையினர் அச்சிட்டுள்ளனர்.

ரகங்களின் பெயர்கள்.	வயது (நாட்கள்.)	ஏக்கர் மகசூல் (கலம்.)
குறுவைக்கு—		
கருணு	108	75
ஐ. ஆர் 8	135	90
ஜெயா	125	90
ஐ. ஆர். 20	135	75
முன் சம்பாவுக்கு—		
ஐ. ஆர். 8	135	90
கோ-25	180	75
பின் சம்பாவுக்கு—		
பொன்னி	140	66
தாளடிக்கு—		
பொன்னி	140	60
ஐ. ஆர். 20	130	60
கோ-25	165	60
கல்சர்-28	95	45

குறுவை

* 'கருணு' ரகத்திலிருந்து சிறந்த மகசூல் பெறவும், மழைக்கு முன்பே அறுவடை செய்யவும் விரும்பினால், வர நாற்றுகளாவது ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17-ஆம் தேதி) நாற்று விட்டுவிட வேண்டும்.

* குறுவையையும், தாளடியையும் தண்ணீர்த் தட்டுப்பாடின்றிப் பயிரிட்டு, காலத்தில் அறுவடை செய்ய விரும்பினால், 'ஐ.ஆர். 8', 'ஜெயா', 'ஐ.ஆர். 20' ஆகிய குறுவை ரகங்களை ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17) நாற்று விட்டு வைத்திருந்து, காவிரியாற்றில் தண்ணீர் வந்தவுடன் நட்டு விடவேண்டும்.

சம்பா

* நீங்கள் சம்பாவிலும் அதிக மகசூல் பெற விரும்பினால், முன் சம்பாப்பட்டத்திலேயே 'ஐ.ஆர். 8' நெல்லை நற்று விடவேண்டும்.

* நீங்கள் சம்பாவை அடுத்து நிலக்கடலை பயிரிட விரும்பினால், நடுத்தர கால வயதுடைய 'ஐ.ஆர். 8' ரகத்தையே பயிரிட வேண்டும். புதிய ஆற்றுப் பாசன பகுதியில் (New Delta) 'ஐ.ஆர். 8' நெல்லை அடுத்து நிலக்கடலை பயிரிடலாம்.

* நீங்கள் விரும்பினால் 180 நாட்கள் வயதுடைய 'கோ. 25' ரகத்தை ஒரு போகச் சம்பா நிலத்தில் பயிரிடலாம்.

* பின் சம்பாப்பட்டத்திற்குப் 'பொன்னி' மிகவும் ஏற்றது.

தாளடி

* தண்ணீர்த் தட்டுப்பாடின்றித் தாளடியிலும், அதிக மகசூல் பெற விரும்பினால், பழைய டெல்டா பகுதியில் பொன்னியையும், புதிய டெல்டா பகுதியில் ஐ.ஆர். 20-யும் பயிரிடுவதே நல்லது.

* குறுவைச் சாகுபடிகாலந்தாழ்ந்து விட்டால், பிந்திய தாளடிக்கு ஐ.ஆர் 20 ரகமே சிறந்தது. இதைவிட மிகவும் பிந்திய தாளடிப் பட்டத்தில் அதாவது மார்கழியில் பயிரிட 95 நாட்கள் வயதுடைய 'கல்சர்-28' என்ற ரகம் சிறந்தது. அந்த ரகம் நேரடி விதைப்புக்கும் ஏற்றது.

* உங்கள் நிலம் ஆரம்ப காலத்தில் மழையின் காரணமாக நீர் தேங்கும் பகுதியாக இருந்தால் பொன்னியைப் பயிரிடுங்கள். நாற்றுகளை நெருக்கி நடவேண்டும்.

* தாளடியை அடுத்துப் பயறுகளை விதைக்க விரும்பினால், பொன்னி, ஐ.ஆர். 20 ரகங்களை மட்டுமே பயிரிடுங்கள்.

களர் நிலம்

* உங்கள் நிலம் களர் நிலமாக இருக்குமானால், ஆகஸ்டு முதல் ஜனவரி வரையான பருவத்தில் 145 நாட்கள் வயதுடைய 'பேராவூருணி-1' (PVR 1) என்னும் ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. இந்த ரகம் ஏக்கருக்கு 54 கலம் வரை மகசூல் கொடுக்க வல்லது.

மானாவாரி நெல்

* மானாவாரிப் பகுதிகளில் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையான பருவத்தில் 145 நாட்கள் வயதுடைய 'கோ 31' என்னும் ஒட்டுமானாவாரி சம்பாவைப் பயிரிட்டு ஏக்கருக்கு 45 கலம் வரை மகசூல் பெறலாம்.

ஆழ்நீர்ப் பகுதி

* ஆழ்நீர்ப் பகுதிகளில் ஜூலை முதல் டிசம்பர் வரையான பருவத்தில் 140 நாட்கள் வயதுடைய 'தலை ஞாயிறு-1' (TNR-1) என்னும் ரகத்தைப் பயிரிட்டு ஏக்கருக்கு 36 கலம் வரை மகசூல் பெறலாம்.

கோடைப் பயிர்

* பாசன வசதியுடைய நிலங்களில் சம்பா அல்லது தாளடி நெல் அறுவடைக்குப் பிறகு, வயலில் ஈரம் இருக்கும்போதே தை, மாசி மாதங்களில் 'பி.ஆர்.எஸ். 72' ரகப் பருத்தியைப் பயிரிட்டுப் பயன் பெறலாம்.

* ஒரு போகச் சம்பா நெல் அறுவடைக்குப் பிறகு பாசன வசதியுடைய மணற்கால் நிலங்களில் மார்கழியில் 'டி.எம்.வி. 2', 'டி.எம்.வி. 7', 'பொள்ளாச்சி-1' ஆகிய நிலக்கடலை ரகங்களைப் பயிரிடலாம். பங்குனி, சித்திரையில் 'கங்கா-5' ரக மக்காச் சோளத்தையும், 'எச்.பி. 3' கம்பு ரகத்தையும் இறைவையாகப் பயிரிடலாம்.

* பாசன வசதியுடைய இருபோக மணற்கால் நிலங்களிலும், கோடையில் 'டி.எம்.வி. 2' 'டி.எம்.வி. 7', 'பொள்ளாச்சி-1' ஆகிய நிலக்கடலை ரகங்களைப் பயிரிடலாம்.

* பாசன வசதியில்லாத நிலங்களில் உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளை நெல் அறுவடைக்கு ஒரு வாரம் முன்பாக விதைக்கலாம்.

* கோடை மழையில் எள் விதைக்கலாம்.

உங்களுக்கு ஏற்ற ரகங்கள் எவை ?

எந்தெந்தப் பருவத்தில், என்னென்ன ரகங்களைப் பயிரிடலாம் என்று பொதுவாகத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. உங்களுக்குள்ள பாசன வசதிக்கும், நிலத்தின் தன்மைக்கும், காவிரியில் தண்ணீர் விடப்படுவதற்கும், மூன்றும் போகத்தில் நீங்கள் பயிரிட விரும்பும் பயிருக்கு ஏற்ற வகையிலும் எந்தெந்த ரகங்களை எவ்வெப்பொழுது நாற்று விட்டு, நட்டு, அறுவடை செய்வது என்பதைத் திட்டவட்டமாக முடிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு முடிவு செய்ய, கீழே நான்கு முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு இருக்கும் வசதிக்கும், வாய்ப்புக்கும் ஏற்ப இம்முறைகளை மேற்கொண்டால் அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் அடையலாம். எனவே, உங்களுக்கு ஏற்ற முறையை நீங்களே முடிவு செய்து கொண்டு திட்டமிட்டுச் செயல்பட்டு வெற்றி பெறுங்கள் என்று வேண்டுகின்றோம்.

முறை—1

உங்களிடம் வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு இருக்குமாயின் காவிரியாற்றில் தண்ணீர் வருவதற்கு முன்பே, 'ஐ.ஆர். 8', 'ஜெயா', ஐ.ஆர். 20' ஆகிய ரகங்களை நாற்று விட்டு வைத்திருந்து, காவிரித் தண்ணீர் விடப்பட்ட உடனே, வயலை உழுது நட்டு விடலாம். இவ்வாறு செய்தால் குறுவைக்குப் பிறகு பயிரிடப்படும் தாளடியையும் காவிரியாற்றுத் தண்ணீரைக் கொண்டே காலத்தில் அறுவடை செய்து விடலாம்.

மேட்டூர் அணையிலிருந்து ஜூன் முதல் தேதியோ அல்லது அதற்குப் பிறகு ஜூன் 30-ஆம் தேதிக்குள்ளோ தண்ணீர் விடப்படுவதாக வைத்துக் கொள்ளுங்கள். தண்ணீர் விடப்பட்ட பிறகு மேற்கூறிய ரகங்களை நாற்று விட்டு நடுவதென்றால் தாளடியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும்; இதைத் தவிர்ப்பதற்கு வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு மூலம் நீர்ப் பாய்ச்சி ஜூன் முதல் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதிக்குள் (வைகாசி 19-ஆம் தேதி முதல் ஆனி 17-ஆம் தேதிக்குள்) நாற்று விட்டுவிட வேண்டும்; இவ்வாறு நாற்று விட்டு நட்டுவிட்டால், அக்டோபர் 14-ஆம் தேதியிலிருந்து நவம்பர் 11-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 29-ஆம் தேதியிலிருந்து ஐப்பசி 27-ஆம் தேதிக்குள்) மேற்கூறிய ரகங்களை அறுவடை செய்து விடுவதுடன், தாளடியையும் காலத்தில் பயிரிட்டுத் தண்ணீர்த் தட்டுப்பாடின்றி அறுவடை செய்து விடலாம்.

நவம்பர் 11-ஆம் தேதியிலிருந்து நவம்பர் 21-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 27-ஆம் தேதி முதல் கார்த்திகை 7-ஆம் தேதிக்குள்) உடனே உழவு செய்து, தாளடியில் ஐ.ஆர். 20 ரகத்தை நட்டு விடலாம். தாளடி நடுவதற்கு அக்டோபர் 11-ஆம் தேதி முதல் அக்டோபர் 21-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 26-ஆம் தேதி முதல் ஐப்பசி 6-ஆம் தேதிக்குள்) ஐ.ஆர். 20 ரகத்தை நாற்று விட்டு வைத்திருக்க வேண்டும். இவ்வாறு நாற்று விட்டு நட்டால், தாளடியைப் பிப்ரவரி 18-ஆம் தேதியிலிருந்து 28-ஆம் தேதிக்குள் (மாசி 7-ஆம் தேதி முதல் மாசி 21-ஆம் தேதிக்குள்) அறுவடை செய்து விடலாம். ஜனவரி இறுதியில் மேட்டூர் அணை மூடப்பட்டாலும், மேலும் ஒரு மாதம் வரை தஞ்சை மாவட்ட நிலங்களுக்குப் பொதுவாக ஓரளவு தண்ணீர் கிடைக்கும் என்பதை இந்த இடத்தில் நினைவு கூர்வது நல்லது.

சோவியத் அஞ்சலகங்களில் பொறியியல் !

சோவியத் ரஷ்யாவில் தாமே இயங்கும் அஞ்சலகங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன. வாடிக்கையாளர்கள் கொடுக்கும் தந்திச் செய்திகளை இயந்திரங்கள் தாமாகவே தெரிவித்து, அதற்குரிய கட்டணத்தையும் தெரிவித்து விடுகின்றன. பார்சல்கள் கட்டுவதற்கும் கூட இந்த இயந்திரங்களைப் பயன்படுத்த விருக்கிறார்கள். சில வினாடிகளிலே, எடையை நிறுத்துப் பார்த்து......அதற்குரிய கட்டணத்தை ஓர் இயந்திரம் குறித்துக் கொடுக்கிறது.

தாளடி அறுவடைக்குப் பின் நெல் வயலில் உள்ள ஈரத்தைப் பயன்படுத்தி பி.ஆர்.எஸ். 72 பருத்தி விதைகளை ஊன்றி, பிறகு வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு மூலம் பாசனம் அளித்துப் பருத்தியிலிருந்து மட்டும் ஏக்கருக்கு ரூபாய் 1,250 வரை இலாபம் பெறலாம். அல்லது தாளடி அறுவடைக்குப்பிறகு உழுது, பின்பு 'டி.எம்.வி. 2' அல்லது 'டி.எம்.வி. 7' அல்லது 'பொள்ளாச்சி-1' ஆகிய நிலக்கடலை ரகங்களை இறைவையாகப் பயிரிடலாம். இம் முறையின் மூலம் முப்போகம் பயிரிட்டு உழவர்கள் முன்னேறலாம்.

துப்பறிவது எப்படி ?

தமிழ் நாட்டில் உள்ள காவல் துறை அதிகாரிகளுக்குத் துப்பு துலக்குவதில் நவீன பயிற்சி அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இதுபோன்ற பயிற்சி இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டுக் காவல்துறையினருக்கு அளிக்கப்படுகிறது.

துப்பு, துலக்குவதில் உள்ள பல நுட்பமான செயல்கள் இந்தப் பயிற்சியின்போது கற்றுத்தரப் படும். மற்றும் துப்பு துலக்குபவருக்கு, இரசாயனப் பயிற்சி, ரேகைப்பயிற்சி ஆகியவையும் கொடுக்கப்படும்.

(குறிப்பு.—வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு உள்ள உழவர் பெருமக்கள் தாராள மனப்பான்மையுடன் தங்கள் நிலத்திலேயே மற்ற உழவர்களுக்கும் கூட்டுறவு முறையில் சமுதாய நாற்றங்கால் அமைத்து நாற்று விட்டுக் கொடுக்கலாம்).

முறை—2

குறுவைக்கு குறுகிய கால ரகத்தை விரும்பினாலும், காவிரியாற்றில் தண்ணீர் விடப்பட்ட பின்புதான் நாற்று விட முடியும் என்றாலும் குறுவைக்குக் 'கருணா' ரகமே சிறந்தது. ஜூன் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் (வைகாசி 19-ஆம் தேதி முதல் ஆனி மாதம் 2-ஆம் தேதிக்குள்) காவிரியில் தண்ணீர் விடப்பட்டால், ஜூன் 15-ஆம் தேதியிலிருந்து ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 2-ஆம் தேதி முதல் ஆனி 17-ஆம் தேதி வரை) 'கருணா' ரகத்தை நாற்று விட்டு விடவேண்டும். இவ்வாறு விடப்படும் நாற்றை நட்டால், குறுவையை அக்டோபர் 1-ஆம் தேதியிலிருந்து அக்டோபர் 15-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 16-ஆம் தேதி முதல் புரட்டாசி 30-ஆம் தேதிக்குள்) அறுவை செய்துவிடலாம்.

'கருணா' அறுவடைக்குப்பின் நிலத்தை உழுது, அக்டோபர் 30-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 15) தாளடியில் 'பொன்னி' ரகத்தை நடலாம். 'பொன்னி' நடுவதற்குச் செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 15) நாற்று விட்டு விடவேண்டும். இவ்வாறு செய்தால் பிப்ரவரி 17-ஆம் தேதிக்குள் (மாசி 5-ஆம் தேதிக்குள்) தாளடியை அறுவடை செய்து விடலாம்.

தாளடி அறுவடைக்கு 7 முதல் 10 நாட்கள் முன்பாக அதாவது பிப்ரவரி 8-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதிக்குள்ளாக 'ஆடுதுறை-1 உளுந்து', அல்லது 'ஆடுதுறை-1 பச்சைப்பயறு' அல்லது 'பைசாகி மூங்' என்னும் பச்சைப்பயறு வகைகளை நெற்பயிரிலேயே விதைத்து விட வேண்டும். நிலத்தில் உள்ள ஈரத்தைக் கொண்டே (பாசனமின்றியே) பயறு வகை விதைகள் முளைத்து, வளர்ந்து, காய்த்துப் பலன் அளிக்கும். எனவே, காவிரியில் தண்ணீர் வந்த பின்பே நாற்று விட முடியும் என்ற நிலையில் இருப்பவர்கள் இம்முறையைப் பின்பற்றி முப்போகம் பயிரிட்டுப் பயன் பெறலாம்.

முறை—3

"ஜூன் 15-ஆம் தேதி வரை மேட்டூர் அணை திறக்கப்படவில்லை என்று வைத்துக்கொகாள்ளுங்கள். அப்பொழுது எப்படி முப்போகம் பயிரிட முடியும் ?" என்று நீங்கள் கேட்கலாம்.

ஜூன் 15-ஆம் தேதி வரை மேட்டூர் அணை திறக்கப்படாமல் இருந்து ஜூன் 15-ஆம் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதிக்குள் திறக்கப்படுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுதும் குறுவைக்குக் 'கருணா' ரகத்தையே பயன்படுத்த வேண்டும். 'கருணா' நெல்லை ஜூலை 1-ஆம் தேதியிலிருந்து ஜூலை 27-ஆம் தேதிக்குள் (ஆனி 18 முதல் ஆடி 12 வரை) நாற்று விட்டுவிட வேண்டும். இக் காலத்தில் விடப்படும் நாற்றைக் காலத்தில் நட்டுப் பயிரிட்டால், அக்டோபர் 16-ஆம் தேதியிலிருந்து நவம்பர் 12-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 1 முதல் ஐப்பசி 28-ஆம் தேதிக்குள்) 'கருணா' ரகத்தை அறுவடை செய்து விடலாம்.

நவம்பர் 12-ஆம் தேதி முதல் நவம்பர் 21-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 28-ஆம் தேதி முதல் கார்த்திகை 7-ஆம் தேதிக்குள்) 'ஐ.ஆர். 20' நெல்லைத் தாளடியில் நட்டுவிட வேண்டும். 'ஐ.ஆர். 20' நெல்லை அக்டோபர் 11-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 26-ஆம் தேதி முதல் ஐப்பசி 6-ஆம் தேதிக்குள்) நாற்று விட்டுவிட வேண்டும். 'ஐ.ஆர். 20' பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதியில் இருந்து 28-ஆம் தேதிக்குள் (மாசி 6 முதல் மாசி 12-ஆம் தேதிக்குள்) அறுவடையாகிவிடும். தாளடி அறுவடைக்கு 7 முதல் 10 நாட்கள் முன்பாகவே, முன்பு கூறியபடி பயறு வகைகளை விதைத்து விடலாம். எனவே, ஜூன் 30-ஆம் தேதி மேட்டூரில் தண்ணீர் திறந்து விட்டாலும், முப்போகம் பயிரிடலாம் என்பது உறுதி.

முறை—4

"எதிர்பாராதவிதமாக ஜூலையில்தான்தண்ணீர் விடப்படுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது என்னங்க செய்வது?" என்று நீங்கள் கேட்கலாம்.

எதிர்பாராத விதமாக ஜூலையில்தான் தண்ணீர் விடுவதாகக் கொண்டாலும், குறுவையில் 'கருணா' ரகத்தையோ அல்லது ஆடுதுறை-27 ரகத்தையோ 'தபாக்' நாற்றங்கால் முறையில் நாற்று விட்டு, கூடுமான வரை விரைவாக நட்டுவிட வேண்டும். எதிர்பாராத விதமாக மேலும்காலதாமதமானாலும் குறுவை அறுவடை முடிந்த பின்பு, 'கல்சர்-28' (அன்னபூர்ணா) என்னும் ரகத்தை டிசம்பர் 1 முதல் டிசம்பர் 20 -ஆம் தேதிக்குள் (கார்த்திகை 17 முதல் மார்கழி 6 வரை) நட்டுவிட வேண்டும். இவ்வாறு செய்ய நவம்பர் 12 முதல் 30-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 28 முதல் கார்த்திகை 16-ஆம் தேதிக்குள்) நாற்று விடவேண்டும். 'கல்சர்-28' பிப்ரவரி 15 முதல் மார்ச்சு 5-ஆம் தேதிக்குள் (மாசி 4 முதல் மாசி 22-ஆம் தேதிக்குள்) அறுவடைக்கு வந்துவிடும். அதன் அறுவடைக்கு 7 முதல் 10 நாட்கள் முன்பாகவும் பயறு வகைகளை விதைக்கலாம்.

ஆகவே, காலந் தாழ்த்தி மேட்டூர்அணை திறக்கப்பட்டாலும் கவலைப்படாமல் மேற்கூறிய முறையில் தகுந்த ரகங்களைப் பயிரிட்டால் தஞ்சை மாவட்டத்தில் தப்பாமல் முப்போகம் பயிரிட முடியும்.

எனவே, மேற்கூறிய நான்கு முறைகளில் உங்களுக்கு உகந்ததை மேற்கொண்டு அதிக மகசூல் பெற்று, அதிக வருவாய் அடைந்து, தரணி போற்ற முன்னேறுங்கள் என்று தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

ம. ராஜலட்சுமி, நா. க. வலசு,
பொருளூர் (அஞ்சல்),
கள்ளிமந்தயம் (வழி),
பழநி வட்டம்.

பகுப்பதில் அன்னம் பணிவதில் நாணல்
நகுவதில் முல்லைசெய்ந் நன்றி—மிகுவதிலே
குக்கலென வாழ்ந்தால் குணக்குன்றும்; மானேகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ம. இராஜலட்சுமி, கள்ளிமந்தயம்.

நாடெனக் கென்ன நலன்செய்யும் என்றெண்ணிப்
பாடுபடும் புன்மைமனப் போக்கொழித்து—நாடுயர
மிக்க மகிழ்வோ டுழைப்பேன் எனும்நற்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—துறவி, சென்னை-12.

அன்பு மனையாளை ஆருயிராம் தன்மகவை
நன்செய் விளைகின்ற நானிலத்தை—அன்றுவாய்
மைக்காகத் தானீந்த மன்னனைப்போல் நாமும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—அ. காந்தி, பி.எஸ்சி., பி.டி., தேவத்தூர்.

பூவிழந்து பொட்டிழந்து புன்னகையும் தானிழந்து
பாவியராய் வாழ்ந்திடுதல் நன்றாமோ?—பூவுலகில்
மைக்கண்ணாள் வாழ்வு மலர்தல் நன்றெனும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் வீ. கந்தசாமி, ஆத்தூர்.

தானும்முன் னேறத்தன் தாய்நாடும் முன்னேற
வானும்மண் ணுந்தன் வசமாக —மானமறம்
மிக்கோங்க, மாற்றாரும் வேட்கும் படியாம்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—பூ. அண்ணாமலை, செஞ்சி.

வானம் சிறிதாகும் வாழ்வும் வளமனைத்தும்
தானளிக்குந் தீந்தமிழே, தாயே! உன்—மானஉரி
மைக்காகப் போரிடுதல் மாண்பாகும்! என்றும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—காசிவிசுவநாதன், அச்சிறுபாக்கம்.

எப்படியும் வாழ்வதுதான் இவ்வுலக வாழ்வாமோ?
இப்படித்தான் வாழ்வென்றே, எல்லையிடல்—தப்பாமோ?
கைக்காக மோதிரம்போல் காதலுறுங் கொண்டகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

மாசறு பொன்னே வலம்புரி மாமுத்தே
பேசும்பொற் சித்திரமே பேரழகே—கூசவைக்கும்
மைக்கண்ணில் தோன்றி மயக்கிடும் உன்புன்ன
கைக்காக வாழ்தல் கடன்.

—ஆர். உமா. சின்னாளப்பட்டி.

கண்ணால் கணைதொடுத்துக் காதல் தனைக்கொடுத்தீர்!
எண்ணச் சிறகிட்டேன் ஏழைநான்!—கண்ணாநீர்
தைக்காகக் காத்திருந்தீர்! தாங்கள் வரும்வரு
கைக்காக வாழ்தல் கடன்.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., கோவை-22.

நாட்டை மதித்தல் நமதுரிமை ; தம்வயிற்றுப்
பாட்டை நினைத்தல் பரிதாபம்—வீட்டுநன்
மைக்காக வாழ்தல் மனையறம் ; என்றும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

வெண்பாப் போட்டி

என்னில் குடியிருப்பாள், என்துயரில் பங்கெடுப்பாள்
அன்னை வளர்த்ததுபோல் அப்படியே—என்னைவிழி
மைக்காட்டில் வைத்தாள், மனைவியெனும் அந்தமங்
கைக்காக வாழ்தல் கடன்.

—சு. ப. குமரப்பன், திருச்சி-2.

அன்னை எனக்கில்லை ; ஆன்றகல்விச் சாலைக்கோ
என்னை அனுப்பவும் தந்தையில்லை—பின்னைநான்
கைம்பெண்ணாய்க் கண்ணீரில் மூழ்கியுள்ள என்னுயிர்த்தங்
கைக்காக வாழ்தல் கடன்.

—கா. வாலிதாசன், புதூர்.

இறப்பால் இறுதி இருந்தும் மடமைப்
பிறப்பால் வெறுப்பான் பிறரை—சிறப்பில்லை
காக்கை கரைந்துண்ணும் காழ்ப்பில்லாக் காலவரு
கைக்காக வாழ்தல் கடன்.

—சோ. தமிழரசு, இராமநாதபுரம்.

துன்பங்கள் ஏராளம்! தூக்கிட்டுக் கொள்ளலாம்
என்னுமோர் எண்ணம் இருந்தாலும்—என்றனையே
கைக்காசு போக்கிமனம் காதலுடன் செய்தமங்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. பாரடே, காஞ்சிபுரம்-2.

ஈண்டு வருத்திய இன்மையும் இன்னலும்
மாண்ட(து) உணர்ந்துநம் மக்கள்தாம்—மீண்டு(ம்) மீண்டும்
வாக்களிப்பர் என்றரசு வைத்துள்ள நன்னம்பிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. இராமகிருட்டினன், பி.ஏ. பி.டி., கந்தர்வகோட்டை.

மண்ணீரும் வானும் மலையும் மருணிலமும்
வெண்ணிலவும் ஒன்தீ விரிசுடரும்—தண்காலும்
வைப்பாக என்றென்றும் வாழ்வோம் ; அவைவாழ்த்து
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் எம். மன்னு, உத்திரமேரூர்.

கண்ணிய யாங்கடமை கட்டுப்பா டென்றன்று
கண்ட வழிசெல் கலைஞரொடு—கண்மங்கிக்
கைக்கோலை நம்பிவாழ் காலம் வரினுங்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஆ. கலைச்செல்வன், காஞூர்-1.

வண்டிற்காய்ப் பூத்தல் மலர்க்கடன்! அம்மலர்த்தேன்
உண்டுகரு வுண்டாக்கல் வண்டுகடன்!—தன்னரசே!
வாக்களித்தோம் எம்கடன்! நீ வாட்டமுற்ற எம்புன்ன
கைக்காக வாழ்தல் கடன்.

—கோ. நெடுஞ்செழியன், பி.எஸ்சி., பி.டி., மேலைச்சேரி.

மொழியே உயிர்மூச்சு ; முன்னேற்ற மென்னும்
வழியே நெடும்பயண வாழ்வு ;—அழியாநன்
மைக்காகப் பாடு படலே நலமாங்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., இலப்பைக்குடிக்காடு.

கல்லில் சிலைவடித்துக் கற்கோவில் கட்டியிங்கு
இல்லாப் பொருளெல்லாம் ஈந்திங்குப்—பல்தொழில்வாழ்க்
கைக்காக வாழ்கின்ற மானிடனே! லட்சியவாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. கோபால், அன்னப்பட்டி.

பைங்கூழின் பாலில்லை ; பாலூட்டுந் தெம்பில்லேன் ;
எங்கோவே யென் இறந்தால்? என்றாலும்—எங்கோதாய்!
பொய்யுமுகிற் காண்பயிராய்ப் பேசவராச் சேய்க்குறுந
கைக்காக வாழ்தல் கடன்.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

பண்ணிசைத்துப் பாடுகின்ற பைங்குயிலே! நீயிங்குக்
கண்ணசைத்து வாவென்று காட்டுகையில்—பண்ணிசைத்தேன்
செக்கர்வா னம்போல் சிரிக்கின்றாய் உன்னுடன்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—மெய். அருள்மொழியன், முகவை மாவட்டம்.

வெண்பாப் போட்டி

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
அறியாத தென்னே அறத்தார்—அறிந்துவறு
மைக்காக வாழ்ந்து மறுமையில் பெற்றால்ஈ
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் வ. ச. வடிவேல் முருகன், மதுரை மாவட்டம்.

தையில் மணமுடிப் பேன் தையலே என்றியம்பிக்
கையில் ‘ உறுதி ’ செய்தார் காதலத்தான்—ஐயன்மீர்
தைக்குத்தை போயினியும் காணேன்! அவர்வரு
கைக்காக வாழ்தல் கடன்.

—எஸ். ஏ. கேசவன், புளியங்குடி.

காலில் நடுநடுக்கம் ; கையில் சிறுகுச்சி ;
தோலில் சுருக்கமெலாம் தோன்றியதே ;—பாலைப்போல்
மக்குமயிர் ; இனிமேல் மண்ணில் மரணக்கூ
கைக்காக வாழ்தல் கடன்.

—ஆர். ஜெயபால், சென்னை 26.

எங்கும் தமிழ்முழக்கம், இன்பத் தமிழரசு
தங்கி விளைந்தோங்கத் தாழாமல்—பொங்கியே
கைக்கும் வறுமையிருள் காய்நிலவாய் நின்றுநல்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—பொ. காளியப்பன், போளூர்

ஆயிரம் விண்மீனால் ஆகும் பயனென்ன?
தூய ஒருநிலவால் தோன்றுமொளி !—சேயிழையே!
மொய்க்கப்பெற் றென்னபயன்? முன்கட்டுப் பாட்டுச்செய்
கைக்காக வாழ்தல் கடன்.

—மலை. மா. ஆறுமுகம், செங்கை மாவட்டம்.

ஆயகலை நூல்கள் அனைத்துணர்ந்தும் மாற்றானை
நாயினுங் கீழாக நத்தியே—தீயபொய்ம்
மைக்காக வாழ்தல்நல் மாண்பாமோ?—தூயவாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—சோ. சு. புவராசன், அரக்கோணம்.

நாளும் உடல்வளர, நன்னோக்க முங்குறிக்
கோளும் சிறிதேனும் கொண்டாயா?—மேலும்ஆ
சைக்காய் அலைகின்றாய், சிந்தையே! நல்லகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ந. கிருட்டிணமூர்த்தி, அரிமளம்.

சின்ன இடையழகி செவ்வந்திப் பூவிழியாள்
அன்ன நடைபயிலும் வண்ணமயில்—அன்னையெனப்
பொய்க்காத அன்புடையாள் பூக்கும் இளம்புன்ன
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், பி.ஏ.,
திருச்சி-2.

நாணுகின்ற தன்மையே நால்வகைச் செல்வத்தைப்
பேணுகின்ற பெண்ணுக்குப் பேர்தரும்—நாணுதலோய்!
கைக்கொண்ட ஆளன் கருத்தறிந்(து) அன்னான்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—கே. ஏ. அருச்சுனன், மதுரை-14.

ஈனத் தனமாக இவ்வுடலை ஓம்பிநித்தம்
மானங் கெடவாழ்தல் மாண்பாமோ?—ஞானமுற
முத்தமிழைப் போற்றி முழுமை யுயர்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஒளியரசன், கரூர்-2.

பாட்டன் தொகுத்ததுவோ பாடுபட்டுத் தன்னுழைப்பால்
ஈட்டக் கிடைத்ததுவோ இப்பணத்தைப்—பூட்டிநிதம்
வைக்காமல் நாடி வருவோர்க்கு நல்கிடும்ஈ
கைக்காக வாழ்தல் கடன்.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

நான்மறைக்(கு) ஒப்பாக நந்தமிழர் தம்நாட்டில்
வான்புகழும் தேவன் வரைந்திட்டான்—தேன்துளிகள்
மொய்க்கும் சுவையுடைய மூத்த குறளின்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஜெயபாலன், மதுரை-1.

வெண்பாப் போட்டி

நிறஇன பேதங்கள் நீங்கும், மனிதர்
உறவினில் தோழமை ஓங்கும்—அறவழி
பொய்க்கா திலங்கும் பொதுமைப் புதுநலக்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஏ. வேலு, விக்கிரமசிங்கபுரம்.

பெண்ணை விலைபேசும் பேதையர் வாழ்கின்ற
மண்ணை நினைத்திட்டால் மாய்ந்திடுவேன்—கண்ணேதங்
கைக்குக் களிமணநாள் காணும் வரைஉன்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—பி. மாரிமுத்து, ஒட்டப்பிடாரம்.

பாரிடையே சூழ்ந்துநிற்கும் போர்ஒழியும் ; வான்குளிர்ந்து
நீர்கொட்டும் ; முத்துமுத்தாய் நெல்விளையும்—ஆர்வமுடன்
பாமரரும் நன்னூல் படிப்பரென்ற நன்னம்பிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—வயி. அறிவுடை நம்பி, சித்தனேந்தல்.

அன்னை மணிவயிற்றில் ஐயிரண்டு திங்கள்தாம்
உன்னைச் சுமந்தா ளுயிரீந்தாள்—பின்னைவாழ்க்
கைக்கும் பெரிதுழைத்தாள்! அன்னையவள் நல்லவாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. கு. நடராசன், வேலூர்.

போர்புரியச் சென்றிடுவேன் பொற்கொடியே! நானழிந்தால்
ஆருயிராம் நம்மகனை ஆளாக்கிப்—பாரிதனில்
தக்கோன் எனவளர்ப்பாய், என்றுரே அக்கோரிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—குகதாஸ் விசுவநாதன், தூக்கநாயக்கன்பாளையம்.

வையந் தழைத்தோங்கி வாழ நினைப்பவர்கள்
கொய்த அறநெறியில் கொள்கையினை—நெய்தவர்கள்
கைக்காக வாழுங் கடைநகம்போல் தங்கள்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ம. பீட்டர், நகரப்பட்டி.

செந்நீர் வியர்நீராய்ச் செங்கதிரோன் வெம்மையிலே
தன்மேனி வெங்கருப்பாய்த் தானுக—என்றுமுண்
மைக்காக வாழேழை மாண்புயரச் செய்யும்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—அன்பு. செயராமன், அரக்கோணம்.

தேன்போலும் இன்சொல் தெளிவான எண்ணங்கள்
வான்போற்றும் நற்செய்கை வள்ளண்மை—மீன்பிறழ்நோக்
கைக்கொண்ட மான்விழியே! கற்றவர்கள் வேண்டும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—சேவியர், காவேரி நகர்.

சிறுகுடும்பம் போதும் சிரிப்போடு வாழ!
பெருமைதரும் வாழ்வும் பிறக்கும்—கரும்புமனத்
தைக்கொண்டு காப்போம் தரணியினை என்றகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—விட்டல், கோவை-19.

விரைந்துவரு வேனென்றார் வேற்றூரைச் சார்ந்து
பெருந்துயரைத் தந்தெம் பெருமான்—பிரிந்தாற்று
மைக்காக மானேனுல் மற்றென் கனவில்வரு
கைக்காக வாழ்தல் கடன்.

—அ. குமரப்பன், சீர்காழி.

திக்கெங்கும் தோன்றுவன் தீரரொடு நற்செயலில்
மிக்காரும் இங்கேதான் மேம்பட்டார்—தக்காருண்
மைக்காக வாழ்ந்தார்கள் மாண்புற்றார் காட்டியகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—வா. க. சி. கமலக்கண்ணன், அமரபூண்டி.

உண்டு களித்தே உறங்கித் தினம்தோறும்
கண்ட பயனென்ன காரிகையே !—வண்டமிழ்நன்
மைக்கேற்ற தொண்டால் மகிழ்வடையும் நன்னம்பிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

சிங்கநிகர் செந்தமிழர் சீர்பெறவே தன்னுரிமைச்
சங்கமதைக் கண்ட தமிழ்ப்பெரியார்—தங்கத்தந்
தைக்காக வாழ்ந்த தமிழறிஞன் அண்ணகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—மறைமலரடியான், திருச்சிற்றம்பலம்.

சொந்தமொழி செந்தமிழைத் தூற்றிப் பலபேசி
வந்தமொழி இந்திக்கு வால்பிடித்து—தந்தபணப்
பைக்காக வாழ்வாரைப் பார்நீக்கி எந்தமிழ்நங்
கைக்காக வாழ்தல் கடன்.

—சி. வேலாயுதம், தஞ்சை.

உண்மையின் சிந்து

சோம. மகாதேவன்

4 நினைத்தேன்; நிறைவு பெறும்

லிங்கத்தின் வீடு, எந்தத் தெருவென்று சொல்ல முடியாதபடி, வடக்கு மந்தையை அடுத்து, தோப்புக்குள்ளே தனியாக இருக்கிறது. பரம்பரைச் சொத்தாகவே முல்லைக்கால், பாசனத்தில் நான்கு ஏக்கர் நன்செய் உண்டு.

மீனம்மா பாட்டியென்றால் அந்தக் கிராமத்தில் அறியாதவர்கள் இருக்க முடியாது. மீனம்மாளுக்கு, லிங்கத்தின் தகப்பன் பொன்னுச்சாமி ஒரே மகன்: இளமையிலிருந்தே பொன்னுச்சாமி சீக்காளி. லிங்கத்துக்குப் பத்து வயது நடக்கும்போதே, ஒரே வருடத்தில் முன்னும் பின்னுமாகத் தாயையும் தகப்பனையும் இழந்து விட்டான்.

ஒற்றைக்கு ஒரு பேரனையும், காடு கரையையும், அன்றும் சரி, இன்றும் சரி, கண்காணித்து வருபவள் இந்த மீனம்மா பாட்டிதான். கிழவியின் கங்காணத்தில் கூலியாட்கள் கருத்துடன் பாடுபடுவார்கள். அறுவடைக் காலங்களில், பனியிலும், மழையிலும் களத்து மேட்டிலே கிடப்பாள்.

எதிலும் கறாராக இருக்கும் இந்தக் கிழவி, கிராமத்திலிருக்கும் வரை முறையெல்லாம் கடந்து, உற்றம் சுற்றம் எல்லாம் ஒருவனாக இருக்கும் பேரனுக்கு, கட்டுப்பட்டுத் தாலியிழந்த அரசியை, எப்படி மறுமணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள் என்பது இப்பொழுதும் ஊருக்குள் விடுபடாத சிக்கலாகத்தான் இருக்கிறது.

முத்துப் பாண்டியனும், லிங்கமும், கோவணம் கட்டாத பருவத்திலிருந்தே கண்ணெதிரே ஓடியாடித் திரிந்தவர்கள். பொழுதுக்கும் இங்கேதான் ஓடி வந்து விடுவான் பாண்டியன். பெரிய வீட்டிலிருந்து தேடிவந்து அடித்து இழுத்துக்கொண்டு போவார்கள்.

லிங்கமும் அவனும் ஒரு தட்டிலே சோறுண்பார்கள்.

மீனம்மா பாட்டிக்கு முத்துப் பாண்டியனிடம் தனிப்பட்ட பாசம் இருக்கத்தான் இருக்கிறது. விவரம் தெரிந்த பருவத்திலிருந்தே, இந்தப் பாட்டியிடம் பாண்டியன் எதையாவது சொல்லிக் கொண்டே இருப்பான். பாட்டியும் கேட்டுக்கொண்டே இருப்பாள்.

அப்படியே—என்றைக்குமே கேட்டுக் கொண்டிருக்க வைத்து விட்டானே பாண்டியன்.

இவனும்—அவனுமாகக் கூட்டுச் சேர்ந்து, ஒரு பொழுதுக்குள், மூச்சைப் பிடித்தது போல, அந்தப் பரபரப்பூட்டும் முடிவைப் பற்றி நினைத்துப் பார்ப்பதற்குக் கூடச் சந்தர்ப்பம் கொடுக்காமல், பாண்டியனது பேச்சு மயக்கத்திலே கிழவியை மூழ்க வைத்து, அதிகாலையில் சொல்லி, மாலைப் பொழுதுக்குள் திருமணம் முடிந்து, கழுத்தில் மாலையோடு வந்து நின்றார்கள்.

கிழவி என்ன செய்வாள்?

முற்பகலில், வீட்டின் முன் கூடத்திலே கால்களை நீட்டி உட்கார்ந்து விட்டாள் மீனம்மா பாட்டி.

மனது அதையே தான் நினைத்துக் கொண்டிருக்கிறது.

ஆதியிலேயே, அரசியைப் பேரனுக்குக் கட்டி வைக்க வேண்டும் என்ற எண்ணம், கிழவிக்கு உள்ளூர இருக்கத்தான் செய்தது. 'பெரிய வீட்டில், அவ்வளவுக்குத் துணிந்து பெண்ணைக் கொடுப்பார்களா? என்ற நினைவில் வாய் திறக்கவில்லை.

அதற்குப் பிறகுதான், கட்டிக் கழித்து, இப்படியொரு போராட்டத்துக்குப் பிறகு, அந்தப் பெண்ணை, இந்த வீட்டிற்கு வர வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்ததே!

உள்ளூரிலே மீனம்மாளுக்கு ஒன்றுவிட்ட தம்பி முத்தையா என்றைக்குமே அப்படி ஒட்டுதலாகவும் இருந்தது கிடையாது.

இருந்தாலும், உறவுமுறை விட்டுப் போகக்கூடாது என்பதைக் கொண்டு, முத்தையாவின் பேத்திப் பெண் பூமயிலை, பேரன் லிங்கத்துக்குக் கட்டி வைக்கும் முடிவோடு, பேச்சும் தொடங்கி, முத்தையாவும் அடிக்கடி இங்கே வந்து போய்க் கொண்டிருந்தான்.

தட்டிப் பறித்தது போல, பேரனுக்கு இப்படியொரு முடிச்சு விழுந்து விட்ட பிறகு, முத்தையா கருவிக்கொண்டே தான் இருக்கிறான். அவனுக்கு நல்லதையே நினைக்கத் தெரியாது.

அன்றைக்குக், கோவில் வாசலில் நின்று கொண்டிருந்தவன், பாதை வழி வரும்போது காறித் துப்புகிறான்.

இந்தக் கண்ணுக்குப் பிறகு, இப்படி ஊரையே பகைத்து, தனித்து நின்று பேரன் என்ன செய்யப் போகிறானோ?

பாட்டி, குனிந்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

இத்தனைக்கும் நடுவில் இங்கே வாழவந்த பெண்ணுக்கு, எந்த நேரமும் முகம் இருளடைந்து கிடக்கிறது. இப்படி இருந்தால் வீடு நிறையுமா?

அப்போது, ''பாட்டி'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் மீனம்மா பாட்டி. பின்னால் அரசி நின்று கொண்டிருந்தாள்.

"வெந்நீர் வைக்கட்டுமா பாட்டி" என்று கேட்டாள்.

அவளைத் திரும்பிப் பார்த்தபோது, பாட்டிக்குக் கோபம் தான் வந்தது.

"என்னமோம்மா—எனக்கு எதுவும் புரியலே. நீ என்னிக்கி கலகலன்னு இருக்கப் போறியோ—அப்பத்தான் இங்கேயும் விடியப் போகுது" என்றாள் பாட்டி.

அரசி, குனிந்து முகத்தைத் துடைத்துக்கொண்டே, "அடுப்படியிலே இருந்தேன் பாட்டி" என்றாள் தடுமாற்றத்துடன்.

"அதான் தெரியுதேம்மா. அங்கே நின்னுதான் அழுதுக்கிட்டிருக்கே. அவனும் அழட்டும் நானும் சேர்ந்துக்கிறேன். அழுதுக் கிட்டே இருப்போம்" என்றாள் பாட்டி சற்றுக் கோபமாக.

அரசி தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தாள். அவளது கண்கள் கலங்கின. பேசாமல் திரும்பி உள்ளே போய் விட்டாள்.

பாட்டிக்கும் கண்கள் கலங்கின.

நடக்காதது நடந்துபோச்சு.

இத்தனை காலமாக எல்லாத்தையும் கட்டிக் காத்திட்டு, பால் பொங்க வேண்டிய நேரத்திலே மெத்தனமா இருக்கலாமா?

இருந்தாச்சு.

வாசலிலே ஆளரவம் கேட்டது.

"நான்தான் பாட்டி" என்று சொல்லிக்கொண்டே படியேறி வந்தான் பாண்டியன்.

"வாடாப்பா — இப்பத்தான் நினைச்சேன். நீயும் வந்து நிக்கிறே. இந்தப் பக்கமே வர்றதில்லையின்னு வச்சிட்டியா?" என்று கால்களை மடக்கி வரவேற்புக் கொடுத்தாள் பாட்டி.

"பொண்ணு கொடுத்த வீட்டுக்கு அடிக்கடி வரலாமா பாட்டி" என்று கேட்டுப் பாட்டிக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டான் பாண்டியன்.

"நீ என்ன லேசுப் பட்டவனா? இந்த வயசிலே பேசிப் பேசி எத்தனை காரியத்தைச் சாதிச்சிருக்கே." என்றாள் பாட்டி சற்று ஆத்திரத்தோடு.

"எல்லாத்திலேயும் உங்க ஆசிதான் அடிப்படையா இருந்திருக்கு பாட்டி. இனிமேலும் இருக்கும். இந்த நம்பிக்கை எப்பவும் எனக்கு இருக்கு" என்றான் பாண்டியன் புன்னகையுடன்.

அவனுக்குத் தெரியும் பாட்டியைக் குளிர வைக்கும் விதம்.

அதற்குள்ளாகப் பாண்டியனின் குரல் கேட்டு, அரசி முன் பக்கம் ஓடிவந்து, 'வாங்கண்ணா' என்றாள்.

பாண்டியன் தங்கையை ஏறிட்டுப் பார்த்தான். பார்வை அவளது முகத்திலேயே தயங்கியது.

சிரிக்க முயற்சிக்கிறாள். அது சிரிப்பாக இல்லையே. தலையைச் சீவி முடித்து இரண்டு நாட்களாவது ஆகி இருக்க வேண்டும். நெற்றியில் வைத்திருந்த குங்குமம், வியர்வையில் கரைந்து, காயம் பட்டு விட்டதைப்போல புருவத்திலே வழிந்திருக்கிறது.

தமையன் தன்னையே பார்ப்பதைக் கண்டு, அரசி, வாய் திறக்காமலே தலை குனிந்து கொண்டாள்.



பாண்டியன் இடையிலிருந்த பாட்டியைப் பார்த்தான்.

ஒன்றும் சொல்லவில்லையானாலும் அவள் இருக்கும் கோலத்தைப் பாருடா?' என்று சொல்லுவது போலிருந்தது.

"உன் முகத்தைக் கண்ணாடியிலே பார்த்துக்கிறதே இல்லையாம்மா?" என்று தங்கையின் முகம் பார்த்துக் கேட்டான் பாண்டியன்.

அரசி சிரிக்கத்தான் செய்தாள்.

"சமையல் ஆகிக்கிட்டிருக்கு. முடிச்சதும் சீவி முடிச்சுக்கணும்"

"நானும்தான் சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிட்டேன்" என்று பாட்டி இடையிலே சொன்னாள்.

"சாப்பிடுங்கண்ணா" என்று சொல்லிவிட்டு அவசரத்தோடு உள்ளே திரும்பினாள் அரசி.

"அரசி சின்னப் பொண்ணு. உங்க கண்ணுக்கு முன்னாலே வளர்ந்த பேத்தி தானே." என்ற பாண்டியன், பாட்டியின் மறுமொழியை எதிர்பாராமலே, ஒரு வேகத்தோடு, தங்கையைத் தொடர்ந்து வீட்டுக்குள்ளே சென்றான்.

"அப்படி நினைச்சுத்தான் மெல்லவும் முடியாம விழுங்கவும் முடியாம உட்கார்ந்திருக்கேன்" என்று மீனம்மா பாட்டி பெருமூச்சோடு சொன்னது அவனது காதுகளில் விழுந்திருக்காது.

சமயலறைக்கு முன்னால் தொட்டி முற்றத்தில், பரபரப்போடு தன் முகத்தைக் கழுவிக் கொண்டு திரும்பியபோது, பின்னால் பாண்டியன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திகைத்துப்போய்விட்டாள் அரசி.

"நம்ம வீட்டுக்குப் போயிருந்தீங்களாமே அண்ணா?" என்று கேட்டாள்.

"பொதுக் காரியத்துக்காகப் போயிருந்தேன்" என்றான் பாண்டியன்.

"அம்மாவைப் பார்த்திங்களா?" என்று குழந்தையைப் போல அவசரத்துடனே கேட்டாள் அரசி.

"இப்ப அம்மாவைப் பாக்கணும்ங்கிறது முக்கியம் இல்லை அரசி" என்றான் பாண்டியன்.

அரசி ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்து கொண்டாள். இமைகளில் நீர் கோர்த்து மினுமினுத்தது.

"உனக்கு இங்கே என்ன குறையம்மா இருக்கு. எதை நினைச்சு நீ கண் கலங்குறே" என்று கேட்டான் பாண்டியன்.

"ஒரு குறையும் இல்லையே" என்றாள் அரசி தலை நிமிராமல்.

"நீ சொல்ற பதில் திருப்தியா இல்லையே? நீ எதையோ நினைச்சுப் பொருள் இல்லாமக் கவலைப் படுறேங்கிறது புரியுது" என்றான் பாண்டியன்.

பொங்கி வந்த கண்ணீரைத் தமையனுக்கெதிரே துடைத்துக் கொள்ள பயந்தபோது, கன்னங்களில் வழிந்தோடியது.

"பக்கத்திலே இருந்துக்கிட்டு, அப்பாவையும், அம்மாவையும் பார்க்க முடியலேங்கிறது எனக்கு வேதனையா இருக்கு. என்னாலே மறக்க முடியலையே" என்றாள் அரசி.

அவளையே பார்த்துக்கொண்டிருந்த பாண்டியன், "இந்தக் கவலையை லிங்கத்துக்கிட்டேயாவது மனம் விட்டுச் சொன்னியாம்மா" என்று கேட்டான்.

அரசி தலையசைத்தாள்.

பாண்டியன் சொன்னான்.

"உனது கண்ணீரைப் பற்றி லிங்கம் எங்கிட்டச் சொல்லி இருக்க வேண்டியவன். சொல்லலே. அவன் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரமாட்டான். இன்னும் சின்னப் பொண்ணு இல்லையம்மா நீ. ஒருத்தனுக்கு வாழ்க்கைத் துணைவி. உன் கடமையை நீ உணரணும். உளுத்துப் போன பழைய சம்பிரதாயத்தை எதிர்த்து, ஊரையே பகைச்சு, துணிவே துணையின்னு வாழ்றதுக்கு அடியெடுத்து வச்சிருக்கோம். நாம வாழ்றது பின்னாலே வர்றவங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டா இருக்கணும்" என்றான்.

"இனிமே எதை நினைச்சும் கலங்க மாட்டேண்ணா" என்றாள் அரசி ஏறிட்டுப் பார்த்து.

"தங்களுக்குன்னு, தனியா ஒரு கௌரவம் இருந்திச்சே, அது போச்சேன்னுதான் அவங்க குமுறிக்கிட்டு இருக்காங்க. பெற்ற மகளோட வாழ்வைப் பத்திக் கவலைப்படலே. இனிமேலும் அடுக்கடுக்கா ஒவ்வொரு நாடகத்தையும் நடத்தி வைக்க நேரம் பார்த்துக் காத்திருக்காங்க. நாங்க எதையும் தாங்கிக்க எதிர் பார்த்து நிக்கிறப்ப, நீ அப்பாவையும் அம்மாவையும் நினைச்சு வேதனைப்படுறது வேடிக்கையா இல்லையா?" என்று கேட்டான் பாண்டியன்.

"இனிமே நம்மை என்ன செய்யப் போறாங்களாம்" என்று கேட்டாள் அரசி.

பாண்டியன் சிரித்தான்.

"எதுவும் செய்யலாம். எதிர் பார்த்துக் கிட்டுத்தான் இருக்கணும். ஆனா எதுக்காகவும் கண் கலங்கக்கூடாது" என்றான் பாண்டியன்.

அரசி ஏதோ சொல்ல எத்தனித்தபோது, முன்பக்கமிருந்து பாட்டி அழைக்கும் குரல் கேட்டது.

"பாட்டி என்னமும் கடிந்து சொன்னாலும், எதையும் மனசிலே வச்சுக்காம கலகலப்பா இருக்கணும். இப்ப, தாய், தகப்பன் எல்லாமே பாட்டிதான்" என்று சொல்லிவிட்டு, அரசி பின்தொடர வாசல் பக்கமாக வந்தான் பாண்டியன்.

வெளித் திண்ணையிலே, மைக்கேலின் மகன் பீட்டர் பாட்டியோடு பேசிக்கொண்டிருந்தான்.

"உடனடியா உன்னைப் பாக்கணுமாம். தவியாத் தவிக்கிறானே இவன்" என்றாள் பாட்டி பாண்டியனைத் திரும்பிப்பார்த்து.

"எங்கேயெல்லாம் தேடிக்கிட்டு வாரேன். வாங்க சார்" என்று பாட்டியைத் தொடர்ந்து பீட்டரே ஆரம்பித்தான்.

பீட்டருக்குப் பதினாறு வயதிற்கு மேலிருக்கும். இன்னமும் கால் சராய் போட்டுக் கொண்டு தான் திரிகிறான். எதிலும் வயதுக்குத் தகுந்த விநயம் இருக்காது அவனுக்கு. அவனோடு பேசிக் கொண்டிருந்தால் சிரிப்போடு பொழுதுபோகும்.

"என்ன சங்கதி பீட்டர்" என்று பாண்டியன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"வாங்க சார் போவலாம். ரொம்ப அவசரம்" என்று சொல்லிக் கையைப் பிடித்து இழுப்பவனைப் போல நெருங்கி வந்தான் பீட்டர்.

பாண்டியன் பாட்டியைத் திரும்பிப் பார்த்தான்.

"போயிட்டு வாரேன் பாட்டி" என்றவன், அரசியைத் திரும்பிப் பார்த்து, "லிங்கம் வந்ததும் வரச் சொல்லம்மா" என்று சொல்லிவிட்டு, பீட்டர் பின்தொடர படிகளில் இறங்கி நடந்தான்.

"இந்த லூஸ் பய பின்னாலே இவன் எதுக்குப் போறான்" என்று மூக்கிலே விரலை வைத்துக் கேட்ட பாட்டி, அரசியைத் திரும்பிப் பார்த்தாள்.

திண்ணையின் விளிம்பிலே, தூணைப் பிடித்தவாறு நின்ற அரசி, இருவரும் நடந்து செல்வதையே இமையாது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது உதடுகளிலே புன்னகை தவழ்ந்தது.

(வளரும்)

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

தொழில்
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை ஏற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- சிங்கார பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- லேசிற தரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.



கல்லெழுத்துக் கற்க...

இரா. நாகசாமி.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் காணக்கிடைக்கும் கலைச் செல்வங்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் போற்றவும் வேண்டும் என்பது நம் பேரன்பு மிக்க தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆர்வமாகும். அன்று கலை ஆர்வம் மிக்க அரசர்களாலும், அவர்கள் தேவியர்களாலும், பிறராலும் உலகம் வியக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்ட கலைப் படைப்புகளின் பெருமையை கலை உள்ளம் படைத்த பெருந்தகையால்தானே அறிந்து செயல்பட முடியும்! அவர்கள் அளித்து வரும் ஊக்கத்தினால் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை தமிழக கலைச் செல்வங்களையும், வரலாற்று சின்னங்களையும் பாதுகாக்கும் பணியில் சிறப்பாக ஈடுபட்டு வருகிறது.

தமிழகத்தில் கோயில்களிலும், ஏராளமான கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. சுமார் 30,000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 6,000 கல்வெட்டுகளின் வாசகங்களே முழுமையாக அச்சிடப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுகள் தமிழக வரலாற்றை அறிவதற்கும் தமிழ் மொழியில் காலப் போக்கில் ஏற்பட்ட ஒரு சில மாறுபாடுகளை அறிவதற்கும், கட்டட அமைப்பிலும் கலை வரலாற்றிலும் ஏற்பட்ட வளர்ச்சிகளை அறிந்து கொள்ள மிகவும் இன்றியமையாதவை. தமிழக அரசர்கள் அன்று எவ்வாறு அரசாட்சி செய்தனர் என்பதையும், அன்றிருந்த அதிகாரிகளின் பொறுப்பு யாது? ஊர்ச் சபைகள் எவ்வாறு பணிபுரிந்தன? ஊர்ச் சபைக்கும் அரசுக்கும் இருந்த தொடர்புகள் எத்தகையவை? ஊர்ச் சபைக்கும் தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு யாது? முதலிய இன்றியமையாத வரலாற்றுச் செய்திகளைக் கல்வெட்டுகளிலிருந்துதான் அறிந்து கொள்ள முடியும்.

இக்கல்வெட்டுகள் அனைத்தும் இன்றைய எழுத்துக்களில் இல்லை. எழுத்துகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரையில் காலப் போக்கால், எழுதியவரின் பழக்கத்தால், எழுதப்பட்ட பொருளின் தன்மையால், பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்துள்ளது. ஆதலின் பண்டைய கல்வெட்டுகளைப் படிக்க பண்டைய எழுத்துக்களின் அமைதியும், வளர்ச்சியும் பற்றி அறிதல் தேவை. அத்துடன் தமிழகத்தில் கி.பி. 600-லிருந்து இன்று வரை எடுப்பிக்கப்பட்ட கோயில்களும், சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், ஓவியங்களும் ஏராளம் இருக்கின்றன. இவை அன்றைய மக்களின் வாழ்வோடு பிணைந்து நின்றவை. இவற்றையும் வரலாற்றின் அடிப்படையிலே அறிந்துகொள்வது மிகமிகத் தேவையான ஒன்றாகும்.

பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் பல தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இடிந்தும் அழிந்தும் போகும் நிலையில் உள்ளன. கல்வெட்டுகள் வண்ணம் பூசப்பட்டும், சிமென்ட் பூசப்பட்டும் மறைக்கப்படுகின்றன. சிற்பங்கள் சிதைக்கப்படுகின்றன. இவை, இவற்றின் அருமை பெருமை தெரியாத காரணத்தாலும், அறியாமையின் காரணத்தாலும் அழிக்கப்படுகின்றன. ஆதலின் வரலாற்றைச் செவ்வனே அறிந்து கொள்வதற்கும், வருங்காலச் சந்ததியினர் இவற்றைப் போற்றிப் பாதுகாக்கும் அறிவு பெறவும், அவற்றை மக்களிடையே எடுத்துக் கூறுவது இன்றியமையாத பணியாகிறது. இதை மனத்தில் கொண்டு தமிழகக் கல்வித் துறை அமைச்சர் மாண்பமிகு டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் கல்வெட்டுகளை அனைவரும் படிக்கவும், கலைப் பெருமையை அறிந்து கொள்ளும் வகையில் ஒரு பயிற்சியை தமிழக அரசோடு நடத்த வேண்டுமென்றும், அதை இத்துறை எடுத்துச் செயலாற்ற வேண்டுமென்றும் பணித்தார்கள். அதை ஏற்று இத்துறை கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறது.

தமிழக அரசு தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்களில் சுமார் 40 பேர்களுக்குப் பயிற்சி கொடுக்க வகை செய்து, சென்ற ஆண்டு, கோடை விடுமுறையில் மே மாதம் மூன்று வாரங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி அளிக்கப்பட்ட மூன்று வாரங்களில் முதல் வாரம் தமிழக எழுத்துகள், வரலாறு, கலை, தொல்லியல் பற்றிய வகுப்புகள் நடத்தப்பட்டன. பண்டைய தமிழ் எழுத்துக்களையும், வட்டெழுத்தையும் எழுதவும் படிக்க

ஆனைமலையிலுள்ள தீர்த்தங்கர் சிலைகளையும் கல்வெட்டுகளையும் காணும் காட்சி



வும் பயிற்சியளிக்கப்பட்டது. பிற எழுத்துக்களின் வளர்ச்சியும், தமிழகக் கல்வெட்டுகளில் அமைதியும், கல்வெட்டுகளைக் கொண்டு வரலாற்றை அமைப்பது எப்படி, கலையை அறிந்து கொள்வது எப்படி , என்பதும் கற்றுத் தரப்பட்டன. கோயில்கள் ஏன் தோற்றுவிக்கப்பட்டன ? எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டன ? யாரால் தோற்றுவிக்கப்பட்டன ? அங்கு வழிபாடு எவ்வாறு நடைபெற்றது ? இசையும், கூத்தும் இக்கோயில்களில் பெற்றிருந்த பங்குகள் யாவை ? முதலியனவும் போதிக்கப்பட்டன. இரண்டாவது வாரம் பயிற்சியில் பங்கு பெற்றவர்களைக் கடல்மல்லை, காஞ்சி, திருவதிகை, தில்லை, கங்கை கொண்ட சோழபுரம், குடந்தைக் கீழ்க்கோட்டம், தாராசுரம், திருப்புறம்பியம், திருப்பழனம், திருவையாறு, தஞ்சை, சித்தன்னவாசல், கொடும்பாளூர், குடுமியாமலை, திருப்பரங்குன்றம், ஆனைமலை, மதுரை, திருச்சி, திருவரங்கம், ஆகிய இடங்களிலுள்ள வரலாற்றுச் சின்னங்களுக்கு நேர்முகமாக அழைத்துச் சென்று, அங்குள்ள கட்டட அழகையும், கல்வெட்டின் பெருமையையும், சிற்பங்களின் எழிலையும், செப்புத் திருமேனிகளின் பண்பையும் நேர்முகமாக எடுத்துரைக்கப்பட்டது. கல்வெட்டுகளைப் படியெடுக்கும் முறையும் ஆங்காங்கு கற்பிக்கப்பட்டது.

மூன்றாவது வாரத்தில் தமிழக வரலாற்றைக் கால அடிப்படையில் அதே காலத்தில் இந்தியாவின் வடபால் திகழ்ந்த அரசுகள், கலைகள், கல்வெட்டுகள் முதலியனவும் கற்பிக்கப்பட்டன. தமிழக வரலாற்றை முதலில் அறிந்து பின்னர் அதன் மூலம் பிற இந்திய வரலாறுகளை அறியும்போது அவைகளைத்தெளிவாகவும், விரிவாகவும் அறிந்து கொள்ள முடிந்தது. மூன்று வாரங்கள் பயிற்சி பெற்றவர்களுக்கு இறுதியில் சான்றிதழ் நல்கப்பட்டது. பயிற்சியில் பங்கு பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 வீதம் உதவித் தொகை தமிழக அரசு அளித்தது. தவிர மேலே குறித்த வரலாற்றுச் சிறப்புடைய இடங்களுக்கு அரசின் செலவிலேயே பங்கு பெற்றவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சென்ற ஆண்டு பங்கு பெற்றவர்களில் பெண்கள் நான்கு பேர்களாவர். கல்லூரி பயிலும் மாணவியர் இருவரும் இப்பயிற்சியில் பங்கேற்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தமிழ்த்துறை ஆராய்ச்சி மாணவர் ஒருவரும் இதில் பங்கு பெற்றார்.

தொல்பொருள் ஆய்வுத்துறையின் கல்வெட்டுப் பயிற்சிமுகாம் நிறைவு விழாவில் நானும் கலந்து கொண்டு, ஏராளமான பணிகளுக்கிடையில் என் இதயம் கவர்ந்த பணிகளில் இதுவும் ஒன்று என்ற நிலையில் உங்களோடு சில மணித்துளிகளைக் கழிப்பதில் மிகுந்த பெருமை அடைகின்றேன். எத்தனையோ தொல்லைகள் இருந்தாலும், அவைகளிலிருந்து ஓரளவு விடுபட்டுச் சற்று நிம்மதி காணுகின்ற நல்ல இடமாக எனக்குத் தோன்றுகின்ற இடம், தமிழ்ச் சான்றோர்கள் கூடியிருக்கின்ற இவை போன்ற இடங்களாகும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு தொல்பொருள் ஆய்வுத் துறை அமைக்கப்பட்டு அது தன்னுடைய கடமையைச் செவ்வனே செய்து வருகின்றது. மேலும் அது சிறப்புற வேண்டிய வகையில்தான் இன்றைக்குக் குமரி மாவட்டத்தினுடைய கல்வெட்டுகளைப் பற்றிய நூலொன்று அறநிலையத் துறை அமைச்சரால் வெளியிடப்பட்டு இருக்கின்றது.

இருக்கின்ற பன்னிரண்டாயிரம் ஆலயங்களில் அவை குறைவானவை அல்ல. ஆனால் நூறு ஆலயங்கள், தஞ்சாவூரில் இராஜராஜன் கட்டிய இராஜராஜேஸ்வரத்தைப் போல, கங்கை கொண்ட சோழபுரத்தைப் போல வேலூரில் இருக்கின்ற ஆலயத்தைப் போல, கோட்டைக்குள்ளே இருக்கின்ற ஆண்டவன் இல்லாத ஆலயம் என்று சொல்லுகிறார்களே, அப்படிப்பட்ட ஒரு நூறு அல்லது நூற்று இருபத்தைந்து ஆலயங்கள் மாநில அரசினுடைய பொறுப்பிலே இல்லாமல், மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கின்றன.

நான் இங்கே சொல்லுவதெல்லாம் ஆதிக்கச் சுமைகளை மத்தியிலே இருப்பவர்கள் தலையிலே சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எதற்காக அதிகச் சுமைகளை மத்தியிலே குவித்து வைக்க வேண்டும் ?. இந்த நூறு கோயில்களையும் நீங்களே பாதுகாத்து வாருங்கள் என்று எங்களுக்குக் கட்டளையிடலாமே ! இந்த அதிகாரத்தை ஏற்கக்கூட மாநில அரசு தகுதியற்றதாக்கப்படுவதா ? தொன்மையைப் பேணிக் காப்பதில் நாம் யாருக்கும் சளைக்காதவர்கள் நமது தமிழ்நாட்டிலுள்ள கலைச் செல்வங்கள் மிக உயர்ந்தவை; சிறந்தவை ! பெருமைக்குரியவை ! அந்தக் கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நமக்கு இருப்பதைவிட வேறு ஒருவருக்கும் இருக்கும் என்று யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆகவே அந்தப் பொறுப்புகளை நாம் மேலும் மேலும் ஏற்பதற்கு நம்முடைய பணியிலே தீவிரப் படவேண்டும்.

[22—5—1972-ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வுத் துறையின் கல்வெட்டுப் பயிற்சிமுகாம் நிறைவுவிழாவில்முதல்வர் ஆற்றிய உரையில் ஒருபகுதி.]

இப்பயிற்சி முடிந்தவுடன் தன் ஊருக்குச் சென்றவர் தன் ஊரில் ஒரு நடுகல் இருப்பதை இத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதன் அடிப்படையில் அப்பகுதியாகிய செங்கம் வட்டத்திற்கு சென்று இத்துறை ஆய்வு செய்தபோது இதுகாறும் கிடைத்திராத நடுகற்கள் அறுபது, கல்வெட்டுகளோடு கூடியவை இத்துறையால் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இந் நடுகற்கள் தமிழ் இலக்கியத்திற்கும், வரலாற்றிற்கும் சிறந்த செய்திகளை எடுத்து அளித்து வருகின்றன. தமிழக அரசு இத்துறையில் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி பயனளிக்கத் தொடங்கியுள்ளது என்பது இதிலிருந்து தெள்ளிதின் விளங்கும்.

இரண்டாவது ஆண்டாக இவ்வாண்டும் கோடையில், கல்லூரி பேராசிரியர்களுக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும் மே 2-ஆம்தேதி தொடங்கி 22-ஆம் தேதி வரையில் இப்பயிற்சி தமிழக அரசால் நடத்தப்பட்டது. மாண்புமிகு நாவலர் அவர்கள் தலைமையில், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்கள். 22-ஆம் நாள் நிறைவு விழாவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அன்போடு தலைமையேற்று பயிற்சியில் பங்கு கொண்ட ஆசிரியப் பெருமக்களுக்குச் சான்றிதழ் நல்கியதோடு, தமிழகக் கலைகள் என்னும் அரும் நூலையும் வெளியிட்டு அருளினார்கள்.

தாராசுரம் கல்வெட்டின் தோற்றம்



இவ்வாண்டு பயிற்சியில் ஒரு சிறப்பு. தமிழகக் காவல் துறை புலனாய்வுப் பிரிவைச் சார்ந்த துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு சந்திரமௌலி அவர்கள் இந்தப் பயிற்சி பெற்றார்கள். பண்டைய கலைச் சின்னங்கள் களவு போவதைத் தடுப்பதில் தமிழக அரசு முன்னணியில் நிற்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயம். சிலைகள் களவு போவதைத் தடுப்பதற்காகத் தமிழக அரசு தனியாக ஒரு சிறப்புப் பகுதியைப் புலனாய்வுப் பிரிவில் அமைத்துள்ளது. அதிலுள்ளவர்கள் இப்பயிற்சி பெறுவதால் கலைப் பொருட்களின் கடத்தலைக் கண்டுபிடிக்கச் சிறந்த ஆற்றல் ஏற்படும். இந்தியாவிலேயே காவல் துறையைச் சார்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் இவ்வாறு பயிற்சி பெறுவது இதுவே முதல் தடவையாகும். தமிழக அரசின் ஆர்வம் காரணமாக இன்னும் சில அதிகாரிகள் இப்பயிற்சி பெற இருக்கின்றனர். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பயிற்சி பெற்ற மாணவர்கள் தமிழ் எழுத்திலும், வட்டெழுத்திலும், வரவேற்பு ஒன்றினைப் படித்தளித்தார்கள். தமிழக முதல்வர் அவர்கள் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் தமிழக அரசு எடுத்துள்ள சிறந்த முயற்சிகளையும், மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறை எடுத்துள்ள சீரிய முயற்சிகளையும், தமிழகச் சிற்பங்களின் கல்வெட்டுகளின் அமைப்புகளையும் பற்றி ஒப்பற்ற சிறப்புரை ஆற்றினார்கள். தன் எருமைகளைக் காத்து நின்ற வீரன் ஒருவனைக் கள்வர்கள் அடித்து வீழ்த்த அவன் அருகில் நின்ற நன்றி மறவாத நாய் கள்வர்களைக் கடித்துத் துரத்தியதை ஒரு நடுகல் குறிக்கிறது. அந்நடுகல்லை வரலாற்று ஆசிரியர்களும் வியக்கும் வண்ணம் முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

இதுபோன்று ஆசிரியர்களுக்கு ஓர் ஆண்டுக்காலத்திற்குச் சிறப்பு பயிற்சி அளிக்க இத்துறையின் கீழ் ஒரு நிரந்தர 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' (Institute of Epigraphy) ஒன்று நிறுவ வேண்டும் என்று நாவலர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அதன்படி ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது நிறுவப்பட்டவுடன், தமிழகக் கல்வெட்டுகள் மட்டுமின்றி தமிழகத்தோடு அக்காலத் தொடர்பு கொண்ட ஈழம், கடாரம்; இன்னம் கீழை நாடுகள் முதலிய இடங்களில் காணப்படும் எழுத்துகளும், வரலாற்றுத் தொடர்புகளும் சிறப்பாக ஆராய வழிவகை ஏற்படும்.

Your deposits with
THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS
Assist the bank to finance agriculture and agro industries which form the backbone of the Nation's economy.
Schedule of Rates.

	Per cent per annum
Current Account	0·50
Savings Bank account (on monthly minimum balances)	4·00
SEASON DEPOSITS—Rs. 1,000 and over	
15 days	3·00
46 days	3·00
FIXED DEPOSITS—Rs. 100 and over	
91 days	4·75
6 months	5·25
12 months	6·25
24 ,,	6·75
36 ,,	7·25
60 months and over	7·50

Additional—1/2 per cent per annum for deposits of *Charitable, Religious, and Educational Institutions*
Interest Paid Monthly on Rs. 1,000 and over and for periods of one year and over

RECURRING DEPOSITS—
Rs. 5 per month in

Months		12	24	36	48	60	72	84
Yields	Rs.	63	125·50	201	278	362·50	452	548·50

Local Branches—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoynagar, Greenways Road, Kellys, Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai)

Opening shortly: Nungambakkam and Jawaharnagar.

R. KANAKASABAI,
Chairman.

P. N. T. CHARY,
Secretary.

காலக் கண்ணாடி

[illegible] கடந்து [illegible] நிற்கின்றன, நமது [illegible] கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற [illegible] அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. [illegible] திரும்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாசனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை. [illegible] நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது [illegible] காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் [illegible] ஆராய்ச்சியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB



வாழ்வோர் யார்?

எழுந்தாலும் 'நெற்கதிர்'போல் எழுதல் வேண்டும்;
எரிந்தாலும்'விளக்கை'ப்போல் எரிதல் வேண்டும்;
அழுதாலும் 'தேனடை' போல் அழுதல் வேண்டும்;
அசைந்தாலும் 'தென்ற' லைப்போல் அசைதல் வேண்டும்;
விழுந்தாலும் 'விதை' யைப் போல் விழுதல் வேண்டும்;
விரைந்தாலும் 'கார்முகில்' போல் விரைதல் வேண்டும்;
விழுதுவிடும் ஆல்போல நிழலைத் தந்து
வியனுலகில் வாழ்பவரே என்றும் வாழ்வார்!

எத்தனையோ மன்னரிங்கே இருந்தார்; போனார்;
எழில்'பாரி' மட்டும்ஏன் நெஞ்சில் நின்றான்?
கத்தரிக்காய்த் தலையிலுள்ள காம்புக் கிரீடம்
கறிக்குழம்பில் வந்திடுமா? அதுபோல் சேர்க்கும்
சொத்திங்கே உயிர்போனால் தொடர்ந்தா ஏகும்?
தொகைதொகையாய்ச் சொன்னாலும் செல்வம் தன்னை
வைத்திருப்போர் உணர்வாரோ? நல்ல சொற்கள்
வைக்கின்ற 'நடுகல்'லில் ஏற வேண்டும்!

எவ்வளவோ தமிழரசு செலவ ழித்தும்
எத்தனையோ பள்ளிபல கட்ட வேண்டும்;
எவ்வளவோ அரசாங்க நிதிதந் தாலும்
இன்னும்மருத் துவமனைகள் போத வில்லை;
எவ்வளவோ அவ்வளவே என்றில் லாமல்
இந்நாட்டு மக்கள்தொகை பெருகும் என்றால்
எவ்வளவோ அவ்வளவு மட்டும் வைத்தே
இருப்பதனை அறப்பணிக்குத் தந்தால் என்ன?

கோடிகளை இருப்பறையில் சேர்த்துச் சென்ற
கொழுத்தவரைப் பழுத்தவரை நினைத்தோ மாநாம்?
ஆடுகின்ற ஆட்டமெலாம் ஆடிச் செல்லும்
ஆர்ப்பாட்டப் புயற்காற்றைப் போற்று வோமா?
தேடுகின்ற செல்வத்தைத் தேகந் தன்னைச்
சீர்மணக்கும் சந்தனம்போல் தேய்த்தோர் மட்டும்
ஏடுகளில், எழில்நெஞ்சில் நிலைத்து நின்றார்;
இறந்துமிங்கே வாழ்வாரே 'வாழ்வார்' என்பேன்.

கவிஞர் கா.வேழவேந்தன் எம்.எல்.ஏ

கோவில்களிலிருந்து உபரியாகக் கிடைக்கும் வருமானம் ஏழைகளுடைய திருமணங்களை நடத்துவதற்கு உதவும். இந்த உதவியைக் கொண்டு ஆண்டுதோறும் திருமணங்களைக் கோவில்களில் நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

துணி, தாலி, பண்ட பாத்திரங்கள் ஆகியவைகளை வாங்குவதற்கு மேற்கண்ட உபரி நிதியிலிருந்து பணம் அளிக்கப்படும். கோவில் நிதியிலிருந்து வயதானவர்களுக்கு விடுதிகள் கட்டுவதற்கான திட்டங்களும் பரிசீலனையில் இருக்கின்றன.

அரிய விக்கிரங்கள் திருட்டுப் போகாமல் தடுப்பதற்காக ஒரு மத்திய இடத்தில் அவைகளைச் சேகரித்து வைத்துப் பாதுகாப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொருத்த வரையில் திருக்குவளையில் உள்ள சிவன் கோவிலிலும், மேற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொருத்தவரை தஞ்சை சரசுவதி மகாலிலும் இவைகளைச் சேர்த்து வைப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

* * *

கிராமப் பகுதிகளிலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடியேறுவது நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இதைக் கட்டுப்படுத்தாவிடில், நகரங்களில் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவது பெரும் சுமையாகிவிடும். எனவே நகரங்களுக்கு, கிராம மக்கள் வந்து சேருவதைத் தடுக்கும் முறையில் சில இடங்களை நகரங்களாக உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்கென ஒரு மசோதா கொண்டு வரப் பட இருக்கிறது.



இதற்காக ரூ. 500 கோடியில் ஓரளவு சிறிய திட்டம் ஒன்று இப்போது தயாராகி வருகிறது. இதன்படி சென்னையைச் சுற்றி ஐந்தாண்டுக் காலத்தில் துணை நகரங்கள் உருவாக்கப் படும்.

கிராம மின் வசதி நடவடிக்கையில் தமிழ்நாடு முதலிடம் பெற்று வருகிறது.

தமிழகத்தில் மொத்தமுள்ள 14,124 கிராமங்களில் 90 சதவிகிதம் கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டு விட்டது. தமிழகத்தின் பல பகுதிகளில் கிராம மின்வசதி நிறுவனத்தின் கடனுதவிகளைத் தமிழகம் தக்க அளவில் பயன்படுத்தி முற்போக்காகச் செயல்படுகிறது. இந்த விரிவுத் திட்டம் முனைப்பாக உள்ளது.

தற்போது மாநில மின் வசதி வாரியம் தந்த பதினொரு திட்டங்களுக்குக் கடன் வழங்கியிருக்கிறது. இந்த உதவி வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, கோவை, மதுரை, திருச்சி, முகவை, நெல்லை ஆகிய மாவட்டங்களுக்குப் பயன்படும்.



கிராமப்புற மின் வசதி அமைப்பு என்கிற அடிப்படைக் கட்டுக்கோப்பு வெகு கணிசமாக உருவாகியுள்ள மாநிலம் தமிழ்நாடுதான். இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த மாநிலத்தில் மின்வசதி பெருமல் உள்ள கிராமங்களுக்கு மின்வசதி தருவதற்கு நடவடிக்கைத் திட்டம் இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்பதில் ஐயமேயில்லை.

* * *

சென்னை நகரில் இன்று வட்டங்கள் தோறும் மாட்டு வண்டிகள் மூலமாகக் குப்பைகளை எடுத்து வருகிறார்கள். இது படிப்படியாக அகற்றப் பட்டு, சென்னையில் லாரிகள் மூலம் நகரத் துப்புரவுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பத்தாண்டுத் திட்டமாகும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் குப்பைகளை அகற்றப் பெரிய லாரிகளும், பேருந்து செல்லும் தடங்களில் உள்ள குப்பைகளை அகற்ற நடுத்தர லாரிகளும், நெருக்கமான தெருக்களில் உள்ள குப்பைகளை அகற்றச் சிறிய லாரிகளும் பயன்படுத்தப்படும்.

ஜார்ஜ் டவுன் பகுதியில் 18, 19, 20-வது வட்டங்களிலும் திருவல்லிக்கேணி ஜாம் பஜார் பகுதியிலும் இரவு நேரங்களில் கூடக் குப்பைகளை அகற்றும் பணி துவக்கப்படவிருக்கிறது.

* * *

கல்லூரிப்பாட நூல்களைத் தாய் மொழியில் வெளியிடும் பணியில் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழ்நாடே முன்னணியில் இருக்கிறது. இந்தி பேசா மாநிலங்கள் எல்லாமாக சேர்ந்து இதுவரை வெளியிட்டிருக்கும் பாட நூல்களின் எண்ணிக்கை 733. தமிழ் மொழியில் வெளியாகியுள்ள கல்லூரிப் பாடநூல்களின் எண்ணிக்கை 267. இந்தி மொழியில் இதுவரை வெளியான நூல்களின் எண்ணிக்கை 185 மட்டுமே.



* * *

தமிழ் நாட்டிலிருந்து முதல் தடவையாகப் பந்துகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை மலேயா நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படும். சென்னையிலுள்ள ஒரு கம்பெனியார் ' ஸ்பீரியோ ' என்ற பெயரில் விளையாட்டுப் பந்துகள் தயாரிக்கின்றார்கள். மாதம் 500 பந்துகள் வீதம் ஏற்றுமதி செய்யப்படும். இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 2·5 இலட்சம் அந்நியச் செலாவணி கிடைக்கும்.



முத்து மாலை

பூங்கொடி

ரகு ஓர் ஏழைச் சிறுவன். அவனுக்கு அன்புத் தங்கை ஒருத்தி இருந்தாள். ரகு எட்டாவது படித்துக்கொண்டிருந்தான். ஏழையாயிருந்தாலும் பார்க்க ஒழுங்காக, அழகாக இருப்பான். கந்தையானாலும் கசக்கிக் கட்டுவான்; கூழானாலும் குளித்துக் குடிப்பான்.

வறுமைக் குடும்பத்திலே பிறந்த அவன் சிறு வயதிலேயே மிக்கத் துன்பத்தை அனுபவித்து வந்தான். அவனுடைய அப்பா உடம்பு சரியில்லாமல் வீட்டிலேயே படுத்துக் கிடந்தார். அவன் அம்மா வீட்டு வேலை செய்து ரகுவைப் படிக்கவைத்தாள்.

ஏழை ரகுவை எல்லா ஆசிரியர்களுமே விரும்பினார்கள். ஆடம்பரமில்லாமல், ஆணவமில்லாமல், நன்றாகப் படிக்கும் மாணவனை யார்தான் விரும்பமாட்டார்கள்?

தேர்வுகளில் ரகுதான் முதல் மதிப்பெண்கள் வாங்குவான். இதனால் மற்ற 'மக்கு' மாணவர்கள் அவன்மீது பொறாமை கொண்டார்கள். அவனை ஒழித்துக்கட்ட முடிவு செய்தார்கள். அவனைக் கண்டால் யாரும் பேசுவதில்லை. அவன் போகும்போதும் வரும்போதும், அவனைக் கேலி செய்வார்கள். அவனது கிழிந்த சட்டையை ஒருவன் மேலும் கிழித்துவிட்டு ஓடி விடுவான். ஒருவன் கல் எடுத்துப் போட்டுவிட்டு ஒன்றும் தெரியாதவன் போலப் பதுங்கி விடுவான்.

இவற்றையெல்லாம் ரகு பொறுத்துக் கொண்டான். இதைப் பற்றி அவன் ஆசிரியரிடம் புகார் சொல்லவில்லை; அவர்களுடைய பெற்றோர்களிடமும் இது பற்றிச்சொன்னதில்லை. ''பொறுமையே பெருமை தரும்'' என்பதை அவன் பாடத்தில் படித்திருக்கிறான்.

நாள் ஆக ஆக ரகுவின் அப்பாவுக்கு உடம்பு மோசமாகிக் கொண்டே வந்தது. இதனால் ரகுவும் அவனது தாயும் மிகவும் கவலைப் பட்டார்கள். சம்பாதிக்க ஆள் இல்லாவிட்டால் குடும்பம் நடத்த முடியுமா? வாழத்தான் முடியுமா?

ரகுவை வேலையில் விடலாம் என்றாலோ, அவன் சிறுவன். மேலும், அவன் படித்துக் கொண்டிருக்கிறான். கருணை உள்ள சிலர் அவன் படிக்க உதவி செய்து வந்தார்கள். அந்த நிலையில் அவனது படிப்புக்கு முற்றுப் புள்ளி வைப்பது நல்லதா? கூடாது என்றே அவன் தந்தையும் கூறினார்.

ரகுவின் அம்மாவால்தான் குடும்பமே நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் ரகுவின் அப்பா பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார். அன்று யாருக்குமே உணவு இல்லை. ரகு பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தான். பாத்திரங்களெல்லாம் காலியாகக் கிடந்தன. அடுப்பில் பூனை தூங்கிக்கொண்டிருந்தது. அப்பாவையும், அம்மாவையும், தங்கையையும் மாறி மாறிப் பார்த்தான். அவனையறியாமலேயே அவன் கண்களில் கண்ணீர் கசிந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்ட ரகு, தண்ணீரை வயிறு நிறையக் குடித்துவிட்டுப் பள்ளிக்குக் கிளம்பினான்!

அவன் தாய் இந்தத் துன்ப நிலையைக் கண்டு கண்ணீர் விட்டாள், அவள், வேலை செய்யும் வீட்டில் விலை உயர்ந்த முத்துமாலை காணமற்போய் விட்டதாம். அதனால் அவள் மீது அந்த வீட்டார் சந்தேகப் பட்டு அவளை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அதனால்அன்று பட்டினி; அன்று இரவாவது சமைக்கலாம் என்று ரகுவின் அம்மா யார் யாரையோ கேட்டுப் பார்த்தாள். யாரும் ஒரு காசும் கொடுக்க மறுத்து விட்டார்கள். ஏழை யென்றால் மோழையும் பாயுமல்லாவா ?

நீதிக்கு ஒரு கதை

பகல் பள்ளிக்கூடம் சென்ற ரகு அன்று இரவு வரையும் வீட்டுக்கு வரவில்லை. இதனால் திடுக்கிட்டுப் போன ரகுவின் தாய் எங்கெல்லாமோ அவனைத் தேடினாள். எங்குமே ரகு கிடைக்கவில்லை. 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பது போல அவர்களுக்குத் துன்பத்துக்கு மேல் துன்பம் வந்துகொண்டே இருந்தது.

ரகுவின் வகுப்பில் மாணிக்கம் என்பவன் படித்துக் கொண்டிருந்தான். அவன் பணக்காரப் பையன். மாணிக்கத்துக்குப் பெயர்தான் மாணிக்கமே தவிர, படிப்பிலே அவன் மக்காக இருந்தான். அவனும் பொறாமைக் கும்பலிலே சேர்ந்தவன்தான். அவனே அந்தக் கும்பலின் தலைவன் என்று கூடச் சொல்லலாம்.

மாணிக்கத்தின் வீட்டில்தான் அந்த முத்துமாலை காணமல் போய் விட்டது. முத்துமாலை காணமல் போன அன்று அவன் வீட்டிலே ஒரே அமர்க்களமாயிருந்தது. வீடெல்லாம் அலசிப்பார்த்தார்கள். எங்குமே அது கிடைக்கவில்லை. உடனே போலீசுக்குத் தகவல் கொடுத்தார்கள்.

ரகுவின் அம்மா, மாணிக்கத்தின் வீட்டில்தான் வேலைசெய்து வந்தாள். அதனால் அவளை விசாரிக்கும்படி மாணிக்கத்தின் அம்மா போலீசாரிடம் கூறினாள். போலீசார் அவளை மிரட்டி' 'முத்துமாலை எங்கே?' என்றார்கள். உடனே அவள் ''அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று உண்மையைக் கூறிக் கதறி அழுதாள். இது மாணிக்கத்துக்கு ஆனந்தமாக இருந்தது. இறுதியில் போலீசாரே அவளை விட்டு விட்டனர். ஆனால், மாணிக்கத்தின் அம்மாவுக்கோ 'அவள்' மீதே சந்தேகமாய் இருந்தது.

''முத்துமாலை திருடிய சிறுவன் கைது!'' அன்றையச் செய்தித்தாளில் இப்படி ஒரு செய்தி வெளி வந்திருந்தது. திருடியவன் பெயரும், அவன் படிக்கும் பள்ளியின் பெயரும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

''என்ன? ரகுவா? அவனா முத்துமாலையைத் திருடினான்? இருக்கவே இருக்காது'' ரகுவின் பள்ளி ஆசிரியர்கள் பேசிக் கொண்டார்கள். ரகு கைதான சேதி கேட்ட அவன் அம்மா



புத்திசாலி!

அவன் ஒரு சோம்பேறி.

தெருவைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது, கல் ஒன்று தடுக்கியதால் கீழே விழுந்து விட்டான் அவன். சில வினாடிகள் எழுந்து நின்றான்; தூசியைத் தட்டி விட்டுக் கொண்டு புறப்பட்டான். பத்தடி தொலைவு நடந்தவுடன் மறுபடியும் விழுந்து விட்டான். விழுந்தவன், உடனே எழுந்திருக்காமல், கவலையுடன் தனக்குள் சொல்லிக் கொண்டான்!

“அடடா! இரண்டாவது முறையும் கீழே விழுவேன் என்று தெரிந்திருந்தால் முதல் முறை விழுந்தபோது எழுந்திருக்காமல் இருந்திருப்பேனே!”

‘கோ’ வெனக் கதறி அழுதாள். நோயில் நொந்து போயிருக்கும் அவன் அப்பாவோ, மேலும் மனம் நொந்தார்.

இங்கே நோயுற்ற நிலையில் கணவன் இருக்கிறார்; அங்கே கைதான நிலையில் மகன் இருக்கிறான். இங்கே இருப்பதா? அங்கே போவதா? அவள் அழுதாள். அந்தச் சிறுமியும் கூட அழுதாள்.

அன்று விசாரணை.

நீதி மன்றத்தில் பள்ளிப்பிள்ளைகள் பலர் கூடி இருந்தார்கள். ஓரிரு ஆசிரியர்களும் அங்கு வந்து இருந்தார்கள்.

‘‘தம்பி! முத்துமாலையை நீதானே திருடினாய்?’’ நீதிபதி கேட்டார்..

‘‘இல்லை, ஐயா!’’

‘‘பொய் பேசாதே!’’

‘‘உண்மைதான் சொல்கிறேன் ஐயா. நான் திருடவே இல்லை’’

‘‘அதற்குச் சாட்சி உண்டா?’’

‘‘என் மனச்சாட்சிதான்’’

‘‘அதெல்லாம் நம்ப முடியாது; முத்துமாலையை நீதான் திருடியிருக்கிறாய். உன்சார்பில் சாட்சிஇல்லாமலிருப்பதிலிருந்தே அது மெய்யாகிவிட்டது. ஆகையால் .. ....நீதிபதி முடிக்கவில்லை.

அப்போது ‘‘சற்று இருங்கள்! சாட்சி நானிருக்கிறேன்’’ என்ற குரல்கேட்டு அனைவரும் திடுக்கிட்டுப்பார்த்தனர். ரகுவின் தலைமையாசிரியர் வந்து கொண்டிருந்தார்! மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

‘‘ரகு நிரபராதி, குற்றவாளி மாணிக்கம்தான்!’’ என்றார் உறுதியாகத் தலைமையாசிரியர்.

‘‘எப்படிச் சொல்கிறீர்கள்?’’ நீதிபதி கேட்டார்.

‘‘மாணிக்கம் வீட்டில் அவன் தந்தையோடு ஒருநாள் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது பலகணி பக்கம் இரண்டு சிறுவர்களின் குரல் கேட்டது. நான் அதைக் கவனித்துக் கேட்டேன்.

‘‘டேய் ராமு, ரகு இப்போது மாட்டிக் கொண்டான்’’ என்றான் ஒருவன்.

‘‘எப்படி மாணிக்கம் ?’’ என்று இன்னொருவன் கேட்டான். அதற்கு மாணிக்கம், ‘‘மத்தியானம் பள்ளிக்கூடத்துக்கு ரகு வந்தானல்லவா? அப்போது அவனுக்குத் தெரியாமல் முத்துமாலையை அவன் பையில் போட்டுவிட்டேன். சாயங்காலம் அவன் வெளியே வரும்போது, நம்ம பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் காவல் நிலையம் இருக்கிறது பாரு, அங்கே போய் சொல்லி விட்டேன். இப்போ ரகு மாட்டிக் கொண்டான்’’.

‘‘இவ்வாறு இருவரும் பேசிக் கொண்டார்கள். அந்த இருவரும் இதோ இருக்கிறார்கள்!’’ என்று அந்த இரண்டு பேர்களையும் பிடித்து இழுத்துவந்து, நீதிபதி முன் நிறுத்தினார் தலைமையாசிரியர்.

இருவரும் பயத்தால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர்.

‘‘நான்தான் முத்துமாலையை அவன் பையில் போட்டேன்’’ என்று மாணிக்கம் நடுங்கிக் கொண்டே உண்மையைக் கூறி விட்டான்.

மாணிக்கமும் சிறுவனானதால் நீதிபதி அவனைக் கண்டித்து, ‘‘பொறாமை ஒரு கொடிய நோய். அந்த நோய்க்குத் தக்க மருந்து அன்பு. அதை அனைவரும் விரும்பவேண்டும். பொய்யும், பித்தலாட்டமும் ஒரு போதும் வெற்றி பெறாது. உண்மைதான் வெற்றிபெறும்; அதற்கு அழிவே இல்லை’’ என்று புத்திமதி சொல்லி அனுப்பினார்



புலவர் சி. துரைசுவாமி

அறியாமை கல்வியினால் அகற்ற வேண்டும்.
ஆட்சிக்கு நீதியுள்ள அரசு வேண்டும்.
இரப்போரே இல்லாமல் செய்ய வேண்டும்.
ஈட்டும்பொருள் உலகில்சுழன் றெய்தல் வேண்டும்.
உடைமைகளைத் தான்முயன்று சேர்க்க வேண்டும்.
ஊரெல்லாம் இன்பநிலை ஓங்க வேண்டும்.
எளிமையற்ற நாடாக மாற்ற வேண்டும்.
ஏழ்மையற உழைப்பினிலே ஏற்றம் வேண்டும்.
ஐயமற குடிக்கரசே ஆற்ற வேண்டும்.
ஒற்றுமையால் நாட்டினில்நாம் இருக்க வேண்டும்.
ஓங்குகின்ற கலைவளங்கள் பெருக்க வேண்டும்.
ஔடதமாய் நாம்உலகிற் காற்ற வேண்டும்.
கடமைதனைத் தவறாமல் செய்ய வேண்டும்.
காலம்வீண் போக்காமல் கருத வேண்டும்.
கிளைபோன்று அனைவருடன் பழக வேண்டும்.
கீர்த்திமிக நாட்டுஞ்செயல் போற்ற வேண்டும்.
குணமிகுந்த அறிஞருடன் கூட வேண்டும்.
கூடுகின்ற அவையில்வெற்றி கொள்ள வேண்டும்.
கெட்டாலும் புறம்கெடுக்கா தெண்ணம் வேண்டும்.
கேட்டவரின் துயர்களைய நாட்டம் வேண்டும்.
கைம்மாறு கருதாமல் உதவ வேண்டும்.
கொடுங்கோன்மை விடுத்தரசே ஆற்ற வேண்டும்.
கோவுக்கு உறுதுணையாய்க் குடிகள் வேண்டும்.
சரித்திரத்தில் நாட்டுயர்வைக் காட்ட வேண்டும்.
சாத்திரப்பொய் மார்க்கங்களை ஒதுக்க வேண்டும்.
சிந்தனையில் உலகறிவைத் தேக்க வேண்டும்.
சீர்திருத்தி மூடமையை அகற்ற வேண்டும்.
சுவைமிகுந்த பயன்சொல்லே சொல்ல வேண்டும்.
சூதாய்ந்து வெல்லுமதி படைத்தல் வேண்டும்.
செல்வம்வரின் அறத்தொழிலைப் பெருக்க வேண்டும்.
சேய்போன்று வாய்மையகம் வளர்க்க வேண்டும்.
சைவத்தின் உயர்வறிந்து போற்ற வேண்டும்.
சொல்லனைத்தும் செயல்வடிவில் காட்ட வேண்டும்.
சோம்பலின்றி எந்நாளும் உழைக்க வேண்டும்.
சௌந்தரமாய் ஊர்வடிவைச் செய்தல் வேண்டும்.
ஞாயத்தை எடுத்துரைக்கும் நெஞ்சம் வேண்டும்.
தன்கையால் உழைத்துண்டு வாழவேண்டும்.
தாழ்ந்தவரின் வாழ்வுயர ஆற்ற வேண்டும்.
திட்டமிட்டுச் சேமிப்புச் செய்தல் வேண்டும்.
தீண்டாமைக் கொடுமைதனை ஒழிக்க வேண்டும்.
துன்பம்வரின் துணிந்துமனம் ஆற்ற வேண்டும்.
தூய்மையிலே விளங்கிறையாம் போற்ற வேண்டும்.
தெய்வநிலை அன்பின்வழி காட்ட வேண்டும்.
தேட்டங்கொண்டு நல்லவைகள் கேட்க வேண்டும்.
தைப்பொங்கல் ஏர்த்தொழில்மேல் போற்ற வேண்டும்.
தொழிற்கூடம் நாடனைத்தும் பெருக்க வேண்டும்.
தோழமையில் அயல்நாட்டார் தொடர்பு வேண்டும்.
நன்மைதரும் கூத்திசையில் நாட்டம் வேண்டும்.
நாட்டுக்கே உழைத்திடவும் வேட்கை வேண்டும்.

நினைவனைத்தும் நன்றின்பால் செலுத்த வேண்டும்.
நீடுபுகழ் தோன்ற புவி வாழ வேண்டும்.
நுண்ணறிவில் பல புதுமை செய்தல் வேண்டும்.
நூல்நிலையம் பட்டிதொட்டி நிறுவவேண்டும்.
நெறியோடு அரியசெயல் புரிய வேண்டும்.
நேயமுடன் அகம்புறமும் வாழ வேண்டும்.
நைந்தபொருள் உண்ணுமல் தவிர்க்க வேண்டும்.
நொந்திடினும் மதிசிதையா திருக்க வேண்டும்.
நோய்எனவே தீமைகளை நினைக்கவேண்டும்.
பயிலுங்கலை இளமையிலே பயில வேண்டும்.
பார்புகழ அறிவோடு வாழ வேண்டும்.
பிழையின்றிப்புவிவாழ்ந்தபெருமைவேண்டும்.
பீழைதரும் வினைபொருதா திருக்கவேண்டும்.
புண்ணியங்கள் முடிந்த வகை செய்தல் வேண்டும்.
பூத்துவரும் புதுமைகளைக் காத்தல்வேண்டும்.
பெண்களுக்குத் தகும் உரிமை வழங்க வேண்டும்.
பேடியென வாழ்வதையே, தவிர்க்க வேண்டும்.
பைந்தமிழை உலகமெல்லாம் பரப்ப வேண்டும்.
பொதுநலத்தைப் பேணியிகம் வாழ வேண்டும்.
போற்றுதல்பின் இகழாமல் போற்ற வேண்டும்.
மடமைகளை ஒழித்திடவும் தியாகம் வேண்டும்.
மாற்ருரை மதித்தொழுகும் மரபு வேண்டும்.
மிகைப்படுத்தித் தனைப்புகழா தடக்கம் வேண்டும்.
மீட்டும்யாழ் குழலிசையில் தேற வேண்டும்.
முத்தெண்ணி வினைமேவி முடித்தல் வேண்டும்.
மூதாதை அறிவின்வழி நடக்க வேண்டும்.
மெலிந்தவரைத் துன்புறுத்தா திருக்க வேண்டும்.
மேன்மைதரும் செயல்புரிய எண்ண வேண்டும்.
மையம்நின்று வழக்கனைத்தும் தீர்க்க வேண்டும்.
மொழியினைத்தன் உயிராகக் காத்தல் வேண்டும்.
மோகவலை தவிர்த்துலகில் வாழ வேண்டும்.
மௌனமுடன் ஞானத்தை வளர்க்க வேண்டும்.
வறுமைவரின் போர்தொடுத்து விரட்ட வேண்டும்.
வாட்டமற நாட்டைவள மாக்க வேண்டும்.
விஞ்ஞான வளத்தில் மிக்க விளங்கவேண்டும்.
வீட்டுக்கோர் வருவாயின் விதியும் வேண்டும்.
வெறிபிடித்த சாதிமதம் விரட்ட வேண்டும்.
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்க வேண்டும்.
வைத்தியத்தை அறிவோடு வளர்க்க வேண்டும்.

மூளையோ மூளை

முழு வளர்ச்சி அடைந்துள்ள மனிதனின் மூளை மூன்று ராத்தல் எடையுள்ளது.

மனிதக் குரங்கு மூளையின் எடை 1¾ ராத்தல்.

நாய் மூளையின் எடை 6 அவுன்ஸ்.

பூனை மூளையின் நிறை ஒரு அவுன்ஸ்.

குதிரை மூளையின் நிறை ஒரு அவுன்ஸ்.

சாதாரண மனிதன் தன் மூளையின் எடை போல நாற்பது மடங்கு கனமுள்ளவனுக இருப்பான்.

ஒவ்வொரு 1000 ராத்தல் உடல் கனத்திற்கு ஒரு ராத்தல் கனமுள்ள மூளையினையுடைய விலங்கு எது தெரியுமா? யானை.

காடு என்னும் ஒருவகை மீன் உண்டு. அது தனது மூளையின் எடையைவிட 5000 மடங்கு எடையுள்ளது.

35 டன் எடையுள்ள பேருருவம் (Giant) கொண்ட ஒரு வகைப் பல்லியின் மூளையின் எடை என்ன தெரியுமா? ஒரே ஒரு ராத்தல்தான்.

மனிதன் மண்டை ஓட்டில் மூளையிருக்கும் பரப்பளவு 1,300 கன சென்டிமீட்டராகும்.

ஜாவாக் குரங்குமனிதனின் மண்டை ஓட்டில் மூளை இருக்கும் பரப்பளவு 900 கன சதுர செ.மீ. ஆகும்.


ஆராய்ச்சி
மணி
6
கதை: இளவல்
படம்: கோபண்ணு
டாக்டர் பொன்மலை வீட்டில்...
மாணிக்கம். நீ இங்கேயே இரு; நான் உள்ளே போறேன். டாக்டர் பொன்மலை என்னைக் கண்டவுடன் அதிர்ச்சி அடைந்துவோர்.
மணி நானும் உன்கூடவே வர்றேன்டா உன்னைக் கண்டு பொன்மலை பயப்பட அதை நானும் பார்க்கணும்.
வாவு! நான் சொல்றதைக் கேளுடா. நமக்குத் துணையா வந்திருக்கிற பொலீஸ்காரங்க நோயாளிங்க மாதிரி கீழே இருக்காங்க... நான் கூப்பிட்டவுடன் உள்ளே வா.
மாடியிலுள்ள பொன்மலையின் தனி அறைக்குள் மணி சென்றான்.
ஐய்யயோ டாக்டர்...
டாக்டர் பொன் மலையை யாரோ சுட்டு இருக்காங்க...!
யாரும் கிட்டே போகாதீங்க... நான் போன் பண்ணிட்டு வர்றேன்
மணிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடப் போகிறது என்று பயந்தேன். ஆனால் பொன்மலை கொலை செய்யப் பட்டுக்கிடக்கிறர். ஆல்ரைட்! நடக்கவேண்டியதைப் பாருங்க! மணி, மாணிக்கம் என்கூட வாங்க!
போலீஸ் அலுவலகத்தில்...
மணி, உன் வீரச்செயல்களை எல்லாருக்கும் எடுத்துச் சொல்லி பத்திரிகை நிருபர்களுக்கு முன்னல் உனக்குப் பரிசளிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்பொழுது வேண்டாம் என்று முடிவு செய்து விட்டேன்
ஏன் சார்?
பொன்மலை கொலை செய்யப் பட்டதால் உங்க ளுக்கும் ஆபத்து! அவரைக் கொலை செய்தவன் தெரியும் வரை நீங்கள் இங்கிருந்து போகக்கூடாது.
என் அக்காவைப் போய்ப் பார்க்கணும் சார். மாணிக்கத்தோட அக்கா போய் சொல்லியிருப்பாங்க...!
பள்ளிக்கூடம் எல்லாம் திறந்தாச்சு புது புத்தகங்கள் வாங்கணும் சார்!


கண்டிப்பான உத்தரவு நீங்கள் எங்கேயும் போகக் கூடாது!
தங்கம் வீட்டில்...
தங்கம், மணியும் மாணிக்கமும் வந்தார்களா?
அந்த வால்கள் எங்கே போகப் போகிறான? தானு வருதி ருவாங்க..!
அப்பாவிடம் மணி உயிரோடு இருப்ப தைச் சொல்லி விட்டேன். மணி எப்போ வருவான்னு கேட்டுக்கிட்டிருக் காங்க... நீ சொன் னியே போலீஸ்காரங்க ஒரு பெரிய திருட்டுக் கூட்டத்தை மணிமூலம் பிடிச்சிருக்காங்கன்னு
அதையும் அப்பாவிடம் சொன்னேன்
உஷ் சத்தமா பேசாதே கயல்விழி! பக்கத்து அறையிலே அப்பா இருக்கிறார். யாரிடமும் சொல்லக் கூடாதுன்னு சொல்லியிருக்கார்
தங்கம், மணியோட இந்த வேலைகள் எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை! இந்த வயசிலே இதெல்லாம் செய்யலாமா? நேற்று டாக்டர் பொன்மலையை யாரோ கொலை செஞ்சிருக்காங்க பாவம்!
உன் அப்பாவுக்கு மணி கவலை போயி டாக்டர் பொன்மலையைப் பற்றிக் கவலை வந்திருக்கும்
சீக்கிரம் கதவைச் சாத்துங்க... எங்களை போலீஸோ, வேறு யாரோ தேடிக்கிட்டு வந்தாலும் இல்லைன்னு சொல்லுங்க...
மணி, மாணிக்கம், என்னடா செஞ்சிட்டு இப்படி ஓடி வர்றீங்க...?

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள்

வேலை வாய்ப்பு விளம்பரங்கள்.

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி 12—7—1972-ம் தேதி மாலை 3.00 மணிவரையில் கோயம்புத்தூர் ரத்தின சபாபதிபுரம் வெங்கட்ரமண சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப் படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

	வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	கோட்டம்.	முன்வைப்புத் தொகை.
	(1)	(2)	(3)
			ரூ.
1	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எ. மாதிரி கட்டடம்	கோயம்புத்தூர்	13,450
2	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். பி. மாதிரி கட்டடம்	ஷை	940
3	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல் சி-1 மாதிரி கட்டடம்	ஷை	700
4	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். சி-2 மாதிரி கட்டடம்	ஷை	700
5	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். டி. மாதிரி கட்டடம்	ஷை	550
6	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். இ-1 மாதிரி கட்டடம்	ஷை	571
7	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். இ-2 மாதிரி கட்டடம்	ஷை	571
8	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எப். மாதிரி கட்டடம்	ஷை	700
9	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜி-1 மாதிரி கட்டடம்	ஷை	600
10	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜி-2 மாதிரி கட்டடம்	ஷை	600
11	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்துக் கட்டுதல். எச். மாதிரி கட்டடம்	ஷை	525
12	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஐ. மாதிரி கட்டடம்	ஷை	385
13	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜே-1 மாதிரி கட்டடம்	ஷை	715
14	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜே-2 மாதிரி கட்டடம்	ஷை	715
15	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜே-3 மாதிரி கட்டடம்	ஷை	715
16	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். கே-1 மாதிரி கட்டடம்	ஷை	870
17	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். கே-2 மாதிரி கட்டடம்	ஷை	870
18	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். கே-3 மாதிரி கட்டடம்	ஷை	915
19	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எல் மாதிரி கட்டடம்	ஷை	660
20	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எம்.1 மாதிரி கட்டடம்	ஷை	170
21	வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எம்-2 மாதிரி கட்டடம்	ஷை	170

ஒப்பந்தங்கள் நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்த கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கு ரூபாய் 10 உடன் விற்பனை வரியும் செலுத்தி 1—7—1972 முதல் 11—7—1972 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்த கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்குக்காரண்டி முன்வைப்புத் தொகையாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர ரிசர்வு பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிக் கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். தவறினால் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர், (நெ. கி. ப.).
கோயம்புத்தூர்-2.

இரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2.
(த.21)

பயிற்சி

மீனவர் பயிற்சி நிலையம், தூத்துக்குடி

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மீனவர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சிகள் 24-7-1972 முதல் (10 மாத காலம்) அளிக்கப் படும்.

1. நவீன மீன்பிடி முறை.
2. சிறுதரக் கம்மியர் பயிற்சி (ஜூனியர் மெக்கானிக் பயிற்சி).

நவீன மீன்பிடி பயிற்சிக்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் மட்டும் தான் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 35 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். விண்ணப்பங்கள் 10-7-1972 மாலை 5 மணி வரை மீன்துறை உதவி இயக்குநர் மீனவர் பயிற்சி நிலையம் தூத்துக்குடி-1, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களை மேற்கூறிய உதவி இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. சே. ஆரோக்கியசுவாமி,
மீன் துறை இயக்குநர், தூத்துக்குடி.

(த.4)

ஏல விளம்பரம்

வடஆர்க்காடு மாவட்டத்தில் கள்ளு சில்லரை விற்பனைக் கடைகள்

வடார்க்காடு மாவட்டத்தில் கள்ளு சில்லரை விற்பனைக் கடைகளின் 1—9—1972 முதல் 31—8—1973 வரைக்கான 12 மாதத்திய பாத்தியதையை சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சித் தலைவராலோ (அல்லது) நியமிக்கப்பட்ட இதர அதிகாரியாலோ சம்மந்தப்பட்ட தாலுக்கா அலுவலகங்களில் கீழே கொடுக்கப்பட்ட தேதிகளில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

இராணிப்பேட்டை கோட்டம்

1—7—1972	காலை 9 மணி	வாலாஜா தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
2—7—1972	காலை 9 மணி	,,
4—7—1972	காலை 9 மணி	அரக்கோணம் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
5—7—1972	காலை 9 மணி	,,
6—7—1972	காலை 9 மணி	வேலூர் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
7—7—1972	காலை 9 மணி	,,
10—7—1972	காலை 9 மணி	ஆர்க்காடு தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.

திருப்பத்தூர் கோட்டம்

1—7—1972	காலை 9 மணி	திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
2—7—1972	காலை 9 மணி	,,
4—7—1972	காலை 9 மணி	குடியாத்தம் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
5—7—1972	காலை 9 மணி	,,
8—7—1972	காலை 9 மணி	வாணியம்பாடி தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
9—7—1972	காலை 9 மணி	,,

திருவண்ணாமலை கோட்டம்

2—7—1972	காலை 9 மணி	திருவண்ணாமலை தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
3—7—1972	காலை 9 மணி	,,
6—7—1972	காலை 9 மணி	செங்கம் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
7—7—1972	காலை 9 மணி	,,
8—7—1972	காலை 9 மணி	போளூர் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
9—7—1972	காலை 9 மணி	,,

செய்யாறு கோட்டம்

3—7—1972	காலை 9 மணி	செய்யாறு தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
4—7—1972	காலை 9 மணி	,,
5—7—1972	காலை 9 மணி	ஆரணி தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
6—7—1972	காலை 9 மணி	வந்தவாசி தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள்.
7—7—1972	காலை 9 மணி	,,

2. ஏல நிபந்தனைகள், மற்றும் ஒவ்வொரு தேதியிலும் ஏலம் போடப்படும் கடைகள், கடைகள் ஏற்படுத்தப்படும் இடங்கள் முதலிய விவரங்களை வேலை நாட்களில் காலை 10–30 மணி முதல் மாலை 5–00 மணி வரை வேலூர் (கோட்டை) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட கோட்டாட்சித் தலைவர் அலுவலகங்களிலும், தாலுக்கா அலுவலகங்களிலும் தக்க கட்டணம் செலுத்தி ஏலம் கேட்க விரும்பும் நபர்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த விவரங்கள் மேற்கண்ட அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளிலும், சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளிலும் விளம்பரம் செய்யப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

(த. 1)

1972–73-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் அமைக்கவிருக்கும் கள் மற்றும் சாராயக் கடைகள்

1—9—1972 முதல் 31—8—1973 முடியும் காலத்திற்கு

தருமபுரி மாவட்டத்தில் அமைக்கவிருக்கும் கள்ளுக்கடைகள் மற்றும் சாராய சில்லரை விற்பனைக் கடைகளை வருகிற 1—9—1972 முதல் 31—8—1973-ம் நாளுடன் முடிவடையும் பன்னிரண்டு மாதத்திற்கான காலத்தில் நடத்தும் உரிமையை சம்பந்தப்பட்ட தாலூகா அலுவலகங்களில், கீழ்க்கண்ட தேதிகளில், சம்பந்தப்பட்ட தாலூகாவின் பெயருக்கெதிரில் குறிக்கப்பட்டுள்ள அலுவலரால் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

கள்ளுக் கடைகள்.

தாலூகாவின் பெயர்.	ஏலம் விடப்படும் நாள்	ஏலம் விடப்படும் கடைகளின் எண்கள்.	ஏலம் விடும் அலுவலர்.
1 தருமபுரி	1—7—1972	40 (க.க. எண். 1 முதல் 40 வரையில்)	கோட்டாட்சியர், தருமபுரி.
	2—7—1972	28 (க.க. எண் 41 முதல் 68 வரையில்)	ஷை
2 கிருஷ்ணகிரி	3—7—1972	40 (க.க. எண் 1 முதல் 40 வரையில்)	கோட்டாட்சியர், ஒசூர்.
	4—7—1972	40 (க.க. எண் 41 முதல் 80 வரை)	ஷை
3 அரூர்	5—7—1972	43 (அனைத்து கள்ளுக்கடைகளும்)	கோட்டாட்சியர், தருமபுரி.
4 ஒசூர்	6—7—1972	44 (அனைத்து கள்ளுக்கடைகளும்)	கோட்டாட்சியர், ஒசூர்.
5 ஊத்தங்கரை	7—7—1972	24 (அனைத்து கள்ளுக்கடைகளும்)	கோட்டாட்சியர், தருமபுரி.
6 டெங்கணிக்கோட்டை	8—7—1972	30 (க. க. எண் 1 முதல் 30 வரை)	கோட்டாட்சியர், ஒசூர்.
7 பாலக்கோடு	9—7—1972	36 (அனைத்து கள்ளுக்கடைகளும்)	கோட்டாட்சியர், தருமபுரி.
8 டெங்கணிக்கோட்டை	10—7—1972	20 (க.க. 31 முதல் 50 வரை)	கோட்டாட்சியர், ஒசூர்.

சாராய சில்லரை விற்பனைக் கடைகள்

1 தருமபுரி	11—7—1972	44 (அனைத்து சாராயக் கடைகளும்)	கோட்டாட்சியர், தருமபுரி.
2 கிருஷ்ணகிரி	12—7—1972	20 (அனைத்து சாராயக்கடைகளும்)	கோட்டாட்சியாயர், ஒசூர்.
3 அரூர்	13—7—1972	35 (அனைத்து சாராயக் கடைகளும்)	கோட்டாட்சியர், தருமபுரி.
4 ஒசூர்	14—7—1972	24 (அனைத்து சாராயக் கடைகளும்)	கோட்டாட்சியர், ஒசூர்.
5 ஊத்தங்கரை	15—7—1972	20 (அனைத்து சாராயக் கடைகளும்)	கோட்டாட்சியர், தருமபுரி.
6 டெங்கணிக்கோட்டை	16—7—1972	33 (அனைத்து சாராயக் கடைகளும்)	கோட்டாட்சியர், ஒசூர்.
7 பாலக்கோடு	17—7—1972	21 (அனைத்து சாராயக் கடைகளும்)	கோட்டாட்சியர், தருமபுரி.

(ஏலம் மேற்கூறிய நாட்களில் காலை 9 மணிக்குத் துவக்கப்படும்)

ஏல விதிமுறைகள், ஏலம் விடப்படும் கள்ளுக்கடைகள் மற்றும் சாராய சில்லரை விற்பனைக்கடைகள் ஆகியவற்றின், பட்டியல் ஆகிய விவரங்கள் தருமபுரி மாவட்ட ஆட்சியர், கோட்ட ஆட்சியர்கள், அனைத்து தாலூகா, துணைத் தாலூகா மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் உள்ள செய்திப் பலகைகளில் ஒட்டி பிரசுரம் செய்யப்படும். ஏல அறிவிப்பின் நகல்களை அதற்கான கிரயத் தொகையைச் செலுத்தி மேற்கூறிய அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ரா. பத்மநாபன்,
மாவட்ட ஆட்சியர்.

(த. 6)

தென் ஆர்க்காடு மாவட்டம்

இதனால் எல்லோருக்கும் தெரிவிப்பது யாதெனில், தென்ஆர்காடு மாவட்டம் அடியிற்கண்ட தாலுக்காவிலுள்ள சாராயக் கடைகளை 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு 31-ம் தேதி வரையில் ஓராண்டு காலத்துக்கு விற்பனை செய்யும் உரிமையை அந்தந்த தாலுக்காக்களுக்கு எதிரில் குறிப்பிட்டிருக்கும் தேதிகளில் பகல் 10 மணிக்கு அந்தந்த தாலுக்கா அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி அவர்களால் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். இது சம்பந்தப்பட்ட மற்ற விவரங்களை கலெக்டர் அலுவலகத்திலோ, ரெவின்யூ டிவிஷனல் அலுவலகத்திலோ, தாலுக்கா அலுவலகத்திலோ சென்று தெரிந்து கொள்ளலாம்.

தாலுக்கா.	ஏலத்தேதி.	கடைகளின் வரிசை எண் விவரம்.
1 திண்டிவனம்.	17—7—1972 13—7—1972	1 முதல் 28 முடிய. 29 முதல் 53 வரை.
2 கள்ளக்குறிச்சி	17—7—1972 18—7—1972	1 முதல் 34 வரை. 35 முதல் 68 வரை.
3 செஞ்சி	19—7—1972 20—7—1972	1 முதல் 22 வரை. 23 முதல் 43 வரை.
4 விருத்தாசலம்	19—7—1972 20—7—1972	1 முதல் 30 வரை. 31 முதல் 60 முடிய.
5 திருக்கோவிலூர்	21—7—1972 22—7—1972	1 முதல் 34 முடிய. 35 முதல் 68 முடிய.
6 விழுப்புரம்	24—7—1972 25—7—1972	1 முதல் 25 முடிய. 26 முதல் 50 முடிய.
7 கடலூர்	26—7—1972 27—7—1972	1 முதல் 40 முடிய. 41 முதல் 79 முடிய.
8 சிதம்பரம்	28—7—1972 29—7—1972	1 முதல் 34 முடிய. 35 முதல் 67 முடிய.

ரா. சண்முகசிகாமணி, ஐ. ஏ. எஸ்.,
மாவட்ட ஆட்சியாளர்,
தென்ஆர்க்காடு மாவட்டம், கடலூர்.

(த.24)

ஒப்பந்தப் புள்ளி

தருமபுரி நகராட்சி

கீழ்க்கண்ட நகராட்சி வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ் கையொப்பமிட்டவரால் 12—7—1972-ம் தேதி புதன் கிழமை மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகிறது. இதர விவரங்களை நேரிலோ (அல்லது) தபாலிலோ கோரிப் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் பெயர்—சாலை வினாயகர் கோவில் வீதியில் நகராட்சி துவக்கப்பள்ளிக்கு முன்னால் 4 கடைகள் கட்டுதல் (தெற்குப் புறம்).

மதிப்பீட்டுத் தொகை—ரூ. 14,500.

செலுத்த வேண்டிய காப்பீட்டு தொகை—மதிப்பீட்டில் 5 சதவீதம்.

எஸ். காளியப்பன், எம்.ஏ.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தருமபுரி.

(த.10)

ஏல விளம்பரம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உள்நாட்டுச் சாராயம் விற்பனை செய்யும் கடைகள்

1972-73-க்குரிய வருடத்தில் (1-9-1972 முதல் 31-8-1973 வரை) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 11 வட்டத்திலும் 2 வது வட்டத்திற்கு ஏற்படவிருக்கும் 545 கள்ளுக்கடைகளும், 275 சாராயக் கடைகளும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஜாபிதாக்களின்படி அந்தந்த வட்ட, துணை வட்ட தலைமை அலுவலகங்களில் குறிப்பிட்டுள்ள நாட்களில் காலை 10 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் மாதாந்திர இஸ்து அடிப்படையில் 12 மாத காலத்திற்கு விடப்படும்.

2. மதுத்துறை ஆணையரால் 5-6-1972-ம் தேதியில் வெளியிடப்பட்டு 6-6-1972-ல் தமிழ்நாடு அரசின் விசேட கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட அறிக்கையில் கண்டுள்ள விதிகளின்படியும், தமிழக அரசினரால் அவ்வப்போது வெளியிடப்படும் உத்திரவுகளின் பேரிலும் ஏலம் உறுதி செய்வது அல்லது ரத்துச் செய்வது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

3. ஏல கண்டிஷன்களும், ஏலம் விடப்படும் கடைகளின் விவரங்கள் அடங்கிய அச்சிடப்பட்ட விளம்பரம் எல்லா டிவிஷனல் ஆபீஸ், தாலுகா ஆபீஸ், துணைத் தாசில்தார் ஆபீஸ்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

கள்ளுக்கடைகள்

வரிசை எண்ணும் தாலுகாவின் பெயரும். (1)	ஏலம் நடக்கும் தேதி. (2)	நேரம் காலை (3)	ஏலம் விடப்படும் கடைகள். (4)	ஏலம் நடத்தும் இடம். (5)	ஏலம் நடத்தும் அதிகாரியின் பெயர். (6)
1. திருநெல்வேலி	1—7—1972 சனிக்கிழமை.	10-00	28	தாலுகா ஆபீஸ், திருநெல்வேலி.	கோட்டாட்சித் தலைவர், திருநெல்வேலி.
,,	3—7—1972 திங்கட்கிழமை.	10-00	28	ஷை	ஷை
2. தென்காசி	4 —7—1972 செவ்வாய்க்கிழமை.	10-00	30	தாலுகா ஆபீஸ், தென்காசி.	ஷை
,,	5—7—1972 புதன்கிழமை.	10-00	22	ஷை	ஷை
3. செங்கோட்டை	6—7—1972 வியாழக்கிழமை.	10-00	14	தாலுகா ஆபீஸ், செங்கோட்டை.	ஷை
4. அம்பாசமுத்திரம்	1—7—1972 சனிக்கிழமை.	10-00	31	தாலுகா ஆபீஸ், அம்பாசமுத்திரம்.	கோட்டாட்சித் தலைவர், சேர்மாதேவி.
,,	3—7—1972 திங்கட்கிழமை.	10-00	30	ஷை	ஷை
5. நாங்குனேரி	4—7—1972 செவ்வாய்க்கிழமை.	10-00	36	தாலுகா ஆபீஸ், நாங்குனேரி.	ஷை
,,	5—7—1972 புதன்கிழமை.	10-00	36	ஷை	ஷை
6. சங்கரன்கோவில்	1—7—1972 சனிக்கிழமை.	10-00	36	தாலுகா ஆபீஸ், சங்கரன்கோவில்.	கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி.
7. சிவகிரி	3—7—1972 திங்கட்கிழமை.	10-00	20	டிப்டி தாசில்தார், ஆபீஸ், சிவகிரி.	ஷை
8. விளாத்திகுளம்	5—7—1972 புதன்கிழமை.	10-00	31	தாலுகா ஆபீஸ், விளாத்திகுளம்.	ஷை
9. ஓட்டப்பிடாரம்	6—7—1972 வியாழக்கிழமை.	10-00	23	டிப்டி தாசில்தார் ஆபீஸ், ஓட்டப்பிடாரம்.	ஷை
10. கோவில்பட்டி	8—7—1972 சனிக்கிழமை.	10-00	40	தாலுகா ஆபீஸ், கோவில்பட்டி.	ஷை
11. தூத்துக்குடி	1—7—1972 சனிக்கிழமை.	10-00	19	தாலுகா ஆபீஸ், தூத்துக்குடி.	உதவிக் கலெக்டர், தூத்துக்குடி.
12. ஸ்ரீவைகுண்டம்	4—7—1972 செவ்வாய்க்கிழமை.	10-00	43	தாலுகா ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.	ஷை
13. திருச்செந்தூர்	6—7—1972 வியாழக்கிழமை.	10-00	25	தாலுகா ஆபீஸ், திருசசெந்தூர்.	ஷை
14. ,,	7—7—1972 வெள்ளிக்கிழமை.	10-00	28	ஷை	ஷை
15. ,,	8—7—1972 சனிக்கிழமை.	10-00	25	ஷை	ஷை

சாராயக் கடைகள்

வரிசை எண்ணும், தாலுகாவின் பெயரும். (1)	ஏலம் நடக்கும் தேதி. (2)	நேரம். காலை (3)	ஏலம் விடப்படும் கடைகள். (4)	ஏலம் நடத்தும் இடம். (5)	ஏலம் நடத்தும் அதிகாரியின் பெயர். (6)
1. திருநெல்வேலி	11—7—1972 செவ்வாய்க்கிழமை.	10-00	35	தாலுகா ஆபீஸ், திருநெல்வேலி.	கோட்டாட்சித் தலைவர், திருநெல்வேலி.
2. தென்காசி	13—7—1972 வியாழக்கிழமை.	10-00	25	தாலுகா ஆபீஸ், தென்காசி.	ஷை
3. செங்கோட்டை	15—7—1972 சனிக்கிழமை.	10-00	6	தாலுகா ஆபீஸ், செங்கோட்டை.	ஷை
4. அம்பாசமுத்திரம்	11—7—1972 செவ்வாய்க்கிழமை.	10-00	19	தாலுகா ஆபீஸ், அம்பாசமுத்திரம்.	கோட்டாட்சித் தலைவர், சேர்மாதேவி.
5. நாங்குனேரி	13—7—1972 வியாழக்கிழமை.	10-00	31	தாலுகா ஆபீஸ், நாங்குனேரி.	ஷை
6. சங்கரன்கோவில்	11—7—1972 செவ்வாய்க்கிழமை.	10-00	23	தாலுகா ஆபீஸ், சங்கரன்கோவில்.	கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி.
7. சிவகிரி	13—7—1972 வியாழக்கிழமை.	10-00	10	டிப்டி தாசில்தார் ஆபீஸ், சிவகிரி .	ஷை
8. கோவில்பட்டி	15—7—1972 சனிக்கிழமை.	10-00	21	தாலுகா ஆபீஸ், கோவில்பட்டி.	ஷை
9. விளாத்திகுளம்	17—7—1972 திங்கட்கிழமை.	10-00	19	தாலுகா ஆபீஸ், விளாத்திகுளம்.	ஷை
10. ஓட்டப்பிடாரம்	19—7—1972 புதன்கிழமை.	10-00	20	டிப்டி தாசில்தார் ஆபீஸ், ஓட்டப்பிடாரம்.	ஷை
11. தூத்துக்குடி	11—7—1972 செவ்வாய்க்கிழமை.	10-00	11	தாலுகா ஆபீஸ், தூத்துக்குடி.	உதவிக் கலெக்டர், தூத்துக்குடி.
12. ஸ்ரீவைகுண்டம்	13—7—1972 வியாழக்கிழமை.	10-00	28	தாலுகா ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.	ஷை
13. திருச்செந்தூர்	15—7—1972 சனிக்கிழமை.	10-00	27	தாலுகா ஆபீஸ், திருச்செந்தூர்.	ஷை

சி. ராமச்சந்திரன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த.15)

அறிக்கை

ஊராட்சி ஒன்றியம், நிலக்கோட்டை

மகளிர் மன்றங்களின் பெயர்கள்.

1. திருமதி வசந்தா, கண்வீனர், மகளிர் மன்றம் நிலக்கோட்டை (அஞ்சல்).
2. திருமதி ஏ. அமிர்தம், கண்வீனர் மகளிர் மன்றம், முருகத்தூரான்பட்டி, மாலைய கவுண்டன்பட்டி (அஞ்சல்).
3. திருமதி ஓ. கருப்பாயி, கண்வீனர் மகளிர் மன்றம், பள்ளபட்டி (அஞ்சல்).
4. திருமதி மீனும்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், முசுவனூத்து (அஞ்சல்).
5. திருமதி எலுசம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், சாண்டலர்புரம், பள்ளபட்டி (அஞ்சல்).
6. திருமதி அன்னகாமு, கண்வீனர் மகளிர் மன்றம், குண்டலப்பட்டி, சிறுநாயக்கன்பட்டி (அஞ்சல்).
7. திருமதி ராக்கு சந்தானம், கண்வீனர் மகளிர் மன்றம், முத்தாலபுரம், விளாம்பட்டி.
8. திருமதி கருப்பாயி அம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், விளாம்பட்டி (அஞ்சல்).
9. திருமதி விமலா, கண்வீனர், மகளிர் மன்றம் மட்டப்பாறை, ராமராஜபுரம் (அஞ்சல்).
10. திருமதி சீதாம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம் ராமராஜபுரம் (அஞ்சல்).
11. திருமதி எஸ். நவமணி, கண்வீனர், மகளிர் மன்றம், கல்லடிப்பட்டி, பள்ளபட்டி (அஞ்சல்).
12. திருமதி பேச்சியம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், சிவஞானபுரம், குல்லிசெட்டிபட்டி (அஞ்சல்).
13. திருமதி பாக்கியம், கண்வீனர் மகளிர் மன்றம், மேட்டுப்பட்டி, அணைப்பட்டி (அஞ்சல்).
14. திருமதி இன்னேசியம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், குல்லிசெட்டிபட்டி, குல்லிசெட்டிபட்டி (அஞ்சல்).
15. திருமதி திருமக்காள், கண்வீனர், மகளிர் மன்றம், சிறுநாயக்கன்பட்டி (அஞ்சல்).
16. திருமதி சரஸ்வதி, கண்வீனர் மகளிர் மன்றம், வீலிநாயக்கன்பட்டி, நிலக்கோட்டை (அஞ்சல்).
17. திருமதி தமிழரசி, கண்வீனர் மகளிர் மன்றம், தும்மலப்பட்டி, நூத்தலாபுரம் (அஞ்சல்.)
18. திருமதி செல்லத்தாயி, கண்வீனர் மகளிர் மன்றம், கொக்குப்பட்டி, கோடாங்கிநாயக்கன்பட்டி (அஞ்சல்).
19. திருமதி முத்துராக்கு, கண்வீனர் மகளிர் மன்றம், குறும்பபட்டி, நிலக்கோட்டை (அஞ்சல்).
20. திருமதி தவமணி, மகளிர் மன்றம் கண்வீனர், பச்சமலையான்கோட்டை, பச்சமலையான்கோட்டை (அஞ்சல்).
21. திருமதி கமலம், கண்வீனர் மகளிர் மன்றம், அம்மையநாயக்கனூர், அம்மையநாயக்கனூர் (அஞ்சல்).
22. திருமதி டி. சரஸ்வதி, கண்வீனர், மகளிர் மன்றம், மைக்கேல்பாளையம் (அஞ்சல்).
23. திருமதி சின்னம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், சிரங்கம்பட்டி, நிலக்கோட்டை (அஞ்சல்).
24. திருமதி மூக்கம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், உச்சணம்பட்டி, நரியூத்து (அஞ்சல்).
25. திருமதி சீனியம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், மாவுத்தம்பட்டி, கொடை ரோடு (அஞ்சல்).
26. திருமதி மேரி, கண்வீனர் மகளிர் மன்றம், அம்மாப்பட்டி, கொடைரோடு (அஞ்சல்).
27. திருமதி ஏ. எஸ். செல்லத்தாய், கண்வீனர், மகளிர் மன்றம், அழகம்பட்டி, ஜம்புதுரைக்கோட்டை (அஞ்சல்).
28. திருமதி வீரம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், சிலுக்குவார்பட்டி, சிலுக்குவார்பட்டி (அஞ்சல்).
29. திருமதி ராஜாத்தி, கண்வீனர், மகளிர் மன்றம், சக்கயநாயக்கனூர், ஜம்புதுரைக்கோட்டை (அஞ்சல்).
30. திருமதி உமா, கண்வீனர், மகளிர் மன்றம், செம்பட்டி, செம்பட்டி (அஞ்சல்).

ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம், நிலக்கோட்டை

(த. 9)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1972-73-ம் ஆண்டுக்கு (1—9—72 முதல் 31—8—73 முடிய உள்ள காலத்துக்கு) கள் இறக்கும் உரிமையும் சேர்த்து கள்ளுக்கடைகளும், சாராயக்கடைகளும் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களில் கீழே கண்டுள்ளபடி நிர்ணயித்துள்ள தேதிகளில் ஏலம் விடப்படும். குறிப்பிட்ட தேதிகளில் ஏலம் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படும். ஏலத்தில் நிபந்தனைகளும் தாலுகாவாரியாக உள்ள கள், சாராயக் கடைகளின் பட்டியலும், புத்தக வடிவத்தில் கலெக்டர் அலுவலகம், கோட்டாட்சியாளர் அலுவலகம், மற்றும் தாலுகா அலுவலகம் ஆகிய இடங்களில் உரிய கிரயம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

கள்ளுக் கடைகள்

தாலுகாவின் பெயர். (1)	ஏலத்தேதி. (2)	ஏலம் விடப்படும் கடைகள். (3)	ஏலம் நடக்கும் இடம். (4)	ஏல விற்பனை அலுவலர். (5)
1 திருச்சிராப்பள்ளி	1—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், திருச்சி.	கோட்டாட்சியாளர், திருச்சி.
	3—7—72 ..	31 முதல் 60 ..	ஷை	ஷை
	4—7—72 ..	61 முதல் 84 ..	ஷை	ஷை
2 கரூர்	5—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், கரூர் ..	உதவி கலெக்டர், கரூர்.
	6—7—72 ..	31 முதல் 60 ..	ஷை	ஷை
	7—7—72 ..	61 முதல் 84 ..	ஷை	ஷை
3 குளித்தலை	10—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், குளித்தலை.	ஷை
	11—7—72 ..	31 முதல் 62 ..	ஷை	ஷை
4 மணப்பாறை	12—7—72 ..	1 முதல் 25 ..	தாலுகா அலுவலகம், மணப்பாறை.	ஷை
	13—7—72 ..	26 முதல் 43 ..	ஷை	ஷை
5 உடையார்பாளையம் ..	1—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், ஜெயங்கொண்டம்.	கோட்டாட்சியாளர், அரியலூர்.
	3—7—72 ..	31 முதல் 62 ..	ஷை	ஷை
6 அரியலூர்	4—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், அரியலூர்.	ஷை
	5—7—72 ..	31 முதல் 55 ..	ஷை	ஷை
7 பெரம்பலூர்	6—7—72 ..	1 முதல் 40 ..	தாலுகா அலுவலகம், பெரம்பலூர்.	ஷை
	7—7—72 ..	41 முதல் 75 ..	ஷை	ஷை
8 லால்குடி	6—7—72 ..	1 முதல் 40 ..	தாலுகா அலுவலகம், லால்குடி.	கோட்டாட்சியாளர், முசிறி.
	7—7—72 ..	41 முதல் 78 ..	ஷை	ஷை
9 துறையூர்	10—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், துறையூர்.	ஷை
	11—7—72 ..	31 முதல் 56 ..	ஷை	ஷை
10 முசிறி	12—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், முசிறி ..	ஷை
	13—7—72 ..	31 முதல் 59 ..	ஷை	ஷை
11 திருமயம்	1—7—72 ..	1 முதல் 35 ..	தாலுகா அலுவலகம், திருமயம்.	துணை கலெக்டர், புதுக்கோட்டை.
	3—7—72 ..	36 முதல் 65 ..	ஷை	ஷை
12 ஆலங்குடி	4—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், ஆலங்குடி.	ஷை
	5—7—72 ..	31 முதல் 63 ..	ஷை	ஷை
13 குளத்தூர்	10—7—72 ..	1 முதல் 20 ..	தாலுகா அலுவலகம், குளத்தூர்—கீரனூர்.	ஷை
	11—7—72 ..	21 முதல் 43 ..	ஷை	ஷை

சாராயக் கடைகள்

1 திருச்சிராப்பள்ளி	14—7—72 ..	1 முதல் 30 ..	தாலுகா அலுவலகம், திருச்சி ..	கோட்டாட்சியாளர், திருச்சி.
	15—7—72 ..	31 முதல் 55 ..	ஷை	ஷை
2 லால்குடி	17—7—72 ..	1 முதல் 18 ..	தாலுகா அலுவலகம், லால்குடி.	கோட்டாட்சியாளர், முசிறி.
3 முசிறி	18—7—72 ..	1 முதல் 25 ..	தாலுகா அலுவலகம், முசிறி ..	ஷை
4 துறையூர்	19—7—72 ..	1 முதல் 21 ..	தாலுகா அலுவலகம், துறையூர்.	ஷை
5 பெரம்பலூர்	20—7—72 ..	1 முதல் 26 ..	தாலுகா அலுவலகம், பெரம்பலூர்.	கோட்டாட்சியாளர், அரியலூர்.
6 உடையார்பாளையம் ..	14—7—72 ..	1 முதல் 22 ..	தாலுகா அலுவலகம், ஜெயங்கொண்டம்.	ஷை
7 அரியலூர்	15—7—72 ..	1 முதல் 25 ..	தாலுகா அலுவலகம், அரியலூர்.	ஷை
8 கரூர்	17—7—72 ..	1 முதல் 23 ..	தாலுகா அலுவலகம், கரூர் ..	உதவி கலெக்டர், கரூர்.
9 மணப்பாறை	20—7—72 ..	1 முதல் 28 ..	தாலுகா அலுவலகம், மணப்பாறை.	ஷை
10 குளித்தலை	21—7—72 ..	1 முதல் 22 ..	தாலுகா அலுவலகம், குளித்தலை.	ஷை
11 திருமயம்	18—7—72 ..	1 முதல் 23 ..	தாலுகா அலுவலகம், திருமயம்.	துணை கலெக்டர், புதுக்கோட்டை.
12 ஆலங்குடி	19—7—72 ..	1 முதல் 24 ..	தாலுகா அலுவலகம், ஆலங்குடி.	ஷை
13 குளத்தூர்	21—7—72 ..	1 முதல் 25 ..	தாலுகா அலுவலகம், குளத்தூர்—கீரனூர்.	ஷை

தி. பா. பாரதி,
மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த. 14)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை இராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 12–7–1972 புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : திருச்சி வடிகால் திட்டம்— இரண்டாம் நிலை— பகுதி 2— சுட்ட மண், வார்ப்பிரும்பு குழாய்களையும் தனி உறுப்புகளையும் பதித்து இணைத்தல், பிற அமைப்புகளையும் பொருத்துதல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 3,900 (ரூபாய் மூவாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்).

இத் தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது, ஒரு வடிவில் திருச்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திருச்சி செயற்கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி.15, தில்லைநகர் மெயின்ரோடு, திருச்சி-18 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 10-7-1972 திங்கட் கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர் (த.கு.வ.வா.),
செயல் வட்டம், மதுரை-2.

(த. 11)

பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணாசாலை, சென்னை-2.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மேலாளர் (தொழில் நுட்பம்) பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணாசாலை, சென்னை-2-ல் உள்ள மேலாளர் (தொழில் நுட்பம்) அவர்கள் அலுவலகத்தில் 2–8–1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்.	முன் வைப்புத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பாரங்கள் விற்பனைவரி உட்பட. ரூ.	முடிக்கும் காலம்.
சென்னை-சைதாப்பேட்டையிலுள்ள துணை பணிமனை, மற்றும் பேருந்து நிலையத்தில் தார் சாலை, மற்றும் முள் கம்பி வேலி அமைத்தல்.	2,625	15·15	ஒரு மாதம்.

ஒப்பந்தம் :—

ஒப்பந்தங்கள் மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் மேற்கூறிய அதே தேதியில் 2–8–1972 மணி 3-15-க்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரைப் படங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2-ல் உள்ள அலுவலகத்தில் மேற்கூறிய தொகையைக் கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (10–7–1972 முதல் 1–8–1972 வரை) எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை, "நிதி நிலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரி" பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2. அவர்களுக்குச் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

பி. ஆர். சுப்பிரமணியம்,
மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்கு
வரத்துக் கழகம், சென்னை-2.

(த.16)

பொதுப்பணித் துறை

குடும்ப நல திட்ட கட்டட கோட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர்—வடார்க்காடு மாவட்டம்—ஆலங்காயம் கிராமத்தில் உள்ள ஆரம்பச சுகாதார நிலையத்திற்குக் குடி இருப்பு கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக வேலூர் குடும்ப நல திட்ட கட்டட கோட்டம் செயற் பொறியாளர் அவர்களால் 7–7–1972 அன்று மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வேலூர் குடும்ப நல திட்ட கட்டட கோட்டம் செயற் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 2,700 (ரூபாய் இரண்டு ஆயிரத்து எழுநூறு மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

முடிக்க வேண்டிய காலம் ஒப்பந்தப்புள்ளி—5 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வேலூர் குடும்ப நல திட்ட கட்டட கோட்டம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 20—6—1972 தேதி முதல் 5—7—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P.W.D. remittances III other remittances என்ற தலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, குடும்ப நல திட்ட கட்டட கோட்டம், வேலூர் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales tax (b) Receipts under State Sales tax Act—General sales tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசீய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற்பொறியாளர், பொ.ப.து. குடும்ப நல திட்ட கட்டட கோட்டம், வேலூர் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்பந்தத்துடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத்தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப் பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

எம். என். சங்கரன்,
செயற் பொறியாளர், பொ.ப.து., குடும்ப
நல திட்ட கட்டட கோட்டம், வேலூர்-1,
வட ஆர்க்காடு.

(த. 19)

கதர் கைத்தொழில் அங்காடி
குறளகம்
சென்னை-1
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
வெளிநாட்டார் போற்றும் வியன் பொருள் கலைக்கூடம்
20461
20462
20463
20464
20465
சந்தர்...

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1—9—1972-ம் தேதி முதல் 31—8—1973-ம் தேதி முடிய ஒரு வருடத்துக்குகள், சாராயக் கடைகள் ஏலம் விடுவதற்கான விளம்பரம்

தமிழ்நாடு கெஜட்டில் பிரசுரமாயுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, அடியிற்கண்ட திட்டத்தின்படி, அந்தந்த உத்தியோகஸ்தர்களால் அந்தந்தத் தேதிகளில் 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி ஆரம்பித்து 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதியுடன் முடிவாகிற ஒரு வருட குத்தகைக்கு, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடைகளில், கள் நாட்டுச் சாராயம் விற்பனை செய்யும், உரிமையை ஏலம் விடப்படும் என்று இதனால் தெரிவிக்கப்படுகிறது. ஏலத்தில் விலை கேட்கிறவர்கள் ஒவ்வொருவரும் அப்படி விலை கேட்பதற்கு முன்பு கட்டுத் தொகையாகிய ரூ. 200 (இருநூறு மட்டும்) கட்ட வேண்டும். ஏல தினத்தில், ஏலம் நடத்தும் உத்தியோகஸ்தர்களால் காலை 9·00 மணி முதல் கட்டுத் தொகை வாங்கிக் கொள்ளப்படும். சாதாரணமாக பகல் 11·00 மணி முதல் ஏலம் போட ஆரம்பிக்கப்படும். திட்டப்படி குறிப்பிடப்பட்ட ஏலம் அந்தந்த தாலுகா அல்லது சப் தாலுகா அலுவலகத்தில் நடத்தப்படும்.

2. குத்தகை சம்பந்தமான விவரங்கள், குத்தகைக்கு விடப்படும். கள், நாட்டுச் சாராயக்கடைகளின் ஜாபிதா, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், தாசில்தார், துணைத் தாசில்தார் அலுவலகங்களில் விலைக்கு கிடைக்கும்.

3. ஏலம் எடுத்து முடிந்தவுடன் ஏலம் எடுத்த ஒவ்வொரு கடைக்கும் அரை மாதத்திற்கான கிஸ்தி தொகையை உடனடியாக கட்ட வேண்டும். ஏலம் எடுத்தவர்கள் ஏலம் முடிந்த ஒரு வாரத்திற்குள் ஒவ்வொரு கடைக்கும் இரண்டு மாத கிஸ்திகளை கட்ட வேண்டும்.

1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி ஆரம்பித்து 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதியுடன் முடிவாகிற கால அளவிற்கு குத்தகைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் பற்பல தாலுக்காக்களில் உள்ள கள், நாட்டுச் சாராயக்கடைகளை குத்தகைக்கு ஏலத்தில் விடுவதற்கான திட்டம்.

ஏலம் நடக்கும் நேரம்: காலை 9·00 மணி முதல்.

தாலுகாக்கள் அல்லது சப் தாலுகாக்கள் பெயர். (1)	ஏலம் போடப்படும் இடம். (2)	ஏலத் தேதி. கள்ளுக் கடைகள். (3)	ஏலத் தேதி. சாராயக் கடைகள். (4)
ஏலம் நடத்தும் உத்தியோகஸ்தர்கள்: கோட்டாட்சித் தலைவர், சிவகெங்கை.			
1 பரமக்குடி தாலுகா ..	.. பரமக்குடி தாலுகா அலுவலகம். .	1—7—1972 (37 கடைகள்)	.. 11—7—1972 (5 கடைகள்).
2 இளையாங்குடி துணைத்தாலுகா	.. இளையாங்குடி துணைத்தாலுகா .. அலுவலகம்.	3—7—1972 (40 கடைகள்)	.. 12—7—1972 (6 கடைகள்).
3 சிவகங்கை தாலுகா ..	.. சிவகங்கை தாலுகா அலுவலகம்.	5—7—1972 (49 கடைகள்)	.. 13—7—1972 (12 கடைகள்).
4 மானாமதுரை துணைத்தாலுகா	.. மானாமதுரை துணைத் தாலுகா அலுவலகம்.	7—7—1972 (35 கடைகள்)	.. 14—7—1972 (8 கடைகள்).
ஏலம் நடத்தும் உத்தியோகஸ்தர் : கோட்டாட்சித் தலைவர், தேவகோட்டை.			
5 தேவகோட்டை துணைத் தாலுகா	.. தேவக்கோட்டை துணைத் தாலுகா அலுவலகம்.	1—7—1972 (38 கடைகள்)	.. 15—7—1972 (7 கடைகள்.)
6 திருவாடானைத் தாலுகா ..	.. திருவாடானைத் தாலுகா அலுவலகம்.	4—7—1972 (48 கடைகள்)	.. 14—7—1972 (8 கடைகள்).
7 காரைக்குடி துணைத்தாலுகா	.. காரைக்குடி துணைத் தாலுகா அலுவலகம்.	6—7—1972 (42 கடைகள்)	.. 17—7—1972 (9 கடைகள்).
8 திருப்பத்தூர் தாலுகா ..	.. திருப்பத்தூர் தாலுகா அலுவலகம்	10—7—1972 (61 கடைகள்)	.. 18—7—1972 (11 கடைகள்).
ஏலம் நடத்தும் உத்தியோகஸ்தர் : கோட்டாட்சித் தலைவர், இராமநாதபுரம்.			
9 கமுதித் துணைத் தாலுகா	.. கமுதித் துணைத் தாலுகா அலுவலகம்.	1—7—1972 (16 கடைகள்).	.. 14—7—1972 (6 கடைகள்).
10 முதுகுளத்தூர் தாலுகா	.. முதுகுளத்தூர் தாலுகா அலுவலகம்.	4—7—1972 (53 கடைகள்).	.. 15—7—1972 (6 கடைகள்).
11 இராமநாதபுரம்தாலுகா	.. இராமநாநபுரம் தாலுகா அலுவலகம்.	7—7—1972 (52 கடைகள்).	.. 11—7—1972 (12 கடைகள்).
ஏலம் நடத்தும் உத்தியோகஸ்தர் : உதவிக் கலெக்டர் சிவகாசி			
12 விருதுநகர் துணைத் தாலுகா	.. விருதுநகர் துணைத் தாலுகா அலுவலகம்.	1—7—1972 (13 கடைகள்).	.. 12—7—1972 (10 கடைகள்).
13 திருச்சுளி துணைத் தாலுகா	.. திருச்சுளி துணைத் தாலுகா அலுவலகம்.	3—7—1972 (11 கடைகள்)	.. 18—7—1972 (6 கடைகள்).
14 அருப்புக்கோட்டை தாலுகா	.. அருப்புக்கோட்டை தாலுகா அலுவலகம்.	4—7—1972 (22 கடைகள்)	.. 17—7—1972 (15 கடைகள்).
தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பழங்குடி மக்கள் பிற்பட்ட வகுப்பினர்-எந்தப் பல்கலைக் கழகத்திலாவது இண்டர் மீடியட் தேறியிருந்தாலும் மேலே சொல்லப்பட்ட தகுதிகளை எந்தப் பல்கலைக் கழகத்திலிருந்தாவது பெற்றிருந்தாலும் வருவாய்த்துறையில் டிப்டி தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாதவரிடமிருந்து தாங்கள் குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதற்குச் சான்றிதழ் பெற்று அனுப்ப வேண்டும்.

போர்ப்பணியாற்றியவர்களானால் ஆட்கலைப்புச் சான்றிதழ் காட்டப்பட வேண்டும். மனுதாரர்களுக்கு நேர் காணல் பேட்டி அளித்து திருநெல்வேலி தலைமைக் கல்வி அலுவலர் நியமனத்துக்காக மனுதாரர்களைத் தெரிந்தெடுப்பார்.

அழைக்கும்போது தங்கள் சொந்தச் செலவில் நேர் காணல் பேட்டிக்கு வரத் தயாராக இருக்க வேண்டும். இப்படித் தெரிந்தெடுத்து நியமனம் பெறுவதைக் கொண்டு, பணியில் நிரந்தரமாக அமர்த்திக் கொள்வதற்குப் பாத்தியதை இருப்பதாகக் கருதலாகாது.

திருநெல்வேலி தலைமைக் கல்வி அலுவலர் அல்லது வேறு அலுவலர் ஆகியோரிடம் சிபாரிசு போன்றவைகளைக் கொண்டுவர முயற்சி செய்வோர், காரணம் எதுவும் கூறப்படாமல் இந்த நியமனத்திற்குத் தகுதியற்றவராக்கப்படுவர்.

இதில் குறிப்பிடப்பட்ட தகுதிகள் இல்லாதவர்கள் மனுச் செய்ய வேண்டாம். மனுக்கள் இதர அசல் சான்றிதழ்கள் அடங்கிய உறையின் மீது "............ வேலைக்கான மனு" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீஸ் ஸ்பெசலிஸ்ட் ஆசிரியர்கள் வேலைக்கு நியமனம் பெறுவதற்கான மனு :—

1 எந்த வேலைக்கு மனுச் செய்யப்படுகிறது என்ற விவரம்.
2 மனுதாரர் பெயர் (கொட்டை எழுத்துக்களில்).
  அ. ஆணா ? பெண்ணா ?
  ஆ. திருமணம் ஆனவரா? ஆகாதவரா ?
3 தகப்பனார் பெயரும் தொழிலும்.
4 படித்த பள்ளிகள்.
5 தாய் மொழி.
6 1. சமயம், சாதி, வகுப்பு (புள்ளி விவரங்கள் கருதி).
  2. மனுதார் தாழ்த்தப்பட்ட வகுப்பை அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவரா? அல்லது கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவரா? (விவரம் தருக).
7. பிறந்த தேதி (ஆங்கில ஆண்டு).
8 அ. பொதுக் கல்வித் தகுதி.
  ஆ. தொழில் அல்லது தொழில் நுட்பக் கல்வித் தகுதி, ஆண்டு சான்றிதழின் வகுப்பு அல்லது கிரேடு குறிப்பிடப்பட வேண்டும்.
9 உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் கற்ற மொழி.
10 முன் அனுபவம்.
11 விளையாட்டு, தேசீய மாணவர் படை மற்றும் இதர உடல் நலப் பயிற்சிகளில் மனுதாரரின் ஈடுபாடு.
12 முகவரி முழு விவரம்.
13 தற்போதைய அல்லது முன்பு வகித்த வேலைகளின் விவரம், வாங்கிய சம்பளம், நியமனத் தேதி, வேலையை விட்டு விலகிய தேதி, வேலையிலிருந்து நீங்கக் காரணம் குறிப்பிடப்பட வேண்டும்.
14 ரூ. 10 கட்டணம் கட்டியதற்குச் சலான் எண், தேதி, எந்தக் கருவூலத்தில் செலுத்தப்பட்டது என்ற விவரம்.

உறுதி மொழி.

......................ஆகிய நான் மேலே கண்ட விவரங்கள் நான் அறிந்தவரை உண்மையானவை என்று உறுதியளிக்கிறேன்.

மனுதாரர் கையொப்பம்.

ஜி. மகாதேவன்,
தலைமைக் கல்வி அலுவலர், திருநெல்வேலி.

(த. 57)

விற்பனை

பழைய டிராக்டர்கள்

விவசாயத்துறை மாவட்டப் பொறியியல் பிரிவு, மதுரை.

வீணான மற்றும் பழுதடைந்த (Condemned and Cannibalised) டிராக்டர்கள் உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு), டி.பி.கே. சாலை, மதுரை-11 அவர்களிடம் எந்த நிலையில் இருக்கிறதோ அப்படியே வாங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் படிவம் மற்றும் இதரப் பத்திரங்கள் உதவி வேளாண்மைப் பொறியாளர் அலுவலகம் (ஆய்வு), மதுரையில் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை நேரில் பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ ரூ. 3-05 காசு செலுத்திப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 19—7—72 மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

வீணான டிராக்டர்கள் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பார்வையிடப்படலாம்.

டி. டி. ஏ. ஜெயசீலன்,
உதவி வேளாண்மைப் பொறியாளர்
(ஆய்வு), மதுரை-11.

(த. 87)

ஒப்பந்தப் புள்ளி

சேலம் நகராட்சி

பச்சபட்டியல் லேயிங் வாட்டர் மெயின்களுக்கு ஃ” விட்டமுள்ள ஏ.சி. (அல்லது) சி.ஐ. (அல்லது) பி.வி.சி. பைப்புகள் மற்றும் ஸ்பெசல்ஸ் சலூயிசி வால்வு (Sluice Valve) வழங்குவதற்கு, நகராட்சிப் பொறியாளர், சேலம் அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

மதிப்பீட்டுத் தொகை : ரூ. 12,000.

மற்ற விவரங்களுக்கு நகராட்சிப் பொறியாளர், சேலம் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

பி. ஹமீது அலி,
ஆணையர்.

(த. 78)

ஒப்பந்தப் புள்ளி

அரசு காச நோய் சானடோரியம், தாம்பரம், சென்னை-47

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் 1-8-1972 தல் 30-11-1972 முடிய உள்ள காலத்திற்கு அல்லது வேறு றிப்பிடப்படும் தேதியிலிருந்து, அரசு காச நோய் சானடோரியம், ம்பரத்திற்கு மருந்துகள் (Medicines drug etc) வழங்க, த்துவ மேற்பார்வையாளர், அரசு காச நோய் சானடோரியம், ம்பரம் அவர்களால், 15-7-1972 மாலை 2-00 மணி வரை ஒப்பந்தப் ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். தேவையான பொருட்களில் ந்த வடிவம் நிபந்தனைப் பிரதிகள் மற்றும் ஒப்பந்தப் படிவங்கள் த்துவ மேற்பார்வையாளர் அரசு காச நோய் சானடோரியம் ம்பரம் அவர்களிடம் பெறலாம். ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்) பனை வரி 3½ சதவிகிதம்+5 சதவிகிதம் சர்சார்ஜ் ரிசர்வ் பாங்க் ஆப் தியா அல்லது எந்த அரசுக் கருவூலத்திலாவது, சென்னை அரசின் க்கில் "XXIII Medical Superintendent Government Tuberosis Sanatorium, Tambaram J. Misc other receipts" என்ற ப்பிலும் விற்பனை வரி சர்சார்ஜ் ஆகியவற்றை " XII Sales Tax eipts under the Sales Tax Act General Sales Tax" ற தலைப்பிலும் செலுத்தப்பட வேண்டும். ரிசர்வ் பேங் ஆப் தியாவில் செலுத்தியதற்கான ஒரிஜனல் சலான் கொடுக்கப்பட ண்டும். கருவூலத்தில் பணம் செலுத்தியிருந்தால் சலானுடைய பர், தேதி, ஒப்பந்ததாரரின் பெயர், பணம் செலுத்தப்பட்ட கருவூலத் ர் பெயர் ஆகியவற்றை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் குறிப்பிட ண்டும். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்பட ்டாது.

ப்பந்தப் புள்ளிகள், மருத்துவ மேற்பார்வையாளர், அரசு காச ாய் சானடோரியம், தாம்பரம் அவர்களுக்கு அனுப்பப்பட ண்டும்.

குறிப்பு : ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும், ஒப்பந்தப் புள்ளி ர் மொத்த மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்படுமானால் வருமான வரி கி இல்லாததற்கான (Clearance) சர்ட்டிபிகேட்டும், சிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் நேசனலிட்டி சர்ட்டிபிகேட்டும் பந்தப் புள்ளிப் பிரதிகள் மற்றும் தேவை பொருட்களின் ஒப்பந்தப் வப் பிரதிகள் ஆகியவற்றை இணைத்து ஒப்பந்ததாரர் அனுப்பி க்க வேண்டும்.

டாக்டர் வி. ரெங்கசாமி பி.எஸ்.சி,எம்.டி
டி.டி.டி.
மருத்துவ மேற்பார்வையாளர்.

77).

மின்சார வாரியம்

மிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், மின்சார வாரியத்தின் பிலும் மேட்டூர் மின் திட்ட மேற்பார்வையாளரால் 30-9-1972 பகல் 3 மணிவரை மேட்டூர் மின் திட்ட மத்திய பண்டகசாலையி ந்து கீழ்க்கண்ட உபயோகமற்ற பொருட்களை வாங்குவதற்கான ித்தனி மூடி முத்திரையிடப்பட்ட குத்தகை சீட்டுகள் வரவேற்கப்படு றன.

(1) பலதரப்பட்ட பழுதடைந்த இரும்பு சாமான்களும் காலி ன உபயோகப்படுத்தப்பட்ட நிர்யணமற்ற பொருட்களும்.

(2) லோக்கா (நீராவி) ஸ்பேர்களும், லோக்கா பாதை ான்களும்

(3) ஜீ.ஐ. குழாய்களுக்கும் (பைப்புகள்) கான்டிட் குழாய் க்கும் பொருத்தமான இணைப்பு சாமான்களும்

வ்வொரு குறிப்பிற்கும் தனித்தனியான குத்தகை சீட்டு.. ....வாங்குவதற்கு என்று உரையின் மேல் எழுதப்பட்ட தகைகளை அனுப்ப வேண்டும்.

த்தகை நிபந்தனைகள் பற்றிய பிரிதியும், குத்தகையும் படி களும், பொருட்களின் விவரங்கள் அடங்கிய பிரிதியும் பெரு ற்கு ரூபாய் ஐந்து மட்டும் (திருப்பித்தவரக்த்தக்கதல்ல) ஒவ் ாரு குறிப்பிற்கும் பண அஞ்சல் மூலமாகவோ அல்லது லோ மேட்டூர் மின் இயக்கத்திட்ட தலைமைக் கணக்காயர் லவினம்) அவர்களிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் மூலமாக பெற விரும்புவோர் தங்களுக்கு எந்த டுவேண்டும் என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட்டனுப்ப ண்டும்.

ண அஞ்சல் பெறும் கடைசி நாள் 23-9-1972 குத்தகை ந்தனைகளும் பிரதியும் சாதாரண அஞ்சல் சான்று மூலமாக ப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினாலோ லது காலதாமதமாக வந்து சேர்ந்தாலோ மின்சார வாரியம் றுப்பேற்காது. குத்தகைப் படிவங்கள் மாற்றத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு குத்தகையோ அல்லது எல்லா குத்தகைகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைத்தாரர்களுக்கிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவர்.

ரூபாய் 500 (ரூபாய் ஐந்து நூறு மட்டும்) கட்டுத்தொகையாக ஒவ்வொரு குறிப்புக் குத்தகைக்கும் மேட்டூர் மின் திட்ட தலைமை கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது செட்யூல் வங்கியில் செலுத்தப்பட்ட பண மாற்றலையோ குத்தகை பிரிதியுடன் இணைத்து அனுப்பவேண்டியது. பணமாற்றோலையோ அல்லது இவ்வலுவலகத்தில் டேவணித்தொகை செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப்படாத குத்தகை தாள்கள் தள்ளுபடி செய்யப்படும்.

குறிப்பிட்ட நாளில் குறித்த நேரத்தில் வந்திருக்கும் குத்தகைத் தாள்கள், குத்தகைதாரர்கள் முன்னிலையில் 30-9-1972 தேதி பிற்பகல் 4.00 மணியளவில் திறக்கப்படும்.

குத்தகை நிபந்தனைகளும், குத்தகைபிரதியும், குத்தகைத் தாளும் 30-8-1972ம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.
(த. 103)

கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிருவாகித்தல் மற்றும் வழங்குவதற்காக, கீர்த்திபெற்ற கம்பனிகளிடமிருந்து கீழே கையொப்பமிட்டவரால் 12-7-1972 மாலை 4.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4.30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். முழு விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெறலாம்.

1. நீர் வழங்கு தலைமை நிலையத்தில் பம்பிங் மிஷான்டுகளைப் பழுது பார்த்தல் மற்றும் முழுமையாகச் சீர்படுத்துதல்.

வேலையின் மதிப்பு—ரூ. 9,000.
கட்டுத் தொகை—ரூ. 450.

2. 48" சீலிங் பேன்கள் வழங்குதல்—
சுமார் தேவைகள்—11 எண்ணிக்கை.
கட்டுத் தொகை—ரூ. 150.

3. சாலை வேலைக்கு ஆர். சி. 3 பிட்டுமன் (bitmen) வழங்குதல்
சுமார் தேவை—5 மெட்ரிக் டன்.
கட்டுத் தொகை—ரூ. 200.

4. நீர் வழங்கு தலைமை நிலையத்தில் பம்புகள் மற்றும் மோட்டார்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் வழங்குதல்.

வழங்க வேண்டிய சுமார் மதிப்பு.—ரூ. 5,000.
கட்டுத் தொகை .—ரூ. 250.

கே. ஏ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 68)

திருச்சிராப்பள்ளி நகராட்சி

600 நைட் சாயில் டிரம்கள் (Night Soil Drums) வழங்குவதற்காக, நகராட்சி ஆணையர் அவர்களால், அவர்தம் அலுவலகத்தில், 17-7-1972 மாலை 3.30 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் மாதிரிகள் நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களிடம் விண்ணப்பித்துப் பெறலாம்.

டி. கோவிந்தராஜன்.
ஆணையர்.

(த. 102)

பொள்ளாச்சி நகராட்சி
மின் துறை

சிங்கில் பேஸ் ஹவுஸ் சர்விஸ் கனெக்சன் K.W.Hr. மீட்டர்கள் வழங்குவதற்கு, 15-7-1972 மாலை 4.00 மணி வரை மூடி முத்திரை மிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மாதிரி மற்றும் ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் நகராட்சி மின் பொறியாளர் அவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஆணையர்.

(த. 101)

ஒப்பந்தப் புள்ளி

தேசிய நெடுஞ்சாலை வேலைகள்

(மதுரை கோட்டம்)

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காக அவர்களுடைய சார்பில், கீழே குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1 முதல் 9 வரையுள்ளவேலைகளுக்கான, அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள், கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை மதுரை-2, பி. டி. இராசன் சாலை, மதுரை-2, விலாசத்திலுள்ள அலுவலகத்தில் 12—6—1972-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3-30 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையிலும், மேலும் வரிசை எண், 10 முதல் 26 வரையுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் உதவிப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, திருநெல்வேலி நிர் 1, அன்புத் தெரு, முருகன் குறிச்சி திருநெல்வேலி விலாசத்திலுள்ள உட்கோட்ட அலுவலகத்தில் 14—7—1972-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-20 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டு அதே நாட்களில் பிற்பகல் 3-3 மணிக்குக் கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை மதுரை அவர்களால் அதே அலுவலகங்களில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும். (1)	கட்டுத் தொகை. (2) ரூபாய்.	ஒப்பந்தப் புள்ளி கிடைக்கு மிடம். (3)
1. மதுரை—கன்னியகுமரி சாலை கி.மீ. 59—62-ல் உள்ள சாலையை அகலப்பத்தி பலப் படுத்ததுல்.	8,000	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2 அலுவலகம்.
2. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 62—65-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	8,000	ஷை
3. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 65—68-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	8,200	ஷை
4. மதுரை—கன்னியகுமரி சாலை கி. மீ. 68—71-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,150	ஷை
5. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 71—74-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	7,700	ஷை
6. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 74—77-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	6,500	ஷை
7. மதுரை—கன்னியகுமரி சாலை கி. மீ. 105—108-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,350	ஷை
8. மதுரை—கன்னியகுமரி சாலை கி. மீ. 108—111-ல் உள்ள சாலையை அகலப்பத்தி பலப் படுத்துதல்.	6,800	ஷை
9. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 111—115-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,350	ஷை
10. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 134—138-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	10,750	உதவிப் பொறியாளர், (தேசிய நெடுஞ்சாலை) திருநெல்வேலி-2, அலுவலகம்.
11. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 138.8—142.8 -ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	10,550	ஷை
12. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 142.8—146.4-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	10,000	ஷை
13. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 170—173-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	8,200	ஷை
14. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 173—177-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,750	ஷை
15. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 177—181-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	8,700	ஷை
16. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 183—186-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	8,250	ஷை
17. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 186—189-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,050	ஷை
18. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 189—192-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,950	ஷை
19. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 192—195-ல் உள்ள -சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,050	ஷை
20. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 195—198-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	6,950	ஷை
21. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 198—200-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	6,150	ஷை
22. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 200—203-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	8,050	ஷை
23. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 213—216-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	8,500	ஷை
24. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 216—219-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	9,500	ஷை
25. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 219—221-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	5,900	ஷை
26. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 221—224-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	8,000	ஷை

ஒப்பந்த நிபந்தனை, விவர நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியன அடங்கிய ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதின் மூலம் வரிசை எண். 1 முதல் 9 வரையுள்ள வேலைகளுக்காக கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை-2ல் உள்ள அலுவலகத்தில் 5—7—1972-ம் தேதி முதல் 11—7—1972-ம் தேதி வரையிலும்,வரிசை எண். 10 முதல் 26 வரையுள்ள வேலைகளுக்காக உதவிப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, திருநெல்வேலி-2ல் உள்ள அலுவலகத்தில் 7—7—1972-ம்தேதி முதல் 13—7—1972-ம் தேதி வரையியிலும் எல்லா அலுவலக நாட்களில அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாற்றிய வடிவமைப்பு கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுளுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ் நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்ல்-பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் கோண்டிகளும், டிமாண்ட் டிராப்ட்களும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன் வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ரு. பெருமாள்,
கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை-2.

(த. 93)

ஒப்பந்தப் புள்ளி

பெரியகுளம் நகராட்சி

கீழ்க்கண்ட தென்னை மற்றும் இதர மரங்களின் பலன்களை 1972–73-ம் ஆண்டுக்கு ஏலம் உறுதி செய்த நாளிலிருந்து 1973-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதைக்கு, 15—7—1972ம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 மணிக்குள் ஆணையர் அவர்களிடம் கொடுக்க கோரப்படுகிறது. ஷை ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்கு ஆணையரால் திறக்கப்படும்.

குத்தகை விவரம்.	பொறுப்புத் தொகை.
	ரூ.
1. நகராட்சி தங்கும் விடுதியிலுள்ள 21 தென்னை மரங்களின் மகசூல் உரிமை.	25
2. கீழ வடகரை கம்போஸ்ட் டிப்போ ட.ச. 1985/1 எண் இடத்திலுள்ள 7 தென்னை மரமும், ஒரு பனை மரமும், நகராட்சி தினசரி காய்கறி மார்க்கெட்டிலுள்ள ஒரு இலவமரம் ஆகியவற்றின் மகசூல் உரிமை.	25

இது சம்பந்தமாக மற்ற விவரங்களை 8—1—1972ம் தேதி மதுரை மாவட்ட அரசுச் செய்தித்தாள் தனிச்சேர்ப்பில் பிரசுரிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கையிலிருந்தும், இந்நகராட்சி அலுவலகத்தில் நேரிலும், எழுதிக் கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.

ஜோ. சுருளிராஜ், எம்.ஏ.,எல்.பி.,பி.டி.,
நகராட்சி ஆணையர்.

(த. 97)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

கோவை சிதம்பரம் பூங்காவிலுள்ள சிறுவர் ரயில் பாதைக்குத் தேவையான சுமார் 1600 அடி நீளமுள்ள தண்டவாளம் சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26—7—1972 மாலை 3 மணி வரை ஆணையாளரால் பெற்றுக் கொள்ளப்படும்.

மற்ற விரவங்கள் நிபந்தனைகளுக்கு ரூ. 2-06 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்

(த. 95)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் பெண்களுக்கும், குழந்தைகளுக்குமான மருத்துவமனைக்கு "எல்" வடிவமுள்ள கட்டடமும், குடும்பக் கட்டுப்பாடு திட்டக் கட்டடமும் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 10—8—1972 வரை நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. 10—8—1972 மாலை 3–00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் மாலை 3–15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 26—7—1972 முதல் 8—8—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

மா. செல்வராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப. து.)
செங்கற்பட்டு—வட ஆர்க்காடு பெருவட்டம்.

(த. 94)

ஒப்பந்தப் புள்ளி

கிராமப் பணித்துறை

பாம்பன் வட்டம்

ந. க. எண். 8533/72/வ3-3. தேதி 19—6—1972.

தமிழ் நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரசு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் 12—7—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்.—முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி. மீ. 74/4 (மைல் 46/4)ல் பாலம் கட்டுதல்.

முன் வைப்புத் தொகை.—ரூ. 11,850/

நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்.—தனிக் கோட்டப் பொறியாளர் (நெ.) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர்.

ஒப்பந்தங்கள் 12—7—1972 அன்றே மாலை 3–30 மணிக்கு திறக்கப்படும்

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள் பத்திரங்கள், நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றை தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25-90 செலுத்தி 3—7—1972 முதல் 11—7—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்க கருவூலத்திலேனும் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அவர்கள் பெயரில் ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லு சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையன்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 92)

ஒப்பந்தப் புள்ளி

அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை

மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனைக்கு 1–10–1972-ம் தேதி முதல் 31–3–1973-ம் தேதி முடிய தேவையான மருந்து வகைகள், அறுவைச் சிகிச்சைக் கருவிகள், எக்ஸ்ரே மருந்துகள் ஆகியவற்றை ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடிய முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனை முதல்வர் (முன்) அவர்களால் 31–7–1972-ம் தேதி மாலை 2.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், விநியோகம் செய்ய வேண்டிய மருந்துகள் கருவிகள் பட்டியல், ஒப்பந்த படிவங்கள் ஆகியவற்றை மதுரை அரசினர் எர்க்ஸ்கின் மருத்துவமனை முதல்வர் அவர்களுக்கு, கா.சோலை மூலமாகவோ, அல்லது அலுவலகத்தில் நேரிலோ ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும் காசுகள் இருபதும்) (படிவத்தில் விலை ரூ. 5, விற்பனை வரி சர்சார்ஜ் ரூ. 0.20) மட்டும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன் சுயமுகவரியுடன் கூடிய ரூ. 3.50 மதிப்புள்ள அஞ்சல் வில்லையும் 0.05 மதிப்புள்ள அகதிகள் புனர்வாழ்வு அஞ்சல் வில்லையும் ஒட்டப்பட்ட நீண்ட 14"×10" அளவு உள்ள சதுர உறையும் அனுப்பவேண்டும். அளவு குறைந்த உறைகளில் படிவங்களை அனுப்ப இயலாது.

முதல்வர்,
அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை

(த.86)

அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — ④ சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்

Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப்பிரச்சினை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.S., A.M.I.H.

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD.) பழனி, S.I.

போன்: 16 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்:

41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1

போன்: 21448

அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங், குழி இறக்குதல்) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களையெல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அவைகளிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்துக் குறித்துக் கொடுக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2 : 3 என்ற விகிதப்படி மூவாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விவரங்ளுக்கு:— 25 காசு ஸ்டாம்ப் அனுப்புக.

கே. கந்தசாமி,
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி (அஞ்சல்),
கோயம்புத்தூர் - 6.

தொலைபேசி எண்: 31912.

பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை,
தொழில், போக்குவரத்து
ஆகிய துறைகள்
வளம் பெற அரும்பணி
ஆற்றும் நிறுவனம்
என்பீல்டு இந்தியா.



தி என்பீல்டு இந்தியா லிமிடெட்
—சென்னை-: 9

கோதையாறு நீர்மின் திட்டம்

1. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அதன் முக உறையின் மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர் கோதையாறு நீர்மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7 என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தின், கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் மாலை 4.00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

எண்.	குறிப்பிடுகை எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்தப் புள்ளி விலை (விற்பனை வரி உட்பட).	கட்டுத் தொகை ரூபாய்.	ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளும் கடைசித் தேதி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	கே. சி. 315	கோதையாறு மேல் தங்கலில் உள்ள குட்டியாறு அணையில் பிளாக்குகள் நெ. III-ல் Ch. 72.5 முதல் Ch. 157.50 முடிய அணைக்கட்டு +4227.00 மட்டம் வரை கட்டுமான வேலை (Building Masonry) செய்தல்.	ரூபாய். 10.35	ரூபாய். 12,000	6-7-1972.

2. ஒப்பந்த ஷெட்டுகளின் நகல்களை (மாற்றத் தக்கவை அல்ல) குறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகை திருப்பித் தரமாட்டாது.

3. இவ்வலுவலகத்தின் மனுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குப்பிறகு வரும் ஒப்பந்தங்களையும், கட்டுத் தொகை (Earnest Money deposit) ரசீது இணைக்கபடாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை (Demand Draft) முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் ஒப்பந்தப்புள்ளிகளுடன் அனுப்பக்கூடாது.

4. தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தங்கள், குறிப்பிட்ட நிபந்தனைகள் படி அல்லாத முழுமை பெறாத ஒப்பந்தப்புள்ளிகள், கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தங்கள் மேற்படி கட்டுத்தொகை கட்டாததின் காரணத்துடனும் வேறு வேலைகளுடன் கட்டுத் தொகை கட்டியதை இணைத்துக்கொள்ள கூறப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலையை காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையே அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமே நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரிதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில்உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

(த. 85)

விழுப்புரம் நகராட்சி

20 எம். எம்., 15 எம். எம். லிட்டர் அளவுள்ள நீரளவுக் கருவி (Water Meters) நேராக அளவு அறிந்து கொள்ளும் வகையில் (Direct Reading) வழங்குதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் நகர சபை ஆணையரால் 12—7—1972 மாலை 4-00 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

F. O. R. விழுப்புரம் என்று ரேட்ஸ் தெளிவாக குறிக்கப் படவேண்டும். ஆர்வ ஈட்டுத் தொகை ரூ. 325 கட்டப்படவேண்டும். ஏனைய தனிப்பட்ட பொதுவான ஒப்பந்த நிபந்தனைகள் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பி. ஐ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

நகரசபை, விழுப்புரம்

(த. 74)

ஆசிரியர், வெளியீடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.

நமது இலட்சியம் ஈடேற....



குடிசைகள் அடுக்குமாடி வீடுகளாக
அமைக்கப்பட்டு வருகின்றன
நமது அரசின் திட்டங்களால்!

குடிசை வாழ் மக்களுக்காக அண்மையில் சென்னை
கோட்டூர்புரத்தில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய்
செலவில் 1848 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இதுபோன்று நாள்தோறும் புதிய புதிய திட்டங்களால்
புதிய புதிய வசதிகள்.

இவை அனைத்தும்
வெற்றியுடன் அமைய
சமதர்ம சமுதாய
அமைப்பு உருவாக

திட்டமிட்ட குடும்பமே சிறந்தது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.

தமிழரசு

திங்கள் இருமுறை ஜூலை 16. 1972 [illegible] காசு

17 JUL 1972
5861/55.



அரசு-மிகவுயர்ந்த தரமானது

போர்ட்லேண்ட்
சிமெண்ட்
உங்களுக்குக்
கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ARASU CEMENT
TIDCO

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

தமிழரசு

மலர்: 3.
இதழ்: 2.
16-7-1972

முதல்வர் தரும்
குறளோவியம் (இலக்கியக் கட்டுரை)

தொண்டாற்ற வந்துள்ள தூதுவர்கள்!

வேளாண்மைத் துறையில்
வியத்தகு சாதனைகள்!

அறநிலையத் துறையில்
அரசு செய்யும் பணிகள்

கல்வெட்டுக் காட்டிடும் வீரம்

பருகூரில் பார் போற்றும் பணி

கூவம் நதியின் மிசை நிலவினிலே.....!

களஞ்சியம் நிரப்பிடக்
கரிகாலன் வந்துவிட்டான்!

உண்மையின் சந்நிதி (தொடர் கதை)

நாணயத்தின் வரலாறு

கண்ணகிக் கோட்டம்

கேளுங்கள் கொடுக்கப்படும்

அறிவுடையோர் போற்றுகின்றனர் (கவிதை)

ஒருநாள் நீதிபதி (சிறுவர் கதை)

ஆராய்ச்சிமணி (படக்கதை)

வெண்பாப் போட்டி

உழைப்பாளர் நலங்காக்கும்
ஒப்பற்ற மருத்துவமனை

சுவைமிகு புதிய அவரை 'கோ-8'




1974-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் உள்ள
அரிசனக் குடியிருப்புகள் (சுமார் 20 ஆயிரம்)
அனைத்துக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுவிடும்
அரிசனக் குடியிருப்பு

செய்திச் சித்திரங்கள்


தமிழ்நாட்டில் கிராமங்களைப் பெரிய
நகரங்களுடன் இணைக்கும் திட்டத்திற்காக
ரூ. 19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய
திட்டத்தின்படி 20 ஆயிரம் பேர்களுக்கு
வேலை கிடைக்கும்


வறட்சிப் பகுதிகளுக்கான சிறப்பு உதவித்
திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறத்தக்க
மாவட்டங்களில் ஒன்றாகத் தருமபுரி
மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது
தருமபுரி
மாவட்டம்


தமிழகத்தில் கடல் நீரைக்
குடிநீராக மாற்ற 200 கோடி ரூபாய்க்குத்
திட்டம் தீட்டப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டில் சென்னையில் அல்லது
மாமல்லபுரத்தில் 1 கோடி ரூபாய்
செலவில் சுற்றுலா அரும்பொருட்
காட்சியகம் ஒன்று அமைக்கத்
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகம் திட்டமிட்டுள்ளது.
சுற்றுலா அரும்பொருட் காட்சியகம்


1972-73 ஆம் ஆண்டில் நிலமற்ற ஏழை
விவசாயிகளுக்கு 75 ஆயிரம் ஏக்கர் நிலத்தை
வழங்குவது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்
மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.
தமிழ்நாடு அரசு
நிலப்பட்டா வழங்கு விழா

கோபன்...

குறளோவியம்

ஒரு மனிதன் இயற்கையெய்தி விடுகிறான். மறைந்த அந்த மனிதனைப் பற்றி ஊரார் பேசிக்கொள்கிறார்கள். இறந்தவன் நல்லவனா கெட்டவனா என்று பிரச்சினை எழுகிறது. ஒருவன், இறந்தவனைப் பற்றித் தீர்ப்புக் கூறப் புதிய வழி கண்டு பிடிக்கிறான்.

"ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள்? மறைந்தவன் எத்தகையோன் என்பதை அறிய அவனது மகனைப் பார்த்தால் தெரிகிறது – திருவள்ளுவரே கூறியிருக்கிறாரே நடுவுநிலை உடையவரா நடுவுநிலை இல்லாதவரா என்பது அவரவர்களின் மக்களால் காணப்படும் என்று"

இதுபோல் அவன் விளக்க முரைத்து அதற்கான குறளையும் கூறுகிறான்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

இதுதான் அவன் ஆதாரங் காட்டிடும் குறள்! எச்சமென்றால் மக்கள் எனப் பொருள் கொண்டு, 'மக்களைப் பார்த்துப் பண்பைப் புரிந்து கொள்' என்று உரை கூறியவர்கள், தவறான பாதையில் நடந்துவிட்ட காரணத்தால் மேற்கண்ட தீர்ப்பை வழங்க அவன் முன்வந்திருக்கிறான். அந்த உரையின்படி உலகத்தை நோக்கினால் குறளே பொய்த்துவிடும் போல் தோன்றுகிறது.

காந்தியாரின் பெருமையை அவரது எச்சமான அப்துல்லா காந்தியைப் பார்த்துத் தெரிந்து கொண்டால் என்ன ஆவது? புராணத்தை எழுதியிருக்கிறார்களே; அதிலே வரும் பிரகலாதனின் பண்பைப் பார்த்து அவனது தந்தை இரணியனின் பண்பைக் கணக்கிட இயலுமா என்ன?

இதுபோன்ற வேறுபாடுகளை உன்னிப் பார்க்குமிடத்து "எச்சம்" என்னும் சொல்லுக்குச் சரியான பொருள் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

முதல்வர் கலைஞர்



எச்சமென்றால்-எஞ்சி நிற்பது என்று தானே பொருள்! ஒரு மனிதன் இறந்த பிறகு எஞ்சி நிற்பது அவன் மக்கள்தான் என்பது எப்படிப் பொருந்தும்? அவனுக்குக் குழந்தைகளே பிறக்காமல் போயிருந்தால் அவன் மக்கள்தான் என்பது எப்படிப் பொருந்தும்? அவனுக்குக் குழந்தைகளே பிறக்காமல் போயிருந்தால் அவன் தகவிலர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவன்தானா? திருமணமே செய்து கொள்ளாத எத்தனையோ பெரியவர்களும் தலைவர்களும் எச்சம் வைக்காத காரணத்தால் தக்கார்-தகவிலர் என்ற தராசுக்கே வராமல் போய்விடுவார்களே! ஆகவே-எச்சம் என்பது மக்களைக் குறிப்பிடும் சொல் அல்ல என்பது உறுதியாகிறது.

எச்சம்-எஞ்சி நிற்பது! ஒரு மனிதன் இறந்த பிறகு, எஞ்சி நிற்கிற புகழோ-அல்லது பழிச் சொல்லோதான் அவனைப் பற்றிய நல்ல தீர்ப்பைக் கூறவல்லது.

காந்தியை, உத்தமர் என்று கூறுகிறோம்-தக்கார் வரிசையிலே நிற்கிறார் என்றால் காரணம் எஞ்சியிருக்கும் புகழ் தான்!

அவரைக் கொன்றவன் தகவிலர் பட்டியலில் முதலிடம் பெறுகிறான்-காரணம் அவனுக்குப்பின் எஞ்சியிருப்பது பழிச் சொல். குறளைப் படிக்கிறோம்-வள்ளுவன் வாழ்க என்று கூவுகிறோம்! வள்ளுவனின் எச்சம் திருக்குறள்!

இப்போது குறளின் உண்மைப்பொருள் நமக்குப் புரிகிறது-தக்காரா-தகவிலரா என்பது! அவருக்குப்பின் எஞ்சியுள்ள புகழாலோ-அல்லது பழியாலோ நிர்ணயிக்கப்படும்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

தொண்டாற்ற வந்துள்ள தூதுவர்கள்

முதல்வர் கலைஞர்

“சமதர்ம வளங்கொழுமிய சமுதாயத்தினை ஏற்படுத்துவது இந்த அரசின் நோக்கம். சமதர்மம் என்றால் வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; சமுதாய நிலையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்கிட வேண்டும். சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம் புண்ணை மறைத்துப் பொன் துகில் அணிந்து கொள்கிற கதையாக முடிந்துவிடும்” என்று இவ்வாண்டு மார்ச் திங்கள் முதல்நாள் அன்று சட்டப் பேரவையில்'நான் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

இந்தச் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காக அரசு தீட்டும் திட்டங்களைச்செயல்படுத்துவதில் மாவட்ட நிருவாகிகள் அச்சாணி போன்றவர்கள். அரசு நிருவாகத்தில் அரசு ஊழியர்கள் அத்தனை பேருக்கும் பங்கு உண்டு என்றாலும் மாவட்ட அளவில் பணிபுரியும் நீங்கள் பெரும் பங்கினை ஏற்றுள்ளீர்கள். மக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களுடைய அன்றாட வாழ்வில் பங்கு கொண்டு, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் பணியில் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள். சிறந்த மாநில ஆட்சிக்கு அடிப்படை சிறந்த மாவட்ட நிருவாகமே. மாவட்ட நிருவாகத்தின் சாதனையைக் கொண்டுதான் அரசின் திறமையை மக்கள் எடை போடுகிறார்கள். நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்வுக்கான பணிகள் உங்கள் கையில் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன என்று கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

இன்று தேர்தலோ போரோ இன்றி, நெருக்கடி நிலைமை நீங்கி, அமைதிச் சூழ்நிலை நிலவுகின்ற இந்த நேரத்தில் உங்கள் முழுக் கவனத்தையும் மக்களின் ஆக்கப் பணிகளில் செலுத்த இயலும்.

பண்டை நாட்களில் அரசின் கடமைகள், வரி வசூலிப்பது, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற அளவோடு இருந்தன. ஆனால், ஜனநாயகம் தழைத்தோங்குகின்ற இந்த நாளில் அந்தப் பழைய கொள்கை ஏற்புடையதாக இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பெரும் பணி ஏழை எளியவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் செயல்களில் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல, உலக வழக்கே என்பது தமிழ் இலக்கணம் பற்றிக் கூறப்பட்டதெனினும் அது ஆட்சி முறைக்கும் பொருந்தும். சுமார் இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளுக்கு முன் கலெக்டர் என்றாலோ அல்லது மாவட்டப்போலீஸ் அதிகாரி என்றாலோ மக்களிடம் அதிகாரம் செலுத்த வந்தவர்கள் என்ற எண்ணம்தான் நிலவி இருந்தது. ஆனால், காலத்தின் போக்கால் அவர்கள் பெயர், மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் என்று பெயர்களில் மாற்றம் ஏற்பட்டது மட்டுமல்லாமல், அவர்கள் பணிகளை ஆற்றும் முறையிலும் கூட மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதிகாரம் செலுத்த வந்தவர்கள் என்ற நிலை மாறித், “தொண்டாற்ற வந்துள்ள தூதுவர்கள்” என்ற நிலை ஏற்பட்டுள்ளது. நீங்கள் ஏழை எளியவர்கள் வாழும் கிராமங்களுக்கு எல்லாம் நேரடியாகச் சென்று, அவர்கள் குறைகளைக் கேட்டுஅறிகின்றீர்கள். மனுநீதித் திட்டத்தின் மூலம் இயலுமானால் அந்தந்த இடத்திலேயே முடிவினையும் அறிவிக்கின்றீர்கள். இம்மாதிரி மக்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் சிறு சிறு குறைகளை எல்லாம் கேட்டறிந்து, பரிகாரம் காணும் பாங்கிலேதான் நிருவாகத் திறமையே அடங்கியுள்ளது. ஏழை எளிய மக்கள் மன நிறைவோடு வாழவேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய நோக்கம். அதை நிறைவேற்றுவதில் உங்கள் பொறுப்பு—பொறுப்பு என்பதை விட உங்கள் தொண்டு தலையாய இடம் பெறுகிறது.

ஒரு நாட்டின் எதிர்காலம் ஒளியுடன் விளங்க வேண்டுமானால் அந்நாட்டில் உடல் வலிவும், மன வளமும் கொண்ட இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றித் தவிக்கும் நிலை மாறவேண்டும். அவர்களிடம் வாழ்க்கையில் ஏமாற்றமோ மனச் சோர்வோ ஏற்படக் கூடாது. அது நாட்டுக்கு நல்லதல்ல. வேலையின்மையைப் போக்குவதற்குத் தேசிய அளவிலே திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் எனினும், இந்த அரசு இளைஞரணியை அமைத்தல், பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல், பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் நுட்பக் கல்விகளில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கித் தருதல் போன்ற பல காரியங்களைத் தன்னால் இயன்ற அளவுக்குச் செய்து வருகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருசில குடிசைத் தொழில்கள் சிறந்து விளங்க வாய்ப்புகள் இருக்கின்றன. நீர் வளம், மின் சக்தி, மூலப் பொருட்கள், எளிதில் தொழிலாளர்கள் கிடைக்கும் நிலை இவைகளைப் பொறுத்து ஆங்காங்குச் சிறிய அளவில் நவீனத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த மாவட்டங்களில் வாய்ப்புகள் இருக்கின்றன.தொழில் முன்னேற்றம், விவசாய வளர்ச்சி, இவைகள் சீரான முறையில் நடைபெற வேண்டுமென்பதற்காகவே நமது மாநிலத்தில் திட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அது செவ்வனே செயல்பட்டு வருகிறது. ஆனால், நம் நாட்டில் திட்டம் என்பது கிராமங்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். ஆகவேதான் மாவட்ட அளவில் முதலில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அது மாநில அளவில் உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட அளவில் தயாரிக்கப்படும் திட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அதில் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருகிவரும் மக்கள் தொகையை ஓர் அளவில் கட்டுப்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் மிகுந்த அக்கறையுடன் பணியாற்ற வேண்டும். குடும்பநலத் திட்டத்தை ஆர்வத்துடன் அமலாக்க வேண்டும். சென்ற ஆண்டில் தென் ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஆற்றிய பணி போற்றுதற்குரியது. பாமர மக்களிடத்திலும், படித்தவர்களிடத்திலும் அறுவைச் சிகிச்சை முறை பற்றியுள்ள ஒருவித பயத்தை நாம் அறவே நீக்கிவிட்டதாகச் சொல்வதற்கில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக அறுவைச் சிகிச்சையில் ஏற்படுகின்ற சிறு கோளாறுகள் அந்தப் பயத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆகவே, குடும்ப நலத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர்கள், தாங்கள் மேற்கொள்ளும் அறுவைச் சிகிச்சைகளில் நூற்றுக்கு நூறு வெற்றி காணவேண்டும். ஏழை எளிய மக்களிடம் அறுவைச் சிகிச்சைக்குப் பின் மருத்துவ மனைகளில் அக்கறையுடனும், அன்புடனும் கவனிக்கின்றார்கள் என்ற எண்ணம் பரவ வேண்டும். இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒளிமிக்க எதிர் காலத்தை இந்நாட்டிற்கு உருவாக்கிக் கொடுக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ளோம் என்ற எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும். குடும்ப நலத் திட்டத்தை இன்னும் திறம்படச் செயலாற்ற என்னென்ன வழி முறைகளைக் கையாளவேண்டும் என்பது பற்றி எல்லாம் நீங்கள் விவாதிக்க இருக்கின்றீர்கள். ஆகவே, அதைப்பற்றி நான் மேலும் அதிகமாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் சில சிறு திட்டங்களை மாவட்ட ஆட்சியாளர்கள் நிறைவேற்றுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். உதாரணமாகக் கோடைக்காலத்தில் கோடை வாசஸ்தலங்களுக்குச் சென்று தங்கள் விடுமுறையைக் கழிக்க இயலாத நூற்றுக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும் இருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் ஏழைமை நிலையிலுள்ள சில மாணவ-மாணவிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக் கொடைக்கானலுக்கு அனுப்பி, ஓய்வு நாட்களைப் பயன்படும் முறையில் கழிக்கும் வண்ணம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினார். இதில் ,எத்தனை பேர் பயனடைந்தார்கள் என்பதல்ல முக்கியம்; சமூகத்தின் அடித்தளத்திலே உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அரசு முற்பட்டுள்ளது என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும்.

கோடை வாசம் வாழ்க்கையில் வசதி படைத்தோர்களின் தனி உரிமை என்ற கருத்தைப் போக்க இது பயன்படும். தாழ்ந்து கிடக்கும் நாம் முன்னுக்கு வர இயலுமா என்று ஏங்கித் தவிக்கும் இளம் உள்ளங்களில் ஏற்படும் நம்பிக்கை ஒளியாகும். அந்த முறையில் இத்திட்டம் போற்றத் தக்க ஒன்றாகும். மேலும் மற்ற மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியாளர்களின் முயற்சியால் கல்லூரிகளும், பள்ளிகளும், கல்யாண மண்டபங்களும், விளையாட்டு அரங்கங்களும் தோன்றுகின்றன. இவைகள் எல்லாம் வரவேற்கத்தக்கவை.

நமது மாநிலத்தில் பிச்சைக்காரர்களை—குறிப்பாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை முழுமையாக மேம்பாடடையச்செய்ய வேண்டும் என்பதற்காகத் திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறோம். பிச்சைக்காரர்களுக்குத் தனி நிறுவனங்கள் ஏற்படுத்தி, அதில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு முதலியன ஏற்படுத்தித் தருவதற்கு மாவட்ட ஆட்சியாளர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை. பிச்சை எடுத்தலையே தமிழகத்திலிருந்து விரட்டவேண்டும். வந்தவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கிய இந்த மண்ணில், பிச்சை எடுத்தலை இனியும் அனுமதித்தல் நல்லதல்ல. பிச்சை எடுத்தலை இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளேனும் ஒழித்தாக வேண்டும். இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கண்ணொளி வழங்கும் திட்டத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் நன்கு உணர்வீர்கள். அரசு இயந்திரத்தின் அச்சாணி போன்ற நீங்கள் இந்தத் திட்டங்களில் தனி ஆர்வமும் அக்கறையும் காட்டுதல் அவசியம்.

கிராமத்திலே உள்ள விவசாயிகள் அனைவருக்கும் அரசிடமிருந்து கடன் வழங்குதல் போன்ற பல வழிகளில் உதவிகள் கிடைக்கின்றன. அவர்கள் தண்ணீர்த் தீர்வை, விவசாய வருமான வரி, கடன் பாக்கி போன்றவற்றிற்கு அரசுக்குப் பணம் செலுத்தவேண்டி இருக்கிறது.

ஆனால் அவர்கள் எவ்வளவு கடன் வாங்கினார்கள், வட்டி எவ்வளவு, எப்போது செலுத்த வேண்டும், யாரிடம் செலுத்த வேண்டும் என்பன போன்ற தகவல்கள் அந்த எளிய மக்களிடம் இருப்பதில்லை. அதனால் அவர்கள் சிற்சில சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள். அந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கு ஒரு “கணக்குப் புத்தக முறை”யை (பாஸ் புக்) அமலாக்க இந்த அரசு எண்ணியுள்ளது. இத்துடன் கிராமக் கணக்குகளையும் எளிமையாக்கினால் நடைமுறைச் சிக்கல்கள் பல நீங்கி, அதனால் சிறு விவசாயிகளுக்கும், ஏழை எளியவர்களுக்கும் ஏற்படுகின்ற தொல்லைகள் குறையும். இதுபற்றிய உங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

“1961-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட உச்சவரம்புச் சட்டம் விரிவான நீண்டகால எச்சரிக்கை விளம்பரத்துடன் கொண்டுவரப் பட்டதால், சட்டம் வருவதற்கு முன்பே அதில்இருந்து தப்பித்துக் கொள்வதற்கான தந்திரங்களில் நிலக்கிழார்கள் ஈடுபட்டு, பினாமி முறையிலும் விதிவிலக்குகளைப் பயன்படுத்திக்கொண்டும், உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டு நிமிர்ந்து நின்றார்கள். சட்டமோ நாணிக் கோணித் தலை தாழ்த்திக் கொண்டது” என்று நான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அண்ணாவின் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்பும் வந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்

களைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். இச்சட்டங்களோ ''நிலம் ஒருசில பணக்காரர்களின் தனி உரிமையாக மாறுவது கூடாது; நிலம் உழுபவனுக்கே சொந்தமாக்கப்படவேண்டும்'' என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்தச் சட்டங்களை அமலாக்குவதில் பல நடைமுறைச் சிக்கல்களை நீங்கள் சந்தித்திருக்கலாம். அவைகள் எவை எவை? அவற்றைத் தவிர்க்க எந்த விதிமுறைகளைத் திருத்த வேண்டும்? என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பன பற்றியும் நீங்கள் விரிவாக ஆராய இருக்கின்றீர்கள்.

தமிழ்நாடு குடியிருப்புச் சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு வீட்டு நிலம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. இது ஏழை எளிய மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையும் பிடிப்பும் ஏற்படுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டம் ஆகும். இதை விரைவாகவும், செம்மையாகவும் அமல்படுத்துவதில்தான் மாவட்ட ஆட்சியாளர்களாகிய உங்களின் திறமை அடங்கியிருக்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் உள்ள தரிசு நிலங்களின் பெரும் பகுதியினை நீங்கள் ஏழை எளிய மக்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறீர்கள். சுமார் 20 ஆண்டுக் காலத்தில் செய்யப்படாத ஒன்றை நீங்கள் செய்து முடித்திருக்கிறீர்கள்; நிலமற்ற ஏழை மக்கள் அரசு நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள் என்ற எண்ணத்தை மாற்றி, இது எனது, என்னுடையது என்ற நம்பிக்கையை அந்த ஏழை எளியவர்கள் மனத்தில் ஏற்றியுள்ளார்கள். இன்னும் மீதமுள்ள தரிசு நிலங்களையும் விரைவிலேயே அடமானம் செய்வதற்கு இனித் தரிசு நிலங்களே இல்லையெனும் நிலையினை இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் உண்டாக்க வேண்டும்.

விவசாயத் துறையிலே நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம். உணவுத் துறையில் நாம் தன்னிறைவை அடைந்துள்ளோம். என்பது எல்லாருக்கும் மனநிறைவு தரும் ஒன்றாகும்.

தீவிரச் சாகுபடித் திட்டங்கள், உயர்ந்த ரக விதைகளைக் கண்டுபிடித்தல் போன்ற ஆராய்ச்சிகள் பெரும்பாலும் நெல்லைப் பொறுத்த வரையில்தான் செய்யப்பட்டு வந்துள்ளன. பருத்தி, நிலக்கடலை, கம்பு, சோளம் போன்ற புன்செய்த் தானியங்களில் நாம் ஓரளவு அக்கறை காட்டியிருக்கிறோம் என்றாலும், நெல்லுக்குக் காட்டிய அளவுக்கு மற்ற தானிய உற்பத்தியில் நமது கவனம் அதிகமாகச் செலுத்தப்படவில்லை. வேளாண்மைத் துறையினர் புன்செய்த் தானிய உற்பத்தியிலும் இனி அதிக அக்கறை காட்ட வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டி அவற்றைத் தீவிரமாக அமலாக்குவதில் மாவட்ட ஆட்சியாளர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அதிக அளவில் உற்பத்தியாகும் தானியங்கள் அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுப்பதில் காவல் துறையினரும் உணவுத் துறையைச் சேர்ந்தவர்களும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

மழைக் காலங்களில் மூழ்கிப் போகின்ற ஏழை மக்களின் குடிசைகளை எல்லாம் மாற்றி, மாடி வீடுகள் கட்டித்தரும் வகையில் தீவிரமான முயற்சிகளில் குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டுள்ளது. சென்னையிலுள்ள குடிசைகளை எல்லாம் சீரமைப்பதற்குச் சுமார் 40 கோடி ரூபாய்க்குமேல் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதை ஏழு ஆண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற முனைப்போடு திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதை யாவரும் அறிவர். மாவட்டத் தலைநகரங்களிலேயும் குடிசைப் பகுதிகள் தோன்றியுள்ளன. அவைகளைச் சீரமைப்பதில் வீட்டு வசதி வாரியம் ஈடுபட்டுள்ளது.

சட்டம் அமைதியைப் பேணிப் பாதுகாப்பதில் தமிழகம் என்றும் தலைசிறந்து விளங்குகிறது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் எனினும், மாணவர்கள் போராட்டமானாலும், விவசாயிகள் கிளர்ச்சி என்றாலும் காவல் துறையினரும் மாவட்ட ஆட்சியாளர்களும் ஏனைய வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் எவ்வளவு முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்பது உங்கள் எல்லாருக்கும் தெரியும்.

இம்மாதிரிக் கிளர்ச்சிகளின் போது எப்படியாவது வன்முறைச் செயல்கள் தலைதூக்கி விடுகின்றன. கோரிக்கைகளின் முக்கியத்துவம், நியாயம் இவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றன. இத்தகு சூழ்நிலைகளில் நிலைமைகளை நேருக்கு நேர் சந்திக்கும் மாவட்ட அதிகாரிகள் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது. அந்த நிதானத்தைத் தொடர்ந்து கடைபிடித்துச் செம்மையாகப் பணியாற்றுங்கள்.

இன்றும் நாளையும் நடக்க இருக்கும் மாநாட்டில் நீங்கள் பல பொருள்கள் பற்றி விவாதிக்க இருக்கின்றீர்கள். அதில் உங்கள் அனுபவபூர்வமான கருத்துக்களைத் தருவதோடு மக்களின் பிரச்சினைகளை நீங்கள் அணுகும்போது உங்களுக்குள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் எடுத்துக் கூறி, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காண இந்த மாநாடு உதவும் என்ற நம்பிக்கையுடன் அமைகிறேன்.

[சென்னையில் கடந்த 30—6—72 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]

இந்து அரிசன வகுப்பினர் சிறு தொழில்கள் நடத்த வட்டியில்லாக் கடன் அளிப்பது பற்றி

அரசு அறிவிப்பு

அரிசன நலத் திட்டத்தின்கீழ் 1972-73-ஆம் ஆண்டிற்கு இராமநாதபுர மாவட்டத்திலுள்ள சிறு தொழில் செய்யும் இந்து அரிசன வகுப்பினருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியாளர்கள் (தாசில்தார்கள்) வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் பெற்றுக் கொண்டு மேற்படி, மனுக்களை மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்ட நல அலுவலருக்கு 30-9-72-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். மேற்படி விண்ணப்பங்கள் அனுப்பும் பொழுது தாங்கள் செய்து வரும் தொழிலுக்குண்டான உரிமம் பற்றிய விவரங்கள் குறிப்பிட வேண்டும். தொழில் செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தையும் குறிப்பிட வேண்டும். மனுதாரர்களில் 22 முதல் 50 வயதிற்குள் உள்ள நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். மற்ற விவரங்களை மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்ட நல அலுவலர் அவர்களின் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

கொய்தவை

தமிழ்நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டத்தினைப் போக்க ரூ. 4 கோடி செலவில்ஒருதிட்டம் தயாரிக்கப்பட்டுஉள்ளது. தமிழக அரசு இந்த ஆண்டுத் திட்டத்தில் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதற்காக, ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கியுள்ளது.

இது தவிர வேலை வாய்ப்புகளை மேலும் அதிகப் படுத்துவதற்காக, ரூ. 4 கோடியே 38 இலட்சத்து 77 ஆயிரம் செலவில், விசேடத் திட்டத்தைத் தமிழக அரசு தயாரித்து இருக்கிறது. இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசின் திட்டக் குழு அனுமதி வழங்கி இருக்கிறது. திட்டத்துக்கான செலவில், பாதித் தொகையைத் தமிழக அரசும், பாதித் தொகையை மத்திய அரசும் ஏற்கும்.

இதேபோல், கேரளத்திற்கு ரூ. 3 கோடியே 58 இலட்சம் செல்விலும், குஜராத்துக்கு ரூ. 1 கோடியே 81 இலட்சம் செலவிலும், ஒரிசாவுக்கு ரூ. 2 கோடி செலவிலும், உத்தரப் பிரதேசத்துக்கு ரூ. 8½ கோடி செலவிலும் திட்டங்கள் தயாராகி உள்ளன.

இந்த ஐந்து மாநிலங்களிலும் சேர்த்து, இந்தத் திட்டங்களினால் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும். அதாவது 80 ஆயிரம் தொழிலாளருக்கும் (படிக்காதவர்கள்) 20 ஆயிரம் நிபுணர்களுக்கும் (பொறியாளர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் போன்றவர்கள்) வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும்

* * *

சென்னைக்கு 26 கி.மீ. தொலைவில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரி மேம்பாட்டுத் திட்டப் பணியை முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் வீராணம் ஏரிக்கு அடுத்தபடியாக இரண்டாவது அதிகப்பாசனம் அளிக்கும் இந்த ஏரியை மேம்படுத்துவதன் மூலம் இப்போது சாகுபடி செய்யப்படும் 10,759 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி உறுதியளிக்கப்படும். மேலும் சாகுபடி ஆகாமல் விடப்பட்டுள்ள 2,464 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யும் வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் சுமார் 7,351 டன் அதிகப்படி உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

கரையில் மேம்பாட்டுப் பணிகள், மறுகால் வழிப்பாதை செப்பனிடுதல், புதிய மறுகால் பாதை வெட்டுதல், நீர் வழங்கும் கால்வாய்களைப் புதிய முறையில் கான்கிரீட் கொண்டு சீர் செய்தல், பூங்காக்கள், புல்தரைகள், மற்றும் உல்லாசப் படகுத் துறைகள் கட்டுதல், உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றுதல் ஆகியவை மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். இதற்காக ரூ. 75 இலட்சம் செலவில் திட்டம் திட்டப்பட்டுள்ளது.

* * *

இந்தியா முழுவதிலும், மக்கள் 10 இலட்சத்திற்கு மேல் வசிக்கும் நகரங்கள் 9 உள்ளன. கல்கத்தா நகரில்தான் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். கல்கத்தாவில் 70 இலட்சத்து 31 ஆயிரத்து 382 பேர் வசிக்கிறார்கள். அடுத்து பம்பாயில் 59 இலட்சத்து 70 ஆயிரத்து 575 பேர் இருக்கிறார்கள்.

மூன்றாவதாக டெல்லியில் 36 இலட்சத்து 47 ஆயிரத்து 23 பேர் வசிக்கிறார்கள். சென்னை 4-வது இடத்தைப் பெற்றுள்ளது. சென்னையில் 31 இலட்சத்து 69 ஆயிரத்து 930 பேர் இருக்கிறார்கள். அடுத்து ஐதராபாத்தில் 17 இலட்சத்து 96 ஆயிரம் பேர்களும், ஆமதாபாத்தில் 17 இலட்சத்து 41 ஆயிரம் பேர் இருக்கிறார்கள்.

பெங்களூரில் 16 இலட்சத்து 53 ஆயிரத்து 779 பேர் இருக்கிறார்கள். கான்பூர், பூனா ஆகிய நகரங்களிலும் 100 இலட்சத்திற்கு மேலான மக்கள் இருக்கிறார்கள்.

இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 54 கோடியே 79 இலட்சத்து 49 ஆயிரத்து 809 பேர்களில், ஆண்கள் 28 கோடியே 37 இலட்சத்து 36 ஆயிரத்து 614 பேர். பெண்கள் 26 கோடியே 40 இலட்சத்து 13 ஆயிரத்து 195 பேர்.

மொத்தமுள்ள மக்கள் தொகையில் 44 கோடி பேர் கிராமப் பகுதிகளில் வசிக்கிறார்கள். 10 கோடிப் பேர் நகரங்களில் வசிக்கிறார்கள்.

இந்தியாவின் மக்கள் தொகையான 54 கோடியே 79 இலட்சத்து 49 ஆயிரத்து 809ல்; இந்து மக்கள் 45 கோடியே 32 இலட்சத்து 92 ஆயிரத்து 86 பேர். முஸ்லீம்கள் 6 கோடியே 14 இலட்சத்து 17 ஆயிரத்து 934 பேர். கிறித்தவர்கள் 1 கோடியே 42 இலட்சத்து 23 ஆயிரத்து 382 பேர்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்துக்களின்மக்கள்தொகை 83 சத வீதத்திலிருந்து 82 சத வீதமாகக் குறைந்து விட்டது. முஸ்லீம்கள் மக்கள் தொகை 10 சத வீதத்தில், இருந்து 11 சத வீதமாக உயர்ந்துள்ளது. கிறித்தவர்களின் தொகையில் எந்தவித மாற்றமும் இல்லை.

வேளாண்மைத் துறையில் வியத்தகு சாதனை!

வேளாண்மைத் துறையிலே இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை உள்ளபடியே யார் யார் ஆதரிக்கவேண்டுமோ அவர்கள் எல்லாரும் ஆதரித்து நல்ல கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். சிலர் வழக்கப்படி குறைகளையே சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பொதுவாகப் பார்க்கின்ற போது தெரிகிறது. இந்தத் துறையைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று நீண்டநாள் திட்டமிட்டு, அதன் தொடர்பாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப் புரட்சித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு இப்போது இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உயரிய விதைகளை எல்லாம், ஐ.ஆர். 8, கருணா போன்ற மிகு பயன் தரக்கூடிய விதைகளை எல்லாம் கண்டுபிடித்து, அவைகளைப் பயிரிடச் செய்து , போதிய கடன் உதவிகளையும் செய்து வருகிறார்கள்.

1966—67-ல் 66 இலட்சம் ஏக்கரில் 37 இலட்சம் டன் அரிசி உற்பத்தி ஆகியிருக்கிறது. அதைப்பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ''எங்கள் ஆட்சிக் காலத்தில் 37 இலட்சம் டன் உற்பத்தி செய்தோம்; இவர்கள் ஆட்சியில் 54 இலட்சம் டன்தான் உற்பத்தி செய்திருக்கிறார்கள்'' என்று சொல்வார்கள் என நினைத்தேன். யாரும் சொல்லவில்லை. அவர்கள் ஆட்சியில், 20 ஆண்டுக் கால ஆட்சியில் 66 இலட்சம் ஏக்கரில் 37 இலட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறார்கள். ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்த 5 ஆண்டுக் காலத்தில் 54 இலட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். இதற்கு என்ன சொல்வது என்பதே தெரியவில்லை. அந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் யார்? விவசாயிகளுக்கு என்று என்ன ஊக்கம் தந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து அவர்கள் உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் ஊக்கமளித்திருக்கிறோம். உற்பத்தியை இந்த அளவுக்குப் பெருக்குவதற்கு ஏற்றவகையில் அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறோம். கடன் கொடுத்தோம் என்று சொல்லும்போது, கொடுத்த கடனை வசூலித்தீர்களா என்று கேட்பார்கள். கடனைக் கொடுத்துவிட்டு, அதே மாதிரி ஒழுங்காக, விவசாயிகளுக்கு எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் திருப்பி வாங்கியிருக்கிறோம்.

இன்றைக்கு நமது மாநிலத்திலே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மத்திய வங்கி, சிறந்த முறையில் கடன் கொடுத்து, நல்ல முறையிலே பாக்கி இல்லாமல் உரிய காலத்தில் கடனை வசூலித்திருக்கிறது என்பதற்காக முதல் பரிசு வாங்கியிருக்கிறது. கடன் பெற்றவர்களும் உற்சாகத்தோடு கடனைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு வங்கிகளும், விவசாயிகளும் ஒரு குடும்பம்போல் செயல்பட்டு வருகிறார்கள். விவசாயிகள் சிறப்பான நல்வாழ்வு வாழ்கிறார்கள். அதனால்தான் 1971-லே சிறப்பான தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தஞ்சை மாவட்டத்தைப் பற்றியும், விவசாயிகளைப் பற்றியும் குறிப்பிடுவதால் தஞ்சை மாவட்டத்தைப்பற்றி மட்டும் பேசுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

ஊரிலேனும் நாட்டிலேனும்

உலகிலேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலையொக்கும்
நேர்உழைப்ப வர்தொகை
நீர்மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல்கொள் வோர் தொகை
நேரிற்சூரை மோதுமாயின்
தோணிஓட்டம் மேவுமோ?

என்ற கவிதை என் நினைவுக்கு வருகிறது. தஞ்சை மாவட்டம் இன்று அந்த நிலையில் இருக்கிறது. அங்கே இருக்கின்ற முதலாளிகள் ஓடம்போல் இருக்கிறார்கள். அந்த ஓடத்தை அடித்துச் செல்லுகின்ற சூரையாகவே இந்த திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

20, 25 ஆண்டுக் காலமாகப் போராடினார்கள். அந்தப் போராட்டங்களின் வாயிலாக, இடைக்காலத்தில் யாராலும் செய்ய முடியாததை இன்றைக்கு நாங்கள் செய்து காட்டியிருக்கிறோம்.

விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்கு அரசு பல வகையில் உதவி செய்திருக்கிறது. ஆடுதுறை 27 போட்டால் அதற்கு ரூ. 350 ஐ.ஆர். 8 போட்டால் அதற்கு 380 ரூபாய் என்பதாக எந்த அளவுக்குக் கடன் உதவியைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறது.

இந்த ஆட்சி வந்த பிறகுதான் மாவட்ட ஆணையாளருக்கு உத்திரவிட்டு 4 படி கூலியை 6 படியாக உயர்த்தினார்கள். ஒரு விவசாயி, அவன் மனைவி இருவருமாக 8 கலம் அறுத்தால் முன்பு 32 படி கூலி வாங்கினார்கள் என்றால் இன்றைக்கு 48 படி கூலியை மனக்களிப்போடு வாங்கிப் போகிறார்கள். விவசாய மக்களிடையே இன்றைக்கு உற்சாகம் இருக்கத்தான் செய்கிறது.

பொதுவாக நிலப்பட்டா முந்திய ஆட்சியில்-20 ஆண்டுகளில் கொடுக்கப்பட்டது ஒரு இலட்சத்துப் பதினைந்தாயிரம்தான். ஆனால், கடந்த ஐந்து வருடங்களில் நம்முடைய அரசு வழங்கியுள்ள பட்டாக்கள் ஐந்து இலட்சமாகும். தஞ்சை மாவட்டத்தில் 1,861 ஏக்கரா மட்டும் நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது முந்திய ஆட்சியில். ஆனால், இந்த அரசு 27,555 ஏக்கராக்களைக் கொடுத்திருக்கிறது. 27 ஆயிரம் பேர்களுக்கு மேல், ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பாக 60 ஸ்டாண்டார்டு ஏக்கரா வைத்துக்கொள்ளலாம் என்று இருந்ததை மாற்றி 40 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பதோடு இன்றைக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்திருப்பது இந்த அரசு தான். அதுமட்டுமல்ல. 81-வது பசலிக்கும் வரி கட்டிவிட்டால் பாக்கியிருந்த கடனை எல்லாம் வஜா செய்வதற்கு முன்வந்திருப்பது நம்முடைய அரசு. இப்படி விவசாயம், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியவர்களின் மீது அக்கறை கொண்டு இந்த அரசு ஆற்றி வருகிற நற்பணிகளை எதிர்க்கட்சித் தலைவர்கள் பாராட்டியிருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

உரத்தைப் பற்றிச் சொன்னார்கள். நெய்வேலியில் கூட ஒரு நாளைக்கு 200 டன் உற்பத்தி செய்து தருவதாக இருந்தது. வேலை நிறுத்தம் காரணமாக ஒரு நாளைக்கு 120 டன் உற்பத்தி செய்ய முடியவில்லை. யுத்தம் வந்த காரணத்தினால் கப்பல்கள் வருவதும் கடுமையாகிறது. அதன் காரணமாக நமக்கு வரவேண்டிய உரம் 60 சதவீதம் தான் வந்தது. 40 சதவீதம் கிடைக்காமல் போய்விட்டது. நமக்குத் தேவையான உரத்தை எந்தவகையிலும் பெற வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தால் தஞ்சை மாவட்டதில் மன்னார்குடியில் பாமினி உரத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. கிடைக்கின்ற உரத்தை நல்ல முறையில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கிடைப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னமும் எல்லாரும் ஒத்துழைத்தால் விவசாயத்துறை நல்ல முறையில் முன்னேறி-உணவுப் பிரச்சினையில் வெற்றி கண்டு இன்னும் பல நற்பணிகளை ஆற்றுவதற்கு வசதி ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள் ஒத்துழைப்பை அளித்து, விவசாயத் துறையை முன்னேற்ற ஊக்கம் அளிக்க வேண்டும், ஆதரவை நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பூச்சிமருந்தைப் பொறுத்தவரையில் 1970—71-லே 352 இலட்சம் ரூபாய்க்கு மருந்து வாங்கித் தெளித்திருக்கிறோம். 1971—72-லே 480 இலட்சம் ரூபாய் அளவிற்கு மருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் கூட, அது சரியில்லை. இந்த மருந்து சரியில்லை என்று சொல்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற கம்பெனிகளின் நிலைமை எல்லாருக்கும் தெரியும். எந்த அளவிற்கு நாம் விழிப்பாக இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு வேண்டிய முயற்சிகளை நாம் செய்கிறோம்.

அடுத்தபடியாக, உருளைக் கிழங்கைப் பற்றிச் சொன்னார்கள். ஒசூரில் ஏக்கருக்கு 750 ரூபாய் என்றும் நீலகிரியில் ஏக்கருக்கு 900 ரூபாய் என்றும் வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். உருளைக்கிழங்கு நல்ல முறையில் பயிர் செய்யப்படுகின்றன. நல்ல முறையில் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

விதைப்பண்ணைகளில் நட்டம் வருவதாகவும், அந்த நட்டத்தினை ஈடு செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அங்கு இலாபம்தான் கிடைத்திருக்கிறது. 1970—71-லே 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்து இருக்கிறது. 1971—72-ல் 14 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. இலாபம் கிடைத்திருக்கிறதே தவிர நட்டம் என்று சொல்வது சரியில்லை. நீலகிரி விதைப்பண்ணையைப் பொறுத்தவரையிலும் இலாபம் கிடைத்திருக்கிறது.

பருத்தி உற்பத்தியைப் பற்றி- அது சரியான, தீவிரமான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லையென்று பலர் சொன்னார்கள். கோவில்பட்டி, மணப்பாறை, திருப்பூர் ஆகிய மூன்று இடங்களிலும், இராமநாதபுரம் பகுதியிலும் தீவிர அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சாகுபடித் திட்டத்தின்கீழ் சிறப்பான ஆராய்ச்சி வேலைகள் செய்யத் திட்டம் போடப்பட்டுள்ளது. 2 இலட்சத்து 50 ரூபாய் செலவில் தீவிர திட்டம் செயல்பட வழி செய்யப்பட்டுள்ளது. கோவில்பட்டியில் பண்ணையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

வேளாண்மைத் துறை அமைச்சர்
மன்னை நாராயணசாமி

மூன்று இலட்சத்து முப்பதாயிரம் ஏக்கரில் கரும்பு பயிராகின்றது. கரும்புக்குச் சரியான முறையில் பலன் கிடைக்கவில்லை. சரியான அபிவிருத்தி கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். கரும்பைப் பொறுத்தவரையில் புதிய புதிய இனங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எந்த ரகக் கரும்பை எங்கே பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும் என்பதை அறிய வேண்டும். எந்த ரகம் எந்த மண்ணுக்கு ஏற்றதாக இருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குழுவை ஒவ்வொரு பகுதிக்கும் அனுப்பி என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். கரும்பின் தரம், மண்ணின் ரகம், தன்மை ஆகியவற்றை ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஆகவே, அடுத்த ஆண்டுக்குள்ளாக எந்தெந்த ரகம் எந்நெந்த இடங்களுக்குப் பொருந்தும் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிகிறார்கள். மதுராந்தகம், ஆம்பூர், ஆப்பக்கூடல், முண்டியம்பாக்கம், பெண்ணாடம், புகளூர் அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் கரும்பு ஆராய்ச்சிக்கூடங்கள் ஏற்பட வழி செய்யப்பட்டிருக்கின்றன. விரைவிலே அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரும்பின் விலையைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய கரும்புக்கு 80 ரூபாய் 85 ரூபாய்தான் கிடைக்கிறது என்று திரு கோவைச் செழியன் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் வளரும் கரும்பில் சர்க்கரைச்சத்து அதிகமாக இல்லாத காரணத்தால் விலை குறைகிறது. மற்ற மாநிலங்களில் பார்த்தால் கரும்பில் சர்க்கரைச் சத்து மிகுந்து காணப்படுகிறது. பீகார் மாநிலத்தில் 9·01 சதவீதம் சர்க்கரைச்சத்து கரும்பில் இருக்கிறது மகாராஷ்டிரத்தில் 11·25 சதவீதம் சர்க்கரைச் சத்து இருக்கிறது. குஜராத்தில் 10·27 சதவீதம் இருக்கிறது. பஞ்சாபில் 8·57 சதவீதம் இருக்கிறது. ஆந்திர

மாநிலத்தில் 10·21 சதவீதம் சர்க்கரைச் சத்து இருக்கிறது. மைசூரில் 10·56 சதவீதம் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் 9·29 சதவீதம் இருக்கிறது. கேரளாவில் 8·68 சதவீதம் இருக்கிறது. மற்றும் உத்தரப் பிரதேசத்தில் 9·16 சதவீதம் இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் விளையும் கரும்பில் 7·87 சதவீதம்தான் சர்க்கரைச் சத்து இருக்கிறது. 1970—71லே 8·99 சதவீதமாக சர்க்கரைச் சத்து இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே விலையை ஏற்றுவது என்பது சரியல்ல. மேலும் சர்க்கரை உற்பத்தி செய்கிற ஆலைகள் அநேகமாகக் கூட்டுறவுத் 'துறையில்தான் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, பணத்தை உயர்த்துவதற்கான நிலைமையில் கரும்பின் தரம் இல்லை. தரமான கரும்பை உற்பத்தி செய்து, சர்க்கரைச் சத்தை அதிகப்படுத்தினால் அந்த நிலைமையைப்பற்றி எண்ணிப் பார்க்கலாம்.

விவசாய அபிவிருத்திக்காக, விவசாயம் சம்பந்தப்பட்ட வித்துக்களை ஆராயவும், மற்றவற்றிற்கும் 1972—73-ஆம் ஆண்டுக்காக 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாய அபிவிருத்திக்காக, அதற்கான வேலைகளைக் கவனிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, 1972—73-லிருந்து செயல்பட்டு விவசாய அபிவிருத்தி வேலைகள் சிறப்பாக இருக்க வழிவகைகள் செய்யப்படும். திறமையான குழு ஒன்று போட்டு, எந்தெந்த இடத்தில் எந்தெந்தச் சாகுபடி செய்யலாம், அங்கே முதலிலே தண்ணீர் கிடைக்குமா என்பதை எல்லாம் அறிவதற்காக ஒரு பம்பு செட் அமைத்துத் தண்ணீர் கிடைக்குமா என்பதையும் ஆராயும்.

புன்செய் பயிர் செய்கிற இடங்களில் நன்செய் பயிர் செய்வதால் தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுகிறது. அந்த மாதிரி செய்கிற இடங்களில் தேவையான தண்ணீர் கிடைக்குமா? என்பதையெல்லாம்ஆராய நிபுணர் குழு ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன்.

மஞ்சள் பற்றிச் சொன்னார்கள். அதற்காக ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம் ஆகிய இடங்களில் முனைப்புத் திட்டம் போடப்பட்டு, ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. ஆண்டில் அதிகமான அளவுக்குக் கெடாமல் இருக்க வழிவகைகள் விரைவிலே காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பூச்சி மருந்து தருகிறார்கள். இப்போது நெல்லுக்குக் கூடப் பூச்சி மருந்து கொடுக்கிறார்கள். எந்த ரகத்திற்கு எந்த மருந்து தெளிப்பது என்று பார்ப்பதில்லை. ஒரு பகுதியில் உபயோகிக்கும் மருந்தை இன்னொரு பகுதியில் இருக்கும் பயிருக்கு அடித்தால் கூட சரியாகச் வேலை செய்வதில்லை. பூச்சி மருந்துகளை ஏரியல் ஸ்ப்ரே மூலமாகச் செய்கிறார்கள். சிலர் அந்த முறை சரியில்லை என்கிறார்கள். விசைத் தெளிப்பான் மூலமாகச் செய்ய வேண்டும் என்று எல்லாரும் சொல்கிறார்கள். பூச்சி மருந்துகளை விசைத் தெளிப்பான் மூலமாகச் செய்யும் யோசனை இருக்கிறது. ஒரு யூனியனுக்கு 3 அல்லது 4 விசைத் தெளிப்பான்கள் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். குறைந்தது ஒரு யூனியனுக்கு 30—ஆவது வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான் யூனியன் பூராவுக்கும் சப்ளை செய்யப்படும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பயிர்களுக்கு நாம் நைட்ரஜன் உரம் போடுகிறோம். அதன் காரணமாகப் பயிர், பச்சை நிறமாக வந்து விடுகிறது. அதன் காரணமாக பூச்சி எளிதில் வந்துவிடுகிறது. சீக்கிரமாகப் பச்சை வந்துவிடுகிற காரணத்தால் எவ்வளவு வேகமாகப் பரவ முடியுமோ அவ்வளவு வேகமாகப் பூச்சிகள் பரவுகின்றன. ஆகவே, மூன்று, நான்கு விசைத் தெளிப்பான்களை வைத்துக் கொண்டிருப்பதால் பிரயோஜனம் இல்லை. அதை வைத்துக்கொண்டு ஒரு நான்கைந்து ஏக்கர்களுக்குத்தான் மருந்து தெளிக்க முடியும். நாம் ஒரு பக்கம் மருந்து தெளித்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு பக்கத்தில் பூச்சி பரவிக்கொண்டே போகும். ஆகாய விமானம் மூலமாகவும், ஹெலிகாப்டர்கள் மூலமாகவும் மருந்து தெளிப்பதால் ஒரே சமயத்தில் ஒரு நாளில் மருந்து தெளிக்க முடியும். ஒரே சமயத்தில் பூச்சிகளும் அழியும். அப்போது பூச்சிகள் எல்லாம் இறந்துவிடும்.

கிராமப் பணிகளில் பெண்கள்

தமிழ் நாட்டில் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் 'முக்கிய சேவகி' யாகப் பல பெண்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் கிராமங்கள் தோறும் சென்று பணிபுரிய வேண்டும்.

சில குறிப்பிட்ட வட்டாரங்களில் மட்டும் இந்தப் பெண்களுக்கு 'ஸ்கூட்டர்' வழங்கத்தீர்மானிக்கப்பட்டு உள்ளது. இதற்காக 'ஸ்கூட்டர்' ஓட்டிப் பழகுமாறு அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

அதே சமயம் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பணிபுரியும் 'கிராமசேவகிகள்' என்ற பெண் சிப்பந்திகளுக்குச் சில குறிப்பிட்ட வட்டாரங்களில் மட்டும் சைக்கிள்களை வழங்க அரசு தீர்மானித்து உள்ளது.

ஒரு விசைத் தெளிப்பான் விலை 700 ரூபாய் ஆகிறது. அதற்கு ஒரு நாளைக்குச் செலவு 4 ரூபாய் ஆகிறது. அதற்காக ஒவ்வொரு யூனியனிலும் விசைத் தெளிப்பான் ரிப்பேர் செய்வதற்காக ஒரு மெகானிக் போட வேண்டும். அதற்கான ஷெட்டை மாவட்ட அளவில் வைப்பதா, அல்லது யூனியன் அளவில் வைப்பதா என்பதை ஆராய்ச்சி செய்து, அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய இருக்கிறோம்.

உறுப்பினர்கள் எல்லாரும் பல பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவையெல்லாம் எந்த எந்த அளவிலே விரைவிலே கவனிக்கப்பட வேண்டுமோ அந்தந்த அளவிலே விரைவில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மக்கள் நன்மைக்காக அவர்கள் சொன்னதையெல்லாம் நான் கவனிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[தமிழ்நாடு சட்டமன்றத்தில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது 25—3—1972ல் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஆற்றிய உரை.]

அறநிலையத் துறையில் அரசு செய்யும் பணிகள்

119

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்களும் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் சென்ற ஆண்டு செய்திட்ட மிக முக்கியமான காரியங்களில் ஒன்று சாதி வித்தியாச உணர்ச்சியை நீக்க வேண்டும் என்பது. சமூகத்திலே சாதி மத வேற்றுமைகளை ஒழிக்க வேண்டும். அதற்கு முதற்படியாக இறைவன் முன்னிலையில் சாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுமென்று திட்டமிட்டு, எல்லாச் சாதியினரும் அறங்காவலராக இருக்கலாம்.— எல்லாச் சாதியினரும் அர்ச்சனை செய்யலாம் என்ற நிலையைக் கொண்டு வந்தோம். அதை எதிர்த்துச் சிலர் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார்கள். அரசாங்கத்தினுடைய சட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

அடுத்து, கோயில்களில் தமிழ் வழிபாட்டு முறைகளைப் பற்றிச் சொன்னார்கள். எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று அறநிலையத்துறை ஆணையர் அறிவுரை வழங்கியிருக்கிறார். அதேமாதிரி தமிழில் அர்ச்சனை நடைபெறுகிறது. யாராவது விரும்பிக் கேட்டால் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யலாம் என்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

எங்கெங்கே பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் கூடுதல் அறங்காவலர்களை நியமிக்கலாம்; நிருவாக அதிகாரிகளையும் போடலாம் என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சைக் கோயில் மட்டுமல்லாமல், அதைப்போன்ற நூற்றுக் கணக்கான பழம் பெருமை மிக்க கோயில்கள் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவுக்கு உட்பட்டதாக இருக்கின்றன. அவைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும்—திருப்பணி செய்ய வேண்டும் என்று நாம் தீவிர முயற்சி எடுத்துள்ளோம். மத்திய அரசைப் பலமுறை கேட்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் நமக்கு அனுமதி கொடுக்கவில்லை. அதனால் நாளுக்குநாள் அந்தக்கோயில்கள் இடிந்து போகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கங்கை கொண்ட சோழபுரம், குடுமியாமலை அங்கெல்லாம் இருக்கின்ற கோயில்களும், இவை போன்ற ஏராளமான கோயில்களும் மிகவும் முக்கியமான கோயில்களாகும். அவையெல்லாம் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. அதனால் அவர்கள் அனுமதி இல்லாமல் நம்மால் திருப்பணிகளைச் செய்யமுடியவில்லை. அவைகளில் குறிப்பாகக் குடுமியாமலையில் இருக்கின்ற கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

குடுமியாமலைக் கோயில் கல்வெட்டுகளில் நம்முடைய தமிழ்நாட்டின் இராகங்கள்-தமிழ் மொழியில் பண்கள் என்று அழைக்கப்படும்-பல்வகைப் பண்கள் தமிழகத்திலே இருந்தன என்பதற்கு அந்தக் கல்வெட்டுகள் சான்றுகளாக இருக்கின்றன.

அறநிலையத் துறை அமைச்சர்

மு.கண்ணப்பன்

வடமொழியில் கரகரப்பிரியா என்பது தமிழில் படுமலைப்பண் என்று இருந்தது. வடமொழியில் கல்யாணி என்னும் இராகம் தமிழில் அரும்பாலைப் பண் என்று இருந்தது. வடமொழியில் அரிகாம்போதி என்பது தமிழில் கோடிப்பாலைப்பண் என்று இருந்தது. வடமொழியில் பைரவி என்பது தமிழில் விளரிப்பாலைப்பண் என்று இருந்தது. வடமொழியில் தோடி என்பது தமிழில் செவ்வழிப் பாலைப்பண் என்று இருந்தது. கடலைக் கண்டால் ஒரு பாடல், கரியைக் கண்டால் ஒரு பாடல், தளிரைக் கண்டால் ஒரு பாடல், காதலியைக் கண்டால் ஒரு பாடல் இப்படி இன்ப உணர்ச்சியை இசையில் கண்டான் தமிழன். இப்படி ஏராளமான பாடல்கள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது. குடுமியாமலைக் கோயில் கல்வெட்டுகளில் அவைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. ஆனால், மத்திய அரசு தடுத்துக் கொண்டிருக்கிறது.

பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என்றும் பள்ளிக்கூடக் கட்டடத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென்றும் இரண்டு மாதங்களுக்கு முன்பு அதற்குச் சம்மதித்து, தருவதற்கு இசைந்தார்கள். உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துவதற்கும் முயற்சி மேற்கொண்டிருக்கிறோம்.

அழகர் கோயிலுக்குச் சாலை போடவேண்டும் என்றும் இங்குச் சொல்லப்பட்டது. பழமுதிர்ச்சோலை மலைப் பகுதியில் இருக்கிற இடமாகும். பழமுதிர்ச்சோலைக்குச் சாலை போடும் திட்டம் தாமதப்பட்டு வந்தாலும் 5 இலட்சம் ரூபாய் செலவில் அதைத் துவங்க இருக்கிறோம். அந்தக் கோயிலில் அதற்குப் போதுமான நிதி இல்லை. இரண்டு இலட்சம்தான் இருக்கிறது. வேறு கோயில்களில் இருந்து பணத்தை மாற்றி அந்தக் கோயிலுக்குக் கடனாகக் கொடுத்தால், பின்னர் அதைத் திருப்பித் தந்து விடுவதாக அறங்காவலர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றியும் அந்தத் துறை அதிகாரிகள்

நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அழகர் கோயில்களில் உள்ள சிலைகள் திருட்டுப் போவது பற்றி திரு சௌடி சுந்தர பாரதியும், மற்றவர்களும் சொன்னார்கள். அத்திருட்டு நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிற காட்சியைப் பார்க்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புடைய சிலைகள் களவு போனதை நாம் அறிவோம். இதன் காரணமாகத்தான் அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு இது சம்பந்தமாக ஒரு ஆணைவிடப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு கோயிலிலும் உள்ள சிலைகளின் எண்ணிக்கை, அவற்றின் தனித்த்னி மதிப்பு, உயரம் எடை, ஆகியவை பற்றி எல்லாம் ஒரு மதிப்பீடு செய்து அதன் நகல்களை எல்லாம் அந்தந்த வட்டாரத்தில் உள்ள காவல் துறையினருக்கும், அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும், அனுப்பி வைக்கவேண்டும் என்று உத்திரவு போட்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் அதுபோன்ற சிலைகளைப் பாதுகாப்பாக வைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நல்ல பாதுகாப்பு இல்லை என்கிற கோயில்களில் உள்ள சிலைகளை எல்லாம் எடுத்து அந்த மாவட்டத்திலேயே நல்ல பாதுகாப்புடைய இரண்டு இடங்களில் குறிப்பாகத் தஞ்சை சரஸ்வதி மகாலில் ஒன்று. அடுத்து திருவாரூர் தியாகராசர் கோயிலில் வைக்கலாமா என்றும் யோசிக்கப்பட்டு வருகிறது. கூடுமான வரையில் எந்த எந்த வகைகளில் எல்லாம் சிலைத் திருட்டைத் தடுக்கலாம் என்பது நல்ல முறையில் யோசிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறநிலையங்களுக்கு என்று தனியாக ஒரு வாரியத்தையே அமைத்துவிட வேண்டுமென்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே வாரியம்தான் அமைக்கப்பட்டிருந்தது. 1925-ல் அமைக்கப்பட்ட வாரியம் 1951 வரை செயல்பட்டிருக்கிறது. நிருவாகம் அப்போது சரியான முறையில் நடக்கவில்லை என்பதற்காகத்தான் 1951-ல் இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவந்தார்கள். 1968-ல் அந்தச் சட்டத்தையும் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறோம். வாரியத்தை எடுத்துவிட்டு இதுபோன்ற அமைப்பைக் கொண்டு வந்த காரணத்தினால் நிருவாகம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கோயில்களின் வருமானம் மூன்று கோடியே தொண்ணூற்றெட்டு இலட்சம் என்றால், இந்த ஆட்சியில் கோயில்களின் வருமானம் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து இலட்சமாகப் பெருகியிருக்கிறது. அவர்கள் காலத்தில்தான் கோயில்களில் பெருச்சாளிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அந்தப் பெருச்சாளிகளைக் கண்டுபிடித்து ஒழிப்பதில்தான் இந்த அரசு தீவிரக் கவனம் செலுத்திவருகிறது. அதற்கான தனி அலுவலர்களைப் போட்டு இதுவரை 32,540 கோயில்களின் சொத்துக்களைப் பல பெருச்சாளிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அந்தத் தனி அதிகாரி கண்டுபிடித்திருப்பது மட்டும் 1,59,322 ஏக்கராக்களாகும். அவர்கள் பணியைப் பார்க்கிறபோது இன்னும் சில மாதத்துக்குள் தொடர்ந்து பணியாற்றினால் மேலும் பல ஆயிரக்கணக்கான நிலங்களைக் கண்டுபிடித்துவிடுவார்கள். கண்டுபிடிக்கப்பட்ட நிலங்களை அறநிலையத்துறை ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கோயில்களின் உபரி நிதியில் இருந்து பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி போன்றவைகளைக் கட்டுவதைவிட வருமானம் இல்லாத கோயில்களின் திருப்பணி வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அவர்களுடைய காலத்தில் உபரி நிதியிலிருந்து ஒரு கோடியே பத்தொன்பது இலட்சம்தான் திருப்பணிக்காகச் செலவிடப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் 1971-ல் மட்டும் இரண்டு கோடியே பத்தொன்பதுஇலட்சம் ரூபாய் திருப்பணிக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. அதோடு அப்போது 334 கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன என்றால் இப்போது 698 கோயில்களில் திருப்பணி நடந்திருக்கிறது. பக்தர்கள் என்று பறை சாற்றிக் கொண்டு முன் வருகிறவர்களைவிட இந்த அரசு நல்ல முறையில்தான் கோயில் நிருவாகங்களைக் கவனித்து வருகிறது என்பதற்காகவே இவற்றைச் சொல்கிறேன்.

கோயில் என்றால்—சரித்திர சம்பந்தமான சான்றுகளை எல்லாம் பார்த்தால் அந்தக் கோயில் மருத்துவ மனையோடு, கல்விச் சாலையோடு, நீதி மன்றத்தோடு இணைந்த ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் சொன்னார்கள். எதிர் காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள்தான் நமது கோயில்களில் உருவாக வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் செயல்படுகிறோம்.

ஏழை எளிய மக்கள் எளிய முறையிலும், குறைந்த செலவிலும் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்கிற அடிப்படையில் கோயில்களின் சார்பில் திருமண மண்டபங்களைக் கட்டியிருக்கிறோம். மிகவும் ஏழைகளாயிருப்பவர்கள், கையிலே காசில்லாதவர்கள், 'தாங்கள் மிகவும் ஏழைகள்' என்பதற்கான சான்றுகளை தக்க அதிகாரிகளிடத்திலிருந்து பெற்றுத் தருவார்களானால் அவர்களுக்கு இலவசமாகவே திருமணங்களைச் செய்துகொடுப்பதாக இருக்கிறோம். மேலும், அந்தக் கோயிலிலிருந்து 100 அல்லது 150 ரூபாய் வரையிலும் செலவு செய்து அந்தத் திருமணத் தம்பதிகளுக்கு துணிமணிகள்போன்றவற்றையும் மாங்கல்யம் போன்றவற்றையும் வாங்கிக் கொடுத்து திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமென்கிற நல்ல திட்டத்தைச் செய்ய இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முதியோர்களுக்காக ஒரு திட்டம். நாம் இப்பொழுது 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 'ஓல்ட் ஏஜ் பென்ஷன்' கொடுக்கிறோம். எல்லாருக்கும் இது கிடைக்காது. அப்படிப்பட்டவர்களைப் பிச்சைக்காரர் விடுதியிலும் சேர்க்க இயலாது. ஆகவேதான், எந்தெந்த கோயிலில் உபரி நிதி இருக்கிறதோ, அதைக் கொண்டு வயதான முதியவர்களுக்காக முதியோர் இல்லங்களை ஏற்படுத்துவது என்கிற முடிவினை எடுத்திருக்கிறோம். நான் பலருக்கு பதில் சொல்ல முடியாமல் காலம் குறுக்கே இருப்பதால், அவர்களுடைய கருத்துக்களை ஏற்று, நிறைவேற்றித்தரத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[27-3-72-ல் சட்டமன்றத்தில் அற. நிலையத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு அற நிலையத்துறை அமைச்சர் கூறிய பதிலுரை]

பருகூரில் பார் போற்றும் பணி



தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரிக்கு மேற்கே 10 மைல் தொலைவில் உள்ள ஒரு சிற்றூர், பருகூர்.

இந்தச் சிற்றூர் இன்று பார் புகழும் ஊராக மாறத் தொடங்கியிருக்கிறது.

" அங்கம் குறைந்தழுகி ஐயா எனக் கையேந்தி அகத்தின் கதவருகே அழைக்கின்ற " தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லம் ஒன்றைத் தமிழக அரசு இந்தப் பருகூரில் உருவாக்கியுள்ளதுதான் அதற்குக் காரணம்.

கடந்த 18-6-72 அன்று, அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் தலைமையில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த இல்லத்தைத் திறந்து வைத்தார்கள்.

குன்றுகள் பின்னணியில் நிற்க, சிறு சிறு மரங்கள் இலைகளை ஆட்டி அசைத்து வாழ்த்துத் தெரிவிக்க, அவற்றின் நடுவே இந்த இல்லம் கட்டப் பெற்றிருக்கின்றது. 20 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த இடத்தில் தற்போது 12 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன. இன்னும் 13 கட்டப் பெறவிருக்கின்றன.

300 பேர்கள் தங்குவதற்கு வசதியுள்ள இந்த 12 குடியிருப்புகளில், தற்சமயம் 254 பேர்கள்தான் இருக்கிறார்கள். இவர்களில் ஆண்கள் 215 பேர், பெண்கள் 35, சிறுவன் 1, பெண் குழந்தைகள் 3.

இங்கே சமையற்கூடம் ஒன்றும், நிருவாகப் பிரிவுக் கூடம் ஒன்றும், செவிலியர் குடியிருப்பு இரண்டும், கடைநிலை ஊழியர் குடியிருப்பு ஒன்றும், மருத்துவர் குடியிருப்பு ஒன்றும் கட்டப் பெற்றுள்ளன.

ஏழு இலட்ச ரூபாய் செலவில் போடப்பட்ட இந்தத் திட்டம் தற்போது எட்டு இலட்ச ரூபாய் அளவில் வந்து நிற்கிறது.

இந்தப் பருகூர்ப் பகுதி தொழுநோய் அதிகம் உள்ள பகுதி என்று ஏற்கெனவே மருத்துவத்துறை அறிவித்திருக்கின்றது. தருமபுரி, சேலம், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் அனைத்துக்கும் சேர்ந்த மறுவாழ்வு நிலையமாக இந்தப் பருகூர் மறுவாழ்வு இல்லம் அமைந்திருக்கிறது.

கும்பகோணம், சென்னை முதலிய ஊர்களிலிருந்தும் தொழுநோய்ப் பிச்சைக்காரர் எல்லாம் தாமாகவே இந்த மறுவாழ்வு இல்லத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

விரைவில் வடஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைக்கு அருகிலும், திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு அருகிலும், இராமநாதபுர மாவட்டத்தில் சாத்தூர் அருகிலும், மதுரை மாவட்டத்

பருகூரில் தொழுநோய்ப்பிச்சைக்காரர் இல்லம்திறக்கப்பட்டபோது கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காக தருமபுரி மக்களின் சார்பில் 60,000 ரூபாயை மாவட்ட ஆட்சியாளர் திரு பத்மநாபன் அவர்கள் முதல்வர் கலைஞரிடம் கொடுத்தார்.

தில் உசிலம்பட்டி அருகிலும் இல்லங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன. இல்லங்கள் அமைப்பதற்குரிய இடங்கள் (Grounds) தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன. விரைவில் கட்டடப் பணி தொடங்கப் பெறவிருக்கிறது.

இனிமேல் உருவாகும் மறுவாழ்வு இல்லங்கள் தற்போதுள்ள இல்லங்களைப் போன்று இருக்காது. அவை இன்னும் அதிக வசதி படைத்தவையாய் இரண்டு அடுக்குக் கட்டடங்களாய் உருவாக்கப்படும். மேல் தளத்தில் சிகிச்சை பெறும் நோயாளிகள் தங்குவார்கள். கீழ்த்தளத்தில் அவர்கள் பணிபுரியும் நிலையம் இருக்கும். அதாவது அவர்கள் பயிற்சி பெறுவதற்கும் பணி புரிவதற்கும் என்றே ரப்பர் செருப்புத் தயாரித்தல், பினாயில் தயாரித்தல், பாய் பின்னுதல் போன்ற ஏராளமான தொழில்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அந்தத் தொழில்கள் கீழ்த்தளத்தில் நடைபெறும்.

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் பாய் பின்னுகிறார்கள். தோட்ட வேலை செய்கிறார்கள்.

உளுந்தூர்ப்பேட்டை மறுவாழ்வு இல்லத்தில் பாய் பின்னுதல் தோட்ட வேலை செய்தல், ஆகியவற்றோடு தையல் தொழிலும் செய்கிறார்கள்.

விருது பெறும் விந்தைக் காமிரா

நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அதிவேகத்தில்—வினாடிக்குப் பல இலட்சம் படம் எடுக்கும் திறனுள்ள காமிராவுக்கு 1972-ஆம் ஆண்டுக்கான வடிவமைப்புக் குழுவின் விருது வழங்கப்பட்டிருக்கின்றது.

புதிய கருவிகள் வடிவமைத்துத் தயாரிப்பவர்களுக்கு ஆண்டு தோறும் பரிசு அளித்து இதுபோன்ற கண்டுபிடிப்புக்களை ஊக்குவித்து வருகிறது, பிரிட்டனின் வடிவமைப்புக் குழு. சென்ற ஆண்டு இந்தக் குழு பரிசுக்கு உரிய பொருளாகத் தேர்ந்தெடுத்தவற்றில் இந்த உயர் வேகக் காமிராவும் ஒன்று.

மற்றொரு கருவி, தண்ணீருக்கு அடியில் புதையுண்டிருக்கும் குழாய்களில் கசிவு இருந்தால் அதனை மேலே இருந்தபடியே எக்ஸ்-ரே மூலம் கண்டுபிடிக்கும் கருவியாகும்.

பருகூரில் செருப்புத் தைத்தல், மெழுகுவத்தி தயாரித்தல், பினாயில் தயாரித்தல், சோப் தயாரித்தல் ஆகிய தொழில்களைச் செய்கிறார்கள்.

இங்கே உள்ள 200 கோழிகள் கொண்ட கோழிப் பண்ணையைக் கவனித்துக் கொள்கிறார்கள். இவ்வாறு பலவித அலுவல்களைத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் செய்கிறார்கள்.

இவர்களுக்கு இலவசமாக மருந்தும், இலவசமாக உணவும் தந்துவரும் அரசு, இவர்கள் செய்யும் பணியினை இலவசமாகப் பெற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் செய்யும் வேலைக்குரிய கூலியைக் கொடுத்துவிடுகிறது.

இங்கேயுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் எல்லாம் விரைவில் தங்கள் நோயிலிருந்து விடுதலை பெறவேண்டும். சமூகத்தில் அவர்களும் வாழத் தகுதி படைத்தவர்களாக ஆகவேண்டும் என்பதுதான் அரசின் குறிக்கோள். அந்தக் குறிக்கோள் கட்டாயம் ஈடேறும் என்ற நம்பிக்கை பருகூரில் மருத்துவப் பணிபுரியும் மருத்துவத்துறை அதிகாரிகளின் அயராத அருந்தொண்டுகளினாலும், அன்பான சிகிச்சையினாலும் தெளிவாகியுள்ளது.

பசுமைப்
புரட்சிக்கும்
பச்சைச்
சீருடைக்கும்...



என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை,
தொழில், போக்குவரத்து
ஆகிய துறைகள்
வளம் பெற அரும்பணி
ஆற்றும் நிறுவனம்
என்பீல்டு இந்தியா.

தி என்பீல்டு இந்தியா லிமிடெட்
சென்னை-19

உழைப்பாளர் நலங்காக்கும் ஒப்பற்ற மருத்துவ மனை

கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ மனையைக் கடந்து அயனாவரம் செல்லும் பாதையில் வானுற ஓங்கி வளர்ந்து நின்றபடி, E. S. I. Hospital என்ற எழுத்துக்களுடன் காட்சி தருகிறது மாநிலத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை.

1955-ஆம் ஆண்டில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் வாடகைக் கட்டடத்தில் 75 படுக்கைகளுடன் தொடங்கப் பெற்ற மருத்துவ மனை 15-6-1962 அன்று அயனாவரத்தில் சொந்தக் கட்டடத்தில் பணி புரியத் தொடங்கியது. 1962-ல் 200 படுக்கைகளுடன் உருவாகிய இந்த மருத்துவ மனை இன்று 625 படுக்கைகளுடன் விளங்குகிறது.

துவக்கத்தில், ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்ந்து கொண்ட தொழிலாளர்களுக்கு மட்டும்தான் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை வசதி செய்யப்பட்டது. 1967-ஆம் ஆண்டு, நவம்பர் 15-ஆம் நாள் முதல் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கும் இங்கே சிகிச்சை தரும் திட்டம் தொடங்கப் பெற்றது. இந்தத் திட்டத்தைப் 'பேரறிஞர் அண்ணா' அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தொழிலாளர்களின் குடும்பம் என்பது, தொழிலாளர், அவரது மனைவி, ஊதியம் தேட இயலாத பெற்றோர்கள், தொழிலாளர்களின் குழந்தைகள் ஆகியோர்தாம். குழந்தைகளும் 18 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தால்தான் சிகிச்சை செய்யப்படுவார்கள். தொழிலாளர்களின் உடன் பிறந்தவர்களுக்கு இங்கே சிகிச்சை கிடையாது.

தொழிலாளர்-அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் கட்டுப்பட்ட தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கணக்கெடுத்துப் பார்த்ததில்—சென்னை நகர மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் சென்னையில் சிகிச்சை தருவது இந்த மருத்துவ மனைதான்.

தமிழ்நாட்டில் இந்தத் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழான பெரிய மருத்துவ மனைகள் அயனாவரம், கோவை, மதுரை ஆகிய மூன்று இடங்களிலேதான் இருக்கின்றன. அங்கேயும் படுக்கை வசதிகள் போதாமல் அரசு மருத்துவ மனைகளிலும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகச் சார்பில் 1,900 படுக்கை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அயனாவரம், கோவை, மதுரை தவிர ஏனைய பெரிய நகரங்களில் அரசினர் பொது மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ.-க்கு ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் தொழிலாளர்களுக்குச் சிகிச்சை செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 93 இடங்களில் இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 34 தான் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. ஏனையவை வாடகைக் கட்டடத்தில் உள்ளன.

ஏறத்தாழ 16 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த 4 இலட்சம் பேர் இந்த ஈட்டுறுதித் திட்டத்தினால் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த மருந்தகங்களுக்கு ஆகும் செலவு மத்திய அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால் அளிக்கப்படுகிறது. அரசு ஈட்டுறுதித் திட்டத்திற்குக் கட்டுப்பட்ட ஒரு தொழிலாளி தனது சம்பளத்தில் 2 சதவீதத்தை மத்திய அரசின் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் தருகிறார். முதலாளி 4 சதவீதம் தருகிறார். அந்தத் தொகையை மத்திய அரசு ஈட்டுறுதிக் கழகம் தொழிலாளர் மருத்துவ மனைத் திட்டங்களுக்காகத் திருப்பி அளிக்கிறது. அப்படி அளிக்கின்ற பணம் நமது மாநிலத்துக்குப் பற்றாக் குறையாக இருக்கிறது. அதன் காரணமாக, அதை மாநில அரசு ஈடு கட்டி வருகிறது. இந்த வகையில் 1970—71-ஆம் ஆண்டில் நமது மாநில அரசு 84 இலட்ச ரூபாய் செலவிட்டிருக்கிறது. 1971—72க்கு, ஒரு கோடி ரூபாயை மாநில அரசு வழங்கியிருக்கிறது. வேறு எந்த மாநிலத்தையும் விடத் தமிழகம்தான் இதுபோன்ற திட்டங்களை மிகுந்த அக்கறையோடு நிறைவேற்றி வருகிறது.

இந்த மருத்துவ மனையில் அனைத்து வசதிகளும் உள்ளன. புறநோயாளர் பிரிவு (Out Patient Block) உள்ளிருப்பு நோயாளர் பிரிவு (In-Patient Block) இரத்த வங்கி (Blood Bank), ஆய்வுச்சாலை (Laboratory) கண்நோய்ப்பிரிவு; சருமநோய்ப் பிரிவு முடம் நீக்கும் பிரிவு ஆகிய அநேக பிரிவுகள் உள்ளன.

இந்த மருத்துவ மனையைத் தவிர, சென்னை நகரில் 28 வட்டார மருந்தகங்கள் உள்ளன. இவற்றில் புற நோயாளிகளைப் பார்வையிட்டு, அவர்களுக்குத் தேவையான மருந்துகளைக் கொடுக்கிறார்கள்—ஊசிகள் போடுகிறார்கள்.

அண்மையில் சைதையில் ஏழு லட்ச ரூபாய் செலவில் ஒரு மருந்தகம் உருவாவதற்கு—முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள்.

இந்த அயனாவரம் மருத்துவ மனையில் மருந்துக் கிடங்கு ஒன்று உள்ளது. மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகள் இங்கே இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல, நகரத்தில் உள்ள 28 இ.எஸ்.ஐ. மருந்தகங்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் இங்கிருந்துதான் அனுப்பப்படுகின்றன.

சுமார் 15 ஏக்கருக்கு மேல் பரப்பளவு கொண்ட இடத்தில் இந்த மருத்துவ மனை அமைந்திருக்கிறது. நான்கு தளம் கொண்ட கட்டடம் இது. நோயாளிகளை மேல் தளங்களுக்கு அழைத்துச் செல்ல மின் ஆற்றலால் இயங்கும் ஏந்து ஊர்தி (lift) ஒன்று இருக்கிறது. இரு அறைகள் கொண்ட அறுவை அரங்குகள், முதல் மூன்று தளங்களிலும் உள்ளன.

இங்கே 24 சிவில் சர்ஜன்கள் இருக்கிறார்கள். மருத்துவமனைக் கண்காணிப்பாளருக்கும், 16 உதவி சர்ஜன்களுக்கும் குடியிருப்புகள் மருத்துவ மனையின் எல்லைக்குள்ளேயே கொடுக்கப்பட்டுள்ளன.

காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை புறநோயாளர் பிரிவு பணிபுரிகிறது. ஆனால் நாள் தோறும் இந்தப் பிரிவில் 600-லிருந்து 700 நோயாளர் வரை வருவ

புறநோயாளர் பிரிவில் சுறுசுறுப்பான பணி நடைபெறுகிறது.

தால், 10.30 மணியுடன் பணி முடிவதில்லை. மேலும் ஒரு மணி நேரம் நீடிக்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் சுமார் 1,000 பேர்கள் வருகிறார்கள். என்றாலும் ஏனைய மருத்துவ மனைகளில் வரும் அளவற்ற கூட்டம் போல் இங்கே கூட்டம் வருவதில்லை. இதற்குக் காரணம் என்ன தெரியுமா ?

இந்த மருத்துவ மனை, தொழிலாளர்—அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் கட்டுப்பட்ட தொழிலாளர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்குமே தவிர வேறு எவருக்கும் அல்ல.

சாதாரண, உடல் நலக் கோளாறுகளுக்கு அந்தந்த வட்டாரங்களில் இருக்கின்ற இ.எஸ்.ஐ. மருந்தகங்களுக்குச் சென்று, அங்குள்ள மருத்துவர்களிடம் தங்களது நோய்களைத் தெரிவித்துத் தேவையான மருந்துகளைத் தொழிலாளர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

இங்குக் கட்டாயம் வர வேண்டும் என்ற கட்டத்தில் உள்ளவர்கள் மட்டும்தான் வருகிறார்கள். வட்டார மருந்தகங்களிலுள்ள மருத்துவர்களால் ஆய்வுக்காக அனுப்பபடுகின்ற நோயாளிகள் தாம் இந்தப் பெரிய மருத்துவ மனைக்கு வருகிறார்கள்.

இங்குள்ள ஆய்வுக்கூடத்திற்கு (Laboratory) ஒவ்வொரு நாளும் 100 'மாதிரி'களுக்கு மேல் வருகின்றன. சிறு நீர்ப் பரிசோதனை, மலப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, சளிப் பரிசோதனை இப்படிப் பலவித பரிசோதனைகளுக்காக இங்கு வருகிறார்கள்.

நாள்தோறும், சராசரியாக 595 பேர் உள்ளிருப்பு நோய்ப் பிரிவில் சிகிச்சை பெறுகிறார்கள்.

50 ரூபாய்க்கு மேலும் 500 ரூபாய்க்குக் கீழும் மாத வருவாய் உள்ள தொழிலாளர்கள்தான் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெற முடியும்.

தொழிலாளர்கள் தாங்கள் கட்டும் ஆயுள் காப்பீட்டுத் தொகையைக் குறித்த காலத்தில் செலுத்தத் தவறுவதுண்டு. அப்படிப்பட்டவர்களுக்குச் சலுகையை இந்த மருத்துவ மனை உடனடியாக நிறுத்தி விடுவதில்லை. தொடர்ந்து ஆறு வாரம் சலுகை தருகிறார்கள். அதற்குப் பின்பும் அவர்கள் 'பிரிமியம்' தொகையைக் கட்டத் தவறினால் அவர்களுக்கு இங்குக் கிடைக்கின்ற சிகிச்சை நிறுத்தப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை (Identity Card) கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவர்களது குடும்பத்தினருக்கும் அடையாள அட்டை உண்டு; தொழிலாளரின் மனைவி, குழந்தைகள் முதலியோர் இந்த அட்டையில் குறிப்பிடப்படுகின்றனர். குழந்தை பிறந்தால், அதற்கென இருக்கும் ஒரு மனுவில் எழுதிக் கொடுத்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தற்காலிகத் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டை உண்டு ; இந்த அட்டை 13 வாரங்களுக்குச் செல்லுபடியாகும்.

இந்த அடையாள அட்டை தொலைந்து விட்டால் என்ன செய்வது ? ஸ்டர்லிங் ரோட்டில் உள்ள சென்னை மாநிலத் தொழிலாளர் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் இயக்குநருக்கு, அடையாள அட்டையின் எண்ணைக் குறிப்பிட்டு, அது காணாமற் போன விவரத்தையும் தெரிவித்து, மனுச் செய்ய வேண்டும். 50 காசுகளைப் பெற்றுக் கொண்டு நகல் பிரதி தருவார்கள்.

அரசினர் மருத்துவ மனையில், உள்ள 'பொது வார்டுகள்', 'ஸ்பெஷல் வார்டுகள்' என்ற பிரிவு இந்த மருத்துவ மனையில் கிடையாது. ஏனென்றால், இந்த மருத்துவ மனையே 'ஸ்பெஷல் மருத்துவ மனை'யாகக் காட்சி தருகிறது. தூய்மையும் துப்புரவும் இங்கே நிறைந்திருக்கிறது. மருத்துவ மனை நல்லமுறையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பொது மருத்துவ மனைக்கும் இந்தத் தொழிலாளர் மருத்துவ மனைக்கும் மிகுந்த வேற்றுமை இருக்கிறது. குறிப்பிட்ட நோயாளியின் நோய் நீங்குவதற்குத் தேவைப்படும் மருந்து, மாத்திரைகள் பொது மருத்துவ மனையின் இருப்பில் இல்லாதிருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நோயாளிகள் மருந்துகளைத் தங்கள் சொந்தச் செலவில் வாங்கிக் கொள்ள நேரும். ஆனால் இந்த இ. எஸ். ஐ. மருத்துவ மனையில் அப்படி இல்லை ; பெரும்பாலும் இங்கே விலையுயர்ந்த மருந்துகளே வாங்கி வைக்கப்பட்டுள்ளன. நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருந்து, மருத்துவ மனையின் இருப்பில் இல்லாவிட்டால் அது என்ன விலையானாலும் சரி, மருத்துவ மனையினரே அதை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து நோயாளிக்குத் தருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பு, இங்கே சேர்க்கப்பட்ட நோயாளி ஒருவருக்குக் கண்ணில் அல்சர் ஏற்பட்டு விட்டது. அதனைக் குணப்படுத்துவதற்காக 'காராமைசின்' (Garamycin) என்ற விலையுயர்ந்த மருந்தை மருத்துவர்கள் சிபாரிசு செய்தனர். அந்த மருந்து, மருத்துவ மனையில் இல்லை. உடனே அதனை வாங்கிக் கொடுத்தனர். இரண்டு வேளைகளுக்குரிய அந்த மருந்தின் விலை எவ்வளவு தெரியுமா? 36 ரூபாய். தனது மருத்துவ மனையை நாடிவரும் நோயாளிக்கு மருத்துவ மனையே இவ்வாறு அதிகச் செலவு செய்து மருந்து வாங்கித் தரும் நிகழ்ச்சிகள் இங்கே பல முறைகள் நடைபெற்றிருக்கின்றன.

மகப்பேறு அடையும் பெண் தொழிலாளர்களுக்கு 12 வாரம் ஊதியத்துடன் கூடிய விடுமுறை கிடைக்கிறது. கருச்சிதைவு ஏற்பட்டுவிட்டால் விடுமுறையும் பணமும் கொடுக்கப்படுகிறது. இவை எல்லாம் சாதாரணமாக வேறு எந்தத் துறையில் பணி புரிபவர்களுக்கும் இல்லாதது. இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு மட்டுமே கிடைத்துள்ள தனி உரிமைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள எக்ஸ்ரே பிரிவு மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. 1971-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நவம்பர்த் திங்கள் வரை 29,571 எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதாவது மாதத்திற்கு சராசரி 2,700 எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டுள்ளன. 'ஸ்கிரீனிங்' என்று சொல்லப்படும் திரையிட்டுப் பார்த்தலுக்கும் இங்கே வசதி இருக்கிறது. என்றாலும், இங்கே 'ஸ்கிரீனிங்' அதிகமாகச் செய்யப்படுவதில்லை. ஏனென்றால் இங்கு வரும் தொழிலாளர்கள் 'ஸ்கிரீனிங்' செய்வதை வரவேற்பதில்லை. 'இருட்டறையில் டாக்டர்களே பார்த்துக் கொள்கிறார்கள்—நமக்கு எதுவும் புரியவில்லையே'' என்று எண்ணுகிறார்கள். அதனால் எக்ஸ்ரே எடுத்து—அந்தப் படத்தை அவர்களின் கண்களில் காண்பித்தால்தான் அவர்களுக்கு ஒருவித நம்பிக்கை ஏற்படுகிறதாம்.

இளம்பிள்ளை வாதத்துக்கு இங்கே அபூர்வமான சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அதற்குப் பலவகை இயந்திரங்கள் இங்கே உள்ளன. அவற்றை இயக்குவதன் வாயிலாக இளம்பிள்ளை வாதம் வந்த குழந்தைகள் — நோய் நீங்கப் பெறுகிறார்கள்.

☐ Wax Bath என்று சொல்லப்படும் மெழுகுக் குளியல் சிகிச்சை முறை இங்கே இருக்கிறது. கை, கால்கள், விரல்கள் முதலியனவற்றை இயக்குவதற்காக—இந்த மெழுகுக் குளியல் பயன்படுகிறது. இது மின் ஆற்றலால் இயங்குகிறது. தாங்கிக் கொள்ளக்கூடிய அளவு வெப்ப நிலையில்தான் இருக்கிறது. உருகிக் கொண்டிருக்கும் மெழுகுக் குழம்பில், நோயாளிகள் தங்கள் விரல்களைச் செலுத்துகிறார்கள். சில வினாடிகளில் விரல்களை வெளியே எடுத்து விட்டு, விரல்களைச் சுற்றி உறைபோல் படர்ந்துள்ள மெழுகை நீக்கித் தொட்டிக்குள்ளே போட்டுவிட்டு, மீண்டும் விரல்களை மெழுகுக் குழம்புக்குள் செலுத்துகிறார்கள். இவ்வாறு நாள்தோறும் சிலமணி நேரங்கள் இந்தப் பயிற்சி செய்கிறார்கள்.

இங்கு நல்ல முறையில் நிருவகிக்கப்படும் சமையற் பிரிவு ஒன்று இருக்கிறது. செம்பரம்பாக்கம் கூட்டுறவுக் கைக்குத்தலரிசி ஆலையிலிருந்து அரிசி வரவழைக்கப்படுகிறது. மாதத்திற்கு 1,000 கிலோ கிராம் அரிசி செலவாகிறது.

இங்கு நோயாளிகளுக்குத் தரப்படும் சாப்பாடு தரமானதாகும். அதன் விலை 3 ரூபாய் ஆகிறது. வியாழக்கிழமை என்றால் மாமிச நாள் என்றும், ஞாயிற்றுக்கிழமை என்றால் முட்டை நாள் என்றும், செவ்வாய்க்கிழமை என்றால் மீன் நாள் என்றும் சொல்லப்படுகிறது. அதாவது அந்தந்த நாளில்—அந்தந்த உணவுகள் கொடுக்கப்படுகின்றன.

உடைகள், படுக்கை விரிப்புகள், மெத்தைகள் ஆகியவை நீராவிச் சலவையின் வாயிலாகத் தூய்மை செய்யப்படுகின்றன. சலவைப் பிரிவு இங்குச் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது.

இந்த மருத்துவ மனையைச் சேர்ந்த ஆம்புலன்ஸ் வண்டி உண்டு. நோயாளிகள் தொலை



மெழுகுக்குளியல்.

பேசி மூலம் மருத்துவ மனைக்குத் தொடர்பு கொண்டு, ஆம்புலன்ஸைத் தங்களது இருப்பிடத்திற்கு வரவழைத்து மருத்துவ மனைக்கு வந்து சேரலாம். ஆம்புலன்ஸ் கிடைக்காத சூழ்நிலையில்—நோயாளிகள் டாக்சி வைத்துக் கொண்டு, மருத்துவ மனைக்கு வந்து சேரலாம். டாக்சிக் கட்டணத்தை நோயாளிக்குக் கொடுத்து விடுகிறார்கள் மருத்துவ மனையினர், உடனே அல்ல—இரண்டு மூன்று நாட்களில்.

இங்கே சிகிச்சை பெறும் நோயாளிகள் மருத்துவ மனையில் இறந்து விட்டால், உறவினர்கள் மருத்துவமனையில் இறப்புச் சான்றிதழ் பெற்று, உள்ளூர் இ.எஸ்.ஐ. அலுவலகத்தில் மனுச் செய்தால் இ.எஸ்.ஐ. கழகம் சவ அடக்கத்திற்காக 100 ரூபாய் தருகிறது.

நடமாடும் பொது மருத்துவ மனையும் இங்கு உள்ளது. ஒவ்வொரு நாளும், காலையும் மாலையும் இந்த நடமாடும் மருத்துவ மனை பணிபுரிகிறது. தாம்பரத்திலிருந்து மீஞ்சூர் வரை, கிண்டி அருகில் நந்தம்பாக்கம், செயின்ட் தாமஸ் மலை ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்றுவருகிறது. அங்குள்ள ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்ந்துகொண்ட தொழிலாளர்களைப் பரிசோதித்து அவர்களது நோய் நீங்க மருந்து தருகிறது. அவர்களுக்குக் காச நோய் இருக்கிறதா என்ற ஆய்வும் நடத்துகின்றது.

இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் மற்றொரு சிறப்பும் உண்டு. இங்கே ஒரு நூலகம் உள்ளது. சென்னை மாவட்ட நூலகத்தின் கிளை இது. பிற்பகல் 1 மணியிலிருந்து 7 மணி வரை இந்த நூலகம் திறந்திருக்கும் ; நோயாளிகள் இங்கே வந்து படிக்கலாம் ; புத்தகங்களை எடுத்துச் செல்லலாம். திங்கள் இதழ்கள், கிழமை இதழ்கள் முதலியவையும் இங்கே உண்டு. இவை மருத்துவ மனையின் சொந்தச் செலவில் வாங்கப்படுகின்றன.

இந்த மருத்துவ மனைக்குச் சிகிச்சை பெற வருகின்றவர்கள் இங்குக் கிடைக்கும் சிகிச்சையை எண்ணி, மன மகிழ்ச்சி கொள்கிறார்கள். மருத்துவ மனை என்றதும், பொதுவாக ஏற்படும் அச்சம் இங்கு வருபவர்களின் உள்ளத்தில் ஏற்படுவதில்லை. அந்த அளவுக்குத் தூய சிகிச்சை இங்கே கிடைக்கிறது. சுருங்கச் சொன்னால் உழைப்பாளர் நலங் காப்பதற்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற மருத்துவமனை இது என்றுதான் குறிப்பிட வேண்டும்.

திரு இலட்சுமிபதி

சுமார் 24 ஆண்டுகள் செய்தித் துறைப் புகைப்படப் பிரிவில் பணிபுரிந்த திரு இலட்சுமிபதி 1924-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் நாள் சென்னையில் பிறந்தார். திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்றுச் செய்தித் துறையில் 1948 பிப்ரவரி மாதம் புகைப்படப் பிரிவின் உதவியாளராகச் சேர்ந்தார். அவர் எடுத்த முதல் புகைப்படம் : காந்தியடிகளின் அஸ்தி சென்னைக்கு வந்த காட்சி.

1956 அக்டோபர் மாதம் தனித் தமிழ்நாடு செயல்பட்ட சமயத்தில் தலைமைப் புகைப் படக்காரரான திரு ஜோசப், கேரள மாநிலத்திற்குப் பணிபுரியச் சென்று விட்டதால் திரு இலட்சுமிபதி தலைமைப் புகைப் படக்காரர் பொறுப்பை ஏற்றார். அன்று முதல் அவர், தான் காலமாகும் வரை மிக முக்கியமான நிகழ்ச்சிகள் பலவற்றைப் படமெடுத்துள்ளார்.

முதுமலைக் காட்டில் புலிகளே இல்லை என்று எல்லாரும் கூறிவந்த சமயத்தில் இவர் அங்குச் சென்று ஒரு புலியைப் படம் எடுத்து வந்தார்.

திடீரென்று நோய்வாய்ப்பட்ட அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும்போது கூடக் கடமையில் கருத்துக் காட்டி உதவியாளர்களுக்குத் தாக்கீது செய்துவிட்டுப் போனதும், ஒரு சமயம் இறந்த குழந்தையை அடக்கம் செய்துவிட்டு அன்று பிற்பகலே அலுவலகத்திற்கு வந்த நிகழ்ச்சியும் அவருடைய கடமையுணர்ச்சியைக்காட்டுகின்றன. தன்னைப் போலவே மற்றவர்களும் கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்பதில் அவர் மிக உன்னிப்பாக இருந்தார்.

அவர், தன் மனைவியையும் எட்டுக் குழந்தைகளையும் விட்டு விட்டு 5-7-1972 அன்று சென்னையில் அரசினர் பொது மருத்துவமனையில் காலமானார். அமைச்சர்களும், அதிகாரிகளும், அவருடன் பணிபுரிந்தவர்களும், அவருக்குக் கடைசி மரியாதை செலுத்தி இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

அவரது குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



உலகெங்கனும் உள்ள வேளாண்மை ஆராய்ச்சியாளர்களின் இடைவிடா முயற்சியால், புத்தம் புதிய ரகங்கள் நித்தம் நித்தம் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அப்புதிய ரகங்கள் அதிக மகசூல் அளித்து, உழவர்களின் வருவாயை அதிகப்படுத்துவதுடன், உலகில் நிலவிவரும் உணவுப்பற்றுக்குறையையும்ஊட்டச் சத்துப் பற்றுக்குறையையும், அகற்றுவதற்குப் பெருந் துணையாக இருக்கின்றன. அரிய புதிய ரகங்களைக் கண்டுபிடிக்கும் அரும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பயறு வகைப் பிரிவினல், அண்மையில் ' கோ. 8 ' என்ற புதிய அவரை வெளியிடப் பட்டுள்ளது தமிழ்நாடு உழவர்களுக்கு உவகைதரும் செய்தியாகும்.

தற்பொழுது காய்கறிக்காகப் பயிரிடப்பட்டு வரும் நாட்டு அவரை வகைகளை ஒரு குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே பயிரிட இயலும். பொதுவாக நாட்டு அவரை வகைகளின் விதைகளை ஆடி (ஆகஸ்ட்), மாதத்தில் குழிகளில் ஊன்றுவார்கள். அவை முளைத்து, வளர்ந்து பூத்து, கார்த்திகை, மார்கழி தை (டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி) மாதங்களில் காய்த்துப் பலன் கொடுக்கும். பொதுவாக, நாட்டுவகை அவரை படரும் தன்மையுள்ளவை. அவைகள் ஏழு மாத வயதுடையவையாகும். ஆனல் புதிதாக வெளியிடப்பட்டுள்ள 'கோ. 8' அவரை நாட்டு வகை அவரைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

ஏனெனில், இது தோட்ட அவரையையும், மொச்சையையும் ஒட்டுச் சேர்த்துக் கண்டுபிடிக்கப் பட்டதாகும்.

கோ. 8 அவரையின்

சிறப்புக் குணங்கள்.

1. கோ. 8 அவரை, செடியைப் போன்று நேராக வளரும். எனவே, கோ. 8 அவரைக்குப் பந்தல் தேவையில்லை.

2. விதைத்த 45 நாட்களில் பூத்து, 60 நாட்களில் காய்க்கும் தன்மை வாய்ந்தது. 100 நாட்கள் வரை பூத்து, ஒவ்வொரு 5 நாட்களுக்கும் ஒரு முறை வீதம் காய்களை அறுவடை செய்யலாம். எனவே, கோ. 8 அவரை குறுகிய கால வயதுடையதாக இருப்பதுடன், குறுகிய காலத்திலேயே பலனளிக்க வல்லதாக இருக்கிற கிறது.

3. எல்லாப்பருவத்திலும் கோ. 8 அவரையைப் பயிர் செய்யலாம்,

4. வீட்டுத் தோட்டத்திலும், பெரும் பரப்பளவிலும் பயிரிட ஏற்றது.

5. கோ. 8 அவரையை இறைவையாகவும், பயிரிடலாம் : மானா வாரியாகவும் சாகுபடி செய்யலாம்.

6. கோ. 8 அவரையின் இளங்காய்கள் இளம் பச்சை நிறமாகவும், 12 செண்டி மீட்டர் (4.8 அங்குலம்) நீளமுள்ளதாகவும், சுவை மிகுந்ததாகவும் இருக்கின்றன.

7. ஹெக்டேருக்கு 4,600 கிலோ வரை மகசூல் அளிக்க வல்லது.

8. தமிழகத்தில் மட்டுமல்ல. மற்ற மாநிலங்களிலும் கோ. 8 அவரையை எல்லாப் பருவத்திலும் பயிரிடலாம்.

இத்தகைய பல்வேறு சிறப்புக் குணங்களைக்கொண்ட கோ. 8 அவரையைப் பயிரிடக்கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

சாகுபடிக் குறிப்புகள்.

பருவம். ஆண்டு முழுவதும் கோ. 8 அவரையைப் பயிரிடலாமெனினும், இறைவைப் பயிருக்கு மார்ச்சு-ஏப்ரல் மாதங்களும், ஜுலை-ஆகஸ்டு மாதங்களும் சாலச் சிறந்தவையாகும்.

மண்.—செம்மண் கலந்த குறு மண் மிகவும் உகந்தது.

விதையளவு .— ஹெக்டேருக்கு 25 கிலோ (ஏக்கருக்குப் பத்து கிலோ) விதை தேவைப்படும்.

இடைவெளி.—வரிசைக்கு வரிசை 60 செண்டி மீட்டர் (2 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 செண்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு, 2.5 செண்டி மீட்டர் (ஓர் அங்குலம்) ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும்.

உர அளவு:—கீழ்க்கண்ட அளவில் அடியுரம் இட்டால் கோ. 8 அவரை நல்ல மகசூல் அளிக்கும்.

ஹெக்டேருக்கு.

தொழு எரு—50 வண்டி.
அமோனியம் சல்பேட்—
125 கிலோ.
சூப்பர் பாஸ்பேட்—
300 கிலோ.

தொழு எரு—20 வண்டி.
அமோனியம் சம்பேட்—
50 கிலோ.
சூப்பர் பாஸ்பேட்—120
கிலோ.

மேற்கூறிய முறையில் கோ. 8 அவரையைச் சாகுபடி செய்து பலன் பெறுமாறு தமிழக உழவர் பெருமக்களைக்கேட்டுக்கொள்கின்றோம். அதுபோலவே கோ. 8 அவரை பயிரிட்டுச்சுவைமிகு காய்களைப் பெற்று மகிழ்வோடு வாழுமாறு வீட்டுத் தோட்டம் அமைப்போரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

(தகவல் : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3)

கூவம் நதியின் மிசை நிலவினிலே...



தென்னகத்தின் பலதரப்பட்ட மக்கள் வாழும் சென்னை நகரத்திற்கு ஒரு சாபக்கேடு எனப் பலராலும் கருதப்பெற்று வந்த கூவம் ஆற்றிலிருந்து பரவிய துர்நாற்றத்தைப் போக்கி, மக்களின் உடல் நலத்தைப் பேணிக் காக்கத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட மாபெரும் திட்டங்களுள் கூவம் சீரமைப்புத் திட்டமும் ஒன்று. இந்தத் திட்டம் பல்லாண்டுகளாக ஏட்டளவிலேயே இருந்து வந்தது. அதனைச் செயற்படுத்திய பெருமை இன்றையத் தமிழ்நாடு அரசையே சாரும்.

கூவம் நதி, சென்னையில் வங்கக் கடலில் வந்து சங்கமம் ஆகும் வரையில் அது, நகரின் மையப் பகுதிகளிலேயே ஊர்ந்தும் ஓடியும் வரும். பலமாதங்கள் இந் நதியில் தண்ணீர் வராதபோது தண்ணீர் ஓட்டமில்லாதபோது வழி நெடுகிலும் பலமுனைகளிலிருந்து வந்து கலக்கின்ற நகரின் நல்வாழ்விற்கு ஊறு விளைவிக்கும் படுமோசமான கழிநீர்த் தேக்கமாக விளங்கியதையும் சென்னை வாழ் மக்களும், சென்னைக்கு வந்து செல்லும் வெளியூர்-வெளிநாட்டுப் பயணிகளும் அறிவார்கள். இந் நிலைக்கு ஒரு விடிவு வராதா என்று மக்களெல்லாம் எண்ணி ஏங்கி, இளைத்து அலுத்துப் போன நேரம்,

'எத்துறையில் சென்றாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பதுபோல எதைச் செய்தாலும் மக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாகக் கருதிச் செய்கின்ற — ஏன் ? மக்களின் நல்வாழ்வுக்காக எதையும் மேற் கொள்ளுகின்ற பண்புடைய தமிழ்நாடு அரசு கூவம் சீரமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த முற்பட்டது.

அட்டை
சொல்லும்
கட்டுரை

நதியின் இருமருங்கிலும் எழுப்பப் பெற்ற குடிசைப் பகுதிகளை அப்புறப் படுத்தி, அந்தக் குடிசை வாழ் மக்களுக்கு நல்வாழ்வளிப்பது ;

நீரோட்டத்தின் போக்கைத் தக்கவாறு மாற்றிக் கடல்நீரை நீரெழுச்சி முறையில் உள்ளே பாய்ச்சி, அதனைத் தூய்மைப் படுத்தி, நதியின் இருபுறமும் உட்கால்வாய்கள் வெட்டிக் கழிவு நீரைக் கடலுக்குள் பாய்ச்சவும், பலமான பக்கச் சுவர் அமைத்து நீரோட்டத்தை ஒழுங்கு படுத்தவும் வகை செய்தல்;

நதியின் இரு மருங்கிலும் நல்ல சிமெண்ட் தளமிட்ட நடைபாதைகள் அமைத்து, அதில் உல்லாசப் படகுப் போக்குவரத்தை ஊக்குவித்தல்;

நதியின் இரு மருங்கிலும் அழகிய தோட்டங்களையும் புல்வெளிகளையும், பூங்காக்களையும் அமைத்து அழகு படுத்தல்;

அழகிய பல் வேறு திட்டங்களையும் உள்ளடக்கிய இந்தக்-கூவம் சீரமைப்புத் திட்டத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்துத் திட்டத்தை நிறைவேற்றும் பணி மேற் கொள்ளப்பட்டது.

முதற்கட்டமாக, கூவம் நதி கடலோடு கலக்குமிடத்தில் ஒரு சிமெண்ட் மதகு அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. இந்த மதகு, நீர் மட்டத்தைக் கட்டுப் படுத்தக் கூடியது. அலைவேகம் உயர்ந்து கடல் பொங்கும் பொழுது கடல்நீர் நதிக்கு வரவும், அலை உயரம் குறையும் போது நதியின் நீர்மட்டம் குறையாமல் பாதுகாக்கவும் இம் மதகு பயன்படக்கூடியது. இவ்வாறு கடல் நீர் நதிக்குச் செலுத்தப் படும்போது, கடல் மணல் வந்து மதகில் குவிந்து விடாமல் தடுத்துக் காப்பதற்காகவும், மணல் திட்டுக்களை ஒழுங்கு செய்து கடல் நீரைச் சீராக உள்ளே விடவும் ஒரு மாபெரும் மணல்வாரி இயந்திரம் நிறுவப் பட்டுள்ளது. இவ்வளவு பெரிய மணல்வாரி இயந்திரம் இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்து இரண்டாவது கட்டத்தில் சேத்துப்பட்டு ரெயில்வேப் பாலத்திலிருந்து நேப்பியர் பாலம் வரையுள்ள சுமார் ஐந்தரை மைல் நீளத்திற்குக் கால்வாய் வெட்டும் வேலை தொடங்கப்பட்டு, இரு கரைகளின் சரிவுகளிலும் சிமெண்ட் பலகைகள் பொருத்தப்படும பணி மேற்கொள்ளப் பட்டு அது மிக விரைவில் நிறைவுறும் நிலையில் உள்ளது.

நேப்பியர் பாலத்தின் அருகில் பல்வேறு நவீன வசதிகளுடன் கூடிய மிக அழகிய படகுக் குழாம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இந்தப் படகு நிலையத்தில் முதல் தளத்தில் சிற்றுண்டி விடுதி அமைக்கப் படவிருக்கிறது. படகு நிலையத்தின் நுழைவுப் புறத்தே அகில உலகத் தரத்தில் மிகவும் நவீனமான பல்வேறு வசதிகளுடன் கூடிய இரு நீச்சல் குளங்கள் அமைக்கப் பட்டுள்ளன. நீச்சல் குளங்களின் உட்சுற்றுப் புறமும், தரைப்பகுதியும் பளபளக்கும் பளிங்குக் கற்களால் பொருத்தப் பட்டுள்ளன. அருகில், உடை மாற்றிக் கொள்வதற்கு உதவியாக வசதியான அறையும், நீச்சல் குளத்தைப் பார்வையிட்டவாறு பார்வையாளர் அமர்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. நீச்சல் குளங்களுக்குப் புதிய சுத்தமான தண்ணீரைத் தொடர்ந்து செலுத்தவும், அடிக்கடி தண்ணீரை மாற்றவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்து, குழாத்திலிருந்து சேத்துப்பட்டு ரெயில்வே பாலம் வரை சுமார் 5½ மைல்களுக்குள் வெல்லிங்டன் பாலம் ஹாரிஸ் பாலம் கலைக்கல்லூரிப் பாலம், வாலாசா பாலம், கல்லூரிப் பாலம், கமான்டர் இன் சீப் பாலம், சேத்துப்பட்டு ரெயில்வே பாலம் ஆகிய எட்டு இடங்களிலும் படகுத் துறைகள் கட்டப்படுகின்றன. இத் துறைகளில் பயணிகள் ஏறவும் இறங்கவும், சிற்றுண்டிகள் பெறவும் வசதிகள் செய்யப் பட்டு வருகின்றன.

படகுகளின் வசதியான ஓட்டத்திற்காகப் பாலங்களிலும் படகுத் துறைகளிலும் மின் வசதிகள் செய்யப்படுகின்றன. கூவம் நதியின் இரு மருங்கிலும் மின் விளக்குகள் பொருத்தப் படுவதற்கான பணிகள் நடைபெறுகின்றன.

ஜெர்மன் குடியரசைச் சார்ந்த ஹாலி மாநகராட்சியினால் அன்பளிப்பாகத் தரப் பட்ட ஒரு மாபெரும் அழகிய செயற்கை நீரூற்றுக் குழாய் நேப்பியர் பாலத்துக்கு அருகில் அமைக்கப்படுகிறது. இந்தச் செயற்கை நீரூற்று 300 அடி உயரத்திற்கு மேல் நோக்கிப் பாயவல்லது. இதில்பொருத்தப் படும் வண்ண மின் விளக்குகளின் ஒளியும், அவ்வொளியில் இந் நீரூற்று இயங்கும் அழகும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் என்பதில் ஐயமில்லை.

கூவத்தின் வட சிறகிலும் அண்ணா சதுக்கத்திலும் அழகிய பூங்காக்களும் புல்வெளிகளும் நீர்ச்சுனைகளும் நிறுவப்பட்டுள்ளன. நகரின் அழகுக்கு அழகு சேர்க்க நடமாடும் சிற்றுண்டி விடுதியும், பூங்காக்களும், பொழுதுபோக்கு விடுதிகளும் அமைப்பதற்காக வட சிறகின் ஒரு பகுதி தமிழ்நாடு உல்லாசப் பயண அபிவிருத்தி இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரின் சாபக் கேடாகக் கருதப்பட்ட கூவம் நதி, சென்னைக்குக் கிடைத்த பெரும்பேருகக் கருதப்படக் கூடிய வகையில் விரைந்து மாற்றப்பட்டுவருகிறது.

அண்மையில், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்களும், தமிழ் நாடு சுற்றுலாத்துறை-பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்களும் கூவம் நதியில் படகுப் பயணம் செய்து பாராட்டியுள்ளனர்.

ஜூலை மூன்றுவது வாரத்தில் பெரும்பாலும் படகுப் பயணம் செய்வதற்கான முயற்சிகள் மிக விரைவாக மேற் கொள்ளப் பட்டுள்ளன.

கூவம் நதியில் நாம் இயந்திரப் படகு, துடுப்புப் படகு, காலால் சுழற்றிச் செலுத்தும் படகு ஆகிய மூன்று வகையான படகுகளில் பயணம் செய்யலாம். இப்போதைக்குச் சுமார் 15 படகுகள் விடப்பட இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா விரும்பியதற்கிணங்க, சென்னையின் கூவம் இங்கிலாந்தின் 'தேம்ஸ்' ஆக மாறிக் கொண்டிருக்கிறது.

129

ஆம்!

'கூவம்நதியின்மிசை
நிலவினிலே
கொஞ்சும்தமிழ் இளைஞர்
கூட்டத்துடனே
பாவலர் தமிழினில்
பாட்டிசைத்துப்
படகுகள் ஓட்டிவிளை
யாடிவருவோம்'

என்ற கலைஞரின் கற்கண்டுக் கவிதையைப் பாடி மகிழ்ந்த வண்ணம் நாம் கூவம் நதியில் உல்லாசப் படகுப்பயணம் மேற்கொள்வோமாக!



காய்கறி •
சாகுபடியாளர்களே!
புழுபூச்சிகள் உங்கள்
இலாபங்களைத்
தின்பதை இனி
நீங்கள் தவிர்க்கவாம்

ஸைதியான் புழுபூச்சிகளினால் உண்டாகும்
ப்ரீமியம் கிரேட் மலாதியான்
சேதத்திலிருந்து பயிர்களை சக்தி
வாய்ந்த முறையில் பாதுகாக்கிறது

ஏனெனில் **ஸைதியான்** ஒரு சாதாரண பூச்சிக் கொல்லியல்ல,
புழு பூச்சிகளினால் ஏற்படும் ஈடு செய்ய முடியாத
சேதத்திலிருந்து உங்கள் காய்கறிச் செடிகளையும்,
இலாபத்தையும் பாதுகாக்கிறது.

ஸைதியான் பட்டவுடனே புழுபூச்சிகள் மடிகின்றன,
உங்கள் காய்கறிச் செடிகள் சொல்லத்தரமற்ற சேதத்தி
லிருந்து தப்பிக்கின்றன. **ஸைதியான்** வண்டல்களை
விட்டுவைப்பதில்லை. பயிர்ச் செழுமைக்கு உகந்த
பூச்சிக் கொல்லி...**ஸைதியான்**...நூற்றுக்கு
மேற்பட்ட புழுபூச்சி வகைகளினால் பாதிக்கப்படும்
தொண்ணூறுக்கு மேற்பட்ட பயிர்வகைகளைப்
பாதுகாக்கும், பலகாரிய பூச்சிக் கொல்லி.

CYANAMID *உலகெங்கும் விவசாயத்திற்கு சேவை செய்கிறது*

விவசாயப் பிரிவு
ஸயனமைட் இந்தியா லிமிடெட்
த.பெ. எண் 9109, பம்பாய்-25

SISTA'S-CIL-372TAM

131
69681

திறமைக்கு ஏற்ற வேலை



இருக்கின்ற வாய்ப்புகளைப் பொறுத்துத் திறமைக்கு ஏற்ற வேலையைப் பெற இளைஞர்களுக்கு வழி காட்டுவது என்பது ஒரு சீரிய குறிக்கோள். சிந்தனையாளர்கள் பலராலும் போற்றப் பட்ட கருத்து இது. ஆனால், நடைமுறையில் இவ்வகையில் முறையான பணி அண்மைக் காலத்தில் தான் தொடங்கப்பட்டது.

நாட்டில் எந்தெந்த வகை வேலைகள் அல்லது தொழில்களுக்கு அதிகத் தேவை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு தனி ஒரு நபரின் இயல்பு, மனப்பாங்கு, ஆற்றல் ஆகியவைகளுக்கு ஏற்ப வேலைக்கும் முன்னேற்றத்துக்கும் ஆலோசனை கூறுவதே, வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள உதவும் அமைப்பின் நோக்கமாகும். வேலையின் மூலம் திறமையை வளர்த்துக் கொண்டு அதன் மூலம் மனநிறைவு கண்டு அதே நேரத்தில் தேசீய ஆள் பலத்தை மிகப் பயனுள்ள முறையில் ஈடுபடுத்திக் கொள்வது இத்திட்டத்தின் அடிப்படையான அம்சம் ஆகும்.

ஆள்பலம் வீணாக்கலாமா ?

ஒரு நாட்டின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்கு, நாட்டினுடைய மூலப் பொருட்கள், தொழில் நுட்ப வசதிகள், நிதிவசதிகள் ஆகியவைகளைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாதது என்பது அனைவரும் அறிந்ததே. இதே வகையில் நாட்டின் ஆள் பலத்தையும் முறையாகத் திட்டமிட்டுப் பயன்படுத்துவது அவசியம் என்பதை, கடந்த 20-30 ஆண்டுகளாகவே பல்வேறு நாடுகளின் அரசுகளும் உணரலாயின.

மக்கள் தொகை மிக அதிகமாக உள்ள இந்தியா போன்ற நாடுகளில், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள், முறையான தொழில்வகைத் தேர்ச்சி பெற்றவர்கள் பற்றாக்குறையாக இருக்கும் நிலை ஒரு பக்கமும், ஆள் பலம் உபரியாக இருக்கும் நிலை மற்றொரு பக்கமுமாக இருப்பதனால், ஆள் பலத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொள்கின்ற பணி அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

வளரும் வாய்ப்புகள்

வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு நாட்டில், படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பரவியிருக்கின்ற, நிலைமையானது பலத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தாத குறையையே குறிப்பிட்டுக் காட்டுகிறது. பல தொழில்களில், தொழில் நுட்ப நபர்களும் தொழில் பயிற்சி பெற்றவர்களும் பற்றாக்குறையாக இருக்கும் நிலையைப் பார்க்கும் போது, இவ்வகையில் நமது குறைபாடு நன்கு பளிச்செனத் தெரிகிறது.

தொழில் நுட்ப முன்னேற்றம் புதிய தொழில்கள் கண்டுபிடிப்பு, புதிய தொழில்கள் வளர்ச்சி, புதிய முயற்சிகள் புது வகை வேலைகள், ஏற்கெனவே உள்ள வேலைகளில் மாற்றங்கள் முதலியவற்றின் விளைவாக, இன்று தேவைப்படும், சில தொழில் நுட்பங்களும் சில உத்திகளும் மிக விரைவில் பயனற்றுப் போகும் நிலை ஏற்படலாம். எனவே, நாட்டின் ஆள் பலத் தேவைக்குக் கல்வி தொழில் பயிற்சித் திட்டங்களுக்கிடையே துல்லியமானதோர் சமநிலையைக் கண்டாக வேண்டியிருக்கிறது.

ஏதோ ஒரு வேலை

தெரிந்தோ தெரியாமலோ, நாட்டின் இளைஞர்கள் பலரும், இளம் பெண்கள் பலரும் தொலை நோக்குடன் சிந்திக்காமல் ஏதாவது ஒரு வேலையை மேற்கொண்டு விடுகின்றனர். இந்த வேலை தங்கள் வருங்கால வாழ்க்கை விதியோடு பிணைப்புடையது என்பதைப் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. ஏதோ வேலை கிடைத்தது என்கின்ற முறையிலோ தங்கள் பெற்றோர், நண்பர்கள் ஆகியவர்களின் சொற்படியோ, ஒரு வேலையை மேற்கொண்டு விடுகின்றனர். அந்த நேரத்தில் அவர்கள் தங்களுக்குரிய ஆற்றல், மனப்பாங்கு ஆகியவைகளை வைத்து எண்ணிப் பார்த்து ஒரு முடிவு செய்யாமல், அப்போதைய நிலையை ஒட்டி முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

திறனுக்கு ஏற்ற வேலை

வேலையில்லாத் திண்டாட்டம் இப்போது ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பள்ளிப் படிப்பை அல்லது கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு வரும் இளைஞர்களில் எண்ணற்ற பேர்களுக்குத் தாங்கள் என்ன வேலைக்குத் தகுதியானவர்கள் என்பது தெரியாது. தங்கள் வருங்காலத்தைத் திட்டமிட்ட முறையில் அமைத்துக் கொள்ள அவர்களுக்குச் சரியான வழி காட்டுவோரும் கிடையாது. இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான நிலைமையைச் சமாளிக்க முற்படும் போது தான் '' வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள உதவும் அமைப்பு (Vocational guidance) ஓர் அரிய கருவியாக வந்து உதவுகின்றது. வேலைகளைப் பற்றி தெரியவரும் விவரங்களை எல்லாம் புரிந்துகொண்டு கிடைக்கின்ற பயிற்சி வசதிகளையும், தமது விருப்பம், திறன், உளப்பாங்கு ஆகியவைகளையும் கருத்தில் கொண்டு, இளைஞர்கள் தத்தமக்கு [illegible]ரிய வே[illegible] தெரிந்தெடுத்துக் கொள்ள இந்த அமைப்பு வ[illegible]ட்டுகின்றது. ஒரு தொழிலை அல்லது வேலையைப் பற்றி நன்கு சிந்திக்க வைத்து, இன்னும் அதிகப் பொருத்தமான, திருப்தியான வேலையை ஒருவர் நாடலாமா என்று துருவித் தேடிடவும் இது உதவுகின்றது.

இப்படி வழி காட்டுகின்ற இந்த அமைப்பினால் குறிப்பிட்ட வேலை அல்லது தொழில் பற்றிய எல்லா விவரங்களையும் துல்லியமாக உணர்ந்து கொள்ளவும் தமது உளப்பாங்கு, திறன், மன ஈடுபாடு ஆகியவைகளைப் புரிந்து கொள்ளவும் முடிகின்றது. இந்த நிலைமையை அனுசரித்து வழி காட்டுவதும் எளிதாகின்றது. இப்படி வழி சொல்லும்போது, நியமன வாய்ப்புக் கிடைக்கக்

கூடிய வேலைகளாகப் பார்த்துச் சொல்லுவதும் முக்கியம்.

மாவட்டங்களில் பணி

திறமைக்கு ஏற்ற வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்வதில் உதவும் பணி தமிழ்நாட்டில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் தொடங்கியது. இந்தப் புதிய முயற்சிக்கு ஓரளவு முன்னோடியாக இருந்த அமைப்பு, வேலை வசதிப் பயிற்சித் துறையாகும். தேசிய வேலை வாய்ப்பு அமைப்புகள் உள்ள வேலை வழிகாட்டும் பிரிவு, அந்த அமைப்பின் ஒரு முக்கிய உறுப்பாக விளங்கி இளைஞர்களும் வயது வந்தவர்களும் தங்களுக்குரிய வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள உதவுகின்றது. தமிழகத்தில் வேலை வழிகாட்டும் பிரிவுகள், மாவட்டங்களில் (தருமபுரி, நீலகிரி நீங்கலாக) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற அலுவலர்கள் இவற்றில் பணியாற்றுகிறார்கள்.

சில உத்திகள் நியதிகள்

திறமைக்கு ஏற்ற வேலையைக் குறிப்பிட்டு வழி காட்டுவது என்பது சிக்கல்கள் பல நிறைந்த ஒரு நடைமுறையாகும். இப்பணியில் முழு நிறைவு தரும் வகையில் செயல்முடிப்பது எளிதல்ல. ஒரு தனி நபரை எடுத்துக் கொண்டால் கூட, அவரது குண இயல்புகள், திறன்கள் ஆகியவைகளில் எத்தனையோ முரண்பாடுகள் உள்ளன என்பதைக் கவனிக்கும் போது, இச்சிக்கல்களின் தன்மையை ஒருவாறு உணரலாம். ஆனாலும் கூடப் பல ஆண்டுக்காலமாக நடந்த முயற்சிகளின் பலனாகச் சில திட்டவட்டமான உத்திகள் அல்லது நியதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த உத்திகள் அல்லது நியதிகள் நல்ல பலன் தரக்கூடியவை என்பது நிரூபணமாகியும் இருக்கின்றது.

இந்த உத்திகள், நியதிகளைப் பொதுப் படையாகப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. இளைஞர்களை ஒரு தொகுதியாக வைத்து ஆலோசனை வழி வகை கூறுவது.

2. தனிப்பட்ட முறையில் ஆலோசனை, வழி வகை கூறுவது.

தொகுதியாக வைத்து யோசனை

இதில் தொகுதியாக வைத்து ஆலோசனை பல கூறுவதைப் பொறுத்தவரை, வேலை தேடி வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு வருவோரை வைத்து, ஒவ்வொரு நாள் காலையில் வேலை நிலவரங்கள் பற்றிப் பொதுப்படையாக உள்ள நிலைமைகளையும் வாய்ப்புகளையும் எடுத்துரைக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஆலோசனை கூறும் போது அந்தத் தனிப்பட்ட நபரின் இயல்புகள், மதிநுட்பம், கல்வி, திறன்கள், ஆர்வம், அவரது உடல் கூறுத் தன்மைகள், குடும்ப நிலைமை ஆகியவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வேலைவாய்ப்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. அதுபோகத் தகவல் விளக்கம் தரப்படுகிறது. வேலை வாய்ப்புகள் பற்றிய வெளியீடுகளும் வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வேலை வாய்ப்பு அலுவலகப் பணிகள், அதிகமான பயனும் சிறப்பும் உடையவையாக ஆகின்றன.

மாநில வேலை வாய்ப்புப் பயிற்சி இயக்குநரகத்தோடு இணைந்த மாநில வேலை வழிகாட்டும் பிரிவு, மாவட்டங்களில் நடக்கும் இப்பணியை ஒருமுகப்படுத்திப் புது டில்லியில் உள்ள வேலைவாய்ப்பு டைரக்டர் ஜெனரல் வகுக்கப்பட்ட கொள்கைகளைச் செயல்படுத்துவதில் உதவுகின்றது. மாவட்டங்களில் நடைபெறும் வேலைகள் அவ்வப்போது கண்காணிக்கப்படுகின்றன. மாவட்டங்களில் அவ்வப்போது வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட பொருட்காட்சிகள் நடத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. அலுவலகங்களுக்கு வேண்டுமான கையேடுகள், நூல்கள் வெளியிடப்படுகின்றன.

திறனை அறிய ஆய்வுத் தேர்வு

வேலை வழி காட்டும் அலுவல் பிரிவின் சிறப்புப் பணிகளில் குறிப்பிடத் தக்க ஒன்று, தொழிற் பயிற்சி நிறுவனங்களில், திறனை மதிப்பிடும் தேர்வுகள் நடத்துவதாகும், ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் இந்த ஆய்வு முறைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர முன்வரும் ஆயிரக் கணக்கான மனுதாரர்களை வைத்து இந்த ஆய்வுத் தேர்வு நடத்துவதால், ஏற்ற திறனும், உரிய செயற்பாங்கும் உள்ளவர்களைத் தெரிந்தெடுக்க வழி ஏற்படுகின்றது. தனிப்பட்ட தொழில் நிருவாகிகளும் கூடச் சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள இந்தப் பிரிவு ஆய்வுத் தேர்வு நடத்தி உதவுகின்றது.



அதிசயப் பூட்டு

வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியே சென்று சாவியைத் தொலைத்துவிட்டு அவதிப்படுவோர் அநேகம் பேர். இவர்களை மனத்தில் கொண்டு பிரிட்டனில் ஒரு புதிய பூட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சாவியே தேவையில்லை. எனவே, தொலைத்து விடும் பயம் இல்லை.

சுமார் ஆறு அங்குல நீளம் இரண்டு அங்குல அகலத்தில் இருக்கும் இந்தப் பூட்டைக் கதவோடு பொருத்திக் கொள்ளலாம். இதில் மேலிருந்து கீழாக ஒன்று முதல் 10 வரையில் எண்கள் உள்ள பித்தான்கள் உண்டு. ஒவ்வொரு பூட்டும் பூட்டிக்கொள்ளவும், பூட்டிய பிறகு திறந்து கொள்ளவும் ஒரு இரகசிய எண் உண்டு. பூட்டிக் கொண்டு வெளியே சென்ற பிறகு வீட்டுக்குத் திரும்பி, அந்த இரகசிய எண்ணை அமுக்கினால் பூட்டு திறந்து கொள்கிறது.

இதில் வேறு சில உத்தரவாதங்களும் உண்டு. இரகசிய எண் என்ன என்று தெரியாமல் யாரும் இதனைத் திறக்க முடியாது. வெவ்வேறு எண்களை அமுக்கி முயற்சி செய்யலாம் என்பது இதனிடம் பலிக்காது. தவறான எண் ஒரு முறை அமுக்கப்பட்டாலும் உடனே எச்சரிக்கை மணி ஒன்று ஒலிக்க ஆரம்பிக்கும். வீட்டின் உள்ளே இருக்கும் விசையை இயக்கும் வரை இந்த மணி ஒலித்துக்கொண்டே இருக்கும். அதுமட்டுமல்ல, இந்தப் பூட்டை உடைக்கவோ அல்லது இதன் இணைப்பைத் துண்டிக்கவோ முயற்சி செய்தாலும் இதே போல் எச்சரிக்கை மணி ஒலிக்கும்.

இந்தப் பூட்டிற்குள்ளேயே ஒரு பாட்டரியும் உண்டு. சாதாரணமாக மின்சார இணைப்புடன் இருக்கும் இந்தப் பூட்டு, மின் சப்ளை நின்று விட்டால் தானாகவே பாட்டரியால் இயங்க ஆரம்பிக்கிறது.

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று தயாரித்துள்ள இந்தப் பூட்டு, தற்போது லண்டனில் நடைபெற்றுவரும் 'பத்திரங்களுக்கான சாதனங்கள்' கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

கல்வெட்டுக் காட்டிடும் வீரம்

நடன. காசிநாதன். எம்.ஏ.,

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு பழங்காலத்தில் அகம் புறம் என்ற கூறுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்து என்பதை இலக்கியங்கள் மூலமாக உணர முடிகிறது. அகவாழ்விலே திளைத்து இல்லறத்தைப் போற்றியவர்கள் புறவாழ்விலும் நாட்டம் செலுத்தி வெற்றிகளை விளைவித்திருக்கிறார்கள்.

வெற்றியென்பது அடுகளத்தில் கடுகிப் பாயும் வீரமறவனை எதிர் நின்று தாக்கி வீழ்த்துவது மட்டுமல்ல. அந்தக் களத்திலே பாய்ந்து வரும் மதயானையையும் தாக்க வேண்டும். காடுகளிலே உலவுகின்ற விலங்குகளிலே துன்பம் விளைவிக்கின்ற கொடிய விலங்குகளான அரிமா, புலி ஆகியவைகளோடு போரிட்டு சாகடிப்பதிலும் வெற்றி தோய்ந்திருக்கிறது. இம்மாதிரியான சில நிகழ்ச்சிகளையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தாணிப்பாடி வட்டாரத்தில், தாணிப்பாடியிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் மோத்தக்கல் என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. இவ்வூரைத் தாண்டி ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றால் தருமபுரி மாவட்டத்தின் எல்லை வந்துவிடுகிறது. இந்த ஊரைச் சுற்றிலும் பெருங்குன்றுகள் காணப்படுகின்றன.

ஊரின் தென் கிழக்கே ஒரு மூங்கில் காட்டில் இரு நடுகற்கள் காணப்படுகின்றன. இரண்டும் பக்கத்துப் பக்கத்தில் அமைந்துள்ளன. இரண்டிலும் வட்டெழுத்தில் கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுகள் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தைச் சார்ந்ததாகும். அதாவது இன்றைக்கு 1,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் எழுதப் பெற்றதாகும்.

மகேந்திரவர்மனின் முப்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டில் சிற்றரசன் ஒருவன் மற்றொரு சிற்றரசரோடு போர் தொடுக்க விரும்புகிறான். அதனைத் தெரிவிக்கும் அறிகுறியாக மாற்றரசனின் ஆநிரைகளைக் கவர்ந்து வரும்படி ஆணை பிறப்பிக்கிறான். ஆணையை ஏற்றுப் போர் வீரர்கள் சென்று ஆநிரைகளைக் கவர்கின்றனர். மாற்றரசனின் போர் வீரர்கள் இவர்கள் கவரா வண்ணம் காக்கின்றனர். கடும் போர் ஒன்று நிகழ்கிறது. வீரனொருவன் களச் சாவடைகிறான். அவனுக்கு வீரக்கல் நடப்படுகிறது. அவ்வீரன் அக்கந்தை கோடன் என்றும் அவனது மன்னன் பொன்மோதனார் என்றும் ஒரு நடுகல் உணர்த்துகிறது.



இரண்டாம் நடுகல் கூறும் செய்திதான் இதயத்தைத் தொடுகிறது. இங்குப் போர் நிகழவில்லை. புலியொன்று ஊர் நடுவே வருகிறது. வீரர்கள் பலர் ஆயுதம் ஏந்துகின்றனர், புறப்பட்டு விட்ட வரிப் புலியை வீழ்த்த. அவர்களிலே ஒருவன் தலைமையேற்கின்றான். புலியைத் தன் கத்தியால் குத்தித் தரையிலே சாய்க்கின்றான். தானும் தரையிலே சாய்கின்றான். அவனையும் ஊரார் மறந்தாரில்லை. நடுகல் எடுத்தனர். நாடோறும் விழா நடத்தினர் அவனது நினைவாக. அவன் பெயர் வின்றன் வடுகன். அவனது மன்னனும் பொன் மோதனார்தான். இந்த நடுகல்லில் காணப்படும் செய்தி :

''கோவிசைய மயேந்திர பருமற்கு முப்பத்திரண்டாவது பொன்மோதனார் சேவகன் வின்றன் வடுகன் புலிகுத்திப்பட்டான். கல்''.

வட ஆர்க்காடு மாவட்டம் கீழ்முட்டுகூரில் கிடைத்த மற்றொரு நடுகல் சோழ மன்னன் பராந்தகனின் காலத்தில் நிகழ்ந்த ஒரு வீரச்செயலை விவரிக்கிறது. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கீழ் முட்டுகூர் என்று வழங்கும் இவ்வூர், முட்டுகூர் என்று அழைக்கப்பெற்றிருக்கிறது. இந்த ஊரைச் சார்ந்த குமாரந்தை புழவன் என்பான் போருக்குப் புறப்படுகிறான்.

போர் வீரர்களுக்குப் பதிலாகப் புலி ஒன்று தென்படுகிறது. எதிரில் புறப்பட்டவன் மறவனல்லவா! அதனால் வரிப்புலியை வீழ்த்துவதும் தனக்குப் பெருமைதான் என்று கருதுகிறான். கையிலோ சிறு குறுவாளைத் தவிர வேறெதுவும் வைத்திருக்கவில்லை. அதற்காகப் பின்வாங்கிடவும் அவசர மனம் ஒப்பவில்லை. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமல்லவா? குறுவாளை நிமிர்த்திப் பிடிக்கிறான். புலி மீது பாய்ந்து தாவுகிறான். புலியின் மீது அமர்ந்து கொண்டு வாயைப் பிடித்துக் கிழிக்க முற்படுகிறான். புலியும் விடவில்லை. அவனைப் புரட்டியெடுக்கிறது. தனது நகங்களினாலும், பற்களாலும் மறவனின் மார்பிலும், முகத்திலும் விழுப்புண்களைப் படுத்துகிறது. குருதி வடிகிறது. குமாரந்தைக்கு அப்பொழுதுதான் கோபாவேசம் ஏற்படுகிறது. தனது மூழு

வலிமையையும் பயன்படுத்தி புலியைச் சாய்க்கின்றான். புலி மடிகிறது. வெற்றிக் களிப்பிலே வீரன் உழலுகிறான். உடல் தீப்பிழம்பாய்க் காட்சியளிக்கிறது. உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தடுமாறுகின்றன. தனது நிலையும் தடுமாறுகிறது. கீழே விழுகின்றான், வெற்றிப் பெருமிதத்தோடு. அவனுக்கும் கல் நடப்படுகிறது. இந்நிகழ்ச்சி தில்லைக் கூத்தபிரானின் திருச்சபைக்குப் பொன் கூரை வேய்ந்த சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் காலத்தில் நடைபெற்றுள்ளது. நாட்டப்பட்டிருக்கும் நடு கல்லில் காணப்படுபவை:

“ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பர கேசரி பத்மற்கு யாண்டு முப்பத்து இரண்டாவது வடகரை முக்கூட்டூர் குமாரந்தை புழவன் புலி குத்தி நகன்னாடு”.

தகடூர் மாவட்டம், நவலை என்ற ஊரில் உள்ள கிளியேரியின் ஓரத்தில் காணப்பெறும் நடுகல் மற்றொரு வீரச் செயலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இங்கு வீரன் புலியோடு பொருதவில்லை. குதிரையோடு மோதுகிறான். குதிரையைக் குத்திச் சாகடித்துவிட்டுத் தானும் வீர மரணம் எய்துகிறான். சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி கொங்குநாடு என வழங்கப் பெற்றது. அப்பகுதியைக் கங்க அரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் பல்லவ மன்னர்களிடத்துச் திறை செலுத்தி வாழ்ந்து வந்தனர். ஸ்ரீ புருஷன், சிவமாறன் போன்ற அரசர்கள், அவர்களில் மிகவும் புகழ் பெற்றவர்கள். இம்மன்னர்களுள் ஒருவர் கங்க நாடு, கோயிலூர் நாடு, வேளாளநாடு, கோலூர்நாடு, எயில்நாடு, புறமலைநாடு, அதியனூர்நாடு ஆகிய பகுதிகளை ஆண்டு வருகையில் இம்மன்னனின் வீரன் பூங்குடி வடுகன் வடவல்லூர் என்ற ஊரைத் தாக்குவதற்குப் புரவி மீதேறி வருகிறான், அவனை எதிர்த்திட. வடவல்லூரைச் சார்ந்த வீரனும் குதிரை மீது வருகிறான். இருவருக்கும் போர் நிகழ்கிறது. எதிரி மடிகிறான் முதலில். பின்னர் குதிரை அவனை எதிர்த்துப் போராடுகிறது. அதையும் குத்தி வீழ்த்துகிறான். தானும் களச்சாவை அணைக்கிறான். அந்த வீரனின் ஆண்மையைப் பாராட்டிக் கல் ஒன்று நடப்படுகிறது. அதில் குறிக்கப்பட்டிருப்பவை :

“ஸ்ரீ . . . . பர்க்கு யாண்டு பதினேழாவது கங்க நாடும், கோயிலூர் நாடும், வேளாள நாடும், கோலூர் நாடும், எயில் நாடும், புறமலை நாடும், அதியனூர் நாடும் ஆளாநிற்க இத்தரையான்று இக்குதிரையோடு வந்து வடவல்லூர் எறிந்த ஞான்று குதிரைகுத்தி பட்டான் பூங்குடி வடுகன்”.

வீரச் செயல் புரிந்து மரணம் எய்திய வீரர்களின் குடும்பங்களுக்கு, இன்று அரசு உதவி செய்வது போன்று அன்றும் அரசர்கள் நிலம் போன்றவற்றைப் பரிசாக அளித்து வந்திருக்கின்றனர். அவ்வாறு அளிக்கப்பெற்ற நிலங்கள் “உதிரப்பட்டி” என்று கல் வெட்டுகளிலே காணப்படுகிறது.

மீனோ மீன் !

மலை விழுங்கி

தன்னைவிட மிகப் பெரிய மீனை விழுங்கும் ஒருவகை மீன் உண்டு. இதைக் கரும் விழுங்கி என்று கூறலாம். இது ஆழ நெடுங்கடலில் வாழும் சிறுமீன். இது ஏனைய மீன்களையே உண்டு வாழும். தன்னினும் மிகப் பெரிய மீனையும் எளிதில் விழுங்கிவிடும். இதன் வாயும் வயிறும் மிகப் பெரிய அளவில் விரிந்து கொடுக்கும் இயல்பின.

வாள் மீன்

1,100 இராத்தல் கனமும், 15 அடி நீளமும் உள்ளது. முழு வளர்ச்சி பெற்றது வாள் மீன். இதன் வாள் போன்ற உறுப்பு மிக்க வலிமையும் நீளமும் வாய்ந்தது ; சிறிய படகைச் சின்னா பின்னமாக்கும் ஆற்றலும், வலிமையும் இந்த வாள் மீனுக்கு உண்டு.

படகு மீன்

படகு மீனுக்கும் வாள் மீனுக்கும் இருப்பது போன்ற ஓர் உறுப்புண்டு ; ஆனால். இது மிகச் சிறிய மீன். விரைந்து நீந்தும் இயல்புடையது. மிக்க அழகு வாய்ந்தது. இதன் கனம் இரு நூறு இராத்தலுக்கும் மேற்பட்டது.

கடற்கதிரவன் மீன்

இதைத் தலைமீன் என அழைக்கின்றார்கள். ஏனென்றால் இதன் உருவத்தின் பெரும் பகுதி தலையாகவே இருக்கிறது. முழு வளர்ச்சி பெற்ற கடற் கதிரவ மீன் 2,000 இராத்தல் எடையுள்ளதாயிருக்கும். இதன் உருவத்தைப் பார்த்த உடனேயே விரைவில் நீந்த முடியாத மீனென இதைச் சொல்லி விடலாம்.

மின்சார விலாங்கு

மின் அதிர்ச்சி ஊட்டும் மீன்கள் பல உண்டு. இதனால் தன் எதிரிகளை இவை தாக்கும். தென் அமெரிக்காவில் வாழும் இம்மீனின் மின் தாக்குதல் மிகக் கொடியது. ஒரு குதிரையையும் தன் மின் ஆற்றலால் தாக்கி நிறுத்தும் வலிமை இந்த மீனுக்கு உண்டு.

களஞ்சியம் நிரப்பிடக் “கரிகாலன்” வந்து விட்டான்!

உழவர் பெருமக்களே ! உங்கள் களஞ்சியத்தை நிரப்பிடக் “கரிகாலன்” வந்து விட்டான்.

ஆம், உங்கள் களஞ்சியங்கள் நிரம்பிடவும், அதன் பயனாய் உங்கள் வாழ்வு உயரவும் வேண்டித் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை “கரிகாலன்” என்ற ஒரு புதிய உயர் விளைச்சல் தரும் நெல் ரகத்தை வெளியிட்டுள்ளது.

கரிகாற் சோழன் காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கினான்; காவிரியின் இருமருங்கும் பெருங்கரை அமைத்தான் ; கல்லணையைக் கட்டிக் காவிரியின் வெள்ளத்தை வாய்க்கால் வழியே செலுத்தி, உழவுத் தொழிலை விழுமிய தாக்கினான். கரிகாலன் காலத்திலே “சோழ வளநாடு சோறுடைத்து” என்ற பெயர் பெற்றிருந்தது. அவனது அரும்பெரும் செயல்களை நினைவு கூறும் முகத்தான், ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட “ஆடுதுறை—29” என்ற ரகத்திற்குத் தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் “கரிகாலன்” என்று பெயரிட்டுள்ளார்.

கரிகாற் சோழனால் உழவர் பெருமக்கள் உயர்வு பெற்றது போலவே, “கரிகாலன்” என்ற புதிய உயர் விளைச்சல் தரும் நெல் ரகத்தாலும் உழவர் பெருமக்கள் உயர்வடைவர் என்பது திண்ணம்.

“கரிகாலன்” சிறப்புகள்

*கோ-33 ரகத்தைவிட 19 சதம் அதிக விளைச்சல் கொடுப்பான் “கரிகாலன்”.

*“கரிகாலன்” ஆடுதுறை 27 போல் கீழே சாய்ந்து விட மாட்டான்.

*கோ-33 ரகத்தைவிட 19·8 சதம் அதிக வைக்கோல் மகசூல் கொடுப்பான் “கரிகாலன்.”

*“கரிகாலன்” உயரமாக வளர்வதால் ஓரளவு நீர்ப் பிடிப்புப் பகுதிகளுக்கும் ஏற்றது.

*“பேக்டிரீயல் இலைக் கருகல் நோய்” கரிகாலனைத் தாக்காது.

*“கரிகாலன்” ரகம் 10·25 சதம் புரதச் சத்துப் பெற்றுள்ளது. (ஆடுதுறை-27-ல் 9·62 சதம் புரதச் சத்து மட்டுமே உள்ளது).

“கரிகாலன்” நெல் பிறந்த கதை

“ஆடுதுறை-27” என்னும் “ஜப்பானிக்கா இண்டிகா” ரகம் 1965-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த ரகத்திற்கு, ஓரளவுக்கு உரமிடுவதற்கு ஏற்ப மகசூல் கொடுக்குந் தன்மையும், நல்ல தரமான அரிசி அளிக்கும் பண்பும் இருந்த போதிலும், அதனுடைய உயரமாக வளரும் தன்மையும், தாள்களில் வலிவிழந்த தன்மையும் (சாய்ந்து விடும் தன்மை) பெருங்கேடு விளைவிப்பனவாக இருந்தன. எனவே, “ஆடுதுறை-27” ரகத்தின் தாவரப் பண்புகளை மேம்படுத்த வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களால் உணரப்பட்டது.

அண்மைக் காலத்தில் குட்டையான தன்மையும், சாயாத பண்பும், அதிக அளவு உர மேற்கும் குணமும் கொண்ட “இண்டிகா” நெல் ரகங்கள் உலகின் பல பாகங்களில் உருவாக்கப் பெற்றன. அத்தகைய ரகங்களில் ஒன்று “தைச்சுங் நேட்டிவ்-1”. அதுவே, இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்ட முதல் குட்டையான “இண்டிகா” ரகமாகும்.

அயல்நாட்டு ரகங்களையும், ஆடுதுறை-27 ரகத்தையும் ஐதராபாத்தில், கரு இணைப்புச் செய்து பல்வேறு கலப்பினங்கள் உருவாக்கப் பெற்றன. அவைகளிலிருந்து கிடைத்த திருந்திய வழித் தோன்றல் வகை விதைகள், ஆடுதுறையில உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்குக் கொண்டு வரப் பெற்று, சிறந்ததை தேர்ந்தெடுக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. “தைச்சுங்நேட்டிவ்-1”. ரகத்தையும், ஆடுதுறை-27 ரகத்தையும், கரு இணைப்புச் செய்ததால் கிடைத்த வளர்ப்பு 5652 (Culture 5352) என்ற வகை 1967-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சோதனைகளுக்காக இனப்பெருக்கம் செய்யப்பட்டது.

வளர்ப்பு எண் 5652 என்ற நெல் வகை ஆடுதுறை மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1969–70, 1970–71, 1971–72 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் சோதனை செய்து பார்க்கப் பட்டது. அந்த மூன்றாண்டுக் காலத்திலும், வளர்ப்பு 5652 வகையே, குறுவைச் சாகுபடிக்குத் தரமான ரகமென்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த “கோ-33” ரகத்தைவிடக் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு அதிக மகசூல் அளித்தது.

“வளர்ப்பு 5652” என்ற வகை அங்கு நடைபெற்ற சோதனைகளில் உச்ச அளவுச் சராசரியாக (Highest Mean) ஹெக்டேருக்கு 6,192 கிலோ (ஏக்கருக்கு 2,450·6 கிலோ) மகசூல் அளித்துள்ளது. ஆனால், “கோ-33” உச்ச அளவு சராசரியாக ஹெக்டேருக்கு 5,201 கிலோ (ஏக்கருக்கு 2,105.6) கிலோ மகசூல் மட்டுமே கொடுத்துள்ளது. அதிலிருந்து “வளர்ப்பு 5652” என்ற வகை நெல், கோ-33 ரகத்தைவிடச் சராசரியாக 19 சதம் அதிக மகசூல் அளிக்க வல்லது என்பது தெரிய வந்தது. சோதனைகளின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை

ஆடுதுறை, மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1969–70 முதல் 1971–72 வரை நடைபெற்ற மகசூல் ஒப்பீட்டுச் சோதனைகளின் முடிவுகள் :—

ரகத்தின் பெயர்.	உச்ச சராசரி ஹெக்டேர் மகசூல் (கிலோ).
வளர்ப்பு 5652	6,192
வளர்ப்பு 5524	5,724
வளர்ப்பு 7711	5,261
பூசா-2·21	4,694
கோ-33	5,201

ஆடுதுறை மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் வளர்ப்பு 5652 நல்ல மகசூல் அளித்ததால், இது தஞ்சை மாவட்டத்தில் அனுசரணை ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டது. அனுசரணை ஆராய்ச்சியின் கீழ் முதலாண்டில் (1970–71) தஞ்சை மாவட்டத்தில் உள்ள 12 மாநில விதைப் பண்ணைகளில், ஹெக்டேருக்கு 70 கிலோ தழைச் சத்து, 52·5 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து என்ற அளவிலும், ஹெக்டேருக்கு 125 கிலோ தழைச் சத்து, 62·5 கிலோ மணிச் சத்து, 62·5 கிலோ சாம்பல் சத்து என்ற அளவிலும் ஆக இருவேறு உர அளவில் பயிரிட்டுப் பார்க்கப்பட்டது. இருவேறு உர அளவுச் சோதனைகளிலும் வளர்ப்பு 5652 மகசூலில் முதலிடம் வகித்தது. அதன் முடிவுகள் கீழே அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளது.

அட்டவணை

குறைந்த அளவு (ஹெக்டேருக்கு 75 கிலோ தழைச்சத்து. 52·5 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து) உர மிட்டதில் கிடைத்த மகசூல்.

ரகத்தின் பெயர்.	ஹெக்டேர் மகசூல் (கிலோ)
வளர்ப்பு 5652	4,938
சி.ஆர்.ஐ. 6	4,758
ஐ.இ.டி. 400	4,528
ஐ.இ.டி. 849	4,468
கோ-33	4,730

உயர்ந்த அளவு (ஹெக்டேருக்கு 125 கிலோ தழைச் சத்து, 62·5 கிலோ மணிச் சத்து, 62·5 கிலோ சாம்பல் சத்து) உரமிட்டதில் கிடைத்த மகசூல்.

ரகத்தின் பெயர்.	ஹெக்டே மகசூல் (கிலோ)
வளர்ப்பு 5652	5,108
சி.ஆர்.ஐ. 6	4,780
ஐ.இ.டி. 400	5,045
ஐ.இ.டி. 849	4,550
கோ-33	5,103

அனுசரணை ஆராய்ச்சியின் இரண்டாம் ஆண்டில் (1971–72) குறுவைப் பட்டத்தில் 70 இடங்களில், உழவர்களின் நிலத்தில் வளர்ப்பு 5652-ஐ சோதனையில் ஈடுபடுத்தப்பட்டது. சோதனையில் ஈடுபடுத்தப்படும் ரகங்களின் பண்பை நன்கு அறிந்து கொள்ளவும், பல்வேறு தரப்பட்ட உழவர்களின் கருத்தறியவும் வேண்டித் தஞ்சை மாவட்ட மெங்கும் பரவலாக இருக்கும் வண்ணம் சோதனைகள் மேற்கொள்ளும் இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அச்சோதனைகளில் கிடைத்த முடிவுகள் கீழ கொடுக்கப்பட்டுள்ளன.

அல்சர் தீர்க்கும் அருமருந்து

"பெப்டிக் அல்சர்" எனப்படும் சிரண உறுப்புகளில் ஏற்படும் புண்களுக்குப் புதிய மருந்து ஒன்று லண்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கார்பனுக்சோலோன் சோடியம் (Carbenoxolone Sodium) எனப்படும் இந்த மருந்து இந்நோயைத் தீர்ப்பதில் மிகச் சிறந்ததாகச் சோதனைகள் மூலம் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

சாதாரணமாக, இந்த நோய் வந்தால் அறுவை சிகிச்சை செய்வதைத் தவிர, வேறு வழியில்லை என்றிருந்த நிலைமையை இப் புதிய மருந்து மாற்றிவிட்டது. கேப்சூல் வடிவில் இப் புதிய மருந்து தயாரிக்கப் படுவதால் அறுவைச் சிகிச்சை தேவையற்றதாகி விடுகிறது.

லண்டனில் உள்ள பயோரெக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் இந்த மருந்தைக் கண்டு பிடித்துள்ளது. சோதனைகளில் இதன் பயனுள்ள உபயோகம் நிருபணமாகியுள்ளது.

இப் புதிய மருந்தைக் கண்டு பிடித்த நிறுவனத்தைப் பாராட்டும் வகையில் இந்த ஆண்டு தொழில் துறைச் சாதனங்களுக்கான இங்கிலாந்து அரசியாரின் விருது இந்நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

சராசரி மகசூல்

ரகத்தின் பெயர்.	ஹெக்டேர் மகசூல் (கிலோ).
வளர்ப்பு 5652	5,750
வளர்ப்பு 5524	4,990
பூசா-2·21	5,650
ஐ.ஆர். 22	5,583
கோ-33	5,540

வயது

ரகத்தின் பெயர்.	மொத்த காலம் (நாட்கள்
வளர்ப்பு 5652	110
வளர்ப்பு 5524	107
பூசா-2·21	101
ஐ.ஆர். 22	120
கோ-33	105

உயரம்

ரகத்தின் பெயர்.	உயரம் (சென்டி மீட்டர்).
வளர்ப்பு 5652	90
வளர்ப்பு 5524	85
பூசா-2·21	82
ஐ.ஆர். 22	85
கோ-33	75

எழுபது இடங்களில் நடைபெற்ற சோதனைகளில் மகசூலைப் பொறுத்த வரையில் 25 இடங்களில் வளர்ப்பு 5652 முதலிடத்தையும், 16 இடங்களில் பூசா-2·21 முதலிடத்தையும், 14 இடங்களில் கோ–33 முதலிடத்தையும் பெற்றுள்ளன. சராசரி மகசூலின் அடிப்படையில் வளர்ப்பு 5652, ஹெக்டேருக்கு 5750 கிலோ மகசூல் கொடுத்து, மற்ற ரகங்களைவிட மகசூலில் மிஞ்சி நின்றுள்ளது. மற்ற ரகங்களைக் காட்டிலும் வளர்ப்பு 5652-ல் மகசூல் வேறுபாடு மிகமிகக் குறைவு. எனவே, இதை உழவர்கள் விரும்புகிறார்கள்.

இதன் வயது 110 நாட்களாக (விதை முதல் விதை வரை) இருப்பதால் குறுவைச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது.

மேலும் இது மற்ற ரகங்களைக் காட்டிலும் உயரமாக வளர்கிறது. உழவர்களைப் பொறுத்த வரையில் வைக்கோலும் முக்கிய பொருளாக விளங்குகிறது. வளர்ப்பு 5652-ன் உயரம் 90 சென்டி மீட்டராக இருப்பதால் தால், மற்ற ரகங்களைக் காட்டிலும், அதிக அளவு வைக்கோல் கிடைக்கிறது. அதன் விவரம் வருமாறு :—

வைக்கோல் மகசூல்.

ரகத்தின் பெயர்.	ஹெக்டேருக்கு வைக்கோல் மகசூல். (கிலோ)
வளர்ப்பு 5652	8,098
வளர்ப்பு 5524	8,328
பூசா 2·21	7,358
ஐ.ஆர். 22	7,978
கோ. 33	7,758

மேற்கூறிய விவரங்களிலிருந்து கோ 33 ரகத்தைக்காட்டிலும் வளர்ப்பு 5652 நெல் 19·8 சதம் அளவுக்கு அதிக வைக்கோல் கொடுக்கிறது என்பது தெளிவாகிறது.

'' பேக்டீரியல் இலைக் கருகல்'' நோய்த்தாக்குதலை வளர்ப்பு 5652 நன்கு தாங்கிக் கொள்ளுகிறது. ஆனல், '' கோ-33 '' இந்நோயினல் மிகவும் பாதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. பூசா 2·21 ரகமும் இந்நோயினது தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி பெற்றுள்ளது.

வளர்ப்பு 5652 நெல், அதிக மகசூல் அளிக்கும் தன்மை, விரும்பத்தக்க பயிர்க் குணங்கள், அதிக உரமேற்கும் பண்பு, நோய் தாங்கும் சக்தி, தரமான அரிசி அளிக்கும் தன்மை ஆகியவைகளைப் பெற்றிருப்பதால் தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற உயர் விளைச்சல் தரும் நெல் ரகமாக இதை வெளியிட, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை முடிவு செய்தது. ஆனல் ஆடுதுறை, மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப் பெற்ற இந்த வளர்ப்பு 5652-ஐ, ஆடுதுறை-29 எனப் பெயரிடத் திட்டமிடப் பெற்றது. இந்த ரகத்திற்கே பின்பு '' கரிகாலன் '' என்று பெயரிடப் பெற்றது.

உங்கள் களஞ்சியம் நிரப்பிட கரிகாலன் வந்துவிட்டான்.

எனவே, உங்கள் களஞ்சியம் நிரம்பிடவும் அதன் பயனை உங்கள் வாழ்வை உயர்த்திக் கொள்ளவும், ' கரிகாலன் .'' பயிரிடுங்கள் என்று தஞ்சை மாவட்ட உழவர்களைக் கேட்டுக் கொள்கின்ருேம்.

தொழிற்சங்கங்களுக்கு அரசின் உதவி

உயர்நீதி மன்றத்தில் வழக்காட வேண்டிய நிலை ஏற்பட்டு அதற்கான சட்டத்துணை தேவைப்படுகிற தொழிற்சங்களுக்கு வழக்குரைஞர் உதவி கிடைக்கத் தமிழக அரசு புதியதொரு திட்டத்தை வகுத்திருக்கிறது.

இப்புதிய உதவித் திட்டத்தையொட்டி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.

1. பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு இந்த சட்ட உதவி கிடைக்கும்.

2. ரிட் மனு அல்லது ரிட் அப்பீல் ஒன்றுக்கு ரூ. 150 என்று கட்டணம் வசூலிக்கப்படும்.

3. அரசுக்கெதிராக வழக்காட இம்மாதிரிச் சட்ட உதவி கிடைக்காது.

4. வேலையிழக்கும் தனிப்பட்ட தொழிலாளர் (உயர் நீதி மன்றத்தில்) வழக்காட இந்த உதவி கிடைக்கும். ஆனல் அந்த வழக்கும் அரசுக் கெதிரானதாக இருக்கக்கூடாது.

5. போதுமான நிதிவசதி இல்லாத தொழிற்சங்கங்களுக்கு மட்டுமே இந்தச் சட்ட உதவி கிடைக்கும். அதாவது 500 உறுப்பினர்களுக்கும் குறைவாக இருந்தால் அத்தகைய சங்கங்கள் இந்த உதவியைப் பெறலாம். ஒரு சங்கத்தினர் உறுப்பினர் எண்ணிக்கை 500-க்கு மேல் இருந்தும் அதன் நிதி நிலை சரியில்லாவிடில் இந்தச் சட்ட உதவி கேட்டு அச்சங்கம் அரசுக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய வேண்டுகோள்களை அரசு பரிசீலிக்கும்.

6. சொந்த வழங்குரைஞரை வைத்துக் கொள்ளும் சங்கங்களுக்குச் சட்ட உதவி கிடைக்காது.

7. அரசுத் துறை நிறுவனம் ஒன்றில் உள்ள தொழில் தகராறு பற்றிய வழக்காக இருந்தால் சட்ட உதவி கிடைக்காது.

பாப் போட்டி–39

கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அவரது தொண்டுகளைத் தன்னகத்தே கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பா ஐந்து அடிக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

முடிவு நாள் : 1—8—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

பா அனுப்பவேண்டிய முகவரி:—

/ ஆசிரியர் (பாப் போட்டி),
'' தமிழரசு '' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.


BAYER
பாயரின் தரமான
பூச்சி மருந்துகள்

உபயோகிப்பதன்

மூலம் பூச்சி பூஞ்சாண உபாதை-
களினாலான நஷ்டத்தை
தவிர்க்கிறார்கள்
நெல் விளைவிக்கும்
விவசாயிகள்.

நெல்லில் தோன்றும்
பலவகைப் பூச்சிகளை
சிறந்த வகையில்
மலிவான வழியில்
கட்டுப் படுத்த
ஃபாலிடால்.

ஹீனோஸானை
உபயோகிப்பதனால்
நெல் குலை நோய்
மூலம் பயிர்
நாசமில்லை.

இலை சுருட்டும் புழுக்-
களையும் இதர
பூச்சியினங்களையும்
கட்டுப்படுத்தி சிறந்த
பலனளிக்க வல்லது
மெட்டாஸிட்
காம்பி தெளித்தல்

ஒவ்வொரு அடைப்புகளுடன்
இணைக்கப்பட்டிருக்கும்
உபயோகிக்கும் முறை-
களின்படியே ஃபாலிடால்
ஹீனோஸான் மெட்டாஸிட்
காம்பி பூச்சி மருந்துகளையே
உபயோகியுங்கள்.

நெல் பயிரின் பூச்சி பூசண
தொல்லைகளிலிருந்து சிறந்த
முறையில் பாதுகாக்க நம்பிக்-
கைக்குகந்த ஃபாலிடால்
ஹீனோஸான் மெட்டாஸிட் காம்பி
தெளிக்கவும்.

5-A/162 (760)

உண்மையின் சந்நிதி

174

சோம.மகாதேவன்

5. நினைவில் நிற்பது யாரோ ?

பீட்டர் சென்றதும், அவன் வந்த அவசரத்தையும், சொன்னதையும் நினைத்து, உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான் பாண்டியன்.

பையிலிருந்த அந்தக் கடிதத்தையெடுத்து மறுபடியும் பிரித்தான்.

கடிதமென்றால், அது யாராலும் யாருக்கும் எழுதப்பட்டதல்ல. நோட்டுப் புத்தகத்தின் நடுவிலிருந்து எடுக்கப்பட்ட, குறுக்குக் கோடுகள் போட்ட வெள்ளைக் காகிதம். அதில் மூன்று வரிசைகளில், ஒன்றன்பின் ஒன்றாக, இடம் இருக்கும் வரையிலும் ‘ முத்துப் பாண்டியன் ’, ‘ முத்துப் பாண்டியன் ’ என்று எழுதப்பட்டிருக்கிறது.

தன்னையே மறந்த நிலையில் தான் அவள் எழுதி இருக்கிறாள்.

இதைத் தேடிப் பிடித்து எடுத்து, கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போகிறானே பீட்டர். ‘வேலையற்ற தடியன்’ என்று இவனைக் கரித்துக்கொட்டுகிறாளாம். சகோதரியை இவ்வாறு பழி தீர்த்துக் கொண்டதில் இவனுக்கொரு நிம்மதி.

பாண்டியன் நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

கிராமத்தில் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி வாழ்பவன் மைக்கேல் கிழவன். அடுக்கடுக்காக ஐந்து குழந்தைகள் அவனுக்கு. பொதுவாக அந்தக் குடும்பங்களில் கல்வியறிவு முதன்மையாகக் கருதப்படுமல்லவா ? நித்திய நோயாளியான தாயையும் கவனித்துக் கொண்டு, வீட்டுக் காரியங்களையும் பார்த்துக் கொள்வதில், மூத்தவளான டெய்சி பத்மாவின் படிப்பு எட்டாவதோடு நின்று விட்டது.

பெரிய குடும்பத்தையே நிருவகித்து வரும் டெய்சி கெட்டிக்காரிதான்.

அரசியும் இவளும் உயிர்த் தோழிகள்.

முன்பெல்லாம் அடிக்கடி வீட்டிற்கு வந்து விடுவாள். அரசிக்கு அந்த மன ஊக்கத்தைக் கொடுத்தவளே டெய்சிதானே.

படபடவென்று என்னமாய் பேசுகிறாள்.

அவள் மாநிறம் தான். மூடித் திறக்கும்போது, அவளது அகன்ற விழிகளில் மின்னும் ஒளி, இன்னும் கண்ணுக்குள்ளே நிற்கிறது.

மதம் வேறுபடலாம். சாதி மாறுபடலாம். அதிலும் தாழ்த்தப்படலாம். ஓரினம் என்று ஒன்றுபடும் போது, இந்த மதமும்—சாதியும், குறுக்கே நின்று என்ன செய்யும் ?

எண்ணங்கள் வலுவடைந்தன-உறுதியாயின.

இந்தப் பெயரைத் தான் எத்தனை தடவைகள் எழுதி இருக்கிறாள்.

பாண்டியன் புன்னகையோடு நிமிர்ந்து உட்கார்ந்து, அந்தக் காகிதத்தை மடித்துப் பையிலே வைத்துக் கொண்டான்.

அப்போது வாசலிலே ஆளரவம் கேட்டது.

“ அந்தப் பொன்னையா களத்திலே நின்னு ‘ஓ’ன்னு கத்துறான்” என்று செய்தி சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் கன்னையா.

கன்னையா அந்த ஊராட்சிக் கணக்கன்.

வேலாயுதத்தோடு ஒட்டிக் கொண்டிருந்த பெருமாள்சாமி, அவருடனே போய் விட்டான். பாண்டியன் இந்தக் கன்னையாவை உள்ளே இழுத்துப் போட்டுக் கொண்டான்.

“ நீயேன் ‘ஓ’ன்னு கத்திக்கிட்டு வாரே. அவனுக்காக வேலையை நிறுத்திட்டீங்களா ? ” என்று கேட்ட பாண்டியன் களத்துக்கே புறப்பட்டுவிட்டான்.

“ வேலை நடக்கு. வடக்குப் பக்கம் மேட்டைப் பிரிச்சு, மேற்காலே போடுறாங்க. பொன்னையா குறுக்கே வந்து நின்று வரை முறை இல்லாமல் பேசுறான்” என்றவாறு பாண்டியனைப் பின் தொடர்ந்து வந்தான் கன்னையா.

மேடு பள்ளமாக இருக்கும் களத்தை, வசதிகளோடு கூடிய காங்ரீட் தளமாக்கி, அறுவடையின் போது, ஏக்கருக்கு இவ்வளவென்று நெல்லையே வாடகைக் கூலியாகப் பெற்று, ஊராட்சியின் வருமானத்தைப் பெருக்கலாமென ஆரம்பித்த வேலை.

களத்தின் கீழ்க் கோடியில் பொன்னையா என்பவன், ஐந்தாறு வருடங்களாகக் குடிசை கட்டிக் கொண்டு குடி இருக்கிறான். களத்தைச் சமப்படுத்தும்போது பொன்னையாவின் குடிசையும் எடுபட வேண்டியதாகிறது. பொன்னையா—வேலாயுதத்தின் பண்ணையில் வேலை செய்பவன். அதிலும் பொன்னையாவின் தம்பி சடையன் வேலாயுதத்துக்கு மிகவும் அந்தரங்கமான போக்கிரி. இரண்டாண்டுகளுக்கு முன்னர், கலக வழக்கில் தண்டனைப்பெற்று உள்ளே இருக்கிறான். இவ்வளவு இருக்கும் போது, பொன்னையாவுக்குத் துணிவு வரத்தானே செய்யும்.

களத்து மேட்டில், வேடிக்கை பார்ப்பதில் ஒரு கும்பலே சேர்ந்திருக்கிறது.

பாண்டியனைக் கண்டதும், வேலை செய்துக் கொண்டிருந்தவர்களுக்கு மத்தியிலே நின்று, உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்த பொன்னையாவின் சுதி சற்று உள்ளடங்கியது.

“ஏற்கனவே உங்களுக்குச் சொல்லி இருக்கேன். சத்தம் போடுறதுனாலே வேலை நின்று போகும்னு நினைக்கிறீங்களா?” என்று பொன்னையாவின் பக்கத்தில் போய் நின்று கேட்டான் பாண்டியன்.

பொன்னையா கொதிப்போடு திரும்பினான்.

“குடிசையைப் பிரிக்கணும்னுதானே—இந்த வேலையை ஆரம்பிச்சிருக்கீங்க”, என்றான்.

பாண்டியன் அமைதியாகவே சொன்னான்.

“இப்ப, அறுவடை நேரத்திலே ஒரு மழை பெய்தாலும் களத்தைப் பயன்படுத்த முடியலே. இதைச் செம்மைபடுத்தினா வசதிகளும் பெருகுது. பஞ்சாயத்துக்கு நிலையான வருமானமும் வருது. மேற்குப் பக்கம் புறம்போக்கிலே நீங்க வீடு போட்டுக்கலாம்னு போன வாரமே உங்ககிட்டச் சொல்லியாச்சு, மறுபடியும் நடக்கிற காரியத்துக்குக் குறுக்கே வர்றது நல்லா இல்லே.” என்றான்.

அப்போது, கூட்டதோடு நின்று கொண்டிருந்த, பொன்னையாவின் மனைவி சிவந்தியும், அவனுக்குப் பக்கமாக வந்து நின்றாள். அதில் தெம்பு வந்தது.

மேற்கு மந்தையிலே, வீட்டடியை என்பேருக்குப் பட்டாப் போட்டுக் கொடுங்க”, என்று கேட்டான், பொன்னையா.

இப்ப இங்கே இருக்கிற வீட்டுக்குப் பட்டா இருக்கா?” என்று திருப்பிக் கேட்டான் பாண்டியன்.

“எப்படியும் எங்களை வெளியேத்திப் போடணும். அதிலே தான் குறியா நிக்கிறீங்க,” என்றாள் சிவந்தி.

“வேறே நினைவோட இப்படிப் பேசுறிங்க. மேல மந்தையிலே, வீடு இல்லாதவங்களுக்கு மனையடி கொடுக்கிறதா திட்டம் போட்டிருக்கோம். அதிலே உங்களுக்கு இடமிருக்கும்.” என்று மேலும் சொன்னான் பாண்டியன்.

“அதைத்தான் எப்பக் கொடுக்கப் போறிங்க”, என்று கேட்டான் பொன்னையா.

‘அதை இப்பவே சொல்ல முடியாது”, என்று சற்று கோபத்துடனே சொன்னான் பாண்டியன்.

“ஊர்ப் பொதுவுக்கு நல்ல பாதையைச் சொன்னா கேட்டுக்கிடணும் பொன்னையா. ஆயிரக் கணக்கிலே போட்டு அரசாங்கத்திலே செய்கிற வேலையை, நீ குறுக்கே நின்னு தடுத்துப் போட முடியுமா?” என்றான் சற்றுத் தள்ளி நின்ற கிழவனொருவன்.

அவ்வளவுக்குள், பொன்னையாவுக்கு அப்படியொரு கோபம் வந்து விட்டது.

“உன்னை யாரு கேட்டது. பெரிய நாயத்தைக் கண்டவன் சொல்ல வந்தியாக்கும்”, என்று கிழவனைப் பார்த்துச் சீறியவன், கும்பலை விட்டு விலகிப் போய் நின்று, “நானும் உயிருக்குத் துணிஞ்சுதான் இருக்கேன். அடுத்த வாரம் என் தம்பி சடையனும் வந்திருவான்- எவன் கூரையைப் பிரிக்க வாரான்னு பாத்துக்கலாம்” என்றுஆக்ரோசத்தோடு சொல்லிவிட்டு, மேலும் ஆரம்பித்த சிவந்தியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே, அங்கிருந்து போய்விட்டான்.

‘சடையன் விடுதலையாகி வருகிறான்’ என்ற செய்தி கூடி இருந்தவர்களைத் திடுக்கிடவே வைத்தது.

“பொதுக் காரியத்துக்கு நடுவிலே உயிரைப்பத்திப் பேசிட்டுப்போறானே” என்றான் கன்னையா.

“அவரும் திட்டம் போட்டுட்டுத்தான் பேசுறாரு. பேசட்டும். நீங்க காரியத்தைப் பாருங்க” என்று சொல்லிவிட்டுப் பாண்டியன் திரும்பினான்.

“எல்லாம் பெரிய வீட்டிலே வேலை செய்யிற திமிர்”.

“போங்காலம்தான் பொன்னையாவைப் பின்னுக்குத் தள்ளுது”.

“கூரையைப் பிரிச்சுத் தூக்கியெறியறதுக்கு எவ்வளவு நேரமாகும்”. என்றெல்லாம் தங்கள் உள நிலையைச் சொல்லிவிட்டு, வேடிக்கை பார்த்த கும்பல் பிரிந்து சென்ற பின், பாண்டியன் களத்திலிருந்து புறப்பட்டபோது, அவனைத் தேடிக்கொண்டு லிங்கம் அங்கே வந்து சேர்ந்தான்.

அந்த நாளிலிருந்தே பாண்டியனையும் லிங்கத்தையும், ஊருக்குள் ‘இரட்டையர்கள்’ என்று குறிப்பிடுவார்கள்.

லிங்கம் துடியானவன்.

“பொன்னையா புலம்பிக்கிட்டே போறானே?” என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

“புலம்பல் இல்லே. சவால் விட்டுட்டுப் போறாரு. அடுத்த வாரம் சடையன் விடுதலையாகி வரப் போறானாம். இப்பவே வீட்டைப் பிரிக்கப் போறது யாரு—வந்து பாருங்கன்னு சொல்லிட்டுப் போறான்” என்று சொல்லிக் கொண்டே நடந்தான் பாண்டியன்.

“அதுக்குள்ளே தண்டனை முடிஞ்சி போச்சா?” என்று வியப்போடு கேட்டுப் பாண்டியனைத் தொடர்ந்தான் லிங்கம்.

“வர்றதா கடிதம் போட்டிருக்கானாம்”.

லிங்கம் சற்றுத் தயங்கியே சொன்னான்.

“மனுசத் தன்மையே இல்லாதவன் நீட்டின இடத்திலே பாய்வான்”, என்றான்.

“பாயட்டும். அவங்கிட்டத்தான் நெருங்கிப் பழகணும் என்றான் பாண்டியன்.

“இப்ப எங்கே போறோம்” என்று கேட்டான் லிங்கம். பேசிக் கொண்டே முத்தலாலம்மன் கோவிலைக் கடந்து வந்து விட்டார்கள். “நீ போட்ட போடு—கோவில் கிணத்தையே மூடப்போறாங்களாமே”, என்றான் லிங்கம் கோவில் கிணற்றைத் திரும்பிப் பார்த்து.

பாண்டியனும் நின்றான்.

“எங்க வீட்டிலே குடிக்கிறதே இந்தத் தண்ணிதானே. கிணத்தை மூடுற அளவுக்குத் துணிவு வருமா?” என்றவன், கோவிலுக்குஎதிர்ப்பக்கம் சற்றுத் தள்ளி இருக்கும் தென்னந்தோப்பின் வேலியோரமாக நிற்கும் குருவையாவைத் திரும்பிப் பார்த்தான்.

“என்ன தம்பி—நிக்கிறிங்க, வாங்களேன் இந்தப் பக்கம். இளநி குடிச்சிட்டுப் போகலாம்”, என்று குரல் கொடுத்தார் குருவையா.

குருவையாவுக்கு ஐம்பது வயதைத் தொட்டிருக்கும்.

கிராமத்திற்குள் நடக்கும் எந்த வம்பு தும்பிலும் தலையைக் கொடுக்காத பிறவி. பகலிலும், இரவிலும் அவருக்கு, அம்மனுக்கெதிரே இந்தத் தோப்புக்குள்ளேதான் குடியிருப்பு எப்போதாவது—ஊருக்குள் செல்லும் போது, குருபாதம் ஊரிலிருந்தால், அவருடன்தான் பேசிவிட்டு வருவார். பாண்டியனிடமும் இவருக்கு அன்பும் மரியாதையும் உண்டு.

அழைப்பைக் கேட்டதும் பாண்டியனும் லிங்கமும் தோப்புக்குள்ளே வந்தார்கள்.

வேலியோரமாகக் கட்டிலைத் தூக்கிப் போட்டு “உட்காருங்க”, என்று உபசரித்தார் குருவையா.

பாண்டியன் உள்ளுக்குள் தள்ளிப் போய் நின்று பார்த்தான்.

“தோப்புக்குள்ளேயே, காய்கறி, வாழையெல்லாம் போட்டிருக்கீங்களே”, என்று வியப்போடு கேட்டான்.

“வீட்டுக்கு வேண்டியதையெல்லாம், அரிசி ஒண்ணத்தவிர, இந்தத் தோப்பே கொடுத்துப் போடுது. காய் வெட்டுறப்ப பதறாமக் கயித்தை கட்டித்தான் இறக்கிக்கிட்டிருக்கோம்.”

“எங்களுக்கெல்லாம் ஐயா வழிகாட்டியா இருக்கிங்க, நான் கூட எங்க தோப்பிலே துவரையை ஊடு பயிரா போடலாம்னு இருக்கேன்”, என்றான் லிங்கம்.

“உடம்பை வளைச்சு அதைச் செய் முதல்லே”, என்று சொல்லிச் சிரித்தான் பாண்டியன்.

“கொஞ்சம் இருங்க. வழுக்கைப்பதமா நாலு இளநி வெட்டியாரச் சொல்றேன்” என்ற குருவையா, “டே......முனிசாமி” என்று குரல் கொடுத்துக் கொண்டே தோப்புக்குள் நடந்தார்.

லிங்கம் அருகிலிருந்த தேன் கூட்டையே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

பாண்டியன் பாதையைப் பார்த்தபடி வேலியோரமாகப் போய் நின்றான்.

எதிரே, கோவில் கிணற்றில் ஐந்தாறு பெண்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பார்வை அங்கேயே லயித்தது.

அருகிலேயே, வைகையும், முல்லைக் கால்வாயும், பருவம் தவறாமல் பெருக் கெடுத்தாலும், பரம்பரையாகவே, இந்த மக்களின் தாகத்தைத் தீர்க்கும், இந்த நீரூற்றை, அது யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் இழுத்து மூடி விட முடியுமா?

பாண்டியன் ஊரின் பக்கமாகத் திரும்பினான்.

அவனது கண்கள் அகல விரிந்தன.

இடுப்பில் குடத்தோடு டெய்சி வந்துக்கொண்டிருந்தாள்.

பையிலிருக்கும் காகிதத்தின் நினைவு வந்தது.

சிரிப்பும் வந்தது.

இப்படித் திரும்பத் திரும்ப எழுதச் சொல்லி யார் தண்டனை கொடுத்தது இவளுக்கு.

பாண்டியன் வேலியைக் கடந்து, சற்று முன்னால் வந்து நின்றான்.

டெய்சியும் பாண்டியனைப் பார்த்து விட்டாள்.

தயங்கித் தயங்கி நெருங்கி வந்தாள்.

அப்போது, “வாங்க தம்பி இளநி வெட்டி வச்சிருக்கேன்” என்று பின்னாலிருந்து குருவையா அழைக்குரல் கேட்டு பாண்டியன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

குருவையாவுக்குத் தெரியாதபடி, அவருக்குப் பின்னால் நின்ற லிங்கம் சிரிப்பதும் தெரிந்தது.

(வளரும்)

"அண்ணா! அண்ணா! அந்தப் புதிய இருபது ரூபாய் நோட்டைக் கொடுங்களேன், பார்த்து விட்டுத் தருகிறேன்!" என்றாள் ஆவலாக மலர்விழி. அவள் அண்ணன் மாறன் அந்தப் புதிய நோட்டை அவளிடம் கொடுத்தான். நோட்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள் மலர்விழி.

"இது எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று மலர்விழி சொன்னதும், "ஆமாம் அழகாகத்தான் இருக்கும், அநாவசியமாகச் செலவழிக்காத வரை! இந்த நோட்டு மட்டுமல்ல, எந்த நோட்டுமே முதலில் அழகாகத்தானிருக்கும் ..." என்ற மாறன் சில்லறைக் காசுகளையும், சில நோட்டுகளையும் தன் சட்டைப் பையில் திணித்துக் கொண்டான்.

"மலர்விழி, ஒவ்வொரு நாளும் நம் கைகளில் வந்து உறவாடி, பிறகு உருண்டோடி விடும் இந்த நாணயத்தைப் பற்றி எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா? இந்த நாணயம் முதலில் எப்படித் தோன்றியது? இது தோன்றுவதற்கு முன் மக்கள் என்ன செய்தார்கள்? என்றெல்லாம் நாம் நம்மை நாமே கேட்டுக் கொண்டிருக்கிறோமா?"

"இல்லை! இல்லை! இல்லை!" என்றாள் அழுத்தந்திருத்தமாக மலர்விழி.

"இந்த 'இல்லை' என்பதைத்தான் இல்லாமல் செய்ய வேண்டும். அதற்காக நாம் ஒவ்வொன்றையும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம் இல்லையா?"

"ஆமாம் அண்ணா!" அப்படியானால் இந்த நாணயம், பணமெல்லாம் எப்படித் தோன்றியது என்று நீங்களே எனக்குச் சொல்லுங்களேன். நான் அதைப் பற்றித் தெரிந்து கொள்கிறேன்" என்றாள் மலர்விழி.

"வாழ்க்கை எனும் வண்டியின் சக்கரங்களாக எதுவாக இருக்க முடியும்? உனக்குத் தெரியுமா?"

"ஓ, தெரியுமே! அதன் சக்கரங்கள் நாணயங்களாகத் தான் இருக்க முடியும் ... ..."

"எப்படி? சொல் பார்க்கலாம்?"

"சக்கரமும் வட்டமாக இருக்கிறது; நாணயமும் வட்டமாக இருக்கிறது — — ... — —"

"நன்றாகச் சொன்னாய் மலர்விழி! காசு வட்டமாய் இருப்பதோடு மட்டுமல்ல, அந்தக் காசெனும் சக்கரம்தான் வாழ்க்கையெனும் வண்டியின் உயிரோட்டமாகவும் இருக்கிறது — — — — — — —"

"ஆமாம் அண்ணா. நாணயம் இல்லாவிட்டால் நாம் சாப்பிட முடியுமா? நல்ல உடை உடுத்த முடியுமா? இந்த வீட்டில்தான் வாடகை தராமல் இருக்க முடியுமா? இன்று எதற்கெடுத்தாலும் காசு, பணம்தான் முன்னே வந்து நிற்கிறது. காசு இல்லாதவர் தூசுக்குச் சமம் ... ... என்ன நான் சொல்வது உண்மைதானே அண்ணா?"

"முற்றிலும் உண்மை. அதனால்தான் பெரியவர்கள் 'பணமில்லாதவன் பிணம்' என்று சுருங்கச் சொன்னார்கள். பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தத்தான் 'பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்!' என்றார்கள். இன்று உலகில் ஆடுவது, பாடுவது எல்லாம் இந்த நாணயத்துக்காகத்தான். நாணயம்தான் மனிதனை நாணயமாக வாழ வைக்கிறது. நாணயமற்றவன் நடுத் தெருவில் நிற்கும் நிலையும் பார்க்கிறோம்!" என்று சொல்லிவிட்டு மாறன் அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வந்து அதை மேசையில் வைத்தான்.

மலர்விழி அதை உற்றுப் பார்த்தாள். அதில், 'பணம்—சிறு விளக்கம்—தமிழ் வெளியீட்டுக் கழகம்' என்றிருந்தது. மாறன் அதிலுள்ள ஒரு பக்கத்தைப் புரட்டிப் படித்துக் காட்டினான்.

"மனிதனின் கண்டுபிடிப்புகளில் பணம்தான் மிகவும் அடிப்படையானது. ஒவ்வோர் அறிவியல் துறைக்கும் ஓர் அடிப்படையான கண்டுபிடிப்பு ஒன்று உண்டு. பொறித் துறையில் சக்கரமும், விஞ்ஞானத்தில் நெருப்பும், அரசியலில் வாக்குச் சீட்டும் அடிப்படையான கண்டுபிடிப்புகள். அது போன்றுதான் பொருளாதாரத்தில்—மனிதன் சமூக வாழ்வின் வாணிபத் துறை முழுமையும்—பணம் ஓர் இன்றியமையாத கண்டுபிடிப்பாகும். இதன் அடிப்படையில்தான் ஏனைய யாவும் அமைந்திருக்கின்றன. .. .. — ..."

"எத்தனை இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது! ஆமாம் பணம் தோன்றுவதற்கு முன்பு இருந்த நிலைமை என்ன? அதைச் சொல்லுங்கள் அண்ணா!" என்று மலர்விழி கேட்டதும், மாறன் அதே புத்தகத்தில் உள்ள குறிப்பைத் தொடர்ந்து படித்தான்.

"வீட்டு விலங்குகளே ஆதி விவசாயக் குடிகளின் செல்வங்களாகக் காட்சியளித்தன. அவைகளே பணமாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், எம்மிருகமும் பணமாகப் பயன்படுத்தப்பட்டபோது பெரிய இடர்பாடுகள் நேர்ந்தன. எல்லா வெள்ளாடுகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒருவன் ஒரு துண்டு நிலத்தை இருபது வெள்ளாடுகளுக்கு விற்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் பெறும் வெள்ளாடுகள் மிகவும் இளைத்தவையாகவோ அல்லது வாங்குகிற மந்தையிலேயே மிகவும் பிணி பிடித்தவைதாகவோ இருந்தால்தான் ஏமாற்றப்பட்டதாக நினைப்பான். மேலும், வெள்ளாடுகளில் இன்னும் மற்றக் குறைபாடுகளுமுண்டு. அவைகளுக்கு நோய் பரவினால், ஒருவன் செல்வம் முழுமையும் அழிந்து விடும். அவைகளின் இனப்பெருக்கப் பருவத்தின்போது சமுதாயத்தின் பண அளிப்பு மிக அதிகமாக இருக்கும். ஒருவனுடைய பணம் வெளியில் தப்பித்து ஓடிவிடாதபடிக்கும், மற்றைய விலங்குகளுக்கு இரையாகமலுமிருக்க எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். வீட்டு விலங்குகளுக்கு மிக அதிகமான குறைபாடுகளிருப்பதைப் போல, மற்றப் பண்டங்களில் நிறைய நன்மைகள் இருக்கின்றன.

"எல்லாப் பண்டங்களைக் காட்டிலும் உலோகங்களே பணமாகப் பயன்படுவதற்குச் சாலச் சிறந்தவையென்பது சமீபத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. உலோகங்களைக் கையாள்வது மிக எளிது; அவைகளின் அளவைச் சுலபமாக அறுதியிடலாம். அவைகள் அழிவதுமில்லை. அவைகளை வைத்துக் காப்பதும் எளிது. சேகரித்து வைப்பதற்கென்று பெரிய இடமொன்றும் தேவையில்லை. ஓர் ஆண்டில் உலோகங்களின் உற்பத்தி; பழக்கத்திலுள்ள உலோகங்களின் அளவில் ஒரு சிறிய உறுப்புப்பகுதியே ஆகையால் அவ்வுற்பத்தியின் அளிப்பு ஒவ்வோர் ஆண்டிலும் அதிகமாக வேறுபடுவதில்லை. எனவே, இதற்கடுத்த நாகரீக காலத்தில் உலோகங்களே பெருவாரியாகப் பணமாகக் கையாளப்பட்டுள்ளதைக் காண்கிறோம்."

"அப்படியானால் முதலில் 'பண்டமாற்று முறை' தான் வழக்கத்தில் இருந்தது இல்லையா?" மலர்விழி ஏதோ நினைவுக்கு வந்தவள் போலக் கேட்டு விட்டு அண்ணனைப் பார்த்தாள். உடனே மாறன், "ஆமாம் மலர்விழி. பண்டைக் காலத்தில் மனிதன் பண்டமாற்று முறை ஒன்றை மட்டுமே தெரிந்து வைத்திருந்தான். ஆட்டைக் கொடுத்து அரிசி வாங்குவதும், மாட்டைக் கொடுத்து மிளகாய் வாங்குவதும்தான் அவன் பழக்கத்திலிருந்த நாணயங்கள். இவற்றில் பசுக்களே விலை மதிப்புள்ளதாகக் கருதப்பட்டது. பண்டமாற்று முறையில் பல குறைபாடுகள் காணப்பட்டதால், இதற்குப் பதிலாக வேறொரு முறையை அவர்கள் நாட நேர்ந்தது. அத்தகைய பொருள் கெடாதவையாகவும், எந்த இடத்திற்கும் எளிதாக எடுத்துச் செல்லக் கூடியதாகவும், அனைவராலும் ஒரு குறிப்பிட்ட மதிப்புடையதாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணினர். அதுவே பிறகு 'நாணயம்' என்ற பெயரில் உருவானது என்றான்.

"முதலில் நாணயங்களை எதைக் கொண்டு செய்தார்கள்?"

"முதலில் நாணயங்களைச் செம்பு போன்ற சாதாரண உலோகங்களால் செய்தார்கள். கி.மு. 5வரையுள்ள நூற்றாண்டுகளில் வெள்ளியும், வெண்கலக் கட்டிகளும் நாணயங்களாகப் பயன்பட்டன. பண்டைக் காலத்தில் பொன், வெள்ளி மட்டுமல்ல, இரும்பைக்கூட நாணயமாக உபயோகித்து வந்தார்கள். துண்டு துண்டு கம்பிகள்கூட நாணயங்களாக வழக்கத்தில் இருந்தன. சீனாவில் வேளாண்மைப் பொருட்கள் பண்டமாற்றுக்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. அதனால் அவர்கள் நாணயங்களை வேளாண்மைக் கருவிகள் உருவத்திலயே செய்திருந்தனர். கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அவர்கள் நாணயங்கள் செய்யத் தொடங்கினர்".

"கம்பி நாணயம் என்றீர்களே, அது ஒன்றுக்கொன்று எடை மாறுபட்டிருக்காதா?"

"நிச்சயம் இருக்கும். இந்தக் கம்பி நாணயங்கள் குறிப்பிட்ட எடை இல்லாததால், குறிப்பிட்ட எடையுள்ள உலோகத் துண்டுகள் நாணயங்களாக வழக்கத்துக்கு வந்தன. அத்தகைய நாணயங்களை நிறுத்துப் பார்க்காமலேயே ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், அவற்றின்மீது ஒரு வகை முத்திரை இடப்பட்டது. இத்தகைய நாணயங்கள் முதன் முதலில் கிரீசிலும், இந்தியாவிலும் வழக்கத்துக்கு வந்தன.

"நாணயத்தில் முத்திரை முறை இப்படித்தான் பரவியதா?"

"இப்படித்தான் பரவியிருக்க வேண்டும். ஆசியா மைனரிலுள்ள லிடியா என்னும் பகுதியில் கி.மு. 680-ல் வாழ்ந்த ஒரு வணிகர் தாம் தயாரித்த நாணயம் ஒரே எடை உள்ளதாக இருப்பதற்காக அதன்மீது முத்திரை ஒன்றைப் பதித்தார். இதுவே மேல்நாட்டில் முதல் நாணயமாகக் கருதப்பட்டது. இதற்குப் பிறகு நாணயம் வெளியிடுபவர் தம்முடைய நகரத்தின் சின்னத்தைப் பொறிக்கும் வழக்கம் வந்தது. ஆதன்ஸ் என்னும் நகரத்தில் ஒரு பக்கத்தில், தங்கள் தேவதையான அதினேயின் உருவத்தையும் இன்னொரு பக்கத்தில் அதினேயின் பறவையான ஆந்தையின் உருவத்தையும் பொறித்தனர். இந்த முத்திரை முறை எங்கும் பரவத் தொடங்கியது. மேல்நாட்டில், நாணயத்தில் தம் உருவத்தைப் பொறித்த முதல் மன்னன் யார் தெரியுமா? மகா அலெக்சாந்தர்தான்!"

"அப்படியா? ஆமாம், முதலில் நாணயங்களை யார் செய்தது?"

"மேல்நாட்டில் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலிருந்த லிடியா நாட்டு மன்னன் கிரீசஸ் என்பவனே முதன் முதல் நாணயங்களைச் செய்தான். பிறகு இதை ஐரோப்பிய, ஆசிய நாடுகள் பின்பற்றின. இந்நாடுகள் முதலில் விலை மதிப்பு மிக்க பொன், வெள்ளியினாலேயே நாணயங்களைச் செய்தன; செம்புக்கு மதிப்பு இல்லாததே இதற்குக் காரணமாகும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து இந்தோ-கிரேக்க மன்னர்கள் நிக்கல் உலோகத்தை நாணயத்துக்குப் பயன்படுத்தினார்கள். ஏன், காரியத்தில் கூட நாணயங்கள்

147

வெளி வந்தன. மலேயர் நாடுகளில் இத்தகைய நாணயங்கள் இருக்கின்றனவாம்.''

''உலோகங்களில் மட்டும் தான் நாணயங்கள் வெளி வந்திருக்கின்றனவா?''

''இல்லை. தோலினுல்கூட நாணயம் இருந்ததாக மராத்தியக் கவிஞர் ஒருவர் 12-ஆம் நூற்ருண்டில் குறிப்பிட்டிருக்கிருர். முகமது துக்ளக் காலத்தில் சாதாரண பொருட்களான தோல், பித்தளை செம்பு ஆகியவைகளைக் கொண்டு அவை செய்யப்பட்டன. நாணயங்கள் பெரும்பாலும் வட்ட வடிவமாகத்தான் இருக்கும். ஆனுல் சில சதுரமாகவும், சில செவ்வகமாகவும் இருந்திருக்கின்றன. சில நாணயங்கள் வளைந்த கம்பி வடிவத்தில் இருந்தன. அக்காலச் சீனுவில் நாணயங்கள் வட்ட வடிவமாகவும் நடுவில் சதுரத் துளையுடையதாயுமிருந்தன.''

''இந்திய நாணயங்களைப் பற்றிச் சொல்லுங்கள் அண்ணு?''

''சொல்கிறேன் மலர்விழி ! இந்தியாவில் முதலில் நாணயங்கள் தோன்றியபோது அவற்றில் மன்னர்களின் உருவமில்லை. அதற்குப் பதிலாகச் சில குறிகள் மட்டுமே அவற்றில் பொறிக்கப்பட்டிருந்தன. கிரேக்கர்கள் படையெடுப்பிற்குப் பிறகு, அவர்கள் ஆட்சியில் மன்னர்கள் உருவங்களைக்கொண்ட நாணயங்கள் வெளி வந்தன. ஆனுல், அத்தகைய நாணயங்களை இந்திய மன்னர்கள் எதிர்த்து வந்தனர். நீண்ட காலத்துக்குப் பிறகு இந்து மன்னர் ஒருவர் தம் உருவத்தை நாணயங்களில் பொறித்தார். அவர் பெயர் சௌதமீ புத்திர யஞ்ஞஸ்ரீ சாதகர்ணி ; நாணயத்தில் உருவத்தைப் பொறித்த முதல் இந்து மன்னர் இவர்தான்'' என்று சொல்லிவிட்டு மாறன் எழுந்து சென்று அலமாரியிலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து வந்து உட்கார்ந்து கொண்டே, ''நாணயத்தால் எத்தனை நன்மைகள் தெரியுமா?'' என்ருர்.

''ஓ, தெரியுமே ! விரும்பிய பொருட்களையெல்லாம் நிறைய வாங்கலாம். சுற்றுப் பயணம் செய்து ஊரெல்லாம் பார்த்து மகிழலாம் ... ..''

''இவை மட்டுமல்ல, மலர்விழி இன்னும் எத்தனையோ நன்மைகள் அதனுல் உண்டு. இந்தியாவின் பண்டைக் கால வரலாற்றை நாம் இதன்மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அக்கால மன்னர்கள், ஆட்சி முறை, சமயம், கலை முதலானவற்றைத் தெரிந்து கொள்ளவும் இதனுல் முடிகிறது. பண்டைக்காலத்தில் குப்தர்கள் ஆட்சியில் நாணயம் ஒரு கலையாகவே வளர்ந்து வந்தது. குப்தர்களின் பொன் நாணயங்கள் அழகு வாய்ந்தனவாக இருந்தன. நாணயம் செய்யும் கலை முதலாம் சந்திர குப்தரால் தொடங்கப் பெற்றது. முஸ்லீம்கள் வட இந்தியாவைக் கைப்பற்றியதும், இந்திய நாணயங்களில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக உருவம் பொறிக்கும் வழக்கம் நின்றது. நாணயங்களில் உருவம் பொறிப்பதை அவர்கள் விரும்பாததே அதற்குக் காரணம்.''

''அப்படியானுல் முஸ்லீம்கள் தம் நாணயங்களில் என்னதான் மாறுதலைச் செய்தார்கள் ?''

''அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் மன்னருடைய பெயர், விருதுகள், ஹிஜிரா ஆண்டு ஆகியவை பாரசீக எழுத்துக்களால் இருபக்கமும் காணப்பட்டன. தில்லி சுல்தான் காலத்தில்தான் முதல் முதலில் நாணயங்களில், நாணயம் அடித்த இடத்தின் பெயர் பொறிக்கப்பட்டது. தில்லி சுல்தான்கள் தங்கம், வெள்ளி, வெள்ளியும் செம்பும் கலந்தவை ஆகியவற்றில் நாணயங்கள் வெளியிட்டனர். அலாவுதீன் முகம்மத் ஷா (கில்ஜி) என்னும் சுல்தான் தென்னிந்தியா மீது படையெடுத்து வென்று கொள்ளையடித்தான். இவர் காலத்தில் தங்க நாணயங்கள் ஏராளமாக வெளியாயின. இவர் உருவாக்கிய காப்பு உலோக நாணயத்தில்தான் முதல் முதல் தேதி பொறிக்கும் பழக்கம் தோன்றியது.''

''அப்பாடா! பணத்தைப் பற்றித்தான் எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன! சொல்ல வேண்டியவை இன்னும் இருக்கிறதா?'' என்று மலைப்புடன் கேட்டுவிட்டுக் 'கொஞ்சம்' இருங்கள் காபி கொண்டு வந்து விடுகிறேன்!'' என்று மலர்விழி சமையலறைக்குச் சென்ருள். சில நிமிடங்களில் கையில் காபியுடன் வந்து, ''அண்ணு! முதலில் காபியைக் குடியுங்கள். பிறகுக் கதையைச் சொல்லுங்கள்'' என்ருள். மாறன் மேலும் சொல்ல ஆரம்பித்தார் :

''அக்பரைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே! அவர் காலத்தில் நாணயங்கள் சதுரமாகவும், வட்டமாகவும் இருந்தன. ஜகாங்கீருடைய தங்க நாணயங்கள் மிகவும் அழகாய் இருந்தன. இவர் நாணயத்தில் படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சிலவற்றில் ராணி நூர்ஜகான் பெயரையும் பொறித்துள்ளார். ஐதர் அலி பகோடா, பணம் என்ற நாணயங்களை வெளியிட்டார். திப்பு சுல்தான் வெள்ளியிலான ஒன்று, அரை, கால், அரைக்கால் வீசம், அரை வீசம் ரூபாய்களை வெளியிட்டார். 1612-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த டேனியர் தஞ்சாவூருக்கு அருகேயுள்ள தரங்கம்பாடியில் பொன், வெள்ளி நாணயங்களைத் தயார் செய்து புழக்கத்தில் விட்டனர். 16-ஆம் நூற்ருண்டின் இறுதியில் வந்த டச்சுக்காரர்கள் நாகப்பட்டினம், பழவேற்காடு முதலிய இடங்களிலிருந்து பொன், வெள்ளி, செம்பு, ஈய, துத்தநாக நாணயங்கள் வெளியிட்டனர்.''

''அண்ணு ! சென்னையில் நாணயங்களை எங்கு அச்சடித்தார்கள்?'

''சொல்கிறேன் கேள் மலர்விழி. 1639-ல் ஆங்கிலேயர் இப்போதுள்ள.சென்னை இருக்கும் இடத்தைச் சந்திரகிரி என்னும் மன்னனிடமிருந்து விலைக்கு வாங்கினுர்கள். அந்த இடத்தில் நாணயங்கள் அடிக்கவும் அனுமதி பெற்ருர்கள். ஆனுல் ஒரு நிபந்தனை விதித்தார் மன்னர். தாம் வணங்கும் கடவுளின் உருவத்தைப் பொறிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. ஆங்கிலேயர் 1661-லிருந்து 1816 வரை பொன், வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர். மன்னர் விருப்பப்படி கடவுளின் உருவத்தை அதில் பொறித்திருந்தனர். 1809—11-ஆம் ஆண்டுகளில் சென்னைத் தங்கசாலையில் அதாவது இப்போது அரசினர் அச்சகமாக இருக்கும் கட்டடத்தில் இரண்டு பணம், ஐந்து பணம், அரை, கால், அரைக்கால் ரூபாய்களையும் அச்சடித்தனர். பிறகு ஆங்கிலேயர் மொகலாய ரூபாக்களைப் போல் நாணயங்கள் வெளியிட முயன்ருர்கள். அதற்கு மொகலாய மன்னன் முகம்மது ஷாவின் அனுமதி வேண்டியிருந்தது. நீண்ட காலத்திதுக்குப்பின் 1742-ஆம் ஆண்டில் மெகாலய மன்னன் 'ஆர்க்காடு ரூபா' என்னும் ரூபாய்களை அடிக்க ஆங்கிலேயருக்கு அனுமதியளித்தான். இவர்கள் வெளியிட்ட செப்புக் காசுகளின் மேல், தமிழ், தெலுங்கு, பாரசீகம் மொழிகளில் தேவநாகரி, கன்னடம் மொழிகளில் நாணயத்தின் மதிப்பு பதிக்கப்பட்டிருந்தது.'' என்று சொல்லி விட்டு மாறன் முகத்தைத் துடைத்துக் கொண்டே ''தென்னிந்திய நாணயங்களைப் பற்றிச் சொல்லப் போகிறேன்!'' என்ருர்.

அதற்கு உடனே, ''பணத்தின் கதை இன்னும் முடியவில்லையா?'' என்று கேட்டாள் மலர்விழி.

''இன்னும் நிறைய இருக்கிறது. தூக்க முடியாத பெரிய பணத்தைப் பற்றியும் உனக்குச் சொல்லப் போகிறேன்.'' என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார்.

''அந்தக் காலத்தில் நாணயத்துக்குப் பல பெயர்கள் இருந்தன. பணம், பகோடா, மொகராக்கள், காசு, ரூபாய், வராகன், தாம், பூவராகன், பைசா என்றெல்லாம் அதன் பெயர்களாக இருந்தன. தென் இந்தியாவில் நாணயங்கள் வளர்ந்த கதையைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோமா?'' என்று கேட்டார் மாறன்.

அதற்கு மலர்விழி ''ஓ, தாராளமாக. பணத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டுமென்று ஆசிரியர் கூறியிருக்கிருர். நீங்கள் சொல்கின்ற குறிப்புகளெல்லாம் என் கட்டுரைக்கு மிகவும் உதவியாக இருக்கும். . . . . — . . ம் . . . . . .சொல்லுங்கள்அண்ணு'' என்ருள் ஆர்வமாக.

''தமிழகத்தை 3, 9 நூற்ருண்டுகளில் ஆண்ட பல்லவர்கள், முத்திரை நாணயங்களை வெளியிட்டார்கள். அவற்றில் காளை உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. சிம்ம உருவ நாரணயங்களும் வெளிவந்தன. சாளுக்கியருடைய நாணயத்தில் பன்றியும், டின்னனுடைய பெயரும் இருந்தன. இந்த வமிசத்தைச் சேர்ந்த இராசராச சோழருடைய நாணயத்தில் ஒரு பக்கத்தில் நடுவில் பன்றியும், அதன் இருபுறத்திலும் விளக்குகள், அங்குசம், குடை, சாமரம் ஆகியவை இருந்தன. நாணயத்தின் விளிம்பைச் சுற்றி ஆறு முத்திரைகளும், ஒவ்வொன்றிலும் தெலுங்கு அல்லது கன்னட மொழியில் 'ஸ்ரீராஜராஜ சம்ராட்' என்று பொறிக்கப்பட்டிருக்கும். இதில் ஆட்சி புரிந்த ஆண்டும் குறிக்கப்பெற்றிருக்கும். சோழ நாணயங்களில் புலி உருவம் பல விதங்களில் காணப்படும். இராசராசருடைய நாணயங்கள் பலவகையானவை. நாண்யத்தின் ஒரு பக்கத்தில் மன்னர் நிற்கும் தோற்றமும், தேவதை அமர்ந்திருக்கும் காட்சியும் காணப்படும். இதிலுள்ள வாசகம் தேவநாகரி எழுத்தில் இருக்கும். இராசேந்திரருடைய நாணயங்களில் 'ஸ்ரீராஜேந்திரா' என்ற பெயரும், 'கங்கை கொண்ட சோழர்' என்ற பெயரும் காணப்படும். குலோத்துங்கருடைய நாணயங்களில் மன்னரின் உருவமும், புலி உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். சிலவகை நாணயங்களில் 'சு'என்ற எழுத்து மட்டும் இருக்கும்; இது, மன்னர் சுங்க வரியை நீக்கியதைக் குறிக்குமாம். இன்னுஞ் சில வகை நாணயங்களில் 'மலைய நாடு கொண்ட சோழன்' என்ற வாசகம் காணப்படும்.''



''பாண்டிய, சேர, மன்னர்கள் இருந்தார்களே, அவர் காலத்தில் நாணயங்கள் எப்படி இருந்தன? அதைச்சொல்லுங்கண்ணு?''

''பாண்டியர் நாணயங்கள் சதுரவடிவமானவை. ஒருபுறம் யானை இருக்கும். மறுபுறம் ஒன்றுமிருக்காது. சில நாணயங்களில் மீன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும்.தங்கம், வெள்ளி நாணயங்களில் சமஸ்கிருத வாசகமும், செப்பு நாணயங்களில் தமிழ் வாசகமும் காணப்படும். சேரர்தம் நாணயங்களில் குடமும், முதலையும் பதித்தனர்.

''நம்முடைய இந்திய நாணயங்கள் எப்போது முதல் அச்சாகி வெளி வருகின்றன அண்ணு?''

''நவாப் சுராஜ் உத்தௌலாவுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் பேரில், ரூபாய்கள் அச்சடிக்கும் தொழிற்சாலை கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்திய நாணயங்கள் முதன் முதலில் 1757-ஆம் ஆண்டு ஆகஸ்டு 29-ஆம் நாள் அச்சடிக்கப்பட்டன. 1824-ல் இத்துறை மேலும் மேலும் முன்னேறியது. 1835-ல் நாணயங்களுக்கானவடிவமைப்பு(டிசைன்) ஏற்படுத்தப்பட்டது. அந்தக் காலத்தில் அம்மன் காசுகள் என்பவை புழக்கத்தில் இருந்தன ..''

''அம்மன் காசுகளோ? இப்படியும் ஒரு காசா?''

''ஆமாம் மலர்விழி. காலணுவுக்கு எத்தனை அம்மன் காசுகள் தெரியுமா? ஐந்து அம்மன் காசுகள். ஆறு அம்மன் காசுகள் கொடுத்தால் வயிருரச் சாப்பிடலாம். ஒருரூபாய்க்கு 320 அம்மன் காசுகள் என்று கணக்கு வைத்திருந்தார்கள். காலணு, தம்பிடி என்றெல்லாம் அன்று வழக்கத்திலிருந்தன. செம்பால் ஆன சல்லிக்காசுகளை நாகூர் சல்லி, தென்னை மரத்துச்சல்லி என்று அழைத்தனர். தென்னை மரம் பொறித்த இலங்கைக் காசு அப்போது தமிழ் நாட்டில் செல்லத்தக்கதாய் இருந்தது. காலணுவை எடுத்துக் கொண்டால் அதில் எத்தனை வகைகள் தெரியுமா ? கும்பினி காலணு, எட்டவர்ட் காலணு இதைத்தான் மொட்டைத் தலைக் காலணு என்று அழைத்தார்கள். இன்னும் ஜார்ஜ் காலணு, ஓட்டைக் காலணு, குதிரைக் காலணு என்றெல்லாம் இருந்தன.

''ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேன்'' 1950-ஆகஸ்டு 15-ஆம் நாள் இந்திய விடுதலையின் மூன்ருவது ஆண்டு விழா. அப்போது இந்திய நாணயங்களின் உருவ அமைப்பு முற்றிலும் மாறுதலடைந்தது. நாணயங்களின் முகப்பில் இருந்த மன்னர் தலைக்குப் பதில் அசோகத் தூண், சிங்க உருவம், பொறிக்கப்பட்டது. அதைச்

சுற்றி இந்திய அரசு என்னும் ஆங்கில எழுத்துக்கள் இருந்தன. ஒரு ரூபாய், எட்டணா, நான்கணா நிக்கல் நாணயங்களில் தானியக்கதிர்ச் சின்னமும் அச்சிட்ட ஆண்டு, நாணய மதிப்பு ஆகியவையும் இருந்தன. 1957 ஏப்ரல் முதல் நாளிலிருந்து தசாம்ச நாணயங்கள் முதன் முதல் அமலுக்கு வந்தன' என்று மாறன் சொன்னதும் மலர்விழி, தன் அண்ணனை பெருமையோடு உற்று நோக்கினாள். எவ்வளவு விஷயங்களை அவர் தெரிந்து வைத்திருக்கிறார். என்று எண்ணிப் பெருமிதம் கொண்டாள். உடனே ஏதோ நினைவுக்கு வந்தவளாய்,

'' அண்ணா, அண்ணா ஏதோ பெரிய பணத்தைப் பற்றிச் சொல்லப் போகிறேன் என்று சொன்னீர்களே, அதைச்சொல்லவில்லையே '' என்று மாறனுக்கு நினைவூட்டினாள்.

''மலர்விழி, உனக்கு நல்ல நினைவு இருக்கிறது. பெரிய பணம் எது என்று உன்னைக் கேட்டால் நீ என்ன சொல்வாய்? ஒரு கோடி ரூபாய்—இதுதான் பெரிய பணம் என்பாய். ஆனால், அதுவல்ல பெரிய பணம், சாதாரணக் கல்தான் பெரியபணமாகக் கருதப்பட்டது. ''

''என்ன? கல்லா பெரிய பணம்? அது இன்று நிறைய தெருக்களில் இருக்கிறதே!''

''இன்று அது வெறுங்கல் ; அன்று அது பெரும்பணம்· இன்று யாராவது கல்லைப் பணம் என்று கொடுத்தால், கல்லடிதான் வாங்க வேண்டும்!'' என்று சிரித்துக்கொண்டே சொன்ன மாறன், கல் பணம் பற்றி சொல்ல ஆரம்பித்தார் :

''பசிபிக் பெருங்கடலில் சுமார் பத்தாயிரம் தீவுகள் இருக்கின்றன. மனித இனம் கடைசியாக யாகக் குடியேறிய நிலம் அவைதான் என அறிஞர்கள் கருதுகின்றனர். இங்குள்ள தீவுகளில் 'மைக்ரானேசியா' என்பது ஒன்று. இங்குள்ளவர்களை மைக்ரானேசியர் என்று அழைத்தனர். இவர்கள் கிளிஞ்சல்களையும் கற்களையும் நாணயங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இவையே ஒருவனைச் செல்வந்தனாகவும் கருதச் செய்தது. தீவுகளில் கிளிஞ்சல் மாலைகள் சிறிய தொகைக்கு ஈடாகவே மதிக்கப்பட்டன. ஆனால் பெரிய தொகைக்கு ஈடாக ஒன்றைக் கண்டுபிடிக்க எண்ணினார்கள். உடனே அவர்கள் நினைவுக்கு வந்தது கல்தான். ஆகவே, அவர்கள் கல்லாலான சக்கரத்தைப் பணமாகக் கருதினர். அதுவே பெரிய பணமாகவும் மதிக்கப்பட்டது. இந்தக் கல் சக்கரம் மூன்றிலிருந்து நான்கு அடி வரை விட்டமும், கனமாகவும், நடுவில் ஓட்டையுடனும் காணப்படும். பாரமான இந்தப் பணத்தைத் தூக்கிச் செல்ல இரண்டு பேர் வேண்டும். அவ்வளவு பெரிய பணம் இது! ''

''சில்லறைக் காசையே, பையில் வைத்துக் கொள்ள கனமாக இருக்கிறது. இந்தக் கல் சக்கரத்தை எப்படி எடுத்துப் போவது அண்ணா? '''

''நன்றாகக் கேட்டாய் மலர்விழி. இந்தப் பணத்தை இரண்டு பேர் ஒரு கொம்பில் கோத்து, கொம்பின் இரு முனைகளையும் தோளில் சுமந்து செல்வார்கள். பணம் கிடைப்பதே பெரும்பாடு. அது கிடைத்தும்கூட அதை எடுத்துச் செல்ல எத்தனைபாடு பார்த்தாயா? மனிதனைப் பணம் படுத்திய பாடு இருக்கிறதே அப்பப்பா! அதைச் சொல்லி முடியாது ... ... ''

''சரி, சரி. இந்தக் கதையைச் சொல்லி முடியுங்கள் அண்ணா·''

''இந்தக் கல் பணத்தை அத்தீவு வாசிகள் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் கிடைத்தற்கரிய பொருளாக அது இருந்ததேயாகும். அங்குக் கற்களைக் கண்டெடுப்பது என்பது பொன்னை எடுப்பது போலாகும். ஆனால் மற்றொரு தீவில் சுக்காங்கல் பாறை பாளம் பாளமாக வெடித்துக் கிடந்தன. பணக்காரனாக விரும்பியவர்கள் படகில் சென்று அதை எடுத்து வந்தனர். கற்களை ஏற்றிக் கொண்டு கடலில் படகில் வருவது என்றால் பெரும்பாடாகும். சில சமயங்களில் அரும்பாடு பட்டு ஏற்றி வந்த கல் நாணயங்கள் நழுவிக் கடலிலே விழுந்து விடுவதுண்டு.

அதிகப் பால் தரும் அதிசயப் பசு

ஒரு பசுவிலிருந்து 4 தடவைகள் பால் கறந்தால் சிறிய நீச்சல் தொட்டிகள் எட்டை நிறைத்துவிட முடியும் என்றால் நாம் நம்பத்தான் மாட்டோம். அவ்வாறு பால் தரும் கறவை இனம் ஒன்று ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள பவேரியாவில் இருக்கிறது. சிபைல் என்று அழைக்கப்படுகின்ற இந்தப் பசு ஒரு நாளுக்கு 44·6 லிட்டர் பால் தருகிறது. இது கடந்த 5 ஆண்டுகளாக இவ்வாறு பால் தந்து வருகிறது.

இப்படிப் பலர் தாம் கொண்டு வந்த கற்களைக் கொண்டு பெரும் பணக்காரர்களானார்கள். சிலர் ஒரு கிராமத்தையே கூட இந்தக் கல்லைக் கொண்டு விலைக்கு வாங்கியிருக்கிறார்கள் '' என்று மாறன் சொன்னதும், உடனே மலர்விழி தன் கையில் மடித்து வைத்திருந்த இருபது ரூபாய் நோட்டை அண்ணனிடம் கொடுத்து விட்டு, '' நான் இதைக் கொடுக்க மறந்தே விட்டேன் '' என்றாள்.

''இவ்வளவு நேரம் நோட்டைக் கையில் வைத்துக் கொண்டே, இந்தக் காகிதப் பணம் ஏன் வந்தது என்று கேட்க மறந்து விட்டாயே '' என்றான் மாறன்.

''ஆமாம் அண்ணா, அதையும் மறந்து விட்டேன் ''என்று சொல்லி விட்டு காகிதப் பணத்தைப் பற்றியும் சொல்லும்படி வற்புறுத்தினாள்.

''நாணயங்களைச் செய்வதற்கு நிறைய உலோகப் பொருட்கள் தேவைப்பட்டன. இதன் பற்றாகுறையினால் அதிகமான நாணயங்களைத் தயார் செய்ய முடியவில்லை. அதனால் எளிதில் கிடைக்கக்கூடிய காகிதமே பணத்துக்கு மிகவும் பயன்பட்டது. காகிதப் பணத்தை வேண்டிய அளவு பெருக்கிக் கொள்ளலாம் ; பெரும் தொகையைக் கூடச் சிறிய காகிதத்தால் குறித்துவிடலாம். வங்கிகளில் அதாவது பாங்குகளில் பணத்திற்குப் பதிலாகச் 'செக்' முறை இருப்பது பற்றித்தான் நீ அறிவாயே '' என்றார் மாறன்.

உடனே மலர்விழி , '' ஆமாம் நீங்கள்தான் முன்பு அதைப்பற்றி சொல்லியிருக்கிறீர்களே!'' என்றாள்.

''புதை பொருளில் நாணயங்களும் கிடைத்தன. அவைகளை எல்லாம் சேகரித்து வைத்து அறிஞர்கள் பலர் ஆராய முற்பட்டனர். இதற்கு 'நாணயவியல்' என்று பெயர். இன்று உலகில் 'நாணயவியல்' இல்லாத பொருட்காட்சிகளே இல்லை எனலாம். இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சி இத்துறையில் மிகச் சிறந்து விளங்குகிறது. இந்தியப் பொருட்காட்சிகளிலும் இத்தகைய நாணயப் பிரிவுகள் உள்ளன'' என்று சொல்லிவிட்டு மாறன் கடிகாரத்தைப் பார்த்ததார். இரவு மணி ஒன்பது.

''மலர்விழி வா, சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போகலாம் .... பணமென்றால் சாப்பாடும் மறந்து போம்'' என்று சிரித்துக் கொண்டே எழுந்தார். மலர்விழியும் அண்ணனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருப்புக்குழி ஊராட்சி மன்ற குடும்பநலத் திட்டக் கட்டடம் மற்றும் பணியாளர் குடியிருப்புக்கட்டடங்களை திரு சி. வி. எம். அண்ணாமலை, எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், அவர்கள் துவக்கி வைத்து அதன் சிறப்பை விளக்கினார். இதேபோல் பரந்தூரிலும் கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டன.

* * *

செங்கை மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த கொம்மந்தாங்கல் கிராமத்தில், திருவள்ளூர் கோட்ட ஆட்சித் தலைவர் திரு வி. மனோன்மணி அவர்கள் தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு திட்ட வருவாய் மூலம் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

செங்கற்பட்டு வடக்கு மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு பி. எஸ். சீனிவாசன் கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி மாணவ மாணவியர்களுக்கு மேலும் ஊக்கந்தரும் வகையில் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

* * *

கிராமங்களில் சத்துணவு கிடைக்கச்செய்வதற்காக மதுரை மாவட்டத்தில் ஒரு திட்டம் அமலாக்கப்படவிருக்கிறது. அந்தந்தக் கிராமங்களில் பெறப்படும் பொருட்களைக் கொண்டு சத்துணவு தயாரிக்கப்பட்டு 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிகள், குழந்தை பெற்ற பெண்கள் ஆகியோருக்கு ஒரு வேளை உணவு வழங்கப்படும். இம்மாவட்டத்தில் 5 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 35 கிராமங்களில் இத்திட்டம் அமல் நடத்தப்படவிருக்கிறது. நாள்தோறும் ஒரு குழந்தைக்கு 40 காசு, பெண்ணுக்கு 30 காசு மதிப்புள்ள (ஒரு வேளை மதியம்) உணவு வழங்கப்படும். தமிழ் நாட்டிலேயே முதல் கட்டமாக மதுரைப் பகுதியில் இது தொடங்கப்பட இருக்கிறது. மற்றும் குடும்பநலப் பிரச்சாரம் நவம்பர், டிசம்பரில் மதுரை மாவட்டத்தில் தீவிரமாக்கப்படும் போது 40,000 குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

* * *

இராமநாதபுரம் மாவட்டம் பேரூராட்சி மன்றத்தின் சார்பில் நாள் அங்காடி ஒன்றை அமைச்சர் மாதவன் அவர்கள் திறந்து வைத்தார். பேரூராட்சியின் மூலம் வருமானத்தைப் பெருக்கும் இங்கு 25,000 ரூபாய் செலவில் நாள் அங்காடிக் கிடங்குத் திறக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சி ஆண்டுக்கு 7,200 ரூபாய் வருமானத்தைப் பெருக்குகிறது. வருமானத்தைப் பெருக்குவதில் இது வெற்றி பெற்று வருகிறது.

நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதில் அரசு விரைந்து செயல் படுகிறது என்றும், பொதுமக்கட்கு ஓயாது நன்மை செய்ய வேண்டுமென்பதிலும், பொது மக்களிடமுள்ள சுமைகள் குறைக்கப்பட வேண்டும் என்பதிலும் அரசு பெரிதும் அக்கறை செலுத்துகிறது என்றும் அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டார்.

* * *

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கொட்டாம்பட்டியில் மனு நீதித் திட்டத்தின் கீழ் 2,500 மனுக்களை விசாரித்தார். இந்த மனு நீதித் திட்டம் பயனுள்ளதாகவும் இருந்தது. கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூ. 5 இலட்சம் அனுமதிக்கக் கோரும் திட்டமொன்று அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளதென்றும், இதற்கு அனுமதி அளிக்கப்பட்டதும் கடன் வசதியளிக்கப்படும் என்னும் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி கேட்டவர்களுக்கு ஆட்சித் தலைவர் பதிலளித்தார்.

மதுரை மாவட்டத்தில் பள்ளி செல்லும் வயதிலுள்ள சுமார் 60,000 குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதாகவும், இவர்களை செப்டம்பர் மாதத்திற்குள் பள்ளிக்குச் செல்ல வைக்கும் தீவிர முயற்சித் திட்டம் ஒன்றைத் தான் தயாரித்திருப்பதாகவும் இதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் உதவ வேண்டும் என்றும் கூறினார்.

கடந்த ஆண்டில் 18,000 பேருக்கு நிலமும், வீட்டு மனையும் அளிக்கப்பட்டது என்றும் இவ்வாண்டில் 25,000 பேருக்கு நிலம் வீட்டுமனையளிக்க திட்டமிடப்பட்டுள்ளதென்றும் அவர் சொன்னார்.

மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதி விளாம்பட்டி கிராமத்தில் 'கள்ளர்' சீரமைப்பு வளர்ச்சிப் பணிக்கான அடிக்கல் நாட்டுவிழா சட்டமன்ற உறுப்பினர் திரு பி.எஸ். மணியம் தலைமையில் நடந்தது. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

ஆவாரம்பட்டியில் இது வரையில் குடிசையில் இயங்கி வந்த பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 5,000-ம் வழங்கப்பட்டது. கள்ளர் நல நிதியிலிருந்து 27 மாணவர்கள் பயிலும் விளாம்பட்டி கள்ளர் உயர்நிலைப் பள்ளிக்கு 670 ரூபாயும், 5 மாணவர்கள் பயிலும் கருதன்பட்டி ஆதாரப் பள்ளிக்கு 30 ரூபாயும், 7 மாணவர்கள் பயிலும் மட்டப்பாரை உயர்நிலைப்பள்ளிக்கு 168 ரூபாயும், 27 மாணவர்கள் பயிலும் அணைப்பட்டி நடுத்தரப் பள்ளிக்கு 165 ரூபாயும் 30 மாணவர்கள் பயிலும் அய்யப்ப நாயக்கன்பட்டி நடுத்தரப் பள்ளிக்கு 300 ரூபாயும் ஆக மொத்தம் 86 மாணவர்களுக்காக ரூ. 1,333-ஐ தமிழ் நாடு அரசு ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

கண்ணகிக் கோட்டம்

மதுரையின் மேற்கு வாயில்

மதுரை மாநகரில் கோட்டைக்குரிய மேற்கு வாயிலுக்கு முன்னே பழமையான. கோயிலொன்று; அதன் வாயிலுக்கு இருபக்கமும் இரண்டு வேப்ப மரங்கள் தழைத்துக் கவிழ்ந்து நிழலிட்டு நிற்கின்றன. வாயிலுக்கு எதிரே பல கற்சிலைகள் நிற்கின்றன. அவைகள் பாண்டிய நாட்டு வீரர்கள், போரில் தமது மன்னன் வெற்றி பெறுவதற்காகத் தங்களை வேலாலும், வாளாலும் அக்கோயிலிலுள்ள தெய்வத்திற்குப் பலியிட்டுக் கொண்டதற்கு நினைவாக, மக்கள் அமைத்து வழிபடும் வீரக்கற்களாகும். இக்கோயிலே அன்று அரசு செலுத்திய பாண்டிய மன்னர்களும் வீரர்களும் மக்களும் வழிபட்ட வரலாற்றுச் சிறப்புடைய கொற்றவைக் (துர்க்கை) கோயிலாகும்.

வீரபத்தினி

மேற்கு வாயில் வழியாக ஒரு பெண் விரித்த கூந்தலும், வெறித்த முகமுமாக வெளியே வருகின்றாள். அவளுடைய முகத்தில் களை இல்லை. கவலை கவிழ்ந்துள்ளது. வெறித்த பார்வையில் வெறுப்புணர்ச்சி நிலைத்துள்ளது. மார்பகத்தை மறைத்து நிற்கும் அவளது ஆடையின் இடப்பக்கம் இதயமிட்ட இலச்சினையாக இரத்தக் கசிவின் பசுமை தெரிகின்றது. கோயிலிலிருந்த கொற்றவையே மதுரையினுள் சென்று கோரவடிவோடு கோயிலுக்குத் திரும்புகின்றாளோ என்ற தோற்றம். கோயிலுக்கு முன் வந்தாள். உற்று ஒரு முறை கொற்றவைச் சிலையை நோக்கினாள். பார்வையை மீட்டுத் தன் கைகளில் ஒளிவிடும் சங்கு வளையல்களை உறுத்துப் பார்த்தாள். கண்களிலிருந்து பெருகும் நீர் மார்பில் கசியும் செந்நீருடன் பெருகி வழிகின்றது. அவலக் குரலுடன் தன் இரு கைகளையும் சேர்த்து உயர்த்தி அடித்தாள். கோயில் வாயிலில், திக்கெங்கும் தெறித்தன வளையல்கள். அலறலுடன் அவ்விடமிட்டு அகன்றாள். விரைந்து நடந்தாள் மேற்கு நோக்கி.

இந்நிகழ்ச்சி கற்பனையல்ல. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்ததாகும். இவ்வாறு மதுரை நகரின் மேற்கு வாயிலிலிருந்து, கண்ணீரும் கம்பலையுமாகக் கதறிக் கொண்டு சென்ற நங்கையே முலைமுகம் திருகி மதுரையழலூட்டிய வீரபத்தினி கண்ணகியாகும்.

மதுரையில் இருந்து கண்ணகி நடந்த வழி

கொற்றவைக் கோயிலைக் கடந்து விம்மலும் அலறலுமாகப் புலம்பி நடந்த கண்ணகி வையை ஆற்றின் கரைக்கு வந்து நின்றாள். மேற்கு மலையில் பெய்த மழையால் வெள்ளம் மிகுந்து, வையை என்னும் பெண்ணானவள் கரையில் நிற்கும் கண்ணகியைக் கண்டு நிலை கலங்கித் தடுமாறி ஓடுபவளைப் போலக் குதித்தும் சுழித்தும் அரித்தும் நுரைத்தும் பேரிரைச்சலுடன் ஓடினாள். வெள்ளப் பெருக்கால் ஒலித்து ஓடும் வையையின் ஒரு கரையாகும் தென்கரை வழியே மதுரையிலிருந்து தொடரும் வழியாகும். மேடும் பள்ளமும் காடும் கறம்புமாகக் கிடந்த அவ்வழியே சிந்தனையின்றி மேற்கு நோக்கியே நடந்தாள் கண்ணகி.

கணவனை இழந்த கொடுந்துன்பம் உள்ளத்தையும், உடலையும் குலைக்க, பாண்டியன் செய்த தீமை அறிவை வெறியாக்க, மங்கல மிழந்து வாழ விரும்பாத கண்ணகி காட்டிலும் மேட்டிலும் குண்டுக் குழியிலும் நடந்தும் ஓடியும், கால் இடறி விழுந்த போது கலங்கி அலறி எழுந்தும் சில நாட்கள் நடந்தாள். இரவு பகலாக ஓய்வின்றி ஓடியதால் உண்டான தளர்ச்சியும், சிதைத்த மார்பில் செறிந்த புண்ணால் வந்த நலிவும், மனப்புண்ணால் மடிந்துவரும் உடலும் எல்லாம் சேர்ந்து கண்ணகியின் இறுதிநாளை அறுதியிட்டன. இந் நிலையில் வையையாற்றின் தோற்றப் பகுதிக்கே வந்துவிட்டாள். எதிரே வானளாவி உயர்ந்து படர்ந்து நீண்டு வளைந்து நின்றது நெடுவேள் குன்றம்; தான் என்ன செய்கிறோம் என்ற நினைவைக் கைவிட்ட கண்ணகி மலையென்று மலைக்கவில்லை ; தான் நடப்பதை நிறுத்தாது அடிவரை மீது அடிவைத்து ஏறினாள். மலையின் மேல் தளத்திற்கே வந்துவிட்டாள். அடுக்கடுக்காக உயர்ந்த நெடுவேள் குன்றத் தொடரின் தலைப்புகளில் ஒன்றாகும் பரந்த தாழ்வரை. அங்கே மலைவேங்கை மரங்கள் நெருங்கி வளர்ந்து மலர்ந்து திட்டாக நிழலிட்டு நின்றன. அவ்வேங்கை மரக் கானலுள்ளும் விழைந்து நடந்தாள் கண்ணகி. கண்களில் பார்வை மழுங்கியது. விழிகள் சுழன்றன. உடலில் உயிர் ஊசலாடுவதை ஒவ்வொரு மூச்சும் இரைச்சலுடன் வெளிப்படுத்தியது.

அப்பொழுது அம் மலையில் வாழும் குறவர் குலமக்கள் கண்ணகியின் நிலையைக் கண்டு அஞ்சினர். ஆயினும் அருகில் சென்றனர். குறவர்களின் தலைவன், வணங்கிய உடலோடும் வணங்கிய கைகளோடும் அஞ்சிய குரலால் 'அம்மா! தாங்கள் யாரம்மா?' என்று கேட்டான். “தீவினையில் விளையாட்டுப்பாவை பாவியேன்” என்றாள். அதற்கு மேல் பேச்சில்லை. அசைவில்லை; அழுகையும் இல்லை. கண்ணகி மதுரையிலிருந்து புறப்பட்டது முதல் பதினான்காம் நாளே அந்நாள். உடல்நிலை தடுமாறியது.

மண்ணகத்தில் சோழநாட்டில் மானிடப் பெண்ணாகப் பிறந்து, கற்புக்கரசியாகி, கணவனுடன் பாண்டியநாட்டு மதுரைக்கு வந்த கண்ணகி, சேர நாட்டெல்லையுள் நெடுவேள் குன்றின்மேல், வேங்கை மரத்தின் அடியில் தனித்து நின்று பத்தினித் தெய்வமானாள். (இறந்தாள்.)

கண்ணகி வழிபாடு

நேரில் கண்ட குன்றக் குறவரின் கண்கள் காண விண்ணுலகடைந்த பெண்ணின் பெயரை அவர்கள் அறிந்திலர். மங்கலச் சின்னமாகும் தாலியுடன் தனித்து நின்று ஒரு பெண் மரணத்தை விருப்புடன் ஏற்றது வியப்பாக இருந்தது. எனவே, தெய்வமாகக் கருதினர். தாம் கண்ட அடையாளத்தைக் கொண்டே 'மங்கலதேவி' என்று பெயரிட்டனர். நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழாகவே தெய்வமாகக் கொண்டு மங்கலதேவியைக் கொண்டாடி வழிபட்டனர். தமிழகத்தில் கண்ணகி வழிபாடு, பத்தினி வழிபாடு, நெடுவேள் குன்றத்தில் வாழ்ந்த குறவர்களால் முதன் முதலில் கொண்டாடப்பட்டது. நெஞ்சை அள்ளும் இத்தகைய நிகழ்ச்சி உண்மையாகவே நிகழ்ந்ததா? அன்றிக் கற்பனையா? என்னும் உள்ளக் கிளர்ச்சி ஏற்படுவது இயற்கைதானே! எனவே,

ஆராய்ச்சி அரும்பியது

கி. பி. 1945-ல் கண்ணகி பிறந்த காவரிப்பூம்பட்டினத்தைக் காணச் சென்றேன். சிலப்பதிகாரம், பட்டினப்பாலை ஆகிய பழந்தமிழிலக்கியங்களில் விரிவாக விளக்கப்பெறும் செல்வ வளங்களுடன் சிறந்திருந்த பூம்புகாரின் ஒரு சிறு பகுதியும் இன்றில்லை. முயன்று, தொடர்ந்து மூன்றாண்டுகள் ஆராய்ச்சி செய்ததன் பயனாக, பூம்புகார் கடல் கொந்தளிப்பாலும், காவரியாற்றின் பெருக்காலும் கடலிலும், தரையிலும் அழிந்து மறைந்து விட்டது என்பதை ஆங்காங்கே எஞ்சியதாகக் கிடைத்த சின்னங்கள் உணர்த்தின.

எனவே, காவரிப்பூம்பட்டினம் கற்பனையாகாமல், இளங்கோவடிகள் குறித்தபடி சீருடன் இருந்த பின்னர், இயற்கையின் விளையாட்டால் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்ட உண்மையைக் கண்டதைக் கொண்டு, சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெறும் பழமையான ஊர்களையும், வழிகளையும், இடங்களையும் நேரில் கண்டு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டாயிற்று.

திட்டமான ஆராய்ச்சி

காவரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குக் கண்ணகியுடன் கோவலன் புறப்பட்டுச் சென்ற வழியாக சிலப்பதிகாரம் குறிப்பதைப் பின்பற்றிய முறையில், பூம்புகார் முதல் காவரியாற்றின் வடகரை வழியாகத் திருவரங்கம் உறையூர் வரையில் முதல் பகுதியாகவும், உறையூர் முதல் கற்குடி, பூங்குடி, கொடும்பாளூர் வழியாக பிரான்மலை, அழகர்மலை வையையாறு வரையில் இரண்டாம் பகுதியாகவும், மதுரை மாநகர் ஆராய்ச்சி மூன்றாம் பகுதியாகவும், கணவனை மதுரையில் இழந்த கண்ணகி மதுரை முதல் வையைக் கரை வழியாக நெடுவேள் குன்றம் சென்று தெய்வமான இடம் வரையில் உள்ளவற்றை நான்காம் பகுதியாகவும் வைத்து என் ஆராய்ச்சிக்குரிய பகுதிகளைத் திட்டமிட்டு அமைத்துக்கொண்டேன்.

பழங்காலக்கல்லெழுத்துக்களைப் படித்தறியும் பயிற்சியுடன் பழம் பொருட் சின்னங்களைக் கால வகையுடன் கணித்தறியும் அனுபவமும், ஓவியத்திறனும் ஓரளவு என்னிடம் அமைந்திருந்த துணிவினால் பூம்புகாரிலிருந்து கால்நடையாகவே திட்டமிட்டபடி ஆராய்ச்சியைத் தொடந்து நிகழ்த்தலானேன். கால்நடையாகவே ஆர்வமுடன் தொடர்ந்த என் ஆராய்ச்சிமுறை, ஒரே தொடர்பாக அமைய ஏதுமில்லை. ஓய்வு நாட்களும் கைப்பொருளும் ஒன்றியபோது, விட்ட இடத்திலிருந்து தொடரும் பாங்கிலேயே அமையலாயிற்று. விடாது தொடர்ந்து ஆராய்ச்சி செய்த இடங்களில் பழைய தமிழகத்தின் வரலாற்றினை விரிவு செய்யும் கருத்துடைய புதிய கல்வெட்டுக்கள், பழைய கட்டடக் கலை, சிற்பக் கலை, வெண்சுதைக் கலை ஆகியவற்றின் சின்னங்கள், முதுமக்கள் தாழிகள், நடுகற்கள், வீரக்கற்கள் ஆகிய வரலாற்றுச் சான்றுகள் பழமையான இடங்களில் ஆராய்ச்சி செய்யுங்கால் காணக் கிடைத்தமையே யான் மேலும் ஆராய்ச்சியினைத் தொடர்ந்து செய்வதற்கு ஊக்கமளித்தது. மற்றும், புதியதும் புதுமை நிறைந்தது மாகிய பழைய தமிழக வரலாற்றுப் பழம் பொருட்களைக் காணக் காணச் சிலப்பதிகாரத்திற்குரிய கண்ணகி கோவலனைப் பற்றிய சின்னங்களும் எங்காவது இருக்கக் கூடும் என்ற எண்ணம் என் மனத்தில் இடம் பெறலாயிற்று.

உறையூரில் கண்ணகி வழிபாடு

உறையூரில் கண்ணகியும் கோவலனும், கவுந்தியடிகளுடன் ஓரிரவு தங்கினார்கள் என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. பழைய உறையூரின் அமைப்பினைக் கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டு ஓராண்டளவில் பல பகுதிகளை ஆராய்ச்சி செய்ததனால், சங்க கால உறையூரில் பரந்த அமைப்பும் சிறப்பும் புலப்பட்டதே தவிரக் கண்ணகியைப் பற்றியதொன்றும்கிடைக்கவில்லையாயினும், 'சோழன் பெருங்கிள்ளி கோழி (உறையூர்) அகத்து எத்திறத்தாலும் வரந்தரும் இளவோர் பத்தினிக் கடவுள் ஆகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டம் அமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தான்' என்றும் சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரைப் பகுதியைக் கொண்டு ஆராய்ச்சி செய்த போது, இன்றுள்ள உறையூரில் இருக்கும் நாச்சியாரம்மன் கோயில் சோழர்காலப் பழமையுடன் அமைந்திருப்பதிலும் பெண் தெய்வத்திற்குரிய பெருங்கோயிலாக வளர்ச்சியடைந்து விளங்கினதாலும், சங்க காலத்தில் பெருங்கிள்ளி சிறியவடிவில் அமைத்த பத்தினிக் கோட்டமே காலப் போக்கில் உருவும் பெயரும் மாற்றமடைந்து நாச்சியாரம்மன் கோயிலாக பல அங்கங்களுடன் விரிவடைந்துள்ளது என்பதைச் சிந்தித்து அறிய முடிந்தது. உறையூரைப் பற்றிய

பேராசிரியர் சி. கோவிந்தராசன்

கரந்தைப் புலவர் கல்லூரி

என் ஆராய்ச்சியினை, தமிழ்ப் பொழிலில் "புகார் முதல் வஞ்சி வரை" என்ற கட்டுரைகளாக எழுதியுள்ளேன்.

மதுரை வரையில்

உறையூர் ஆராய்ச்சி நன்முறையில் முடிந்த பின்னர், கண்ணகியும்கோவலனும் கவுந்தியடிகளுடன் மதுரைக்குச் சென்ற வழி எது என்பதைச் சிலப்பதிகாரம் குறிப்பதைக் கொண்டும், நில இயற்கையைக் கொண்டும் சிந்தித்துத் திட்டமிட்டபடியே. உறையூரின் தென் கோடியிலிருந்து என் ஆராய்ச்சியினைத் தொடர்ந்தேன். பழைய உறையூரின் தென் எல்லையின் ஒரு பகுதி உய்யக் கொண்டான் திருமலையாகும். அப்பகுதியிலிருந்து முறையே தெற்கேயுள்ள விராலிமலை, கொடும்பாளூர், அழகர் மலையின் பல பகுதிகள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்து முடித்தேன். இப்பழமை மிகுந்த இடங்களில் புதிதாகக் கிடைத்த தமிழக வரலாற்றுச் செய்திகளும், கல்வெட்டுக்களும் பலவாகும். இடையிடையே காடுகளில் வழி தெரியாது அலைய நேர்ந்ததாலும், கள்வரிடம் அகப்பட்டுக் கொண்டதாலும் எனக்குண்டான துன்பங்கள் சொல்லும் தரமன்று. எல்லாவற்றையும் வாழ்க்கையின் அனுபவமாகவே கருதி, மனத்தை அமைதி செய்துகொண்டு, மேலும் கண்ணகி நடந்து சென்ற வழியாக இளங்கோவடிகள் குறிக்கும் பகுதிகளை இயன்ற அளவில் நடந்து சென்றே ஆராய்ச்சி செய்வதன் பயனாக வையையாற்றின் வடகரையை அடைந்தேன். கொடும்பாளூருக்கும் வையையாற்றுக்கும் இடையே அழகர் மலைக்கு வட கிழக்காக உள்ள கொடுங்குன்றத்தையும் (பாரி-பறம்பு மலை) தென் கிழக்காகவுள்ள யானை மலையையும் ஆராய்ச்சி செய்து முடித்தேன். இவ்வாறாகப், பூம்புகார் கடற்கரையிலிருந்து தொடங்கிய ஆராய்ச்சி மதுரை வரையில் நிகழ்ந்தற்குரிய இடைக்காலமாகப் பன்னிரண்டாண்டுகள் தொடர்ந்து கழிந்திருந்தன.

பழைய மதுரை

மதுரை மாநகர் முற்றிலும் புதிய தோற்றமாக இன்று ஆகியுள்ளது. ஓராண்டு அளவில் பலமுறை அங்குச்சென்று நகரின் உட்பகுதிகளையும், வெளிப்புறப் பகுதிகளையும் வரலாற்று நோக்குடன் ஆராய்ச்சி செய்ததின் பயனாகப் பிற்காலப் பாண்டியரின் அரசியல் சின்னங்களுடன், நாயக்க மன்னர், முகம்மதிய மன்னர் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் உண்டான கட்டடங்கள் சிதைந்த நிலையிலும் பிறவாறும் காணக் கிடைத்தன.

மதுரையில் கண்ணகி சிலை

வையை ஆற்றுக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த தென் கரைப் பகுதியினை ஆராய்ச்சி செய்யலானேன். அப்பகுதியில் யாதவப் பெருமக்கள் மிகுதியாக வாழும் தெருக்களைச் சார்ந்த வடக்கு மாசி வீதியில் '' செல்லத்தம்மன் '' என்ற பெயருடன் பழமையான அம்மன் கோயிலொன்று உள்ளது. கோயில் வடக்கு நோக்கிய பாங்கில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு முன்னருள்ள மண்டபத்தில் கிழக்கு நோக்கியதாக பாண்டிய மன்னனொருவனால் அமைக்கப்பட்ட கண்ணகி சிலை ஒன்று உள்ளது. இச்சிலையே முன்னர் கோயிலுக்குரிய மூல தெய்வமாக செல்லத்தம்மன் என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியை முதியவர்கள் கூறக் கேட்டறிந்தேன். மானிட வடிவில் சிலை இருப்பதால் கருவறையிலிருந்து இடம் பெயர்த்து மண்டபத்தில் வைத்து அதற்கென்று கிழக்கு நோக்கிய வாயிலும் அமைத்துள்ளனர். கருவறையில் காளிவடிவில் சிலை செய்தமைத்துள்ளனர். இந்நிகழ்ச்சி பிற்காலத்தில் நிகழ்ந்திருக்கின்றது.



பிற்காலப் பாண்டியர் வளர்த்த சிற்பக்கலை நுட்பங்களுடன் விளங்கும் இக்கண்ணகி சிலை, மானிட வடிவில் இரண்டு கைகளோடு இருக்கின்றது. கருணை பொழியும் முகம், வாரி இடப்புறம் கொண்டையிட்ட கூந்தல் தோளளவு தொங்கும் அணிகளில்லாத தொள்ளைக் காதுகள், மங்கல அணியுடன் (தாலி) விளங்கும் மார்பு. வலது கை ஒரு மலரை ஏந்தி நிற்க, இடது கையில் இலாவகமாகச் சிலம்பொன்று உள்ளது. வலது காலைக் குத்திட்டு இடது காலை மடக்கி மனையில் அமைத்தமர்ந்த தோற்றம். ஓர் இளம் பெண் எழுந்துவந்து எதிரே உட்கார்ந்துள்ளதைப் போன்ற உயிர்ப்பான காட்சி. இத்தகைய சிறப்புடன் பிற்காலப் பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்டு செல்லத்தம்மன் என்ற பெயருடன் விளங்கிய கண்ணகி சிலையை மதுரையில் வடக்குப் பகுதியில் கண்டறிந்த பின்னர், நகரில் தெற்குப் பகுதியினை ஆராய்ச்சி செய்யலானேன்.

கோவலன் பரம்பு

மதுரையிலிருந்து திருப்பரங்குன்றத்திற்குச்செல்லும்சாலையில் இடப்புறம் ஒரு திடல் உள்ளது. மேடு பள்ளங்களுடன் புதரடைந்து கிடந்த அப்பகுதியை '' கோவலன் பொட்டல் '' என்றும் 'கோவலன் பரம்பு', என்றும் கூறுகின்றனர். அப்பகுதியை யான் ஆராய்ச்சி செய்தபோது பூமிக்கு அடியில் பழங்காலத்து முதுமக்கள் தாழிகள் இருக்கக்கண்டேன். அவற்றைக் கொண்டு சிந்தித்த போது, ஒரு காலத்தில் அப்பகுதி மதுரைக்குரிய இடுகாடாக இருந்த உண்மை புலனாயிற்று. மதுரையில் கொலைக்களப் பட்ட கோவலன் உடலை, அக்கால வழக்கப்படி தாழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்ட காரணத்தினாலேயே, அவ்விடுகாடு '' கோவலன் பரம்பு '' என்ற குறிப்புடன் சிறப்புப் பெயர் பெற்றது போலும்! இன்றும் அப்பகுதியிலுள்ளவர்கள் இப்பெயருடன் அத்திடலைக் குறிப்பிடுவதைக் கேட்டு அறியலாகும். (மதுரை நகரில் வளர்ச்சிப் பகுதிகளுள் ஒன்றாக இன்று இப்பகுதியிருப்பதால், குடியிருப்புக்கள் நாளும் தோன்றி பரப்பிடம் குறுகி வருகின்றது) மதுரை மாநகர் ஆராய்ச்சியினை ஒருவாறு முடித்துக்கொண்டு, மேல் கண்ணகி மதுரையை விட்டு மேற்குக் கோட்டை வாயில் வழியாக வெளியேறி, வையைக் கரை வழியைப் பின்பற்றி மேற்கு நோக்கிச் சென்ற வழியைப் பின்பற்றலானேன்.

வையைக் கரைவழி

வையைக் கரை வழியென்பது, இன்று வையையாற்றின் தென்கரையிலுள்ள சோழவந்தான் என்னும் ஊரின் வழியாகச் செல்லும் தென் கரைவழியேயாகும். இதுதான் கண்ணகி நடந்த வழியென்பதற்கு இயற்கை அமைப்பு திட்டமாக அமைந்துள்ளது. மதுரைக்கு நடக்கும் எல்லையாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடிவரும் வையைக்குத் தெற்கில், அதாவது மதுரைக்கு மேற்கே நாகமலைத் தொடர் கிழக்கிலிருந்து மேற்காக ஆற்றுக்கு இணையாகவே நீண்டு தொடர்ந்துள்ளது. எனவே, ஆற்றுக்கும் மலைத் தொடருக்கும் இடைப்பட்ட கரைப்பகுதி என்றும் மாறாத இயற்கை வழியாகும். இளங்கோவடிகள் குறித்தபடி வையையில் நீர் பெருகி ஒலித்துச் சென்றதால் வையையின் தென்கரைப் பகுதியாகும் ஒரு கரையைப் பின்பற்றியே கண்ணகி மேற்கு நோக்கிச் சென்றாள் என்பது தெளிவாகும். அவ்வாறுள்ள வையையின் தென்கரை வழியினைப் பின் பற்றிச் சென்றால், இடையிடையே காடும் மேடும், பள்ளமும், படுகையும், மலைப் பாங்குமாகவே தரையின் இயற்கையமைப்பு தொடர்ந்து அமைந்துள்ளது.

வையையின் தொடக்கம்

தென்கரையைத் தொடர்ந்து மேற்கே சென்றால், தேனி என்னும் ஊருக்கு முன்னர் வையையில் ஒரு பெருந்திருப்பம் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். தேனிக்குத் தெற்கே அமைந்திருக்கும் கம்பம் பள்ளத்தாக்கின் கோடியான வர்ஷநாட்டிலிருந்து உற்பத்தியாகி வடக்கு நோக்கி ஓடிவரும் வையை, எதிரே வளர்ந்தோங்கி நிற்கும் கொடைக்கானல் மலைத்தொடரின் சரிவான அடிவாரப் பள்ளத்தாக்கமைப்புக்கேற்பக் கிழக்கு நோக்கித் திருப்பங் கொள்ளுகிறது. இத்திருப்பத்தில் குன்னூர் (குன்றூர்) என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. குன்னூரிலிருந்து வையையின் தொடக்கம் வரையில் இருபுறமும் பல அருவிகளும் சிற்றாறுகளும் ஆங்காங்கே வந்து கூடுகின்றன. இப்பகுதியே கம்பம் பள்ளத்தாக்கு என்று பொதுவாகக் கூறப்படும், பரவலானதும் வளமுடையதுமான நிலப்பரப்பாகும். பெரும்பான்மையும் இப்பகுதி பள்ளத்தாக்காக இருப்பதற்குக் காரணம் சுற்றிலும் மலைகள் சங்கிலித் தொடர்போல் சூழ்ந்துள்ளதேயாகும்.

குன்னூரிலிருந்து வையையைப்பின்பற்றி மேலே செல்வது எளிதல்ல; காரணம் இங்கு சிற்றாறாக ஓடிவரும் வையையைச் சூழ்ந்துள்ள பகுதி, காடும், கறம்பும், புதரும், களிமண் உளையுமாக அமைந்துள்ளதேயாகும். இப்பகுதியில் ஆங்காங்கே பல சிற்றூர்கள் இருப்பினும் அவைகள் மலை வளம் நிறைந்த மண்வளத்தின் பயனைக் கருதி உழைக்கும் மக்களைக் கொண்டதாகவே இருக்கின்றன. அவற்றுள் மோட்டாங்காடு, செங்குன்னூர், சுருளிப் பட்டி என்ற ஊர்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இங்குள்ள காடுகளில் யானைகள், நிலைத்து வாழுகின்றன. வருடை என்ற மானினங்களும் மிகுதியாக உள்ளன.

> சென்ற ஐந்து ஆண்டுகளில் நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம், கோயில்பட்டி, சங்கரன் கோவில் வட்டங்களில் நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையினரால் பாலங்கள், ஊராட்சி ஒன்றியக் கட்டடங்கள், சாலைகள் முதலியன மிகச் சிறந்த முறையில் போடப்பட்டுள்ளன.
>
> கடந்த ஐந்து ஆண்டுகளில் தூத்துக்குடி கோட்டத்தில் 80 கிலோ மீட்டர் நீளமுள்ள கப்பிச் சாலைகள் தார் சாலைகளாகச் சுமார் ரூ. 11 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

செங்கோட்டு உயர்வரை

இங்கிருந்து மேலும் செல்ல வேண்டுமானால் எதிரே எங்கும் வழியில்லை. காடுகளோடு தொடர்ந்து வானளாவி செங்குத்தாக உயர்ந்து மேகப் படலங்கள் படிந்து உயர்ந்துள்ள சிகரங்களை உடைய செங்கோட்டு உயர் அடுக்கு மலை மேல் ஏறியே ஆகவேண்டும். இயற்கையமைப்பு, குதிரை லாட அமைப்பில் இங்கு மலைத் தொடர் சூழ்ந்து அமைந்துள்ளதே காரணம் என்பதை மேலே விளக்கியுள்ளேன். இம்மலைத் தொடரே பிற்காலத்தில் சுருளிமலைத் தொடர் என்று பெயர் பெற்றுள்ளது.

நெடுவேள் குன்றம்

இம்மலைத் தொடரிலுள்ள செங்குன்று ஒன்றின் தலைப்பாக அமைந்த உயர்மட்டத் தாழ்வரையில் அடர்ந்த காடுகளுக்கிடையே பழமையான முருகன் கோயில் ஒன்றுள்ளது. முருகனை, பழந்தமிழ் மக்கள் நெடுவேள் என்று சிறப்பாகக் குறிப்பிடுவர். எனவே பழங்காலத்தில் இக்குன்றம் நெடுவேள் குன்றம் என்று பெயர் பெற்றுள்ளது. அப்பெயர் காலப்போக்கில் மாற்றமடைந்து செங்குத்தாக வானளாவி உயர்ந்து நிற்கும் குன்று என்ற காட்சியளவையான் பெறும் பெயராகச் செங்குன்று என்று அமைந்தது. அதுவும் கால வழக்கில் மறைந்து மலையிலிருந்து சுருண்டுவிழும் அருவியின் பெயரால் 'சுருளருவி மலை' என்றாகி, அப்பெயரும் தேய்ந்து சுருளி மலையாக இன்று இருக்கின்றது.

இவ்வாறு கால வழக்கில் பெயர் மாற்றம் பெற்று வருவது இயற்கையேயாயினும், மேலே கூறப்பட்ட மூன்று பெயர்களும், மலையின் இயற்கைத் தோற்றத்தை நேரில் காணும்போது பொருத்தமாகவே தோன்றுகின்றன. அருவியுள்ள பகுதி சுருளிமலையாகவும், செங்குத்தாக உயர்ந்துள்ள சிகரம் செங்கோடு அல்லது செங்குன்றாகவும், முருகன் கோயில் உள்ள பகுதி நெடுவேள் குன்றாகவும் பாகுபாடு பெற்றுள்ளதே தவிர மலைத் தொடர் முழுவதும் நெடுவேள் குன்றத் தொடர் என்று பெயர் பெற்றது. மலைத் தொடரின் தலைமை பற்றி வந்த சிறப்புப் பெயராக அமைந்திருந்ததென்பதை, நேரில் காணின் தெளிவாகும். இதற்கு எடுத்துக் காட்டாக ஒன்று கூறலாகும்.

மதுரைக்கும், அழகர்மலைக்கும் கிழக்காக நீண்டு அமைந்துள்ள மலைக்கு '' யானை மலை '' என்று பெயர். இப்பெயர் இம்மலையொன்றையே குறிப்பதாகும். அதற்குக் காரணம் மாபெரும் யானையொன்று தெற்கு நோக்கிப் படுத்துள்ளதைப் போன்று தொலைக்காட்சிக்கு அம்மலையின் தோற்றம் அமைந்திருப்பதேயாகும். இதுவன்றி யானைகள் ஒரு காலத்தில் வாழ்திருந்ததால் இப்பெயர் பெற்றுள்ளது என்று கொள்ளின் யானைகள் வாழுகின்ற மலைகளெல்லாம் யானைமலை என்றே பெயர் பெற்றதாதல்வேண்டும். அவ்வாறில்லாமல் இயற்கை வடிவைக்கொண்டே யானைமலை என்ற காரணப் பெயர் பெற்றுள்ளது.

(தொடரும்)

கேளுங்கள் கொடுக்கப்படும்!



வினா : இவ்வூரில் ஒரு குறிப்பிட்ட நன்செய் நிலத்தில் வேலம் பாசி முளைத்துச் சாகுபடியைப் பாழ் செய்கிறது. களை எடுத்தாலும் அது போவதில்லை. இவ்வாறு ஏற்படும் குறையை நீக்க வழியைத் தயை செய்து விளக்கமாகக் கூறவும்.

—வீ. விசயபாண்டியன்,
இளைரூர் அணி, செய்வானந்தம், வட ஆர்காடு
மாவட்டம்.

விடை : மயில் துத்தம் (Copper Sulphate) என்னும் இரசாயன உப்பை வாங்கிச் சிறு துணிப் பையில் போட்டுக் கட்டி வேலம்பாசி முளைத்துள்ள இடங்களில் போட்டால், மயில் துத்தம் கரைந்து, பாசியை முற்றிலும் அழித்து விடும். மயில் துத்தத்தைப் பாசன நீருடன் கலந்து நிலத்திற்குப் பாய்ச்சுவதாலும் பாசியை அழித்துவிடலாம். ஏக்கருக்கு 1 கிலோ மயில்துத்தம் வீதம் எடுத்து, அதை ஒரு துணிப் பையிலிட்டுக் கட்டித் தண்ணீர் விடும்போது வயலின் வாய்மடையில் வைத்து விட்டால், அது தண்ணீரில் கரைந்து வயலெங்கும் பரவும். அதனால் பாசி அழிந்துவிடும்.

வேலம்பாசி மிகவும் அதிகமாகக் காணப்பட்டால், வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு, சுட்ட சுண்ணாம்பு 1 கிலோ, மயில் துத்தம் 1 கிலோ ஆகிய இரண்டையும் நன்கு கலந்து வயலெங்கும் ஒரே சீராகத் தூவி விட வேண்டும். சுண்ணாம்பும், மயில்துத்தமும் சேர்ந்த கலவையைக் கூடுமான வரை பயிர்களின் மேல் படாமல் மண்ணின் மேல் தூவ வேண்டும். இக்கலவை பயிரின் மேல் பட்டால், பயிர் ஓரளவு அழிந்துவிடக் கூடும். எனவே. கவனமாகத் தூவ வேண்டும். பிறகு சிறிது தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். இரண்டு நாட்களுக்குப் பிறகு தண்ணீரை வடித்துவிட வேண்டும். இவ்வாறு செய்தால், பாசிகள் அழிந்துவிடும். இவ்வாறு செய்த பின்பும் பாசிகள் வயலில் காணப்படின், ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குப் பிறகு இரண்டாம் தடவையாக வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டுச் சுண்ணாம்பு, மயில் துத்தக் கலவையை தூவி விட்டு, தண்ணீர் விட்டு இரண்டு நாட்களுக்குப் பிறகு தண்ணீரை வடித்து விடவும். இதனால் பாசிகள் முழு அளவில் அழிந்துவிடும்.

மயில்துத்தத்தை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்தோ அல்லது தனிப்பட்ட மளிகைக் கடைகளிலிருந்தோ வாங்கிப் பயன்படுத்தலாம்.

* * *

வினா : சூரிய காந்தியைப் பயிரிட எந்தெந்த மாதங்கள் ஏற்றவை ? சூரிய காந்தியைத் தனிப்பயிராகப் பயிரிடலாமா? அல்லது ஏதேனும் கலப்புப் பயிருடன் பயிரிட வேண்டுமா? சூரிய காந்தி விதை எங்கே கிடைக்கும்?

—கே. கே. சாமி,
பெரியம்மா பாளையம்,
திருச்சி மாவட்டம்.

விடை : சூரியகாந்தி பயிரிட பின்கண்ட 3 பட்டங்கள் சிறந்தவை.

1. ஜூன் முதல் செப்டம்பர் வரை.

2. அக்டோபர் முதல் ஜனவரி வரை.

3. மார்ச்சு முதல் மே வரை.

சூரிய காந்தியைத் தனிப்பயிராகவோ அல்லது நிலக்கடலை, பருத்தி, மரவள்ளி, மஞ்சள் ஆகியவற்றுடன் ஊடுபயிராகவோ பயிரிடலாம். சூரிய காந்தி விதை பெற உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களையோ அல்லது உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மைஅலுவலர்(வளர்ச்சி) அவர்களையோ அணுகுங்கள்.

* * *

வினா : மரவள்ளி சாகுபடி செய்வதற்குப் பருவம், ஏக்கருக்குத் தேவையான கரணைகள், உர அளவு, உரமிடும் காலம், பயிர்ப்பாதுகாப்பு ஆகிய விவரங்களைக் கூறவும்.

—ரமண சமுத்திரம் உழவர்
விவாதக் குழு,
நெல்லை மாவட்டம்.

விடை : மரவள்ளியை எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம். ஆனால் ஆடிப்பட்டமும் (ஜூலை-ஆகஸ்ட்), தைப்பட்டமும் (டிசம்பர்-ஜனவரி) மிகவும் சிறந்தவையாகும்.

ஒரு ஏக்கர் மரவள்ளி நட, இடைவெளிக்கு ஏற்ப, 5,000 முதல், 7,000 கரணைகள் தேவைப்படும். கரணைகளைத் திடமான கிளைகளின் அடி அல்லது மையப் பகுதியிலிருந்து தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு கரணையும் 6 அங்குல நீளமிருக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 3 அடி இடைவெளியும், வரிசையில் கரணைக்குக் கரணை 2½ அடி இடைவெளியும் விட்டுக் கரணைகளை நடுதல் நல்லது.

நிலத்தை 3 அல்லது 4 தடவை உழுது ஏக்கருக்கு 10 முதல் 20 வண்டி தொழு எருவைக் கடைசி உழவில் இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். கடைசி உழவில் அடியுரமாக ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 35 கிலோ யூரியா, 75 கிலோ சூப்பர் பாஸ்பேட், 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும். இதே அளவு உரத்தை மரவள்ளி நட்ட 90 நாட்களுக்குள் மேலுரமாக இட வேண்டும்.

மரவள்ளியை முக்கியமாக 'மொசைக்' என்னும் வைரஸ் நோய் தாக்குகிறது. இது ஒரு வித வெள்ளைத் தத்துப்பூச்சியின் தாக்குதலால் பரவுகிறது. இதைத் தடுக்க மரவள்ளி நட்ட 3 முதல் 4 மாதங்களுக்குள் மாதம் ஒரு முறையாக 'ரோகார்' அல்லது 'என்ட்ரின்' போன்ற மருந்தை, 100 மில்லி லிட்டர் மருந்திற்கு 100 லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இந்நோய் தாக்கிய செடிகளை அகற்றுதல் வேண்டும். மரவள்ளியை சிலந்திப்பேன், செதில்கள் போன்ற பூச்சிகளும் தாக்குகின்றன.

இதைத் தவிர்க்க 'ரோகார்' அல்லது 'மெட்டாசிஸ் டாக்ஸ்' மருந்தை 100 மில்லி லிட்டர் மருந்திற்கு 100 லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து தெளிக்கவேண்டும்.

* * *

வினா: சாரதாவின் வயது என்ன? ஏக்கருக்குஎவ்வளவுவிதை தேவை? மகசூல் என்ன? சரியான பட்டம் எது?

—வரிச்சிக்குடி உழவர்
விவாதக்குழு, புதுவை மாநிலம்.

விடை 'சாரதா' கேழ்வரகின் வயது 105 நாட்கள். ஒரு ஏக்கர் நடுவதற்கு 1 கிலோ விதைகளை நாற்று விட வேண்டும். இறைவையில் ஏக்கருக்கு 1,500 முதல் 1,800 கிலோ வரையில் மகசூல் கொடுக்கும். ஜூன்-ஜூலை பட்டத்திற்கு ஏற்றது.

* * *

வினா : குறுவைக்குக் கரிகாலனா அல்லது கண்ணகியா? இதில் எது சிறந்தது? அதை எப்போது பயிர் செய்வது?

—புத்தூர் உழவர் விவாதக்
குழு, தஞ்சை மாவட்டம்.

விடை: கரிகாலன், கண்ணகி ஆகிய 2 ரகங்களும் குறுவைக்கு ஏற்றவை தான். கரிகாலன் 110 நாட்கள் வயதுடையது. ஏக்கருக்கு 2, 3 டன் மகசூல் தருகிறது. கண்ணகி ரகம் 103 நாட்கள் வயதுடையது; ஏக்கருக்கு 2·2 டன் மகசூல் தருகிறது. தஞ்சை மாவட்டத்தில் குறுவையில் பயிரிட இவை ஏற்றவைகளாகும்.

* * *

வினா : எங்கள் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறை மானாவாரியில் காய்கறி பயிரிடுகிறோம். எங்களுக்கும் காய்கறி பயிரிடக் கடன் கிடைக்குமா? அல்லது ஆண்டு முழுவதும் காய்கறி பயிரிடுவர்களுக்குத்தானா ? எவ்வளவு கடன் கிடைக்கும் ? யாருக்கு மனுச் செய்ய வேண்டும் ?

பெ. நாகேஷ்,
பெரியம்மாபாளையம்,
வேப்பூர் ஊராட்சி ஒன்றியம்,
திருச்சி மாவட்டம்.

விடை : காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காய்கறி பயிரிடுவோருக்கு ஏக்கருக்கு ரூபாய் 120 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு அதிக அளவாக ஒரு பருவத்திற்கு ரூபாய் 240 வீதமும் குறுகிய காலக்கடன் வழங்கப்படுகிறது. இரு பருவங்களில் காய்கறி பயிரிட்டால் தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 480 கடன் கொடுக்கப்படும். இக்கடன் வசதி காய்கறி மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் இடங்களில் மட்டுமே கிடைக்கும். இக் கடன் வசதி தங்கள் பகுதியில் கிடைக்குமா என்பதை அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகவும்.

'தமிழரசு'க்குப் பாராட்டு

'தமிழரசு, இதழில் வெளி வந்த 'அதிசயக் கிச்சிலி ஐ.ஆர். 20 நெல்லின் கட்டுக் கோப்புச் சாகுபடி முறைகள்' பற்றிய விரிவான குறிப்புகள் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக உள்ளன. அத்துடன் 'ஸ்டாம் எப்—34, களைக் கொல்லி மருந்து உபயோகிக்கும் விதம் பற்றிய விரிவான விளக்கமும் மிக்க உதவியாக உள்ளன. தாங்கள் மேற்கண்ட விவசாய முறைகளை வெளியிட்டமைக்கு மிக்க நன்றி. இது போன்றே ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு பயிர் பற்றிய கட்டுக் கோப்புச் சாகுபடி முறைகள் விரிவான முறையில் எழுதப்பட வேண்டும். வானொலியின் மூலம் விளக்கமாகக் கூறினாலும், தங்களின் இதழ் மூலம் வெளியிடுவதால், அத்தகைய விவசாயக் குறிப்புகளைப் பத்திரப் படுத்தி வைத்து உபயோகித்துக் கொள்ளலாம். சந்தேகங்கள் ஏற்படும்போதும் அவற்றைப் பார்த்துக் கொள்ளலாம்.

—ஜி. வெங்கடசாமி,
பொன்னேரி உழவர் மன்றம், உடுமலை
வட்டம், கோவை மாவட்டம்.

வினா : எனது தோட்டத்தில் கே. 1. மிளகாய் பயிர் செய்துள்ளேன். அதன் விதையை அடுத்த ஆண்டிற்குப் பயன்படுத்தலாமா ? கூடாதா, வீரியம் குறையாத விதை எங்கு பெறலாம் ? வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்கிக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—மா. சிவலிங்கம்,
மேற்பனைக்காடு.
தஞ்சை மாவட்டம்

விடை : கே. 1. மிளகாய் விதையை நன்கு காயவைத்து, தூய்மைப் படுத்தி, பத்திரப் படுத்தி வைத்திருந்தால் 3 ஆண்டுவரைப் பயன்படுத்தலாம். விதை எடுக்கப்பெற்ற 3 மாதங்களுக்குப் பிறகு விதைகளைப் பயன்படுத்துவதே சிறந்தது. வீரியம் குறையாத விதைகளைக் கீழ்க்கண்ட முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(1) பயிர் நுண்ணறிஞர்,
மண்டல வேளாண்மை
ஆராய்ச்சி நிலையம்,
கோவில்பட்டி (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

(2) காய்கறி நுண்ணறிஞர்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.

வேர் அழுகல் நோய் என்று தாங்கள் குறிப்பிட்டுள்ளது 'வாடல் நோய்' (Wilt) எனப்படும். இந்நோய் தாக்கப்பட்ட செடி முழுவதுமே வாடி இறந்து விடும். இதை உழவர் பெருமக்கள் கவனித்து உடனே 'பைட்டலான்' மருந்தை (2.5 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) அல்லது நீரில் கரையக் கூடிய செரசான் 0.1 சதம் மருந்தைத் (1 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்க வேண்டும். அத்துடன் செடிகளைச் சுற்றிலும் உள்ள மண்ணையும் மேற்கூறிய மருந்துக் கலவையில் ஒன்றைத் தெளித்து நனைக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் மற்றச் செடிகளையும் இந்நோய் விரைவில் தாக்கும்.

* * *

வினா: நான் கோழிப்பண்ணை அமைக்க விரும்புகிறேன். எனவே நல்ல வீரியமுள்ள கோழி வகைகள் எங்குக் கிடைக்கும்? இதற்கு அரசின் கடன் உதவி உண்டா? அப்படியானால் யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

—எஸ். கோவிந்தராசன்,
கடுவெளி, திருத்துறைப்பூண்டி
வட்டம், தஞ்சை மாவட்டம்.

விடை: உயர்ரகக் கோழிக் குஞ்சுகள் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை வளர்ச்சி அலுவலர் அவர்களை அணுகுங்கள். ஒரத்த நாடு கால்நடைப் பண்ணையில்இருந்தும் நீங்களே உயர்ரகக் கோழிக் குஞ்சுகளை வாங்கிக் கொள்ளலாம்.

கோழிப் பண்ணை அமைக்க ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மானியம் கொடுக்கப்படுகிறது. உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை வளர்ச்சி அலுவலர் அவர்களை இதுபற்றி கலந்தாலோசியுங்கள்.

கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும், அல்லது வணிக வங்கிகள் மூலமும் தற்பொழுது கோழிப்பண்ணை அமைக்கக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. இது பற்றிய முழு விவரமும் அறியத் தஞ்சாவூரில் உள்ள மண்டலத் துணை இயக்குநர், கால்நடைத்துறை அவர்கள் அலுவலகம் சென்று விசாரித்தல் நல்லது.

நெற்பயிரையும் களையை
யும் வேற்பிரித்தறிவது
கடினமானதால், நாங்கள்
களையை மட்டும் ஒழிக்கும்
ஸ்டாம் F-34
தயாரித்திருக்கிறோம்

களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34—குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!

இண்டோக்பில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா

STAM F-34 என்ற பெயரும், ஃப்ளாஸ்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IF.9868

அறிவுடையோர் போற்றுகின்றார்

கற்கால மனிதருக்கும் நற்பண் பாடு
கற்பிக்க இந்நிலத்தில் முளைத்த வர்க்குப்
பொற்காலம் தமிழ்நாட்டில் வருமா ? மீண்டும்
புதுவாழ்வு புலர்ந்திடுமா ? என்னும் ஐயம்
தற்காலம் படிப்படியே நீங்கக் காண்போம்.
தாங்கவொணுத் தொல்லைகளை ஏற்றுக் கொண்டும்
பிற்காலம் வளமுறவே பெருநன் மைகள்
பின்னிவர முன்வந்து தொண்டு செய்வோம்.

சாய்க்கடையின் ஓரத்தில் சகதிச் சேறே
சதமாக நிதமுழலும் வறிய வர்க்கும்,
போக்கிடமே யில்லாது புழுதி யூடே
புழுவாக நெளிவோர்க்கும் வாழ்வு நல்கிப்
பூக்காடாய் நாடெல்லாம் வளம்சி ரிக்கப்
புதுப்புதிதாய் மாளிகைகள் எழுப்பு கின்றோம்.
ஊக்கமுடன் நிலமற்றோர் மனையும் அற்றோர்
உரிமைபெறப் பட்டாவும் வழங்கு கின்றோம்.

கற்பனைக்கும் எட்டாத இழிந்த வாழ்வில்
கடைக்கோடி மனிதரெனத் திரிந்தோர் தம்மை
நற்பதவிக் கேற்றிவைத்து நலிவு நீக்கி
நல்வாழ்வு நல்குகின்ற இல்லம் கண்டோம்.
அற்பமென எண்ணுமல் விழியி ழந்தோர்
அவலத்தைப் போக்குதற்கே ஊர்கள் தோறும்
அற்புதமாய்ச் சிகிச்சைமுகாம் அமைத்துப், பார்வை
அளிக்கின்றோம்; ஒளிபெற்றோர் வாழ்த்து கின்றார்.

வறண்டிருந்த பாழ்நிலத்தில் குழாய்போ ருத்தி
வளமாக்கி உரமிட்டு விளைச்சல் ஓங்கத்,
திரண்டுவரும் நீர்தேக்கி, அணைகள் கட்டித்,
திகைப்பின்றித் தொழில்பெருக்கி, அமைதி கண்டு,
மிரண்டிருந்தோர் அறியாமை இருளை நீக்கும்
மின்னலென இலவசமாய்க் கல்வி தந்தோம்.
புரண்டுவரும் வெள்ளமெனக் கோடி நன்மை
புரிகின்றோம்; அறிவுடையோர் போற்று கின்றார்.

கவிஞர் கருணனந்தம்

வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

எழில்வேந்தன்,
13/1, வி. சி. கார்டன் 2-வது சந்து,
சென்னை-28.

*வாழ்க! விழியிழந்தே வாடு மெளியோரின்
வாழ்வி லொளியேற்றும் வள்ளன்மை—வாழ்க, இம்
மண்ணுல குள்ளவரை மங்கைப் பருவம்போல்
வண்ணமுடன் நாளும் வளர்ந்து!

—எழில் வேந்தன், சென்னை 28.

வாழ்க எனநாளும் வாய்நிறையச் சொல்வதன்றி
வீழ்க எனப்பகரல் வீணன்றோ?—கீழ்மையுமாம்
என்பதனை ஓர்ந்திங்கே என்றுந் திகழ்ந்திடுவார்
வன்மைய ராவார் வளர்ந்து.

—வித்துவான் சு. முத்துக்கருப்பன், நகரம்.

'வாழ்க' எனுஞ்சொல்லில் வாய்மை குடியிருக்கும்!
தாழ்வில் மகிழ்ச்சித் தளிர்தழைக்கும்!—சூழ்கின்ற
ஆழ்துயர் நீங்கும்! அருட்குழந்தைப் பூமணக்கும்!
வாழ்வியல் ஓங்கும் வளர்ந்து!

—புலவர் முத்துவேங்கடேசன், இலால்குடி.

வாழ்க! மகனேயுன் வன்பகைவன் வேல்மார்பில்
ஆழ்ந்துள்ளே பாய அருஞ்சமரில்—வீழ்ந்திடினும்
தேனளவு தித்திக்கும் செயல்புரிந்தாய்; நின்புகழ்
வானளவு ஓங்கி வளர்ந்து!

—குழ. அண்ணாமலை, கோவை.

வாழ்கனும் வாழ்த்தொலிக்க வஞ்சியெனைக் கைபிடித்த
வாழ்வரசர் போனார் வளந்தேடி—பாழ்பிரிவால்
போராடும் பெண்நெஞ்சைப் புண்ணாக்க வெண்ணிலவே
வாராதே விண்ணில் வளர்ந்து!

—கோ. நெடுஞ்செழியன், மேலைச்சேரி.

வாழ்களனப் போற்றின் வருவதென்ன? காழ்ப்புணர்வால்
வீழ்களனத் தூற்றின் விளைவதென்ன?—வாழ்வோம்நாம்
மானில் கவரியைப்போல்; மண்ணில் தமிழகம்போல்;
வானில் பிறைபோல் வளர்ந்து!

—ந. செனார்த்தனம், அரக்கோணம்.

வாழ்க தமிழரசு! 'வல்லரசாய்', 'நல்லரசாய்'
ஆழ்க புவிமீதில், ஆரணங்கே!—பாழ்செய்யும்
கீழ்மை 'களை'க்களைந்து, கேடின்றி எந்நாளும்
வாழ், ''கவிதை''யாலே வளர்ந்து!

—அரி. இல. தமிழடியான், மல்லிகா, பரிக்கல் (அஞ்சல்).

வாழ்க உலகென்றே வானின்று மாநிலத்து
வீழ்கின்ற கார்தன்னை வீணின்றி—ஆழ்கடல்போல்
தேக்கி அணையிட்டாற் தேங்கியஅந் நீரும்வான்
நோக்கி உயரும் வளர்ந்து.

—கா. முருகாண்டி, மதுரை-9.

வாழ்க தமிழ்நாடு வையத்தில்; தீமையெலாம்
வீழ்க; தமிழினத்தார் வென்றிடுக—சூழ்கவே
நல்ல பொருள்வளமும் நாடும் தொழில்களிலே
வல்லமையும் நாட்டில் வளர்ந்து.

—ப. சண்முகானந்தம், தேவம்பாடிகாளிபாளையம்.

வாழ்க உறவென்று வண்ணமலர்ப் பஞ்சணையில்
மூழ்கச் சுவைதந்த மொய்குழலே!—யாழ்இசைஉன்
ஆராரோப் பாட்டின் அமுத மொழிகேட்க
வாரானோ கண்ணன் வளர்ந்து.

—சிவராம நமசிவாயம் திருச்சி-15.

வெண்பாப் போட்டி

16—7—7௭

'வாழ்க' எனுஞ்சீரை வாழ்த்தித் தருவதன்றி
ஏழைதன் பெண்ணுக் கெதுகொடுப்பான்—வாழ்வில்சீர்
கோடியே தந்திடினும் கொண்டவனின் அன்பிலையேல்
வாடுமேதுன் பத்தில் வளர்ந்து.

—எஸ். ஞானம் எத்திராஜ், பருகூர்.

வாழ்க தமிழ்நாடு! வற்றா வளங்கொழித்தே
ஏழ்மை இலையென்ப தாயிடுக—வாழ்நாளை
மற்றவர்க்காய் அர்ப்பணிக்கும் மாம்பெற்றி கொண்டவர்கள்
வற்றாது வாழ்க வளர்ந்து!

—வ. தோதாத்திரி, எம்.எஸ்.சி., பாளையங்கோட்டை.

வாழ்க! புலமை வளர்க்கும்வெண் பாப்போட்டி
சூழ்க கவிஞர் தொடர்ந்ததனை—ஆழ்கடலில்
முத்துக் குளிப்பதுபோல் மூழ்கித் தமிழரசார்
வைத்த பரிசால் வளர்ந்து.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

வாழ்க மனிதவினம்; வாழியவே மண்வளனும்
ஆழ்கடல் சூழுலகில் அன்பேதான்—சூழ்க!
அளவாய்க் குடும்பம் அழகாகப் பெற்று
வளமாய் உயர்க வளர்ந்து!

—தே. சீனிவாசராகவன், புதுதில்லி-23.

வாழ்க மணமக்காள், வாழிய பல்லாண்டு!
பாழ்படும் சாதிப் பழிதன்னை—வீழ்த்திக்
'கலப்புமணம்' கண்டு கருத்தொரு மித்தீர்!
நலம்பெறுவீர் நன்றே வளர்ந்து!

—மூர்த்தி, பி.எஸ்சி., வெள்ளறம்.

வாழ்க வெனப்பிறரை வாழ்த்தும் நிலைமாற்றி
வாழ்கவெனத் தன்னைப் பிறர்வாழ்த்த—வாழ்புவியில்
நல்லுழைப்பால் சொல்லால் நலிந்தோரை வாழவைக்கும்
வல்லவர்கள் வாழ்க வளர்ந்து!

—ச. கந்தசாமி, மேலூர்.

வாழ்க! வாழ் நாளெல்லாம் வையகத்தில் பஞ்சைகளாய்ப்
பாழ்வெளியில் வாழ்ந்துவந்த பாமரர்க்கு—வாழ்வகங்கள்
உண்டாக்கித் தந்த உயர்கலைஞர் வாழ்கவே,
வண்டமிழைப் போல வளர்ந்து!

—வயி. அறிவுடைநம்பி, சித்தனேந்தல்.

வாழ்க ஒளிபெற்று வையமதில் கண்ணிழந்தோர்
தாழ்வின்றித் தாமே வழியேக—ஆள்வோர்
நிலைநாட்டுங் கண்சிகிச்சை நேர்மையாய்க் கோல
மலைபோல் உயர்க வளர்ந்து.

—ஈ. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

வாழ்க நலஞ்சிறந்து வள்ளுவன் செந்நெறியில்
ஆழ்க உலகமெலாம் அன்பிணைந்து—சூழ்க!
அகில்மணம்போல் பொங்கும் அறிவுநலம் பெற்றே
மகிழ்மனத்தால் மாந்தர் வளர்ந்து!

—புலவர் எழில்வேலன், கோபிசெட்டிப்பாளையம்.

வாழ்க உழவர்கள் மற்றும் குடிசைவாழ்
தாழ்ந்தவர்கள் இன்பத் தமிழ்நாட்டில்!—ஏழ்மையில்
வாழ்ந்தாலும் நேர்மை வழுவாமல் நல்லோராய்
வாழ்வில் உயர்க வளர்ந்து!

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

வாழ்க! மலர்மணக் கொள்கையால் நாட்டுமக்கள்
சூழ்வினை நீக்கிச் சுடராக்கி—வாழ்க்கையில்
கண்ணொளி பெற்றிடவே காட்டுகின்ற நன்முயற்சி
மண்ணில் செழிக்கும் வளர்ந்து.

—பரிதியார், சென்னை-32.

வாழ்களன் செல்வமே! வண்ணத் திருநாட்டில்
வீழ்கநின் ஆற்றலால் வேற்றுமை,—வாழ்க்கையில்
மேன்மையுற் றேழைகள் மேதினி போற்றுமோர்
வான்மழைக் கொப்பாய் வளர்ந்து.

—அ. கோவரசு, அரக்கோணம்.

வாழ்க எனச்சொல்லி வாழ்வுக்குத் தீதாற்றும்
தாழ்வு மனப்பான்மை தாங்கிடுவோர்—வீழ்ச்சியுற
எல்லாரும் சேர்ந்தே இடர்மாய்ப்போம் நற்பண்பு
வல்லமைகள் நெஞ்சில் வளர்ந்து.

—இலக்கியன், ஆலங்காயம், (வ.ஆ.)

'வாழ்க' எனஉம்மை வாயார வாழ்த்துகின்றார்
பாழ்வறுமை நீங்கிய பாட்டாளர்—தாழ்ந்தோர்
நலங்காக்கும் எம்'நிதி'யே! நல்லமைச்சே! என்றும்
வளமொடு வாழ்க வளர்ந்து.

—மு. வி. அறிவுக்கதிரோன், சென்னை-24.

''வாழ்க இரவெ''ன்றேன் வஞ்சியவள் நெஞ்சொடிந்து
''போழ்தும் அரும்பிப் புலர்ந்ததனால்—சூழ்கடலில்
வெங்கதிரோன் மேலெழுமுன் விட்டெழுவீரெ''ன்றாளே
மங்காத்தன் ஊடல் வளர்ந்து.

—மு. உலகநாதன், சென்னை-19.

வாழ்க தமிழரசு வண்மையுடன் எந்நாளும்;
தாழ்க பகைமைத் தலைகளெலாம்;—வீழ்கவே
பொய்யும் கொலையும் பொச்சரிப்பும் தீச்சொல்லும்;
வையம் சிறக்க வளர்ந்து.

—எல். மீனாட்சி, சென்னை-24.

வெண்பாப் போட்டி

வாழ்க வளந்தேக்கி வண்டமிழின் சீர்தேக்கிச்
சூழ்செந் தமிழர் துணைதேக்கித்—தாழ்ந்த
குலத்துதித்த மக்கள் குமிழ்ச்சிரிப்பைத் தேக்கி
வலந்தருவார் நாப்பண் வளர்ந்து.

—வே. அரங்கராசன், கும்பகோணம்.

'வாழ்கநிதி!' என்றால் 'வழங்கு நிதியை!' என்பார் ;
ஏழ்மையினி மக்களுக்கேன்? எம்முதல்வர்—வாழ்நாள்
பெருகப் பெருகவிங்குப் பின்னடைந்தோர் எல்லாம்
வருவரன்றோ முன்னே வளர்ந்து.

—கி. திருநாவுக்கரசு, சேலம்–1.

வாழ்க வெனமுழங்கி வான்கவிதை தூவிவிடும்
ஆழ்கடலின் முத்தனைய ஆன்றோரின்—ஏழ்மையை
நீக்கி,அவர் இன்புறவே நேர்கலைஞ நீவாழ்க
மாக்கடல்போல் மண்ணில் வளர்ந்து.

—அ. மோகனன், வங்கனூர்.

வாழ்க வளமோடு வாழுமுயிர் எல்லாமும்
சூழ்க அறவினைகள் ; சோம்பலெலாம்—ஆழ்கடலுட்
போகட்டும் ; புத்துலகம் பூக்கட்டும் ஒல்லையுரு
வாகட்டும் இன்று வளர்ந்து.

—சோ. முத்துமாணிக்கம், அலங்கானூர்.

வாழ்கவென வாழ்த்த வளஞ்சேர்க்கும் வண்டமிழே!
ஊழைப் புறங்காணும் உள்ளொளியே!—ஆழ்கடலின்
நன்முத்தே! நாயகியே! நானிலத்தில் நின்பெருமை
மன்னுகவே என்றும் வளர்ந்து.

—செ. நாச்சிமுத்து, ஒடையகுளம்.

வாழ்க உழவர்! பிறரும் வளமுற்றே!
வீழ்க கொடிய வினைகளெல்லாம்!—ஏழுலகும்
சாதிப்போர் மாய்ந்தழியச் சத்தியமே நீநிலைப்பாய்
வாதில்லா நெஞ்சில் வளர்ந்து.

—மு. கிருஷ்ணவேணி, அழகர்நாயக்கன்பட்டி.

வாழ்க தமிழன்னை வாழ வகைசெய்தோர் ;
வாழ்க அமிழ்தமொழி வையமெங்கும்—வாழ்த்தி
உளம்நிறைவாய் ஓதின், உயர்வடைவோம் வாழ்வில்
வளர்பிறை போலே வளர்ந்து.

—என். சுந்தரேசன், சின்னச்செங்காடு.

'வாழ்க தமிழரசு' வற்றா மொழிச்சுமையால்
தாழ்வகற்றும் நம்மரசுத் தன்மைக்கு—வீழ்வா?
விழிகொடுத்து வாழ்வளிக்கும் வேள்கலைஞர் ஆட்சி
வழியாகச் செல்வோம் வளர்ந்து.

—சொ. தமிழ்ச்செல்வன், தென்காசி.

''வாழ்க கலப்புமணம் வாழ்வியலில்'' என்றாலும்
சூழ்ந்த இனவெறியால் தூயவரை—வீழ்த்துகின்ற
பாழும் நிலைமாற்றிப் பண்பை வளர்த்திட்டால்
வாழு முலகு வளர்ந்து.

— கு. முத்துக்கிருட்டிணன், அரக்கோணம்

வாழ்கவென வாழ்த்தி வளர்சாதிப் பேய்பிடித்துத்
தாழ்ந்த உளத்தால் தழைக்காது—சூழ்ந்த
களைநீக்கல் வாழ்வின் கடமையெனக் கொண்டால்
வளம்பெறுவோம் நாமும் வளர்ந்து.

—கு. மருதமணி, கிருபில்ஸ் பேட்டை, அரக்கோணம்.

வாழ்கநீ கண்ணே மறுபடியும் ; கண்பார்வை
பாழ்பட்டோர் கண்பெற்றுப் பாங்குறவே—தாழ்வற்ற
தாயுள்ளம் கொண்டிருந்தார் ; தானமாய்க் கண்கொடுத்தார்,
மாயுமுன் நெஞ்சம் வளர்ந்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

வாழ்க! தமிழணங்கே! மாதுன்சீர் போற்றாதார்
வீழ்க! நினைமதியார் வீறழிக!—தாழ்விலா
நெஞ்சமுடை யோராய் நெறியோ டுனைக்காக்கும்
வஞ்சமிலார் தொண்டு வளர்ந்து.

—சி. கதிர்வேலு, காட்டுக்கூடலூர்.

வாழ்க கொடிமுல்லை வாழ்கின்ற மென்னகையே
சூழ்க தமிழ்க்காதல் சுற்றிடவே—ஆழ்க
பிரிவறியா வின்பத்தில் போதையே எஞ்ஞான்றும்
வறவோடு வாழ்வும் வளர்ந்து.

—கே. எஸ். ஜெகநாதன், பொள்ளாச்சி.

வாழ்க வளர்கதிராய் வண்டமிழ்த் தேன்சுவையாய்
ஆழ்கடல் வாழ்த்தும் அருட்குவையே—தாழ்விலா
வாழ்வைத் தமிழர்க்குத் தந்தளிக்கும் நின்றனைச்
சூழ்க வளமாய் வளர்ந்து.

—காவனூர் அரங்கமாதிருஎழில் வேந்தன், மேல்நல்லாத்தூர்.

'வாழ்க'எனும் வாழ்த்தால் வரையிகந்து செல்லார்பின்
வீழ்க' எனும்எதிர்ப்பால் வேதனைக்குள்—ஆழ்ந்தங்கே
நில்லார் எவரோ அவராட்சி நீண்டிருக்க
வல்லதாம் அன்றோ வளர்ந்து.

—தி. தேமொழி, சேலம்-6.

வாழ்க அறிவுலகம் ; வாய்க்கட்டும் பொற்காலம் ;
வீழ்க சமுதாய வேற்றுமைகள் ;—பால்போல்
தெளியட்டும் பாரெல்லாம் தேறட்டும் சமதர்மம்
வாழும் தமிழ்போல் வளர்ந்து.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.



சிறுவர் அரங்கம்

ஒருநாள் நீதிபதி

'பூங்கொடி'

நான்கு நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு வெளியூருக்குப் பயணம் போனார்கள். அவர்கள் போகும் வழியில் ஒரு பணமுடிப்பு கிடந்தது. அதை நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு எடுத்தார்கள். பணம் எனக்குத்தான் சொந்தம் என்று நால்வரும் வாதாடினார்கள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்கள். பணத்தை ஒரு குடத்தில் போட்டு, முத்திரையிட்டு எடுத்துச் சென்றார்கள்.

வழியில் உள்ள ஒரு பட்டணத்தில் ஒரு கிழவி கடை வைத்திருந்தாள். அவளிடம் அந்த நால்வரும் சென்று பணமுடிப்பு உள்ள குடத்தைக் கொடுத்தனர். ''அம்மா'', அதோ தெரிகிறதே ஒரு குளம். அந்தக் குளத்தண்டை நாங்கள் கட்டுச் சாதம் சாப்பிட்டு விட்டுவருகிறோம். நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் இந்தப் பணத்தைக் கொடு, அதுவரை இதைப் புதைத்துப் பத்திரமாக வைத்திருங்கள் '' என்று கூறிவிட்டு நால்வரும் சாப்பிடச் சென்றார்கள்.

நால்வரும் குளத்தில் இறங்கிக் குளித்தனர். பிறகு குளக்கரையிலிருந்த பெரிய ஆலமரத்து நிழலில் உட்கார்ந்து கொண்டு சோற்றை அவிழ்த்துச் சாப்பிட்டு விட்டுக் களைப்பாறினார்கள்.

அவர்களுள் ஒருவன் தம்முள் ஒருவனைப் பார்த்து, '' நீ போய்க் கிழவியிடம் குடம் ஒன்று வாங்கி வா. நிறைய மோர் வாங்கி ஆசை தீரக் குடிக்கலாம். '' என்றனர். அவனும் சரியென்று கிழவி இருக்கும் இடத்துக்குச் சென்றான். '' அம்மா அந்த குடத்தைக் கொடு '' என்றான். கிழவி, '' மற்றவர்கள் வந்தால்தான் குடத்தைக் கொடுப்பேன் '' என்று கூறினாள். '' அம்மா, நான் பொய் சொல்லவில்லை, அவர்கள்தான் வாங்கி வரும்படி கூறினார்கள். வேண்டுமானால் நீங்களே கேளுங்கள் '' என்று கூறிக் கூப்பிடு தூரத்தில் உட்கார்ந்திருந்த மூவரையும் பார்த்து, '' கிழவி குடத்தைத் தர மாட்டேன் என்கிறாள் '' என்று உரக்கக் கத்தினான். அதற்கு அவர்கள், '' குடத்தைக் கொடுங்கள் '' என்று பதிலுக்குக் கத்தினார்கள்.

உடனே, கிழவி பணமுடிப்பு உள்ள குடத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கிக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓடி விட்டான். சிறிது நேரம் கழித்து மூவரும் கிழவியிடம் வந்து குடத்தைக் கொடுக்கும்படி கேட்டனர். அதற்குக் கிழவி '' அந்தக் குடத்தைத் தான் அவன் அப்போதே வாங்கிக் கொண்டு போய் விட்டானே '' என்றாள். மூவரும் கிழவியிடம் சண்டை போட்டுப் பணத்துக்கு நீதான் பொறுப்பாளி என்று கூறிப் பணத்தைக் கொடுக்கும்படி மிரட்டினர். அவர்கள் அவளை அவ்வூர் நீதிபதியிடம் அழைத்துச் சென்றார்கள். அந்த நீதிபதியோ, '' கிழவிதான் பணத்தைக் கொடுக்க வேண்டும் '' என்று தீர்ப்புக் கூறினார்.

தீர்ப்பைக் கேட்ட கிழவி அழுது கொண்டே வீட்டுக்கு வந்தாள். அப்போது வழியில் இராமன் என்ற ஒரு சிறுவன் தன் தோழர்களுடன் கோலி விளையாடிக் கொண்டிருந்தான். கிழவி அழுதுகொண்டு போவதைக் கண்ட இராமனுக்கு அவள் மீது இரக்கம் உண்டாயிற்று. ''பாட்டி ! ஏன் அழுகிறாய் ? என்ன நடந்தது ? '' என்று கேட்டான். அதற்குக் கிழவி நடந்ததைச் சொல்லி மீண்டும் அழுதாள். இதைக் கேட்ட இராமன், '' இந்தத் தீர்ப்பு அநியாயமானது. இந்தத் தீர்ப்புச் சொன்னவன் வாயில் மண்தான் விழ வேண்டும்!'' என்று கூறிக் கொண்டே கோலி ஆடுவதில் ஈடுபட்டான்.

அப்போது அந்த நாட்டு மன்னர் இராயர் என்பவர் அவ்வழியாகப் பல்லக்கில் வந்து கொண்டிருந்தார். அவருடன் அவர் மைத்துனர் வெங்காஜிராவும் பல்லக்கில் இருந்தார். சிறுவன் இராமன் சொன்னது வெங்காஜிராவின் காதில் விழுந்தது. அவர் பல்லக்கை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கி வந்து, '' தம்பி, நீயே நீதிபதியாக இருந்தால் என்ன தீர்ப்புச் சொல்வாய் ? ' என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன், '' நான் நீதிபதியானால், அப்போது அதற்குப் பதில் சொல்வேன் ' என்றான். வெங்காஜிராவ் இராயரிடம் இராமன் சொன்னதைக் கூறினார். அதற்கு இராயர், 'இந்தச் சிறுவனை ஒருநாள் நீதிபதியாய் நியமித்துத் தீர்ப்பைக் கவனிக்க வேண்டும்' என்றார். அதன்படி ஒருநாள், இராமன் நீதிபதியாய் நியமிக்கப்பட்டான்.

இராமன் கிழவியையும், மற்ற மூவர்களையும் அழைத்து, எழுத்து மூலமாகத் தங்கள் வழக்கை ,எழுதித் தரும்படி கூறினான். அதன்படி அவர்களும் எழுதிக் கொடுத்தார்கள்.

இராமன் விசாரிக்கலானான்.

நீதிக்கு ஒரு கதை

‘‘பணம் உள்ள குடத்தை யாரிடம் கொடுத்தீர்கள் ’’

‘‘ கிழவியிடம் ’’

‘‘ என்ன சொல்லிக் கொடுத்தீர்கள் ? ’’

‘‘ நாங்கள் நால்வரும் வந்து கேட்கும் போது கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தோம்.’’

‘‘ சரி, இப்போது நீங்கள் மூவராகத்தானே வந்து கேட்கிறீர்கள். நீங்கள் நால்வரும் சேர்ந்து வாருங்கள். கிழவி அந்தக் குடத்தைக் கொடுப்பாள் ’’. என்று சிறுவன் தீர்ப்பளித்தான்.

இராமனின் அறிவுமிக்க இத்தீர்ப்பைக் கேட்ட வெங்காஜிராவும், மன்னரும் வியந்தனர். இவனே பிற்காலத்தில் மரியாதை இராமன் என்ற பெயருடன் புகழ் மிக்க நீதிபதியாய் விளங்கினுன் என்று சொல்லுகிருர்கள்.

* * *

ஒரு வியாபாரி, பத்து மாடுகளின் மேல் வெல்ல மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வெளியூருக்குச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு மாடு மூட்டையைக் கீழே தள்ளி விட்டது. வியாபாரியால் அந்தப் பெரிய மூட்டையைத் தூக்க முடியவில்லை. அப்போது அங்கே ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் வந்து கொண்டிருந்தான். அவனை அழைத்து, ‘‘ கீழே கிடைக்கும் மூட்டையைத் தூக்கிவைத்தால் உனக்கு நிறைய வெல்லம் தருகிறேன் ’’ என்ருன்.

சிறுவனும், வியாபாரியும் சேர்ந்து மூட்டையைத் தூக்கி மாட்டின் முதுகின் மீது வைத்தனர். வியாபாரி ஒரு சிறு உருண்டை வெல்லத்தைச் சிறுவனுக்குக் கொடுத்தான். ‘‘நிறைய வெல்லத்தைக் கொடுக்கிறேன் என்ருய், ஆகவே, நிறைய வெல்லம் கொடு ’’ என்று சிறுவன் கேட்டான். வியாபாரி சரி என்று இன்னும் கொஞ்சம் வெல்லம் கொடுத்தான். ‘‘இது கொஞ்சம், இன்னும் நிறையக் கொடு ’’ என்ருன் சிறுவன். மறுபடியும் வியாபாரி கொஞ்சம் வெல்லம் கொடுத்தான். அப்போதும் அந்தச் சிறுவன் இது கொஞ்சம், நிறையக் கொடு ’’ என்று தொந்தரவு செய்தான்.

உடனே வியாபாரி பையனை அழைத்துக் கொண்டு, நீதிபதி மரியாதை ராமனிடம் சென்ருன் நடந்த விவரத்தை நீதிபதியிடம் கூறினுன்.

நீதிபதி, சிறுவனுக்கு ஒரு வீசை வெல்லம் கொடுக்கும்படி கூறினுர். வியாபாரியும் ஒரு வீசை வெல்லத்தைத் தராசில் நிறுத்துக் கொடுத்தான். அப்போதும் சிறுவன், ‘‘ இவ்வளவு தானு ? இன்னும் கொடு ’’ என்ருன். சிறுவனின் பேராசையைக் கண்ட நீதிபதி அவனை அருகே அழைத்து, ஒரு கையில் நிறைய வெல்லமும், இன்னொரு கையில் சிறிது வெல்லமும் வைத்து, ‘‘ இப்போது எந்தக் கையில் நிறைய வெல்லம் இருக்கிறது சொல் பார்க்கலாம் ? ’’ என்று கேட்டார். அதற்குச் சிறுவன் இந்தக் கையில்தான் நிறைய வெல்லம் என்று அதிகமாயுள்ள கையைக் காட்டினுன். ‘‘ சரி, அப்படியானுல் நீ கேட்டபடி நிறைய வெல்லம் இது தான் எடுத்துப் போ ’’ என்ருர் நீதிபதி. அந்த வெல்லமோ பாக்கு அளவுதான் இருந்தது.

தமிழ்நாடு அரசு ஆளுநரின் சார்பாக குன்னூர் கோட்டத் திட்ட கோட்ட வனத்திட்ட அலுவலரால் 25—7—1972 அன்று பிற்பகல் 3 மணிக்கு இவ்வலுவலகத்தில் தனித் தனியாக கீழே கண்ட ஒவ்வொரு வேலைக்கும் முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	வேலையின் இயல்பு.	தோராய அளவு.	வேலையின் தோராய மதிப்பீடு.	செலுத்த வேண்டிய வைப்புத் தொகை.	செலுத்த வேண்டிய பிணை வைப்புத் தொகை.
			ரூ.	ரூ.	ரூ.
1 ஸ்டகர்ஹில் காப்புக் காட்டில் பிட் 4-ல் சாலையில் வேலைகள் செய்தல்.	தடுப்புச் சுவர் எழுப்புதல் சாலை தளம் போடுதல்.	19 க.மீ. 600 க.மீ.	24,000	600	600.
2 ஒருக் பாதுகாப்பு காட்டில் பிட் 1 பிளாக்1-ல் சாலையை விரிவு படுத்துதல், சரளை பரப்புதல்.	மண் வேலை, தடுப்புச் சுவர் எழுப்புதல் சரளை தளம் போடுதல்.	13·68 க.மீ. 21·29 க.மீ. 1,215 க.மீ.	5,400	135	135
3 டைகர் ஹில் காப்புக் காட்டில் செக்ஷன் சாலை அமைத்தல் மற்றும் 2 விரிவு படுத்துதல் பிளாக் 1 செக்ஷன் 3-ல் பாதை அமைத்தல் சரளை பரப்புதல் வேலை.	மண்வேலை தடுப்பு சுவர் எழுப்புதல் சரளை பரப்புதல்.	1,000 மீட்டர்.	3,800	100	100
4. சிம்ஸ் பார்க் காப்புக் காட்டில் உள்ள உதவிப் பொறியாளர் குடியிருப்புக்கு அணுகு வழி அமைத்தல்.	தடுப்புச் சுவர் தோராய நீளம் எழுப்புதல் மற்றும் மண் வேலை செய்தல்.	62 க.மீ. 37 க.மீ.	4,500	115	115

நிபந்தனைகளின் விவரங்கள் மற்றும் ஒப்பந்தப் படிவங்கள் கீழே கையொப்பமிட்ட அலுவலரின் அலுவலகத்தில் ரூ. 415 செலுத்தி ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக பெற்றுக்கொள்ளவும்.

கோட்ட அலுவலர்,
குன்னூர் தேயிலைக் கோட்டம்,
குன்னூர்-2.

(த.10)

ஒப்பந்தப் புள்ளி

குடிசைப் பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும், டாக்டர் சந்தோஷ நகரில் (எழும்பூர்) பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 19—7—1972 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

எண்ணும், வேலையின் விவரமும்.	வேலையின் தோராய மதிப்பு.	முன்வைப்புத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.
	ரூ.	ரூ.	ரூ.
1 நான்கு அடுக்குகள் கொண்ட குடியிருப்புக் கட்டடங்கள் ஒரு (24 குடியிருப்புகள் கொண்டது). “ இ ” கட்டடம்.	3,50,000	எல்.எஸ். 5,260	(திருப்பித் தரப்படமாட்டாது). ரூ. 15 மற்றும் விற்பனை வரி.
இரண்டு (16 குடியிருப்புகள் கொண்டது) “ டி ” கட்டடம்.			

ஒப்பந்தப் பத்திரங்களை கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 8—7—1972 முதல் 18—7—1972 வரைப் பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 19—7—1972 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்,
குடிசைப் பகுதி மாற்று வாரியம்,
கோட்டம் எண் 3, சென்னை-10.

(த-28.)



நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ
வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.

தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினூல், பாலிவாலென்ட் ஃபினூல்கள்.

நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், உயர்ச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி-1

FOSIM CSWTH

ஏலம்

வனத்துறை
தமிழக அரசினர் மரக் கிடங்கு
பொள்ளாச்சி

சுமார் 500 கன மீட்டர் முதல் 1,000 கன மீட்டர்வரை (ஈட்டி, தேக்கு, கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பல ஜாதி) மரங்கள் ஆகியவைகளை 19—7—1972-ம் தேதி தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக தென் கோவை மாவட்ட அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடைபெறும்.

மற்ற விவரங்கட்குப் பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக் கிடங்கின் வனச் சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மாவட்ட வன அலுவலர்.

(த. 7)

ஒப்பந்தப் புள்ளி

உதகமண்டலம் நகராட்சி

1972-ம் வருடம் ஜூலை மாதம் 26-ம் தேதி மாலை 3-30 மணிக்குள் மழைமானி (Rain guage) விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் உதகை நகராட்சிப் பொறியரால் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிக்குரிய பத்திரங்களும் நிபந்தனைகளும் 25—7—1972-ம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 4·12 நகராட்சிக்கருவூலத்தில்செலுத்திஅன்றுமாலைக்குள் ஒப்பந்தப்பத்திரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,
உதகமண்டலம் நகராட்சி.

(த. 18)

ஒப்பந்தப் புள்ளி

கிங் நிலையம்

ஒப்பந்த அறிவிப்பு ஒப்புதல் கொள்ளும் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்த அறிவிப்பு ஒப்புதல் அதிகாரியால் ஒவ்வொரு இனத்திலும் நிர்ணயிக்கப்படும் வேறு தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய பொடித்த ஓட்ஸ் (Crushed Oats) லூசிரைன் (Lucerine) வைக்கோல் (Paddy straw) கோதுமைத் தவிடு (Wheat bran) எருமைக் கன்றுகள் (Buffalo Calves) முதலியன முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தமிழ்நாடு ஆளுநர் உத்தரவின்படியும் அவர்களுக்குப் பதிலாகவும் இயக்குநர், கிங் நிலையம், கிண்டி, அவர்களால் 1973 ஜூலை மாதம் 27-ம் தேதி மாலை 3 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும். சுமார் இரண்டு வயது அடைந்ததாகவும் நல்ல ஆரோக்கிய முடையதாகவும் சேலம் அல்லது கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாகவும் கால்நடை உதவி மருத்துவரால் அத்தாட்சி பெற்றதாகவும் உடைய பெண் எருமைக் கன்றுகள் அம்மை குத்தும் மருந்து தயாரிக்கத் தேவைப்படுகின்றன. அவற்றின் விலை விவரங்கள் கிண்டியிலுள்ள கிங் நிலையத்திற்குச் சரக்கு ரயில் மூலம் கொண்டுவரும் போக்குவரத்துச் செலவும் அடங்கியதாகவும் இருக்கவேண்டும்.

அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது வங்கியிலோ ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) **XXIV. P.H. (e) Code No. (24AA9) Miscellaneous Bacteriological Laboratories-King Institute, Guindy, Madras-32** என்ற தலைப்பில் பத்தொன்பது காசு செலுத்தியும் **" XII-A. Sales tax (1) [b] Taxes under Tamil Nadu Government Sales tax act [1] G.S.T. Code No.** என்ற தலைப்பில் செலுத்தியும் அவற்றுக்கான கருவூலம் அல்லது வங்கி ரசீதை இயக்குநர் அலுவலகத்தில் கொடுத்து அதற்கான நமூனா விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், மேற்படி கட்டிய பணம் திருப்பித் தரமாட்டாது.

டாக்டர் சி. ஞானதேசிகன், எம்.டி.,
இயக்குநர்.

(த. 19)

ஏல விற்பனை

அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை-20.

பெட்ரோலினால் இயக்கப்படும் செவர்லெட் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று, 1941 மாடல் வீல்பேஸ் 125½, பதிவு எண் எம்.டி.யூ. 1384, " தற்போதுள்ள நிலையில் கண்டபடி " அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் 26—7—1972 தேதி மாலை 3 மணிக்குப் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகளை நேரிலோ அல்லது விண்ணப்பத்துடன் சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட சதர உறைகளின் மூலமாகவோ அதே அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

முதல்வர்

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி

சேலம் நகராட்சி

சேலம் நகரில் சில பகுதிகளில் அமைப்பதற்காக 125 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகளும், 2 அடி இரட்டைக் குழல் விளக்குகளும், 4 அடி இரட்டைக் குழல் விளக்குகளும் சப்ளை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆணையரின் நேர்முகத் துணைவர் அவர்களால் 27—7—1972-ம் தேதி மாலை 3 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியருக்கு விண்ணப்பிக்கவும்.

ஆணையர்.
சேலம் நகராட்சி.

(த. 3)

ஏம விளம்பரம்

தேனி-அல்லி நகரம் நகராட்சி
(மதுரை மாவட்டம்).

தேனி—அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி, கிழக்குச் சந்தை சரகத்திலுள்ள 32 ஸ்டால்களை 1—9—1972-ம் தேதி முதல் 31—8—1973-ம் தேதி முடிய 1 வருட காலத்திற்கு உபயோகித்துக் கொள்ள தேனி—அல்லிநகரம் நகராட்சி தனித்தனி அதிகாரி அவர்களால் நகராட்சி மன்ற அலுவலகத்தில் 27—7—1972-ம் தேதி வியாழக்கிழமை காலை 11-00 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் மற்றுமுள்ள இதர விஷயங்களை அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகம்மது இப்ராஹிம், பி.ஏ.,
தனி அலுவலர்.

(த. 17)

ஏல விளம்பரம்

இக்கோட்டத்தைச் சார்ந்த கீழ்க்கண்ட உபயோகப்படுத்தக் கூடிய ஆனால் பழமையான இயந்திர உதிரி உறுப்புகள் (ஸ்பேர் பார்ட்டுகள்) மேட்டூர் பொதுப்பணித் துறை மெயின் ஸ்டோரில் நிருவாகப் பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 5—8—1972-ம் தேதி சனிக்கிழமை அன்று பகல் 11-00 மணிக்கு அரசினர் விதி முறைகளின்படி பகிரங்க ஏலம் விடப்படும்.

(1) லாரி உதிரி உறுப்புகள்—189 இனங்கள்.
(2) டம்பர், ஜீப் உதிரி உறுப்புகள்—71 இனங்கள்.
(3) ரோட்ரோலர் புல்டோசர்—129 இனங்கள்.
(4) லோகோ, பார்க்கர் மிக்சர் மற்றும் பம்ப் உதிரி உறுப்புகள்—53 இனங்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள பொருட்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஏல சம்பந்தமான விவரங்களை ஸ்டேன்லி உபகோட்ட உதவிப் பொறியாளர், அல்லது அணைப் பிரிவு இளம் பொறியாளர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

பி. ஸ்ரீபாதராவ்,
நிருவாகப் பொறியாளர், பொ.ப.து.
மேட்டூர் கோட்டம், மேட்டூர் அணை.

(த. 5)

ஒப்பந்தப் புள்ளி

உணவுப் பொருள் வழங்கும் துறை
மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் தாலூகா விநியோக அதிகாரிகளிடமும், மற்றும் திண்டுக்கல் உசிலம்பட்டி, உத்தமபாளையம், மதுரை பழங்கானத்தம் அரசினர் கிட்டங்கியிலுள்ள கீழ்க்கண்ட விவரப்படி நல்ல நிலையில் உபயோகப்படுத்தக்கூடிய காலி சாக்குகளும் (Sound and Serviceable gunnies) உபயோகப்படுத்தக்கூடிய ஒட்டுப் போட்ட காலிச் சாக்குகளும் (Serviceable gunnies with patches) பழைய சாக்குகளும் (unserviceable gunnies) 100 கிலோ, 75 கிலோ கொள்ளளவு உள்ளதுமான மொத்தம் 33,510 காலி சாக்குகளை விற்பனை செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் மதுரை மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களால் கோரப்படுகிறது. ஒப்பந்தங்கள் பெறப்படுவதற்கான கடைசித் தேதி 17—7—1972. முழு விவரங்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

நல்ல நிலை சாக்குகள்.		ஒட்டுப்போட்ட உபயோகப் படக்கூடிய சாக்குகள்.		பழைய . சாக்குகள்.		மொத்தம்.
100கி.	75கி.	100கி.	75கி.	100கி.	75கி.	
366	..	..	7,191	16	25,937	33,510

கே. கோவிந்தன்,
மாவட்ட வருவாய் அலுவலர்.

(த. 6)

இட மாற்றம்

மின்சார வாரியம்

மேட்டூர் மின் அமைப்பு
மேட்டூர் அணை

ராசிபுரம் வருவாய்ப் பிரிவு இரண்டு துணைத் தலைமைக் கணக்காயர் அலுவலகம் இதுவரை கதவு எண் 45-ஏ, திருவேங்கட விலாஸ், பள்ளிக்கூட வீதி, ராசிபுரத்தில் இயங்கி வந்தது. இந்த அலுவலகம் மின் நுகர்வோர் சௌகரியத்தை முன்னிட்டு 16—6—1972-ம் தேதியிலிருந்து நாமக்கல் தாலுக்கா, சேந்தமங்கலத்தில் கதவு எண் 129, ஜங்களாபுரம் என்ற கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(த.34)

ஒப்பந்தப் புள்ளி

மீன் துறை

1972–73 ஆம் ஆண்டில் (ஒப்பந்தக்ம் செய்யப்படும் தேதியிலிருந்து 31—3—1973 வரையில்) சென்னை இராயபுரத்தில் உள்ள அரசு மா. சிங்காரவேலர் நிலையத்தி (மா. சிங்காரவேலர் விசைப் படகுகட்டும் தளம், சென்னை-13)லுள்ள பல்வகையான மரக்கட்டைகளை அறுப்பதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள், சென்னை மண்டல மீன் துறை துணை இயக்குநரால் 20—7—1972 காலை 11 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

மேற்படி ஒப்பந்தம் பற்றிய மற்ற விவரங்களை மேற்கூறிய துணை இயக்குநருக்கு விண்ணப்பித்துத் தபால் மூலமாகவும், நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி. மா. ஆறுமுகம்,
மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்),
சென்னை.

(த.40)

ஒப்பந்தப் புள்ளி

மன்னார்குடி நகராட்சி

கீழே கண்ட நகராட்சி வேலைகளுக்காக 27—7—1972-ம் தேதி மாலை 4-00 மணிவரை கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரிப் பெறலாம்.

வேலையின் விவரம்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.
நகராட்சி புதிய பேருந்து நிலையக் கட்டட வேலைகள், செப்டிக் டாங்க் வேலைகள், ரோடு வேலைகள், குடி தண்ணீர்த் தேக்கத் தொட்டி, அலுவலக முன்புறம் காம்பவுண்டு சுவர் கட்டும் வேலை (11 வேலைகள்)	54,180	ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவிகிதம்.

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

(த-41).)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

நகரமன்ற டிரேக்டர் எம்.டி.சி. 9248-க்கும் ட்ரெயிலர் எம்.டி.இ. 2362-க்கும் பழுது பார்க்கும் வேலைகள் செய்ய,மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நாளது 28-7-1972-ம் தேதி மாலை 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

கட்டுத் தொகை ரூ. 85.

ஆணையர்.

(த.42)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

மூன்று குதிரை வேகமுள்ள மின் மோட்டார், பம்பு செட்டு முதலியன விநியோகம் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நாளது 28—7—1972 மாலை 4-00 மணி அளவில் ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பாரங்கள் விண்ணப்பங்களின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத்தொகை ரூ. 100.

ஆணையர்.

(த.32)

ஒப்பந்தப் புள்ளி

உடுமலைப்பேட்டை நகராட்சி

இந்நகராட்சியின் எம்.டி.இ. 1928 பெட்போர்டு லாரி வாகனத்திற்குத் தகுதி சான்றிதழ் பெறத் தேவையான வேலைகள் செய்யவும் இந்நகராட்சியின் மாடுகளுக்குத் தேவையான தீவனப் பொருள் வைக்கோல் விநியோகம் செய்யவும் ஜூலை மாதம் 29-ம் தேதி மாலை 4-00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட கட்டுத் துகையுடன் கூடிய ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 4-15-க்கு அதுபோது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் இறக்கப்படும்.

(1) லாரி ரிப்பேர் வேலை செய்ய கட்டுத் தொகை ரூ. 300.

(2) மாட்டுத் தீவனப் பொருள் வைக்கோல் சப்ளை செய்ய கட்டுத் தொகை ரூ. 150.

இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

சொ. ரத்தினகிரி.
ஆணையர்.

(த.48)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் மார்க்கெட் கமிட்டி அலுவலகம், திருப்பூர்-4.
(தொலை பேசி எண் : 141).

இக் கமிட்டிக்குத் தேவையான 40" 28" அளவும், 80 கிலோ கிராம் கொள்ளளவு உடையதும் ஒரு கிலோ எடையுள்ளதுமான 5,000 புதிய டி.டபிள்யூ, சாக்குப் பைகள் சப்ளை செய்வதற்காக முத்திரை இட்ட ஒப்பந்தங்கள் 3—8—1972-ம் தேதி பிற்பகல் 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. நேரிலோ அல்லது மணியார்டர் மூலமாகவோ ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்) செலுத்தி, ஷெட்யூல்களுடன் கூடிய பாரங்களை இவ்வலுவலகத்தில் எல்லா அலுவலக நேரங்களிலும் 2—8—1972-ம் தேதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்டர் கொடுத்த ஒரு வார காலத்திற்குள் சாக்குகள் அனைத்தையும் சப்ளை செய்ய வேண்டும். வந்த ஒப்பந்தங்கள் யாவும் 3—8—1972-ம் தேதி மாலை 4-30 மணிக்கு இவ் வலுவலகத்தில் பகிரங்கமாகத் திறக்கப்படும். அச்சமயம் ஒப்பந்தம் கொடுத்தவர்களில் நேரில் வர விரும்புபவர்கள் வரலாம்.

காரணமின்றியே குறைந்த தொகையுள்ள ஒப்பந்தங்களைத் தள்ளுபடி செய்யவும் இக்கமிட்டிக்கு அதிகாரம் உள்ளது.

செயலர் (பொறுப்பு).

(த.47)

ஏல விற்பனை

காவல் துறை

கீழே குறிப்பிட்டுள்ள மதுரை வடக்கு மாவட்ட காவல் துறையைச் சேர்ந்த போலீஸ் மோட்டார் சைக்கிள் மதுரையிலிருக்கும் மதுரை வடக்கு மாவட்ட ஆயுதப்படை காவல் துறை மைதானத்தில் 26—7—72-ம் தேதி காலை 11 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இது சம்பந்தமான மற்ற விவரங்களையும் இந்த வாகனத்தை நேரில் பார்வையிடுவது குறித்தும் ஆயுதப்படை ஆய்வாளரிடமிருந்து தெரிந்துகொள்ளவும்.

போலீஸ் மோட்டார் சைக்கிள் எம்.டி.ஏ. 2418 பெட்ரோல் என்பீல்டு-1966 மாடல் சோலோ—3.5 குதிரை சக்தி—சக்கர அடிப்படை—54 அங்குலம்.

ஜே. வாசுதேவபட்,
காவல் துறைக் கண்காணிப்பாளர்,
மதுரை வடக்கு, (இருப்பு) மதுரை.

(த.24)

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,

பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம்,
த.பெ. 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருச்சிராப்பள்ளி வட்டம், த.பெ. 55, திருச்சிராப்பள்ளி அவர்களால் திருச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்	திருச்சி மாவட்டம்—ஆலங்குடி வட்டம், ஆலங்குடியில் 16 படுக்கைகள் கொண்ட பகுதியுடன் ஒரு மருத்துவ விடுதி கட்டுதல்.
2 ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்.	27—7—1972 மாலை 3.00 மணி.
3 பிணைப் பொறுப்புத் தொகை ..	ரூ. 3,200 (ரூபாய் மூவாயிரத்து இருநூறு மட்டும்).
4 ஒப்பந்த முறை	மொத்தத் தொகை.
5 முடிக்க வேண்டிய காலம் ..	ஒன்பது மாதங்கள்.
6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ..	ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7 விற்பனை வரி	ரூ. 0.88 (எண்பத்தெட்டு காசு மட்டும்).
8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.	7—7—1972.
9 விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.	27—7—1972 மாலை 3.30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் :

XXXVII. Public works—State Revenue Miscellaneous மற்றும் **XII Sales tax (b) Receipts under the State Sales Tax Act General Sales Tax** என்ற தலைப்புக்களின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலையை ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட கண்காணிப்புப் பொறியர்.

(த.27)

தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை சென்னை-23.

மாநில தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைக்கு 1—8—1972 முதற்கொண்டோ அல்லது நிர்ணயிக்கப்படும் தேதி முதல் 31—3—1973 வரை எட்டு மாத காலம் எலும்பில்லாத ஆட்டுக்கறி சப்ளை செய்வதற்கான அரக்கு முத்திரை இட்ட ஒப்பந்தங்கள் கண்காணிப்பாளர், மாநில தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனை, சென்னை-23, அவர்களால் 24—7—1972-ம் மதியம் 12 மணியளவில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்த நிபந்தனைகளின் நகல்கள், ஒப்பந்தப் பாரங்கள் ஆகியவைகளை சென்னை மாநில தொழிலாளர் மருத்துவமனையில் பெற்றுக் கொள்ளலாம். அதற்கான கட்டணம் ரூ. 5. இத்தொகையை சென்னை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்த கிளையிலோ அல்லது எந்த அரசாங்கத்தின் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசின் கணக்கில்

XXIII—Medical K. Miscellaneous—Employees State Insurance Scheme—2. Other receipts என்ற தலைப்பிலும் மற்றும் விற்பனை வரியும் அதில் சர்சார்ஜும் 0.20 காசு **"XII Sales Tax—Receipts under the State Sales Tax Act General Sales-tax"** என்ற தலைப்பிலும் செலுத்த வேண்டும்.

கண்காணிப்பாளர்,
மாநில தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனை,
சென்னை-23.

(த.15)

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 28—7—1972 மாலை 3.00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்	கும்பகோணம் அரசினர் மகளிர் கலைகல்லூரியில் மேற்பகுதியின் மேல், ரசாயன உயிரியல் பயிற்சிக் கூடங்களுக்கு முதன் மாடிக் கட்டடம் கட்டுதல்.
2 ஒப்பந்த தொகை	மொத்தத் தொகை.
3 பிணைப்பணம் (செலுத்திச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்). ..	ரூபாய் 2,650.
4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ..	ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) அரசினர் கருவூலத்தில் பொதுப் பணித்துறை — செலுத்துத் தொகை III—மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில்— செயற்பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்.
5 விற்பனை வரி	ரூ. 1.05 (ரூபாய் ஒன்றும் காசு ஐந்து மட்டும்) அரசினர் கருவூலத்தில் "XII விற்பனைவரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் பொது விற்பனை எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.
6 கால அளவு	எட்டு மாதங்கள் (8).
7 ஒப்பந்தப் பத்திரங்கள் இடைக்கும் நாள். ..	10—7—1972.

ஏ. சேஷாத்ரி,
மேற்பார்வைப் பொறியாளர் (பொறுப்பு).

(த.29)

மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் கூறைநாடு கணபதி நகர் காலனிக்கு குடிநீர் பிரதான விஸ்தரிப்பு திட்டதிற்குத் தேவையான (P. V. C.) பிரதான குழாய் போட்டு மேற்படி வேலையை செய்து முடிப்பதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 27—7—1972-ம் மாலை 4.00 மணிவரை மாயூரம் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அவைகள் அன்றைய தினமே மாலை 4.30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்களுக்கு ரூ. 1.04 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளி வைப்புத் தொகை	2½ சதவீதம்.
ஒப்பந்தப் புள்ளி கூடுதல் வைப்புத் தொகை ..	2½ சதவிகிதம்.
மதிப்பீட்டுத் தொகை	ரூ. 10,000.

ஆணையர் பொறுப்பு.

(த.12)

கரூர் நகராட்சி

நகராட்சியால் சப்ளை செய்யப்படும் "பார்கோ" லாரி சேசிங் கேபின் கட்டவும், இலாகா மூலம் சப்ளை செய்யப்படும் 1,000 காலன் கொள்ளளவுள்ள டாங்கை பைப் கனெக்ஷன் போட்டு பிட்டிங் செய்து கொடுக்கவும் ஆணையர் அவர்களால் 26—7—1972 மாலை 4 மணிவரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும். டேங்பிட்டிங் செய்வதற்கான முழு விவரங்களுக்கும் ஒப்பந்த கண்டிஷனுக்கும் பொறியருக்கு விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

பி. குமாரசாமி,
ஆணையர்.

(த.11)





கதர்
கிராமத்
தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி

கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்

கதர் கிராமத்
தொழில் துறை
2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்...

ஒப்பந்தப் புள்ளி

பெரியகுளம் நகராட்சி

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி குழாய் சாமான்கள் வழங்குவதற்காக கீழே கையொப்பமிட்டவரால் 31—7—72-ம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வழங்குவதற்கான பொருட்களின் விவரம்.	அடக்கவிலை மதிப்பீடு.	முன் வைப்புத் தொகை.
	ரூபாய்.	ரூபாய்.
குழாய் சம்பந்தப்பட்ட பொருட்கள்.	4,700	120

மேலும் தேவையான விவரங்களை நகராட்சிப் பொறியாளர், பெரியகுளம் அவர்களிடமிருந்து விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. சுருளிராஜ், எம்.ஏ.,
எல்.எல். பி., பி.டி.,
நகராட்சி ஆணையர்.

(த. 57)

மறு ஒப்பந்தப் புள்ளி

அரக்கோணம் நகராட்சி

இந் நகராட்சி உபயோகத்திற்குத் தேவையான கீழ்க்கண்ட விவரப்படி மருந்து தெளிப்பான்கள் (Sprayers) சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியிற் கையொப்பமிடப்பட்டவரால் 27—7—1972 மாலை 4 மணி வரையில் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு, அன்றைய தினமே 4-15 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

விவரம்.

Articles required.	Quantity required.	Earnest Money Deposit.
12·5 litress capacity Hand compression sprayers with necessary accessaries (Brass or Metal Tank)	4 Nos.	Rs. 100

க. ரா. குட்டியப்பன்,
ஆணையர்.

(த. 60)

ஒப்பந்தப் புள்ளி

அரசு போக்குவரத்துத் துறை
அண்ணா சாலை, சென்னை-2

தமிழ்நாடு அரசு போக்குவரத்து இலாகாவின் சார்பில், இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து இலாகா, சென்னை-2 அவர்களால் இலாகாவைச் சேர்ந்த விரைவுப் பேருந்துகளின் பின்புறத்திலும், உட்புறத்திலும், 1—10—1972 முதல் மூன்றாண்டுக் காலத்திற்கு விளம்பரங்கள் செய்யும் பூரண உரிமையைப் பெற அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி அண்ணா சாலை, சென்னை-2ல் உள்ள இயக்குநர் அவர்கள் அலுவலகத்தில 31—7—1972 அன்று மாலை 2-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள் அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள இயக்குநரின் அலுவலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

எச். எம். சிங்,
இயக்குநர்.

(த. 63)

ஒப்பந்தப் புள்ளி

போடிநாயக்கனூர் நகராட்சி

தாரிபடியாத ரோடுகள் இரண்டு ரூ. 87,000 மதிப்பீட்டில் வேலைகள் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் 1972-ம் வருடம் ஜூலை மாதம் 25-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவைகள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்களை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

பி. பகவதிமுத்து, பி.ஏ.,
ஆணையர்.

(த. 58)

ஏல விளம்பரம்

ஈரோடு நகராட்சி

1-8-1972 முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு ஆர். கே. வெங்கிடுசாமி வீதியில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் உள்ள சிற்றுண்டி கட்டடம், பிரயாணிகள் தங்குவதற்குக் கட்டப்பட்ட கட்டடம், டிக்கெட் கொடுக்கப்பட்ட அறைகள், பேருந்துகள் நிற்கப்பட்ட கட்டடங்கள் ஆகியவற்றைக் கிடங்கு உபயோகத்திற்கு உபயோகிக்கும் உரிமையை ஈரோடு நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 28-7-1972-ம் தேதி காலை 10-30 மணிக்கு ஈரோடு நகர் மன்றக் கட்டடத்தில் பலரும் அறிய பொது ஏலத்தில் விடப்படும். கட்ட வேண்டிய கட்டுத் தொகை ரூ. 300. 1972-73-ம் ஆண்டின் பொது ஏல நிபந்தனைகள் அனைத்தும் இதற்குப் பொருந்தும். கூடுதல் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடித மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

ச. சிதம்பரம்,
ஆணையர்.

(த. 59)

ஒப்பந்தப் புள்ளி

செங்கற்பட்டு நகராட்சி

கீழ்க்கண்ட பொருள்களை வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 26—7—1972-ம் தேதி மாலை 3-00 மணி வரை கோரப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். முழு விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பித்து பெறலாம்.

(1) ரப்பர் படுக்கைகளும், தலையணைகளும்.
(2) குடி தண்ணீர் விநியோக சாமான்கள்.
(3) சீலிங் பேன்கள்.

ஆணையர்.

(த. 56)

ஒப்பந்தப் புள்ளி

போடிநாயக்கனூர் நகராட்சி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் வேலைகளுக்குத் தனித்தனியாக ஒவ்வொரு வேலைக்கும் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—7—1972 தேதி மாலை 4 மணிவரை ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4.30 மணி அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். இதர விவரங்களுக்கு இவ்வலுவலகத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

1. ரோடு பராமரிப்பு வேலை, கட்டட வேலைகள், பேருந்து நிலையத்தில் கூடுதல், மின் விளக்கு அமைத்தல்—மொத்தம் ஆறு வேலைகள் —மதிப்பீடு ரூ. 18,450.
2. குடிநீர் விநியோகத்திற்கு ஜி.ஐ. பைப்புகள் மற்றும் முக்கிய பாகங்கள் சப்ளை செய்தல்.

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

(த. 52)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

எண். 2/72.

40 வகையான புத்தகங்களையும் பாரங்களையும் பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால், மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செய்தித் தாளில் விளம்பரம் செய்த பதினைந்தாவது நாள் மாலை 4 மணிவரை வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் வீதம் ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ சீப் அக்கவுண்டண்ட், எக்ஸ்பெண்டிசர், திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3 அவர்களுக்கு அனுப்பியும் ஸ்பெசிபிகேஷன் எண்ணைக் குறிப்பிட்டும், ஒப்பந்தப் பாரப் பிரதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை, எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. பண அஞ்சல்கள் முடிவு தேதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்புவரை தான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள் சாதாரண அஞ்சலில் தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகளுக்கு மின்வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் பாரங்களுக்கு விண்ணப்பிக்கையில் ஸ்பெசிபிகேஷன் எண் ஒப்பந்த விலை செலுத்தியதற்கான ரசீது முதலியவற்றைத் தவறாது அனுப்ப வேண்டும். மேற்படி ஒப்பந்தப் பாரங்கள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத் தக்கதல்ல.

ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். ஒப்பந்தப் பாரங்கள் 15—7—1972 லிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ளவரை குறைந்த விலை ஒப்பந்தத்தையோ அல்லது வேறு ஒப்பந்தத்தையோ அனுமதிக்கத்தான் வேண்டுமென்று கட்டுப்படுத்தாது என்பதையும் அறிவிக்கப்படுகிறது.

மேற்பார்வை மின் பொறியர்,
திருநெல்வேலி மின்திட்டம்,
திருநெல்வேலி-3.

(த.61)

வீட்டு வசதி வாரியம்

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின்மீது வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும்குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவருக்கு 19—7—1972 மாலை 3.00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3.05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	சுமார் மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.
	ரூ.	ரூ.	ரூ.
1 வியாசர்பாடி வடசென்னை புறநகர் திட்டத்தில் 34/68-ன் படி எம்.ஐ.ஜி. ஃப்ளாட்கள் மூன்று அறை கொண்ட இரண்டு அடுக்கு வீடுகள் ஒரு பிளாக் கட்டுதல்—			
1 பிளாக் I	74,008	1,125	10 விற்பனைவரி.
2 பிளாக் IV	74,800	1,125	டி
3 பிளாக் V	74,800	1,125	டி
4 பிளாக் VI	74,800	1,125	டி
5 பிளாக் VII	74,800	1,125	டி
6 பிளாக் VIII	74,800	1,125	டி
7 பிளாக் IX	74,800	1,125	டி
8 பிளாக் X	74,800	1,125	டி
9 பிளாக் XI	74,800	1,125	டி
10 வியாசர்பாடி அருகில் வடசென்னை புறநகர் திட்டத்திற்காக கழிவுப் பொருள் பம்பிங் நிலையம் கட்டுதல் (ME 8/1542/71).	1,07,350	1,620	15+விற்பனை வரி

ஒப்பந்தப் பத்திரங்கள் வரை படங்கள் மற்றும் இதர விவரங்கள் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் 5—7—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு எல்லா வேலை நாட்களிலும் காலை 11.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை சலானில் குறிப்பிட்டபடி தொகையைச் செலுத்திப் பெறலாம். கீழே கையொப்பமிட்டவருக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ உரிமை உண்டு.

நிருவாகப் பொறியாளர் (கிழக்கு).

(த-30)

தொழில்நுட்பக் கல்வி இயக்கம்
(கட்டுமானப் பிரிவு) கிண்டி சென்னை-25

வேலையின் பெயர்—1. அடையாறு, சென்னை-20-ல் திரைப்படத் தொழில்நுட்ப நிறுவனத்திற்குத் திரைப்படம் எடுக்கும் அரங்கு கட்டுதல்.

2. அடையாறு, சென்னை-20-ல் திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனத்திற்குப் புதிய படிப்புகளுக்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை—இந்த அலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். சி. டபள்யூ 3252/டி1/72 தேதி 25-5-1972.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைகளுக்காக மேற்கண்ட அலுவலகத்தில், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் தொழில் நுட்பக் கல்விக் கோட்டங்களில் வேலைகளை எடுப்பதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ள 2 மற்றும் அதற்கு மேற்பட்ட பொருத்தமான பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 24-7-1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், மேற்கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

	வகை எண் 1.	வகை எண். 2.
ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை	9000+	6000+
ஒப்பந்தப்பத்திரங்கள் விலை வரைபடங்களுடன்.	ரூ. 20·00 விற்பனை வரி 3½ சதவிகிதம்.	ரூ. 20·00 விற்பனை வரி 3½ சதவிகிதம்,
வேலை முடிக்கவேண்டிய காலம்.	8 மாதங்கள்	6 மாதங்கள்

மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்—10-7-1972 முதல் 22-7-1972 வரை.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ P. W. Remittances III. Other Remittancesஎன்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், சென்னை-25 அவர்தம் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி தனிச் சலானில், கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "XII. Sales tax- (B) Receipts under state sales-tax Act General Sales tax என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் சலானைக் கொடுத்த பிறகு மட்டுமே வழங்கப்படும்.

சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்கம் கட்டுமானப்பிரிவு வேலைகளுக்கு உரிய வகுப்பில் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ செட்யூல்டு வங்கியின் டெபாசிட் அட்கால் ரிசிப்ட்ஸ் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும். அரசு உறுதிப் பத்திரங்கள், மாநில மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் மார்க்கெட் மதிப்பில் அல்லது அசல் மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ அதில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கியினுடைய பேங் காரண்டியும் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் உரிய பிரிவுகளில் பெரிய கட்டடங்கள் கட்டும் வேலைகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்கவேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு, எந்த அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எக் காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

குறிப்பு: பார்வையில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை, இந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விலக்குகிறது.

தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை.

(த. 38).

தஞ்சாவூர் நகராட்சி

கீழ்க்கண்ட பொருட்களை வழங்குவதற்காக நகராட்சி ஆணையர், தஞ்சாவூர்அவர்களால் அவர்தம் அலுவலகத்தில் கீழ்க்கண்ட தேதிகளில் மாலை 4.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4.15 மணிக்குத் திறக்கப்படும்.

	கொடுக்கும் தேதி.	கட்டுத் தொகை. ரூ.
1. தேக்கு மரப் பலகைகள் 24" 18", 18" 12" மற்றும் 12" 9" அளவுகள் டி.டபிள்யூ ப்ளக்ஸ்.	31—7—1972	250
2. சிங்கிள் பேஸ் மின்சார மீட்டர்கள் 5 மற்றும் 40	2—8—1972	500
3. பி.வி.சி. அண்டர் கிரவுண்டு கேபில்ஸ், பைமெட்டாலிக்ஸ், கிளாம்ஸ், எச்.டி. பிளாக் காம்பவுண்டு,	5—8—1972	250

விளக்கமான ஒப்பந்த அறிவிப்பு, ஒப்பந்த வடிவம் நகராட்சி மின் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களிடம் மணி ஆர்டர் மூலம் ரூ. 2.00 செலுத்திப் (திருப்பித்தரப்பட மாட்டாது) பெறலாம். அஞ்சல் ஆணைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

எ. சேவுக பாண்டியன்,
ஆணையர், தஞ்சாவூர்.

(த-54)

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை
தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை—1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்குப பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை.
1 தேசிய நெடுஞ்சாலை 45 மைல் 62/1-ல் கட்டப்படவிருக்கும் மேம் பாலத்திற்கு அணுகுச் சாலைகள் அமைத்தல்.	ரூ. 9,175

ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனக்கள், வரைபடங்கள், முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், 2, கிண்டி, சென்னை- 25 அலுவலகத்தில் 2—8—1972 முதல் 8—8—1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 51·75 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், 2, கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், 2, கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த-99)

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை

1972–73-ஆம் ஆண்டிற்குத் தாழ்த்தப்பட்டோர் நலப் பள்ளிகள் மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் 10, 11ஆகிய வகுப்புகளுக்கு இலவசமாக சிறப்புப் பாடப்புத்தகங்கள் கீழ்க்கண்டவாறு வழங்க சென்னை நகரம், செங்கற்பட்டில் காஞ்சிபுரம், தென்னாற்காட்டில் கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மாவட்ட நல அலுவலர்களிடம் வழங்க மூடி முத்திரையிட்ட கொட்டேசன்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு வகைப் புத்தகத்திற்கும். தனித்தனியான கொட்டேசன்கள் தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு 25—7—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். கொட்டேசன்கள் மாவட்டத் தலைமை இடத்தில் கலெக்டரேட்டுன் இணைந்த மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகத்தில் வழங்க ஏடுத்துச் செல்லும் கட்டணம், எல்லா வரிகள் மற்றும் கட்டணமாயிருந்தால் அனைத்தும் சேர்ந்திருக்க வேண்டும். உறையில் பாடப்புத்தகங்களின் விவரமும் எதற்காகக் கொட்டேசன் கொடுக்கப்படுகிறது என்ற விவரமும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேசனையும் எக்காரணமும் கூறுமல் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் தலைமையிடங்களில் மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகங்களில் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுலர்கள் தொகையைச் செலுத்துவார்கள்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை பின்னர் தெரியப்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் புத்தகங்கள் வழங்குவதற்காக ஸ்டாம்பு ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித்தர வேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒரு விதி முறையாக ஒழுங்காகப் புத்தகங்கள் வழங்கும் பொருட்டு மொத்தமாக ஒப்பந்த மதிப்பில் 10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

வழங்கவேண்டிய புத்தகங்கள் (தமிழ்)

வகுப்பு 10 மற்றும் வகுப்பு 11

1. அல்ஜீப்ரா மற்றும் ஜியோமிட்ரி.
2. பௌதிகம்.
3. இரசாயனம்.
4. வரலாறு.
5. உயிரியல்.

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.

(த.35)

பொள்ளாச்சி நகராட்சி

ஒரு 5 குதிரை வேகமுள்ள டீசல் பம்பு, மற்றும் அதற்குண்டான இதர சாமான்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28—7—1972-ம் தேதி மாலை 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

கட்டுத் தொகை—ரூ. 180·

ஆணையர்.

(த-51)

வேலை வாய்ப்பு

காவல் துறை

1. இவ்வலுவலகத்தில் புலனாய்வுப் பிரிவு உதவியாளர்களாக நியமிக்கப்பட விருப்பமுள்ள, கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றுள்ள நபர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகிறது.

2. இரண்டு வெளிப்படை போட்டியிலும், ஒரு தாழ்த்தப்பட்டோர் /பழங்குடி மக்களும், ஒரு பின் தங்கிய வகுப்பினரும் தேவை.

(அ) இம்மாநிலத்தின் ஒரு பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளாயிருக்க வேண்டும்.

(ஆ) மேற்படி பதவிக்கு நியமனம் செய்யப்படுபவர்கள் 1—7—1972ல் 25 வயதுக்குட்பட்டவர்களாயிருக்க வேண்டும்.

(இ) தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து ஆகிய பரிட்சைகளில் குறைந்த பட்சம் கீழ்ப்படிவத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும்.

(ஈ) மேற்படி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள் அவர்கட்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடிவதற்குள், அவர்கள் ஏற்கெனவே தட்டெழுத்து மேல் படிவத்தில் தேர்ச்சி பெற்றிருக்காவிடின் அப்பரிட்சையில் தேர்ச்சி பெற வேண்டும்.

3. தகுதியுள்ள நபர்கட்கு ஆங்கிலம், பொது அறிவு, மற்றும் கட்டுரை ஆகியவைகளில் தேர்வு நடத்தப்படும்.

4. மனுக்கள் 20—7—1972க்குள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டா.

காவல்துறை ஆணையர்.

(த-33)

குடிசைப் பகுதி மாற்று வாரியம்

கடித எண் கு.ப.மா.வா. /2791/கோ. 3/வ. 3/72, நாள் 4—7—1972.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், புளியந்தோப்பு சாலையிலுள்ள பார்வதி கக்கன் காலனி குடியிருப்புப் பகுதியில் பல அடுக்குக் கட்டடங்கள் (கான்கிரீட் குத்துக் கழிகளுக்கு மேல்) கட்டுவதற்கான அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 19—7—1972 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு அப்பாற்படாமல் வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது வேலையின் பெயரையும், ஒப்பந்ததாரர்களின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

வரிசை எண்.	பிரிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் தோராய மதிப்பு. ரூ.	ஒப்பந்த வடிவமும் முன்பண வைப்புத் தொகையும்.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (திருப்பித் தரப்பட மாட்டாது).
1	III	40 குடியிருப்புகள் கொண்ட எ 4 எ 5, எ 6 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்).	5,70,000	எல்.எஸ். ரூ. 8,550	ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு பிரிவுக்கும்).
2	IV	30 குடியிருப்புகள் கொண்ட பி 3, பி 4 & பி 5, & 20 குடியிருப்புகள் கொண்ட சி 1 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்).	5,30,000	எல்.எஸ். ரூ. 7,950	ஷை
3	V	30 குடியிருப்புகள் கொண்ட பி 6, பி 7, பி 8 & 20 குடியிருப்புகள் கொண்ட சி 2 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்).	5,30,000	எல்.எஸ். ரூ. 7,950	ஷை
4	VI	40 குடியிருப்புகள் கொண்ட எ 7, எ 8 & 30 குடியிருப்புகள் கொண்ட பி 9 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்).	5,25,000	எல்.எஸ். ரூ. 7,925	ஷை

ஒப்பந்தப் பத்திரங்களையும், மற்றும் வரை படங்களையும் 10—7—1972 முதல் 18—7—1972 வரை காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை எல்லா அலுவலக நாட்களிலும், நிருவாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 3, தாண்டவராயச் சத்திரம், சென்னை-10 அவர்களிடமிருந்து ஒப்பந்தப் பத்திரங்களுக்குப் பணம் அத்துடன் விற்பனை கட்டிய சலானை வழங்கிய பிறகே பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்களுக்கு கானரா பேங்க், கெல்லீஸ் பிரிவில் பெர்சனல் டிபாசிட் அக்கவுண்ட் (பி.டி.எ.ஸ்.) நிர்வாகப் பொறியாளர் குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம்-3 என்ற தலைப்பிலும், விற்பனை வரியை XII. விற்பனை வரி, மாநில விற்பனை வரிச் சட்டம், பொது விற்பனை வரிச் சட்டம் என்ற தலைப்பிலும் கட்ட வேண்டும்.

எக்காரணமும் காட்டாமல், எல்லா ஒப்பந்தங்களையோ அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையோ நிராகரிக்க அல்லது ஏற்றுக்கொள்ள நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்,
குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 3,

(த. 89)

வேலை வாய்ப்பு
அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு பொது சபார்டினேட் சர்வீஸில் பால்பண்ணை வளர்ச்சித் துறையில் பால்பண்ணை உதவியாளர்கள் 10 நியமனம் செய்வதற்காக மாலை 5-00 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்—ரூ. 325—15—550.

வயது—1—7—1972 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

தகுதி—

(1) குறைந்த பட்சத் பொதுக் கல்வித் தகுதி, மற்றும்

(2) இந்திய அரசு, பால்பண்ணைக் கல்விக் கழகத்தால் வழங்கப்பட்ட பால்பண்ணை (Dairying) யில் டிப்ளமா.

பின் தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், ஆகியோர் விசயத்திலும் குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்று இருப்பவர்கள் விசயத்திலும் வயது வரம்பு கிடையாது. அதிக பட்ச வயது வரம்பு மற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைச் சாதியினர் விசயத்தில் 5 ஆண்டுகள் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணி புரிந்த முன்னல் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம் கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள், 1—7—1972 அன்று 40 வயதிற்கு குறைவானவர்கள் 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் விசயத்திலும் இலங்கை, பர்மா நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், பிற விவரங்களையும், " செயளாலர் " தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள தன் முகவரி எழுதிய (0·30 காசு நூல் அஞ்சல் வில்லை 0·5 காசு அகதிகள் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த-82)

CHETTINAD BRAND

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

செட்டிநாடு
சிமெண்ட்
எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :

செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்

பொறியியல் பணித்துறை, திருச்சிராப்பள்ளி வட்டம்,
தபால் பெட்டி எண். 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருச்சிராப்பள்ளி வட்டம், திருச்சிராப்பள்ளி, அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்	திருச்சிராப்பள்ளி வட்டம், கரூரில் அரசினர் கலைக் கல்லூரியில் தற்பொழுது உள்ள நிரந்தரக் கட்டடத்தில் மேற்குப் பிரிவின் அதாவது பின்புற பிளாக்கின் மேல் ஒரு தளம் கட்டுதல்.
2 ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்.	9—8—1972 மாலை 3·00 மணி.
3 பிணைப் பணத் தொகை	ரூ. 6,900 (ரூபாய் ஆறுயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்).
4 ஒப்பந்த முறை	மொத்தத் தொகை.
5 முடிக்க வேண்டிய காலம் ..	10 மாதங்கள் (பத்து மாதங்கள்).
6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ..	ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7 விற்பனை வரி	ரூ. 0·88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்).
8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.	20—7—1972.
9 விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.	9—8—1972 மாலை 3·30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் **XXXVII Public Works—State Revenue Miscellaneous** மற்றும் **XII Sales Tax b. receipts under the State Sales Tax Act General Sales Tax** என்ற தலைப்புகளின்கீழ் ஒரே சலானில் செலுத்தி மேற்படி சலானை ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கண்காணிப்புப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சிராப்பள்ளி வட்ட கண்காணிப்புப் பொறியாளர்.

(த. 95)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், நிர்வாக வட்டம், தூத்துக்குடி அவர்களால் அவர்தம் அலுவலகம் எண் 34, 10-வது தெரு, தூவேய்புரம், தூத்துக்குடி-3-ல் குறிப்பிடப்பட்ட படிவத்தில் உறையின் மீது வேலையின் பெயர் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 அன்று அவர்தம் அலுவலகக் கடிகார நேரத்தின்படி மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—தூத்துக்குடி தொழில் காம்ப்ளெக்ஸிற்கு நீர் வழங்கும் திட்டம், 20 எம்.ஜி.டி. நீர் வழங்கும் திட்டம்—தொடர்புடைய பி.எஸ்.எஸ். எண்ணிற்கு ஒத்த 48 அங்குலம் (1200 மில்லி மீட்டர் உள் விட்டமுள்ள சி.ஐ.எஸ்./எஸ். 'பி' பிரிவு குழாய்கள் எப்.ஓ.ஆர். சால்ட் குவாட்டர்ஸ் சென்னைக்கு வழங்குதலும் ஒப்படைத்தலும்.)

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை—ரூ. 10,700.
கட்டுத் தொகை—இத்தொகை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது தேசியமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பாங்கு காரண்டியாகவோ குடிநீர் வடிகால் வாரியம் பெறும் வகையில், நிருவாகப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், நிருவாகக் கோட்டம் எண். 1, தூத்துக்குடி—3 அவர்கள் கணக்கில் கட்டுத் தொகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி விற்கப்படும் காலம்— 15—6—1972 முதல் 7—8—1972வரை (மாலை 5·00 மணி வரை).
வேலை முடிக்க வேண்டிய காலம்—2 மாதங்கள்.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட) திருப்பித்தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்—நிருவாகப் பொறியாளர் அலுவலகம், குடிநீர் வடிகால் வாரியம், நிருவாகப் கோட்டம் எண். 1, 34,10-வது தெரு, தூவேய்புரம், தூத்துக்குடி-3-ல் விலையை நேரில் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திய பிறகு.

வி. வரதராசன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரிய
நிர்வாக வட்டம்,
தூத்துக்குடி.

(த. 55)

தமிழ்நாடு சிமெண்ட்

(டிட்கோவின் அலகு—தமிழ்நாடு அரசின் நிறுவனம்).
ஆலங்குளம் அஞ்சல். ராஜபாளையம் (வழி).

தமிழ்நாடு சிமெண்ட் ஆலையின் ரெயில்வே ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசு/மத்திய அரசு துறைகளில் பதிவு செய்துள்ள முதல்அல்லது இரண்டாவது வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 19—8—1972 மாலை 4 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

உத்தேச மதிப்பீட்டு செலவு—ரூ. 1·5 இலட்சம்.

ஒப்பந்த முறை—ஒப்பந்தத்தின் முழுத் தொகை.

முன்வைப்புத் தொகை—ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 2½ சதவீதம்.

வேலையை முடிக்க வேண்டிய கால வரையரை—5 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களை 16—7—1972 முதல் 18—8—1972 வரை எல்லா அலுவலக நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட், ஆலங்குளம் அஞ்சல், ராஜபாளையம் (வழி) என்ற முகவரியில் ரூ. 20·70 கட்டிப் (இப்பணம் திருப்பித்தரப்பட மாட்டாது)பெற்றுக்கொள்ளலாம்.

பொது மேலாளர்,
தமிழ்நாடு சிமெண்ட்.

(த-100)

வேளாண்மைத் துறை

தமிழ்நாடு அரசு சார்பாக, கீழ்க்கண்ட விணை மற்றும் கேனிபலேஸ்ட் டிராக்டர்கள் மற்றும் புல்டோசர்கள் இந்த அலுவலகத்தில் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் எடுத்துச் செல்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

புல்டோசர்கள்.

D6 5 R—2927
D6 Su—4029
D6 Su—3993
T6 TBK—17914
TD 14A—30803
C 100—121159
TD 14A TDF—26946

டிராக்டர்கள்.

John Deere A.R—271371
David Brown P.D—13190
Massey Harris—30 Ks 1574
Fordson Major A.D—2455

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை செட் ஒன்றுக்கு ரூ. 3 விற்பனை வரி செலுத்தி இந்த அலுவலகத்தில் பெறலாம். (தொகை திருப்பித் தரப்பட மாட்டாது). ஒப்பந்தப் பத்திரம் விற்கக் கடைசி நாள் 20—7—1972. ஒப்பந்தப் பத்திரம் ஏற்கக் கடைசி நாள் 29—7—1972. விரும்பும் ஒப்பந்ததாரர்கள் தொடர்பு கொள்ளவும்.

உதவி வேளாண்மைப் பொறியாளர்,
(இன்ஸ்பெக்சன்),
நந்தனம், சென்னை-35.

(த.46)

சேலம், தர்மபுரி மாவட்டங்களில் தமிழ்நாடு கல்வி சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் அலுவலர் இடங்களுக்கு நியமனங்கள்.

சேலம், தருமபுரி மாவட்ட 'ஏ' பிரிவு அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில், சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் நியமன வரம்பிற்குட்பட்ட கீழ்க்கண்ட அலுவல் இடங்களுக்கு ஆசிரியர்களை நேரிடையாகத் தேர்வு செய்து நியமனம் செய்ய வேண்டித் தகுதியுள்ள வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எதிர்பார்க்கும் காலியிடங்களின் எண்ணிக்கை.

	அட்டவணையில் கண்ட இனங்கள், அட்டவணையில் கண்ட பழங்குடியினர்களுக்கு ஒதுக்கப் பட்டவை.	பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்டவை.	மற்றவர்களுக்கு ஒதுக்கப் பட்டவை.	மொத்தம்.
1. (அ) இடைநிலை ஆசிரியர்கள் (தமிழில் போதனை செய்யக்கூடியவர்கள் 11 பேர், தெலுங்கு மொழியில் போதனை செய்யக்கூடியவர் 1	2	4	7	13
(ஆ) விழியிழந்தோருக்கு தமிழில் போதிப்பதில் பயிற்சி பெற்றவர் 1				
2. முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் 4	1	1	2	4
3. (அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் 3	1	2	3	6
(ஆ) ஆதாரப் பள்ளி அல்லாத அரசினர் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் 2				
(இ) அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் 1				
4. இரண்டாம் நிலை நெசவு ஆசிரியர்கள் 1	..	..	1	1
5. இரண்டாம் நிலை விவசாய ஆசிரியர்கள் 2 .. .. —	1	..	1	2
6. இரண்டாம் நிலை தெலுங்கு மொழிப் புலவர் 1	..	..	1	1

மேற்கண்ட அலுவல் இடங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தகுதிகளும், ஊதிய அளவு வீதமும்.

1 (அ) இடைநிலை ஆசிரியர்—(தமிழ் மற்றும் தெலுங்கு—ஆடவர், மகளிர் இருபாலருக்கும் உரியது).

தகுதிகள்.—இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது முதுநிலை ஆசிரியர் ஆதாரப் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். 1970-ம் ஆண்டிலோ அதற்கு முன்னரோ இடைநிலை ஆசிரியர் பயிற்சி அல்லது முதுநிலை ஆசிரியர் ஆதாரப் பயிற்சித் தேர்வு எழுதித் தேறியவர் மட்டுமே இந்த நியமனங்களுக்கு கவனிக்கப்படுவர்., வேட்பாளர்கள், உரிய அலுவல் இடங்களுக்குத் தமிழ் அல்லது தெலுங்கில் போதுமான பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

(ஆ) விழியிழந்தோருக்குத் தமிழில் போதிப்பதில் பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர் (ஆடவர், மகளிர் இருபாலருக்கும் உரியது).

தகுதிகள்.—இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். இத்துடன் விழியிழந்தோருக்குப் போதிப்பதில் தகுதிச் சான்றிதழ் அல்லது ஜூனியர் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். இந்த அலுவல் இடங்களுக்கும் 1970-ம் ஆண்டிலோ அதற்கு முன்னரோ இடைநிலை ஆசிரியர் பயிற்சி அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சித் தேர்வு எழுதித் தேறியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் சிறப்பு ஊதியம் ரூ. 10-ம் வழக்கமான படிகளும்.

2. முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது),

தகுதிகள்.—1938-ம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் மாநில அரசினரால் வழங்கப்பட்ட உயர்நிலை உடற் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பெற்றவராகவோ, அல்லது முன்னாள் ராணுவத்தினருக்கு மாநில அரசினரால் தனியாக வழங்கப்பட்ட உயர்நிலை உடற் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 225—5—250—10—350 மற்றும் வழக்கமான படிகள்.

3. (அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—ஓவியத்தில் உயர்நிலை தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

ஊதிய அளவு—.ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

(ஆ) ஆதாரப் பள்ளி அல்லாத அரசினர் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—மாநில அரசின் தொழில் நுணுக்கத் தேர்வுத் திட்டத்தின்படி ஓவியத்தில் தொகுதிச் சான்றிதழும், ஓவியத்தில் உயர்நிலை தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழும் பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

(இ) அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—பள்ளிக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்டதொரு உயர்நிலைப் பள்ளியில் மூன்றும் படிவம் தேறியவராகவோ, அல்லது அரசுத் தேர்வுகளின் ஆணையரால் நடத்தப்பெறும் எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேறியவராகவோ இருக்க வேண்டும். மேலும் (1) ஓவியம், பூச்சு மற்றும் வடிவமைப்பில் உயர்நிலைத் தொகுதிச் சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும் ; அல்லது (2) வடிவமைப்பிலும் அச்சடித்தலிலும் கலை ஆசிரியர் சான்று பெற்றவராக இருத்தல் வேண்டும்; அல்லது (3) ஓவியம், பூச்சு ஆகியவைகளில் சென்னை அரசு, கலை மற்றும் கைத்தொழில் பள்ளி டிப்ளமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது பள்ளிக் கல்வி இயக்குநரால் சமமானதென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு எந்தச் சான்றிதழாவது பெற்றவராயிருத்தல் வேண்டும். பொது மற்றும் தொழில் கல்வியில் நிர்ணயம் செய்யப்பட்ட தகுதிகளைக் காட்டிலும் அதிகத் தகுதி பெற்றுள்ளவர்களுக்கும் அல்லது கல்வித் துறையினால் அளிக்கப்பட்ட தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றுள்ளவர்களுக்கும் அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

4. இரண்டாம் நிலை நெசவு ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் நிர்ணயம் செய்த மதிப்பெண்களுடன் (தமிழ் 35, ஆங்கிலம் 30, கணக்கு 25, பொது விஞ்ஞானம் 25, சமூக அறிவு 25) சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் நடத்தப்படும் நெசவுப்பாட முறையினை முடித்துத் தேர்ச்சி பெற்றதற்கான கைத்தொழில் ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது சென்னை, அரசு நூற்பாலையின் நெசவு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது நெசவில் கீழ்நிலை தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். (அல்லது) சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிலோ, பள்ளிக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட இதர மையங்களிலோ, தொழில் நுணுக்க ஆசிரியர் பயிற்சி முறையினைத் தேர்ச்சி பெற்று முடித்தமைக்கான சான்றிதழ் பெற்றவராயிருக்க வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

5. இரண்டாம் நிலை விவசாய ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—பொதுக் கல்வித் தகுதியாக விவசாயப் பாடமுறையுடன் கூடிய பள்ளியிறுதித் தேர்வில் குறைந்த பட்சம் கீழ்க்கண்ட மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

(1) முதல் பகுதி மொழிப் பாடம்	40 (200-க்கு 80 மதிப் பெண்கள்).
(2) இரண்டாம் பகுதி, ஆங்கிலம்	40.
(3) பொதுக் கணக்கு	ஏதாவது ஒன்றில் 35 மதிப்பெண்களும் மற்றவைகளில் 30 மதிப்பெண்களும் பெற்றிருத்தல் வேண்டும்.
(4) பொது விஞ்ஞானம்	
(5) விவசாயம் (கருத்தியல்)	
(6) விவசாயம் (நடைமுறை)	

மேற்கண்ட தகுதியுடன் விவசாயத்தில் தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

6. இரண்டாம் நிலை தெலுங்கு மொழிப் புலவர் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—சென்னை, மதுரை அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தெலுங்கு மொழியில் கீழ்த்திசை பயிற்றுப் பட்டம் பெற்றவராகவும் இடைநிலை அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவராகவோ அல்லது பண்டிதப் பயிற்சி முறையினை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழ் பெற்றவராகவோ, அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கும் கற்பித்தலுக்கான டிப்ளமா பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

வயது.—(அ) மேற்குறித்த அலுவல் இடங்களுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் 1—7—1972-ஆம் நாளன்று 30 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

(ஆ) 1—7—1972-ல் 40 வயது முடிவடையாத முன்னாள் ராணுவத்தினரும் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

(இ) அட்டவணையில் கண்ட இனங்கள், அட்டவணையில் கண்ட பழங்குடியினர் விஷயத்தில் 1—7—1972-ல் வயது வரம்பு 35 வயது வரை சலுகை காட்டப்படும்.

விண்ணப்பங்கள் இந்த அறிவிப்பின் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் இருக்க வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்கள் எண் 114, செரி ரோடு, சேலம் 7-ல் உள்ள முதன்மைக் கல்வி அலுவலருக்கு 31—7—1972 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ சேரும்படியாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொது, தொழில் மற்றும் தொழில் நுணுக்கச் சான்றிதழ்களின் நகல்களையும் அனுப்ப வேண்டும். அசல் சான்றிதழ்களை அனுப்பவேண்டியதில்லை. அசல் சான்றிதழ்கள், நேர்காணலின்போது காண்பிக்கப்பட வேண்டும்.

பொறுப்பு வாய்ந்த இரண்டு நபர்களிடமிருந்து 1—1—1972-க்குப் பின்னர் பெற்ற நன்னடத்தைச் சான்றிதழ்களை அசலாக விண்ணப்பத்துடன் இணைத்தனுப்ப வேண்டும்.

அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிக நியமனத்தின் கீழ் ஏற்கெனவே நியமனம் ஆகி, பணியில் இருப்பவர்களும், இந்த அறிவிப்பில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இருப்பின் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

அரசு உள்ளாட்சி மன்றம், மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றுவோர், தங்களின் விண்ணப்பங்களை, அவர்களுக்கு வேலை கொடுக்கும் அலுவலர் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும். அவர்கள் விண்ணப்பங்களின் முன் நகலை நேரடியாக இந்த அலுவலகத்திற்குப்பணிந்தனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளரும், அரசாங்கக் கருவூலத்தில் ரூ. 10-ஐ (பத்து ரூபாய்) "22. கல்வி—இ. பொது—பலவகை—மற்ற இனங்கள்—குறியீட்டு எண் 4132. 22 எப். இ. 03 22 எ ஜே எபி 03 6" தலைப்பில் செலுத்தி, அசல் செல்லுச் சீட்டினை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். 24—5—1972-க்கு முன்னதாக கருவூலத்தில் மேற்சொன்ன தொகை கட்டப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள இயலாது.

கீழ்க்கண்ட வகையைச் சேர்ந்த வேட்பாளர்கள் ரூ. 10-ஐச் செலுத்த வேண்டியதில்லை. (1) பல்கலைக் கழக இன்டர்மீடியட் தேர்வில் தேறிய அல்லது இத் தகுதிக்குச் சமமான ஏனைய பல்கலைக் கழகங்களின் தகுதியைப் பெற்ற அட்டவணையில் கண்ட இனங்கள், அட்டவணையில் கண்ட பழங்குடியினர், அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், இந்த வேட்பாளர்கள் வருவாய்த் துறையைச் சேர்ந்த துணைத் தாசில்தார் நிலைக்குக் கீழ்ப்படாமல் உள்ள தாசில்தாரிடமிருந்து, குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதற்கான சான்றிதழ் பெற்று அசல் சான்றிதழை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும்.

(2) முன்னாள் ராணுவத்தினர், ராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டமைக்கான சான்றின் நகல் அனுப்ப வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் செலுத்தப்பட்ட தொகையைத் திரும்ப அளிக்க இயலாது.

வேட்பாளர்களுடன் நேர் காணல் நடத்திய முடிவுகளின் அடிப்படையில் சேலம் முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனங்களுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். நேர்க்காணலுக்கு அழைக்கப்படும்போது வேட்பாளர்கள் தங்கள் சொந்தச் செலவில் வரத் தயாராக இருக்க வேண்டும்.

தேர்வும், அதற்குப் பின்னர் நியமனமும் அரசுப் பணிக்கு உட்படுத்திக்கொள்ள இறுதியானது என உரிமை கொள்ள முடியாது.

அலுவலக உறுப்பினர்கள் மூலமாக, நேரடியாகவோ அல்லது நண்பர்கள், உறவினர்கள் ஆதாவாளர்கள், அலுவலர்கள் போன்றவர்கள் மூலமாகவோ, ஆதரவு தேடும் அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடம் செல்வாக்குக் கொண்டுவர முயற்சி செய்யும் வேட்பாளர்கள் எந்தக் காரணத்தையும் குறிப்பிடாமலே எப்படியிருந்தாலும் தேர்வு செய்வதிலிருந்து முழுவதுமாக தகுதியற்றவர்களாக ஆக்கப்படுவார்கள்.

தகவல்கள் முழுவதுமாக இல்லாத விண்ணப்பங்களும், சான்றொப்பமிட்ட பொது தொழில் தகுதிச் சான்றிதழ்களின் நகல்கள் இல்லாமல் அனுப்பி வைக்கும் விண்ணப்பங்களும், நிர்ணயம் செய்த தேதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களும், கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

போதிய தகுதிகள் இல்லாதவர்களும், அறிவிப்பில் கண்ட நிபந்தனைகளுக்குட்படாத வேட்பாளர்களும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

இடைநிலை ஆசிரியர் அலுவலர் இடங்களுக்கு மட்டும் பெண் வேட்பாளர்களும் விண்ணப்பிக்கலாம்.

"தமிழரசு" இதழில் அறிவிப்பு வெளியான பின்னர்தான் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

உரிய இணைப்புகளுடன் கூடிய விண்ணப்பத்தை அனுப்பும்போது உறையின் மீது ".. ஆசிரியர் அலுவலர் பணிக்கு விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

183

தமிழ்நாடு கல்விச் சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் அலுவல்களுக்கு நேரடி நியமனம் கோரும் விண்ணப்ப நமூனு.

1 விண்ணப்பிக்கும் அலுவல் இடத்தின் பெயர் ..

2 (அ) விண்ணப்பதாரரின் பெயர் .. ..

(ஆ) ஆணு, பெண்ணு (திரு, செல்வி, திருமதி என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்).

(இ) சொந்த மாவட்டம் .. .. ..

3 (அ) தகப்பனர்/கணவர் பெயர் .. ..

(ஆ) தகப்பனர்/கணவர் செய்யும் அலுவல் அல்லது தொழில்.

(இ) தகப்பனர்/கணவர் முழு முகவரி ..

4 (அ) பிறந்த தேதி .. ..

(ஆ) 1—7—1972-ஆம் தேதியன்று வயது ..

5 தாய் மொழி .. ..

6 (அ) தேசிய இனம் .. ..

(ஆ) மதம், ஜாதி மற்றும் இனம் .. ..

(இ) விண்ணப்பதாரர் அட்டவணையில் கண்ட இனங்கள்/அட்டவணையில் கண்ட பழங்குடியினர்/பிற்பட்ட வகுப்பினர் அல்லது கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய இனத்தைச் சார்ந்தவரா? (ஆம் எனில் குறிப்பிடுக) வருவாய்த் துறையினரிடமிருந்து பெற்ற சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் பயின்ற கல்வி நிலையங்கள்:—

கல்வி நிலையத்தின் பெயர்.	வகுப்பு அல்லது படிவம்.	படித்த வருடம்.
(1)	(2)	(3)

8 (அ) மிக அதிகமாகப் பெற்ற பொதுக் கல்வித் தகுதி.

(சான்றிதழ் எண். வருடம், எஸ்.எஸ்.எல்.சி.யில் ஒவ்வொரு பகுதியிலும் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களை இணைக்க வேண்டும்.

(ஆ) தொழில் மற்றும் தொழில் நுணுக்கத் தகுதிகள் (சான்றிதழ் எண், வருடம், தேறிய வகுப்பு, அல்லது தரம் ஆகியவைகளைக் குறிப்பிட வேண்டும் .சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களை இணைக்க வேண்டும்.)

9 எஸ்.எஸ்.எல்.சி. அல்லது இதர பள்ளிப் பாடமுறையில் படித்த மொழி.

10 தெரிந்த இதர மொழிகள் (பேசவும், எழுதவும் படிக்கவும் தெரியுமா என்பதைக் குறிப்பிடுக)

11 முன் அனுபவம் இருப்பின் அது பற்றிய விவரம்—

பள்ளியின் பெயர்.	வகித்த பதவி.	ஊதியம்	ஊழிய காலம்.		நீங்கிய தற்கான காரணம்
			தேதி முதல்	தேதி வரை.	

12 விளையாட்டு, என்.சி.சி., ஏ.சி.சி. முதலியவைகளில் வேட்பாளர்களின் பங்கு, பணிகள் பற்றிய விவரம்.

13 சரியான முழு அஞ்சல் முகவரி .. ..

(அ) நிரந்தர முகவரி .. .. ..

(ஆ) தற்போதைய முகவரி .. ..

14 ரூ. 10 செலுத்திய கருவூலத்தின் பெயரும் செல்லுச் சீட்டின் எண்ணும், தேதியும்.

15 நன்னடத்தைச் சான்றிதழ் அளித்துள்ள நபர்களின் பெயர்கள் :

சான்றிதழ் அளித்த நபரின் பெயர்.	முழு விலாசம்.	சான்றிதழின் தேதி.
(1)	(2)	(3)

உறுதி மொழி.

திரு/திருமதி/செல்வி........................ஆகிய நான், இதற்கு முன்னர் எப்போதாவது, அரசு ஊழியத்திற்குத் தகுதியில்லை என மருத்துவ அதிகாரிக் குழுவினால் ஆக்கப்படவில்லை எனவும், இந்த விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்தவரை உண்மையானவை என்றும் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(பி.கு.—அசல் செல்லுச் சீட்டினையும், சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களையும் அசல் நடத்தைச் சான்றிதழ்களையும் இணைக்கவேண்டும்).

எம். சாம்பசிவம்,
முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்-7.

(த. 88)

"நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை"

"தேசிய நெடுஞ்சாலை வேலைகள்" (மதுரை வட்டம்).

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2, நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 முகவரியிலுள்ள அலுவலகத்தில் 28—7—1972 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3-30 (அலுவலகக் கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35-க்குத் திறக்கப்படும்.

எண்.	வேலையின் பெயர்.	முன்வைப்புத் தொகை.	இனவாரி ஒப்பந்தப் பாரங்கள் கிடைக்குமிடம்.
(1)	(2)	(3)	(4)
		ரூ.	
(1)	தொண்டி திருப்பாலக்குடி சாலையில் கி.மீ. 18—4 (மைல் 11—4)-ல் பாலம் ஒன்று கட்டுதல்.	3,100	கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, கோட்டம்-1, திருச்சிராப்பள்ளி.
(2)	தொண்டி திருப்பாலக்குடி சாலையில் கி.மீ. 23—4-ல் (மைல் 14—5)-ல் பாலம் ஒன்று கட்டுதல்.	9,500	டை
(3)	தொண்டி திருப்பாலக்குடி சாலையில் கி.மீ. 20—1 (மைல் 13—1)-ல் பாலம் ஒன்று கட்டுதல்.	4,700	டை
(4)	தேசிய நெடுஞ்சாலை 49-ல் கீழ்க்கண்ட கி.மீ. களில் உள்ள வளைவுகளை சீரமைத்து மேம்படுத்துதல். கி.மீ. 21—0 முதல் 21—4 வரை; கி.மீ. 22—0 முதல் 22—6 வரை; கி.மீ. 42—6 முதல் 43—4 வரை.	4,300	டை
(5)	தொண்டி-சுந்தரபாண்டியபட்டினம் சாலையில் கி.மீ. 11—0-ல் (மைல் 6—7) பாலம் ஒன்று கட்டுதல்.	9,300	டை
(6)	தேசிய நெடுஞ்சாலை 47-ல் கி.மீ. 140 முதல் 144 வரை உள்ள (சேலம் கொசிடிச் சாலை) சாலையைப் பலப்படுத்தி மேம்படுத்துதல்.	11,200	கோட்டப் பொறியாளர், தே.நெ., கோயம்புத்தூர்.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர், அலுவலகம் (தே.நெ.), கோட்டம்-1, விலாசத்திலிருந்தும், கோட்டப் பொறியாளர், (தே.நெ.), கோயம்புத்தூர் அலுவலக விலாசத்திலிருந்தும் 26—7—1972 முதல் 27—7—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவர நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம்.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை), அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசியத் தற்காப்புப் அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

(த. 90)

ப. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (தே.நெ.), மதுரை-2.

வேளாண்மைத் தொழிற் கழகம்

கீழே கொடுக்கப்பட்ட பொருட்களை வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், நிருவாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம், "அக்ரோ இல்லம்", கிண்டி, சென்னை-32 அவர்களால் 1-8-1972 மாலை 3 மணிக்குள் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன :—

1. பென்ஸீன் ஹெக்ஸா குளோரைடு (Benzene Hexachloride) 10 சதவீதம் தூள் தயாரிக்கத் தேவையான பென்ஸீன் ஹெக்ஸாகுளோரைடு (டெக்னிக்கல்) தயாரிப்பாளர்கள், ஏஜண்டுகள், விநியோகஸ்தர்கள் ஆகியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவேண்டும்.)	1,400 மெட்ரிக் டன்கள். (1,375 டன்கள்).
2. பென்ஸீன் ஹெக்ஸா குளோரைடு (Benzene Hexachloride) 10 சதவீதம் டைகுளோரோ—டைபினைல்-ட்ரைகுளோரோ-ஈதேன் (Dichloro-Diphenyl Trichloro-Ethane) 5 சதவீதம் தூள்களைத் தயாரிப்பதற்கு (Filler) ஆகப் பயன்படுத்தக் கூடிய சுத்தமான மாக்கல்லைப் (Pure Steatite)	15,000 மெட்ரிக் டன்கள். (14,732·14 டன்கள்).
3. உற்பத்தி செய்யப்பட்ட பென்ஸீன் ஹெக்ஸா குளோரைடு (Benzene Hexachloride) 10 சதவீத டைகுளோரோ—டைபினைல்—ட்ரைகுளோரோ ஈதேன் (Dichloro-Diphenyl Trichloro-Ethane) 5 சதவீத தூள்கள் நிரப்புவதற்கு 50 கி.கி. கொள்ளக் கூடிய 91·44, 44½ செ. மீ. × 57·15 செ.மீ. (36" × 22½") அளவும், 312 கிராம் (11 அவுன்ஸ்) எடையும், 310 கிராம் (10·88 அவுன்ச) தார் (Bitumen) பூசப்பட்டதும், 60 கிராம் (2·11 அவுன்ஸ்) கிராப்டு (Kraft) பேப்பர், 150 காஜ் (gauge) தகுந்த தரம் வாய்ந்த பாலிஎத்திலீன் (Polyethylene) ஒட்டப்பட்ட (Single Hessian) பைகள் (Indian Standards Institution) -ஆல் நிர்ணயிக்கப்பட்ட தரங்களுக்குச் சமமாக இருத்தல் வேண்டும்).	3,32,000 பைகள்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கூறிய பொருள்களில் ஏதேனும் ஒன்றிற்கோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோ, அல்லது எல்லாவற்றிற்குமாகவோ அனுப்பலாம்.

ஒப்பந்தப் படிவங்களை நிருவாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம், "அக்ரோ இல்லம்", கிண்டி, சென்னை-32 (தமிழ்நாடு, அவர்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.)

(த.91).

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

அறிவிப்பு

அறிஞர் அண்ணா நகர் மேற்கு விஸ்தரிப்பு,

வியாசர்பாடி மற்றும் திருவான்மியூர் போன்ற சென்னை நகரச் சுற்றுப்புற இடங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீடு மனைகளைப் பொதுமக்களுக்கு மொத்த விலைக்கும் மற்றும் வாடகைக் கொள்முதல் (Hire Purchase) முறையிலும் ஒதுக்குவது.

கிடைக்கும் வீட்டு மனைகளின் எண்ணிக்கை.	சுமார் 1,400 மனைகள் (மொத்தமாக)
வீட்டு மனைகளின் பரப்பளவு.	1 கிரவுண்டுக்கும் 2 கிரவுண்டுக்கும் இடைப்பட்டது.
விண்ணப்பதாரர்களின் தகுதி.	ரூ. 3,000-க்கு மேற்பட்ட மதிப்புள்ள ஓர் வீட்டு மனையை அல்லது வீட்டை உடையவராக இருக்கக் கூடாது.
விண்ணப்பப் படிவம் கிடைக்க இறுதித் தேதி.	31-8-1972.
விண்ணப்பப் படிவம் விற்பனை.	17-7-1972 முதல், காலை 10 மணிக்கும் மாலை 2 மணிக்கும் இடையே ரூ. 5 (அஞ்சல் மூலமாகில் ரூ. 3 அதிகப்படி செலுத்த வேண்டும்.) செலுத்தி வரவேற்புக் காரியாலயம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 56, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-35 என்ற முகவரியிலிருந்து பெறலாம்.

டி. வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்.
தலைவர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
சென்னை-35.



தாழ்த்தப்பட்டோர் நலத்துறை

1972–73-ம் ஆண்டிற்கு, தாழ்த்தப்பட்டோர் நலப் பள்ளிகள், மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும், 1 முதல் 3 வகுப்பு வரையும், ஐந்தாம் வகுப்பிற்கும் இலவசமாக மலையாள பாடப் புத்தகங்கள் கீழ்க்கண்டவாறு வழங்க, "நாகர்கோவிலிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட நல அலுவலர்களிடம், 1 முதல் 5-ம் வகுப்பு வரை இலவசமாகப்பாடப்புத்தகங்கள் கீழ்க்கண்டவாறு வழங்க சென்னைப் நகர மாவட்ட நல அலுவலரிடம் மூடிமுத்திரையிடப்பட்ட கொட்டேசன்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு வகைப் புத்தகத்திற்கும், தனித் தனியான கொட்டேசன்கள், தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு 25–7–1972 அன்று அல்லது அதற்கு முன்பு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். கொட்டேசன்கள் மாவட்டத் தலைமையிடத்தில் கலெக்டரேட்டுடன் இணைந்த மாவட்ட நல அலுவலரின் அலுவலகத்தில் வழங்க எடுத்துச் செல்லும் கட்டணம், எல்லா வரிகள் மற்றும் கட்டணமாயிருந்தால் அனைத்தும் சேர்த்திருக்க வேண்டும். உறையில் பாடப்புத்தகங்களின் விவரமும், எதற்காகக் கொட்டேசன் கொடுக்கப்படுகிறது என்ற விவரமும், குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேசனையும் எக்காரணமும் கூறாமல் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் தலைமையிடங்களில் மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகங்களில் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுவலர்கள் தொகையைச் செலுத்துவார்கள்.

வழங்கப்பட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கையுள்ள புத்தகங்கள் வழங்குவதற்காக ஸ்டாம்ப் ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தர வேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒரு விதி முறையாக ஒழுங்காகப் புத்தகங்கள் வழங்கும் பொருட்டு மொத்தமாக ஒப்பந்த மதிப்பில் 10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

தெலுங்குப் பாடப் புத்தகங்கள்.		மலையாளப் பாடப்புத்தகங்கள்.	
1-வது வகுப்பு ..	55 செட்ஸ்.	1-வது வகுப்பு ..	20 செட்ஸ்.
2-வது வகுப்பு ..	46 செட்ஸ்.	2-வது வகுப்பு ..	15 செட்ஸ்.
3-வது வகுப்பு ..	60 செட்ஸ்.	3-வது வகுப்பு ..	5 செட்ஸ்.
4-வது வகுப்பு ..	37 செட்ஸ்.	..	..
5-வது வகுப்பு ..	12 செட்ஸ்.	5-வது வகுப்பு ..	1 செட்.

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.

(த. 101).

மின்சார வாரியம்

ஸ்பெஸிபிகேஷன் (எண் SEG.BB 56 எஸ்இஜி. பிபி. 56.)

மின்சார வாரியத்தின் சார்பில் மின்சார வாரியத்தின் உத்தரவு வழிகாட்டுதலுக்கு இணங்கச் செயல்படும் பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸில் NDCT No 3-ல் உள்ள நீரைக் குளிர்படுத்தும் சிஸ்டத்திற்கு ரெஜிட் P'C பைப்புகள் மற்றும் நோஸில்கள் Nozzles வழங்கி நிர்மாணம் செய்வதற்காக முழு விவரங்கள் மற்றும் விளக்கங்கள் அடங்கிய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கவரின் மேல் ஸ்பெஸிபிகேஷன் எண், ஒப்பந்தத் தேதி மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவைகள் குறிக்கப்பட்டு 31—7—1972 மாலை 1-00 மணிக்குள் சமர்ப்பிக்கப்படுமாறு வரவேற்கிறேன்.

ஒப்பந்தப் பத்திரங்கள் வேண்டுவோர் அதற்கான ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவர் அலுவலகத்தில் தொகையாக நேரிடையாகச் செலுத்தியோ அல்லது துணைத் தலைமை கணக்காளர் (ஜெனரேஷன்) தமிழ்நாடு மின்சார வாரியம், பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸ், சென்னை-12 அவர்களுக்கு ஸ்பெஸிபிகேஷன் எண்ணைத் தெரிவித்து மணியார்டர் செய்தோ பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்கள் சாதாரண தபாலில் சர்டிபிகெட் ஆப் போஸ்டிங்கில் தான் அனுப்பப்படவேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் வழியில் தவறிப் போவதற்கோ அல்லது பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதற்கோ அல்லது விநியோகிக்காமல் இருப்பதற்கோ மின்சார வாரியம் பொறுப்பல்ல.

ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தகுந்ததல்ல. எந்தவிதக் காரணமும் காட்டாமல் ஏதாவதொன்று அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

காப்புத் தொகையாக ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)த்தைக் கீழே கையொப்பமிட்டுள்ளவர் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் நேரிடையாகப் பணமாகக் கட்டவேண்டும். அதற்கான பண ரசீதைப் (Cash Receipt) பெற்று ஒப்பந்தத்தோடு இணைத்து அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட நேரம், குறிப்பிட்ட ஒப்பந்த நாளில் சரியான முறையினரின் படிவத்தில் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் பண ரசீது இணைத்து அனுப்பப்படாத ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும். ஒப்பந்தங்களும் 31—7—1972 அன்று மாலை 4-00 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பேசின்பிரிட்ஜ் பவர் ஹவுஸ், சென்னை-12.

(த-80)

31307-71-டி7-30—6—1972

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சேலம்—தர்மபுரி வட்டம், சென்னை-4.

வேலையின் பெயர்—

1. கிருஷ்ணகிரியில் கம்பைன்டு கோர்ட்டு கட்டடத்தின் முன் பகுதி (Front Wing) கட்டுதல்.
2. கிருஷ்ணகிரியில் கம்பைன்ஸ் கோர்ட்டு கட்டடத்தில் பின்பகுதி (Rear Wing) கட்டுதல்.

மேற்கண்ட வேலைகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் வழங்குவதற்கு கடைசி நாள் 9—8—1972 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் 7—8—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும். மற்ற நிபந்தனைகள் மாற்றப்படவில்லை.

ஆர். இராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த-73.)

சேலம் நகராட்சி

1972–73 ஆம் ஆண்டிற்குச் சேலம் நகராட்சிக்குத் தேவையான நீர் வழங்கு வேலைகளுக்காக நீர்வழங்குவேலைப் பொருட்கள் (சி.ஐ. பைப்புகள் மற்றும் பி.வி.சி., பைப்புகள் மற்றும் ஸ்பெசல் ஸ்லூயிஸ் வால்வுகள் „ ரன்சஸ் மற்றும் கருவிகள் மற்றவைகள் அரைவை மெசின் வழங்க நகராட்சிப் பொறியாளர், சேலம் நகராட்சி) சேலம் அவர்களால் 26—7—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

நிர்ணயத் தொகை—ரூ. 94,000.

மற்ற விவரங்களுக்கு நகராட்சிப் பொறியாளர், சேலம் நகராட்சி அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

பி. ஹமீத்அலி,
ஆணையர்.

(த-87)

விளம்பரம்

கிண்டி, தொழிற் பேட்டையில், தற்காலிகமாக ஒரு (Sanitary In pector சேனிட்டரி இன்ஸ்பெக்டர், சம்பள விகிதம் ரூ. 210—5—245—10—325 மற்றும் சட்டப்படி அலவன்ஸ்களுடனும் நியமனம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து சான்றிதழ் பிரதிகளுடன் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்கும் மனுதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

தமிழ்நாடு அரசால் மக்கள் நல்வாழ்வு இயக்குநர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவால் வழங்கப்பட்ட சேனிட்டரி இன்ஸ்பெக்டர் படிப்பின் சர்டிபிகேட் வேண்டும்.

வயது—1—7—1972 அன்று 30 வயது பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது.

மனுதாரர்கள் தங்கள் பெயர், தக்கியுள்ள முகவரி தொழில் நுட்பம் மற்றும் பொதுக் கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் பிறந்த தேதி மற்றவைகளை விளக்கமாக மனுவில் குறிப்பிட்டு, அந்த மனுக்கள் தொழில் வணிக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு 31—7—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பப்பட வேண்டும். பதவிக்குத் தகுதியான மனுதாரர்கள் பின்னர் குறிப்பிடப்படும் தேதியில் நேர்முகப் பேட்டிக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பேட்டிக்கு வரும் மனுதாரர்களுக்கு பயணப்படி கொடுக்கப்படமாட்டாது.

தொழில் வணிக இயக்குநர்.
சேப்பாக்கம், சென்னை-5.

(த-22).

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இதோ இன்னொரு சாதனை!
தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!
நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதியபாதை!"
இரண்டுக்குப் மேல் எப்போதும் வேண்டாம்!!
தமிழ் நாட்டில் உருவாகிறது!
தென்னூர்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை என்ற சிற்றூர் குடும்ப நலத்திட்டப் பணியில் எடுத்துக் காட்டாக விளங்கும் சிற்றூர்!
குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!
பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்
தென்னூர்க்காடு மாவட்டம்
பூத்துறை
தமிழரசு
குடும்பநலத்துறை

பாரதத்திலிருந்து பங்களாதேஷுக்கு!

சங்கர் சிமெண்ட்

போரினால் உருக்குலைந்த நாட்டைப் புதுப்பிக்கச் செல்கிறது

1968-69ம் ஆண்டில் ஏற்றுமதிக்கென இந்தியா சிமெண்ட்ஸ் அண்மையில் இந்திய அரசிடமிருந்து பாராட்டு இதழ் பெற்றுள்ளது. இந்த ஏற்றுமதி இன்னும் தொடர்கிறது...

சங்கர் சிமெண்ட் ஏற்றுமதியில் இப்போது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. புது நாடு ஒன்றை நிர்மாணிக்க, அந்நாட்டு மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க, போரினால் சீர்குலைந்த தொழில்களையும் பொருளாதாரத்தையும் செம்மைப்படுத்த அது செல்கிறது. 20,000 டன் சங்கர் சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது ... இன்னும் நிறைய ஏற்றுமதி செய்யப்படும்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோட்
சென்னை-2

தொழிற்சாலைகள்:
சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டம்
சங்கரி, சேலம் மாவட்டம்

FDSIC-1773TM



முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

தொழில்
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இரும்பு, [illegible] கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை [illegible]
- கரும்பாலை
- [illegible] குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- கலாசார வசதி பொருட்கள்
- [illegible] பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- [illegible] தரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.



கதர் கைத்தொழில் அங்காடி

குறளகம்

சென்னை-1





கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

வெளிநாட்டார் போற்றும் வியன் பொருள் கலைக்கூடம்

☎ 20461

20462 20463

20464 20465

அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்

சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு – ④ சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்: செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக

அஞ்சலகச் சேமிப்பு வங்கியை

நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



[illegible]

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை ஒப்பந்தப் புள்ளி

மேற் குறிப்பிட்டுள்ளவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட கொட்டேஷன்கள் (quotations) வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியான கொட்டேசன்கள் தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு 25—7—1972 மாலை 4-00 மணிக்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பப்பட வேண்டும். பொருள்கள் அந்தந்த மாவட்டத் தலைமை இடங்களில் மாவட்ட நல அலுவலர் அலுவலகத்தில் வழங்கப்பட வேண்டும். F.O.R, கொட்டேசனில் சர்வீசிங் வசதிகள் (Servicing Facliities உட்படச் சேர்த்துக் குறிப்பிட வேண்டும்.

உறையில் வகையின் விவரம் எதற்காகக் கொட்டேசன் கொடுக்கப்படுகிறது என்பதை விளக்கமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேசனையும் எக்காரணமும் கூறுமல் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ உரிமை உண்டு.

திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுவலர்கள் தொகையைச் செலுத்துவார்கள். மாதிரி வகைகள் தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களிடம் 15—7—1972 காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணிக்கு முன்னர் எல்லா வேலை நாட்களிலும் பெறலாம்.

வழங்க இருக்கும் டூல்ஸ் மற்றும் மெசினரிகளின் மாதிரிகளை 31—7—1972 அன்று பார்வையிட்ட ஒப்பந்ததாரர்கள் எழிலகம் சென்னை-5-ல் உள்ள தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களிடம் ஒப்பந்ததாரரின் செலவிலேயே கொண்டு வரவேண்டும்.

மாவட்ட நல அதிகாரிகளுக்கு வழங்கும் பொருட்கள் சென்னையில் பார்வையிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் தரமுடையதாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அத்தகைய பொருட்கள் மாவட்டத் தலைநகர்களிலேயே மாவட்ட நல அலுவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டு விடும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பொருட்கள் வழங்குவதற்காக அஞ்சல் தலைகள் ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தரவேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒருவிதி முறையாக விரைவாக முறையாக பொருட்கள் வழங்கும் பொருட்டு மொத்த ஒப்பந்த மதிப்பில்10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

1.	Laundry (Iron Boxes)	250
2.	Blacksmithy	37
3.	Carpentry	197
4.	Leather atriching machines	45
5.	Sewing machines	332
6.	Barbers Kit	232
7.	Legging	

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.

(த-20).

1972–73-ஆம் ஆண்டிற்குத் தாழ்த்தப்பட்டோர் நலப்பள்ளி மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு நோட் புத்தகங்கள் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி இலவசமாக வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட கொட்டேஷன்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகை நோட் புத்தகத்திற்கும் தனித்தனியான கொட்டேஷன்கள் தாழ்த்தப்பட்டோர் இயக்குநர் அவர்களுக்கு 25–7–1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். கொட்டேஷன்கள் மாவட்டத் தலைமையிடத்தில் கலெக்டரேட்டுடன் இணைந்த மாவட்ட நல அலுவலரின் அலுவலகத்தில் வழங்க எடுத்துச் செல்லும் கட்டணம் எல்லா வரிகள் மற்றும் கட்டணமிருந்தால் அனைத்தும் சேர்த்திருக்க வேண்டும். உறையில் பாடப்புத்தகங்களின் விவரம் எதற்காக கொட்டேஷன் கொடுக்கப்படுகிறது என்ற விவரமும் குறிப்பிட்டுஅனுப்பவேண்டும். தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேஷனையும் எக்காரணமும் கூறுமல் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் தலைமையிடங்களில் மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகங்களில் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுவலர்கள் தொகையைச் செலுத்துவார்கள்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை பின்னர் தெரியப்படுத்தப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் புத்தகங்கள் வழங்குவதற்காக ஸ்டாம்ப் ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தர வேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒரு விதிமுறையாக ஒழுங்காகப் புத்தகங்கள் வழங்கும்பொருட்டு மொத்த ஒப்பந்த மதிப்பில் 10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

இணைப்பு.

1972–73-ஆம் ஆண்டிற்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் தாழ்த்தப்பட்டோர் நலப்பள்ளிகள் மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாகப், புத்தகம் வழங்குதல் :—

வரிசை எண்ணும்.	தேவையான நோட்டுபுத்தகங்களின் விவரமும்.	தேவையான பிரதிகளின் எண்ணிக்கை.
1	20 pages ruled note book	59
2	24 pages drawing note book	4,332
3	40 pages ruled note nook	19,213
4	40 pages double ruled book	12,687
5	40 pages quarter double ruled note book	7,488
6	40 pages map drawing note book	8,737
7	40 pages graph note book	2,343
8	40 pages graph (foolscap) note book	1,065
9	40 pages composition note book	1,270
10	40 pages composition (Foolscap) note book	4,566
11	40 pages Geometry note book	450
12	48 pages ruled (foolscap) note book	9,084
13	48 pages unruled (foolscap) note book	3,875
14	60 pages ruled note book	10,731
15	60 pages essay note book	11,340
16	60 pages essay (foolscap) note book	110
17	80 pages ruled note book	96,524
18	80 pages double ruled note book	27,393
19	80 pages maths note book	469
20	80 pages Composition note book	11,850
21	80 pages Science (one side ruled note book)	6,551
22	80 pages Four ruled (one side ruled note book)	1,200
23	Half quire ruled	57,265
24	Half quire mathematics	6,059
25	Half quire unruled	21,350
23	Half quire unruled (foolscap) note book	2,090
27	Half quire one side ruled note book	982
23	Half quire Map drawing note book	1,146
29	Half quire essay note book	2,852
30	Half quire essay (foolscap) note book	1,405
31	120 pages maths note book	355
32	120 pages ruled note book	4,164
33	One quire ruled note book	72,882
34	One quire maths note book	36,065
35	One quire unruled note book	2,906
36	One quire unruled (foolscap) note book	520
37	One quire science (one side ruled) note book	8,721
38	Two quire mathematics note book	27,560
39	Two quire ruled note book	59,957
40	Two quire science (one side ruled) note book	2,925
41	Two quire unruled note book	1,131
42	No. 5 ruled note book	370
43	No. 4 one side ruled note book	280
44	No. 4 Mathematics note book	1,020
45	No. 5 note book	1,000
46	Exercise book for core histroy	1,330
47	Exercise book for Geography	1,330
48	Exercise book for elective history	350
49	Record Note elective Biology	250

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.

(த. 49)

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர். தமிழ்நாடு அரசு அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணுசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணு சாலை, சென்னை-2.

CriterionCO.2678TM B

பதிவு எண். M. 8676


செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

மணமக்களுக்கு ஒரு மகத்தான பரிசு.

தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்குவீர்.

ரூ. ஒரு லட்சம் பரிசு பெறக்கூடும்

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 7,00,000*

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்:
31-7-1972

பரிசுச் சீட்டு ஒன்றின்
விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9

*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.



197

6458/55/2 R.R.No

தமிழரசு

ஆக 1 1972 35 காசு



3 - AUG 1972



செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1,
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.

LT-[illegible]



R.R.NP 1943/155/72

தமிழரசு

மலர் 3 1.8.1972 இதழ் 3

மதுரை மாவட்டச் செய்தித் தொகுப்பு

நிலச் சீர்திருத்தத்தில் தமிழகத்தின் தொண்டு

முதல்வர் கலைஞர்

தமிழ்நாட்டில் 1961-ஆம் ஆண்டின் உச்சவரம்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டிருந்த பல்வேறு விதிவிலக்குகளை நாங்கள் படிப்படியாக நீக்கிக் கொண்டிருக்கிறோம். மேய்ச்சல் நிலங்கள், கரும்புத் தோட்டங்கள், மலைப் பகுதி நிலங்கள் ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குகள் நீக்கப்பட்டு விட்டன.

பால் பண்ணைகளுக்கும், கால் நடைப் பண்ணைகளுக்கும் கொடுக்கப் பட்டிருந்த விதிவிலக்குகளை நீக்கி விடுவதென முடிவு செய்யப் பட்டுள்ளது.

மேலும், கல்வி, மருத்துவம், சமயம் ஆகியவற்றிற்கான அறக் கட்டளைகளுக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குகளையும் நீக்குவதற்குரிய சட்ட வரைவு ஒன்று சட்ட மன்றப் பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டின் நிகழ்ச்சிக் குறிப்பில், நல்ல பாசன வசதியுள்ள இருபோக நன்செய் நிலங்களுக்கு உச்ச வரம்பு 10 முதல் 18 ஏக்கருக்குள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கோட்பாட்டினை 1970-ஆம் ஆண்டில் உச்ச வரம்பைக் குறைத்தன் மூலம் நாங்கள் நடைமுறைப்படுத்தி வருகிறோம். நன்செய்க்கு 10 முதல் 18 ஏக்கர் வரை என்று நிகழ்ச்சிக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள உச்ச வரம்புக்கும், தமிழகத்தில் நடைமுறையில் இருக்கும் 15 ஏக்கர் உச்சவரம்புக்கும் அதிக வேறுபாடு இல்லை.

ஐவருக்கு மேல் இருக்கும் ஒரு குடும்பத்துக்கு 60 ஏக்கர் என்றிருந்த் உச்சவரம்பைத் தமிழ்நாட்டில் 40 ஏக்கராகக் குறைத்து விட்டோம். இதை மேலும் குறைத்து 80 ஏக்கர் என வரம்பு கட்டலாம் என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

தனிப்பட்ட அறக்கட்டளை நிலங்களையும், தனியாரின் சொந்த நிலங்களோடு சேர்த்தே உச்சவரம்புக்குக் கணக்கிட வேண்டும்.

அடுக்குமுறை நட்ட ஈடு

சொந்தப் பாசன வசதியுடன் இரு போகம் விளையக் கூடிய செழிப்பான நிலங்கள் என்பது எங்கள் மாநிலத்தில் கிடையாது. ஆகவே, இதுபற்றிய சிக்கலும் எங்களுக்கு இல்லை.

தனியாருக்குச் சொந்தமான விதைப் பண்ணைகள், பால் பண்ணைகள், கால்நடை வளர்ப்புப் பண்ணைகள் ஆகியவற்றுக்கு எந்தவித விதிவிலக்கும் அளிக்கப் படக்கூடாது என்பதே என் கருத்தாகும்.

உபரி நிலங்களுக்கு வழங்கப் படும் நட்ட ஈடு மார்க்கெட் விலைக்குக் குறைவாக இருத்தல் வேண்டும். அதையும் அடுக்கு முறையில் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அடுக்குமுறை என்றால், அது உபரி நிலத்தின் அளவு அதிகமாக, அதிகமாக அதற்கான நட்ட ஈட்டுத்தொகை குறைந்துகொண்டே வருவதாக இருக்கவேண்டும்.

உழுபவனுக்கே நிலம்

நிலச்சீர்திருத்தத்தை யொட்டிய முக்கியமான ஒன்று. உழுபவருக்கே நிலம் உரிமையாக்கப் படுவதாகும்.

இதற்காகக் குத்தகைகள் யாவற்றையும் பதிவு செய்யும் பணி எங்கள் மாநிலத்தில் நடந்தேறி வருகிறது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே மூன்று இலட்சம் குத்தகைகளுக்குமேல் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதே போல நாடு முழுவதும் குத்தகைப் பதிவு தயாரிக்கப் பட வேண்டும். குத்தகைதாரர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக்கிடச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்தச் சீர்திருத்தத்துக்கு ஏராளமான நிதி தேவைப்படும். எனவே, குத்தகையாளரே நிலத்தின் உரிமையை வாங்கும்படி அவர்களுக்குத் தேவையான கடனுதவி வழங்குவதற்காகக் குத்தகையாளர் உதவிக் கழகங்கள் எந்தெந்த மாநிலங்களில் இல்லையோ அந்தந்த மாநிலங்களில் அமைக்கப்பட வேண்டும். இதற்குத் தேவைப்படும் முழு நிதியுதவியையும் தந்துதவ மத்திய அரசு முன்வரவேண்டும்.

[புதுடில்லியில் நடைபெற்ற நில உச்சவரம்பு பற்றிய முதலமைச்சர்கள் மாநாட்டில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]


செய்தியே! சித்திரமே!
1971-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தின் சிறந்த ஊராட்சி ஒன்றியமாகப் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
பெரியகுளம்
சிறந்த ஊராட்சி ஒன்றியம்
பெரியகுளம்
-1971-
மதுரை மாவட்டம் பெரிய குளம் ஊராட்சி ஒன்றியம் சிறந்தது என்ற பாராட்டைப் பெற்றது.
விடுதலை நாள் வெள்ளி விழாவை ஒட்டித் தமிழக அரசு, தியாகிகளுக்கு அளித்து வரும் உதவித் தொகையினைக் கூடுதலாக அளிக்கும்.
தமிழக அரசு


தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்க்கு 21 விடுதிகளை உடனடியாகத் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கு 7 விடுதிகள்..ஏனையவை உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்க்கு உரிய விடுதிகள்.
கல்லூரி மாணவர் விடுதி
உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதி
உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதி


தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக்கழகம்
சிட்கோ
சிறுதொழில் தொடங்குவோர் விரும்பும் வகையில் தொழிற்பேட்டையில் கட்டடங்களைக் கட்டித் தருகிறது.
சிட்கோ தொழிற் பேட்டை
கோபன்...


நாள் ஒன்றுக்கு இரண்டு லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் புதிய பால் பண்ணை சென்னையில் இன்னும் இரண்டு ஆண்டுகளில் உற்பத்தியைத் தொடங்கும். நவீன முறையிலான இந்தப் பால்பண்ணைக்கு ரூ. 2 கோடி மூலதனமாகும்.
அரசு பால் வழங்கு துறை
கோபன்...

இணையில்லா மதுரை!

புலவர் மு.சிக்கந்தர்

தன்கையைத் தான்குறைத்து நீதி காத்த
   தகைசான்ற பொற்கையன் ஆண்ட திங்கே!
'உன்னெற்றிக் கண்ணையே காட்டி னாலும்
   ஓயாமல், குற்றந்தான் என்றே சொன்ன
தென்புலத்து நக்கீரன் வாழ்ந்த திங்கே!
   திருவாலங் கானத்தில் போரில் வெல்ல
முன்வந்த எழுவரையும் வென்ற மன்னன்
   முடிபுனைந்து குடிபுரந்த திங்கே! இங்கே!

மீனாட்சி தன்னாட்சி மாட்சி யிங்கே!
   மென்மலர்கள் ஏற்றுமதி செய்வ திங்கே!
கோனாட்சி குலையாமல் ஆண்ட பேகன்
   கொடைமடமும் கொண்டதிங்கே! மொழியைக் காக்கக்
கூறாமல் குறுகாமல், அரிமா வைப்போல்
   கொதித்தெழுந்த பாவலர்கள் வாழ்ந்த திங்கே!
தேனாட்சி நடைபெறவே ஒத்து ழைக்கும்
   திருநாடு! கலைஞர்சீர் பரவும் நாடே!

பழங்கிழவர் என்றாலும் சுவைக்கத் தூண்டும்
   பழக்கூட்டில் உண்டாகும் பஞ்சா மிர்தம்;
பழமுதிரும் சோலைகள்! சாலை கள்! மாம்
   பழச்சிங்கக் கவிராயர் பாமா லைகள்!
பழம்பதிக்குக் கிடைத்துள்ள புதிய பேறு!
   பாலாறு புரந்தலாறு பரப்ப லாறு!
பழமையுடன் புதுமைகளும் மணந்தே வாழும்
   பல்கலைசேர் மதுரையே எம்மா வட்டம்!

சுற்றிவந்து கொடைக்கானல் காணல் நாளும்
   தொல்லையெனத் தமிழரசு கண்ட தாலே,
பற்றுவைத்துக் கொடைக்கானல்—பழனிப் பாதை
   பாங்காக அமைப்பதனைக்'காணல் நன்றே!
கற்றிசைக்க நாதசுரம் முழங்கு கின்ற
   கல்லூரி இசைவெள்ளம் பாய்ந்து பாய்ந்து
முற்றிவளர் வயலுண்டு! மின்வி ளக்கு
   முழுமையுற்ற பெருமையுண்டு! எல்லாம் உண்டு!



பழமையில் புதுமை மலரும் எழில் நகரம் மதுரை. பண்டைச் சிறப்பைக் காட்டும் வானளாவிய கோபுரங்களும், இக்கால வளர்ச்சிக்குரிய ஆலைகளும், இயந்திரச் சாலைகளும் மதுரைப் பகுதிக்கே உரிய தனிச்சிறப்புகள். பண்டைப் பெருமையும், புதுமைச் சிறப்பும் இணைந்து வளரும் எழிற் கோலத்தைத் தமிழ்நாட்டிலேயே மதுரை ஒன்றில்தான் காண முடியும்.

மதுரை என்ற சொல்லுக்கு இனிமை என்ற பொருள் உண்டு. அமிழ்தினும் இனிய தமிழ் மொழியால் மதுரமான பெயரைப் பெற்றது மதுரை. மருத நிலங்களைத் தன்னகத்தே கொண்டதாலும், மருத நிலவளத்தைப் பெற்றதாலும் மருதை என்ற பெயர் நாளடைவில் மதுரை என்று திரிந்தது என்றும் சிலர் கூறுவர். வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலமாகும்.

பன்னெடுங்காலம் பாண்டிய நாட்டின் தலைநகராக இருந்த மதுரை, தலை, இடை, கடைச் சங்க காலம் முதல் தமிழ்ப் பெருமை பெற்றிருந்தது. ஆதியில் கன்னி முனைக்கு அப்பாற்பட்ட நிலப்பகுதியைக் கடல் கொண்டுவிட்ட போது, முதற் சங்க காலக் காவியங்கள் அதனுடன் மறைந்து விட்டன. கடைச் சங்கம் உதயமானபோது மதுரை அதன் நிலைக்களனாக நின்று உதவியது என்பது ஒரு வரலாறு.

நாயக்க மன்னர்கள் மதுரையைச் சுமார் இருநூறு ஆண்டுக் காலம் ஆண்ட காலத்தில்தான் இன்றைய மதுரை மாநகர் உருப் பெற்றது. விசுவநாத நாயக்கர் மீனாட்சி அம்மன் கோயிலைச் சீர்செய்ததோடு, அக்கோயிலை மையமாக வைத்து, சுற்றுத் தெருக்களை அமைத்து, இன்றைய அழகு மிக்க மதுரைமாநகரை உருவாக்கினார். திருமலை நாயக்கர் பல திருப்பணிகள் செய்ததோடு புது மண்டபம், தெப்பக்குளம், தமுக்கம், திருமலைநாயக்கர் மகால் இவற்றை அமைத்தார்.

அழகிய கோவில் நகரம் எனப் புகழப்படும் மதுரை மாநகரம் மீனாட்சி அம்மன் கோயில் கொண்டருளிய திருத்தலம் மட்டுமல்லாது மேம்பட்ட தமிழ்க் கலாசாரத்தின் இருப்பிடமாகவும் திகழ்கின்றது. முத்தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டதும் இந்த நகரில் தான்.

2,500 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய மதுரை ஒரு முக்கிய நகரமாகத் திகழ்கின்றது. கலை வல்லுநர்கள், கைத்தொழில் வல்லுநர்கள், வியாபாரிகள், கவிஞர்கள், கலைஞர்கள், துறவிகள், முதலானோர்களைப் பரம்பரை பரம்பரையாக ஆதரித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களையெல்லாம் அமைதியோடும், பொறுமையோடும் போற்றி வந்திருக்கிறது. தமிழகத்தின் இதயமாகத் திகழ்கின்றது. பல கோடி இந்து மதத்தவருக்கு இது ஒரு புண்ணியத் தலமாக விளங்குகின்றது. இந்தியாவைப் பற்றி அறிந்து கொள்ள வரும் அயல் நாட்டுப் பயணிகளுக்கு இது ஒரு கவர்ச்சிகரமான நகரமாக விளங்குகின்றது. தமிழர்களுக்கு இது ஒரு கலையும், அழகும் பொங்கும் புதையல் கூடமாக விளங்குகின்றது.

பழங் காலத்துத் தமிழ் நகரங்கள் போல் நதியாலும், பச்சைக் கம்பளம் போன்ற வயல்களாலும் சூழ்ந்த ஒரு நகரம் மதுரை. கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் குலசேகரன் கோவிலுக்கும் நகரத்திற்கும் அடிக்கல் நாட்டியதாக வரலாறு கூறுகின்றது. குலசேகரன் காலத்தில் தான் மதுரை நகரம் செழித்தோங்கியதாக வரலாற்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சுமார்500ஆண்டுகளுக்குமுன்பு தற்சமயம் உள்ள கோவிலும், அதன் கோபுரங்களும் மாற்றி அமைக்கப்பட்டன. தமிழ்க் காவியங்களான மணிமேகலை, சிலப்பதிகாரம், ஆகிய இரண்டு நூல்களின் வாயிலாக மதுரையின் பழமை வாய்ந்த வரலாற்றை நாம் அறியலாம். கடைசியாக ஆண்ட பாண்டிய மன்னன் நன்மாறன், கி.பி. இரண்டு முதல் கி.பி. ஆறும் நூற்றுண்டு வரையுள்ள எத்தகைய தகவலும் நமக்குக் கிடைக்கவில்லை. கடைசியாக கி.பி. 1450 முதல் கி.பி. 1550



வரை பாண்டிய மன்னர் ஆட்சி இருந்து வந்தது.

பின்னர் கி. பி. 1559 முதல் நாயக்க மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. இது சுமார் 200 ஆண்டுகள் வரை நீடித்தது. நாயக்க மன்னர்கள் திறமைமிக்க கட்டடக்கலை வல்லுநர்கள். அவர்களால் பல கோட்டைக் கொத்தளங்களும், அணைகளும் நீர்ப்போக்கிகளும், கட்டப்பட்டன. அவர்களில் திறமைமிக்கவர் திருமலை நாயக்கர். திருமலை நாயக்கருடைய அரண்மனையே உலகோர் மெச்சும் கட்டடக் கலை நுட்பம் வாய்ந்ததாகும். அவர் ஆட்சி கி.பி. 1736-ல் முடிவடைந்தது.

கிழக்கிந்தியக் கம்பெனியாரால் 1,70,000 ரூபாய்க்கு மதுரை விலைக்கு வாங்கப்பட்டது. பின்னர் முகமது யூசப் என்பவருக்கு 5,00,000 ரூபாய்க்கு ஆண்டுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. இதுவும் கி.பி. 1790-ல் முடிவு பெற்றது. கி.பி.1801-ஆம்ஆண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நேரடி ஆட்சிக்கு மதுரை உட்பட்டது.

19-வது நூற்றாண்டு முதல் ஆங்கிலேயர் நேரடி நிருவாகத்தின்கீழ் வந்தது. ஜோகன் பிளாக்பர்ன் மதுரை மாவட்ட ஆட்சியாளராக இருந்த போதுதான் (1834-1842) 500 மைல் நீளமான சாலைகளும், பாலங்களும் 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இருப்புப் பாதை மதுரையில் 1875-ல் அமைக்கப்பட்ட பின்னர் அது 1902-ல் பாம்பன் வரை விரிவாக்கப்பட்டது. வைகை நதியின் மேல் மூழ்கு பாலம் 1885-ல் கட்டப்பட்டது. மாவட்ட நீதிமன்றம் 1805-லும், காவல் படை 1859-லும், சிறைச் சாலை 1869-லும் தொடங்கப்பட்டன. குடிநீர்த் திட்டம் 1894-ல் தொடங்கப்பட்டது.

மதுரை நகராட்சி 1866-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த வி. எச். லெவிங்கே அவர்கள்தான் நகராட்சியின் முதல் தலைவராகச் செயலாற்றினார். படிப்படியாக வளர்ந்த இந்நகராட்சி 1971-ஆம் ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் மாநகராட்சியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் முதல் நகரத்தந்தையாக வணக்கத்திற்குரிய திரு எஸ். முத்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூடல் அழகர்க் கோயில், வட திருவாலவாயில், பழைய சொக்க நாதர் கோயில், இம்மையில் நன்மை தருவார் கோயில், கண்ணகியின் சிலை கொண்ட செல்லத்தம்மன் கோயில் நடு நாயகமாக அமைந்த மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆகிய பல கோயில்கள் காரணமாக மதுரையைக் " கோயில் நகரம் " என்கிறோம். மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், நகரின் நடுவே தாமரை மொக்குப் போன்று காட்சியளிக்கிறது. கோயிலின் நான்கு பக்கமும் ஒவ்வொரு திருவாயிலின் மீதும் கோபுரம் உள்ளது. சிற்பக் கலையின் அற்புதப் படைப்புகள் பலவற்றைக் கொண்டது இந்த ஆலயம். சொக்கநாதர் சந்நிதியிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் சிற்பங்களின் அமைப்பும், தூண் வரிசைகளின் ஒழுங்கும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக இருக்கின்றன.

இரும்போ, மரமோ பயன்படுத்தப்படாமல் முற்றிலும் செங்கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட திருமலை நாயக்கர் மகாலின் கம்பீரமான தோற்றம் யாரையும் கவரக் கூடியதாகும்.

ஆண்டுகள் பல கடந்தும், மாறுதல்கள் பல நிகழ்ந்தும் மதுரையின் பெருமை சற்றும் குறையவில்லை. அதன் எழில் மங்கவில்லை. காலத்தோடு வளர்ந்து, காலத்தோடு முன்னேறுகிறது மதுரை. வளர்ந்து வரும் மக்களின் தேவைக்கேற்பப் பல்வேறு துறைகளிலும் உற்பத்தி பெருகி வருகிறது. எண்ணற்ற கல்வி நிறுவனங்கள், புதிய தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், மின்சார நிலையங்கள், வளமான வயல்கள், தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் ளர்ச்சிக்குரிய பல்வேறு சக்திகளையும் தாங்கி நிற்கிறது. தமிழ்ப் பெருமக்களின் நீண்டநாள் கனவு நனவாகும் வகையில் புதிய அறிவாலயமாகிய மதுரைப் பல்கலைக்கழகம் உதயமாகியிருக்கிறது. இவைகள் அனைத்தும் கொண்டு தமிழகத்தில் சென்னைக்கு அடுத்த பெரிய நகரமாக விளங்குகிறது மதுரை.

மதுரை மாவட்டம், நீர்வளமும், நிலவளமும் மிகுந்த பகுதி. தமிழகத்தில் இது மூன்றாவது பெரிய மாவட்டம். இதன் பரப்பளவு 12,610 சதுர கிலோ மீட்டர். மேற்கில் கேரளமும், வடமேற்கில் கோயம்புத்தூர் மாவட்டமும், வடகிழக்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும், தெற்கிலும் தென்கிழக்கிலும் இராமநாதபுர மாவட்டமும், இதன் எல்லைகளாகும். மதுரை, மேலூர், திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், நிலக்கோட்டை, பெரியகுளம், திருமங்கலம், உத்தமபாளையம், வேடசந்தூர், மதுரை (தெற்கு), மதுரை (வடக்கு) ஆகிய 12 வட்டங்கள் உள்ளன. இம்மாவட்டத்தில் 34 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இம்மாவட்டத்திலுள்ள மொத்த ரெவின்யூகிராமங்கள்901. மக்கள் வாழாத ரெவின்யூ கிராமங்கள் 21. குக்கிராமங்களின் எண்ணிக்கை 4725. தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகள் 987.

ஆண்டிப்பட்டி மலை, பழனி மலை, வருஷ நாடு மலை, சிறு மலை, காந்த மலை, சுருளி மலை, நத்தம், அழகர் மலை முதலியன மாவட்டத்தின் முக்கியமான மலைத் தொடர்கள். வையை, மஞ்சளாறு, சுருளியாறு, வராக நதி, பாலாறு பெரியாற்றுக்கால்வாய், பொரந்தலாறு ஆகியவை பாய்கின்றன. நெல்லோடு மற்றும் வேர்க்கடலை, கரும்பு, முந்திரி, பருத்தி முதலியவை பயிராகின்றன. காடுகளில் வாட்டில், தேக்கு முதலியவை விளைகின்றன. குன்றுகளில் ஏலம், காப்பி, தேயிலை, வெள்ளைப்பூண்டு, வாழை முதலியன முக்கிய விளைபொருள்கள்.

மதுரை மாவட்டத்தின் மக்கள் தொகை, 32·11 இலட்சம். அவர்களில் ஆண்கள் 16·07 இலட்சம் பேர். பெண்கள் 16·03 லட்சம் பேர். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 10,33,827 பேர். ஆண்டில் சராசரி 33·9 அங்குலம் மழை பெய்கிறது. நிலத்தின் பெரும் பகுதி செழிப்புள்ள செம்மண். வையையாற்றுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள வையைத் தேக்கம், மதுரை நில வளப்பத்துக்கு ஆதாரமாகும். முதலாவது திட்டக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு, இரண்டாம் திட்டக்காலத்தில் முடிக்கப்பட்ட இந்த அணையினால் பெரியாறு டெல்டாவில் பாசன வசதிகள் உறுதிப் பட்டதோடு இருபதாயிரம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசனம் பெற்றன.

வேளாண்மைத் தொழிலில் இருப்போரைத் தவிர்த்துச் சுமார் 86,000 மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். பஞ்சாலைகள், பொறியியல் தொழில்கள், சர்க்கரை உற்பத்தி, தோல் பதனிடுதல், தீக்குச்சி செய்தல், பனைவெல்லத் தயாரிப்பு, பூட்டு உற்பத்தி முதலிய வகையில் 500-க்கு மேற்பட்ட தொழிலகங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. திண்டுக்கல் பூட்டுத் தொழிலுக்கும், தோல் பதனிடும் தொழிலுக்கும் பெயர் பெற்றது.

மதுரை மாவட்டத்தின் மக்கள் தொகை

- மதுரை மாவட்டத்தின் மக்கள் தொகை (1971-ஆம் ஆண்டின் கணக்கின்படி) 39,31,104.
- ஆண்களின் எண்ணிக்கை 19,77,819.
- பெண்களின் எண்ணிக்கை 19,53,281.
- மதுரை மாவட்டத்தில் ஆண்களைவிடப் பெண்கள் குறைவு. அதாவது 1,000 ஆண்களுக்கு 988 பெண்கள்.
- ஒரு சதுர கிலோ மீட்டரில் வாழும் மக்களின் எண்ணிக்கை 311. மாநிலச் சராசரி ஒரு சதுர கி. மீட்டரில் 316.
- மதுரை மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில் மக்கள் பெருக்கம் 22·42 சதவீதம் அதிகம்.

இம்மாவட்டத்தில் காட்டு வளம் போதுமான அளவுக்கு உள்ளது. ஏறக் குறைய 4 இலட்சம் ஏக்கர் காடுகள் இம்மாவட்டத்தில் வனவளமாக உள்ளன. இக்காடுகளில் பயன் மரங்களாகத் தேக்கு, மூங்கில், புளியன், வாட்டில், புளுகம், யூகலிப்ட்ஸ் ஆகியவை வளர்கின்றன. மரப்பட்டைகள் தோல் பதனிடுவதற்குப் பயன்படுகின்றன. பழனி மலைக்காடுகளில் (கொடைக்கானல் மலை) பயிராகும் யூகலிப்ட்ஸ் மரத்தின் இலைகள் தைலமிறக்குவதற்கும், மரம் 'ரேயான்' காகிதம் செய்வதற்கும் பயன்படுகின்றன. இம்மலையில் அதிக வருமானம் தரக்கூடிய ரப்பர், காப்பி, மிளகு, மலைவாழை, உருளைக் கிழங்கு, முட்டைக்கோஸ், காலிஃபிளவர், சௌசௌ, பட்டாணி ஆகியவைகளும் பயிராகின்றன.

அண்ணலை மாற்றிய அழகு மதுரை

குஜராத்தி உடைகளுடன் காட்சியளித்த அண்ணல் காந்தியடிகளை, முழங்கால்வரை வேட்டியும், மேலுக்குத் துண்டும் அணிய வைத்தது மதுரை நகரம்தான். அங்கே வயல் வெளியில் பணியாற்றிய உழவர்களின் ஏழைமைக் கோலமே அண்ணலின் உன்னத்தைமாற்றி உடையையும் மாற்ற வைத்தது.

இம்மாவட்டத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலும், திருமலை நாயக்கர் அரண்மனை, வண்டியூர் தெப்பக்குளம், திருப்பரங்குன்றம், அழகர்கோயில், திருவாதவூர் மாணிக்கவாசகர் கோயில், பழனி, திண்டுக்கல் மலைக்கோட்டைகள் ஆகியவையும் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற , தொன்மை வாய்ந்த இடங்களாக உள்ளதால் சுற்றுலாப் பயணிகள் விரும்பி வருகின்றனர்.

மதுரைமாவட்டத்தில் சிறு நிலக்கிழார்கள் பெற்றுள்ள உதவிகள்!

இந்தியா விடுதலை பெற்ற பின்பு நிறைவேற்றப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் வேளாண்மைக்கெனக் கணிசமான மூதலீடுகள் செய்திருந்தபோதிலும், சிறிய அளவில் நிலம் வைத்துள்ள உழவர்கள் பயனடையவில்லை. ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஏற்பட்ட நவீன வேளாண்மை நுட்பங்களின் பயன்களைப் பெரு நிலக்கிழார்களும், முன்னேறிய உழவர்களுமே பெரும்பாலும் அனுபவித்து வந்துள்ளனர். ஆனால் நமது நாட்டில் பெரும்பான்மையினராக இருக்கும் சிறுநிலக்கிழார்களுக்கு (Small Farmers) அதுபோன்ற அப்பயன்கள் விகிதாரச்சாரப்படி கிடைக்கவில்லை. இந்த நிலைமை பொருளாதார வலிமையுள்ள பெருநிலக்கிழார்களுக்கும், சமுதாயத்தில் சாமான்யர்களாக ஆனால் பெரும்பான்மையினராக வாழும் சிறுநிலக்கிழார்களுக்கும் இடையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை மேலும் அதிகப்படுத்துவதாகவே அமைந்திருந்தன. துண்டு துண்டான நிலங்கள், அந்நிலங்களுக்குரிய உரிமையில் பாதுகாப்பின்மை, வேளாண்மை செய்வதற்கு, வேண்டியக்கடன் உதவிகள் எளிதில் கிடைக்காமை, விற்பனை செய்வதற்கும், சேமித்து வைப்பதற்கும் போதிய வசதிகள் இல்லாமை ஆகியவை சிறு நிலக்கிழார்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக விளங்கின.

எனவே, கண்காணிப்புள்ள கடனுதவியைக் கொண்டு, நவீன வேளாண்மை நுட்பங்களை மேற்கொண்டு, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் ஊக்கமும் ஆக்கமும் நிறைந்த சிறு நிலக்கிழார்களுக்கு உதவும் முன்னோடித் திட்டங்களை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அனைத்திந்திய கிராமக்கடன் ஆய்வுக்குழு (All India Rural Credit Revenue Committee) ஒரு பரிந்துரையை வழங்கியது.

அப் பரிந்துரைக் கேற்ப இந்திய அரசு, சிறு நிலக்கிழார் மேம்பாட்டிற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற முன்வந்தது. சிறுநிலக்கிழார்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களுக்கு இருக்கும் சிக்கல்களை (பிரச்சினை) ஆராய்தல், அவர்களுக்குப் பொருத்தமான திட்டங்களைத் தீட்டுதல், சாகுபடி செய்வதற்குரிய தேவைப் பொருட்களையும், சேவைகளையும், கடனுதவிகளையும் தற்பொழுதுள்ள நிறுவனங்களின் மூலமாக அளித்தல் ஆகியவை சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

தமிழ்நாடு அரசு பரிந்துரைத்தற்கிணங்க, சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தைத் தமிழ் நாட்டில் தென்ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய 3 மாவட்டங்களில் செயல்படுத்த இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ 50,000 சிறுநிலக்கிழார்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பயனடைவார்கள். சிறுநிலக்கிழார் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்காவது திட்டக் காலத்தில் 160 இலட்சம் ரூபாய் நிதி அளிக்கப்படும். இது இந்திய அரசின் முழுநிதி உதவித் திட்டமாகும்.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதவிபெற 'விரும்பும் சிறுநிலக்கிழார்கள் 1 முதல் 3 ஏக்கர் நன்செய்நிலம் அல்லது 2 முதல் 5 ஏக்கர் புன்செய் நிலம் (குத்தகை நிலம் அல்லது கூட்டாகச்சாகுபடி செய்யும் நிலம் உட்பட) வைத்திருக்க வேண்டும். சிறுநிலக் கிழார்களைப் போலவே குறுநிலக்கிழார்களும் (Marginal Farmers) மானியம் பெறத் தகுதியுள்ளவர்களாகும்.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தை மதுரை மாவட்டத்தில் நிறைவேற்ற 1970-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் சிறுநிலக்கிழார் மேம்பாட்டு நிறுவனம் (Small Farmers Development Agency) மதுரையில் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1960-ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் 22-9-1970 அன்று பதிவு செய்யப்பட்டது. இதன் பதிவு எண். 67/70. மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டு இந்நிறுவனம் செயல்படுகிறது.

இந்நிறுவனத்தில் இந்திய அரசின் உணவு, வேளாண்மை, சமுதாயநலம், கூட்டுறவு அமைச்சகத்தால் நியமிக்கப்படும் ஒருவர், தமிழ்நாடு அரசின் வோளண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, கூட்டுறவுத்துறை, மின்சார வாரியம், நிலவளவங்கி, மாவட்ட மையக் கூட்டுறவு வங்கி ஆகியவைகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசின் பரிந்துரைக்கேற்ப அரசாங்க வேலையில் இல்லாத இருவர் (அவரில் ஒருவர் இத்திட்டம் செயல்படும் பகுதியைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருப்பார்), மற்றும் அரசாங்கத்தால் நியமிக்கப்படும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும், திட்ட அலுவலர் உறுப்பினர்-செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

மதுரை மாவட்டத்தில் சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம் தற்பொழுது கீழ்க்கண்ட 18 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1. உசிலம்பட்டி, 2. வத்தலக்குண்டு, 3. ஆண்டிப்பட்டி, 4. தேனி, 5. பெரியகுளம், 6. நிலக்கோட்டை, 7. ஆத்தூர், 8. ரெட்டிச்சத்திரம், 9. திண்டுக்கல் 10. வட மதுரை, 11. சாணார்பட்டி 12. நத்தம் 13. பாளையம் 14. வேடசந்தூர் 15. டி. கல்லுப்பட்டி 16. திருமங்கலம் 17. செல்லம்பட்டி 18. கள்ளிக்குடி.

மேற்கூறிய 18 வட்டாரங்களில் முதலில் உள்ள 9 வட்டாரங்களில் 1970-71-ஆம் ஆண்டிலிருந்தும், அடுத்த 9 வட்டாரங்களில் 1971-72 ஆம் ஆண்டிலிருந்தும் சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பெற்று வருகிறது.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டு நிறுவனம் நேரடியாகக் கடன் வழங்குவதில்லை; ஆனால், நிலவள வங்கிகளையும், பல்வேறு கூட்டுறவு வங்கிகளையும் சிறுநிலக்கிழார்களுக்குத் தாராளமாக கடன் உதவி செய்யுமாறு ஊக்குவிக்கிறது. இவ்வாறு கடன் கொடுக்கும் வங்கிகளுக்கு எதிர்பாராத விதமாக நட்டம் ஏற்படுமானால், அதனை ஈடுசெய்யும் வகையில் இந்நிறுவனம் மைய அரசின் நிதியிலிருந்து சரிகட்டும்.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டு நிறுவனம் நிலவள வங்கிகளுக்கு 3 சத ஈட்டு நிதி (RiskFund) கொடுக்கிறது. மேலும், இந்நிறுவனம் கடன் கொடுக்கும் தொகையில் 25 சதத்தை மானியமாகக் கொடுக்கிறது

சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் சிறுநிலக்கிழார்களுக்கு, கீழ்க்கண்டவைகளுக்காக நிலவள வங்கிகள் நடுத்தர காலக் கடன் கொடுக்கின்றன.

1. புதிய கிணறு வெட்டுதல்.
2. சமுதாயக் கிணறு வெட்டுதல்.
3. பழைய கிணறுகளை ஆழப்படுத்தல்.
4. மின்சார மோட்டார், பம்புசெட் வாங்குதல்.
5. நிலம் சமப்படுத்துதல்.
6. பழத்தோட்டம் அமைத்தல்.

சிறுநிலக்கிழார்களின் வருவாயை உயர்த்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் பால்பண்ணை, செம்மறியாட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை அமைக்கவும், மற்றும் உழவு மாடுகள் வாங்கவும் மதுரை மாவட்ட மையக் கூட்டுறவு வங்கி நடுத்தர காலக் கடன் வழங்குகிறது. மேலும் இவ்வங்கியால் சிறுநிலக்கிழார்களுக்குப் பயிர் சாகுபடிக்கெனக் குறுகிய காலக் கடன்களும் கொடுக்கப்படுகின்றன. இக்கடனைப் பயிர் அறுவடையான உடன் திருப்பிக் கட்டிவிடவேண்டும்.

முன்னேற்றமும் சாதனையும்

1970-71 : சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் 1970-71-ஆம் ஆண்டில் புதுக்கிணறு வெட்டவும் பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், 'பம்புசெட்' வாங்கவும் 483 சிறுநிலக்கிழார்களுக்கு நீண்ட காலக் கடனாக 9.99 இலட்சம் ரூபாய் நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பால்மாடுகள், செம்மறியாடுகள், கோழிகள் வாங்குவதற்காக 474 சிறுநிலக்கிழார்களுக்கு 4.34 இலட்சம் ரூபாய் மதுரை மாவட்ட மையக் கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளது.

1971-72 : சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1971-72-ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் நிலவள வங்கிகளால் கீழ்க் கண்டவாறு கடன் வழங்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர்.	எண்ணிக்கை.	வழங்கப்பட்ட கடன் தொகை.
		ரூ.
சமுதாயக் கிணறு	1	14,000
கிணறுகள்	64	7,99,800
'பம்புசெட்' அமைத்தல்	44	1,21,400
பழைய கிணறு ஆழப் படுத்தல்.	94	2,37,400
நிலம் சமப்படுத்தல்	89	77,480
பழத்தோட்டம் அமைத்தல்.	26	1,11,700
மொத்தம்	318	13,61,780

மதுரை மாவட்ட மையக் கூட்டுறவு வங்கி 1971-72-ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு சிறு நிலக்கிழார்களுக்கு நடுத்தர காலக் கடன் வழங்கியுள்ளது.

திட்டத்தின் பெயர்.	பயன் பெற்ற சிறுநிலக் கிழார் களின் எண்ணிக்கை.	வழங்கப் பட்ட கடன் தொகை (ரூபாய்).
பால்பண்ணை அமைத்தல்	721	9,82,800
கோழிப்பண்ணை அமைத்தல்.	122	1,40,350
செம்மறியாட்டுப் பண்ணை அமைத்தல்.	475	7,52,950
உழவு மாடுகள் வாங்குதல்.	479	4,74,850
கையால் இயக்கும் தெளிப்பான் வாங்குதல்.	230	18,074
மொத்தம்	2,027	23,69,014



1971-72-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் சிறுநிலக்கிழார்களுக்கு 5,000 உயர்ரகக் கோழிகளும், 15,000 செம்மறியாடுகளும் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் 1971-72-ஆம் ஆண்டில் மதுரை மாவட்ட மையக் கூட்டுறவு வங்கி, சிறுநிலக்கிழார்களுக்கும், குறுநிலக்கிழார்களுக்கும் குறுகிய காலக் கடனுகக் கீழ்க்கண்டவாறு பயிர்க் கடன் (Crop loan) வழங்கியுள்ளது.

	எண்ணிக்கை.	கடன் தொகை. (ரூபாய்).
சிறுநிலக்கிழார்	1,912	10,39,000
குறுநிலக்கிழார்	94,406	56,68,000
மொத்தம்	11,318	67,07,000

மேலும் கீழ்க்கண்ட சாதனைகள் மதுரை மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் நிகழ்ந்துள்ளன.

ஒருமித்த செயல் விளக்கத் தளைகள் 180 அமைக்கப்பட்ட எண்ணிக்கை.

பாதிவிலையில் வழங்கிய எச்.பி. 3 கம்பு 5,210 கிலோ.

இலவசமாக வழங்கப்பட்ட துவரை விதை 5,635 கிலோ.

மதுரை மாவட்டத்தில் சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகச் சிறுநிலக்கிழார் மேம்பாட்டு நிறுவனத்திற்கு 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

ஆண்டு.	இலட்சம் ரூபாய்.
1970-71	2.87
1971-72	11.15

இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேவையான காலத்தில், தேவையான அளவு கடன் உதவியை அளித்தும், சமுதாயத்தின் அடிதளத்தில் உள்ள சிறுநிலக்கிழார்களுக்குத் துணைத் தொழில்களை ஏற்படுத்திக் கொடுத்தும் வருவதால் விரைவில் மதுரை மாவட்டச் சிறுநிலக்கிழார்களின் வருவாய் பெருகும்; வாழ்வு சிறக்கும் என்பது திண்ணம்.

தந்தி : " மெல்நூல் "   தொலைபேசி எண் : 41 & 42

மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை
லிமிடெட், மேலூர்

• • • • • •

எங்கள் ஆலையில் உயர்ரகப் பஞ்சு கொண்டு சிறந்த இயந்திரங்களில், தேர்ச்சியான தொழிலாளர்களால் 20 நிர், 26 நிர், 40-ம் நிர் நூலும் 2/17, 2/20 நிர் நூலும் 34-ம் நிர் கோன் நூலும் தயார் செய்து வெகு வேகமாக விற்பனையாகி வருகிறது.

எமது புதிய தயாரிப்பான 31-ஆம் நம்பர் ஸ்டேபிள் பைபர் நூலின் நேர்த்திக்கு வாடிக்கையாளர்கள் கொடுத்துவரும் அமோக ஆதரவே சான்று.

தங்கள் தேவைக்கு இன்றே எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

	ரூ. இலட்சம்
ஆலையின் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை	60.00
செலுத்தப்பட்ட பங்குத் தொகை	28.89
தமிழ்நாடு அரசு செலுத்தியுள்ள பங்குத் தொகை ...	14.71

பங்குதாரர்களாகச் சேரப் பொதுமக்களையும், கூட்டுறவு மற்றும் பொது நிறுவனங்களையும் அழைக்கின்றோம்.

மேலான நூல் பெற மேலூர் நூற்பாலையை அணுகுங்கள்.

திரு ஏ. வேலுசாமி,
தலைவர்.

திரு ஆர். ரெங்கமன்னார். பி. காம்.,
நிருவாக இயக்குநர்.

211

மதுரை மாவட்ட மத்தியக்கூட்டுறவு வங்கியின் வேளாண்மை உதவிகள்!

"வறுமையில் பிறந்து, வறுமையில் வாழ்ந்து, வறுமையிலேயே இறந்து" கொண்டிருந்த இந்நாட்டின் முதுகெலும்பு என்று கூறக் கூடிய விவசாயப் பெருங்குடி மக்களை முன்னேற்ற- நலிந்த அவர்கள் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த- அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து அவர்களைக் காலமெல்லாம் தம் இரும்புப் பிடியில் வைத்திருந்த பண முதலாளிகளிடமிருந்து மீட்கக் கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கம் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது என்று கூறுவதைக் காட்டிலும், வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்டது என்று கூறுவது பெரிதும் பொருத்தமாகும். மற்ற நாடுகளைப் போல் தன்னிச்சையாக வளராமல் அரசாங்கத்தால் புகுத்தப்பட்டதால் இந்தியாவில் கூட்டுறவை ஓர் அரசின் இயக்கம் என்று கூறுவதும் உண்டு.

இவ்வாறு சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டு, இன்று இந்நாட்டின் ஒவ்வொரு சிறு பகுதிக்கும் விரிவு படுத்தப்பட்டு, கூட்டுறவால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்று அனுபவத்தால் உணரக்கூடிய அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இவையெல்லாவற்றிற்கும் முக்கியக் காரணம், அரசின் விடா முயற்சியும், கூட்டுறவுக் கொள்கைகளில் அசையாத நம்பிக்கை கொண்டு அவ்வியக்கத்தைவிரிவுப் படுத்த அரும்பாடுபட்ட சில நல்லவர்களின் உழைப்பும் தான். அரசுக்கும், அத்தகையோருக்கும், இந்நாட்டு விவசாயிகள் என்றென்றும் நன்றிக் கடன் செலுத்தக்கடமைப்பட்டவர்கள். விவசாயிகளுக்காகவே முதன்முதலில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும், காலப் போக்கில் பல துறைகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. வெற்றி பல கண்டது. கூட்டுறவு இயக்கம் தன் அன்புக் கரத்தால் பல துறைகளை அணைத்துக் கொண்டாலும், விவசாயத் துறைக்கே அதன் ஆதரவு அதிகம் இருந்து வருகிறது. விவசாயத் துறை 'கூட்டுறவின் செல்லப் பிள்ளை" என்று சிலர் கூறுவர்.

இந்தியாவில் விவசாயக் கடன் வழங்கும் அமைப்பு மூன்றடுக்கு முறைகளைக் கொண்டது. மாநில அளவில் மாநில வங்கியும், மாவட்ட அளவில் மத்திய வங்கியும் அதையடுத்துக் கிராமங்கள் அளவில் மத்திய வங்கியும் அதையடுத்து கிராமங்கள் அளவில் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களும் இவ்வமைப்புக்குள் அமையும் நிறுவனங்கள் ஆகும்.

கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை தமிழகம் இந்தியாவில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. இதைப் போல் மதுரை மாவட்டத்தில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியும் தமிழகத்தில் சிறந்த வங்கிகளில் ஒன்றுக இருந்து வருகிறது. நிருவாகத்தில், வைப்புகள் (deposits) சேகரிப்பதில், கடன் கொடுப்பதில், கொடுத்த கடனை வசூலிப்பதில் என்றுமே தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பெற இவ்வங்கி தவறியதே இல்லை. இவ்வங்கி 28—6—1912 அன்று "மதுரை-இராமநாதபுரம் மத்தியக்கூட்டுறவு வங்கி" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு, 19—7—1912 அன்று தன் பணியைத் தொடங்கிற்று. கடந்த அறுபது ஆண்டுகளாகத் தன் பணியைச் செவ்வனே ஆற்றி தற்பொழுது "வைர விழா" கொண்டாடவிருக்கிறது. 28—11—1945 வரை, முப்பத்து மூன்று ஆண்டுகள் இரண்டு மாவட்டங்களுக்கு பணியாற்றிய பெருமையும் இவ்வங்கிக்கு உண்டு. 28—11—1945 அன்று இராமநாதபுர மாவட்டத்திற்குத் தனியே ஒரு மத்திய வங்கி ஆரம்பித்து விட்டதால் அன்று முதல் "மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி"யாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்க ஆரம்பித்தது. வங்கி ஆரம்பிக்கப்பட்டபொழுது 173 அங்கத்தினர்களையும், செலுத்தப்பட்ட மூலதனமாக ரூ. 13,440-ம் இவ்வங்கி பெற்றிருந்தது. இன்று அங்கத்தினர்களின் எண்ணிக்கை 42,197 ஆகவும். செலுத்தப்பட்ட மூலதனம் 137·72 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. வங்கியால் வழங்கப்பட்ட கடன்களும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	ரூபாய் இலட்சத்தில்.
1969—70	491·52
1970—71	481·76
1971—72	629·39

அதிகமாகக் கடன் தொகை வழங்கப்பட்டிருப்பதிலிருந்து வங்கி விவசாயப் பசுமைப் புரட்சிக்கு எவ்வளவு அதிகமாக அளவிற்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளது என்பது தெளிவாகும்.

மதுரை மாவட்டம் மற்ற மாவட்டங்களைவிட ஒரு சில தனித்தன்மை பெற்ற மாவட்டமாகும். ஒரு சில மாவட்டங்களில் ஒரு சில பயிர்கள் அமோகமாக விளைவிக்கப்படும். காரணம் அங்கே அப்பயிர்களுக்கேற்ற பருவநிலைகள் மாவட்ட முழுவதிலும் பரவியிருக்கும். உதாரணமாகத் தஞ்சையில் நெல்லையும், கோவையில் பருத்தியையும் கொள்ளலாம். ஆனால், மதுரை மாவட்டத்தில் விளைவிக்கப்படாத பயிர்களே இல்லை எனலாம். எல்லாப் பயிர்களும் இம்மாவட்டத்தில் விளைவிப்பதற்கேற்பத் தட்ப வெப்ப நிலைகளும், நீர் வசதியும் இயற்கையிலேயே அமைந்துள்ளது. ஆண்டு முழுவதும் விவசாயம் நடைபெற்று வருகிறது. பயிர் சுழற்சி (Rotation of crops) இம்மாவட்டத்தில் எல்லா விவ

சாயிகளாலும் கையாளப்படுகிறது. ஒரு பயிர் பலனளிக்கத் தவறினாலும், மறு பயிர் அவரை வாழவைத்து விடுகிறது. கம்பம் பள்ளத் தாக்கில் விளையும் அமோக விளைச்சல் தரும் நெல்லுக்கும், மாவட்டத்தின் மற்றப் பகுதிகளில் விளையும் கரும்பு, வாழை, பருத்தி, கடலை, காப்பி, ஏலம், புகையிலை, திராட்சை இன்னபிற பயிர்களுக்கும் அரசாங்க ஆதரவால் மத்திய வங்கி தக்க சமயத்தில் கடன் வழங்குவது இம்மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் நன்கு அறிந்ததே.

''சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்'' கீழ் (Small formers development agency) மதுரை மாவட்டத்தில் 18 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே சிறு விவசாயிகளை மேன்மையடையச் செய்யும் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது.

''பயிர்வாரிக் கடன் திட்டத்தின்'' கீழ், பருவ நிலையைப் (Sesonality) பின்பற்றிக் குறுகிய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய கடன்கள் 12 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டியவை. இவை தவிரச் சில குறிப்பிட்ட விவசாயத் தேவைகளுக்காக, உதாரணமாக, நிலத்தைச் செப்பனிடுதல், உழவு மாடுகள் வாங்குதல், புதிய கிணறு தோண்டுதல், பம்பு செட்டுகள் வாங்குதல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களும் வழங்கப்படுகிறது. இத்தகைய கடன்களை மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். தீவிர அபிவிருத்தி சாகுபடித் திட்டத்தின் கீழ், பருத்தி, கடலை, வாழை, உருளைக்கிழங்கு, நெல், சோளம் முதலிய பயிர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவைகளுக்கும் முறைப்படி கடன்கள் கொடுக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

அடமானம் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருட்கள் ஏதும் இல்லையென்றாலும், மற்றவர்கள் பொறுப்பில் (Individual Surety) பயிர்க் கடன் வழங்குதல் கூட்டுறவின் தனித்தன்மையாகும். குறுகிய காலக் கடனுகக் கரும்பு பயிரிடுபவர்களைத் தவிர மற்றையோருக்கு அதிகப் பட்ச அளவு ரூ. 15,000 கடன் வழங்கப்படுகிறது. இதில் மற்றவர் பொறுப்பில் ரூ. 10,000வரை வழங்கப்படுகிறது. கரும்பு பயிரிடுவோருக்கு (Registerd Sugarcane Growers) அதிகப் பட்ச அளவு (Individual maximum Borrowing power) ரூ. 20,000 நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு நபர் ஜாமீன்பேரில் ரூ. 15,000 வரை கொடுக்கப்படுகிறது.

மத்திய காலக் கடன் அளவு–அதிகப் பட்சம் ரூ. 10,000. மற்றவர் பொறுப்பில் ரூ. 1,000 வரை. பம்பு செட் வாங்குவதற்கும், புதிய கிணறு வெட்டுவதற்கும் ரூ. 3,500 வரை நபர் ஜாமீனிலேயே வழங்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மத்திய காலக் கடன்களாக நபர் ஜாமீன் பேரில் ரூ. 2,000 வரை வழங்கப்படுகிறது. இவ்வங்கிக்கு நிரணயம் செய்யப்பட்ட கடன் வழங்கும் குறியீட்டை (Targets) பொறுத்து இயன்ற அளவு கடன் வழங்கி வந்திருக்கிறது.

கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் தவிர மற்றக் கூட்டுறவுச் சங்கங்களும், குறிப்பாகக் கூட்டுறவு பால் விநியோக சங்கங்கள், நகர வங்கிகள், சிப்பந்திகள் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு நூற்பு ஆலை, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, விற்பனைச் சங்கங்கள் முதலியன இவ்வங்கியிலிருந்து கடன் உதவி பெறுகின்றன.

மத்திய வங்கி வழங்கிய கடன்

		குறியீடு.	வழங்கியது.
		ரூ. (இலட்சத்தில்)	
1969—70	குறுகிய காலக் கடன்	450·00	453·46
	மத்தியக் காலக் கடன்	60.00	38·06
		510·00	491·52
1970—71	குறுகிய காலக் கடன்	550·00	416·68
	மத்திய காலக் கடன்	60·00	65·08
		610·00	481·76
1971—72	குறுகிய காலக் கடன்	550·00	593·22
	மத்திய காலக் கடன்	50·00	36·17
		600·00	629·39

தற்பொழுது மற்ற வணிக வங்கிகளுக்கும் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கும் உள்ள ஒரே வேற்றுமை அதன் நிருவாகத் துறையில் மட்டுமே உள்ளது. நிருவாக முறை வேறுவேருக இருந்தாலும், பணி ஒன்ருக ஆகிவிட்டது. வணிக வங்கிகளும், தங்களது பழைய பாணியை மாற்றிக் கொண்டு கூட்டுறவு மைய வங்கிகளின் தொன்று தொட்ட பணியுடன் போட்டி போட முன் வந்துள்ளது. கடன் வழங்குவதில் மட்டுமின்றி வைப்புகள் சேகரிப்பதிலும் (Deposits Mobilisation) போட்டி தான். போட்டி மனப்பான்மை இருந்தால் தான் எந்தப் பணியிலும் வெற்றி பெற முடியும். எனவே போட்டியை வரவேற்று இவ்வங்கி செயலில் இறங்கி வருகிறது. வைப்புகளின் நிலைமை (Deposits position) நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டேயிருக்கிறது. கீழே கண்ட அட்டவணை வங்கியின் வைப்புகள் நிலைமையை விளக்கும்.

	இலட்சம். ரூ.
30—6—1969	297·16
30—6—1970	370·92
30—6—1971	450·80
30—6—1972	525·94

இவ்வங்கியின் பலம் பொருந்திய கரங்களாக மாவட்டம் முழுவதிலும் இயங்கிவரும் 37 கிளைகள் ஓரளவுக்கு இவ்வைப்புகளின் உயர்வுக்கு ஒரு காரணமாக இருந்தாலும், வங்கியின் இனிய சேவையே முக்கியக் காரணமாகும். வங்கியின் பொருளாதார நிலை உயர்வதற்கு வங்கியால் சேகரிக்கப்படும் வைப்புகளின் நிலைமை பெரிதும் உதவுகிறது. தற்பொழுது கீழ்க் கண்ட வைப்புகள் வங்கியின் தலைமை அலுவலகத்திலும், கிளைகளிலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

1. நடப்புக் கணக்கு
(Current Account)
2. சேமிப்புக் கணக்கு
(Savings Accounts)
3. நிரந்தர வைப்பு
(Fixed Deposits)
4. ரெக்கரிங் } மாதாந்தர
5. பிராவிடெண்ட் } வைப்பு.
6. தினசரி சேமிப்புக் கணக்கு.
(Daily Savings)
7. பணச் சான்றிதழ்.
(Cash Certificates)

விவசாயப் பெருமக்களுக்கு விவசாயத்திற்கு மட்டும் கடனுதவி வழங்கி வந்த இவ்வங்கி கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயிகளின் பிற தேவைகளுக்கும், உதாரணமாகக் குடும்பத்தில் கொண்டாடப்படும் வைபவங்கள் மற்ற அவசரத் தேவைகளுக்கும் நகைகளின் பேரில் ''நகை ஈட்டுக் கடன்'' (Jewel Loan) வழங்கி வருகிறது.

36 மாதங்களுக்கும் அதற்கு மேலும் பெற்றுக் கொள்ளப்படும் நிரந்தர இட்டு வைப்புகளுக்கு (Fixed Deposits) அசல் வட்டியுடன் திருப்பித்தரத் தமிழக அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

இவ்வங்கியில் போடப்பட்டிருக்கும் டெபாசிட்டுகள் மீது பெறும் வட்டிக்கு ரூ. 3,000 வரை வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

ரூ. 1·50 இலட்சம் வரையுள்ள டெபாசிட்டுகளுக்குச் செல்வ வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

இவ்வங்கியில்தான் மற்ற வணிக வங்கிகளைவிடக் குறைந்த செலவில் உண்டியல் (Drafts) பெற முடிகிறது.

பொது மக்களின் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாக்கப் பெட்டக அறைகளை (Safe Lockers) தலைமையகத்திலும், திண்டுக்கல் கிளையிலும் குறைந்த வாடகையில் பெற ஆவன செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் காசோலைகள், டிராப்டுகள் கட்டணம் இன்றி வசூலிக்கப்படுகிறது.

வெளியூர் காசோலைகள், டிராப்டுகள் இதர உண்டியல்கள், டிவிடெண்ட் வாரண்டுகள், பென்சன் பில்கள், குறைந்த செலவில் தாமதமின்றி வசூலிக்கப்படுகிறது.

தனிப்பட்ட நபர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தலைமை அலுவலகத்திலும், கிளைகளிலும் ஓவர் டிராப்ட் வசதி வழங்கப்படுகிறது.

இத்தகைய பொதுச் சேவைகளின் மூலம் மதுரை மாவட்ட மக்களின் மனத்தில் என்றும் நிலையான ஓர் இடத்தை வகித்து வருவது மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியாகும். இன்னும் துரிதமான சேவைகளை, விரைந்து அளித்து மக்களின் பேராதரவைப் பெற என்றும் காத்துக் கொண்டிருப்பதும் இந்த மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியாகும். அரசு அவ்வப்பொழுது உழவர் பெருமக்களின் நல் வாழ்விற்காக வகுத்துக் கொடுக்கும் திட்டங்களைச் செயல்படுத்த இவ்வங்கி என்றுமே தயங்கியதில்லை.

இவ்வங்கி மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பாங்கர்கள் மதுரைப் பல்கலைக் கழகம், அறநிலைய நிறுவனங்கள், கல்வி மத நிறுவனங்கள், அற நிறுவனங்கள், மற்றும் இதர அலுவலகங்களுக்கும் பாங்கர்கள்.'

இத்தகைய வங்கி பொது மக்களின் நன் மதிப்புடனும், ஒத்துழைப்புடனும், விவசாயிகளுக்கு இன்னும் அதிக அளவில் உதவ என்றும் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறது. ''விவசாயிகளுக்குப் பணி செய்வதே இவ்வங்கியின்குறிக்கோள்!'

இந்தியாவிலேயே சிறந்த அஞ்சல் நிலையம்

இந்தியாவிலேயே மிகச் சிறந்த அஞ்சல் நிலையம் தமிழகத்தில் மதுரை மாவட்டத்திலே உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 6,000 அடி உயரத்தில் உள்ள, செண்பகனூர் என்னும்சின்னஞ்சிறுகிராமத்தில் உள்ள இந்த அஞ்சலகம் மிகச் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. இது இந்திய அஞ்சல் துறையின் நேரடி நிருவாகத்தில் நடத்தப்படுவதன்று; 'பிட்டர்க்ஸ்' என்னும் பாதிரியாரால் நடத்தப்படுகிற ''எக்ஸ்ட்ரா டிபார்ட்மெண்டல்'' அஞ்சலகம்.

இந்த அஞ்சலகம், மதுரை மாவட்டத்தில் கொடைக்கானலிலிருந்து 3 மைல் தொலைவில் உள்ளது. இதனை இந்தப் பாதிரியார் கடந்த 59 ஆண்டுகளாகச் சிறப்பான முறையில் நடத்தி வருகிருர்.

அஞ்சலகத்தில் பணிபுரிகிறவர்களும் சரி, அங்கே வந்து போகிறவர்களும் சரி அங்குத் தூய்மையும் ஒழுங்கும் நிலவப் பெரிதும் உதவுகிருர்கள். சாதாரணமாக, ஓர் அஞ்சலகத்தில் எந்தெந்தப் பொருள்கள் எங்கெங்கு வைக்கப்பட வேண்டுமோ அந்தந்தப் பொருள்கள் ஆங்காங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்திய கணக்குப் புத்தகங்கள் கூடப் புத்தம் புதியன போல் விளங்குகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தனைக்கும் மேல் வேருெரு சிறப்பும் இந்த அஞ்சல் நிலையத்திற்கு உண்டு. அதாவது, மக்கள் எப்போது சென்று அஞ்சலட்டை, பண விடைத்தாள் முதலியன கேட்டாலும் இல்லையென்ற சொல் இங்கே எழுந்ததில்லையாம்.

இந்தப் பாதிரியாரைச் சிறப்பிக்கும் வகையில், 'அவர் விரும்புகிற வரை அந்த அஞ்சல் நிலையத்தில் அஞ்சலக அலுவலராக நீடித்து வரலாம்' என்று இந்திய அஞ்சல் துறை ஒரு சிறப்பாணை பிறப்பித்துள்ளது.

மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு பாங்கு

லிமிடெட், மதுரை-1

187, வடக்கு வெளி வீதி

தந்தி : "சென்கோபாங்க்" தபால்பெட்டி எண். 14

தலைவர் : திரு பி. எஸ். மணியன், பி.எ., பி.எல்., எம்.எல்.எ.

தொலைபேசி எண்.

தலைவர்	.. 22134	செயலாளர்	.. 24024
அலுவலகம்	.. 24023	த. நி. அதிகாரி	.. 25715

கிளைகள் :	தொலைபேசி :
அரசரடி	27204
அலங்காநல்லூர்	28
ஆண்டிபட்டி	26
உசிலம்பட்டி	14
உத்தமபாளையம்	68
ஒட்டன் சத்திரம்	18
கம்பம்	..
கன்னிவாடி	..
கள்ளிக்குடி	29
டி. கல்லுப்பட்டி	35
கொடைக்கானல்	311
கொட்டாம்பட்டி	32
சின்னமனூர்	30
சித்தையன் கோட்டை	37
சோழவந்தான்	53
தல்லாகுளம்	23487
திண்டுக்கல்	416
திருமங்கலம்	72
திருப்பரங்குன்றம்	8208
தேனி	313
பழனி	418
பண்ணைக்காடு	32
பட்டிவீரன்பட்டி	43
பழங்காநத்தம்	31360
பெரியகுளம்	..
போடிநாயக்கனூர்	305
நத்தம்	48
நிலக்கோட்டை	40
மதுரை கிழக்கு	30024
மேலூர்	59
வத்தலக்குண்டு	40
வடமதுரை (எக்ஸ்ட்)	2
வாடிப்பட்டி	..
வேடசந்தூர்	25
எழுமலை	..
நாகமலை புதுக்கோட்டை	..
சர்க்கரை ஆலை	..

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 1,40,43,044
ரிசர்வுகள்	ரூ. 97,14,230
டிபாசிட்டுகள்	ரூ. 5,18,81,871
நடைமுறை மூலதனம்	ரூ. 11,48,43,245

சேவிங்ஸ் டிபாசிட் :

சேவிங்ஸ் கணக்குகளில் ஒரு வாரத்திற்கு ரூ. 5,000 வரை திருப்பிப் பெறலாம். அன்றாட நிலுவையின் பேரில் 4½ சதவிகிதம் வட்டி அளிக்கப்படுகிறது. செக் மூலம் வரவ செலவு செய்யலாம்.

ரெக்கரிங் டிபாசிட் :

12, 24, 36, 48, 60, 72 மாங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும். வட்டி 6·15 சதவிகிதம் முதல் 8·40 சதவிதம் வரை.

பிராவிடெண்ட் பண்டு டிபாசிட் :

7 முதல் 30 ஆண்டுகளுக்கு மாதாந்திர தவணைகளில் செலுத்தலாம். 7 சதவிகிதம் தொடர் வட்டி அளிக்கப்படும். குறைந்த பட்சத் தொகை மாதம் ரூ. 1

நிரந்தர டிபாசிட் :

3 மாதங்களுக்கும் அதற்கு மேலும் போடப்படும் நிரந்தர டிபாசிட்டுகளுக்கு 5 சதவிகிதம் முதல் 7 3/4 சதவிகிதம் வரை வட்டி அளிக்கப்படும்.

சிசன் டிபாசிட் :

1,000 ரூபாயும் அதற்கு மேலும் போடப்படும் டிபாசிட்களுக்கு 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 2½ சதவிகிதமும் அதற்கு மேல் 90 நாட்கள் வரை 3½ சதவிகிதம் வரை வட்டி அளிக்கப்படும்.

தலைமை அலுவலகத்திலும், திண்டுக்கல் கிளையிலும், விலை மதிப்புள்ள பொருள்களை பாதுகாக்கப் பெட்டகம் (SAFE LOCKER) வசதி உண்டு.

ஏனைய விவரங்களுக்கு அணுகவும் :

ஆ. சண்முகம், பி.ஏ., எச்.டி.சி.
இணைப்பதிவாளர்-செயலாளர்.

ஒரு சோறு பதம்

மதுரை மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் செய்துள்ள பணிகள்—செய்து வரும் பணிகள் — செய்திட முடிவெடுக்கப்பட்டுள்ள பணிகளில் ஒரு சில மட்டும் தொகுத்துக் கீழே தரப்படுகின்றன.

எல்லாப் பணிகளையும் இங்கே தொகுத்து வெளியிட இடம் போதாது என்பது முதன்மையான காரணம் என்றாலும் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்

பழனி நகரத்தில் குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 46 இலட்சத்து 7 ஆயிரம் செலவிடப்படும்.

கொடைக்கானல் நகர் குடிநீர்த் திட்டத்திற்கு 45 இலட்சத்து 48 ஆயிரம் செலவிடப்படும்.

மேலூர் வட்டம் குடிதண்ணீர்த் திட்டத்திற்காக ரூ. 44 இலட்சம் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரை குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 89.30 இலட்சம்.

திண்டுக்கல் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 87,32,000.

குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ. 35,86,476 ஒதுக்கப்பட்டுள்ளது. 3,520 கிணறு வேலைகள் நடைபெற்றுள்ளன.

மதுரை அலங்காநல்லூர்ச் சாலையைச் சீர்ப்படுத்த ரூ. 16 இலட்சம் செலவிடப்படும்.

திண்டுக்கல் அருகே மருதநதியின் குறுக்கே ரூ. 1¼ கோடி செலவில் அணை. இதனால் 2,250 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

ரூ. 2½ இலட்சம் செலவில் வைகை அணையை மேம்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மதுரை அய்யம்பாளையம் அருகே ரூ. 1 கோடி செலவில் புதிய அணை கட்டப்படுகிறது.

ஏறத்தாழ ரூ. 1 கோடி செலவில் பழனி—கொடைக்கானல் சாலை அமைக்கும் திட்டம்.

1971–72-ல் ரூ. 10.47 இலட்சம் செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன.

ரூ. 5 இலட்சம் செலவில் குமுளி மலைப்பாதை அகலப்படுத்தப்பட்டது.

வருசநாட்டுப்பகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே அணைகட்ட அரசு தீர்மானித்துள்ளது.

பாலாறு, பொரந்தலாறு அணை கட்டும் திட்டம் ரூ. 256 இலட்சம் செலவில்.

ரூ. 231 இலட்சம் செலவில் பனையூர் கால்வாய் வளர்ச்சித் திட்டம்.

ரூ. 2.98 இலட்சம் செலவில் மேலூர் வட்டம் உப்பாறு ஓடையின் குறுக்கே அணைக்கட்டு.

ரூ. 1.37 இலட்சம் செலவில் திருமங்கலம் வட்டம் கவுண்டன் நதியின் குறுக்கே ஓர் அணை.

திண்டுக்கல் வட்டம் தொப்பம்பட்டி அருகே அரண்மனை ஓடையின் குறுக்கே ரூ. 3.12 லட்சம் செலவில் ஒரு கண்மாய் வெட்டப்பட்டது.

வேடசந்தூர் வட்டம் வேலாயுதம் பாளையம் கிராமத்தின் ஊத்தங்கரை குறுக்கே ரூ. 2.34 இலட்சம் செலவில் ஒரு கண்மாய்.

வேடசந்தூர் வட்டம் ஒத்தநாகம்பட்டியின் அருகே நாலாலூந்து ஓடையின் குறுக்கே ரூ. 1 இலட்சம் செலவில் ஒரு கண்மாய்.

ஆத்தங்கரைப்பட்டியின் அருகில் உள்ள நதியின் குறுக்கே ரூ. 4.88 இலட்சம் செலவில் ஓர் அணைக்கட்டு.

வைகை ஆற்றின் குறுக்கே நரசிங்கபுரம் அருகில் ரூ. 7.07 இலட்சம் செலவில் ஓர் அணைக்கட்டு.

ரூ. 6.45 இலட்சம் செலவில் பெரியகுளம் வட்டம் வெங்கடாசலபுரம் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி.

உத்தமபாளையம் வட்ட வறட்டாற்றின் குறுக்கே ரூ. 66 ஆயிரம் செலவில் ஓர் அணை.

திருமங்கலம், உசிலம்பட்டிப் பகுதிகளில் கிணறு தோண்டும் திட்டம் ரூ. 14 இலட்சம் செலவில்.

திண்டுக்கல், வேடசந்தூர், வட்டங்களில் கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம் ரூ. 9½ இலட்சம்.

மதுரை மேலூர் வட்டங்களில் கிணறு தோண்டும் திட்டத்திற்கு ரூ. 63 இலட்சம்.

ரூ. 11,18,000 செலவில் மதுரை–ஆரப்பாளையம் மஞ்சள் மேடு பகுதியில் 181 வீடுகள் கட்டப்படுகின்றன.

மதுரை மாவட்டத்தில்–கருங்காலக்குடி, கன்னிவாடி ஆகிய ஊர்களில் உள்ள ஊழியர்கட்குக் குடியிருப்புக் கட்ட ரூ. 1,10,000 அரசு அனுமதி அளித்துள்ளது.

1971–72ல் ஏறத்தாழ 55,337 தாழ்த்தப்பட்ட மாணவர்கட்கு ரூ. 59 இலட்சம் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1971–72ல் தாழ்த்தப்பட்டவர் குடியிருப்புக்காக மட்டும் 52 புதிய குடிநீர்க் கிணறுகள் வெட்டுவதற்கு அரசு நிதி அளித்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் நலத்துறையினரால் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் மாணவ மாணவியருக்கு இலவச இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பள்ளி மாணவர் இல்லம் :—

அலங்காநல்லூர், திருநகர், தல்லாகுளம், பெரியகுளம், சேக்கப்பட்டி, சின்னாளப்பட்டி, மேலவளவு, போடிநாயக்கனூர், டி. வாடிப்பட்டி.

மாணவியர் இல்லம்—

உசிலம்பட்டி, திருமங்கலம், சின்னமனூர், கம்பம், செக்கானூரணி.

கல்லூரி மாணவர் இல்லம்—

திண்டுக்கல், மதுரை.

தொழிற்பயிற்சி மாணவர் இல்லம்—

மதுரையில் கோ.புதூர்.

சலவைத் தொழிலாளர்களுக்கும் முடிதிருத்துபவர்களுக்கும் இலவசத் தொழிற் கருவிகள் மதுரை மாவட்டத்தில் 100 பேர்கட்கு.

மதுரை மாவட்டத்தில் 1967–68 முதல் 1970–71 முடிய அரிசன முன்னேற்றத்திற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 63,11,455.

தொழிற் பயிற்சி பெறும் அரிசனங்களுக்கு இலவசமாகத் தொழிற்கருவிகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1967–68 முதல் 1970–71 வரை 795 பேர்கள்.

மதுரை மாவட்டத்தில் அரிசனங்களின் முன்னேற்றத்திற்காக ஒரு கூட்டுறவு மோட்டார் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட பிறமலைக்கள்ளர் வகுப்பு மாணவர்கள் 18,590 பேருக்கு 1971–72-ல் மட்டும் ரூ. 9,31,751 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கள்ளர் நலனுக்காகக் கட்டப்பட்ட பள்ளிகள் 270; விடுதிகள் 40.

1967–68 முதல் 1970–71 வரை கள்ளர் பள்ளி மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கச் செலவு ரூ. 2,50,604.

1967–68 முதல் 1970–71 வரை புத்தகங்கள் வழங்க ரூ. 28,428.

1967–68 முதல் 1970–71 வரை உபகாரச் சம்பளம் ரூ. 23,19,457.

கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு தொழில் தொடங்க ரூ. 2,500 கடனும், இலவசமாக 3 செண்ட் வீட்டு மனையும் வழங்கப்படும்.

மதுரை மாவட்டத்திற்கு திருமணக் கடன் நிதி ஒதுக்கீடு 1972–73 ஆம் ஆண்டுக்கு 3 இலட்சம்; 1972 மே முடிய வழங்கப்பட்ட தொகை ரூ. 1,07,380.

மதுரை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு உதவும் வகையில் ரூ. 13,75,000 செலவில் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி புதுக்கிணறுகள் வெட்ட ரூ. 5,000. கிணறு ஆழப்படுத்த ரூ. 2,000. பம்புசெட் அமைக்க ரூ. 3,000. ஆடு வளர்ப்புக்கு ரூ. 2,000. உழவு மாடு வாங்க ரூ. 1,000. நிலச்சீரமைப்புக்கு ரூ. 1,000 கடனாக வழங்கப்படும்.

பசுமைப்புரட்சித் திட்டத்தைத் தீவிரமாக்க மதுரை மாவட்டத்தில் 24 சாதாரண நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களும் 103 சிறிய விவசாயிகள் நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பயிர்ப்பாதுகாப்பு தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மதுரையில் "பூச்சிக் கொல்லி" மருந்து ஆய்வகம் திறக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 33 ஒன்றியங்களிலும் 33 கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைக்கப்பட்டு 1972 ஜூன் மாதம் 15 முதல் செயல்படுகிறது. ஒவ்வொரு கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்திற்கும் 1 இலட்சம் ரூபாய் வீதம் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது.

தென்னங்கன்றுகள் பயிரிட நீண்ட காலக் கடன் 1967–71 முடிய—ரூ. 1,73,760.

தென்னை பயிரிட்ட நிலத்தின் பரப்பளவு — 585 ஏக்கர்.

மதுரையில் நவசேனு

மதுரை அரசரடியைச் சேர்ந்த திரு ஜி. பி. கிறிஸ்டியான் (ஐ.எஸ்.எஸ். விக்ராந்த் கப்பற்படை) என்பவருக்கு வீரச் செயல் புரிந்தமைக்காக 'நவசேனு' பதக்கமும் 3,000 ரூபாயும் வழங்கப்படும்.

மண்வளப் பாதுகாப்பு வேலைகள் ரூ. 2,25,000 செலவில் 4,562 ஏக்கர் நிலத்தில் நடைபெற்றுள்ளன.

மதுரையில் ரூ. 19 இலட்சம் செலவில் குழந்தைகளுக்குப் புதிய மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.

மதுரையில் ரூ.42 இலட்சம் செலவில் தொழிலாளர் மருத்துவமனை.

மதுரையில் நடமாடும் மருத்துவப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர் ஆயுள் காப்பீட்டு மருத்துவமனை ஒன்று மதுரையில் உள்ளது.

தி. கல்லுப்பட்டி வட்டாரத்தில் 2 இடங்களிலும் திண்டுக்கல் வட்டாரத்தில் 2 இடங்களிலும் குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படும். 5 வயதுக்கு உட்பட்ட 200 குழந்தைகளுக்குச் சத்துணவும் 120 கர்ப்பிணிகளுக்கு சத்துணவும் வழங்கும் திட்டம்.

தேனியில் ரூ. 10 இலட்சம் செலவில் மருத்துவமனை.

மதுரை மாவட்டத்தில் செயல்பட்டுவரும் 22 நிலவள வங்கிகள் மூலம் 1971–72-ஆம் ஆண்டில் 667 புதிய கிணறுகளுக்கு மானியத்தொகை ரூ. 3,33,300 வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கிணறுகள் வெட்டவும், இயந்திரங்கள் வாங்கவும், டிராக்டர் வாங்கவும் 1971–72-ஆம் ஆண்டில் நீண்டகாலக் கடனாக ரூ. 1,77,35,930 வழங்கப்பட்டுள்ளது.

பழனி மலைப்பகுதியில் உள்ள சிறு விவசாயிகளுக்குக் காப்பி பயிரிட நிலவள வங்கி மூலம் 1–7–1971 முதல் 31–3–1972 வரை நீண்ட காலக் கடனாக ரூ. 5·03 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டக் கூட்டுறவு வங்கியின் சார்பாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறுகிய மத்திய காலக் கடன்.

	ரூ. இலட்சத்தில்.
1967–68	343·90
1968–69	450·69
1969–70	517·10
1970–71	227·10

வீடற்றவர்களுக்காக அரசின் திட்டப்படி வீடு கட்டும் சங்கங்கள் மூலமாகக் கடன் ரூ. 2,99,750 வழங்கப்பட்டது.

கிராம வேலை மானியத்திட்டத்தின் கீழ் 1971–72-ஆம் ஆண்டில் பள்ளிக் கூடங்களுக்கு நிதி ஒதுக்கீடு ரூ. 4,93,176.

மேலூரில் 9 இலட்ச ரூபாய் செலவில் அரசினர் கலைக்கல்லூரி கட்டப்பட்டுள்ளன.

திண்டுக்கல்லில் ரூ.14 இலட்சம் செலவில் புதிய அரசுக் கலைக் கல்லூரி.

1967–71 வரை மதுரை மாவட்டத்தில் 10 புதிய கல்லூரிகளும் 13 உயர்நிலைப்பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மதுரையில் இயங்கிக்கொண்டிருக்கும் பால் வழங்கு திட்டத்தின் கீழ் 484 பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

1970–71-ல் இச்சங்கங்கள் மூலமாக பால்மாடுகள் வாங்க ரூ. 32·3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1972 ஏப்ரல் மாதத்தில் மட்டும் 453 பேருக்குக் கறவை மாடுகள் வாங்க அரசு கடனாக அளித்த தொகை ரூ. 4,90,500.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக இவ்வாண்டு ரூ. 25 இலட்சம் செலவிடப்படும். இவை 1¼ இலட்சம் வீதம் 20 ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

மதுரையில் 10 இலட்சம் ரூபாய் செலவில் அமையவிருக்கும் அரசாங்க அச்சகத்தின் மூலம் 800 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

மதுரை மாவட்டத்தில் 672 ஆசிரியர்களுக்கு 1970–71-ல் வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

இளைஞர் அணித் திட்டம் மூலம் கடந்த ஆண்டு 200 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் 1972–73-ல் மீண்டும் 155 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது.

அலங்காநல்லூர், நத்தம், வாடிப்பட்டி, தொப்பம்பட்டி, போடிநாயக்கனூர் ஆகிய வட்டாரங்களில் விவசாயப் பொறியியல் பணி கூட்டுறவு நிலையங்களில் பொறியியல் வல்லுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ரூ. 40 இலட்சம்செலவில் இணைந்த நீதிமன்றங்கள் கட்டப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

1947 முதல் 1966 வரை 20 ஆண்டுகளில் மதுரை மாவட்டத்தில் வழங்கப்பட்ட நிலப்பட்டாக்கள்—9,596.
அந்த நிலங்களின் அளவு-27,745 ஏக்கர்.
வீட்டுமனைப் பட்டாக்கள்—58,334

1967 முதல் 1970 முடிய நான்கே ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிலப் பட்டாக்கள்—12,525.

அந்த நிலங்களின் அளவு—35,046·25 ஏக்கர்.
வீட்டுமனைப் பட்டாக்கள்—10,071

1971–72-ல் வழங்கப்பட்ட நிலப் பட்டாக்கள் 8,981.
அந்த நிலங்களின் அளவு-16446·41 ஏக்கர்.
வீட்டுமனைப்பட்டாக்கள்—8,030

மதுரையில் ரூ.12 கோடி மூலதனத்தில் நைலான் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகிறது.

மதுரை அருகே வத்தலக்குண்டில் உணவு - பழம் பொருட்களுக்கான தொழிற்பேட்டை ஒன்று ரூ. 1 இலட்சம் செலவில் தற்போது நிறுவப்பட்டு உள்ளது.

மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் நல அலுவலகம் மூலமாகத் தீர்க்கப்பட்ட தொழிலாளர் நலப்பிரச்சினைகள்—1966 முதல் 1971 வரை 3,211.

கோடைக்கானலில் மலைவாசிப்படி உயர்வு ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஊராட்சி ஒன்றியத்தில் வேலை பார்க்கும் அலுவலர்களுக்கும் இப்போது வாங்கிக் கொண்டிருக்கும் படியைவிடக் கூடுதலாக ரூ. 25 கிடைக்க அரசு வழிவகை செய்துள்ளது. பதவிக் காலத்தில் இறந்து போகும் அரசாங்கச் சிப்பந்திகள் குடும்பத்திற்கு இலவச வைத்திய உதவி அளிக்கப்படும்.

மதுரை மாவட்டத்தில் 1967 முதல் 1972 மார்ச் முடிய வழங்கப்பட்ட பேருந்து வழித்தடங்கள் 106.

மதுரையில் 346 பேருந்துகள் அடங்கிய டி. வி. எஸ். நிறுவனம் பாண்டியன் போக்குவரத்துக் கழகமாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த 1971 டிசம்பர் மாதம் ஏற்பட்ட வைகை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகட்டிக்கொள்ள தலா ரூ. 250 வீதம் 17 இலட்சம் செலவிடப்படும்.

1968–70-ஆம் ஆண்டில் பருவ மழை தவறியதால் இம்மாவட்டத்திற்கு துயர் துடைப்புப்பணிகளுக்காக ரூ. 1,38,93,000 அரசு அளித்துள்ளது.

மதுரையில் புடை வடிகால் (பாதாளச் சாக்கடை) அமைக்க ரூ. 1 கோடியே 9 இலட்சம் செலவிடப்படும்.

16·65 இலட்சத்திற்கு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்மாவட்டத்தில் 757தியாகிகளுக்கு மாதம் ரூ. 50 வீதம் உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

சிரணியினர் மதுரை மாவட்டத்தில் ரூ. 14 இலட்சம் மதிப்புள்ள வேலைகளைச் செய்துள்ளார்கள்.

1972–73-ல் சிரணியினருக்கு அரசு ரூ. 1 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா: விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை: இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லிக்கோ வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



நெகோலின்: சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏற்றித் தர வல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெண்மைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

தார்ப்பொருள்கள்: பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால் ஸைலினல், பாலிவாலெண்ட் ஃபினல்கள்.

நெய்வேலி லிக்னைட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி-1

FDSNLC96aTM

மதுரை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு அரசு வழங்கியுள்ள சலுகைகள்!

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை உயரவும், அவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறவும் தமிழ் நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இலவச வீட்டுமனை வழங்குதல், குடிநீர் வசதி செய்தல், அரிசனக் காலனி, கிணறு, இடுகாடு முதலியவைகளுக்குப் பாதை அமைத்தல், தனி இடுகாடு வழங்குதல், மின்சார வசதி செய்தல் போன்ற பணிகளை இத்துறை இனிது நிறைவேற்றி வருகின்றது. மேலும், கல்வி சம்பந்தமாக இது ஆற்றுகின்ற பணிதான் எத்தனை! எத்தனை! கல்விக் கூடங்கள் அமைத்தல், கல்வி பயில உபகாரச் சம்பளம் வழங்குதல், பள்ளியில் மதிய உணவு வழங்குதல், மாணவ மாணவிகளின் இல்லங்கள் அமைத்தல், பள்ளியில் பலகை, புத்தகங்கள் முதலியன வழங்குதல், பள்ளிகளிலும் இல்லங்களிலும் மேல் உடுத்திக் கொள்ளத் துணி வழங்குதல், படிப்பில் ஊக்கமளிக்கத் தலைசிறந்த மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்குதல், மாணவர்களுக்குக் கல்வி பயிலவைக்கும் திறமையில் முன்னணியில் வந்துள்ள பள்ளி ஆசிரியர், இல்ல நிருவாகிகளுக்குப் பரிசு வழங்குதல், பள்ளிக்கு நாள் தவறாமல் வந்த மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்குதல் எனப்பல்வேறு வகையில் இத்துறைக்கு மேலும் மேலும் அரசு ஊக்கந் தருகிறது.

வேளாண்மைத் துறையிலோ, கிணறு வெட்ட மானியம் வழங்குதல், உழவு மாடுகள் வழங்குதல், தொழிற் கருவிகள் வழங்குதல் முதலான உதவிகளைச் செய்து வருகின்றது. தீண்டாமை ஒழித்தலில் தீவிரமாகப் பணியாற்றிச் சமுதாய நல மன்றங்கள் அமைத்தும், கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் வழங்கியும் சிறப்பித்து வருகின்றது.

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக நிலை உயர, அவர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்கப்படல் அவசியம் எனக் கருதி வீட்டடி நிலம் கையகப் படுத்துதல் விரிவாக இம்மாவட்டத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இம் மாவட்டத்தின் நான்கு கோட்டங்களுக்கும் நான்கு தனித் தாசில்தார்கள் நிலம் கையகப்படுத்தும் வேலையைக் கவனித்து வருகின்றனர்.

கையகம் செய்யப்பட்டுள்ள

ஆண்டு.	மனைப்பரப்பு.	செலவு
1967–68	47–50	3,19,000
1968–69	25–15	1,47,400
1969–70	36–11	1,09,825
1970–71	18–34	55,000

கையகம்செய்யப்பட்ட 15,311 மனைகளில், 8,971 மனைகள் காலியாக உள்ளன.

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார வசதியின்மை காரணமாகக் கையகம் செய்யப் பட்ட மனைகளில் வீடுகள் கட்டப் படாமல் நீண்டகாலமாக இருந்தன. இந்நிலையை மாற்றத் தமிழக அரசு வீடுகட்டும் திட்டமொன்றைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் படி, குறைந்த செலவில் வசதியான தனி வீடு ரூ. 940-க்கும் இரட்டை வீடு ரூ. 1,805-க்கும் கட்டப்படும். மதுரை மாவட்டத்திற்கு 1970–71 நடப்பு ஆண்டிற்கு ரூ. 57,000 மானியத் தொகையாகவும், ரூ. 16,000 கடன் தொகையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 63 வீடுகள் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது.

அரிசன் நலத்துறையில் அரசு ஆற்றிவரும் பணிகள் மேலும் மேலும் பரந்து சிறந்து வருவதைத் தமிழகம் நன்கு உணரும். குறிப்பாக மதுரை மாவட்டத்தில் அரிசன நலத்துறை ஆற்றியுள்ள பணிகள் என்னென்ன என்பதை இங்குள்ள புள்ளி விவரங்கள் தெள்ளத் தெளிய விளக்குகின்றன.

மேலும், மாநில வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும், அரிசனங்களுக்கு வீடு கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு 100 கூட்டுறவுச் சங்கங்கள் வீதம், 5 ஆண்டுகளில் 500 சங்கங்கள் உருவாக்கி வீடில்லாத தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரத் திட்டமிடப் பட்டுள்ளது. வீட்டு வசதி வாரியம், இத்திட்டத்தைக் கூட்டுறவுத் துறையின் மூலம் செயல் படுத்துகிறது. மேலும் அரிசனங்களுக்கு இடுகாட்டிற்காக நிலம் கையகம் செய்யப்பட்டும் கொடுக்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள், சமுதாயத்தில் முன்னேறக் கல்வி வளர்ச்சிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இம்மாவட்டத்தில் அரிசன நலத்துறையின்கீழ் 13 முதல் நிலைப் பள்ளிகளும், 8 நடுநிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 4,012 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இப்பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு இலவசமாகக் கரும் பலகைகள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.24,000 செலவு செய்யப்படுகிறது.

மேலும், அரிசன நலப்பள்ளிகளில் படிக்கும் முதல் ஐந்து வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாகச் சட்டையும், அரைக் கால் சட்டையும் வழங்கப்படுகின்றன. மேலும் படிப்பில் ஊக்க மளிக்கத் தலைசிறந்த மாணவ, மாணவிகளுக்கும், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் பரிசு வழங்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்காக இத்துறையின் கீழ் 66 இல்லங்கள் செயல்படுகின்றன. இந்த இல்லங்களில் மொத்தம் 3,312 மாணவ மாணவியர்கள் உள்ளனர். நடப்பு ஆண்டில் நிலக்கோட்டை வட்டம் கொண்டயம்பட்டி கிராமத்தில் ஒரு மாணவர் இல்லம் திறக்கப்பட்டுள்ளது.

'செவிக்குணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்பட வேண்டும்' என்ற உயரிய நோக்கத்துடன், பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. இந்த மாவட்டத்தில் 21 அரிசன நலப் பள்ளிகள் தவிர 31 தனியார் பள்ளிகளுக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. மொத்தம் பயன் அடையும் மாணவர்களின் எண்ணிக்கை 7,130.

கடந்த நான்கு ஆண்டுகளில் உபகாரச் சம்பளம் மூலமாக ஆயிரக் கணக்கான மாணவர்கள் பெரும்பயன் அடைந்துள்ளனர். 1970–71-ல் பள்ளிகளில் 35,969 பேரும், கல்லூரிகளில் 8,020 பேரும் பயன் அடைந்துள்ளனர். குறைந்த அளவு 40 சதவீதம் மதிப்பெண்கள் பெற்ற பின்னிலை வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களும் உபகாரச் சம்பளம் பெறத் தகுதி பெற்றவர்களாயிருக்கிறார்கள். இதன் விளைவாக உபகாரச் சம்பளம் பெறும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்துள்ளது.

காந்தி நினைவு உபகாரச் சம்பளம், கல்லூரி புகுமுகத் தேர்வில் முதன்மையாகத் தேறிய அரிசன மாணவர் ஒருவருக்கும், மாணவிக்கும் அவர்களது பட்டப்படிப்பைத் தொடர்ந்து படிக்க முழுத் தொகையாக ரூ. 5,00-ம் மாதம் 100-ம் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1970–71-ஆம் ஆண்டிலிருந்து அமலுக்கு வந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உழவர்களுக்கு உழவு மாடுகள் வாங்கித் தரப்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் 62 இணை மாடுகள் வாங்கித் தரப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டிலிருந்து பாசனக் கிணறு வெட்ட நிதி உதவியை அரசு ரூ. 1,500-ல் இருந்து ரூ. 2,000-மாக உயர்த்தி உள்ளது. நடப்பு ஆண்டில் அரிசனக் குடியிருப்புகளுக்குக் குடி தண்ணீர்க் கிணறுகள் தோண்ட ரூ. 86,500 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் முதன் முறையாக இம்மாவட்டத்தில் அரிசனங்களின் ஒத்துழைப்பின் பேரில், அவர்களின் முன்னேற்றத்திற்காக ஒரு கூட்டுறவு மோட்டார் சங்கம் அமைக்கப் பட்டு இலாபகரமாக இயங்கி வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 570 அரிசனக்குடியிருப்புகள் உள்ளன. தமிழக மின் வாரியம் எல்லா அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கத் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. அரிசனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொருளாதார வசதியைப் பெருக்கவும் அவர்களுக்கு வட்டியில்லாத கடன் வழங்கித் தொழில் துறையிலும், வியாபாரத்திலும் ஈடுபடுவதற்கெனப் புதுத்திட்டம் ஒன்று 1968–69-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அவரவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் தன்மைக்கேற்ப ரூ. 250 முதல் ரூ. 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் தொகை எளிதாக 100 தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படுகிறது.

கிராமப் புறங்களில் அரிசன மக்கள் நலத்திற்காக இம்மாவட்டத்தில் மூன்று சமுதாய நல மன்றங்கள் இயங்கி வருகின்றன. தமிழக அரசு இந்த மாவட்டத்திற்குத் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காக ஒரு 'டேப் ரிக்கார்டர்' இயந்திரம் வழங்கியுள்ளது. திங்கள் தோறும் அரிசன விழா மாவட்டத்தில் பல பகுதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 செலவிட அரசு அனுமதித்துள்ளது.

சாதிக் கொடுமையைக் களைந்தெறியச் சிறந்த வழி கலப்புத் திருமணமே என்பதற்கு ஏற்பக் கலப்புத் திருமணம் செய்த தம்பதியினருக்கு ஆண்டு தோறும் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில், ஆறு தம்பதிகள் இது வரை தங்கப் பதக்கம் பெற்றுள்ளனர்.

கால்நடை: ஒரு கணக்கு!

நமது மாநிலத்தின்பொருளாதாரம் பெருமளவுக்கு வேளாண்மையைச் சார்ந்துள்ளது. வேளாண்மையின் செழிப்பும், கால்நடைச் செல்வத்தின் வளமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். தமிழ் நாட்டின் கால் நடைகளின் தொகை மிகப் பெருமளவில் உள்ளது. கால்நடைகளின் எண்ணிக்கை 108.59இலட்சமாகும். எருமைகளின் தொகை 27.24 இலட்சம். செம்மறிஆடுகளின் தொகை 66.21 இலட்சம் ஆகும். வெள்ளாடுகளின் தொகை 37.71 இலட்சம். பன்றிகளின் தொகை 4.75 இலட்சம். கோழிகளின் தொகை 112.26 இலட்சம்.

கால்நடை வளர்ச்சிக்கெனப் பணியாற்றுவோர் பலர். அவர்களில், கால்நடை உதவி மருத்துவர் 883 பேர் ; கால்நடை மருத்துவம் — கால்நடை ஆய்வாளர்கள் 87 பேர் ; முதல் நிலைக் கால்நடை உதவியாளர்கள் 620 பேர் ; இரண்டாம் நிலைக் கால்நடை உதவியாளர்கள் 2,735 பேர்.

தற்போது இம் மாநிலத்தில் கால்நடை மருத்துவ மனைகள் 35 உள்ளன ; அவற்றில் சைதாப்பேட்டை, திருநெல்வேலி, கோயம்புத்தூரிலுள்ளமூன்று கால்நடை மருத்துவ மனைகளும் மருத்துவ ஆய்வுக் கூடங்களுடன் முழுமையான மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன; 485 கால்நடை மருத்துவ மருந்தகங்கள், 13 தனி மருத்துவமனை ஆய்வுக் கூடங்கள் தமிழகத்தில் உள்ளன.

1970-71-ல் 17,55,879 மாடுகளுக்குச் செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்யப்பட்டது. 17,25,388 மாடுகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடப் பட்டன. 5,32,248 மாடுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் பர்மா—இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகள்! சலுகைகள்

மதுரை மாவட்டத்தில் பர்மாவினின்று தாயகம் அனுப்பப்பட்டவர்க்காகத் திருநகரில் தற்காலிக முகாம் இருந்தது. இம்முகாம் 30–4–1966-ல் மூடப்பட்டது.

மதுரை மாவட்டத்திற்குப் பர்மாவிலிருந்து தாயகம் அனுப்பப்பட்டவர் குடும்பங்கள் 3,814 வந்தன. இவர்களில் 3,322 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டது. இவர்களில் உதவி பெற்ற 946 குடும்பங்களும், உதவியைப் பெருமலேயே 492 குடும்பங்களும் மதுரை மாவட்டத்தை விட்டுச்சென்றுவிட்டன. தற்போது 2,376 குடும்பங்கள் மதுரையில் வாழ்கின்றன. இக்குடும்பங்கள் மூன்ருண்டுகட்கு முன்னர் மதுரைக்கு வந்தவையாகும்.

சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையினின்று 582 குடும்பத்தாரும், இவ்வொப்பந்தத்துக்குட்படாத 391 குடும்பத்தினரும், மதுரைக்கு வந்தனர்; 441 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டது. 11 குடும்பத்தினர் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொருளுடையவராயிருந்தமையால் அவர்கள் எந்த உதவியும் பெறத் தகுதியற்றவராயினர்.

தாயகம் வந்திருந்த இக்குடும்பத்தினரில் பெரும்பாலானவர்கள், மதுரையிலும் மதுரை நகரைச் சுற்றியுள்ள இடங்களிலும் வாழ்கின்றனர்.

இவ்வாறு, பர்மாவினின்றும் இலங்கையினின்றும் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்ட குடும்பத்தினரின் மறுவாழ்வுக்கு மதுரையில் சில திட்டங்கள் வகுக்கப்பட்டன. நிலத் திட்டம், தொழில் செய்யக் கடன் வழங்கல், வீடுகட்டக் கடன் வழங்கல், இலங்கையினின்றும் தாயகத்திற்கு அனுப்பப்பட்டவர்களுக்கு ஒப்பந்தத்திலில்லாத தொழில் வினைஞர்களுக்குக் கடன் வழங்கல், வேலை பெற உதவி வாய்ப்புப் போன்றவை வகுக்கப்பட்டன.

(அ) அனுமதிக்கப்பட்ட திட்டங்களும் செயல் முறையில் இருப்பனவும்: மேலூர் வட்டத்தில்

பர்மாவினின்று தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்ட விவசாயிகளில் 10 குடும்பத்தினர் மத்திய அரசினரால் வகுக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றனர். இத் திட்டம் 25 ஏக்கர் நிலங்களைக்கொண்டது. பர்மாவினின்று தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்ட ஒவ்வோர் குடும்பத்திற்கும் 2½ ஏக்கர் வீதம் கொடுக்கப்பட்டது; இத் திட்டத்திற்கான செலவு ரூபாய் 50,000; எருதுகளும் வேளாண்மைத் தொழிலுக்குரிய கருவிகளும் வாங்கப்பட்டு விட்டன. கிணறு வெட்டுவதற்கு ரூ. 200 கொடுக்கப்பட்டது.

மேலூர் வட்டம் அம்பலக்காரன்பட்டித் திட்டத்தின் கீழ் பர்மாவினின்று தாயகம் அனுப்பப்பட்ட 20 குடும்பங்கள் பயனடைகின்றன. இதற்கென 88.54 ஏக்கர் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. இத் திட்டத்திற்குச் செலவு ரூ. 83,280 ஆகிறது. இந்த நிலங்களுக்கு இவர்கள் முன்னரே குடிவந்து விட்டனர். தொழில் செய்ய ரூ. 1,000-க்கு மேற்படாது கடன் பெற்றவர்களில் 20 குடும்பங்களுக்கு நிலப் பட்டாவும், குடும்பம் ஒன்றுக்கு 2½ ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டன. நிலங்கள் டிராக்டரால் பண்படுத்தப்பட்டு விட்டன. எருதுகளும், உழவுக் கருவிகளும் வாங்கப்பட்டுவிட்டன. நான்கடி ஆழம் வரை கிணறுகளும் தோண்டப்பட்டிருக்கின்றன.

பூமலைக்குன்று—வேப்பம் பட்டித் திட்டம்.

இத் திட்டத்தின்கீழ் 39 குடும்பத்தினர் பயன்பெறுகின்றனர். 119.75 ஏக்கர் நிலங்கள் இத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதற்காகும் செலவு 1,70,001 ரூபாயாகும். இந்த இடங்களைச் சட்டத்திற்கு மாருக உரிமை கொண்டாடியவர்கள் அங்கிருந்தும் அகற்றப்பெற்றனர்; இலங்கையினின்று தாயகம் திரும்பி வருவார்க்கு இந்நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 119.75 ஏக்கர் நிலத்தில் 42 ஏக்கர் நிலங்களில் வனவளப் பயிர், வனவளத் துறையினரால் சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழகம் [illegible] எனும் கொள்கையில் வளர்ந்து வாழ்ந்தது; அன்று தொட்டு இன்றுவரை அயலவர்களை எல்லாம் ஆதரித்துத் தமிழ்நாடு போற்றி வருவதை வரலாறு கூறும்; சாதி சமய வேறுபாடின்றி அயல் நாட்டினின்று வந்தவர்களையும் வரவேற்று வாழ்வளிப்பது; இங்கிருந்து திரைகடலோடியும் திரவியம் தேடச் சென்ற தமிழக மக்கள் அரசியற் சூழ்நிலையால் மீண்டும் தமிழகம் வரும் நிலை ஏற்பட்டது. அவர்களுக்கு மதுரை மாவட்டத்தில் இருக்க இடமளித்து, நிலமளித்து, இல்லங்கள் கட்டி வாய்ப்பளித்துத் தொழில் வழங்கி ஆதரித்த பணியைத் தொகுத்துத் தருகிறது இந்தக் கட்டுரை.

இவை தவிரச் சில திட்டங்கள் தீட்டப்பட்டு அரசினரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. இத் திட்டத்திஞல் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்ட 6 குடும்பங்கள் பயன் பெறும். இது 18 ஏக்கர் கொண்ட திட்டமாகும்; இதற்காகும் செலவு ரூ. 63,180. இது தென்னை பயிரிடுவதற்கான திட்டமாகும்.

கொடைக்கானல் வட்டத்தில் கூக்கல் திட்டமும் அரசினர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட திட்டங்களில் ஒன்ருகும். இது 577.82 ஏக்கர்களைக் கொண்டது. இது உருளைக் கிழங்கு பயிரிட ஏற்றது. இதஞல் 110 குடும்பங்கள் பயன் பெறும். இதற்காகும் செலவு ரூபாய் 6,82,000.

மற்றும் மேலூர் வட்டத்திலுள்ள விஜயநகரம், பூதமங்கலம், கொடுக்கம்பட்டித் திட்டமும் இதனுள் ஒன்ருகும். இதில் 338.54 ஏக்கர் நிலங்கள் அடங்கியுள்ளன. இதில் 125 ஏக்கர் நிலம் பயிரிடுவதற்கு ஏற்றது. இதஞல் 90 குடும்பங்கள் பயன் பெறும்.

தொழிற் கடன்

தொழிற் கடஞைகப் பர்மாவினின்று தாயகம் திருப்பி அனுப்பப்பட்டவர்க்கு வழங்க ரூபாய் 22,09,166 கொடுக்கப்பட்டது. இது 3,043 பேருக்கு 1970–71-ல் கொடுக்கப்பட்டது; 1971–72-ல் ரூ. 5,82,270 செலவு செய்யப்பட்டது; 309 பேர் இதைப் பெற்றனர். 1972–73-க்குத் தொழிற் கடஞய் வழங்க ரூ. 6,50,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையினின்று தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டவரில் 228 குடும்பங்களுக்கு 1970–71ல் இத் திட்டத்தின் கீழ் 3,20,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது. 1971–72-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 3,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை 171 குடும்பங்களுக்கு ரூ. 2,98,600 அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 1972–73லும் இத்திட்டத்தின்கீழ் ரூ. 3,00,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

வீட்டுக் கடன்

பர்மாவிலிருந்து தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டவர் வீடு கட்டி நலம் பெற இக்கடன் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 783 பேருக்கு 9,21,700 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.; 1971–72-ஆம் ஆண்டில் 302 குடும்பங்களுக்கு மொத்தமாக 5,00,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இந்த 302 குடும்பங்கள் தவிர தனக்கன்குளக் கிராமத்தில் ரூ. 4,600 செலவில் பர்மாவிலிருந்து தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்க்காக 407 வீடுகள் கட்டுப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு (1971) டிசம்பர் திங்களில் வைகை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 144 சலவைத் தொழிலாளர்களுக்குத் தொழிற்கருவிகளை அரசு இலவசமாக வழங்குகிறது. இதற்கு ஆகும் செலவு ரூ. 24,480.

1972–73-ல் தனக்கன் குளக் கிராமத் திட்டத்திற்காக ரூ. 7,00,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்க்கு இந்த வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் 1970–71-ல் ரூ. 1,79,750 ரூபாய் 92 பேருக்குக் கடஞகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1971–72-ல் இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,00,000; ரூ. 99,225 இத் திட்டத்தின்கீழ் செலவு செய்யப்பட்டு 71 குடும்பங்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. 1972–73-ல் இத்திட்டத்திற்கு ரூ. 1,00,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

குடியிருப்பு முகாம்கள்

வீடு கட்டக் கடன் இவர்களுக்கு வழங்கப்பட்டபோதிலும் பல்வகை வசதிகளையும் இவர்களுக்குக் குறைந்த செலவில் வழங்க எண்ணி இவர்கள் ஒன்ருய்க் குடியிருப்பு முகாம்கள் அமைக்கவே ஊக்குவிக்கப்படுகின்றனர். இம்முறையில் குடியிருப்பு வீடுகள் மேலூரிலும், சிந்தாமணியிலும் பர்மாவினின்று தாயகம் வந்தார்க்கு முறையே 53 வீடுகளும் 32 வீடுகளும், இலங்கையினின்று வந்தவர்க்கு பனையூரில் 12 வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

தொழில் வினைஞர்க்குக் கடன்

இலங்கையினின்று தாயகம் திருப்பி அனுப்பப்பட்டவரில் தொழில் வினைஞர்க்குக் கடன் வழங்கு திட்டத்தின் கீழ் 1971–72-ல் ரூ. 500 வீதம் 25 பேருக்கு ரூ.12,500 அனுமதிக்கப்பட்டது. 1971–72-ல் இத்திட்டத்தில் 15 பேருக்கு ரூ. 500 வீதம் ரூ. 7,500 அனுமதிக்கப்பட்டது. 1972–73-க்கு ரூ. 5,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

பர்மாவிலிருந்து தாயகம் திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்குப் பெட்டிக் கடைகள் கட்டி வழங்க ரூ. 57,100 நகர சபைகளுக்கும், ஊராட்சிகளுக்கும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தின் கீழ் திண்டுக்கல், பழனி, பெரியகுளம் நகரசபைகளுக்கு முறையே ரூ. 38,700; ரூ. 6,000; ரூ. 2,700 அனுமதிக்கப்பட்டன. இத் தொகையால் திண்டுக்கல்லில் 40 பெட்டிக் கடைகளும், பழனியிலும் பெரியகுளத்திலும் முறையே ஆறு, பெட்டிக் கடைகளும் நான்கு பெட்டிக் கடைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

ஆண்டிப்பட்டி, கூடலூர், உசிலம்பட்டி, வத்தலக்குண்டு, பேரூராட்சிகளில் முறையே ரூ. 2,500 ; 2,200 ; 2,500 ; 2,500 செலவில் ஆண்டிப்பட்டியில் 3 பெட்டிக் கடைகளும், கூடலூரில் 3, உசிலம்பட்டியில் 5, வத்தலக்குண்டில் 5 பெட்டிக் கடைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

வேலை கிடைக்க உதவிகள்

அரசினர் அலுவலகத்தில், பர்மாவினின்று தாயகம் திருப்பி அனுப்பப்பட்டவர்களில் 104 பேருக்கும், இலங்கையினின்று வந்தவர்களில் 21 பேருக்கும் வேலைகள் வழங்கப்பட்டன. தனிப்பட்டவர் நிலையத்தில் பர்மாவினின்று வந்தவர்களில் 43 பேருக்கும் இலங்கையினின்று வந்தவர்களில் 6 பேருக்கும் வேலை பெற உதவி வழங்கப்பட்டது. கூட்டுறவு நூற்பாலையில் பர்மாவிலிருந்து வந்தவர்களில் 38 பேருக்கும், இலங்கையிலிருந்து வந்தவர்களில் 4 பேருக்கும் வேலை பெற உதவி அளிக்கப்பட்டது. ஐ. டி. ஐ.-யில் 46 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி

கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத் தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்

கதர் கிராமத்
தொழில் துறை
2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்...

மதுரையில் நகராட்சி வளர்ந்த விதம்

மதுரையில், முதன் முதலில் நகராட்சி 1—11—1666 அன்று உருவாகியது. முதல் நகராட்சிக் குழுவில், தலைவர் (President), துணைத்தலைவர் (Vice President), அலுவல் சார்பற்ற ஆணையாளர் நால்வர் என, ஆறு பேர் உறுப்பினராக இருந்தார்கள். இந்த அறுவரில், தலைவரும் துணைத்தலைவரும் அரசு அலுவலர்கள் ஆவார்கள். ஆணையாளர்கள் நால்வரும் நியமனம் செய்யப் பெற்ற உறுப்பினர்கள். மதுரை நகரவையின் முதல் தலைவர் மதுரையின் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு வி. எச். லெவிங்கே என்னும் ஆங்கிலேயர்.

அதன் பிறகு, எட்டு ஆணையாளர்கள் வாக்கெடுப்பின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். ஆறு ஆணையாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்கள் தங்களது அலுவலகத்தை 15—3—1882 அன்று துவக்கினார்கள்.

1885, 1886-ஆம் ஆண்டு வாக்கில், ஆணையாளர்கள் உறுப்பினர்கள் என்று வழங்கப் பெற்றார்கள். President என்று சொல்லப்படும் தலைவர், Chairman என்று வழங்கப் பெற்றார். அந்தத் தலைவர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்ற முதல் தலைவர் ராவ் பகதூர் இராம சுப்பையர்.

1884-ஆம் ஆண்டில் நகராட்சிக் குழு விரிவாகியது. உறுப்பினர் தொகை 24 ஆகியது. இவர்களில் அறுவர், அரசினால் நியமிக்கப்பட்டார்கள்.

1920-ஆம் ஆண்டில் சென்னை மாநில நகராட்சிச் சட்டம் அமலாகியதனால்- நகரவையின் உறுப்பினர் தொகை 36 ஆகியது. அவர்களில் 9 பேர் அரசினால் நியமிக்கப் பெற்றார்கள். மேற் சொன்ன சட்டத்தின் வாயிலாகப் புது மாற்றம் ஒன்றும் ஏற்பட்டது. நகராட்சித் தலைவருக்குச் சம்பளம் வழங்கப் பட்டது. ஆனால், இந்தச் சம்பள முறை 1933-ல் மாற்றம் அடைந்தது.

சம்பளம் இல்லாத நகராட்சித் தலைவரும் அவருக்கு உதவியாக ஆணையாளர்களும் கொண்ட ஒரு திட்டம் உருவாகியது. எல்லா உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். எவரும் நியமனம் செய்யப் பெறவில்லை.

1966-ஆம் ஆண்டு, மதுரை நகராட்சி தனது நூற்றாண்டைக் கொண்டாடியது. அந்தச் சமயத்தில் நகராட்சி உறுப்பினர் எண்ணிக்கை 36.

1969-ஆம் ஆண்டில், 36 உறுப்பினராக இருந்த நகரவை 48 உறுப்பினர்களைக் கொண்டதாக மாறியது. 33 வட்டங்கள் 45 வட்டங்களாக உயர்ந்தன.

1971-ஆம் ஆண்டு மே முதல் நாளன்று மதுரை நகராட்சி, மாநகராட்சியாக உயர்த்தப்பெற்றது. நகரவைத் தலைவரான எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் நகரத் தந்தையானார். நகரவை உறுப்பினர்கள் மாநகராட்சி உறுப்பினர்களாயினர். மூன்று உறுப்பினர்கள் நியமனம் செய்யப் பெற்றதனால், நகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 51 ஆக உயர்ந்திருக்கிறது.

1866-ல் நகராட்சியின் அலுவலகம், மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் உள்ள ஓர் அறையில் இயங்கியது.

பின்பு, 1867-ல் அது 88 ரூபாய் வாடகையில் பாட்டர்சன் பங்களாவிற்கு மாற்றப் பட்டது. அதன் பின்னர், திருமலை நாயக்கர் மகாலுக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் அமெரிக்க மிஷன் மருத்துவ மனையைச் சேர்ந்த ஒரு கட்டடத்திலும் இயங்கியது.

1957 ஜூன் திங்களில் சிவகெங்கைப் பங்களாவுக்கு நகராட்சி அலுவலகம் மாற்றப் பெற்றது. 1971 அக்டோபர் திங்களில் மதுரை மத்தியப் பேருந்து நிலையத்திற்கு எதிரேயுள்ள அரசினர் பழைய மருத்துவ மனைக் கட்டடத்திற்கு மாற்றப் பெற்றது. விரைவில் மாநகராட்சிக்குச் சொந்தக் கட்டடம் உருவாக இருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் நெல் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

பயிர் விளைச்சல் போட்டியின் 18-வது விதியின்படி, 1970-71-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டப் பயிர் விளைச்சல் போட்டியில் கீழ்க்கண்ட உழவர் பெருமக்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

முதற்பரிசு

திரு சங்கைபால் சின்னப்பன்,
பெஸ்கி கல்லூரி,
திண்டுக்கல்,
மதுரை மாவட்டம்.

இவர் ஏக்கருக்கு 8,518 கிலோ நெல் விளைவித்து முதற்பரிசு பெற்றுள்ளார்.

இரண்டாம் பரிசு

திரு வி. புலியக்கோன்,
சத்திரப்பட்டி கிராமம் (மஞ்சம்பட்டி),
மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்,
மதுரை மாவட்டம்.

இவர் ஏக்கருக்கு 8,188 கிலோ நெல் விளைவித்து இரண்டாம் பரிசு பெற்றுள்ளார்.

சாதனைக்கு ஒரு சான்று



மனித சமுதாயத்தின் செழுமைக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் மிக முக்கியமான அடிப்படைத் தேவை மின்சக்தி என்பதில் எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடமிருக்க முடியாது. ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டின் செழுமையைக் குறிக்கும் அளவு கோலாக மின்சக்தி திகழ்ந்து வருகிறது. திட்டத்தில் பயன்கள், உற்பத்தியினைப் பெருக்க அமைவதாக இருக்க அதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, நாட்டிலுள்ள கிராமப் புறங்களில், தொழில் நுட்ப இயலின் முக்கியத்துவம் கிராம மக்களால் உணர்ந்துகொள்ளப் பட்டுப் பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலை நிறுவப்பட விவசாயத்திற்கும், கல்விச்சாலைகளுக்கும், ஆய்வுக் கூடங்களுக்கும், இன்று மனித வாழ்வில் எல்லாப் பகுதிகளிலும் நிலைகளிலும் மின்சாரம் தேவைப்படுகிறது.

இந்த அடிப்படை உண்மைகளை இலட்சிய கீதங்களாக ஏற்றுக் கொண்டுள்ள தமிழக அரசும், தமிழ்நாடு மின்வாரியமும், மாநிலத்தில் உள்ள கிராமப் புறங்களுக்கு மின் வசதி அளிக்கும் பணிகளுக்குச் சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளன.

மற்றும் மின்விசை ஏற்றங்களின் மூலம் இறைவைப் பாசனத்தைச் செயல் படுத்தி விவசாயத்துறையில் ஒரு பசுமைப் புரட்சியைக் காண்பது. மாநிலத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்குவது போன்ற சீரிய திட்டங்களின் மூலம் செயல் படுத்துகின்றன. 1972-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் கிராமங்கள் முழுவதும் மின்சார வசதி பெற்றாக வேண்டும் என்ற சிறப்புத் திட்டத்தின் மூலம் பயனடைந்த மாவட்டங்களுள் மதுரை மாவட்டமும் ஒன்றாகும்.

மதுரை மாவட்டத்தில் தேக்கடி அணைக்கட்டின் தண்ணீரைப் பயன்படுத்திப் பெரியாறு மின் உற்பத்தி நிலையம் சிறப்பாக இயங்கி வருகிறது. இதன் மூலம் 140 மின்சாரச் சக்தி தமிழ்நாட்டிற்குக் (M. W. Tamil Nadu Grid) கிடைக்கின்றது.

பெருகிவரும் மின் தேவைகளைத் தீர்க்க இம்மாவட்டத்தில் உத்தமபாளையம் அருகே சுருளியாறு மின் உற்பத்தி நிலையக் கட்டுமான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் வேலை முடிவுற்றதும் மின் வாரியத்தில் 35 M. W. மின் சக்தி அதிகம் கிடைக்கும். கோடி செலவில் நடைபெறும் இத்திட்டத்தால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

இவ்வாறு மலைப்பிரதேசங்களில் உற்பத்தியாகும் மின் சக்தியை ஒவ்வொரு கிராமங்களுக்கும் கொண்டு செல்லச் சக்தி வாய்ந்த துணை மின் நிலையங்களும் மின் பாதைகளும் தேவைப்படுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் இதன் பொருட்டுக் கீழ்க்கண்ட புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன.



1. வத்தலக்குண்டு
2. உத்தமபாளையம்
3. பழனி
4. திண்டுக்கல்
5. உசிலம்பட்டி
6. வேடசந்தூர்

மற்றும் அனுப்பானடி மேலூர் ஆகிய ஊர்களில் இதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் இம்மாவட்டத்தில் ஏற்படும் தொழில் நிலையங்களுக்கும், விவசாய மின்விசை யேற்றங்களுக்கும் மின்சாரம் வழங்குவது எளிதாகின்றது.

சங்கம் வைத்துத் தமிழை வளர்த்துப் பெருமை கொண்ட மதுரை தற்போது தொழில்களை வளர்த்துப் பெருமை கொண்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் 1966-ல் 51 பெரிய தொழில் நிறுவனங்களே உயர் மின் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தின (H. T. Consumers). இன்று அதன் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்துள்ளது. மற்றும் சிறு தொழில் நிலையங்கள் மேற் குறிப்பிட்ட காலத்தில் 2919-லிருந்து 5081 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தில் பெருவாரியான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தில் வற்றாத நீரோட்டமுள்ள ஆறுகள் போதிய அளவிற்கு இல்லை. ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்கள் கிணற்றுப் பாசனத்தையே நம்பியுள்ள நிலைமையுள்ளது. இப்படிப்பட்ட சூழ் நிலையில் எவ்வளவு துரிதமாக மின்விசை யேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்பட வேண்டுமோ, முடியுமோ அவ்வளவும் செய்யப்பட வேண்டியது நாட்டின் வளமைக்கு மிகவும் தேவையான ஒன்றாகவுள்ளது.

ஒவ்வொரு திட்ட காலத்திலும் பாசனக் கிணறுகளுக்கு மின் தொடர்பு அளிப்பது மிக விரைவாக அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டிற்கு 2,047 பாசனக் கிணறுகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது ஆண்டிற்கு 7,000 கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படுகிறது.

1967-ஆண்டில் புதிய அமைச்சரவை பதவியேற்றுச் செயல் படத் தொடங்கியதற்குப் பிறகு பாசனக் கிணறுகளுக்கு மின் தொடர்பு அளிப்பது மிகவும் அதிவேகமான முறையில் உயர்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் மின் தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை (31-5-1972 முடிய) 30,532-ஐ எட்டியுள்ளது என்பது மிகச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். இந்தச் சாதனை தமிழக அரசின் சீரிய திட்டங்களில் ஒன்றான உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் எவ்வளவு சிறப்பாக நடைபெறுகிறது என்பதற்குச் சான்று.

ஆண்டு	இவ்வாண்டில் மின் தொடர்பு அளிக்கப் பட்ட விவசாயக் கிணறுகள்.	ஆண்டு இறுதியில் மின் இணைப்புப் பெற்ற மொத்தக் கிணறுகள்.
1967–68	4,990	33,706
1968–69	5,475	38,696
1969–70	6,162	44,858
1970–71	6,734	51,592
1971–72	7,171	58,763

இம்முயற்சியில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டுத் தமிழக மின்வாரியம், கிராமப் புற மின்சாரக் கழகம் (Rural Electrification Corporation) வழங்கிய ரூ. 103 இலட்சம் கடனுதவியைக் கொண்டு இம் மாவட்டத்தில் அதிகம் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

அதன் விளைவாக இம்மாவட்டத்தில் ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயக் கிணறுகளில் 58,763 கிணறுகளுக்கு 1971-72 முடிய மின் விசை பொருத்தப்பட்டுள்ளன. சுமார் 1,79,358 ஏக்கர்கள் சாகுபடிக்கு நீர்ப்பாசனம் பெற்றுள்ளது.

இப்பணிகளில் எல்லாம் சிறப்பான பணியாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி வழங்கிய பணி சிறப்பாக இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் 1961 கணக்குப்படி 31 நகரங்களும் 870 கிராமங்களும், 4,725 சிற்றூர்களும், 1,632 அரிசனக் குடியிருப்புகளும் உள்ளன. இம் மாவட்டத்தில் 12 வட்டங்களும், 34 ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன.

மின்னல் வேகத்தில் மதுரை மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும், அரிசனக் குடியிருப்புகளுக்கும் 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இறுதிக்குள் மின்வசதி அளிக்கப்பட்டுத் தெரு மின் விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. இது மதுரை மின்திட்டத்தின் சாதனைகளுள் மிகச் சிறந்ததாகும் என்று கூறினால் மிகையாகாது.

இம்மாவட்டத்தில் 1-4-1972 முடிய 1,28,072 வீடுகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற சென்ற ஐந்தாண்டுகளில் மட்டும் 3,118 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் அதாவது மொத்தத்தில் 54,45 சதவிகிதம் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில்—

1967-68-ஆம் ஆண்டு மின் வசதி பெற்ற ஊர்கள் 473.

1968-69-ஆம் ஆண்டு மின் வசதி பெற்ற ஊர்கள் 430.

1969-70-ஆம் ஆண்டு மின் வசதி பெற்ற ஊர்கள் 333.

1970-71-ஆம் ஆண்டு மின் வசதி, பெற்ற ஊர்கள் 496.

1971-72-ஆம் ஆண்டு மின் வசதி பெற்ற ஊர்கள் 1,386.

மதுரை மாவட்டத்தில் 901 ரெவின்யூ கிராமங்களும் மக்கள் வாழாத ரெவின்யூ கிராமங்கள் 21-ம் உள்ளன. இம் மாவட்டத்திலுள்ள குக் கிராமங்களின் எண்ணிக்கை 4725. தாழ்த்தப் பட்ட மக்களின் குடியிருப்புகள் 987. இவை அனைத்திலும் மக்கள் வாழாத ரெவின்யூ கணக்கிலுள்ள 21 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கும் சாலை விளக்கு வசதியுடன் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பழனிப் பெருமை!

திருவாவினன்குடி எனப் 'பழைய நூல்' களில் பாராட்டப்படும் ஊர் பழனி. அத்துடன் கொன்றை ஆறு, சரபதீர்த்த ஆறு, சுத்த ஆறு, மரியார்த்த ஆறு, ஞான ஆறு, மாயூர ஆறு ஆகிய ஆறு ஆறுகளும் ஒன்றாகக் கலந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு நீராடி மன அமைதி பெறும் சண்முக நதியின் தோற்றத்தைக் கொண்ட பழம்பதி பழனியம்பதி ஆகும். குமணன், ஆய் போன்ற கடை ஏழு வள்ளல்கள் பலர் உறைந்த இடம் பழனி வட்டாரமாகும்.

பழனி, இனிய பொழில்களும், நீண்ட, நெடிய வயல்களும், கனியும், கிழங்கும், தானியங்களும் நிறைந்த ஊர்; வானோங்கிய பல்வகை மரங்களும், தென்னை, கமுகு, பலா, வாழை போன்ற மரக்கூட்டங்கள் அடர்ந்த மலர்ச் சோலைகளும் நிறைந்து விளங்குவது; இத்தனை எழில் வளங்களுக்கும் மத்தியில் விளங்குவது முருகன் திருக்கோயில் அமைந்த பழனி. மலைமீது ஏறி நின்று பார்த்தால் ஊரின் கம்பீரத் தோற்றம் கண்ணைக் கவரும். இத்தகைய எழில் வளம்மிக்க பழனியைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது பழனி ஊராட்சி ஒன்றியம். இவ்வொன்றியத்தில் 20 ஊராட்சி மன்றங்களும், 3 பேரூராட்சி மன்றங்களும் உள்ளன.

மேற்குக் கோவை மாவட்டமும், வடக்குத் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியமும், கிழக்கு ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியமும், தெற்குக் கொடைக்கானல் மலையும் எல்லைகளாகக் கொண்டு 195·36 சதுர மைல் பரப்பளவும், 96,444 மக்கள் மக்கள் தொகையும் கொண்டது இவ்வூராட்சி ஒன்றியம்.

கல்வி முன்னேற்றம்

இவ்வட்டாரம் 2-10-1957-ல் தொடங்கப் பெற்றது. அன்று 44 பள்ளிகளே இருந்தன. ஆனால், இன்று ஒன்றியப் பள்ளிகள் 52 ஆக உயர்ந்து ஆரம்பப் பள்ளிகள் 42 ஆகவும், நடுத்தரப் பள்ளிகள் 10 ஆகவும் நடைபெற்று வருகின்றன. மேலும், தனியார் உதவிபெறும் பள்ளிகள் 12 உள்ளன. அதில் ஆரம்பப் பள்ளி எட்டும், நடுத்தரப் பள்ளிகள் நான்கும் செயல்பட்டு வருகின்றன. அத்துடன் கள்ளர் ஆரம்பப் பள்ளி ஒன்றும் உள்ளது.

இவ்வட்டாரத்தில் நகரசபையின் நிருவாகத்தில் ஓர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியும், தனியார் நிருவாகத்தில் ஆண் பெண் இருபாலர்களும் படிக்கும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும், அரசினரால் நடத்தப்படும் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளியும் நடைபெற்று வருகின்றன.

பழனியம்பதியில் ஓர் ஆண்கள் கலைக்கல்லூரியும், ஒரு பெண்கள் கலைக்கல்லூரியும் ஓர் இந்தியப் பண்பாட்டுக் கலைக் கல்லூரியும், ஒரு நாதஸ்வர இசைப்பயிற்சிக் கல்லூரியும், ஒரு செந்தமிழ் மகளிர் தமிழ்க் கல்லூரியும் உள்ளன. மேலும் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் இரண்டும் பழனியில் உள்ளன

சுற்றுலாவுக்குச் சிறந்த இடம்

பழம்பெரும் வரலாற்றுப் பெருமை மிக்க பழனம் சூழ் மாநகரம் பழனியாகும். இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆண்டுதோறும் வருகை தந்து அங்குக் கோயில்கொண்டுள்ள முருகனை வணங்கிச் செல்கின்றனர். பழனி மலைக்குப் பல நூற்றுக் கணக்கான படிகள் மீது ஏறிச் செல்லலாம். தமிழகத் திருத்தலங்களுள் பழனி ஓர் தனிச் சிறப்புப் பொருந்தியதாகும். மலையின் மீது ஏறிச் செல்ல இயலாத முதியோர்க்கும், குழந்தைகளுக்கும் வசதியாக இழுவை ரயில் அமைத்துள்ளனர்.

சமூகக் கல்வி நிலையங்கள் வாசக சாலைகள்

இங்கு ஒவ்வோர் ஊராட்சித் தலைமையிடத்திலும் ஒவ்வொன்று என்னும் வீதம் இருபது சமூகக் கல்வி நிலையம் அமைக்கப்பெற்று நன்முறையில் செயல்பட்டு வருகின்றன. மேற்படி நிலையங்களுக்கு நாள், கிழமை திங்கள், திங்கள் இருமுறை இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளும் பொருட்டு ஒவ்வோர் ஊராட்சிக்கும் வானொலிப் பெட்டிகள் அரசு மான்யத்துடன்வழங்கப்பெற்றும், வானொலி மன்றம் அமைக்கப் பெற்றும் நன்கு செயல்பட்டு வருகிறது. தற்போது 55 ஊர்கள் வானொலிப் பெட்டிகள் பெற்றுள்ளன.

மருத்துவ வசதி

பழனி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட மாப்பம்பட்டி ஊராட்சியில் 25—6—62-ஆம் தேதி முதல் ஆரம்பச் சுகாதார நிலையம் துவங்கி நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. 1965-ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டத்தில், ஆண் அறுவைச் சிகிச்சையில் மாவட்டத்திலேயே முதல் இடம் பெற்றுச் சுழற் கேடயத்தையும் பெற்றுள்ளது. தற்சமயம் ஓர் ஆண் மருத்துவ அதிகாரியும், ஒரு பெண் மருத்துவ அதிகாரியும் பணிபுரிந்து வருகின்றார்கள். பெண் மருத்துவ அதிகாரி குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார். பழனி ஊராட்சி ஒன்றியத்தில் 7 தாய்சேய் நலவிடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் மூன்று துணை நிலையங்கள் உள்ளன. மேலும் 5 தாய்சேய் நலவிடுதியில் சிறுவர்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் யுனிசெப் மூலம் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

5 தாய் சேய் நல விடுதிகளுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டி, முடிக்கப்பெற்றுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாகப் பெரியம்மை, காலரா தொத்து நோயால் இங்கு இறந்தோர் எவரும் இல்லை. பழனி ஊராட்சி ஒன்றியத்தில் ஆயக்குடிப் பேரூராட்சியில் அரசாங்க மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும், பாப்பம்பட்டி ஆரம்பச் சுகாதார நிலையச் சுகாதாரப் பார்வையாளரால் சிறு குழந்தைகளுக்கு மூன்று தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. இதனால் திக்குவாய், டிப்தீரியா, டெட்டனஸ் முதலிய தொத்து நோய்கள் பரவா வண்ணம் தடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் திட்டங்கள்

பழனி ஊராட்சி ஒன்றியத்தில் இவ்வாண்டு 10,300 ஏக்கர் பரப்பில் ஐ. ஆர். 8 சார்பு வகை நெல் சாகுபடி செய்யத் திட்டமிட்டு, இது வரை 6,400 ஏக்கர் வரை சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 28,000 கிலோ ஐ. ஆர். 8 நெல் விதை வழங்கப்பட்டுள்ளது. 405 டன் நைட்ரஜன் உரமும், 127டன் பாஸ்பரம் உரமும், 71 டன் பொட்டாஷ் உரமும் வழங்கப்பட்டுள்ளன. தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள இரசாயன உரங்கள் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளன. 36 டன் தூவி மருந்தும், 950 லிட்டர் தெளிப்பு மருந்தும் இதுவரை விநியோகம் செய்யப்பட்டு நோயற்ற பயிராக ஐ.ஆர். 8 செழித்து வளரக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தலைமையிடத்தில் 18 விசைத் தெளிப்பான்களும், ஊராட்சி மன்றங்களில் 5 விசைத் தெளிப்பான்களும் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. மூவாயிரம் ஏக்கர் பரப்பில் வான ஊர்தி மூலம் மருந்து தெளிக்க ஆயத்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு 25 சதவித மான்ய விலையில், தெளிப்பான்கள், தூவிகள், கருவிகள் இதுவரை 25 வழங்கப்பட்டுள்ளன.

இவ்வட்டாரத்தில் முதன் முறையாகக் களர்திருத்தும் பணிகளுக்காக 8 டன் சிப்சம் மான்ய விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பயறுவகை அபிவிருத்திக்காகத் தீவிரச்சாகுபடித் திட்டம் 5,000 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. புது வகை சொர்ணச்சோளம் 100 ஏக்கரில் விதைப்பண்ணை நிறுவப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகர்ப்புறத் திட்டத்தின் கீழ் காய்கறி விதைகள், தென்னங் கன்றுகள் மான்யவிலையில் வீட்டுத் தோட்டங்களுக்காக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பல பயிர் சாகுபடித் திட்டத்தின் கீழ் ஐந்து ஏக்கர் பண்ணைகளாகப் பத்து இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதிரிப் பண்ணைகளாகத் திட்டமிட்டு முறைப்படி பராமரிக்கப்பட்டு வருகிறது. தீவிரச் சாகுபடித் திட்டம் விவசாய மான்யத்திட்டம் ஆகியவற்றின் மூலம் ஒரு ஏக்கர் செயல் விளக்கப் பாத்திகள் இருபது நிறுவப்பட்டு விவசாயிகளுக்குச் செய்முறை விளக்கங்கள் செய்து காட்டப்பட்டு வருகின்றன.

மகளிர் மன்றங்கள்

பழனி ஊராட்சி ஒன்றியத்தில் 30 மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. 17 மகளிர் மன்றங்களுக்கு அரசினர் உதவியுடன் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அ. அலையம்புத்தூர் மகளிர் மன்றத்தினர் ஆர்வத்துடன் தையல் படிப்பதைக் கண்டு அவ்வூர் வாசியும் பழனியில் வசித்தவருமான உயர் திரு மீ. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்., அவர்களால் ஒரு தையல் இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. சின்னக் கலையம்புத்தூர் மகளிர் மன்றத்தில் அவ்வூர் ஆலை நிருவாகத்தினரால் முழுநேரத் தையல் ஆசிரியை நியமிக்கப்பட்டு 20 பெண்கள் நாள் தோறும் நல்லமுறையில் பயிற்சி பெறுகின்றனர். மகளிர் மன்றங்களில் நடக்கும் தையல் வகுப்பில் படித்து 2 பெண்கள் தையல் தேர்வு எழுதித் வெற்றி பெற்றுள்ளனர்.

மகளிர் மன்றத்தின் நிருவாகிகள் 8 பேர் 20—3—70 லிருந்து 20—4—70 முடிய 1 மாத காலத்திற்கு தே. கல்லுப்பட்டி கிராமிய விரிவாக்கப் பயிற்சி நிலையத்தில் குடும்பக் கலைப் பயிற்சி பெற்றனர். வட்டாரத்தில் நடந்த குடும்ப நலத்திட்டப் பயிற்சி முகாமில் 20 பெண்கள் பயிற்சி பெற்றனர். மகளிர் மன்றங்களின் மாதம் ஒருமுறை சத்துணவு தயாரித்தல்பற்றிச்செய்முறைகள் நடத்தப் படுகின்றன. அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பெற்றுப் பேச்சுகள், படக்காட்சி இவைகள் மூலம் குடும்ப நலத்திட்டம் பற்றிய விளக்கங்கள் தரப்படுகின்றன. 31 தாய்மார்கள் அறுவைச் சிகிச்சையினை மேற்கொண்டுள்ளனர். 15 பேர் 'லூப்' போட்டுக் கொண்டுள்ளனர்.

> பஞ்சாமிர்தத்தால் மட்டுமல்ல — ஊராட்சி ஒன்றியத்தாலும் பெருமையுற்றுத் திகழ்கிறது பழனி. அண்ணல் காந்தியடிகள் அவாவிய ஊராட்சி முறையைத் தமிழகம் உருவாக்குகிறது சிறப்பாக்கி வருகிறது. அத்தகைய சிறப்புடைய ஒன்றியங்களில் ஒன்றான பழனி ஊராட்சி ஒன்றியம், கடந்த காலத்தில் செய்துள்ள பணிகளை முன்னேற்றப் பாதைகளுக்கு வழி வகுத்த நிகழ்ச்சிகளை இந்தக் கட்டுரை எடுத்துச் சொல்கிறது.

சேமிப்பு இயக்கத்தில் 30 பெண்கள், வளரும் மாதச் சேமிப்பில் முதலீடு செய்துள்ளனர். ரூ. 565-க்கு மன்ற அங்கத்தினர்களால் தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. 15 பெண்கள் அஞ்சல் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்துள்ளனர்.

ஐந்து ஊர்களில் இவ்வாண்டு குழந்தைகள் கண்காட்சிகள் நடத்தப்பட்டு 40 குழந்தைகளுக்கு உடல்வளமான அழகிய குழந்தைகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில்வளம், சிறு தொழில், குடிசைத் தொழில் முன்னேற்றம்

இவ்வட்டாரத்தில் புது ஆயக்குடியில் ' மட்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுக் குடிசைத் தொழிற்சங்கம் 64 உறுப்பினர்களைக் கொண்டு நன்கு இயங்கி வருகின்றது.

குடிநீர் வசதிகள்.

இவ்வொன்றியத்தில் குடிநீர் வசதிக்காக 5 மேல்நிலை நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது 2 ஊர்களில் மேல்நிலை நீர்த் தேக்க வேலை முன்னேற்றத்திலும், ஓர் ஊரில் தரைமட்ட நீர்த்தேக்க வேலை, முடியும் தறுவாயிலுமுள்ளது. மற்றும் 81 கிணறுகள் புதிதாக வெட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாசன வசதிகள்

இவ்வட்டாரத்தில் பாசன வசதி பெரும்பாலும் நீர்ப் பாசனத்தைக் கொண்டே நடைபெறுகிறது. ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 10 குளங்களோடு, வருவாய்த் துறைக் குளங்களாக 19 உள்ளன. இவை தவிர தனியார்களின் பாசனக் கிணறுகளும் பெரும் பங்கு கொண்டுள்ளன. இவ்வட்டாரத்திலிருந்து 7 ஊர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

பழனி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிவகிரிப்பட்டி ஊராட்சி 1968–69-ஆம் ஆண்டின் மூன்றுவது பரிசாக ரூ. 1,000-மும், 1969–70-ஆம் ஆண்டின் இரண்டாவது பரிசாக ரூ. 1,500-ம் பெற்றது.

1969–70-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டம் நடைபெற்றது. குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ் 103 குடி தண்ணீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. இதற்கு 89,115 ரூபாய் செலவு செய்யப்பட்டது. கிணறு பாசனத் திட்டத்தின்கீழ் 20 பிரிவு வாய்க்கால்கள் தூர் எடுக்கப்பட்டது. 5 குளங்கள் தூர் எடுத்துப் பழுதுபார்க்கப்பட்டன; பாசனக் கிணறுகள் ஏழும் செப்பம் செய்யப்பட்டன. இதற்கென 85,000 ரூபாய் செலவு செய்யப்பட்டது.

1970–71-ஆம் ஆண்டில் 23 குடிதண்ணீர்க் கிணறுகள் ரூ. 7,000 செலவில் மேலும் ஆழமாக்கப்பட்டன.

அரிசனத் திட்டம் பழனி ஊராட்சி ஒன்றியத்தில் நன்கு நிறைவேறி வருகிறது. அவர்[illegible] குடியிருப்புக்கள் [illegible]தாய் நல்வாழ்வுக்குரிய இடமாய்ப் பொலிகின்றன. மேலக்கோட்டை ஊராட்சிக்கு 1971–72-ல் அன்பளிப்பாய் வானொலிப் பெட்டி ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

பழனி ஊராட்சி ஒன்றியத்திலே சாலைகள் பல விரிவாக்கப்பட்டும் பழுதுபார்க்கப்பட்டும் வருகின்றன. எருமை நாயக்கன் பட்டிச்சாலை விரிவுபடுத்தும் பணிக்கு ரூ. 2,000 செலவில் சிரணியினரால் செய்யப்பட்டது. அவ்விதமே ஆயக்குடி அமரபூண்டிச்சாலை மராமத்து ரூ. 3,000 செலவிலும், பெத்தநாயக்கன்பட்டி மானூர் சாலை மராமத்து ரூ. 1,000 செலவிலும், கலையம்புத்தூர்--ராஜவாய்க்கால் தூரெடுக்கும் பணி ரூ. 2,500 செலவிலும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்தும் வெள்ளையடிக்கும் பணி ரூ. 2,700 செலவிலும் ராஜாபுரம் பள்ளிக்கூடம் கட்டுதல் ரூ. 1,700 செலவிலும் சிரணியினர் உதவி கொண்டு நிறைவேற்றப்பட்டன. அன்றியும் பாலசமுத்திரப் பள்ளிக்கூடங்கள் ரூ. 4,060 செலவில் 1969–70-ல் கட்டி முடிக்கப்பட்டன.

1971–72-ல் சின்னக் கலையம் புத்தூர் ஊராட்சிக் கட்டடப் பணி ரூ. 800 செலவிலும், கஞ்சநாயக்கன்பட்டிச் சமுதாய நகர மன்றப் பணி ரூ. 3,000 செலவிலும் நிறைவேற்றப்பட்டன. 1971–72 வரை அரசு மானியமாக வேளாண்மை மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 1,03,867-ம், மகளிர் நலத் திட்டத்திற்கு ரூ. 16,190-ம் சமூகக் கல்வி மானியத் திட்டத்திற்கு ரூ. 10,302-ம் பெறப்பட்டன.

1966–67-ல் ரூ. 12,603 செலவில் குடி தண்ணீர்க் கிணறுகள் 19-ம், 1968–69ல் ரூ. 18,318 செலவில் 12-ம், 1969–70–ல் ரூ. 10,555 செலவில் 3-ம், 1970–71-ல் ரூ. 13,501 செலவில் 2-ம், வெட்டப்பட்டன. அன்றியும் இணைப்புச் சாலைப் பணிக்கு 1966–67-ல் ரூபாய் 4,817-ம், 1967–68-ல் ரூபாய் 25,609-ம், 1969–70-ல் ரூபாய் 22,947-ம், 1971–72-ல் ரூபாய் 29,433-ம் செலவு செய்யப்பட்டன. இவை தவிர பள்ளிக்கூடங்கள் கட்டுதல், வறட்சி நிவாரணம், கிராம வேலை விரைவுத் திட்டம், வேலை வாய்ப்புத் திட்டம், ஆசிரியை குடியிருப்பு மனைகட்டுதல், மக்கள் ஊட்டச் சத்துத் திட்டம் முதலியனவும் வெற்றிகரமாக நிறைவேறின.

YOUR DEPOSITS WITH

The Tamil Nadu State Co-operative Bank Ltd., Madras

assist the bank to finance agriculture and agro industries
which form the backbone of the Nation's economy.

SCHEDULE OF RATES

	% per annum
Current Account	0·50
Savings Bank Account (on monthly minimum balances).	4·00
Season Deposits .. Rs. 1,000 and over	
15 days	2·00
46 days	3·00

Fixed Deposits .. Rs. 100 and over	% per annum
91 days	4·75
6 months	5·25
12 months	6·25
24 months	6·75
36 months	7·25
60 months and over	7·50

Additional ½ per cent per annum for deposits of Charitable, Religious and Educational institutions

Interest paid monthly on Rs. 1,000 and over, and for periods of one year and over.

Recurring Deposits Rs. 5 per month in

Months	12	24	36	48	60	72	84
Yields	Rs. 62	128·50	201	278	362·50	452	548·50

Local Branches : Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoy Nagar, Greenways Road, Kellys, Santhome, Mylapore Tank, Shastri Nagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai), Jawahar Nagar, Nungambakkam and Besant Nagar.

Opening Shortly : Secretariat, Ezhilagam and Central Office Buildings.

R. KANAKASABAI,
Chairman.

P. N. T. CHARY,
Secretary.

உத்தமபாளைய உழவரின் சாதனை

மதுரை மாவட்டம் பெரிய குளம் வேளாண்மைக் கோட்டத்தைச் சார்ந்த உத்தம பாளையத்தில் உள்ள திரு ஏ.எஸ். கான் முகம்மது என்ற உழவர் பெருமகன், ஓர் ஏக்கரில் 5,205 கிலோ நெல் விளைவித்து அரியதோர் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

" ஓர் ஏக்கரில் ' ஜெயா ' நெல் பயிரிட்டு அதை அறுவடை செய்ததில் 5,205 கிலோ நெல்லும், 5,450 கிலோ வைக்கோலும் கிடைத்ததற்கு, மதுரை உழவர் பயிற்சி நிலைய அலுவலர்களின் நேரடிக் கண்காணிப்பும், அவர்கள் பரிந்துரைத்த முறையில் மண் பரிசோதனை செய்து, நிலத்தின் தன்மையைத் தெரிந்து கொண்டு, ஒருமித்த செய்நேர்த்தி முறைகளைத் தவறாது மேற்கொண்டதே காரணமாகும் " என்று திரு கான் முகம்மது அவர்கள் குறிப்பிடுகிருர்கள்.

மதுரை உழவர் பயிற்சி நிலையத்தாரால் 1971–72-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 3 தேசியச் செயல் விளக்கத் தளைகளில் (National Demonstration Plots) ஒன்று, திரு கான்முகம்மது அவர்களின் வயலில் நிறுவப் பெற்றது. அந்தத் தேசியச் செயல் விளக்கத் தளையில் தான் ஏக்கருக்கு 5,205 கிலோ நெல் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வேளாண்மைத் துறையினரால் வழங்கப்பட்ட 20 கிலோ ' ஜெயா ' நெல் விதையை 40 கிராம் ' அக்ரசான் ' மருந்துடன் கலந்து 10 சென்ட் பரப்புள்ள மேட்டு நாற்றங்காலில் 10—6—1971 அன்று, திரு கான் முகம்மது அவர்களால் நாற்றுவிடப்பட்டதாம். அவர், நாற்றின் வளர்ச்சியை ஊக்குவிக்க ஒரு சென்டிற்கு 1 கிலோ யூரியா வீதம் நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்கள் முன்பாக நாற்றங்காலுக்கு மேலுரமிட்டுள்ளார். நாற்றுப் பறிப்பதற்கு 1 வாரம் முன்பாக 20 மில்லி லிட்டர் ' பாலிடால் ' மருந்தையும், 40 கிராம் ' டைத்தேன் ' மருந்தையும் 20 லிட்டர் தண்ணீரில் கலந்து நாற்றங்காலில் தெளித்துள்ளார்.

அவருடைய நடவு வயலில் சணப்புப் பயிரிடப்பட்டிருந்ததாம். அதை மடக்கி 'போஸ்' கலப்பையினால், உழுது 20 வண்டி தொழு உரத்தையும் போட்டுத் தழைமிதிக்கும் கருவியால் தழையை நன்ருகச் சேற்றில் அமிழ்த்தி, வயலைச் சமப்படுத்தி விட்டாராம். கடைசி உழவில் ஏக்கருக்கு 235 கிலோ என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரத்தை இட்டாராம். அதன்பின் வயலில் சேற்றை நிரவி விட்டுச் சமப்படுத்தி, வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் இடை வெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் இடை வெளியும் விட்டுக் குழிக்கு 2 பயிர் வீதம் வைத்து நடவு செய்யப்பட்டதாம்.

" நடும்பொழுது ஒரு விரல் அளவு தண்ணீரில் நடப்பட்டது. பின்பு 15 நாட்கள் வரையிலும் உருட்டுத் தண்ணீராகவும், அதன்பின் படிப்படியாகத் தண்ணீரின் அளவை 2 முதல் 3 விரல் அளவுக்கு உயர்த்தினேன். பயிரில் தூர் கிளைக்க வேண்டுமென்பதற்காக நடவு செய்த 31 முதல் 35 நாட்களில் தண்ணீரை வடித்து விட்டேன். ஆனல், நிலத்தில் ஈரம் இருந்தது. அதன்பிறகு தண்ணீர் பாய்ச்சி 3 விரல் அளவுக்குத் தண்ணீரைத் தேக்கினேன். பின் பருவத்தில் கிளைக்கும் தூர்களில் கதிர் வராது என்பதால், அதைத் தடுப்பதற்காக, நடவு செய்த 46 நாட்கள் முதல் 50 நாட்களில் தண்ணீரை வடித்து விட்டேன். அதன் பிறகு மறுபடியும் தண்ணீர் விட்டு 3 முதல் 4 விரல் அளவுக்குத் தண்ணீரைத் தேக்கி வந்தேன். அறுவடைக்கு 10 நாட்களுக்கு முன்பு தண்ணீரை வடித்து விட்டேன். இவ்வாறு பாசன முறையைக் கட்டுப்படுத்தி வந்ததால்தான் எனக்கு அதிக மகசூல் கிடைத்தது " என்றும் அவர் குறிப்பிட்டார்.

நடவு செய்த 15-ஆம் நாளும் அதன்பின் 20 நாட்கள் கழித்தும் இருமுறை நிலத்தை நன்ருகக் கையினுல் கிளறிவிட்டுக் களை எடுக்கப்பட்டதாம்.

நாற்றுவிட்ட 70-ஆம் நாளில் ஏக்கருக்கு 60 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டுள்ளார்.

பயிர்ப் பாதுகாப்பில் அவர் அதிகக் கவனம் செலுத்தி இருக்கிருர். வருமுன் தடுப்பாக (Prophylatic Treatment) நாற்றங்காலில் ஒரு முறையும், நடவு செய்தபின் 15 நாட்களுக்கு ஒரு முறையாக 4 தடவை ' பாலிடால் ', ' என்ட்ரின் ' மருந்துகளை மாற்றி மாற்றி 'டைத்தேன்' மருந்துடன் கலந்து தெளித்துப் பூச்சிகள் நோய்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்தியுள்ளார். பூப் பூத்தவுடன் நெல் நாவாய்ப் பூச்சியின் தாக்குதலைப் தடுப்பதற்காக ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவியுள்ளார். இவ்வாறு வருமுன் தடுப்பாக மருந்து தெளித்தும், தூவியும் வந்ததால், அவருடைய வயலில் அறுவடை வரையில் பூச்சி நோய்த் தாக்குதல் காணப்படவில்லை.

" வேளாண்மைத் துறையின் பரிந்துரைப்படி ஒருமித்த செய்நேர்த்தி முறைகளைக் கடைபிடித்ததால், ஓர் ஏக்கரில் 5,205 கிலோ நெல் மகசூல் அடைந்துள்ளேன். என்னைப் போல் மற்ற உழவர்களும் வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் முறையில் பயிரிட்டால், மதுரை மாவட்டத்தின் உணவு உற்பத்தியை விரைவில் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பெருக்கிட முடியும் " என்று அவர் குறிப்பிடுகிருர்.

முட்டையுள்ள ஆண்

கடற்குதிரை எனும் ஒரு வகை மீன் உண்டு ; ஏனைய மீன்களைப் போலன்றித் தலை மேலாகத் தூக்கி நீரில் நீந்தும் இயல்புடையது ; இந்த மீனில் ஆண் இனத்தின் வயிற்றினடியில் ஒரு பை உண்டு ; இதில் இந்த ஆண் மீன்கள் பெண் மீன்கள் இட்ட முட்டைகளை அது பொரிக்கும் வரையில் சுமந்து பாதுகாக்கும்.

தேனியில் ஒரு தேனி

எதிலும் சுறுசுறுப்பாகக் கடமையைச் செய்பவர்களைத் 'தேனீ' என்று குறிப்பிடுவது வழக்கம். அந்த வகையிலே மதுரை மாவட்டத்தில் 'தேனி' என்ற ஊரில் உள்ள திரு இராசன் அவர்களையும் ஒரு 'தேனீ' என்று பலர் கூறுகின்ருர்கள்.

வேளாண்மைப் பட்டதாரியான திரு இராசன் வேலை தேடிச் செல்லாமல், அவருக்குச் சொந்தமான 20 ஏக்கர் பண்ணையை நேரடியாக நிருவகித்து வருகிருர். அறிவியல் அடிப்படையில் வேளாண்மை செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்கி, வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்ல பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடைய திரு இராசன் அவர்கள் ஐ.ஆர்.8, ஐ.ஆர்.20, ஐ.ஆர்.22, ஜெயா, பத்மா, கருணு, அன்னபூர்ணு போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிட்டுத் தேனிப் பகுதி உழவர்களுக்கு ஒரு முன் மாதிரியாகவும், வழிகாட்டும் உழவராகவும் விளங்குகிருர்.

இரண்டு குழாய்க் கிணறுகள் அமைத்துப் பொட்டல் காடாக இருந்த நிலத்தை இறைவை நிலமாக ஆக்கி இருபோகம் நெல் சாகுபடி செய்து வருவதால் இவர் முயற்சி உடையவர் என்பதும், முற்போக்குடையவர் என்பதும் தெளிவாகிறது.

அயராத முயற்சியினுல் இருபோகம் நெல்லைச் சாகுபடி செய்து வரும் இவர் மூன்ருவது போகமாகப் பசுந்தாள் உரம், 'பைசாகி மூங்' பச்சைப் பயறு, 'எச்.பி.3' கம்பு ஆகிய குறுகிய காலப் பயிர்களையும் பயிரிட்டு நல்ல பலன் பெற்று வருகிருர்.

இருபோகம் நெல் பயிரிட்டு வந்த இராசன், 1970-ஆம் ஆண்டில் இரண்டாம் போக நெல் அறுவடைக்குப் பிறகு, மூன்ரும் போகத்தில், 8 ஏக்கரில் 'எச்.பி.3' கம்பு பயிரிடத் திட்டமிட்டார். நிலத்தை ஐந்து நடவை நன்ருக உழுது, தண்ணீரும் பாய்ச்சியுள்ளார். விதைப்பதற்கு முன்பு ஏக்கருக்கு 100 கிலோ 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தை அடியுரமாக இட்டார். வேளாண்மைத்துறையிலிருந்து வாங்கிய சான்றிதழ் பெற்ற 'எச்.பி.3.' கம்பு விதையை ஏக்கருக்கு 1½ கிலோ வீதம் 18-4-1970 அன்று விதைத்தார்.

'எச்.பி.3' கம்பு விதைத்த 20-வது நாளில் களை எடுத்து, ஏக்கருக்கு 35 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டுத் தண்ணீர் பாய்ச்சியுள்ளார். விதைத்த 40-ஆவது நாளில் இரண்டாம் முறையாகக் களை எடுத்துள்ளார். அதன்பின் மழை பெய்ததால், தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியம் அப்பொழுது ஏற்படவில்லையாம். விதைத்த 60-ஆவது நாளில் மூன்ருவது முறையும் தண்ணீர் பாய்ச்சியுள்ளார். மூன்றுமுறை மட்டுமே இவர் தண்ணீர் பாய்ச்சி எச்.பி.3 கம்பு பயிரிட்டு அறுவடையைச் செய்துள்ளார். என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

"பயிர் செழிப்பாக வளர்ந்ததாலும், பூச்சி நோய்த் தாக்குதல் காணப்படாததாலும், 'எச்.பி.3.' கம்புக்குப் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளவில்லை" என்று அவர் குறிப்பிடுகிருர்.

சரியாக 80-ஆவது நாளில் அதாவது 9—7—1970 அன்று அவருடைய வயலில் 'எச்.பி.3' கம்பு அறுவடை செய்யப்பட்டுள்ளது. அதிலிருந்து அவருக்கு 25 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 70 கிலோ கொண்டது) கம்பு கிடைத்துள்ளது. அதாவது அவருக்கு ஏக்கருக்கு 1,750 கிலோ வீதம் கம்பு மகசூல் கிடைத்துள்ளது.

மூட்டை ரூபாய் 52·00 வீதம் விற்றதனுல், அவருக்கு ஒரு ஏக்கரிலிருந்து ரூபாய் 1,300·00 வருவாய் கிடைத்துள்ளது. அத்துடன் அவர் கம்புத் தட்டைகளை விற்று ஏக்கருக்கு ரூபாய் 40·00 வருவாய் பெற்றுள்ளார். எனவே, அவருக்குப் பின் கண்டவாறு நிகர இலாபம் கிடைத்துள்ளது.

ஒரு ஏக்கரிலிருந்து கிடைத்த 25 மூட்டைகளை மூட்டை ரூபாய் 52·00 வீதம் விற்றதனுல் கிடைத்தது.	ரூ. 1,300
ஒரு ஏக்கர் கம்புத் தட்டை விற்றதனுல் கிடைத்தது.	40
மொத்த வருவாய்.	1,340
ஒரு ஏக்கருக்கு எச்.பி. 3 கம்பு பயிரிட அவர் செலவிட்ட தொகை.	290
நிகர இலாபம் —	1,050

"எனது பண்ணையில் இரண்டு போகம் நெல் பயிரிட்ட பின்பு, 'எச்.பி.3' கம்பு ரகத்தை மூன்ருவது போகத்தில் பயிரிட்டதனுல், எனக்கு எந்தவிதச் சிரமமுமின்றி 80 நாட்களில் ஏக்கருக்கு ரூபாய் 1,050 நிகர இலாபம் கிட்டியது. அது எனக்குக் கூடுதல் வரவு தானே" என்று கூறும் திரு இராசன் 'தேனீ' போலப் பாடுபட்டு வீட்டிற்கும் நாட்டிற்கும் நற்பணியாற்றி வருகிருர். அவரைப் பின்பற்றி மதுரை மாவட்ட உழவர்கள் திருந்திய சாகுபடி முறைகளை மேற்கொண்டால் மதுரை மாவட்டம் விரைவில் செழிக்கும் என்பது உறுதி.

மதுரை மாவட்டச்
செய்திகள்
'தமிழரசு'—இதழில்
தொடர்ந்து வரும்.

கோடைக்கானலில் கோஹினூர்

நான்கு முறை குறிஞ்சிப் பூக்கள் பூத்ததைப்பார்த்த அருள்தாஸ் கூறுகிருர்

கோடைக் கானலில் கோஹினூர் இருக்கிறது!

ஐயப்படாதீர்கள். உண்மையாகத்தான்! நீங்கள் கோடைக்கானல் போனுல் கோஹினூரைப் பார்க்கலாம்

ஒரு காலத்தில் ஐதராபாத் நைஜாமுக்கு உடைமையாக இருந்தது; இப்பொழுது தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமாக இருக்கிறது. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரின் பொறுப்பில் உள்ளது, கோஹினூர்.

ஆமாம்! கோஹினூர் பங்களா கோடைக்கானலிலுள்ள சிறந்த மாளிகைகளில் ஒன்று.



மறைந்த பிரதமர் ஜவகர்லால் நேரு, இந்திய பிரதமர் இந்திரா காந்தி, துணைக் குடியரசுத்தலைவர் பதக், தமிழக முதல்வர், அமைச்சர்கள், கேரள ஆளுநர் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் இந்த மாளிகையில் தங்கியிருக்கின்றனர்.

இந்த மாளிகையை 1958-ஆம் ஆண்டு தமிழக அரசு விலைக்கு வாங்கியதிலிருந்து இங்கு 'பட்லராக' வேலை பார்க்கிருர் அருள்தாஸ்.

கோடைக்கானலிலேயே பிறந்து வளர்ந்த அருள்தாசுக்கு 54 வயது ஆகிறது. நான்கு முறை குறிஞ்சிப் பூக்கள் பூத்திருப்பதைப் பார்த்திருப்பதாகக் கூறுகிருர் இவர்.

கோஹினூர் பங்களாவைச் சுற்றி முந்நூறு யூகலிப்டஸ் மரங்கள் உள்ளன. ஒரு நூற்ருண்டைத் தாண்டிய மாங்களும் இங்கே உள்ளனவாம்.

இந்தக் கோஹினூர் பங்களாவில் தான் ஷேக் அப்துல்லா இரண்டரை ஆண்டுகள் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அருள்தாஸ் சொல்கிருர் :

தமிழக அரசுக்குச் சொந்தமாவதற்கு முன்பு இது ஐதராபாத் நைஜாமுக்குச் சொந்தமாக இருந்தது. ஆனல் ஐதாராபாத் நைஜாம் இங்கு வந்ததே இல்லை.

வெள்ளைக்காரர்கள் காலத்தில் 1934-ஆம் ஆண்டில் நேபாள மன்னர் ஒருவர் கோடைக்கானலில் காவலில் வைக்கப்பட்டிருந்தாராம்.

அவர் கோடைக்கானலிலேயே இறந்து போனாராம்.

கோடைக்கானலிலிருந்து பழனிக்குச் சாலை வழியாகச் சென்றல் சுமார் எழுபத்தைந்து மைல் இருக்கும். ஆனல் கோடைக்கானலுக்குப் பக்கத்திலுள்ள வில்லுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குறுக்கே பழனிக்கு நடந்து போவார்கள், தொலைவு 16 மைல்தான் என்கிருர் அருள்தாஸ்.

முத்து

குறளோவியம்



"தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை".

இந்தக் குறளுக்கு உரை யெழுதிய பலரும் தவறான உரையே எழுதியிருக்கிறார்கள்.

"தன் கணவனுக்கு மேலான தெய்வம் ஒன்றில்லை என்ற எண்ணமுடன் கணவனைத் தொழுது வணங்குகிறவள் பெய்யென்று கூறினால் மழை பெய்யும்"

இத்தகைய உரைகளும், இதனிலும் பிற்போக்கான கருத்தை விளைவிக்கும் உரைகளும் இந்தக் குறளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இந்தக் குறளுக்குத் தந்துள்ள உரைதான் பொருத்தமுடையது என அறிவுலகம் ஏற்க முடியும்.

"பெய்யெனப் பெய்யும் மழை" என்பதற்குப் பெய்ய வேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில் பெய்யக் கூடிய மழை என்றுதான் பொருள் கூறிட முடியும். கணவனே தன் தெய்வமெனக் கொண்டவள் மழையைப் போன்றவள்; யாருக்கு? அவளது கணவனுக்கு அவள் மழை போன்றவள். அதுவும் எத்தகைய மழை? பெய்ய வேண்டுமென்று கூறிய மாத்திரத்தில் பெய்யக் கூடிய மழையைப் போன்றவள்.

தமிழக முதல்வர் கலைஞர்



கழனி காய்ந்து கிடக்கிறது-கதிர் நீர் தேடி வாடுகிறது-அந்த நேரத்தில் உழவன் வான்நோக்கி நிற்கிறான். மழை பொழியவில்லை-உழவன் வாடுகிறான் - வேதனை கீதம் பாடுகிறான்.

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்
சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை"

எல்லாம் வல்லதல்லவா மழை! அத்தகைய மழையின்றி மனிதன் வாழ முடியுமா? உலகத்தை உய்விக்கும் மழையை மகளிரோடு ஒப்பிடும் அழகே அழகு! அந்த அழகை-வள்ளுவர் தந்த உயர் உபமானத்தை-உரை எழுதியோர் கெடுத்தனர்.

கழனிக்கு மழை தேவை என்று உழவன் நினைத்தபோது, உடனே மழை பொழிந்துவிட்டால்-அந்த மழை எத்தனை குடும்பங்களின் நல்வாழ்த்தைப் பெறுகிறது! பெய்யெனப் பெய்யும் மழை பெறுகிற புகழ் மாலைகள் எண்ணிலடங்கா அல்லவா?

அதுபோன்றவளாம், கணவனையே தெய்வமாகக் கருதும் பெண்; அந்தக் கருத்தைத்தான் வள்ளுவர் வண்ணத் தமிழிலே குழைத்துத் தருகிறார்; மீண்டும் ஒரு முறை படியுங்கள்.

"தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை".



திருமலை மன்னரின் அரண்மனை

'மூவேந்த வேளான்'

தமிழகத்திலேயே இப்பொழுது எஞ்சியுள்ள எழில் வாய்ந்த கட்டடங்களில் மிகவும் ஒப்பற்றது மதுரையிலுள்ள திருமலை மன்னன் தோற்றுவித்த அரண்மனையாகும். இன்றைக்குச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை ஆளுநராயிருந்த லார்ட் நேபியர் என்ற பெருமகனின் அரும் முயற்சியால்தான் இப்பொழுதுள்ள அரண்மனைப் பகுதி எஞ்சி நிற்கிறது. இதன் அழகைப் போற்றிய நேபியர், 'இது ஈடு இணையற்ற கட்டடம், இதை அழியாமல் காக்க வேண்டும்' என்று சுமார் இரண்டு லட்சம் ரூபாய்க்கும் மேல் ; பொருள் செலவு செய்து ஆங்காங்கு விரிந்து கிடந்த பகுதிகளையும், இடிந்து கிடந்த பகுதிகளையும் இயன்றவரை சீராக்கினர். அப்பொழுது விரிந்து கிடந்த பகுதிகள் இரும்புக் கம்பிகளும், தகடுகளும் போட்டுக் காப்பாற்றப்பட்டன. இப்பொழுது காணப்படும் நுண்ணிய சுதை வேலைகளெல்லாம் அக்காலத்தில் செய்யப்பட்டன. வண்ணங்கள் பூசப்பட்டன. அதன் பயனாக இப்பொழுது ஒரு பகுதியாவது நாம் பார்த்து மகிழும் வகையில், வெளிநாட்டோர் பலர் கண்டு போற்றும் வகையில் எஞ்சியுள்ளது.

திருமலை மன்னன் இவ்வரண்மனையைக் கட்டிய பொழுது, இப்பொழுது எஞ்சியுள்ளதைப் போன்று நான்கு மடங்கு பெரியதாக அரண்மனைப் பகுதி திகழ்ந்தது என்று பண்டையக் குறிப்புகள் கூறுகின்றன. இவ்வரண்மனையைத் திருமலை நாயக்கர் 1639-ல் கட்டி முடித்தார் என்றும், இதில் தமது 75-ஆம் வயது வரையில் வாழ்ந்தார் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர். இப்பொழுது எஞ்சியுள்ள பகுதியில்தான் திருமலை மன்னர் வாழ்ந்தார். இதற்கு, '' சொர்க்க விலாசம் '' என்று பெயர். இதே போன்று இதைக்காட்டிலும் சற்று சிறியதாக மற்றொரு கட்டடப் பகுதி இருந்தது.

இப்பொழுதுள்ள அரண்மனையின் வடக்கே ஒரு சந்தில் பத்துக் கல் தூண்கள் இருக்கின்றன. அதன் மேற்குப் பகுதியில்தான் அக்கட்டடம் இருந்தது. அதற்கு '' ரங்க விலாசம் '' என்று பெயர். அதில் திருமலை நாயக்கருடைய தம்பி முத்தையாலு நாயக்கர் வசித்து வந்தார். இப்பொழுதுள்ள அரண்மனையில் வடமேற்கில் ஒரு பெரிய கட்டடப் பகுதி உள்ளது. இது '' நாடக சாலை '' என்றும், இதில் அந்திப் பொழுதில் அரசன் தன் உற்றார் உறவினருடனும், தேவியருடனும், எழில் மங்கையர் நடனமாடக் கண்டு மகிழ்வது வழக்கம் என்றும் பண்டையக் குறிப்புகள் கூறுகின்றன. இதற்கும் மேற்கே '' வசந்த வாவி '' என்னும் குளம் இருந்ததாக அறிகிறோம்.

நாடகசாலையின் கிழக்கே இராஜராஜேஸ்வரி கோயில் ஒன்று இருந்தது என்றும், அதில் திருமலை மன்னன் நாள்தோறும் வழிபடுவது மரபு என்றும் அறிகிறோம். இக்கோயிலின் பல பகுதிகள் கருங்கல்லால் இழைக்கப்பட்டுச் சிறந்த சித்திர வேலைப்பாடுகளுடன் திகழ்ந்தது என்றும் பண்டையக் குறிப்புகள் கூறுகின்றன. சொர்க்க விலாசத்தின் மேற்கில் ஆயுத சாலையும், உற்றார் உறவினர் வசிப்பதற்கும், மற்றோர் வசிப்பதற்கும் ஆன இடங்களும் இருந்தன.

சொர்க்க விலாசம் அதன் தென் புறத்திலும், வடபுறத்திலுமுள்ள சாலை, இராஜராஜேஸ்வரி கோயில் இவற்றின் மேலே 'ஸ்தூபி' குடங்கள் இருந்தன என்றும், அவை முழுமையும் தங்கம் பூசப்பட்டு மிளிர்ந்தன என்றும் பண்டையக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். சொர்க்க விலாசத்தின் நடுவில் ஒரு கல் பீடத்தின் மேல் தங்கத்தாலான ஒரு சாலை மண்டபம் இருந்தது என்றும், அதில் இரத்தின அரியணை இருந்தது என்றும், அதில் அமர்ந்துதான் திருமலை மன்னன் கோலோச்சினான் என்றும் அறிகிறோம்.

ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவில் எட்டாம் நாள் திருமலை மன்னன் அங்கயற்கண்ணி அம்மைக்குக் கோயிலில் முடிசூட்டுவிழா நடப்பித்து, அங்கு அம்மனிடமிருந்து செங்கோலைப் பெற்று, வீதி உலாவாகக் கொணர்ந்து, இவ்வரண்மனையில் இந்த சொர்க்க விலாசத்தில் சிறப்பாக அலங்கரித்து அரியணையில் செங்கோலை அமர்த்தித் தான் அருகில் கீழே அமர்வார். செங்கோலுக்குச் சிறப்பாக வழிபாடுகள் நடக்கும். குழுமியிருக்கும் அனைவருக்கும் பரிசுகள் வழங்சப்படும். அன்று முழுவதும் செங்கோல் அரியணையில் இருக்கும். மறுநாள் திருமலை மன்னன் செங்கோலுக்கு மறு வழிபாடு செய்து, கோயிலுக்கு எடுத்துச் சென்று அன்னையின் மலரடியில் வைத்து வணங்குவது வழக்கம். அன்னையின் அடியனாக நாட்டை ஆள்வதையே இது குறிக்கும்.

ஆண்டுதோறும் நவராத்திரி விழாவில் ஒன்பது நாட்களும் திருமலை மன்னர் சிறப்பாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு இங்கு அரியணையில் கொலு வீற்றிருப்பார். மாற்றரசர்கள் எல்லாம் இங்கு அவருக்குத் திறை செலுத்துவர்.

இவ்வரண்மனையைச் சுற்றி ஒரு பாரி மதில் இருந்தது. இது 900 அடி நீளமும், 660 அடி அகலமும், 40 அடி உயரமும் இருந்ததாம். 1837-ல் இது இடித்துத் தள்ளப்பட்டது. இவ்வெழில் வாய்ந்த அரண்மனையின் பல பகுதிகளைத் திருமலை மன்னனின் பேரன் சொக்கநாத நாயக்கர் என்பவரே இடித்து விட்டார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதற்கு காரணம் அவர் தனது தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளிகு மாற்ற முயற்சித்ததேயாகும். திருச்சியில் இதே போன்ற மாளிகை ஒன்றை அவர் எழுப்ப விரும்பினார். அதற்கு இவ்வரண்மனையில் இடித்த பொருள்களையே எடுத்துச் சென்றார். ஆனால் அங்கு அவ்வரண்மனை சிறப்பாக எழுப்பப்படவில்லை.

பிரிட்டிஷார் இவ்வரண்மனையை எடுத்துக் கொண்ட போது, இடிபாடுகளாகக் கிடந்தது. 1821-ல் ஒரு காகிதத் தொழிற்சாலை இதனுள்ளே இருந்தது என்றும், 1837-ல் சுற்றிலும் வாழ்ந்தவர்கள் இதை நெசவு நெய்யும் இடமாகப் பயன்படுத்தினர் என்றும் அறிகிறோம். 1858-ல் ஒரு பெரும் மழையால் பல பகுதிகள் இடிந்து வீழ்ந்தன.

முன்னர் குறிப்பிட்டபடி நேபியர் துரையின் முயற்சியால் இவ்வரண்மனையின் பாதுகாப்புத் துவங்கியது. 1870-லிருந்து 1886-க்குள்ளாக அக்காலத்திலேயே சுமார் ஐந்தரை லட்சம் ரூபாய் செலவு செய்து இப்பொழுது எஞ்சியுள்ள பகுதி காப்பாற்றப்பட்டது.

ஆயினும், பின் வந்தவர்கள் பல பகுதிகளில் குறுக்கும் நெடுக்குமாகச் சுவர்களையும், இரும்புக் கம்பிகளையும் எழுப்பி மாவட்ட நீதி மன்றங்களையும், பிற செயலகங்களையும் இங்கே வைத்திருந்தனர். அதனால் மிகப்பரந்த எழிலான அரண்மனை குறுகிய-சிறிய அறைகளாக, இருண்ட பகுதியாகக் காட்சி அளித்தது. ஆயிரக்கணக்கான வெளவால்களின் இருக்கையாகவும் இது மாறியது. நீதி மன்றங்களில் பணிபுரிவோர்களுக்கு ஆபத்து நேரும் வகையில் மேலே விரிந்த பகுதிகளிலிருந்து சுதைகள் கீழே விழத் தொடங்கின. ஆதலின் இவ்வரண்மனையை எப்பாடுபட்டாவது காக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தீவிர முயற்சிகள் எடுத்துப் பெரும் பொருட்செலவில் நீதிமன்றங்களுக்கெனத் தனிக் கட்டடம் ஒன்று அமைத்தது. இங்குச் செயலாற்றிய நீதிமன்றங்கள் புதுக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டன.

1971-ம் ஆண்டு தமிழ் நாடு அரசு தொல் பொருள் வரலாற்றுச் சின்னப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவ்வெழில் அரண்மனை வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்க எடுத்துக் கொள்ளப்பட்டது. சென்ற ஆண்டே ரூபாய் முப்பதினாயிரம் செலவில் உடனடி பாதுகாப்புத் தொடங்கப்பட்டது. இவ்வரண்மனையைப் பழுது பார்க்கத் தமிழ்நாடு அரசு உடனடியாக மூன்று இலட்சம் ரூபாயை இப்பொழுது ஒதுக்கீடு செய்து இவ்வாண்டு ஒரு இலட்சம் ரூபாய்க்குப் பழுது பார்க்கும் பணி நடைபெற விருக்கிறது. ஏற்கெனவே குறுக்கும் நெடுக்குமாயிருந்த சுவர்கள் பெரும்பகுதிகளில் அகற்றப்பட்டுவிட்டன. கடந்த ஒரு நூற்றாண்டுக்குள்ளாக யாரும் கண்டு களித்திராத அளவு மிகப்பரந்த அரண்மனையாக இது திகழ்வதை இப்பொழுது சென்று பார்த்தால் காணலாம். வெளவால்களின் நாற்றமின்றிச் சொர்க்க விலாசத்தின் எழிலைக்கண்டு களிக்கலாம். மக்களுக்குக் குளிர்ந்த குடிநீர் வசதிகளும் இப்பொழுது வைக்கப்பட்டுள்ளன. இவ்வரண்மனையின் வரலாறு முழுவதும் குறிக்கும் துணை மடல் ஐந்தே காசு விலைக்குக் கிடைக்கும் வகையில் மக்கள் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. சுமார் 6 மாதங்களுக்குள்ளாக 20,000 படிகளுக்கு மேல் மக்கள் வாங்கிப் பயன் பெற்றுள்ளனர்.

நாள்தோறும் இவ்வரண்மனையைப் பார்ப்பதற்கென்றே சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வந்தவண்ணம் இருக்கின்றனர். விரைவில் பல நவீன அறிவியல் கருவிகளைப் பொருத்தி இவ்வரண்மனையின் வரலாற்றையும், எழிலையும் அனைவரும் கண்டு இன்புறும் வண்ணம் தமிழக அரசு அமைக்கவிருக்கிறது. இதன் பின்புற வெளிப்பகுதியில் எழில் பூங்கா அமைக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைப் பாதுகாக்கும் பணியையும், பழுதுபார்க்கும் பணியையும், வரலாற்று எழில் சின்னமாக அமைக்கும் பணியையும், தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை செய்துவருகின்றது.



மதுரைச்செய்திகள்!

மதுரை நகருக்கு 1875-ஆம் ஆண்டில் புகைவண்டித் தொடர்பு ஏற்பட்டது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம் செயல்பட்ட ஆண்டு 1888. மின்வசதி 1926-ஆம் ஆண்டில் மதுரைக்குக் கிடைத்தது.

மதுரை ஒரு முக்கிய சந்திப்பாகும். அங்கிருந்து கிழக்கில் இராமேஸ்வரத்திற்கும், மேற்கில் தேக்கடி, கோட்டயம், கொச்சி முதலிய இடங்களுக்கும்; தெற்கில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவனந்தபுரம் முதலிய நகரங்களுக்கும், வடக்கில் தஞ்சை, திருச்சி, சென்னை, கோவை, ஊட்டி முதலிய நகரங்களுக்கும், தடங்கள் பிரிகின்றன.

கிரிக்கட்பால், பாலா, குக்தீ, தகா முடி, துவார புடி, நவநீதம், ஓவல், மணில் ஹார ஹெக்ஸான்ரோ— இவைகள் எல்லாம் என்னவென்று நினைக்கிறீர்கள்? மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரிய குளத்திலுள்ள நாற்று உற்பத்தி நிலையமான அரசுப் பழப் பண்ணையிலுள்ள சப்போட்டா பழ வகைகள்.

மதுரை மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 1971-ஆம் ஆண்டில் எல்லாப் பணிகளிலும் சிறந்து விளங்கியதற்காகப் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் சிறந்த ஊராட்சி ஒன்றியமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் எழாவது எண் கொண்டது மதுரை நெடுஞ்சாலை. வாரணாசியிலிருந்து தொடங்கி ஜபல்பூர், நாகப்பூர், ஐதராபாத், பெங்களூர், சேலம் வழியில் வரும் நெடுஞ்சாலை மதுரையைத் தாண்டிச் சென்று கன்னியாகுமரியுடன் முடிவடைகிறது.

தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்த பெரிய நகரம் மதுரை.

மதுரை நகரில், 1971-ஆம் ஆண்டில், பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் மொத்தம் 1207 பொதுக் குழாய்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1300 வீட்டு உபயோகத்திற்காக குழாய் இணைப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன.

மதுரைக்குச் செல்வதற்கு மூன்றுவிதமான வழிகள் இருக்கின்றன. பேருந்துகளில் நெடுஞ்சாலைத் தடங்களின் வழியாகச் செல்லலாம். புகைவண்டியின் வழியாகச் செல்லலாம். விமானத்தின் வாயிலாகவும் மதுரையை அடையலாம். தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்தாற்போல் பெரிய விமான நிலையம் மதுரையில் உள்ள அவனியாபுரத்தின் அருகில் உள்ளது.

மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து அஞ்சல் மூலம் புகுமுக வகுப்பு, பட்டப் படிப்புப் படிக்கலாம். தமிழ் நாட்டிலுள்ள வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலும் இந்த வாய்ப்பு இல்லை.



மதுரச்செய்திகள்!

மதுரை மாவட்ட மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் நகர்ப்புற வசதிகள் கூடிய பகுதிகளிலே வாழ்ந்து வருகின்றனர். அதாவது மதுரை மாவட்டத்தில் நகர்ப்புறப் பகுதிகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கையைப் போன்ற இருமடங்கினரே கிராமப் புறங்களில் வசிக்கின்றனர்.

மதுரையில் காந்தி மியூஸியம் உள்ள இடம் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட இராணி மங்கம்மாளின் அரண்மனையாகும். மியூசியம் உருவாவதற்கு முன்பு, இந்த இடம் மாவட்ட ஆட்சியாளரின் இல்லமாக இருந்தது. புகழ் பெற்ற தமுக்கம் அரண்மனை இதுதான்.

மதுரையில் உள்ள அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் கண் வங்கி (Eye Bank) உள்ளது. வேறு நோய் வந்து இறப்பவரின் கண்களைச் சேகரித்துச் சேமித்து வைத்துக் கண் கெட்டுப்போன மற்றவர்களுக்குப் பொருத்தி, அவர்களுக்குப் பார்வை தருகிறார்கள். கண் அறுவைச் சிகிச்சை முகாம்களைத் துவக்கிய பெருமையும் இந்த அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனைக்கு உண்டு.

திண்டுக்கல்லில் பூட்டுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தொழிற்சாலை உள்ளது. தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் இயங்கும் பூட்டுத் தொழிற்சாலை இது ஒன்றுதான். இங்குச் செய்யப்படும் பூட்டுகள் தமிழ் நாடு தவிர கேரளம், ஆந்திரம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கட்கும் அனுப்பப்படுகின்றன.

இங்கு மூன்றே முக்கால் ரூபாய் முதல் 65 ரூபாய் வரை விலையுள்ள பூட்டுகள் தயாராகின்றன.

கோடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் நாலரை இலட்ச ரூபாய் செலவில், எழரை ஏக்கர் பரப்பளவில் உள்ள கட்டடங்களை வாங்கிச் சுற்றுலா மாளிகை அமைத்துள்ளனர். அங்குப் பதினேழு இலட்ச ரூபாய் செலவில் புதிய கட்டடங்களைக் கட்ட இருக்கிறார்கள்.

கோடைக்கானலில் இருந்து நான்கு மைல் தொலைவில் வில்லுப்பட்டி என்ற ஊர் உள்ளது. இந்த ஊரில் குறிஞ்சிப் பூக்கள் பூக்கும்பொழுது யாருமே பறிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது. அங்குள்ள குறிஞ்சி ஆண்டவருக்கு, ஊரிலுள்ள எல்லாரும் சேர்ந்து விழா எடுத்த பிறகுதான் குறிஞ்சி மலர்களைப் பறிப்பார்களாம்.

முத்து

சுற்றுலாப் பெருமை கொண்டது மதுரை!

அழகர் கோவில்

மதுரையின் வடகிழக்கில் 12 மைல் தொலைவில் உள்ள அழகர் மலைக் குன்றின் தென் கோடியில் புகழ்மிக்க அழகர் கோயில் உள்ளது. குன்றின் வடக்கே கோவிலுக்கு இரண்டு மைல் உயரத்தில் நூபுர கங்கை என்னும் தெளிந்த குளிர்ந்த இயற்கை நீரோடை ஒன்றுள்ளது. அது, ஒரு குளத்தில் விழுந்து, மலைச் சரிவின் வழியே கோவிலின் அருகே வருகிறது. மலையின் இயற்கைச் சூழல் மனத்திற்கு இதமளிப்பதாக உள்ளது.

சின்னாளப்பட்டி

சின்னாளப்பட்டி நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஊர்; இங்கு ¥ நெய்யப்படும் செயற்கைப்பட்டு, நேர்த்தியான, பஞ்சாடைகள் ஆகியன உலகப் புகழ் பெற்றன.

திண்டுக்கல்

கைத்தறி நெசவுக்குப் புகழ் பெற்ற நகரம். இங்குப் பல கிறித்தவ மிஷன்கள் உள்ளன. மேலும், தோல் பொருட்கள், பூட்டுக்கள் செய்தல், இரும்புப் பெட்டகங்கள் செய்தல் முதலிய தொழில்களுக்கும் இவ்வூர் சிறந்து விளங்குகின்றது.

கொடைக்கானல்

சில்வர் காஸ்கட், கிரீன் நீரருவி, ஃபேரி நீரருவி, கரடி சோலா நீரருவி ஆகிய 4 நீரருவிகள் இங்குள்ளன. இங்கு 75 ஏக்கர் நிலப்பரப்புள்ள ஏரி ஒன்றும் உள்ளது.

கொடைக் கானல் மலை, தொடக்கத்தில் அமெரிக்கப் பாதிரிமார்களால் 1938 - ஆம் ஆண்டிலிருந்து;பல்வேறு வளர்ச்சிகளை அடையத் தொடங்யது.

1863-ஆம் ஆண்டு, அன்றைய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சர் வேர்லெவிங் அங்கு ஓடிய நீரோடைகளுக்குக் கரை எடுத்து ஏரியை உருவாக்கினார்.

கொடைக் கானலிலுள்ள சோலார் பௌதிக ஆய்வகம் 1899-ல் நிறுவப்பட்டது.

ஏரி, கோக்கர்ஸ் வாக், கற்றூண்கள், பெருமாள் முடி, கோல்ப் விளையாட்டு மைதானம், பிரியன் பூங்கா, பேரிஜம் ஏரி ஆகியன அங்குப் பார்த்து மகிழ வேண்டிய முக்கிய இடங்கள். இங்குச் சுற்றுலாப் பருவம் ஏப்ரல் முதல் ஜூன் முடிய ஆகும்.

பழனி

450 அடி உயரத்தில் மலையின் உச்சியில் உள்ளது. ஆண்டு முழுதும், தென்னகம் எங்கு மிருந்தும், பக்தர்கள் வருகிறார்கள். முதன் முதலாக மலை ரயில் (Winch) இங்குதான் போடப்பட்டது. அதில் பயணம் செய்வது சுவையான அனுபவம்.

தேக்கடி

மதுரைக்கு 90 மைல் தொலைவில் மேற்கே தமிழக—கேரள எல்லைப் பகுதியில் உள்ளது. பெரியாறு ஆற்றின் குறுக்கே அணை எழுப்பப் பெரியாறு ஏரி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அணை 1887—1895-ஆம் ஆண்டுகளுக்கிடையே 82 இலட்ச ரூபாய் செலவில் கருங்கற்களாலும் சுண்ணாம்புக் காரையாலும் கட்டப்பட்டுள்ளது. பெரியாறு ஏரி 10 சதுர மைல் பரப்பளவில் கடல் மட்டத்திலிருந்து 3,000 அடி உயரத்தில் உள்ளது. இதற்கருகில், பல வகை மிருகங்கள் உள்ள வேட்டைக் காடும் உள்ளது.

திருப்பரங் குன்றம்

மதுரைக்குத் தென் மேற்கில் 4 மைல் தொலைவில் உள்ளது, திருப்பரங்குன்றம். முருகன் திருத்தலங்களான ஆறுபடை வீடுகளுள் இதுவும் ஒன்று என்று பக்தர்கள் பாராட்டுவார்கள்.

வைகை அணை

இது 1955-லிருந்து 1958-க்குள் கட்டப்பட்டது. மதுரைக்கு மேற்கே 40 மைல் தொலைவில் 2 சதுர மைல் பரப்பில் உள்ளது. இது ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும்.

வெண்பாப் போட்டி-40

ஈற்றடி: காவலரே நாட்டிற்குக் கண்

முடிவு நாள்: 16—8—'72

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு: அஞ்சல் அட்டையில் வரும் நேரிசை வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்.

6

ஓரே வழி—இதே வழி

பித்தளைத் தகடுகள் பதிக்கப்பட்ட வேலாயுதத்தின் வில்வண்டி, துடிப்பான இளங்காளைகள் பூட்டப்பட்டு வாசலில் நிற்கிறது. கொம்புக் கயிறுகளைப் பிடித்தவாறு பொன்னையா முன்னால் நிற்கிறான்.

குருபாதத்தின் வீட்டுக்கு எதிர் வரிசையில் நான்கு வீடுகள் தள்ளி இருக்கிறது வேலாயுதத்தின் வீடு. பத்து வருடங்களுக்கு முன்னால், புதுமுறையில் கட்டப்பட்டது. வாசற் படியைத் தொட்டு மடக்குக் கம்பிக் கதவு இரு பக்கங்களிலும் இழுத்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. நேர் எதிரிலிருக்கும் தலைவாசல் கதவுக்கும் இதற்கும் பத்தடி இடைவெளியில்—குறுக்கு வெளிநடை. ஒரு பக்கம் பிரம்பு நாற்காலிகளும், எதிர்ப்பக்கம் உட்காரும் பலகைகளும் போடப்பட்டுள்ளன.

இப்போது, உள்ளிருந்து வேலாயுதத்தின் வருகைக்காகக் காத்திருக்கும் உருட்டி முத்தையாவுக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். ஆனால், யாரும் இவ்வளவுக்கு மதிக்க முடியாது. அப்படியொரு தளராத சிவந்த உடற்கட்டு. தலைதான், முற்றிலும் வழுக்கை விழுந்து புத்த முனிவரைப் போலாகி விட்டார். இவர் மீனம்மா பாட்டிக்குச் சம்பந்தியாகி இருக்க வேண்டியவர். தன் மகள் வயிற்றுப் பேத்தியை லிங்கத்துக்குக் கொடுத்து, கிழவி கட்டிக் காத்து வரும் சொத்துக்களில் காலூன்றி விட வேண்டும் என்பது அவரது நெடுநாளைய தொடர் கனவாக இருந்து, திருமணப் பேச்சும் நடந்து, ஒரு முடிவுக்கு வரும் தருணத்தில் ஏமாற்றுக்கு உள்ளாகி, இப்போது குமுறலோடு தூங்காது விழித்திருப்பவர். யாரையும் திட்டம் போட்டு உருட்டி விடுவார் என்பதில், 'உருட்டி' என்ற காரணப் பெயர், முன்னுக்கு ஒட்டிக்கொண்டு விட்டது.

என்றைக்குமே வேலாயுதத்துக்கு, உருட்டி முத்தையா அந்தரங்க ஆலோசகர்.

''என்ன மாமா புறப்படலாமா?'' என்று கேட்டுக் கொண்டு, பட்டு உருமாலை மேலே போட்டவாறு வேலாயுதம் உள்ளிருந்து வந்தபோது, அவரது தனித் திருமகன் நடேசன் அவசரத்தோடு படியேறி வந்தவன், தகப்பனைக் கண்டதும் ஓரமாக ஒதுங்கித் தயங்கி நின்றான்.

எட்டு வயதிலேயே தாயை இழந்து, செல்லமாக வளர்ந்தவனை ஆசானாலும் அதட்டிச் சொல்ல முடியவில்லை. படிப்பு வரவில்லையானாலும், நடையுடையெல்லாம் எடுப்பாகவே இருக்கும். எதையும் படித்தோ, கேட்டறிந்தோ மனத்தை அலட்டிக் கொள்ள மாட்டான். அவனது பொழுதுபோக்கே தனியானது.

இந்த மகனை நினைக்கும்போது வேலாயுதத்துக்கும் கவலைதான்.

''என்னடா ராத்திரி வீட்டுக்கே படுக்க வரலே போலிருக்கே. அவ்வளவுக்கு வந்தாச்சா'' என்று கேட்டார் நடேசனைத் திரும்பிப் பார்த்து.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நடேசன் வாயையே திறப்பதில்லை.

வேலாயுதம் செருப்பைப் போட்டுக் கொண்டார்.

''உன்னோடொத்தவன் ஊரையே கட்டியாளப் போறேன்னு நிக்கிறான். நீ எதையும் நினைக்காம, இருக்கிறதையும் அழிக்கப் பிறந்திருக்கே. உன்னை நினைச்சுப் பொண்ணுன்னு கேட்டுப் போனாலும் திகைய மாட்டேங்குது. அந்த அளவுக்குப் பேராகி இருக்கு. நான் சொல்ற அளவுக்குச் சொல்லிட்டேன். உன் தலையெழுத்தை நீ தான் காப்பாத்திக்கணும்'' என்ற வேலாயுதம் படிகளில் இறங்கினார்.

''மாப்பிள்ளைக்குப் பொண்ணுக்குத்தானா பஞ்சம். நினச்சா முடிஞ்சு போகுது.'' என்ற முத்தையா எழுந்து, வேலாயுதத்தைப் பின்தொடர்ந்தார்.

நடேசன், முத்தையாவை முறைத்துப் பார்த்துக்கொண்டே வீட்டிற்குள் போய்விட்டான்.

வேலாயுதம் வண்டிக்கு முன்னால் போய் நின்று மாடுகளைப் பார்த்தார்.

பொன்னையா பிடித்த பிடியை விடாமல் நின்றான்.

''நம்ம வீட்டுக் கன்றுக்கு ஜோடியா தேடிப்பிடிச்ச போன வாரம்தான் தாடிக் கொம்பு

சந்தையிலே வாங்கியாந்தது, வலத்திலே நிக்கிற செவலை. இன்றைக்குத்தான் வண்டியிலே பூட்டச் சொல்லியிருக்கேன்'' என்றார் வேலாயுதம் பக்கத்தில் வந்து நின்ற முத்தையாவைத் திரும்பிப் பார்த்து.

''சும்மா பம்பரமா நிக்கிதுங்க, கயித்தை விட்டாப் போதும். கடுமையா பாயுதுன்னுதான் இதைக் கொடுத்திட்டான். இல்லையின்னா ஒத்தைக்கு ஆயிரம் கொடுத்தாலும் கிடைக்காதுங்க'' என்றான் பொன்னையா.

''அதான் பிடியை விடாம நிக்கிறியா? கரை வழியா வண்டி போகப் போகுது. மெதுவாத்தான் போகட்டும்'' என்பதையும் சொல்லிவிட்டுப் பின் பக்கமாக வந்தார் முத்தையா.

''மாமாவுக்கு இன்னமும் இந்த உயிரு சக்கரைதான். ஏறுங்க'' என்றார், வண்டியிலேறி முன் பக்கமாக உட்கார்ந்து கொண்டார் வேலாயுதம்.

''இன்னும் எவ்வளவோ இருக்கு. அதுக்குள்ளேயா?'' என்று அரைகுறையாகச் சொல்லிச் சிரித்துக்கொண்ட முத்தையா வண்டியிலேறி, பின்பக்கம் காலைத் தொங்கப் போட்டு உட்கார்ந்து கொண்டார்.

கொம்புக் கயிறுகளை இழுத்துப் பிடித்தவாறு, பின்பக்கம் வந்து, ஒரு கையை யூன்றி, வண்டிச் சட்டத்தில் தாவி உட்கார்ந்து, பிடியைத் தளர்த்தினான்.

சலங்கை யொலி குலுங்கத் தெருவோடு புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றது வில் வண்டி.

''என்னடா பொன்னையா, தோப்புக்குத்தானே போறோம். இதுக்குச் சலங்கை வேணுமா? நீ சும்மா இருக்க மாட்டே'' என்றார் முத்தையா பின்னாலிருந்து.

வேலாயுதமும், பொன்னையாவும் இவரது வார்த்தைகளைக் கவனிக்கவில்லை.

''எப்படிடா போகுது புதுச் செவலை'' என்று கேட்டு முன்னால் எட்டிப் பார்த்தார் வேலாயுதம்.

''கொடிவால் தூக்கி, அது எட்டி வச்சுப் போறதைப் பாருங்க. கயித்தை விட்டுப் பிடிச்சாப் பறக்குமுங்க'' என்றான் பொன்னையா குதூகலமாக.

''செவலைக்குக் கொம்புதான் கொஞ்சம் கூடு கொம்பாப் போச்சு'' என்றார் வேலாயுதம்.

''இது—ஆளைப் பாயுறதுக்கு—உச்சிக் கொம்பா இருந்தா கிட்ட நெருங்க முடியுமா?'' என்றான் பொன்னையா.

பின்னாலிருந்த முத்தையாவுக்கு அலுப்பாக இருந்தது.

வேலாயுதம் எப்பொழுதும் இப்படித்தான், இந்த மாடுகளையும் வண்டியையும் கட்டிக் கொண்டு அழுவான். காலத்துக்குத் தக்கபடி கார் வாங்கக் கூடாதோ?.

வண்டி மந்தைக் களத்தைக் கடந்து கொண்டிருந்தது.

''வேலை மும்முரமா நடக்குது போலிருக்கே'' என்றார் முத்தையா நெற்றியில் கைவைத்துப் பார்த்து.

''அதான்—ரெண்டு நாளையிலே, பொன்னையாவை வீட்டைப் பிரிக்கச் சொல்லி இருக்கான் தலைவன்'' என்றார் வேலாயுதம் திரும்பிப் பார்த்து.

''பொன்னையா வீடு வரைக்கும் களத்தை இழுக்கப் போறானாமா? மந்தையிலே மாடுகன்னு நிக்கிறதுக்கும் இடைஞ்சலாகப்போகுது. தான்ங்கிற ஆளாமையிலே செய்துக்கிட்டுப் போறான். இது எங்க போய் முடியப் போகுதோ?'' என்றார் முத்தையா பெருமூச்சோடு.

''மாமா—வாய்ப் பந்தலே போட்டுக்கிட்டு இருக்காதிங்க. எப்படியும் சீக்கிரத்திலேயே ஒரு முடிவுக்கு வாங்க'' என்றார் வேலாயுதம்.

முத்தையா சிரித்தார்.

''யானை குழிக்குள்ளே விழுந்தப்புறம் தான் மனுசன் சொன்னபடியெல்லாம் கேட்குது. பையன் சீக்கிரத்திலே குழிக்குள்ளே போயிடுவான்'' என்றார் முத்தையா தீர்மானமாக—மனம் திறந்து.

''நேத்து நானும் நேருக்கு நேராவே சொல்லிட்டு வந்திருக்கேன். எப்படி வீட்டைப் பிரிக்கப் போறாங்கன்னு பாக்கலாம். இந்த உயிரு வேறே எதுக்கு இருக்கு''என்று வண்டியோட்டிக் கொண்டே பொன்னையாவும் சொன்னான்.

''அடுத்த வாரம் சடையனும் வந்திடுவான். நீ நிமிந்து நில்லுடா பொன்னையா. செலவானாலும் பாத்துப் போடலாம்'' என்றார் வேலாயுதம்.

பொன்னையா பூரித்துப் போனான்.

இவ்வளவுக்கு ஐயா துணை இருந்தால் போதாதா? எமனே வந்தாலும் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்க விடுவானா?

வண்டி படித்துறைப் பிள்ளையார் கோவிலைக் கடந்து முல்லைக்கால் வடக்குக் கரையில் ஏறியது. அணைப்பட்டி வரையிலும் சமதளமாக்கப்பட்ட ஒரு வண்டி செல்லும் தடம் உண்டு. சிறிது தூரம் சென்றால்—வலப் பக்கம் வேலாயுதத்தின் தென்னந்தோப்பு—ஒரே வாலமாக ஐந்து ஏக்கருக்கு. அங்கேயே தங்குவதற்கு, அடக்கமான வீடும் உண்டு.

வண்டி போய்க் கொண்டிருந்தது.

ஏதோ ஒரு யோசனையில் முடிவுக்கு வந்து விட்டவரைப் போல, ''ஒரு வாரத்திலே என்ன நடக்கப் போகுதுன்னு பாரு. அதுக்குத்தான் நேரமும் காலமும் நெருங்கி வருது'' என்றார் முத்தையா.

'' எதுக்கப் பாருங்க யாரு வர்றதுன்னு '' என்றான் பொன்னையா முன்னாலிருந்து.

வேலாயுதமும் முத்தையாவும் திரும்பிப் பார்த்தார்கள்.

எதிர்முகமாக முத்துப்பாண்டியனும், லிங்கமும் வந்து கொண்டிருந்தார்கள்.

'' ரெண்டு பயலுகளும் எங்கே போயிட்டு வாரானுக '' என்று கேட்டார் வேலாயுதம்.

'' எங்கே தொலைஞ்சு போனாலும் நம்ம முன்னாலே வரணுமா? முகரையைப் பார்க்கவே எனக்குக் கூசுது '' என்று சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டார் முத்தையா.

'' நடந்துவர்ற தோரணையைத் தான் பாருங்களேன் '' என்று சொல்லிப் பல்லைக் கடித்தார் வேலாயுதம்.

எதிர்ப்பட்டவர்கள் நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

பாய்ந்து செல்லத் துடிக்கும் காளைகளை இழுத்துப் பிடித்து, ஒதுங்குவதற்கு இடமில்லாத பாதையில், மெதுவாகவே வண்டியோட்டி வந்த பொன்னையாவின் நினைவு, அந்தக் கணத்திலேயே வேறு கோணத்தில் ஓடியது.

புதுக்காளை, ஆளைக் கண்டால் கடுமையாகப் பாயுமே.

அவர்களும் வலப் பக்கமாகத் தானே வருகிறார்கள். கொஞ்சம் கயிறை விட்டுப் பிடித்து, சிவலையின் அடிவயிற்றில் காலால் தட்டினால் போதுமே.

மாடு பாய்ந்து விட்டால் யாரைச் சொல்ல முடியும்.

நின்று ஏறிட்டுப் பார்ப்பதற்குள், வண்டி நெருங்கி, வலப் பக்கமே ஒதுங்கி வருவதைக் கண்டு, பாண்டியனும் லிங்கமும் 'சட்'டென்று முன்னும் பின்னுமாகச் சரிவில் இறங்கினார்கள். அப்படியும் வலத்துக்காளை சீறிப் பாய்ந்து வருவதைக் கண்டு, முன்னால் நின்ற லிங்கம், பக்க வாட்டத்தில் சாய்ந்து, எட்டி மாட்டின் மூக்கணாங் கயிற்றைப் பிடித்து விட்டான். பிடி கொடுத்துவிட்ட மாடு திருகித் தலையைத் தூக்க, வண்டி குறுக்கு வசத்தில் நின்றது.

''கண்ணுக்கு முன்னாலே நாங்க ஒதுங்கி நிக்கறதுதான் தெரியுதில்ல. மெதுவா வர்றது'' என்றான் லிங்கம் கோபத்தோடு பிடியை விடாமலே.

'' கயித்தை விடுய்யா '' என்றான் பொன்னையா.

'' மரியாதையா பேசு பொன்னையா, தடுமாறாதே '' என்றான் பாண்டியன் பின்னாலிருந்து.

'' ஆமடா — மரியாதையை இவருகிட்டத்தான் கத்துக்கணும். அதான் போற மாட்டைப் பிடிச்சு நிறுத்துறான். போங்காலம் தான் வரப்போகுது '' என்றார் வேலாயுதம் கொதிப்போடு,

'' இப்ப கயித்தை விடுறியா இல்லையா? '' என்று சாட்டைக் குச்சியைத் தூக்கிக் காட்டிக் கேட்டான் பொன்னையா.

அப்போது, பாண்டியன் லிங்கத்தின் கையைப் பிடித்துக் கொண்டிரா விட்டால், மூண்டு விட்ட கோபத்தில், ஒருவனாகவே, மாடுகளையும் வண்டியையும் அப்படியே கால்வாய்க்குள் இழுத்து விட்டிருப்பான் லிங்கம்.

'' அவன் வேறே வெறியிலே பேசுறான். நீயும் சமமாப் பேசிக்கிட்டிருக்கணுமா ? விட்டு விலகு'' என்று சொல்லி லிங்கத்தைப் பின்னுக்கு இழுத்தான் பாண்டியன்.

ஆனாலும், லிங்கம் பிடியை விடவில்லை.

''என்னடா வரைமுறை மீறுது. தொலைச்சுப் போடுவேன் '' என்று உள்ளிருந்தே கொந்தளித்தார் வேலாயுதம்.

'' யாரும் எதையும் மீறலே. சுயநினைவோட உங்க பாதையைப் பார்த்துப் போங்க சித்தப்பா '' என்ற பாண்டியன், லிங்கத்திடம் ''சனியனை விட்டுவா '' என்று சொல்லி விட்டுச் சரிவிலேயே பின்னால் நகர்ந்தான்.

பிடித்த பிடியில் சிவலைக் காளையின் மூக்கில் இரத்தம் கசிய, அது கொதிப்போடு சீறிக் கொண்டிருந்தது. பிடியை விட்டு விலகும் போது மாடு பாய்ந்து விடாதா ?

மாட்டின் அடிவயிற்றின் பக்கமாக ஒட்டி நின்று, பிடியை விட்டதும் 'சட்'டென்று சரிவில் இறங்கிக் கொண்டான் லிங்கம்.

சீறி நிற்கும் மாட்டை அதன் போக்கில் விட்டால், வண்டியே சரிவில் இறங்கிக் கொடை சாய்ந்து விடும் என்பதால், பொன்னையா கொம்புக் கயிற்றை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

பாண்டியனும் லிங்கமும் வண்டியின் பின்பக்கமாக வந்தார்கள்.

''ஐயாவும் இருக்காரு. அதான் வண்டி தடம் புரண்டு போகுது '' என்று சொல்லிச் சிரித்தான் பாண்டியன்.

'' தடம் புரண்டு போறது யாருன்னு சீக்கிரத்திலே தெரிஞ்சுக்குவே '' என்றார் முத்தையா பற்களைக் கடித்துக் கொண்டு.

ஒரு 'ராங்க் பரிசு'

விஞ்ஞானப் பணி மற்றும் சில சிறப்பான சாதனைகளுக்காக வழங்கப்படும் நோபல் பரிசுக்கு இணையாகப் பிரிட்டனில் ஒரு பரிசுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காகப் 10 இலட்சம் பவுன்கள் (1 கோடியே 90 இலட்சம் ரூபாய்) நிதி அளித்திருக்கிறது , 'ராங்க்' நிறுவனம்.

விஞ்ஞானத்தில் பௌதிகம், இரசாயனம் மற்றும் மருத்துவத் துறையில் சாதனைகள் புரிபவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இவை தவிர, சத்துணவு, பயிர்ப் பாதுகாப்புப் போன்ற துறைகளிலும், எலக்ட்ரானிக், தகவல் தொடர்புத் துறைகளிலும் சாதனைகள் புரிவோருக்கு ' ராங்க் ' பரிசு வழங்கப்படும்.

இதற்காக ஒரு அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டு விட்டது.

'' இப்பவே தெரியுதே '' என்றான் லிங்கம்.

''என்னடா தெரியுது ?'' என்று கோபத்தோடு கேட்ட வேலாயுதம், '' நீங்க இறங்குங்க மாமா'' என்றார் கீழே குதிக்க எத்தனிப்பவரைப் போல.

'' இப்ப அவ்வளவுக்கு வேண்டாம் சித்தப்பா. போற இடத்திலே எத்தனையோ காரியங்க இருக்கும். இருளான இடம். எதுவும் வெளிக்குத் தெரியாது. நீங்க போங்க '' என்ற பாண்டியன். திரும்பி, லிங்கத்தையும் அழைத்துக் கொண்டு பாதை வழி நடந்தான்.

வண்டியும் அங்கிருந்து புறப்பட்டது.

''இவனுகளை இதுக்கே மேலேயும் விட்டு வச்சிருந்தா— நமக்கு ஊருக்குள்ளே குடியிருப்பிலே '' என்றார் உருட்டி முத்தையா குமுறலோடு.

'' முதல்லே இவனுக்கு நாள் குறிக்கணும். இருளான இடம் போங்கன்னு எவ்வளவு திமிரிலே சொல்லிட்டுப் போறான் '' என்றார் வேலாயுதம் கொதிப்படைந்தவராக.

பொன்னையாவுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில், முதலாளியின் எதிரில் கைகலக்காமல் போனது குறையாகவே பட்டது. சற்று முன்பு எவ்வளவு செலவானாலும் பார்த்துப் போடலாமென்று சொல்லவில்லையா ?

பொன்னையாவுக்கும் குபீரென்று ஆவேசம் வந்துவிட்டது.

வண்டியை நிறுத்தி, முன் பக்கம் வண்டிச் சட்டத்தின் மீதே எழுந்து நின்று, கூண்டுக்கு மேலாகத் தலையைத் தூக்கி, '' நாளைக்குக் களத்துக்குப் படையைக் கொண்டாடா மோதிப் பார்க்கலாம் '' என்று ஏக வசனத்தில் பெருங்குரலெடுத்துச் சொன்னான் பொன்னையா.

நடந்து கொண்டிருந்த பாண்டியனும் லிங்கமும் நின்று திரும்பிப் பார்த்தார்கள்.

அங்கேயே நின்றார்கள்.

வண்டி, வலது பக்கமாகக் கரையிலிருந்து இறங்கி, தென்னந்தோப்பை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

(வளரும்)

கண்ணகிக் கோட்டம்

பேராசிரியர்
சி. கோவிந்தராசன்

[சென்ற இதழ் தொடர்ச்சி]

இதைப் போன்றே நெடுவேள் குன்றத்தின் ஒருபகுதி செங்குத்தாக வானளாவி உயர்ந்துள்ளதால், அவ்வியற்கைத் தோற்றத்தைக் கண்ட அக்கால மக்கள் செங்குன்று என்றும், செங்கோடு என்றும் பெயரிட்டுள்ளனர். செங்கோடு என்பதற்குச் செவ்விதான சிகரம் என்று பொருள்.

நெடுவேள் குன்றம் இடைக்காலத்தில் செங்குன்று என்று பெயர் பெற்றிருந்தது என்பதற்குரிய சான்றாக மலையின் யின் அடிவாரப் பகுதியில் ' செங்குன்றூர் ' என்ற பெயரில் ஊரொன்று இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மதுரையிலிருந்து வையையின் தென்கரை வழியாகத் தொடர்ந்து வந்த கண்ணகி, நடைதளர்ந்து, உடல் நலிந்து இருந்தும், மலைமேல் ஏறவேண்டியிருந்ததைப் பொருட்படுத்தாமல் ஏறிய நிலையினை, இளங்கோவடிகள் ''நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறினாள்'' என்று கூறுகின்றார். ''வருத்தத்தால் கால் நிலத்துப் பாவாமையால் அடிவைத்து ஏறினாள் '' என்று அரும் பதவுரையாசிரியர் கூறுகின்றார்.

மேலக்கூடலூர் கல்வெட்டு

வையையாற்றின் தோற்றப் பகுதியினையும், நெடுவேள் குன்றத்தின் (சுருளிமலை)முற்பகுதியையும் இயன்ற அளவில் ஆராய்ச்சி செய்தும் கண்ணகியைப் பற்றிய செய்திகளோ, சின்னங்களோ கிடைத்தில. எனவே, கம்பம் பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியிலுள்ள பல சிற்றூர்களில் ஆராய்ச்சி செய்யலானேன். மதுரையிலிருந்து குமுளிக்குச் செல்லும் நெடுஞ்சாலை இப்பகுதியிலேயே செல்லுகின்றது. மதுரை மாவட்டத்தின் கோடியாக இச்சாலையில் அமைந்துள்ள மேலக்கூடலூரில் யான் ஆராய்ச்சி செய்யும் போது, அவ்வூரிற்குக் கிழக்கே தனியிடத்தில் உள்ள பெருமாள் கோயிலில், கருவறைக்குப் பின்புறம் தரையில் கல்வெட்டுள்ள குத்துக்கல் ஒன்று புதைந்து நின்றது. எழுத்துக்களைத் தூய்மை செய்து பார்த்த போது, தமிழ்க்கல்வெட்டு துலக்கமாகத் தெரியலாயிற்று. அக்கல்வெட்டில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அப்பகுதியினை ஆட்சி செய்த சேர மன்னன் நாயனார் குலசேகரப் பெருமாள் என்பவன், கூடலூரில் நான்கு எல்லைக்குட்பட்ட நிலத்தில் ஒரு பகுதியை மங்கலாதேவி அம்மன்பூசைக்குத் தர்ம சாசனம் செய்துள்ள செய்தி கூறப்பட்டிருந்தது.

மங்கலாதேவி அம்மன்

' மங்கலாதேவி ' என்ற பெயரைக் கல்வெட்டில் யான் கண்ட அளவில், சிலப்பதிகாரத்தில் இப்பெயர் இரண்டிடங்களில் சிறப்பாகக் குறிக்கப் பட்டிருப்பது நினைவுக்கு வந்தது. (1) கவுந்தியடிகள் மாதிரி என்ற இடையர் குல மகளிடம் கோவலன் கண்ணகி ஆகிய இருவரையும் அடைக்கலம் தந்த போது கண்ணகியைக் கவுந்தியடிகள் மாதிரிக்குச் சுட்டிக் காட்டி இம் '' மங்கல மடந்தை '' என்று குறிப்பிடுகின்றார்; (2) வரந்தருகாதையில், குறிக்கப்படும் ''மங்கலமடந்தைக் கோட்டம்'' என்பதற்கு - கண்ணகிக் கோயில் என்று உரையாசிரியர் குறித்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் இவ்வாறு குறிக்கப்பெறும் மங்கலமடந்தை என்றும் பெயருக்கு ஒப்பாக கல்வெட்டில் '' மங்கலதேவி அம்மன் '' என்று கூறப்பட்டிருந்தது என் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தது. தெய்வநிலை எய்திய கண்ணகியைக் காலவழக்கில் தேவி என்றும் அம்மன் என்றும் கூறுவது, பெண் தெய்வங்களுக்குப் பெயரிட்டு வணங்கும் தமிழக வழக்கமாதலின் கண்ணகியாகிய மங்கல தேவிக்கு அப்பகுதியில் எங்கோ கோயிலொன்று இருக்க வேண்டுமென்று கருதினேன். அது பற்றி மிக்க ஆர்வமுடன் ஆராய்ச்சி செய்யவும் தொடங்கினேன். (1908-ல் கல்வெட்டுத் துறையினர் இக்கல்வெட்டைப் படி யெடுத்துள்ளனர். ஆனால், எத்தகைய ஆராய்ச்சி உரையும் இதுவரையில் கூறவில்லை).

மங்கலதேவி மலை

முயற்சி பயனளித்தது. யான் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் சுருளிமலைத் தொடரின் (நெடுவேள் குன்றம்) தெற்குப் பகுதியாகும். உயர் அடுக்குச் செங்குன்றுகளுள், ஒன்றின் பெயர் ' மங்கல தேவி மலை ' என்று பெயர் பெற்றிருப்பதுடன், அம்மலையின் மேல் தளத்திலுள்ள காட்டினுள் இடிபாடுகளுடன் புதரடைந்து சில கோயில்கள் இருக்கின்றன என்பதையும், அப்பகுதியில் காட்டு யானைகள், கரடி, சிறுத்தைப் புலி முதலிய கொடிய விலங்குகள் எப்பொழுதும் இருப்பதால் அங்கு மக்கள் யாரும் செல்வதில்லை என்பதையும் மேலக்கூடலூர் மக்களிடம் பழகிக் கேட்டறிந்தேன்.

கண்ணோட்டம்

மங்கலதேவி மலைக்குச் செல்லும் முன்னேற்பாடாக அம்மலைப் பகுதிகளையும், அடிவாரத்தையும் கண்ணோட்டமிட்டேன். மேலக் கூடலூரிற்குத் தெற்கே உள்ள ஏரிக் கரையிலிருந்து தொலை நோக்காகப் பார்த்த போது, வையை யாற்றின் தொடக்க அருவி சுருளிமலைத் தொடரில் இடையே இருப்பதை முதலில் அறிய முடிந்தது. அடிவாரப் பகுதிகளிலும், மலை மடிப்பிடங்களிலும் அடர்ந்த காடுகள், மலைகளைப் போர்த்தியதைப்போன்று எங்குப் பார்த்தாலும் நெருக்கமாகவும், ஏழடிக்குக் குறையாமலும் வளர்ந்து நிற்கும் ' போதை ' என்று பெயர் பெறும் மலைப் புல். மலைகளுள் மூன்றாவதாக உயர்ந்து பரந்து நிற்கும் மலை மேலேதான் இடிந்து பாழடைந்த கோயில்கள் இருப்ப

தாகத் தெரிவித்தார்கள். அம்மலையே மங்கலதேவி மலை என்று பெயர் பெறுவதாகும். மங்கலதேவி அம்மன் கோயில் அதன்மீது இருப்பதனாலேயே மலையும் அப்பெயரைப் பெற்றிருக்கின்றது. வையைக் கரையைப் பின்பற்றி மதுரையிலிருந்து தொடர்ந்து வந்தால், வையையின் தோற்றப் பகுதியாகும் சுருளிமலைத் தொடரின் (நெடுவேள் குன்றம்) நடுவே மங்கலதேவி மலை அமைந்துள்ள இயற்கை, இளங்கோவடிகள் தரும் செய்திகட்குப்பொருத்தமாகவே இருப்பதை அறிய முடிந்தது.

மங்கலதேவி மலையின் வடக்கு அடிவாரம் வரையில் 'பாண்டிய நாட்டு எல்லை அமைந்து, அதற்கு மேல் தொடர்ந்துள்ள மலைப்பகுதி முழுவதும் சேர நாட்டு எல்லையாக இன்றும் அமைந்திருப்பதும், சேரநாட்டு எல்லைக்குள்ளே மங்கலதேவிஅம்மன் கோயில் இருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். மதுரையிலிருந்து மேற்குநோக்கிப் புறப்பட்ட கண்ணகியின் பயணத்தைப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிக்கும் செய்திகட்கு ஏற்ப நிலவியற்கையுடன் நாட்டுப் பிரிவும் உள்ளவாறு அமைந்திருக்கின்றன. இளங்கோவடிகள் சேர நாட்டினர் ஆதலால் இப்பகுதியினை நன்கு நேரில் அறிந்ததனாலேயே, கண்ணகி மதுரையிலிருந்து வையை ஒரு கரை பற்றி நடந்து வந்து நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறினாள் என்று உள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.

மங்கலதேவி மலைக்குச் செல்ல, மேலக்கூடலூர் வழியே குறுக்கு வழியாகு மென்பதை நன்கு தெரிந்து கொண்டேன். குமுளியிலிருந்தும் செல்லலாமாயினும் அவ்வழி ஏழு மைல் தொலையுடையது. இடையிடையே அடர்ந்த காடுகள்; கொடிய விலங்குகளின் புழக்கம் மிகவும் அதிகம். இவ்வழி நீண்ட வழியாகும். எனவேதான், குறுக்கு வழியாகும் மேலக்கூடலூர் வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். இவ்வழி கரடுமுரடான காட்டு வழிதான். மலை ஏற்றமும் செங்குத்தானதேயாகும். எனினும், ஓரளவு விலங்குகளின் தொல்லை இல்லாத பகுதி யென்பதையும், அப்படி விலங்குகள் எதிர்ப்படின் அது நம் வினைப் பயனாகுமென்பதையும், தெரிந்துகொண்டேன். என் உள்ளத்தின் ஒரு கோடியில் அச்சம் அமைந்திருந்ததாயினும், ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழக வரலாற்றுப் புகழ்மிக்க இடத்தினைக் கண்டு ஆராய்ச்சி செய்ய இருக்கின்றோம் என்ற ஆர்வத்தின் முன்னர் அவ்வச்சம் தலைகாட்டவில்லை. மலையின் மேலுள்ள காடுகளை மூடிய நிலையில் மேகப் படலங்கள் சூழ்ந்துபடிந்து நிற்பதால் புகைப்படம் சரியாக அமையாததாகி விடக்கூடும் என்ற எச்சரிக்கையுடன், வெவ்வேறு திறனுடைய மூன்று கேமிராக்களை எடுத்துக் கொண்டு, கல்வெட்டுகள் இருப்பின் பிரதி செய்துகொள்ள வேண்டிய கருவிகளுடன் தீபாவளி விடுமுறையில் ஆராய்ச்சி செய்யத் துணிந்தேன்.

என் நிலை

யான் துறவியல்ல ; மனைவியும் நிறைய மக்களும் எனக்குண்டு. அவர்களிடம் யான் மங்கல தேவிமலை ஆராய்ச்சி விவரங்களை முன்னதாகத் தெரிவிக்கவில்லை. காரணம், ஆபத்து நிறைந்த மலை ஆராய்ச்சியை அவர்கள் விரும்பாது தடுத்து விடுவார்களோ என்ற எண்ணம் எனக்கு உண்டானதேயாகும். எனவே, வழக்கம் போல் வரலாற்றாராய்ச்சிக்குச் செல்லும் போக்கில், என் நாள் குறிப்பேட்டில் மட்டும் ஆராய்ச்சிக்குச் செல்லும் உண்மைச் செய்தியினையும், யான் குடும்பத்திற்குச் சொல்ல வேண்டிய முடிவான கருத்துக்களையும் எழுதி இல்லத்தில் வைத்து விட்டு, கி.பி. 1963-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 16-ஆம் நாள் தஞ்சையிலிருந்து என் மாணவர் முத்து கந்தசாமி என்பவருடன் புறப்பட்டு மதுரைக்குச் சென்று, அங்கிருந்து குமுளிக்குச் செல்லும் பேருந்து வண்டியில் இடம் பெற்று மேலக் கூடலூருக்குச் சென்றேன். அப்பொழுது உச்சிப் பொழுதாகி விட்டது. ஐப்பசி மாத மாதலால் மழையும் விடாமல் பெய்து கொண்டே இருந்தது. ஆயினும் பிற்பகற்பொழுதில் அவ்வூர்ப் பகுதிகளை ஆராய்ச்சி செய்யலானேன்.

நெடுவேள் குன்றின்மேல், வேங்கைக்கானலில் உள்ள கண்ணகிக் கோட்டக் காட்சி.

மேலக் கடலூரில்

ஊரிற்குத் தெற்கேயுள்ள ஏரியின் கிழக்குக் கரையைச் சார்ந்துள்ள திடலில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டளவில் அப்பகுதிகளை ஆட்சி செய்துவந்த சேரநாட்டுச் சிற்றரசர்களின் நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்ட நடுகற்களைக் கண்டுபிடித்தேன். ஊரிற்குக் கிழக்கே புறம்பாக நல்விலையில் இருந்து அழிந்த பெருமாள் கோயிலொன்று வாழைத் தோட்டமாகியுள்ளதைக் கண்டு ஆராய்ச்சி செய்தபோது, கிடங்கொன்றின் சரிவில் அத்திமரப் புதர்களுக்கு இடையே திருமால் நரசிம்ம வடிவில் இரணியனை இலாவகமாகப் பிடித்து நிறுத்திக் கால்களால் இடுக்கிக் கைகளால் முறித்துக் கொல்லும் பாங்கில் அமைக்கப்பட்டதும், கண்டார்க்கு மயிர்க் கூச்செறியும் தோற்றத்துடன் சிற்ப நுட்பங்கள் நிறைந்ததுமாக அமைக்கப்பட்டதுமான கற்சிலையொன்று கேட்பாரற்றுப் புதைந்து நின்றதைக் கண்டேன். இவ்வாறு பிற்பகல் பொழுதைக் கழித்ததுடன், மறுநாள் காலையில் மலை ஏறுவதற்கு வழிகாட்டியாகத்தகுதி உடையவர் ஒருவரை ஏற்பாடு செய்து கொண்டேன். அவர் கன்னடர், இராமன் என்னும் பெயருடையவர். வேட்டையின் பொருட்டு அடிக்கடி அங்குள்ள மலைகட்குச் சென்றுவரும் அனுபவமுடையவர். மங்கல தேவி மலைக்கும் வேட்டைக்காகப் பல தடவை சென்று வந்தவர். அன்பும், பண்பும் நிறைந்த அவ்வேட்டைக்கார நண்பருடன் மேலக்கூடலூரில் வாழும் இளைஞர் சிலர் உதவியாக உடன் வர ஒருப்பட்டார்கள்.

மங்கல தேவிக் கோட்டஆராய்ச்சி

17–11–1963 காலை நான்கு மணியளவில் மங்கல தேவி மலை ஆராய்ச்சிக்குப் புறப்பட்டோம். மழை ஒரே சீராகப் பெய்து கொண்டே இருந்தது. ஊதைக் காற்றும் ஒன்று சேர்ந்து வீசியது. அடிவாரத்திற்குச் செல்ல மூன்று கல் நடந்தாக வேண்டும். நனைந்து கொண்டே சென்றோம். இடையே முல்லையாறு, காட்டாறு ஆகிய இரண்டு ஆறுகள். கரைகள் சேறும், உளையும் வழுக்கலுமாக இருந்தன. முல்லையாற்றில் மார்பளவு தண்ணீர் சுழித்து வேகமாக ஓடியது, கடந்தோம். அடிவாரம் வரையில் பசுமையான புதர்கள். இடையிடையே வரகு, சாமை பயிரிடப்பட்ட புன்செய் நிலங்கள். நாங்கள் செல்வதற்குச் சில நாழிகைக்கு முன்னர் காட்டு யானைகள் புகுந்து அப்பயிர்களை அழிவு செய்துள்ளதைச் சிறியதும் பெரியதுமாகப் பதிந்துள்ள காலடிகள் அறிவித்தன. அப்பகுதியில் வருடை என்னும் மானினம் மேய்ந்து கொண்டிருந்தன. அடிவாரம் அடர்ந்த காடாக இருந்தது. அடிவாரத்திற்கு நாங்கள் சென்றபோது காலை மணி ஏழாயிற்று. படிப்படியாக உயரும் ஒரு சரிவைப் பாதையாகக்கொண்டு ஏறினோம். வழியென்று ஒன்று இல்லை. செல்ல வேண்டிய மலையை ஒரு குறிப்பாக வைத்துக் கொண்டு ஏறுவதற்கு ஏற்ற இடங்களை அவ்வப்போது ஏற்படுத்திக்கொண்டோம். மலையெல்லாம் போதைப் புல் மண்டி வளர்ந்திருந்தது. அதனுள்ளேயும் வழிவகுத்துச் சென்றோம். அப்போது அட்டை என்னும் பூச்சி கால்களிலும், கைகளிலும் கடித்துக் கொண்டு இரத்தத்தை உறிஞ்சிப் பருத்துத் தொங்கின. மூன்று அடுக்காக உயர்ந்து நிற்கும் மலைகளில், முதலடுக்கின் மடிப்புத் தடத்திற்கு வந்துவிட்டோம். பாண்டிய நாட்டு எல்லை அவ்விடத்தில் முடிந்து சேர நாட்டு எல்லை தொடர்ந்திருப்பதற்கு அறிகுறியாக அங்குப் பெரிய கருங்கல் நிறுத்தப்பட்டுள்ளது.

அப்பகுதியில் யானைகளின் புழக்கம் அடிக்கடி உண்டு என்று வேட்டைக்கார இராமர் கூறினார். அப்பொழுது ஒரு நண்பர் ஓரிடத்தைச்சுட்டிக் காட்டி ''பத்து நாட்களுக்கு முன்னர் இங்கு மரம் வெட்ட வந்த ஆளை, யானை பிடித்து மிதித்துக் கொன்று விட்டது. அந்த இடம் இதுதான் '' என்றார். அச்சந்தரும் செய்திதான். ஒரு கணம் பெண்டு பிள்ளைகளை நினைத்துத் திகைத்தேன். ஆயினும், இனிமேலே ஏறுவதும் கீழே இறங்குவதும் ஒரே வகையான அபாயத்துக்கு உட்பட்ட நிலையாகவே இருப்பதை உணர்ந்தேன். மற்றவர்கள் முகங்களை ஒருமுறைப் பார்த்தேன். தெளிவில்லை. வேட்டைக்காரர் மட்டும் துணிவுடன் காணப்பட்டார். அவரைப் பின்பற்றிய நிலையில் யானும் ஒருவாறு துணிவை வரவழைத்துக் கொண்டு என் மாணவரைக் கொண்டு எங்களை போட்டோ படம் எடுக்கச் செய்து நண்பர்களின் மனக் கிளர்ச்சியை மாற்ற முயன்றேன். மாணவரும் எங்களைப் படமெடுத்தார். ஊரிலிருந்து புறப்படுவதற்கு முன்னர், வேட்டைக்காரரின்அனுபவப்படியே, வானவெடிகள் வாங்கிவர ஏற்பாடு செய்திருந்தேன். அவைகளை வழி நெடுகிலும் புதரடைந்த இடங்களில் ஒவ்வொன்றாகக்கொளுத்தி விட்டுக் கொண்டே வந்தார். வெடியின் ஓசையைக் கேட்டு விலங்குகள் விலகுகின்றன என்பது இராமரின் சித்தாந்தம். அப்பொழுது இராமர் ஒரு வெடியைக்கொளுத்தி வானில் விட்டார். அவ்வோசையுடன் ஆரவாரம் செய்துகொண்டு நாங்களும் மேலே/ தொடர்ந்து மலை மீது ஏறினோம்.

அப் பகுதியிலிருந்து மலை தெரியாவண்ணம் 'மஞ்சு' என்று அங்குள்ளவர்கள் கூறும் மேகப் படலங்கள் படர்ந்து தொடர்ந்து படிந்து தவழ்ந்து சென்றன. எதிரே யானை வந்தாலும் தெரியாது. அவ்வளவு அடர்த்தியான மஞ்சு. எப்படியோ தொடர்ந்து ஏறினோம். மூன்றாவது மடிப்பினைக் கடந்து செங்குத்தான சிகரத்திற்கு வந்துவிட்டோம். அப்பொழுது, வேட்டைக்காரர் ஒருமுறை கூப்பாடு போடச் சொன்னார். எல்லாரும் கூக்குரல் கொடுத்தோம். என்ன வியப்பு! எதிரே மேற்குப்புறம் எங்கிருந்தோ எதிரொலிகள் கிளம்பின. அத்திசையைச் சுட்டிக் காட்டிய அவர் ''அது தான் வேங்கைக் கானல் ; அங்கேதான் மங்கலதேவிகோயில் இருக்கு'' என்றார். அதைக் கேட்ட நான், வேங்கைக் கானல் என்று ஏன் பெயர் சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன்? அந்தக் கானலுக்கு அதுதான் பேருன்னு மலையாளப்பளிங்கர்கள் சொல்லுவாங்க, அங்கே மலை வேங்கை மரங்கள் இருக்கின்றன என்றார்.

ஆறில் மூன்று!

முருகனின் திருத்தலங்கள் 'அறுபடை வீடு' என்று சொல்லப்படுகின்றன. அறுபடை வீடுகள் திருச்செந்தூர், திருவேரகம் திருத்தணி, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, திருஆவினன்குடி (பழனி) ஆகும். இவற்றில் இந்தக் 'கடைசி மூன்றும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாகும்.

இங்கே வாசகர்கள் கவனத்திற்கு ஒரு சில கருத்துகளைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. ''கண்ணகி நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி, மலைமேல் வேங்கை மரத்தின் நிழலில் நின்று தெய்வமானாள். அந்நிகழ்ச்சியை மலைவாழ் குறவர்கள் கண்டார்கள். கண்ணகியைத் தெய்வமாக வழிபட்டார்கள்'' என்று இளங்கோவடிகள் தெளிவாகக் கூறியுள்ளார். அக்கருத்திற்கு ஏற்ப மங்கலதேவி மலை, வேங்கைக் கானல் ஆகியவற்றுடன் பளிங்கர் என்னும் சாதிப் பெயருடைய மலைவாழ் பழங்குடி மக்களாகிய குன்றக் குறவர் இன்றும் சுருளிமலை அடிவாரத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். அம்மலை மக்கள் ஆண்டு தோறும் தைத் திங்கள் முதல் நாளில் மங்கலதேவி அம்மனுக்குப் பூசையிட்டு வழிபாடு நிகழ்த்தி வருகின்றார்கள். இச்செய்திகள் சிலப்பதிகாரச் செய்திகளோடு இணைந்து, மங்கல தேவியே கண்ணகி தேவி என்பதற்குரிய சான்றுகள் ஒன்றாகுமல்லவா?

தொலைக் காட்சி

மலையின் உச்சிக்கு வந்த அளவில், தொலைக்காட்சிக் கண்ணாடியைக்கொண்டு ஒருமுறை சுற்றிப் பார்த்தேன். கிழக்கே நாங்கள் நிற்கும் மலை உச்சிக்கு மேலான உயர்ந்துள்ள செங்குன்றின் ஒரு புறம் அழகிய அருவியொன்று வானிலிருந்து வழிவதைப் போன்று இரைச்சலுடன் விழுகின்றது. அருவி விழும் தடத்தினைத் தடாகம் என்பர். தடாகத்திலிருந்து பல சிற்றருவிகள் மலைகளின் மடிப்புப் பகுதிகளில்

24)

வழிந்தும் நெளிந்தும் குதித்தும் பளிச்சிட்டு இறங்கும் காட்சி, கருத்து நிற்கும் மலைகட்கு வெள்ளிக் கொடிகளில் வைரக்கற்களை வைத்திழைத்து அணிவித்த அணிகலன்களைப் போல் அழகுடன் விளங்குகின்றது. மலைகளைத் தழுவி அடிவாரத்திற்கு வரும் அவ்வருவிகளே வையையாற்றின் தோற்றத்திற்கு மூலமானவைகளாகும். அடிவாரத்தில் பல ஓலைக் குடிசைகள் தெரிகின்றன. பளிங்கர் என்று பெயர் கூறப் பெறும் மலைவாழ் பழங்குடி மக்களாகிய குன்றக் குறவரின் வாழ்விடமாகும். தெற்கே மிகத் தொலைவில் கொடி போன்று பாதைகளுக்கு இடையே ஆறொன்று மேற்கு நோக்கி ஓடுகின்றது. இதுவே, வரலாற்றுச் சிறப்புடையதும் சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெறுவதுமாகிய, பெரியாறு. மேற்கே வேங்கைக் கானலும் (மரங்களடர்ந்து திட்டாக நிற்கும் சோலை) மங்கலதேவிக் கோட்டமும் மஞ்சினுள் மங்கிய தோற்றமாகத் தெரிகின்றது. வடமேற்கே, சுவர் வைத்ததைப்போல் கொடைக் கானல் மலைத் தொடர்; அதன் அடிவாரப் பகுதியில் குமுளிக்கு நெளிந்து செல்லும் நெடுஞ்சாலையும், மேலக் கூடலூரும் தெரிகின்றன. வடகிழக்கே, தொலைவில் சுருளிமலை அடிவாரப் பரப்பிடத்தில் அடர்ந்த காடுகள். காடொன்றின் முகப்பிடத்தில் காட்டு யானைகள் கூட்டமாக நிற்கின்றன. இவ்வாறான தொலைக் காட்சிகளைக் கண்ட பின்னர், வேட்டைக்காரர் விருப்பப்படி மேல்நோக்கி நடந்தோம். இடையே இருபுறமும் சரிவாக அமைந்து குறுகிய இடத்தில் போதைப்புல் புதரினுள் சிற்ப வேலைப்பாடுடைய மூன்று கற்கள் புதைந்து கிடந்தன. அக்கற்களை ஓரளவு புரட்டிப் பார்த்ததில், அவைகள் மங்கலதேவி அம்மன் கோயிலுக்குரிய எல்லையாகவும், அடையாளமாகவும் நிறுத்தப்பட்டிருந்த ''மகர தோரண மங்கல வாயில்'' என்பது தெளிவாகப் புலனாயிற்று. அங்கிருந்து அரை நாழிகை வழி நடந்து வேங்கைக் கானல் அருகே வந்துவிட்டோம். உள்ளே புக இடமின்றிப் புல்லும் புதருமாக வளர்ந்திருந்தது. மலைவேங்கை, கருமருது, சந்தனம் ஆகிய மரங்கள் வளர்ந்து அடர்த்தியாகவே காணப்பட்டது. வலப்புறமாகப் பின்புறம் சென்ற போது அங்கே மலைப் புற்கள் மண்டிக் கிடப்பதற்கு இடையே பாறைகளினால்அமைக்கப்பட்ட சிறிய வாயில் ஒன்று தெரிந்தது. உள்ளே பார்த்த போது ஒரே புற்காடு: இடையிடையே தலைதூக்கி நிற்கும் மரங்கள்; ஆங்காங்கே செடி, கொடிகள் சூழ்ந்து முட்டு முட்டாக நிற்கும் புதர்கள். உள்ளே நுழைந்தோம்.

கோட்டத்தினுள் ஆராய்ச்சி

மங்கலதேவி கோட்டத்தினுள் வந்து விட்டோம். கோட்டம் என்றால் கோயிலுக்குரிய பரப்பிடம் என்பது பொருள். கோட்டம் ஏறத்தாழ இருநூறடிப் பக்கமாக நாற்புறமும் வளைக்கப்பட்டு இரண்டு வாயில்களுடன் இருந்தது. ஒரு காலத்தில் பாறைகளை அடுக்கி அமைக்கப்பட்டிருந்த மதில் சிதைந்து இடிபாடுகளுடன் இருந்தது. ஆங்காங்கிருந்த புதர்களுள் கருங்கற்களாலானதும் ஓர் அறையளவில் அமைக்கப்பட்டதும் அதிக உயரமில்லாததுமான கோயில்கள் நான்கு இருந்தன. கோட்டத்திற்குரிய கிழக்கு, மேற்கு வாயில்களுக்கு ஏற்ப அக்கோயில்கள் அமைக்கப் பெறவில்லை. தனித்தனியாகவும் முன்னும் பின்னுமாகவும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையை நோக்கிய வாறும் இருந்தன. கோயில்களுள் ஒன்றேனும் வாயில்களுக்கு நேராக இல்லை. அப்பொழுது உச்சிப் பொழுதாகி இருந்தது. மழையும் ஓயாமல் பெய்து கொண்டே இருந்தது. கோட்டத்தினுள் பல நூற்றாண்டுகளாக அடைந்து கிடக்கும் தழைகளின் மடிசல், குப்பைகளிலிருந்து அட்டைப் பூச்சியின் தொல்லை மிகுதியாக இருந்தன. அச்சந்தரும் சூழலுக்கிடையே கிடைத்த நேரத்தைப் பரபரப்போடு ஆராய்ச்சிக் குரியதாக்கினேன். நண்பர்களும், வேட்டைக்காரரும் புதர்களை வெட்டியும் சிதைத்தும் வழிவகுத்து உதவினார்கள். நான்கு கோயில்களையும் ஓரளவு ஆராய்ச்சி செய்ய முடிந்தது. அவற்றின் பக்கங்கள் நெருக்கமான புதர்களடைந்திருந்ததனால் அப்பகுதிகட்குச் செல்ல இயலவில்லை.

கண்ணான தொண்டு!

கண்ணிருந்தும் கல்லாதவர், கண்ணற்றவராகிறார். ஆனால், கண் பார்வையற்றவரோ கல்வியில் ஆர்வம் காட்டிக் கற்கின்றார்கள்! ஜெர்மன் நாட்டிலுள்ள மைய நூலகம் ஆண்டு தோறும் சுமார் 1,300 நூல்களை 'பிரெயில்' பாணியில் வெளியிடுகிறது.

கண் பார்வையற்றவர்களுக்காகச் சமையற்கலை நூல்கள், பாடப் புத்தகங்கள், நிலப்படங்கள், அரசியல், விஞ்ஞான நூல்கள் முதலியன வெளியிடப்படுகின்றன. மேலும் வாரத் தொடராக நாவல்களும், பிரெயில் பாணியில் வெளியிடுகின்றது.

இலக்கியங்களை நாடாப் பதிவு (டேப் ரிகார்டிங்) மூலம் தயாரித்துப் பார்வையற்றோர் பயன் பெற வழிவகை செய்கின்றனர். இவ்வாறு உலக இலக்கியங்கள் 2,600 நாடாப் பதிவுகளாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மைய நூலகத்தில் இன்று 20 ஆயிரம் பிரெயில் நூல்களும், 9,000 இசை நூல்களும் உள்ளன. இந்த நூலகம் புத்தகங்களை இரவலாகக் கொடுக்கிறது.

பால் பெற வருந்த பத்தினிக் கோட்டம்

யான் முதலாவதாக ஆராய்ச்சி செய்த அறைக் கோயில் கருங்கற்களால் சிறிய வடிவில் அமைக்கப்பட்டதாகும். இக் கோயில் மேற்கு வாயிலுக்கு அருகில் உள்ளது. மேலே விமானம் இருந்து சிதைந்து விட்டதை எஞ்சி நின்ற பழமையான செங்கற்களும், புதர்களும் உணர்த்தின. இக்கோயிலின் வாயில் நிலைச் சட்டக் கற்களில் வலப்புறமுள்ள கல்லில் பழைய வட்டெழுத்துக் கல்வெட்டு இருந்தது. (படியெடுத்துக் கொண்டேன்). உள்ளே இடிபாடுகளுக்கிடையே தளத்தில் வட்டமான கல்லொன்று அமைக்கப்பட்டிருந்தது. (இலிங்கத்திற்குரிய ஆவுடைப் பகுதியைப் போல்) இவ்வளவில் இக்கோயிலைக் கண்ட பிறகு, இதற்குக் கிழக்கே அறுபதடிக்கு அப்பால் மேற்கு நோக்கியதாக இருந்த அறைக்கோயிலை இரண்டாவதாக ஆராய்ச்சி செய்தேன். இக்கோயில் அதிக உயரமில்லாமல் இருந்தும் தோற்றத்திற்கு ஒரு கவர்ச்சியாக இருந்தது. இதன் வாயில் ஒரு முற்றத்தைப்போல் சிறிய சுவரால் கோலப்பட்டிருந்தது. முற்றத்தின் நடுவே பலிபீடம் மடிசல்களுக்கு இடையே தலையை மட்டும் காட்டி நின்றது. கோயில் வாயில் கொடிகளால் மறைத்துக் கிடந்தது. அவற்றை வெட்டி விலக்கிக் கொண்டு உள்ளே பார்த்தபோது;வேரும், விழுதும், கற் குவியலும், மழைநீர் ஒழுக்குமாக இருளடைந்து இருந்தது. பலிபீடம் மட்டும் அழகாக அமைக்கப்பட்டிருந்தது. மேலே இருந்த விமானம் சிறியதாக நான்கு பட்டை வடிவில் குவிந்திருந்து புதர்களால் அழிவுபெற்றுச் சிதைந்திருந்தது. வெளிப் பக்கப் பகுதிகள் முழுவதும் அடர்த்தியான காடு. அங்குப் போவதற்கே இயலவில்லை. அச்சமாகவும் இருந்தது.

கண்ணகி சிலை

கோயிலினுள்ளே கிடந்த கற்குவியல்களுள் சிதைந்த பெண் சிலையின் தலைப் பகுதி மட்டும் கிடந்தது. அதன் பீடமும், கால்களின் பகுதியுள்ள கல்லும் கோயிலுக்கு வெளியே புற்களுள் கிடந்தன. சிதைந்த சிலையின் தலைப் பகுதியையும், கால்களின் பகுதியையும் புகைப்படமெடுக்க முடிந்தது. வெளியே கிடந்த பீடத்தின் முன்புறம் இரண்டு பெண் பூதங்கள் மேலேயுள்ள தேவியைச் சுமப்பது போன்று புடைப்புச் சிற்பம் செதுக்கப்பட்டிருந்தது. இடது காலை மடக்கி வலது காலை ஊன்றிய நிலையில் கால்களின் சிதைந்த பகுதி இருந்தது. தலைப் பகுதியுடன் அரைகுறையாக இருந்த புயங்கள் சிலை இரண்டு கைகளுடன் அமைக்கப்பட்டிருந்ததைத் தெளிவாக உணர்த்தின. பூக்குழையணிந்த தொள்ளைக் காதுகளின் மேற்புறம் கொப்பூக்கள் அணிந்திருப்பது போன்ற தோற்றம். கொண்டையிட்டு விரித்த கூந்தல். தனங்களில் இடதுபுறம் சிறியதாகவும், வலதுபுறம் எடுப்பாகவும் இருக்கும் அமைப்பு. இளமையுடன் கூடிய மானிடப் பெண்வடிவில் சிலை செய்யப்பட்டிருந்தது.

சிலை செய்யப்பட்ட கல் வெண்மையும், வெளிர் மஞ்சளுமாக இருந்தது குறிப்பிடத் தக்கதாகும். சிலையின் கூடிய உயரம், உட்கார்ந்த தோற்றமாக இருந்ததால் இரண்டடிக்குமேல் இருக்கவியலாது. (இச் சிலையே மங்கலதேவி என்ற பெயருடன் விளங்கும் கண்ணகி சிலையாகும்). இவ்விரண்டு கோயில்களும் காலத்தால் முந்தியவையாகும். பழம் பொருள் ஆராய்ச்சிக் குறிப்புடன் கூறுவோமானால் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழர் வளர்த்த கருங்கற் கட்டடக் கலைகளுக்கோர் சான்றாக இவை இருந்தன எனலாம்.

மங்கலதேவி சிலையை சிதைந்த நிலையிலாவது காண முடிந்ததை எண்ணிய மகிழ்வுடன் மூன்றாவது கோயிலைப் பார்வையிட்டேன். இக்கோயில் மங்கலதேவி கோயிலின் பின்பக்கச் சுவருடன் இணைந்து தெற்கு நோக்கியதாக அமைக்கப்பட்டிருந்தது. கோயில் அமைப்பு முறையில் சிற்ப வேலைப்பாடுகள் சிறிதளவு இருந்தன. கோயிலின் கிழக்குப்புறம் சுருள் யாளிகளுடன், கருங்கற் படிக்கட்டு அழகாக அமைக்கப்பட்டிருந்தது. அடிப்படை வரிசைக் கற்களின் மீதே அறையாகக் கோயில் அமைக்கப்பட்டிருந்தது. கருவறையுள் எத்தகைய சிலையும் இல்லை. அவ்விடத்தில் ஆழமான பள்ளமொன்றே நீர் நிறைந்து காணப்பட்டது. வாயிலுக்கு முன்னர் முற்றம் போன்று மூன்றடி உயரச் சுவர்களால் கோலப்பட்டிருந்தது. இம் முற்றச் சுவரின் முன்புறக் கற்களில் பிற்காலப் பாண்டியரின் கல்வெட்டுகள் இரண்டு பகுதிகளாக இருந்தன. கட்டட அமைப்பு, சிற்ப நிலை, கல்வெட்டு ஆகியவைகளைக் கொண்டு சிந்தித்தபோது இம் மூன்றாவது கோயில் கி. பி. 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது என்பது புலனாயிற்று.

இக் கோயிலுக்கு இடப்புறமே கோட்டத்தின் தலைவாயிலாகும் கிழக்கு வாயில் உள்ளது. இக் கோயில் கட்டியபோது கோட்டத்தின் கிழக்கு வாயிலைக் கோபுர வாயிலாகக் கட்ட அடிப்படையிட்ட நிலையில் திருப்பணி நிறைவு பெறாமல் நின்றுள்ளதை வாயில் நிலைச் சட்டக் கற்களளவில் புதரடைந்து கிடக்கும் தோற்றம் உணர்த்திற்று. இக் கிழக்கு வாயிலுக்கு முன்னர் ஒரு சுனை, பாறையின் வெடிப்பிடத்தில் உள்ளது.

சிதைந்த கண்ணகி சிலையின் தலைப்பகுதி

இவ்வாறு மூன்றாவது கோயிலை ஆராய்ச்சி செய்த பின்னர் மேற்கு வாயிலுக்குத் தென்புறம் கிழக்கு நோக்கியதாக அமைக்கப் பட்டிருந்த சிறிய அறைக்கோயிலைப் பார்வையிட்டேன். நுழைந்து உள்ளே செல்லும் அளவில் குறுகிய கோயில். எத்தகைய வேலைப்பாடுமில்லாத நிலையில் கருங்கற்களால் கட்டப்பட்டிருந்தது. கருவறையுள் ஒரு கல் நடப்பட்டிருந்தது.

கோயிலின் கட்டட அமைப்பைக் கொண்டு இக்கோயில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் கட்டப்பட்டதாகுமென்பது தெளிவாயிற்று.

நான்காவது கோயிலுக்கு முன்னர் கிணறு போன்ற வடிவில் சிறிய சுனையொன்று உள்ளது. இச்சுனைக்கும் மூன்றாவது கோயிலுக்கும் இடைப்பட்ட இடமெங்கும் இடிபாடுகள் புதரடைந்து கிடந்தன. அக்கற் குவியல்களில் பழங்காலச் செங்கற்களும் இருந்தன. சங்ககால மக்கள் புழங்கிய கருமையும், வெண்சிகப்பும் பொருந்திய பானை ஓடுகள் கிடைத்தன. தமிழ்க் கல்வெட்டுடன் கூடிய கருங்கற் சிதைவுகள் பல இருந்தன.

இப்பகுதி கோட்டத்தின் தென் கிழக்குப் பகுதி எனலாம். இங்கோர் மூலையில் பட்டைத் தூண் போன்ற அமைப்பில் செப்பனிடப் பட்ட கற்களைக் கொண்டு அடுக்கிய சின்னம் ஒன்று சிதையாமல் நிற்கின்றது. அதற்குப் பக்கமாக இருந்த சுவரில் பழங்காலத்தில் செய்தமைக்கப்பட்ட கருங்கற் சாளரம் (சன்னல்) மட்டும் நிற்கின்றது. இப்பகுதி ஒரு காலத்தில் மண்டபம் போன்ற அமைப்பில் இருந்திருக்கிறது என்பதை எஞ்சி நிற்கும் அடிப்படைச் சுவடுகளால் அறிய முடிந்தது. சாளரம் உள்ள சிதைந்த சுவரில் உள்ள கல்லொன்றில் திரிசூல அடையாளத்துடன் தமிழ்க் கல்வெட்டின் முற்பகுதி மட்டும் துண்டாக நிற்கின்றது.

ஆராய்ச்சி நிறைவு

இயன்ற அளவில் மழையிலும் புகைபோன்று சூழ்ந்து செல்லும் மஞ்சுப் படலத்துக்கிடையிலும், எஞ்சிய சின்னங்களையும், சிதைவுகளையும், கோயில்களையும் புகைப்படம் எடுத்து முடிக்கும் போது மாலை மணி மூன்றாயிற்று. மலையிலிருந்து இறங்க---எவ்வளவு விரைந்தாலும் இடையே மூன்று மணி நேரம் வேண்டுமென்பதை முன்னதாகவே யான் சிந்தித்து முடிவு செய்திருந்ததனால், நண்பர்களையும், வேட்டைக்காரரையும் எச்சரித்து, மங்கலதேவி மலை ஆராய்ச்சியை இயன்ற அளவில் நிறைவாக முடித்துக் கொண்டு மலையிலிருந்து விரைவாக இறங்கத் தொடங்கினோம்.

நாங்கள் அடிவாரத்திற்கு வந்த போது சூரியன் மேலை மலையில் மறைந்து விட்டான். ஓட்டமும் நடையுமாக மேலக் கூடலூர் வந்து சேர்ந்த போது

மணி இரவு ஏழரை ஆயிற்று. அன்றிரவு, மலையேறிய அசதியினால் உடன் வந்த நண்பரொருவரின் இல்லத்தில் மாணவருடன் தங்கினேன். அப்பொழுது வேட்டைக்காரர் இராமர் மங்கலதேவி கோட்டத்தில் ஓரிடத்தில் சிதைந்த நிலையில் விநாயகர் சிலை ஒன்று கிடந்ததாகத் தெரிவித்தார். மறுநாள் காலை மாணவருடன் நான் மேலக் கூடலூரிலிருந்து புறப்பட்டு தஞ்சைக்கு வந்து சேர்ந்தேன்.

கண்டுபிடிப்பு

இவ்வாறு சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறும் நாடு, நகரம், ஊர், ஆறு, மலை ஆகியவற்றையெல்லாம் நேரிற் கண்டு வரலாற்று நோக்குடன் ஆராய்ச்சி செய்ய 1965-ல் பூம்புகாரில் தொடங்கிய என் ஆராய்ச்சி நாளும் வளர்ச்சி பெற்று, சேரநாட்டெல்லையுள் மலைமேல் கண்ணகிக் கோட்டத்தில் கண்டுபிடித்த 17—11—1963— வரையில் இடையே பதினேழு ஆண்டுகள் நிறைவு பெற்றிருந்தன என்பதைத் தெரிவிப்பதுடன், சுருளி மலைத் தொடரின் மேற் பகுதியில் கானலிடையே உள்ள மங்கல தேவிக் கோட்டமே கண்ணகி சென்று நின்ற இடம் என்பதையும், அதனையே சிலப்பதிகாரம் பத்தினிக் கோட்டமென்று குறிப்பிடுகின்றது என்பதையும் தமிழக மக்களுக்கு மகிழ்வுடன் அறிமுகம் செய்கின்றேன்.

போரில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இராணுவத்தினருக்கு 'மாநில நிதி' யிலிருந்து உதவித் தொகை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இரண்டு கை, கால்கள், இழந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ. 5,000-, ஒரு கை, கண், கால் இழந்தவருக்கு ரூ. 4,000- இலேசான அங்கக் குறைவு அடைந்தவர்களுக்கு ரூ. 3,000- இலேசான குண்டுக்காயம், தீக் காயம் அடைந்தவர் குடும்பத்திற்கு ரூ. 2,000- வழங்கப்படும்.

பயன்

யான் கண்டுபிடித்துள்ளது, செந்தமிழ்க் காப்பியம், சிலப்பதிகாரம் அறிவிக்கும் பத்தினிக் கோட்டமெனும் கண்ணகிக் கோயிலேயாகும். இக்கோயில் ஆதியில் வேங்கை மரத்தடியில் நடுகல் அளவில் குன்றக் குறவர்களால் வழிபாடு செய்யப்பட்டதன் பின்னர், சேரன் செங்குட்டுவனால் சிறிய வடிவில் சிலையுடன் கோயிலாக அமைக்கப்பட்டுப் பின்னர் காலப் போக்கில் விரிவடைந்துள்ளது.

இவ்வுண்மையினைச் சிலப்பதிகாரச் சான்றுகளால் நன்கு அறியலாகும். இதனால், தமிழக வரலாற்றில் ஓர் புதிய திருப்பம் ஏற்பட்டு, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழரின் நாகரிகச் சிறப்பு இயல்புகள் சிலப்பதிகாரமெனும் பண்டைத் தமிழிலக்கியத்தின் வழியே தமிழக வரலாற்றில் நிலை பெறுவதாகும்.


காலக் கண்ணாடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்.

வெண்பாப் போட்டி

37. 'வளம்' எனத் தொடங்கி 'நலம்' என முடித்தல்

● வளக்கூந்தல் மைக்கருமை, வாயிதழோ செம்மை
உளங்கவரும் முத்துப்பல் ஒண்மை—துளக்கும்
இடையழகோ இன்பமாம் என்குழந்தை அன்ன
நடையழகோ மென்மை நலம்.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

வளம்வேண்டும் நாட்டிலெனில் வாய்த்தஉழ வர்க்கு
நிலம்வேண்டும்; வற்றாத நீர்வேண்டும்—கலனுகும்
வில்லேர் உழவர்க்கு வெற்றிவேண்டும்; வேண்டுமே
நல்லதமிழ் ஆய்வோர் நலம்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

வளம்பலவும் வாய்ந்தாலும் வாழ்க்கையிலே கண்கள்
களங்கமுறின் எவ்வளமும் காணு;—உளமுணர்ந்தே
ஆளும் அரசிந்நாள் ஆற்றுவதால் கண்சிகிச்சை
தாளும் பெறுவர் நலம்!

—அ. ஒளிநிலவன், கரூர்-2.

வளம்காண மானுடன் வானத்தில் பாய்ந்து
விளங்கத் தெரியுதடீ விண்மீன்!—வளையே!
தொடுவான் புதனைத் தொடுவான் மனிதன்;
நடுவில் விளையும் நலம்.

—ஜெயபாலா, காந்திக்கிராமம்.

வளமுறவே ஏற்போர் வழிகண்டாய், பார்வை
ஒளிபெறவே ஒண்ணிதியும் கண்டாய்—களிமிகவே
நல்லகவை நாற்பத்தோ டொன்பதையும் தான்கண்ட
நல்லாய்நீ வாழி நலம்.

—சொ. இராமச்சந்திரன், அம்பத்தூர்.

வளம்நிறைந்த தென்னகத்தில் வாழ்வுற்ற மக்காள்
உளம்நிறைந்த போதினிலே உண்மை—வளம்நிறையும்
வீடெல்லாம் செந்தமிழில் வீறுற்று வந்தக்கால்
நாடெல்லாம் காட்டும் நலம்.

—புலவர் வ. சா. வடிவேல் முருகன், பழனி.

வளம்காண நெஞ்சில் வலிவேண்டும்; வீரக்
களம்காண வன்மைவேண்டும் கையில்—தளராமல்
ஆளும் திறத்தால் அருமையீர் நல்லறிவை
நாளும் வளர்த்தல் நலம்.

—அ. மு. சு. இராமராசன், நாச்சியாபுரம்.

வளமாக்க மூவேந்தர் வைத்ததமிழ்ச் சங்கம்
களமாக்கிப் பாடியபல் பாடற்—களவிலையே!
தொன்னூல் திருக்குறளும் தொல்காப் பியநூலும்
நன்றின்று காணல் நலம்.

—தி. பார்த்தசாரதி, மதுரை.

வளம்சேர்க்கக் காவிரியாய் வந்தவளே! எங்கள்
களஞ்சியமே! கன்னல் கவியே!—துளசியென
நெஞ்சில் மணப்பவளே! நீவருகை தாராயேல்,
நஞ்சினையாம் நாடல் நலம்.

—பூவை. வாலறிவன், பூலாம்பாடி.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

திரு சிவ. கிருட்டிணன்,
ஆசிரியர்,
1/32, அக்கிரகாரம், கணியூர், உடுமலை வட்டம்.

வளமான வாழ்வுனக்கு வாய்க்க, மனைவி
இளமாளுய் என்றுமே தோன்ற—அளவாகப்
பெற்றிடுவீர்! பெற்றிட்டால் பெற்றிடுமே வீட்டுடன்
நற்றிரு நாடும் நலம்.

—புலவர் சி. தமிழ்மணி, இலப்பைக்குடிகாடு.

வளமார் திருநாட்டில் வாழ்மக்கள் எல்லாம்
உளமார் கருத்தாலே ஒன்ருய்ப்—பிளவின்றிக்
கேளும் கிளையுமாய்க் கேடிலாச் செல்வமுடன்
தாளும் உயர்தல் நலம்.

—புலவர் த. ச. இலட்சுமணப்பிள்ளை, செய்யூர்.

வளமாகத் தம்மக்கள் வாழ்வமைய வேண்டின்
அளவாகப் பெற்றிடுக அன்றேல்—இளந்தலையோ
கேடடையும் பின்னல் கெடுப்பாரில் லாமலேதான்;
நாடிடுவர் வேண்டா நலம்.

—என். சுந்தரேசன், சின்னச்செங்காடு.

வளம்கொழிக்கும் நாடாய்நம் வண்டமிழர் நாடு
விளங்கிடநாம் தொண்டாற்ற வேண்டும்—இளங்கொடியே
தெம்போடு நாமென்றும் சீரியதொண் டாற்றிடின்
தம்நாடு காணும் நலம்.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

வளம்பெற்று வாழாது வாடித் துயரில்
குளநீராய்க் கண்ணீரைக் கொட்டி—உளம்நொந்த
கேளிர்க்குக் கண்கொடுக்க வந்த கலைஞரே
நாளும் பெறுக நலம்.

—சி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

வளம்பெருக்கும் வான்மழையாய், வாய்மைஅற வாழ்வாய்ப்
பழந்தமிழின் பண்பாடாய்ப் பாரில்—விளங்குகின்ற
ஆளும் குடியரசே! அன்பார்நின் மக்கட்கு
தாளும் விளைப்பாய் நலம்.

—'பாசி'—பாலதண்டபாணி, ரெட்டியாரூர்.

வளம்சுரக்கும்; வற்றுத நீர்சுரக்கும்; வாய்க்கால்
குளம்நிரப்பும்; செந்நெல் கருணு—களம்நிரப்பும்
பொன்னியெனப் பாவலர் போற்றிய காவிரியாம்
நன்னதியைக் காத்தல் நலம்.

—இரா. வைத்தியநாதன், திருவாரூர்,

வளம்பெருகி மக்களெல்லாம் வாழவேண்டும்; அற்ருர்
உளர்எனுஞ் சொல்ஒழிய வேண்டும்—இளவலே
நீநினைத்தால் ஆகாதா? நின்று செயல்படுவாய்
தானிலத்தில் ஓங்கும் நலம்.

—அருச்சுனன், சென்னை-19.

வளம்நிறைந்த நல்வாழ்வும் வாய்த்த கணவன்
உளம்மகிழப் பேணும் உயர்வும்—இளம்பெண்ணே
வீட்டில் அமைய விளங்கிஉயர் கற்பைநிலை
நாட்டுவதே பெண்மை நலம்.

—வித்துவான் ஆ. சுப்புலட்சுமி, எழும்பூர்.

வளம்கொழிக்கப் பாடுபடும் வல்லேர் உழவன்
களம்நிறைந்து போராடும் கைவாள்—இளைஞன், பேரீ
அன்புடன் ஓதுகின்ற ஆசான்இம் மூவரும்
நன்ருய் இருத்தல் நலம்.

—வ. நடராசன், வீரவனூர்.

வளமூட்ட வந்திருக்கும் வஞ்சிக் கொடியாள்
உளமகிழ்ந்(து) என்னுடனே ஊடும்—விளையாட்டில்
தேடினேன் நல்லசுகம்; தேன்மொழியாள் தந்திட்டாள்
நாடினேன் வாழ்க்கை நலம்.

—போ. ச. வீரப்பன், நாமக்கல்.

வளமார் திருமேனி வாட்டம் தவிர்ப்பாய்
களஞ்சென்ற உன்னுளன் கண்ணே—உளமாறு!
மாமுன் நிரைபோலப் போர்முடிந்து வந்திடுவான்
நாமும் பொறுத்தல் நலம்.

—சோ. கண்ணப்பன், கோவை-11.

வளமார் தமிழரசே, வாழ்த்துகிருேம் எங்கள்
உளமார; நெஞ்சத்துள் ஒன்றும்—களங்கமிலா
ஆட்சியெனக் கண்டோம் அருங்கண் இழந்தார்க்கும்
நாட்செய்து காட்டும் நலம்.

—ஏ. ஜினதாஸ், முதலூர்.

வளம்குன்றும் நாட்டில், வறுமைப் பிணியும்,
களம்புகும் போர்ப்பகையும் கண்டோம்—இளந்தோழா!
இம்மூன்றும் எஞ்ஞான்றும் இல்லா(து) ஒழித்துவரும்
நம்முதல்வர் வாழ்தல் நலம்.

—இல. பழ. முருகதாசன், சின்னுளப்பட்டி.

வளம்இன்றித் தன்மகவு வாடுவதைக் கண்டும்
உளம்நோகா அன்னைதான் உண்டோ?—களங்கமின்றி
வாழும் அவளடியை வந்தித்து நாம்தொழுதால்
நாளும் விளையும் நலம்.

—அ. காந்தி, பி.எஸ்சி., பி.டி., தேவத்தூர்.

வளம்பெற்று வாழ்க்கையில் வெற்றிகொள வேண்டின்
அளவொன்று வேண்டும்; அதனுல்—தளிர்க்கொடியே!
பூம்பொழிலின் மென்மலர்போற் பிள்ளைகள் ஒன்றிரண்டே
நாம்பெற்ருல் சூழும் நலம்.

—எழில்வேந்தன், சென்னை-18.

வளஞ்செறிந்த மாந்த ரடக்கமும் வாதில்
களம்புகுந்த வீரன் கனைப்பும்—தளராப்
புலவர் புரக்கு மரசுமெஞ் ஞான்றும்
நலமே நலமே நலம்.

—சாமு, குகை, சேலம்-6.

வளமுடன் தாய்த்திரு நாடு வயங்கக்
குளம்பல தொட்டகோ மன்னன்—வளவன்போல்
கேட்டை யகற்றும் கெழுதகை ஆள்வதால்
நாட்டோர் பெறுவர் நலம்.

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், பி.ஏ., திருச்சி-2.

வளம்பெருகப் பொல்லா வறுமை ஒழிய
அளவோடு வாழ்தல் அறிக—உளங்கொண்டே
ஆட்படுவார் துன்பம் அகற்றுவித்து நந்தமிழ்
நாட்டை உயர்த்தல் நலம்.

— வி. மு. உலகநாதன், சென்னை-12.

வளம்பெருக்கும் செந்தமிழை வாழ்வாய்க் கருதி
உளம்நிறையக் கற்றே உவந்தால்—மளமளெனக்
குன்ருத வாழ்வும் குறையாத செல்வமொடு
நன்றே கிடைக்கும் நலம்.

—பாட்டுவளவன், நாட்டார்மங்கலம்.

வளம்கொண்ட உள்ளம் வலிதாயின் எப்போர்க்
களமாயின் என்ன கலக்கம் ?—இளைஞர்காள்
முன்ஞேரின் வீரத்தை மூச்சாக ஏற்றிடுவீர்
நண்ணிடும் நாளும் நலம்.

—இலக்கியன், ஆலங்காயம்.

வளம்படைத்த பொன்ஞடு, வாய்மை திறம்பா
உளம்படைத்த நன்மக்கள், ஓதுங்—களங்கமற்ற
சொல்லாட்சி, நல்லுழைப்பு, சோர்வகற்றுந் திட்டமிவை
நல்லாட்சிக் குற்ற நலம்.

—கே. சுதர்சனம், நாயர்கிராமம்.

வளமதுரம் போட்டுழவும் வாய்த்திடினற் பூமி;
களமதுரம் காணும் கவின்போர்—உளமதுரம்
துன்று மதனிடையே தோன்றளியும் சூழ்மறவ
நன்று புரிதல் நலம்.

—கு. பரசுராமன், சடையனேடை.

வளம்குலுங்கப் பேருழைப்பால் வன்முறைதேர் கேடர்
உளம்திருந்த வாய்மைநெறி ஓங்க—இளமையினேர்
பொற்காலம் தாம்படைக்கப் பொங்கியெழும் நாட்கோலம்
நற்சான்ருேர் நாடும் நலம்.

—புலவர் 'எழில்மாறன்', சென்னை-24.

வளம்கொழிக்கும் முத்தமிழ் வையகத்தில் நம்மை
உளம்கொண்டு காத்தே உவப்பாள்—களங்கமிலாத்
தங்ககுணம் கொண்டுள்ள 'தாயராம் தெய்வமெனும்
நங்கையரைப் போற்றல் நலம்.

—ச. கருணாநிதி, அருப்புக்கோட்டை.

வளவாழ்வு காண வழிகேட்கும் தோழீ
அளவாய்ச் சிறுகுடும்பம் ஆசித்(து)—உளமார
வீட்டைச் சுருக்கி விளைவைப் பெருக்கிட்டால்
நாட்டில் விளையும் நலம்.

—திருவப்பூர் குழ. அண்ணுமலை, கோவை.

வளம்பெருக்க மண்ணை வளப்படுத்தி நெல்லைக்
களம்நிறைக்கும் காராளர் கையை—வளப்படுத்திக்
காலமெலாம் காக்கும் கவின்சேர் அரசென்றும்
ஞாலமதில் வாழ்தல் நலம்.

—புலவர் ஆ. பிரணவம், சென்னை-18.

வளமெங்கே போயிற்று வாழ்ந்த தமிழன்
பலமெங்கே போயிற்றுப் பாரில்—நலமெங்கே ?
விற்பட்ட அம்பாய் விரைந்து பணியாற்றும்
நற்ருெண்டால் சூழும் நலம்.

— நூம்பல் க. செயராமன், பூ[illegible]

வளமாகும் வாழ்க்கைக்கு முத்தேவை வாய்த்தல்
களமாகும் கல்வி, தொழிலே—தளமாகும்
தன்தாய் மொழியாளல் தக்கவழி வள்ளுவன்காண்
நன்ஞடு நாடல் நலம்.

—கதி. அரங்கசாமி, [illegible].

வளங்காட்டிப் புன்செய் வயல்விளையுஞ் செந்நெற்
களங்காட்டி உய்விக்கும் கண்கள்—குளங்காட்டி
வாடிக் கலங்காத வாழ்வளித்தால் இவ்வுலகில்
நாடித் துலங்கும் நலம்.

—புலவர். கோ. மு. வேங்கடராமன், கோவை-17.

வளங்காட்டும் பேருரைகள், கட்டுரைகள், வேலை
விளம்பரங்கள், கேள்விபதில், வெண்பா—வெளியிட்டுத்
தொண்டாற்றும் தாளே ! 'தமிழரசே !' உன்வரவால்
நன்கறிந்தோம் நாட்டின் நலம்.

—த. மு. அகமது, கடையநல்லூர்.

வளம்மிகுந்தால் இல்லை வறுமை ; அதுபோல்
உளம்துணிந்தார்க் கில்லை ஊழும்—இளைஞர்காள்
இம்மை மறுமைகளை எண்ணுமல் பாடுபட்டால்
நம்மைவந்து சேரும் நலம்.

—பொன் பழனிச்சாமி, [illegible]

25

Power Spin-offs

The growth of ancillary industries
for the manufacture of
boiler equipment

The projected estimates for power generation over the next ten years are high indeed, requiring boiler equipment upto unit sizes of 500 MW.
There is tremendous scope, here, for the organisation and development of ancillary industries, both product and process-oriented, for the wide range of components needed: raw materials, semi-finished products, finished products, sub-deliveries, etc.
Many such units already exist at Tiruchi, in and around the Boiler Plant, but more will be needed to meet anticipated boiler production, providing considerable opportunities for entrepreneurs, as well as for employment.

BHARAT HEAVY ELECTRICALS LTD.
(A Government of India Undertaking)
Unit: High Pressure Boiler Plant, Tiruchirapalli 14
Regd Office: No. 5, Parliament Street, New Delhi 1

BHEL:
Power to the people



கல் வெட்டிலே வழக்கு

இரா. நாகசாமி

தமிழ்நாடு அரசு தமிழகத்திலுள்ள பல்வேறு ஊர்களில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வரலாற்றைச் சீராக அமைப்பதற்கு ஒரு திட்டம் மேற்கொண்டு ஊர் ஊராகக் கல்வெட்டுகளை ஆய்ந்து வருவது அனைவரும் அறிந்ததே.

கடந்த ஆண்டு வடஆர்க்காடு மாவட்டம் செங்கம் வட்டப் பகுதியில் சுமார் 60-க்கும் மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நடுகற்களைப் படியெடுத்து வந்துள்ளது. அவற்றுள் தாமரைப்பாக்கம் என்னும் ஊரில் அக்னீஸ்வரர் கோயிலில் இருந்து படியெடுத்து வந்துள்ள ஒரு கல்வெட்டு மிகவும் சிறப்புடையதாக உள்ளது.

இக்கல்வெட்டு இரண்டாவது இராசேந்திர சோழன் காலத்தில் அதாவது 12-ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் அண்ணன், தம்பி இருவரும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ள, அதிலே அண்ணன் இறந்துவிட, அவர்களின் தந்தை வழக்கிட, நாட்டார் எடுத்த முடிவைக் குறிக்கிறது.

அக்காலத்து உழுதுண்டு சிறப்புப் பெற்றோர் ' சித்திரமேழி நாட்டர்' என்ற அமைப்பைக் கொண்டிருந்தனர். இவர்களுக்கென்று தனியே ஒரு மெய்க்கீர்த்தியே உண்டு. இவர்கள் தங்களைப் பூமிதேவி புத்திரர்கள் என்று அழைத்துக் கொண்டனர். அறத்தின் வழி நிற்பவர்கள் என்றும், சித்திரமேழி தர்ம நீதி நடாத்துபவர்கள் என்றும் இக்கல் வெட்டில் இவர்கள் குறிக்கப்படுகிறார்கள். இவர்களுடைய சமுதாய அமைப்பிற்கு 'நாடு' என்று பெயர். இதில் அங்கம் வகிப்பவர்கள் 'நாட்டார்' என்று அழைக்கப்பட்டனர். பல நாடுகள் கூடும் அமைப்பிற்குப் 'பெரிய நாடு' என்றும், பங்கு பெற்றவர்கள் ' பெரிய நாட்டவர்கள் ' 'பெருக்காளர்' என்றும் வழங்கப்பெற்றனர். இந்த வழக்கைக் கேட்டவர்கள் இது போன்ற அமைப்பைச் சேர்ந்த பெரிய நாட்டவர்கள். இப்பெரிய நாடு இராசேந்திர சோழனின் பெயரால் ' இராசேந்திர சோழ சித்திர மேழி பெரிய நாடு ' என்று அழைக்கப்பட்டது.

இந்தப் பெரிய நாட்டிடம் கண்ணுபுரத்து வெள்ளாளன், தருப்பேருடையான்தாழிக்கோன் என்பவன் வந்து வழக்குரைத்தான். இவன் உரைத்ததையும், நாட்டார் கேட்ட கேள்விகளையும் இவன் அளித்த பதில்களையும் கல்வெட்டு மேற்கோள் போலக் குறிக்கிறது. என் மகன் சங்கரத்தடியனும், என் மகன் பெரியானும் தடுபடுக்கிற இடத்துத் தம்பியைத் தமையன் அரிசப்பட்டு அடிக்க, தம்பியும் தமையனை எதிரே அடித்தான். தம்பி அடிச்ச அடியிலே தமையன் பட்டான் '' என்று அவர்கள் தந்தை எடுத்துரைத்தான்.

அப்பொழுது நாட்டார் அவனை நோக்கிக்கேள்விகளைக்கேட்டனர். ''உனக்கு இவ்விருவரும் அல்லது மற்றும் மக்கள் உள்ளரோ? '' என்று கேட்டனர். ''மற்றும் மக்கள் யாரும் இல்லை ; இவர்கள் தாயும் நானும் உள்ளோம்'' என்று சொன்னான். அடுத்து, '' உனக்கு அர்த்தம் (பொருள்) தான் உண்டோ?" என்று கேட்க, " அர்த்தமும் இல்லை '' என்றான்.

ஒரு குடி கேடானதையும், இவர்களைக் காப்பார் இல்லாததையும் பொருள் இல்லாததையும் கேட்டு நாட்டவர் ஒரு முடிவு எடுத்தனர். தம்பிக்கு இதற்காக மரண தண்டனை விதிக்க வேண்டாம். இவன் வயது முதிர்ந்த தாயையும் தந்தையையும் காக்க வேண்டும். இவனுக்கு நேர்ந்த பாவத்திற்காக அவ்வூர்கோயிலில் அரைவிளக்கு எரிக்கப் பொருள் அளித்தல் வேண்டும் என்று தீர்ப்புக் கூறினர். அது கல்வெட்டில் ' ஒரு குடி கேடானமையாலும், இவர்களை ரட்சிப்பார் இல்லாமையாலும், அர்த்தம் இல்லாமையாலும், ' திருத்தாமரைப் பாக்கத்து திரு அக்னீசுவரருடைய / மகாதேவருக்கு நந்தா விளக்காக அரை விளக்கு வைத்து வயஸ்பரினதை சென்ற தாயையும், தம் அப்பனையும் ரட்சிப்பானாக. தர்மம் நோக்கி இவன் இதற்குப்பட வேண்டா ' என்று நாட்டார் விதித்தனர்.

இந்தத் தீர்ப்பைச் ' சுத்த பட்டிகை ' என்று கல்வெட்டுக் கூறுகிறது. தவறிழைத்துச் செய்த பாவத்திலிருந்து தூய்மை பெற எடுத்த தீர்ப்பு ஆதலின் இது ' சுத்த பட்டிகை ' என்று அழைக்கபட்டது.

இக்கல்வெட்டில் சில வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. ' அர்த்தம் ', ' வயஸ்பரினதை ' முதலிய சொற்கள் உள்ளன. ஆயினும், இதுகாறும் கிடைக்காத நல்ல சில செந்தமிழ்ச் சொற்களும் கிடைத்துள்ளன. ' தடுபடுக்கிற இடத்து ' என்ற ஒரு சொல் வந்துள்ளது. 'தடு' என்றால் எதிர்த்தல், மறித்தல் என்று பொருள். தடுபடுத்தல் என்றால் ஒருவரோடொருவர் எதிர்த்து அடித்துக் கொண்டதைக் குறிக்கிறது போலும்.

அடுத்து 'அரிசப்பட்டு' என்று ஒரு சொல் வருகிறது. அரிச என்றால்' மகிழ்வு என்ற பொருள் அகராதிகளில் கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால், இங்கு ரோஷப்பட்டு என்னும் பொருளில் வந்துள்ளதுபோல் காணப்படுகிறது. மற்றோர் இடத்தில் இவ்வகை 'பட்டாங்கு சொல் எழுதினேன்' என்ற ஒரு தொடர் வருகிறது. பட்டாங்கு என்பது, நீதி நூல்களில் குறிப்பிட்டுள்ளது என்னும் பொருளில் இங்கே வழங்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பாகும்.

அவன் செய்தது தவறே; ஆனாலும் அவனுக்களிக்கும் தண்டனையின் விளைவுகளையும் மனத்தில் கொண்டு தீர்ப்பளித்தனர் என்று தெளிவாக அறியலாம். '' இவன் இதற்காகப் படவேண்டாம்'' என்பதிலிருந்து இது போன்ற குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்பதும் தெளிவாகிறது. வயது வந்த பெற்றோர்கள், பொருள் அற்றவர்கள், வேறு எவராலும் காக்கப்படும் வசதி அற்றோர்கள் இவனுக்கு அளிக்கப்படும் தண்டனையினால் பாதிக்கப்படக் கூடாது என்ற மனிதப் பண்பிற்கு முதலிடம் கொடுத்து நாட்டார் தீர்ப்பளித்துள்ளது அறத்தின் சிறப்பைக் குறிக்கிறது.





தைமெட் 10-ஜி

அடிவரை ஊடுருவிச் செயல் புரிகிறது.

புழுபூச்சிகள் பயிர்களைத் தாக்கத் தொடங்குவதற்கு முன்பிருந்தே, சொல்லத் தரமற்ற சேதத்திலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கென வேர்வரை ஊடுருவிச் செயலாற்றத் தொடங்குகிறது தைமெட் 10 ஜி

தைமெட் 10-ஜி, பயிர் ஜீவாணுவில் ஊடுருவிச் செயலாற்றும் தன்மையும், தொடு நஞ்சாகவும் புகை நஞ்சாகவும் செயலாற்றும் தன்மையும் ஒப்பற்ற முறையில் இணையப் பெற்ற உயரிய பூச்சிக் கொல்லியாகும். பயிர்களுக்கு நீண்டகால, முவ்வழிப் பாதுகாப்பைத் தருகிறது. எனவே ஒரு முறை தைமெட் 10-ஜி பிரயோகம், வழக்கமான பூச்சிக் கொல்லிகளை பலமுறை பிரயோகிப்பதற்கு இணையாகிறது.

பயிர்ஜீவாணுவில் ஊடுருவிச் செயலாற்றும் தன்மையின் பயனை தைமெட் 10-ஜி சீதோஷ்ண நிலைமைகளினால் பாதிக்கப் படுவதில்லை. முழுவளர்ச்சியடைந்த பயிர்களில் கெடுதலான விளைவுகள் எவற்றையும் தோற்றுவிப்பதில்லை —22க்கு மேற்பட்ட நாடுகளில் பிரபலமடைந்துள்ள- தைமெட் 10-ஜி பயிர் செய்பவர்களின் பூச்சிப் பிரச்னைகளுக்கு சிக்கனமான தீர்வாகும்.

விவசாயப் பிரிவு
ஸயனமைட் இந்தியா லிமிடெட்,
த.பெ. எண். 9109 பம்பாய்-25

CYANAMID

SISTA'S-CIL-369 TAM

மதுரை வரலாறு

ஒரு கண்ணோட்டம்

— நா. அமிர்தலிங்கம் —

தமிழகத்தின் பழம்பெரு நாடு பாண்டிய நாடு. "பாண்டிய நாடே பழம்பதியாக" என்கிறார் மாணிக்க வாசகர். இன்றையக் குமரி முனைக்குத் தெற்கே பலகாத தூரம் பரவிக் கிடந்த நிலப்பரப்பில் பழம் பெரும் பாண்டிய அரசு அமைந்திருந்தது.

அப்பகுதியில் அமைந்திருந்த தென்மதுரையேபாண்டியர்களின் ஆதித் தலைநகராயிருந்தது. அங்குதான் முதல் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்தது. அதை நிறுவியவன் பாண்டியன் காய்சினவழுதி. அப்போது பிறந்த நூல்களில் ஒன்று அகத்தியம் என்று சொல்லப் படுகிறது. தென் மதுரையின் கடைசி மன்னன் கடுங்கோன். காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை பல நூற்றாண்டுகள் சிறப்புடனிருந்த இந்தத் தென் மதுரை அரசு கடற்கோளால் அழிந்தது.

பின்னர் கபாடபுரத்தில் பாண்டியர் தலைநகரம் அமைந்தது. அங்கே இடைச்சங்கம் தோன்றியது. இதனைத் தோற்றுவித்தவன் வெண்தேர்ச் செழியன் ஆவான். இடைச்சங்கத்தின் பெருநூலாக விளங்குவது தொல்காப்பியம். முதலாவது முடத்திருமாறன் காலத்தில் கபாடபுரம் கடற் கோளுக்கு ஆளானது.

பின்னர் பாண்டியர் தற்போதைய மதுரை நகரில் தங்கள் தலைநகரை நிறுவினர். இம்மதுரையில் கடைச்சங்கம் அமைக்கப்பட்டது. கடைச்சங்கம் வாழ்வு பெற்றிருந்த பல நூற்றாண்டுகளின் காலத்தில் பாண்டிய நாட்டை நாற்பத்தொன்பது மன்னர்கள் சிறப்புடன் ஆட்சி புரிந்ததாக நமது இலக்கியக் குறிப்புகளிலிருந்து அறிகின்றோம்.

பாண்டிய நாட்டின் தொன்மைக்கான குறிப்புகள் பல, வெளி நாட்டு வரலாற்றில் காணக் கிடைக்கின்றன. கிறித்து பிறப்பதற்கு அறுநூறு ஆண்டுகட்கு முன்னே உள்ள ஒரு சிங்கள வரலாற்றுக் குறிப்பில் பாண்டிய மன்னன் பெண் கொண்ட நிகழ்ச்சி நன்கு கூறப்பட்டுள்ளது.

கிறித்து பிறப்பதற்கு முந்நூறு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவிற்கு வந்துபோன மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்கத் தூதுவன் தான் எழுதிய 'இண்டிகா' என்னும் கிரேக்க நூலில் பாண்டிய நாட்டின் கொற்கை முத்துக்களைப்பற்றி வியந்து மொழிந்துள்ளான்.

அதே போலப் பிளினி, தாலமி போன்ற பழம்பெரும் வரலாற்றுப் பேராசிரியர்களும் அக்காலத்துப் பாண்டியப் பேரரசை மிகப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

இத்தகைய பெருமை மிக்க கடைச் சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த புகழ் மிக்க மன்னர்கள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி முதலியோராவர்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழப் பேரரசு உன்னத நிலையை அடைந்த போது பாண்டியநாடு சோழப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று. சோழப் பேரரசுக்கு அடங்கியும் அடங்காமலுமிருந்த பாண்டியர்கள் பதின்மூன்றாம்நூற்றாண்டில் மீண்டும் தலைதூக்கினர். சடையவர்மன் சுந்தரபாண்டியனும், சடையவர்மன் குலசேகர பாண்டியனும் இவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

ஆனால், பாண்டியர்கள் ஆட்சி நீடித்து நிற்கவில்லை. இந்தக் காலத்தில் தென்னாடு முழுவதும் பரவிக்கிடந்த தமிழகம் பெருமாற்றத்திற்குள்ளானது.

தமிழகத்தின் வட எல்லை திருப்பதிக்குத் தெற்கே வந்துவிட்டது. கொங்கு நாட்டின் பெரும்பகுதி மொழித் திரிபால் கன்னட நாடாகிவிட்டது. தென் மேற்கே சேரநாட்டின் பெரும் பகுதி மொழித் திரிபால் கேரள நாடாகிவிட்டது. எஞ்சிய தமிழகம் பாண்டிய, சோழ, பல்லவ நாட்டின் பழைய பகுதிகள்தான்.

இந்த நேரத்தில் பாண்டிய நாட்டில் அரசு உரிமைக்கான உள் நாட்டுப் போராட்டம்; சோழ நாடு வலுவிழந்துவிட்டது; பல்லவ அரசு மறைந்துவிட்டது. எல்லைப்புற அரசுகளான ஹொய்சாளர், கேரளத்தார், சிங்களவர் போன்றவர்கள் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்து ஆதிக்கம் பெற்றனர்.

இந்த நிலையில் வட நாட்டின் அரசுக் கட்டிலில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

டெல்லியில் இருந்த பழம் பேரரசுகள் முடிவுக்கு வந்து ஆப்கானிய சுல்தான்களின் ஆட்சி நிலைபெற்றது. பட்ட உரிமைக்குச் சண்டை போட்ட பாண்டியன் வீரபாண்டியன் இந்தச் சுல்தானை உதவிக்கு அழைத்தான். உதவி செய்யவந்த டெல்லி சுல்தான் தளபதி மாலிக்காபூர் தமிழகத்தின் மீது படையெடுத்தான். அவன் பழம் பெரும் தமிழ் நகரங்களைக் கொள்ளையிட்டுச்சென்றான். அதில் மதுரையும் தப்பவில்லை. பின்னர் மதுரையில் சுல்தான்களின் ஆட்சி பதினான்காம் நூற்றாண்டில் 45 ஆண்டுகள் அதாவது கி.பி. 1378 வரை நீடித்தது.

விஜய நகரப் பேரரசு எழுச்சி அடைந்ததும், தென்னாடு நாயக்க மன்னர்கள் ஆட்சிக்குள் வந்தது. மதுரையில் நாயக்கர் பரம்பரை அரசுக்கட்டில் ஏறியது. மதுரை நாயக்கர் ஆட்சி விசுவநாத நாயக்கர் காலத்தில் கி.பி. 1529-ல் தொடங்கியது. இராணி மீனாட்சியின் காலம் வரை சுமார் இருநூறு ஆண்டுகள் இந்த ஆட்சி நீடித்தது. இவர்களில் குறிப்பிடத் தகுந்தவர் திருமலை நாயக்கர், இராணி மங்கம்மாள் முதலியோர் ஆவர்.

வடக்கே டெல்லியில் மொகலாயப் பேரரசு எழுச்சி பெற்றதும் தெற்கேயும் அவர்கள் ஆட்சி விரிவடைந்தது; வலுவடைந்தது. மொகலாயர்களின் பிரதிநிதிகளான ஆர்க்காடு நவாப்புகளின் ஆட்சிக்குள் தென்னாடு வந்தது. ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் பதினேழாம் நூற்றாண்டில் தென்னாட்டின் கடற்கரையோரம் வந்து குடியேறித் தமிழக அரசியலில் ஆதிக்கம் பெறப் போரிட்டனர். இந்த அரசுப் போட்டியில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றுத் தென்னாடு முழுவதையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டுவந்தனர். இப்படித் தொடர்ந்த ஆங்கில ஆட்சி 1947 ஆகஸ்டில்தான் முடிவுக்கு வந்தது.

மனங்கவரும் மதுரை

புலவர் தமிழ்ப்பித்தன்



மூன்றுதமிழ்ச் சங்கங்கள் முகிழ்த் திருந்தே
 முத்தபுகழ்க் கொடிநாட்டிப் புலமை பெற்றே
வென்றியசெந் தமிழ்நகரம்; உலகம் போற்றும்
 ஒப்பரிய முப்பாலாம் குறள்நூல் வேதம்
ஈன்றெடுத்த திருநகரம்; ஈடே இல்லா
 எழில்நகரம்; பொழில்நகரம்; நான்காம் சங்கம்
தோன்றிவந்த பெருநகரம்; தூய்மை மிக்க
 தொன்னகரம்; மாநகரம் மதுரை யாகும்!

பாண்டியர்கள் சேரசோழர் பல்ல வத்தார்
 முகமதியர் நாயக்க மன்ன ரெல்லாம்
ஆண்டிருந்த பழநகரம்; அழகு கொஞ்சும்
 ஆலயப்புடைய நகரென்றே வாழ்த்துப் பாடல்
பூண்டிருக்கும் அருள்நகரம்; புதுமை எல்லாம்
 போட்டியிட்டு வரவேற்றுப் படிக்கும் ஆசை
தூண்டிவிடும் உயர்நகரம்; துணிகள் நெய்யும்
 தொழிலாலே நிறைநகரம் இதுவே யாகும்!

ஆனைமலை, நாகமலை, அழகர் கோயில்
 அமைந்தவெழிற் சோலைமலை; சுவையே சேர்க்கும்
தேனையவிழ் 'தாண்டிகுடி' மலையும் உண்டு!
 தென்பரங்குன் றெனச்சொல்லும் கோயில் உண்டு!
மானைநிகர் கண்ணகியாள் கடந்தே சென்ற
 மாப்பெரிய சுருளிமலை இங்கே உண்டு;
வானைநிகர் 'பாளையங்கள்' மெத்த உண்டு;
 வரலாற்றில் நிலைத்திருக்கும் ஊர்கள் உண்டு;

விடுதலைக்குப் பின்னிங்கே வெற்றிச் சேதி
 விளைந்ததுண்டு பலவகையில்; மடமை யென்னும்
கெடுதலையை நீக்குகின்ற கல்வித் தொண்டில்
 கிளம்பியுள்ள பல்கலையின் கழகம்; நன்மை
கொடுக்கின்ற 'பால்வளர்ச்சி', 'வீட்டுத் திட்டம்'
 குடிதண்ணீர்; மின்வசதித் தொண்டு; நெஞ்சைத்
தொடுதற்கே உரியதொரு அரிய சேதி
 தூயநகர் 'மாநகராய்' எழுந்த கீர்த்தி!

கொட்டாத 'தேனி'யுண்டு; 'கம்பம்' உண்டு;
 குறையாத 'பெரியகுளம்' 'சிலைமான்' உண்டு!
வட்டாரக் 'கருப்பட்டி' உண்டு; மக்கள்
 வாய்இனிக்கச் சீனிதரும் ஆலை உண்டு!
முட்டாத 'பசு'வுண்டு; மூவர் பாடா
 முதுமையுள் 'தேவாரம்' உண்டு; காஞ்சிப்
பட்டோடு போட்டியிடும் 'புதுப்பட் டாடை'
 படைக்கின்ற 'சின்னாளப் பட்டி' உண்டு!

கரும்புண்டு; நெல்லுண்டு; வைகை என்னும்
 கனிமகளின் கருணையுண்டு; திண்டுக் கல்லில்
விருப்புடனே உண்பதற்குப் பழமும் உண்டு;
 வீட்டுக்குக் காவல்செய் பூட்டும் உண்டு!
பொருப்பாகும் பழனிமலை உண்டு; நோயைப்
 போக்குகின்ற மூலிகைகள் ஆங்கே உண்டு!
நெருப்பாகக் காய்கின்ற கோடை நாளில்
 நீர்க்குளிர்ச்சி சேர்க்கின்ற 'கானல்' உண்டு!

மாதங்கள் வீதிகளின் பெயரில் உண்டு;
 மாதர்கள் விரும்பியணி மல்லி உண்டு;
வாதங்கள் புரிகின்ற வழக்கில் வல்லார்
 வகைவகையாய் இங்குண்டு; நித்தம் அன்னார்
பாதங்கள் படிந்திடவே வழக்கு மன்றம்
 பாங்குடனே புதிதாக எழுந்த துண்டு;
கீதம்போல் சொல்தந்த அண்ணா ஆங்கே
 கீழ்நாட்டு 'ஜோலா' போற் சிலையா யுள்ளார்!

இரவென்றும் பகலென்றும் இங்கே இல்லை!
 எப்போதும் பெருங்கூட்டம் இவ்வூர் நாடும்!
இரவலர்கள் இங்குள்ளார் எழிலாங் கோயில்
 ஏராளம் இருப்பதனால்; அவர்கட் கெல்லாம்
விரைவினிலே மறுவாழ்வு இல்லங் கண்டு
 'விதி'மாற்ற 'உசிலை'யெனும் ஊரும் உண்டு!
கரவில்லா நன்மக்கள் வாழ்வ தாலே
 காலமெலாம் மனங்கவரும் மதுரை யூரே!

பசுமைப் புரட்சியில் பெருமைக்குரிய நிகழ்ச்சி

மனுநீதித் திட்டத்தின் மாட்சி மட்டுமல்ல— பசுமைப் புரட்சியில் பெருமைக்குரிய நிகழ்ச்சி. பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குள்ளப்புரத்தில் காடு காடாக இருந்த பதினைந்து ஏக்கர் நிலப்பகுதியைக் கழனியாக மாற்றிய பணி. அதனைச் சுவையுற விளக்குகிறது இக் கட்டுரை.

மதுரை மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊர் குள்ளப்புரம்.

இந்த ஊராட்சி ஒன்றியத் தலைவராகப் பணியாற்றும் திரு. நல்லமணி, உயர்நிலைப் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றியவர். பொது வாழ்வில் ஈடுபட ஆர்வம் கொண்டு, ஆசிரியப் பணியைத் துறந்து ஊராட்சித் தலைவராக வந்து விட்டார்.

பொது வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்ட அவர் ஊர்நலம் பேணுவதில் மிகுந்த அக்கறையும் முயற்சிகளையும் மேற்கொண்டார்.

அதற்கு அருமையான நல் வாய்ப்பை நல்கியது மனுநீதித் திட்ட நாள்.

ஆமாம், குள்ளப்புரத்திலேயே 1971-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் மனுநீதி நாள் நடைபெற்றது.

தாசில்தார் முன்னர் நடைபெற்ற அந்தக் கூட்டத்தைப் பார்வையிட பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் திரு முத்தையா அவர்களும் வந்திருந்தார்.

குள்ளப்புரம் ஊராட்சித் தலைவர் திரு நல்லமணி அதிகாரிகளிடம் கூறினார், ''நான் பிறந்ததிலிருந்து வராக நதிக்குப் பக்கத்திலுள்ள நிலம் காடாகக்கிடக்கிறது. அது மக்களுக்குப் பயன்படும் வகையில் ஊராட்சிக்குப் பட்டா செய்து கொடுத்தால் அந்தக் காடு கரம்பாகக்கிடக்கும் இடத்தைக் கழனியாக்கலாம்'' என்று.

ஊரிலுள்ள பொது மக்கள் சார்பிலும் அரசு அலுவலர்களிடம் ஒரு கோரிக்கை மனுவும் கொடுக்கப்பட்டது. அந்த மனுவில் குள்ளப்புரம் ஊராட்சிக்குச் சொந்தமான எல்லையில் உள்ள சர்வே எண். 22, 39, 76 உள்ள ஏறத்தாழப் பதினைந்து ஏக்கர் நிலத்தை ஊராட்சிக்குப் பட்டா செய்து கொடுக்கும்படி கேட்டிருந்தார்கள்.

கோட்டாட்சித் தலைவர் அவர்களும் மாவட்டஆட்சித் தலைவரின் அனுமதியுடன் உடனடியாகக் கிராம அலுவலர்கள் முன்னிலையில் அந்த நிலத்தை ஊராட்சிக்குப் பட்டா செய்து கொடுத்தார்கள்.

ஏறத்தாழப் பதினைந்து ஏக்கர் நிலமும் மேடுபள்ளங்களாக ஓடைகளாக இருந்து பட்டா செய்து கொடுக்கும் பொழுது கோட்டாட்சித் தலைவர் அந்த நிலம் முழுவதையும் ஒரு மாதத்திற்குள் சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்யும்படிக் கேட்டுக் கொண்டார்.

குள்ளப்புரம் ஊராட்சித் தலைவரும், ஊரின் மக்களும், பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர், கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் ஒத்துழைப்புடன், புல்டோசர் வைத்து இரவு பகலாக வேலை செய்து பதினைந்தே நாட்களில் சமப்படுத்தி விட்டார்கள்.

ஊராட்சி 'இந்தச் சமுதாய நிலத்தை' உருவாக்க ஐநூறு ரூபாய் செலவிடச் சிறப்பு அனுமதி வழங்கியது. ஐநூறு ரூபாய் செலவில் ரூபாய் இரண்டு லட்சம் மதிப்புள்ள நிலம் உருவாகியுள்ளது.

பருவமழை குன்றி வறட்சி நிலை ஏற்பட்டபொழுது துயர் துடைப்புப் பணிகள் மூலம் தோண்டப்பட்ட சமுதாயக் கிணறு ஒன்று இந்த நிலத்தில் பக்கத்தில் இருந்தது. அங்கு பம்பு செட் பொருத்தப்பட்டது. உடனடியாக மின் வாரியத்தினரும் மின் இணைப்புக் கொடுத்தார்கள். சாகுபடி வேலைகள் தொடங்கின.

1971 செப்டம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் மனுநீதித் திட்டத்தின்படி காடாகக் கிடந்த நிலம் ஊராட்சிக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டது.

அடுத்த மாதம் அதாவது அக்டோபர்த் திங்கள் 20-ஆம் நாள் அன்று காடாகக் கிடந்த பதினைந்து ஏக்கரும் கழனியாக மாறிய காட்சி மட்டுமல்ல—அந்த நிலத்தில் கூடப் பயிர் நடவு வேலைகளும் செய்து முடிக்கப் பட்டிருந்தன.

கருணா, காஞ்சி, ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5 போன்ற நெல் வகைகள் பயிரிடப்பட்டன.

முதல் போகம் உணவுப் பயிர் முடிந்தவுடன் இரண்டாம் பருவத்தில் எம்.யு.சி. 5, எம்.யு.சி. 4, பருத்தி முதலியன பயிரிடப்பட்டுள்ளன.

இந்தச் சமுதாய நிலத்தினால் குள்ளப்புரம் ஊராட்சிக்கு ஏறத்தாழ பதினைந்தாயிரம் ரூபாய்வரை ஆண்டு தோறும் வருவாய் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. குள்ளப்புரத்தைச் சேர்ந்த ஐம்பது பேருக்கு இந்த நிலத்தினால் வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது.

மனுநீதித் திட்டத்தின் மாட்சிக்குச் சாட்சியாக அமைந்துள்ள குள்ளப்புரம் சமுதாய நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற உதவும்.

தமிழக அரசின் பசுமைப் புரட்சிக்கு, காடுகள் கழனியாக மாறியது பெருஞ்சான்றாகும்.

குள்ளப்புரம் போன்று சமுதாய நிலங்களை வாய்ப்புள்ள இடங்களில் அமைக்கும் எண்ணத்தை எல்லாருடைய உள்ளத்திலும் இந்நிகழ்ச்சி உருவாக்கியது.

மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏற்றக்கோயில் என்ற இடத்திலும் குள்ளப்புரம் போன்று சமுதாய நிலம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி மன்றங்களோ புறம்போக்கு நிலங்களைச் சகுபடிக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்கக் குள்ளப்புரம் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது என்றால் மிகையாகாது.



மதுரை மாவட்டத்தில் குடும்ப நல இயக்கம்

மக்கள் தொகைப் பெருக்கத்தால் உருவாகும் நெருக்கடி எல்லாம் உணர்ந்து மக்கள் அனைவரும் குடும்ப நலத் திட்டம் ஏற்க வேண்டும்; அளவான குடும்பம் அமைத்து வாழ வேண்டும்; இதற்கான பணியை விரைவு படுத்த வேண்டும் என்ற கருத்தில் ஏனைய மாவட்டங்களைப் போல் சென்ற ஆண்டு மதுரை மாவட்டமும் குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கம் நடத்தியது. பிற மாவட்டங்களினின்று வேறுபட்ட நிலையில் கோட்டம் கோட்டமாக முனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்திய மதுரை மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 39,31,104. இம் மாவட்டம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய இரு கோட்டங்களிலும், மதுரை, உசிலைக் கோட்டங்கள் இணைந்த நிலையில் ஒரு கோட்டத்திலும் முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டது.

இம்மாவட்ட முனைப்பு இயக்கத்தை நமது கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்ற ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள் மதுரையில் துவக்கி வைத்தார்கள். அன்றைய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் முனைப்பு இயக்கம் செயல்படுத்தப்பட்டது. சேவை இயக்கத்திற்கு முன் குடும்ப நல விளம்பர இயக்கம் சிருஞ்சிறப்புமாக நடந்தேறியது. அலுவல் தொடர்புடையோரும், அலுவல் சார்பற்ற ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் பிறரும் இவ்வியக்கம் வெற்றி பெற அரும் பணியாற்றினர்.

முனைப்பு இயக்கத்தையொட்டி நடந்த விளம்பர இயக்கத்தை மதுரை மாவட்டக் குடும்ப நல விளம்பர அலுவலர் இந்திய அரசின் மதுரை மாவட்டக் கள விளம்பர அலுவலர் துணையோடு நடத்தினார். சேவை இயக்கத்தை மாவட்டக் குடும்ப நல அலுவலர் மதுரை மாவட்ட மருத்துவ அலுவலரின் துணையோடு நடத்தி முடித்தார். முனைப்பு இயக்கம் இம்மாவட்டத்தில் 15—10—1971 முதல் 10—1—1972 வரை நடந்து முடிந்தது. முனைப்பு இயக்கக் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோருக்கு வழக்கமாக வழங்கப்படும் ஈட்டுத் தொகை ரூ. 30 தவிர, மற்ற மாவட்டங்களைப் போல், பெருந் தொகையோ அல்லது பரிசுப் பொருள்களோ மதுரை மாவட்டத்தில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். இக்காலக் கட்டத்தில் மதுரை மாவட்டம் முழுமையிலும் ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 8,433 பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு 'சிறு குடும்ப நெறி' ஏற்றுள்ளனர்.

முனைப்பு இயக்கக் காலத்தில் 847 அறுவைச் சிகிச்சைகள் செய்து மதுரை மாவட்டத்திலேயே சிறந்த ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரைப் பெற்றிருப்பது வட மதுரை ஊராட்சி ஒன்றியமாகும். இந்த ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் ஓர் இஸ்லாமியப் பெரியவர். அவர்கள் குடும்ப நலத் திட்டம் மிக மிக அவசியம் என்றும், மதக் கோட்பாடுகள் காரணமாக அதைத் தள்ளிவிட முடியாது என்றும், கூறித் தானே இப்பிரச்சாரத்தில் வெகுவாக ஈடுபட்டுப் பலரை அறுவைச் சிகிச்சைக் குள்ளாக்கியதும், கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஓர் அம்மையார் அவர்களும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த ஒரு பெரியவரும் தாங்களே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதோடு, 'சிறு குடும்ப நெறி' யின் அவசியத்தைத் தங்கள் மதத்தாரிடையே எடுத்து விளக்கி முனைப்பு இயக்கத்தின் வெற்றிக்குத் தங்கள் பங்கைச் செலுத்தினர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும் மதுரை மாவட்டத்தில் உள்ள தன்னியக்க நிறுவனமான காந்தி கிராமத்தைச் சார்ந்த குடும்ப நலப் பிரிவினர், மருத்துவர்கள் ஆகியோர் மதுரை மாவட்டக் குடும்ப நலத் திட்டத் தலைமைச் செயலகத்தின் துணையோடு முனைப்பு இயக்கக் காலத்தில் பெருவாரியான தாய்மார்களுக்கு ('டி. வி. டி.') பிரசவ வாய் வழியாக அறுவைச் சிகிச்சைசெய்தனர். 1971-72ஆம் ஆண்டு முழுவதிலும் 5,884 தாய்மார்களுக்கும், 17 தந்தைமார்களுக்கும் இத்தன்னியக்க நிறுவனத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. கடந்த ஓராண்டுக் காலத்தில் (1971-72) மதுரை மாவட்டம் முழுவதுமாக மொத்தம் 17,578 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. இதில் தந்தைமார்கள் 7,807 பேர், தாய்மார்கள் 9,771 பேர்.

சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு சிறப்பாக இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு அண்மையில் (24—5—1972) கொடைக் கானல் என்ற கொடைமலையில் மதுரை மாவட்டக் குடும்பநலக் கருத்தரங்கு நடத்தப்பட்டுப் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தமிழ் நாடு அரசு மக்கள் நல் வாழ்வு-குடும்ப நலத்துறைச் செயலாளர் தலைமையில் இக்கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்கள். இக்கருத்தரங்கில் மதுரை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள், ஆணையாளர்கள், குடும்பநல மருத்துவர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, விவாதித்து நடப்பாண்டுப் பணி வெற்றிகரமாக அமையச் சீரிய முடிவுகளை எடுத்தனர்.

கருத்தரங்கில் கலந்துகொண்டு மதுரை மாவட்டக் குடும்ப நல மலரை வெளியிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இவ்வாண்டு குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த மாவட்டத்தில் உள்ள அலுவல் சார்பற்ற பெரியவர்களும், அனைத்துத் துறை அலுவலர்களும் சிறப்பாகப் பொது மக்களும் தங்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். குடும்ப நலத் திட்ட இயக்க வரலாற்றில் தன் பெயரைத் தங்க வைத்துக் கொள்ள, மதுரை மாவட்டம் இத்திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்தி இவ்வாண்டில் குறிப்பிடத் தக்க தொரு வெற்றியை ஈட்டும் எனலாம்.


ஆராய்ச்சி மணி
8
சிறுவன் மணியின்
செய்தி
மணியின் வீரச்செயல் — போலீசார் புகழ்மாலை
மணியின் துணிச்சல்
மக்கள் பாராட்டு
தங்கம், மணிக்கு அடித்த சான்ஸ் பார்த்தியா? ஒரே பாராட்டு! எல்லாரும் புகழுறாங்க!
பெரிய காரியம்தான் மணி செஞ்சிருக்கான்! ஆனால், இப்ப கையை ஒடிச்சிகிட்டு உட்கார்ந்து இருக்க வேண்டாம்!
நான் போலீசுக்குப் பயந்து மரத்திலே ஏறியதால், எனக்கு முன்னாலே மரத்தில் ஏறியிருந்த திருட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவன்கள் பயந்து மேலே மரத்திலே ஏற, கிளை முறிந்து கீழே விழுந்தானுக! அந்தச் சத்தத்தில் பயந்து நானும் கீழே விழுந்தேன். கை முறிஞ்சாலும் ஒளிஞ்சிருந்தவன்களைப் பிடித்த பெருமை எனக்கு!
காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதை தான்! நீ ஏதோ செய்ய எப்படியோ பாராட்டுக் கிடைக்கிறது.
முதல்லே கண்டு பிடிச்சது இப்படித்தானே.
சேச்சே... சுத்த மோசம்! முன்னாலே நான் ஏதாவது செய்தால் வாலுத்தனம்... அது இதுன்னு சொன்னீங்க... இப்ப நான் செய்யறதை ஊரிலே எல்லோரும் பாராட்டுறாங்க; நீங்கள் காரணம் கண்டு பிடிக்கிறீங்க!
மணி நீ வாலு இல்லாமெ கெட்டிக்காரப் பிள்ளையா மாறிவிட்டதிலே கயல் விழிக்கு, உன் அப்பாவுக்கு எனக்கு எல்லாம் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?
எனக்குத்தான் மகிழ்ச்சி இல்லை?
உனக்கு என்ன குறைச்சல் ஊரே ஓகோன்னு புகழுது!
அதனாலேதான் முன்னே மாதிரி எங்கேயும் சுத்தக் கூடாதுன்னு போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்டிப்பா சொல்லியிருக்கிறார்.


ஆமாம் மணி ஜாக்கிரதையா இருக்கணும் பெயரும் புகழும் வரும்பொழுது எதிர்ப்பும் சேர்ந்து வரும்
ஆனால் இந்த மணி, எதையும் சமாளித்துக் கொள்வான் எல்லாரும் இப்படி பயமுறுத்தறதுதான் எனக்குப் புரியல்லே.
அப்பொழுது திருஞானம் வருகிறார்.
உனக்குப் புரிகிற வயசா இது? போலீஸ் அதிகாரிங்க என்னிடம் என்ன சொல்லியிருக்காங்க தெரியுமா?
மணியை கவனிச்சுக்கங்கன்னு சொல்லி இருப்பாங்க...
அதனாலேதான் நாளைக்கு மதுரைக்கு திருமணத்துக்குப் போகும் பொழுதுகூட மணியையும் கயல்விழியை அழைத்துக்கிட்டுப் போங்கன்னு சொன்னாங்க...
ஆஹா என்னையும் மதுரைக்கு அழைச்சுக்கிட்டுப் போறீங்களா?
கை கட்டுடன் கல்யாண வீட்டுக்குப் போனால் நல்லாதான் இருக்கும்.
மதுரைக்குத்தானே, எங்க மாமா வீடும் அங்கேதான் இருக்கு. மாணிக்கமும் அங்குதான் நேற்று போயிருக்கான்.
நானே அவனைப் பார்க்கிறேன் அட்ரஸ் கொடுங்க...
மறுநாள் ரயிலில் மதுரைக்குப் புறப்பட்டார்கள்...
மணி! மணி! மதுரை வந்து விட்டது...
மதுரை வந்துவிட்டதா? என்னைமட்டும் எழுப்பறியே! மேலே தூங்கறவரையும் எழுப்பேன்!
யாரோ தூங்கினால் நமக்கு என்ன?
அவர் யாரோவா?

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள்

வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

பொதுப்பணித் துறை

முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருந்து அவரது அலுவலகத்தில் 18—8—1972 மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

	தஞ்சாவூர் மகளிர் கலைக் கல்லூரிக்கு அதிகப்படி வகுப்பறைகள் கட்டுதல். (1)	தஞ்சாவூர் மகளிர் கலைக் கல்லூரிக்கு இரசாயனக் கூடம் கட்டுதல். (2)
1. ஒப்பந்த வகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.
2. பிணைப்பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்).	ரூ. 2,200	ரூ. 1,700
3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலத்தில் பொ. ப. செலுத்துத் தொகை 111 மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்).	ரூ. 30.	ரூ. 30.
4. விற்பனைவரி அரசினர் கருவூலத்தில் விற்பனை வரி பி பற்றுச் சீட்டு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்	ரூ. 1.05	ரூ. 1.05
5. கால அளவு	6 மாதங்கள்.	6 மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்	1—8—1972	1—8—1972

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

கொசு மருந்து (எண்ணெய்) தெளிக்கும் பம்புகள் (ஸ்பிரேயர்ஸ்) 12 லிட்டர் கொள்ளளவு கொண்டது வழங்குவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், ஆணையர் அவர்களால் 14—8—1972 திங்கட்கிழமை மாலை 4.00 மணி வரை கோரப்படுகிறது.

விவரம் வேண்டுவோர் நகராட்சி நல அலுவலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 10)

ஏல விளம்பரம்

மேட்டூர் நகரியக் குழு—மேட்டூர் அணை-1

நகரியக் குழுவிற்குச் சொந்தமான பிளாக் 34 சர்வே எண். 1, 2-லும், பிளாக் 37 சர்வே எண். 2-லும் உள்ள காலி நிலங்களில் 1—9—1972 முதல் 31—3—1975 முடிய விவசாயம் செய்து பலனை அனுபவிக்கும் உரிமையை 11—8—1972-ஆம் நாள் காலை 11.00 மணிக்கு நகரியக்குழு அலுவலகத்தின் நிருவாக அதிகாரி அவர்களால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகளை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கணேசன், பி.ஏ.,
நிருவாக அதிகாரி.

(த. 3)

ஒப்பந்தப் புள்ளி

மேட்டுப்பாளையம் நகராட்சி

ரூபாய் 22,600 மதிப்புள்ள மூன்று தார் ரோடு மூன்று கட்டடம் மற்றும் ஒரு தண்ணீர்ப் பிரதானக் குழாய் போடும் வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் நகராட்சி ஆணையர் அவர்களால் 17—8—1972-ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி வேலைகளுக்கான ஒப்பந்த ஷெட்யூலும் இதர நிபந்தனைகளும் விண்ணப்பத்தின் பேரில் ரூ. 2.06 தனித்தனியாகச் செலுத்தி நகராட்சிப் பொறியர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் 17—8—1972-ஆம் தேதி மாலை 4-15 மணிக்கு ஆணையர் அவர்களால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வீ. கணபதி,
ஆணையர்.

(த. 1)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

மத்திய பேருந்து நிலையக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான 23 டன் ஸ்டீல் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 17—8—1972 மாலை 3 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப் படும்.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் மற்ற விவரங்களை ரூ. 15 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,
கோவை நகராட்சி.

(த. 4)

நாகர்கோவில் நகராட்சி

நகர் மன்றத்திற்கு சுமார் ரூ. 4,00,000 மதிப்புள்ள பொது வேலைகள், வார்டு வேலைகள், குழாய் இணைப்பு வேலைகள் செய்வதற்கும், வரை படங்கள் வரைவதற்கான கருவிகள், மட்டம் பார்க்கும் கருவி, புதிதாகக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கான மின் உந்து முதலியவை வினியோகம் செய்யவும், தண்ணீர் பிரிவிலுள்ள 30 குதிரையாற்றல் மின் உந்தலைப் பழுதுபார்ப்பதற்கும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18—8—1972 மாலை 4-00 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப் படும். கூடுதல் விவரங்களுக்கு நகர் மன்றப் பொறியரிடம் நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

பி. தங்கவேலு, எம்.ஏ.,
ஆணையர்.

(த. 30)

ஏல விளம்பரம்

உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம்

1972-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதி மாலை 3-00 மணிக்கு உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பழைய கிர்லாஸ்கர் ஆயில் என்ஜின்கள் நான்கும் அதைச் சார்ந்த பம்புகளும் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏல நிபந்தனைகளையும் இதர விவரங்களையும் அலுவலக நேரங்களில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

பி.ஏ.எஸ். சாலமன்,
ஆணையர்.

(த. 31)

கூட்டு இயக்குநர் அலுவலகம்
அரசுப் போக்குவரத்துத் துறை
திருச்சிராப்பள்ளி மண்டலம்
திருச்சிராப்பள்ளி-11

திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டடத்தின் முதல் மாடிப்]பகுதியைச் சிற்றுண்டி விடுதியாகக் குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் பெறுவதற்கான கடைசித் தேதி 10-8-1972. மாலை மூன்று மணி

(2) ஒப்பந்தம் திறக்கப்படும் நாளும் நேரமும் 10-8-1972. மாலை 3-30 மணி.

(3) சிற்றுண்டி விடுதியின் குத்தகைக் காலம்....மூன்று வருடங்கள்.

(4) ஒப்பந்தப் படிவம் வேண்டுவோர் ரூபாய் 1 (ரூபாய் ஒன்று மட்டும்) கூட்டு இயக்குநர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து துறை, திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி-17 அலுவலகத்தில் விடுமுறை அல்லாத நாட்களில் அலுவலக நேரத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

(5) இந்த அலுவலகத்திலிருந்து கொடுககப்படும் ஒப்பந்தப் பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒப்பந்தப் படிவத்தை பூர்த்தி செய்து கையெழுத்திட்டு அனுப்பும் ஒப்பந்தங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பிறகு அனுப்பப்படும் ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

ம: பிராணப்பன்,
கூட்டு இயக்குநர்.

(த. 11).

ஆவடி நகரியம், சென்னை-54

ஆவடி நகரியத்திற்காக 1972-73-ஆம் ஆண்டிற்குத் தேவையான பாரங்கள் நோட்டீசுகள் அச்சடித்தல், பைண்டிங் செய்து கொடுத்தல் வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3-15 மணிக்கு நிருவாக அதிகாரி அவர்களால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் நகரிய அலுவலகத்தில் அப்பொழுது வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 100 நகரிய அலுவலகக்கருவூலத்தில் 14-8-1972 அன்று பிற்பகல் 1 மணிக்குள் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவேண்டும் அல்லது ரூ. 100-க்கான டிராப்ட் (Draft drawn in favour of Executive Officer, Avadi Township)ஒப்பந்தத்துடன் இணைக்கப்படவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அச்சிட்ட அட்டவணையில் விவரமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

இ. அப்துல் ரகீம்,
நிருவாக அலுவலர்,
ஆவடி நகரியம்.

(த. 33)

தஞ்சாவூர் நகராட்சி

கீழ்க்கண்ட மின் இலாகாவின் உபயோகத்திற்கு பொருள்கள் வழங்க நகராட்சி ஆணையர், நகராட்சி அலுவலகம் அவர்களால் கீழ்க்கண்ட நாட்களில் மாலை 4 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் பொருட்களின் விவரமும்.	கொடுக்கும் நாள்.	கட்டுத் தொகை.
1 அலுமினிய கம்பி (All Aluminium Conductor) சைஸ் 7/1093, 7/.0975, 7/.0772, ACSR 7/102 அலுமினியம் டேப்.	16-8-1972	ரூ. 500
2 ஜி.ஐ. கம்பி நெ. 8 ஸ்டே கம்பி ஜி.ஐ. 7/10 அண்ட் 7/20, எர்த்ரில்.	19-8-1972	ரூ. 250

விளக்கமான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப் படிவம், நகராட்சி மின்சாரப் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களுக்கு ரூ. 2 மணியார்டர் மூலமாக அனுப்பிப் (திருப்பித் தரப்படமாட்டாது) பெறலாம். அஞ்சல் ஆணை, காசோலை (cheque) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏ. சேவுகபாண்டியன், பி.ஏ.,
ஆணையர்.

(த. 34)

உடுமலைப்பேட்டை நகராட்சி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 16-8-1972-ஆம் தேதி புதன் கிழமை மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே தினத்தன்று மாலை 4-30 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் நகராட்சி ஆணையர் அவர்களால் திறக்கப்படும். நடப்பிலுள்ள எல்லா ஒப்பந்த நிபந்தனைகளும் இதற்கும் பொருந்தும். ஒப்பந்த நிபந்தனைகளும், நமூனாக்களும் 14-8-1972 மாலை 4 மணிவரை, அந்தந்த வேலைக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை நகராட்சி அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	மதிப்பீடு ரூபாய்.	செலுத்த வேண்டிய கட்டுத் தொகை ரூபாய்.	ஒப்பந்த நமூனாவின் விலை ரூபாய்.
1 நகரின் மத்தியிலுள்ள குட்டையின் கரையில் கடைகள் கட்டுதல் ..	2.70 இலட்சம்.	6,750	25.88
2 சிவசுப்பிரமணிய கவுண்டர் சந்திற்கு கான்க்ரீட் பாதை அமைத்தல் ..	1,000	50	1.04
3 தெய்வசிகாமணிப்பட்டிணத்தில் கதவு எண் 52-க்கு பக்கம் உள்ள சந்திற்கு கான்க்ரீட் நடைபாதை அமைத்தல்	700	35	1.04
4 சர்தார் வீதி சாக்கடைக்கு மராமத்து செய்தல் ..	700	35	1.04

எஸ். ரத்னகிரி,
ஆணையர்.

(த. 35)

கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சி ஆணையர் அவர்களால் தெரு விளக்குகள் பராமரிப்புக்குத் தேவையான டியூப் லைட் பிட்டிங்குகள் (தேவையான எல்லா மின் பொருள்களுடனும்) வழங்க 14—8—1972 மாலை 4 மணி முடிய முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த அறிக்கை வேண்டுவோர் நகராட்சிப் பொறியாளருக்கு விண்ணப்பிக்கவும்.

ஆணையர்.

(த. 37).

கோவை மாவட்ட நூலகக் குழு

கோவை மாவட்ட நூலகக்குழுவின் தலைமை நூலகம் மற்றும் 191 கிளை நூலகங்களிலும் உள்ள 1971-72-ஆம் ஆண்டின் பழைய செய்தித் தாள்களும், சஞ்சிகைகளும் விற்பனைக்குத் தயாராக உள்ளன. மேற்கண்ட செய்தித் தாள்களும், சஞ்சிகைகளும் தேவையானவர்களிடமிருந்து முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16-8-1972-ம் தேதி மாலை 5 மணி வரை வரவழைக்கப்படுகின்றன.

நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் செயலாளர் அவர்களிடமிருந்து விண்ணப்பித்தோ, அன்றி நேரிலோ பெற்றுக்கொள்ளலாம். மொத்தம் விற்பனைக்குள்ள பத்திரிகைகள் சுமார் 20,171·500 கிலோ.

கு. அ. சுப்பிரமணியன்,
செயலாளர்,
கோவை மாவட்ட நூலகக்குழு,
கோவை.

(த. 5)

கோயம்புத்தூர் நகராட்சி

குழாய்க் கிணறுகள் அமைக்கத் தேவையான சுமார் 10 டர்பைன் பம்பு செட்டுகள் (Turbine Pump sets) சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—8—1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை ஆணையரால் பெற்றுக்கொள்ளப்படும்.

மற்ற விவரங்கள் நிபந்தனைகள் முதலியவற்றை ரூ. 15 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். நடராஜன்,
ஆணையர்.

(த. 32).

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம் புதுக்கோட்டை ரோடு திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 9—8—1972 அன்று பிற்பகல் 3-30 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—முத்துப்பேட்டை மீசல் சாலை மைல் 15/1ல் (கி. மீ. 24/2) பாலத்தைத் திரும்பக் கட்டுதல்.

கட்டுத் தொகை டெபாசிட்—ரூ. 3,550.

ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம்—கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப) தஞ்சாவூர்.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 1—8—1972 முதல் 8—8—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இதுதவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும். பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ: தேவப்பிரியம்,
கண்காணிப்புப் பொறியாளர்,
(நெ.கி.ப.)

(த. 38.)

பொதுப்பணித் துறை
சென்னை—செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர் — சென்னை அரசினர் கஸ்தூரி பாய் காந்தி மருத்துவ மனையில் புறநோய்களுக்காகப் புதிய பகுதி ஒன்று கட்டுவதற்காக பைல் (Pile) அடித்தளம் அமைத்தல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தர கடைசி நாள் 28—5—1972 மாலை 3 மணி என இருந்த கெடு 11—8—1972 மாலை 3-00 மணி வரை ஒத்திவைக்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் சென்னை செங்கற்பட்டு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் 1—8—1972-லிருந்து 10—8—1972 வரை எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றமில்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை—செங்கற்பட்டு வட்டம்.

(த. 14)

கதர் கிராமத் தொழில் வாரியம்

கதர் கிராமத் தொழில் துறையின்கீழ் இயங்கும் கிராமிய நெசவியல் மையங்களுக்குத் தேவையான பரிசோதனை உபகரணங்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30-8—1972 பிற்பகல் 5-மணி வரை கீழ்க்கண்ட அலுவலரால் ஏற்கப்படும். பெறப்பட்ட ஒப்பந்தங்கள், வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் 31—8—1972 முற்பகல் 11 மணியளவில் திருப்பூரில் கீழ்க்கண்ட அலுவலரால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தம் சம்பந்தமான இதர விவரங்கள் அடங்கிய பத்திரங்களை ரூ. 10-ம் அதற்கான விற்பனைவரி மற்றும் சர்சார்ஜ் ஆகியவைகளைக் கிராஸ்டு வங்கி வரைவாகவோ அல்லது பண அஞ்சல் மூலமாகவோ செலுத்தி கீழ்க்கண்ட அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மண்டலத் துணை இயக்குநர்,
கதர் கிராமத் தொழில்கள்,
குமார நகர்—திருப்பூர்-3.

(த. 15)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கம்பத்திலுள்ள புதிய அரசாங்க மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட வார்டுக்கான கட்டடம் மற்றும் லேபர்-கம்-ஆபரேஷன் தியேட்டருக்கான கட்டடம் (மீதி வேலைகள்) நிர்மாணித்தல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 மாலை 3 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு, மாலை 4 மணிக்குத் திறக்கப்படும். 1—8—1972 முதல் 7—8—1972 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ.5,650.

முடிக்கவேண்டிய காலம்—6 மாதங்கள்(ஆறு மாதங்கள்)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ.20-00, (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P.W. Remittances—III other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், மதுரை என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0—75 (காசுகள் 75 மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales tax (d) Miscellaneous" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத் தொகையையும் கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது "செட்யூல்டு வங்கிகளின் கால் ரசீது டெபாசிட்டு" வகையிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின் வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வ. துரைராஜ்,
மேற்பார்வைப் பொறியாளர் (பொறுப்பு).

(த. 42)

சேலம் நகராட்சி

சேலம் மாநகரில் பல வட்டங்களில் அமைப்பதற்காகக் கீழ்க்கண்ட விளக்குகளை வழங்க முத்திரையிடப்பட்ட முன்னீடுகள் ஆணையரின் நேர்முகத் துணைவர் அவர்களால் 14—8—1972ஆம் தேதி மாலை 3 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கு நகராட்சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

1. 2 அடி இரட்டைக்குழல் விளக்குகள்.
2. 80 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
3. 125 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
4. 400 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
5. 4 அடி ஒற்றைக் குழல் விளக்குகள் (தெரு விளக்கு பிட்டிங்).

பி. ஹமீதலி, பி.ஏ., பி.எல்.,
ஆணையர்.

(த. 8)

மேட்டுப்பாளையம் நகராட்சி

ரூ. 22,000 மதிப்புள்ள மூன்று தார்ரோடு, மூன்று கட்டடம் மற்றும் ஒரு தண்ணீர் பிரதானக் குழாய் போடும் வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் நகராட்சி ஆணையர் அவர்களால் 17—8—1972 ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி வேலைகளுக்கான ஒப்பந்த ஷெட்யூலும் இதர நிபந்தனைகளும் விண்ணப்பத்தின் பேரில் ரூ. 2·06 தனித்தனியாகச் செலுத்தி நகராட்சிப் பொறியர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் 17—8—1972 ஆம் தேதி மாலை 4–15 மணிக்கு ஆணையர் அவர்களால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வீ. கணபதி,
ஆணையர்.

(த. 2)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை
தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.
1. தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை, திருச்சி, திண்டுக்கல், சாலை கி. மீ. 228/4 (மைல் 140/7)-ல் உள்ள சிறு பாலத்தைத் திரும்பக் கட்டுதல் (அணுகுச் சாலைகள் அமைத்தல் உட்பட).	4,690

ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 அன்றே மாலை 3–15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம்-II சென்னை (கிண்டி) அலுவலகத்தில் 2—8—1972 முதல் 8—8—1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

மேற் குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், கிண்டி, சென்னை-25) அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலகத்திலுள்ளும் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம்-II, கிண்டி, சென்னை-25 பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டையாவது வங்கிப் பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

திரு மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.
(நெ).

(த. 28)

பொதுப்பணித்துறை
சென்னை—செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்—சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைப் பகுதிக் கட்டத்தின் (Surgical Block) மூன்றுவது மாடியின் மேல் கூடுதலாக மூன்று மாடிகள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்காக இருந்த கடைசி நாள் 29—6—1972-லிருந்து 9—8—1972 மாலை 3 மணி வரை ஒத்திவைக்கப்படுகிறது. மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 25—7—1972 முதல் 8—8—1972 வரை எல்லா அலுவலக நேரங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

(த. 10)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 9—8—1972 புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3–30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: துறையூர் குடிநீர்த் திட்டம்—முதல் நிலை—முதற் பகுதி—தூய நீர் கொண்டு செல்லும் குழாய்ப் போக்கு 300 மி.மீ. விட்டமுள்ள ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் குழாய்களையும் தனி உறுப்புக்களையும் பதித்து இணைத்தல்.

ஒப்பந்த வகை: மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை: ரூ. 5,330 (ரூபாய் ஐயாயிரத்து மூன்னூற்று முப்பது மட்டும்).

இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—பன்னிரண்டு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 15·60. (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து பி-15, தில்லைநகர் மெயின்ரோடு, திருச்சி-18 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 7—8—1972 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.
செயல் வட்டம், மதுரை-2.

(த. 20)

பிற்பட்டோர் நலத்துறை
(பி. 5. 15030/72)

சலவை மற்றும் முடித்திருத்தும் கருவிகள் விநியோகம் செய்ய கீழே கையொப்பமிடப்பட்டவரால் ஒப்பந்தப் புள்ளிகள் 16—8—1972-ஆம் தேதி மாலை 3 மணிக்குள் மூடி முத்திரையிட்ட உறைகளில் வரவேற்கப்படுகின்றன. தேவைப்படும் கருவிகள் மாவட்டத் தலைநகரிலுள்ள அந்தந்த மாவட்ட நல அலுவலர்களுக்கு நேரடியாக ரயில் மூலம் கம்பெனியார் செலவில் அனுப்பப்படவேண்டும்.

கருவிகளைப் பற்றிய விவரங்களை சென்னை-5, சேப்பாக்கம் பிற்பட்டோர் நல இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஏதாவது ஒரு வேலை நாளில் பெற்றுக் கொள்ளலாம்.

இரா. பண்டரிநாதன், ஐ.ஏ.எஸ்.,
பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர்.

(த. 18)

மின்சார வாரியம்
குறிப்பிடுகை எண் சி. 1105

குந்தாநீர் மின் திட்டம்— நான்காவது கட்டம் மூன்றும் நிலையத்துடன் இணையவிருக்கும் மூன்றுவது அழுத்த நீர்க்குழாயைத் தயாரித்து, அனுப்பிக் கொடுத்து, நிர்மாணிக்க.

மேற்கூறப்பட்டுள்ள வேலைக்குக் குத்தகை மனுக்கள் (ஒப்பந்தம்) பெற்றுக்கொள்ளும் காலம் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23-ம் நாள் புதன் கிழமை நண்பகல் 12-00 மணிவரை நீட்டிக்கப்பெற்றிருக்கிறது. பெறப்பட்ட மனுக்கள் அன்று பிற்பகல் 2-30 மணிக்குத் திறக்கப்படும்.

157, அண்ணாசாலை,
சென்னை-2.

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுட்பம் (பொதுவியல்).

(த. 44)

வனத்துறை
அரசினர் ரப்பர் தோட்டங்கள், நாகர்கோவில்

கீழ்க்காணும் வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 10—8—1972 மாலை 3 மணிவரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக நாகர்கோவில் அரசினர் ரப்பர் தோட்ட வனப்பாதுகாவலர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட, ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒவ்வொரு வேலைக்குரிய ஒப்பந்த விவரங்களை ரூபாய் 3-12 செலுத்தி வனப்பாதுகாவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களுக்கு வனப்பாதுகாவலர், அரசினர் ரப்பர் தோட்டம், நாகர்கோவில்-1 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

எண். (1)	வேலையின் விவரம். (2)	உத்தேச மதிப்பீடு. (3)	முன் பணம். (4)	வேலை முடிக்க வேண்டிய தேதி. (5)
		ரூபாய்.	ரூபாய்.	
1.	சித்தாரில், சித்தார் கண்காணிப்பாளருக்கு குடியிருப்பு கட்ட	61,000	1,525	ஒப்பந்தமான தேதியிலிருந்து 5 மாதத்திற்குள்.
2.	சித்தாரில் உதவிப்பொறியாளருக்கு குடியிருப்பு கட்ட	56,500	1,412-50	ஷை
3.	சித்தாரில் நடத்துனருக்கான குடியிருப்பு நம்பர் ரூ. 26,000 வீதம் ..	52,000	1,300	ஷை
4.	சித்தாரில் பீல்டுமேனுக்காக 2 கூட்டு குடியிருப்பு—ஒன்றுக்கு ரூ. 23,000 வீதம்	46,000	1,150	ஷை
5.	சித்தாரில் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட	49,000	1,225	ஷை
6.	சித்தாரில் லாரி டிரைவருக்கும், கிளினருக்கும் ஒரு கூட்டு குடியிருப்பு கட்ட ..	23,000	575	ஷை
7.	சித்தாரில் பள்ளிக்கூடம் ஒன்று கட்ட	24,500	612·50	ஷை
8.	சித்தாரில் கூப்பு 53 கூப்பு 54 சாலை அமைக்க	43,000	1,075	ஷை
9.	பரளியாரில் 2 தொழிலாளர் கூட்டு விடுதி கட்ட ஒன்றுக்கு ரூ. 35,000 வீதம்	70,000	1,750	ஷை
10.	பரளியாரில் குழந்தை காப்பிடம் ஒன்று கட்ட	22,000	550	ஷை
11.	சித்தார் முக்கிய சாலையில் 3 முதல் 4.5 கிலோமீட்டர் வரை புதுப்பித்தல் ..	48,300	1,207-50	ஷை
12.	சித்தார் முக்கிய சாலையில் 0 முதல் 3 கிலோமீட்டர் வரை மெட்டல் அமைத்தல்	35,000	875	ஷை

கி. வெங்கடகிருஷ்ணன்,
வனப்பாதுகாவலர்.

(த. 81)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைகட்கெனஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 19—8—1972 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

எண். (1)	வேலையின் பெயர். (2)	ஒப்பந்த வகை. (3)	முன் வைப்புத் தொகை. (4)	வேலையினை முடிக்கும் காலம். (5)	ஒப்பந்தப் படிவ விலை. (6)
1.	கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்—முதல் நிலை—நீர் கொணரும் குழாய்ப்போக்கு—21 அங்குலம் விட்டமுள்ள உறுதிபெறுகற்காரைக் குழாய்களை நீ. வெ. 8,565 மீட்டர் முதல் 13,661 மீட்டர் வரை பதித்து இணைத்தல்.	மொத்தத் தொகை	ரூ. 3,150	6 மாதங்கள்.	ரூ. 10.35.
2.	கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்—முதல் நிலை—நீர் கொணரும் குழாய்ப் போக்கு—21 அங். விட்டமுள்ள உறுதிபெறு கற்காரைக் குழாய்களை நீ. வெ. 24,292 மீட்டர் முதல் 29,840 மீட்டர் வரை பதித்து இணைத்தல்.	மொத்தத் தொகை.	ரூ. 2,230.	6 மாதங்கள்.	ரூ. 10.35

முன்வைப்புத் தொகை:—இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கி பண உத்தரவுச் சீட்டு மூலம் மட்டும் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) செயற் கோட்டம் கோவில்பட்டி அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். வேறுவடிவில் இத்தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவில்பட்டி செயற்கோட்டம், அவர்களிடமிருந்து 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 17—8—1972 வியாழக்கிழமை மாலை 5.00 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், செயல் வட்டம்,
மதுரை-2.

(த. 74)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர்—அம்பத்தூர் 20 எண்ணிக்கை பணிக்கூடம் யூனிட்களைச் சுற்றி சுற்றுச் சுவர் .

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் வணிகத் துறை அவர்களால், தொழில்துறை கட்டுமானப் பிரிவு மற்றும் இதர அரசுத் துறைகளின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 17–8–1972 மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3.10 மணிக்கு, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில்துறை, 2, விஜயராகவாச்சாரி சாலை, தி.நகர், சென்னை-17 அவர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 2,225.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரை படங்களுடன் விற்பனை வரி உட்பட—ரூ. 10.40.

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (கட்டுமானம்), அம்பத்தூர் கோட்டம், எண் 2, விஜயராகவாச்சாரி சாலை, சென்னை-17-ல் 1–8–1972 முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வற்பனைவரி உட்பட ரூ. 10.40 (திருப்பித் தரப்பட மாட்டாது) கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX. Industries—Other receipts" என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்), அம்பத்தூர் கோட்டம், தொழில் வணிகத்துறை, எண் 2, விஜயராகவாச்சாரி சாலை, சென்னை-17 அவர்தம் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, டெபாசிட் அட் கால் ரிசிப்ட் மற்றும் செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்ட்கள் வடிவிலோ மட்டுமே எற்றுக்கொள்ளப்படும். கட்டுத் தொகைக்காக செட்யூல்டு வங்கியில் கொடுக்கப்படும் டிமாண்டு டிராப்ட்கள் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்), அம்பத்தூர் கோட்டம், சென்னை–17 அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டவை மட்டுமே எற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு செக்குருட்டீஸ் மற்றும் தமிழ்நாடு மின்துறைப் பத்திரங்கள் மார்க்கெட் மதிப்பிற்கு 5 சதவிகிதம் குறைவாக எற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட தபால் அலுவலகத்தின் அனுமதியின் பேரில் எற்றுக்கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பாங்கு காரண்டியும் எற்றுக்கொள்ளப்படும். வேறு வகையில் செலுத்தப்படும் தொகை எற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

எற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெரிய கட்டிடம் கட்டும் வேலைகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பிரிவு.

(த. 56)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் யூனிட்,
(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள)

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல்,
(வழி) ராஜபாளையம்,
ராமநாதபுரம் மாவட்டம்.

பல்வேறு வகையான மங்கனீஸ் ஸ்டீல் கேஸ்டிங்ஸ் மற்றும் கேஸ்ட் ஸ்டீல் கேஸ்டிங்ஸ் வழங்க, 1972 ஆகஸ்ட் 21 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

விளக்கமான மாதிரிகள், ஒப்பந்தப் படிவம் மற்றும் இதர விவரங்கள், மேலாளர், "தமிழ்நாடு சிமெண்ட்ஸ், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல், இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களிடம் 1-8-1972 முதல் ரூ. 103.50 மணியார்டர் மூலம் செலுத்தி (திருப்பித் தரப்பட மாட்டாது) பெற்றுக்கொள்ளலாம்.

பொது மேலாளர்.

(த.50)

ஒப்பந்தப் புள்ளி

மீன்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், சின்தெட்டிக் பிஸ்நெட் ட்வைன் (Synthetic fishnet Tivine) வழங்க, மீனளத்துறை இயக்குநர், தேனாம்பேட்டை, சென்னை-6 அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. முழு விவரங்கள், மீனளத்துறை இயக்குநர் அலுவலகம், நிர்வாக அலுவலகக் கட்டிடம், தேனாம்பேட்டை, சென்னை-6-க்கு எழுதிப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிகள், மீனளத்துறை இயக்குநர் அலுவலகம் சென்னைக்கு 1972, ஆகஸ்ட் 10 மாலை 3.00 மணிக்கு முன்னர் வந்து சேரவேண்டும்.

டி வி. வெங்கட்ராமன்,
மீனளத்துறை இயக்குநர்.

(த. 42)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிக்காக 29–8—1972 மாலை 5.00 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன :—

தமிழ்நாடு மாநில சட்ட மேலவைத் தலைமைச் செயலக சர்வீஸில் ஒரு ஆங்கிலச் செய்தியாளர் நியமனம்.

சம்பளம்—ரூ. 425—25—600—30—750 மாதம் ஒன்றுக்கு.

வயது—1–7–1972 அன்று 25 வயதிற்குக் குறைவாக.

தகுதிகள்—

1. இந்த மாநிலத்தின் எஸ்.எஸ்.எல்.ஸி. பொதுத் தேர்வில் தேற்றிருக்க வேண்டும். மற்றும் கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

2. அரசுத் தொழில் நுட்பத் தேர்வு சுருக்கெழுத்தில் (English) தேர்வு பெற்றிருக்க வேண்டும். மதிப்பெண் குறிப்பிடப்பட்ட வேகம் நிமிடத்திற்கு 180 வார்த்தைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

3. அரசுத் தொழில் நுட்பத் தேர்வில் சுருக்கெழுத்து (English) ஹயர் கிரேடு தேர்வில் தேர்வு பெற்ற மனுதாரர்கள் கிடைக்காவிடில், லோயர் கிரேடு தேர்வில் தேர்வு பெற்ற மனுதாரர்கள் நியமனத்திற்கு கவனிக்கப்படுவார்கள்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்றிருப்பவர்கள் விஷயத்திலும், வயது வரம்பு கிடையாது. அதிக பட்ச வயது வரம்பு மற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் விசயத்தில் 5 ஆண்டுகள் தளர்த்தப்படும். மற்றும் அங்கஹீன முற்றவர்கள் விசயத்தில் 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1–1–1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபிசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜெண்ட் மேஜர் · இன்ஸ்ட்ரக்டராகப் பணி புரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள், 1–7–1972 அன்று 40 வயதிற்கு குறைவானவர்கள் 1—1–1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும் இலங்கை, பர்மா நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், பிற விவரங்களையும், "செயலாளர்" தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள தன் முகவரி எழுதிய (0.30 காசு நூல் அஞ்சல் வில்லை 0.05 காசு அகதிகள் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 40)

ஏல விளம்பரம்

மீனளத் துறை

எம். எஸ். டபள்யூ 84 பென்ஸ் பிஸ் வேன், தற்பொழுது உள்ள நிலையில், மீனளத்துறை இயக்குனர் அலுவலகம், நிர்வாக அலுவலகக் கட்டிடம், சென்னை-6-ல் 5—8—1972 மாலை 3-00 மணிக்கு ஏலம் விடப்படும். இந்த வாகனம், மீனளம் ஆட்டோமொபயில் பணிக்கூடம், 35/2, உட்ஸ் சாலை சென்னை-2-ல் அலுவலக நேரங்களில் பார்வையிடப்படலாம். ஏல விவரங்கள், மீனளத்துறை இயக்குநர் அவர்களிடம் இலவசமாகப் பெறலாம்.

டி. வி. வெங்கடராமன்,
மீனளத்துறை, இயக்குநர், சென்னை-6.

(த-16).

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

கொரட்டூர் கோட்டம்.

கீழ்க்கண்ட வேலைக்காக, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், கீழ்க்கையொப்பமிட்டவருக்கு 4—8—1972 மாலை 3-00 மணிக்கு மேற்படாதவாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	சுமார் மதிப்பு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. ரூ.
கொரட்டூரில் முதல் கட்ட திட்டத்தின் கீழ் 234 லிருந்து 262 சதுர அடி கார்பெட் ஏரியா அளவுள்ள 30 தனித்தனி வீடுகள் கட்டுதல்.	1,80,000	2,700	10 வரி நீங்கலாக.

ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்கள், கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில், எல்லா வேலைநாட்களிலும் காலை 11-00 மணி முதல் 3–00 மணி வரை பெறலாம். 24—7—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு செலுத்தப்படும் தொகை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்ததாரர்கள் விளக்கமான வரைபடங்கள் மற்றும் மாதிரிகள் தங்கள்ஒப்பந்தப்புள்ளிகளுடன் சேர்த்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒப்பந்தப்புள்ளிகளை கொடுக்கும் நாள் மற்றும் நேரத்திற்குப் பின்னர் வந்தாலோ அல்லது கட்டுத் தொகையன்றி வந்தாலோ நிராகரிக்கப்படும். நிர்வாகப் பொறியாளர் (கே.) அவர்கள் எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

டி. பி. காளியப்பன்,
நிருவாகப் பொறியாளர் (கே).

(த-19)

ஒப்பந்தப் புள்ளி

இராணிப்பேட்டை நகராட்சி

ரீடிங் ரூம் ரோடில் மருத்துவமனைக்கு பக்கத்தில் புதிதாக கட்டியுள்ள ஆறு கடைகளை தனித்தனியாக 1—9—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள காலத்திற்கு அனுபோக பாத்தியதையை வாடகைக்குவிட, நகராட்சி அலுவலகத்தில் 17—8—1972-ம் தேதி காலை 11 மணிக்கு ஏலம் விடப்படும். இதர விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களிலோ அல்லது தபால் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

க. மாரிமுத்து, எம்.ஏ.,
ஆணையர்.

(த-53).

ஒப்பந்தப் புள்ளி

திண்டுக்கல் நகராட்சி

கீழ்க்கண்ட சாமான்களை வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விலைப்புள்ளிகள் நகராட்சி அலுவலகத்தில் 14—8—1972 மாலை 4-00 மணி வரை திண்டுக்கல் நகராட்சி ஆணையாளரால் பெற்றுக் கொள்ளப்படும், விலைப்புள்ளிகள் அன்றைய தினம் மாலை 4-30 மணிக்கு உடைக்கப்படும்.

I லாரிக்கு சைஸ்—

(1) டயர் 8× 25 × 20—ஒன்றுக்கு விலை.

(2) டியூப் 8× 25× 20—ஒன்றுக்கு விலை.

(3) பிளாப் 8 × 25 × 20—ஒன்றுக்கு விலை.

—பொறுப்புத் தொகை ரூ 300.

II குழாய் சாமான்கள் முதலியன—பொறுப்புத் தொகை ரூ. 150.

குறிப்பு :—கொடுக்கப்படவேண்டிய சாமான்களின் எண்ணம், மற்ற விவரங்கள், விலைப்புள்ளி நிபந்தனைகள் முதலியவற்றிற்கு நகராட்சி பொறியர் அலுவலகத்தில் மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்.

(த-55)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—திருப்பத்தூர், அரசு கலைக் கல்லூரியில் மூன்றும் ஆண்டு பட்டப் படிப்பு மாணவர்கள் படிப்பு வசதிக்கு மேலும் கட்டிடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 15—7—1972-லிருந்து 29—7—1972 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித்துறை, கட்டிடக் கோட்டம், கோயம்புத்தூரில் 27—7—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

அசல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நிபந்தனைகள் மாற்றப்படாதது.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
பொதுப்பணித்துறை, மேற்பார்வைப் பெறியாளர்,
கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம்.
கோயம்புத்தூர்-1.

(த-21.)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்காக, 29—8—1972 மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு சபார்டினேட் சர்வீஸில் 7 கம்ப்யூட்டர் (Computor) நியமனங்கள் சம்பளம் ரூ. 250—10—400 மாதம் ஒன்றுக்கு.

வயது—1—7—1972 அன்று 27 வயதிற்குக் குறைவாக.

தகுதி :—புள்ளி விவரம், கணக்கு அல்லது பொருளாதாரம் ஆகிய (Main Subject) பாடங்களில் பட்டம் அல்லது வணிகவியலில் (Commerce) பட்டம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. அங்கஹீன முற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டு வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணி புரிந்த முன்னால் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கப்பற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள், 1—7—1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள் 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் விசயத்திலும் இலங்கை, பர்மா நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், பிற விவரங்களையும், "செயலாளர்" தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள தன் முகவரி எழுதிய (0-30 காசு நூல் அஞ்சல் வில்லை +0-5 .காசு அகதிகள் வில்லை ஒட்டப்பட்டு) நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த-17).

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்.—தஞ்சாவூர் நீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம்—இரண்டாம் நிலை (Part II) சோன் IIA-க்கு நீர் வழங்கு திட்டம்—சி.ஐ. மற்றும் பிவிசி பைப்புகள் மற்றும் ஸ்பெஷல்ஸ் அமைத்துப் பொருத்துதல், வால்வுகள் பொருத்துதல், மற்றவைகள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர் மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-8 அவர்களால் இந்தத்துறை மற்றும் அல்லது ஒத்த அரசுத்துறைகளில் பதிவு செய்துள்ள உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, குறிப்பிடப்பட்ட துறைக்கான படிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 4—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த வடிவம்—கே. 2.
கட்டுத் தொகை—ரூ. 710.

(ஒப்பந்த வடிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி கருவூலச் சலான் வடிவிலோ அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதாவது ஒரு வடிவத்திலோ கட்டுத் தொகை இருக்க வேண்டும்.) ;

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, நிருவாகப் பொறியியல் மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் —"T. Deposits and advances—I. Deposit—bearing —Other Deposits—TWAD Board—Funds I. Receipts G. (III) interest other Remittances என்ற தலைப்பிலும் விற்பனை வரி "Sales D, Mis I. general Sales Tax என்ற தலைப்பிலும் தனித் தனிச் சலானில் செலுத்தப்படவேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்—நிருவாகப் பொறியாளர், (PHE) மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர், அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பந்தப் பத்திரங்கள் விலை பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ.)

வேலை முடிக்க வேண்டிய காலம்—5 மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம்,
குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-8

(த. 27)

ஒப்பந்தப் புள்ளி

திருச்சிராப்பள்ளி நகராட்சி

ஜி.ஐ. பைப்புகள் வழங்க, ஆணையர் அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 14—8—1972 மாலை 4-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
ஆணையர்.

(த. 9)

ஒப்பந்தப் புள்ளி

மன்னார்குடி நகராட்சி

1972-73-ம் ஆண்டிற்கு நகராட்சிக்குத் தேவையான ரிஜிஸ்டர்கள் பாரங்கள், அச்சடித்தல், கோடு போடுதல், பைண்டிங் செய்தல் ஆகியவைகளுக்கு ஒப்பந்தங்களை தர விரும்புபவர்கள் ஒப்பந்தம் பொறுப்புத் தொகையாக ரூபாய் 200 செலுத்தி 14—8—1972 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குள் நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரிடம் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்க வேண்டும். ஒப்பந்தங்கள் நகராட்சி மன்றத்தில் அதே தினம் மாலை 4.30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலை விவரம் :—நகராட்சிக்குத் தேவையான பாரங்கள், ரிஜிஸ்டர்கள், பிரிண்ட் மற்றும் பைண்டிங் செய்து சப்ளை செய்தல்.

ஒப்பந்தங்கள் அரசினரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அச்சு பாரத்தில் இரட்டைப் பிரதிகளில் கொடுக்க வேண்டும். இதர நிபந்தனைகளுக்கு இந்த அலுவலகத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

கோ. முருகன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி.
(த. 59)

ஒப்பந்தப் புள்ளி

சேலம் நகராட்சி

சேலமாநகரில் பல வட்டங்களில் அமைப்பதற்காக கீழ்க்கண்ட விளக்குகளையும் இதர சாமான்களையும் சப்ளை செய்ய முத்திரையிடப்பட்ட முன்னீடுகள் ஆணையரின் நேர்முகத் துணைவர் அவர்களால் 16—8—1972-ம் தேதி மாலை 3 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கு நகராட்சி பொறியருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

1. 250 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
2. போஸ்ட்டாப் விளக்குகள்.
3. அலுவலக பராமரிப்புக்குத் தேவையான மின்சார சாமான்கள்.
4. 125 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.

பி: ஹமிதலி,
பி.ஏ., பி.எல்.
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
சேலம்.

(த. 58)

ஒப்பந்தப் புள்ளி

கரூர் நகராட்சி

11—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை 1972-73-ம் ஆண்டுக்கு கரூர் நகராட்சி கால்நடைகளுக்குத் தேவையான உகண்டா, பருத்தி விதை வழங்க ரூபாய் 75 டெபாசிட் செலுத்தி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் நகராட்சி ஆணையராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்கள் நேரிலே அல்லது கடித மூலமாகவோ அலுவலக நேரத்தில் பெற்று கொள்ளலாம்.

ப. குமாரசாமி,
ஆணையர்.

கரூர் நகராட்சி.
(த. 57).

ஒப்பந்தப் புள்ளி

நகராட்சி அலுவலகம், கோவை

நகராட்சி பயணிகள் விடுதியில் குளிர் சாதன வசதி இயந்திரங்கள், பொருத்த (Providing Air-conditioning plants) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—8—1972 மாலை 3 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும்.

நிபந்தனைகள் மற்ற விவரங்கள் முதலியன ரூபாய் 3-12 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 60)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—1. மாயூரத்தில் மகளிர் அரசினர் கலைக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டுதல்.

(2) மன்னார்குடியில் ஆண்கள் அரசினர் கலைக்கல்லூரிக்கு கட்டிடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்ப அறிவிப்புகள் பெறும் தேதி 9-8-1972 அன்று மாலை 3.00 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 8-8-1972 அன்று மாலை 5.00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 52).

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2

நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம் அவர்களால் பொதுப்பணித்துறை, பெருவழித்துறை, வீட்டு வசதி வாரியம், மின்வாரியம் இவற்றில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து இல்லம் அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் விவரமும். (1)	ஒப்பந்த வகை. (2)	ஒப்பந்தப் பாரத்தின் விலை, விற்பனை வரி உட்பட. (3)	முன் வைப்புத் தொகை. (4)	பாதுகாப்புத் தொகை. (5)	முடிக்கும் காலம். (6)	ஒப்பந்தப் பாரங்கள் கிடைக்கும் தேதி. (7)		ஒப்பந்தங்கள் பெறும் நாள், நேரம் மற்றும் திறக்கப்படும் தேதி. (8)
						முதல்.	முடிய.	
தண்டையார்பேட்டையில் மற்றுமோர் பணிமனை கட்டுதல்.								
	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.	ரூபாய்.				
1. மதில்சுவர், நேரப்பதிவறை மற்றும் மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டுதல்.	மொத்த தொகை	20·80	3,400	3,400	8 மாதங்கள்	2—8—1972	15—8—1972	16—8—1972
2. பராமரிப்புக்கூடம் கட்டுதல் ..	..	20·80	4,500	4,500	6 மாதங்கள்	2—8—1972	15—8—1972	16—8—1972
3. பத்தடி விட்டமுள்ள கிணறு அமைத்தல்		10·40	350	350	1 மாதம்	2—8—1972	15—8—1972	16—8—1972
4. பெருந்து சுத்தம் செய்யும் அமைப்பு கட்டுதல்.	..	10·40	500	500	1 மாதம்.	2—8—1972	15—8—1972	16—8—1972

ஒப்பந்தங்கள் மேலே கூறிய தேதிகளில் நிருவாகப் பொறியாளர் அவர்களால் மாலை 3-15க்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நகல்கள் வரைபடங்கள் முதலியவற்றை மேலே கூறிய நாட்களில் மேலே குறிப்பிட்ட தொகையைக் கட்டி நிருவாகப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்திலிருந்து அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைப் பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் செலுத்தி, செலுத்தியதற்கான சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ஏ. வி. சுப்ரமணியம்,
நிர்வாகப் பொறியாளர்,
பல்லவா போக்குவரத்துக் கழகத்திற்காக.

(த. 77)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால்வாரியம்

குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காகத் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5 அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 21-8-1972 மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3.30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—மதுரை, சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள கிராமங்களில், 100 மி.மீ. விட்டமுள்ள குழாய்க் கிணறுகளுக்குப் பொருத்தமான கைப் பம்புகள் (Hand Pumps) வழங்குதலும், பொருத்துதலும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

கட்டுத் தொகை—ரூ. 4,500 (டிமாண்டு டிராப்ட் அல்லது பாங்கு கார்ண்டி வடிவில் மட்டுமே).

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10.35 செட் ஒன்றுக்கு.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்—நிருவாகப் பொறியாளர், ரூரல் நீர்வழங்கு (UNICEF) பி-33, வடகிழக்கு விரிவு, தில்லைநகர், திருச்சி-3.

ஒப்பந்தப் பத்திரங்கள் 15-7-1972 முதல் 19-8-1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. 51)

திருத்தம்

16—7—1972 "தமிழரசு" இதழ் (தமிழ்) 68 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள கிங் நிலைய ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தில், ஒப்பந்தம் பெறும் கடைசி தேதி 1973 ஜூலை 27 என்றிருப்பதை 1972 ஜூலை 24 என்று மாற்றிப் படிக்கவும்.

டாக்டர் சி. ஞானதேசிகன், எம்.டி.,
இயக்குநர்.

கிங் நிலையம்,
கிண்டி, சென்னை-32.
(த.94)

அறிவிப்பு

உதவி நகர சிவில் நீதிபதி, சென்னை.

ஒ. எஸ். எண். 7393, 1971.

இந்தியன் பேங்க், சென்னை—வாதி (Plaintiff)
VS.

பெறுநர்:—

எம். எஸ். சிவராமன் டெக்ஸ்டைல்ஸ், கே. தர்மலிங்கம், கே. சொக்கலிங்கம், 51, தங்கசாலை தெரு, சென்னை-3. எம். எஸ் ஆஞ்சநேயா மோட்டார் பிரைவேட் லிமிடெட், 40/4, மூக்கா நல்லமுத்து தெரு, சென்னை-1.
—(பிரதிவாதிகள்)
(defendants)

மேற்கண்ட தாவாவில் வாதியால் ரூ. 15,370·50 மற்றும் செலவுத் தொகைக்காகப் போடப்பட்டுள்ள வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் 16—8—1972 காலை 11-00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருக்கிறது. தாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினால் வழக்கு விசாரணை செய்யப்பட்டு எக்ஸ்பார்ட்டியாகத் தீர்ப்பளிக்கப்படும்.

எம். எஸ். அய்யர் அண்டு டோலிய மற்றும் வாஸ்டிபால் ஜெயின்
அட்வகேட்ஸ் பார் பிளைண்டிப்.

(த. 46)

ஒப்பந்தப் புள்ளி

குடிசை மாற்று வாரியம்

திருவாகப் பொறியாளர் அலுவலகம்—IV SC B அசோக் நகர், சென்னை-83.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, திருவாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம் கோட்டம் எண். IV அவர்களால் அவர்தம் அலுவலகம் அசோக்நகர், சென்னை-83-ல் உள்ள (அசோக் பில்லர் அருகில்) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து உறையின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19—7—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு கீழ்க் கையொப்பமிட்டவரால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	சுமார் மதிப்பு.	ஒப்பந்த வடிவம். கட்டுத்தொகை.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. (திருப்பித்தரப் படமாட்டாது).	வேலை முடிக்க வேண்டிய காலம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	ரூ.	ரூ.	ரூ.	
(1) பூபதி நகரில் டி.டி. 217/70-ன்படி 16 குடியிருப்புகள் கொண்ட ஒரு அறை 4 அடுக்குக் குடியிருப்புகள் பிளாக்குகள் கட்டுதல்.	96,000	1,500 (மொத்தத்தொகை)	20+விற்பனைவரி.	9 மாதங்கள்.
(2) பிருந்தாவன் திட்டம்—பகுதி IV-ல் ஒன்றில் 18 குடியிருப்புகள் கொண்ட மூன்று அடுக்குக் குடியிருப்புகள் 6 பிளாக்குகள் டி.டி. 217/70 படி கட்டுதல்.	5,60,000	8,400 (மொத்தத் தொகை)	20+விற்பனைவரி.	9 மாதங்கள்

ஒப்பந்தப்பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் அலுவலகம், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண். IV அசோக் நகர், சென்னை 83-ல் 12—7—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் பத்திரங்களின் விலை விற்பனைவரி உட்பட செலுத்தியதற்கான ரெசிப்ட் சலானைக் கொடுத்துப் பெறலாம்.

பெற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க உரிமை உண்டு.

நிருவாகப் பொறியாளர்.
குடிசை மாற்று வாரியம்,
கோட்டம் எண். IV.

(த. 22)

உதவி வேளாண்மைப் பொறியாளர்கள் அலுவலகம்,

சேலம்-7.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், ஒரு கண்டம்டு மற்றும் கேன்னிபலைஸ்டு கிராவ்லர் டிராக்டர் மற்றும் இரண்டு கண்டம்டு வீல் டைப் டிராக்டர்கள், உதவி வேளாண்மைப் பொறியாளர் அலுவலகம், (மெகானிகல்), சேலம்-7 அவர்தம் அலுவலகத்தில் தற்பொழுது எந்த நிலையில் இருக்கிறதோ அதே நிலையில் வாங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள், மற்ற விவரங்கள் மற்றும் விற்பனை நிபந்தனைகளுக்கு உதவி வேளாண்மைப் பொறியாளர், சேலம்-7 அவர்களிடம் தொடர்பு கொள்ளலாம்.

வரிசை எண்.	டிராக்டர் எண்ணிக்கை.	டிராக்டர்கள், மாதிரிகள்.	இடம்.	யூனிட்களின் பொறுப்பு அலுவலர்.
1	1	டி 6 5 ஆர். 2871 கேட்டர் பில்லர் டிராக் டைப் கேபின் ஆப்ரேட்டட் புள்டோசர், (in cannibalised condition).	சேலம்.	உதவி வேளாண்மைப் பொறியாளர் (மெகானிகல்), சேலம்.
2	1	இண்டர் நேகனர் ஹார்வெஸ்டர் W6 பவரைன் ரன் வீல் டைப் டிராக்டர் எஸ். எண். WBK 20566 W3.	சேலம்.	ஷை
3	1	20K மேஸ்ஸிவே ஹேரிஸ் பவரைன் ரன் வீல் டைப் டிராக்டர் S. No. 20K 2166.	சேலம்.	ஷை

ஒப்பந்தப் பத்திரம் விற்பதற்கான கடைசி நாள் 17—8—1972. ஒப்பந்தப் பத்திரங்கள், உதவி வேளாண்மைப் பொறியாளர், (மெக்கானிகல்), சேலம் அவர்களிடம் ரூ. 3-00 விற்பனை வரி 3½ சதவீதம் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், உதவி வேளாண்மைப் பொறியாளர் (மெக்கானிகல்), சேலம் அவர்களால் 19—8—1972 மாலை 5-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

உதவி வேளாண்மைப் பொறியாளர்,
(மெகானிகல்), சேலம்-7.

(த. 80)

துறையூர் நகராட்சி

கீழ்க்கண்ட பொருட்களை, வழங்க கீழே கையொப்பமிட்டவரால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 21—8—1972 மாலை 4-00 மணிக்கு முன்னர் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள், ஒவ்வொரு வகைக்கும் எதிரில் குறிப்பிட்டுள்ளபடி கட்டுத்தொகை பணமாகச் சேர்த்து அனுப்பப்பட வேண்டும். மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பெறலாம். ஒப்பந்தப்புள்ளிகள் 21—8—1972 மாலை 4-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்றவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

அட்டவணை

	வரிசை எண்ணும், விவரமும்.	தேவைகள். (எண்ணிக்கை.)	கட்டுத்தொகை. ரூ.
1	1,000 கேலன் கொள்ளளவுள்ள நான்கு வீல் வாட்டர் டேங்கர்	1	250
2	50"H×30"W×17"D அளவுள்ள ஸ்டீல் அல்மேரா ஸ் சிறிய சைஸ	4	200
3	ஸ்டீல் சேர்ஸ் போல்டிங் டைப்	12	50
4	எனாமல் நேம்போர்ட்ஸ், 22 கேஜ் ஜி. ஐ. சீட் (width 4"x6") ரேட் பர் ஆர். எப்டி ..	..	25

சையட் அப்துல்காதர்,
சிறப்பு அலுவலர்.

(த. 61.)

வேலைவாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

நேரடி ஆட்சேர்ப்பின் மூலம், தமிழ்நாடு சுற்றுலாச் செய்தி மற்றும் ஹேண்டி கிராப்ட்ஸ் சென்டர் (Air India International Buildings) பம்பாய், சுற்றுலாச் செய்தி அலுவலர் பதவிக்கு ஒரு நியமனம் செய்வதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

வயது—1972 ஜூலை 1-ல் 35 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். 1937 ஜூலை 2 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்திருக்க வேண்டும்

தகுதி—(1) எந்தப் பல்கலைக் கழகத்திலாவது அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலாவது வரலாறு அல்லது தொல்பொருள் ஆராய்ச்சி (Archaeology) அல்லது சோசியாலஜி (Socialogy) பாடங்களை முக்கியப் பாடங்களாகக் (Main subject) கொண்ட முதல் அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம்.

(2) அரசுத் துறையில் பொதுமக்கள் தொடர்பில் 2 ஆண்டிற்குக் குறையாத அனுபவம் அல்லது மேற்கொண்டுள்ள அல்லது கீர்த்திவாய்ந்த வர்த்தக அமைப்பில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(3) தமிழ் தாய்மொழியாக இருக்க வேண்டும். ஒன்று அல்லது மேற்பட்ட வெளிநாடு மொழிகளில் அறிவு பெற்றவராக உள்ள மனுதாரர்களுக்கு முதலிடம் (Preference) கொடுக்கப்படும்.

(4) நல்ல உடல் நலனும் தோற்றமும் இருக்க வேண்டும்.

சம்பளம்—ரூ. 525—25—600—30—690—35—900 + சிறப்புச் சம்பளம் ரூ. 100 மற்றும் வழக்கமான அலவன்ஸ்கள்.

விண்ணப்பப் படிவங்கள் குறிப்பிடப்படவில்லை. விண்ணப்பதாரர்கள் வெள்ளைத் தாளில், தங்களுடைய சொந்தக் கையெழுத்தில் பெயர், முகவரி, தகுதி, பிறந்த தேதி, அனுபவம், மற்றும் முழு விவரங்கள் குறிப்பிட்டு, விளக்கமான சான்றிதழ்களுடன் இணைத்து, விண்ணப்பக் கட்டணமாக ரூ. 15 கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆடர் செயலாளர், அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 அவர்கள் பெறும் வகையில் இணைத்து விண்ணப்பிக்கலாம். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்குக் கட்டணம் கிடையாது. மனுக்கள், செயலாளர், அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2 அவர்களுக்கு 1972 ஆகஸ்ட் 8, மாலை 5·00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் கவனிக்கப்பட மாட்டாது.

மனுதாரர்கள், தேர்வுக்குழு, சென்னையில் தங்கள் சொந்தச் செலவிலேயே நேரடி பேட்டிக்கு (Oral Test) வர வேண்டும்.

(த-83)

ஒப்பந்தப் புள்ளி

ஆர்க்காடு நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 25—8—1972 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்காக மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ரூ.5 அலுவலகத்திற்கு அனுப்பி விரிவான விவரத்தை அலுவலக வேலை செய்யும் நாட்களில் பெறலாம். இதர விவரங்கள் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.
(1) 3, 4, 5 & 6 வட்டங்களிலுள்ள தெருக்களுக்குத் தார் ரோடு போடுதல்.	27,500	1,375
(2) 7 & 9 வட்டங்களிலுள்ள தெருக்களுக்குத் தார் ரோடு போடுதல்.	26,500	1,325

ஏ. பழனியப்பன் பி.ஏ. (ஆனர்ஸ்),
நகராட்சி ஆணையர்.

(த. 84).

ஒப்பந்தப் புள்ளி

கரூர் நகராட்சி

11—8—1972 மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கும், சாமான்களை வழங்கவும் தனித்தனியாக ரூ. 25 ஒப்பந்த கட்டுத்தொகை செலுத்தி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை 11—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும்.

(1) கரூர் நகராட்சி பொதுச் சுகாதார இலாகா துப்புரவு லாரி எம்.டி.ஒய். 8749 பர்கோ 1965 மாடல் லாரிக்கு பிரேக் சர்டிபிகேட் புதுப்பிக்கத் தேவையான பழுதடைந்த சாமான்களைப் புதுப்பிக்க சாமான்கள் மட்டும் வழங்க.

(2) அலுவலகம் மூலம் சப்ளை செய்யப்படும் சாமான்களை மேற்படி லாரியில் பொருத்தி ரிப்பேர்களைப் பழுது பார்த்துக் கொடுக்க லேபர் சார்ஜுக்கு மட்டும்.

சாமான்கள் மட்டும் வழங்க ஒப்பந்தம் கொடுப்பதற்கான பட்டியலும், லேபர் சார்ஜுக்கான பட்டியலும் அலுவலக நேரத்தில் நேரிலோ, கடித மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

ப. குமாரசாமி,
ஆணையர்.

(த. 85).

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி நகராட்சி.

கீழ்க்கண்ட வேலைக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 16—8—1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு உடைக்கப்படும். நகர மன்றத்திற்கு ஒரு ஒப்பந்தப்புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்கு பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரம்.	கட்டுத் தொகை.
	ரூ.
1. பெருந்து நிலையத்தில் காலியாக உள்ள இடத்தில் சரல் விரித்து கல்ரோடு போட்டு தார் ரோடு போட.	325

சி. சங்கரலிங்கம், பி.ஏ.,
ஆணையர்.

(த. 67).

கதர் கைத்தொழில் அங்காடி
குறளகம்
சென்னை-1
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
வெளிநாட்டார் போற்றும் வியன் பொருள் கலைக்கூடம்
20461
20462
20463
20464
20465

அரசினர் மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.

திருநெல்வேலி அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 1—8—1972 முதல் 30-11-1972 முடிய நான்கு மாதங்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் வழங்க முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெயர் பெற்ற மருந்துக் கம்பெனிகளிடமிருந்து கோரப்படுகிறது.

கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 21—8—1972, 2 மணியாகும்.

ஒப்பந்த நிபந்தனைக்கும் மருந்து தேவைப் பட்டியலுக்கும், எழுத்து மூலம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருந்துவமனை கண்காணிப்பாளருக்கு எழுதி இலவசமாகப் பெற்றுக் கொள்ளவும்.

டாக்டர் கு. நா. வாசுதேவன்,
கண்காணிப்பாளர்,
திருநெல்வேலி அரசினர் மருத்துவக்
கல்லூரி மருத்துவமனை.

(த. 90)

வனத்துறை

வனப் பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைகளுக்காக மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தங்கள் "வனப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி-1" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

(1) "மூலக்காடு—செம்புளிச்சாம்பட்டி சாலை மூன்றும் பிரிவு அமைத்தல் 1·4 கி.மீ. துறையூர் வனச்சரகம், திருச்சிராப்பள்ளி வனக் கோட்டம்" அச்சாரம் (இ.எம்.டி.) ரூ. 1,625.

(2) மூலக்காடு செம்புளிச்சாம்பட்டிசாலை நான்காம் பிரிவு அமைத்தல் 1·1 கி.மீ. துறையூர் வனச்சரகம், துறையூர் வனக் கோட்டம். அச்சாரம்—(இ.எம்.டி.)—ரூ. 1,293.

ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 16—8—1972 நேரம் முறையே மாலை 3·00 மணி 3·05 மணி.

(2) ஒப்பந்தப் பத்திரங்களை "வனப் பொறியாளர் 1-ஏ, ராயல்ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி-1," என்ற முகவரியிலிருந்து ஒப்பந்தப் பத்திரம் ஒன்றுக்கு ரூ. 1·04 பணமாகவோ அல்லது ஆணை மூலமாகவோ செலுத்தி 24—7—1972 முதல் 14—8—1972 வரை அலுவலக வேலை நேரங்களில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பா. துரைராஜ்,
வனப் பொறியாளர்.

(த.91)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—சென்னை அண்ணாசாலையிலுள்ள கலைவாணர் அரங்கத்தைத் திருத்தி அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் சென்னை-5 சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 16—8—1972 பிற்பகல் 3·00 மணிவரை மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை—செங்கற்பட்டு வட்டம் பொதுப்பணித்துறை சென்னை-5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3·15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்

1 ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை
2 கட்டுத் தொகை	ரூ. 15,000.
3 வேலை முடிக்க வேண்டிய காலம்.	8 மாதங்கள்
4 ஒப்பந்தப்பத்திரங்கள் விலை	ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "Public works remittances—III other remittances" என்ற தலைப்பில் செயற்பொறியாளர் கட்டடக் கோட்டம்—2 சேப்பாக்கம், சென்னை-5/ அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.
5 விற்பனை வரி	ரூ. 1·05 (ரூபாய் ஒன்றும் ஐந்து காசுகளும் மட்டும்) அதே சலானில் குறித்து கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கிலோ "XII" விற்பனைவரி "பி" மாநில விற்பனை வரி சட்டத்தின் கீழ் வரவினம் என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.
6 ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனை முடியும் தேதி.	7—8—1972 முதல் 14—8—1972
7 ஒப்பந்தப்புள்ளித் தேதி	16—8—1972 (பிற்பகல் 3·00 மணி வரை).

மேற்கண்ட விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, சென்னை—செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்த ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை—செங்கற்பட்டு வட்டம்.

(த. 92)

பொதுப்பணித் துறை

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், திருச்சி வட்டம்
திருச்சி-1, த.பெ. 55.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கண்காணிப்புப் பொறியாளர் பொதுப்பணித்துறை திருச்சிராப்பள்ளி வட்டம், தபால் பெட்டி எண்-55, திருச்சிராப்பள்ளி அவர்களால் திருச்சிராப்பள்ளியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்	(1) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டம், அரியலூர் அரசினர் மருத்துவமனையில் 32 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல். (2) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், துறையூர் அரசினர் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல். (3) ஸ்ரீரங்கத்திலுள்ள அரசினர் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட பகுதியுடன் சிறிய பிரசவ அறை கட்டுதல்.
2 ஒப்பந்தப் பத்திரங்கள் பெறுவதற்கு கடைசி தேதி மற்றும் நேரம்.	30—8—1972 மாலை 3·00 மணி.
	(1) ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). (2) ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்). (3) ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்).
4 ஒப்பந்தமுறை	மொத்தத் தொகை.
5 முடிக்க வேண்டிய காலம்	வேலைகள் ஒன்று இரண்டிற்கு ஆறு மாதங்களும். வேலை ஒன்றுக்கு 5 மாதங்களும்.
6 ஒப்பந்தப்பத்திரத்தின் விலை	ரூ. 25 (ரூபாய் இருபத்தி ஐந்து மட்டும்).
7 விற்பனை வரி	0·88 (காசு எண்பத்தி எட்டு மட்டும்).
8 ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.	16—8—1972.
9 விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தப் பத்திரங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.	30—8—1972 மாலை 3·30 மணி.

ஒப்பந்தப்பத்திரங்களில் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில்: "XXXVII Public works-State Revenue Miscellaneous" மற்றும் "XII Sales tax (b) Receipts the State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் தனித்தனியே மேற்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கண்காணிப்புப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சிராப்பள்ளி வட்டக்
கண்காணிப்புப் பொறியாளர்.

(த. 93)

ஒப்பந்தப் புள்ளி

திருச்சிராப்பள்ளி நகராட்சி

ஜி. ஐ. பைப்புகள், பிராக்கெட்ஸ், போஸ்ட் ஸிளாம்ப்ஸ் வழங்குவதற்காகவும் மற்றும் நகரத்தின் முக்கிய இடங்களில் எம். வி. விளக்குகள் பொருத்துவதற்கான வேலைக்கான லேபர் கட்டணத்திற்கும், நகராட்சி ஆணையர் அவர்களால், 19—8—1972 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் படிவம் மற்றும் இதர விவரங்கள் நகராட்சிப் பொறியாளரின் அலுவலகத்தில் விண்ணப்பித்து அல்லது நேரில் பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
ஆணையர்.

(த. 69)

குடிநீர் வடிகால் வாரியம்

குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் கோயம்புத்தூர் அவர்களால், கோயம்புத்தூர் வட்டம் அவர்தம் அலுவலகம் 25/1, மூன்றாவது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்-12-ல் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 21—8—1972 மாலை 3-00மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் (அல்லது) அதிகாரம் பெற்ற ஒரு அலுவலரால், அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.

விவரம்:—மேட்டூர் நீர்வழங்கு மேம்பாட்டுத் திட்டம் இரண்டாம் நிலை சுத்திகரிப்பு வேலைகள் விரிவு.—

(ஏ) சுத்திகரிப்பு வேலைகளில் பொறுத்தமான காற்றேட்ட (Cascading) ஏற்பாடுகள் வழங்குதல்.

(பி) 12·8 மீ. விட்டமுள்ள கிளாரிபிகுளேட்டர் சுத்தப்படுத்தப்படாத நீர் மற்றும் சுத்தப்படுத்தப்பட்ட நீர் போகக்கூடிய வழிகள் மற்றும் இதர தேவையான சிவில் வேலைகள் ஒரு யூனிட் தேவையான மெகானிசம்.

(சி) ரேபிட் பிராவிட்டி பில்டர் அளவு 8'× 13', (Inclusive of filling with) ஒரு கம்பார்ட்மெண்டுக்கு மெக்கானிகல் எக்யூப்மெண்ட். இணைநுக்களில் நீர் ஒழுகாமல் இருப்பதற்காக எக்ஸிஸ்டிங் பில்டர் ஆர்கிசி சேர்த்துத் தரமான கிராவில் மற்றும் மணல் கலவையில் இணைத்தல் ஒரு யூனிட்.

வேலை முடிக்கவேண்டிய காலம்:—6 மாதங்கள்.

கட்டுத்தொகை:—ரூ. 5,750.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை:—ரூ. 20·70 விற்பனைவரி உட்பட.

ஒப்பந்த வடிவம், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், குடிநீர் வடிகால் வாரியம், 28, ஔவையார் தெரு, சுப்ரமணியம் நகர், சேலம்-5-ல் ஒப்பந்தப்பத்திரங்கள் விலையைப் பணமாகவோ, மணி ஆர்டர் மூலமாகவோ 18—8—1972 வரை செலுத்திப் பெறலாம்.

கட்டுத்தொகை, டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பாங்கு காரண்டி வடிவிலோ நிர்வாகப் பொறியாளர் சேலம்-5 அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட வேண்டும். கட்டுத்தொகை கருவூலத்தில் (நிர்வாகப் பொறியாளர் எல்லைக்குள்) "P. W. III O. R." நிர்வாகப் பொறியாளர், சேலம்-5 அவர்கள் பெறும் வகையிலும் செலுத்தப்படலாம். கட்டுத்தொகையின்றிவரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர், கோயம்புத்தூர் வட்டம் அவர்கள் எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 82)

கோயம்புத்தூர் நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 19—8—1972 ஆம் தேதி மாலை 3-00 மணி வரை நகராட்சிப் பொதுப்பணிப் பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர் கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 19—8—1972-ஆம் தேதி மாலை 3-30 மணிக்கு நகராட்சிப் பொதுப்பணிப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான ஷெட்யூல் பாரங்கள், நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி பொதுப்பணிப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிக்கான கட்டுத் தொகையை பணமாகவோ அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தாள்களாவோ தான் செலுத்தவேண்டும். வங்கி செக்குகள் பணம் முதலியன அனுப்புவது ஒப்பந்தப்புள்ளியின விதிக்கு மாறுனது.

வேலையின் பெயர்:—போத்தனூர் ரோட்டிலிருந்து மில்ரோடு வரை நவாப் ஹக்கீம் ரோட்டிற்கு 3" கனம் 1½" மெட்டல் தார் தளமிட்டு அதற்குமேல் 1" கனம் ½" சிப்ஸ் தார் தளமிடும் வேலை.

பட்டியல் தொகை:—ரூ. 72,100.

கட்டுத்தொகை:—ரூ. 1,810.

ஷெட்யுல் பாரத்தின் விலை:—ரூ.15·60

முடிக்கவேண்டிய காலம்:— 3 மாதம்.

ஆணையர்.

(த. 89)

அரசு மருத்துவ நிறுவனம்
தஞ்சை மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம் அரசு மருத்துவ நிறுவனங்களின் உபயோகத்திற்கு 1—10—1972 முதல் 3—12—1972 முடியவுள்ள காலத்திற்குத் தேவையான மருந்துகள் (Drugs) வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 5—9—1972 மாலை 5 மணி வரை. மருந்துகள் (Drugs) வழங்க விருப்பம் உள்ளவர்கள் ஒப்பந்தப் பத்திரங்கள், நிபந்தனைகள் மற்றவைகள், மாவட்ட மருத்துவ அலுவலர் தஞ்சாவூர், நாகப்பட்டினத்தில் ரூ. 5·20 (3½ சதவிகிதம் விற்பனை வரி உட்பட) எந்தக் கருவூலத்திலாவது அல்லது ஸ்டேட் பேங் ஆப் இந்தியாவில் செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 5·00 "XXIII Medical-I Director of Health services and family planning-g-Miscellaneous" என்ற தலைப்பிலும், விற்பனை வரி சர்சார்ஜ் ரூ. 0·20 காசு "XII Sales tax" என்ற தலைப்பிலும் செலுத்தப்படவேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் பெற வேண்டுகோள் கடிதத்துடன் சலான்களும் கொடுக்கப்பட வேண்டும். மற்ற விவரங்கள் தேவைப்பட்டால் மாவட்ட மருத்துவ அலுவலர், தஞ்சாவூர் நாகப்பட்டினத்தில் பெறலாம். "ஒப்பந்தப் பத்திரங்கள் ஒருமுறை கொடுக்கப்பட்டபின், ஒப்பந்தப் பத்திரம் சம்பந்தமாக ஒப்பந்ததாரர் எந்தத் தொடர்பும் கொள்ளக் கூடாது.

டாக்டர் கே. குழந்தைவேல், எம்.பி.பி.எஸ்.
மாவட்ட மருத்துவ அலுவலர்,
தஞ்சாவூர், நாகப்பட்டினம்.

(த. 24)

கோயம்புத்தூர் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைக்காக, ஆணையர், கோயம்புத்தூர் நகராட்சி அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. நகராட்சி சிவில் பொறியாளர் அவர்களால் 19—8—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர், கோயம்புத்தூர் நகராட்சி அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். உறையின்மீது வேலையின் பெயரும் கொடுக்கும் நாள் 19—8—1972 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு நகராட்சி சிவில் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்த வடிவம், மற்றும் நிபந்தனைகள் நகராட்சி சிவில் பொறியாளர் அலுவலகத்தில், நகராட்சிக் கருவூலத்தில் ரூ. 15·60 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கட்டுத்தொகை பணமாகவோ அல்லது இதர அங்கீகரிக்கப்பட்ட வடிவத்திலோ இருக்க வேண்டும். செக்குகள் அல்லது கரன்சி ஒப்பந்த நிபந்தனையின்படி கட்டுத்தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

வேலையின் பெயர்:—நவாப் ஹக்கீம் சாலையில் போத்தனூர் மில் சாலை வரை 3" அளவு பிட்டுமென் கலந்த மேக்கடன் மற்றும் 1" மொத்த முன்ன பிளாக் டாப்பிங் போடுதல்
மதிப்பீட்டுத்தொகை:—ரூ. 72,100.
கட்டுத்தொகை:—ரூ. 1,810.
வேலை முடிக்கவேண்டிய காலம்:—3 மாதங்கள்.

ஆணையர்.

(த. 63)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்
மத்தியக் கோட்டம்.

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ் கையொப்பமிட்டவருக்கு, 21—8—1972 மாலை 3-00 மணிக்கு மேற்படாதவாறு வந்துசேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—ஆர். எஸ். எண். 595-ல் உள்ள நுங்கம்பாக்கம் பிளாக் 1, 2-ல் எஸ். டி. என். 134/71 மற்றும் 135/71 இன்படி நான்கு மாடி கட்டடத்தில் கடைகள் (11 எண்ணிக்கை), எல். ஐ. ஜி. பிளாட் (27 எண்ணிக்கை) கட்டுதல்.
வேலையின் சுமார் மதிப்பு:—ரூ. 3,39,738.
கட்டுத்தொகை:—ரூ. 5,100.
ஒப்பந்த வடிவம்:—மொத்தத்தொகை.
ஒப்பந்தப்பத்திரங்கள் விலை:—ரூ. 15-00 + விற்பனை வரி (திருப்பித் தரப்படமாட்டாது).

ஒப்பந்தப் படிவம் மற்றவைகள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம் (மத்திய), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்களிடம் 21—7—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு எல்லா வேலை நாட்களிலும் காலை 10-30 மணி முதல் மாலை 1-00 மணிவரை பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மே. ஜார்ஜ்,
நிருவாகப் பொறியாளர்,
(மத்தியக் கோட்டம்).

36, அண்ணாசாலை,
சென்னை-35.

(த. 76)

பயிற்சி

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

அப்பரண்டிசிப் சட்டம், 1961-ன் கீழ்
அப்பரண்டிசிப் பயிற்சி

பொறியியல், இரசாயனம், டெக்ஸ்டைல்ஸ், அச்சுத்தொழில், சமையல் தொழில் போன்ற 201 தொழில்கள் 1961-ஆம் ஆண்டு பயிற்சிச் சட்டத்தின்கீழ் (Apprentices Act 1961) கொண்டு வரப்பட்டுள்ளது. அதே சட்டத்தின் கீழ் 56 வணிகத் தொழில் (Trades) தொழிற் பயிற்சி கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையும் தொழிற் பயிற்சி திட்டத்தை செயல் படுத்துவதற்கான போதுமான வசதியுடன் பயிற்சிச் சட்டம் செக்சன் 8 (3) ன் கீழ் மாநிலப் பயிற்சித் திட்ட ஆலோசகர் (State Apprenticeship Advisor) குறிப்பிடும் எண்ணிக்கையளவு பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்பரண்டிசிப் பயிற்சி அநேக (Trade) வர்த்தகங்களில் 3 ஆண்டாக இருக்கிறது.

அப்ரண்டிசிப் பயிற்சிக் காலத்தில், பயிற்சியாளர்கள் அப்ரண்டிசிப் சட்டம், 1962-ல் குறைந்த அளவு குறிப்பிடப்பட்டதற்குக் குறைவில்லாமல் உதவித் தொகை வழங்கப்படும். தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தேசிய வர்த்தக சர்டிபிகேட் தேர்வில் தேர்வு பெற்றிருப்பவர்கள், தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற காலத்திற்கு அப்ரண்டிசிப் பயிற்சியில் விதி அனுமதிக்கக்கூடிய அளவிற்கு காலம் தளர்த்தப்படும். குறைந்த பட்சக் குறிப்பிடப்பட்ட கல்வித்தகுதி அனேக வர்த்தகங்களில் மெட்ரிகுலேசனுக்கு 2 வகுப்பு குறைவாகப் படித்திருக்கவேண்டும். அல்லது அதற்குச் சமமான தேர்வு மற்றும் குறைந்த பட்ச வயது 14, அதிக பட்ச வயது வரம்பு கிடையாது. புதியவர்களும் அப்ரண்டிசிப் விதியில் கண்டபடி உடற்கட்டுடன் இருக்க வேண்டும்.

அடுத்த அட்மிசன் ஆகஸ்ட்/செப்டம்பர், 1972 தொழில் பயிற்சி நிறுவன பயிற்சியாளர்கள் தேசிய வர்த்தக சர்டிபிகேட் தகுதியுடன் மற்றும் மற்றவர்கள் ரிக்குஸைட் (Requisite) தகுதியுள்ளவர்களும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் அல்லது தொழில் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் அவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு இதனால் அறிவுறுத்தப்படுகிறார்கள். அப்படியிருக்குமானால் எங்கு காலி இடங்கள் இருக்கிறதோ அல்லது எங்கு காலி இடங்கள் ஏற்படுகிறதோ அங்கு அவர்களை நியமனம் செய்வார்கள்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை,
மற்றும் மாநில அரண்டிசிப் அட்வைசர்.

(த. 39)

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி நகராட்சி

1972-73-ம் ஆண்டுக்கு தூத்துக்குடி நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் துறை தொழிலாளர்களுக்கும் இதர கடைநிலை ஊழியர்களுக்கும் உடுப்புகள் தைத்துக் கொடுப்பதற்கு 14-8-1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளியுடன் ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) கட்டுத் தொகையாக நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தப்பட்டதற்குரிய ரசீது இணைக்கப்பட வேண்டும். இதர விவரங்களை அலுவலகத்தில் நேரில் தெரிந்துகொள்ளலாம்.

சி. சங்கரலிங்கம், பி. ஏ.
ஆணையர்.

(த. 7)

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

• • •

தலைமை அலுவலகம் : மதுரை

தங்கள் சேமிப்பின் மூலம் நாட்டின் உற்பத்தி பெருகுகிறது; மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

இன்றே பாங்க் ஆப் மதுரையில் சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள்.

சேமிப்புத் திட்டங்கள்

1. சேமிப்புக் கணக்கு.
2. ரெக்கரிங் டெபாசிட்.
3. தினச் சேமிப்பு.
4. கேஷ் சர்டிபிகேட்.
5. தவணை டெபாசிட்.

தனியார் துறையில் சீட்டுத் தொழில் நடத்தும் ஒரே வங்கி.

கீழ்க்கண்ட மாதாந்திரச் சீட்டுகள் நடத்தப்படுகின்றன.

ரூ. 50,000; ரூ. 25,000; ரூ. 10,000; ரூ. 5,000: ரூ. 2,000; ரூ. 1,000.

விவரத்திற்கு:
112 கிளைகளில் அருகிலுள்ள கிளையை அணுகவும்

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் பொதுப்பணித் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (குறிப்பிட்ட படிவத்தில்) வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்—செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம், தொழிற்சாலைப் பகுதியில் பி.எஸ்.சி. பைப்புகள் தயார் செய்வதற்காக உயர்தரமான மணல் தோண்டி எடுத்து வழங்குதல்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத்தொகை—ரூ. 8,500 பணமாகவோ அல்லது டிமாண்டு டிராப்டாகவோ நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், செங்கல்பட்டு அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·40. பணமாக, மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், வீராணம் திட்ட வட்டத்தில் செலுத்தப்பட வேண்டும். "Receipts—A. Revenue" என்ற கணக்கில் வைக்கப்பட வேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—18 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்—20—7—1972 முதல் 4—8—1972 வரை.

ஒப்பந்தப்புள்ளி நாளும் நேரமும்—7—8—1972 மாலை 3-00 மணி வரை.

விளக்கமான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நிபந்தனைகள், ஒப்பந்த (வடிவம் மற்றும் இதர விவரங்கள், கீழ்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த. 13)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

குறிப்பு எண் SCE 454

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் குறிப்பு எண் வேலையின் பெயர் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழே கையொப்பமிட்டவரால் குறித்த முடிவுத் தேதி மாலை 3—00 மணிவரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலையே 3—30 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

குறிப்பு எண்.	வேலையின் பெயர்.	முன்வைப்புப் பணம்.	ஒப்பந்தப் பிரதி விலை.	முடிவுத் தேதி.
SCE 454	எண்ணூர் மின் நிலையம் இரண்டாம் கட்ட வேலைகள்—ஐந்தாம் கொதிகலனுக்கு அஸ்திவாரம் அமைத்தல். Raft foundation and substructure	ரூ. 18,000 (ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்)	ரூ.15— (ரூபாய் பதினைந்து மட்டும்)	7—9—1972

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 15- செலுத்தி கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி ரசீதை ஒப்பந்தத்தில் இணைத்து அனுப்பவேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும் குறித்த தேதி காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்தஒரு ஒப்பந்தத்தையோ ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் அவ் வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவர்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு காணாமல் போனால் மின்சார வாரியம் பொறுப்பல்ல, ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவையல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர், அனல் மின் திட்டம்,
எண்ணூர் சென்னை-57.

தந்தி: Entermel
தொலைபேசி எண்: 59556 (5 lines)

ஏல விளம்பரம்

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் கோட்டத்தைச் சேர்ந்த பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கண்டனம் செய்யப்பட்ட ஜீப் எம்.டி.எப். 2022 தற்போதுள்ள நிலைமையில் உள்ளது உள்ளபடி கீழே கையொப்பமிட்டவரால் 21—8—1972-ம் தேதி திங்கட்கிழமை பகல் 3-00 மணிக்கு பரங்கிப்பேட்டை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. ஏலம் கேட்க விருப்பமுடையோர் கட்டுத் தொகையாக ரூ. 100 ஏலம் விடும் அதிகாரியிடம் கட்டி விட்டு ஏலம் கேட்க வேண்டியது. ஏலம் கேட்க விருப்பமுடையோர் ஏல நிபந்தனைகட்கு கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

கோட்ட ஆட்சித் தலைவர்,
சிதம்பரம்.

(த. 73).

ஒப்பந்தப் புள்ளி

சேலம் வீட்டுவசதி யூனிட்

(தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.)

கிருஷ்ணகிரியில் டி.என்.ஜி.ஆர்.எச். திட்டத்தின் கீழ் டைப் டிசைன் 2/68ன் படி இரண்டு அறை கொண்ட நான்கு பிளாக்குகள் மற்றும் T.D. எண். 3A/68ன் படி மூன்று அறைகள் கொண்ட, ஒரு பிளாட்டில் 4 வீதம் (4 in 1 flat) ஒரு பிளாக் கட்டும் வேலைக்காக உறையின்மீது வேலையின்பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட தனித்தனியான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 10—8—1972 மாலை 3 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் படிவங்கள் 22—7—1972 முதல் 9—8—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் ரூ. 15 + 3½ சதவிகிதம் விற்பனை வரி செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை 9—8—1972 மாலை 1.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் சுமார் மதிப்பு: ரூ. 2,18,000.

கட்டுத் தொகை: ரூ. 3,275.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் 10—8—1972 மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

பி. செங்கோடன்,
திருவாகப் பொறியாளர் —
நிருவாக அலுவலர்.

(த. 79).



முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

தொழில்
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இறுமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை [illegible]
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்,
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- சிங்காரப் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- [illegible] குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

குறிப்பு எண் சி. 1106.

எண்ணூர் அனல் மின்திட்டம்—இரண்டாம் நிலை ஐந்தாவது கொதி கலனுக்கான எலெக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேடருக்குச் சுமார் 140 உறுதிப்படுத்திய கேஸ்ட் இன் சிட்டு பைல்ஸ் அமைத்தல். (Construction of RCC piles for Electro Static precipitators)

1. மேலே குறிப்பிட்டபடி, உறையின் மீது எழுதப்பட்டு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், மேலே கூறிய வேலைக்காக இரண்டு நகல்களில் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18-ம் தேதி வெள்ளிக்கிழமை (18—8—1972) நண்பகல் 12-00 மணிவரை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே தினத்தன்று மாலை 2-30 மணிக்கு கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாக பெறக்கூடிய ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

2. ஒப்பந்தம் குறிப்பு எண் சி. 1106 நகல் ஒன்றின் விலையான ரூபாய் ஐம்பது மட்டும் (ரூ. 50) ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ 157, அண்ணா சாலை, சென்னை-2 என்ற விலாசத்திலுள்ள "அக்கவுண்ஸ் ஆபீஸர்" (ஸ்பெசிபிகேஷன்), சென்னை மின்சார திட்டம் (விநியோகம்) அவர்களுக்குச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து விண்ணப்பித்துக்கொள்வதின் பேரில் நகல்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அக்கவுண்ஸ் ஆபீசர் (ஸ்பெசிபிகேஷன்), சென்னை மின்சார திட்டம் (விநியோகம்) அவர்களுக்கு மேற்படி பணம் செலுத்தும்போதும் மற்றும் எல்லாவித மான கடிதப்போக்குவரத்திலும் குறிப்பு எண் சி. 1106 தெளிவாகக் குறிப்பிடவேண்டும். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திரும்பப் பெறக்கூடியதல்ல.

3. குறைந்த அல்லது எந்த ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்வதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளாது. எக்காரணமும் காட்டாமல் எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்கும் முழு உரிமை இவ்வாரியத்திற்குண்டு.

157, அண்ணாசாலை,
சென்னை-2.

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுட்பம் (பொதுவியல்).

(த. 75)

மர ஏல விளம்பரம்

வனத் துறை

10—8—1972-ம் தேதி காலை 10-00 மணியிலிருந்து, மேட்டுப்பாளையம் அரசினர் மரக்கிடங்கில், மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ கீழ்க்காணும் தடி மரத்துண்டுகள் ஏலமிடப்படும்.

	கன மீட்டர்.
1 ஈட்டி	74,148
2 தேக்கு	163·246
3 வெந்தேக்கு	35·776
4 கருமருது	4·346
5 க்குருவியா	14·052
6 அலபிஸ்சு	20·441
7 அயினி	12·480

மற்ற விவரங்களுக்கு, மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை, கோவை-18 அல்லது வனச்சரக அலுவலர், அரசினர் மரக்கிடங்கு, மேட்டுபாளையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

எம். ஏ. அப்துல்கரீம்,
மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை.

(த. 62)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

கைமௌன்சர் ஃப்ளெக்ஸிபின் மெட்டாலிக்ஹோஸ் ஃபார் காமெட் பென்ஸ் வழங்க, கீழே கையொப்பமிட்டவரால், மூடிமுத்திரையிட்ட கொட்டேசன்கள் 31—8—1972 மாலை 2-30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி விளக்க நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் வாங்கும் அலுவலர் (Purchase Officer) பல்லவா போக்குவரத்துக்கழகம் லிமிடெட், சென்னை-2-ல் இலவசமாக எல்லா வேலை நாட்களிலும் பெறலாம்.

மெட்டீரியல்ஸ் மேலாளர்,
பல்லவா போக்குவரத்துக்கழகம் லிமிடெட், சென்னை-2.

(த. 41)

ஏலம்

வனத் துறை

அரசினர் மரக்கிடங்கு, பொள்ளாச்சி

சுமார் 500 கன மீட்டர் முதல் 1,000 கன மீட்டர் வரை (ஈட்டி, தேக்கு, கரிமருது, தடசு, பில்ல மருது மற்றும் பலஜாதி)மரங்கள் ஆகியவைகளை 23—8—1972-ம் தேதி தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக தென் கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்திரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடைபெறும்.

மற்ற விவரங்கட்கு பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக் கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர், தென் கோவை கோட்டம்.

(த. 47)

ஒப்பந்தப் புள்ளி

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 17—8—1972 மாலை 4 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

	வேலையின் மதிப்பு. ரூ.	வைப்புத் தொகை. ரூ.
(1) நகராட்சிப் பொறியர் அறையின் மேல் ஒரு அறை கட்ட.	19,500	975
(2) நகராட்சி பொதுநல அலுவலர் அவர்களுக்குக் குடியிருப்புக் கட்ட.	19,500	975

கே. அருணாசலம், எம்.ஏ.,
ஆணையர்.

(த.49)

ஒப்பந்தப் புள்ளி (1)

ஈரோடு நகராட்சி

இந்நகராட்சியின் பெண் ஊழியர்களுக்கு உடைகள் வழங்க கீழே குறிப்பிட்டுள்ள இனத்திற்கு மூடி முத்திரை இடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4–30 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளியுடன் ரூ. 100 பிணைய வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். தேவையான மற்ற விவரங்களுக்கு நகராட்சி ஆணையர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

(1) நெப்தால் அல்லது இண்டாந்திரி கெட்டிச்சாய சேலைகள் 40-ம் நெ. 8 கெஜம்.

சேலைகள்,பிளைன் சேலைகள், கொட்டடி, வாழைப்பூத்தட்டி முதலிய ரகங்களுக்குச் சரியான விவரங்கள் கொடுக்கவேண்டும். மாதிரி சேலைகள் அனுப்பவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி (2)

இந்நகராட்சியின் ஆண் ஊழியர்களுக்கு உடைகள் தைக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது உத்திரவு பெற்றவராலோ 16—8—1972 மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4–30 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர் ரூ. 50 வைப்புத்தொகையாக நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி ஒப்பந்தப் புள்ளி கொடுக்கவேண்டும். மற்ற விவரங்களுக்கு ஆணையர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

தைக்கப்படவேண்டிய உடைகள் உத்தேச எண்ணிக்கை—

(1) புல்பேண்ட்—120.
(2) புஷ்கோட்—120.
(3) அரைக்கால் டவுசர்—550.
(4) அரைக்கை சர்ட்—550.

ஆணையர்.

(த. 48)

6-வது அஸிஸ்டெண்ட். சிட்டி சிவில் கோர்ட்டு, சென்னை.

O. S. No. 4004 of 1971

அறிவிப்பு

வாதிகள்.

திருவேங்கடம்,
S/o ராமன்,
நெ. 29, வீராசாமி தெரு,
அயனாவரம், சென்னை-23.

பிரதிவாதி.

பிரதிவாதி அவர்களுக்கு,

சென்னை அயனாவரம் பிளாக் நெம்பர் 14. டவுன் சர்வே நெ. 60, வீராசாமி தெரு, 18-எ. நெம்பரில் உள்ள நிலம் வாதிகளுக்கே உரிமையுடையது எனவும், தாங்கள் மேற்படி சொத்தில் எவ்விதத்திலும் பிரவேசிக்கலாகாது எனவும், தொடரப்பட்டுள்ள தாவா, சென்னை 6-வது அஸிஸ்டெண்ட் சிட்டி சிவில் கோர்ட்டில் 4—8—1972-ல் காலை 11 மணிக்கு வாயதாவாகியுள்ளது.

எனவே அன்று மேற்படி கோர்ட்டில் தாங்கள் ஆஜராகத் தவறினால் தங்களுக்கு எதிராக எக்ஸ்பார்ட்டி தீர்ப்பாகி விடும்.

15, போர்ச்சுகீசர் தெரு,
சென்னை-1.

எம். ராதாகிருஷ்ணன்,
அட்வகேட்.

(த-86)

ஏல அறிவிப்பு

உபயோகமற்ற டயர்கள், பாரல்கள், பேட்டரிகள், சிரிங் பிளேட்கள், அயர்ன் ஸ்கிராப்ஸ், ட்யூப்ஸ் மற்றும் ப்ளாப்ஸ், காப்பர் வயர், பிராஸ் பாஸ்பர் பிரவ்சஸ் மற்றவைகள் எடுத்துச் செல்வதற்காக (disposal) கீழ்க்கண்ட விவரப்படி (programme) பொது ஏலம் நடத்தப்படும்.

1. மத்தியப்பணி மனை 9, 16,23, 30 ஆகஸ்ட் 1972 காலை 10-30 மணி.
2. பி. ஆர். பணி மனை 9—8—1972 மாலை 2-30 மணி.
3. அடையாறு பணிமனை 11—8—1972 காலை 10-30 மணி.
4. வடபழனி பணிமனை 18—8—1972 காலை 10-30 மணி.
5. தண்டையார்ப்பேட்டை பணிமனை 25—8—1972 காலை 10-30 மணி.

ஏல நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் மெட்டீரியல்ஸ் மேலாளர் அவர்களிடம் அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெறலாம்.

நிருவாக இயக்குநர்.

(த.65)

ஒப்பந்தப் புள்ளி

திருச்சிராப்பள்ளி நகராட்சி

தரைப்பகுதியை சீர்திருத்த ஒரு போர்ட்டபிள் ஏர் கம்ப்ரெசர் மற்றும் ரேம்மர் வழங்க, ஆணையர் அவர்களால் 19—8—1972 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்பத்திரங்கள் மற்றும் இதர விவரங்கள் நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்து அல்லது நேரில் பெறலாம்.

டி. கோவிந்தராசன்,
ஆணையர்.

(த.68)

ஒப்பந்தப் புள்ளி

திருவண்ணாமலை நகராட்சி

பம்பிங் மெயினில் பொறுத்தப்படுவதற்காக 3" டபுள் ஏர் வால்வுகள் வழங்க, நகராட்சி ஆணையர், திருவண்ணாமலை அவர்களால் 17—8—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி மாதிரிகள் மற்றும் இதர விவரங்கள், நகராட்சிப் பொறியாளர், திருவண்ணாமலை அவர்களிடம் பெறலாம்.

டி.எ.பி. ராமகிருஷ்ணன்,
நகராட்சி ஆணையர்.

(த.71)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம், லிமிடெட்.

"போக்குவரத்து இல்லம்",
அண்ணாசாலை, சென்னை-2.

காமெட் அண்ட் பென்ஸ் கம்பெனிக்கு எஞ்சின் ஆயில் பில்டர் வழங்க, கீழ்க் கையொப்பமிட்டவரால், மூடி முத்திரையிட்ட கொட்டேசன்கள் 18—8—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த விளக்க நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் பர்ச்சஸ் ஆபீசர், பல்லவா போக்குவரத்துக் கழகம், லிமிடெட், சென்னை-2 அவர்களிடம் எல்லா வேலை நாட்களிலும் இலவசமாகப் பெறலாம்.

மெட்டீரியல்ஸ் மேலாளர்.
பல்லவா போக்குவரத்துக் கழகம்,
லிமிடெட், சென்னை-2.

(த.78)

அறிவிப்பு

சேலம் மாவட்டத்தில் அரசுத் தலைமை மருத்துவ மனை மற்றும் இதர அரசு மருத்துவ நிறுவனங்களின் உபயோகத்திற்காக, 1—8—1972 முதல் 30—11—1972 வரை உள்ள காலத்திற்குத் தேவையான ட்ரக்ஸ், மருந்துகள் (Drugs, Medicines) வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 20—8—1972 காலை 10-00 மணி வரை, ட்ரக்ஸ், மருந்துகள் வழங்க விருப்பமுள்ளவர்கள், ஒப்பந்தப்படிவம், நிபந்தனைகள் மற்றவைகளுக்கு, மேற்பார்வைப் பொறியாளர், அரசு தலைமை மருத்துவமனை—சேலம் அவர்களிடம் ரூ. 5-20 (ரூ. 5 "XXIII Medical—1 Director of health Services and Family Plaining—g Misellaneous" என்ற தலைப்பிலும்)0 20 காசு விற்பனை அண்ட் சர்ச்சார்ஜ் XII Sales Tax என்ற தலைப்பிலும் தனித் தனிச் சலானில்செலுத்திப்பெறலாம். மற்ற விவரங்கள், மேற்பார்வையாளர், அரசு தலைமை மருத்துவ மனை, சேலம் அவர்களிடம் பெறலாம். " ஒரு முறை ஒப்பந்தப் புள்ளி கொடுக்கப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தைப்பற்றி எந்த தொடர்பும் கொள்ளக்கூடாது".

மேற்பார்வையாளர்.

(த 23)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப் பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் 'பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2, அவர்களால் மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 7—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—பாடலயார்குலம் கேசவனேரி டேங்ஸ் மற்றும் பாடலயார்குலம் நீர் வழங்கு வாய்க்கால் மேம்படுத்துதல்.

ஒப்பந்த வடிவம்—கே 2.
கட்டுத் தொகை—ரூ. 2,500.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 20.
விற்பனை வரி—ரூ. 0·70.
வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திரும்பித் தரப் பட மாட்டாது) எந்தக் கருவூலத்திலாவது (P.W.III O.R Receipt) என்ற தலைப்பில் நிருவாகப்பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி கோட்டம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் தம் கணக்கிலும் விற்பனைவரி XII. ST (b) receipt (under the State Sales Tax Act General Sales Tax என்ற தலைப்பிலும் ஒரே சலானில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்த வடிவம் மற்றும் இதரப் படிவங்கள், தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ, மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித்துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2-ல் 24—7—1972 முதல் 3—8—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் மேலாளர் அவர்களுக்கு விண்ணப்பத்துடன் ஒப்பந்தப் பத்திரங்களின் விலை மற்றும் விற்பனை வரி செலுத்தியதற்கான ரெசிப்ட்டட் சலானை வைத்து அனுப்பிப் பெறலாம். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் பெறப்படும் மனுக்கள் பொதுவாகக் கவனிக்கப்பட மாட்டாது.

மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்
பொதுப்பணித்துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம்'
திருநெல்வேலி-2

(த. 12)

ஒப்பந்தப் புள்ளி

மேட்டுப்பாளையம் நகராட்சி.

நீர் வழங்குப் பம்புகளுக்கு பாகங்கள் (Spares) வழங்க கீழ்க்கையொப்பமிட்டவரால் 7—8—1972 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. விளக்கமான மாதிரிகள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் விண்ணப்பித்துப் பெறலாம்.

வி. கணபதி,
ஆணையர்.

(த.-6)

ஒப்பந்தப் புள்ளி

சின்கோனுத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், நிமிடத்திற்கு 20 காலன் தண்ணீரை இறைக்கும் சக்தியுள்ள 4" விட்டமுள்ள (as in let) அலுமினியம் அல்லாய் பைப்புகள் மற்றும் 2" விட்டமுள்ள டெலிவரி லைன் பைப்புகளும் கொண்ட ஹைடிராம் பம்புகள் 4 (Hydram) வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன,

ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசிநாள் 31—8—1972 மாலை 4.00 மணி வரை.

மற்ற விவரங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு, கீழ்க்கையொப்பமிட்டவருக்கு ஒப்பந்த அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப் பத்திரத்தின் விலை விற்பனைவரி உட்பட ரூ. 2.07 செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர்,
சின்கோனுத்துறை
அஞ்சல் பெட்டி எண் 6,
உதக மண்டலம்,
நீலகிரி.

(த. 36)

ஒப்பந்தப் புள்ளி

சங்கரன்கோயில் நகராட்சி

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 11-8-1972-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளின் மேல்உறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர் சங்கரன்கோயில் நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பிவைக்கவேண்டும். வேலைகளுக்கு எதிராக குறிப்பிடப்பட்ட தொகையை ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டுத்தொகையாகக் கட்டவேண்டும். பாக்கியுள்ள கட்டுத்தொகையை ஒப்பந்தம் ஒப்புக்கொண்டவுடன் கட்ட வேண்டும். நிபந்தனைகளும், ஒப்பந்தப்புள்ளிகளும், ஷெடியூல்களும் நகராட்சி அலுவலகத்தில் ரூ. 10 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் தெரிந்துகொள்ளலாம்.

வேலை விவரங்கள்.		மதிப்பீடு.	கட்டுத் தொகை.
		ரூ.	ரூ.
1. புதிதாக தினசரி சந்தை கட்டுதல்	..	1,97,000	3,700
2. புதிதாக பேருந்துநிலையம் கட்டுதல்	..	1,90,000	4,500

வெ. ஜானகிராமன்,
ஆணையர்.

(த. 70)

ஒப்பந்தப் புள்ளி ரத்து

செங்கோட்டை நகராட்சி

திருநெல்வேலிமாவட்டம்.

நகராட்சி ஆணையர் அவர்களால், தமது அலுவலகத்தில் 21-8-1972 திங்கட்கிழமை மாலை 4 மணிவரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்புத் தொகை.	வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1 மேலூர் அருந்ததியார் குடியிருப்பு வடக்குச் சந்திப்பிலிருந்து கே. சி. ரோடு வரையுள்ள ரோட்டில். தார் தளம் போடுதல்.	15,000	375
2. டாக்டர் எஸ். எஸ். பிள்ளை ரோடு மேலற்றத்திலிருந்து வம்பளத்தான் சந்திப்பு வரை தார்தளம் போடுதல்.	25,000	625
3. டவுன்ஹால் மேல்புறம் ஒரு தினசரி சந்தை கட்டுதல்.	16,000	400

மேற்படி வேலைகளுக்கு அவற்றின் எதிரே குறிப்பிட்டிருக்கும் வைப்புத் தொகையை செலுத்திய ரசீதுடன் ஒப்பந்தம் கொடுக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்கள் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

டி. கே. மாரப்பன் எம். ஏ.,
ஆணையர்.
செங்கோட்டை நகராட்சி.

(த. 72)

ஏல விளம்பரம்

மதுரை வீட்டு வசதி பிரிவு
(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.)

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் மதுரை வீட்டு வசதிப் பிரிவின் பொறுப்பில் கட்டப்பட்டுள்ள இரண்டு மாதிரி வீடுகள் 8-8-1972 சனிக்கிழமை மாலை சுமார் 11-00 மணியளவில் மாதிரி வீடுகள் கட்டப்பட்டுள்ள இடத்தில் கீழே கண்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு அரிஜன மக்களுக்காக பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

1 ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் ஏல தினத்தன்று ரூ. 100 முன்பணம் கட்டி ஏலம் கேட்கவேண்டும்.

2 ஏலம் முடிந்தவுடன் அந்த இடத்திலேயே ஏலத்தொகையில் 15 சதவீதம் ரொக்கமாகக் கட்டவேண்டும். நிருவாகப் பொறியாளரின் உத்திரவு கிடைத்த பின்பே ஏலம் உறுதி செய்யப்படும். ஏலத்தின் முடிவை மறுக்கவோ. மாற்றவோ நிருவாக அதிகாரி செயற்பொறியாளர் (மதுரை வீட்டு வசதிப் பிரிவு) அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

மற்ற ஏல நிபந்தனைகள் ஏல தினத்தன்று ஏலம் நடப்பதற்கு முன் கலந்து கொள்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

வி. செல்வராஜ்,
செயற் பொறியாளர் நிருவாக அதிகாரி,
மதுரை வீட்டு வசதிப் பிரிவு.

(த. 88)

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி நகராட்சி

1972-73-ம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட சாலைகளுக்குப் பராமரிப்பு செய்யும் வேலைக்குக் கல், சரல், மண் முதலியன சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் 18-8-1972 அன்று மாலை 4 மணி வரை ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்கு பொறியர், அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

		முன்வைப்புத் தொகை.
		ரூ.
1. நகரின் வடகிழக்குப் பகுதி சாலைகளுக்கு	..	385
2. நகரின் தென் கிழக்குப் பகுதி சாலைகளுக்கு	..	385
3. நகரின் வடமேற்குப் பகுதி சாலைகளுக்கு	.. ..	370
4. நகரின் தென்மேற்குப் பகுதி சாலைகளுக்கு	..	370
5. சிதம்பர நகரில் 4, 5, 6, தெற்குக் கடைசி ரோடு ஆகியவைகளுக்குத் தார் ரோடு போட.		115

கே. என். கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. பி. இ.,
பொறியர்.

(த. 87)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

"போக்குவரத்து" இல்லம், அண்ணா சாலை, சென்னை-2.

மழைக் கோட்டுகள் (Rain-Coats) குல்லாய்களுடன் வழங்க, கீழே கையொப்பமிட்டவரால், மூடி முத்திரையிட்ட கொட்டேசன்கள் 16—8—1972 மாலை 2-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி விளக்க நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள், வாங்கும் அலுவலர் (Purchase Officer) பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2 அவர்களிடம் இலவசமாக எல்லா வேலை நாட்களிலும் பெறலாம்.

மெட்டீரியல்ஸ் மேலாளர்,
பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2.

(த. 45)

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.

CriterionCO.2678TM 8

தமிழரசு

ஆக. 16 1972   35 காசு

19 AUG 1972



நமது இலட்சியம் ஈடேற....

குடிசைகள் அடுக்குமாடி வீடுகளாக
அமைக்கப்பட்டு வருகின்றன
நமது அரசின் திட்டங்களால்!

குடிசை வாழ் மக்களுக்காக அண்மையில் சென்னை
கோட்டூர்புரத்தில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய்
செலவில் 1848 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இதுபோன்று நாள்தோறும் புதிய புதிய திட்டங்களால்
புதிய புதிய வசதிகள்.

திட்டமிட்ட குடும்பமே சிறந்தது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.



குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.

அரசு-மிகவுயர்ந்த தரமானது

போர்ட்லேண்ட்
சிமெண்ட்
உங்களுக்குக்
கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ARASU CEMENT
TIDCO

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

7.

விடுதலை நாள் வெள்ளி விழா இதழ்

தமிழரசு

மலர் 3. இதழ் 4
16-8-1972.

கிராமங்களையும் ஏழை எளிய மக்களையும் நாம் கைதூக்கி விட வேண்டும்! இதுதான் நமது முதல் கடமை!

நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது. இந்த அடிப்படையில்தான் நமது பணிகள் அமையவேண்டும்.

நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய புதிய சோதனைகள் ஏற்படலாம். பணிவு. எளிமை. அகிம்சை. சகிப்புத்தன்மை ஆகிய நல்ல பண்புகளினால் அந்தச் சோதனைகளில் நாம் வெற்றி அடைந்து விடலாம்.

அண்ணல் காந்தியடிகள்

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட—வாழ்த்தும் வணக்கமும் கூறிட—உறுதியும் அஞ்சாமையும் பெற்றிட—சுருக்கமாகக் கூறுவதானால், பெற்ற சுதந்தரத்துக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ள—சுதந்தரத்தின் முழுப் பயனை நாட்டவர் அனைவரும் பெற்றிட—அதற்கான அறிவாற்றலையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவே இந்த ஆகஸ்டுப் பதினைந்து.

வீரம்—வெற்றியைத் தந்தது; தியாகம்—சுதந்தரத்தைத் தந்தது; வீரமும் தியாகமும் போற்றத் தக்கவை; அதிலும் உலக உத்தமர் காந்தியடிகள் வகுத்தளித்த அறநெறி நின்று இந்தியா பெற்ற சுதந்தரம் உலக வரலாற்றுக்கே ஒரு புதுமையானதாகும்.

பேரறிஞர் அண்ணா

இந்திய விடுதலை வெள்ளிவிழா

மேதகு தமிழ்நாடு ஆளுநர்

கே.கே.ஷா

நன்றியுணர்வுள்ள ஒரு நாடு அந்த நாட்டின் விடுதலை வீரர்களையும் அதற்காக உயிரை இழந்த தியாகிகளையும், எப்பொழுதும் நினைவு கூர்கிறது. அந்தச் செம்மல்களுக்குத் தக்க முறையில் மரியாதையும் செய்கிறது.

நான் பழைய சம்பவங்களின் நடமாடும் சாட்சியாக விளங்குபவன். இன்றும் காந்தியடிகளை அச்சம் கலந்த மரியாதையுடன் வியப்புடன் பார்க்கிறேன். தூக்கு மரத்தையும், துப்பாக்கிகளையும், காவல் துறையினரின் குண்டாந் தடிகளையும், சிறை வாழ்வின் கொடுமைகளையும் கண்டு அஞ்சாது இந்நாட்டின் இலட்சக் கணக்கான மக்களைச் செயல்புரிய வைத்த அவருடைய மந்திரக் கோலின் மாயச் சக்தியைக் கண்டு வியப்படைகிறேன்.

ஆட்சியாளன் (Statesman) சந்தர்ப்பங்களை உருவாக்குகிறான். அரசியல்வாதி (Politician) அவைகளைப் பயன்படுத்துகிறான் என்று சொல்லப்படுவது உண்டு. ஆனால், காந்தி வெறும் ஆட்சியாளனுக்கும் மேம்பட்டவர். அவர் ஒரு மகானும் ஆவார். மகான் ஒருவர் நேர்மைப் பண்புகளைப் பேணிக் காத்ததோடு ஒரு சிறந்த ஆட்சி நிருவாகியாகவும் மாட்சிமை பெற்றதற்கு வரலாற்றில் அவருக்கு ஒப்புமையே கிடையாது. அவரவர் வழியிலேயே ஒரு இயக்கத்தைத் தனியாக நடத்தும் ஆற்றல் பெற்றிருந்த தலைவர்கள் கூடப் பாபுவின் தலைமையை ஏற்றுக் கொண்டார்கள்; அவரோடு தங்களையே ஐக்கியப் படுத்திக் கொண்டார்கள். அப்படிச் செய்யப்பட்டுவிட்டோமே என்று அவர்கள் வருந்துவதற்கான சூழ்நிலைகள் எப்பொழுதும் அவர்களுக்கு ஏற்பட்டதில்லை.

பண்டித நேரு, இராசாசி, சர்தார் படேல், சுபாஷ் போன்ற பல்வேறு தனித்தனிக் குணநலன்களைக் கொண்ட மேதைகளை எவ்வாறு காந்தி இணங்கி, இணைந்து செயல்பட வைத்தார் என்பது புரியாத புதிர் மட்டுமல்ல; அச்செயல் இப்போதும் மனிதச் சிந்தனையைத் திணற வைப்பதாகவே இருக்கிறது.

அகிம்சை, செய்முறை நேர்மை ஆகியவைகளைப் பற்றி அவர் அழுத்தந் திருத்தமாக இருந்திராவிட்டால் சுதந்தரப் பிற்காலப் பகுதி இன்னும் இன்னல் நிறைந்ததாகவே இருந்திருக்கும்.

சுதந்தர மனவுணர்வு இந்நாட்டு மக்களிடையே உருவாக வேண்டும் என்பதற்காகப் பண்டித நேரு கடுமையாக உழைத்தார். அதனால் மக்களாட்சி மாண்பு இந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையாக உருவாகக் காரணமாக அவர் அமைந்தார்.

பெற்ற சுதந்தரத்தைப்பேணிக் காப்பதும், வறுமையைத் துடைத்தெறிவதும், தெளிந்த மக்களாட்சியை வளர்ப்பதும் காலதேவன் திருமதி இந்திரா காந்திக்கு இட்ட கட்டளைகளாக-கடமைகளாக அமைந்துவிட்டன.

பொருளாதாரத்தில் பின்னடைந்த, கல்வியில் படிப்பறிவில்லாத மக்கள் நிரம்பிய இந்தியாவில் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற ஆபத்தை நாமே விரும்பி எடுத்துக் கொண்டோம். அதன் மூலம் வட்டார, மொழி, மத வகை வேறுபாடுகள் பொறாமை உணர்வுகளைத் தூண்டி விட்டு இலாபம் காணும் சூழ்நிலையை உள்ளடக்கிய சனநாயகக் குறைபாடுகளின் தூண்டுதல்களை நேரிடையாகச் சந்திக்கவும் நாம் முடிவு செய்தோம். பெருமளவு அகதிகளின் உள்நாட்டு வருகைக்கும் நாம் ஆட்படுத்தப்பட்டோம். 1962-ஆம் ஆண்டிலிருந்து நம்முடைய பாதுகாப்புச் செலவு ஆண்டொன்றிற்கு ரூ. 800 கோடியிலிருந்து ரூ. 900 கோடி வரை உயர்ந்தது. பாகிஸ்தான் நாட்டின் ஆக்ரமிப்பையும் நாம் சந்திக்க வேண்டியிருந்தது. இத்துணைச் சுமைகளையும் நோக்கும்போது, எப்படி இத்தகைய இடர்ப்பாடுகளை வெற்றிகாண முடிந்தது, எப்படிப் பெருஞ்சுமையைஏற்றுக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்தை நிலை நிறுத்திப் பொருளாதாரத்தில் தன் வளர்ச்சி அடிப்படையை எய்த முடிந்தது என்பது எவரும் வியப்படையத் தக்கதேயாகும்.

காந்தியும், நேருவும் எதை எடுத்துக் கூறி எதற்காகப் பாடுபட்டார்கள் என்பதை இளைய தலைமுறை புரிந்து கொள்ளாத வரையில் அவர்கள் கனவு கண்ட சமுதாய அமைப்பு நனவாகப் போவதில்லை அவர்களின் கருத்துக்கள் இந்நாட்டு இளைஞர் சமுதாயம் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கிக் கூறுவதற்கான முறையான முயற்சிகள் செய்யப்படவில்லை என்பது துரதிருஷ்ட வசமானதாகும்.

இளைஞர்களிடம் நேரு காட்டிய கரை கடந்த பெருந்தன்மை, ஒழுக்கக் கேட்டின் விளிம்பில் இருக்கும் அளவு தாராள மனப்பான்மை ஆகியவற்றைப் பற்றி நேருவிடமே நான் கேட்டது எனக்கு நினைவிற்கு வருகிறது. ஆனால், எனது வினாவிற்கு அவர் கொடுத்த விடை அவரின் சிந்தனா சக்தியின் ஆழம், அணுகுமுறையின் புத்திக் கூர்மை ஆகியவைகளை வெளிப்படுத்தியது.

" ஏழு நூற்றாண்டுக் கால அந்நியர் ஆதிக்கத்தின் விளைவால் ஏற்பட்ட அடிமை மனப்பான்மை துடைத்தெறியப் படவேண்டுமானால் அச்சமற்ற மனப்பக்குவம், எவ்விதக் கட்டுப்பாடற்ற சுதந்தர உணர்வு ஆகியவற்றை நம்முடைய இளைஞர்களிடையே நாம் உருவாக்க வேண்டும் " என்று நேரு கூறினார்.

இப்படிப் பட்ட சந்தர்ப்பம் இங்கொன்றும் அங்கொன்றும் என்ற அளவில் சில முறைகெட்ட பிரதி பலிப்புகளுக்கு நம்மை இட்டுச் செல்லலாம். ஆனால் இவைகளைக் கட்டுப்படுத்த முடியும். உருவாக்கப் பட்ட இத்தகைய உணர்ச்சியின் பிரதிபலிப்புகளை ஆக்க முயற்சிக்குத் திசை திருப்பி விடவும் முடியும் என்றும் நேரு கருதினார்.

ஆனால், செயல் சுதந்தரம், சிந்தனைச் சுதந்தரம் மீண்டும் நமது இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டும் ; இது இன்றியமையாதது என்பதும் நேருவின் வலுவான கருத்தாகும். இதை அரசும் நிருவாகமும், பெற்றவர்களின் மனப் போக்கைக் கொள்வதாலும், சமுதாயமும், டிரஸ்டுகளின் மனப்போக்கை அனுசரிப்பதாலும் சாதிக்க முடியும்.

இந்தப் பின்னணியில் நோக்கின் சனநாயக சோஷலிஷம், நடுநிலைக் கொள்கை ஆகிய தத்துவங்களின் முழுத்தன்மை பகலவன் ஒளியைப் போல் துல்லியமாய்த் தெரியும். உள்நாட்டில் அமைதிக்காக அவர் பெரு முயற்சி செய்தார். அதனால் படிப்பின்மை, வறுமை, பின் தங்கிய பொருளாதார நிலை ஆகியவற்றை எதிர்த்து உள்நாட்டுப் போராட்டத்தை முடுக்கிவிட முடியும் என்று அவர் கருதினார். அவரின் நடுநிலைக் கொள்கை சிறந்த ஆட்சி நிருவாகம், சீரிய பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றின் கூட்டிணைப்பேயாகும்.

துரதிருஷ்டவசமாக, மதவெறி அளவிற்கு மீறிப் பாராட்டிப் புகழ்ந்து பேசப்பட்டாலும், மதம், கொள்கை வேறுபாடுகளைத் தூண்டி விட்டு நாட்டின் உணர்வுப் பூர்வமான ஒற்றுமையைக் கெடுக்க எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டன. இதையே இந்த நாட்டின் கடந்த இருபதாண்டுக் கால வரலாறு கண்டது.

இதன் காரணமாக ஏற்பட்ட இன்னல்கள், இடையூறுகள் மோசமான நிலைமையை நாட்டிலே உருவாக்கின. மக்களிடையே ஏமாற்ற உணர்வு வளர்ந்துகொண்டே இருந்தது; நல்ல எதிர்கால நம்பிக்கை என்பது சுருங்கிக் கொண்டே வந்தது. அதே நேரத்தில் வன்செயல் தன் அடித்தளத்தை வேகமாக வளர்த்துக் கொண்டே இருந்தது.

வேறுபட்ட பல சக்திகள் வேறுபட்ட வழிகளில் வேறுபட்ட தேவைகளுக்காகச் செயல்பட்டு நாட்டின் தலைமையின் மேலிருந்த நம்பிக்கை நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே செல்லும் சூழ்நிலையைத் தோற்றுவித்தது. நாட்டின் ஒருமைப்பாடு நிலைக்குமா, நாட்டின் முன்னேற்றம் தடைப்படாமல் செல்லுமா என்ற நம்பிக்கைகள் கேள்விக்குறியாக எழுப்பப் பட்டன.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை வழிகாட்டி இயக்கிச் செல்ல இந்திரா காந்தி பொறுப்பினைச் சுமக்க அழைக்கப்பட்டார்.

உள்நாட்டுக் குழப்பங்களின் கடுமையான பளு, நிலையில்லா நிலவரங்கள், வெளியுலகத் தொல்லைகள் ஆகிய அனைத்தும் வல்லவனுக்கும் வல்லவனைக் கூட எல்லாப் பக்கங்களிலிருந்தும் தொல்லைகளை வரவழைத்துக் கொள்வதிலிருந்தும் கடுமையான பணிகளை ஏற்றுக் கொள்வதிலிருந்தும் பின்னோக்கி இழுத்திருக்கும்.

அண்மையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே நடைபெற்ற போரின் போது தமிழக மக்கள் போருக்காகப் பெருமளவில் பொருளுதவி செய்தார்கள். நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு ரூபாய் ஆறு கோடி கொடுத்ததும் அல்லாமல், போர்வீரர்களின் நலனுக்காகவும் அவர்களோடு ஒத்துழைக்கும் வண்ணமும் வேறு பல நடவடிக்கைகளும் எடுத்த பெருமை தமிழகத்திற்கு உண்டு. கன்னர் ஆறுமுகத்தின் வீரச் செயல்கள் நம்முடைய வரலாற்றின் ஓர் அங்கமாகிவிட்டது.

போர்க்களத்தில் உயிர்நீத்த போர் வீரர்களின் குடும்பங்களுக்குத் தமிழ்நாடு அரசு தன்னால் முடிந்த எல்லாவித உதவிகளையும் அளித்துள்ளது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

களத்தில் உயிர் நீத்த கன்னர் ஆறுமுகம்



நமக்கு வழித்துணை...

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களின் விடுதலை நாள் வெள்ளிவிழாச் செய்தி

இந்தியா சுதந்தரம் பெற்ற இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவினை இந்த மாதத்தில் நாம் கொண்டாடுகிறோம். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஏற்பட்ட சோதனைகளையும் அறைகூவல்களையும் எதிர்த்து வெற்றிபெற்று வலுவடைந்துள்ள நமது நாடு, மேலும் அதிக ஒற்றுமையுடனும், உறுதியுடனும் தனது இலட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நமது நாட்டில் ஜனநாயகம் நிலைத்து நின்று, தனது தகுதியை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஆனால், பொருளாதாரத் தன்னிறைவு என்னும் பொருளாதார விடுதலையை நாடு இன்னமும் அடையவில்லை. ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட வேண்டியிருக்கிறது.

ஏழ்மை, ஏற்றத்தாழ்வு ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவதற்கு நாட்டு மக்களின் ஒருமித்த முயற்சி அவசியம். நாட்டு மக்களின் நம்பிக்கையும் ஆழ்ந்த ஈடுபாடுமே நாடு சுதந்தரம் அடைவதற்குக் காரணமாக இருந்தன. நமது இலட்சியம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருக்கிறது. ஆனால், இதுவரையில் வேறு எந்த நாடும் இவ்வளவு பெரிய பணியில், ஈடுபட்டு இவ்வளவு சிக்கலான பிரச்சினைகளைச் சமாளித்ததில்லை. ஆகவே, இனி வரக்கூடிய நமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான தடைகளைச் சமாளிப்பதற்கு ஏற்ப நாம் வழி வகுத்துக் கொள்ள வேண்டும்.

எல்லாருக்கும் நீதியையும் சம வாய்ப்புகளையும் அளிப்பதும், ஒவ்வொரு குடிமகனும் முழு வளர்ச்சியடையத் தக்கதும் ஒவ்வொருவரும் ஜனநாயக முறையில் செயல்பட்டுத் தமது பரஸ்பர பொறுப்புக்களை உணர்ந்து நடப்பதற்குமான ஒரு புதிய சமுதாயத்தை நோக்கிச் செல்லும் நமக்குத் தன்னம்பிக்கையும், தைரியமும் வழித்துணைவர்களாக இருக்கட்டும்.

கடமைகளைச் செய்யாமலே உரிமைகளைத் தேடினால் அவை கானல் நீர் ஆகிவிடும்.

o o o

படிப்பறிவு இல்லாவிட்டால் கோடிக்கணக்கான மக்களுக்குத்தன்னை அறியும் சக்தியே இல்லாது போய் விடும்.

o o o

செயலில் கெட்டவனை விட மனத்தில் கெட்டவனே மிகவும் கெட்டவன்.

o o o

சீர்திருத்தத்தில் கவலை சீர்திருத்தக்காரனுக்கே உண்டு ; சமூகத்திற்கு இல்லை.

o o o

உங்கள் சுதந்தரத்தில் யாராவது தலையிட்டால் அவ்விதம் தலையிடுவதைத் தடைசெய்யுங்கள்.

துன்பம் வந்துற்றபோது அழுகிறவர்கள் அடிமைகளாவார்கள்.

o o o

தேசத்தொண்டு என்பது மனித சமுதாயத்தின் தொண்டு என்றே என் கருத்திற்குப் படுகிறது.

o o o

நல்லவரின் எண்ணங்கள் ஒருபோதும் வீணாவதில்லை.

o o o

ஏழைகளுக்கும் தேவைப்பட்டவர்களுக்கும் உதவுவதைவிடப் பெரிய வேள்வி என்ன இருக்கிறது?

o o o

நல்ல விதமாக அமைக்கப்படும் ராஜ்யத்தில் ஒருவர் இடத்தை இன்னொருவர் பிடித்துக் கொள்வது ஒரு நாளும் நடவாத காரியம்.

முயற்சிகள் சிறந்திட...

தமிழக முதல்வர்
கலைஞர்

உரிமை பெற்ற மண்ணில் ஒரு நொடியேனும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடு விடுதலைப் போரில் ஈடுபட்டு உயிர் துறந்த வீரர்கள் ஏராளம்! ஏராளம்!

அந்தத் தியாகத் திருமேனிகளின் கனவுகள் நனவாகிக் கால் நூற்றாண்டாகிறது.

விடுதலை பெற்ற நாட்டில் ஒரு நொடிப் பொழுதேனும் வாழத் துடித்தவர்களும் இந்த மண்ணில் பிறந்தவர்கள் தாம். இருபத்தைந்து ஆண்டுகளாகச் சுதந்தரம் பெற்ற நாட்டில் வாழும் நாமும் இந்த மண்ணுக்கு உரியவர்களே!

ஒரு காலத்தில் பெரும் பேறாகத் தெரிந்தது நமக்குச் சாதாரணமாகவும் தெரியும் அளவுக்குக் காலம் வேகமாக ஓடுகிறது.

அன்று அடிமைத் தளையை அகற்றிடப் போராடியது ஏன்?

புதிய வாழ்வு கண்டிட—
பொருளாதார ஏற்றம் பெற்றிட—
புன்மைகள் நீங்கிட—
நன்மைகள் மலிந்திட—
எல்லாரும் எல்லாம் அடைந்திட—
கல்லாமை இல்லாது தொலைந்திட—

இவையே நாம் பெற்ற சுதந்தரம் நமக்குத் தரும் பெருமைகளாக இருந்திட முடியும்.

இந்த நிலைகளுக்காக நமது முயற்சிகள் தொடர்ந்தாலும், முழுமை காண முடியவில்லை என்ற பேருண்மையை இந்த விடுதலைத் திருநாள் வெள்ளி விழா ஆண்டில் ஒப்புக்கொள்வதில் தவறில்லை.

இந்த நேரத்தில் நாம் கணக்குப் பார்ப்பது நமது வருங்காலக் கடமைக்கு வழிகாட்டியாகவே அமையும்.

ஆகவே, நமது முயற்சிகள் மேலும் சிறக்க உறுதியுடன் பணியாற்றுவோம்! இதையே விடுதலைத் திருநாள் வெள்ளி விழா ஆண்டில் சூளுரையாக ஏற்போம்!

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஆகஸ்டு 14-ஆம் தேதியன்று நள்ளிரவில், இந்தியா தனது அடிமைத் தளையை உடைத்தெறிந்துவிட்டுச் சுதந்தர நாடாக மலர்ந்தது. 1942-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்துக்கு நாட்டு விடுதலை உச்சக் கட்டமாக அமைந்தது.

ஒரு நள்ளிரவில்...!

பெதிக்-லாரன்ஸ் பிரபுவின் தலைமையிலான பிரிட்டிஷ் அமைச்சகத் தூதுக் குழுவினர், ஆட்சி மாற்றத்துக்கான அரசியல் அடித்தளத்தை உருவாக்கினர்.

மாநிலச் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் 650 பேரும் இரவு பன்னிரண்டு மணி அடித்தவுடன் வாக்குறுதி எடுத்துக் கொள்வதற்காக, டாக்டர் இராசேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடியிருந்தனர்.

திட்டத்தைத் திரு சவகர்லால் நேரு கொண்டு வந்து பேசுகையில், "விதியுடன் கால ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்" என்று கூறினார்.

"இரவு பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தவுடன், இங்குக் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் அனைவரும், கீழ்க் கண்டபடி வாக்குறுதி எடுத்துக் கொள்வார்கள்" என்று கூறும் தீர்மானம் முன் வைக்கப்பெற்றது.

"இன்னல்கள், தியாகங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பெருமக்கள் சுதந்தரம் பெற்றிருக்கும் இந்தப் புனித வேளையில், பழம் பெருமை வாய்ந்த இந்த நாடு உலக அரங்கில் தனக்குரிய இடத்தை அடைவதற்கும்—உலக அமைதிக்கும்—மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும்—இந்த நாடு தன்னலியன்றதனைத்தையும் செய்வதற்கும் ஏற்ப இந்திய நாட்டுக்கும், மக்களுக்கும் தொண்டு செய்வதற்கு இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகிய நான் தாழ்மையுடன் என்னை அர்ப்பணிக்கிறேன்."

திட்டத்தை ஆதரித்துப் பண்டித நேரு பின்வருமாறுபேசினார்: "நமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது. வாக்குறுதிகளை முழு அளவுக்கு நிறைவேற்ற முடியாவிட்டாலும், கணிசமான அளவுக்கு நிறைவேற்ற வேண்டும்; உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இந்தியா விழித்து எழுந்து சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்கிறது. பழையன கழிந்து புதியன புகுதலும், நீண்ட நாட்களாக ஒடுக்கப்பட்டிருந்த ஒரு நாட்டின் ஆன்மா விழித்தெழுந்து மீண்டும் பேசும் நிகழ்ச்சியும் வரலாற்றில் அபூர்வமாகத்தான் நிகழும். தாய் நாட்டின் சேவைக்கும்; மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் எங்களை அர்ப்பணித்துக் கொள்வோம் என்று இந்த நேரத்தில் உறுதிமொழி எடுத்துக் கொள்வது முற்றிலும் பொருந்தும்."

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சௌத்ரி காலிக்குஸ்ஸமான் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்.

அதற்கு முன்னால், அவைத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் தமது துவக்க உரையில், நாடு தனது இலட்சியத்தை அடைவதற்கு வழிகாட்டியமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார். காந்தியடிகளைப் பற்றிக் கூறுகையில், "கடந்த 30 ஆண்டுகளாக நமக்குக் கலங்கரை விளக்கமாகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்து வருகிறார்" என்று புகழாரம் சூட்டினார்.

இரவு மணி பன்னிரண்டு அடித்தவுடன் அவைத் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். அவைத் தலைவர் உறுதி மொழியை ஒவ்வொரு வாக்கியமாக வாசிக்க, உறுப்பினர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் திருப்பிக் கூறினர்.

அதன் பின்னர் அவைத் தலைவர், கீழ்க்காணும் செய்தியை வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுக்கு அனுப்ப வேண்டுமென்று முன்மொழிந்தார்.

(அ) அரசியல் நிர்ணய சபை இந்தியாவை ஆள்வதற்கான அதிகாரத்தைப் பெற்று விட்டது.

(ஆ) மவுண்ட்பேட்டன்பிரபு 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதி முதல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட வேண்டுமென்ற பரிந்துரையினை இந்திய அரசியல் நிர்ணய சபை ஏற்றுக் கொள்கிறது.

இதற்குப் பிறகு பம்பாயைச் சேர்ந்த திருமதி ஹன்ஸாமேத்தா, டாக்டர் சரோஜினி நாயுடு அப்போது அங்கு இல்லாததால் நாட்டுக்குத் தேசியக் கொடியினை வழங்கினார்.

திருமதி சுசீதா கிருபளானியின் "வந்தே மாதரம்" பாடலுடன் அவைக் கூட்டம் துவங்கியது. கூட்டத்தின் முடிவிலும் அவரே "சாரே ஜகான் சே அச்சா" என்ற இந்திப் பாடலைப் (பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு) பாடினார்.

அரசியல் நிர்ணய சபையின் தீர்மானத்தை டாக்டர் இராசேந்திர பிரசாத்தும், திரு சவகர்லாலும் உடனடியாக வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுக்குத் தெரியப்படுத்தினர்.

"எனக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவம் குறித்துப் பெருமைப் படுகிறேன்; அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு உங்கள் ஆலோசனைகளை நிறைவேற்ற முழு முயற்சி மேற்கொள்வேன்" என்று மவுண்ட் பேட்டன் பிரபு கூறினார்.

சபை உறுப்பினர்கள் முக மலர்ச்சியுடன் கலைந்து சென்றனர். பார்லிமென்ட் கட்டடத்துக்கு வெளியே கூடியிருந்த பெருந் திரளான மக்கள் அவர்களை வாழ்த்தி வரவேற்றனர். வரலாறு படைத்த அவை உறுப்பினர்களைக் கண்டு, வாழ்த்துவதற்காக உற்சாகம் கரைபுரண்டோடக் காத்து நின்ற கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துவது காவல் துறையினருக்கும் பெரும் பிரச்சினையாகி விட்டது.

டாக்டர் அம்பேத்கார் கூட்டத்தின் நெரிசலில் சிக்கிக் கொண்டார். அண்மையிலிருந்த முக்கியச் சாலையில் அமெரிக்கத் தூதர் திரு ஹென்றி கிரேயின் மனைவியார், கூட்டத்தில் தமது கணவரைத் தேடிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டுகொண்ட ஒரு காவல் துறை அதிகாரி அவரை அழைத்துச் சென்று காரில் அமர்த்தினார்.

ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று மவுண்ட்பேட்டன் பிரபு, கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றார். அப்போதைய தலைமை நீதிபதி கானியா, வைசிராயின் தர்பார் மண்டபத்தில் (இப்போதைய ராஷ்டிரபதி பவன்) அவருக்குப் பதவி ஏற்பு செய்து வைத்தார். திரு நேருவின் தலைமையில் பதவியேற்ற புதிய அமைச்சரவைக்குக் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்பு செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் மவுண்ட்பேட்டன் பிரபு தமது 'கோச்' வண்டியில் ஏறி, அரசியல் நிர்ணய சபை கூடியிருந்த மண்டபத்துக்குப்போய்ச் சேர்ந்தார். சபைக் கூட்டம் காலை பத்து மணிக்குத் துவங்கியது.

இந்தியா சுதந்தரமடைந்ததைப் பாராட்டி உலகெங்கிலுமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைச் சபைக் கூட்டத்தில் டாக்டர் இராசேந்திர பிரசாத் வாசித்துக் காட்டினார்.

பிரிட்டிஷ் மன்னர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியினை மவுண்ட்பேட்டன் பிரபு வாசித்தார்.

மவுண்ட்பேட்டன் பிரபு தமது உரையில், இந்தியத் தலைவர்களின் விவேகம், சகிப்புத் தன்மை, சிநேகபாவம் ஆகிய நற்குணங்களைப் புகழ்ந்து கூறினார். 'முதலில் நிர்ணயிக்கப்பட்டிருந்த தேதிக்கு 10½ மாதங்கள் முன்னதாகவே ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இந்தியத் தலைவர்களின் அருங் குணங்களே காரணம்' என்றார் அவர். சர்தார் வல்லபாய் படேலின் தொலைநோக்கு மதி நுட்பத்தையும், பண்டித நேருவின் தீரத்தையும் கவர்னர் ஜெனரல் பாராட்டிப் பேசினார். 'உலகப் புகழ்பெற்ற தலைவர்களுள் நேருவும் ஒருவர்' என்றார்.

கவர்னர் ஜெனரலின் உரைக்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் இராசேந்திர பிரசாத், "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இன்றோடு முடிவடைந்தது; இனிமேல் பிரிட்டன் நமது உறவுகள், சமத்துவம், நட்புரிமை நன்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்" என்றார்.

அவைக் கூட்டம் முடிந்து திரும்பிச்செல்லுகையில் மவுண்ட்பேட்டனும், அவரது மனைவியாரும், அவரது மகள் பாமிலாவும் வெளியே காத்திருந்த கூட்டத்தினரின் அன்புப் பிடியில் சிக்கித் தவித்துப் போயினர். கூட்டத்திலிருந்த எல்லாரும், அவர்களுடன் கைகுலுக்க முயன்றனர், அவர்கள் வைசிராயின் இல்லத்துக்குப் போய்ச் சேர்ந்த போது பகல் மணி பன்னிரண்டாகி விட்டது.

ஆகஸ்டு 8 தீர்மானம் என்று இந்தியாவின் வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் பொறிக்கப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர்மானம் 1942 ஆம் ஆண்டு பம்பாயில் காங்கிரஸ் பெருங் குழுவில் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் யார் தெரியுமா?

பண்டித சவகர்லால் நேரு.

அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்துபேசியவர் சர்தார் வல்லபபாய் படேல்.



கைகுவித்து வணங்குவோம்!

அடிமைவாழ்வை நீக்கிநாம்
அரசரான நாளிது !
அந்நியர்க்கு அஞ்சிவாழ்ந்த
அவதிவிட்ட நாளிது !

கடமையோடு கண்ணியம்
கட்டுப்பாடு மூன்றையும்
கண்ணைப் போலக் காப்போமென்று
கையடித்த நாளிது !

விடுதலைநாள் கொண்டாடும்
வெள்ளிவிழா நாளிதில்
வியப்புமிக்க சாந்தசத்திய
விரதம்பூண்ட வேள்வியில்

கடுமையான தவமியற்றிக்
கட்டவிழ்த்து விட்டநம்
காந்தியண்ணல் நினைவுகொண்டு
கைகுவித்து வணங்குவோம் !

நாமக்கல் கவிஞர்

விடுதலைப் போரிலே தமிழ் மொழியின் பங்கு

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்

இந்திய விடுதலைப் போரிலே மொழிவழிப்பட்ட தேசீய இனங்கள் ஆற்றியுள்ள கடமைகளை விரித்துரைத்தால், அது மாபெரும் காப்பியமாக அமையும். ஆதி காவியமான இராமாயணத்தை விடவும் பெரிய அளவுடையதாக அமையும்.

இந்திய விடுதலைப் போர் வரலாறு இன்னும் எழுதப்படவில்லை தமிழர், ஆந்திரர், கன்னடர், கேரளர், மராத்தியர், வங்காளியர் எனப்படும் மொழிவழித் தேசிய இனங்களைக் கணக்கிலெடுத்து, இந்திய விடுதலைப் போர் வரலாறு எதிர்காலத்திலேனும் எழுதப்படுமென்று நம்புவோமாக!

இந்திய மொழிகளிலே ஒவ்வொரு மொழியும் போர்க் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. அதனாற்றான், மொழிவாரி இன அடிப்படையில் விடுதலைப் போர் வரலாறு எழுதப்பட வேண்டியது அவசியமாகிறது.

ஆங்கிலம் படித்தவர்கள் மட்டுமே கூடிக்கொண்டு அந்நிய மொழியிலே விடுதலைக்காகப் பிரச்சாரம் செய்தவரை, அது விடுதலைக்கான முயற்சியாக இருந்ததே யன்றிக் கிளர்ச்சியாகவோ, புரட்சியாகவோ அமையவில்லை.

லோகமான்ய திலகர், விடுதலைப் போரின் தளபதியான பின்னர்தான் பிரதேச மொழிகளிலே பேசியும், எழுதியும், பிரச்சாரம் செய்ய வழி வகுக்கப்பட்டது. பிரதேச உணர்வு-களுக்கும் முதன்மை தந்தார் திலகர். அதன்பின், மாநில மொழி ஒவ்வொன்றிலும் செய்தி இதழ்கள் வெளி வரலாயின. அவற்றில் பெரும்பாலானவை மாநிலங்களின் பெயர்களையே தாங்கின என்பதும் நினைவிற்கொள்ளத் தக்கதாகும்.

டாக்டர் பி. வரதராசலு நாயுடு, 'தமிழ்நாடு' என்னும் பெயரில் வா- இதழ் தொடங்கிப் பின்னர் நாளிதழாக நடத்தினர்.

லோகமான்ய திலகர் 'மராத்தி' என்னும் பிரதேச மொழிப் பெயரில் செய்தி இதழ் நடத்தினர். வங்க வீரர் அரவிந்தர், 'வங்காளி' என்னும் பெயரிலே நாளிதழைக் கொண்டு வந்தார்.

'தேசோத்தாரகர்' என்னும் சிறப்புப் பெயர் கொண்ட கே. நாகேஸ்வர ராவ் பந்துலு, 'ஆந்திரப் பத்திரிகா' என்னும் பெயரில் சென்னையிலிருந்து நாளிதழ் வெளியிட்டார். இன்னும் 'கேரள கௌமதி', 'சம்யுக்த கன்னடம்' என்னும் மாநிலப் பெயர்களால் வெளிவந்த நாளேடுகள் பலவாகும்.

'இந்து' 'கிரானிக்கல்', 'ஸ்டாண்டர்டு' என்னும் பெயர்களில் வெளிவந்ந ஆங்கில ஏடுகளும் விடுதலைப் போருக்கு ஆதரவாக இருந்தவையாயினும் அவற்றைக் கண்டு அந்நிய அரசு அஞ்சவில்லை. மாறாகப் பிரதேச மொழிகளிலே நாளேடுகளும், வார-மாத ஏடுகளும் வெளிவந்த போதுதான் ஆங்கில அரசு அஞ்சியது. அந்த ஏடுகளை ஒடுக்குவதற் கென்றே அடக்குமுறைச் சட்டங்களையும் பிறப்பித்தது.

உண்மையில் ஆங்கில ஏடுகளை விடவும், பிரதேச மொழி ஏடுகளே விடுதலைப் போரில் ஈடுபடுமாறு மக்களைத் தட்டியெழுப்பின.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்கள் விடுதலைப் போரில் ஈடுபட்ட போதுதான் அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடித்தளம் ஆட்டம் கண்டது. உழவர்களும், தொழிலாளர்களும் அணியணியாக ஊர்வலம் சென்றபோதுதான்—''அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'' என்று பாடிப் படை திரண்ட போதுதான் பரங்கியர் ஆட்சி பயந்து நடுங்கியது. இந்த மகத்தான எழுச்சிக்குப் மாநில மொழிகளிலே வெளிவந்த ஏடுகளே காரணமாயின.

விடுதலைப் போரில் மேடைப் பிரச்சாரம் ஆங்கில மொழியில் மட்டுமே நடந்த போது, அது வெறும் செவி விருந்தாகத்தான் அமைந்தது. அதுவும், உயர்தரக் கல்வி கற்றவர்களுக்கு மட்டுந்தான்; ஆம், மக்களுடைய சிந்தையைக் சிளறி, அவர்களைச் செயலில் ஈடுபடுத்தும் ஆற்றல் அந்நிய மொழிக்கு இருக்காதுதானே !

விடுதலைப் பேச்சாளர்கள் மக்களின் தாய்மொழியில் மேடையிலே பேசத் தொடங்கிய பின்னர் கொள்ளலாயினர். படித்தறியா மிக ஏழைக் கிழவனும், பாரதத்தின் விடுதலைப் போரில் பங்கு கொள்ளத் துடித்தான்.

விடுதலைப் பிரச்சார மேடையிலே ஆங்கில மொழி ஆதிக்கம் பெற்றிருந்தவரை அந்நிய அரசு வேடிக்கை பார்த்தது. அத்தகைய பேச்சுகளை வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளாகக் கருதியது. மாறாக மாநில மொழியிலே பேசத் தொடங்கிய பின்னர் ''வாய்ப் பூட்டுச் சட்டம்'' பிறப்பித்தது. கூட்டம் கூடும் உரிமையையே மக்களிடமிருந்து பறித்துவிட

'144' என்னும் எண் கொண்ட புதிய சட்டத்தைத் தோற்றுவித்தது. அவ்வளவு தாய் மொழிக்குள்ள வலிமை!

ஆங்கில மொழியிலே—படித்தவர்கள் மத்தியிலே—ராஜத்துவேஷச் சொற்பொழிவு நிகழ்த்தியதற்காக யாரும் சிறைக்குள் தள்ளப்பட்டதாக எனக்கு நினைவில்லை. தள்ளப்பட்டிருந்தாலும் அவர்கள் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணிவிடக் கூடியதாகத் தான் இருக்கும். பெற்ற தண்டனையும் மாதக் கணக்கில்தான் இருக்கும். ஆனால், மக்களுடைய தாய் மொழியிலேயே பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தவர்களிலே ஆயிரக் கணக்கானவர்கள் ஆண்டுக் கணக்கில் தண்டனை பெற்றனர். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டும் நாடு கடத்தப்பட்டனர். வீரச் சிதம்பரனார் பாமர மக்களைக் கூட்டி வைத்துப் பசுந் தமிழிலே பேசியதற்குத் தான் இரண்டு ஆயுள் தண்டனை பெற்றார்.

தமிழிலே சில பழமொழிகளைச் சொன்ன பாவத்திற்காகவும், விடுதலை வீரர்களுக்கு வெஞ்சிறை கிடைத்ததும் உண்டு. "காகம் பறவாது கட்ட பொம்மன் துரை சீமையிலே" என்னும் பழமொழியைச் சொல்லிச் சிறை சென்ற தேச பக்தர்களையும் நான் அறிவேன்.

விடுதலைப் போராட்டக் காலத்திலே, ஆங்கில மொழியில் தேச பக்தியூட்டும் நாடகங்கள் நடத்தப் படவில்லை. அவை தேவைப்படவுமில்லை. ஆனால், பிரதேச மொழிகளிலே பிரச்சார நாடகங்கள் நடத்தப் பெற்றன. ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குச் சம்பந்தம் இல்லாத செஞ்சி தேசிங்கு, வீர சிவாஜி ஆகியோரின் நாடகங்களை நடத்தக் கூட ஆங்கில அரசு அனுமதிக்கவில்லை. ஆம், மொகலாயப் பேரரசை எதிர்த்து எழுதப்பட்ட உரையாடல்களிலே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் எதிரொலிக்க முடிந்தது. அப்படி அந்நிய மொழியில் செய்திருக்கமுடியுமா? செய்தாலும், சாதாரணப்பொது மக்களை அது கவர்ந்திருக்க இயலுமா?

அந்நாளில் அகில இந்தியப் புகழ் பெற்ற பெருந்தலைவர்களுக்குக் கூடப் பிரதேச ரீதியில் தான் சிறப்புப் பெயர்கள் தரப்பட்டன. டாக்டர் வரதராசுலு நாயுடு 'தென்னாட்டுத் திலகர்' என்று புகழப்பட்டார். திரு டி. பிரகாசம் பந்தலு, 'ஆந்திர கேசரி' என்று அழைக்கப்பட்டார். லாலா லஜபதிராய் 'பாஞ்சாலச் சிங்கம்' என்று பாராட்டப்பட்டார். இதெல்லாம் பிரதேச வெறி என்று பழிப்பார் அந்நாளில் இல்லை. தாய் மொழிப் பற்றையும், மாநில உணர்ச்சியையும் தூண்டித் தூபமிட்டதனால்தான் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் வீறு பெற்றது.

பாரதியாரின் பாடல்களிலே, நாடறிந்த பாடல்கள்—நாட்டு மக்களின் நெஞ்சம் கவர்ந்த பாடல்கள் தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் தமிழ் நாட்டையும் புகழ்ந்து பாடியவையேயாகும்.

மனித குலத்திற்கே மாணிக்கம் எனத் திகழ்ந்த மகாத்மா காந்தி, மொழி வேற்றுமை—மாநில வேற்றுமை—கடந்தவராக வாழ்ந்தார். அப்படிப்பட்டவர் விடுதலைப் போர்க்களத்தை விரிவுபடுத்தவும், விடுதலைப் போர்ப்படை வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கவும் மொழிப் பற்றையும் மாநிலப் பற்றையும் திட்டமிட்டு ஊக்குவித்தார்.

காங்கிரஸ் மாநிலக் குழுக்களை மொழி அடிப்படையில், அமைக்குமாறு அடிகள் தூண்டியதே, பிரதேச மொழிப்பற்றையும், பிரதேச உணர்வையும், வளர்ப்பதற்காகத்தான். மொழிப் பற்றின்றி நாட்டுப் பற்று வளராது என்ற உண்மையினைத் திலகரும், காந்தியடிகளும் தெள்ளத் தெளிய உணர்ந்தனர்.



எனது சிறு தொழில் வளர
சென்ட்ரல் பாங்க் உதவுமா?

ஆம்! உங்களுக்குச் சேவை செய்ய
சென்ட்ரல் பாங்க் காத்திருக்கிறது.
சிறு தொழில்களுக்குக் கடன் வசதி
செய்யத் தயாராக உள்ளது!

சிறு தொழில்களைத் துவக்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு அல்லது விரிவு படுத்துவதற்கு உதவி செய்யப் பணத்துடன் தயாராக இருக்கிறது சென்ட்ரல் பாங்க். இந்தியா முழுவதும் ஆயிரக் கணக்கான தொழில் நிறுவனங்கள் தங்களது தொழிலை வெற்றிகரமாக நடத்திச் செல்லவும் தங்களது உற்பத்திப் பொருட்களை உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் விற்பனை செய்யும் அளவிற்கு விரிவு படுத்தவும் சென்ட்ரல் பாங்கின் உதவியைப் பயன்படுத்தி வருகின்றன.

நீங்கள் கூட சென்ட்ரல் பாங்கின் ஊக்கந்தரும் உதவியுடன் உங்கள் சிறு தொழிலில் வளம் பெற முடியும்.

அருகிலுள்ள எங்களது கிளை அலுவலகத்திற்கு இன்றே வருகை தாருங்கள்.

மைய அலுவலகம்:
மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1.

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

விடுதலைப் போரின் போது பிரதேச மொழிகளிலே விடுதலை ஆவேசமூட்டும் பிரசுரங்கள் ஏராளமாக வெளி வந்தன. அந்தப் பிரசுரங்களைப் படித்துத் தாய் மொழியில் எழுதவும், படிக்கவும் மட்டுமே ஞானம் பெற்றிருந்த எளிய மக்களெல்லாம் அந்நிய ஆட்சி என்னும் நச்சு விருட்சத்தை ஆணி வேரோடு பெயர்த்து எறிய வேண்டும் என்னும் ஆவேசம் கொண்டனர்.

ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகா சபைகளிலே ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்ட தலைமையுரைகளும் நூல் வடிவம் பெற்றது உண்டு. ஆனால், அவற்றில் ஒன்றைக் கூட ஆட்சி தடை செய்யவில்லை. ஒன்றினால் கூடச் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு விடுதலை ஆவேசம் மூட்ட இயலவில்லை. இதற்கு மாறாக, 16 பக்கங்களிலிருந்து 64 பக்கங்கள் அளவில் தமிழ் மொழியில் வெளிவந்த பிரசுரங்களும், சிறு நூல்களும், சாதாரணப் பொதுமக்களுக்கு விடுதலை ஆர்வத்தை மட்டுமன்றி ஆவேசத்தையும் மூட்டின. அதனால், அந்தப் பிரசுரங்களை எழுதிய ஆசிரியர்களும், பதிப்பித்த பதிப்பாளர்களும் அச்சடித்துத் தந்த அச்சக உரிமையாளர்களும் கடும் தண்டனைக்குள்ளாயினர்.

காந்தியடிகள் 'இந்த் சுயராஜ்' என்னும் பெயரில் தமது கொள்கைகளைத் தொகுத்து நூலாக்கினார். அந்த நூலின் ஆங்கிலப் பிரதிகளை அரசு தடை செய்யவில்லை. குஜராத்தி மொழி உள்ளிட்ட பிரதேச மொழிகளில், வெளியான பிரசுரங்களைத் தடை செய்யாததோடு பிரதிகளையும் பறிமுதல் செய்தது. அவற்றை வெளியிட்டவர்களை — விற்றவர்களை — அச்சடித்தவர்களைச் சிறைக்குள் தள்ளியது.

சிறைச்சாலைகளில் அடைபட்ட அரசியல்கைதிகளுக்குக் குறிப்பாக 'ஏ' வகுப்பு 'பி' வகுப்புக் கைதிகளுக்குச் செய்தி இதழ்களும், புத்தகங்களும் தருவித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

ஆங்கிலச் செய்தி இதழ்கள் அப்படியே சிறைக்குள் அனுமதிக்கப்பட்டன. தமிழ்ச் செய்தி இதழ்களோ, அவற்றில் வெளியான விடுதலைப் போர்ச் செய்திகள் மைபோட்டு, மறைக்கப்பட்ட பின்னரே அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட்டன. ஆம். ஆங்கிலம் படித்தவர்களது தேச பக்தியை அரசு சந்தேகிக்கவில்லை. ஆனால், அவர்களுடைய தேசாவேசத்தை அரசு சந்தேகித்தது. தாய்மொழியில் மட்டுமே ஞானம் உடைய ஒவ்வொரு நபரையும் எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடிய தேசாவேசிகளாகக் கருதியது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுப் பதினைந்தில் நாம் பெற்ற சுதந்தரத்திற்கு இன்று வெள்ளி விழா கொண்டாடுகிறோம். ஆனால், அந்தச் சுதந்தரம் எந்த எந்தச் சக்திகளால், எந்த எந்தச் சாதனங்களால் நமக்குக் கிடைத்தது என்பதனை நாம் மறந்தே விடுகிறோம்.

பிரதேசப் பற்றும், பிரதேச மொழிப் பற்றும் தேச பக்தியை வளர்த்த சக்திகளாகும். அப்படியே, பிரதேச மொழிப்பற்றுதான்—குறிப்பாக, நம் தாய் மொழியாகிய தமிழ்மொழிப் பற்றுதான் நம்மையெல்லாம் விடுதலைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லும் கருவிகளாக அமைந்தன.

எந்தச் சக்திகளால் — எத்தகைய சாதனங்களால் நாட்டிற்குச் சுதந்தரத்தை நாம் தேடினோமோ, அந்தச் சக்திகளும், சாதனங்களும் சுதந்தர இந்தியாவில் போற்றப்படுகின்றனவா?

தாய்மொழியைப் பயன்படுத்தி நாட்டிற்குச் சுதந்தரம் தேடினோம். ஆனால், சுதந்தரம் பெற்ற நாட்டிலே தாய்மொழிக்கு —தமிழுக்கு விடுதலை வழங்கினோமா?

"செந்தமிழ் நாடென்னும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று மாநிலப் பற்றை ஊக்குவித்துத் தேசப் பற்றை வளர்த்தார் பாரதியார். அந்த மாநிலங்கள் விடுதலை பெற்ற இந்தியாவில் உரிமை வாழ்வு நடத்துகின்றனவா?

"தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்று தமிழ் இன ஆவேச மூட்டி, விடுதலைப் போரிலே தமிழர்களை ஈடுபடச் செய்தார் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள். அந்தத் தமிழ் உணர்ச்சி விடுதலை இந்தியாவில் தேசபக்தர்களால், போற்றி வளர்க்கப்படுகின்றதா?

அந்நிய ஆட்சிக் காலத்திலே மாநிலப் பற்றைக்கொண்டு தேசப் பற்றை வளர்க்க முடிந்ததென்றால்—தாய் மொழிப் பற்றை ஊக்குவித்து விடுதலை ஆர்வத்தை வளர்க்க முடிந்ததென்றால்—நாம் பெற்றுவிட்ட சுதந்தரத்தைப் பாதுகாக்கவும் மாநில உணர்ச்சி பயன்படும் அல்லவா?

அடிமை இந்தியாவிலே பாரத தேச பக்தியை வளர்க்கும் எருவாக மாநிலப் பற்றும் — தாய் மொழிப்பற்றும் பயன்படுமானால் சுதந்தர இந்தியாவிலே மட்டும் தேசிய ஒருமைப்பாட்டை அழிக்கும் நஞ்சாக மாநிலப்பற்றும் மொழிப்பற்றும் இருக்கமுடியுமா?

இப்படிப்பட்ட சிந்தனைகளையெல்லாம் கிளறிவிடும் ஆண்டாக வெள்ளி விழா ஆண்டு அமையட்டும்! 'இந்தியன்' என்ற சமுதாய உணர்வும், 'தமிழன்' என்ற இன உணர்வும் பெற்று விட்ட சுதந்தரத்தைப் பாதுகாக்கும், அரண்களாக அமையும் என்று நம்புவோமாக!

வாழ்க சுதந்தர இந்தியா!

வளர்க, தாய்மொழிப் பற்று!

விடுதலை விழா நாளில் நமது சூளுரை



பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை

விழா என்ற தமிழ்ச் சொல் விழை என்ற தமிழ்ச் சொல்லுடன் பொருள் தொடர்புடைய ஒரு மந்திரச் சொல் ஆகும். விழைதல் என்பது, ஆர்வத்துடன் விரும்பி வருங்கால வாழ்வு நலம் பற்றிக் கனவு காண்டல் என்று பொருள்படுவது ஆகும். விழா நாள் என்பது இதனால் கனவார்வத் திட்டமிடும் நாள் ஆகிறது.

பொங்கல் விழா என்பது பொழுது போக்கு விழாவோ, மகிழ்ச்சி விழாவோ, ஏற்கெனவே கண்ட வளத்துக்கு நன்றி தெரிவிக்கும் விழா மட்டுமோ கூட அன்று; அது இனி வர வேண்டும் வளம் பற்றி முனைப்பாக அவா ஆர்வங்கொண்டு அதற்கு வகைகோலும் விழாநாள் ஆகும்.

இந்திய விடுதலை விழாநாள் ஒரு பொங்கல் விழா நாள்; நாட்டினத்தின் பொங்குமாவளக் கனவார்வத் திட்டநாள் ஆகும். இது மட்டுமோ? இந்தியா ஒரு நாடு மட்டுமன்று; உலகினுள் ஓர் உலகு; ஒரு குட்டி உலகு; மனித இன நாகரிக வளத்திற்கே வழிகாட்டியான ஒருநாகரிகவளத் தேர்வுப் பண்ணை. இதனால், சரியான முறையில் கொண்டாடப் பட்டால், இந்திய நாட்டு விடுதலை விழாநாள் இந்திய நாட்டின் வளத் நுக்கு வழிகாட்டும் விழாநாள் மட்டுமன்று; மனித உலகின் வளத்துக்கே வழிகாட்டும் நாள் ஆகும்.

இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்த காந்தியடிகள் இந்தியாவின் தந்தை மட்டுமல்லர், அவர் மனித இனத்துக்கே மாணிக்கமானவர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் உரிமைச் சேயான முன்னாள் இந்திய முதல்வர் சவகர்லால் நேரு இந்திய மாமணி மட்டுமல்லர்; ஆசியாவின் சோதி, அகில உலகின் பெருந்தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர் என்பதும் இங்கே குறித்துணர வேண்டிய செய்தி ஆகும்.

விடுதலை வரலாறு என்பது இந்திய வரலாறே; தமிழக வரலாறே!

இந்திய விடுதலை நாளில் நாம் விடுதலையைக் கொண்டாடினால் போதாது. விடுதலை வரலாற்றுக் காவியத்தை ஆய்ந்து கற்க வேண்டும் நாள் அது. எல்லாரும் பொதுவாகக் கருதுவது போல், அது காங்கிரசின் இயக்க வரலாறு மட்டுமன்று; பல்வேறு அரசியல் கட்சிகளின் வரலாறுகள் மட்டும் கூட அன்று. நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியலையாக 1857-ல் நடைபெற்ற இந்தியப் புரட்சியை ஆய்ந்து கண்டார் வீரசவர்க்கார். அதனுடன் விடுதலை இயக்க வரலாறு தொடங்கினார் அவர். ஆனால், மற்றொரு பெருந்தலைவர், சிலம்புச்செல்வர் சிவஞான கிராமணியார், அதனினும் முற்பட்ட மூல அலைகளாக வேலூர் போராட்டத்தையும், ஐதர் - திப்புவின் மைசூர் போராட்டத்தையும், பாஞ்சாலங்குறிச்சிக் கட்டப்பொம்மன் போராட்டத்தையும் துருவி ஆய்ந்து மக்கள் மனக்கண்முன் நிறுத்தியுள்ளார்.

இந்திய விடுதலைப் போராட்டத்திலேயே ஓர் உயிர்ப் போராட்டமாயமைந்த வான்புகழ் வள்ளல் வ.உ. சிதம்பரனாரின் கப்பல் போராட்டத்தை இந்தியாவின் நினைவுக்குக் கொண்டு வந்தவரும் அவரே!

கட்டப்பொம்மன் போராட்டத்துக்கும் முற்பட்ட புலித்தேவன் போரெழுச்சியை ஆய்ந்து கண்டுரைத்த தலைவர்களும் உண்டு.

சிலம்புச் செல்வர் சிலப்பதிகாரத்தையே இந்தியாவின்—ஒரு நாட்டின் அல்லது தேசியக் காப்பியமாகக் கண்ணகியையே விடுதலைப் போர்களின் ஒரு முன்னோடி முரசமாகக் கருதினார்.

இந்தியாவின் ஆன்மீக விடுதலை இயக்கம் தொடங்கியது இவற்றிலன்று; உபநிடதங்களிலேயே தொடங்கி விட்டது என்று கருதினார், இந்தியாவின் தந்தையான காந்தியடிகள்.

கருதிக் காண வேண்டிய கருநிலை உண்மை

இந்திய விடுதலை நாளன்று நாம் கருதிக் காண வேண்டிய மற்றுமொரு பேருண்மை உண்டு.

இந்தியாவின் விடுதலை வரலாற்றை நாம் முழுமையாகக் காண வேண்டுமானால், இந்தியாவின் வரலாறு முழுவதையுமே ஒரு புதிய கண்ணோட்டத்துடன் ஆய்ந்து உணர வேண்டும்.

இந்தியாவின் விடுதலைப்போர் வெள்ளையராட்சியை மட்டும் எதிர்த்த போர் அன்று. வெள்ளையருக்கும் முன்னும் அயலார் இந்தியாவின் மீது படையெடுக்கவில்லையா? இந்தியரை அடிமையாக்கவில்லையா? உண்மையில் இந்தியாவின் பகைவர் வெள்ளையரோ, இந்தியாவின் மீது படையெடுத்து வந்த பிற அயலாரோ அல்லர். அப்படையெடுப்புகளுக்கு வழிவகுத்த, உதவிய இந்தியாவின் வலிமைக்கேட்டுப் பண்புகளே இந்தியாவின் உண்மைப் பகைப்புலம் ஆகும்.

இப்பண்புக் கேடுகள் எல்லாம் நம் அரசியல் விடுதலை பெற்ற அன்றே போய்விட்டனவா? இல்லை என்பதை நாம், நம் வாழ்வுப் போக்கை ஒரு சிறிது நோக்கினாலும் அறியலாம்.

ஒற்றுமைக் கேடு, சாதி மத வேறுபாட்டுப் பூசல், மூட நம்பிக்கைகள், சமுதாயத்திலே உரிமையுடையவர் — உரிமையற்றவர்—தேவைக்கே செல்வமற்று உழைத்தும் உணவு பெறாதவர் — உழையாமலே தேவைக்கு மேல் பெற்று நாட்டுக்குச் சுமையாக வாழ்பவர்—இத்தகைய வேறுபாடுகள் அடிமைத்தனத்தால் வளர்பவை மட்டுமல்ல அடிமைத்தனத்தை வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பவையும் இவையே ஆகும்.

இவற்றை நீக்குவதே, நீக்கப் பாடுபடுவதே விடுதலைக்குப்பின் நடத்தப்பட வேண்டிய மெய் விடுதலைப் போராட்டம் ஆகும்.

நாட்டின வாழ்வின் அடிப்படைப் பண்புவளர்ச்சி

விடுதலை நாட்டினத்தின் உடலானால், நாட்டின உணர்வு (தேசிய ஆர்வம்) அதன் உயிராகும். விடுதலை வரலாறு என்பது நாட்டின உணர்வு வரலாற்றின் ஒரு பாகமேயாகும். பல நாடுகளுக்கு விடுதலை வரலாறு கிடையாது. ஆனால், எல்லா நாடுகளுக்கும் முன்னோ, பின்னோ நாட்டின் உணர்வு வரலாறு ஏற்பட்டு விடும். விடுதலையும், பல சமயம் விடுதலைப் போராட்டம் தூண்டும் வகையில் அடிமைத்தனம் கூட, நாட்டின உணர்வை வளர்த்துப் பெருக்கும்.

நாட்டின் உணர்வு வரலாற்றின் ஒரு பகுதியே அரசமைப்பு வரலாறு (Constitutional History) ஆட்சி முறை வரலாறு (Administration and History of Administration) ஆகியவை.

இந்தியாவின் வரலாறு இன்னும் சரிவர எழுதப்படவில்லை. அது பெரும்பாலும் அயலாட்சி வரலாறாகவே இன்னும் இருந்து வருகிறது. விடுதலை இயக்க வரலாறோ, அரசமைப்பு, ஆட்சியமைப்பு வரலாறுகளோ, நாட்டுணர்வு வரலாறோ இன்னும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் கனவுகூடக் காணாதவை. நாட்டின உணர்வு நம் புதிய அரசுகளை இயக்கி வந்துள்ளனவேயன்றி, அயலாட்சிக் கால, அயல் மொழியாட்சிக் கால ஆட்சி வகுப்பை இன்னும் தொடவேயில்லை.

இந்தியாவின் நாட்டின உணர்வு பற்றிய வளர்ச்சி வரலாற்றில் சேர மன்னர் காலம், சோழ மன்னர் காலம், விசயநகரப் பேரரசுக் காலம், சிவாஜி காலம் ஆகியவற்றின் பங்கு வருங்கால வரலாற்றுப் புத்தாய்வாளரால் காண வேண்டிய ஒன்று ஆகும்.

நாட்டின வாழ்வின் வருங்கால வளத்திட்டம்

நாட்டின வாழ்வு என்னும் தோட்டப் பயிர் வளத்துக்கு அடிநிலம் நிகழ்காலமே. வரலாறு இதன் ஆய்விலிருந்தே தொடங்க வேண்டும். இன்றைய இந்திய வரலாற்றாசிரியரிடம் நாம் இதைக் காண முடியவில்லை. அவர்கள் இறந்த காலத்திலிருந்தே தம் கற்பனை வரலாறு தொடங்குகின்றனர். ஆயினும் நிகழ் காலத்துக்கு விளக்கம் தருவது இறந்த காலமே. வரலாற்றின் இரண்டாம் பிரிவு இதுவே. வரலாற்றுப் பயிருக்கு இந்த இறந்த கால ஆய்வு வேரும், உரமுமாய் அமைகிறது. இந்த இறந்த காலத்தின் கருவிலிருந்து நிகழ் காலத்தில் வளர்ந்த நாட்டுணர்வே அப்பயிருக்கு நீராய்க் காற்று மண்டலமாய் அமைவது. ஆனால் பயிரின் பயிர்ப்பகுதி, வாழ்பகுதி நிலத்துக்கு மேலேயே காணப்படுவது போல, வரலாற்றின் உயிர் நாட்டினத்தின் வருங்கால வளநோக்கேயாகும்.

வரலாற்றாசிரியர் இன்னும் இந்நோக்கை வளர்க்கவில்லை; வளர்க்க எண்ணவில்லை.

நம் நாட்டின் இறந்தகாலப் பண்பு வளர்ச்சி, இயல் அல்லது விஞ்ஞான வளர்ச்சி, கலை வளர்ச்சி இவற்றின் ஆய்வே நம் வருங்கால வள ஆக்கத் திட்டங்களின் வேர் முதல், கரு முதல். வெளியுலகின், பிற நாடுகளின் வளர்ச்சியை ஆய்ந்து அதனுடன் இயைப்பதே அதன் நிகழ்கால வளர்ச்சி. இந்த இரண்டின் மீதும் கட்டியெழுப்பப் படுவதே வருங்கால விஞ்ஞானம், வருங்கால வளம். இது, நம் நாட்டை வளப் படுத்துவது நமக்கு அரைப் பெருமை. இதுவே மற்ற நாடுகளையும், உலகத்தையும் மற்ற நாடுகளுடன் நின்று கொடுக்கல் வாங்கல் போட்டியிட்டு வளர்க்குமே யானால், அந்நிலை நம் நாட்டின் முழுப் பெருமை, அதன் பொங்குமாவளம் ஆகிவிடும்.



விடுதலையின் பயன் வாழ்வின் பொங்கல். அதை அடையாவிட்டால், விடுதலைக்கு நம் மாவீரர் கொடுத்த விலை வீணேயாகும்.

நம் விடுதலைப் போராட்டம் நமக்குத் தர வேண்டும் படிப்பினைகளை நாம் ஆய்ந்து காண வேண்டும். எவ்வளவு கல்லடி, குண்டடி பெற்று, எத்தனை சிறைத் தண்டனை, தூக்குத் தண்டனை, எத்தனை குருதி சிந்தி நம் முன்னோர் நமக்கு இந்த விடுதலையை வாங்கித் தந்தார்கள் என்பதை நாம் மறத்தல் கூடாது. இவ்வளவு விலை கொடுத்து அவர்கள் வாங்கித் தந்த விடுதலையை நாம் உடல் குனியாமல், உறுப்பு அலங்காமல் வாளாஅனுபவித்துக் கொண்டிருந்தால் மட்டும் நாம் அவ்வீர முன்னோர்களின் வழித் தோன்றல்கள் ஆகிவிடுவோமா?

விடுதலை என்பது நல் வாழ்வுப் பயிரின் விதை. பயிர் வளர்க்க விதையைப் பயன்படுத்தாமல், அதை அழித்து நாம் வாழலாமா?

புலிக்குப் பிறந்த பூனையாய், மலையின் மரபில் வந்த மண்ணாங்கட்டியாய் நாம் வாழ்வதா?

விடுதலை என்பது நாட்டினத்தின் உயிர்நிலை. ஆனால், அதுவே நாட்டினத்தின் குறிக்கோள் அன்று. விடுதலை மட்டுந்தான் நாட்டினத்தின் குறிக்கோள் என்றிருந்தால், நாம் விடுதலை பெற்றுவிட்ட பின் சும்மா இருந்துவிடலாம். ஆனால், விடுதலை நாட்டின வாழ்வின் தொடக்கம்; முடிவன்று; அது நாட்டின வாழ்வின் வளமன்று; வளத்திற்கான ஒரு கருவி மட்டுமே.

விடுதலை பெற்ற நாட்டில் வாழ்பவர் எல்லாம் விடுதலை வாழ்வுடையவர் ஆய்விடமாட்டார். விடுதலையை நாம் வாழ்க்கை வளமாக, நாட்டினப் பெருமையாக, நாட்டினப் பண்பாடாக மாற்ற வேண்டும். அதுவே விடுதலை பெற்றதன் பயன்.



விடுதலை என்பது காசுமுறி. அதைப் பொருளகத்தில் கொடுத்துப் பணமாக்காமல், பற்பொடி வைத்து மடக்கப் பயன்படுத்துவதா?

நாட்டின் பெருமை அதன் அளவிலோ, மக்கள் தொகையிலோ இல்லை. அதன் மக்கள் வாழும் வளத்தில், பண்புயர்வில், பிற நாடுகளுக்கு வழிகாட்டியாக நின்று மனித நாகரிக வரலாற்றில் நாம் பெறும் இடத்திலேயே அது அமைந்து கிடக்கிறது.

பெரிய குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் அப்புகழ் நிழல் கடந்து எளிதில் பெருமை நாட்டிவிட முடியாது என்று கூறப் படுவதுண்டு. நம் இந்தியாவகையில் இது முற்றிலும் உண்மை என்றே கூறிவிடலாம். உலகின் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக, அறிவில்—செல்வத்தில்—ஆற்றலில்—கலை, நாகரிகத் துறைகளில் முதல் நாடாக விளங்கியது இந்தியா. இன்றோ, பல துறைகளில் கிட்டத் தட்ட கடைப்பட்ட நிலையில் இருக்கிறோம். பல துறைகளில் பத்தாமிடத்துக்குப் பன்னிரண்டாமிடத்துக்குப் போட்டியிட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்தக் கண்ணோட்டத்துடனே இந்திய இளைஞன், இளநங்கை ஒவ்வொருவரும் இந்திய வரலாற்றை, இந்தியாவின் மொழி இலக்கிய, கலை, சமய வரலாறுகளைக் கற்க வேண்டும். கற்று, உலக நாகரிகப் பந்தய ஓட்டத்தில் இந்தியா அடைந்த பெருந்தோல்விகளுக்குக் காரணமான தீங்குகளைக் கண்டுபிடித்து அவற்றை நீக்க வகை காணவேண்டும்.

விடுதலை நாள், குடியரசு நாள் ஆகிய விழா நாட்களில் நாம் இந்நற் பணிகளைத் தொடங்கிவைக்க வேண்டும்.

ஏன் இந்தப் பொருந்தா நிலை?

உலக வாழ்வில் நம்மைவிட மிகப் பிந்தி வாழ்க்கை தொடங்கியவர்கள், நம்மைவிட் மிக மிகக் குறைந்த வளமுடையவர்கள் நம்மை முந்திக்கொண்டு போயிருக்கிறார்களே! அவர்கள் முற்போக்கின் மறை திறவுகள் எவை என்பதை நாம் அறிய வேண்டும்.

உலகத்துக்கெல்லாம் செல்வமும், நாகரிகமும், கலையும் அறிவும் வழங்கிய நாடு இந்தியா. எல்லா நாடுகளுக்கும் உணவும், உடையும், தொழில் வளங்களும், அணிமணிப் பூண்களும் வழங்கிய நாடுதான் இது. ஆனால், மொழியில், கலையில், அறிவியலில், தொழிலில் எதிலும் பார்த்துப் பார்த்துப்பின் பற்றும் நிலை, கெஞ்சி வாழும் நிலை ஏற்பட்டதேன்? அயல் நாட்டுப் பொருள்தான் நல்ல பொருள் என்ற நிலையும், அந்த நல்ல பொருளும் இந்நாட்டினர்களுக்கு மட்டும் எட்டாப் பொருள் என்று மக்கள் ஏங்கித் தவிக்கும் நிலையும் இன்று வளர்ந்திருப்பதேன்? இவற்றுக்கு நாம் விடைகாண வேண்டும். அந்த விடையின் மீதே நம் நாட்டுப் பணி, நாட்டுத் திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

நம் வருங்கால நாட்டுவளம் என்னும் கட்டடத்தைக் கட்டியமைக்க நமக்கு வேண்டும் செங்கற்களாக, மரப்பாளங்களாக, காரைச் சாந்தாகப் பயன்பட வேண்டியவை இவை.

பேரறிஞர் அண்ணாவின் சிவாஜி நாடகம் தரும் படிப்பினை

ஒரு நாட்டின் பெருமைகள் கூட அந்நாட்டின் நல்வாழ்வு ஆகமாட்டா என்பதைப் பேரறிஞர் அண்ணா தம் சிவாஜி நாடகம் மூலம் இந்திய நாட்டுக்கு அளித்துள்ள அரசியற் படிப்பினை காட்டுகிறது.

சிவாஜி கால இந்தியாவில் உலகச் செல்வத்தில் முக்கால் பாகம் இந்தியாவிலேயே குவிந்து கிடந்தது. இந்தியாவின் தொழில் வளத்தை நம்பியே உலகம் அன்று வாழ்ந்தது. இந்தியாவின் கப்பல்களே அன்று உலகத்தின் தலைசிறந்த கப்பல்கள். சிவாஜி தன் நிலப்படையாலும், பெற்ற வீரத்தாலும், வட திசையில் முகலாயச் சக்கரவர்த்தியின் படைகளையும், தென்னகத்தின் சுல்தான்கள் படைகளையும் துரத்தித் துரத்தியடித்தான். அவன் கப்பற்படை போர்ச்சுக்கீசியரையும், டச்சுக்காரரையும், ஆங்கிலேயரையும் மராட்டிய நாட்டின் பக்கம் அணுகவொட்டாமல் தடுத்தது. அவன் பக்தியையும், ஒழுக்க உயர்வையும், தூய வீரத்தையும், கண்ட சக்கரவர்த்தியாகிய ஔரங்கசீப்பே அவனைத் தன்னோடொத்த சக்கரவர்த்தியாக ஏற்றுக் கொள்ள இசைவுதர ஆர்வங்கொண்டார்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் வழிவந்த மாபெரும் பக்தன்தான் சிவாஜி. அவர்கள் பாடலைப் பாடிக் கொண்டுதான் அவன் வாட்போரிட்டான். மக்கள் அவனை நேசித்தனர். மாற்றார் அவனை மதித்தனர். ஆயினும், சதாராவில் ஒரு தடவை, வேலூரில் ஒரு தடவை, தஞ்சையில் ஒரு தடவையாக மூன்று தடவை அவன் முடிசூட்டி மூவரசாள முயன்றும், மக்களின் மட மூடநம்பிக்கைகளின் ஆட்சி காரணமாக அவ் வீரப் பெருமகனால் இந்தியாவின் விடுதலையாட்சியை, நல்லாட்சியை நிறுவ முடியவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த அரசியற் பாடத்தைத் தமிழரேயன்றி, மராட்டியரும் பிற இந்தியரும் அறிந்து புது நாட்டின வாழ்வு வகுக்கும்படியான சூழல் விடுதலை நாளில் உருவாக வேண்டும்.

முப்பால் முதல்வர் கண்ட கனவு

முடியாட்சிக் காலம் மலையேறிவிட்டது. இது குடியாட்சிக் காலம். நம் ஆட்சியை நாமே அமைத்து, நம் ஆட்சியாளரை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய கடும் பொறுப்பான நிலை நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. வீடுகட்ட நினைப்பவன் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்வதுடன் தக்க பொறியரைத் தேடித் திட்டமும், தக்க கொத்தரை—தச்சரைத்தேடி அவர் உதவியும் பெறுவது போல, நம் வருங்கால வளத்தை, நம் ஆட்சியைக் கட்டமைக்க வேண்டிய நாம் நம் நாடு பற்றி, நம் நல்லாட்சி முறை பற்றி, கல்வி பற்றி, கலை பற்றி, நம் தேவைகள், நிலைகள்பற்றி ஆட்சித் தலைவரை, அறிஞரை, கலைஞரை, நம் சமயத் தலைவரை அணுகித் தக்க அறிவுரை தருமாறு அவர்களைப் பணிக்க வேண்டும்.

இக்காலத்தில் மக்கள்தான் மன்னர். இனி நம் நாட்டு மக்கள் எவரையும் கும்பிட்டுப் பணிந்து வாழ்வது தகாது. அறிஞர், கலைஞர், ஆட்சியாளர் ஆகிய எல்லாரையும் தாமே மன்னராயிருந்து மக்கள் உத்தரவிட்டு வேலை வாங்க வேண்டும். அவர்களைக் காண நடுங்கும் நிலை இருக்கக் கூடாது.



நம் பழந்தலைவர்கள், அறிஞர்கள் அயலாட்சி, முடியாட்சி, ஆகியவற்றை வெறுத்தனர். தன்னாட்சி, குடியாட்சி ஆகியவற்றைக் கனவு கண்டனர். ஆனால் இன்றைய நம் அறிஞர்கள், நம் ஆட்சியாளர்களோ கூடக் குடியாட்சி தாண்டிப் பொது நெறியைப் (சமதருமத்தை), பொது நெறி தாண்டிச் சம நெறியை (பொதுவுடைமையை) இவற்றையும் தாண்டித் தாய்மை யாட்சி அல்லது வாழ்நல ஆட்சியை (Welfare Government) நாடிக் கனவு காணத் தொடங்கிவிட்டனர்.

மக்களிடையே மக்களறிஞரின் கனவு குடியாட்சி ஆகும்.

ஆட்சியாளரிடையே ஆட்சியறிஞரின் கனவு தாய்மை ஆட்சி அல்லது வாழ்நல ஆட்சி ஆகும்.

இந்த இரண்டு கனவுகளும் இணைந்த கனவாட்சி ஒன்று உண்டு. அதுவே பொங்குநல ஆட்சி, திருவள்ளுவர் கண்ட அருளன்பாட்சி.

தன் வருங்காலக் காதற் கணவன் இப்படி இருக்க வேண்டுமென்று நங்கை கனவு காண்கிறாள், கனவு ஓரளவேனும் நிறைவேறுமோ என்று ஏங்கித் தவங்கிடக்கிறாள்.

தன் வருங்காலக் காதற் காரிகை இப்படி இப்படி இருக்க வேண்டுமென்று நம்பியும் கனவு காண்கிறான். கனவு ஒரு சிறிதளவேனும் நிறைவேறுமோ என்று ஏங்கித் தவங்கிடக்கிறான்.

இருவரும் சந்திக்கின்றனர்.

‘ஆகா! நான் கண்ட கனவெலாம் கடந்து நிற்கும் காளை இவன் அல்லனோ?’ என்று மகிழ்கிறாள் அவள். ‘ஆகா! நான் கண்ட கனவெலாம் கடந்து நிற்கும் காரிகை இவள் அல்லவோ?’ என்று மகிழ்கிறான் அவன்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு நம் முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகிய இருதரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். இருவரும் ஒற்றுமைப்படாவிட்டால் நாடு நாசமாகிவிடும். தொழிலில் முன்னேற்றம் அடைந்த பிறகே இங்கிலாந்தில் சமதர்மம் வந்தது. நாட்டின் தொழில்களை வளர்ச்சியுறச் செய்த பிறகுதான் நாம் சமதர்ம முறையில் பங்கீடு செய்யும் முயற்சியில் இறங்க வேண்டும்.

நாட்டின் வலிமை நமது ஒற்றுமையால் மட்டும் அமைந்துவிடாது; நாளையத் தினம் நமது கடுமையான உழைப்பால் உருவாகும் முன்னேற்றமும் வளர்ச்சியுமே வலிமை மிக்க இந்தியாவை உலகுக்கு உருவாக்கிக் காட்டும்.

—சர்தார் படேல்.

பொன்மலர் மணமும் பெற்றது போன்ற அரிய பெரிய பொருத்தம் இது.

குடிமக்கள் கனவார்வ அவாக்கள் கடந்த பண்புடைய அரசும் ஏற்பட்டு, அரசின் கனவார்வ அவாக்கள் கடந்த குடிமக்கள் பண்பும் அமைந்துவிட்டால்—இந்த இணைவு மேற்கூறப்பட்ட பொன்மலர் மணம் பெற்ற இணைவினையே நினைவுபடுத்தத் தக்கது.

குடியாட்சி நலமும் வாழ்நல ஆட்சியின் நலமும் முற்றிலும் ஒருங்கிசைந்த இத்தகைய மணந்திகழ் பொன்மலர் போன்ற ஆட்சி முறையே திருவள்ளுவர் பெருமான் கனவு கண்டு, முப்பால் ஏட்டின் மூலம் நமக்கு அறிவித்துச் சென்றுள்ள ‘பொங்கல் ஆட்சி’ ஆகும்.

ஆட்சி எப்படி இருக்கவேண்டும் என்ற இலக்கணம் மட்டுமன்றி, மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணமும் ஒருங்கே கூறும் உலகின் ஒரே அரசியல் ஏடு திருக்குறள்!

இந்தியாவின் வருங்கால வளத்தின் மறை திறவு

இந்தியா, நாகரிகத்தில் பழம் பெருமை சான்ற நாடு என்பதை எவரும் ஒப்புவர். ஆனால், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகவே அது ஆட்சியிலும் மொழியிலும், சமயத்திலும் கலையிலும், அறிவியலிலும் விடுதலை இழந்தே வாழ்ந்து வந்திருக்கிறது. இன்று அது பெயரளவுக்கே விடுதலை, அதுவும் அரசியல் விடுதலை மட்டுமே அடைந்துள்ளது.

உண்மையான முழு விடுதலையும், பழம் பெருமை தாண்டிய வளமும் இந்தியா பெற்று உலக நாயகமாக வயங்க வேண்டுமானால் எல்லாப் பெருமைகளும் இருந்தும் இந்தியா ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டு, அடிமைப்பட்டு, அவதியுற்றதன் காரணத்தை நாம் உணர வேண்டும்.

இந்தியாவின் மற்றப் பெருமைகள் எல்லாம் அதற்குப் பெருமை தருபவை மட்டுமே; பெருமை காப்பவையோ, பெருமை வளர்ப்பவையோ அல்ல—இந்தியாவுக்குப் பெருமை தருவதுடன் நில்லாது, அதன் பெருமை காக்கவும், அப்பெருமையை இன்றும், இன்னும் இனிமேலும் வளர்க்கவும் வல்ல ஆற்றலுடைய செல்வம் ஆதிவேதமாகிய முப்பாலோடு, தமிழ் மொழி, தமிழிலக்கியம் ஆகியவை மட்டுமேயாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் இன உள்ளத்துக்குள்ளே பெட்டிக் கனவுகளாகப் பூட்டி உறையிட்டுச் சுருட்டி வைக்கப்பட்டுள்ள திருவள்ளுவரின், தமிழரின் இப் பொங்கலாட்சிக் கருத்தை இந்தியாவின் அறிஞர் பெருமக்கள் - தமிழறிஞர் பெருமக்கள் உதவியுடன் திறந்து எடுத்துக்கண்டு பயன் படுத்துவார்களானால், தமிழகம் இந்தியாவிலும், இந்தியா உலகிலும் நாகரிகம் வளர்த்த தனது பழம் பெருமை தாண்டிப் புதுப் பெருமையை இன்றும் இனியும் நாட்டல் உறுதி என்னலாம்!

BHEL:
வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்திப் பணியில்...

BHEL/CPO-01/72-73
நல்ல காலம் பொறக்குது!
பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
(இந்திய அரசின் ஓர் நிறுவனம்)

இந்தியவிடுதலை நாள் இனிய நினைவுகள்

திரு.வி.க.வின் கனவுக் கவிதை

திரு சி. வேங்கடசாமி

“ஆடுகின்ற மயிற்குழுக்காள்!
  ஆடல் நுட்பம்
அருங்கலையை முதலீன்ற
  அன்னை எங்கே?
பாடுகின்ற புள்ளினங்காள்!
  பண்ணின் பண்பைப்
பாரினுக்குப் பரிந்தளித்த
  பாவை எங்கே?
ஓடுகின்ற புயல்திரள்காள்!
  உரிமை நீர்மை [!]
உலகச்சகோ தரமென்ற
  ஒருத்தி எங்கே?
தேடுகின்றேன், தேவிஎங்கே?
  தேவி எங்கே?
திரிகாற்றே! நீயாதல்
  செப்பாய் கொல்லோ?”

அன்பின் திருவுருவாம் அன்னையைத் தேடி அலைகிறான், துடிப்புள்ள ஓர் இந்தியன். காடு மேடுகளையெல்லாம், கழனி வரப்புகளையெல்லாம், கடந்தோடுகிறான்; எதிர்ப்பட்ட பொருள்களையெல்லாம் ஏக்கத்தோடு கேட்டுக் கொண்டே தேடுகிறான்; தன் தாயின் புகழைச் சொல்லிக் கொண்டே ஓடுகிறான்.

இந்தியத் தாய் தவிர, மற்றத் தேவியர் எல்லாம் ‘உலகச் சபையில்’ மதிப்புடன் வீற்றிருக்கும் காட்சியைக் காண்கிறான்.

“அரியிருக்கை யேறிமுடி
  அணிந்துயர்கோல் தாங்கி,
ஆண்மையொடு வீற்றிருக்கும்
  அரசிகளைக் கண்டேன்;
அரிவையர்கள் முகம்நோக்கி
  யார்யாரென் றுணர,
அருகணைந்தேன்; தெரிந்தவரும்
  அருளினர்இவ் வாறே”

அங்கே, கம்பீரமாகக் கொலு வீற்றிருந்தவர்கள் யார் யார் என அறிமுகம் செய்யப் பெறுகின்றனர்.

“நானூறாற் பத்தாண்டில்
  நலமுற்ற ஜப்பான்
நாயகிநான்; பெருநதிகள்
  நானிலத்தில் பூண்டே
ஆறுத வளமுடைநான்
  அமெரிக்கச் செல்வி;
அடுக்கடுக்காய்க் கலைவினைகள்
  ஆக்குஜெர்மன் யானே;
காணுடுங் கனிமொழியும்
  ஓவியமும் காதல்
கவின்பிரான்சின் திருமகள்யான்,
  காண்கவென முறையே
தேனூறும் மலர்வாயால்
  தெரிவித்தார் தம்மைச்
சிரித்தொருத்தி முடிவினிலே
  செப்பியதைக் கேண்மோ!”

ஆம், ஆணவச் சிரிப்போடு தன்னைத் தட்டிக் கேட்கும் தைரியம் உலகில் யாருக்கும் இல்லை என்ற இறுமாப்போடு தனதுசாம்ராஜ்ய ஆட்சிக்கு எப்போதும் அழிவே இல்லை என்ற மமதையோடு— பிரிட்டன் மாது பேசுகிறாள் :

“என்னருமை இந்தியனே!
  என்னையறி யாயோ?
என்னாட்சிக் கதிர்மறைதல்
  எப்பொழுது மில்லை;
என்னிலத்தின், என்கடலின்,
  என்வெளியின் பரவல்
எவர்க்குண்டோ? இவ்வுலகில்
  எங்குமென தாணை;
உன்னலத்தின் பொருட்டாக
  உன்னையுமே யாளும் ஓரரசி”

எத்தகைய அறிமுகம்! இந்திய மக்களின் நன்மைக்காக! பிரிட்டன், இந்திய நாட்டையும் ஆள வேண்டியுள்ளதாம்! ஏகாதிபத்தியவாதத்தின் செருக்கு— மேட்டுக் குடிமனப் பான்மை— அதில் எதிரொலிக்கிறது! ஆதிக்க முடைநாற்றம், அதில் அப்பட்டமாக வீசுகிறது!!

இதைக்கேட்ட இந்தியன் உள்ளம், எவ்வளவு புண்பட்டிருக்கும்? எப்படிக் கொதித்திருக்கும்? அடிமையில் கட்டுண்டு வாடிய இந்தியத் தாயின் நிலையை நினைத்து நினைத்துக் கண்ணீர்வடிக்கிறான். அந்த அழுகையிலேயும், தன்தாய் நாட்டின் பழம் பெருமையை எண்ணி எண்ணி ஏற்றம் பெறுகிறான்: அப்போது தான்,

“ஆடுகின்ற மயிற்குழுக்காள்!
  ஆடல் நுட்பம்
அருங்கலைகள் முதலீன்ற
  அன்னை எங்கே?”
பாடுகின்ற புள்ளினங்காள்!
  பண்ணின் பண்பைப்
பாரினுக்குப் பரிந்தளிக்கப்
  பாவை எங்கே?”

என்று, அவலப்பண் பாடத் தொடங்குகிறான்.

“ இடமகன்ற இந்நிலத்தில்
  என்தாய் எங்கே?
எங்கே?என் தாயெங்கே?
  எங்கே? எங்கே?”

என்று துடிதுடித்துக் கேட்கிறான்.

அவன் கேள்வியில் அலறல் எங்கும் எதிரொலிக்கிறது! பதில் சொல்வார் யாரும் இல்லையா?— ......நேரம் கழிந்து கொண்டே சென்றது. இறுதியில், ஏதோ ஒரு மூலையிலிருந்து பதில் வந்தது; மிகவும் ஏக்கமான குரலோடு, தழுதழுத்த விம்மல் ஒலியுடன், உருக்கமான பதில் வந்தது. உருவம் தெரியவில்லை. ஆனால்; குரல் மட்டுமே கேட்டது:--

— —“மைந்தா!
இங்கேஎன் பழங்கதைகள்
  இயம்புவதால் என்னே?
என்நிலையோ நிர்வாணம்;
  எச்சபையார் ஏற்பார்?
பொங்கார முடிசெங்கோல்
  பூண்பதென்றோ போச்சு!
பொலிவுடலும் பொன்உடையும்
  புரிஉணவும் போச்சு!



வளமான வளர்ச்சிக்கும்
அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

ரோவிமிக்ஸ்

மற்றும்

ரோவிஸால் ஓரல்



ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:

உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் சிக்கனமாகவும் அளிக்க கனிஜங்களால் கெடாத ரோவிமிக்ஸ் விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

ரோவிஸால்—அதிகப்படியான விடமின்களுக்கு:

ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிக சூடு, அதிக குளிர்ச்சி, ஈரம் அல்லது வரட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்துக்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள்:
ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
28, [illegible]



கங்காளி; துச்சிலுள்ளேன் ;
கம்பலையே ஆச்சு!
கடும்பசிநோய் முடுக்குகின்ற
கர்மம்என தாச்சு!''

தன் அவல நிலையை, உள்ளத்தை உருக்கும் வகையில் இவ்வாறு எடுத்துரைக்கிறாள், இந்தியத் தாய்.

உலகநாடுகள் பலவும் உரிமைப் பொலிவோடு வீற்றிருக்கும் பேரவையில், அடிமைநாடு, அப்போது எப்படி இடம் பெற முடியும்?

''தன்மானம் இழந்து, ஆங்கில நாட்டு ஆதிக்கத்தில் வாடித் தவித்த நிலைமாறி, விடுதலை பெறும் நன்னாள் எப்போது வருமோ?'' என்ற ஏக்கம், அன்றைய இந்தியத் தாயின் பதிலில் காண்கிறோம்.

மேலும், இந்தியத் தாய், தன் நிலையை விளக்குகிறாள்:—

வடிவினிலே பெரியள்யான்;
வயதினிலே பெரியள்;
வளத்தினிலும். வண்மையிலும்,
மக்களிலும் பெரியள்;
கடியரணில், மலையரணில்,
கடலரணில் பெரியள்;
காலினிலே தளைவந்த
காரணந்தா னென்னே?
படியினிலே இல்லாத
பாழான சாதி
பகுப்புடனே, தீண்டாமை,
பாவையர்தம் அடிமை
கொடியஇவை குடிகொண்டு
கொடிகொடியாய்ப் படர்ந்தே
கொல்லவுடன் பிறப்பனைக்
குலைத்ததென்றன் வாழ்வே.

தன் பழம் பெருமைக்குக் கேடு விளைவித்த தீய பண்புகளை, அடியோடு நீக்கும் தொண்டில் ஈடுபடுமாறு, தம் மக்களை இந்தியத்தாய் வேண்டுகிறாள்:

''என்னாட்சி பரிணமிக்க
எழுங்கிளர்ச்சி பலவே,
ஏராச்சு தேசியத்தில்
இருப்பதென்றன் ஆட்சி;
தன்னாட்சி அந்நியத்தைத்
தாங்குவதி வில்லை;
தயையின்றி அந்நியரைத்
தாக்கலிலு மில்லை;
மன்னாட்சி அறநெறியில்
மலர்ந்திடவே வேண்டும்;
மாக்கலைகள் வாழ்விடையே
வளர்ந்திடவும் வேண்டும்;
நன்னாட்டுத் தொழிலரசு
நலம்பெறவே வேண்டும்;
நான்சபையில் வீற்றிருக்கும்
நாள்அந்த நாளே.''

• • •

(மன் ஆட்சி : நிலைபெற்ற ஆட்சி.
கங்காளி : எலும்புருவானவள்)

''தாயின் காட்சி'' என்ற தலைப்பில், ''தமிழ்த் தென்றல்'' திரு. வி.க. அவர்கள் 1931-ஆம் ஆண்டில் இயற்றிய கவிதைக் கனவின் ஒரு பகுதியே, மேலே காண்பது.

அடிமை இந்தியாவின் அவல நிலைமையை—உணர்ச்சிக் கொந்தளிப்பை—கலை நயத்துடன் இக் கவிதை, தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டியது. அன்று மட்டும் அல்ல, இன்றும் கூடத்தான். இந்தியா விடுதலை பெற்ற பின்னும், இத்தகைய கவிதைகள் சாகாவரம் பெற்று விட்டன.

உணர்ச்சித் துடிப்புகளுக்கு அழியாக் கலை உருவம் தரும் ஆற்றல், உண்மைக் கவிஞர்களின் தனிச்சிறப்பு. அத்தகைய கவிஞர்கள் வரிசையில் திரு. வி. க. சிறப்பிடம் பெற்றுள்ளார்.

வறுமைத் தேள் கொட்டினாலும், பழி என்னும் பாம்பு கடித்தாலும் பதறாமல் சலிக்காமல் விடுதலைப் போர் நடத்தியவர் தம் வீரச் செயல்களைப் படிக்கும்போது கோழையும் வீரனாகிறான்; கூனனும் சற்று நிமிர்ந்து நிற்கிறான்.

ஆம். அவர் கண்ட கனவு—கவிதைக் கனவு—பலித்தது. அவர் போன்ற எண்ணற்ற சான்றோர்களின் சீரிய பணி வீண் போகவில்லை. அடிமை இந்தியாவின் விலங்கு முறிந்தது. நாம் விடுதலை பெற்றோம். இந்தியத் தாய், உலகப் பேரவையில் தனிச் சிறப்புடன் வீற்றிருக்கும் காட்சியை, திரு. வி. க. அவர்கள், தமது வாழ்நாளிலேயே காண முடிந்தது. ஆம்! கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., பாரதியார் ஆகியோர்க்குக் கிடைக்காத வாய்ப்பு திரு. வி. க. வுக்குக் கிடைத்தது.

அதுமட்டுமல்ல: ''பெண்ணின் பெருமை'' வளரத் தொண்டாற்றிய திரு. வி. க. அவர்கள் மனம் மகிழ, உலக நாடுகள் பேரவையின் தலைவியாக ஓர் இந்தியப் பெண்மணி (பிரதமர் நேருவின் சகோதரி திருமதி விசயலட்சுமி பண்டிட்) வீற்றிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

மேலும், நம் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் (பிரதமர் நேரு தொடங்கி, திருவாளர்கள் ஆர்க்காடு இலட்சுமணசாமிமுதலியார், இராமசாமி முதலியார், கோவை ஆர். கே. சண்முகம் செட்டியார், ஜி. பார்த்தசாரதி, பெனகல் நரசிங்கராவ், மால்கம் ஆதிசேஷய்யா, இராஜம்மாள் தேவதாஸ் முதலியோர்) உலக நாடுகள் சபையின் பல்வேறுநிறுவனங்களில் சிறப்பாகப் பணியாற்றி உலகப் புகழ் பெற்றுள்ளனர். அண்மையில், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் நடத்திய ''உலகத் தமிழ் மாநாடு'' வாயிலாக, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தமிழ் முழக்கம், உலகப் பேரறிஞர்களிடையே ஆக்கம் பெற்று வருகிறது. திருவள்ளுவரின் குறள் உலகெங்கும் பரவி வருகிறது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள், இந்தியா விடுதலை அடைந்த போது, திரு. வி. க. அவர்கள் பெருமகிழ்ச்சி. அடைந்தார். ஆயினும், அம்மகிழ்ச்சியின் ஊடே மனக்குறை ஒன்று நிழலாடியது. திரு ம. பொ. சி. அவர்களை ஆசிரியராகக் கொண்டு, 15–8–1947-ல் வெளி வந்த 'தமிழ் முரசு' இதழில், மிக நுட்பமாக இதைக் கோடிட்டுக் காட்டி, அவர் பின் வருமாறு அப்போது எழுதினார்:—

''பிரிட்டிசு ஆட்சி நம்மை விட்டு அகன்றது உண்மை. ஆனால், சாம்ராஜ்யம் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

முன்னொருகால் வட நாடு சிதறுண்டு வருந்திய போது, அதையும்—முழுநாட்டையும் — பண்படுத்தும் முயற்சி, தென்னாட்டிலிருந்தே எழுந்தது. அம்முயற்சி மீண்டும் காலத்துக்கேற்ற முறையில் எழுவதாக!''

விடுதலை பெற்ற இந்தியாவின் வெள்ளி விழாவைக்கொண்டாடும் இந்நாளில், தமிழ்ச் சான்றோர் திரு. வி. க. அவர்கள் நினைவூட்டிய கருத்துகள், சிந்தனைக்குரியன.



இந்திய விடுதலை நாள்

தி. சு. அவினாசிலிங்கம்

இந்திய விடுதலை வரலாறு ஓர் உணர்ச்சிக் காவியமாகும். பன்னூறு ஆண்டுகளாகப் பல்வேறு நாடுகள் அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுதலை பெற்று வந்திருக்கின்றன. பேரரசுகள் பல வாழ்ந்து மடிந்திருக்கின்றன. கிரேக்க, ரோமாபுரிப் பேரரசுகள் அத்தகையவை. நாடுகள் பலவற்றை அடிமை கொண்டு ஆணவத்துடன் ஆண்டு வந்த பேரரசுகள் வலுவிழந்து கிடக்கும் நேரம் பார்த்துக் கிளர்ச்சி செய்து தமது தளையறுத்துக் கொண்ட நாடுகளும் உண்டு.

அண்மைக் கால வரலாற்றில், அப்படி விடுதலை பெற்ற நாடுதான் அமெரிக்காவாகும். இந்த முறையில்தான் பல நாடுகள் விடுதலை அடைந்திருக்கின்றன. ஆனால், இந்தியா விடுதலை பெற்ற விதம் ஒப்புயர்வற்றது; உலக வரலாற்றில் ஈடற்றது; இணையற்றது.

மனித குல வரலாற்றிலேயே முப்பது கோடி மக்களைக் கொண்ட ஒரு சமுதாயம், கத்தியின்றி இரத்தமின்றிக் கனிவு கொண்ட அன்பினால் அந்நியர் ஆட்சியை அகற்றிட முடியும் என்று உலகுக்கு உணர்த்திய உயர் நெறியாளர் ஒருவரை உலகம் முதன் முதலாகக் கண்டது. அன்பு நெறி போதித்த அறநெறியாளர் பலர் அவருக்கு முன்னர் வாழ்ந்தனர். புத்தர், இயேசு, நபிநாயகம் ஆகியோர் அவருக்கும் முந்தியே நன்னெறி காட்டிய நல்லோராவர். அவர்களுக்குப் பின் வந்த ஆற்றலாளர், காந்தியடிகளாவர்.

நமது காலத்தில், இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்பு நெறியையும், அற வழியையும் காந்தியடிகள் போதித்தார். அறிவாளர்கள் கூட அதை அலட்சியம் செய்தனர்; அரைப் பைத்தியக்காரனின் அடிப்படையற்ற கனவு என்று கிண்டல் செய்தனர். ஆனால், சாதாரண மக்கள் அவரைச் சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரிந்தது. அவரை நம்பினர்; அவரைப் பின்பற்றினர்; அல்லல் பலவற்றுக்கிடையிலும் அவர் வழியில் சென்றனர்.

அழிவுச் சக்தி மிக்க ஆயுதக் குவியலின் உச்சத்தில் நின்று அகிலத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்ட ஓர் ஏகாதிபத்தியப் பேரரசை நாம் எதிர்த்து நிற்கலானோம். பயங்கரப் படைகளின் குவிப்பு அங்கே; படைபலம் எதுவுமற்ற பாமரர்கள் இங்கே; ஆனால், காந்தியடிகளோ நமது பலவீனத்தையே நமது பலம் நிறைந்த சக்தியாக்கினார்; பகைவரின் படை பலத்தைப் பலமிழக்கச் செய்தார்.

அவர் கூறினார்: “அஞ்சாதீர்; ஒன்றுபட்டு நில்லுங்கள். அமைதியைக் கடைப்பிடியுங்கள். மாற்றாரிடம் பகைமை கொள்ளாதீர்; கசப்புக் கொள்ளாதீர். நீங்கள் ஓர் ஆட்சியின் அமைப்பைத்தான் எதிர்த்து நிற்கிறீர்கள்; ஓர் ஆளை அல்ல; இனத்தையுமல்ல; எதிர்த்தரப்பு மக்களையுமல்ல.” அவரது வார்த்தைகள் மந்திரச் சக்தி பெற்று மக்களை ஆட்டுவித்தன. குறுகிய காலக் கட்டத்திற்குள் நாடே மாறியது. மக்களின் மனத்தில் பெரியதோர் மாற்றம் ஏற்பட்டது. அவர்கள் நிமிர்ந்து நின்றனர்; நேர் வழியில் சென்றனர். புதிய தெம்பு பெற்றனர்; திடம் கொண்டனர்.

அவரது அமைதி வழியும், ஒத்துழையாமை இயக்கமும் அரசாங்கத்தை முடமாக்கிப் போட்டன. ஆத்திரங் கொண்ட அரசினர் போராடிய மக்களைச் சிறையிலே அடைத்தனர்; சித்திர வதை செய்தனர்; அடித்து நொறுக்கினர்; சுட்டுப் பொசுக்கினர். அத்தனை இடர்களையும் மக்கள் ஏற்றுக் கொண்டனர்; எதிர்த்து நின்றனர். பதிலடி கொடுத்துப் பலாத்காரத்தில் இறங்கிட முனையவில்லை. அதனால், அரசின் படையும், துப்பாக்கிக் கருவிகளும் பயனற்றுப் போயின; செயலற்று நின்றன. செய்வதறியாது திகைத்தனர், பிரிட்டிசுப் பேரரசினர். தமது ஆட்சிச் சகடத்தை இந்தியாவில் இனி ஓட்டிட முடியாது என்பதை உணர்ந்தனர்; மக்கள் சக்திக்கு மதிப்பளித்தனர்; ஆட்சி மன்றம் விட்டு இறங்கினர். நாட்டைவிட்டு வெளியேறினர்.

இவ்வாறு, உலக வரலாற்றிலேயே குருதி கொட்டாமல், கோரங்கள் நேராமல் ஒரு நாடு விடுதலை பெற்றது; அந்நியர்கள் அன்பர்களாகவே அகன்று போயினர்.

விடுதலை பெற்றதோடு நமது பணி முடிந்துவிடவில்லை; ஒரு நாட்டின் பணி ஒருபோதும் முடிவதில்லை. அது முடிவற்றது; மூப்புமற்றது.

விடுதலையின் பொருளும் பயனும் பொது மக்கள் அனைவர்க்கும் உணர்த்தப்பட வேண்டும். நாட்டிலுள்ள பல கோடி மக்களும் முறைவாழ்வு வாழ்ந்து இன்பம் பெற்றிட வழி வகுப்பதே நமது குறிக்கோள். வறுமையை விரட்ட வேண்டும்; அறியாமையை அகற்ற வேண்டும். தன் தனித்திறனை வளர்த்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் நல்வாய்ப்பினை நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் நாளும் நல்கிட வேண்டும்.

1947-ஆம் ஆண்டு விடுதலை நாளுக்கு முந்திய நாள் நள்ளிரவில், அதாவது ஆகஸ்டுத் திங்கள் 14-ஆம் நாள் இரவில் விடுதலை பெறப்போகும், இந்திய அரசியலமைப்பை உருவாக்கக் காத்திருந்த அரசியலமைப்புக் குழுவின் உறுப்பினர்களிடம் உரையாற்றியபோது நேரு அவர்கள் கூறியதாவது :—

“உலகமே கண் மூடி உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்தியா விழித்தெழுகிறது; உயிர் பெறுகிறது; விடுதலையடைகிறது. வரலாற்றில் எப்போதோ ஒரு முறை அரிதாக வருகின்ற அற்புதக் காலக் கட்டம் இப்போது வந்துள்ளது. ஒரு காலக் கட்டம் முடிந்து, நீண்டநாள் நசுக்கப் பட்டுக்கிடந்த நாடு நிமிர்ந்து நிற்கிற பொற்காலம் பிறக்கிறது. இப்புனித வேளையில் இந்தியாவுக்கும், இந்திய மக்களுக்கும், மனித குலத்துக்கும், தூய பணியாற்றுவதற்கு நம்மை ஒப்படைத்து உறுதி மொழி எடுப்பது ஏற்புடைய ஒன்றாகும்.”

“வரலாற்றின் தொடக்க காலம் முதல் இந்தியா அறிவு நாட்டமும், ஆக்க முயற்சியும் கொண்டு வெற்றிகள் பலவற்றை அடைந்திருந்தது; சிலவற்றில் தோல்வியும் கண்டிருக்கிறது. எனினும், வெற்றி தோல்விகளுக்கு இடையிலும் தனது இலட்சிய வேட்கையை விட்டு விடவில்லை. தனது சொத்தாகவும், தனது பலமாகவும் அமைந்துவிட்ட உயர் நெறிகளை மறந்து விடவுமில்லை. தனது வீழ்ச்சிக் கட்டத்திலிருந்து இந்தியா இன்று விடுதலை பெறுகிறது. இன்று நாம் கொண்டுள்ள வெற்றி, நாம் பெற வேண்டிய பல்வேறு வெற்றிகளுக்கு ஒரு முன்னோடி; முதற்படி. இந்த அரிய வாய்ப்பினைக் கொண்டு எதிர்காலத்தில் நம்மை எதிர்நோக்கி விடப்படுகின்ற அறைகூவலை எதிர்த்து வெற்றி பெறுகிற தெம்பும், அறிவுத் தெளிவும் நாம் பெற்றிருக்கிறோமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.”

“விடுதலையும், ஆளும் அதிகாரமும் நமக்கு மிகப் பெரிய பொறுப்பைச் சுமத்துகின்றது. அந்த முக்கியப் பொறுப்பு அதிகாரம் பெற்ற மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அதிகாரம் நிறைந்த இந்த அரசியல் அமைப்புக் குழுவிடமே இருக்கிறது. விடுதலை பெறுவதற்கு முன்னர் நாம் இன்னல் பல ஏற்றுள்ளோம். அதை நினைத்தால் இதயம் வேதனையால் விம்முகிறது. வேதனை நினைவுகள் நிலைத்தும் விட்டன. என்றாலும், நடந்து முடிந்தவை எல்லாம் கடந்த காலத்தவையே. இன்முகம் காட்டி நம்மை அழைப்பது எதிர்காலமே!”

“எதிர்காலம் என்பதும் வெறும் இன்பப் பொழுதுபோக்கல்ல. நாம் கொடுத்து வந்திருக்கிற, கொடுக்கப் போகிற உறுதி மொழிகளை எல்லாம் செயற்படுத்திச் சாதனை புரிய வேண்டிய பொறுப்பு மிக்க காலமாகும். இந்தியாவுக்குத் தொண்டு என்பது வாடிக் கிடக்கும் கோடிக் கணக்கான மக்களை வாழவைக்கும் தொண்டாகும். இல்லாமையையும், கல்லாமையையும், ஏற்றத் தாழ்வுகளையும் நீக்கிடும் ஓர் ஒப்பற்ற தொண்டாகும் அது. நமது தலைமுறையின் ஒப்பற்ற உயர்மனிதர் உத்தமர் காந்தியாரின் விருப்பம், ஒவ்வொரு கண்ணிலிருந்தும், ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரையும் துடைத்தாக வேண்டும் என்பதாகும். அது நம்மால் முடியாத ஒன்றாக இருக்கலாம். கண்ணீரும், கவலையும் இருக்கும் வரை, நமது கடமைக்கு முடிவில்லை நமது தூய பணி தொடர்ந்தாக வேண்டும்.”

“ஆகவே, நமது கனவுகளை நனவாக்கிட நாம் உழைக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். சலியாது உழைக்க வேண்டும்.

நேரு இவ்வாறு கூறி முடித்தார். மணி பன்னிரண்டு அடித்தது. விடுதலை பிறந்து விட்டது. கெடுதலை முடிந்து விட்டது என்பதை அறிவிக்கும் வண்ணம் சங்கு முழங்கியது. விடுதலை அறிவிக்கப்பட்ட பின்னர், இந்தியாவின் முதல் பிரதமர், மூத்த பிரதமர் பண்டித சவகர்லால் நேரு நாட்டு மக்களுக்கு நற்செய்தி வழங்கிப் பேசினார்.

"குறித்த நாள் வந்துவிட்டது. வரலாறு நமக்கு விதித்த நாள் பிறந்துவிட்டது. நெடிய தூக்கம் கலைந்து, நெக்குருகச் செய்யும் போராட்டங்களை நடத்திப், புத்துயிரும், புத்தொளியும் கொண்டு இந்தியா உரிமை பெற்று விட்டது. பழைய வரலாறு முடிந்துவிட்டது. புதிய வரலாறு தொடங்குகிறது. நாம் வாழ்ந்து காட்டப் போகிற வரலாறு தொடங்குகிறது. சரித்திரத்தில் இடம் பெறப் போகிற நமது சாதனைகளின் வரலாறு தொடங்குகிறது."

"இந்தியாவுக்கும், ஆசியாவுக்கும், உலகத்துக்கும் இன்று ஒரு முக்கிய நாளாகும். கீழ்த்திசையில் விடுதலை வெள்ளி முளைக்கிறது ; நீண்டதோர் கனவு நனவாகிறது. இந்த விடுதலை விண்மீன் என்றும் நிலைக்கட்டும். நமக்கு நம்பிக்கை ஊட்டி நிற்கட்டும்."

"நாம் விழாவெடுத்து மகிழ்கிறோம். ஆனால், அல்லற்படும் மக்கள் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். துயர மேகங்கள் துன்ப மழை பொழிந்தபடி இருக்கின்றன. எனவே, விடுதலை நமக்குப் பெரும் பொறுப்புகளைச் சுமத்தியுள்ளது. அச்சுமைகளை விடுதலை எழுச்சியுடன் ஒன்று பட்டுத் தாங்கிடுவோம் ; தக்க பணி புரிந்திடுவோம்."

"இன்றையத் தினம், நம் விடுதலையின் சிற்பி, நாட்டின் தந்தை அண்ணல் காந்தியைச் சுற்றி நமது எண்ண அலைகள் வட்டமிடுகின்றன. இந்தியப் பண்பாட்டின் உயிரோட்டமாக விளங்கி, இருள்சூழ்ந்த நேரத்திலெல்லாம் நமக்கு ஒளிதந்து வழி நடத்தியவர் ; நாம் அவரைப் பின் தொடர்ந்து வந்தோம் ; என்றாலும் அவரைப் பின் பற்றும் முழுத் தகுதி நமக்கு இல்லாததால், அடிக்கடி நாம் தடம் புரண்டு சென்றோம். ஆனால், நாம் மட்டுமல்ல, நாளையத் தலைமுறையினரும், இனிமையும், எளிமையும், கொள்கைப் பற்றும், நெஞ்சுரமும், நேர்மைப் பற்றும் கொண்ட இந்தியத் தாயின் புனிதப் புதல்வனும் காந்தியடிகளின் நற்றொண்டையும், கருத்துக்களையும், வாழ்வையும் நெஞ்சத்தில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த விடுதலை விளக்கை எந்தப் புயலும் அணைத்துவிடாதபடி நாம் காத்து நிற்போம்."

"அடுத்து, ஊர் பேர் தெரியாமல், எந்தக் கைம்மாறும், புகழும் எதிர் நோக்காமல் தாமாகவே முன்வந்து உயிரை விட்டுப் போராடித் தாய்நாட்டுக்கு விடுதலை தேடித் தந்த உத்தமத் தொண்டர்களை நினைவு கூர்ந்து, நன்றி கூறிடுவோம்."

"பிற நாடுகளுக்குச் சென்றிருக்கும் காரணத்தால் விடுதலைப் போரில் பங்குபெறும் வாய்ப்பிழந்துவிட்ட நம் இந்திய உடன் பிறப்புகளையும் நினைவிற் கொள்வோம். அவர்களும் நம்மவர் ; நம்முடனேயே வாழப் போகிறவர்கள். அவர்களின் இன்ப துன்பத்தில் நாமும் பங்கு பெற்றிடுவோம்."

"எதிர் காலம் நம்மை அழைக்கிறது. நாம் எந்தத் திசையில் செல்லப் போகிறோம் ? என்ன செய்யப் போகிறோம் ? சாதாரண மனிதனுக்கும், ஏர் உழவனுக்கும் உழைப்பாளிக்கும், விடுதலையின் பயன் கிடைத்திடவும், வறுமையையும் அறியாமையினையும் விரட்டி வளம் பெருக்கிடவும், அரசியல், பொருளாதாரச் சமூக நீதி தழைத்திடத் தக்கதொரு சனநாயகச் சமுதாயத்தை அமைத்து முன்னேற்றம் காண முனைந்திட வேண்டும் ; உழைத்திட வேண்டும்."

> கண்கள் மீண்டும் ஒளிபெறத் தொடங்கியது போல ஒரு நாட்டின் வரலாற்றிலே ஏற்படுகின்ற உன்னதமான சம்பவம் சுதந்தரம்—
>
> பேரறிஞர் அண்ணா

"நாம் கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கிறது. நமது வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி மக்கள் அனைவர்க்கும் உரிய நல்வாழ்வு கிடைத்திட வேண்டும் என்ற இயற்கையின் ஆணையை நிறைவேற்றும் வரை நமக்கு ஓய்வு கிடையாது. முனைந்து முன்னேறும் ஒரு பெரிய நாட்டுக்கு நாம் சொந்தக்காரர்கள், அந்தப் பெருமையைக் காத்து நிற்க வேண்டும் ; அதற்கேற்ப வாழ்ந்திட வேண்டும். நம்மில் யார் எந்தச் சமயத்தைச் சார்ந்திருப்பினும், நாம் எல்லாரும் இந்தியத் தாயின் மக்கள் ; நம் எல்லாருக்கும் உரிமையும், கடமையும் ஒன்றேயாகும். குறுகிய மனப்பான்மையையும், சாதி, சமய வெறிகளையும் நாம் ஊக்குவிக்கக் கூடாது. சிந்தையிலும், செயலிலும் குறுகிய நோக்கம் கொண்ட எந்த நாடும் ஓர் உயர்ந்த நாடாக விளங்க முடியாது."

"உரிமை, சனநாயகம், உலக அமைதி ஆகியவற்றைக் காப்பதிலும், வளர்ப்பதிலும் நாங்கள் உறுதுணை புரிந்து ஒத்துழைப்போம் என்ற உறுதியை உலக நாடுகளுக்கும், மனித குலத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்."

"என்றும் மங்காத எழிற் சிறப்புக் கொண்டு நிற்கும் நம் இந்தியத் தாய் நாட்டுக்குப் புனிதத் தொண்டாற்றி உறுதி பூணுவோம்: அவளை வாழ்த்தி வணங்கிடுவோம், வெல்க இந்தியா!"

நேரு அவர்களின் இந்தப் பொன் மொழி நம்மை என்றும் வழிநடத்தும். விடுதலை நாள் விழா அந்த உரைகளை நினைவிற்கொண்டு செயற்படுத்தும்; உறுதி பெற்றிட வாய்ப்பளிக்க வேண்டும். பெற்றிருக்கும் உரிமையை விழித்திருந்து காக்க வேண்டும். உள் நாட்டில் வளம் இல்லை என்றால், எதிரிகளிடமிருந்து நாட்டைக் காத்திட முடியாது. உழவும், தொழிலும் பெருகிட வேண்டும். அதற்கேற்பக் கல்வித் திறனும் சிறந்திட வேண்டும். நாட்டுப் பற்றும், தொண்டுள்ளமும் வளர்ந்திட வேண்டும். நாட்டின் மக்கள் ஒவ்வொருவரும் நாட்டுப் பெருமையைக் காக்க உறுதிகொள்ள வேண்டும்.

ஆளும் பொறுப்பிலும், பிற பதவிகளிலும் இருப்போர் மட்டுமல்லர், வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் ஆசிரியர்களே பெரும் பொறுப்பை மேற்கொண்டிருக்கின்றனர். நாட்டுப் பற்று, கட்டுப்பாடு, கடமையுணர்வு, கண்ணியமான குணங்கள் அனைத்தையும் இளைஞர் பெற்றிட வேண்டும். அதற்கு ஆசிரியர்களே துணை புரிய வேண்டும். தன்னலம் கருதாது கடமையாற்றும் பண்பு ஆண், பெண், குழந்தைகள் ஆகிய அனைவரிடமும் வளர வேண்டும். நமது வாழ்வும், இன்பமும், வருங்காலத் தலைமுறையினரின் வாழ்வும் இச்சிறப்புப் பண்புகளை வளர்த்தால்தான் சிறப்புற அமையும். ஆகவே, இப் பண்புகளை வளர்ப்போம். பார் புகழ வாழ்வோம் !

விடுதலைப்போரில் வீரப்பெண்மணிகள்

நமது தமிழகத்தில் வீரம் செறிந்த பெண்டிர் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். "சிறிவந்த புலியை முறத்தினாலே துரத்திய சிங்கார மறத்திகளின்" வரலாற்றை நாம் அறிந்திருக்கிறோம்.

அந்த மறக்குலப் பெண்கள் அண்மைக் காலத்திலும் தமிழ் நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை விடுதலைப்போர் நமக்கு எடுத்துரைக்கிறது.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய அறப்போரிலே பங்கேற்ற தில்லையாடி வள்ளியம்மையின் வீரத்தைக் காந்தியடிகளே வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.

காந்தியடிகளின் பாராட்டைப் பெற்ற வீரப் பெண்மணிகள் அநேகர். ஈரோட்டில் வாழ்ந்தவரும் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் மனைவியாருமான நாகம்மையாரிடம், ஒருமுறை அறப்போராட்டத்தின் தலைமைப் பொறுப்பையே காந்தியடிகள் தந்திருந்தார் என்பதும், பெரியாரின் தங்கையாரான கண்ணம்மையாரும் விடுதலைப் போரில் சிறை சென்றவர் என்பதும் நினைவு கூரத்தக்கன.

1932-ஆம் ஆண்டு.

மதுரையைச் சேர்ந்த ஒரு வீரப் பெண்மணி விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றார். அவரது கணவரும் அப்போது சிறை சென்றார்.

1940-ஆம் ஆண்டு, நடைபெற்ற தனிப்பட்டோர் அறப்போரில் அந்த வீரப் பெண்மணியின் கணவர் பங்கு பெற்றுச் சிறை சென்றார். அடுத்துச் சிறை செல்வதற்கு அந்த அம்மையார் தயாரானார். ஆனால், அந்த அம்மையாரை மருத்துவர்கள் தடுத்தார்கள். 'அந்த அம்மையார் இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்ததே மருத்துவர்கள் தடுத்ததன் காரணம். ஆனால், அந்த வீரப் பெண்மணி, மருத்துவர்களின் தடையைப் பொருட்படுத்துவதாக இல்லை.

அம்மையாரின் உடல் நிலையையும்-நாட்டின் சூழ்நிலையையும் அறிந்த அவர்களது குடும்ப நண்பர் ஒருவர் அம்மையாரின் நிலை பற்றிக் காந்தியடிகளுக்குக்கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தைப் படித்த காந்தியடிகள் உடனே அம்மையாருக்குக் கடிதம் எழுதினார். கடிதத்தில் இருந்த வாசகம். "நீங்கள் சிறை செல்லத் தேவையில்லை".

காந்தியடிகளின் கடிதத்தைக் கண்டு ஒருவகையில் அந்த அம்மையார் மகிழ்ச்சியடைந்தாலும், தனது திட்டத்தை அவர் மாற்றிக்கொள்ள முன்வரவில்லை: அண்ணலின் அன்புக்கட்டளையையும் மீறித் தனது குழந்தைகளையும் வீட்டில் விட்டு விட்டு, அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றார்.

அம்மையாரின் கணவர் நெஞ்சம் பதைத்தார். அண்ணலின்கட்டளையை தனது மனைவி மீறியதை எண்ணி வருந்தினார். அண்ணலுக்கு அந்தச்செய்தியைக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்தார். அவருக்கு, அண்ணல், மறுமொழி தெரிவித்திருந்தார்.

"என் கட்டளையை உங்கள் மனைவி மீறியிருப்பது நாட்டின் அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டிருப்பதனால்தான். சுருக்கமாகச் சொன்னால்—ஒரு நல்ல மனைவி தனது கணவனைப் பின் பற்றி உள்ளார். கடவுள் அவரது உடல் நலத்தைக் கவனித்துக் கொள்வார். நீங்கள் கவலையுற வேண்டாம்"—இவ்வாறு காந்தியடிகள் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

திருமதி இலக்குமி பாரதி

32 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது.

அந்த அம்மையார் சிறையிலிருந்து வெளிவந்து நலமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

அந்த வீரப்பெண்மணி, யார் தெரியுமா ?

நாவலர் சோமசுந்தர பாரதி அவர்களின் மகளார்—தமிழகத் தியாகிகளின் பட்டியலில் இடம் பெற்றவரும், தாமிர பத்திர விருது பெறவிருப்பவருமான திரு எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களின் மனைவியார்—மாணவப் பருவத்தில் நாட்டு விடுதலைப் போரில் சிறை சென்ற திரு இலட்சுமிகாந்தன் பாரதி அவர்களின் அன்னையார் திருமதி கே. இலக்குமி பாரதி அவர்கள்தான் அந்த வீரப்பெண்மணி.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1937-ஆம் ஆண்டிலும் 1946-ஆம் ஆண்டிலும் உறுப்பினராகப் பணியாற்றியவர் இந்த வீரப் பெண்மணி.

அவரைப் போன்று எண்ணற்ற வீரப் பெண்மணிகளின் அருந்தொண்டு, நாட்டு விடுதலைப் போருக்கு அடித்தளமாக அமைந்திருந்தது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

பலதரப்பட்ட பூச்சிகளிடமிருந்து உங்கள் பயிர்களை முழுமையாகப் பாதுகாக்கும் விரிவாற்றல் படைத்த (ப்ராட் ஸ்பெக்ட்ரம்) பூச்சிக்கொல்லியாகிய ஆம்பிதியான், தீங்கில்லாத பண்பும், திறமை குன்றாத நெடுநேர ஆற்றலும் ஒருங்கிணைந்தது.

கிடைக்கும் ப்ராட்-ஸ்பெக்ட்ரம் பூச்சிக் கொல்லிகளிலே ஒப்பற்ற வன்மை வாய்ந்தது ஆம்பிதியான்...கொல்லக் கடினமான எவ்வித முரட்டுப் பூச்சிகளையும் கொன்றுவிடக்கூடிய ஒன்றுதிரண்ட பேராற்றல் படைத்தது.

தீங்கு நேரும் வாய்ப்பு மிக மிகக் குறைவு ஆதலால் ஆம்பிதியான் மருந்தடிப் போருக்கு யாதொரு பிரச்சினையும் இராது; தவிர, இட்டு நெடுநேரம் ஆனபின்னும் மட்டற்ற வீரியமுடன் செயல்படும் ஆதலால், ஓயாமல் அடிக்கடி மருந்தடிக்கத் தேவையில்லை.

பணம், நேரம், சிரமம் எல்லாமே மிச்சமாகும். பல நாடுகளில் பரிட்சிக்கப்பட்ட ஆம்பிதியான், இலாபம்தரும் செழிப்பான பயிர் விளைச்சலுக்கு உறுதுணையெனப்பரிசோதிக்கப்பட்டு நிரூபணம்பெற்றபூச்சிக் கொல்லியாகும்.

CYANAMID உலகெங்கும் விவசாயத்திற்கு ஊழியம் புரிந்துவருவோர்

அக்ரிகல்சரல் டிவிஷன்,
ஸைனமைட் இந்தியா லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் நம்பர் 9109, பம்பாய் 25
அமெரிக்கன் ஸைனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.



SISTA'S-CIL-[illegible] TAM

311

"இந்தியத் தேசிய இராணுவ வீரர்களே! எத்தனை பேர்கள் நம்மில் உயிருடன் இருப்போம் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், நமது படை நிச்சயமாக வெல்லும். நம்மில் உயிர்த் தியாகம் செய்தவர்கள் போக எஞ்சிய வீரர்கள் நிச்சயம் செங்கோட்டையில் வெற்றி விழாக் கொண்டாடுவார்கள் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.''

இப்பொன்னான வாக்கைச் சொன்னவர் யார்? அவர்தான் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். ஆம்! பாரத சுதந்தரம் சும்மா வந்துவிடவில்லை, அது, கண்ணீர் விட்டு வளர்த்த பயிர்.

சுதந்தரக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும் இந்த மண்ணுக்குள்ளே எத்தனையோ வீரர்கள் அதற்காக இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். நம் கொடியின் சிவப்பு, துறவின் சிவப்பு அல்ல. அது தொண்டர்கள் வடித்த இரத்தச் சிவப்பு. அதன் வெண்மைதான் சத்தியம். பச்சையோ பச்சிளம் பாலகர்களும், தாய்க்குலமும், மரகத வல்லியாம் மங்கையர்களும் செய்த தியாகம்.

உலகின் விடுதலைப் போர் வரலாற்றில் எந்த நாட்டின் சுதந்தரப் போரிலும் இந்தியப் போரில் இளைஞர்கள் உயிரைக் கொடுத்தது போல், இளைஞர் சமுதாயம் உயிர் ஈந்ததில்லை.

உயிரில் இளமைஉயிர், முதுமை உயிர் என்ற பாகுபாடு உண்டா? உயிர் ஈந்த எல்லாரும் உயர்ந்தோரே. ஓர் வீர வாலிபரின் உரை கேளுங்கள்:—

''நான் செய்யும் கடைசிப் பிரார்த்தனை இதுதான். மறுபடி மறுபடி பாரத மாதா மடியில் பிறக்க வேண்டும். மாதா விடுதலை யாகும் நாள் வரை மடியப் பிறக்க வேண்டும்.'' என்று வேண்டித் தூக்குக் கயிற்றில் கழுத்தை மாட்டிக் கொண்டு துடிக்காமல் இறந்தார் 'மதன்லால் திங்கரா' என்ற மாவீரர்.

அவர் மட்டுமா? ஆயிரமாயிரம் இளங் காளைகள், அதற்குப் பராயிரம் பாடியவர்கள்! விடுதலைப் போருக்கு முதல் முழக்கம் செய்த வீரத் தமிழனை வணங்குவோம்.

ஒரு நாள் காலை பத்து மணி. இடமோ ஒரு சாலை ஓரம். ''எனது அங்க வஸ்திரத்தை இடுப்பில் கட்டிக் கொண்டேன். என். குழந்தைகளும் மனைவியும் மிக மரியாதையுடன் என் அருகில் நின்றார்கள். கை கூப்பினோம். மார்புச் சட்டையில் சாலைமண் பதிய விழுந்து கும்பிட்டேன். அவர்களும் வணங்கினர். கோயிலா ? சிலையா? அல்ல; அல்ல; அது ஓர் கற்குவியல்.

விடுதலைப் போரில் உயிர் நீத்த வீரர்களை வணங்குவோம்

கவிஞர் [illegible]

சாலைக்கு வடக்கே ஓர் புளிய மரம். அதனடியில் சிறிதும் பெரிதுமாக, இலட்சக் கணக்கான கற்கள். ஒவ்வொரு கல்லும் ஒவ்வொருவர் போட்டவை. 173 ஆண்டுகளாக இவ்வாறு போட்டு வந்திருக்கிறார்கள். மலரானால் வாடிவிடும். காற்றுக் கொண்டு போயிருக்கும். அங்கே கல்லெல்லாம் மலராகிப் பிறகு அஃதே மலையாகி இருந்தது.

கணவன் சொல்லுக்குக் கட்டுபட்டு மனைவி வணங்கிவிட்டாள். ஆனால், அவள் மனம் கேட்கவில்லை.

''உச்சி வெய்யில் — புளிய மரம்—இது/ முனியா என்ன? எதற்காக நமஸ்காரம் செய்தோம்?'' என்று கேட்டாள்.

என் பெண்டாட்டிக்கே தமிழர் வரலாறு தெரியாமல் இருந்தால் எனக்கு ஆத்திரம் வராதா? "உனக்கு இது கூடத் தெரியவில்லையே, இதோ பார் அதோ ஒருவர் வருகிறார். அவர் சொல்லுவார்'' என்று கூறிவிட்டு நூறு அடி தூரத்தில் வந்த வழிப்போக்கர் ஒருவரை இரைந்து,

''ஐயா ஆ....ஆ....ஆ. ஆ.... '' என்று கூப்பிட்டேன்.

'' என்ன அ....அ.... அ.... '' என்றார் அவர்.

என் மனைவியை ஒருமுறை அலட்சியத்துடன் பார்த்துவிட்டு, 'இது என்ன இங்கே?' என்றேன்.

''கட்டமனாய்க்கன் கல்லுக்குவியல்'' என்று சொன்னார்.

எனக்கு அதில் ரொம்பச் சந்தோஷம். மனைவியைக் கர்வத்துடன் பார்த்தேன். ''அவர் வாயாலேயே கட்டபொம்மன் பெருமையைச் சொல்லட்டும்'' என்ற ஆவலோடு.

''யார் அந்தக் கட்டமனாய்க்கன்?'' என்றேன்.

அவர் என்ன பதில் உரைத்தார் தெரியுமா? 'ஏ, தமிழகமே, கேள்'. அவர் கூறிய பதில் இதுதான்:

''அவன் ஒரு கொள்ளைக்காரன்'' என்றார். நான் அசந்துவிட்டேன். நல்ல' வேளை, என் மனைவி சிரிக்கவில்லை. ஏன்? நான் உடனே அவளைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும் சிரித்திருக்க மாட்டாள் என்றே நினைக்கிறேன்.

வீர பாண்டியக் கட்டபொம்மனாயக்கர் மீது எனக்கு உள்ள பக்தியை என் வீட்டில் எல்லாரும் அறிவார்கள்.

ஆனால், அவர் கூறிய வார்த்தை, கூரிய முள்ளாக என் நெஞ்சில் குத்தியது. தேடாத இடமெல்லாம் ஏடு தேடிக் கட்டபொம்மன் பாட்டைக் கண்டு பிடித்தேன். வணக்கத்துக் குரிய வாசன் அவர்களிடம் [illegible] அந்தப் பாடலை விளக்கு[illegible] ஆனந்த விகடனில் [illegible] வாரந்[illegible]றும் வெளியிட்டேன்.

அதே [illegible]யில்தான் 173 ஆண்டுகளுக்கு [illegible]ன் 1799-ஆம் ஆண்டு அக்டோ[illegible]-ஆம் தேதி கட்டபொம்மு [illegible] களபலியானார். அ[illegible] அவரைத் தூக்கிலிடுவதை [illegible] வேடிக்கை பார்க்க வந்திருந்த [illegible]களாகிய பலர் முன் [illegible] என்று காரித் துப்பினன் [illegible] காரன்,

'' குதிரைக்குப் புல்லுக் கட்டும், குதிரை முளையும் சுமக்கப் போகிறீர்கள்'' என்றான் ஊமைத்

துரை. கட்டபொம்முவோ தூக்குக் கயிற்றைக் கழுத்தில் தானே மாட்டிக் கொண்டு வீர சொர்க்கம் புகுந்தார். இதை எழுதும்போது கை துடிக்கிறது. கண்கள் நீரை வடிக்கின்றன. படிப்பவர்கள் நெஞ்சும் துடிக்கும். ஆனால், அந்த மாவீரன் இறக்கும்போது அவர் கால்கூடத் துடிக்கவில்லையாம். இது சுதந்தரத்தின் முதல் பலி.

"When he went out to be executed he walked with a firm daring air, and cast looks of sullen contempt on the poligars to his rights and lefts as he passed" என்று வெள்ளைக்காரனே எழுதியிருக்கிறான்.

நமக்கெல்லாம் பேசிப் பேசி உணர்ச்சி மரத்துவிட்டது. பட்டகட்டை போலாகி விட்டோம். நல்லதைப் பாராட்டக் கூட நானூறு யோசனைகள் செய்கிறோம். பேசுந்திறன் அதிகமில்லாத ஊமைக்கு உணர்ச்சி அதிகம் போலும்.

"வானம் பொழியுது, பூமிவிளையுது மன்னவன் காணிக்கு ஏது பணம்?" என்று கேட்டவரோ ஊமைத்துரை. அந்த ஊமையன் பாட்டைப் பாடாத உதடில்லை. பாடுவோம். படை என்றால் ஓடுவோம். ஊமைத்துரையும் ஓடினார். பயந்து அல்ல, எதிரிகள்— இடித்த கோட்டையைத் திரும்பவும் கட்டி வெள்ளையனை மறுபடி போருக்கிழுத்து வீர மரணம் அடையப் பாளையங்கோட்டைச் சிறையை உடைத்துக் கொண்டு ஓடினார்.

பாதையில் மெக்காலே பங்களா; உள்ளே புகுந்து சூறையாட வீரர்கள் நுழைந்தார்கள். 'Oh! God!' என்று, ஒரு குரல் கேட்டது. வெள்ளைக் கார துரைசாணியின் குரல் அது.

"ஊமைத்துரையே! உமக்கு ஓராயிரம் கும்பிடு. உங்கள் பண்பு தமிழனின் வாழ்வுக்குப் பாய்ச்சிய நீர்" துரைசாணியின் குரல் கேட்டவுடன், எதிரியின் வீடாயிருந்தும் பெண்மைக்கு மதிப்புக் கொடுத்துக் கொள்ளையிடுவதைத் தடுத்து, வந்த வழியே திரும்பிச் சென்றீர்களே! இதை நினைக்குந் தோறும் எனது நெஞ்சு பெருமை கொள்கிறது. தமிழனாகப் பிறக்கும் பாக்கியம் கிடைத்ததற்குத் தமிழ்த்தாயை வணங்குகிறேன். ஊமையன் இறக்கவில்லை. நமது உள்ளத்தில் 'பெண்ணை மதிக்கும் பண்பு' என்ற உருவில் என்றும் இருக்கிறார்.

ஊமையன் இரண்டாவது பலி.

"அண்ணனும் தம்பியும் களபலியாகி அடைந்த சுதந்தரமையா ?"

"அண்ணனும் தம்பியுமாக வாழ்வதே அவருக்கு மரியாதை"

வீர மறத்தி, பகதூர் வெள்ளையன் மனைவி....படுகளத்தில் மாண்ட கணவனை மடியில் வைத்து முத்தமிடும் போதே உத்தமி இறந்தாள்.

ஏன்? ஆண்களுக்கு மட்டும்தான் விழா எடுக்க வேண்டுமா? விடுதலைக்கு உயிர் விட்ட வீராங்கனைகளுக்கு என்றே ஒரு விழா எடுக்கலாம். வீரர்கள் பிறப்பார்கள்.

வேலு நாச்சியார், சிவகங்கைக்கு அரசி. வீர மருதுகளின் எஜமானி. மானம் போக மறத்தாய் விடுவாளா? வெள்ளையன் வருகிறான் என்றவுடன் காக்கும் வாளால் கற்பைக் காத்துத் தன் கையிலேயே தன் கழுத்தை அறுத்துக்கொண்டு உயிர் நீத்தார். கல்லல் பக்கங்களில் கண்மாய்த் தண்ணீர் ஏன் சிவப்பாக இருக்கிறது? வேலு நாச்சியாரின் வீரக் குருதிதானே?

வெள்ளையனை எதிர்த்தார், வேலுத்தம்பி தளவாய்! யாருக்காக எதிர்த்தாரோ அந்தத் திருவிதாங்கூர் அரசரே தன் தளவாயைக் கைவிட்டுவிட்டார். அரசர் கைவிட்டதற்காக அவர் கடமையை விடுவாரா? அரசன் அஞ்சுவான். வீரன் அஞ்சுவானா ? ஒரு வாளுடன் பலநூறு பேரைக் கொன்றார். கடைசியில் பகவதி கோயிலில் மறைந்தார். வெள்ளையன் விரட்டினான். பிடித்தால் பிணத்தைக் கூட மான பங்கம் செய்வான். தற்கொலை செய்து கொள்ளத் தன் வாளையே தன் மார்பில் பாய்ச்சிக் கொண்டார் வேலுத்தம்பி. வயிரம் பாய்ந்த கட்டை. வாள் உள்ளே இறங்கவில்லை. பாதியில் நின்றது. 'தம்பி என்னை உன் கையால் கொன்றுவிடு' என்று கூடவே இருந்த உடன் பிறப்பிடம் கூறினார்.

தர்ம சங்கடம். தம்பி அண்ணனைக் கொல்வதா? தயங்கினான் தம்பி. ஆனால் அடுத்த கணமே தன் வாளால் அண்ணன் தலையைத் தரையில் உருட்டினான். தன் தலையையும் வெட்டித் தரையில் வீழ்த்தினான். இரண்டும் தரையில் உருண்டு ஒன்றின் முகத்தில் ஒன்று முத்தாடியதை அவர்கள் பார்க்கவில்லை. கவிஞன் பார்க்கிறேன்.

மானங் காத்தான் தம்பி என்று மாதா போற்றினாள் அவனை. கூடப்பிறந்தே கொல்லும் வியாதியல்ல, அவன்.

இன்னோர் அண்ணன் தம்பி தியாகத்திற்கு வருவோம்.

தேவகோட்டைக்கருகில் ஒரு பாழடைந்த கோட்டை இருக்கிறது. அதற்குப் பெயர் சங்கரப்பொதிக்கோட்டை. சாலையோரத்தில் உள்ள அந்தக் கோட்டையில் ஓர் முனி இருக்கிறது. ஒரு நாள் அது என் கண்ணில் தட்டுப்பட்டுவிட்டது. "முனி! முனி!" என்றேன் நான்.

"நரி!" என்றான் என் தம்பி.

"முனிதான் நரி உருவத்தில் வந்திருக்கிறது" என்றேன் நான்.

"அவ்வளவு கோழையாகி விட்ட முனிக்குப் பயப்படவேண்டாம்" என்றான் அவன். அப்போது அந்த நரி மேலும் கேவலமாய் ஒரு செயல் செய்தது. யாரோ உடைத்திருந்த சிதறு தேங்காய்ச்சில் ஒன்றைக் கவ்விக் கொண்டு காட்டுக்குள் ஓடியது.

"தேங்காய்ச் சில்லை நரி திங்குமா ?" என்றேன்.

"ஏன் தின்னாது? மனிதன் ஒரு சாண் வயிற்றுக்காக வெள்ளையனைப்பணிந்து தின்னவில்லையா?" என்றான் அவன். அந்தக் கோட்டைதான் மருது பாண்டியனைக் காட்டிக் கொடுத்த இடம். வெள்ளைக்காரனா காட்டிக்கொடுத்தான்? நம்மவன்தான். இந்தக் கலையில் நம்மில் சில பேர்வழிகளை எவரும் மிஞ்ச முடியாது.

வீர மருது சகோதரர்கள் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். மருது பாண்டியனும் தூக்குக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு நம்மைப் பார்த்துச் சிரித்துவிட்டுத்தான் செத்தார்.

ஆனால், காட்டிக் கொடுத்த உலகில் ஒருவன் கவிதையும் பாடினான்.

"திருப்பத்தூர்ச் சந்தியிலே தென்னையிலே தொங்குறான்டா;" தன்மான உணர்ச்சி இல்லா ஒருவர் கையில் கவிதை சிக்கியதால் தமிழும் கேவலமாக்கப்பட்டதற்கு இது சான்று.

இனி மானத்தாலும் வீரத்தாலும் தமிழை உயர்த்தியவர் கதைக்கு வருவோம்.

"என் தாயை அம்மா என்று
இனி அழைப்பேன் நான்"

"என்னுடன் பிறந்தவர்
அண்ணனடா !
இளையவன் எனக்குத் தம்பியடா"

இது கவிதையா? இப்படிப்பாட வேண்டிய அவசியமுண்டா ? இதைப்போலத்தானே "வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்" என்ற பல்லவியும் எனத் தோன்றுகிறது. ஆனால், அப்படிப் பாட நேர்ந்த அவசியத்தை நினைத்தால் நெஞ்சில் ஆத்திரம் பீறிடுகிறது. பாரதியைப் பணிகின்றோம்.

'வந்தே மாதரம்' என்னும் பாடல் பங்கிம் சந்திரர் எழுதிய ஒரு நாவலில் வந்த பாடல்தான். ஆனாலும் 'வந்தே மாதரம்' என்று உரைத்தால் அந்த வாயை மூடுமுன்னே சுட்டார்கள் வெள்ளையர்கள். விவேகானந்தரின் தம்பி அதற்குப் பலியானார். அப்போது வங்க மக்கள் விவேகானந்தரின் தாயை,

'ஞானத்துக் கொரு பிள்ளை
கொடுத்தாய் ;
தேசத்துக் கொரு பிள்ளை
கொடுத்தாய் :
மண்ணுலகில் நீயன்றோ தாய்!

என்று வாழ்த்தி வணங்கினார்கள்.

ஒரு பன்னிரண்டு வயதுப் பாலகன். அழகில் மன்மதன். அவன் பெயரோ மதன்லால்; குஜராத்திக் காரன். அவன் செய்த குற்றம் என்ன? வந்தே மாதரம் என்று கோஷித்தது தான். அவனுக்கு ஆயுள் தண்டனையாம். 'இந்தியத் தியாகிகள் சரித்திரம்' இம்மாதிரி பல முத்துக்களைச் சிந்தியிருக்கிறது. அதே குற்றம் தான் நம்மவர் ஒருவருக்கு இருபதாண்டுகள். 'வந்தே மாதரம்'. தந்த சுகம் அந்தமான் சிறை.

சென்னையில் ஒரு முறை காங்கிரஸ் பொருட்காட்சிக் கொட்டகையில் தீப்பிடித்தது. எல்லாம் எறிந்து விட்டன. - எரியாதன இரண்டு. ஒன்று நம் கொடி. மற்றொன்று சிதம்பரனார் சிலை, என்று ஞாபகம்.

செக்கிழுத்த செம்மல் சிதம்பரனாரின் சிலை அப்படியே இருந்தது. தீயவர்களாலேயே எரிக்க முடியாத சிதம்பரனாரைத் தீயால் எரிக்க முடியுமா? அவர் செய்த குற்றம் 'வந்தே மாதரம்' என்று கூறியதுதான். தீயும் காற்றும் சேர்ந்தது போல் சிதம்பரனாருடன் சிவாவும் சேர்ந்தார் 'வந்தே மாதரம்' ஒரு குற்றம். சிவாவுக்கு இடம் கொடுத்தது இரண்டாவது குற்றம். இரண்டுக்கும் சேர்ந்து இருபது ஆண்டுகள்.

அவரால் செக்கு சிவலிங்கமாயிற்று. கோவைச் சிறைக்குச் செல்பவர்கள் செக்கைத் தரிசிக்கிறார்கள். சிவாவால் அரசு அரசியல் ஆயிற்று. திருச்சிச் சிறையில் அவர் கையால் நட்ட அரச மரத்தடியில் பலர் அரசியல் ஞான முதிர்ச்சி அடைந்தார்கள்.

எனக்குப் பிடித்தது மூன்று மாமரங்கள். முதல் மரம் என் தோட்டத்தில் இருப்பது, இப்போது அது அதிகம் காய்ப்பதில்லை. பிரியம் போய் விட்டது. அடுத்தது காஞ்சியில் உள்ள ஏகாம்பரம். அது, மரமும் கடவுள் என்ற கருத்தைத் தந்து மக்களையும் கடவுளாய் மதிக்கச் செய்கிறது.

அந்நிய ஆதிக்கம் இந்த மண்ணிலிருந்து அகற்றப்படும் பொழுதுதான் நாம் முழுமையான மனிதர்களாவோம். அப்படி முழுமையான நிலையை உடனடியாக ஒரே நொடியில் அடைந்துவிடுவோம் என்று நான் நம்பவில்லை. அந்நிலை உருவாக—ஒவ்வொரு கட்டத்திலும் நம்மை நாம் பக்குவப் படுத்திக்கொண்டு வளர வேண்டும். வளர்ச்சி, எதிர்ப்பினால் மட்டும் வந்துவிடாது! உழைப்பினாலேயே வரும்.

—கோபாலகிருஷ்ண கோகலே.

மூன்றாவது மரம் எரவாடாச் சிறையில் இருக்கிறது. அதன் நிழலில்தான் மகாத்மா காந்தியின் அரிசன ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன் நிழலில் நின்றபோது நானும் அரிசன் ஆனேன். மரமாய்ப் பிறந்தால் அவர்களுக்கு நிழலாவது கொடுக்கலாமே என்று எண்ணினேன். நிழலை விட்டு வந்தவுடன் அந்த எண்ணமும் நெஞ்சைவிட்டுப் போயிற்று.

தமிழக அரசின் குடிசைமாற்று வாரியத்தின் வீடுகளை ஒருமுறை பார்த்த பிறகு அந்த எண்ணம் போய்விட்டது. நிழல் தரும் அரசு நீடூழி வாழ்க!

'வந்தே மாதரம் என்று உயிர் போம் வரை வாழ்த்துவோம்' என்று பாரதியார் பாடியதன் உள்ளடக்கம் என்ன? வந்தே மாதரம் என்றால் உயிரை வாங்குவார்கள் என்பதுதான் அர்த்தம். அதில் உயிர் விட்டவர்கள் அநேகர்; சிதம்பரனார் உயிரைக் குடித்ததும் சிறை வாசத்தால் அடைந்த கஷ்டங்கள் தானே? "சிதம்பரனார் பெயர் தாங்கும் கப்பலை நம் சுதந்தர அரசு மிதக்க விட்டபோது, சிதம்பரம் பிள்ளையவர்களின் விசாலமான விழிகள் ஆனந்தக் கண்ணீர் வடிப்பதை என் மனக்கண்ணில் காணுகின்றேன். வந்தே மாதரம் என்ற குற்றத்துக்காக வாழ்வே பாழானவர் அவர்" என்றார் நம் நாட்டுத் தலைவர் ஒருவர். திருவல்லிக் கேணிக் கடற்கரையைத் திலகர் கட்டம் ஆக்கியவர் சுப்ரமணிய சிவா.

சிவாவுக்குத் தொழுநோய் ஏன் வந்தது ? அவருடைய மூதாதையர் யாரும் தொழு நோய்க்காரர்கள் அல்லவாம். திருச்சிச் சிறையில் கம்பளி மயிர் அடித்ததால் வந்த சர்ம வியாதி அது. பாரத மாதாவைச் சுதந்தர தேவியாகத் தரிசனம் செய்ய அவர் ஆசைப்பட்டார். நடக்கவில்லை.

பாரதி, காலனைக் காலால் உதைத்தார். அவரையும் காலன் கொல்லவில்லை. தேசபக்திக் கனல்தான் அற்பாயுளில் கொன்றது. ஆனால், அவர் பாடிய 'வந்தே மாதரம்' நம்மை வாழ வைக்கும் பாட்டாக நின்றது.

நான் வன்முறையை அறவே வெறுப்பவன். பாரதத்துக்கு அருமையாகக் கிடைத்த புதுமையான அகிம்சை வழியை வன்முறையாளர்கள் குழியில் புதைக்கிறார்கள் என்று நினைப்பவன். சுதந்தரம் அடைந்த எந்த நாடும் முப்பது வருடத்திற்குமுன் விழித்துக் கொண்டதில்லை. ஆனால், இன்று நம் நாட்டில் மக்களிடையே விழிப்புணர்ச்சி வந்து விட்டது. குழம்பிய தண்ணீரில் தேத்தாங் கொட்டையைத் தேய்த்துப் போட்டுக் கலக்கி விட்டு விட்டால், அது தெளியும். "அந்தத் தெளிவு அகிம்சையாகத்தான் இருக்கும். மறுபடி, பாரதம் உலகுக்கு வழி காட்டும்."

இருப்பினும் வன்முறையில் நம்பிக்கை கொண்டிருந்த முன்

சொல்லிய தேசப் பக்தர்களை ஏன் கும்பிடுகிறேன்? அன்று அதுதான் வழியாக இருந்தது. அவர்களின் தியாகம் பெரியது. முதலில் தன்னை அழித்துக் கொண்டு களத்தில் குதித்தார்கள். அதற்காகவே அவர்களை வணங்குகிறேன்.'

இனி மகாத்மா காந்தியின் காலத்துக்கு வருவோம். கொடி காத்த குமரனைக் கும்பிடுவோம். அவரே குமரன். அதிலும் கொதித்து எழும் வயது. ''நான் அகிம்சைவாதிதான்; ஆனால் ஆத்திரமூட்டப்பட்டால் அடிக்காமல் விடுவேனா?'' என்று அவர் திருப்பி அடிக்கவில்லை. கொடியைத் திருப்பினால் கொம்பாகி விடும். கொடி என்பது என்ன? காந்தியின் கொள்கைதானே! கொள்கையைத் தலைக்கீழாக்கக் குமரன் விரும்பவில்லை. ''அடி ....அடி வந்தே மாதரம். மகாத்மா காந்திக்கு ஜே!'' பாம்பின் வாய்த் தேரையின் குரல் போலக் குரல் தேய்ந்து கொண்டே வந்தது. கீழே விழுந்தார். கடைசி அடி விழவே குரல் ஓங்கியது. 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று மக்கள் மண்ணதிர, மலையதிர முழங்கினார்கள். குமரன் தியாகி ஆனார். கையிலிருந்த கொடியைப் பிடுங்கவில்லை. விரலை நீக்கி எடுத்தார்கள். கம்பில் விரல் பதிந்து பள்ளமாகியிருந்தது.

பலாத்காரப் பாதையில் போன விடுதலைப்போர் முறையைச் சத்தியாக்கிரகப் பாதையில் திருப்பிய அந்த மாவீரனால் திருப்பூர் என்ற பெயர் தேச மக்கள் உள்ளத்தில் குடி கொண்டுவிட்டது. திருப்பூர்க் கதரைக் கட்டும் போதெல்லாம் தியாகி குமரன் நினைவு வருகிறது. குமரனோ குமரன்!

வங்கத்தில் மாதங்கினி தேவி என்று ஒரு கிழவி. **1942**-ஆம் ஆண்டு ஆகஸ்டுப் போராட்டம். பட்டாளம் ஒரு ஊரில் சுட்டதாம். எழுபத்து மூன்று வயது மூதாட்டி மாதங்கினி தேவியார் கொடியைப் பிடித்து நடக்கிறார். கொடி பிடித்த கைகளில் குண்டு பாய்கிறது. கொடி விழவில்லை. இந்தியச் சிப்பாய்க் கூப்பிடுகிறார்கள்; அத்தாய் ''பாய் சகோதரா .. — இந்தக் கொடியை நீ பிடித்துக் கொள்'' என்று கூறிவிட்டு 'பாபு வாழ்க' என் கூறிய வண்ணம் அந்தக் குலமகள் கொம்பில் பழுத்த கனி உதிர்வது போல் தரையில் உதிர்ந்து உயிர் நீத்து விடுகிறாள். பூமி பிளக்கவில்லை. வானம் இடியவில்லை.

'வா மகளே — .. வா' என்று பார்தமாதா அவளை வரவேற்கிறாள்.

அவள் கிழவிதானே. பத்து நாள் பின்னால் சாகப் போகிறவள் முன்னாடிச் செத்தாள் என்று சொல்லலாம். 'பாபுகனு' கிழவனா? பால் மனம் மாறாப் பாலகன்; தாயார் தலைசீவிப் பொட்டிட்டுப் பள்ளிக்கு அனுப்புகிறாள். ஜவுளிக்கடை மறியலை வேடிக்கை பார்க்கிறான். வெள்ளைக்கார சார்ஜண்ட் ஒருவர் சீமைத்துணி லாரியை ஓட்டி வந்து தொண்டர்கள் மேல் மோதப் போகவே, தொண்டர்கள் அஞ்சி பிளாட்பாரத்தில் ஏறுகிறார்கள். பார்த்தான் பாபுகனு. குதித்தான் கீழே சகுந்தலையின் பிள்ளை பரதன் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்கியது போல், பாரதப் புத்திரன் கனு 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்றான். ''விலகு. இல்லாவிட்டால் லாரியை ஏற்றி விடுவேன்'' என்றார் சார்ஜண்ட்.

''மகாத்மா காந்திக்கு ஜே''

விலகுவானா வீரன்; என்று இரண்டு .. மூன்று ... ஏறியதுலாரி.

நம்முடைய நோக்கம் முழுவதும் ஒரே சொல்லில் அடங்கி விடுகிறது; சுய ஆட்சி அல்லது சுயராஜ்யம் என்பதே அச்சொல்; இங்கிலாந்திலும், குடியேற்ற நாடுகளிலும் உள்ளது போன்ற ஆட்சிமுறை; சுயராஜ்யம் பெற்றுள்ள குடியேற்ற நாடுகளில் உள்ள ஆட்சி முறை பாரத நாட்டிலும் அமலுக்கு வரவேண்டும்.

—தாதாபாய் நௌரோஜி.

குழந்தை நின்ற இடத்தில் ஒரு கூடை சதையும், எலும்பும் கிடந்தன. ஓடிவந்தாள் தாய். அத்தனைச் சதையையும் அள்ளி முத்தமிட்டாள். சதையும் அவள் மகன் தானே.

''உன்னைப் போல் இன்னும் பத்துப் பிள்ளைகள் பெறவில்லையே இந்நாட்டுக்கு உழைக்க'' என்றுதான் அலறினாள்.

ஏ ....இளைஞர் சமுதாயமே! வீர வாலிபர்களே! உங்களை வாழ்த்துகிறேன். வணங்குகிறேன். முற்காலத்தில் டில்லி மன்னன் பகதூர்ஷாவைக் கைது செய்தான், வெள்ளைக்காரன். அப்போது தங்கத் தாம்பாளத்தைப் பட்டால் மூடித் தன் கைதிக்கு ஒரு பரிசளித்தான். தாம்பாளத்தினைக் கையில் கொடுத்து, ''பகதூர்ஷா மன்னரே! மாட்சிமை தங்கிய கவர்மெண்டார் உமது பென்சனை இம்முறையில் அளிக்கிறார்கள்.'' என்றான், கிண்டலுடன். மன்னர் பட்டை எடுக்குமுன் தட்டில் இருப்பதைக் கண்டுகொண்டார். தட்டில் இருந்தது அவருடைய பிள்ளைகள் இருவருடைய தலைகள்; கதறினாரா? கண்ணீர் விட்டாரா? என்ன சொன்னார்?

மானம் பெரிதாக மதிக்கும் மரபினர் ஆகிய நாங்கள் இம்மாதிரிக் குழந்தைகளைப் பெறுவதில் பெருமையடைகிறோம் என்றாராம்.

ஒத்துழையாமை—
நாகபுரி கொடிப்போர்

பாரதத்தின் வீரப் புதல்வர்களே ! மாதாவின் பெருமை மைந்தர்களால் தான். இதை உணர்ந்தவர்கள் நீங்கள். வாழ்க உங்கள் வீரம்.

தியாகிகள் வரலாறு எழுதித் தீராத ஒன்று. அதை எழுதினால் மட்டும் தீராது. மதிக்க வேண்டும். எந்த நாட்டிலும் இத்தனை இளைஞர்கள் தியாகம் செய்தது கிடையாது! அதைக் காட்டிலும் **எந்த நாட்டிலும் தமிழக அரசைப்போல் தியாகிகளை மதிப்பவர்களும் கிடையாது! 7,182 விடுதலை வீரர்களுக்கு மானியம் அளிக்கும் தமிழக அரசின் செயலை மகாத்மா வாழ்த்துவார்! மனம் உடையவர்கள் பாராட்டுவர்.**

பஞ்சாப் படுகொலை, உப்புச் சத்தியாக்கிரகம், குவிட் இந்தியா, ஆகஸ்டு இயக்கம் இ.தே.ரா. போன்ற அத்தனை போராட்டங்களிலும் உயிர் நீத்தவர்களை நினைத்து, இன்று வணங்குவோம்,

---

விடுதலைப் போர்

சில வீரச் செயல்கள்

ஸ்ரீ கவியோகி சுத்தானந்த பாரதியார்

டில்லி செங்கோட்டையில் (1947) விடுதலைக் கொடி ஏறு முன்பே 1790-ல் சிவகங்கையில் விடுதலைக் கொடி வானளாவப் பறந்தது. முத்து வடுகநாதர் வீரப் போரில் தியாகப் பலியானார். அவரது பசுந்தலை முன் அரசி வேலு நாச்சியார், அவள் தந்தை கோலாகலத் தேவர், தம்பி வீரத் தேவன், படைத் தலைவர் பெரிய—சின்னமருதர்—ஆகியோர் விரதங் கொண்டு விடுதலைப் போர் நடத்தினர். 1858-ல் இராணி இலட்சுமிபாய் போர்க்களத்தில் இறந்தாள். இங்கே வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று புரந்தாள். அவள் தம்பி வீரத்தேவன் துறவி வேடத்தில் வடக்கே சென்று பிரம்மாவர்த்தத்தில் 1857-ல் நானா சாகிப்பைத் தூண்டினான்.

* * * *

பாஞ்சாலங் குறிச்சியில் எட்டு மேஜர்களை வீழ்த்திக் கட்டபொம்முவும் தூக்குமேடை யேறினான். தூக்குமேடை நாட்டை ஊக்கும் மேடையானது.

* * *

ஊமையன் ஒரே வாரத்தில் இடிந்த கோட்டையை வானளாவ எழுப்பிப் பாதர் வெள்ளை, நீலமேகம், சுப்பிரமணிய பிள்ளை போன்ற சூரரைக் கூட்டிப் போர் முடுக்கினான். முதற்போரில் ஆங்கிலேயர் கை ஓங்கியது ; ஊமைத்துரை சிவகங்கைக்கு ஓடி வந்து, மருது இருவருடன் சேர்ந்து, திருமயத்தில் பாசறை அமைத்துக் காளையார் கோவில் காடுகளில் படையணி மறைத்துப் பாய்ந்து பாய்ந்து போர் புரிந்தான். மருது சகோதரர் கடும் போர் புரிந்து தூக்கு மேடையில் இறவாப் புகழ் பெற்றனர். (1812).

* * *

நாற்பதாண்டுகள் ஓடி மறைந்தன. வடக்கே 1857-ல் தமிழ்நாட்டுப் பாபாஜீ (வீரத் தேவன்) தாந்தியாதோபே, ரானாசாகேபு, இலக்குமியாய், கண்வார்சிங், அபிமுல்லாகான், அகம்மது மௌலி முதலியோரைத் தூண்டிப் போர்ப் புயல் வீசச் செய்தான். டில்லி பிடிபட்டது ; ஆனால், துரோகிகள் காட்டிக் கொடுத்தனர். நீல்களும், ஹாவ்லக்குகளும் நமது வீரரைச் சுட்டுக் குவித்தனர் ; ஆயிரக் கணக்கான மக்களைத் தூக்கு மேடையில் ஏற்றி வதைத்தனர். கிராமம் கிராமமாகத் தீ மூட்டி மக்களைத் தீயில் போட்டு மடித்தனர்.

* * *

இக்கொடிய வெற்றியும், குமுறிய போரும் விக்டோரியா சர்க்காருக்குப் புதிய பாடம் கற்பித்தன. துப்பாக்கியாலும், சட்டத்தாலும் இந்த நாட்டு உரிமை யுணர்வை அடக்க முடியாது. நாட்டினரை அடக்க நாட்டினவரைக் கொண்டே ஓர் இயக்கம் தொடர்வோம் என்ற சூழ்ச்சியால் ஷியும், வெட்டர் பார்ன் ஆகிய இருவரையும் ஊக்கிக் காங்கிரஸ் சங்கத்தை நாட்டினர். அதில் நீண்ட காலம் (1885—1912) சர்க்காரின் செல்லப் பிள்ளைகளே சலுகை பெற்றனர். முதல் காங்கிரஸ் பம்பாயில் கோகுல்தாஸ் வடமொழிக் கல்லூரியில் டபிள்யூ.சி. பானர்ஜி. தலைமையில் நடந்தது. அதற்குத் தமிழ்நாட்டிலிருந்து மதுரை மணி ஐயர், சுதேசமித்திரன் ஜி.சு. மணி ஐயர், கேசவபிள்ளை ஆகியோர் சென்று பேசினர்.

* * *

1907-ல் சூரத்தில் கோகலேயின் மிதவாதக் கூட்டம் நடந்தது. அதைத் திலகர், சிதம்பரம்பிள்ளை — பாரதியார் முதலிய தீவிரச் சுதேச வீரர்கள் செருப்பெறிந்து சிதறடித்தனர். அரவிந்தர் தலைமையில் முழு விடுதலை, சுதேச விரதத்துடன் நிறைவேறியது. மறு ஆண்டு அட்வகேட்—ஜெனரல் கிருஷ்ணசாமி ஐயர் செல்வாக்கால் சென்னையில் மிதவாதிகளின் கன்வென்ஷன் காங்கிரஸ் நடந்தது. அதை 'இந்தியா' இதழாசிரியர் பாரதியார் ஆட்டு மந்தைக் கூட்டம் என்று கேலி செய்து திலகர் — அரவிந்தர் இயக்கத்திற்கே ஆக்கமளித்தார். சென்னையில் அடக்கப்பட்ட 'இந்தியா' புதுவையில் மிடுக்கு நடைபோட்டது. அதையும் 1910-ஆம் ஆண்டு அடக்கியது ஆங்கில ஆட்சி.

* * *

உடனே அரவிந்தரின் 'கர்மயோகி'யினைப் பாரதியார் தமிழில் நடத்தினார். தமிழகம் அரவிந்த மணம் கமழ்ந்தது. ஆள் தூக்கிச் சட்டம் இதோ துரத்துகிறது. பாரதியார் முயற்சியால் அரவிந்தர் கல்கத்தாவில் கப்பலேறி 4—4—1910-ல் புதுச்சேரி புகுந்து முதலில் சங்கரஞ் செட்டியார்வீட்டு மாடியில் தவம் தொடங்கினார். பிறகு வெள்ளைக்காரத் தெரு மாளிகையில் குடியேறி நான்கு மாணவருடன் வசித்தார். 1910 முதல் 1950 வரையில், நாற்பதாண்டுகள் அரவிந்தர் தமிழகத்திற்கே உரியவராகி, இங்கேயே உலகம் வியந்து போற்ற ஆசிரமமும், ஆரோவில்லும் அமைத்து அன்னையிடம் விடுத்து அமரரானார். அரவிந்தர் அரசியலை நீங்கி ஆன்ம நேய ஒருமைத் திறனால், இந்தியாவுக்கு உலகப் புகழ் தேடினார். அவர் கல்கத்தாவில் பிறந்தார்; இலண்டனில் கற்றார், பரோடாவில் கலை வளர்த்தார். கல்கத்தாவில் நான்கு ஆண்டுகள் எழுத்தாலும், பேச்சாலும்

நாட்டை வீறுபடுத்தினார். இறுதியில் காந்தி கண்டசாத்வீக எதிர்ப்பும், ஒத்துழையாமையுமே வழி எனச்சொல்லிஉள்ளடங்கியோகச் சக்தியை வளர்த்து மனிதன் தெய்வ மாறுதல் அடையும்ஆத்ம சாதனத்தைத் தந்து சென்றார். பாரதியாரும், அடியேனும், அரவிந்தர் திருவடி பற்றிப் புது வாழ்வெய்தினோம். எனது பாரத சக்தி அரவிந்த சக்தி வரலாறே. அதை அவர் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்து ஆசி கூறினார்.

* * *

1910-ல் அரவிந்தர் வந்த சில மாதங்களுக்குப் பிறகு வீர விளக்கு வ. வே. சு. ஐயர் இடர்க் கடல்களை நீந்திப் பாரிசில் பார்சி கனவான் விக்ரமசிங் ஆகி, கெய்ரோவில் அப்துல்லா மௌல்வியாகிப் பம்பாயில் குலாம் காதராகி, நாசிக் சிறையில் சாவர்காரைக் கண்டு, அவர் வந்தேமாதர ஆர்ப்புடன் அந்தமான் செல்வதைப் பார்த்துவிட்டு, நாகபுரி காங்கிரஸ் கண்டு, புதுச்சேரிக்குப் பக்கிரி வேடந்தாங்கி அல்லாகு அக்பர் என்று வந்தார். மண்டம் ஆசாரியார் வீட்டில் ஒரு வாரம் தங்கிப்பிறகு கோயில் தெருவில் குடி புகுந்தார். மனைவி வரகநேரியிலிருந்து வந்து சேர்ந்தாள். புதுச்சேரியில் ஐயர் பட்ட இடர்கள் பிரதாபசிங்கன், கரிபால்டி ஆகிய வீரர் பட்ட இடர்களைப் போலும்.

* * *

ஐயர் கிருஷ்ண பிள்ளை தோட்டத்தில் வாஞ்சி மாடசாமி, நீலகண்டன், சங்கர கிருஷ்ணன் முதலியோருக்குத் துப்பாக்கிப் பயிற்சி தந்தார். அடியேனுக்கு மறவர் உறவால் போதிய வாட் பயிற்சியும், சுடு பயிற்சியும் கிடைத்தது. ஆதலால் என்னை ஐயர் மிகவும் விரும்பி இன்னொரு செயலுக்காகப் பயிற்றினார்.

* * *



மணியாச்சியில் கலெக்டர் ஆஷை வாஞ்சி சாம்பலாக்கினான். பிறகு ஐயருக்குப் பல இடர்கள் தொடர்ந்தன. என் உடல் பொருள் ஆவி யெல்லாம் ஐயருக்காகவும், அரவிந்தருக்காகவும் அளித்தேன். ஐயரைத் தூக்கிச் செல்லவும், சூனியம் வைத்துப் பித்தாக்கவும், மயக்கவும், மாயம் செய்யவும் ஒற்றர் செய்த வஞ்சனைகள் எண்ணில. நான் உச்சிக்குடுமி தாசரி வேடம் பூண்டு அவருக்கு உதவினேன். வீரன் மாடசாமியும், வேலைக்காரி பார்வதியும் ஐயருக்குச் செய்த உதவிகள் பல.

* * *

ஒரு நாள் ஒற்றர் ஐயர் வீட்டுக் கிணற்றில் வெடி மருந்துகள் அடங்கிய ஜாடியை வைத்தனர். பார்வதி கண்டுபிடித்தாள். ஐயர் ஜாடியைப் புதுவை கவர்னரிடம் காட்டி வரும்போது ஒற்றர் கிணற்றை இறைத்துப் பார்த்து ஏமாந்தனர். குண்டர் கள்ளுண்டு மற்றொரு தடவை இரவில் ஐயரைத் தூக்கிச் செல்லவே கூட்டமாக வந்தனர். ஐயர் தமது ஆயுதச் சாமான்களை மாடியேறி இன்னொரு வீட்டில் ஒளிய வைத்து, மனைவி மக்களையும் அங்கே அனுப்பித் துப்பாக்கி எடுத்து மேலேயிருந்து இரண்டு வேட்டுப் போட்டார். காலிகள் ஓடி மறைந்தனர்.

* *

முதல் உலகப் போர் மூண்ட போது எம்டன் கப்பல் சென்னையில் குண்டு போட்டுப் புதுவைக்கு வந்தது. அதில் சண்பக இராமன் பிள்ளை இருந்தார். மாடசாமி படகில், இரவு பன்னிரண்டு மணிக்கு ஐயர் எனக்குக் 'கடிதம்' தந்து அனுப்பினார். சண்பக இராமர் பதில் தந்தார். 'புரட்சியைப் பலமாக நடத்தினால் கைசரின் உதவி வரும், என்றார்.

* * *

இதன் பிறகு ஐயர், அரவிந்தர், பாரதி ஆகிய அனைவரையும் அல்ஜீரியாவுக்கு நாடு கடத்த முயன்றனர். அரவிந்தர் நடக்காது என்றார். நடக்கவில்லை.

* *

1917-ல் காந்தியடிகள் வந்தார். அவரது உபதேசத்தால் துப்பாக்கி வெறி ஒழிந்தது. ஐயருடன் எல்லாரும் காந்தியர் ஆனோம். போர் முடிந்ததும் அரசியல் கைதிகள் விடுதலை பெற்றனர். பாரதியார் பாய்ந்து வந்தார். சென்னைக்கு ஐயரும் வந்தார். பிறகு காந்தி வழி பற்றித் தொண்டு பரவினோம்.

அரவிந்த சக்தியால் புதுச்சேரி ஆன்ம நேய நிலையமானது, உலகெல்லாம் அங்கே கூடுகிறது. ''வள்ளலார்'' கண்ட கனவு வண்ணப் புதுவையில் ஆரோவில்லில் நிறைவேறுகிறது. இந்திய விடுதலைப் போரின் தியாகப் பாசறை புதுச்சேரி. அது புதுயுகச் சேரியாகி உலகச் சங்க நிலையமாக நிலவுகிறது.

* *

காந்தீயத்திற்கும் கனிந்துதவியது தமிழகமே. வடக்கே தண்டியாத்திரை போல இங்கே வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகம் நடந்தது. அங்கே சபர்மதி ஆசிரமம், இங்கே நான்கு காந்தி ஆசிரமங்கள் எழுந்து விளங்குகின்றன.

* *

இந்தியச் சுதந்தரப் போரில் 1790 முதல் இன்று வரையில் தமிழர் ஈடுபட்டுப் பாடுபட்டனர்.

இந்தப் போர்களுக்கிடையே பெரியார், அண்ணா நடத்திய தன்மானப் போர் வரிசைகளை நாம் மறக்க முடியாது.

தமிழரசு வந்ததே;
தன்மானம் வென்றதே;
அமுதமான தமிழ்மொழியும்
அரியணை வகித்ததே!

கொய்தலை

பள்ளிக் கட்டடங்கள் உருவாக்குவதை மட்டும் கவனிக்கத் தனி நிறுவனம் ஒன்றை அமைக்கும் திட்டம் பற்றித் தமிழக அரசு ஆய்வு செய்து வருகிறது. பள்ளிக் கட்டடங்களை உருவாக்கும் பொருட்டுக் கடனுதவிக்காகக் குடிநீர் வடிகால் வாரியம் போன்று இந்த நிறுவனம் எல். ஐ. சி., வணிக வங்கிகள் ஆகியவற்றை அணுகும்.

முக்கியமாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஏறக் குறையப் பத்தாயிரம் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இவற்றுக்குக் கட்டடங்கள் இல்லை. தொடக்கப்பள்ளிகளனைத்துக்கும் பலமான கட்டடங்களை உருவாக்க ரூ. 9 கோடி தேவைப்படுகிறது. பள்ளிக் கட்டடம் உருவாக்கும் பணியைக் கவனிக்கத் தனி நிறுவனம் அமைக்கப்பட்டால், இதற்காக எல். ஐ. சி. மற்றும் இதர நிதி நிலையங்களிலிருந்து கடனுதவியை இந்நிறுவனம் பெறமுடியும்.

* * *

தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் உடனடியாக மாணவருக்காக 21 அரசாங்க விடுதிகள் ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் ஏழு கல்லூரி மாணவர்களுக்கும், எஞ்சியவை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும், மாணவியருக்கும் ஆகும்.

கல்லூரி மாணவர்களுக்காகத் தொடங்கப்படுபவை தாம்பரம், விழுப்புரம், கரூர், மதுரை, சிவகங்கை, வேலூர், திருவாரூர் ஆகிய ஊர்களில் இருக்கும். ஒவ்வொரு விடுதியிலும் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிகள், செங்கற்பட்டு மாவட்டத்தில் செவ்வாய்ப்பேட்டை, நாடூர், திருச்சி மாவட்டத்தில் அன்னவாசல், தாத்தையங்கார் பேட்டை, சேலம் மாவட்டத்தில் நாமகிரிப் பேட்டை; தருமபுரி மாவட்டத்தில் கவண்டப்பாடி, இராமநாதபுர மாவட்டத்தில் திருவேங்கம்பேட்டை; வடஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கொடுங்கலூர்ஆகிய ஊர்களில் இருக்கும். ஒவ்வொரு விடுதியிலும் 30 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

உயர்நிலைப்பள்ளி மாணவியருக்கான விடுதிகள், சேலம் மாவட்டம் ஓமலூர்; நெல்லை மாவட்டம் களக்காடு; கோவை மாவட்டம் அந்தியூர்; தென் ஆர்க்காடு மாவட்டம் தர்மநல்லூர் ஆகிய ஊர்களில் தொடங்கப்படும். ஒவ்வொரு விடுதியிலும் 30 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

* * *

நாளிதழ்கள் விநியோகத்தில் உலகத்திலேயே முதலிடம் வகிக்கிறது, சுவீடன். 1970-ஆம் ஆண்டில் அந்த நாட்டில் 1,000 பேர்களுக்கு 534 பிரதிகள் என்ற விகிதத்தில் நாளிதழ்கள் இருந்தன. ஜப்பானில் 511 பிரதிகள் என்ற விகிதத்திலும், பிரிட்டனில் 488 பிரதிகள் என்ற விகிதத்திலும் நாளிதழ்கள் இருந்தன. 1971-ஆம் ஆண்டிற்கான ஐ.நா. புள்ளி விவர நூல் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளது.

* * *

உலகிலேயே ஐரிஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் மிகவும் அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். அமெரிக்கர்கள் நிறைய பீர், மதுபானம் உற்பத்தி செய்கிறார்கள்; சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள்; லைபீரியா நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் திருமணம் செய்துகொள்கிறார்கள்.

அந்நாட்டில் 1,000-க்கு 38 பேர் தாங்கள் ஆண்டு தோறும் திருமணம் செய்து கொள்வதாகக் கூறுகிறார்கள்.

கில்பர்ட், எல்லீஸ் தீவுகளில் தான், மிக அதிக அளவில் விவாகரத்துகள் நடைபெறுகின்றன. 1,000 பேருக்கு 5 பேர் வீதம் அங்கு விவாக ரத்துச் செய்து கொள்கிறார்கள்.

சமூகப் பொருளாதாரப் போக்குகள் சம்பந்தமாகத் தயாரிக்கப் பட்டுள்ள ஐ. நா. புள்ளி விவர நூல் இத்தகவலைக் கூறுகிறது.

* * *

தமிழ்நாடு முழுவதும் பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திக்கொள்ள உலக வங்கியின் கடன் உதவியுடன் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திறக்கும் திட்டம் ஏற்கெனவே தமிழக அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. கூடிய விரைவில், அந்தத் திட்டம் பெரும் அளவில் நிறைவேற்றப்படும்.

ஆடுதுறையில் உள்ள அரசினர் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை அரசு முனைப்பாக ஆராய்ந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் வடிகால் பிரச்சினையைத் தீர்க்கப் பல திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் அனைத்தும் பல கட்டங்களில் இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

நிலக்கடலை விளை-
விக்கும் விவசாயிகளே

பூச்சிகளாலான நஷ்டத்தை தவிர்க்கவும். சார் உறுஞ்சும் அசுவுணியினால் பயிர் வலு விழக்கிறது. நெடுங்காலம் பாதுகாப்பளிக்கும் முழுமை யான ஊடுருவிப்பாயும்

மெட்டாஸிஸ்டாக்ஸ் தெளிக்கவும். புழுக்கள், அசுவுணி, இதர பூச்சிகளை அழிக்க

ஃபாலிடால் E 605 திரவமும்

தெளிக்க தண்ணீர் வசதியில்லையெனில்

ஃபாலிடால் தூளும் உபயோகிக்கவும்.

- அடைப்புகளுடன் இணைக்கப் பட்டிருக்கும் உபயோகிக்கும் முறைகளின்படியே மெட்டாஸிஸ்டாக்ஸ், ஃபாலிடால் திரவம் அல்லது தூளையே உபயோகப்படுத்தவும்.

நிலக்கடலைவிளைவிக்கும் விவசாயிகள்

பயிர் விளைச்சலில் நஷ்டத்தை தவிர்க்க பேயரின் தரமான பூச்சி மருந்துகள் உபயோகிக்கிறார்கள்.

BAYER பாயரின் தரமான பூச்சி மருந்துகள்

5-A/202 (760)



கணக்குப் பார்ப்போம்!

கவிஞர் கருணானந்தம்

இருபத்தைந் தாண்டுகளாம்! என்னே விந்தை ?
இணையற்ற உரிமைபெற்ற இந்தி யாதான்
உருப்படியாய் ஓட்டியுள்ள காலம் நீளம் !
உருவாக்க வேண்டியன இனும்எ ராளம் !
விருப்பமுடன் விடுதலையை நினைவு கூர்ந்து
வெள்ளிவிழா எடுக்கின்ற இந்நாள்-நல்ல
திருப்புமுனை வரக்கண்டோம் ! மக்க ளாட்சி
சிதையாமல் சிறந்தோங்கச் சூளு ரைப்போம் !

“தலைதூக்கி நிற்காது : தழைக்கா”தென்றார் !
தரணியெங்கும் நிழல்பரப்புங் கிளைவி ரித்தோம்!
இலைதாக்கும் பயிர்க்கொல்லி நோயைப் போன்ற
எதிர்வந்த தடையனைத்தும் உடைத்தோம்! உள்ளே
தலைதூக்கும் குழப்பங்கள் கரையே றாமல்
அடிபணிந்து புறங்காணச் செய்தோம் ! நீண்ட
மலைதூக்கும் முகடேபோல்-சாத னைகள்
வானோக்க வளர்க்கின்றோம், துறைகள் தோறும்!

பன்னீரின் மணங்கமழும் சோலை காணப்
பாத்திகளாய் அமைந்தோரே! மலர்கள் தோயும்
தெண்ணீரின் பொய்கையாய் நமது நாடு
திகழ்ந்தோங்க வாய்க்காலாய் ஆனீர்! உங்கள்
கண்ணீரின் காவியத்தை வணங்கு கின்றோம்!
காலத்தால் அழியாத கல்லெ ழுத்தாம்
செந்நீரின் வரலாற்றைச் சிரமேற் கொண்டோம் :
சிந்தனையால் செயலாலே நன்றி சொல்வோம் !

கற்பனையாய்க் காய்க்காத பனையா காமல்
கண்முன்னே பயனூட்டும் தென்னை போலப்
பொற்புடனே திட்டங்கள் தொகுத்துக் கோடி
புரிகின்றோம் : விடுதலைப்பொன் மாளி கைக்குச்
சிற்பிகளே ! “நாம்கணக்குத் தீர்த்த திந்நாள் :
சிந்தித்துப் பார்க்குந்நாள் இந்நாள் !” என்றார்
அற்புதமாய் அன்றெங்கள் அண்ணா ! உண்மை !!
அவர்சொல்லைச் செயலாக்கும் கலைஞர் ஆட்சி !

குறளோவியம்

முதல்வர் கலைஞர்

வைத்தியர் ஊசி குத்துகிறார், உடலில் வலி ஏற்படுகிறது. ஆனால் அந்த ஊசி வழியே உடலுக்குள் செல்கிற மருந்து, நோய் தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. வைத்தியரிடம் வேதனை தரும் ஊசியும் இருக்கிறது. நோய் வேதனையை நீக்கும் மருந்தும் அதனுள் இருக்கிறது!

இங்கே திருவள்ளுவர் ஒரு வைத்தியரைக் குறள் மூலம் அறிமுகப்படுத்துகிறார் பாருங்கள். அழகி அழகனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையை அவன் வர்ணிக்கிறான். இந்த அணங்கு இரு பார்வையுடையவள்; ஒரு பார்வையால் அவனுக்கு வேதனை உண்டாக்கினாள். அடுத்த பார்வை அளித்து அதை விலக்கும் மருந்தும் அளிக்கும் இந்த விசித்திரமான மருத்துவப் பெண்மணியின் பார்வைச் சிறப்பை வள்ளுவர் வாய்மொழியாகவே கேளுங்கள்.

இருநோக் கிவளுண்கண்
உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து



அப்படி அவள் பார்க்கிறாளே என்பதற்காகப் பருவ இளைஞன் வாளாயிருந்து விட்டானா? அவனோ ஒரு வம்புக்கார வாலிபன் போலும். காதல் மயக்கத்தில் என்னென்ன சொல்கிறான் பாருங்கள்!

“நான் அவளைப் பார்க்கும்போது அவள் என்னைப் பார்க்காமல் நிலத்தை நோக்குகிறாள். நான் அவளைப் பாரா திருக்கும்போது அவள் என்னைப் பாரத்து மகிழ்கிறாள்” என்று கூறுகிறான். இது எவ்வளவு பெரிய பொய் தெரியுமா?

“நான் அவளைப் பாராதிருக்கும்போது அவள் என்னைப் பார்த்து மகிழ்கிறாள்” ’என்கிறானே-இவன்தான் அவளைப் பார்ப்பதில்லையே; அப்படி இருக்கும்போது அவள் இவனைப் பார்ப்பது மட்டும் இவனுக்கு எப்படித் தெரிந்தது? அதேபோல் இவன் அவளைப் பார்க்கும்போது அவள் நிலத்தை நோக்குகிறாளாமே; அது எபபடி? இவனைப் பார்த்துவிட்டுத்தானே அவள் தனது பார்வையை வேறு பக்கம் திருப்ப வேண்டும்?

இந்தப் பார்வைக்குத்தான் ‘பார்க்காமல் பார்க்கும் பார்வை’ என்று பெயர் போலும்! இத்தகைய நிகழ்ச்சியால் வள்ளுவர் எதை விளக்குகிறார் தெரியுமா? காதலன் கூறும் பொய்யை மட்டுமல்ல. அவர்கள் கண்களை வேறுபக்கம் திருப்ப அவர்களே முயன்றாலும் அது முடியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள் என்பதைத்தான் சொல்லாமல் சொல்கிறார் செந்நாப் போதார். இதோ அந்தக் குறளோவியம்!

யானோக்குங் காலை
நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்.

மெல்ல நகும்—உள்ளுக்குள் மகிழ்ச்சியடைவாள் என்பதாகும்.

விடுதலைப்போரில் திருப்பங்கள்!

எஸ். நடராஜன்



நம் நாட்டின் விடுதலைப் போராட்டம் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக நடந்து வந்திருக்கிறது. அடிமைகளாக ஆர்வமிழந்து ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திர உணர்ச்சி பெற்று வீறு கொண்டு எழுந்தது, ஒரு நாளில் நடந்துவிடவில்லை. நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்பதற்காகப் பல தலைவர்கள் பல முறைகளைக் கையாண்டனர். தம் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அளித்து, தியாகிகளாக விளங்கியவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்கா. நாடு விடுதலையடைந்து அந்நாளின் வெள்ளி விழாக் கொண்டாடும் இச்சமயத்தில் அந்தத் தியாகிகளுக்கு வணக்கம் கூறுவோம்.

தீங்கு செய்வதிலும் நன்மையுண்டு என்பது உலகறிந்த உண்மை. பிரிட்டிஷ் ஆட்சியை நீடித்து நிலைக்கச் செய்யச் சிலர் நமக்குக் கொடுமையிழைத்தனர். அதுவும் நாட்டில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டச் செய்த நடவடிக்கைகள் சுதந்திர வெறியையே ஊட்டின.

முதல் திருப்பம்

பிரிட்டிஷ்காரர்கள் நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள். அவர்களிடம் நியாயத்தை எடுத்துக்காட்டியே நாட்டின் விடுதலையைப் பெற்றுவிடலாம் என்று கனவுகண்டவர் தாதாபாய் நவரோஜி. சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்று அதனிடம் விளையாடுவதைப்போல இவர் பிரிட்டிஷ் நாடாளு மன்றத்திற்குப் (காமன்ஸ் சபை) போட்டியிட்டு மூன்று முறை தோற்று, நான்காவது முறை வெற்றி பெற்று அம்மன்றத்தின் உறுப்பினராகி இந்தியாவிற்கு நியாயம் வழங்க வேண்டும் என்பதைப் புள்ளி விவரங்களுடன் எடுத்து விளக்கினார். வில்லியம் வெட்டர்பான், கெயின், ஹிண்ட்மான் போன்றவர்கள் இந்தியாவின் கோரிக்கைக்கு ஆதரவளிக்க முன்வந்தது தாதாபாயின் பணியின் காரணமாகத்தான். கெயின் ஒரு சமயம் குறிப்பிடும்போது "ஆங்கிலேயர்களாகிய நீங்கள் ஏன் இந்தியர்களுக்காகப் பரிந்து பேசுகிறீர்கள்? பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள் சுகமாகத்தானே இருக்கிறார்கள். அவர்கள் யாரும் எதுவும் கேட்பதாகத் தெரியவில்லையே! என்று என்னிடம் கேட்கிறார்கள். இந்தியர்களாகிய நீங்கள் விடுதலை கோரும் ஆர்வமற்று, பாவம் இந்தக் கிழவரை (தாதாபாய்)த் தொல்லைக்குள்ளாக்குகிறீர்களே!" என்று பேசினார். நம் நாட்டினர் விடுதலை வேண்டும் என்று கேட்கவும் துணிவற்று இருந்த காலம் அது.



இரண்டாவது திருப்பம்

சிப்பாய்க் கலகம் என்று கூறப்படும் முதல் சுதந்திரப் போரை பிரிட்டிஷார் வெற்றிகரமாக ஒடுக்கிவிட்டனர் என்றாலும் நாட்டில் கொந்தளிப்பு மட்டும் முழுதுமாக அடங்கிவிடவில்லை. நீறுபூத்த நெருப்புப்போல் சுதந்திர வேகம் இருந்துகொண்டே இருந்தது. மக்கள் எப்போது மீண்டும் கிளர்ச்சி செய்வார்களோ என்ற பயம் -பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு இருந்தே வந்தது.

இந்தியர்களின் துயரங்களுக்கு முடிவுகட்ட அவர்களுக்கென்று ஒரு தேசிய ஸ்தாபனம் வேண்டும் என்று எண்ணியவர் ஹியூம் என்பவர். இதற்கான முயற்சிகளையும் அவரே செய்தார். வைஸ்ராய் டப்ரினும் இந்த ஸ்தாபனம் ஏற்பட ஆதரவு அளித்தார். ஆளுபவர்களுக்கு அக்கறை ஏன்?

1857-ஆம் ஆண்டுப் புரட்சி போல மற்றொரு கிளர்ச்சி கிளம்பலாம் என்ற சூழ்நிலை நாட்டில் இருந்தது. 1870-ல் நாட்டில் பல இரகசிய சங்கங்கள் வேலை செய்வது கண்டுபிடிக்கப்பட்டன. மக்கள் உணர்ச்சி பயங்கர வழியில் பாயாமல் இருக்க ஒரு ஸ்தாபனம் நிறுவ முயற்சி நடந்தது. இதுதான் வைஸ்ராய் ஆதரவின் இரகசியம்.

பம்பாயில் நடைபெற்ற முதல் காங்கிரசுக்கு, பம்பாய் மாநில ஆளுநராக இருந்த 'ரே'யைத்தான் தலைமை வகிக்கச் சொல்வதாக இருந்தது. ஒரு இந்தியர் தலைமை வகிப்பது நல்லது என்று கருதப்பட்டதால் உமேஷ்சந்திர பானர்ஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோபாலகிருஷ்ண கோகலே ஹியூமைப் பாராட்டி லண்டனில் பேசியபோது இந்திய தேசிய காங்கிரஸை இந்தியர் எவரும் ஆரம்பித்திருக்க முடியாது. இந்தியர்களிடம் பிரிட்டிஷாருக்கு அவ்வளவு அவநம்பிக்கை என்று குறிப்பிட்டார்:

மூன்றாவது திருப்பம்

விடுதலைப் போரில் மகாத்மா காந்தி தலையிடுமுன் புரட்சியே தலைதூக்கி நின்றது. புரட்சிக்காரர்களைப் பயங்கரவாதிகள் என்று அந்நிய ஆட்சி வருணித்தது. உண்மையில் அவர்கள் பயத்தை இந்தியர் உள்ளத்திலிருந்து விரட்டிய தியாக சீலர்கள்.

புரட்சி நடந்தபோதெல்லாம் இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கண்ட ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கம் வேரூன்ற, பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடிக்கலாயினர். வங்காளத்தின் கீழ்ப் பகுதியில் முஸ்லிம்கள் அதிகம்.



மேற்குப் பகுதியில் இந்துக்கள் மிகுதி. ஆகவே கவர்னர் ஜெனரலாக இருந்த கர்ஸான் பிரபு வங்காளத்தைக் கிழக்கு வங்கம் என்றும் மேற்கு வங்கம் என்றும் பிரித்தனர். 1905-ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ஆம் நாள் வங்கம் இரு துண்டாயிற்று. மக்கள் கிளர்ச்சிக்குப் பின்னர் வங்காளம் மீண்டும் ஒன்றாகியது. ஆனால் 1947-ல் பாகிஸ்தான் பிரித்தளிக்கப்பட்டபோதுதான் கிழக்கு வங்கம் மறுபடியும் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.

இப்பிரிவினையை எதிர்த்து இக்நாடே கொதித்தெழுந்தது. கிளர்ச்சி சுதேசி இயக்கமாகவும் அந்நியத் துணி பகிஷ்காரமாகவும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. பங்கிம்சந்திரரின் வந்தே மாதர கீதம் புரட்சி வேகத்தை அதிகரிக்கச் செய்தது. 'வந்தே மாதரம்' என்ற ஒலியைக் கேட்டே ஆங்கிலேயர்கள் நடுங்கினர். இப்புரட்சியின் எதிரொலியால் காங்கிரஸில் மனுப் போட்டுக்கொண்டிருந்த மிதவாதிகளின் செல்வாக்குக் குறைந்தது.

திருநெல்வேலியில் 'வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோர் சுதந்திர வேகத்தை மக்களிடையே பரப்பினர்.

நான்காவது திருப்பம்

அன்னிபெசண்ட் அம்மையார்தான் 'ஹோம்ரூல்' (சுயாட்சி) இயக்கத்தின் 'மாதா'. இந்தியாவின் கல்வியும், கலையும், கலாசாரமும் வரவரக் குறைந்துபோவதற்குக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சியே என்ற உண்மையை இவர் துணிந்து கூறினார். இந்தியாவுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று அவர் பாடுபட்டார்.

இதற்காக இவர் பிரச்சாரம் செய்து வந்ததுடன் அங்கங்கே சுயாட்சிச் சங்கங்களையும் நிறுவி வந்தார். இவருடைய 'நியூ இந்தியா' பத்திரிகையில் 'ராஜத்துவேஷ'க் கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன என்றும், இனி அம்மாதிரி எழுதப்படாமலிருக்க ரூ. 20,000 ஜாமீன் கட்டவேண்டும் என்றும் சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. அப்போது சென்னை கவர்னராக இருந்த பெண்ட்லண்ட், அன்னிபெசண்ட், அருண்டேல், வாடியா இம்மூவரையும் காவலில் வைத்தார். இந்தியாவெங்கும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் நாடு கொதித்தெழச் செய்தவர் பெண்ட்லண்ட்.

ஐந்தாவது திருப்பம்

நாடு முழுவதும் சுதந்திரக் கனல் பறக்கச் செய்த பெருமை ஜெனரல் ஓ'டயர் என்ற ஒரு ராணுவ அதிகாரியையே சாரும். சீக்கியர்களைக் கொண்ட பஞ்சாப் படை வீரத்திற்குப் பேர்போனது. இங்கு, காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெறாமல் தடுக்க பஞ்சாப் கவர்னர் ஓட்வியர் விரும்பினார். அப்போது பஞ்சாப் மக்களின் மனத்தைக் கவர்ந்த தலைவர்கள் டாக்டர் சத்யபால், டாக்டர் கிச்லு இவர்களைக் கைது செய்து எங்கோ அழைத்துச்சென்றுவிட்டார்கள். இது மக்களிடையே பெரும் கொதிப்பை ஏற்படுத்திவிட்டது.

அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டிக்க 1919 ஏப்ரல் 13-ஆம் நாள் ஜாலியன்வாலாபாக் மைதானத்தில் சுமார் 20,000 பேர் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இந்த மைதானத்திற்குக் குறுகலான ஒரே ஒரு வழி. கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே திடீரென்று படைகள் வரும் சத்தம் கேட்டது. நூறு இந்தியச் சிப்பாய்களுடனும் ஐம்பது வெள்ளை சோல்ஜர்களுடனும் ஓ'டயர் என்ற ராணுவ அதிகாரி வந்தார். அரை மணி நேரம் கூட்டத்தினர் மீது சுடச் செய்தார். சுமார் 1600 குண்டுகள் சுட்டுத் தீர்க்கப்பட்டன. 'தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன; இல்லையேல் மேலும் சுட்டிருப்போம்' என்று கொக்கரித்தார் ஓ'டயர்.

காந்திஜியும் சரோஜினி தேவியும் தங்களுக்கு பிரிட்டிஷார் அளித்த கெய்ஸரி ஹிந்த் மெடல்களைத் திருப்பிவிட்டனர். ரவீந்திரநாத் தாகூர் 'சர்' பட்டத்தை உதறித் தள்ளினார். மிதவாதியாக இருந்த மோதிலால் தீவிரவாதியானார்.

ஆருவது திருப்பம்

இந்தச் சமயத்தில்தான் காந்தியடிகள் அரசியலில் நுழைந்து அகிம்சை வழியில் போராட்டத்தைத் திருப்பினார். இவருடைய ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு இயக்கம் ஆகியன அயல் நாட்டினரைத் திணற வைத்தன.

இந்திய விடுதலைப் போராட்டச் சரித்திரத்திலேயே காந்தியடிகள் நுழைவு ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. உலகத்திற்கே வழிகாட்டும் ஒரு புதுப் பாதையை அடிகள் இந்தியாவிற்கு வகுத்துக் கொடுத்தார்.,

தியாகிகள் உயிர்ப் பலியாவதைத் தடுக்க முயற்சி எடுத்தவர் காந்தியடிகள். இவர் இந்திய அரசியலில் தோன்றிச் சத்தியம், அகிம்சை என்ற இரு 'ஆயுதங்களையும் உபயோகிக்காமல் இருந்திருந்தால் இன்னும் கணக்கில்லாதபேர் நாட்டிற்காக மாண்டு மடிந்துபோயிருப்பார்கள்.

நாட்டிற்குச் சுதந்திரம் வந்தது எதனால்? பிரிட்டிஷாரின் மனம் மாறியதாலா? புரட்சியாளர்களின் கிளர்ச்சியாலா? சுபாஷ்போஸ் தனி ராணுவம் அமைத்துப் படையெடுத்ததாலா? சாத்வீகப் போராட்டத்தினாலா? அல்லது 'வெள்ளையனே வெளியேறு' என்ற ஆகஸ்டுப்புரட்சி காரணமாகவா?

இவ்வளவும் ஒரு காரணத்தினால் தான் என்று சொல்ல முடியாது. இவை எல்லாம் ஒவ்வொரு வகையில் சுதந்திரம் கிடைக்க உதவியிருக்கலாம். எது எப்படியானாலும் நாட்டைப் பிரிவினை செய்யாமல் சுதந்திரம் பெற முடியவில்லை. காந்தியடிகள் கடைசி வரை நாட்டின் பிரிவினையை ஆதரிக்கவில்லை. வேறு வழியில்லாமல் நாடு பிரிவினையாகிச் சுதந்திரம் அடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த அன்று காந்தியடிகள் கல்கத்தாவில் உண்ணாநோன்பிருந்துதான் கொண்டாடினார். அவர் வாழ்த்துச் செய்தி இல்லாமலேயே நாட்டின் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது விந்தையல்லவா?

விருப்பத்தின் விளைவு

ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெரு விருப்பமாகும். இவ்விருப்பமே என்னை எப்போதும் ஏழைகளிடம் கொண்டு போய்ச் சேர்த்தது: ஏழைகளுடன் கலந்து அவர்களுள் ஒருவனாகும் சக்தியையும் தந்தது.

—காந்தியடிகள்

எது முக்கியம்?

எந்தப் பெரிய இலட்சியத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்; அதைச் சாதிக்க எத்தனைபேர் முன் வருகிறார்கள் என்கின்ற எண்ணிக்கை முக்கியமல்ல — அதற்காக முன்வருவோர் எத்தகைய மனப்பாங்குடையோர் என்பதே வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும்.

—காந்தியடிகள்

பாசிப் பயறு ராசி காணப் பயிரிடுவீர் 'ராஜேந்திரா'!

குடுமியான்மலை 'அண்ணா பண்ணையி'ல் அமைந்துள்ள "கலைஞர் கருணாநிதிவேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம்" (Kalaingar Karunanidhi Research Institute) முதன் முதலாக வெளியிட்டுள்ள "கே.கே.ஆர்.ஐ. 1" என்ற பாசிப் பயறு (பச்சைப் பயறு) ரகத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் அண்மையில் "இராஜேந்திரா" என்று பெயரிட்டுள்ளார். இந்தப் புதிய பாசிப் பயறு ரகம் கீழ்க்கண்ட ஐம்பெருஞ் சிறப்புகளைக் கொண்டுள்ளது:—

*குறுகிய கால வயதுடையது.

*மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது.

*இதைத்தனிப் பயிராகவும், நிலக்கடலையுடன் கலப்புப் பயிராகவும் சாகுபடி செய்யலாம்.

*நல்ல ராசி கொடுக்க வல்லது.

*மானாவாரியில் இருபோகச் சாகுபடிக்கு "இராஜேந்திரா" உதவும்!

தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் மானாவாரி பாசிப்பயறு வகைகளின் வயது 135 நாட்களாகும். ஆனால், "இராஜேந்திரா" பாசிப் பயறு ரகத்தின் வயது 65 நாட்களே யாகும். குறுகியு கால வயது உடையதாக இருப்பதால், "இராஜேந்திரா" அறுவடைக்குப் பின், இரண்டாம் பயிராகக் குறுகிய கால வயதுடைய கொள், எள், உளுந்து, ஆகியவைகளைச் சாகுபடி செய்யலாம். எனவே, "இராஜேந்திரா" பாசிப் பயறு மானாவாரி நிலங்களில் இருபோகச் சாகுபடி செய்ய வழிகோலியுள்ளது.

"இராஜேந்திரா" பாசிப் பயறு ரகத்தின் செடிகள் குட்டையாகவும் (சுமார் 1 அடி), விதைகள் பெரியதாகவும், மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடனும் இருக்கும். காய்கள் முதிர்ந்து காய்ந்தபின்னர் வைக்கோல் நிறத்துடன் இருக்கும்.

"இராஜேந்திரா" என்று பெயரிடப் பெற்ற இப்புதிய ரகப் பாசிப் பயறு, முதலில் திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் உள்ள பயறு வகைக் கிளை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப் பெற்றதாகும். ஆரம்பகால ஆராய்ச்சியின் போது இந்த ரகத்திற்கு ஜே. ஜி. 11 (J. G. 11) என்ற வளர்ப்பு எண் (Culture Number) கொடுக்கப்பட்டிருந்தது. பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகே கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் "இராஜேந்திரா" பாசிப் பயறு ரகத்தை வெளியிட்டுள்ளது.

சாகுபடிக் குறிப்புகள்

விதைக்கும் பருவம் : மானாவாரியாகப் பயிரிட ஆனி, ஆடி மாதங்களில் "இராஜேந்திரா" பாசிப்பயறு ரகத்தை விதைக்க வேண்டும்.

விதையளவு: ஏக்கருக்கு எட்டு கிலோ. விதைகளைத் தகுந்த நுண்ணுயிர் கல்ச்சருடன் கலந்து விதைப்பதே சிறந்தது.

இடைவெளி : ஒரு சால் விட்டு மறுசாலிலும், சாலில் 8 அங்குலம் இடைவெளி விட்டும் விதைகளை விதைக்க வேண்டும். அல்லது வரிசைக்கு வரிசை 30 சென்டிமீட்டர் (1 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

செப்டம்பர் 1-
தமிழரசு
கப்பலோட்டிய தமிழர்
வ.உ.சிதம்பரனார்
நூற்றாண்டு விழாச்
சிறப்பிதழ்!
இத்துடன்.....
அரவிந்தர்
நூற்றாண்டு விழா
இலவச இணைப்பும்
உண்டு!

அடியுரம் : நல்ல மகசூல் பெற ஏக்கருக்கு 5 கிலோ தழைச்சத்து, (25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 10 கிலோ யூரியா), 10 கிலோ மணிச்சத்து (65 கிலோ சூப்பர் பாஸ்பேட்) இடவேண்டும். சூப்பர் பாஸ்பேட்டைக் கடைசி உழவிலும், அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவை விதைப்பதற்கு முன்பும் இடவேண்டும்.

களையெடுத்தல் : விதைத்த 20-ஆம் நாள் களையெடுக்க வேண்டும்.

பயிர்ப் பாதுபாப்பு : காய்ப் புழுவின் சேதத்தைத் தடுக்க, பூப் பூத்தவுடன் டி.டி.டீ. 5 சதத்தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

மகசூல்

இவ்வாறு சாகுபடி முறைகளை மேற்கொண்டு "இராஜேந்திரா" பாசிப்பயறு பயிரிட்டால், ஒரு ஏக்கரிலிருந்து 250 கிலோ மகசூல் (பயறு) பெறலாம்.

நிகர இலாபம்

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டால் ஓர் ஏக்கர் பயிரிட ரூபாய் 130 செலவாகும். ஆனால், ஓர் ஏக்கரில் கிடைக்கும் 250 கிலோ மகசூல் மூலம் ரூபாய் 500 வருவாய் கிடைக்குமாதலின், சாகுபடிச் செலவு போக நிகர இலாபம் ஏக்கருக்கு ரூபாய் 370 கிடைக்கும்.

எனவே, "இராஜேந்திரா" பாசிப் பயறு பயிரிட இன்றே விரைந்திடுவீர்!

அன்பே! ஆருயிரே!



சென்னை மூர் அங்காடி.

சாலையின் ஒரு பக்கம் ஒரு நாய் தன் குட்டிகளுடன் படுத்துக் கொண்டிருக்கிறது. எங்கிருந்தோ ஒரு 'டாக்சி' விரைந்து வந்து நாயின் மேல் ஏறி மறைந்து விடுகிறது, உடனே அந்த நாய் பரிதாபமாகக் கத்தி அதே இடத்தில் இறந்து விடுகிறது! அருகே இருந்த குட்டிகள் தாயைப் பிரிந்ததால் என்னவோ கத்துகின்றன. அந்த வழியே போவோர் வருவோர் இந்த அவல நிலையைப் பார்த்தும் பாராமல் செல்கின்றனர்.

ஆனால், அதோ வருகிறாரே ஒருவர்......அவர் மட்டும் ஏன் அந்த இடத்தில் கண் கலங்கி நிற்கிறார்....இறந்த தாய் நாயின் அருகே அனாதைகளாக அழுகின்ற குட்டிகளைத் தூக்கி, அன்போடு தடவிக் கொடுக்கிறாரே...... நிராதரவான அந்தக் குட்டிகளைத் தூக்கிக்கொண்டு எங்குப் போகிறார்? யார் அவர்?

திருமணமாகிப் பதினொன்று ஆண்டுகளாகியும் அவர்களுக்கு மகப்பேறு இல்லை. இக்குறையைப் போக்க அவர்கள், விலையுயர்ந்த அழகான நாய் ஒன்றை வளர்க்கிறார்கள். தம் குழந்தையைப் போல அதனிடம் அன்பைப் பொழிந்து அருமையாக வளர்க்கிறார்கள். அல்லும் பகலும் அதன் நலனில் அக்கறை காட்டுகிறார்கள். இப்படிக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வந்த அந்த அன்பு நாய் ஒரு நாள்........!

பிள்ளை இல்லாக் குறையை நிறை செய்துகொண்டு, மன நிறைவோடு வாழ்ந்து வந்த அவர்களுக்கு மனம் நிறையத் துயரத்தை ஏற்றிவிட்டுப் பிரிந்து விடுகிறது! பெற்ற குழந்தையையே பிரிந்து விட்டது போன்ற துயரம், அவர்கள் இல்லத்தையும், உள்ளத்தையும் சூழ்ந்துகொள்கிறது. துடித்தார்கள்; கதறிக் கதறி அழுதார்கள்; நண்பரெல்லாம் ஆறுதல் பல கூறினார்கள். ஆனால், அவர்களை அந்த இழப்பிலிருந்து ஈடு செய்ய முடியவில்லையே!

தொலை பேசி எண்கள் சுழல்கின்றன. ஏதோ பேசுகிறார்கள். உடனே நாயை—அவர்கள் குழந்தையை—அந்த இடத்துக்குக் கொண்டு போகிறார்கள். கண்ணீரில் நாயைக் குளிப்பாட்டி அடக்கம் செய்துவிட்டுத் துக்கம் தொண்டையை அடைக்க நடைப் பிணமாய் நடக்கிறார்கள். நாளடைவில் அந்த இடத்தில் ஒரு கல்லறை எழுகின்றது. நாயின் பிறப்பு–இறப்பு அந்தக் கல்லிலே பொறிக்கப்படுகிறது. வாரந்தோறும் தவறாமல் அந்தக் கல்லறையிலே அந்தப் 'பெற்றோர்'களின் கண்ணீரும் கவின் மலர்களும் சொரிகின்றன! ஒரு நாய்க்காகக் கல்லறை எழுப்ப அனுமதி தந்து, அதனை வளர்த்தவர் நெஞ்சுக்கு ஆறுதலைத் தந்தவர்கள் யார்? கல்லறை காட்சியளிக்கும் அந்தப் புனித இடம் எது?

இந்த இரண்டு நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, இதுபோல் இரண்டாயிரம் நிகழ்ச்சிகளுக்கும் காரணமாய் விளங்கிக் கருணையே உருவாகக் காட்சி அளிக்கிறது எஸ்.பி.சி.ஏ. சென்னை, வேப்பேரியில், இந்த நான்கு எழுத்துகளுக்குள்ளே அடங்கியிருக்கும் 'பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம்' தான் அது.

இங்கிலாந்தில் 1809-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் முதன் முதலில் தொடங்கப்பட்ட இந்தச் சங்கம், இன்று உலகமெங்கணும் பரவி மிகச்சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றது. இந்தியாவில், கல்கத்தாவில்தான் முதன் முதல் இது நிறுவப்பட்டது. பிறகு சென்னை 'பிஷப் ரெவரெண்ட் கெல்' என்பவரால் சென்னை வேப்பேரியில் இது நிறுவப்பட்டது. இதற்கான கட்டடத்தை அன்பளிப்பாகத்தந்து உதவியவர் இராஜா வேணுகோபால் பகதூர் என்பவர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு எதிரில் காட்சியளிக்கும் இந்தச் சங்கம், வாயற்ற உயிர்களுக்கு வாயாக இருந்து அவைகளை அரவணைத்து மகிழும் அன்புத் தாயாகவும் விளங்கி வருகிறது.

இதன் செயல் திட்டங்கள் அன்பே உருவானவை; அருமையானவை, உயிர்களைக் கொல்லாமை என்பதோடு, உயிரோடு சிறுகச் சிறுகக் கொல்லுகின்ற தன்மையை இது அறவே கிள்ளியெறிந்து, அதற்குக் காரணமானவர்களை நீதியின் முன்னே கொண்டுவந்து நிறுத்தி, நியாயம் வழங்கிடும் தலையாய பணியைச் செய்து வருகின்றது.

பிராணிகளைத் துன்புறுத்துவோர்களை விசாரணைக்குட்படுத்தப் போலீஸ் அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட பல அதிகாரிகளை இந்தச் சங்கம் நியமித்திருக்கிறது. மிகவும் கொடுமையாக நடத்தப்பட்ட பிராணிகளை, அவைகளின் சொந்தக்காரர்களிடமிருந்து கைப்பற்றிக் கால்நடை மருத்துவ மனைக்கு அனுப்பித் தக்க சிகிச்சையும், உணவும் அளிக்கிறார்கள்.

மெலிந்த மாடு ஒன்று மிகுந்த பாரமுள்ள வண்டியை இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டு செல்கிறது. இப்படி அளவுக்கு மீறிய பாரத்தை ஏற்றுவது பிராணிகள் வதைச் சட்டப்படி குற்றம். இந்த நிலையைத் தொலைபேசியில் எஸ்.பி.சி.ஏ.-க்குச் சொன்னாலோ, அல்லது சங்க அதிகாரிகள் அப்பக்கமாக வரும்போது நேரில் பார்த்தாலோ என்ன செய்வார்கள்?

வண்டியிலுள்ள அதிகப்படியான பாரத்தைக் குறைப்பார்கள். அதாவது வண்டியிலுள்ள அதிகப் படியான சாமான்களை இறக்கி வைத்துவிட்டு, மாடு இழுக்கும் அளவுக்குச் சாமான்களை ஏற்றுவார்கள்.

ஒரு பாலத்தின் மீது இரண்டு மாடுகள் ஒரு பெரிய வண்டியை இழுக்கச் சக்தியில்லாமல் நிற்கின்றன. அதன் கழுத்துகளில் புண் உண்டாகி இரத்தம் கசிகிறது. வாயில் நுரை தள்ளா

கிறது. கால்கள் தள்ளாடுகின்றன. அப்படியிருந்தும் சிறிதும் இரக்கமில்லாமல் அந்த வண்டிக்காரன் கம்பால் மாடுகளை அடிக்கிறான். எருமையின் நோய் காக்கைக்குத் தெரியுமா ?

வண்டிக்காரனின் ஈவிரக்கமற்ற செய்கையைக் கண்ட எஸ்.பி.சி.ஏ. அதிகாரி வண்டியை நிறுத்தச் சொல்லி, மாடுகளைக் கட்டு அவிழ்த்து விடுகிறார். மாட்டைத் துன்புறுத்திய குற்றத்துக்காக வண்டிக்காரனுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

இச் சங்கக் கட்டடத்திலேயே ஒரு நீதி மன்றம் இருக்கிறது. பிராணிகளுக்குத் துன்பம் தருபவர்களுக்கு இங்கே உள்ள நீதிபதி தண்டனை விதிக்கிறார். அபராதங்கள் ரூ. 10 முதல் ரூ. 30 வரை விதிக்கப் படுகின்றன. தமிழக ஆளுநர் காப்பாளராகவும், உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைவராகவும் உள்ள இச் சங்கத்தின் குற்றங்களைக் கண்டுபிடிக்க 11 இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். 24 மணி நேரமும் புகார்களைக் கவனித்து ஆவன செய்ய இங்கே ஓர் அதிகாரி இரவும் பகலும் பணியாற்றுகிறார்.

தொலைபேசியில் ஒரு நாளைக்கு சுமார் 25 புகார்கள் வருகின்றன. சிலர் ஆலோசனைகள் கேட்கின்றனர். திடீரென்று ஒருவர் "நாயின் கால் வீங்கிவிட்டது என்ன செய்வது ?" என்று கேட்கிறார். உடனே இந்தச் சங்கத்திலுள்ள ஒருவர் 'சுடு தண்ணீர் ஒத்தடம் கொடுங்கள். சரியாகப் போய்விடும் !' என்கிறார்.

நீங்கள் வெளியூர் போகிறீர்கள். நீங்கள் வளர்க்கும் நாயை உடன் அழைத்துப் போக வசதியில்லை. என்ன செய்வது ? நாயை மட்டும் வீட்டில் விட்டுவிட்டுப் போக முடியுமா ? அதற்கொரு நல்ல வழி இருக்கிறது. இப்படி ஊருக்குப் போகிறவர்கள் தம் நாயைக் கொண்டுவந்து இந்தச் சங்கத்தில் விட்டுவிட்டாலோ அவர்கள் நீங்கள் வரும் வரை உணவு முதலான வசதிகளுடன் அதைப் பத்திரமாக வைத்திருந்து, நீங்கள் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் உங்களிடம் ஒப்படைத்து விடுவார்கள்.

நாய், பூனை முதலானவற்றை அன்பாக வளர்த்து வருவதைப் பார்க்கிறோம். அவற்றிற்குக் கழுத்தில் மணி முதலானவற்றைக் கட்டி அழகு பார்ப்பதும் உண்டு. விலையுயர்ந்த நாய்கள் பல, முடி வளர்ந்து பட்டுப் போன்ற மென்மையான உடலைப் பெற்றிருக்கும். நகங்கள் கூராக நீண்டு வளர்ந்திருக்கும். மனிதர்கள் தலை முடியை அழகாக வெட்டி, நகங்களை அழகு படுத்திக் கொள்ள வில்லையா ? அதைப் போல நாயின் முகத்தில் தொங்கும் முடியை அழகாகக் கத்தரிக்கவும், கூரிய நீண்ட நகங்களை அழகாக வெட்டி மெருகேற்றவும், இச் சங்கத்தில் ஓர் அழகு நிலையம் (Beauty Parlour) இருக்கிறது.

உணவு ஏதும் தராமல் மணிக்கணக்காக, நாய் போன்ற விலங்குகளைச் சங்கிலியால் கட்டித் துன்புறுத்துவதும், பத்துக் கோழிகளை அடைக்க வேண்டிய கூடையில் நாற்பது கோழிகளை வைத்து அடைத்து, அவை மூச்சுவிட முடியாமல் செய்வதும், வீட்டில் வளர்ப்பதாகக் கூறி அவற்றைச் சரியாகப் பேணாமல் தெருக்களில் அலைய விடுவதும் குற்றங்களாகும். இது பற்றிய தகவல் வந்தாலோ அல்லது அதிகாரிகள் இதனைக் கண்டாலோ சட்டப்படி வழக்குத் தொடுப்பார்கள்.


MADRAS S.P.C.A.

தெருக்களில் அலைந்து திரியும் சொரி நாய்களையும், பிற நாய்களையும் சென்னை மாநகராட்சியினர் பிடித்துச் செல்கின்றனரல்லவா ? அந்த நாய்களில் சிலவற்றைப் பொறுக்கியெடுத்து அவற்றிற்குச் சிகிச்சை முதலானவைகள் செய்து, உணவு வகைகள் கொடுத்துப் பேணி வளர்ப்பதையும் இச் சங்கத்தினர் ஒரு கடமையாகக் கருதுகின்றனர்.

இது போன்ற பல நல்ல செயல்களை யெல்லாம் நாள்தோறும் செய்வதற்குப் பொருள் அவசியமல்லவா ? அதற்காகத் தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் ரூ. 15,000 உதவி தந்து மேலும் மேலும் இத் துறைக்கு ஊக்கந் தருகிறது. மற்றும் தொழிலதிபர்கள் பலர் ஆண்டுதோறும் நன்கொடைகளைத் தருகின்றனர். இந்த நன்கொடைகளை வைத்துக் கொண்டு, இந்தச் சங்கம் நல்ல பல செயல் திட்டங்களை நிறைவேற்றி, நாடும் ஏடும் போற்றும் வண்ணம் விளங்கி வருகிறது.

இங்கே இரண்டு 'ஆம்புலன்ஸ்' வண்டிகள் இருக்கின்றன. அவசர உதவிக்கு இந்த வண்டிகள் பயன்படுத்தப் படுகின்றன. ஒரு குடிசைப் பகுதியில் தீப்பிடித்து அங்கிருந்த இரண்டு எருமைகள் தீயால் பாதிக்கப்பட்டு இறக்கவிருக்கும் சமயத்தில் அவைகளைக் காப்பாற்றிய பெருமை இவர்களுக்குண்டு.

சென்னையில் 'நடமாடும் நீதிமன்ற ஊர்தி'யினைப் பார்த்திருக்கிறோம். இந்த நீதிமன்றத்தில் வாரத்துக்கு இரு முறை விலங்குகளுக்குத் துன்பம் தருவோருக்கும் தண்டனை வழங்கப்படுகிறது. இதற்கான அனுமதியை இச் சங்கத்தினர் தமிழக அரசிடம் பெற்றுள்ளனர்.

இந்தச் சங்கத்தில் யார்வேண்டுமானாலும் உறுப்பினர்களாகச் சேரலாம். இதுவரை 300 பேர் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அவர்கள் சொல்கின்ற ஆலோசனைகள் இவர்களால் வரவேற்கப்படுகின்றன. சங்கத்தின் அரும் பணிகளை விளக்கிடும் வகையில் ஓர் ஆங்கில இதழினை நடத்தவும் ஒரு திட்டம் இருக்கிறது.

கையில் ஆயுதம் எதுவும் இல்லாமல், போலீஸ் உடையில் இங்கே காணப்படும் அதிகாரிகள் உயிர் அன்பு ஒன்றையே ஆயுதமாகக் கொண்டு ஆவன செய்கின்றார்கள்.

உயிர்ப் பலி தருவது சட்டப்படி குற்றம் என்றாலும், இன்றும் பல இடங்களில் உயிர்ப் பலிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவைகளைத் தடுத்து நிறுத்துவதும் இவர்களது பணிகளில் ஒன்றாகும்.

செங்கற்பட்டு மாவட்டக் கிராமம் ஒன்றில், மழை இல்லாக் குறைக்காக வீட்டிற்கொரு ஆட்டினைப் பலி கொடுக்க வேண்டும் என்ற பிரச்சாரம் முன்பு நடந்து கொண்டிருந்தது. சில இளைஞர்கள் இதை எதிர்த்தார்கள். இதனைக் கேள்விப்பட்ட இந்தச் சங்கத்தினர் அந்த ஊருக்குச் சென்று, கிராமத்து மக்களை ஒன்று கூட்டி, அவர்கள் அறியாமையை எடுத்துச் சொல்லி, அன்பால் அவர்களைத் திருத்தி உயிர்ப் பலியிலிருந்து எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றினார்கள்.

இன்னொரு நல்ல செயலையும் இவர்கள் செய்து வருகிறார்கள். சென்னை நகரில் சரியாகப் பேணிக் காக்கப்படாத இளங் கன்றுகள் 1,000-க்கும் மேலே இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். பால் பற்றாக் குறையினால் இவை நாளடைவில் இறந்துவிடுகின்றன. இந்த அவல நிலையைப் போக்க, இந்தச் சங்கத்தினர் இது போன்ற கன்றுகளைப் பிடித்து வந்து பராமரிக்கின்றனர். ஹாலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பாதிரியார் சென்னை மாதவரத்தில் ஒரு தொழுநோய் இல்லம் நடத்தி வருகிறார். அவர், இவ்வாறு பராமரிப்பதற்காகக் கொண்டு வரப்படும் கன்றுகளில் இருநூற்றைத் தாம் காப்பாற்றுவதாக உறுதி கூறி, அதன்படி 120 கன்றுகளை நல்ல முறையில் வளர்த்து வருகிறார்.

'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்ற கொள்கையைப் பிஞ்சு மனத்திலேயே பதிய வைக்க வேண்டும் என்ற நோக்கோடு பள்ளிகளில் கட்டுரை, பேச்சு, ஓவியப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. படக் காட்சிகளும், பிரச்சாரங்களும் அவ்வப்போது நடக்கின்றன. உயிர்களிடத்தில் அன்பு காட்டும் விதத்தில் எடுக்கப்படும் திரைப் படங்கள், நடத்தப்படும் நாடகங்கள் ஆகியவற்றுக்கு இச் சங்கத்தினர் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கின்றனர்.

ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்யும் உயர்ந்த நோக்கோடு பணிபுரிந்து வரும் எஸ்.பி.சி.ஏ. மேலும் மேலும் ஏற்றம் பெற்றுத் திகழ்ந்திட எல்லா ஒத்துழைப்பும் நல்குவோம்.

— பி.வி.ஜி.

எந்த நாட்டில் எப்போது விடுதலை ?

இந்தியாவின் விடுதலை நாள் ஆகஸ்டு 15 என்று நமக்குத் தெரியும். ஆனால், உலகின் பல்வேறு நாடுகளில் எப்போது விடுதலை நாள் என்று உங்களுக்குத் தெரியுமா? கீழே சில நாடுகளும் அவற்றின் விடுதலை நாள் விவரமும் தரப்பட்டுள்ளன.

பர்மா—ஜனவரி 4
கிரீஸ்—மார்ச் 25
ஜோர்டான்—மே 25
பிலிப்பைன்ஸ்—ஜூன் 12
வெனிசுலா—ஜூலை 5
இந்தோனிஷியா—ஆக. 17
பிரேஸில்—செப். 7
சிலி—செப். 18
மொராக்கோ—நவ. 18

இலங்கை—ஜனவரி 4
கியூபா—மே 20
ஆப்கானிஸ்தான்—மே 27
அமெரிக்கா—ஜூலை 4
கொலம்பியா—ஜூலை 20
மலேசியா—ஆக. 31
மெக்சிகோ—செப். 16
கம்போடியா—நவ. 9
பின்லாந்து—டிச. 6

தமிழகம் தழைக்க 12 ஆண்டுத் திட்டம்!



தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக ஒரு 12 ஆண்டுத் திட்டத்தை—1972-லிருந்து 1984 வரை உள்ள ஆண்டுகளுக்கான—தொலை நோக்குத் திட்டத்தைத் தயாரித்தளிப்பதே மாநிலத் திட்டக் குழு மேற்கொண்ட முக்கியப் பணி. இந்த 12 ஆண்டுத் திட்ட நிறைவு ஆண்டாகிய 1984-ஆம் ஆண்டுதான் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டாகவும் அமைகின்றது.

தமிழ் நாட்டுக்கான 12 ஆண்டுத் திட்டத்துக்கு இறுதியான வரைவு தயாரிக்கப்பட்டுத் திட்டக் குழுவின் தலைவராகிய முதலமைச்சர் அவர்களிடம் தரப்பட்டுள்ளது. விரைவில் வெளியிடப்பட இருக்கும் இந்த வரைவுத் திட்டம், மாநிலத்தின் குறிக்கோள், எய்த வேண்டிய இலக்குகள், ஆகியவைகளை எடுத்துரைக்கும்: கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், சட்ட மன்றம், பத்திரிகைகள், ஆகியவைகளில் விவாதிக்கப்பட்ட பின்பு, அவற்றின் கருத்துக்களும், குறிப்புகளும் உரியமுறையில் பரிசீலிக்கப்பட்டு திட்டத்துக்கு இறுதி வடிவம் தரப்படும். மாநிலத்துக்கான 12 ஆண்டுத் திட்டத்தின் குறிக்கோள், திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள், திட்டம் தயாரிக்கப்பட்ட விதம், ஆகியவைகளை எடுத்துக் கூறுகிறது இக்கட்டுரை.

திட்டமிடுவது கூட்டுப் பொறுப்பு

பொருளாதாரச் சமூக மேம்பாட்டுக்காகத் திட்டங்களை வகுப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கருத்துப்படி, மத்திய அரசு, மாநில அரசுகள் ஆக இரு சாரருடைய கூட்டுப் பொறுப்பே ஆகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது மாநில அளவில் திட்டங்கள் வகுத்துக் கொள்வது குறித்து யாரும் அதிகம் வலியுறுத்தவில்லை. மாநில அளவில் திட்டம் வகுப்பதற்காக ஓர் அமைப்பு அவசியமான தேவை என்பது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணரப்பட்டது. மத்தியில் திட்டக் குழு இருப்பது போல மாநிலங்களில் வல்லுநர்களைக் கொண்ட திட்ட ஆலோசனைக் குழுக்களை அமைக்குமாறு மத்தியத் திட்டக் குழுவும் நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழுவும் கருத்தைத் தெரிவித்தன. ஒவ்வொரு மாநிலத்திலும் திட்டக் குழு அமைக்குமாறு மத்திய நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரை குறித்து, 1967 ஜூலையில் தலைமை அமைச்சர் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டிலும், 1967 டிசம்பரில் தேசீய அபிவிருத்திக் கவுன்சிலிலும் விவாதிக்கப்பட்டது.

வழிகாட்டும் தமிழகம்

பல்வேறு வகை ஆக்கப் பணிகளிலும் முன்னிற்கும் தமிழகம் இதிலும் முன்னோடியாக நின்று 1971 மே மாதத்தில் மாநிலத் திட்டக் குழுவை நிறுவியது. மாநிலத் திட்டக் குழு நிறுவப்பட்டதோடு, நம் தமிழகத்தில் மாநில அளவிலும், மாவட்டங்கள் மட்டத்திலும் திட்டங்களை வகுக்கும் பணிகள் புதிய வலிமையும் வேகமும் பெற்றன.

எஸ். சிதம்பரம்
மாநிலத் திட்ட அலுவலர்

இந்திய அரசியலமைப்பின் கொள்கை நெறியை ஒட்டிப் பல்வேறு செயல் திட்டங்கள் மூலம் சாமான்ய மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தத் தமிழகம் முயன்று வருகிறது. கீழ்க்கண்ட குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு செயல் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது.

1. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவைகளில் நீதி வழங்கக் கூடிய சமுதாய அமைப்புக்கு வகைசெய்து அதன் மூலம் மக்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவது ;

2. மாநிலத்தின் நிதி வளங்களைத் திறம்படப் பயன்படுத்துதல், உற்பத்திப் பெருக்கம், சமுதாய நலப் பணிகளுக்காக வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியன மூலம் மக்கள் வாழ்க்கைத் தரத்தை விரைந்து மேம்படுத்துவது ;

3. சமுதாயப் பொருள் முதல் வசதிகள், மக்களின் பொது நன்மைக்காகச் சிறப்பாகப் பயன்படும் வண்ணம் அப்பொருட்கள் பற்றிய உரிமைகளையும், நிருவாகத்தையும் பரவலாக அமைத்துக் கொள்வது ;

4. செல்வமும், பொருள் உற்பத்திச் சாதனங்களும், பொது நன்மைக்கு விரோதமாக ஒரு சிலரிடம் குவிந்து விடாத வகையில் பொருளாதார முறையை அமைத்துக் கொள்ளுதல்.

வழிகாட்டும் தமிழ்நாடு

சில்லறை நாணயங்களை வைத்துள்ள ஏழை, லட்சாதிபதியை விட மகிழ்ச்சியாக இருப்பதைக் காணலாம். ஆகவே, வறுமையை நாம் வெறுக்க வேண்டாம். ஆன்றோர்கள் எனப் போற்றப்பட்டோர் யாவரும் ஏழைகளாகவே விளங்கினார்கள். பொருள் இல்லாக் காரணத்தால் தொடக்கத்தில் அவர்கள் ஏளனத்துக்கு இரையாகியிருக்கலாம். ஆனால், மகாபுருஷர்கள் என்றைக்கும் மக்கள் குலத்தின் மதிப்புக்கு உரியவர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களை இகழ்ந்தவர்களோ மண்ணோடு கலந்துவிட்டனர்.

பணிப் பொறுப்புகள்

மேற்கண்ட குறிக்கோள்களை நிறைவேற்றவும், தமிழ்நாட்டை உன்னதமான, மக்கள் நலங்கெழு மாநிலமாக ஆக்கவும், மாநிலத் திட்ட ஆணைக் குழுவிடம் கீழ்க்கண்ட பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன :

மாநிலத்தின் பொருள் வளம், நிதி வசதி, தொழில் வல்லுநர்கள் உட்பட ஆள் பல வசதி ஆகியவைகளை மதிப்பிடுதல், மாநிலத்தின் தேவையை நிறைவு செய்ய எந்தெந்த வளங்கள் குறைவாக இருக்கின்றன என்று கண்டறிந்து ஈடு செய்ய வழிவகை காணல்.

மாநிலத்தின் ஆதார வளங்களை மிகுந்த பயன் தரும் வகையில் சீரான முறையில் பயன்படுத்திக் கொள்ள நீண்ட காலத் திட்டம் வகுத்தல்.

பொருளாதார வளர்ச்சியைப் பின்னடையச் செய்கின்ற கூறுபாடுகள் எவை என்று எடுத்துக் காட்டுதல் ; தற்போதைய சமூக அரசியல் நிலவரத்தின் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த எத்தகைய நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று எடுத்துக் காட்டுதல்.

தனது பணிகளை நிறைவேற்ற உதவும் முறையில் அல்லது தற்போதையப் பொருளாதார நிலைமைகள், நடைமுறைக் கொள்கைகள் ஆகியவைகளுக்கு ஏற்ற முறையில் இடைக்காலப் பரிந்துரைகள் அல்லது துணைப் பரிந்துரைகளைத் தெரிவிக்கும் பொறுப்பு மாநிலத் திட்டக் குழுவிடம் விடப்பட்டது.

12. ஆண்டுத் திட்டம்

மாநிலச் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக 1972-லிருந்து 1984 வரை உள்ள 12 ஆண்டுக் காலத்துக்கான ஒரு தொலை நோக்குத் திட்டம் தயாரிக்க வேண்டும் என்பதே திட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கியப் பணி. மாநிலத்தின் வருவாய் வசதியைப் பொறுத்து, ஏற்கத் தக்க, செயல் முறை சாத்தியமான குறிக்கோள்களை வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்றும், சமதர்மச் சமுதாயம் அமைக்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில், பல்வேறு பிரிவு மக்களுக்கும் இப் பணியின் நன்மைகள் பரவலாகக் கிட்ட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தேவைப்படும் பொருள் வளம், ஆள் பலம், மாற்று உத்திகள், அதற்கு ஆகும் செலவு, அதனால் வரும் நன்மை ஆகியவைகளைத் திட்டம் எடுத்துக் கூறும்.

மாநிலத்துக்கான திட்டத்தை வகுப்பதற்காக, மாநிலத் திட்டக் குழு நான்கு உத்திகளை—அணுகு முறைகளை அமைத்துக் கொண்டது. அந்த நான்கு முறைகள் பின்வருமாறு :

1. துறை இயல் ஆய்வுகள் ;
2. மாவட்டத் திட்டங்கள் ;
3. வட்டாரத் திட்டங்கள் ;
4. மண்டல-தொழில் மைய ஆய்வுகள்.

15. செயல் அணிகள்

தமிழ்நாடு போன்ற வட்டாரப் பொருளாதார மேம்பாட்டுக்குத் திட்டமிடும் போது பல்வேறு துறை இயல்களையும், விரிவாக ஆய்வு செய்து கொள்வது அவசியம். ஆதார வளங்கள், பல்வேறு துறைகளின் தேவைப்பாடுகள் ஆகியவை திட்ட அமைப்புப் பணியில் ஓர் அங்கம் ஆகும். துறை இயல் ஆய்வுக்காகவும், துறைகளுக்குத் தொலை நோக்குத் திட்டங்கள் வகுக்கவும், திட்டக் குழு உறுப்பினர்கள் தலைமையில் 15 செயல் அணிகளை மாநிலத் திட்டக் குழு அமைத்தது. அந்தச் செயல் அணிகள் விவரமாவது :

நகர்ப்புற வீட்டு வசதி, வட்டார வாரி திட்டமிடுதல், சுற்றுலா வசதி உட்பட நகர்ப்புற மேம்பாடு, பெருந் தொழில்கள் சிறு தொழில்கள் பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் திரு என். மகாலிங்கம்.

கல்வி, மற்றும் விஞ்ஞானம், தொழில் நுட்பம், நல்வாழ்வு, ஊட்டச் சத்து, வன வளம் பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா.

ஆள் பலம், மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காகச் சமூக மாற்றம், நிதி ஆதார வளங்களை ஒன்று திரட்டல், வளர்ச்சி விகிதம், நிதிக் கொள்கை, கிராமப் புற மேம்பாடு, கிராமங்களில் வீட்டு வசதி பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் டாக்டர் வி. சண்முகசுந்தரம்.

விவசாயம், கால்நடைகள், மீன் வளம் பற்றிய செயல் அணி ; இதன் தலைவர் டாக்டர் பா. நடராசன்.

கனி வளங்கள், எரி பொருட்கள், மின் சக்தி, போக்குவரத்துப் பற்றிய செயல் ; இதன் தலைவர் டாக்டர் டி. பிரைட்சிங்.

மாநிலத்தின் வளங்கள், தற்போது அவற்றைப் பயன்படுத்தும் முறை, இன்னும் திறமையாக அவற்றைப் பயன்படுத்துதல், கடந்த 20 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட செயல் திட்டங்கள், உற்பத்திச் சக்தியில் அவற்றின் முக்கியத்துவம், வருங்கால வளர்ச்சி வேலைகளுக்கு வழிவகை காட்டுதல் ஆகியன இந்தச் செயலணிகளின் பணியாகும்.

திட்டக் குழு உறுப்பினர் ஒருவரைத் தலைவராகக் கொண்ட செயலணி சம்பந்தப்பட்ட துறையின் முதுநிலைப் பிரதிநிதி ஒருவர், நிதித் துறைப் பிரதிநிதி ஒருவர், வல்லுநர்கள், ஒரு செயலாளர் ஆகியோரைக் கொண்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவைகளுக்கான ஆய்வுக் குறிப்புகள் தயாரித்து, அவ்வத் துறைகளுக்கு நீண்ட காலத் திட்டங்கள வகுக்கப் படுகின்றன. பொருள் தேவைப்பாடுகள்., வேலை தேவைப்பாடுகள் ஆகியவற்றை முன்னரே யூகித்துத் தேவைகளை ஈடு செய்ய மாற்றுத் திட்டங்களை இந்த அணிகள் தருகின்றன.

மாவட்ட அளவில் திட்டம்

இந்தியாவில் திட்டமிடுவதில் பரவல் முறை குறித்து, வெகுவாகப் பேசப்படுகிறது என்றாலும் கூட, அண்மைக் காலம் வரை, இவ் வகையில் உருவான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த 20 ஆண்டுகளாக ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றங்களை யொட்டிப் பொதுப்படையான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இப்போது அந்தந்தப் பகுதிகளில் மக்களின் முன் முயற்சி, ஆதார வளங்கள், ஆகியவைகளையும், வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகக் குறிப்பிட்ட பகுதிகளின் அல்லது மாவட்டங்களின் தேவைகள், வேட்கைகள் ஆகியவைகளையும் ஆழ்ந்தும் விரிவாகவும் கவனிக்க வேண்டியது அவசியம்.

வளர்ச்சி வட்டாரம்

மாநிலம் அளாவிய திட்டம் மாநிலத்துக்குள் உள்ள பல்வேறு பூகோளப் பிரிவுகளுக்கும் பொருளாதார வட்டாரங்களுக்கும், முழுமையாகப் பொருந்தும் படியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. மாநிலத்துக்குள் வட்டாரங்களுக்கிடையே சமச் சீரற்ற நிலைமையும் இதனால் தோன்றலாம். எனவே, மாநிலம் அளாவிய திட்டத்தின் குறைபாடுகளைக் களைய கட்டமைப்புத் திட்டம் (viable Unit plan) ஏற்ற தீர்வாக இருக்கும். இதற்காகத் தமிழ்நாடு கட்டமைப்புத் திட்டத்துக்கு, வளர்ச்சி வட்டார அமைப்பைத் தெரிந்தெடுத்துக் கொண்டது. மாவட்டத் திட்டம் அமைத்துக் கொள்வது என்றால் அதற்காகத் தற்போதைய வளர்ச்சி நிலையை நுணுகி ஆராய்ந்து மதிப்பிட்டுக் கொள்வதும் அதன் தொடர்பாக ஆதார வசதிகளுக்கும் தேவை வரிசைக் கிரமத்துக்கும் ஏற்பப் பல்வேறு துறைப்பணிகளை ஒருமுகப்படுத்துவதும் அவசியம்.

கடந்த கால அனுபவங்கள், உள்ளூர் ஆதார வசதிகள், தேவைகள், மக்களின் விருப்பங்கள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு திட்டச் செலவுகள் மூலம் அதிகப்பட்ச பலன்கள் காண்பதற்கு வகை செய்வதே மாவட்டத் திட்டங்களின் முக்கிய நோக்கம் ஆகும். இதில் நீண்ட காலக் கண்ணோட்டம், உடனடித் தேவைப் பணிகள் ஆகியவைகளுக்காகக் கருத்தில் கொண்ட வேலைகளுக்கு முதன்மை வரிசையை அமைத்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

முதல் தேவை புள்ளி விவரம்

மாவட்டத்துக்காக நீண்ட காலக் குறுகியகாலத்திட்டங்கள் வகுப்பதில், இப்போது கிடைக்கும் புள்ளி விவரங்களையும் விஷயம் அறிந்த விவசாயிகள், தொழில் நிருவாகிகள், தல அலுவலர்கள் ஆகியோரின் கருத்துக்களையும் அறிந்து ஏற்ற முறையில் பயன்படுத்திக் கொள்வதும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. இது சம்பந்தமாகப் புள்ளி விவரங்களைத் தயாரித்து அளிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் விடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ''திட்டச் சிறு குழு'' ஒன்று அமைக்கப்பட்டது. போதிய விஷய ஞானமும், அனுபவமும் உள்ள அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் திட்டச் சிறு குழுவில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்டத் திட்டம் வகுப்பதில் முதல் தேவையாகப் பல்வேறு துறைகளிலும் உள்ள வளர்ச்சி நிலை குறித்து, இத் தேதி வரைக்குமான புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும். இதற்காக வளர்ச்சி நிலை பற்றியும், போக்குவரத்து, விற்பனை வசதி, இருப்பு வைக்க வசதி, பாசனம், மின்சார உற்பத்தி, மின்சாரம் வழங்கல், பாங்கு கடன் வசதிகள், சமூக நலப் பணிகளின் தன்மை, ஆள்பலம், வேலை வசதி, பின்னடைந்த வகுப்பினரின் கல்வி நிலை, சமூகநிலைஆகியன குறித்தும் விரிவாக ஆய்வு நடத்தி விவரங்களைத் திரட்டவேண்டும். மாவட்டத்திட்டங்களுக்கு நிதி வசதி, வரையறுக்கப்பட்ட நிலையிலேயே இருப்பதால், வளர்ச்சிப் பணிகளுக்கு முதலிடம் தருவதில் நடைமுறை காரிய சாத்திய நிலைமைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

வெளிச்சம் பிறப்பதற்கு முன் இருட்டு அடைகிறது என்பதை நம்பும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தியா கட்டாயம் சுதந்தரம் அடையும்; மிக விரைவில் சுதந்திரம் அடையும். இறைவனின் ஆசி உங்களுக்கு உரித்தாகுக.

(24-4-1945-ல் இந்திய தேசிய ராணுவ வீரர்களுக்கு விடுத்தசெய்தி.)

வழிமுறைகள்—உத்திகள்

பல்வேறு மாவட்டங்களும் அடைய வேண்டிய வளர்ச்சி நிலைகளை வகுத்துக் கொண்ட பின்னர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும், கீழ்க்கண்ட இனங்களில் வளர்ச்சிக்கான வழிமுறை உத்திகளை வகுத்துக் கொள்ள வேண்டும்.

1. ஒவ்வொரு அலகிலும் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்;

2. இயற்கை வளங்களை நல்ல முறையில் பாதுகாத்துச் சிறப்பாகப் பயன்படுத்துதல்;

3. வளர்ச்சிப் பணிகளால் கிடைத்த பயன்கள், பல்வேறு பகுதிகளுக்கும், பல்வேறு பிரிவு மக்களுக்கும் இன்னும் சம சீரான முறையில் கிடைக்க வகை செய்தல்;

4. வேலை வாய்ப்புகளைப் பரவலாக்குதல். பல்வேறு வகை வேலைகளுக்கு வகை செய்தல்.

பணிகளின் பட்டியல்

ஒவ்வொரு மாவட்டமும் தனக்குரிய முக்கியப் பொருளாதார வளர்ச்சிப் பணி எது என்பதைத் திட்டமாக அடையாளம் கண்டு குறித்துக் கொள்ள வேண்டும். அதற்கடுத்த படியாக முக்கியமான வளர்ச்சிப் பணிகளின் பட்டியலை அமைத்துக் கொள்ள வேண்டும். பின்னடைந்த வட்டாரங்கள்; பின்னடைந்த மக்கள், இவர்களுடைய கல்வி, சமூகத் தேவைகளில் குறைந்த பட்ச வளர்ச்சி நிலை என்னவாக இருக்க வேண்டும் என்பதை வரையறுத்துக் கொள்ள வேண்டும். மாவட்டத் திட்டங்களுக்கான செயல் முறை உத்திகள் குறித்து இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திட்டங்கள் வகுப்பதில் உயிரூட்டமான அம்சம், முடிவு செய்கின்ற பொறுப்பே ஆகும். ஒரு சில துறைகளில் திட்டப் பணி பற்றிய முடிவை மாநில மட்டத்திலேயே செய்யலாம். மற்றும் சில பொருளாதார மேம்பாட்டுப் பணிகளைப் பொறுத்த வரை '' அடி வேரிலிருந்து '' முடிவு செய்வதென்பது அவசியமாகும்.

கிராமச் சாலைகள், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பின்னடைந்த வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோரின் நலங்கள், குடிநீர் வசதி, கிராமச் சுகாதாரப் பணிகள், சமூக நலம், தொழில் வினைஞர் பயிற்சி போன்றவைகளில் திட்ட முடிவுகளை மாவட்ட நிலையில் மேற்கொள்ளலாம்.

மாநில மட்டத்தில்

வேளாண்மை உற்பத்தி, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, ஆயக்கட்டு புதுப்பித்தல், கால்நடை நலம், காடுகள், மீன் வளம், பண்டகச்சாலை, விற்பனை வசதி, சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவுக் கிராமத் தொழில்கள், சாலைகள், நகர்ப்புறச் சுகாதாரத் திட்டங்கள், குடும்பக்கட்டுப்பாடு, வீட்டுவசதி, நகரமைப்பு, நகர அபிவிருத்தி போன்றவைகளில் மாவட்ட அளவில் திட்டங்களை வகுக்கலாம். ஆனால், நிதிவசதி, அரசுக் கொள்கை, மாவட்டங்களுக்கிடையே எதிரொலிகள் முதலியவைகளை யொட்டி முடிவுகளை மேற்கொள்வது என்பது மாநில மட்டத்தில் செய்யப் பட வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தகவல்கள் யோசனைகள்தரக்கூடியனவும் ஆனால் மாநில அளவில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியுள்ளனவுமான துறைகள் பின்வருமாறு :—

1. விவசாயக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, மருத்துவக் கல்வி.

2. பெரும் பாசனத் திட்டங்கள், ஆற்றுப் படுகைகளில் மண் வளப் பாதுகாப்பு, உள்நாட்டு நீர்வழிப் போக்கு வரத்து.

3. பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெரும் அளவிலான கூட்டுறவு பதன முறைத் தொழில்கள், கைத்தறி.

4. சுற்றுலா.

5. நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் குடிநீர், வடிகால் வழங்குந் திட்டங்கள்.

மாநில மட்டத் திட்டங்கள்

எல்லா வகையான செயல் முறைகளும் மாநில மட்டத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய துறைகளில் முக்கியமானவை:—மின்சாரம், கனிவள அபிவிருத்தி, சிறு துறைமுகங்கள், பெருந் துறைமுகங்கள் ஆகியன ஆகும்.

அரசியல், உலகியல் மக்களுக்கான வேலை. அது துறவிகளின் வேலை அல்ல. கோபத்தை அன்பால் வெல்ல வேண்டும் என்ற புத்தரின் கொள்கையை 'நான் ஏற்கவில்லை. கண்ணபெருமான் கீதையில் கூறுவதுபோல் யார் என்னிடம் எப்படி நடந்து கொள்கிறார்களோ அதன்படியே நான் அவர்களிடம் நடந்து கொள்வேன். கீதையின் இந்தக் கருத்தைத்தான் நான் ஏற்கிறேன்.

மாவட்ட அளவில் திட்டமிடும் பணிகளில் முன்னோடியாக ஆவணத் தொகுப்புகள் (Dossier) தயாரிக்கக் கோட்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

திட்டச் சிறுகுழு

மேலே எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடுகளை யொட்டிச் சென்னை மாநகரம் நீங்கலாக, எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் '' மாவட்டத் திட்டச் சிறு குழு ''க்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் இதன் தலைவர். பொருளியல் ஆய்வு நுட்பத் துறையிலே ஈடுபாடு உடைய திட்ட அலுவலர், மாவட்டப் புள்ளி விவர அலுவலர் ஆகியோர் இத் திட்டச் சிறுகுழுவில் உள்ளனர். பின்வரும் தலைப்புகளில் ஆவணத் தொகுப்பினைத் தயாரிக்கும் பணி மாவட்டத் திட்டச் சிறு குழுவிடம் விடப்பட்டுள்ளது.

மக்கள் தொகையின் தன்மை, மக்கள் சக்தி, தேவையும், அளிப்பும்.

செயல்பட்டுவரும் திட்டங்கள், வருங்காலத்தில் அவை விரியக் கூடிய தன்மை, இதற்கு ஆகும் காலம், செலவு, கட்டுப்படியாகாத திட்டங்களானால் அவற்றைத் திருத்தியமைக்க அல்லது கைவிடப் பரிந்துரைகள் அளிக்கப்பட வேண்டும்.

வெறும் யோசனை அளவில் உள்ள திட்டங்களைப் பொறுத்த வரை, அவற்றுக்கு முதலிட வரிசைக் கிரமம் தெரிவிக்கப்பட வேண்டும்.

சென்னையில் பயிற்சி

மாவட்டத் திட்டப் பணி குறித்து, மாவட்டத் திட்ட அலுவலர்கள், மாவட்டப் புள்ளி விவர அலுவலர்கள், மாநிலத் திட்டக் குழுவில் திட்டப் பணி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆகியவர்களுக்காக, மாநிலத் திட்டக் குழு, கடந்த ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதியிலிருந்து 29-ஆம் தேதி வரை பயிற்சி அளித்தது.

தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முறையான சமச் சீரான முன்னேற்றத்துக்கு வகை செய்வதற்காக மாநிலத் திட்டம், வட்டாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவது அவசியம். இதன் தொடர்பாக மாநிலத்துக்கு வட்டார வரைவுகள் அமைக்கும் பொறுப்பு நகரமைப்புத் திட்ட இயக்குநரிடம் விடப்பட்டது. மக்கள் தொகை, நில வகை, சமூகப் பொருளாதார நிலவரங்கள், ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு எட்டுத் திட்ட வட்டாரங்களாகப் (Planning Regions) பிரிக்கப்பட்டுள்ளது. அவை :—

1. சென்னை நகரம்—செங்கற்பட்டு.

2. வேலூர்—தருமபுரி.

3. கோயம்புத்தூர்—நீலகிரி.

4. கடலூர்—சேலம்.

5. திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர்.

6. மதுரை.

7. இராமநாதபுரம்.

8. திருநெல்வேலி—கன்னினியாகுமரி.

அந்தந்த வட்டாரத்தில் மக்கள் தொகை, பொருளாதார நிலை, வேலை வசதி, போக்குவரத்து வசதிகள், வன வளம், நீர்வளம், மின் வசதி ஆகியவைகளையும், வளர்ச்சிக்கான செயல் திட்டங்கள், அதற்கு ஆகக்கூடிய செலவு ஆகியவையும் வட்டாரத் திட்டத்தில் ஆராயப்படும். தமிழ் நாட்டின் தொலை நோக்கு 12 ஆண்டுத் திட்டத்தில் (Perstective Plan) இந்த எட்டு வட்டாரங்களுக்குமான வட்டாரத் திட்டங்கள் மையமான அச்சாணிகளாக விளங்கும்.

வளர்ச்சி மையங்கள்

வளர்ச்சி மையங்களைக் குறிப்பிடுவது, மாநிலத் திட்டத்தில் ஒரு முக்கியமான பணி ஆகும். கீழ்க்கண்ட மூவகை வளர்ச்சி நிலைகளைக் கருத்தில் கொண்டு, வளர்ச்சி மையங்களுக் குரிய இடங்கள் குறிப்பிடப்படும்.

1. வளர்ச்சித் திட்டங்களும், பணிகளும் ஏற்கெனவே நல்ல முறையில் தொடங்கி, அவை சீராக இயங்கி வரும் நிலையில் உள்ள மையங்கள்.

2. வளர்ச்சிப் பணிகள் தொடங்கி, ஆனால் இடையூறுகள் காரணமாக நல்ல வளர்ச்சி ஏற்படாமல் இருக்கும் மையங்கள்.

3. இதுவரை வளர்ச்சி மையங்கள் ஏற்படாமல், இனிப் புதிதாக ஏற்படுத்த வேண்டிய நிலையில் இருக்கும் பகுதிகள்.

தனி ஆய்வுகள்

மேலே குறிப்பிட்ட நிலைமைகளுக்கு ஏற்பத் தொழில்கள் தோன்றிப் பெருகுவதற்கு உரிய வழி வகை, சக்தி ஆகியன குறித்து மாநிலத் திட்டக் குழு தனி ஆய்வுகளை மேற்கொள்ளும். மணலி, அதன் சுற்றுப் புறப் பகுதிகள், கல்பாக்கம் மையம், ஆகியவைகளில் விரைவில் தனித் தனி ஆய்வுகள் நடத்தப்படும். சேலம்-நெய்வேலி தொழில் மையம், தூத்துக்குடி தொழில் மையம் ஆகியவைகளிலும் உரிய காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

அந்தந்த வட்டாரத்தில் உள்ள மூலப் பொருட்கள், தொழில்கள், அமைக்கப் படுவதற்குரிய இடங்கள், வளர்ச்சி மையங்கள், பரவலாகத்தொழில்கள்அமைப்பு, முன்னேற்றம் காணக் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள் ஆகியவைகளையும் வட்டாரத் திட்ட வரைவுகள் எடுத்துரைக்கும்.

இராமநாதபுரம்—தருமபுரி

விஞ்ஞான ரீதியாகத், திட்டமிடுவதில் முதல் தேவை, பின்னடைந்த பகுதிகள் நிலைமை குறித்து விரிந்த அளவில் ஆய்வுகள், புள்ளி விவரங்கள் ஆகியவைகளை மேற்கொள்வதாகும். பின்னடைந்த மாவட்டங்களான இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரண்டிலும், பொருளியல் ஆய்வு மேற்கொள்வதென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் பொருளியல் ஆய்வு நடத்தும் பணி, புது டில்லியில் உள்ள மக்கள் கருத்தறியும் இந்திய நிறுவனம் (Indian Institute of Public Opinion) என்ற நிறுவனத்திடமும், இராமநாதபுர மாவட்டத்தில் பொருளியல் ஆய்வு நடத்தும் பணி சென்னையில் உள்ள தொழில் நுட்பப் பொருளியல் ஆய்வு (Institute of Techno-Economics Studies) நிறுவனத்திடமும் விடப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களின் பணிகள் பின்வருமாறு :

1. வளர்ச்சிக்குகந்த பொருளாதார நடவடிக்கைகளைத் தெரிந்தெடுத்தல்.

2. அதனுடன் இணைந்த நடவடிக்கைகளை முக்கியத்துவத்துக் கேற்ப பட்டியலாகத் தொகுத்தல்.

3. முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தத் தேவையான உள்ளமைப்பு வசதிகள், இதரத் தேவைகளைத் தீர்மானித்தல்.

4. பின்தங்கிய பகுதிகள், பின்தங்கிய வகுப்பினர் இவர்களின் அடிப்படைத் தேவைகளை எடுத்துரைத்தல்.

5. பல்வேறு பகுதிகளின் தேவைகளை இணைத்தல் ; குறைந்த செலவில் பரவலாக நிறைந்த அளவு பயன்தரக் கூடிய திட்டங்களை ஏற்ற இடங்களில் அமைத்தல்.

6. பொருள் வளத்தையும் நிதி வளத்தையும், மதிப்பிடுதல்.

இந்த ஆய்வுகளை வைத்துத் தெரிவிக்கப்படும் முக்கியமான பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டுத் தமிழ்நாட்டின் தொலை நோக்குத் திட்டத்தில் பயன் படுத்திக் கொள்ளப்படும்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய திட்டமாகிய 'விழி இழந்தோர்க்கு ஒளி வழங்கும் திட்டத்தின் படி' மதுரை மாவட்டத்தில், பழனியில் 2,000 பேர்களுக்கும், திண்டுக்கல்லில் 2,000 பேர்களுக்கும், உசிலம்பட்டியில் 2,000 பேர்களுக்கும், உடையார் பாளையத்தில் 2,000 பேர்களுக்கும், மேலூர்ப் பகுதிகளில் 2,500பேர்களுக்கும் கண்சிகிச்சை முகாம் மூலம் இலவச கண்ச்சிகிச்சை நடத்தப்படும். இதனால் மதுரை மாவட்டம் முழுவதும் 10,500 பேர்கள் பயனடைவர். 1,000 பேர்களுக்கு இலவசச் சிகிச்சைக்கான உணவு வசதி, முகாம் செலவு, மூக்குக் கண்ணாடி, ஆகியவற்றிற்காக ரூ. 4 இலட்சம் செலவிடப் படும். இதில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை ரூ. 3 இலட்சம் அளிக்கின்றன. மேலும் தனியார் நிறுவனங்களான, 'பேங் ஆப் மதுரை' திண்டுக்கல்லில் நடைபெறும் முகாமில் மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கான செலவினையும், மதுரை ஆலை (மதுரை மில்ஸ்) நிறுவனத்தாரும், உடையார் பாளையத்தில் 'அரிமா 'சங்க' நிறுவனத்தாரும் முகாம் நடத்தும் செலவில் ஒரு பங்கினையும் ஏற்கின்றனர். முதற் கட்டமாக வரும் ஆகஸ்டு திங்கள் முதல் வாரத்தில் பழனியில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்தப்படும்.

உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்

7

யார் செய்த தீவினையோ ?

தலையிலே முக்காடு போட்டுக் கொண்டு, தெருவில் யார் தன்னை நின்று கவனிக்கிறார்கள் என்பதையெல்லாம் திரும்பிப் பாராமல், பரபரப்போடு நடந்து வந்த டெய்சி, லிங்கத்தின் வீடு நெருங்கியபோது தயங்கினாள்.

டெய்சியின் வயதுதான் இருக்கும் அரசிக்கு. இந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்த நாளையிலிருந்து, அரசியின் அந்தரங்கத் தோழி டெய்சி.

இன்றைக்கும் நினைத்து நினைத்துப் பேசும் அளவுக்கு நடந்த அரசியின் மறுமணத்திற்குப் பிறகு, அரசியைப் பார்ப்பதே அரிதாகி விட்டது. லிங்கத்தின் வீட்டின் பக்கமே போகக் கூடாதெனக் கட்டுப்பாடு. குறிப்பாகக் கிராமத்தில் சில வீடுகளை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். எதையும் மீறுவதற்குத் தைரியமும் இருக்க வேண்டுமல்லவா? ஊருக்கே பணிந்து போக வேண்டியவன் மைக்கேல் கிழவன். இல்லையென்றால் அவனது தொழில் படுத்துவிடும். ஊருக்குள்ளும் நிம்மதியாக அவன் குடி இருக்கவும் முடியாது.

காலையில் எழுந்ததுமே, இன்றைக்கு அரசியை எப்படியும் பார்த்து விடுவதெனத் துணிந்து, முடிவுக்கு வந்து விட்டாள் டெய்சி.

இந்த மடையன் பீட்டர் செய்து வைத்த காரியம், நினைவிலே நின்று குறுகுறுத்து, ஒன்றிலும் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தபோது, அப்பா வேறு நெஞ்சிலே சஞ்சலத்தை ஏற்றி வைத்து விட்டார்.

இதையெல்லாம் எங்கேபோய் இறக்கி வைப்பது.

தனது முக்காட்டை விலக்கிக் கொண்டு, வாசலிலே தயங்கி நின்றாள் டெய்சி.

மீனம்மா பாட்டி இருந்தால் போச்சு. அது கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.

முன்பக்கம் ஆளரவம் தெரியவில்லை.

அவள் மெதுவாகப் படியேறி, திண்ணையைக் கடந்து, முன் கூடத்தில் நுழைந்தாள்.

யாருமே இல்லையா?

கூடத்தின் கடைசிக்குப் போய் நின்று, இடது பக்கமிருந்த அறைக்குள் எட்டிப் பார்த்து அரசி என்று குரல் கொடுத்தாள் டெய்சி.

பதில் இல்லை.

இப்படியா—யாருமே இல்லாமல், வீட்டையும் திறந்து போட்டுப்/போய் விடுவார்களா? அப்போது, பின்னாலிருந்து 'குப்' பென்று சிரிப்பொலி கேட்டு, டெய்சி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

தலைவாசல் கதவோரமா நின்று சிரித்த அரசி, "வாம்மா .. .. பொண்ணு. வழி தெரிஞ்சு வந்திட்டியா?'' என்று கேட்டவாறு பக்கத்தில் வந்தாள்.

டெய்சிக்கு முகமெல்லாம் வேர்த்து விட்டது.

'' இப்படியா பயமுறுத்துறது '' என்று கேட்டு, குனிந்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

'' எப்படியும் நீ வருவேன்னு எனக்குத் தெரியும் '' என்று சொல்லி டெய்சியின் கையைப் பிடித்துப் பக்கத்து அறைக்கு இழுத்துச் சென்றாள் அரசி.

'' எப்படித் தெரியும். பல்லி சொல்லிச்சா ? '' என்று கேட்டாள் டெய்சி.

'' பல்லி சொல்லலே. உன் தம்பி வந்திருந்தான்.''

'' இங்கேயே வா . . .. — .. ஐயையோ. இப்படியொரு முட்டாள் சனியன் என் கூடப் பிறந்திருக்கானே. அப்புறம் . . .. ''என்றாள் டெய்சி.

அரசி அவளைப் பக்கத்தில் இழுத்து, கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

'' இருந்தாலும் உன் கடிதம் இருக்கு பாரு, அதைக் கண்ணாடியே போட்டு வச்சுக்கலாம். நல்லாவே இருக்கு. அந்தப் பேரை நினைக்கும்போது, வேறெதையும் எழுதத் தோணலே இல்லையா?'' என்று கேட்டாள் அரசி.

டெய்சி பெருமூச்சோடு கட்டிலிலே உட்கார்ந்து கொண்டாள். "அம்மாடி .. .. — — — ... நான் கவலைப்பட்டுக் கிட்டே இருந்தேன். அதை உங்கிட்டத்தான் கொடுத்தானா பீட்டர்" என்றாள்.

'' நானெங்கே அதைப் பார்த்தேன் '' என்றாள் அரசி.

'' அப்படியே சொல்றியே''

''அதை நினைச்சுத்தான் சிரிச்சுக்கிட்டே இருக்கேன். அண்ணன்தான் இவர் கிட்டச் சொல்லி இருக்கார் '' என்றாள் அரசி.

'' இருந்தாலும் ரொம்ப மோசமம்மா. எதை மறைக்கணும்ங்கிறது இல்லையா? எனக்கு வெட்கமா இருக்கு'' என்று சொல்லி முகம் சிவக்கத் தலை குனிந்து கொண்டாள் டெய்சி.

'' திரும்பத் திரும்ப ஒரே பேரையே எழுதுறப்ப எப்படி இருந்திச்சு ''. என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் அரசி.

டெய்சி ஒன்றும் பேசவில்லை.

''ஒவ்வோர் பெண்ணுக்கும் இந்த நேரத்திலே இப்படித்தான் வாயடைத்துப்போகும்.'' என்று சொல்லி, அவளது நாடியைப் பிடித்து நிமிர்த்தினாள் அரசி.

டெய்சியின் கண்கள் கலங்கி இருந்தன.

''என்ன டெய்சி'' என்று பரபரப்போ[illegible] கேட்டாள் அரசி.

''இதையும் சொல்லத்தான் வந்தேன். பெரிய வீட்டிலே எங்க அப்பாவைக் கூப்பிட்டு, பத்து நாளைக்குள்ளே சொந்தத்திலேயே மகளுக்குக் கல்யாணத்தை முடிக்கணும். இல்லே இந்த ஊருக்குள்ளே குடி இருக்க முடியாதுன்னு சொல்லி இருக்காங்க. அப்பாவும் சரின்னு சொல்லிட்டு வந்திருக்காரு.

''இதை யார் சொன்னது உனக்கு.''

''அப்பாவே சொன்னார். எட்டாத நினைவு நினைச்சுக் குடும்பத்தையே படுகுழியிலே தள்ளாதேங்கிறார் அப்பா. நேத்தே எங்க பந்துக்கள் இருக்கிற ஊர்களுக்கெல்லாம் கடிதங்களை எழுதிப் போட்டுட்டார்'' என்று கவலையோடு சொன்னாள் டெய்சி.

''இதெல்லாம் அண்ணனுக்குத் தெரியுமா ?'' என்று கேட்டாள் அரசி.

டெய்சி தலையசைத்தாள்.

''உங்கப்பாக்கிட்ட நேருக்கே சொல்றது''.

''அதது-தனக்கே வர்றப்பத்தான் தெரியுது. உன்கதை முடிஞ்சு போச்சு. என்கதை இப்பத்தான் ஆரம்பமாகி இருக்கு.'' என்றாள் டெய்சி.

அரசி ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

சின்ன வயசிலேயிருந்து யாராயினும் போட்டுக்குபோடு போடுவாளே டெய்சி. எதற்கும் கலங்காதவள் கலங்கிப்போய் உட்கார்ந்து விட்டாள்.

அந்த நீண்ட மௌனத்தைக் கலைப்பதுபோல், வீட்டின்பின்புறமிருந்து செருமும் குரல் கேட்டு, இருவருமே திடுக்கிட்டுத் திரும்பினர்.

அறையின் நிலைப்படியைப் பிடித்தவாறே லிங்கம் நின்று கொண்டிருந்தான்.

இவர் எப்போது வந்தார். ''சந்தடி இல்லாம வந்து நிக்கிறிங்களே.'' என்று கேட்டுக்கொண்டே அரசி முன்னுக்குவர, அவள் பின்னுக்கே வந்தாள் டெய்சி.

''இப்ப டெய்சி எதுக்கு இங்கே வந்திருக்கு தெரியுமா :'' என்று கேட்டாள் அரசி.

லிங்கம் சிரித்தான்.

கையசைப்பிலே 'அந்தக் கடிதத்தைப் பற்றியா' என்று கேட்டான்.

அரசிக்கும் சிரிப்பு வந்தது. திரும்பிப் பார்த்தாள். முகம் சிவக்க டெய்சி தலைகுனிந்து கொண்டாள்.

அரசி சொன்னாள் :

''இவங்கப்பாவைக் கூப்பிட்டு, பத்து நாளைக்குள்ளே உன் மகளுக்குக் கல்யாணத்தைச் செய்து வைக்ரணும், இல்லையின்னா இந்த ஊருக்குள்ளே குடி இருக்க முடியாதுன்னு சொல்லி அனுப்பி இருக்காங்க'' என்றாள்.

''பத்து நாளைக்குள்ளேயா—நடத்திப் போட வேண்டியதுதான்.'' என்று சொல்லி யோசித்த லிங்கம், ''நடத்திப் போடுவோம். இதுக்கு யாரைப்போய்க் கேட்டுக்கிட்டிருக்கப்போறோம்.'' என்றான் சிரிக்காமல்.

''நல்லா சொன்னிங்க, அவங்க வழியிலே மாப்பிள்ளை பார்க்கச் (சொல்றாங்களாம்''

லிங்கம் சிரித்தான்.

''அதானே—ஒரு வில்லங்கமும் இல்லாம, காரியம் 'பட்'டுன்னு முடியுதேன்னு பார்த்தேன்'' என்றவன், டெய்சியின் பக்கமாகத் திரும்பி, ''பாண்டியனே ரெண்டு நாளைக்குள்ளே உங்கப்பாவைப்பார்த்துச் சொல்லுவான் டெய்சி. என்ன வந்தாலும் கலங்காம நீ தான் உறுதியோட இருக்கணும்'' என்றான்.

டெய்சி தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். நீர் கோத்த இமைகள் பளிச்சிட்டன.

''அந்த உறுதியோடத்தான் அண்ணா,—நான் உயிரோடிருக்கேன்'' என்றாள்.

அப்போது லிங்கம் என்றழைத்துக் கொண்டே பாட்டி வருவது தெரிந்தது.

டெய்சி குனிந்து பரபரப்போடு முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

''உர மூட்டை எடுக்கப் போனியே எடுத்தியாடா லிங்கம்?'' என்று கேட்டுக் கொண்டே வந்த பாட்டி, டெய்சியைத் திருப்பிப் பார்த்து ''இந்தப் பொண்ணு எப்ப வந்திச்சு'' என்று கேட்டாள். ''இப்பத்தான் வந்தேன் பாட்டி'' என்றாள் டெய்சி.

டெய்சியைக் கண்டதும் பாட்டிக்கு உர மூட்டைகள் மறந்து விட்டது.

''உங்கப்பன், தோட்டத்துக் கிணத்திலே மோட்டரைச் செம்ம பண்ணிக் கொடுத்தானேம்மா. இப்பவும் சரியா ஓடலையாமே. பணத்தை வாங்கிக்கிட்டுப் போயிட்டான். மைக்கேல் கிட்டச் சொல்லி, வந்து பாக்கச் சொல்லு'' என்றாள் பாட்டி.

''சரி பாட்டி'' என்ற டெய்சி, அவசரத்துடனே, ''நான் வாரேங்க'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

அவள் சென்ற பரப்பரப்பைத் திரும்பிப் பார்த்த பாட்டி, ''இப்பவே ஊர்முட்டப்பகையா இருக்கு. முங்கிக் குளிச்சாக் கூதல் இல்லையின்னு திரியாதிங்க'' என்றாள்.

''நம்ம கூட்டுறவு சொசைட்டிக்கு நாளைக்கி உர மூட்டைகள் வருதாம் பாட்டி. நிறுவையும் சரியா இருக்கும். அப்படியே வயலுக்குத் தூக்கி விட்டுவிடலாம்'' என்றான் லிங்கம்.

பாட்டிக்கு, டெய்சியின் நினைவு மறந்து விட்டது.

''தாளடிக்கி போன வாரமே மேலுரம் போட்டிருக்கணும்'' என்ற பாட்டி, அரசியைத் திரும்பிப் பார்த்து, என்னமோ செய்யுங்க. என்னாலே இனிமே என்ன ஆகப் போகுது'' என்பதையும் பொதுவாகச் சொல்லி விட்டு, கொல்லைப் பக்கமாக நடந்தாள்.

பாட்டியின் தலை மறைந்ததும், லிங்கம் அரசியைத் திரும்பிப் பார்த்தான். பேச்சையே மாத்திட்டிங்களே' என்றாள் அரசி குறுநகையோடு.

''பாட்டி—அப்பப்ப நினைக்கிறதை அப்படியே சொல்லுவாங்க. இடையிலே வேறே ஏதாவது ஆரம்பிச்சா .... முன்னாலே சொன்னது மறந்து போகும்'' என்ற லிங்கம், அவளருகில் நெருங்கி, ''பாட்டியைப் பத்தி நீ என்ன நினைக்கிறே'' என்று கேட்டான்.

அரசி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''ஐந்து வயதிலேயிருந்து உங்களை வளத்து ஆளாக்கி எனக்கே தந்திருக்காங்க. அவங்களைத் தெய்வமா நினைச்சிருக்கேன்'' என்றாள் அரசி கண் கலங்க.

அவளையே இமைக்காது பார்த்தான் லிங்கம்.

''என்னங்க.'' என்றாள் அவள் இமைகள் பட்படக்க.

''திடீர்ன்னு நீ ரொம்ப அழகாயிட்ட மாதிரித் தோணுது'' என்ற லிங்கம் அவள் தளிர்க் கரங்களைப் பற்றி நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

''பாட்டி வரப் போறாங்க'' என்ற அரசி விலகிக் கொண்டாள்.

''அண்ணனும் நீங்களுமா காலையிலே எங்கே போனிங்க'' என்று கேட்டாள்.

''அணைப்பட்டியிலே ரெண்டு நாளா உழவர் பயிற்சி முகாம் நடந்துக் கிட்டிருக்கு. அதுக்குப் போயிருந்தோம்.''

''பயிற்சி முகாமா ?''

''சர்க்காரிலே எத்தனையோ விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் நடத்துறாங்க. அப்பப்ப புதுசு புதுசா பொறுக்கு வித்துக்களையும், அதிக விளைச்சலுக்குப் புது வழி முறைகளையும் கண்டுபிடிக்கிறாங்க. இதையெல்லாம் சொல்றதுக்கும், செய்து காட்டுறதுக்கும், அந்தந்த வட்டாரத்திலே பள்ளிக்கூடம் மாதிரியே, விவசாயிகளுக்காகப் பயிற்சி முகாம் நடக்கு. நானும் பாண்டியனும் இதுக்குப் போயிட்டு கரை வழியா வர்றப்பத் தான் இன்னொரு நாடகமும் நடந்து போச்சு'' என்றான் லிங்கம்.

''நாடகமா ?'' என்று வியப்போடு கேட்டாள் அரசி.

லிங்கம் சொல்ல ஆரம்பிப்பதற்குள்ளாக, வீட்டிற்குள் பரபரப்போடு நான்கைந்து பேர் ஓடி வரும் சந்தடி கேட்டது.

லிங்கமும் அரசியும் திகைப்போடு திரும்பினர்.

''பாண்டியன் இல்லையா ?'' என்று கேட்டான் முன்னால் ஓடிவந்த கன்னையா.

''பாண்டியன் இப்பத்தானே வீட்டுக்குப் போனான். என்ன அவசரம். ஏன் இப்படி ஓடியாறிங்க'' என்று வியப்போடு கேட்டான் லிங்கம்.

''நீங்களும், பாண்டியனுமாச் சேர்ந்து பொன்னையாவை வெட்டிப் போட்டிங்களாம்—ஊரெல்லாம் பரப்பரப்பா இருக்கு''

என்றான் கன்னையா பதட்டத்துடன்.

"பொன்னையாவை வெட்டிப் போட்டமா ? என்ன சொல்றே" என்றான் லிங்கம் குழப்பத்துடன்.

"கட்டிலோட பொன்னையாவை நாட்டாமைக்காரர் வீட்டுக்குத் தூக்கிட்டுப் போயிருக்காங்க. பாண்டியன், பொன்னையாவைப் பின் பக்கமா பிடிச்சுக்கிட்டதாயும், லிங்கம் மண்வெட்டிக் கணையாலே அவனை அடிச்சதாயும், பொன்னையா வாக்கு மூலம் கொடுத்திருக்கான். அப்படியே வண்டியிலே தூக்கிப் போட்டுக்கிட்டு நிலக் கோட்டைக்கு அவனைக் கொண்டு போயிருக்காங்கபிராதுகொடுக்க்" என்றான் கன்னையா பதறிப்போன குரலில்.

லிங்கம் சிலையாக நின்று விட்டான்.

"என்னங்க இது ?" என்றாள் அரசி நடுக்கத்துடன்.

"நெஞ்சிலே தான் பலமான அடி. ஊமைக்காயமாத்தான் இருக்கு. குடுத்துணியெல்லாம் ரெத்தமாக் கக்கி இருக்கான்" என்றான். அங்கு நேரில் பார்த்து இங்கு வந்திருப்பவனொருவன்.

"என்னடா இது ?" சொல்லி வாய் மூடலேயே. பேரிடியா வந்து விழுதே" என்று பெருங் குரலோடு சொல்லிக் கொண்டே பாட்டியும் வந்து விட்டாள். வாசலில் சலசலப்புக் கேட்டது. லிங்கம் திரும்பினான்.

பாண்டியனின் தலை தெரிந்தது. அவனுக்குப் பின்னால் ஒரு கும்பலே நின்று கொண்டிருந்தது.

(வளரும்)

முத்திரை பதிக்கும் கருவி

சென்னையிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் அஞ்சலகங்களில் பயன்படுத்துவதற்காக முத்திரையிடும் கருவி ஒன்றை உருவாக்கியுள்ளது. முழுக்க முழுக்க உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டே உருவாக்கப்பட்ட இந்தக் கருவியின் விலை ரூபாய் 4,000 ஆகும். இந்தக் கருவியின் இறக்குமதி விலையில் இது மூன்றில் இரண்டு பங்காகிறது.

தமிழகத்திற்கு ஒரு புதிய வாழை -'வாதர்'

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கூட்டு முயற்சியுடன், நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும், சேகரித்த சுமார் 110 ரகங்களிலிருந்து, தமிழ்நாட்டில் சிறப்பாகப் பயிரிடத் தகுந்த வாழை ரகத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஏற்றுமதிக்காகப் பயிரிடப்படும், வாழை ரகமானது 'குள்ள கேவன்டிஸ்' ரகத்தைச் சேர்ந்ததாகும். இதில் பச்சை வாழை, மோரீஸ் குள்ள வாழை ஆகியவை அடங்கும். இதை ஒத்த 'ரொபஸ்டா' ரகம் தற்போது வாழை பயிரிடப்படும் பகுதிகளில் புகழ் பெற்று வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள பழத் தோட்டத்தில் நடத்தப்பட்ட வாழை ரகச் சோதனையில், பீகார் மாநிலத்தில் இருந்து கொண்டு வந்த 'வாதர்' என்ற ரகம் நல்ல பலனை அளித்துள்ளது. முதலாண்டில் இந்த ரகம் சராசரி 33 கிலோ எடையுள்ள 112 பழங்களைக் கொண்ட வாழைத் தார் கொடுத்துள்ளது.

'வாதர்' ரகத்தின் சிறந்த அம்சம், ஒவ்வொரு காயும் சுமார் 1 அடி நீளமுள்ளதாகும். இது ஒரு சிறந்த குணமாகும். இதன் பழமானது மற்றக் கேவண்டிஸ் ரகங்களைப் போல் மிகவும் ருசியாக உள்ளது. இந்தச் சிறப்பியல்பு, உலகில் தலைசிறந்த வாழை ரகமாகக் கருதப்படும் 'கிராஸ் மைக்கேல்' ரகத்திற்கு ஒத்தாக உள்ளது. இது நட்ட 10-வது மாதத்தில் பலனளிக்க வல்லது.

'வாதர்' ரகத்தின் மற்றமொரு சிறப்பு அம்சம், 'கேவண்டிஸ்' ரகத்தைப் போல் அல்லாமல், சீப்புகளில் காய்கள் ஒரே சீராக அமைந்திருப்பதாகும்.

'வாதர்' ரகத்திலிருந்து முதலாண்டில் கிடைத்தது போல், மகசூல் நிரந்தரமாகக் கிடைக்குமாயின், வாழைச் சாகுபடியாளர்களுக்குக் குள்ள 'கேவண்டிஸ்' ரகத்திற்குப் பதிலாகப் பயிரிட 'வாதர்' ஒரு நல்ல ரகமாகவிருக்கும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஓரிரண்டாண்டுகளில் நடக்கவிருக்கும் மண்டல சோதனையில் இந்த ரகத்தின் அதிக மகசூல், நோய் தாக்காத தன்மை ஆகிய சிறப்பியல்புகளைப் பொறுத்து 'வாதர்' ரகத்தின் வாழைக்கன்றுகள் உழவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

(தகவல் :—
தகவல் தொடர்பு நிலையம்,
வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.)

வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

● புலவர் மு. சிக்கந்தர்,
பூங்குயில் கவிஞர் மன்றம்,
கோரிக்கடவு, பழனி வட்டம்.

38. விடுதலைநாள் வெள்ளிவிழா வெண்பா

● குழந்தைசன நாயகத்தைக் கொல்லவரின் யாக்கை
இழந்தேனும் வன்முறையை ஈர்வேன்—பழந்தமிழே !
உன்மீதில் ஆணை உரைக்கின்றேன் வெள்ளிவிழா
நன்னாளில் இந்நாளில் நான்.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

வெற்றிக் கனிகுலுங்க வெள்ளிவிழா வந்ததுகாண் !
சுற்றும் பகையகற்றச் சூளுரைப்போம் !—பொற்றொடியே !
நல்லறிவால் நாட்டின் நலன்காக்கும் தொண்டாற்றி
எல்லாரும் வாழ்வோம் இனிது.

—புலவர் முத்துவேங்கடேசன், இலால்குடி.

பெற்ற விடுதலையைப் பேணிடுவோம் நன்குழைத்து
மற்றவர்கள் போற்ற வளஞ்சேர்ப்போம்—உற்றுதவி
செய்வோம் வறுமை சிதைத்திடுவோம் எல்லாரும்
உய்யவழி காண்போம் உவந்து.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

● வெள்ளி முளைத்து விடிவதுபோல் நாட்டுயர்வு
வெள்ளிவிழா ஆண்டில் விரைவாகும்—துள்ளிநாம்
வீணாக ஆர்ப்பதனை விட்டினிமேல் நன்மைக்குத்
தூணாகச் செய்திடுவோம் தொண்டு.

—கதி. கணேசன், காரைக்குடி.

நாட்டில் தொழில்வளர்ப்போம் நாதியற்ற ஏழைமக்கள்
வீட்டில் விளக்கேற்றி வேதனையை—ஓட்டிடுவோம் !
பொல்லாத வன்முறையைப் போக்கி நலம்சேர்ப்போம்
வெள்ளிவிழா ஆண்டில் விரைந்து.

— சிவ. மு. சிவா, வேடசந்தூர்.

குத்துவெட்டுக் காளாகிக் குண்டுக் குடல்தந்து
செத்து மடிந்து சிறைசென்று—கொத்தடிமைப்
பேய்மறையத் தம்முயிரைப் பேணா தளித்தவரை
வாய்நிறையப் பேசுபுகழ் வான்.

—பூ. அ. இரவீந்திரன், கோவை-2.

சேமிப்போம் சிக்கனத்தால் சீர்பெறுவோம்
போர்தவிர்ப்போம் ;
பூமித்தாய் நல்விளைவு பூத்திடவே—நாம்உழைப்போம் ;
தன்னிறைவில் பல்தொழில்கள்தாம் செய்வோம் மக்களாட்சி
என்றென்றும் காப்போம் இசைந்து.

—பூ. அண்ணாமலை, செஞ்சி.

பிணியும் பசிப்பிணியும் பேதப் பகையும்
அணுகா திருத்தல் அழகாம்—மணிக்கவி
வள்ளுவனின் வார்த்தையை வைரச் செயலாக்கித்
துள்ளும் விடுதலையைத் துய்த்து.

—வங்கனூரான், வங்கனூர்.

வாழ்வே வ்ருகவென வாய்பொத்திக் கைகட்டி
வீழ்ந்திங்கே வெம்பிய தோர்காலம்—ஆழ்ந்துரைக்கின்
நாடும் நலமெல்லாம் நாம்பெற்றோம் என்பதனைப்
பாடுவதே வெள்ளிவிழாப் பாங்கு.

—அ. நெடுமாறன், பேரூர்.

நாட்டுக் குழைக்கின்ற நல்லுணர்வும் நாடாள்வோர்,
காட்டும் வழிநடக்கும் கண்ணியமும்—ஈட்டிட
புகழார்ந்த நற்பணியும் பூரிப்பாய் பேவி
இகல்வாரை வெல்வோம் இனிது.

—புலவர் செல்வி வ. இராசரத்தினம், திருவேகம்பத்து.

வெண்பாப் போட்டி

" சாதி அறியாமை சாத்திரப் பொய்யுரைகள்
தீதுமலி வேற்றுமைகள் தேய்ந்தழிய—மேதினியில்
கொத்தடிமை சாடிக் கோதற்ற நல்லறிவால்
புத்துலகம் காண்போம் பொலிந்து. "

—அரி. பொன். முத்தமிழ்வாணன், கோவை–18.

சாதிமத பேதமில்லாச் சான்றோர் வழிநின்று
நாதியில்லா மக்களுக்கு நற்கதியை—ஓதியபின்
சோதிமிகு வாழ்வுக்குச் சோர்வின்றிப் பாடுபட்டுச்
சாதிப்போம் சாதனைகள் சார்ந்து.

—பி. இராசேந்திரன், மேலமுடிமன்.

இல்லாமை இந்நாட்டில் இல்லாமை ஆக்கவே
கல்லாமை தன்னைக் கழுவேற்றப்—பொல்லாமை
நெஞ்சினை நீக்கி ஒருமை நிலாமலரத்
துஞ்சா துயர்த்துவோம் தோள்.

—சி. கூடல்வைரவன், பூவாண்டிபட்டி.

வெள்ளிவிழாக் கண்ட விடுதலைநாள் வாழ்கநீ :
வள்ள நிறையமுதம் மாந்துதல்போல்—தெள்ளு
தமிழ்மாந்தும் எங்கள் தமிழரசே முன்போல்
தமிழ்ச்சங்கம் உண்டாக்கித் தா.

—காங்கேயன், வெங்கல்பாளையம்.

வெள்ளி விழாவெடுக்க வெள்ளி முளைத்ததனால்
அள்ளிக் குவிப்போம் அதிவிளைச்சல்—வெள்ளமிடும்
கங்கையுடன் காவிரியைக் கைகோக்க வைத்திடுவோம்
தங்கவழி செய்வோம் தழைத்து.

—வி. மீனுகுமாரி, திருமயம்.

கண்மணிகள் மக்களாய்க் கங்கைவெள்ளம் பாசனமாய்
விண்மணிகள் போலும் விளைகதிராய்ப்—பொன்மணிகள்
ஆளுங் குழுவினராய் ஆவதற்கு வெள்ளிவிழா
நாளிதனில் சூளுரைப்போம் நாம்.

—புலவர் மு. விசுவபாரதி, திருமயம்.

அண்ணலாம் காந்தி அளித்த விடுதலையை
எண்ணக் குளிரும் இதயமே !—இந்நிலையில்,
' இல்லான் ' எனவொருவன் இல்லான் எனச்செய்வோம்
நல்லார் வழியில் நடந்து.

—ஆ. இராசரத்தினம், பி.எஸ்சி., பி.டி., தாமரங்கோட்டை.

அன்போ டறமும் அரும்பொருட் செல்வமும்
இன்பமும் இல்வாழ்வில் ஏற்றமுற—வன்பகைதீர்
வெள்ளிவிழாக் கோல விடுதலை நாளின்று
உள்ளத்தில் ஏற்போம் ஒழுங்கு.

—அ. குமாரசாமி, துத்திக்காடு.

எல்லார்க்கும் நல்வாழ்வு, ஏற்றங்கள், நல்லுரிமை,
கல்லார்கள் இல்லாத கல்விவளம்—சொல்லரிய
நல்லாண்மை, பண்புநலம், நாடுஞ் சிறப்பளிக்க
வல்லதுவே வெள்ளிவிழா வாழ்வு.

—புலவர் செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.

வெள்ளிவிழா நாளின்கண் மேலாம் உறுதிகொள்க
தள்ளா விளையுள் தழைத்தோங்க—வெள்ளமெனக்
கல்வியொடு பண்பாடு கன்னித் தமிழகத்தில்
செல்வமொடு மல்க செழித்து

—குமரிக்கவி, நாகர்கோவில்.

நொந்தாரைக் காக்க, நொடித்தார் தலைதூக்கச்
சிந்தை உறுதிமொழி செய்திடுக—செந்தமிழ்
நாட்டிற்குத் தொண்டியற்ற நாமிந்த வெள்ளிவிழாப்
பாட்டிசைத்து நாடெங்கும் பார்த்து

—கயற்கண்ணி, மதுரை–1.

வாட்டிடுதே நாட்டில் வறுமை ; அதைப்போக்கத்
திட்டிடுவோம் நல்லபல திட்டங்கள்—நாட்டு
விடுதலைக்கு வெள்ளிவிழாக் கொண்டாடும் நாளில்
எடுப்போமே இவ்வுறுதி யீங்கு.

—ப. ச. ஆனந்தன், பி.எஸ்சி., பி.டி., ஜமீன்ஊத்துக்குளி.

நன்றே நினைத்திடுக நலமே விளைத்திடுக
என்றேனும் தீமையதை எண்ணற்க—ஒன்றாக
மேன்மைத் தமிழகத்தில் வெள்ளிவிழா நன்னாளில்
கேண்மை உறவு கிளைத்து.

—எஸ். ஆர். மூர்த்தி, கோவை.

விடுதலைநாள் வெள்ளி விழாவெடுப்பீர் ! நாட்டில்
கெடுதலையைக் கல்விக் களிக்க—நடுநிற்போம்
ஒற்றுமை கண்டின்றே ஒன்றுவோம் ஆட்சிக்கு
நற்றுணை செய்வோம் நயந்து.

—புலவர் அ. திருஞானசம்பந்தம், கொங்கவல்லி.

வெண்பாப் போட்டி

சாதி மதச்சமயம் சார்ந்துவ்ர வொட்டாமல்
நீதியுடன் வாழ்வோம் நிகரில்லை—தீதற்ற
கைத்தொழிலைப் போற்றிடுவோம் காந்திவழி சென்றிடுவோம்
இத்தலத்தில் உண்டோ இணை !

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

கல்விப் பயிர்வளர்த்துக் காலத்தின் நீங்காத
செல்வப் பயிர்வளர்த்துச் சீர்பெறுவோம்—வல்லமையால்
சிந்தையெலாம் எண்ணம் சிறப்புறவே பூமிதனில்
விந்தைபல செய்வோம் விழைந்து.

—புலவர் சோ. கருப்புசாமி, அருப்புக்கோட்டை.

வறுமைப் பிணியொழிக்க மக்கள் அறியாச்
சிறுமை அகற்றிடவே சிந்தித்—துறுதிமொழி
வெள்ளிவிழா நாளின்கண் வீதியெங்கும் நாமேற்போம்
உள்ளம் சிறக்க உவந்து.

—பி. கே. குமார், கும்பகோணம்.

மூலைக் குரிய முறையான கல்விதனை
நாளைத் தலைமுறைக்கு நாமளித்து—வேலைக்
குதவுகல்வி தேர்ந்து உழைப்போமேல் வேள்விச்
சிதையாகும் ஏழ்மை சிதைந்து !

—கொண்டல், அமைதித்தீவு.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே வழுவின்றி நாமேற்றுக்—குன்றன்ன
சாதிக் கொடுமைகளைச் சாகடித்துச் சான்றாண்மை
நீதிவழி நிற்போம் நிமிர்ந்து.

—பசுமலை வீர. முருகேசன், எம். ஏ., பி.டி., களிமங்கலம்.

பெற்றோம் சுதந்திரம் என்ற பெருமிதத்தால்
மற்றக் கடனை மறவாதே—ஒற்றுமையாய்
வெள்ளி விழாக்காண்போம் ! வெம்பிணி கொல்பகையைக்
கிள்ளி எறிவோம் கிளர்ந்து!

—க. கிருட்டிணசாமி, வாளவாடி.

கல்வி பலவும் தொழில்மூலம் கற்றுணர்ந்து
எல்லாரும் வேலையில் ஈடுபட—நல்லபடி
நாட்டின் வளம்பெருக்கி நம்முள் தாழ்வுயர்வை
ஓட்டி ஒழிக்க உணர்.

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

அடிமைத் தளையறுத்தே அந்நியரை வென்று
குடியரசை நாட்டிற் கொணர்ந்தோம்—குடியைச்
சிறுமைப் படவைத்துச் சீரழிக்கும் நோயாம்
வறுமை யொழித்திடுதல் மாண்பு.

—பாக்கியசாமி, சென்னை–3.

பல்வளத்தால் சீர்குவிப்போம் பண்பாட்டைக் காத்திடுவோம்
இல்லாமை கல்லாமை இங்கினிமேல்—இல்லையென்போம்
காத்திடுவோம் தாய்நாட்டைக் காட்டுகின்ற நல்லுழைப்பால்
சேர்த்திடுவோம் மேலும் சிறப்பு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

வன்முறையைப் போக்குதல், வான்புகழை ஈட்டுதல்
நன்மைதனை நானிலத்துள் நாட்டுதல்—என்பனபோல்
தெள்ளியன செய்வதனைத் தேர்ந்து விடுதலைநாள்
வெள்ளிவிழாக் காண்போம் விழைந்து.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

போராட்டம் என்றுரைத்துப் பொய்வேடம் தாங்காது
நேராகக் காந்தி நெறிநின்று —போரின்றிப்
பெற்ற சுதந்தரத்தைப் பேணி வளர்த்திட
முற்ற உழைப்போம் முயன்று.

—வெ. குமாரசாமி, பழனி.

ஏர்ப்படையும் நூற்படையும் ஏற்றமுறப் போர்ப்படையும்
சீர்மையுறும் நாற்றிசையுஞ் செல்வாக்காம்!—நேர்மையுடன்
நாளும்நாம் முன்னேற்றம் நாடிப் பணிசெய்வோம்
நீளும் சுதந்தரத்தில் நின்று.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

மனிதரின் வாழ்வை மனிதர் பறித்தல்
இனியும் நடத்தல் இழிவாம் ;—துணிந்திடுவோம்
எல்லார்க்கும் எல்லாமே என்னும் உலகமைப்போம் ;
வெள்ளி விழாச்சூளின் மேல்.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

இல்லாரும் இல்லை, உடையாரும் ஈங்கில்லை ;
எல்லாரும் ஓர்நிறையை எய்திடவும்—கல்லாரும்
ஏற்பாரும் இல்லாத ஏற்றமுறும் நற்பணிகள்
ஆற்றுவோம் வாரீர் அமைந்து.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-1.

வெண்பாப் போட்டி

“விண்வெளிக்குச் செல்ல விரியறிவு பெற்றிவண்
தன்னிறைவு கொண்டு தழைத்தோங்கி—மண்ணுலகைப்
பொன்னுலகாய் மாற்றிப் புகழ்க்கொடியை நாட்டியே
இன்னும் உயர்வோம் இனிது.”
—பி.சி. அசனல்லி, அரக்கோணம்.

செங்குருதி ஆறுகச் செக்கிழுத்த செம்மல்கள்
வெங்கொடுமைச் சாக்காட்டால் வென்றாரே—நங்கையே!
இந்நாளைப் பாடுதற்கு ஐயைந்தாம் ஆண்டுகளோ ?
பொன்னாளைப் போற்றிப் புகழ்.
—புலவர் பி. விக்டர், அண்ணாமலைநகர்.

வெள்ளிவிழாத் தேரேறி வீதிவரும் இந்தியத்தாய்
உள்ளமதில் நல்லமைதி உண்டாகத்—துள்ளிவரும்
மாற்றார் பகையை மடிவாழும் வன்துயரைத்
தோற்றோடச் செய்வோம் துணிந்து.
—கோ. வே. இளங்கோவன், தென்னமநாடு.

கொடிகாத்த நற்குமரன் கொள்கையை நாட்டில்
வடிவாக்கும் மக்களாய் வாழ்ந்து—முடிவாக
ஏழ்மையை நீக்கிட ஏர்பிடித்தால் இந்நாட்டின்
தாழ்வுதான் மாய்ந்திடா தா ?
—கே. ஏ. அர்ஜுனன், டி.எம்.இ., உத்தமபாளையம்.

புல்விளையும் பூமிதான் பாடுபட்டால் கன்னலொடு
நெல்விளையும் நன்செயிலே நீயுழைத்தால்—வில்விளையும்
வேல்விழியார் கண்ணசைத்தால் பூமகனே! வெற்றியுன்றன்
பால்குவியும் நாட்டைநினைப் பார்க்கு.
—கா. வாலிதாசன், சென்னை-35.

அறிவியலில் மேலோங்கி ஆக்கத்தைப் பெற்றுப்
பிறிதொரு நாட்டான் பிடியில்—உறாமல்நாம்
வேற்றுமையை நீக்கி விளைவைப் பெருக்கிநமை
ஏற்றமுறச் செய்தல் இனிது.
—புலவர் ந. குஞ்சிதபாதம், வங்கனூர்.

தொல்லைகள் நீக்கவும் துன்பங்கள் போக்கவும்
ஒல்லும் வகையில் உயர்தமிழ்க்கு—நல்லபுகழ்
எல்லா முறையிலும் ஏற்றவும் இன்றுமுதல்
நல்லுறுதி கொள்வோமே நாம்.
—துறைவன், கிருட்டிணாபுரம்.

ஈற்றடியும் நல்ல முறிப்படியும் வெண்பாவுக்(கு)
ஏற்றமுத லீறும் எமக்களித்தார் ;—மாறறியதை
உள்ள படியெழுத வைத்த விடுதலையின்
வெள்ளி விழாவை! விரும்பு.
—த.மு. அகமது, கடையநல்லூர்.

தீண்டாமை நீங்கிடவும் தீந்தமிழைக் காத்திடவும்
மாண்புநலன் ஓங்கிடவும் மாநிலத்தில்—காண்கின்ற
ஏற்றமிகு பண்புகொண்ட ஏழைகளின் வாழ்வுயர
ஆற்றிடுவீர் நற்செயல்தான் ஆர்ந்து.
—இரா. சுப்பிரமணியன், எம்.ஏ., வாடிப்பட்டி.

ஆட்சியினை மாற்றி யமைத்தோம் இனிஅவலக்
காட்சியினை மாற்றவழி கண்டுய்வோம் !—பேச்சுதனைச்
சற்றே நிறுத்திச் சாதனையை மேற்கொள்வோம்
எற்றே வெறுஞ்சொல் இனி.
—சுப. திலகவதி, நாரைக்கிணறு.

விடுதலையை வாழ்விக்க, வேண்டும் பொதுமை
சடுதியிலே யிங்குச் சமைக்க,—நெடும்புவியில்
நந்தமிழின் சீர்மல்க, நந்திற மேவெல்க
சிந்தையினிற் பற்றிருத்திச் செய்.
—ஒளியரசன், கரூர்-2.

வேண்டுவதைச் செய்ய விழையாமல் பாமரர்பால்
தூண்டுவதைச் செய்யும் தொழில்தனை—ஈண்டுசிலர்
கெடுதலாய் எண்ணிவிட்டால் கீழ்மேலாம் ! ஈதென்
விடுதலைநாள் வெள்ளிவிழாப் பாட்டு.
—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.



இல்லாமைக்கு விடுதலை!

மனசை ப.கிரன்

கலைகளிலே தோய்ந்தந்நாள் கனிந்தபல புலவர்கள்
விலைகூறு மேன்மையுற விளைவித்த இலக்கியங்கள்
மெய்சிலிர்த்துச் சுவைக்கின்ற வேளையிலே மெய்ம்மறந்து
நெய்யாத விழித்திரைகள் நிழலாடி மூடலுற்றேன்!

வள்ளல்கள் வரையாமல் வாரிமிக வழங்குகிற
கொள்ளைகவின் கொப்புளிக்கும் காட்சியெலாம் விரியுமங்கே!
இன்னொருபால், தமிழகத்தின் இக்கால எழில்நிலைகள்
பொன்னொளிரப் பூத்ததையா, புகலறியேன், புல்லனம்மா!

செல்வமிகும் தொழிலதிபர், மல்குவள வேளாளர்,
பல்குபணத் திரையுலகோர், பணம்மிகுந்த எல்லாரும்
ஏதுமில்லார், தொழுநோயார் ஏக்கத்தைப் போக்கவெனப்
போதுமிகத் தேடினும் புகழ்விளைக்கும் தமிழரசு

இல்லாமை நோயதனால் உடலூரமே கொள்ளாமை
தில்லற்கும் ஆகாத மூப்பாலே தள்ளாமை
எல்லாமும் இல்லாமை இயல்பாகச் செய்ததையா!
கல்லாமை நீக்கிக் களிப்படையச் செய்ததையா!

செல்வர்கள் உணவுதரக் கொள்வோர்கள் இல்ரெனலால்
பல்குகிற பயிர்விளைச்சல் படைப்பதுவே உதவியென
உழுதொழிலை ஊக்கிடவும், கரம்புநிலம் உழுதிடவும்
பழுதின்றி உதவிடற்குப் பணிவுடனே கருதிடினும்

வளர்பசுமைப் புரட்சியினால் கைகொடுத்தால் நீட்டாத
ஒளிர்நாட்டைப் பார்க்கின்றார்; வழியின்றி ஓய்கின்றார்!
விழியற்றோர் விழிபெறவே கண்ணப்பர் வியன்செயல்போல்
எழிலுதவி செயநினைத்தால், இணையற்ற திட்டத்தால்

எல்லாரும் முகாம்களிலே நல்லுதவி பெறும்வழிக்கே
வல்லதமிழ் நாட்டரசு வனைந்ததிட்டம் செயற்படலால்,
உதவிபெறத் தனியாக ஊக்கமுள்ளோர் ஒருவரில்லை!
பதவிபெறப் படிப்பளிக்கக் குடிசைகளை மாற்றிவிட

எண்ணிடினும், அமைச்சரெலாம் தொண்டரெனும் இதயமுடன்
நண்ணியிங்கே உதவியெலாம் நல்கிடுவார்; அட்டியில்லை!
இரண்டின்மேல் குழந்தையுளோர் எவருமில்லை இனியென்ற
திரண்டினிக்கும் இலக்கணத்தின் இலக்கியமாம் நாடெனலால்

விடுதலையின் வெள்ளிவிழா வீறுபெறும் இந்தியாவில்
வடுவில்லாப் புதுப்பாடம் வழங்குகிற தமிழகம்தான்
தொலைநோக்கால் இல்லாமை தொலைத்துவிடும் எனக்கண்ட
நிலையிதனால் பூரிப்போம்; நிறைவேற்றிக் களிப்போமே!

விடுதலைக்குப்பின்
வேளாண்மை
வளர்ச்சி

இரண்டாவது உலகப் பெரும் போர் முடிந்த பின்பு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாள் இந்தியா-ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்தது. இந்தியா விடுதலை அடைந்த பிறகு, தமிழ்நாட்டின் வேளாண்மையில் படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டு, இறுதியாகப் 'பசுமைப் புரட்சி' பூத்தது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டமிட்ட வேலைத் திட்டங்கள் துவங்கப்பெற்றன. ஆனால், விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களினால், உடனடியாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களைத் தீவிரப்படுத்த இயலவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் முதல் ஐந்தாண்டுத்திட்டம் 1951-52-ஆம் ஆண்டு முதல் செயல்படத் துவங்கியது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 86.04 கோடி முதலீடு செய்யப்பட்டது. அதில் ரூபாய் 80 கோடி மட்டுமே திட்டக் காலத்தில் செலவிடப்பட்டது. அதாவது முதலீடு செய்த தொகையில் 93 சதமே செலவிடப் பட்டுள்ளது. முதல் திட்ட மூலதன ஒதுக்கீட்டில் 75 சதத்தொகை வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவைகளின் வளர்ச்சிக்காகவே ஒதுக்கப்பட்டிருந்தது. முதல் திட்டக் காலத்தில் புதிதாக 9 நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் 1.32 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்குப் புதிதாகப் பாசன வசதி கிட்டியது. புதிதாக 110 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டான 1955-56-ஆம் ஆண்டில் மொத்தம் 45.35 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் 1950-51-ஆம் ஆண்டில் 19.50 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1955-56-ஆம் ஆண்டில் 29·55 மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. அரிசி உற்பத்தியைப் பொறுத்த வரையில் இவ்வுயர்வு குறிப்பிடத் தகுந்ததாகும். ஆனால், அரிசியல்லாத மற்றத் தானியங்களின் உற்பத்தி உயர்வு குறிப்பிடத் தகுந்ததாக அமையவில்லை.

1950-51-ஆம் ஆண்டில் 3.25 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த கரும்பு உற்பத்தி (வெல்லம்), 1955-56-ஆம் ஆண்டிலும், 3.25 இலட்சம் மெட்ரிக் டன்னாகவே இருந்ததால், கரும்பு உற்பத்தியைப் பொறுத்த வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனால், 1950-51-ஆம் ஆண்டில் 8.04 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 1955-56-ஆம் ஆண்டில் 8.76 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. 1950-51-ஆம் ஆண்டில் 2.26 இலட்சம் பேல்களாக இருந்த பருத்தி உற்பத்தி, 1955-56-ஆம் ஆண்டில் 3.11 இலட்சம் பேல்களாக உயர்ந்தது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் 1956-57-ஆம் ஆண்டு முதல் செயல்படத் துவங்கியது. முதல் திட்டத்தில் கிடைத்த வெற்றி, இரண்டாவது திட்டத்தில் தமிழகத்தை மிகுந்த துணிவுடன் ஈடுபட வைத்தது. துவக்கத்தில் இரண்டாவது திட்டத்திற்கு 153 கோடி ரூபாய் மட்டுமே தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பினும், தமிழ்நாடு அரசு 188 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றியது. இத்திட்டக் காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், மின்சார உற்பத்தியைப் பெருக்கித் தொழில் வளம் கூட்டவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் கூடுதலாக 3,2 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு நீர்ப்பாசன வசதி கிடைத்துள்ளது.

தமிழகத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் 58.36 இலட்சம்மெட்ரிக் டன்உணவு தானியங்கள் உற்பத்தி செய்யக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இரண்டாவது திட்ட இறுதி ஆண்டில் அதாவது1960, 61-ஆம் ஆண்டில், 53.13 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களே உற்பத்தி செய்யப்பட்டன. எனவே இரண்டாவது திட்டக் காலத்தில் 7·78 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் மட்டுமே கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது திட்ட இறுதி ஆண்டில் (1960–61) கரும்பு உற்பத்தி (வெல்லம்) 6.75 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 3.74 இலட்சம் பேல்களாகவும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 10.86 இலட்சம் டன்களாகவும் உயர்ந்தது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 1961–62 முதல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்ட முடிவில் தமிழ்நாட்டில் 70 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று குறியீடு விதிக்கப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. 1964–65-ஆம் ஆண்டில் 58 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1965–66-ஆம் ஆண்டில் நிலவிய வறட்சி வேளாண்மை உற்பத்தியை வெகுவாகப் பாதித்தது.

தமிழ்நாட்டில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் (1965–66), 50.61 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வுற்பத்தி, இரண்டாவது திட்டக் கால இறுதியில் ஏற்பட்ட உற்பத்தியை விடக் குறைவு. ஆனால், 1965–66-ஆம் ஆண்டில் கரும்பு (வெல்லம்) உற்பத்தி, 9.55 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 4.38 இலட்சம் பேல்களாகவும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 12.08 இலட்சம் டன்களாகவும் உயர்ந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில், உணவு உற்பத்திக் குறைவினால் தமிழகத்திற்கு ஏற்பட்ட நட்டத்தைக் கரும்பு, பருத்தி, எண்ணெய் வித்துக்கள் மூலம் கிடைத்த வருவாய் ஓரளவுக்கு ஈடுகட்டியது. உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் மூன்றாவது திட்டம் தமிழ்நாட்டிற்குப் பெருத்த ஏமாற்றத்தையே கொடுத்தது.

மூன்று தனித்தனி ஆண்டுத் திட்டங்கள்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முதலில் 1966–67-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவிருந்தது. ஆனால், பல்வேறு காரணங்களால் நான்காவது திட்டம் தள்ளிப்போடப்பட்டது. அதனால் தமிழ்நாடு அரசு, குறைந்த மூலதன ஒதுக்கீடு செய்து 1966–67, 1967–68, 1968–69 ஆகிய ஆண்டுகளுக்கு தனித்தனி ஆண்டுத் திட்டங்களைத் (Annul Plans) தீட்டிச் செயல்படுத்தியது. மூன்றாவது திட்டத்திற்கும், நான்காவது திட்டத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்ட ஆண்டுத் திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நவீன யுக்திகள் (New Strategies) மேற்கொள்ளப்பட்டன. அவைகளில் மிகவும் குறிப்பிடத் தகுந்தவை உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் (High Yeilding Paddy Varieties), ஒட்டு வீரிய சிறு தானியங்கள் (Hybrid Millets), இரசாயன உரங்கள் ஆகியவையாகும்.

1966—67-ஆம் ஆண்டின் சாதனை

1966–67-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உயர்விளைச்சல் ரகத் திட்டம் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆண்டில் 5.28 இலட்சம் ஏக்கர்களில் உயர்விளைச்சல் ரகங்களும், ஒட்டு வீரிய சிறுதானியங்களும் பயிரிடப்பட்டன. அதே ஆண்டில் 2,038 வடிமுனைக் குழாய்களும், 865 தனியார் குழாய்க் கிணறுகளும், 9,389 சாதாரணக் கிணறுகளும் தோண்டப் பெற்றன. மேலும் 34,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்க வழிகோலப் பட்டது. இவைகளின் காரணமாக 1966–67-ஆம் ஆண்டில் 57.88 இலட் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

பசுமைப் புரட்சி தோன்றியது

தமிழ்நாடு அரசு 1967–68-ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியை விரைந்து பெருக்கிட, வேகமாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தியது. 1967–68-ஆம் ஆண்டு முழுவதும் பருவநிலைமை ஏதுவாக அமையவில்லை.

அப்படியிருந்தும், தமிழ்நாடு அரசின் திட்டமிட்ட செயலால் அந்த ஆண்டில், 12·79 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் நெல் ரகங்களும், ஒட்டு வீரிய சிறுதானிய ரகங்களும் பயிரிடப்பட்டன. அதே ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 2·1 இலட்சம் ஏக்கர் ஒரு போகச் சாகுபடி நிலங்களில் இரு போகம் சாகுபடி செய்யும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியது. மற்ற மாவட்டங்களில் உள்ள 15,000 ஏக்கர் ஒரு போகச் சாகுபடி நிலங்களிலும், இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது. எனவே அந்த ஆண்டில் மொத்தம் 2·25 இலட்சம் ஏக்கர் ஒருபோகச் சாகுபடி நிலங்களில் இருபோகம் சாகுபடி செய்து, தமிழ்நாடு வரலாறு காணாத சாதனையை ஏற்படுத்தியது.

இரசாயன உரங்கள் போதிய அளவு கிடைக்கத் தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக அந்த ஆண்டில் இரசாயன உரங்களின் உபயோகம் பின்கண்டவாறு பெருகியது.

	மெட்ரிக் டன்கள்.
தழைச்சத்து	85,000
மணிச்சத்து	30,000
சாம்பல் சத்து	30,000

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு மும்முர நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 1967–68-ஆம் ஆண்டில், 14,266 புதிய கிணறுகள் தோண்டப் பெற்றன; 2,488 வடிமுனைக் குழாய்கள் அமைக்கப்பட்டன.

மூன்றாவது திட்ட காலத்தில் ஆண்டிற்கு 28,000 பம்பு செட்டுகளுக்கு மட்டுமே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், 1967-68-ஆம் ஆண்டில் 51,746 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்து ஒரு புதிய மாபெரும் சாதனையைத் தோற்றுவித்தது தமிழ்நாடு அரசு.

இவ்வாறு பல்வேறு மும்முர நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாய், பருவநிலை ஏதுவாக அமையாத அந்த ஆண்டிலும், 59.41 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்பது மகத்தான சாதனையாகும். இவ்வுற்பத்தியின் காரணமாக 1964–65-ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டில் நிலவி வந்த உணவுப் பற்றாக்குறை அகன்றது. உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் விலையும் குறைந்தது. இந்த ஆண்டில் தான் தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சி தோன்றியது எனலாம்.

1968–69-ஆம் ஆண்டின் சாதனை

தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியில் 1967–68-ஆம் ஆண்டில் கிடைத்த வெற்றியினால் உந்தப்பட்ட தமிழ்நாடு அரசு, 1968–69-ஆம் ஆண்டில் 63 இலட்சம் மெட்ரிக் டன் உணவு

வெண்பாப் போட்டி-41

ஈற்றடி : அண்ணல் வழியே அழகு

(முடிவு நாள் 1--9--1972.)

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிட்டது. ஆனால் அந்த ஆண்டில் நிலவிய வேதனைக்குரிய வறட்சியின் காரணமாக 1968–69-ஆம் ஆண்டில் 51·06 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களே உற்பத்தி செய்யப் பட்டன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 1969–70-ஆம் ஆண்டில் துவங்கியது. 1968–69-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வேதனைக்குரிய ஏமாற்றத்தை மனத்தில் கொண்டு உணவுதானிய உற்பத்தியைப் பெருக்க மேலும் தீவிரமாக முயற்சிக்கப் பட்டது. அதன் பயனாய் 1969–70-ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 62·61 இலட்சம் மெட்ரிக் டன் அளவை எட்டியது.

இவ் வெற்றியினால் மீண்டும் உந்தப்பட்ட தமிழ்நாடு அரசு, 1970–71-ஆம் ஆண்டில் 67 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப் பெரு முயற்சி மேற்கொண்டது. முயற்சி வெற்றியாக மலர்ந்தது! 1970–71-ஆம் ஆண்டில் 70.30 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் தமிழ் நாட்டில் உற்பத்தியாகியது. அந்த ஆண்டில் அனைத்து இந்தியாவிலும் ஹெக்டேருக்குச் சராசரியாக 1,134 கிலோகிராம் அரிசி மட்டுமே உற்பத்தியாகி உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் ஹெக்டேருக்குச் சராசரியாக 1,974 கிலோகிராம் அரிசி உற்பத்தியாகியுள்ளது. அதனால் அனைத்து இந்தியாவிலும் தமிழ்நாடு, அரிசி உற்பத்தியில் முதலிடம் பெற்று வரலாறு காணாத சாதனையை ஏற்படுத்தியது. இச்சாதனைக்கு உறுதுணையாக அமைந்தவை உயர் விளைச்சல் ரகங்களும், பல பயிர் சாகுபடித் திட்டமுமே காரணம் என்றால் தவறாகாது.

நான்காவது திட்டக் கால இறுதிக்குள் அதாவது 1973–74-ஆம் ஆண்டிற்குள் 33.5 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் நெல் வகைகளையும், 2·5 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறு தானியங்களையும் தமிழ்நாட்டில் பயிரிட வேண்டும் என்று திட்ட ஆணைக் குழு (Planning Commission) அறிவித்திருந்தது.

ஆனால் அந்த இலக்கை நான்காவது திட்டத்தின் இரண்டாவது ஆண்டிலேயே (1970–71) தமிழ்நாடு மிஞ்சிவிட்டது என்பதை பின் கண்ட புள்ளி விவரங்கள் தெளிவு படுத்துகின்றன.

	இலட்சம் ஏக்கர்.
உயர் விளைச்சல் தரும் நெல்வகைகள் 1970–71-இல் பயிராகிய பரப்பு	44·93
ஒட்டுவீரிய சிறுதானியங்கள் 1970–71-இல் பயிராகிய பரப்பு	2·85

இச்சாதனை தமிழ்நாடு அரசின் திறமைக்கோர் சான்றாக விளங்குகிறது. 1970–71-ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி (வெல்லம்) 11·43 இலட்சம் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 3·45 இலட்சம் பேல்களாகவும், எண்ணெய் வித்துக்களின் மொத்த உற்பத்தி 11·25 இலட்சம் டன்களாகவும் பெருகியுள்ளது:

தமிழரசு
அடுத்த இதழில்
- டயல் நெ. 100!
- கண்ணகியே மங்கல தேவி!
- வெற்றி உலா வரும் சுற்றுலாத் துறை.
- வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் திரு. கே. வி. சுப்பையா அவர்களின் சந்திப்புக் கட்டுரை.
- வ. உ. சிதம்பரனார் பற்றிய சிறப்புக் கட்டுரைகள்! செய்திகள்!

1970–71-ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாபெரும் வெற்றியினால் தூண்டப் பெற்ற தமிழ்நாடு அரசு, 1971–72-ஆம் ஆண்டில் 73 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 50 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் நெல் வகைகளையும், 5 இலட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பும், 4 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறு தானியங்களையும் பயிரிடத் திட்டமிட்டது. அது போலவே 13 இலட்சம் ஏக்கரில் பல போகப் பயிர் செய்யத் திட்டமிடப்பட்டது. இலக்கினை மிஞ்சிவிட்டதால் 1971–72-ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 73 இலட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் (1972–73) 75 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உணவு தானிய உற்பத்தியிலும், வாணிபப் பயிர்கள் உற்பத்தியிலும் கடந்த 25 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 1949–50-ஆம் ஆண்டில் ஹெக்டேருக்கு 944 கிலோவாக இருந்த அரிசி உற்பத்தி, 1970–71-ஆம் ஆண்டில், 1,974 கிலோவாக உயர்ந்து, அனைத்து இந்தியாவிலும் முதலிடம் வகித்துள்ளது. அதே காலத்தில் அரிசி உற்பத்தி ஏறத்தாழ 3 மடங்கிற்கு பெருகியுள்ளது என்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன.

அரிசி உற்பத்தியில் முன்னேற்றம்.

	இலட்சம் மெட்ரிக் டன்கள்.
1949–50	18·21
1955–56	29·55
1960–61	35·03
1965–66	35·24
1970–71 .. —	54·03

அன்றையச் சென்னை மாநிலத்தில் 1949–50-ஆம் ஆண்டில் 29,292 டன் அமோனியம் சல்பேட்டும், 10,572 டன் சூப்பர் பாஸ்பேட்டும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால், இன்றையத் தமிழகத்தில், கடந்த ஆண்டில் (1971–72) 1·95 இலட்சம் மெட்ரிக் டன் தழைச்சத்து உரங்களும், 68,000 மெட்ரிக் டன் மணிச்சத்து உரங்களும், 58,000 டன் சாம்பல் சத்து உரங்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதிலிருந்து தமிழக உழவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

நான்காவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் தமிழ்நாடு வேளாண்மையில் செழிப்புற்று, உலகம் போற்றும் அளவுக்கு முன்னேறும் என்பது திண்ணம்.

“ தனியொருவனுக்கு உணவில்லையெனில் இச்செகத்தினை அழித்திடுவோம் ” என்ற பாரதி பிறந்த நாட்டில், இன்று உணவுப் பற்றாக்குறை இல்லை என்பது ஒன்றே, விடுதலைக்குப் பிறகு தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வேளாண்மை வளர்ச்சிக்கு நல்லதொரு சான்றாகும்.

1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் சென்னையில் கொண்டாடப்பட்ட முதல் விடுதலை நாள் விழா

1. சென்னை கோட்டையில் [illegible]
2. விழாவின் [illegible]
3. [illegible]



அன்று அந்தப் பள்ளிக்கூடம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மாணவர்கள் அழகாய் உடை உடுத்திக் கொண்டு அமைதியே உருவாய்க் காணப்பட்டனர்.

இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? அன்று கல்வித் துறை அதிகாரி ஒருவர் அந்தப் பள்ளியைப்பார்வையிட வந்தார். வந்தவர் ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று மாணவர்களைக் கேள்விகள் கேட்டு அவர்களின் கல்வி அறிவை அறிந்து கொண்டிருந்தார்.

இன்னொரு வகுப்புக் குள்ளும் நுழைந்தார். மாணவர்கள், என்ன கேட்பாரோ என்று பயந்து கொண்டிருந்தனர். கல்வி அதிகாரி மாணவர்களையெல்லாம் ஒரு முறை பார்த்துவிட்டு 'கெட்டில்' (Kettle) என்னும் சொல்லை எழுதும்படி கூறினார். தெரிந்தவர்கள் 'மட மட' வென எழுதினார்கள். தெரியாதவர்கள் விழித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒருமாணவன் இந்த 'கெட்டில்' என்னும் ஆங்கிலச் சொல்லைத் தவருக எழுதியிருந்தான். அப்போது அருகிலிருந்த அவன் ஆசிரியர் இதைப் பார்த்துவிட்டார். கல்வி அதிகாரி பார்த்துவிட்டால் என்ன சொல்வாரோ என்று அஞ்சிய ஆசிரியர், அவனிடம் இப்படித்தான் எழுத வேண்டும் என்று அந்தச் சமயத்தில் சொல்ல முடியுமா? அதனால் அவர் என்ன செய்தார் தெரியுமா?

'காப்பி' அடித்தாவது அந்தச் சொல்லைச் சரியாக எழுது! என்று சொல்வது போலத் தன் 'பூட்ஸ்' காலால் அவன் காலை அழுத்தினார். அந்தப்பையனுக்கோ ஆசிரியரின் செய்கை புரியவே இல்லை. மீண்டும் ஆசிரியர் பழையபடி செய்தார். அப்படியும் அவனுக்குக் 'காப்பி' அடிக்கும் எண்ணமே வரவில்லை.

'காப்பி' அடிக்கத் தெரியாத அந்தச் சிறுவன்தான் நாம் அன்பாக அழைக்கும் காந்தித் தாத்தா! உலகம் போற்றிய உத்தமர் காந்தியடிகள்.

இப்போது நீங்களெல்லாம் எழுதும் போது, பலகை அல்லது நோட்டுப் புத்தகத்தில்தானே எழுதுகிறீர்கள்? ஆனால், அந்தக் காலத்தில்காந்தியார்பலகையிலா எழுதினார்? இல்லை! இல்லை! தூசியில் எழுதினார்! ஆம், மாசு மருவற்ற உள்ளம்கொண்டகாந்தியடிகள் முதலில் எழுதக் கற்றுக்கொண்டது தூசியில்தான்.

போர்பந்தரில் உள்ள ஒரு பள்ளியில் அவர் படித்துக்கொண்டிருந்தார். அப்போது கரும் பலகையில் எழுதும் வழக்கம் இல்லை. தூசியைப் பரப்பி அதில் எழுதி வந்தனர். காந்தியடிகள் அப்படியே எழுதிப் பழகிவந்தார்.

குழந்தைப் பருவத்தில் காந்தியடிகள் யாருடனும் சேரமாட்டார். கூச்சம் உள்ளவர் என்பதே அதற்குக் காரணம். அந்தச் சமயத்தில் எல்லாம் அவருக்கு நண்பர்களாக இருந்தவர்கள் புத்தகங்களேயாகும். காந்தியடிகளிடம் நல்ல பழக்கங்கள் பல சிறு வயதிலிருந்தே வளர்ந்து வந்தன. பள்ளிக்குக் குறித்த நேரத்தில் போவார்; பள்ளி முடிந்ததும் எங்கும் சுற்றித் திரியாமல் நேரே வீட்டுக்குவருவார். யாரிடமும் வம்புக்கோ வலுச்சண்டைக்கோ அவர் போனதில்லை. சின்னஞ் சிறு வயதிலேயே இது போன்ற நல்ல பண்புகள் அவரிடம்இருந்துவந்ததால்அல்லவோ அவர், பிற்காலத்தில் உலகமே போற்றக்கூடிய உத்தமராகவிளங்கினார்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

காந்தியடிகளுக்குக் குழந்தைகள் என்ருல் கொள்ளை ஆசை; அவர்களைக் கண்டதும் அவர் அள்ளி யெடுத்துக் கொஞ்சி மகிழ்வார். நம் நாட்டுக் குழந்தைகள் மட்டுமல்லாமல், மற்ற நாட்டுக் குழந்தைகளிடமும் அவர் அன்பு செலுத்தி அரவணைத்து வந்தார்.

ஒரு முறை அவர் இலண்டன் நகருக்குச்சென்றபோதுஅங்குள்ள குழந்தைகள் அவரைச் சூழ்ந்து கொண்டு ஆடிப் பாடினர்கள்; அவரது பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர்கள். காந்தியாரும் அவர்களுக்கு வேர்க்கடலை, இனிப்புப் போன்ற தின்பண்டங்களை வழங்கி மிகவும் மகிழ்ந்தார்.

பகைவனை நேசி

இந்த வாசகத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்கினர் காந்தியடிகள். பாம்பு என்ருல் படையும் நடுங்குமல்லவா? ஒரு சமயம் காந்தியடிகளின் தோள்மீது ஒரு பெரிய பாம்பு ஏறியது. நம்மீது பாம்பு ஏறினல் நாம் என்ன செய்வோம்? பதறிக் கொண்டு -'பாம்பை அடி, அடி,' என்று கூச்சலிடுவோம் அல்லவா? ஆனல், அமைதியே உருவான காந்தியடிகள் பதருமல் கூச்சலிடாமல் அந்தப் பாம்பை அடிக்க வேண்டாம் என்று கனிவோடு கேட்டுக் கொண்டாராம்.

அன்பு, அகிம்சை, அருங்குணங்கள்ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கிய காந்தியடிகளுக்கு எல்லாருக்கும் கிடைக்காத பெருஞ்சிறப்பு ஒன்றிருக்கிறது. அதுதான் அவர் இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தது.

விடுதலை வெள்ளிவிழா நாளான இன்று, அவர் காட்டிய அன்பு வழியில் செல்வோமென உறுதி கொள்வதுதான், அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.


ஆராய்ச்சி மணி ௨
கதை: இளவல் * படம்: கோபண்ணு
என்ன தம்பி சொல்றே...?
உங்க தலைக்குப் பின்னுல் இருக்கும் கர்ச்சீப்பைக் கேட்கிறேன்!
என்ன கைக்குட்டையா? அதிலே ஒண்ணுமில்லையே... நீங்க... போங்க...
ஊர் வந்தாச்சு இறங்குங்க... நீ என்னப்பா மணி? கலாட்டா பண்றே
அவரைக் கர்சீப்பைக் கொடுக்கச் சொல்லு அப்பா...!
பையா... பேசாமே போறியா... இல்லே உதை எதுவும் வேணுமா?
ஏய்! நான் யாருன்னு தெரியாது?
என்ன தகராறு?
அவர் தலை வைத்துப் படுத்திருந்த இடத்தில் கர்ச்சீப் இருக்குது!
அந்தக் கைக்குட்டையிலே ஒன்னுமில்லே... நிஜமா ஒன்னுமில்லே!
கைக்குட்டையில் ஏதோ கட்டியில்லே வச்சிருக்கு!
ஆ! வைரங்கள்... கள்ளக்கடத்தல் வைரத்தை இப்படி அலட்சியமா கொண்டு வந்தால் யாரும் கண்டு பிடிக்க மாட்டாங்க என்ற நினைப்பு. ஆனல் இந்தத் தம்பி கண்டு பிடிச்சிடுச்சே...!
எப்படியோ ஏமாற்றிக் கொண்டிருந்த ஒரு பெரிய கள்ளக்கடத்தல் கூட்டத்தைப் பிடிக்க உங்கள் பையன் உதவி செஞ்சிட்டான். ரொம்பக் கெட்டிக்காரப் பையன். இப்ப மணி எங்கே?
கவலைப்படாதீங்க..! வெளியே போயிருக்கான்! துணையோடதான் அனுப்பியிருக்கேன்.


அக்கா...நம்ம மாணிக்கத்தைப் பார்த்துட்டு வரலாமா? அட்ரஸ் என்னிடம் இருக்கு
அப்பா உன்னை திருமலை நாயக்கர் மகாலைப் பார்த்த உடன் அழைச்சிட்டு வரச் சொன்னாங்க. அப்புறம் பார்க்கலாம்
நீயும் அக்காவும் ஏன்தான் இப்படிப் பயப்படறீங்க! தூக்கம் வராமே ஒரு கையாலேயே என் கர்ச்சிப்பைத் தூக்கி எறிஞ்சு பிடித்துக் கொண்டிருந்தேன்... காற்றடிக் காற்றிலே தூங்கிக் கொண்டிருந்த அந்த ஆள் தலைப் பக்கம் போய் விழுந்தது. அதை நான் கேட்டேன். ஆனால்...
தெரியுதே நீ துப்பறியும் கெட்டிக்காரத்தனம்... சரி சரி சத்தம் போட்டுப் பேசாதே... யார் காதிலாவது விழப்போவுது... பக்கத்திலே சேகர் சார் வர்றாரு. மெதுவாப்பேசு!
என்ன பயம்! உண்மையைச் சொல்கிறேன்! இப்ப எனக்கு இருக்கிற புத்தியிலே நான் சொல்றதை யெல்லாம் அடக்கத்தாலே சொல்றேன்னு நினைப்பாங்க என்ன சேகர் சார்! அப்படித்தானே!
என்ன மணி சொல்றீங்க!
ஐய சான நீங்க என்னை 'நீங்கன்னு' மரியாதையோட சொல்றீங்களே... இதுவரை நானும் அக்காவும் பேசிக் கொண்டு வந்ததைக் கவனிக்கவில்லையா? நான் சொல்றேன்.
சேகர் சார்... மணி ஏதாவது பொருமுவான். கவனிக்காதீங்க! எங்களுக்குத் துணையா அப்பா உங்களை அனுப்பியதுக்குத் தண்டனையா வேணும்....!
நோ...நோ... மணியின் புத்திசாலித்தனம் யாருக்கு வரும்?.. ஊரே புகழுது...
டேய் மணி! கையிலே என்னடா கட்டு?
ஏண்டா வாலு என்னிடமே கூட சொல்லிக் கொள்ளாமல் இங்கே வந்திட்டே...
எங்க அப்பாதான் உன்னிடம் சொல்லாமே கிளம்பணும்னு சொன்னார்.. ஆமாம். இந்த சேகரை உனக்கு எத்தனை நாளாத் தெரியும்?

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்)
வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

பனகல் கட்டடம்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தின் பழுதடைந்த ஜீப் எஸ். ஒய். 2165 25–8–1972 அன்று மாலை 3-00 மணிக்கு தஞ்சை மாவட்ட வளர்ச்சி அலுவலரால் (2) தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற் கண்ட ஜீப்பை பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்துப் பெற்றுக் கொள்ளலாம்.

த. செல்லையா,
மாவட்ட வளர்ச்சி அலுவலர் (2),
பனகல் கட்டடம்,
தஞ்சை.

(த.3)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

பாம்பன் வட்டம்

த. க. எண். 10471/72/வ-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இன்வாரி ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (நெ. கி. ப.) பாம்பன் வட்டம், நெ. 4, ஸ்ரீநகர் காலனி, சைதாபேட்டை, சென்னை-15 அலுவலகத்தில் 23–8–1972 மாலை 3–00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் விவரம்.	முன்வைப் புத் தொகை.	நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்.
(1)	(2)	(3)
சென்னை—கல்கத்தா சாலை-தேசிய நெடுஞ்சாலை எண்.5-ல் உள்ள ரெட்ஹில்ஸ் மாற்று வழிப்பாதையில் ரெட்ஹில்ஸ் உபரிக்கு குறுக்கே பாலம் கட்டுதல்.	ரூ. 8,400	கோட்டப் பொறியாளர் (நெ.) அலுவலகம் ஜெமினி மேம்பாலம் வேலை கிண்டி, சென்னை-25.

ஒப்பந்தங்கள் 23–8–1972 அன்றே மாலை 3–15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், நகல்கள் வரைபடங்கள், முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) ஜெமினி மேம்பாலவேலை, கிண்டி, சென்னை-25 அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூபாய் 25–90 செலுத்தி 15–8–1972 முதல் 22–8–1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை தனிக் கோட்டப் பொறியாளர் (நெ.), ஜெமினி மேம்பால வேலை, கிண்டி, சென்னை-25 அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் கோட்டப்பொறியாளர் (நெ.) ஜெமினி மேம்பால வேலை சென்னை-25, அவர்கள் பெயரில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.),
சென்னை-15.

(த.19)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2

வரும் மூன்று வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் கீழ்க்கண்ட கடைகளில் வியாபாரம் செய்வதற்கு, முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30–8–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

1. கடை நெம்பர் 2—மந்தைவெளி பேருந்து நிலையம் —பலசரக்கு வியாபாரம்.
2. கடை நெ: 3, பெரம்பூர் பேருந்து நிலையம்—துணி வகை ரகங்கள் விற்பது.

ஒப்பந்தங்கள் அதேநாள் 30–8–1972 மாலை 3–15 மணிக்கு செயலாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2, அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்த விதி முறைகள் செயலாளர், அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் ரூ. 1.04 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த 16).

ஏல விற்பனை

பாளையங்கோட்டை நகராட்சி

பாளையங்கோட்டை நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட காந்தி சந்தையில் திருச்செந்தூர் ரஸ்தாவைப் பார்க்க புதியதாகக் கட்டி முடிக்கப்பட்ட ஒரு கடையை 1972-ம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் தேதி முதல் அல்லது கடையை ஒப்படைக்கும் தேதி முதல் அனுபவிக்கும் உரிமையை (நாள் கட்டணத்தில்) 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் வைத்து ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் கட்டுத் தொகையாக ரூ. 150 அலுவலகக் கருவூலத்தில் செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். சொத்து மதிப்பு ரூ. 1,500-க்கு சான்றிதழ் இருக்க வேண்டும். அல்லது சொத்து பொறுப்பிற்காக ரூ. 300-ஐ அலுவலக கருவூலத்தில் செலுத்த வேண்டும். அதன் பின்னர்தான் ஏலம் கேட்க அனுமதிக்கப்படுவார்கள். இதர விவரங்களை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

க. ஜனார்த்தனம்,
ஆணையர்.

(த. 2)

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி நகராட்சி

தூத்துக்குடி நகராட்சியிலுள்ள பொதுச் சுகாதார இலாகா வண்டிகளை ரிப்பேர் செய்ய தேவையான ஆக்சில், ரிவிட் மென் சீட் பலகை, போல மரம் முதலியன சப்ளை செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் 28–8–1972 மாலை 4 மணி மணிவரை நகரமன்ற ஆணையர் அவர்களின் நேர்முக அதிகாரியினால் பெறப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஒவ்வொன்றும் ரூ. 75 முன் வைப்புத்தொகையாக நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியோ அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும். இதர விவரங்களைத் நகரமன்ற பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது விண்ணப்பித்தோ தெரிவித்துக் கொள்ளலாம்.

சி. சங்கரலிங்கம், பி. ஏ.
ஆணையர்.

(த. 5)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண் 17, சர் பி. டி இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 23—8—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் செயற்பணி கோட்டம் திருச்சி—இரும்பு, எஃகு கம்பிகள் சப்ளை செய்தல்.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—6,000 (ரூபாய் ஆறாயிரம் மட்டும்).

இத்தொகை, ஏதாவது கருவூலத்தில் பெறப்பட்ட பண உத்தரவுச் சீட்டு நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—இரண்டு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 15·53 (விற்பனைவரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து பி-15, தில்லை நகர், முக்கிய வீதி, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 21—8—1972 மாலை 5-00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 26)

ஏல விற்பனை

பனகல் கட்டடம்

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தின் பழுதடைந்த ஜீப் எம்.எஸ்.ஒய். 6303—21—8—1972 அன்று மாலை 3-00 மணிக்கு தஞ்சை மாவட்ட வளர்ச்சி அலுவலரால்(2) தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற்கண்ட ஜீப்பை பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலச் சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

த. செல்லையா;
மாவட்ட வளர்ச்சி அதிகாரி (2),
பனகல் கட்டடம்,
தஞ்சாவூர்.

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை
பாம்பன் திட்டம்.

ந.க.எண் 10480/72/23.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) சிவகங்கை அவர்களது அலுவலகத்தில் 6—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலை விவரமும்.	முன்வைப்புத் தொகை.	நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்குமிடம்.
1	2	3
	ரூ.	
மண்டபம் பக்கம்—		
1 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 0—10000 வரை அணுகுசாலை அமைத்தல்.	7,100	கோட்டப் பொறியாளர் (நெ.கி ப), சிவகங்கை
2 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 1000—2,000 வரை அணுகுசாலை அமைத்தல்	7,300	௸
3 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 2,000—3000 அணுகு சாலை அமைத்தல்.	7,100	௸
4 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 3,000—4,000 வரை அணுகு சாலை அமைத்தல்.	7,200	௸
5 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 4,000—5,000 வரை அணுகு சாலை அமைத்தல்.	7,500	௸
6 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்கு மண்டபம் பக்கம் செ. 5,000—6,062·16 வரை அணுகு சாலை அமைத்தல்.	40,000	௸
பாம்பன் பக்கம்		
7 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்குப் பாம்பன் பக்கம் செ. 234—1,000 வரை அணுகு சாலை அமைத்தல்	17,600	௸
8 தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் கட்டப்பட இருக்கும் பாம்பன் பாலத்திற்குப் பாம்பன் பக்கம் செ. 1,000—2,262·033 வரை அணுகு சாலை அமைத்தல்	9,500	௸

ஒப்பந்தங்கள் 6—9—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.) பாம்பன் பால வேலை அவர்களால் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகங்கை, அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், பத்திரங்கள், நமூனாக்கள் மற்றும் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகங்கை அவர்களது அலுவலகத்தில் வரிசை எண் 1 முதல் 5 மற்றும் 8-ல் உள்ள வேலைகளுக்கு விற்பனை வரி மற்றும் அதற்கான மேல் வரி உட்பட ரூ. 26·00-ம் வரிசை எண் 6 மற்றும் 7-ல் உள்ள வேலைகளுக்கு விற்பனை வரி மற்றும் அதற்கான மேல்வரி உட்பட ரூ. 52·00-ம் செலுத்தி 28—8—1972 முதல் 5—9—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகெங்கை அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலும் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) சிவகங்கை அவர்கள் பெயரில் “ ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன்” இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தெகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பதந்கள் பரிசிலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 20)

ஏல விளம்பரம்

கீழே விவரிக்கப்பட்ட கண்டனமான மோட்டார் சைக்கிள் 23—10—1972 அன்று காலை 10.30 மணிக்கு,கடலூர் புதுநகரிலுள்ள, தென்னார்க்காடு மாவட்ட போலீஸ் அலுவலகத்தில், பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

“ மோட்டார் சைக்கிள்—எம்.எஸ். எண் 9289

சோலோ—ராயல் என்பீல்டு—1965 மாடல் ”

இவ்வண்டியைப் பார்வையிட விரும்புவோர், அலுவலக நாட்களில் காலை 10-30 மணி முதல் மாலை 5 மணிவரை, இவ்வலுவலக கட்டடத்தில், ஆயுதப்படை கூடுதல் ஆய்வாளர் முன்னிலையில் பார்வையிடலாம்.

இதர விவரங்கள் தேவையெனில், கீழ்க் கையொப்பமிட்டவருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

க. வெ. சுப்ரமணியம்,
காவல் கண்காணிப்பாளர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த.24)

ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை அரசினர் தேயிலைத் தோட்டத் திட்டம்

நெல்லியாளம் கோட்டம்; கூடலூர், நீலகிரி.

கீழ்க்காணும் வேலைகளை, மேற்கொள்ளுவததற்கான மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக நெல்லியாளம் தேயிலை கோட்ட வன அலுவலர் அவர்களால் 20—9—1972-ம் தேதி காலை 11 மணிவரை வரவேற்கப்படுகின்றன.ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் கீழ்க் குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் அனுப்பப்பட வேண்டும்.

வேலையின் விவரம்.	மதிப்பீட்டுத் தொகை.	வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1 1972-ம் ஆண்டு தேயிலை நடும் இடங்களுக்கு அணுகும் பாதைகளைச் சீர் படுத்தி கல் பாவுதல்.	65,000	1,950
2 1973-ம் ஆண்டு இடங்களுக்கு அணுகும் பாதைகளை அமைத்தல்.	50,000	1,500
3 1971-ம் ஆண்டு அமைத்த பாதைகளைச் சல்லிபோட்டு உறுதி படுத்துதல்.	25,000	750
4 தண்ணீர் கொடுப்பதற்கு ஒரு உயரமான தொட்டியை ஏல மண்ணுவில் (கூடலூர் தாலுகாவில்) கட்டுதல்.	7,000	210
5 1972-ம் ஆண்டு இடத்தில் தொழிலாளர் வீடுகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு நில அளவு தொட்டி கட்டுதல்.	6,000	420
6 1971-72 இடங்களில் பாதையில் சிறிய பாலங்கள் கட்டுதல்.	20,000	1,400

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31—3—1973க்குள் முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்த நமூனாவுக்கும் மற்ற விவரங்களுக்கும் ரூ. 4·14 கீழே ஒப்பமிடப்பட்டவரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மு. ரமேஷன்,
கோட்ட வன அலுவலர்,
நெல்லியாளம் பிரிவு,
கூடலூர், நீலகிரி.

(த.23)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை
திருநெல்வேலி வட்டம்.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெடியூல் ஒப்பந்தங்களை கண்காணிப்புப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) திருநெல்வேலி அவர்கள் இலக்கம் 18, திருச்செந்தூர் சாலை, திருநெல்வேலி-2. விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 30–8–1972 (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்ளுவார். இந்த ஒப்பந்தங்கள் அதே நாளில் பிற்பகல் 3–15 மணிக்குத் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை.	ஷெட்யூல் கிடைக்குமிடம்.
(1)	(2)	(3)
	ரூ.	
1 தேவகோட்டை வட்டாணம் சாலையில் கி.மீ. 119·0 முதல் கி.மீ. 127 வரை அபிவிருத்தி செய்தல்.	3,250	கோட்டப் பொறியாளர் (நெ.ஊ.ப.து). சிவகங்கை.
2 தேவகோட்டை வட்டாணம் சாலையில்கி.மீ.127 முதல் கி.மீ. 134–0 வரை அபிவிருத்தி செய்தல்.	3,520	கோட்டப் பொறியாளர் (நெ.ஊ.ப.து.) சிவகங்கை.
3 தேவகோட்டை வட்டாணம் சாலையில் 134–0 முதல் கி.மீ. 141–0 வரை அபிவிருத்தி செய்தல்.	3,675	௸
4 தேவகோட்டை வட்டாணம் சாலையில் கி.மீ. 141–0 முதல் கி. மீ. 147-60 வரை அபிவிருத்தி செய்தல்.	3,675	௸
5 தேவகோட்டை வட்டாணம் சாலை கி. மீ. 131/1–10 மங்களாக்குடி குளக்கரையில் அலைகள் (Revetment) அமைக்கும் வேலை.	1,350	௸
6 மறவமங்கலத்தில் இருந்து எரிவயலுக்குச் சாலை அமைத்தல் கி.மீ. 0–00 முதல் 12–17.	3,250	௸
7 மறமங்கலத்தில் இருந்து சாத்தரசன் கோட்டைக்குச் சாலை அமைத்தல் கி. மீ. 0–00 முதல் 12–48.	2,900	௸

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 15–53 வீதம்தொகை செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் மேலே குறிப்பிட்டுள்ள கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடமிருந்து 17–8–1972 முதல் 28–8–1972 வரை யிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள் ஷெடியூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட் மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ளஅரசினர் கருவூலங்கள் எதிலும் “ரெவின்யூ டெபாசிட்”” என்ற தலைப்பில் செலுத்தியதற்கான கருவூலச் சீட்டுகளை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

முன்வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

தி. ப. கந்தசாமி,
கண்காணிப்புப் பொறியாளர்,
(நெ. ஊ. ப. து,)
திருநெல்வேலி-2.

(த.9)

அறிவிப்பு

கடையநல்லூர் நகராட்சி

(திருநெல்வேலி மாவட்டம்)

திருத்தி அமைக்கப்பட்ட 1920-ம் வருடத்திய சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 78 (1)-ன் கீழ் 81 (1), 81 (3), 81 (4) ஆகிய பிரிவுகளின் கீழ் கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குள் 1-10-1972-ம் தேதி முதல் ஆரம்பமாகும் அரையாண்டு முதல் அடியில் கண்ட விகிதப்படி சொத்துவரிகளைத் திருத்தி விதிக்க கடையநல்லூர் நகர் மன்றம் தனது 30-6-1972-ம் தேதிய 119 நிர். தீர்மானத்தில் உத்தேசித்திருப்பதால் இந்த உத்தேச வரி விதிப்புகளுக்கு ஆட்சேபனை ஏதேனும் இருந்தால் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு இந்த விளம்பரம் செய்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலமாக தெரிவித்தால் ஆட்சேபனைகளைப் பரிசீலனை செய்யப்படும் என்று மேற்படி சட்டத்தின் 78(3) பிரிவின்படி இதனால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

சொத்துவரி.

சொத்துவரி.	81(1) பிரிவின்படி.	81(3) பிரிவின்படி	81(4) பிரிவின்படி
எந்த காரியத்திற்காக.	கட்டடங்களுக்கும் கட்டடங்களைச் சார்ந்த காலி நிலங்களும்.	விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படாதது. கட்டடங்களைச் சேர்ந்தாற் போல் இல்லாத காலி நிலங்களும்.	விவசாயத்திற்கு மட்டிலும் உபயோகப்படும் நிலங்கள்.
	கட்டடங்களின் வருட வாடகை மதிப்பின் பேரில்.	நிலங்களின் விலை மதிப்பின் பேரில்.	அரசினரால் விதிக்கப்படும் ஓர் ஆண்டு நிலத் தீர்வையின் பேரில்.
	(சத விகிதம் அரை வருடத்திற்கு)	(சத விகிதம் அரை வருடத்திற்கு)	(சத விகிதம் அரை வருடத்திற்கு).
பொதுகாரியங்களுக்கு	3	1/8	20
2. தண்ணீர், சாக்கடை வரி.	4	..	..
3. விளக்கு வரி	2	1/8	..
4. கக்கூஸ் வரி	½	1/8	..
5. கல்வி வரி	1½	..	2½
அரைவருட மொத்த வரி ..	11	3/8	22½

குறிப்பு: 1. தண்ணீர், சாக்கடை வரி 4:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படும்.

2. கல்வி வரி நீங்கலாக இதர வரித் தொகையில் ஒரு முழு ரூபாய்க்கு 0.05 காசு வீதம் லைப்ரேரி செஸ் வசூலிக்கப்படும்.

பழ. நடேசன், எம். ஏ.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

(த. 11)

ஒப்பந்தப் புள்ளி

தேனி—அல்லி நகரம் நகராட்சி

இந்நகராட்சி உபயோகத்திற்கு இரும்பு சேர்கள் 200-ஐ சப்ளை செய்ய நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28-8-1972-ம் தேதி மாலை 4 மணி வரையிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும். அலுவலக நேரத்தில் ரூ. 1.03 செலுத்தி ஒப்பந்தப் பாரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன் ரூ. 50 டெபாசிட் செலுத்த வேண்டும் ஒப்பந்தம் 28-8-1972-ம் தேதி மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தம் திறக்கப்படும் பொழுது ஒப்பந்தகாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரப்படுத்தப் பட்டவரோ ஆஜராக இருக்கலாம். சப்ளை செய்யப்படும் சேர்கள் தரமான கம்பெனியை சார்ந்ததாக இருக்க வேண்டும்.

ஒப்பந்தத்தை பொருத்து முடிவு செய்வது நகராட்சி ஒப்பந்தக் குழுவிற்கு உட்பட்டதாகும். காலதாமதமாக வரும் ஒப்பந்தஙகள் ஏற்று கொள்ளப்படமாட்டா. மற்ற விவரங்களை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

கே. எஸ். சையது சாகுல் ஹமீது,
தனி அலுவலர்.

த. 7)

நகராட்சி அலுவலகம்

இராஜபாளையம்

போஸ்ட் ஆபீஸ் ரோடு, அசோகா லாட்ஜ் ரோடு கிழக்கு பக்கம், சேம்பர் ஆப் காமர்ஸ் ரோடு, ரிசர்வாயர் ரோடு, பெருமாள்சாமி நாயுடு தெரு இந்தியன் ஆயில் கம்பெனிக்கு முன்புள்ள ரோடு ஆகிய இடங்களில் மெட்டல் போடவும், அந்தந்த ரோடு ஜங்ஷன்களில் வைப்பு கல்வெர்ட் அமைக்கவும் ரூ. 39,970 மதிப்பீட்டில் வேலைகள் செய்ய நாளது ஆகஸ்டு மாதம் 28-ம் தேதி காலை 4.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அடியிற்கையொப்பமிட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4·15 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்த டெபாசிட் ரூ. 1,000 கட்ட வேண்டும். ஒப்பந்தப் பாரம் முதலியன ரூ. 2 விற்பனை வரி 3½ சதம் கட்டி மன்ற பொறியாளரிடமிருந்து 26-8-1972-ம் தேதி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வி. பிருதிவி,
நகராட்சி சுகாதார அதிகாரி
ஆணையர் பொறுப்பு,
இராஜபாளையம்.

(த. 8)

தூத்துக்குடி நகராட்சி

தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமான 10 டன் ஆவலிங் பார்போர்டு மெஷல் ரோடு ரோலருக்குத் தேவையான உதிரி சாமான்கள் சப்ளை செய்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் 28-8-1972 மாலை 4 மணிவரை நகரமன்ற ஆணையர் அவர்கள் நேர்முக அதிகாரியினால் பெறப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி ஒவ்வொன்றும் ரூ. 300 முன்வைப்புத் தொகையாக நகராட்சி கருவூலத்தில் செலுத்தியோ அல்லது டிமாண்ட் டிராப்ட் எடுத்தோ அத்தாட்சியுடன் அனுப்பவேண்டும். இதர விவரங்களுக்கு பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது விண்ணப்பித்தோ தெரிந்து கொள்ளலாம்.

சி. சங்கரலிங்கம்,
ஆணையர்.

(த. 6)

அறிக்கை

கல்லூரிக் கல்வித்துறை (தமிழ்நாடு) சென்னை-6

மத்திய அரசு வழங்கும் தேசியக் கடன் படிப்பு உதவித் தொகைத் திட்டம் 1972–73-ஆம் ஆண்டு.

மத்திய அரசு 1963–64-ஆம் ஆண்டிலிருந்து தேசியக்கடன் படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கலை, விஞ்ஞானம், வாணிகம், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், வேளாண்மை, சட்டம், கல்வி, ஆகியவற்றில் முறையான முழுநேரப் படிப்பை அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் பயின்றுவரும் மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி பெறும் பொருட்டு இவ்வுதவித் தொகையை வழங்கி வருகிறது. இவ்வாண்டும் (1972–73) வழக்கம்போல் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிய பங்குக்கு ஏற்ப பள்ளி, கல்லூரித் தேர்வுகளான (தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களால் அல்லது அரசு தேர்வு மன்றங்களால் நடத்தப்படும்) மெட்ரிகுலேஷன், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, ஆங்கிலோ இந்தியன் உயர்நிலைப் பள்ளித் தேர்வு, இளநிலை தொழில்நுட்பப் பள்ளித் தேர்வு, புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., பி.ஈ., எம்.பி.பி.எஸ்., எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்., அல்லது இவைகட்கு இணையான தொழில்நுட்ப, தொழிற்கல்வி தேர்வுகளில் 50 சதவிகிதம் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவ மாணவிகள் தகுதியுள்ளவர்களாக கருதப்படுவார்கள்.

இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் ஆண்டு வருமானமும் அவர் தம் பெற்றோர்களின் ஆண்டு வருமானமும் சேர்ந்து ரூ. 6,000 (ரூபாய் ஆறாயிரம்)-க்கு மேல் இருக்கக்கூடாது.

முழு நேரப் பணியாளராயிருந்தும் ஊதியம் பெறாமல் விடுப்பில் இருந்து பயிலும் மாணவர்களும், ஊதியத்தோடு கூடிய விடுப்பிலிருந்து கொண்டு பயிலும் ஆசிரியர்களும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்களே.

பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகளின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 (ஆறாயிரத்திற்கு) மேலிருப்பினும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்தவர்களே.

மாலை வேளைக் கல்லூரிகளிலும் கடிதப் போக்குவரத்து மூலம் நடக்கும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் தேசியக் கடன் படிப்பு உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

வேறுவகையான படிப்பு உதவித் தொகை பெறும் மாணவர்களும் (சம்பளச் சலுகையைத் தவிர) தேசியக் கடன் படிப்பு உதவித் தொகையில் பாதிக்குமேல் வேறு நிதி உதவிகள் பெறும் மாணவர்களும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி இல்லாதவர்களாவர்.

வழங்கப்படும் கடன் படிப்பு உதவித் தொகை பின்வருமாறு :—

(அ) பட்டப்படிப்பின் முன்நிலை டிப்ளமோ படிப்புகட்கு (பொறியியல், தொழில் நுட்பம், மருத்துவம், இவைகளின் பட்டப்படிப்பின் முன்நிலை தவிர) ..	ஆண்டுக்கு ரூ. 720
(ஆ) பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம் இவைகளில் பட்டப்படிப்பில் முன்நிலை படிப்புகட்கு	ஆண்டுக்கு ரூ. 970.
(இ) எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்., மற்றும் இவற்றுக்கு இணையான படிப்புகட்கு ..	ஆண்டுக்கு ரூ. 900.
(ஈ) பொறியியல், தொழில்நுட்பம், பட்டப் படிப்புகளின் பின்நிலை படிப்புகட்கு ..	ஆண்டுக்கு ரூ. 1,150.
(உ) பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம் அல்லாத பிற பாடங்களில் பெறும் பிஎச்.டி., டி.எஸ்ஸி., படிப்புகட்கு	ஆண்டுக்கு ரூ. 1,500.
(ஊ) பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம் ஆகியவற்றில் பிஎச்.டி., டி.எஸ்ஸி. மருத்துவத்தில் எம்.டி., எம்.எஸ்ஸி. படிப்புகட்கு	ஆண்டுக்கு ரூ. 1,750.

4. மாணவர் தம் படிப்பை முடித்துக்கொண்டு சம்பாதிக்கத் துவங்கிய ஓராண்டுக்குப் பிறகோ, அல்லது தம் படிப்பை முடித்து மூன்றாண்டுகள் கழித்தோ, அவர் பெற்ற கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இத்திட்டத்தில் வழங்கப்படும் கடனுக்கு எவ்வித வட்டியும் இல்லை. எனினும் குறித்த காலத்தில் திருப்பிக்கட்டாத தொகைக்கு 6 சதவிகித வட்டி வசூலிக்கப்படும். ஆசிரியப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும் பெற்ற கடனைத் திருப்பிக் கட்ட வேண்டியதில்லை. அவர்களுக்கு மட்டும் தவிர்ப்பு கொடுக்கப்படும்.

5. இதுபற்றிய விண்ணப்பங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்தாள்களை பூர்த்தி செய்து உரிய கல்லூரி முதல்வர்களின் வழியாக கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு 31-8-1972-க்குள் அனுப்பிவிட வேண்டும்.

வி. டி. டைட்டஸ்,
கல்லூரிக் கல்வி இயக்குநர்.

(த. 17)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 28—8—1972 (திங்கட்கிழமை) பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

திருப்பத்தூர் பஞ்சாயத்து (இராமநாதபுர மாவட்டம்) குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை—தலைமை வேலைகள்—நீரூறுவு வடியடுக்கு அமைத்து 15 அங்குல விட்டமுள்ள சுட்ட மண் குழாய் கொண்டு பதித்தல் சம்பந்தமாக.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 3,825 (ரூபாய் மூவாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து மட்டும்).

இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்), காரைக்குடி, (செயற்கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். காசோலை ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூபாய் பத்தும் புதுக்காசுகள் முப்பத்தைந்தும் (விற்பனைவரி உள்பட).

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற்கோட்டம்), காரைக்குடி, அவர்களிடமிருந்து 42, கல்லூரி சாலை, காரைக்குடி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 25—8—1972 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 42)

தடிகள் ஏலம்

வனத்துறை

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்.
இடம் : அரசாங்கத் தடிகள் விற்பனை மண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும் : 28 & 29—8—1972 முற்பகல் 9.00 மணி.
அளவு : ஏறத்தாழ 1,000 கனமீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

சி. என். சுந்தரம்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தெண்கோட்டம்

(த. 37)

அறிவிப்பு

தொழில் வணிகத் துறை

வணிகத் தொழிற்பேட்டைகள்—படித்து வேலையில்லாமல் இருப்பவர்குரிய திட்டம்

அடித்தளத்தில் தொழில் செய்யவும் மேல் தளத்தில (முதல் மாடி) குடியிருக்கவும் தகுதி வாய்ந்த அலகுகள் கீழ்க்காணும் தொழிற்பேட்டைகளில் குறைந்த வாடகைக்கு "சர்வீஸிங்" பணி செய்ய நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தளமும் 264 ச. அடி. (25 ச. மீ.) பரப்பளவு கொண்டிருக்கும்.

தொழிற்பேட்டையின் பெயர். (1)	இடம். (2)	கட்டவிருக்கும் அலகுகள். (3)	அணுகப்படவேண்டிய அலுவலர்களும் தொலைபேசி எண்ணும். (4)
காட்பாடி	காங்கேயநல்லூர்	2	ம. து. இ. வேலூர்-6. தொ. பே. எண 512
சேலம்	செட்டியூர்	2	ம. து. இ. சேலம். தொ. பே. எண் 3634.
திருச்சிராப்பள்ளி	அரியமங்கலம்	2	ம. து. இ. திருச்சி-1. தொ. பே. எண் 3823
தஞ்சாவூர்	நாஞ்சிக்கோட்டைச் சாலை ..	2	ம. து. இ. திருச்சி-1. தொ. பே. எண் 3823.
மதுரை-7	கே. புதூர்	2	ம. து. இ. மதுரை-7. தொ பே. எண் 60521
காரைக்குடி	அமராவதிபுதூர்	2	ம. து. இ. மதுரை-7. தொ. பே. எண் 60521
பேட்டை	பேட்டை	2	ம. து. இ. திருநெல்வேலி-4. தொ. பே. எண 620.
நாகர்கோயில்	கோணம்	2	ம. து. இ. திருநெல்வேலி-4. தொ. பே. எண 620.
அம்பத்தூர்	அம்பத்தூர்	2	நிருவாக அலுவலர், அம்பத்தூர், தொ. பே. எண் 60521.
விருத்தாசலம்	விருத்தாசலம்	2	நிருவாக அலுவலர், விருத்தாசலம், தொ. பே. எண். 120.
வியாசர்பாடி	வியாசர்பாடி	2	நிருவாக அலுவலர், கூட்டுறவு தொழிற்பேட்டை, வியாசர்பாடி, சென்னை-9. தொ. பே. எண். 30419.

பள்ளி இறுதிப் படிப்பில் தேறியவர்களும், மாநிலத்தில் அதற்கு சமமான வேறு தேர்வுகளில் தேறியவர்களும் தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்று தேறியவர்களும் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ளவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பங்களில் மண்டலத் துணை அலுவலர்களுக்கும், நிருவாக அலுவலர்களுக்கும், திட்ட அறிக்கையுடனும் ரூபாய் 500-ஐ வருவாய் வைப்புத் தொகையில் கட்டிய செலுத்துச் சீட்டுடனும் 28—8—1972-க்குள் விண்ணப்பிக்கலாம். இந்த வருவாய் வைப்புத் தொகையை அலகு ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் திருப்பித்தரப்படும். மேலும் விளக்கமான தகவல்களுக்கு அந்தந்த மண்டல துணை இயக்குநர்களையும், நிருவாக அலுவலர்களையும் அணுகவும்.

(த. 22)

தொழில் வணிக இயக்குநர்.

தொழில் வணிகத் துறை

நன்கு நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலைக்கான கட்டடங்கள் (அலகுகள்) கீழ்க்காணும் தொழிற்பேட்டைகளில் குறைந்த மாத வாடகையில் சிறு தொழில் நிறுவனங்களுக்காக உள்ளன.

தொழிற்பேட்டையின் பெயர். (1)	இடம். (2)	அலகுகள் எண்ணிக்கை. (3)	பரப்பளவு ச. மீ. (4)	அணுகப்படவேண்டிய அலுவலர்களும் தொலைபேசி எண்ணும். (5)
புதுக்கோட்டை	புதுக்கோட்டை-2	2	259	ம. து. இ. தொழில் வணிகத்துறை, திருச்சி-1. தொ. பே. எண். 3823.
டி	டி	2	158	டி
நாகப்பட்டினம்	நாகப்பட்டினம் ..	1†	243	டி
தஞ்சாவூர்	நாஞ்சிக்கோட்டை ..	4	98	டி
ஓசூர்	ஓசூர்	4*	98	ம. து. இ. தொழில் வணிகத்துறை, சேலம்-1. தொ. பே. எண். 3634.
சேலம்	ரெட்டியூர்	2*	98	டி
டி	டி	2	259	டி
டி	டி	2	158	டி
மேட்டூர்	மேட்டூர் அணை	4	98	டி
ஈரோடு	ஈரோடு	4	98	டி
திண்டுக்கல்	திண்டுக்கல்	4	98	ம. து. இ. தொழில் வணிகத்துறை, மதுரை-1. தொ. பே. எண. 23621.
பேட்டை	பேட்டை	4	98	ம. து. இ. தொழில் வணிகத்துறை, திருநெல்வேலி-4, தொ. பே. எண. 620.
காட்பாடி	காங்கேயநல்லூர் ..	2*	127	ம. து. இ. தொழில் வணிகத்துறை, வேலூர்-6.
டி	டி	2*	173	தொ. பே. எண். 512. டி

* தற்போது கட்டப்பட்டு வருகிறது.

† தற்போது உள்ளது.

விருப்பமுள்ள சிறுதொழில் நடத்துபவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பங்களில், திட்ட அறிக்கையுடனும், ரூ. 500-ஐ வருவாய் வைப்புத் தொகையில் கட்டிய செலுத்துச் சீட்டுடனும் மண்டலத் துணை இயக்குநருக்கு விண்ணப்பிக்கலாம். இந்த வருவாய் வைப்புத் தொகையை அலகு ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் திருப்பித் தரப்படும். மேலும் தகவல்களுக்கு அந்தந்த மண்டல துணை இயக்குநர்களை அணுகவும்.

தொழில் வணிக இயக்குநர்.

(த.32)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், கீழ்க்காணும் வேலைகட்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர்.பி.டி. இராஜன்சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம்; செயல்வட்ட மேற்பார்வைப் பொறியாளர், அவர்களால் 30—8—1972 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும். (1)	ஒப்பந்த வகை. (2)	முன் வைப்புத் தொகை. (3)	வேலையினை முடிக்கும் காலம். (4)	ஒப்பந்தப் படிவ விலை. (5)
		ரூ.		ரூ.
1 கொடைக்கானல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—25,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த் தாங்கியினைக் கட்டுதல்—பகுதி 1.	மொத்த தொகை.	260	மூன்று மாதங்கள்.	5·18 (விற்பனை வரி உட்பட, திருப்பித் தரப்படமாட்டாது)
2 கொடைக்கானல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—4,50,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தாங்கியினைக் கட்டுதல்—பகுதி 2.	டி	1,960	ஆறு மாதங்கள்.	10·35 (விற்பனை வரி உட்பட, திருப்பித் வரப் பட மாட்டாது).
3 கொடைக்கானல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—3,50,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தாங்கியினைக் கட்டுதல்—பகுதி 2.	டி	1,620	டி	டி

முன் வைப்புத் தொகை—இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு மூலம் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) செயற் கோட்டம், மதுரை-2 அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு, அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். வேறு வடிவில் இத்தொகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்திசாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 28—8—1972 திங்கள் மாலை 5·00 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயற் வட்டம், மதுரை-2.

(த. 50)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 5—9—1972 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—மேலூர் குடிநீர் திட்டம்—இரண்டாம் நிலை—பகிர்வு முறைக்கென ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட், பி.வி.சி. குழாய்களையும் தனி உறுப்புக்களையும் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை.—கே. 2.

முன்வைப்புத் தொகை.—ரூ. 17,000 (ரூபாய் ஒரு ஆயிரத்து எழு நூறு மட்டும்). இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற் கோட்டம்) மதுரை அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும். இத்தொகை வேறு வடிவில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட). ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற்கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 2—9—1972 மாலை 5·00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், செயல் வட்டம், மதுரை-2

(த. 44)

ஒப்பந்தப் புள்ளி

மின்வாரியம் எண்ணூர் அனல் மின்திட்டம்

குறிப்பு எண் AEP 102.

1. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் உறையில் Ennore Thermal Scheme, supply of seamless steel tubes. AEP 102 எனவும், மற்றும் ஒப்பந்ததாரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க் கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 2-30 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருட்கள், குறிப்பு எண், முன்பணம், முடிவு தேதி முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

S. No.	Description	Specn No.	E.M.D. Payable	Cost of tender	Due Date
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	seamless steel tubes and specials	AEP. 102	Rs. 5,000	Rs. 5	25-8-72

3. ஒப்பந்தப் பத்திரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து 1-8-1972 தேதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. துறையினரைச் சார்ந்த நமூனாக்களிலில்லாத ஒப்பந்தங்களும் முடிவுத் தேதியிலும், நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். எதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,

தொலைபேசி எண் : 59556
(5 Lines).
தந்தி—ENTERMAL

எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

(த. 52)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண்.17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30—8—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ, அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—ஒட்டன்சத்திரம் குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—நீர் கொணரும் குழாய்ப் போக்கிற்கென வார்ப்பிரும்பு மற்றும் உறுதி பெறு கற்காரைக் குழாய்களையும், தனி உறுப்புகளையும் பதித்து இணைத்தல்.

ஒப்பந்தவகை .. .. மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை .. .. ரூ. 2,380.

(இத்தொகை எதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயல் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். இத்தொகை வேறு வடிவில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

வேலையினை முடிப்பதற்குரிய காலம் அளவு. ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை .. ரூ.10·35. (விற்பனைவரி உட்பட—திருப்பித்தரப்பட மாட்டாது).

ஒப்பந்த படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை-2 செயற்கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 28—8—1972 திங்கட்கிழமை மாலை 5·00 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால்வாரியம்,
செயல்வட்டம், மதுரை-2.

(த. 51)

கடையநல்லூர் நகராட்சி

அடியிற் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட செடியூல் ஒப்பந்தங்கள் ஆணையாளர் அவர்களால் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தங்கள் தனைதாவேசுகள் ரூ. 5.20 (ஒவ்வொரு வேலைக்கும்) இந்த நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

வேலை விபரம்.	மதிப்பீடு.	பொறுப்புத் தொகை.
1. இருஞ்சுப்புரம் ரயில்வே பீடர் ரோடு அபிவிருத்தி செய்து தார் ரோடு போடுதல்.	30,000	750
2. மேலக்கடையநல்லூர் மலம்பாட்டை ரோடு அபிவிருத்தி செய்து தார் ரோடு போடுதல்.	36,000	900

பழ. நடேசன், எம்.ஏ.,
ஆணையர்.

(த. 55)

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

9/10, மூர் தெரு, சென்னை-1.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிருவாக இயக்குநரால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு 25–8–1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலை விவரம்.	முன் வைப்புத் தொகை.	ஒப்பந்த விவரங்களின் விலை.
	ரூ.	ரூ.
1. திருநெல்வேலியில் 2,200 டன்கொள்ளளவு கொண்ட இரண்டாவது சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச்சுற்றி சாலை அமைத்தல்.	6,550	25·92
2. வேலூரில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 400 டன் கொள்ளளவு கொண்ட வெல்ல சேமிப்புக் கிடங்கு கட்டுதல் மற்றும் அதைச்சுற்றி சாலை அமைத்தல்.	1,000	15·55
3. திருநெல்வேலியில் கட்டவிருக்கும் இரண்டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல் (Supply and erection of angle iron trusses and other accessories.	2,375	25·92
4. வேலூரில் (வட ஆர்க்காடு) கட்டவிருக்கும் வெல்ல சேமிப்பு கிடங்கிற்குத் தேவையான இரும்பு உத்தரம் மற்றும் இதர சாமான்கள் வழங்குதல்) Supply and erection of angle iron trusses and other accessories.	180	10·37

வேலை பற்றிய முழு விவரங்களை இந்த அலுவலகத்திலிருந்து 7–8–1972-க்குப் பிறகு எல்லா வேலை நாட்களிலும் நேரிலோ, தபால் மூலமோ குறிப்பிட்ட தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. எம். வொய்ட், ஐ.ஏ.எஸ்.,
திருவாக இயக்குநர்.

(த. 48)

ஏல விற்பனை

கண்டனம் செய்யப்பட்ட நீர்த்தாங்கி வண்டி எம்.எஸ்.எக்ஸ். 326 (ஸ்டுடிபேக்கர் 1953 மாடல் வண்டி), சென்னை, எழும்பூர், மார்ஷல்ஸ் சாலை, 17–ஏ, எண்ணில் உள்ள தமிழ்நாடு தீயணைப்புத்துறை தலைமை அலுவலக சுற்றுச்சுவரினுள் 7—9—1972 அன்று காலை 11-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். இவ்வண்டியை மேற்படி விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை, நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். அமிர்தலிங்கம்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர், சென்னை மாநகர்.

(த. 46)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித்துறை

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
திருச்சி வட்டம், தபால் பெட்டி எண் 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப் பணித்துறை. திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—திருச்சி மாவட்டம், பெரியார் ஈ.வெ.ரா அரசினர் கலைக் கல்லூரியில் பாட அரைகளுக்கான நிரந்திரக் கட்டடம் (புதிய பிளாக்) கட்டுதல்.
2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்—30—8—1972 மாலை 3-00. மணி.
3. பிணைப் பணத்தொகை—ரூ. 9,000 (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்).
4. ஒப்பந்த முறை—மொத்தத்தொகை.
5. முடிக்க வேண்டிய காலம்.—8 மாதங்கள் (எட்டு மாதங்கள்).
6. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7. விற்பனை வரி—ரூ. 0·88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்.)
8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.—10—8—1972.
9. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்னால் ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.—30—8—1972 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் XXXVII Public works State Revenue-Miscellaneous, XII Sales tax b. receipts under the State Sales Tax Act—General Sales tax என்ற தலைப்புக்களின் கீழ் ஒரே சலானில் செலுத்தி மேற்படி சலானை ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கண்காணிப்புப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி மாவட்ட கண்காணிப்புப்
பொறியாளர்.

(த. 45)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர்.பி.டி இராசன் சாலை, மதுரை–2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 1972–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2–ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்று பிறபகல் 3–30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—கீழக்கரை குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—மண்டலம் 2—வார்ப்பிரும்பு, ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் பி.வி.சி. குழாய்களையும் தனி உறுப்புக்களையும் பகிர்வு முறைக்கென பதித்து இணைத்தல்.

ஒப்பந்த வகை.—கே. 2.

முன்வைப்புத் தொகை.—ரூ. 1,630 (ரூபாய் ஒரு ஆயிரத்து அறுநூற்று முப்பது மட்டும்).

இத்தொகை எதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால வாரியம் செயற்கோட்டம்) அருப்புக்கோட்டை அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை.—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்) நாடு குடிநீர் வடிகால் வாரியம், அருப்புக்கோட்டை செயற் கோட்டம் அவர்களிடமிருந்து 18–8–1, நகராட்சி பயணிகள் விடுதி சாலை, அருப்புக் கோட்டை என்றமுகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 1972–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5–00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் முன்னிட்டும் திரும்பத் தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை–2.

(த. 43)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வைகைச் சீரமைப்புத் திட்டம்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும். அவர்கள் சார்பிலும், கீழ்க் காணும் வேலைக்காக கே. 2 ஒப்பந்த வகையில், அரக்கு முத்திரையிடப் பட்ட ஒப்பந்தங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மதுரை-2ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் 30–8–1972 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், அதே நாள் மாலை 4-00 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்.	வேலையின் பெயர்.	முன் வைப்புத் தொகை
		ரூ.
1	மதுரை மாவட்டம், மதுரை வட்டம் விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டருக்கு இடது புறம் தலை மதகு கட்டுதல்.	7,500
2	மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 10, 11, 12 கட்டுதல்.	12,000
3	மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 13, 14, 15 கட்டுதல்.	12,000
4	மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே பகுதிகள் 16, 17, 18 கட்டுதல்.	12, 000

ஒவ்வொரு வேலைக்கான, ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், மற்றும் பத்திரங்களின் விலையான ரூ. 20 ஐ (இருபது மட்டும்) P·W. III O.R என்ற தலைப்பின் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, வைகைச் சீரமைப்புக் கோட்டம், மதுரை-20 அவர்கள் வரவில் சேரும்படியும், மேற்கண்ட ஒப்பந்தப்பத்திரங்களின் விலைக்கான விற்பனை வரி ரூ. 0.75-ஐ XII Sales Tax (d) Misc. என்ற தலைப்பிலும், தனித்தனியே அரசுக் கருவூலங்களில் செலுத்தி, அதற்கான ரசீதுகளைக் கொடுத்து, மதுரை வட்ட (பொதுப்பணித்துறை) மேற்பார்வைப் பொறியாளர், மதுரை-2 அலுவலகத்தில் 21–8–1972 தேதி முதல் 28-8-1972ம் தேதிக்குள், மேற்கண்ட ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத் தொகையும், கருவூலசீட்டு வடிவிலோ, அல்லது செட்யூல்ட் வங்கிகளின் "காலரசீது டெபாசிட்டு' வகையிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் "டிமாண்ட் டிராப்டு" களாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடுகள் குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

வ. துரைராஜ்,
மேற்பார்வைப் பொறியாளர், (பொதுப் பணித்துறை) (கூடுதல் பொறுப்பில்) மதுரை வட்டம், மதுரை-2.

(த. 49)

சின்கோனாத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ் ஆனைமலைஸ், (வடக்கு மற்றும் தெற்கு)-ல், கீழ்க்கண்ட வைகளைக் கட்டுவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் மொத்த மதிப்பு ரூ. 96,760.

வரிசை எண்ணும் பெயர் மற்றும் கட்டும் இடம்.	கட்டும் எண்ணிக்கை.	மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
		ரூபாய்.	ரூபாய்.
		(ஒவ்வொன்றுக்கும்.)	(ஒவ்வொரு குடியிருப்புக்கும்).
1. அரசு குயினைன் (Quinine) பேக்டரி, ஆனைமலைஸ் அலுவலர் குடியிருப்புக்கள்.	4	4,725	120
2. ஆனைமலைஸ் (தெற்கு), அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ் 4 கோட்டத்தில் அலுவலர் குடியிருப்பு.	4	4,900	125
3. ஆனைமலைஸ் (தெற்கு), அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ் 7 கோட்டத்தில் அலுவலர் குடியிருப்பு.	2	4,950	125
		(ஒவ்வொரு பிளாக்கிற்கும்).	(ஒவ்வொரு பிளாக்கிற்கும்).
4. ஆனைமலைஸ் (தெற்கு மற்றும் வடக்கு) அரசு சின்கோனா அக்யூ (Agua) டைப் லெட்ரின்கள்.	60 பிளாக்குகள்.	800	20

ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 31–8–1972 மாலை 3-00 மணி. அதே நாள் மாலை 3·30 மணிக்குக் கீழ்க் கையொப்பமிட்டவரால் அல்லது அரசுப் பதிவு பெற்ற உதவியாளரால் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகள் விளக்க அறிவிப்புப் பட்டியல் கீழ்க்கண்ட அலுவலர்களிடம் பெறலாம்.

1. மேனுபாக்டரிங் கெமிஸ்ட், அரசு குயினைன் பேக்டரி, சின்கோனா அஞ்சல், (வழி) வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்.

2. மேற்பார்வையாளர், அரசு சின்கோனா பிளான் டேசன்ஸ் ஆனைமலைஸ் (வடக்கு), சின்கோனா அஞ்சல், (வழி), வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்.

3. மேற்பார்வையாளர், அரசு சின்கோனா பிளான்டேசன்ஸ், ஆனைமலைஸ், (தெற்கு) பெரிய கள்ளார் அஞ்சல், (வழி), வால்பாறை கோயம்புத்தூர் மாவட்டம், ரூ. 2.07 (விற்பனை வரி உட்பட) பணமாக அல்லது மணியார்டர் மூலமாகச் செலுத்திப் பெறலாம்.

எம். மோகன்ராவ்,
இயக்குநர்,
சின்கோனாத் துறை,
அஞ்சல்பெட்டி எண். 6,
உதகமண்டலம்.

(த. 10)

வேளாண்மைத் துறை

தமிழ்நாடு அரசின் சார்பாகக் கீழ்க்கண்ட வீணான டிராக்டர்கள் டிஸ்மென்டில்டு (Diamantled) நிலையில் விற்பதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. W4 இன்டர் நேசனல் டிராக்டர்—M.D.R. 1799.

2. W4 இன்டர் நேசனல் டிராக்டர்—M.D.C. 6695.

3. ஜான் டீர் டிராக்டர்—M.S.Z. 162.

4. T 6 இன்டர் நேசனல் புள்டோசர்—M.D.F. 5036.

ஒப்பந்தப்பத்திரங்கள் விற்பதற்கான கடைசி நாள்—26–8–1972.
ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்வதற்கான நாள்—29–8–1972.

ஒப்பந்தப்படிவங்கள் இந்த அலுவலகத்தில் ரூ. 3 —விற்பனைவரி 3½ சதவிகிதம் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

உதவி வேளாண்மைப் பொறியாளர்,
திருநெல்வேலி-7.

(த. 14)

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி

கன்சர்வேன்சி லாரியாகப் பயன்படுத்துவதற்காக, ஒப்பன் டைப் லாரி பாடியுடன் ஓட்டுநரின் கேபின் மற்றும் டிராப்சைடுகள் ஃபர்கோ (109 பி. 6) 165அங்குலம் W. B. Chassis கட்டுவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கையொப்பமிட்டவரால் 28–8–1972 மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டுத் தொகை ரூ. 425 இணைத்து அனுப்ப வேண்டும். மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் விண்ணப்பக் கடிதம் எழுதிப் பெறலாம்.

பி. சண்முகம்,
ஆணையர்.
ஸ்ரீவில்லிபுத்தூர்

(த. 1).

பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்

"போக்குவரத்து இல்லம்". அண்ணாசாலை, சென்னை-2.

சாமான்கள் (Tools) வழங்குவதற்காகக் கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிட்ட கொட்டேசன்கள் 5–9–1972 மாலை 2-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி விளக்க நிபந்தனைகள் இதர விவரங்கள் பர்ச்சஸ் அலுவலர் பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2 அவர்களிடம் எல்லா வேலை நாட்களிலும் இலவசமாகப் பெறலாம்.

மெட்டீரியல்ஸ் மேலாளர்,
பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட்,
சென்னை-2.

(த. 13)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—மீனவர்களுக்காக தஞ்சை ஜில்லா அம்மாப்பட்டணம் கிராமத்தில் 70 வீடுகள் கட்டுதல்.

மேற்படி வேலைக்கான முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 30—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

2. பிணைப்பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்)—ரூ. 5,000.

3. ஒப்பந்த பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலத்தில்) " பொ.ப. செலுத்துத் தொகை " மற்றைய செலுத்துத் தொகை " எனும் தலைப்பில் செயற் பொறியாளர், பட்டுக்கோட்டை கோட்டம் பட்டுக்கோட்டை அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும்.—ரூ.30·.

4. விற்பனை வரி, அரசினர் கருவூலத்தில் "விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.—ரூ. 1·05.

5. கால அளவு.—பத்து மாதங்கள்.

6. ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் நாள்.—10—8—1972.

அ. சேஷாத்ரி,
மேற்பார்வைப் பொறியாளர் (பொறுப்பு)
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.28)

குடிசை மாற்று வாரியம்

கோட்டம் எண் V.

நந்தனம், சென்னை–35.

கீழ்க்கண்ட வேலைக்காக, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 21—8—1972 மாலை 3-00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—விசாலாட்சி அம்மாள் எஸ்டேட்டில் 217/70 டைப் டிசைன்படி ஒன்றில் 32 குடியிருப்புகள் உள்ள நான்கு அடுக்கு 2 பிளாக்குகள் மற்றும் ஒன்றில் 8 குடியிருப்புகள் உள்ள நான்கு அடுக்கு 1 பிளாக்கு (பிளாக்கு எண்: 4 எல். 1, எல். 2 & பி. 1) கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் :—மொத்தத் தொகை.
வேலையின் சுமார் மதிப்பு :—ரூ. 3,80,000.
கட்டுத் தொகை :—ரூ. 5,700.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 10, விற்பனை வரி 3½ சதவிகிதம் (திருப்பித் தரப்படமாட்டாது) ரூ. 10·37 ஒப்பந்த வடிவம் மற்றவைகள் நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கோட்டம் எண், நந்தனம், சென்னை 35-ல் 10—8—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 10-00 மணி முதல் மாலை 2-00 மணிவரை ரிசிப்டட் சலானைக் கொடுத்துப் பெறலாம்.

என். பாலசுப்பிரமணியம்,
நிருவாகப் பொறியாளர்,
குடிசை மாற்று வாரியம்,
கோட்டம் V.

(த. 38)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—ஹோசூர், தருமபுரி மாவட்டம், மாவட்ட லிவ் ஸ்டாக் பண்ணையில் கோழி வளர்ப்புக் (Poultry) கொட்டகைகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சேலம், தருமபுரி மாவட்டம், சேலம்–4 அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை சலான் வடிவிலோ அல்லது தேசியச் சேமிப்பு சர்டிபிகேட் வடிவிலோ அல்லது செட்யூல்டுபேங்க்ஸ் வடிவிலோ வங்கிகளின் கால் ரசிப்ட்ஸ் வடிவிலோ செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் அல்லது தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்கள் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும்—ரூ. 3,550.

3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் P.W. Remittances—III Other Remittances என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, தருமபுரிக் கோட்டம், தருமபுரி அவர்தம் கணக்கில் செலுத்தப்படவேண்டும்—ரூ. 20.00.

4. விற்பனை வரி XII Sales Tax (d) miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்—ரூ. 0·70.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித் துறை,சேலம், தருமபுரி வட்டம், சேலம்-4-ல் விற்பனைக்குக் கிடைக்கும் நாள்: 14—8—1972 முதல் 28—8—1972 வரை.

(மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் மற்றும் மாநில மின் வாரியப் பத்திரங்கள் உண்மை மதிப்பில் 25 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். கால் ரசிப்ட்ஸ் மற்றும் பிக்சட் டிபாசிட் ரசிப்டுகள் கட்டுத் தொகைக்காகக் கொடுக்கப்பட்டால் பணம் பெறப்பட்ட பின்னரே ஒப்பந்தப் புள்ளி உறுதி செய்யப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித் துறை,
சேலம்—தருமபுரி வட்டம்,
சேலம்-4.

(த. 27)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க் கண்ட விவரப்படி வழங்க, தலைமைப் பொறியாளர் அவர்களால், அவர்தம் அலுவலகத்தில் பொதுப் பணித் துறை கட்டடம், சேப்பாக்கம், சென்னை–5–ல் குறிப்பிடப்பட்ட வடிவத்திலான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 6 –9—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம் :—மொத்தத் தொகை.

வேலை விவரம் :—கிராம நீர் வழங்கு திட்டத்திற்குப் பல்வேறு வகையில் தண்ணீர் இறைக்கக்கூடிய உபகரணங்களுடன் சம்மெர்சிபில பம்பு செட்டுகள் வழங்குதல்.

கட்டுத் தொகை :—ரூ. 10,000 (டிமாண்டு ட்ராப்ட் அல்லது பாங்கு காரண்டி வடிவில் மட்டும்).

வேலை முடிக்கவேண்டிய காலம் :—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை :—ரூ. 10·35 செட் ஒன்றுக்கு (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கிராம நீர் வழங்கு திட்டம் (UNICEF) பி. 33 இட வடகிழக்குப் பிரிவு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி–18–ல் பத்திரங்கள் விலை பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் பத்திரங்கள் 1—8—1972 முதல் 4—9—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை—5.

(த. 40)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—உசிலம்பட்டியில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் 48 படுக்கைகள் கொண்ட வார்டுக்கான கட்டடம் நிர்மாணித்தல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம் மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—8—72 மாலை 3·00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு, மாலை 4-00 மணிக்கு திறக்கப்படும். 23—8—72 முதல் 28—8—72 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை
முன்வைப்புத் தொகை—ரூ. 5,080.
முடிக்கவேண்டிய காலம் —6 மாதங்கள் (ஆறு மாதங்கள)

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலைத்தொகை ரூ. 20-00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வு வங்கி ஆகியவற்றில் P. W. Remittancess—111 Other Remittances என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை கட்டடங்கள் கோட்டம், மதுரை என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0-75 (காசுகள் எழுபத்தைந்து மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வு வங்கியில் "XII Sales Tax (d) Miscellaneous" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன்வைப்புத் தொகையும் கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் கால் ரசிது டெபாசிட்டு வகையிலோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் டிமாண்ட் டிராப்டுகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வ. துரைராஜ்,
(கண்காணிப்புப் பொறியாளர் பொறுப்பு)
பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2

(த. 33)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க்கண்ட விவரப்படி வழங்க, தலைமைப் பொறியாளர் (குடிநீர்) வடிகால் வாரியம்) அவர்களால் அவர்தம் அலுவலக பொதுப்பணித் துறை கட்டடம், சேப்பாக்கம் சென்னை-5 ல் குறிப்பிடப்பட்ட படிவத்திலான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

வேலையின் விவரம்—கிராம நீர் வழங்கு திட்டத்தில் தண்ணீர்க் கிணறுகளுக்கு (ERW) அல்லது சீம்லெஸ் ஸ்டீல் கேசிங் பைப்புகள் 200 எம். எம். மற்றும் 150 எம். எம். நாமினல் விட்டமுள்ள பைப்புகள் வழங்குதல் (Supply and delivery)

கட்டுத் தொகை—ரூ. 20,000 டிமாண்டு டிராப்ட் அல்லது காரண்டி வடிவில் இருக்க வேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை—ரூ. 10.35 செட் ஒன்றுக்கு.

ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப்பொறியாளர், கிராம நீர் வழங்கு திட்டம் (UNICEF) பி. 33, வடகிழக்கு பிரிவு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-18-ல் ஒப்பந்தப்பத்திரங்கள் விலை பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் பத்திரங்கள் 7—8—1972 முதல் 10—9—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5.

(த. 39)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், சென்னை எண்ணூர் தெர்மல் ஸ்டேசனிலிருந்து வடக்கு பக்கிங்காம் கால்வாயில் 2/0 லிருந்து 9/5 வரை ஃப்ளட்பேங்ஸ் (Flood Banks) (Both left and right Banks) பார்மேசன் வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்டம் வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால், பொதுப்பணித் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, குறிப்பிடப்பட்ட படிவத்திலான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—கீழ்க்கண்ட அட்டவணைப்படி.

வேலையின் பெயர்.—எண்ணூர் தெர்மல் ஸ்டேசன் வடக்கு பக்கிங்காம் கால்வாய் 2/0 லிருந்து 9/5 வரை 150 சி.எஸ். அளவுள்ள ஃப்ளட் பேங்ஸ் (Flood Banks) உருவாக்குதல்.

வரிசை எண்.	எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனிலிருந்து மைல் அளவில்.	கட்டுத் தொகை.
(1)	(2)	(3)
		ரூ.
1	மைல் 2/0 முதல் 2/4 வரை	1,580
2	மைல் 2/4 முதல் 3/0 வரை	2,880
3	மைல் 3/0 முதல் 3/4 வரை	2,550
4	மைல் 3/4 முதல் 4/0 வரை	1,760
5	மைல் 4/0 முதல் 4/4 வரை	1,350
6	மைல் 4/4 முதல் 5/0 வரை	1,080
7	மைல் 5/0 முதல் 5/4 வரை	1,680
8	மைல் 5/4 முதல் 6/0 வரை	1,270
9	மைல் 6/0 முதல் 6/4 வரை	1,000
10	மைல் 6/4 முதல் 7/0 வரை	1,330
11	மைல் 7/0 முதல் 7/4 வரை	890
12	மைல் 7/4 முதல் 8/0 வரை	870
13	மைல் 8/0 முதல் 8/4 வரை	1,025
14	மைல் 8/4 முதல் 9/0 வரை	1,325
15	மைல் 9/0 முதல் 9/5 வரை	1,970

ஒப்பந்தப்பத்திரத்தின் விலை—ரூ. 10 அரசுக் கருவூலச் சலானில் (P.W.III.O.R·) என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கூவம் மேம்பாட்டு கோட்டம், சென்னை-5, அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

ரூபாய் 10.40 ஒவ்வொரு வகைக்கும் விற்பனைவரி உட்பட—விற்பனை வரி 0·40 காசு (XII. B. Sales Tax miscellaneous) என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—ஒவ்வொரு வகைக்கும் மூன்று மாதங்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள் கிடைக்க —10—8—1972 முதல் 20—8—1972 வரை.

ஒப்பந்தப்புள்ளி நாளும் நேரமும்—25—8—1972 மாலை 3-00 மணி வரை.

விளக்கமான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நிபந்தனைகள், ஒப்பந்தப் படிவம் மற்றும் இதர விவரங்களுக்கு கீழ் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த. 47)

கிருஷ்ணகிரி நகராட்சி

அடியிற்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ம் நாள் மாலை 3-00 மணி வரை ஆணையர் அவர்களால் நேரில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். மற்றும் இது சம்பந்தமான தகவல்களை அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரம்.—அலுவலகத்தின் பின்புறம் மற்றொரு அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

மதிப்பீடு.—ரூ. 8,000.

முன்வைப்புத் தொகை.—ரூ. 400.

துரை. குருநாதன். பி.ஏ.,பி.டி.,
ஆணையர்.

(த. 70).

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—திருவாரூரில் வாரச் சந்தைக் கட்டுதல்.

மேற்படி வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 14—9—1972 மாலை 3-00 மணி வரைப் பெற்றுக் கொள்ளப்படும்.

1. ஒப்பந்தவகை :—மொத்தத் தொகை.
2. பிணைப்பணம் :—ரூ. 4,700.
3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 30

(அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "பொதுப்பணித் துறை செலுத்துத் தொகை iii மற்றைய செலுத்துத் தொகை" என்னும் தலைப்பில், நிருவாகப் பொறியாளர், கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்—

4. விற்பனை வரி :—ரூ. 1.05

(அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "XIIவிற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு—மாநில விற்பனைவரிச் சட்டத்தின்கீழ்—பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்—ரூ.

5. கால அளவு :—எட்டு மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள் :—25—8—1972.

அ. சேஷாத்ரி,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொறுப்பு)
தஞ்சாவூர் வட்டம்,

(த. 71)

திருச்சிராப்பள்ளி நகராட்சி

இந்நகராட்சி கொடம்ல் மருந்தகத்திற்குத் தேவையான (Furnitures) கீழ்க்கண்ட மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் வழங்க அரக்கு முத்திரையிட்ட உறைகளில் ஒப்பந்த புள்ளிகள் 28-8-1972 தேதி மாலை 4 மணிக்குள் ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் விசாரித்து தெரிந்து கொள்ளலாம்.

1. ஸ்டீல் டிராயருள்ள மேஜை—1.
2. அரைக்கை டியூப்லர் இரும்பு நாற்காலி—1.
3. இரும்பு மடிப்பு நாற்காலிகள்—2.
4. ஸ்டீல் அலமாரி (Plain)—1.
78" × 36" × 19".

ஆணையர்.

(த. 34)

பொள்ளாட்சி நகராட்சி

நகர மன்ற லாரி எம்.டி.இ. 9278-க்கு மராமத்து வேலைகள் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28-8-1972 மாலை 4·00 மணி வரை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஏற்றுக் கொள்ளப்படும். அவை அன்று மாலை 4.30 மணி அளவில் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பாரங்கள் விண்ணப்பங்களின் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை. ரூ. 150.

பி. கே. முகமதுஅலி
ஆணையர்.

(த. 36)

வேலை வாய்ப்பு

சென்னை-32 கிண்டி, கிங் நிலையம், இயக்குநர் அவர்களால் இந் நிலையத்தில் ஆவி ஆக்குபவர் (கேஸ் மேக்கர்) வேலைக்காக கீழ்க்காணும் தகுதிகள் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதிகள்

1. வேலைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் பொழுது 25 (இருபத்தைந்து) வயது நிரம்பியவராக இருக்கலாகாது.

2. அரசுரிமைப் பெற்ற ஏதாவது ஒரு பள்ளியில் மூன்றும் படிவமோ அல்லது 8-ம் நிலையோ தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

3. குறைந்த அளவு 2 வருடமாவது வேலைக் கூடத்தில் பொருத்தும் (பிட்டர்) அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். இதில் 6 மாதம் ஆவி ஆக்கும் நிலையத்தில் (கேஸ் மேக்கிங் பிளாண்ட்) அனுபவம் பெற்றவராக இருத்தல் அவசியம்.

விண்ணப்பத்தோடு வயது, தகுதிகள் முதலியவற்றுக்கான சான்றேடுகளின் (டெஸ்டிமோனியல்ஸ்) சான்றிறுக்கப்பட்ட உண்மை நகல்களையும் "இயக்குநர், கிங் நிலையம், கிண்டி, சென்னை-32" என்ற முகவரிக்கு இவ்வறிப்பைத் தினத்தாள்களில் கண்ட நாளிலிருந்து பத்து (10) நாட்களுக்குள் வந்து சேருகின்ற வகையில் பதிவஞ்சலில் அனுப்ப வேண்டும்.

ஏற்கனவே, வேலையில் உள்ளவர்கள், அவரவர்களின் அலுவலர்களின் வாயிலாக விண்ணப்பம் அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே கிங் நிலைய இயக்குநரைப் பேட்டிக்காணத், தயார் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த ஆவி ஆக்குபவர்வேலை நிலையானவையோடு ரூ.140—3—155—4—115—5—210 என்ற ஊதிய விகிதத்தையும் பெற்றுள்ளன.

டாக்டர் சி. ஞானதேசிகன், எம்.டி.
இயக்குநர்.

(த.41.)

அறிவிப்பு

தொழில் வணிகத் துறை

தொழிற்பேட்டைகள்—தொழில் நுட்பக் கல்வி பயின்று வேலையற்று இருப்பவர்க்குரிய திட்டம்.

நன்றாக நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலைக்கான கட்டடங்கள் (அலகுகள்) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் குறைந்த மாத வாடகையில் சிறு தொழில் நிறுவனங்களுக்காக உள்ளன. அலகின் பரப்பளவு 1,000 ச. அடி. (90 ச.மீ. சுமாராக) பொறியியல் பட்டதாரிகள் பொறியியல் டிப்ளமா பெற்றவர்கள், மேலும் தொழிற் பயிற்சி நிலையங்களில் முழுமையாக பயிற்சி பெற்றவர்களும் மேற்படி அலகுகள் வேண்டி விண்ணப்பிக்கலாம்.

தகுதியுள்ளவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பங்களில் 28—8—1972க்குள் திட்ட அறிக்கையுடன் அம்பத்தூர் தொழிற்பேட்டை நிருவாகிக்கு விண்ணப்பிக்கவும். தவிர ரூ. 500-ஐ வருவாய் வைப்புத் தொகையில் கட்டிய செலுத்துச் சீட்டையும் விண்ணப்பத்தோடு இணைக்கவும். இந்த வருவாய் வைப்புத் தொகையை அலகு ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் திருப்பித் தரப்படும். மேலும் விளக்கமான தகவல்களுக்கு அம்பத்தூர் தொழிற்பேட்டை நிருவாகியை அணுகவும்.

தொழில் வணிக இயக்குநர்.

(த. 21)

கடையநல்லூர் நகராட்சி

அடியிற் குறிப்பிட்டுள்ள வேலைக்கு மூடி முத்திரையிட்ட செடியூல் ஒப்பந்தம் ஆணையர் அவர்களால் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 26ம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்துக் கொள்ளலாம். ஒப்பந்த தஸ்தாவேசுகள் ரூ. 5.20 இந்த நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

வேலை விவரம்.	மதிப்பீடு.	பொறுப்புத் தொகை.
	ரூ.	ரூ.
கடையநல்லூர் நகராட்சி பஸ் நிலையம் கட்டுமான வேலை.	90,000	2,250

பழ. நடேசன், எம். ஏ.,
ஆணையர்.

(த. 54)



தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்

சென்னை நகரின் நடுவண் அமைந்துள்ள நந்தனம் அடுக்கு மாளிகைக்கு (Tower Block) எதிரில் உள்ள கோட்டூர்புரத்தில், பண்படுத்தப்பட்ட மனைக்கட்டுகள் பொது ஏலத்தில் விற்கப்படும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சிறப்புமிக்க ஒரு குடியிருப்புத் திட்டத்தை கோட்டூர்புரத்தில் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. பண்படுத்தப்பட்ட மனைக்கட்டுகள் 27-8-1972 அன்று காலை 10 மணிக்கு பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

முக்கிய விவரங்கள்:

இட அமைப்பு (Location):- அடையாறு ஆற்றுக்கு தெற்குக் கரையில் அமைந்துள்ள கிண்டி பொறியியல் கல்லூரி, ஐ. ஐ. டி., மற்றும் அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகிலும், நந்தனம் அடுக்கு மாளிகைக்கு எதிர்ப்புறத்திலும் கோட்டூர்புரம் அமைந்துள்ளது. அடையாறு ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துக் கோட்டூர்புரத்தை, டர்ன்புல்ஸ் சாலை (Turn Bulls Road), மற்றும் சேமியர்ஸ் சாலையுடன் (Chamie'rs Road) இணைக்கும் திட்டத்திற்கான கருத்து ஆய்வில் உள்ளது கடைகள், கல்லூரிகள், அங்காடிகள் (Markets) பள்ளிகள் போன்ற பல வசதிகள் அருகில் உள்ளன.

பரப்பளவு: இந்தக் குடியிருப்பு ஏறத்தாழ 23 ஏக்கர் அளவுடையது.

வடிவமைப்பு (Design):- இத்திட்டத்தின் மனைக்கட்டு அமைப்பு (Lay-out), நகர அமைப்பாளர் மற்றும் கட்டிட வல்லுநர்கள் கொண்ட குழுவினரால் தயாரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு மனைக்கட்டும் ஒன்று, ஒன்றரை, மற்றும் இரண்டு மனை (Grounds) பரப்பளவில் கிடைக்கும்.

சிறப்பியல்புகள்: பாதுகாக்கப்பட்ட குடிநீர் பாதாளச் சாக்கடை, தெருவிளக்குகள் முதலிய வசதிகளுடன் இக் குடியிருப்பு அமையும். இயற்கைக் காட்சிகளுடன் இப்பகுதி அழகுற அமைந்திருக்கும்.

இக்குடியிருப்பில் குடியிருக்கும் மக்களின் தேவைகளுக்கான அங்காடிகள் (Shopping Centre) அமைக்கப்படும்.

ஏலத்தில் கலந்துகொள்வதற்கான குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வரவேற்பு அறையில் ரூ. 10/- (ரூபாய் பத்து மட்டும்) செலுத்தி நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது ரூ. 13/- (ரூபாய் பதின்மூன்று மட்டும்) செலுத்தி அஞ்சல் வழி பெற்றுக்கொள்ளலாம்.

இது குறித்து மேற்கொண்டு விவரங்கள் ஏதும் தேவையாயின், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் உதவிச் செயலாளரை (1) அணுகவும். அல்லது தன் முகவரி குறித்த 25 காசு அஞ்சல் தலையிட்ட உறை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு கிரௌண்டு (ரூ. 18,000/-) ரூபாய் பதினெட்டாயிரத்திற்கு மேல் வாங்குவதற்கு விருப்பமுடையவர்கள் மட்டுமே விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தி.வே.வாசுதேவன் I.A.S
தலைவர்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

36, அண்ணாசாலை,
சென்னை-35.

ஒப்பந்தப் புள்ளி

மதுரை வீட்டு வசதி யூனிட்

(தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்)

கீழ்க் கண்ட வேலைக்காக, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின்மீது குறிப்பிடப்பட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 7—9—1972 மாலை 3–00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் படிவம் மற்றவைகள், யூனிட் அலுவலகத்தில், 27—8—1972 முதல் 6—9—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11–00 மணி, முதல் மாலை 3–00 மணி வரை கீழ்க்கண்டவாறு தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளாலம்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.	வேலையின் சுமார் மதிப்பு.	கட்டுத் தொகை.
1. பர்மாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கு தனக்கன் குளத்தில் TD 178/70-ன் படி கேட்டெனரி ட்வின் வீடுகள் கட்டுதல்—	ரூ.	ரூ.	ரூ.
15 கட்டிடங்கள் பிரிவு 1-ன் கீழ்	10·00+ விற்பனை வரி.	94,500	1,230
15 ஷை 2-ன் கீழ்	ஷை	94,500	1,230
15 ஷை 3-ன் கீழ்		94,500	1,230
15 ஷை 4-ன் கீழ்	5·00+ விற்பனை வரி.	31,500	475

ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் 7—9—1972 மாலை 3–30 மணிக்கு நிருவாகப் பொறியாளர் நிருவாக அலுவலர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

வி. செல்வராஜ்,
நிருவாகப் பொறியாளர்,
நிருவாக அலுவலர்.

(த. 56)

அசோக் நகர் கோட்டம்

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

கீழ்க்கண்ட் வேலைக்காக, வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 15—9—1972 மாலை 3–00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த புள்ளிகள் அதே நாள் மாலை 3–30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	வேலையின் சுமார் மதிப்பு.	கட்டுத்தொகை.	ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் நாள்.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை.	ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கான கடைசி நாள்.
	ரூ.	ரூ.			
1. அடையாறு வடக்குப் பகுதி அருகில், கலைஞர் கருணாநிதி நகர் திட்டத்தில், சர்வே எண் 348—350-ல் உள்ள காஸ்வே மேற்குப் பகுதியில் மேடான பகுதிகளை வெட்டி அகற்றுதல்.	98,800	1,500	24—8—1972	ரூ. 10+ விற்பனை வரி மற்றும் சர்ச் சார்ஜ்.	15—9—1972

ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றவைகள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், அசோக் நகர் கோட்டம், வீட்டு வசதிவாரியம், 1-வது அவின்யூ, அசோக் நகர், சென்னை-83-ல் மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து எல்லா வேலை நாட்களிலும் காலை 11–00 மணி முதல் மாலை 3–00 மணி வரை பெறலாம்.

எ. அம்பாதாஸ்,
நிருவாகப் பொறியாளர்,
(அசோக் நகர்).

(த. 53)

பொதுப்பணித் துறை

சென்னை நகரம் பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டப் பொதுப்பணிக் கோட்டங்களில் உள்ள பழைய மற்றும் டிஸ்மேன்டில்டு மெட்டீரியல்ஸ்களை எடுத்துச்செல்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட ஏலதாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—9—1972 மாலை 3–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள் தங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கமிஷன் தொகையைக் குறிப்பிட வேண்டும். மற்றும் அவர்களுடைய ஏல அனுபவங்களைப்பற்றிப் போதுமான விவரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் காப்புத் தொகையாக ரூ. 7,500 செலுத்த வேண்டும். மற்றும் துறைக்கான படிவத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். ஒப்பந்தம் நவம்பர் 1 முதல் 1975 அக்டோபர் 31 முடிய உள்ள மூன்றாண்டுக் காலத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும்.

எழுதப்பட வேண்டிய ஒப்பந்தப்பத்திரங்களின் படிவங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அலுவலகத்தில் நேரில் பரிசீலித்துக்கொள்ள முடியும் அல்லது மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு விண்ணப்பக் கடிதத்தோடு ரூ. 2 அனுப்பிவைத்தும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்கள் எழுதிக்கேட்பதற்கான மனுக்கள் பெறுவதற்கோ அல்லது அலுவலகத்தில் நேரிடையாக ஒப்பந்தப் படிவங்களை பரிசீலிப்பதற்கோ கடைசிநாள் 5—9—1972. (எல்லா வேலை நாட்களிலும் இந்த அலுவலகத்தில்)

குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட்டமாட்டாது.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கற்பட்டு வட்டம்.

(த. 15)

பாளையங்கோட்டை நகராட்சி

நகராட்சி ஆணையர் அவர்களால் எட்டுத் தெருக்களுக்கு ரூ. 23,300 மதிப்பீட்டில் குடிநீர் சப்ளை மெயின் குழாய் பதிப்பதற்கு தேவைப்படும் 3" சிமிண்டு குழாய் அவைகளுக்கான ஜாயிண்டு, ஸ்லூயிஸ் வால்வு, டெயில்பீஸ், ரோடுபாக்ஸ் முதலிய இதர சம்பந்தப்பட்ட சாமான்கள் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் ரூ. 1,165 டிப்பாசிட் தொகையுடன் 29—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். முழு விவரங்கள் கொண்ட ஒப்பந்த அறிக்கை அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

க. ஜனார்த்தனம், எம்.ஏ.,
ஆணையர்.

(த. 66)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு மருத்துவ சர்வீஸில் ஒதுக்கப்பட்டுள்ள 22 உதவி சர்ஜன்கள் நியமனம் செய்து நிரப்புவதற்கு, தேச நெருக்கடியின் போது பாதுகாப்பு அணியில் பணிபுரிந்தவர்களிடமிருந்து 31 ஆகஸ்ட் 1972 மாலை 5-00 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

(மாநில அரசின் கீழ் தற்காலிகப் பணியிலிருப்பவர்கள், தங்கள் மனுக்களை, மக்கள் நல்வாழ்வுப் பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் மருத்துவக்கல்வி இயக்குநர், சென்னை-5 அவர்களுக்கு 21 ஆகஸ்ட் 1972-க்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.)

சம்பளம்—ரூ. 525—25—600—30—690—35—900 மாதம் ஒன்றுக்கு, பட்டதாரிகளுக்கு மற்றும் ரூ. 425—25—600—30—750 மாதம் ஒன்றுக்கு, தமிழ்நாடு அரசின் D.M. & S. பெற்றிருப்பவர்களுக்கு.

எந்த மருத்துவ பாடங்களிலாவது அங்கீகரிக்கப்பட்ட பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றிருப்பவர்கள், அவர்களுக்குரிய சம்பள விகிதத்துடன் இரண்டு அட்வான்ஸ் இன்கிரிமென்ட்ஸ் பெற அனுமதிக்கப்படுவார்கள். எனஸ்த்தீசியாவில்(Anaesthesia) பட்ட மேற்படிப்பு டிப்ளமா மற்றும் கிரிமினாலஜியில் டிப்ளமா பெற்றுள்ள மனுதாரர்கள் ஒரு அட்வான்ஸ் இன்கிரிமென்ட் பெற அனுமதிக்கப்படுவார்கள்.

வயது—1-7-1972 அன்று 35 வயதிற்குக்குறைவாக. மருத்துவக் கல்லூரிகளில் கிளினிகள் அல்லாத போதனைத் துறைகளில் பணிபுரிய விரும்புகிற பெண் மருத்துவ அலுவலர்கள் மற்றும் தற்காலிக உதவி சர்ஜன்கள் ஆகியோர் வயது விசயத்தில் குறிப்பிட்ட சலுகை அனுமதிக்கப்படும். தேசிய நெருக்கடியின் போது மனுதாரர் பணிபுரிந்த காலம், ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஆள் சேர்க்குபோது, வயது கணக்கிடுகையில் குறைக்கப்படும்.

தகுதி—1. சென்னை மருத்துவப் பதிவுச் சட்டம் 1914-ன் படி செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளராக இருக்க வேண்டும்.

2. எந்தப் பல்கலைக் கழகத்திலாவது அல்லது பல்கலைக் கழக மானிய குழுவினால் அதன் மானியத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் எம்.பி.பி.எஸ். பட்டம் அல்லது தமிழ்நாடு அரசு D.M. & S. அல்லது அதற்குச் சமமான தகுதி.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினர் ஆகியோர், குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வி தகுதி பெற்றிருப்பவர்கள் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தேசிய நெருக்கடியின் போது மனுதாரர் இராணுவப் பணியில் இருந்த காலம் வயது கணக்கிடும்போது குறைத்துக் கொள்ளப்படும். அங்கஹீனமுற்றவர்கள் விசயத்தில் அதிக பட்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1-1-1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபிஸர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டர்ராக பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு, 1964-ம் வருடம் சனவரி மாதம் 1-ம் தேதியில் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்தில் இலங்கை பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வர்ம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், பிற விவரங்களையும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள தன் முகவரி எழுதிய (0.30 காசு நூல் அஞ்சல் வில்லை 0.05 காசு அகதிகள் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 18)

ஒப்பந்தப் புள்ளி

தஞ்சாவூர் நகராட்சி

தஞ்சை மின் பிரிவின் உபயோகத்திற்குக் கீழ்க்கண்ட பொருட்கள் வழங்க நகராட்சி ஆணையர் அவர்களால் 30-8-1972-ம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும்.

பொருட்களின் விவரம்.	பொறுப்புத் தொகை.
	ரூபாய்.
(1) 4 அடி 40 வாட்ஸ் குழாய் விளக்கு மற்றும் 40 வாட்ஸ் அண்டு 20 வாட்ஸ் குழாய் விளக்குகளுக்கான ஸ்டார்ட்டர்கள்.	250

விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பும், ஒப்பந்தப் படிவமும் நகராட்சி மின் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களுக்கு ரூ. 2 மணியார்டர் மூலமாக அனுப்பி (திருப்பித் தரப்படமாட்டாது) பெறலாம். அஞ்சல் ஆணை, காசோலை (Cheque) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆ. சேவுகபாண்டியன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தஞ்சாவூர்-1.

(த. 58)

தூத்துக்குடித் துறைமுக வாரியம்

"துறைமுகத்தின் வடபகுதியில் சரக்கு வைக்கும் கூடம் (Store Shed) கட்டும்" வேலைக்கு காண்டிராக்டின் உத்தேச மதிப்பு ரூ. 15,000 ஒப்பந்தப்புள்ளிகள் 2—9—1972 மாலை 4 மணி வரை தூத்துக்குடி துறைமுக வாரியத் தலைவரால் வரவேற்கப்படுகின்றன. தூத்துக்குடி துறைமுக வாரியத்தில் பதிவு செய்யப்படாதவருடைய ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டால் அவர் வேலை உத்தரவு கிடைத்த 30 தினங்களுக்குள் துறைமுக வாரிய விதிகளின்படி துறைமுக வாரியத்தால் பதிவு செய்யப்பட்ட காண்டிராக்டராக வேண்டும். அப்படி செய்யத்தவறினால், அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை உத்தரவு ரத்து செய்யப்படும். அத்துடன் அவர் கட்டிய முன்வைப்புத் தொகையும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகள் வேண்டுவோர் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி வரை ரூ. 11 (ரூபாய் பதினொன்று மட்டும்) செலுத்தி, கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

காப்டன் டி. டி. ராமச்சந்திரன்,
துறைமுக அதிகாரி & காரியதரிசி.

(த. 31)

ஏல அறிவிப்பு

நெடுஞ்சாலைப் பொறியியல் பணித் துறை

எண். 17058/71 பி3 நாள் 26—7—72

இவ்விலாக்காவிற்குச் சொந்தமான கீழே குறிப்பிட்டுள்ள உபயோகத்திற்கு லாயக்கற்ற லாரிகளை 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி புதன் கிழமை காலை 11-00 மணிக்கு புதுக்கோட்டை (நெடுஞ்சாலை) போக்குவரத்து மற்றும் இயந்திர உதவிப் பொறியாளர் அவர்களால் புதுக்கோட்டை அரசினர் நெடுஞ்சாலைத் தொழிற் பட்டறையில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

அந்த லாரிகளை தொழிற் பட்டறையில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை பார்வையிடலாம்.

1. லாரி எம். எஸ். பி. 2023.
2. லாரி எம். எஸ் இசட். 1644.
3. லாரி எம். எஸ். பி. 1873.

ஏலம் கேட்பவர்கள் வைப்புத்தொகை (டெபாசிட்) ரூபாய் 500 (ஐந்து நூறு மட்டும்) உதவிப் பொறியாளரிடம் ஏலம் ஆரம்பிக்குமுன் கட்டவேண்டும். இத்தொகை ஏல முடிவில் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஏலம் எடுத்தவர் முடிவான ஏலத் தொகையில் 25 சதவிகிதம் (இருபத்தைந்து சதவீதம்) ஏலம் விடப்பட்டவுடன் செலுத்த வேண்டும். மீதமுள்ள விற்பனை வரியும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டவுடன் லாரிகளைத் தன் வசம் எடுத்துக் கொள்ளும்போது செலுத்த வேண்டும்.

எஸ். தனபாலன்,
கோட்டப் பொறியாளர்,
நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, புதுக்கோட்டை.

(த. 30)

நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும் ஸ்டாம் F-34 தயாரித்திருக்கிறோம்

களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும். ஸ்டாம் F-34—குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!

இண்டோபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா
STAM F-34 என்ற பெயரும், ப்ளாஸ்க்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., பிலடெல்பியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியை செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ம்தேதி திங்கட்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். விவரங்கள் அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

வேலையின் பெயர்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
	ரூபாய்.	ரூபாய்.
1. சுகாதாரத் தொழிலாளிகளுக்கு 2 வீடுகள் கொண்ட பிளாக்குகள் 7 கட்டுதல் (ஏ. பிளாக்கு).	35,000	875
2. சுகாதாரத் தொழிலாளிகளுக்கு 2 வீடுகள் கொண்ட 7 பிளாக்குகள் (பி. பிளாக்கு)	35,000	875

வெ. பாலசுப்ரமணியம்,
ஆணையர்.

(த. 86)

விழுப்புரம் நகராட்சி

நவாப் தோப்பு நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுமதில் கட்டும் வேலைக்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் மூடி அரக்கு முத்திரையிட்ட உறைகளில் 28—8—1972 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் தனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

	ரூபாய்.
வேலையின் மதிப்பீட்டுத் தொகை	16,300
வேலையின் ஒப்பந்தத் தொகை	15,317
செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை	770

ஒப்பந்த நமூனக்கள் (Tender Schedule) 28—8—1972 மாலை 3 மணிவரை அலுவலக வேலை நாட்களில் ரூபாய் 2 செலுத்தி விண்ணப்பித்தலின் பேரில் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களும், ஒப்பந்த நிபந்தனைகளும் அலுவலகத்தில் கோரி பெற்றுக் கொள்ளலாம்.

பெ. இ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

(த. 81)

தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட ரோடுகளுக்கு 30—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	முன் வைப்புத் தொகை. ரூ.
1. டூவிபுரம் 2-ம் தெருவின் ஓரங்களில் தார் ரோடு போட	235
2. ஜெயராஜ் ரோட்டில் புதிதாக ஆர்ஜிதம் செய்த இடத்தில் ரோடு போட	255
3. டேவிஸ்புரம் பாலத்தை அடுத்த பள்ளத்தை நிரப்பித் தார் ரோடு போட	150
4. எஸ். எஸ். பிள்ளை தெருவிற்குத் தார் ரோடு போட..	85
5. தெற்கு சம்பந்த மூர்த்தி தெருவிற்குத் தார் ரோடு போட	150
6. சாரங்கபாணித் தெருவிற்குத் தார் ரோடு போட ..	125
7. தாமோதரநகர் மெயின் ரோட்டிற்குத் தார் ரோடு போட	200
8. போல்டன்புரம் 1-ம் தெருவிற்குத் தார் ரோடு போட ..	175

சி. சங்கரலிங்கம் பி.ஏ.,
ஆணையர்.

(த. 78)

மாயூரம் நகராட்சி

திரு. வி. க. மார்க்கெட்டில் ஆறு ஸ்டால்கள் கட்டுவதற்கு ரூபாய் 6,500-க்கும் நகராட்சியிலுள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு முதற்படியாக 10 ஜதை வீடுகள் கட்டுவதற்கும் ஜதை 1-க்கு ரூபாய் 4,200 வீதம் ரூபாய் 42,000 க்கும், சானிடரி சந்துகளில் மேடாக உள்ள மண்ணை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு ரூபாய் 8,500-க்கும் ஆக கூடுதல் ரூபாய் 57,000-க்கான வேலைகளுக்கு 28—8—1972 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக் கருவூலத்தில் ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

வி. டி. உமாபதி,
ஆணையர்.

(த. 84)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை காவேரிப் பாலம் தனிக் கோட்டம்), குளித்தலை அவர்கள் 44-ஏ, காவேரி நகர், குளித்தலை விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 18—8—1972 அன்று பிற்பகல் 3-15 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையில் தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-30 மணிக்குத் திறக்கப் படும்.

1. திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிறி—குளித்தலையை இணைக்கும் காவேரிப் பாலத்தின் குளித்தலைப் பக்க அணுகுசாலை அமைத்தல் செயின் 1-350 வரை. பொறுப்புத் தொகை டெபாசிட்: ரூபாய் 2,425. ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம் : கோட்டப் பொறியாளர், காவேரிப்பால தனிக் கோட்டம், 44-ஏ, காவேரி நகர், குளித்தலை.

2. திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிறி—குளித்தலையை இணைக்கும் காவேரிப் பாலத்தின் குளித்தலைப் பக்க அணுகு சாலை அமைத்தல் செயின் 350—558. 78 வரை. ஆர். எல். 90·00 கீழ். பொறுப்புத் தொகை டெபாசிட்: 2,065. ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம் : கோட்டப் பொறியாளர் காவேரிப்பால தனிக்கோட்டம், 44 ஏ, காவேரி நகர், குளித்தலை.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூபாய் 10-35 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை) காவேரிப்பாலத் தனிக் கோட்டம், குளித்தலை விலாசத்திலிருந்து 10—8—1972-லிருந்து 17—8—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புத்தொகை டெபாசிட்டை மேற் கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை) தனிக்கோட்டம், குளித்தலை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் பொறுப்புத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும் பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கோட்டப் பொறியாளர் (நெ) தனி,
காவேரிப்பால கோட்டம்.

(த. 80)

VOLTAS

பருத்திப்பயிர்
களுக்குப்
பாதுகாப்பளிக்க
மிகச் சிறந்தது

ஜோலோன்®
மூலப் பொருள்
'ரோன்-பொலெங்க்'
பாரீஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால்
கண்டுபிடிக்கப்பட்ட போஸலோன்
பூச்சி மருந்து

RHÔNE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு ரோன்—பொலெங்க் நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட ஜோலோன் பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயிகளுக்கு நோயற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள், வண்டுகள் முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, ஜோலோன் பருத்திப்பயிர்களைக் காய்ப்புழுக்கள் தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் ஜோலோன் பயிர்ச்சிலந்தியை ஈடற்ற முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் ஸல்பரோ அல்லது வேறு எந்தப் பூச்சி மருந்தோ உபயோகப்படுத்தத் தேவையில்லை.

காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு கில்வால் (மூலப்பொருள் வேமிடோதியோன் ஸிஸ்டமிக் (Systemic) பூச்சிமருந்து) மிகச்சிறந்தது.

ULKA-VVA-4 TAM

பாரதத்தின் பசுமைப் புரட்சியைப்
பாதுகாப்பது
'ரோன்-பொலெங்க்'
பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரிக்குத் தயவுசெய்து தொடர்பு கொள்க:
வோல்டாஸ் லிமிடெட்
கெமிக்கல்ஸ் டிவிஷன்,
19, கிரஹாம் ரோடு, பெல்லார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.

சேலம் நகராட்சி

சேலம் நகராட்சியின் கீழ்க்கண்ட பொதுவேலைகள் செய்வதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30—8—1972-ம் தேதி மாலை 3 மணிவரை நகராட்சி ஆணையாளரின் நேர்முகத் துணைவர் அவர்களால் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். அன்றே மாலை 3·15 மணிக்குத் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

குறிப்பு.—வேலைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள வைப்புத் தொகையையும் ஒப்பந்த ஷெட்யூல் கட்டணம் ரூ. 2-யையும் 29—8—1972-ம் தேதிக்குள் செலுத்தி ஷெட்யூல் பெற்றுக் கொள்ள வேண்டும். மற்ற விவரங்களுக்கு ஆணையாளரை அணுகவும்.

வரிசை எண்ணும் வேலை விவரமும்.	மதிப்பீடு தொகை.	வைப்புத் தொகை.	வேலை முடிக்க வேண்டிய காலம்.
	ரூ.	ரூ.	
(1)	(2)	(3)	(4)
1 நகராட்சி அலுவலகத்திலிருந்து பெரியார் சிலை வரை மெயின் ரோடுக்குத் தார் கலந்த ஜல்லி போட.	30,000	750	3 மாதங்கள்
2 கோட்டை மெயின்ரோடுக்குப் பங்களாத் தெரு சந்திப்பிலிருந்து பழைய மார்க்கட் தெரு சந்திப்பு வரை தார் கலந்த ஜல்லி போட.	33,500	840	ஷை
3 சையத்மதார் சாயபு தெரு சந்திப்பிலிருந்து பங்களாத் தெரு சந்திப்பு வரை செவ்வாய்ப் பேட்டை மெயின் ரோடுக்குத் தார் கலந்த ஜல்லி போட.	32,000	800	ஷை
4 லாங்லி ரோடு சந்திப்பிலிரிந்து சையத் மதார் சாயபு தெரு சந்திப்பு வரைசெவ்வாய்ப்பேட்டை ரோடுக்குத் தார் கலந்த ஜல்லி போட.	30,000	750	ஷை
5 செவ்வாய்ப் பேட்டை மெயின் ரோடுக்கு கள்ளிக்கோட்டை டிரங் ரோடிலிருந்து லாங்லி ரோடு சந்திப்பு வரை தார் கலந்த ஜல்லி போட.	40,000	1,000	ஷை

பி. ஹமீதலி,
ஆணையர்.

(த. 60)

தஞ்சாவூர் நகராட்சி

தஞ்சாவூர் நகராட்சி பேருந்து நிலைய அபிவிருத்தி கட்டடங்கள் கட்ட மதிப்பீடு ரூ. 1,93,000-க்கான வேலைக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30—8—1972 அன்று மாலை 3·30 மணிவரை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் அதற்கான ரூ. 10·35-ஐ (விற்பனை வரி உட்பட) மணியார்டர் மூலமோ அல்லது நகராட்சி கருவூலத்தில் செலுத்தியோ 28—8—1972 மாலை 4·00 மணிவரையில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. சேவுகபாண்டியன், பி. ஏ.,
ஆணையர்.

(த. 65)

பாளையங்கோட்டை நகராட்சி

நகராட்சி ஆணையாளர் அவர்களால் அடியிற் குறிப்பிட்ட வேலைக்கு மூடி முத்திரையிட்ட தாரணைகள் 29—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். தாரணை ஷெட்யூல் ஒன்றுக்கு ரூ. 6·00 (விற்பனை வரி காசு 21) செலுத்தி 28—8—1972 முடிய பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை அலுவலகநேரங்களில் நகராட்சிப் பொறியாளர் அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம். வேலை முடிக்க வேண்டிய காலம் மூன்று மாதம்.

மதிப்பீடு எண.	வேலை விவரம்.	மதிப்பீடு	டிப்பாசிட் தொகை.	
			முதலில்	பிறகு.
(1)	(2)	(3)	(4)	(5)
		ரூ.	ரூ.	ரூ.
23/72-73	வெள்ளைக் கோவில் ரோட்டில் சிமெண்ட் ரோட்டில் அபிவிருத்தி வேலை செய்யவும், மேற்படி ரோட்டில் இரு பக்கங்களிலும் முட்டுச்சுவர் கட்டவும் (தாரணை கேட்கப்படும் தொகை ரூ. 18,090).	20,000	453	452

க. ஜனார்த்தனம், எம். ஏ.,
ஆணையர்.

(த.68)

பொதுப்பணித் துறை

சென்னை—செங்கற்பட்டு வட்டம்.

வேலையின் பெயர்—சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைப் பகுதிக் கட்டடத்தின் (Surgical block) மூன்றாவது மாடியின்மேல் கூடுதலாக மூன்று மாடிகள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்காக இருந்த கடைசி நாள் 9—8—1972-லிருந்து 26—8—1972 மாலை 3·00 மணிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 16—8—1972 முதல் 25—8—1972வரை எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 72)

பொள்ளாச்சி நகராட்சி

ஐந்து குதிரை வேகமுள்ள டீசல் பம்பு செட்டு விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29—8—1972-ம் தேதி மாலை 4-00 மணி வரை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று மாலை 4-30 மணி அளவில் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளி பாரங்கள் விண்ணப்பங்களின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

வைப்புத் தொகை ரூ. 180.

ஆணையர்

(த. 73.)

ஏல விற்பனை

காவல் பயிற்சிக் கல்லூரி வேலூர்

வேலூர் காவல் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த போலீஸ் மோட்டார் சைக்கிள் எண் எம்.டி.எச். 1754 (ராயல் என்பீல்டு) மேற்குறித்த அலுவலகத்தின் முன்பு 2—9—1972 அன்று காலை 11 மணிக்கு பகிரங்கமாக ஏலத்தில் விற்கப்படும். மேற்குறித்த வண்டியைக் காவல் பயிற்சிக் கல்லூரியில் அலுவலக நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையில் பார்வையிடலாம். ஏல விற்பனை நிபந்தனைகள் காவல் பயிற்சி முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முதல்வர்,
காவல் பயிற்சிக் கல்லூரி,
வேலூர்.

(த. 74)

அறிவிப்பு

தஞ்சாவூர் நகராட்சி

இந்த நகராட்சியின், நகராட்சியில் நகர் அமைப்புத்துறையில், நகர் அமைப்புத்திட்ட சர்வேயர் மற்றும் பில்டிங் டிராப்ட்ஸ்மேன் பதவிகளில் நியமனம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து மனுக்கள், 31—8—1972-க்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. மற்ற விவரங்கள், தஞ்சாவூர் நகராட்சி ஆணையர், அவரிடம் பெறலாம்.

ஆ. சேவுகபாண்டியன்,
ஆணையர்.

(த. 63)

ஒப்பந்தப் புள்ளி.

பொதுப்பணித் துறை.

வேலையின் பெயர்.—மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவ மனையில் ஆர்த்தோப்டிக் கோர்ஸ் நடத்துவதற்கு (Orthoptic Course) ஒரு கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30—8—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 4-00 மணிக்குத். திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் 23—8—1972 முதல் 28—8—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் படிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ.2,000.

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 20 (திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "P.W. Remittances III" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரைக் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கிலும், மற்றும் விற்பனை சர் சார்ஜ் ரூ. 0·75 காசு "XII Sales tax (d) Miscellaneous" என்ற தலைப்பில் ஒரே சலானில் செலுத்தப்பட வேண்டும். சலான் கொடுக்கப்பட்ட பின்னரே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, டெபாசிட் அட் கால் ரிசிப்ட் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்ட்டு அரசு உறுதிப் பத்திரங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட 14வங்கிகளின காரண்டிகளோ ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசிய சேமிப்பு சார்ட்டிபிகேட்டுகள் மார்க்கெட் மதிப்பிற்கு 5 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

வி. துரைராஜ்,
மேற்பார்வைப் பொறியாளர்,
மதுரை வட்டம்.

(த. 57)

அறிவிப்பு

புத்தகங்களும் செய்தித்தாள்களும் வழங்குதல்

(பொது நூலகங்கள்) 1954 சட்டம் 27

1. 1954 சட்டம் 27-ன்படி புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்கள் வழங்குவதின் கீழ், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வெளியீட்டாளரும் தங்கள் வெளியீடுகளை செய்தித்தாள்கள் உட்படக் கட்டணமின்றி மற்றும் அனுப்புகின்ற கட்டணத்தையும் செலுத்திக் கீழ்க்கண்ட மூன்று நூலகங்களுக்கும் அனுப்புவது உறுதியான கடமையாகும்.

(1) கன்னிமாரா பொது நூலகம், சென்னை-8.
(2) தேசிய நூலகம், கல்கத்தா-27.
(3) மத்திய நூலகம், பம்பாய்-1.

2. ஆகையால் வெளியீட்டாளர்கள் அனைவரும், 20—5—1954 அன்று அல்லது அதற்குப் பிறகு வெளியிடப்பட்ட பள்ளிப் பாடப் புத்தகங்கள் மற்றும் குழந்தைகளின் புத்தகங்களும் சேர்த்துத் தங்களுடைய வெளியீட்டில் ஒரு பிரதி மேற்கண்ட மூன்று நூலகங்களுக்கும் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3. இந்தச் சட்டத்தை மீறுகின்ற வெளியீட்டாளர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

(த. 12)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 25—8—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—பாளையங்கோட்டை குடிநீர் முன்னேற்றத்திட்டம் —நீரேற்றி மாற்றுதல் நிர்மானித்தல் சம்பந்தமாக.
ஒப்பந்த வகை.—மொத்த தொகை.
முன்வைப்புத் தொகை.—ரூ. 3,150.

இத்தொகை பணவுத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—ஆறு மாதம்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை—ரூ. 10·37 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தேழு மட்டும்).

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர் நிருவாகப் பொறியாளர்(தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து பிரசன்ன விநயகர் கோவில் தெரு, திருநெல்வேலி-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 19—8—1972 மாலை 5-00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், செயல் வட்டம்,
மதுரை-2.

(த. 89)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில்நிருவாகப் பொறியாளர் பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள நிருவாகப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் 2—9—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

தண்டையார்பேட்டை, இரண்டாவது பணிமனையில் தார் சாலை அமைத்தல், முன்வைப்புத் தொகை ரூ. 4,700, ஒப்பந்தப் பாரங்கள் விற்பனை வரி உட்பட ரூ. 20·80, முடிக்கும் காலம் 8 மாதங்கள்.

ஒப்பந்தங்கள் மேலாளர் (தொழில் நுட்பம்) பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2, அவர்களால் மேற்கூறிய அதே தேதியில் மாலை 3-15-க்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரை படிவங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2-ல் உள்ள அலுவலகத்தில் மேற்கூறிய தொகையைக் கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (17—8—1972 முதல் 1—9—1972 முடிய) எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை, "நிதி நிலைமை பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ஏ. வி. சுப்பிரமணியம்,
நிருவாகப் பொறியாளர்,
(பல்லவா போக்குவரத்துக் கழகத்துக்காக).

(த. 91)

ஏல விளம்பரம், வனத்துறை

"20—9—1972 காலை 11 மணியளவில் சென்னை-86, 37, கதிட்ரல் சாலையிலுள்ள வனப்பயன்பாட்டு அலுவலகத்தில் வனப்பயன்பாட்டு அலுவலரால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலரால் யானைத் தந்தம் (300 கிலோவுக்குமேல்) மற்றும் மான் கொம்புகள் (1,500 கிலோவுக்கு மேல்) ஏலம் நடத்தப்படும். மேல் விவரங்களுக்கு வனப்பயன்பாட்டு அலுவலரை நேரில் அணுகவும்."

எம். தியாகராஜன்,
வனப்பயன்பாட்டு அலுவலர்.

(த. 90)

16—8—72



அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — ④ சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்: செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!

தமிழ்நாடு அரசு
சிறுசேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது.

அறிவிப்பு

1973, ஆங்கில ஆண்டுக்கு இன்ஸ்டியூட்ஸ் ஆப் காமர்ஸ் அங்கீகாரத்திற்கு மனுக்கள் கோருவது பற்றிய அறிவிப்பு

1973 ஆங்கில ஆண்டுக்குப் பல்வேறு காமர்ஸ் பாடங்களில் பயிற்சி அளித்து 1973 மே, நவம்பர் ஆகிய மாதங்களில் அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு நபர்களை அனுப்ப விரும்புகின்ற கமர்சியல் இன்ஸ்டியூட்களின் உரிமையாளர்கள் வகுக்கப்பட்ட வினாப் பட்டியல்கள் மூலம் தங்கள் நிறுவனங்களைப் பொறுத்து விவரங்களை 31-8-1972-க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்புமாறு கோரப்படுகிறார்கள்.

வினாப்பட்டியல் படிவங்கள் பெற வேண்டுகோள் கடிதத்தை தலைவர் தேர்வுகள் குழு சென்னை-25 அவர்களுக்கு சுயவிலாசம் எழுதிய 25 X 15 செ.மீ., அளவுள்ள ரூ. 1·00+0·05 அஞ்சல் வில்லை ஒட்டிய உறையை உடன் வைத்து அனுப்ப வேண்டும். ஒவ்வொரு உரிமையாளருக்கும் 3 வினாப் பட்டியல் படிவங்கள் அனுப்பப்படும். பூர்த்தி செய்த ஒரு மனு வடிவத்தைத் தங்களிடம் வைத்துக் கொள்ளலாம். சோதனையின் போது அல்லது ஆய்வின்போது அதைக் காண்பிக்க வேண்டும். மற்றொரு பிரதியை அலுவலகத்துக்கு நேரடியாக அனுப்பவேண்டும். மூன்றாவது பிரதி, இந்த நிறுவனம் எங்கு உள்ளதோ அப்பகுதியின் அதிகார வரம்பு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பவேண்டும்.

ஆங்கில ஆண்டின் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கப்படுவதால் கமர்சியல் இன்ஸ்டியூட் நிறுவனங்களின் உரிமையாளர்கள் 1972-ஆம் ஆண்டுக்கு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டவராக இருந்தாலும் வினாப் பட்டியலைப் பூர்த்தி செய்து, 1973-ஆம் அங்கீகாரத்துக்காக மேற்குறித்த வாறு அனுப்பி வைக்க வேண்டும். 1972-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப் பட்ட இவ்வகை நிறுவனங்களின் உரிமையாளர்கள் மேலே குறிப்பிட்ட வாறு வினாப்பட்டியலைப் பூர்த்திசெய்து குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பத் தவறினால் 1973-ஆம் ஆங்கில ஆண்டுக்கு நபர்களுக்கு பயிற்சியளிக்கவோ தேர்வுக்கு அனுப்பவோ அங்கீகாரம் தரப்படமாட்டாது என்பதை அவற்றின் உரிமையாளர்கள் உணர வேண்டும்.

புதிதாக அங்கீகாரம் கோரும் இவ்வகை நிறுவனங்களின் உரிமையாளர்கள் மேலே 1-வது பாராவில் கண்டபடி வினாப்பட்டியலைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

நாளிதழ்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி குறிப்பிட்ட காலத்தில் அங்கீகாரத்துக்கு மனுச் செய்து கொள்ளாத நிறுவனங்களுக்குத் தற்காலிக அனுமதியோ தனி அனுமதியோ தரப்படமாட்டாது. தவிரவும் கமர்சியல் இன்ஸ்டியூட்களின் அங்கீகாரம் ஆண்டுதோறும் கவனிக்கப் படுவதாலும் இடைக்காலத்தில் சேர்க்க முடியாததனாலும் குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் வினாப்பட்டியல் எக்காரணம் கொண்டும் கவனிக்கப்பட மாட்டாது. அங்கீகார ஆணையில் குறிப்பிட்ட பாடங்கள் தவிர கூடுதல் பாடங்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதிகோரும் கடிதங்கள் ஏற்கப்படமாட்டாது.

உரிமையாளர்கள் வினாப்பட்டியல் (questionnaire) படிவங்களில் தவறான விவரங்களைக் கொடுத்தல் அவர்களது மனுக்கள் நிராகரிக்கப் படுவது மட்டுமல்லாமல், அத்தகைய நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்ட பட்டியலிலிருந்து தேர்வுக் குழுவின் தலைவர் எடுக்கின்ற முடிவை ஒட்டி குறிப்பிட்ட காலத்திற்கு நீக்கப்படும்.

வினாப்பட்டியல் படிவங்கள் அனுப்பும்பொழுது (Duly filled in) இந்த அலுவலகத்திற்கு, சுய விலாசமிட்ட உறையில் ரூ. 0·35 அஞ்சல் வில்லை+0·05 காசு அகதிகள் நிவாரண வில்லைகள் ஒட்டி, அவர்களின் நிறுவனங்களின் அனுமதி சம்பந்தமாக செய்தி தெரிவிப்பதற்காக சேர்த்து அனுப்பப்பட வேண்டும். 1972 ஆங்கில ஆண்டுக்கு அனுமதிக்கப் பட்ட நிறுவனங்களின்உரிமையாளர்கள்மற்றும் 1973 ஆங்கில ஆண்டுக்கு அனுமதிக்கு விண்ணப்பித்துள்ள புதிய நிறுவனங்கள், இந்தத் துறையில் அப்ரூவல் ஆர்டர் பெற்ற பின்னரே 1973 ஆங்கிலஆண்டுக்கான தங்கள் அனுமதியை வெளியிட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட வணிக இயல் நிறுவனங்களின் (Commerce Institutions) அச்சிடப்பட்ட பட்டியல் அந்தந்தப் பகுதி மாவட்டக் கல்வி அதிகாரிகள், பாலிடெக்னிக்களின் முதல்வர்கள் மற்றும் அந்தந்த வணிக நிலையங்களின் உரிமையாளர்களிடம் கிடைக்கும் ஆர்வமுள்ள மனுதாரர்கள் (Candidate) குறிப்பிட்ட நிலையத்தில் சேருவதற்கு முன்னர் அந்நிலையத்தின் பெயர் மேலே குறிப்பிட்டுள்ளவர் களிடம் கிடைக்கும் அச்சிடப்பட்ட பட்டியலில் வணிக இயல் கல்வி நிலையத்தின் பெயர் இருக்கிறதா என்று பார்த்து பயிற்சிக்காகச் சேர வேண்டும்.

தலைவர்,
தேர்வுக்குழு &
தொழில் நுட்பக் கல்வி, இயக்குநர்.

(த. 29)

ஒப்பந்தப் புள்ளி

மாநிலப் போக்குவரத்துத்துறை

போக்குவரத்து இல்லம், சென்னை-2

வேலூரில், புதிதாகக் கட்டப்பட்ட பணி நிலையத்தில், 15-10-1972 லிருந்து 3 ஆண்டு காலத்திற்கு ஒரு கேண்டீன (Running a canteen) நடத்துவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15-9-1972 மாலை 2-30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைப் பிரதிகள், இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1 செலுத்திப் பெறலாம்.

(த. 107)

இயக்குநர்.

அறிவிப்பு

தொழில் துறை

ஏலக்காய் தோட்டங்களைப் பதிவு செய்தல்.

1965 ஏலக்காய் சட்டத்தின்படி (1965 மைய சட்டம் 42) 11-வது பிரிவின்படி, ஏலக்காய் தோட்டம் அல்லது தோட்டங்களின் சொந்தக் காரர்கள், அந்தத் தோட்டம் அல்லது தோட்டங்களின் சொந்தக்காரர் ஆகி ஒரு மாதம் ஆகும் முன் அல்லது இந்தப் பிரிவு அமலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள், அல்லது எது பிறபட்டதோ, அதற்குள், அரசினரால் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள பதிவு அலுவலரிடம் அவருக்குச் சொந்தமாகவுள்ள ஒவ்வொரு ஏலத் தோட்டத்திற்கும் சொந்தக் காரராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இந்தச் சட்டப்பிரிவு 1966 ஜூலை 12-ம் தேதி அன்று அமலுக்கு வந்தது. இந்திய அரசு பிறப்பித்துள்ள ஏலக்காய் (உரிமம் மற்றும் பதிவு) விதிகள் 1968-ப்படி இதற்காக இந்த விதிகளின்படி பிரிவுச் சான்றிதழ்கள் பெற்றவர்களை தவிர வேறு யாரும் ஏலக்காய் விற்பனையில் ஈடுபடக்கூடாது. இந்த மாநிலத்திலுள்ள ஏலக்காய் தோட்டக்காரர்கள் தாங்கள் உற்பத்தி செய்த ஏலக்காயை விற்பனை செய்வதில் தொல்லைகள் அனுபவிக்கக் கூடாது என்ற நோக்கத்தில் மாநில அரசு, இந்தப் பதிவு செய்வதற்கான கால வரையறையை அவ்வப்போது நீடித்து வந்திருக்கிறது. தற்போது அந்தக் கால வரையறையை 1972 டிசம்பர் 31-ம் தேதிக்கு நீடித்துள்ளார்கள். இதற்கு மேலும் நீடிக்கப்படமாட்டாது. எனவே தங்களது தோட்டங்களை பதிவு செய்யாமலிருந்தால் ஏற்படவிருக்கும் விளைவுகளைத் தவிர்க்க பதிவு செய்யும் அலுவலர்களிடம் அதாவது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பதிவு செய்யும்படி ஏலக்காய்த் தோட்டச் சொந்தக்காரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வி. கார்த்திகேயன்,
செயலாளர்.

(த. 92)

ஒப்பந்தப் புள்ளி

பாளையங்கோட்டை நகராட்சி

இந்நகர் மன்றத்திலுள்ள 11 பள்ளிகளுக்கும் அவரவர் பாத்திரத்திலேயே உணவு தயார் செய்து சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு கொண்டு சேர்க்க (சமையல் கூலி, பாத்திர வாடகை, வண்டி வாடகை உட்பட) சமையல் செய்த நாளன்று மட்டும் நாள் 1-க்கு ரேட் விவரம் குறித்தும், டிப்பாசிட் ரூ. 50 செலுத்தியும், மூடி முத்திரையிட்ட தாரணைகள் பாளையங்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்களால் 29—8—1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். முழு விவரங்கள் அலுவலகத்தில் நேரில் அல்லது கடிதம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பாளையங்கோட்டை. **ஆணையர்.**

(த. 104)

ஒப்பந்தப் புள்ளி

வேளாண்மைத் தொழில்கள் இணையகம், கிண்டி

கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள அகரோ இல்லத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முதல் மாடியில் தேக்கு முகப்புக் கொண்ட தடுப்புகளை அமைப்பதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், திருவாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களால் 21—8—1972 மாலை 5 மணிக்குள் வந்து சேரும்படி வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் படிவங்களை மேற்கூறிய அலுவலகத்தில் ரூபாய் 5-20-ஐ பணமாகவோ, போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது வங்கி உண்டி மூலமாகவோ செலுத்தி 19—8—1972 மாலை 3 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

திருவாக இயக்குநர்.

(த. 87)

தமிழ்ப் புலவர் பயிற்சி வகுப்பு

சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி, சேலம் மாவட்டம் குமாரபாளையம் அரசினர் ஆசிரியர் கல்லூரி, புதுக்கோட்டை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றுள் தமிழ்ப் புலவர் பயிற்சி வகுப்புச் சேர்க்கை பற்றிய விவரங்களடங்கிய அறிக்கை.

1. சைதை ஆசிரியர் கல்லூரி, குமாரபாளையம் அரசினர் பயிற்சிக் கல்லூரி, புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றுள் தமிழ்ப் புலவர் பயிற்சி வகுப்பிற் சேர ஆடவ மாணவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அவ்வகுப்பு 1972-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து தொடங்கும்.

2. பயிற்சிக் காலம் :—நவம்பர் திங்கள் முதல் தேதி தொடங்கி மார்ச்சு திங்கள் 31-ம் நாள் முடிய ஐந்து திங்களாகும்.

3. சேர்வதற்குரிய தகுதிகள் :—முன்பே மொழியாசிரியராகப் பணியாற்றுமல் விண்ணப்பிப்பவர் உயர் நிலைப்பள்ளி நிறைவு வகுப்புத் தேர்வில் கல்லூரியிற் சேர்வதற்கான தகுதியுடன் வெற்றிப்பெற்றிருப்பவராகவோ, அதற்கான சான்றிதழ் நிறைவு பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். முன்னரே பணியாற்றியுள்ள புலவர்களுக்கெனச் சிறப்பானதொரு பொதுக்கல்வித் தகுதி குறிக்கப்பெறவில்லை. ஆனால், அவர்கம் ஆசிரியப் பணிபுரிந்த காலமும் பொதுக் கல்வித் தகுதியும் அத்தகையவர்க்குப், பயிற்சிக்கு இடமளித்தல் பற்றிக் கருதப்பெறும். தமிழாசிரியப் பணியில் அமர்த்துவதற்காக அமைக்கப் பெற்றுள்ள தமிழ்நாட்டு கல்வி பற்றிய 13-ம் விதி கூறும் தகுதிகளையும் விண்ணப்பிப்பவர் மேற்குறித்த தகுதிகளுடன் பெற்றிருத்தல் வேண்டும்.

4. வயது வரையறை :—பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்கு விண்ணப்பிப்பவர் 1972-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளில் 45 ஆண்டு நிறைவுக்குமேல் வயதுடைய வராய் இருத்தல் கூடாது.

5. பகுதிக் காலப் பணியாளர்கள் சேர்க்கைக்குத் தகுதிபெறுதவராவர்.

6. 1956 டிசம்பர்த் திங்கள் 12-ம் நாளிட்ட டி.என். 2217 எண்ணுள்ள அரசாணையின் படி தமிழ்ப்புலவர் பயிற்சிபெறும் அட்டவணைப் படுத்தப்பட்ட வகுப்பு, பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) உதவித் தொகை (தேவையான சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதன் பேரில) வழங்கப்பெறும்.

7. வெளி மாநிலத்திலிருந்து சேர்க்கப்பெறும் புலவர் மாணவர் பயிற்சி முழுமைக்கும் கட்டணமாக ஐம்பது ரூபாய் கட்டவேண்டும்.

8. பயிற்சியின் முடிவில் நடைபெறும் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்க்கு அதற்கான சான்றிதழ் ஒன்று வழங்கப்பெறும். கல்லூரி வேலை நாட்களில் 75 சத விதம் வகுப்புக்கு வராத மாணவர்களும், புலவர் பயிற்சி வகுப்புப் பொறுப்புப் பேராசிரியர், கல்லூரி முதல்வர் ஆகியோர்தம் நற்கருத்தையும் உளநிறைவையும் பெறும் வகையில் நடந்து கொள்ளாதவரும் பயிற்சியை முழுமையகவும் குறைவின்றியும் பெற்றவர்களாகக் கருதப் பெறமாட்டார்கள்.

9. பயிற்சிபெறும் மாணவர்க்குப் பயிற்றும் பயிற்சி உண்டு.

10. கீழே குறித்துள்ள சான்றிதழ்களின்படிகள் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் ஒப்புதல் செய்யப்பெற்று விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்பெறவேண்டும்.

(1) பொதுக் கல்வித் தகுதிச்சான்றிதழ், (2) பள்ளி இறுதி வகுப்பில் பெற்ற மதிப் பெண்களின் சான்றிதழ், (3) இனச் சான்றிதழ், (4) வித்துவான் பண்டிதம் சான்றிதழ், (5) பண்டிதம்·வித்வான் படிப்பில்பெற்ற தேர்வு நிலைக்கான சான்றிதழ், (6) பணிச்சான்றிதழ்.

11. கல்லூரியுடன் இணைந்த மாணவர் இல்லத்தில் இடம் இருப்பின் மாணவரில்லக் காவலரது முடிவின்படி தகுதிக்குரிய மாணவர்கட்கு இடம் வழங்குவதுபற்றி கருதப்பெறும்.

12. விண்ணப்பஞ் செய்வோர் இதனையடுத்து அச்சிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைத் தட்டச்சில் எழுதியோ அல்லது கையில் எழுதியோ பயன்படுத்தலாம். விண்ணப்பப் படிவங்கள் இக்கல்லூரி அலுவலகத்திலிருந்து வழங்கப்படமாட்டா.

13. விண்ணப்பிப்பவர்கள் போதிய தபால் தலைகள் ஒட்டப்பட்ட முகவரியுடன் கூடிய அஞ்சல் உறையை அனுப்பி இக்கல்லூரி அலுவலகத்திலிருந்து வழங்கப்படும் குறிப்பு அட்டையினைப் பெற்று அதனைச் சரியாகப் பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

14. 15–9–1972 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப் படிவங்கள் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள முகவரிக்கு வந்து சேரவேண்டும்.

முதல்வர், சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி, சென்னை-15 ".

சென்னை-15,
4—8—1972.

முதல்வர்
சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி

அலுவலகக் குறிப்பிற்காக
பதிவெண் :

விண்ணப்பம்.

1. விண்ணப்பம் செய்பவர் சேர விரும்பும் கல்லூரியின் பெயர் :
    1.
    2.
    3.
2. மாணவர் முழுப்பெயர் .. ..
3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் .. ..
4. கடிதத்தொடர்புக்கான முகவரி .. ..
5. (1) விண்ணப்பிப்பவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் ? .. .. ..
    (2) விண்ணப்பிப்பவர் அட்டவணைப் படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவரா (அரிஜன வகுப்பா ?) அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடியினரா (Scheduled Tribes) பின்னிலை வகுப்பினைச் சார்ந்தவரா, அட்டவணைப்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்தோ, அட்டவணைப் படுத்தப்பட்ட பழங்குடியிலிருந்தோ கிருத்துவச் சமயத்திற்கு மாற்றம் பெற்றவரா ? (அவ்வாறு மாற்றம் பெற்றிருந்தால் விண்ணப்பிப்பவரோ அவர்தம் பெற்றோரோ கிருத்துவச் சமயத்திற்கு மாற்றம் பெற்றனரா? விண்ணப்பிப்பவரின் மூதாதையர் பாட்டனர் ஆகியோர் மாற்றம் பெற்றிருந்தாரா என்பதைக் குறிப்பிடவும்) எந்த இனத்தைச் சார்தவர் ?

குறிப்பு :—மேற்கூறிய இனம் பின்னிலைத்துறை, அரிசன நலத்துறை ஆகியவை வெளியிட்டுள்ள பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

6. பிறந்த நாளும், நிறைந்த வயதும் .. ..
7. சொந்த ஊர், வட்டம், மாவட்டம் .. ..
8. தேறிய தேர்வு :
    (1) வித்துவான் 7, எ.பி.சி.டி. பிரிவுபடி பெற்ற கீழ்க்கலைத் தேர்வுச் சான்றிதழ்,/வித்வான் 2 எ.பி.சி.டி. பிரிவுப்படி பெற்ற சான்றிதழ்/புலவர் 8, எ.பி.சி. பிரிவுபடி பெற்ற சான்றிதழ்/மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதச் சான்றிதழ்.
    (2) தேர்வில் பெற்ற தகுதி நிலை .. ..
    (3) தேறிய ஆண்டு .. ..
    (4) மாணவரின் உயர்ந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி (உயர் நிலைப் பள்ளி நிறைவு வகுப்புச் சான்றிதழ் உடையோர் அதில் கல்லூரிக்குச் செல்லும் தகுதி பெற்றவரா, சான்றிதழை நிறைவு (Completed) செய்தவரா, தேருதவரா என்பதைக் குறிப்பிடவும்) அதில் பெற்ற மதிப்பெண்கள் பாடவாரியாக தரல் வேண்டும்.. ..
9. தெரிந்த பிற மொழிகள் .. ..
10. இப்போது புரியும் பணி (முகவரியுடன்) .. ..
11. ஆசிரியராயின் பணியாற்றிய காலம் .. ..
12. விண்ணப்பிப்பவர் பணியாற்றிய பள்ளி/பள்ளிகள் .. .. ..

குறிப்பு :—(தமிழ்நாட்டுக் கல்வித்துறையின் அங்கீகாரம் பெற்ற பள்ளியிலும், தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் எதேனுமொன்றின அங்கீகாரம் பெற்ற கல்லூரியிலும் ஆற்றிய பணி மட்டுமே கருதப்படும்).

ஆசிரியராகப் பணியாற்றிய பள்ளியின் பெயரும், அதன் முழு முகவரியும்.	காலம்.
1.	
2.	
3.	

13. பயிற்சியின் பின் பணியில் சேர்த்துக்கொள்ளும் பள்ளியின் பெயர் ..
14. பயிற்சிக்குப் பிறகு பணியில் சேர்த்துக்கொள்வது பற்றிய தனியார் பள்ளியின் மேலாளரின் உறுதிமொழி அல்லது விண்ணப்பித்தவருக்குப் பயிற்சியின் பின் வேலை தருவதற்கான தணிக்கை அலுவலரொருவரின் உறுதி மொழி .. ..
15. விண்ணப்பிப்பவர் இதற்கு முன் இப்பயிற்சிக்கு எத்தனை முறை விண்ணப்பித்துள்ளார் .. ..
16. பிற குறிப்புகள் (ஏதேனுமிருந்தால்) .. ..

வேலை தருவதற்கான உறுதிமொழி தரும் பொறுப்பாளரின் தொழில் நிலையும், கையொப்பமும் .. ..

இடம் :
நாள் :

விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

உறுதிமொழி

....என்னும் நான் விண்ணப்பித்த பயிற்சிப் படிப்பிற்குச் சேர்க்கப்பட்டபின் குறிப்பிட்ட பயிற்சிக் காலத்தை முடிக்கத் தவறினல் தமிழ் நாடு கல்வி பற்றிய விதிகளின்படி மாணவர்கள் செலுத்த வேண்டிய பயிற்சிக் கட்டணத்தைக் கல்விக் கூடத்தலைவர் வேண்டும் போது செலுத்திவிடுவேன் என்பதற்கும், இப்பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காகவே பயிற்சிக் கட்டணம் இல்லாமல் சேர்க்கப்படுகிறேன் என்பதற்கும் இதன்படி தமிழ்நாடு ஆளுநர் அவர்கட்கு என்னைக் கடடுப்படுத்திக் கொள்ளுகிறேன்.

இடம் :
நாள் :

விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

குறிப்பு :—

1. அரசிதழ் பதிவு பெற்றவரின் ஒப்பம் பெற்ற சான்றிதழ்ப்படிகளையே அனுப்பவேண்டும். மூலச் சான்றிதழ்களை அனுப்பக் கூடாது. சான்றிதழ் படிகள் இணைக்காத விண்ணப்பங்கள் மறுக்கப்படும்.

2. விண்ணப்பங்கள் முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை-15 என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. ஒருவரே இரண்டு விண்ணப்பங்களை இப்பயிற்சியில் சேர அனுப்பக்கூடாது· அவ்வாறு அனுப்பினல் இரண்டு விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

4. விண்ணப்பங்கள் சரியாக நிறைவு செய்யப் பெறுவிடினும், தவறாக நிறைவு செய்யப் பெற்றிருப்பினும் அவை தள்ளுபடி , செய்யப் பெறும்.

5. விடா அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்கள் விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப் படாமல் பின்னர் அனுப்பப்பட்டால் அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

ஏல விற்பனை

தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை

எம்.எஸ்.எக்ஸ். 7932 ஆம்புலன்ஸ் வண்டி, (Fargo) ஒன்று தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவ மனை அலுவலகம், அயனாவரம், சென்னை-23-ல் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25-ம் நாள் பொது ஏலத்தில் விற்கப்படும்.

வாகனத்தை மேற்கண்ட இடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

விற்பனை நிபந்தனை பிரதிகள் கண்காணிப்பாளர், தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை அயனாவரம், சென்னை-23ல் பெறலாம்.

கண்காணிப்பாளர்.

(த. 106)

ஒப்பந்தப் புள்ளி

துறையூர் நகராட்சி

(திருச்சி மாவட்டம்)

துறையூர் நகரில் உள்ள குரங்குகளைப் பிடித்து மாற்ற மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறையூர் நகராட்சி தனி அலுவலரிடம் 31—8—1972 வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்குள் தாக்கல் செய்யக் கோரப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிகளுடன் ரூபாய் 10 டிபாசிட்டு ரொக்கமாகக் கட்டவேண்டும். இதர நிபந்தனைகளுக்கு துறையூர் நகராட்சி தனி அலுவலரிடம் விண்ணப்பித்து தெரிந்து கொள்ளலாம்.

சையத் அப்துல் காதர்,
தனி அலுவலர்.

(த. 105)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் யூனிட்
(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள).

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலையில் ஒரு கேண்டீனுடன் இணைந்த ஓய்வுக் கூடம் (Canteen-cum-Rest shed) கட்டும் வேலைக்காக, மாநிலம் மத்திய அரசுத் துறைகளில் பதிவு செய்துள்ள முதல் அல்லது இரண்டாம் வகுப்பு ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—8—1972 மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

சுமார் மதிப்பீட்டுத் தொகை.—ரூபாய் 1,25,000.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை.—2½ சதவீதம் (ஒப்பந்தத் தொகையில்).

வேலை முடிக்க வேண்டிய காலம்.—4 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள், பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் அஞ்சல், (வழி) ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம் அவர்களிடம், செட் ஒன்றுக்கு ரூபாய் 20-70 (திருப்பித் தரப்படமாட்டாது) 10—8—1972 முதல் 29—8—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணிவரை பெறலாம்.

பொது மேலாளர்.

(த. 102)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—திருவைகுண்டம் அணைக்கட்டு தெற்கு முக்கிய வாய்க்காலில் எல்.எஸ். 6.455 கி.மீ. லிருந்து 7.455 கி.மீ. வரை பிரிகாஸ்ட் சிமெண்ட் காங்கிரீட் பலகைகள் செய்து தளம் அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, புராஜெக்ட்ஸ் வட்டம், பாளையங்கோட்டை, அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—9—1972 மாலை 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்.—கே. 2.

கட்டுத் தொகை.—ரூபாய் 3,470.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.—ரூபாய் 10.

விற்பனை வரி.—0.35 காசு.

வேலை முடிக்கவேண்டிய காலம்.—3 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (திருப்பித்தரப்படமாட்டாது) எந்தக் கருவூலத்திலாவது "P.W. III. O-R. Receipts", என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருவைகுண்டம் கோட்டம், திருவைகுண்டம் அவர்கள் கணக்கில் மற்றும் விற்பனை வரி "XII Sales Tax (b) Receipt Under the State Sales Tax Act General Sales Tax என்ற தலைப்பிலும் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் வடிவம் மற்றும் இதர விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், அலுவலகம், பொதுப் பணித்துறை, புராஜெக்ட்ஸ் வட்டம், பாளையங்கோட்டை திருநெல்வேலி-2ல் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ, 2—9—1972 முதல் 8—9—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில், மேலாளர் அவர்களுக்கு விண்ணப்பத்துடன் ஒப்பந்தப்பத்திரங்களின் விலை மற்றும் விற்பனை வரி செலுத்திய ரிசிப்டட் சாலானையும் அனுப்பிப் பெறலாம். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் பொதுவாகக் கவனிக்கப்பட மாட்டாது.

மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 94)

வேலை வாய்ப்பு

வேலூர், ஆடைகள் மற்றும் ஹோல்டால் செய்யும் பயிற்சி நிலையத்தில், துணி வெட்டுபவர் (Master Cutter) (Garments) பதவிக்குக் கீழ்க்கண்ட தகுதிகளைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 8-ம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேறியிருக்க வேண்டும்.

2. அரசு தொழில் நுட்பத் தேர்வு தையலில் (Tailoring) தேறியிருக்க வேண்டும். அல்லது துணி வெட்டுதல் மற்றும் தையலில் ரீசெட்டில்மெண்ட் மற்றும் வேலை வாய்ப்புப் பொது இயக்குநரால் வழங்கப்பட்ட டிப்ளமா ; அல்லது துணிவெட்டுதல் மற்றும் தையலில் வக்கேசனல் வியாபாரத்திற்காக (Vocational Traders) தேசியக் கவுன்சிலால் வழங்கப்பட்ட வர்த்தக சர்ட்டிபிகேட் ; மற்றும்

3. இரண்டாண்டு காலத்திற்கு குறையாத செய்முறைப் பயிற்சி அனுபவம்.

4. மின்சாரத்தில் இயங்கும் தையல் மெசின்களை இயக்கக் கூடிய திறமை பெற்றிருக்க வேண்டும்.

வயது : —நியமனத்தின்போது 30 வயது பூர்த்தியடைந்திருக்கக் கூடாது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது தாழ்த்தப்பட்ட மலைச் சாதியினர் விசயத்தில் வயது வரம்பு 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

சம்பள விகிதம்.—ரூ. 250—10—400 டியர்னஸ் அலவன்ஸ் மற்றும் வீட்டுவாடகை அலவன்ஸ்கள் நடைமுறை ஆணைகளின்படி பெற அனுமதிக்கப்படும்.

மனுக்களில் பெயர், வயது, பிறந்த தேதி, பொதுக்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி மற்றும் முன் அனுபவம் ஆகிய முழு விவரங்கள் குறிப்பிட்டு போதுமான டெஸ்டிமோனியல்ஸ் மற்றும் சர்ட்டிபிகேட்களின் பிரதிகளை இணைத்து, கீழ் கையொப்பமிட்டவருக்கு 31—8—1972 மாலை 5-00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு, பெயரைக் குறிபிடாமல் பதவியைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

மனுதாரர்கள் அழைக்கப்படும் பொழுது, சென்னையில் நேரடி பேட்டிக்குத் தங்கள் சொந்தச் செலவில் வரவேண்டும்.

ஜெயலெட்சுமி ஏ. ராவ்,
அப்ரூவ்டு பள்ளி மற்றும் விஜிலன்ஸ் சர்வீஸ்
இயக்குநர்.

26-எ, பன்தீன்சாலை, எழும்பூர், சென்னை-8.
(த-62.)

ஒப்பந்தப் புள்ளி

போடிநாயக்கனூர் நகராட்சி

ரோடு வேலைகள் இருபத்தொன்பது ரூ. 1,51,350 மதிப்பீட்டில் பாலங்கள் கட்டுதல் எட்டு ரூ. 52,700 மதிப்பீட்டில், கட்டட வேலைகள் நான்கு ரூ. 59.600 மதிப்பீட்டில் வடிகால் பழுதுபார்க்கும் வேலை ரூ. 4,400 மதிப்பீட்டில் வேலைகள் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 1972-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 25-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவைகள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

(த. 82)

அதிக குழந்தை இப்போது வேண்டாம்!
இதோ இன்னொரு சாதனை!
தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!
நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுத் புதியபாதை"!
தமிழ் நாட்டில் உருவாகிறது!
தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை
குடும்ப நலத்திட்டப் பணியில்
சிற்றூர்!
குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!
பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்
தென்னார்க்காடு மாவட்டம்
பூத்துறை
தமிழரசு
குடும்பநலத்துறை
இரண்டுக்குப் மேல் எப்போதும் வேண்டாம்!!

கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி

கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத் தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்

கதர் கிராமத்
தொழில் துறை
2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்...

ஒப்பந்தப் புள்ளி

சங்கரன் கோவில் நகராட்சி

ரேடியோக்களும் லவுட் ஸ்பீக்கர்களும் சப்ளை செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சங்கரன் கோவில் நகராட்சி ஆணையர் அவர்களால் 28-8-72 தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பாரம் நகராட்சிக் கருவூலத்தில் ரூ. 1.03 செலுத்திப்பெற்றுக்கொள்வதுடன் அனுப்பும்போது ரூ. 50 வைப்புத் தொகையுடன் அனுப்ப வேண்டும். மற்ற விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

விவரம்.

1. ரேடியோக்கள் .. .. எண்ணம் 6
   6 வால்வு, 4 பேண்ட், பியூர் ஏ.ஸி. வால்வுகள் 81 சீரியஸ், உட்டன் கேபினெட், பிக்கப், எக்ஸ்ட்ரா ஸ்பீக்கர் ஜாக்கட்ஸ். பல மேக்குகளின் விலை விவரம் குறிப்பிடவும்.
2. ஹாரன் .. .. எண்ணம் 6
   8 ஓம்ஸ் பால்கர் யூனிட்.
3. ஸ்பீக்கர் .. .. எண்ணம் 1
   3 ஓம்ஸ் மாப்பெட்டியுடன் கூடியது 10½" எலிப்டிக்கல், பெர்மனெண்ட் மாக்னெட்.

வெ. சானகிராமன்,
ஆணையர்.

(த. 83)

அறிவிப்பு

வேளாண்மைத் தொழில்கள் இணையகம்
சென்னை-32.

"தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு"
டிராக்டர்களை வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக இறக்குமதி செய்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

வெளிநாடுகளில் உறவினர்கள் உள்ள விவசாயிகள் தம் சொந்த உபயோகத்திற்காக அந்த உறவினர்களிடமிருந்து வெளிநாட்டு டிராக்டர்களை நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று இந்திய அரசு திட்டம் வகுத்துள்ளது. 31-3-1973 தேதிக்குள் இந்தத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு டிராக்டர்களைக் கீழ்க்கண்ட விதிகளுக்குட்பட்டுநன்கொடையாகப் பெறலாம்.

1. டிராக்டர்களை வெளிநாட்டிலிருந்து நன்கொடையாக அனுப்புபவர்கள் பெறும் விவசாயின் தந்தை, கணவர், மகன், உடன்பிறந்தோர், தாயார், மனைவி அல்லது மகளாக இருக்கலாம். மேற்கண்ட உறவினர் குறைந்தது ஒரு ஆண்டுக் காலமாவது வெளிநாட்டில் குடியிருந்திருக்க வேண்டும். நல்ல ஊதியம் பெறுபவராகவும் இருக்க வேண்டும்.

2. இத்திட்டத்தின் கீழ் ஒரு விவசாயி ஒரு டிராக்டர்தான் இறக்குமதி செய்யலாம்.

3. நன்கொடையாக வரும் டிராக்டருடன் அதன் மதிப்பில் 30 சதவிகிதத்திற்கு மேற்படாமல் உதிரி பாகங்கள், இணைக் கருவிகள், ஆகியவற்றையும் தருவிக்கலாம்.

4. டிராக்டரின் விலை, உதிரிபாகங்கள், இணைக் கருவிகளின் விலை, இங்கு விவசாயிக்கு டிராக்டர் வந்து சேரும் வரை செலவுகள், யாவையும் வெளிநாட்டிலுள்ள உறவினரே ஏற்க வேண்டும். நம் நாட்டிலிருந்து மேற்படி இறக்குமதிக்காகப் பணம் யாதும் அனுப்ப அனுமதிக்கப்பட மாட்டாது.

மேற்படி திட்டத்தின் கீழ் டிராக்டர்களை நன்கொடையாகப் பெற விரும்புபவர்கள் விண்ணப்பத்தாள் மற்றும் விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு உடனடியாக எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் :—

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், "அக்ரோ இல்லம்", தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

மேலாண்மை இயக்குநர்

(த. 85)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

நேரடி ஆள் சேர்ப்பின் மூலம் கீழ்க்கண்ட பதவிகளுக்காக 1972 டிசம்பரில் நடைபெறும் எஸ். எஸ். எல். சி. ஸ்டேண்டர்டு போட்டித் தேர்வில் சேர்வதற்கு, வெளியில் விடப்பட்ட அல்லது 1972-73 ல் வெளியில் விடப்படும் என்று எதிர் பார்க்கிற எமர்ஜென்சி கமிசண்டு அலுவலர்கள் குறுகிய காலப் பணி செகுலர் கமிசன் அலுவலர்களிடமிருந்து மனுக்கள் 1972 செப்டம்பர் மாதம் 6-ம் தேதி புதன்கிழமை மாலை 5-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

1. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் (Junior Assistants) இதற்கு காப்புத் தொகை கட்ட வேண்டியது இல்லை.

2. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் (Junior Assistants) இதற்குக் காப்புத் தொகை கட்ட வேண்டும்.

3. தமிழ்நாடு தலைமைச் செயலக சர்வீஸ், தமிழ்நாடு அமைச்சக சர்வீஸ், தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸ் மற்றும் தமிழ்நாடு மாநில சட்ட மன்ற தலைமைச் செயலக சர்வீஸில் தட்டெழுத்தர்கள் மற்றும் ஸ்டெனோ டைப்பிஸ்டுகள் (Typists and Steno-typists).

மேற்கண்ட ஏதாவதொரு பதவிக்கு அல்லது எல்லாப் பதவிகளுக்கும் விண்ணப்பிக்கும் மனுதாரர் ஒரே ஒரு மனுவில் மட்டும் அவர் விண்ணப்பிக்கும் பதவி அல்லது பதவிகளுக்கான பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

விளக்கமான விவரங்கள், மற்றும் மனுப்படிவம், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 அவர்களிடம், பதவிப் பெயரை குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதம் எழுதி, போதுமான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட சுயவிலாசமிட்ட உறையை வைத்து அனுப்பிப் பெறலாம். சுயவிலாசமிட்ட உறையை வைத்து அனுப்பாத விண்ணப்பக் கடிதங்களுக்கு எந்த அறிவிப்பும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு.—சுயவிலாசமிடப்பட்ட 23 செ.மீ. (9") நீளமுள்ள உறையில் 35 காசு அஞ்சல் வில்லைகள் + 5 காசு அகதிகள் நிவாரண வில்லைகள் ஒட்டப்பட்டு ," திறந்த அஞ்சல் " (Book post) என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

(த. 96)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

நேரடி ஆள் சேர்ப்பின் மூலம் கீழ்க்கண்ட பதவிகளுக்காக, 1972 டிசம்பரில் நடைபெறும் எஸ். எஸ். எல். சி. ஸ்டேண்டர்டு (Group IV Services) போட்டித் தேர்வில் சேர்வதற்கு மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் 1972 செப்டம்பர் 6-ஆம் தேதி புதன்கிழமை மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் (Junior Assistants) இதற்குக் காப்புத் தொகை கட்ட வேண்டியதில்லை.

குறிப்பு.—சபார்டினேட் சர்வீஸ்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசு அல்லாத அமைப்புகளில் மற்ற குறிப்பிடப்பட்டவைகளில் இருப்பவர்களும் இந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். பதவி உயர்வு அல்லது மாற்றம் அல்லது உறுதி செய்தல் அல்லது அதிகச் சம்பளம் பெறுவதற்கு அவர்களைத் தகுதியாக்கிக் கொள்வதற்காக, எஸ். எஸ். எல். சி. ஸ்டேண்டர்டில் பொதுக் கல்வித் தேர்வு நடைபெறும்.

2. தமிழ்நாடு அமைச்சக சர்வீஸில் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் இளநிலை உதவியாளர்கள் (Junior Assistants) இதற்குக் காப்புத் தொகை கட்டவேண்டும்.

3. தமிழ்நாடு தலைமைச் செயலக சர்வீஸ், தமிழ்நாடு மாநில சட்ட மன்ற தலைமைச் செயலக சர்வீஸ், தமிழ்நாடு அமைச்சக சர்வீஸ் மற்றும் தமிழ்நாடு ஜுடிசியல் அமைச்சக சர்வீஸில் தட்டெழுத்தர்கள் மற்றும் ஸ்டெனோ-டைப்பிஸ்டுகள் (Typists and Steno-typists) மேற்கண்ட மூன்று வகைப் பதவிகளில் ஒவ்வொரு நியமனத்திற்கும் தனித்தனி மனுக்கள் கொடுக்கப்படவேண்டும்.

பொதுக் கல்வித் தேர்வில் சேர விருப்பமுள்ள சபார்டினேட் சர்வீஸ்களின் உறுப்பினர்கள் இளநிலை உதவியாளர் பதவிகளுக்குக் கொடுக்கப்பட்ட படிவத்திலேயே தங்கள் மனுக்களை சமர்ப்பிக்கலாம். இதற்குக் காப்புத் தொகை கட்ட வேண்டியதில்லை.

விளக்கமாக விவரங்கள், மனுப்படிவம், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 அவர்களிடம், பதவிப் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதம் எழுதி, போதுமான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட சுயவிலாசமிட்ட உறையை உடன்வைத்து அனுப்பிப் பெறலாம்.

சுயவிலாசமிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பப்படாத விண்ணப்பக்கடிதங்களுக்கு எந்த அறிவிப்பும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு.—ஒவ்வொரு பதவிக்கும் 23 செ. மீ. நீளமுள்ள சுய விலாசமிட்ட உறையில் 45 காசு அஞ்சல் வில்லைகள் +5 காசு அகதிகள் நிவாரண வில்லைகள் ஒட்டப்பட்டு திறந்த அஞ்சல் (Book post) என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

(த. 100)

குடிசை மாற்று வாரியம்

குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, நிருவாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-2, 35/37 ஜஹாங்கீர் தெரு, 2-வது லேன் பீச், சென்னை-1 அவர்களால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 7-9-1972 மாலை 3.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள், அதே நாள் மாலை 3.30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம் கோட்டம் எண். 2 அவர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது எஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை,	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனைவரி (திருப்பித்தரப்பட மாட்டது).
			ரூ.	ரூ.
1. தாகூர் நகர் குடிசை மாற்றுத் திட்டம், மாநகராட்சிக் கோட்டம்-54-ல் நான்கு அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்—				
பிரிவு 1.—				
ஒன்றில் 32 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் .. ஒன்றில் 24 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் .. ஒன்றில் 16 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் ..	10 மாதங்கள்	மொத்தத் தொகை.	6,700	20 + விற்பனைவரி·
2. தாகூர் நகர் குடிசை மாற்றுத் திட்டம் மாநகராட்சிக் கோட்டம் எண். 54-ல் நான்கு அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்—				
பிரிவு 2 —				
ஒன்றில் 32 குடியிருப்புகள் கொண்ட இரண்டு பிளாக்குகள் ஒன்றில் 16 குடியிருப்புகள் கொண்ட ஒரு பிளாக் ..	10 மாதங்கள்.	மொத்தத் தொகை.	7,000	20 + விற்பனை வரி·

ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர், அலுவலகம், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-2, 35/37, ஜஹாங்கீர் தெரு, 2-வது லேன் பீச், சென்னை-1ல் 16-8-1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை, கோட்ட அலுவலகத்தில், ஒப்பந்தப் பத்திரங்கள் விலையைப் பணமாகச் செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் துறையில் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் தாமாக வந்தாலோ, தவறி விட்டாலோ துறை பொறுப்பேற்காது.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

கட்டுத்தொகை ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஏதாவது ஒரு வடிவத்தில் இருக்க வேண்டும். கட்டுத்தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

(த. 59)

நிருவாகப் பொறியாளர்.

மின்சார வாரியம்

எண்ணூர் அனல்மின் திட்டம்

குறிப்பு எண் எ.ஈ.பி. 103 to 108.

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் உறையில், **Ennore Thermal Scheme, supply of Materials, AEP 103—108** எனவும் மற்றும் ஒப்பந்த தாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க்கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 2–30 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3–00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருட்கள், குறிப்பு எண், முன்பணம், முடிவு தேதி முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

Serial number and description.	Specn. No.	E.M.D. Payable. Rs.	Cost of Tender Set. Rs.	Due date.
1. Cast steel slide valves, globe valves, non-return valves, welded-on-valves, Flanged valves, etc.	AEP. 103	1,000	5	1st September 1972.
2. Foko (iron/Constantan) Compensating leads, each core area 1·5 sq. mm.	AEP. 104	1,000	5	1st September 1972,
3. 6 in. dia. G.I. Pipes	AEP. 105	1,000	5	8th September 1972.
4. Maxpull pulling and lifting machines, 5 tons and 3 tons lifting capacity.	AEP. 106	400	5	8th September 1972.
5. Spares for Standard 20. vehicles ..	AEP. 107	1,200	5	15th September 1972.
6. Wolf FF 2 and GQ 4 grinders and Flexible Shafts.	AEP. 108	600	5	15th September 1972.

3. ஒப்பந்தப் பத்திரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து 14—8—1972 தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில்லாத ஒப்பந்தங்களும், முடிவு தேதியிலும் நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ் கையொப்பமிட்டவரே உரிமையாவார்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்த பத்திரங்களும் மாற்றத்தக்கவை அல்ல.

தொலைபேசி எண் : 59556 (5 Lines)
தந்தி : ENTERMAL

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

குடிசைப் பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் அண்ணா நகர் ஆம்லியன் (புதிய ஆவடி சாலை அருகே) திட்டத்தின் கீழ் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 18-8-1972 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும் படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும் வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

வ.எண்.	பிரிவு எண்.	வேலை விவரம்.	வேலையின் தோராய மதிப்பு.	ஒப்பந்த வடிவம்.	முன்வைப்புத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.
			ரூ.		ரூ.	
1.	I	நான்கு அடுக்கு குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள்— 64 குடியிருப்புகள்	3.70 இலட்சங்கள்.	எஸ்.எஸ்.	5,550	ரூ. 15 மற்றும் விற்பனைவரி (திருப்பித்தரப் பட மாட்டாது) ஒவ்வொரு பிரிவுக்கும்.
2.	II	64 குடியிருப்புகள்	3.70 இலட்சங்கள்.	எஸ்.எஸ்.	5,550	,,
3.	III	64 குடியிருப்புகள்	3.70 இலட்சங்கள்.	எஸ்.எஸ்.	5,550	,,
4.	IV	64 குடியிருப்புகள்	3.70 இலட்சங்கள்.	எஸ்.எஸ்.	5,550	,,
5.	V	64 குடியிருப்புகள்	3.70 இலட்சங்கள்.	எஸ்.எஸ்.	5,550	,,
6.	VI	64 குடியிருப்புகள்	3.70 இலட்சங்கள்.	எஸ்.எஸ்.	5.550	,,
7.	VII	56 குடியிருப்புகள்	3.21 இலட்சங்கள்.	எஸ்.எஸ்.	4,815	,,

ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 4-8-1972 முதல் 17-8-1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 18-8-1972 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும் எந்தவொரு ஒப்பந்தத்தையும் எக்காரணமுமின்றி ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராயச்சத்திரம்,
சென்னை-10.

நிருவாகப் பொறியாளர்,
குடிசைப்பகுதி மாற்றுவாரியம்,
கோட்டம் எண். 3, கீழ்ப்பாக்கம்,
சென்னை-10.

(த.93)

மின்சார வரியம்

குறிப்பு எண் SCE. 457.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையின்மேல் குறிப்பு எண், வேலையின் பெயர் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழே கையொப்பமிட்டவரால் குறித்த முடிவு தேதி மாலை 3–00 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 3–30 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

குறிப்பு எண். (1)	வேலையின் பெயர். (2)	முன்வைப்புப் பணம். (3)	ஒப்பந்தப் பிரதி விலை. (4)	முடிவு தேதி. (5)
		ரூ.	ரூ.	
SCE. 457.	எண்ணூர் மின்நிலையம்—இரண்டாம் கட்ட வேலைகள்—எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரசிபிடேடர் 5-க்கு அஸ்திவாரம் அமைத்தல்.	6,000 (ரூபாய் ஆறுயிரம் மட்டும்)	15 (ரூபாய் பதினைந்து மட்டும்).	7-9-1972

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 15 செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. வேலைக்கான முன் வைப்புத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக (அல்லது) கேட்பு உண்டியல் (**Demand draft**) மூலம் செலுத்தி ரசீதை ஒப்பந்தத்தில் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும், குறித்த தேதி காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ (அல்லது) ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் அவ்வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு காணமல் போனால் மின்சார வாரியம் பொறுப்பல்ல, ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

தந்தி : ENTERMAL
தொலைபேசி எண் : 59556 (5 Lines).

மேற்பார்வைப்பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

(த.97)

ஒப்பந்தப் புள்ளி

சிறு தொழில் கழகம் லிமிடெட்

35/2, உட்ஸ் சாலை, சென்னை-2.

டான்சி சைட் கடை, திருவெறும்பூர், திருச்சி-14-ல், செப்டம்பர், 1972 முதல் ஓராண்டு காலத்திற்கு போக்குவரத்து ஒப்பந்ததாரர் (Contractor) நியமனம் செய்வதற்கு 26—8—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவத்தின் குறிப்பிடப்பட்ட பாரம் ஒப்பந்ததாரர்களுக்கான அறிவிப்புகளுடன், துணை மேலாளர் (Structurals) தமிழ்நாடு சிறு தொழில் கழகம் லிமிடெட், 35/2, உட்ஸ் சாலை, சென்னை-2-ல், இந்த அலுவலகத்தில் சீனியர் கணக்கு அலுவலர் (Cash) அவர்களிடம், விற்பனைவரி உட்பட ரூ. 5-50 பணமாகவோ அல்லது மணி ஆடர் மூலமாகவோ செலுத்திப்பெறலாம். ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில், டான்சி சைட் கடை, திருச்சி, போக்குவரத்து ஒப்பந்ததாரராக 26—8—1972-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி என்று குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 26—8—1972 மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

நிருவாக இயக்குநர்.

(த. 61)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க்கண்டவைகளை வழங்குவதற்காக, தலைமைப் பொறியாளர் (குடிநீர் வடிகால் வாரியம்) அவர்களால், அவர்தம் அலுவலகம் பொதுப் பணித்துறை கட்டடம், சேப்பாக்கம், சென்னை-5-ல் குறிப்பிடப்பட்ட படிவத்திலான மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 20—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

வேலையின் விவரம்—இந்த மாநிலத்தின் கிராம நீர் வழங்கு திட்டத்திற்காக டர்பைன் பம்பு செட்கள் தேவையான உபகரணங்களுடன் (Different Capacities) வழங்குதல் (Supply and delivery)

கட்டுத்தொகை—ரூ. 10,000 (டிமாண்டு டிராப்ட் அல்லது பாங்கு காரண்டி வடிவில்).

வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 செட் ஒன்றுக்கு விற்பனைவரி உட்பட)

ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், Bus (Unicef) B—33, வட கிழக்கு விரிவு, தில்லை நகர், திருச்சி-18-ல் பத்திரங்கள் விலை பணமாகவோ அல்லது மணி ஆடர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப்பத்திரங்கள் 7—8—1972 முதல் 16—9—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், சேப்பாக்கம், சென்னை-5.

(த. 88)

விளம்பரம்

வீட்டு வசதி வாரியம்

கோடம்பாக்கம் புதூர் பகுதியில் மாத வாடகை ரூ. 135-ல், மூன்று ஃபிளாட்ஸ்கள் (Flots) உடனடியாக ஒதுக்குவதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஃபிளாட்டிலும் தங்கும் வசதி கீழ்க்கண்டபடி உள்ளது.

ஒரு ஹால்.

ஒரு படுக்கை அறை.

ஒரு கிச்சன்-சாப்பாட்டு வசதி இணைந்த குளிக்கும் அறை & F.O.L. முதலில் வருபவர்களுக்கு மனைகள் முதலில் ஒதுக்கப்படும்.

டி. வி. வர்கதேவன்,
தலைவர்,
வீட்டு வசதி வாரியம்.

(த. 101)

ஒப்பந்தப் புள்ளி

துறையூர் நகராட்சி

(திருச்சிராப்பள்ளி மாவட்டம்).

கீழ்க்கண்ட வேலைக்காக, கீழ்க்கையொப்பமிட்டவருக்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31—8—1972 மாலை 4-00 மணிக்கு அல்லது முன்னர் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரங்கள், நகராட்சி அலுவலகத்தில் ரூ. 25.88 காசு செலுத்திப் பெறலாம். ஒப்பந்தப்புள்ளிகளுடன் குறிப்பிடப்பட்ட கட்டுத்தொகை இணைக்கப்பட வேண்டும், ஒப்பந்தப்புள்ளிகள் 31—8—1972 மாலை 4-30 மணிக்கு, ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்கள், இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெறலாம்.

திருச்சி மாவட்டம், துறையூர் பஸ் நிலையத்தில் ஸ்டால் மற்றும் ஓட்டல் கட்டுதல், மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,68,000, ஒப்பந்த மதிப்பு ரூ. 1,02,858, கட்டுத் தொகை ரூ. 2,600.

சையட் அப்துல்காதர்,
சிறப்பு அலுவலர்.

(த. 67)

வேலை வாய்ப்பு

சிறைத் துறை

சேலம் மத்தியச் சிறைச்சாலையில் இயங்கும் அலுமினியப் பட்டறையில் ஸ்கில்டு ஒர்க்கர் கிரேடு 1 வேலைக்கமர்த்துவதற்காகத் தகுதிப் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இவ்வேலைக்குத் தேவையான தகுதி சம்பளம் முதலிய விவரங்கள் பின்வருமாறு :—

1, வயது	35 வயதுக்குள் இருக்கவேண்டும்.
2. இதரத் தகுதிகள்	5 ஆண்டுகள் ஏதேனும் ஒரு ஸ்பின்னிங்கில் அலுமினியப் பாத்திரங்கள் செய்யும் தொழிற்சாலையில் வேலை செய்ததற்கான சான்றிதழ்.
3. சம்பளம்	200—5—10—300 கிராக்கிப்படி முதலியவைகள் விதிப்படி.

விண்ணப்பங்கள் கீழ்க்கையொப்பமிட்டவருக்கு 21–8–72-ஆம் தேதிக்குள் வந்தடைய வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்தச் செலவில் சேலம் மத்தியச் சிறையில் நடைபெறவிருக்கும் பேட்டிக்கும்தேர்விற்கும் வர ஆயத்தமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

கு. வித்தியாசாகரன்,
கண்காணிப்பாளர்.

(த. 98)

தேர்வு

தொழில் நுட்பத் தேர்வுகள்

நவம்பர்—1972.

1972–ம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற இருக்கும் மேற்படி தேர்வில் சங்கீதம், நடனம், ஓவியம், அச்சுக்கலை, புத்தகம் கட்டுதல் மேலும் தையற்கலை முதலிய பாடங்களில் தேர்வு எழுத கட்டணம் செலுத்தி அபராதமில்லாமல் விண்ணப்பிக்க கடைசி நாள் 31–8–1972. ஒவ்வொரு தேர்வு மனுவுக்கும் அபராதத் தொகை ரூ. 1 செலுத்தி விண்ணப்பிக்கக் கடைசி நாள் 15—9—1972. மேற்படி தேதிக்கு மேல் வரும் தேர்வு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தேர்வு மனுக்கள் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூலத்தில் பெற்றுக்கொள்ளலாம். நேரடியாக தேர்வு மனுக்கள் வேண்டுவோர் 0·20 காசு அஞ்சலகவில்லையுடன் 0·05 காசு அகதி நிவாரண வில்லையும் சேர்த்து ஒட்டிய சுயமுகவரியிட்ட உறையுடன் இணைச் செயலாளர், அரசுத் தேர்வு ஆணையர் அலுவலகம், சென்னை-6 அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ப. வெ. அப்புபிள்ளை,
இணைச் செயலாளர்.

அரசுத் தேர்வு ஆணையர் அலுவலகம், சென்னை–6.

(த. 103)

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.

CriterionCO.2678TM B

பதிவு எண். M. 8676

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

பிள்ளைகளுக்குப் பிறந்தநாள் பரிசு!

ரூ. ஒரு **லட்சம்** பரிசு பெறலாம்

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 7,00,000

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்: **31-8-1972**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.
*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்

தமிழரசு

செப் 1. 1972 35 காசு

1-SEP 1972
7365/55
389



செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டுப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT-3094



தமிழரசு

மலர் 3. 1-9-1972 இதழ் 5.



இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள் அடங்கிய நள்ளிரவு (14, 15-8-72) சட்டசபைக் கூட்டத்தில், மேதகு தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் ஆற்றிய உரை.

தியாகிகளுக்கு நன்றி!

மேதகு ஆளுநர் கே.கே.ஷா

ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்தியாவின் தலை எழுத்தை நிர்ணயித்த நாளாகும். இந்நாள், இந்திய மக்களின் குறிக்கோள்களையும், அவாவையும் உருவகப்படுத்துகிறது.

இந்தச் சிறப்புமிகு நாளில், இந்தியாவின் மற்ற பகுதிகளைப் போல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நாட்களைக் கொண்டாடப் பேரார்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் தமிழ்நாடு முழுவதும் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளது. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரும் செய்த தியாகங்களையும், நாட்டுக்காக அவர்கள் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டதையும் இன்று நாம் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

இந்த மண்ணில் பிறந்த பெருமகன்களும், மகள்களும் செய்த மாபெரும தியாகங்களை நினைவு கூர்வதில் தமிழ்நாடு அரசு எவருக்கும் இரண்டாவதாக இல்லை. இந்திய அரசால் வழங்கப்பெறும் தாமிரப் பத்திர விருது பெற 81 விடுதலைப் போராட்ட வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில் மேலும் பல விடுதலைப் போராட்ட வீரர்கள் பெருமைப் படுத்தப்படுவார்கள். அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் பாராட்டு மரியாதை செலுததவும், நன்றி கூறவும் நான் உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன். நன்றி மறவாதவர்களான தமிழ்நாட்டு மக்கள் என்றும் உங்களுடைய பணியை நன்றியுடன் நினைவு கூர்வார்கள், என அத் தியாகிகளுக்கு உறுதி கூறுகிறேன்.

தமிழ்நாடு, தொழில் மேம்பாட்டைப் பொறுத்த வரையில் மூன்ருவது இடத்தைப் பெற்றுள்ளது. பசுமைப் புரட்சி மலர குறிப்பிடத் தகுந்த பங்கினைத் தமிழ்நாடு செய்து வருகிறது. தமிழ்நாட்டில் ஏக்கருக்கு உற்பத்தியாகும் அரிசி விளைச்சலே, இந்தியாவிலேயே மிகவும் அதிக அளவாகும். மின்சாரம் உற்பத்தி செய்வதிலும், வழங்குவதிலும், அதுபோலவே கிராமப் புறங்களுக்கு மின்சார வசதி அளிப்பதிலும் நாம் இணையற்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளோம்.

நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கைப் பாதையில் நாம் செல்கின்ருேம். விரைவான மேம்பாடு அடைவதற்கு எல்லா வகையான ஆர்வமும் தமிழ்நாட்டில் காணக் கிடைக்கிறது. குடிசைமாற்றுதல், கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி, பிச்சைக்காரர் மறுவாழ்வு போன்ற தீவிர புனரமைப்புத் திட்டங்கள், நமது திட்டங்களின் மூலாதாரமாக அமைந்துள்ள பொது மனிதனின் நல்வாழ்வுக்கு உதவுகின்றன. ஏழை எளிய மக்களின் வாழ்வில் குறிப்பிடத் தகுந்த உயர்வை ஏற்படுத்த நமது சக்திகளை ஒருமுகப்படுத்துகின்ருேம்.

சட்டமன்றம்தான் ஜனநாயக வாழ்வின் மூச்சாக இயங்குகிறது. அதன் குரல்களே, மக்களின் நல்வாழ்விற்கான கொள்கைகளாகவும் திட்டங்களாகவும் உருவாகின்றன. அரசின் நாடாளுமன்ற முறை நன்கு செயல்படுவதால், முழுமையான மன நிறைவு பெற்றுள்ளதைத் தமிழ்நாடு உணர முடிகிறது. சட்ட மன்ற உறுப்பினாகள், கடந்த 25 ஆண்டுகளில், நாடாளுமன்ற நடைமுறைகளையும், பாரம்பரியத்தையும் மதிப்பதிலும், காப்பதிலும், அதன் தரத்தைப் பெருமைப்படுத்துவதிலும் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்துள்ளனர். இந்த 25 ஆண்டுகளில் நடைபெற்ற எல்லாப் பொதுத் தேர்தல்களும் அமைதியாகவே நடைபெற்றுள்ளன. அப்பொதுத் தேர்தல்கள், ஓட்டுரிமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாக்காளர்கள் அதிகமாகி வருவதை உணர்த்தியுள்ளன. கூடுமான வரையில் முழக்கங்கள் நிறுத்தப்பட்டுள்ளன; பயமோ அல்லது விருப்போ அன்றி எல்லா கருத்துக்களையும் கேட்பதற்கு வசதியளித்து, ஓட்டளிக்கும் முறையை வாக்காளர்களுக்குக் கற்பிக்க எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காக்க, எந்தவிதத் தியாகமும் செய்யத் தயங்கமாட்டோம் என்ற புனித, சிறப்பான, உறுதிமொழி எடுத்துக்கொள்வோமாக. பிரிக்க முடியாத ஒருங்கிணைப்பு என்னும் மந்திரத்தை நமது குருதியில் ஏற்றிக்கொண்டு, இந்தியா ஒன்றாக வாழ வேண்டுமென்ற தணிக்க முடியாத தாகத்தை ஏற்படுத்திக்கொள்வோமாக. நாம் எல்லாரும் இந்தியாவின் புகழ் பாடுவோமாக. நாம் கனவில் கண்ட பாரதத்தை நிர்மாணிப்போமாக. அங்கு இல்லாமை என்பது இல்லாது செய்து, செழுமை என்பது என்றும் நின்று நிலவச் செய்வோமாக. வணக்கம்.

தியாகத்தைப் போற்றிடுவோம்!

இந்திய சுதந்தரத் திருநாளுக்கு இன்று வயது
இருபத்தைந்து. முழுக்காளைப் பருவம்.
வெற்றித் திமிலுடன் பாய்ந்து வெள்ளிச்
சிறப்புக்கொண்டாடுகின்ற காளைப்பருவம்.
இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட
விழுப்புண் பெற்றோர் - விழிகள் இழந்தோர் -
உயிரைத் தந்தோர் - உடைமைகள் பறிகொடுத்
தோர் - இளமை பாழ்த்தோர் - செக்கிழுத்
தோர் - [illegible] காயம் [illegible] -
[illegible] பலியானோர் - துப்பாக்கிக்
குண்டுக்கு இரையானோர் - தூக்குக்
கயிற்றை முத்தமிட்டோர் -
அனைவரது [illegible]
அன்னவர்க்கு மல்லிகை தூவி
வணங்குகின்றோம். அவர்களில் சிலர்
முதியராகி விட்டனர். சிலர் படமாகி
விட்டனர். சிலர் நம் நெஞ்சில் நிலை
யாகி விட்டனர்.
[illegible] அந்நாள்
[illegible] அளித்திட்ட
பெருமான் காந்தியண்ணல் - அவர் வழி
நின்று தியாக [illegible] தன்னைத்
[illegible] தமிழ்நாட்டுத்
தியாகத்தலைவர் பெருமக்களை -
அணி அணியாய்த் திரண்டெழுந்து
அந்நிய ஆட்சி [illegible] வீர
[illegible] சொற்றமிழ்
[illegible] பெருமக்கள்!
அவரெல்லாம் இந்திய வியர்வை வெள்ளம் -
பெய்திட்ட குருதிமழை - [illegible]
சுதந்திரப் பயிருக்கு உரமாகும்!
பயிர் [illegible] களையின்றிப் [illegible]
தும் - [illegible]
[illegible] - நேரம் பார்த்து
[illegible]
[illegible] விரட்டுவதும்.
இந்த இருபத்தைந்து ஆண்டுகள்
இடைவிடாது பணியாற்றியுள்ளோம்.
இடையூறுகளின் சோதனைகள் எண்ணிலடங்கா!
எதிரிகளின் [illegible]
தடவை!
இத்தனைக்கும் ஈடு கொடுத்தோம் -
இனிய வெற்றிச் செய்தியை இமயத்
தின் நெற்றியிலே பொறித்துக்காட்டி

மு.க.

இன்றுபோல் மட்டுமா;
என்றும்போல் இனியும் தொடர [illegible]
[illegible] என்று பலரும் [illegible].

வெள்ளம் போல் [illegible] [illegible]
உள்ளத்தால் [illegible] — [illegible]
உயிரின் [illegible] [illegible]
[illegible] [illegible] — என
[illegible] [illegible] [illegible] —
உள்ளம் திறந்து [illegible]

இந்நாள் என்று மகிழ்கின்றோம் —
அந்நாளில் [illegible] [illegible] —
[illegible] [illegible] [illegible]
[illegible]!
இப்பேரவையில் இப்பெருமைக்குரிய
[illegible] [illegible] [illegible]
[illegible]!
[illegible] புலவரும் பெருமையினும்
[illegible] [illegible] [illegible]
[illegible]!
[illegible] [illegible], [illegible]
[illegible] [illegible]!
[illegible] [illegible] [illegible]
[illegible]!

என் இதயக் [illegible] [illegible]!
[illegible] [illegible] [illegible]!
[illegible] [illegible] [illegible]! [illegible]
[illegible] [illegible] [illegible]!
பல [illegible] [illegible] [illegible] — [illegible]
[illegible] [illegible] [illegible] — [illegible] —
[illegible] — [illegible] [illegible] — [illegible]
[illegible] — [illegible] [illegible]!

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]!
இவர்களின் சில [illegible] பல
[illegible] இப்பேரவையோன்!

[illegible] [illegible] இன்றும் [illegible]
இப்பேரவை [illegible] பெருமை [illegible]!
இல்லை — இல்லை — இன்னலே இல்லை!
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]? [illegible] [illegible]
[illegible] [illegible]?

இப்பேரவை [illegible] [illegible]
[illegible] இன்று [illegible]
[illegible]!

இன்று நம் நாட்டில் இன்னல் இல்லை —
இன்னல் இல்லை —
[illegible] [illegible] [illegible] இல்லை —

எங்கும் புதுமை!
எதிலும் புதுமை!
அனைத்தும் பொது உடைமை!

[illegible] [illegible] [illegible]
உழுதவனுக்கு [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] —

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible]!

இன்று விழா [illegible] [illegible]
[illegible], விழா [illegible] [illegible]
[illegible] —

அதனோடு, [illegible] மகிழ்ச்சி [illegible]
சொல்லுகின்றேன்.

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] பொதுத்
துறையாய் [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] —
விபரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

அந்தவேளை அறிவித்தவாறு
பொதுத்துறையின் தொழிலாளர்க்கு
போனஸும் [illegible] [illegible] சதவிகிதம்
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] இந்நாளில் தெரிவிக்கின்றேன்.

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] — [illegible] [illegible]
[illegible] — இப்பேரவைக்குக் [illegible]



[illegible] — இன்னும் இப்பேரவைக்கு
[illegible] உயர்த்தி [illegible]
[illegible] வழங்கப்படுமென அறிவிக்
கின்றேன்.

இந்த விழா நாள் [illegible] —
[illegible] [illegible] [illegible]
[illegible] தெரிவிக்கின்றேன்.

* [illegible] [illegible] [illegible]
[illegible] 1½ [illegible]
[illegible] —

⊛ [illegible] [illegible]
[illegible]
[illegible] கிட்ட வேண்டும்!

⊛ [illegible] [illegible]
[illegible] கிட்ட
வேண்டும்!

⊛ [illegible] [illegible]
[illegible] — கிட்ட [illegible]
[illegible] கிட்ட [illegible]
[illegible] கிட்ட [illegible]
விரும்பினார்.

⊛ [illegible] [illegible] கிட்ட
[illegible]
[illegible] கிட்ட வேண்டும்!

⊛ [illegible] [illegible]
[illegible] கிட்ட [illegible]
[illegible] விரும்பினார்!



[illegible]
[illegible]
[illegible]
[illegible].
[illegible] —
[illegible]
[illegible]!
[illegible]
[illegible]!
[illegible]
[illegible]
[illegible]!
[illegible]
[illegible]
[illegible]



[illegible]
என்னவோ நானறியேன்!
[illegible]
[illegible] — [illegible]
[illegible]
[illegible]
[illegible]!
[illegible]
[illegible]
[illegible]!



[illegible]
[illegible]!
• [illegible]
[illegible]!
[illegible]
[illegible]!
[illegible]
[illegible]!
[illegible]
[illegible]!

[illegible] — [illegible] —
[illegible]
[illegible]
[illegible]
செய்வோம்.

மு. [illegible]
15/8/1972.



விடுதலை நாள் விழாவையொட்டி ஆகஸ்டு 14-ஆம் நாளன்று, அகில இந்திய வானொலியின் சார்பில் இராசாசி மண்டபத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'விடுதலை வீரர்கள்' கவியரங்கக் காட்சி.

சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பெற்ற "தன்னிறைவில் 25 ஆண்டுகள்" என்னும் பொருட்காட்சி

உள்ளம் கொள்ளை கொள்ளும்

வெள்ளி விழா நிகழ்ச்சிகள்

இந்தியா விடுதலை யடைந்த 25-ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் பொருட்டு இந்தியா முழுவதும் இந்த ஆண்டு விடுதலை நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கவியரங்கம்

தமிழ் நாட்டின் தலை நகரான சென்னையில் விடுதலை நாளை யொட்டிப் பல்வேறு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 14-8-1972 காலை 10 மணி அளவில் சென்னை வானொலி நிலையத்தின் சார்பில் வெள்ளி விழாக் கவியரங்கம் பொது மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. கவியரங்கத்திற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

'விடுதலை வீரர்கள் என்ற பொதுத் தலைப்பில்' பாரதியார் பற்றி யோகி சுத்தானந்த பாரதியாரும், வ உ. சிதம்பரனாரைப் பற்றித் திரு எஸ். டி. சுந்தரமும், வ. வே. சு. ஐயரைப் பற்றித் திருமதி சௌந்தரா கைலாசம் சார்பில் அவர் மகள் செல்வி பத்மினியும், சுப்பிரமணிய சிவா பற்றி திரு கொத்தமங்கலம் சுப்புவும், சண்பகராமன் பிள்ளையைப் பற்றித் திரு வானம்பாடியும், வாஞ்சிநாதனைப்பற்றித் திரு கே. சி. எஸ். அருணசலமும், திருப்பூர் குமரனைப் பற்றித் திரு தொ. மு. சிதம்பர ரகுநாதனும் பெயர் தெரியாத் தியாகியர் பற்றிக் கவிஞர் கண்ணதாசனும் கவிதை பாடினர்.

மாலை 4 மணிக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறையும், இந்திய அரசினர் செய்தித் துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'தன்னிறைவை நோக்கி 25 ஆண்டுகள்' என்னும் கண்காட்சி மற்றும் கலை விழாவினை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில், சட்டப் பேரவைத் துணைத்தலைவர் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்களும், தமிழ்நாடு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கே. இராசாராம் அவர்களும் பங்கு கொண்டனர்.

ஆளுநர் மாளிகையில் விருந்து

விடுதலைநாள் வெள்ளிவிழாவையொட்டித் தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் கிண்டி ராஜபவனில் ஒரு மாபெரும் தேநீர்விருந்து ஏற்பாடு செய்திருந்தார்.

தமிழக முதல்வர் கலைஞர், அமைச்சர்கள், சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள், தியாகிகள், அரசாங்க அலுவலர்கள், நகரப் பிரமுகர்கள் உட்பட மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் விருந்தில் கலந்து கொண்டனர்.

விழாவில் திருமதி கே. பி. சுந்தராம்பாள், இசைச் சித்தர் சி. எஸ். ஜெயராமன் ஆகியோரின் இன்னிசை விருந்தும், ஸ்ரீவித்யாவின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன.

விழாவில் பங்கு கொண்ட போலீஸ் பாண்டு வாத்தியக் குழுவினருக்கும், சென்னை 'ரெஜிமெண்டல் சென்டர்' பாண்டு வாத்தியக் குழுவினருக்கும் ஆளுநரும் முதல்வரும் கேடயங்கள் வழங்கினர்.

விழாவை யொட்டி ஆளுநர் மாளிகையும், கிண்டி காந்தி மண்டபமும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

போர் நினைவுச் சின்னத்தில்

தலைமைச் செயலகத்தின் அருகே உள்ள போர் நினைவுச் சின்னத்தில் முதல்வர் கலைஞர் விளக்கேற்றி வைத்தார். முதல்வரைச் சென்னை நகர ஷெரீப் திரு எம்.ஏ.எம். இராமசாமி வரவேற்றார். நாட்டுப் பாதுகாப்புப் பணியில் உயிர்நீத்த தமிழ் நாட்டு வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட அந்தச் சின்னத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் மலர் வளையம் வைத்தார். இரு மணித்துளிகள் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்கள்.

மாநகராட்சியில்

விடுதலை வெள்ளி விழாவையொட்டிச் சென்னை மாநகராட்சி மன்றம் வண்ண விளக்குகளால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. முதல்வர் கலைஞர் அவர்கள் அங்கு ஒளி விளக்குகளை ஏற்றிவைத்தார்கள்.

மாநகராட்சி மன்றத்தில், நள்ளிரவுக் கூட்டம் நடைபெற்றது. மேயர் திருமதி காமாட்சி ஜெயராமன் அவர்கள் துணை மேயர் திரு என். வி. என். சோமு அவர்கள், மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் திரு வி. முனுசாமி அவர்கள்,







எதிர்க் கட்சித் தலைவர் திரு குப்புசாமி அவர்கள் ஆகியோர் உரையாற்றினார்கள்.

நள்ளிரவில் சட்டமன்றம்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற இந்திய நாடு விடுதலை பெற்று இருபத்தைந்தாண்டுகள் உருண்டோடிச் சுதந்தர வெள்ளி விழாவைக் கொண்டாடும் வகையிலும், சுதந்தரத்திற்காகத் தங்கள் இன்னுயிரையும் ஈந்தத் தியாக சீலர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், இருபத்தைந்தாண்டுகளுக்கு முந்திய அந்த ஆகஸ்டு 14-ஆம் நாளை நினைவுகூரும் வகையிலும், கடந்த ஆகஸ்ட் 14-ஆம் நாள் இரவு 10.45 மணிக்குத் தமிழ்நாடு சட்ட மன்றத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

சட்ட மன்றக் கூடம் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, அந்தப் பேரொளியில், அவையே பட்டப் பகல் போல விளங்கியது. மேலும், கூடம் முழுவதும் மல்லிகை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, எங்கும் மணம் கமழ்ந்தது.

அவையில், சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் ஒருசேர அமர்ந்திருந்தனர். வலது பக்க முன் வரிசையில் அமைச்சர்களும், இடதுபுற முன்வரிசையில் இரு அவைகளின் எதிர்க்கட்சித் தலைவர்களும் அமர்ந்திருந்தனர்.

10.45 மணிக்குத் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் இரு மன்றங்களின் தலைவர்களாலும், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களாலும், சட்டமன்ற வாயிலில் வரவேற்கப்பட்டார். பின்னர் சட்ட மன்றத்தில், சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு மதியழகன் அவர்களும், மேலவைத் தலைவர் மாண்புமிகு சி. பி. சிற்றரசு அவர்களும் இருபுறமும் வர, அவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று வரவேற்றனர்.

'நீராருங் கடலுடுத்த என்று தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலைத் தொடர்ந்து மேதகு ஆளுநர் சுதந்தர வெள்ளி விழாவின் சிறப்புகளை எடுத்துரைத்தார். (ஆளுநர் உரை பிறிதொரு பக்கத்தில் வெளியிடப் பெற்றிருக்கிறது.)

பிறகு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், சிறப்புரை நிகழ்த்தினார். (உரை பிறிதொரு இடத்தில் வெளியாகியுள்ளது)

அதன்பிறகு, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் பேசினார்கள். உழைப்பாளர் பொதுநலக் கட்சித் தலைவர் திரு எஸ். எஸ். இராமசாமிப் படையாட்சி, மேலவை ஐக்கிய கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். தாமோதரன், தேசியக் காங்கிரஸ் சார்பில் திருமதி டி. என். அனந்தநாயகி, சுதந்திராக் கட்சித் தலைவர் திரு சா. கணேசன், சட்டமன்ற முஸ்லீம் லீக் தலைவர் திரு மொய்தீன், பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். பெருமாள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி, மேலவை ஸ்தாபனக் காங்கிரஸ் தலைவர் திரு கே. இராசாராம் நாயுடு, மேலவைத் துணைத்தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவை முன்னவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மேலவைத் தலைவர் திரு சி. பி. சிற்றரசு, சட்டமன்றத் தலைவர் திரு கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசினர்.

பின்னர், நள்ளிரவு 12 மணிக்கு விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவையினர் அனைவரும் இரு மணித்துளிகள் அமைதியாக எழுந்து நின்றனர். 12-02 மணிக்கு நாட்டு வணக்கத்துடன் வெள்ளி விழாச் சிறப்புச் சட்டமன்றக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

ஆகஸ்ட் 15-ஆம் நாள்

காலையில் கோட்டை கொத்தளத்தில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் நாட்டுக் கொடி ஏற்றி வைத்தார்கள். முதல்வர் கலைஞர் அவர்களும், அமைச்சர்கள் குழுவினரும், சட்டமன்றத் தலைவர் அவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள. கொடி வணக்கத்துக்கு முன்பு நடைபெற்ற இராணுவ மரியாதையைத் தமிழக ஆளுநர் ஏற்றுக்கொண்டார்.

அன்று மாலை 5 மணியளவில் சென்னைக் கடற்கரைச் சாலையில் அணிவகுப்பு ஊர்திகளை ஆளுநர் அவர்களும், முதல்வர் கலைஞர் அவர்களும், மத்திய அரசு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்களும் பார்வையிட்டார்கள்.

ஊர்வலத்தைக் காண மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. வங்கக்கடல் இடம் மாறி வந்து விட்டதோ, தங்கத் தமிழ் நாட்டார் அனைவருமே சென்னைக்குக் குடிபெயர்ந்து வந்து விட்டார்களோ என்று எண்ணுமளவுக்கு மக்கள், பெருங்கூட்டமாகத் திரண்டிருந்தார்கள். உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்துக்குப் பிறகு, அதற்கு அடுத்தபடி என்று சொல்லத்தக்க அளவுக்கு ஒரு பெரும் ஜனத்திரளை 15-ஆம் நாளில் சென்னை சந்தித்திருக்கிறது.

அணிவகுப்பு ஊர்தி ஒவ்வொன்றும் தனிச் சிறப்புப் பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கது. அவை கண்களுக்கு மட்டுமல்ல- கருத்துக்கும் விருந்தளித்ததை மறக்க முடியாது.

அணிவகுப்புக்குப் பின்னர், சீரணி அரங்கில் அனைத்துக் கட்சியினர் பங்கு பெறும் விடுதலை நாள் விழாக் கூட்டம், சீரணி அரங்கில் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய அரசு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களின் உரை பின்வருமாறு :—

தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு ஜெயராம ரெட்டியார் முதலில் பேசினார்.

''நாட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்றாலும் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறோம். அந்த முன்னேற்றம் ஏற்பட அனைவரும் பாடுபட வேண்டும். நமது முதலமைச்சர் நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறார். மேலும் அவர் நற்காரியங்களைச் செய்திட அவர் நலம் பெற்று நீண்ட நாள் வாழ ஆசைப்படுகிறேன்'' என்றார் அவர்.

உழைப்பாளர் பொது நலக் கட்சியின் தலைவர் திரு எஸ்.எஸ். இராமசாமிப் படையாட்சி பேசுகையில்—''வறுமை ஏழ்மை இன்னும் தொலைக்கப்படவில்லை. தொடர்ந்து விரட்டிக் கொண்டிருக்கிறது. பின்தங்கிய மக்கள் இன்னும் முன்னேற வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் பொறுப்பு அரசாங்கம் என்று பழி போடுவதை விடுத்து— கட்சி வித்தியாசங்களை மறந்து பின்தங்கிய மக்களை வறுமையிலிருந்து விடுபடச் செய்வதே நமது கடமை'' என்று குறிப்பிட்டார்.

பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் திரு ஏ. ஆர். பெருமாள் பேசுகையில்—''வாணிகம்நடத்த இந்தியா வந்த வெள்ளையர்கள் நாடு பிடிக்கத் தொடங்கினார்கள். அப்படியும் ஒரு மாதத்தில்- ஓர் ஆண்டில் அவர்களால் இந்தியாவைப் பிடிக்க முடியவில்லை. 90 ஆண்டுகள் கழித்துத்தான் இந்தியாவைப் பிடித்தார்கள். வாளுக்கு வாள் என்று போரிட்ட நிலைமாறி அகிம்சை முறையில் போரிடச் சொன்னார் காந்தியார். சுதந்தரம் வந்தது, வந்த சுதந்தரம்—பின்தங்கிய மக்களையும் வாழ்விக்கும் சுதந்ரமாக இருக்க வேண்டும் என்று பாரதியார் பாடினார். அவரது கனவை நனவாக்கிட நாம் அனைவரும் பாடுபட வேண்டும்'' என்றார்.

மேலவை சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு சா. கணேசன் பேசியதாவது :

''உலகத்திற்கு ஒரு புதுமையாக எம்மான் காந்தி காட்டிய போர்முறை—அகிம்சா முறை. அந்த முறை தந்த வெற்றியே சுதந்தரம். நாம் முழுமையான செழுமைப் பெற்றிருக்கின்றோமா?—என்று நம்மை நாமே கோபித்துக் கேட்டுக் கொண்டு முன்னேற வேண்டும்''.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி பேசியதாவது: ''இந்தியச் சுதந்தரத்திற்காக சிங்காரவேலர், திரு வி. க. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரும் பாடுபட்டனர்.

''அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் நமக்கு நான்கு சுதந்தரங்கள் வேண்டும் என்றார். பயத்திலிருந்து விடுதலை—வெறுப்பிலிருந்து விடுதலை—வறுமையிலிருந்து விடுதலை—சுரண்டலிலிருந்து விடுதலை! அத்தகைய விடுதலை பெற்ற நாடாக இந்தியா விளங்க வேண்டும்''.

மேலவை ஐக்கிய கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். தாமோதரன் பேசியதாவது :—

'' நாம் நமது சுதந்திரத்தைப் புதுமையான — வன்முறையற்ற வழியில் பெற்றோம். இந்தியா



ஒன்றுதான் மக்கள் ஜனநாயக முறையில் ஆட்சி செய்யும் பெருமை பெற்ற நாடு. அந்தப் பெருமை என்றும் நிலைக்க நாம் பாடுபடுவோமாக !''.

மேலவை உறுப்பினர் குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசியதாவது :

''இந்தச் சுதந்தர நாள் வெள்ளி விழா எல்லாருக்கு முரிய விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும்— என்ற நோக்கத்தோடு தமிழக முதல்வர் நன்முயற்சி எடுத்தது பாராட்டத்தக்கது. 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனப் பாடிய பாரதி சாதிசமய வேறுபாடுகளை மறக்க வேண்டும் என்பதற்காக எல்லாரும் ஓர் குலம் எனவும் பாடினார். சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டும் என்பதற்காக எல்லாரும் ஓர் நிலை என்றும் பாடினார். அத்தகைய நிலை எய்திட நாம் முன்னேறிட வேண்டும்''.

மேலவை ஸ்தாபனக் காங்கிரஸ் தலைவர் கே. இராசாராம் நாயுடு பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

'ஆராய்ச்சி மணி'
படக்கதை
அடுத்த இதழில்
இடம் பெறும்

''1947-ஆம் ஆண்டு விடுதலை விழாக்கொண்டாடப்பட்டபோது அதைப் பார்த்து மகிழ்ந்தவன் நான். வெள்ளி விழாவின் போது இருப்போம் என்ற நினைவு எங்களுக்குச் சுதந்தரப் போராட்டக் காலத்தில் இருந்ததில்லை. ஆனால் கோலாகலமாகக் கொண்டாடப்படும் வெள்ளி விழாவைக் காணும் பேறு கிடைக்கப் பெற்றதற்காக நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்''.

முஸ்லீம் லீக் தலைவர் அப்துல் வகாப் பேசியதாவது :—

'' இந்து முஸ்லீம் ஒற்றுமை வேண்டும் என்று பாடுபட்டார் காந்தியார், அவரது கனவைத் தென்னகத்தில் நிறைவேற்றியவர் அண்ணா. அந்த அண்ணா சகாப்தம் தகர்ந்து விடாமல் பாதுகாப்பவர் கலைஞர் அவர்கள்.''

மேலவைத துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் பேசியதாவது.

''1947-ஆம் ஆண்டு சுதந்தர நாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட போது அதனைப் பார்த்துப் பூரித்தவன் நான். இன்று அதே காட்சி—அதே மக்கள் வெள்ளம்.

'' இது எதனைக் காட்டுகிறது? இங்கே மாநில அரசில் வேறு ஒரு கட்சி ஆட்சியிலிருந்தாலும், நாங்கள் ஒதுங்கி வாழ விரும்பவில்லை. மத்திய அரசு ஒதுங்கிச் செல்லவும் விட மாட்டோம் என்பதைத்தான்.

''இங்கே தேச பக்திக்குக் குறைவில்லை; எங்கள் தேச பக்தியில் மாசில்லை; மருவில்லை. இந்திய ஒருமைப்பாட்டில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது என்பதற்குச் சாட்சிதான் இந்த அரசு நடத்தும் இந்த விழா.

91 நாட்கள் 4¾%

6 மாதங்கள் 5¼%

12 மாதங்கள் 6¼%

2 வருடங்கள் 6¾%

3 வருடங்கள் 7¼%

5 வருடங்கள் 7½%

தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்வது மிகவும் சிறந்தது. எங்கள் வட்டி விகிதங்கள் மிகவும் கவர்ச்சிகரமானதென்பதுடன் உங்களுக்கு அதிக வருமானத்தையும் தருகிறது. ரூ. 3,000 வரை உள்ள வட்டிக்கு வருமான வரி கிடையாது. எங்கள் வங்கியில் செலுத்தும் முதலீடுகள் விவசாயிகளுக்கு விதைகள், உரம் முதலியவைகள் வாங்க உபயோகப்படுவதால் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுகின்றன.

½ கூடுதல் வட்டி, மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு தரப்படும்.

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

இதர விவரங்களை எங்கள் கிளை அலுவலகங்களிடமிருந்து பெறலாம்.

தமிழ்நாடு மாநிலக்
கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.
போன் : 20367, 20368, 20369. தந்தி : ''அர்பாங்க்''
டெலக்ஸ் எண் : MS 7225.
தலைவர்: ஆர். கனகசபை. செயலர்: பி. என். டி. சாரி.



'' எங்கள் தமிழ்-ஊருடன் கூடி வாழ் என்றுதான் போதித்திருக்கிறது. 'யாது ஊரே; யாவரும் கேளிர்'- எனும் பொன் மொழிதான் எங்களுக்குப் போதிக்கப்பட்டது.

ஆகவே, இந்தச் சுதந்தரத்தைக் காக்க நாங்கள் பாடுபடுவோம்''

மத்திய அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் பேசியதாவது!—

''விடுதலைநாள் 25-வது ஆண்டு விழாவின் போது தமிழகத்தில் இருப்பது பெரும்பேறு என நான் கருதுகிறேன்.

'' அறிவுக் களஞ்சியமான திருக்குறள் தந்த நாடு-தமிழ்நாடு. எண்ணற்ற சுதந்தரப் போர்த் தியாகிகளைத் தந்த நாடு-தமிழ்நாடு. இங்கே நான் மக்கள் கடலைக் காண்கிறேன். இந்திய நாடே தமிழகத்தில் புகுந்து விட்டதோ என அஞ்சுகிறேன். இந்தியா என்பது இமாலயத்திலிருந்து இந்தியக் கடல்வரை -அரபிக் கடலிலிருந்து வங்கக் கடல் வரை பரந்திருப்பது.

'' தமிழர்களையும்-மலையாளிகளையும், ஆந்திரர்களையும், உத்திரப் பிரதேசத்தாரையும் உள்ளடக்கியிருப்பது இந்தியா. ஆகவே, தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பாகம். இந்தியா என்பது தமிழ் நாட்டினை உள்ளடக்கமாகக் கொண்டது. முழுமை என்பது பகுதிகள் சேர்ந்ததுதான். பகுதிகள் இல்லாமல் முழுமை இல்லை.

'' மக்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத் தரத்தைத் தர நாம்ஒன்று கூடிப் போராட வேண்டும். இந்தியாவின் ஒரு பகுதி வறுமையுற்றிருந்தால் இந்தியாவிற்கு அது பெருமை இல்லை. வளர்ச்சி ஒரே சீராக இருக்க வேண்டும். இந்தியா என்பது ஒரு தனிப்பட்ட கட்சிக்குச் சொந்தமானதல்ல; எல்லா மக்களுக்கும் சொந்தமானது.

'' இப்போது நம்முன் நிற்கும் கொள்கை-சோசலிசப் பயணத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதே. சாதியுள்ள நாட்டில் ஜனநாயகம் வெற்றி பெறாது. சமூக ஏற்றத் தாழ்வும்-வர்த்தக ஏற்றத் தாழ்வும் புரையோடிப் போன நாட்டில் சோசலிசம் வெற்றி பெறாது. சாதிக் கொடுமையை எதிர்த்துக் காந்தியார் பாடுபட்டார். இங்கே அதே கொள்கைக்குப் பாடுபட்ட-சமுதாய சீர்திருத்த வீரர்கள் பலர் உள்ளனர். பெரியார் இராமசாமி, மதிப்பிற்குரிய அண்ணா ஆகியோர் அந்த வீரர்கள்.

'' இந்தச்சாதிக் கொடுமையை அழிக்கப் பாடுபட்ட சமுதாய வீரரான அண்ணா அவர்களின் வீரப் போர்த்தளபதி கருணாநிதி.

'' அவர் தமது போரில்வெற்றிகரமான சாதனைகளைப் புரிந்து விரைவில் சாதியை ஒழித்த பெருமையைப் பெற வேண்டுகிறேன்.

ஒரு மாநில அரசு நடத்தும் விழாவில் மத்திய அரசின் அமைச்சரை முதலமைச்சர் கருணாநிதி அழைத்தது - அவரது பெருந்தன்மையைக்காட்டுகிறது.

'' மாநிலத் தலை நகரில் விடுதலை நாள் விழாவில் பிரதமர் கலந்து கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் கூறிய யோசனை அடிப்படையான உறவை வளர்க்கும் யோசனை என்று நான் தனிப்பட்டமுறையில் கருதுகிறேன். இந்த யோசனையை நான் பிரதமரிடம் கூறுவேன். அவரும் இதுபற்றிப் பரிவுடன் பரிசீலிப்பார் என்று நம்புகிறேன்.''

வெண்பாப் போட்டி-42

'பண்' எனத் தொடங்கிப்
'பாட்டு' என முடிக்க.

இறுதி நாள் : 16–9–72

ஏனையவை வழக்கம்போல்

தலைமை வகித்த முதல்வர் கலைஞர் அவர்கள் தமது முடிப்புரையில் குறிப்பிட்டதாவது :—

'' இங்குப் பேசிய தலைவர்களெல்லாம் நல்ல அறிவுரைகளைத் தந்திருக்கிறார்கள். சுதந்தரத்திற்குப் பிறகு நாம் செய்து முடிக்க வேண்டிய வேலைகளைச் செய்யாமல் தயக்கம் காட்டியிருக்கிறோம் என்கின்ற குற்றச்சாட்டுகளையெல்லாம் சொன்னார்கள். அந்தச் குற்றச் சாட்டுகள் யாரையும் நோக்கி வீசப்பட்டவைகளல்ல; நமக்கு நாமே வீசிக் கொண்ட குற்றச்சாட்டுகள். ஆகவே எல்லாக் குற்றங்களுக்குமே நாமனைவரும் பொறுப்பாளிகள் என்கின்ற உணர்வோடு அந்தக் குற்றங்களைக் களைய எதிர்காலத்திலே அனைவரும் சேர்ந்து சபதமெடுத்துக் கொள்வோம்.''

'' உயர்ந்தவன் - தாழ்ந்தவன் இல்லை; சாதிப் பிரிவுகள் இல்லை; வகுப்புவாத எண்ணங்களில்லை; மதவேறுபாடுகள் இல்லை. ஆண்டவனின் பெயரால் - இதிகாசங்களின் பெயரால் - புராணங்களின் பெயரால் - எதன் பெயராலும் மக்களை ஏமாற்றுகின்றவர்கள் இல்லை என்கின்ற புதிய உலகத்தை-புதிய நாட்டை புதிய தேசத்தை உருவாக்குவதற்கு - புதிய எழுச்சி பெறுகின்ற நாளாக இந்த நாளை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

இந்த உரைக்குப் பின்னர், மெல்லிசை மன்னரின் இசை விருந்து நடைபெற்றது. அதன் பிறகு, வாண வேடிக்கைகள் சென்னை நகரத்தையே ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தியது.

நகரத்தில் காணப்பட்ட ஒளியமைப்புகளும் - ஆர்வமிக்க, மக்கட் கூட்டமும் - நாடு இந்த ஆகஸ்ட் 15-ல் தான் விடுதலை பெற்றதோ என்று எண்ணுகின்ற அளவுக்கு, மகிழ்ச்சி வெள்ளத்தை உருவாக்கி விட்டன.

நெஞ்சில் நிறைந்த இந்தக் காட்சிகளை நாம் என்றும் மறக்க முடியாது.

கப்பலோட்டிய தமிழனின் கனித் தமிழ்த் தொண்டு!

"கப்பலோட்டிய தமிழன்" என்றும், 'செக்கிழுத்த செம்மல்' என்றும் இன்று பாராட்டப் பெறுகிற வ.உ. சிதம்பரனார் அவர்கள் வெறும் அரசியல்வாதியாக மட்டுமன்றித் தமிழ் இலக்கிய உலகிற்கும் அரும் பணியாற்றியுள்ளார்.

வ.உ. சிதம்பரனார் இளமைக் காலந் தொட்டே தமிழ் நூல்களைப் படிப்பதில் பேரார்வம் காட்டினார். அவர் அரசியலில் ஈடுபட்டுச் சிறையில் செக்கிழுத்துச் சொல்லொணாத் துயருற்ற காலத்திலும் அவர் எழுதுகிற கடிதங்களில் தமிழ் மணக்கும்; பல கவிதை மலர்கள் பூத்து மணம் பரப்பும். வெண்பாக்களையும், அகவற்பாக்களையும் விரைந்து பாடுவார்.

வ.உ. சிதம்பரனார் சென்னையில் இருந்த போதும், கோவில்பட்டியில் வழக்கறிஞராகப் பணிபுரிந்த போதும் பல பழம் ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கிச் சில பழைய தமிழ்நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவ்வாறு தமிழ் நூல்களைப் பதிப்பித்ததோடு ஆங்கில நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துத் தாய்த் தமிழகத்திற்குத் தந்துள்ளார்.

அரசியல் வரலாற்றில்—குறிப்பாக விடுதலை வரலாற்றில் வ.உ. சிதம்பரனார்க்கு உள்ள தனிப் பெருமை, தமிழ் இலக்கியத் துறையிலும், தமிழ் இலக்கிய வளர்ச்சி வரலாற்றிலும் உண்டு என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழ் இலக்கிய உலகிற்கு அவர் தந்து சென்றுள்ள அவரது 'செல்வக் குழந்தைகள்'—ஆம் இலக்கியச் செல்வங்கள் என்றும் நின்று அவரது ஈடிலாப் புகழை இசைத்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய அவரது இலக்கியப் பணியை, அப்பெரியாருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் நினைந்து பார்ப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்திற்கு அன்று முதல் இன்று வரை உரை எழுதித் தந்துள்ளவர்கள் பலர். அவர்களுள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச் சிலையார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுள் இளம்பூரணர் என்பார் காலத்தால் பேராசிரியருக்கு முற்பட்டவர். கி. பி. 9 அல்லது 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்கட்கு இவர் எழுதிய உரையை 1928-ல் அச்சிட்டு உதவிய பெருமை வ.உ. சிதம்பரனார் அவர்கட்குண்டு.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் திருக்குறளும் ஒன்று; எனினும் திருக்குறள், தமிழில் எழுந்த உலகப் பெருநூலாக மட்டுமன்றி, உலகப் பொது நூலாகவே போற்றப்படுகிறது. அத்தகைய திருக்குறளுக்கு அந்நாளில் உரையெழுதிய பதின்மருள் சிறந்தஉரையாசிரியராகப் பலரால் கருதப்படுகிற பரிமேலழகரையும் விடக் காலத்தால் சற்று முற்பட்டவர் மணக்குடவர். இவரது உரையே பரிமேலழகர் உரைக்கும் முற்பட்ட உரையாகும். இந்த உரையை முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை வ.உ. சிதம்பரனார் அவர்களையே சாரும். மேலும், திருக்குறள் படிக்காத தமிழன், தமிழனல்ல என்று கருதிய சிதம்பரனார் 1935-ல் தம் அறத்துப் பால் ஆராய்ச்சியை வெளியிட்டார்.

திருக்குறள் பாயிரத்தில் காணப்படுகிற 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை' ஆகிய மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றவில்லை என்பது சிதம்பரனார் கருத்து.

'இன்னிலை' என்பதும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகும். பொய்கையாரால் இயற்றப்பட்ட இந் நூலையும் முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் வ.உ. சிதம்பரனார் அவர்களே யாவர்.

சிவஞான போதம்

சிதம்பரனார் சைவ சித்தாந்தத்தில் அழுத்தமான ஈடுபாடு கொண்டவர். சித்தாந்த வரிகளின் மூல நூலாக—மூல மந்திரமாகக் கருதப்படுகிற இந்நூலுக்கும் சிதம்பரனார் ஒரு நயமான உரை எழுதியிருக்கிறார்.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்ததோடன்றிப் பிற நாட்டு இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழில் பெயர்த்துத் தமிழ் உலகிற்கு வழங்கிய பெருமையும் வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு உண்டு.

ஆங்கில நூலாசிரியரான ஜேம்ஸ் ஆலன், சிறந்த ஒழுக்க நூலாசிரியராகப் பாராட்டப் பெறுபவர். அவரது சீரிய சிந்தனைகள் தமிழ் மக்களிடையே பரவவேண்டும் என்று பெரிதும் விரும்பினார். அவ்விழைவின் விளைவே, 'மனம்போல வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' ஆகிய நூல்கள்.

'மனம் போல வாழ்வு'—மனத்தின் தன்மையைத் தெளிவு படுத்துகிறது; அந்த மனத்தை மாசற்றதாக—தூய்மையுடையதாக வைத்துக் கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.

'அகமே புறம்'—என்பது இப்போதும் எப்போதும் இங்கும் எங்கும் நமது உயிர் வாழ்வு நிலை பேறடைவதற்கான வழி முறைகளை வகுத்துக் கொடுத்துரைப்பது; அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு ஒரு விரிவான விளக்கமாகத் திகழ்வது.

'வலிமைக்கு மார்க்கம்'—என்பது உடலும் உள்ளமும் சோம்பி நலிந்து வாழ்வோர், வலியுடையராக ஆதற்குரிய உடற் பயிற்சி, உளப் பயிற்சி ஆகிய இரண்டினையும் தெளிவான முறையில் சித்திரித்துக் காட்டுகிறது.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்தும், பிற நாட்டு நல்லறிஞரின் சிந்தனைச் செல்வத்தைத் தமிழ்ப் பெருமக்கள் கற்றுத் தேர்ந்து தெளிய வழி செய்தும், இலக்கியப் பணியாற்றிய வ.உ. சிதம்பரனார் அவர்கள் புது நூல்கள் பல இயற்றியும் உதவியிருக்கிறார்கள்.

அவையாவன :—

மெய்யறிவு :—அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை அடைதற்கான வழிவகைகளையும் உவமைகளோடு சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுவது. பல்வேறு நீதி நூல்களின் பிழிவென விளங்குவது இந்நூல்.

மெய்யறம் :—திருக்குறளின் வழிநூல் எனத்தகும் இந்நூலில் மாணவ இயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தண இயல், மெய்யியல் என்னும் ஐந்தியல்கள் உள்ளன. சிதம்பரனார் கண்ணனூர்ச் சிறையில் இருந்த போது எழுதப்பட்ட இந்நூலில் கைம்மை மணத்தை ஆதரிக்கிறார்.

வள்ளியம்மை சரித்திரம்:—இது வ.உ. சிதம்பரனார் அவர்களின் முதல் துணைவியாரின் வரலாறு. இது, செய்யுள் வடிவானது. ஆடவர் தம் வாழ்க்கைத் துணைவியாரிடத்தும், உற்றாரிடத்தும், மற்றவர்களிடத்தும் பின்பற்ற வேண்டிய முறைகளையெல்லாம் எழிலுற விளக்கும் அறிவு நூலாகும்.

என் பாடல் திரட்டு :—பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு காலகட்டங்களில் வ.உ. சிதம்பரனார் அவர்கள் இயற்றிய நூறு பாக்களைக் கொண்ட தொகுப்பு இது. மக்கள் அனைவர்க்கும் பொதுவான ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தத் தக்க பாடல்களைக் கொண்ட இந்நூல் கற்போர்க்கு விருந்தாகிப் பயன் தரத்தக்கது.

சொற்பொழிவு நூல் :—1927-ஆம் ஆண்டு சேலம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் வ. உ. சிதம்பரனார் அவர்கள் ஆற்றிய பேருரையே இந்நூல். இந்நூலில் தன் ஆட்சி என்றால்என்ன, அதனை அடைவதற்குரிய வழிகள் யாவை, என்பவையெல்லாம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

தற்சரிதை:—வ. உ. சிதம்பரனார் அவர்களின் 'தற்சரிதை'யாக விளங்கும் இந்நூல் முற்றும் அகற்பாவால் ஆனது. சிதம்பரனார் சிறைக் கோட்டத்தில் இருந்த போது, 'லோகோபகாரி' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய பரலி சு. நெல்லையப்பர் அவர்களின் வேண்டுகோட்கிணங்க இந்தத் 'தற்சரிதை' எழுதப்பட்டது. நூலின் பிற்பகுதி, சிதம்பரனார் அவர்கள் சிறைக் கோட்டத்தினின்றும் வெளிவந்த பின் இயற்றி இணைக்கப்பட்டது. சிதம்பரனார் 'விவேக பானு' என்னும் பெயரில் திங்கள் இதழ் ஒன்றை நடத்தினார்.

இவ்வாறு தமிழ் இலக்கிய உலகில், வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறந்த பதிப்பாசிரியராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், உரையாசிரியராகவும், நூலாசிரியராகவும், தத்துவ ஞான வித்தராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கி ஆற்றியுள்ள அருந்தமிழ்த் தொண்டுக்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். அவருடைய நூற்றாண்டு விழாவில், அவரது தமிழ்த் தொண்டினை மனத்தகத்தே எண்ணி மகிழ்ந்து பாராட்டுவோமாக.

பழ

சிந்தனைசெய் நெஞ்சே!

கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்-ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டூழி விளங்குகவே-வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

தமிழ்நாடு அரசின்
சாதனைகளுக்குச்
சான்றுதரும் பட்டயம்!
அரசின் ஆக்கப்பணிகளை
அழகுறக் காட்டிடும்
கேடயம்!
தமிழரசு
திங்களிருமுறை இதழ்
செப்டம்பர் 16 முதல் புதியபொலிவுடன்
கருத்துக் கருவூலமாக
பாதுகாக்கவேண்டிய பெட்டகமாக வெளிவரும்!
புதிய புதிய பகுதிகள்! புத்தம் புதிய செய்திகள்!!
இன்றே உங்கள் பிரதிக்குப் பதிவுசெய்க!
விலை 40 காசு
64 பக்கங்கள்
செப்டம்பர் 16 இதழிலிருந்து ஒப்பந்தப்புள்ளி-குத்தகை விளம்பரங்கள் தமிழரசு இதழில் இடம்பெற மாட்டா!

கேளுங்கள் கொடுக்கப்படும்!

வினா: எங்கள் குழு உறுப்பினர்கள் எல்லாரும் 'தமிழரசு' இதழை மிகவும் விரும்பிப் படிக்கிறார்கள். அதில் விவசாயக் கேள்வி பதில்கள் மிகவும் நன்றாக உள்ளது. எனவே, எங்கள் சந்தேகங்கள் சிலவற்றிற்குப் பதில் கூறவும். நெற்பயிருக்கு வரும் 'காம்பு அழுகல்' நோய் (Sheath rot), 'தண்டு அழுகல்' நோய் (Stem rot) ஆகியவை எதனால் வருகிறது? அவை வராமல் இருக்க எந்த மருந்து அடிக்க வேண்டும்?

—பி. எஸ். சங்கரநாராயணன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
ரமண சமுத்திரம்,
நெல்லை மாவட்டம்.

விடை: நெற்பயிரில் காம்பு அழுகல் நோய் என்று தாங்கள் குறிப்பிட்டுள்ளது இலைப்புள்ளி நோயையே என்று கருதுகிறோம். நேரடியாகப் பயிரைப் பார்க்காமல் திட்டவட்டமாக இன்ன நோய் என்று கூறுதல் நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும் என்று கூற முடியாது. ஏனெனில் காம்பு அழுகல் நோய் என்பது ஒரு தனிப்பட்ட நோயல்ல.

''ஹெல்மின் தோஸ்போரியம் ஒரைசே'' என்னும் பூசணம் தாக்கும் போதுதான், நெற்பயிரின் தோகைகளும், காம்புகளும் அழுகிவிடுகின்றன. இந்நோய் தாக்கினால் நெற்பயிரின் தோகைகளிலும், காம்புகளிலும் நீண்ட செங்கல் வடிவப் பழுப்பு நிறப் புள்ளிகள் முதலில் காணப்படும். நோய் கடுமையாகத் தாக்கும் பொழுது நெற்பயிரின் தோகைகளும், காம்புகளும் அழுகிவிடும். கதிரின் கழுத்தும், கதிரிலுள்ள மணிகளும் தாக்கப்படும். கதிர் முழுவதுமோ, அல்லது ஒரு பகுதியோ சாவியாகி விடக்கூடும். இந்நோய் விதைகளின் மூலம் பரவுகிறது.

இந்நோயைக் கட்டுப்படுத்த, முன்னெச்சரிக்கையாக விதை நெல்லுடன் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' போன்ற மருந்துகளை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம் கலந்து, நாற்றுவிட வேண்டும். இந்நோய் பயிரில் காணப்படின், 1 கிலோ தாமிரப் பூசணக் கொல்லி மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து, 15 நாட்களுக்கொரு முறை வீதம் 2 முறை தெளித்தல் நல்லது. ஐ. ஆர். ரகங்களெனில் தாமிரப் பூசணக் கொல்லி தெளிக்கக் கூடாது. 'டைத்தியோ கார்பமேட்' மருந்துகளையே தெளிக்க வேண்டும்.

'தண்டு அழுகல்' நோய் என்பது ''ஸ்கிளிரோசியம் ஒரைசே'' என்னும் பூசணத்தால் ஏற்படுகிறது. இந்நோய் பொதுவாக வடிகால் வசதியற்ற இடங்களில்தான் தோன்றுகிறது. இந்நோய் தாக்கிய நெற்பயிரின் அடிப்பகுதியில் பச்சையான கிம்புகள் வெளிவரும்; தண்டின் கீழ்ப்பகுதி அழுகியிருக்கும். அழுகிய தண்டு ஒடிந்து சாய்ந்துவிடும்; கதிர்கள் அரைகுறையாக விளைந்திருக்கும். அழுகிய தண்டைப்பிரித்துப் பார்த்தால் அதில் கடுமையான பூசணக் கொத்துகளைக் காணலாம். பூசண விதைகள் பளபளப்பான புள்ளிகளாகத் தோன்றும். இந்நோய் நிலத்தின் மூலமும், பாசன நீரின் மூலமும் பரவுகிறது.

முன்னெச்சரிக்கையாக இந்நோயைத் தடுக்கப் பழைய நெற்கட்டைகளை எரித்து விட வேண்டும். இந்நோய் உள்ள நிலத்தில் அதிகமாக நீர் விடாமல், காயவிட்டு நீர்விட வேண்டும். இந்நோய் உள்ள நிலத்திலிருந்து, அடுத்த நிலத்திற்கு நீர் செல்லாமல் பாதுகாக்க வேண்டும்.

இந்நோய் தாக்கிய நிலத்தில் திட்டுத் திட்டாகப் பயிர்கள் தீய்ந்து, அழிந்து காணப்படும். தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த வயலில் உள்ள நீரை வடித்து விட்டு, 500 கிராம் நீரில் கரையும் செரசான் மருந்தை 500 லிட்டர் நீரில் கலந்து, நெற்பயிரின் அடியில் படும்படியாக 3 வார இடைவெளியில், 3 முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இந்நோய்கள் உங்கள் நெற்பயிரில் தாக்கியுள்ளது என்று கருதினால், உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் தாக்கப்பட்ட நெற்பயிரைக் காட்டி, நோயை உறுதி செய்துகொண்டு, மருந்து தெளிப்பதே சிறந்தது.

* * *

வினா: 'பொன்னி' என்ற நெல்லை எந்தப் பருவத்தில் பயிரிடலாம்? நன்செய் நிலத்திலா? அல்லது புன்செய் நிலத்திலா? எந்தச் சமயம் உரமிட வேண்டும்? எந்தச்சமயம் மருந்து தெளிக்க வேண்டும்? இதன் வயது, மகசூல் என்ன என்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

—கே. எஸ். பூபதி,
கட்டமுத்துப்பாளையம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை: 'பொன்னி' என்ற நெல் ரகம் தாளடியில் முன் பட்டத்திற்கு ஏற்றது. நன்செய் நிலத்திற்கு ஏற்றது. இந்த ரகத்தைப் புரட்டாசி 24-ஆம் தேதிக்குள் (அக்டோபர் 10-ஆம் தேதிக்குள்) நாற்று விட வேண்டும்.

நடவு வயலில் ஏக்கருக்கு 35 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 30 கிலோ யூரியா, 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளைக் கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும். விதைத்த 50-வது நாளிலும், 80-வது நாளிலும் ஆக இருமுறை ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை மேலுரமாகத் தெளிக்க வேண்டும்.

விதைத்த 50-வது நாள் மேலுரமிட்ட பின்பும், 72-வது நாளும், 93-வது நாளும் ஆக 3 முறை மருந்து தெளித்தல் வேண்டும்.

'பொன்னி'யின் வயது 140 நாட்கள். இந்த ரகம் ஏக்கருக்குக் குறைந்தது 2 டன் மகசூல் கொடுக்கவல்லது.

வினா: என் வீட்டு மச்சில் போட்டு வைத்திருக்கும் நெல்லில் 'அந்து' என்ற வெள்ளை நிறமுள்ள கொசு போன்ற பூச்சிகள் நிறைய மொய்த்து நெல்லைச் சேதப்படுத்துகின்றன. இவற்றிலிருந்து நெல்லைப் பாதுகாக்க ஒருவழி கூறுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

—மீ. கிருஷ்ணசாமி,
அன்னவாசல் (அஞ்சல்),
திருச்சி மாவட்டம்.

விடை: தங்கள் வீட்டு மச்சில் இருக்கும் நெல்லை எடுத்துத் தூய்மைப் படுத்தி, வெய்யிலில் காய வைக்க வேண்டும். இவ்வாறு காயவைக்கும் பொழுது, அந்தப் பூச்சிகள் இருட்டான இடத்தை நோக்கிப் பறந்து விடும் அல்லது வெய்யிலில் இறந்து விடக்கூடும். தங்கள் வீட்டு மச்சிலை நன்கு தூய்மைப் படுத்திய பின், அந்துப் பூச்சிகள் நீங்கிய நெல்லை மச்சில் நிரப்ப வேண்டும். மச்சின் வாயிலை நன்கு மூடி, வாய்ப்பகுதியில் பி.எச்.சி.5 சதம் அல்லது டி.டி.டி. 10 சதம் தூளை இலேசாகத் தூவுதல் நல்லது.

தாங்கள் விதைக்காக நெல்லைச் சேமித்து வைத்திருந்தால், 500 பங்கு நெல்லிற்கு ஒரு பங்கு டி.டி.டீ 10 சதம் அல்லது கார்பரில் 10 சதம் தூளைக்கலந்து சேமித்து வைத்தால், அத்தானியம் ஓர் ஆண்டுக் காலம் வரை பூச்சிகளால் தாக்கப்படுவதில்லை என்று ஆராய்ச்சி மூலம் தெரிய வருகிறது. முளைக்கும் சக்தியும் குறைவதில்லை.

உணவுக்குப் பயன்படுத்தும் நெல்லானால், இம் மருந்துகளைக் கண்டிப்பாய் பயன்படுத்த கூடாது.

'பாஸ்டாக்சின்' என்ற மருந்து வில்லைகளை உபயோகிப்பது தற்காலத்தில் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. ஒரு டன் தானியத்திற்கு ஒரு வில்லை போதுமானது. ஒரு வில்லையை ஒரு சிறிய துணிப்பையில் போட்டுக்கட்டி தானியத்திற்குள் திணித்துவிட வேண்டும். மச்சின் வாயிலைக் காற்றுப் புகாமல் நன்கு மூடி விடவேண்டும். 2 நாட்கள் கழித்து மச்சு வாயிலைத் திறந்துவிட்டுக் காற்றோட்டமாக வைத்திருக்க வேண்டும். அதன்பின் தானியங்களை எடுத்து உபயோகிப்பதில் எவ்விதத் தீங்கும் ஏற்படாது.

'பாஸ்டாக்சின்' வில்லைகள் பெற 'இராஜா நிலையம்' 12, ரேஸ் கோர்ஸ் லேன், திருச்சிராப்பள்ளி-1 என்ற முகவரியில் உள்ள பயிர்ப் பாதுகாப்பு அலுவலர் அவர்களின் உதவியை நாடலாம்.

வேளாண்மை விளுக்களுக்கு மட்டுமல்ல-வேறு துறைகள் பற்றிய விளுக்களுக்கும் இந்தப் பகுதியில விடை கிடைக்கும்: விவகாரத்திற்கோ, பிரச்சினைக்கோ இடம் தரும் விளுக்களைக் கேட்க வேண்டாம் - அவற்றிற்கு விடை கிடைக்காது.

வினா : முப்பது அடி ஆழமுள்ள எங்கள் கிணற்றில் தண்ணீர் இல்லாத காரணத்தால் மேலும் 100 அடி ஆழப்படுத்த எவ்வளவு செலவாகும் ? மின்சார போரிங் செட் எங்குக் கிடைக்கும் ?

—மோகன்,
மோசூர்,
அரக்கோணம்,

விடை : தங்கள் கிணற்றை மேலும் 100 அடி அளவில் ஆழப்படுத்த வேண்டியதில்லை. 100 அடி ஆழத்திற்கு கிணற்றில் துளை போட்டாலே, போதுமான அளவிற்குத் தண்ணீர் கிடைக்கக் கூடும். 100 அடி ஆழம் துளையிட எவ்வளவு செலவாகும் என்பதை நாங்கள் கூறமுடியாத நிலையில் இருக்கிறோம். ஏனெனில் தங்கள் கிணற்றின் கீழ்ப்பகுதி பாறையாக இருக்கிறதா அல்லது கல்லாக இருக்கிறதா என்பதைத் தாங்கள் தெரிவிக்கவில்லை. 100 அடி ஆழம் துளையிட 'பவர் டிரில்' பயன்படுத்துதல் நல்லது. தங்கள் கிணற்றில் 100 அடி ஆழம் துளையிட எவ்வளவு செலவாகும் என்பதை அறியவும், பவர் டிரில் வாடகைக்குப் பெறவும் கீழ்க்கண்ட அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.

உதவி வேளாண்மைப் பொறியாளர் (பார்வை),
ஆபீசர்ஸ் லேன், வேலூர்-1.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தால் தவணை முறைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட டிராக்டர்கள் பம்பு செட்டுகள்.

ஆண்டு.	டிராக்டர்கள்.	பம்பு செட்டுகள்
1968–69	84	3,799
1969–70	104	5,384
1970–71	64	1,360
1971–72	43	141

மேற்கூறப்பட்டுள்ள அலுவலரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பதே தங்களுக்கு நல்லது.

பொதுப்பணி

வினா : எங்களுக்குக் கொஞ்சம் சொந்த நிலம் இருக்கின்றது. அந்த நிலம் மழைக் காலத்தில் நீரோடும் ஆற்றின் பக்கத்தில் உள்ளது. மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளத்தின் காரணமாக எங்களுக்கும், எங்களைப் போன்ற ஏழைகளின் நிலமும் 30 ஏக்கர் அளவுக்குப் பாதிக்கப் படுகின்றது. நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். முன்பு 100 மீட்டர் அகலத்தில் ஆற்றில் வந்து கொண்டிருந்த தண்ணீர், இன்று 500 மீட்டர் அகலத்தில் பரவி இருக்கிறது. எங்கள் நிலம் இதனால் பாதிக்கப்படாமல் இருக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்யுமா ? ஏழைகளின் துயர் துடைக்கும் நல்லரசு எங்களுக்குக் கரை கட்டித் தரவேண்டும். விவரம் தெரியாமல் உங்களுக்கு எழுதுகிறேன். நாங்கள் பயன்பெற விவரம் கூறவும்.

—வெ. அர்ச்சுனன்,
மினிக்கியூர்,
கோவில்பட்டி அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

விடை : தாங்கள் குறிப்பிட்டுள்ளது போல் உண்மையாக இருப்பின், தமிழ்நாடு அரசு தங்களுக்கு உதவ முன்வரும். ஆற்றின் வெள்ளத்தினால், பயிராகும் நிலங்கள் பாழாவதைத் தடுக்கக் கரை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். அவ்வாறு கட்டித்தர வேண்டுமானால் அரசின் உதவியைப் பெறப் பின்கண்ட முறையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் ஆற்று வெள்ளத்தினால் ஏற்படும் சேதம் எவ்வளவு இருக்கும் என்பதையும், இதுபோல் எத்தனை ஆண்டுகளாக ஏற்படுகிறது என்பதையும் விளக்கமாகக் குறிப்பிட்டு, இதைத் தவிர்க்க ஆற்றோரத்தில் கரை கட்டிக் கொடுக்கும்படி, உங்கள் ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டு, அதை உங்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பி, அங்கும் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகக் கொண்டு இயங்கும் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இதைப்பற்றி விவாதித்து ஆவன செய்யப்படக்கூடும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நீங்கள் இதுபற்றி மனு அனுப்பலாம். உங்கள் ஊருக்கு மனு நீதித் திட்டத்தின் கீழ், குறைகளைக் கேட்க வரும் அலுவலர்களிடமும் இதுபற்றி முறையிடலாம். இம்முயற்சிகள் எதுவும் பயனளிக்காவிட்டால், இறுதியாகப், பொதுப்பணித் துறை அமைச்சருக்கு மனு அனுப்பலாம்.

கால்நடை

வினா : 'குதிரை மசால்' ('லூ சர்ன்') என்னும் கால்நடைத் தீவனத்தின் சிறப்புகள் என்னென்ன ? அதன் விதைகள் அல்லது நாற்றுகள் எங்குக் கிடைக்கும் ? அதன் சாகுபடிக் குறிப்புகள் யாவை ? தென்னந் தோப்புகளில் வெயில் படும் இடங்களில் குதிரை மசாலை வளர்க்கலாமா ?

—பி. கோமதிநாயகம்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
புளியங்குடி,
நெல்லை மாவட்டம்.



'குதிரைமசால்' செடி

விடை : 'குதிரை மசால்' என்னும் கால்நடைத் தீவனத்தில் 20 சதம் புரதச் சத்து அடங்கியுள்ளது. குறிப்பாக மாடுகள் இத்தீவனத்தை மிகவும் விரும்பித் தின்கின்றன. இதைப் பச்சையாகவோ அல்லது வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தேவையான போதோ மாடுகளுக்குப் போடலாம்.

குதிரை மசால் கால்நடைகளுக்குச் சிறந்த தீவனமாக இருப்பதுடன், காற்றிலுள்ள தழைச் சத்தை இழுத்துக் கொண்டு தானும் பயன் பெறுவதோடு, நிலவளத்தையும் பெருக்குகிறது.

குதிரை மசால் விதைகள் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை ஆகிய ஊர்களில் உள்ள கடைகளில் கிடைக்கின்றன. கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களாலும் ஒரு சில இடங்களில் இதன் விதைகள் வழங்கப்படுகின்றன.

சாகுபடிக் குறிப்புகள்.

செஞ்சரளை மண் அல்லாத மற்றெல்லா மண்களிலும் குதிரை மசாலைத் தோட்டக்கால் பயிராகப் பயிரிடலாம். ஆனால் வடிகால் வசதியற்ற நிலங்களிலும், களர்-உவர் நிலங்களிலும் இது நன்கு வளராது.

நிலத்தை நன்கு உழுது கடைசி உழவில் ஏக்கருக்கு 200 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிட்டு, நிலத்தைச் சிறு சிறு பாத்திகளாக அமைத்துக்கொள்ள வேண்டும். பாத்திகளில் கூரிய குச்சியால் 9 அங்குல இடைவெளிக்கு ஒரு கோடு வீதம் ஏற்படுத்த வேண்டும். கோட்டின் கீறலில் குதிரை மசால் விதைகளை விதைத்து, மண்ணைத் தள்ளி, மூட வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு $3\frac{1}{2}$ முதல் $4\frac{1}{2}$ கிலோ விதை தேவைப்படும். அடைமழை பெய்யும் அக்டோபர், நவம்பர் மாதங்கள் தவிர மற்ற எல்லா மாதங்களிலும் இதை விதைக்கலாம்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தால் விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்கள்.

ஆண்டு.	எண்ணிக்கை.
1969–70	761
1970–71	760
1971–72	779

விதைத்த உடன் தண்ணீர் கட்ட வேண்டும். 3 அல்லது 4 நாட்களுக்குப் பிறகு 2-வது முறை தண்ணீர் கட்ட வேண்டும். பிறகு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் தொடர்ந்து தவறாமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

களைகளை எடுத்துக் குதிரை மசால் பயிரிட்டுள்ள வயலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். விதைத்த 6 அல்லது 7-வது வாரத்தில் குதிரை மசால் செடிகள் அறுப்பதற்குத் தகுந்த அளவில் வளர்ந்து விடும். மேல் பகுதியை மட்டும் அறுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அடிக்கட்டைகளில் புதிதாகத் துளிர்த்து மறுபடியும் செடிகள் வளரும். 6 வாரத்தில் மீண்டும் அறுக்கலாம். குதிரை மசால் செடிகளை ஓர் ஆண்டில் 8 அல்லது 10 முறை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் ஓர் ஆண்டில் 30,000 கிலோ பசுந்தீவனம் கிடைக்கும். இதைக் காயவைத்தால் 12,000 கிலோ உலர்ந்த தீவனம் கிடைக்கும்.

ஒரு தடவை விதைத்து முளைத்த குதிரை மசால் பயிரை, 4 ஆண்டுகள் வரை வளர்க்கலாம். ஆண்டிற்கொரு முறை ஏக்கருக்கு 50 கிலோ சூப்பர்பாஸ்பேட் உரமிட்டால் தொடர்ந்து நல்ல தீவன மகசூல் கிடைக்கும். இப்பயிருக்குத் தழைச்சத்து உரமிட வேண்டிய அவசியமில்லை.

குதிரை மசால் விதை எடுக்க விரும்பினால் செடிகளை அறுக்காமல் விட்டுப் பூத்துக் காய்த்து முற்றவிட வேண்டும். நெற்றுகள் மஞ்சள் நிறமாக மாறும் பொழுது, செடிகளை அறுத்துக் காயவைத்து, அடித்து, விதைகளைச் சேகரிக்க வேண்டும்.

மாடொன்றுக்கு 4 கிலோ பச்சைத் தீவனம் அல்லது 2 கிலோ உலர்ந்த தீவனம் கொடுத்தால் போதுமானது.

தென்னந் தோப்புகளில் வெய்யில் நன்கு படும் இடங்களில் குதிரை மசால் வளர்க்கலாம்.

—ஆர். எம்.

விரைந்து பணியாற்றும் வேளாண்மைத் தொழிற்கழகம்

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவரின் சந்திப்புக் கட்டுரை

"பழைய முறைமாற்றிப்
பயிர் செய்தால்
நிறையப் பலன் கிடைக்க
வழியுண்டு ;
உழக்குத்தான் மிச்சமென்ற
இருட்டுநிலை
கிழக்கு வெளுத்ததுபோல்
மறைந்துவிடும்."

என்று முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியதைப் பின்பற்றித் தமிழ்நாட்டுஉழவர்பெருமக்களிடையே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் புதிய முறைகளையும் புதிய இயந்திரச் சாதனங்களையும் பரப்பி, "மேழி பிடிக்கும் கை மேதினி ஆளும் கை" என்ற நிலைக்கு உழவர்களை உயர்த்தி வருகிறது தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்.

தமிழ்நாட்டு வேளாண்மையில் பல்வேறு வியத்தகு சாதனைகள் ஏற்பட்டுள்ளது போலவே, சென்னை கிண்டியில் உள்ள தொழிற்பேட்டைக்கு அருகில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகமும் குறுகிய காலத்திலேயே வியத்தகு சாதனைகள் பலவற்றை நிகழ்த்தியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப்' பெருங்குடி மக்களுக்குத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தின் நோக்கம், செயல்முறை, எதிர்காலத் திட்டம் ஆகியவைகளைப் பற்றித் "தமிழரசு" இதழ் மூலம் விரிவாகத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகத் தலைவர் திரு கே. வி. சுப்பையா, பி.ஏ., எம்.எல்.ஏ. அவர்களைச் சந்தித்தோம்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள்.

சந்திப்பின் போது தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு இராமமூர்த்தி, ஐ.ஏ.எஸ்., அவர்களும் உடனிருந்து உதவியதுடன், வேளாண்மைத் தொழிற் கழகத்தின் பல்வேறு பணிகளைப் பற்றியும் குறிப்பிட்டார். "தமிழரசு" இதழின் உதவி ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகத் தலைவர் அளித்த பதில்களைத் தொகுத்துத் தந்துள்ளோம்.

உதவி ஆசிரியர் : வேளாண்மைத் தொழிற் கழகம் துவக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

தலைவர் : முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை முறையே வேளாண்மை, தொழில்வளம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றிய அனுபவத்திலிருந்து, நம் நாட்டுப் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மை ஆதலாலும், நமது மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் வேளாண்மையை நம்பி வாழ்பவர்கள் ஆதலாலும், நாடு சிறக்கவும், மக்கள் நலமடையவும் வேளாண்மை வளர்ச்சி சீரிய முறையில் முன்னேற வேண்டும் என்று 'பசுமைப் புரட்சி'யினைத் தோற்றுவிக்க அரசு முனைந்தது.

இதை அடுத்து உழவு தொழில் வளர்ச்சிக்கும், மற்றும் வேளாண்மையைச் சார்ந்த தொழில்கள் வளரவும், அதன் மூலம் நாட்டில் 'பசுமைப் புரட்சி' வெற்றி அடையவும் பலவகையான புதிய நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

அவற்றுள் முதலிடம் வகிப்பது வேளாண்மைத் தொழிற் கழகம் ஆகும். ஒவ்வொரு மாநிலத்திலும் வேளாண்மைத் தொழிற் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் உழவுத்தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத நவீன இயந்திரக் கருவிகளை உழவர்களுக்கு வழங்கவும், உழவுத் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், கால்நடை அபிவிருத்தி, கோழிப்பண்ணை, மீன்வளப் பெருக்கம் ஆகியவற்றில் புதுமைகளைப் புகுத்தவும் 1968 முதல் செயல்பட்டு வருகிறது.

உ. ஆ. : இக் கழகம் எப்பொழுது துவக்கப்பட்டது?

த. : 1966, ஜூலை 5-ஆம் நாள் நிறுவன ரீதியில் இக்கழகம் அமைக்கப்பட்ட போதிலும், 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் செயலாற்றி வருகிறது.

உ. ஆ. : வேளாண்மைத் தொழிற் கழகத்திற்கு நிதி எவ்வாறு கிடைக்கிறது?

த. : இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 4 கோடியாகும்.

அதில் செலுத்தப்பட்ட மூலதனமாகிய ரூபாய் 3.30 கோடி தொகையை மாநில, மைய அரசுகள் சம விகிதத்தில் அளித்துள்ளன.

நிறுவனத்தின் தேவைகளுக்கு மேலும் சுமார் ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகளிடமிருந்து கடன் பெறப்பட்டுள்ளது.

உ. ஆ. : வேளாண்மைத் தொழிற்கழகம் செய்யும் பணிகள் யாவை?

த. : 1968 முதல் 1970 வரை இக்கழகம் டிராக்டர் மற்றும், மின்சார மோட்டார், எண்ணெய் இயந்திரங்கள் (Oil Engines), பம்புசெட்டுகளைத் தவணைமுறையில் வழங்கியுள்ளது.

அத்திட்டத்தின் கீழ் 10,684 பம்புசெட்டுகளும், 292 டிராக்டர்களும் வழங்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களில் 75 உழவர்களுக்கு அவர்கள் விரும்பியுள்ள டிராக்டர்-டிராக்டர்கள் உற்பத்தித்தடைகள் நீங்கியதும் அளிக்கப்படும்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்கள் யாவும் இக்கழகம் மூலமே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை உழவர்களுக்கு 1,500 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சுமார் 1,000 டிராக்டர்கள் இவ்வாண்டு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்களைச் சீர்நிலையில் வைத்திருப்பது, அவற்றைப் பழுது பார்ப்பது, அவற்றிற்குத் தேவையான துணைக் கருவிகளை வழங்குவது ஆகியவற்றிற்காக இக்கழகம் மதுரை, திருச்சி, சேலம், விழுப்புரம், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் கிளை அலுவலகங்களை அமைத்துள்ளது.

அனுபவமிக்க பொறியாளர்களும், பயிற்சிபெற்ற இயந்திரக் கம்மியர்களும் (Machanics) இப் பணிகளைத் திறம்படச் செய்கின்றனர்.

இக்கழகத்தின் கிளை நிறுவனங்கள் மூலம் கல்டிவேட்டர் (Cultivator), 'கேஜ்வீல்' (Gage Wheel) ஆகிய துணைக் கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் சிறு உழவர்கள் நலன் கருதி டிராக்டர்களும், துணைக் கருவிகளும் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. அதற்காகத்துணை நிலையங்கள் மதுராந்தகம், திருவண்ணாமலை, பொன்னேரி, பரமக்குடி, தேனி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

இக்கழகத்தின் ஆழ்கிணறு அமைக்கும் பிரிவு கோவை, தென் ஆர்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையில் கிணறுகள் அமைந்துள்ளது.

'என்ட்ரின் 20 சத விகிதம் இ.சி.' என்ற பூச்சிக் கொல்லி மருந்தைக் கலப்படமற்ற நல்ல தரத்தில் தயாரித்து உழவர்களுக்கு வழங்கும் பணியில் இக்கழகம் நல்ல வெற்றி கண்டுள்ளது. மற்றும் டி.டி.டீ. (D.D.T.) பி.எச்.சி. (B.H.C), மாலதியான் (Malathian) ஆகிய பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தயாரித்து வழங்கவும் இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வேளாண்மைக்கான தரமான இரசாயன உரங்களை நியாய விலைக்கு வழங்க இக்கழகம் தென் ஆர்க்காடு, திருச்சி மாவட்டங்களில் முன்னோடி அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

உ. ஆ. : வேளாண்மைத் தொழிற் கழகம், துவக்கத்தில் இருந்து இதுவரை எவ்வளவு டிராக்டர், பம்பு செட்டுகள் வழங்கியுள்ளது?

த. : ரூபாய் 1.12 கோடி மதிப்புள்ள 292 டிராக்டர்களும், ரூபாய் 3 கோடி மதிப்புள்ள பம்புசெட்டுகளும் உழவர்களுக்குத் தவணை முறையில் வழங்கப்பட்டுள்ளன. டிராக்டர்கள் கோரியுள்ள பழைய விண்ணப்பதாரர்களுக்கு டிராக்டர் வழங்குவது பூர்த்தி செய்யப்பட்டால், மேலும் ரூபாய் 25 இலட்சம் கடனுதவியாகச் செலவிடப்படும்.

மேலும் ரூபாய் 3 கோடி மதிப்புள்ள 1,464 டிராக்டர்கள் உழவர்களுக்கு நேரிடையாக முழுத்தொகை பெற்று விற்கப்பட்டுள்ளன.

உ. ஆ. : தனிப்பட்ட உழவர்களுக்கு வாடகையில் டிராக்டர் வழங்கும் பணி பிரபலமடைந்துள்ளதா? வாடகை விவரம் என்ன?

த. : இக்கழகம் முக்கியமாகச் சிறு மூலதனமே உள்ள உழவர்களுக்கு டிராக்டர்களையும், துணைக் கருவிகளையும் வாடகைக்கு வழங்குகிறது. வாடகைக்கு டிராக்டர் வழங்கும் திட்டம் உழவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆகையால் இக்கழகம் வாடகைக்கு டிராக்டர் வழங்க மதுராந்தகம், திருவண்ணாமலை, பொன்னேரி பரமக்குடி, தேனி, புதுக்கோட்டை ஆகிய ஆறு இடங்களில் துணை நிலையங்களை நிறுவியுள்ளது. மேலும் சுமார் பத்து இடங்களில் துணை நிலையம் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிய டிராக்டர்களுக்கு நாள் ஒன்றுக்கு 160 ரூபாயும், பெரிய டிராக்டர்களுக்கு 200 ரூபாயும் வாடகையாக வசூலிக்கப்படுகிறது.

மேலும் வெவ்வேறு பணிகளுக்கேற்ப டிராக்டர்களும், துணைக் கருவிகளும் மணிக்கணக்கு வாடகையில் வழங்கப்படுகின்றன.

உ. ஆ. : உழவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் எவ்வாறு வசூலிக்கப்படுகின்றன?

தலைவர் தொழிற்கூடத்தைப் பார்வையிடுகிறார்.

த. : மின்சார மோட்டார், எண்ணெய் இயந்திரம் போன்ற கருவிகளுக்காக உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் ஏழு ஆண்டுத் தவணை முறையிலும், டிராக்டர்களுக்கு வழங்கப்பட்ட கடன் பத்து ஆண்டுத் தவணை முறையிலும் வசூலிக்கப்படுகின்றன.

தவணைத் தொகையைச் சென்னை அலுவலகத்திலோ அல்லது பழுது பார்க்கும் கூடங்களிலோ, பணமாகவோ அல்லது அந்தந்த ஊர்களில் உள்ள வங்கிக் கிளைகளில் உண்டி மூலமாகவோ செலுத்தலாம்.

தமிழகத்திலுள்ள ஸ்டேட் பாங்க், இந்தியன் பாங்க் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, கனரா பாங்க், சிண்டிகேட் பாங்க் ஆகியவற்றின் கிளைகளில் தவணைத் தொகைகளைச் செலுத்தித் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழக வங்கிக் கணக்கில் வந்தடையத் அஞ்சல் மூலம் மாற்றும் வசதியும் உழவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கழகத்தின் சார்பில் விற்பனை அதிகரிப்பு—உதவி அலுவலர்கள் தவணைத்தொகையை உழவர்களிடமிருந்து நேரிடையாகப் பெறுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

உழவர்களுக்கு முன்கூட்டியே தவணைத் தொகைகள் குறித்து அறிவிப்புகளும், நினைவூட்டு மடல்களும் அனுப்பப்படுகின்றன.

தவணையைச்செலுத்தத் தவறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

சமீபத்தில் தமிழ்நாடு நில வரி வசூல் சட்டத்தின் அடிப்படையில் இக் கழகத்திற்குரிய பாக்கித் தொகைகளை வசூலிக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உ. ஆ. : கடன் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது ஏன்?

த: நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வேளாண்மைக்கு அதிக முறையில் கடனளிப்பதாலும், இக்கழகம் வேறு வேளாண்மைத் தொழில் துறைகளில் இயங்க முனைந்துள்ளதாலும், 1970-ஆம் ஆண்டிற்குப் பிறகு தவணை முறைத் திட்டம் தொடரப்படவில்லை.

உ. ஆ. : கடன் வாங்கும் உழவர்களிடம் பணமாகத் திருப்பி வசூலிப்பதை விட, விளை பொருளாகவே அறுவடையின் போது வாங்க ஏதேனும் திட்டம் உண்டா?

த. : கடன் வழங்கப்பட்ட உழவர்களிடமிருந்து தவணைத் தொகைகளை விளை பொருளாக அறுவடைக் காலத்தில் வாங்குவதில் பல சிக்கல்கள் உள்ளன.

முதலில் அவ்வாறு வாங்கிய பொருள்களைப் பாதுகாக்கக் கிடங்குகள் தேவைப்படும். விளை பொருள்களைத் தக்க காலத்தில் விற்பனை செய்வதிலும், அப்பொருள்களின் மதிப்பை நிர்ணயம் செய்வதிலும், விற்பனை செய்யப் புதிய நிறுவனங்களை அமைப்பதிலும் பணம் செலவு செய்ய நேரிடுமாதலால் அச் செலவுகளும் கழகத்தின் பாரமாக ஆகி, உழவர்களுக்கும் பாரம் தருமாகையால் அது விரும்பத்தக்கதல்ல.

உழவர்களே தம் விளைச்சலை நேரிடையாக விற்றுப் பணமாக்கிக் கழகத்திற்குச் செலுத்தும் முறைதான் அவர்களுக்கும் இக் கழகத்திற்கும் எளிதானது.

உ. ஆ. : வேளாண்மைத் தொழிற் கழகத்தின் கிளைகளை மேலும் அதிகமாக்கும் நோக்கம் உண்டா?

த. : இதுவரை டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் கூடங்கள் மதுரை, விழுப்புரம், காஞ்சிபுரம், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

கோவையில் ஓர் டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் கூடம் விரைவில் நிறுவப்படும்.

டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் கூடம் ஒவ்வொன்றின் கீழும் 3 டிராக்டர் வாடகைக்கு விடும் துணைக்கூடங்கள் வீதம், மொத்தம் 18 துணைக்கூடங்கள் அமைக்கப்படும்.

இதுவரை மதுராந்தகம், திருவண்ணாமலை, தேனி, பரமக்குடி, பொன்னேரி ஆகிய இடங்களில் டிராக்டர் வாடகைக்கு விடும் துணைக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டையில் டிராக்டர் வாடகைக்கு விடும் ஒரு துணைக் கூடம் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. மேலும், தஞ்சை மாவட்டத்தில் இரு இடங்களில் புதிய துணைக் கூடங்கள் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன. டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் ஒவ்வொரு கூடத்திலும் 6 டிராக்டர்களும், துணைக்கூடம் ஒவ்வொன்றிலும் 3 டிராக்டர்களும் வாடகைக்கு விடுவதற்கு வைக்கப்பட்டுள்ளன. தேவையின் பேரில் டிராக்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

உ. ஆ. : தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம், மற்ற மாநில வேள்ளாண்மைத் தொழிற் கழகங்களை விட ஏதேனும் குறிப்பிடத் தகுந்த வகையில் சாதனை செய்துள்ளதா?

த. : அண்டை மாநிலங்களை விட, அதிக அளவு டிராக்டர்கள் தமிழ் நாட்டில் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டைவிட மூன்று மடங்கு அதிகப் பரப்பளவும், வேளாண்மையையே முக்கியத் தொழிலாகவும் கொண்ட பீகார் மாநில வேளாண்மைத் தொழிற் கழகம் தவிர, மற்ற எல்லா மாநில வேளாண்மைத் தொழிற் கழகங்களையும்விடத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகமே அதிக எண்ணிக்கையில் பம்புசெட்டுகளையும், டிராக்டர்களையும் உழவர்களுக்கு வழங்கிய பணியில் முதலிடம் வகிக்கின்றது.

உ. ஆ. : பவர் டில்லர், புல்டோசர் வழங்குவது சம்பந்தமாக வேளாண்மைத் தொழிற் கழகத்தின் குறிக்கோள் என்ன?

த: பவர் டில்லர்கள் வேண்டி இது வரை உழவர்கள் இக்கழகத்தை அணுகவில்லை.

சமீபத்தில் கேரள மாநில வேளாண்மைத் தொழிற் கழகத்தின் மூலம் ஜப்பானிலிருந்து ''குபோட்டா'' பவர் டில்லர்கள் இறக்குமதி செய்து விற்பனை செய்யவும், சில ஆண்டுகளுக்குப்பின் கேரள மாநிலத்திலேயே அவற்றை உற்பத்தி செய்யவும் திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

அந்தப் பவர் டில்லர்களின் விற்பனையைத் தமிழ்நாட்டில் அதிகப்படுத்த இந்தக் கழகம் முயற்சி செய்து வருகிறது.

உ ஆ. : வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும், பொறியாளர்களுக்கும் பெருமளவில் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்திடம் உள்ளதா?

த: ஆம்! இத் திட்டம் ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ளது. வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு ஆண்டொன்றுக்குச் சுமார் 90 பேர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் செயலாக்கப்படுகிறது.' முதற் குழுவினர் ஏற்கெனவே பயிற்சி பெற அனுப்பப்பட்டுள்ளனர்.

தகுதிவாய்ந்த பட்டதாரிகளை தேர்ந்தெடுத்து அவர்களை 'புத்னி', 'கிஸ்ஸார்' ஆகிய பயிற்சிக் கூடங்களுக்கு அனுப்பி, டிராக்டர் பழுது பார்க்கவும், ஒருங்கிணைக்கவும் பயிற்சியளிக்கப்படுகிறது. அவர்களுக்கும் அவர்களது பணியாளர்களுக்கும் மேலும் வேண்டிய பயிற்சியைச் சென்னையில், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தாலேயே அளிக்கப்படும்.

பயிற்சி பெற்ற பட்டதாரிகள் இக்கழகத்தின் ஆதரவில் தாமே டிராக்டர் பழுது பார்க்கும் கூடங்களைச் சிறு நகர்ப் பகுதிகளில் அமைக்கத் தேவையான உதவியளிக்கப்படும்.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தொழிற்கூடங்களை அமைக்கத் தேவையான முதலீட்டை இக்கழகம் வங்கிகளுக்குப் பரிந்துரைத்துக் குறைந்த வட்டி விகிதத்தில் (5 சத விகிதம்) பெற வசதி செய்யும். மிகுதி வட்டியை மைய அரசு இக்கழகம் மூலம் மானியமாக வங்கிகளுக்கு வழங்கும்.



விற்பனைக்குத் தயாராக உள்ள டிராக்டர்கள்.

டிராக்டர்களுக்குத் தேவையான உதிரி பாகங்கள் இந்நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய வழங்கப்படும். நிலையப் பணியாளர்களுக்கும் இக்கழகம் பயிற்சியளிக்கும். மேலும் இவர்களது நிலையங்கள் மூலமாக உழவர்களுக்குத் தேவையான உரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் வழங்கப்படும்.

இத்தகைய கூடங்கள் நிறுவப்படுவதால், வேளாண் பெருங்குடி மக்கள் பெரிதும் பலனடைவார்கள். இத்திட்டம் பலருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன், உழவர்களுக்கு எளிதில் அவர்கள் அருகிலேயே தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வசதியுமளிக்கும். இக் கூடங்கள் பல இடங்களில் நிறுவப்படுவதால், இக்கழகம் தானே பல கூடங்களைப் பெருமளவில் நிறுவ வேண்டிய நிருவாகச் செலவுகள் குறையும்.

உ.ஆ.: வேளாண்மைத்தொழிற் கழகத்தின் பணிகளை உழவர்களுக்கு விளக்கச் சிறுசிறு வெளியீடுகளையும், டிராக்டர், ஸ்ப்ரேயர், மோட்டர், என்ட்ரின் முதலியவைகளைப் பயன்படுத்தும் முறைகளையும் விளக்கிடும் சிறுசிறு கையேடுகளையும் வெளியிட்டு இலவசமாக வழங்கினால் என்ன?

த: டிராக்டர்களைப் பொறுத்த மட்டில், அவற்றைப் பயன்படுத்தும் முறை பற்றியும், அவற்றின் உதிரி பாகங்களைப் பற்றியும் விவரங்களடங்கிய புத்தகங்கள், டிராக்டர்களை விற்பனை செய்யும் நேரத்தில் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. தவிர அவ்வப்பொழுது சிறுசிறு வெளியீடுகள், கையேடுகள் ஆகியவையும் வெளியிடப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

உ.ஆ.: சில தனியார் நிறுவனங்களைப்போல், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகமும் மருந்து தெளிக்கும் கருவிகளைக் கொண்டு உழவர்களின் வயலில் மருந்து தெளித்து விட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளும் திட்டத்தைச் செயல்படுத்தினால் உழவர்களுக்கும் பயன் ஏற்படும்; அதே நேரத்தில் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் வழி ஏற்படும். இத்திட்டம் பற்றி நீங்கள் யோசித்தாலென்ன?

த.: "இது ஒரு நல்ல திட்டம்தான்! தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான தெளிப்பான்கள் இல்லை. 'ஹெலிகாப்டர்' விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டமும் இப்பொழுது செயல்படுத்தப்படவில்லை. எனவே நீங்கள் கூறும் திட்டம் உழவர்களுக்குப் பயன் விளைக்கும். (இதுபற்றி நாம் யோசித்தாலென்ன? என்று மேலாண்மை இயக்குநர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"மண்டலக் கூடங்களில் சிறு எண்ணிக்கையில்தெளிப்பான்களை வைத்துக் கொண்டு அவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு வழங்கும் முன்னோடித் திட்டம் ஒன்றினை நாம் முதற்படியாக ஏற்கலாம்" என்று அவர் கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் அவர்கள், "இதுபற்றி உடன் திட்டமிடுங்கள்" என்று வேளாண்மை இயக்குநர்அவர்களிடம் கூறினார்).

உ. ஆ.: ஆந்திர மாநிலத்தில் வேளாண்மைத் தொழிற் கழகம் வழங்கிய 'ஆர். எஸ். ஒ. 9' டிராக்டர்களைப் பற்றி உழவர்கள் புகார் சொல்லியுள்ளனரே! அதுபோல் தமிழ்நாட்டிலும் புகார் வந்ததா? அதுபற்றி நீங்கள் என்ன செய்தீர்கள்?

த.: தமிழ்நாடுவேளாண்மைத் தொழிற் கழகம் இதுவரை 38 'ஆர். எஸ். ஓ. 9' டிராக்டர்களை உழவர்களுக்கு விற்பனை செய்துள்ளது. இந்த டிராக்டர்களைக் குறித்து உழவர்களிடமிருந்து வந்த சில புகார்களை, இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஓர் குழு பரிசீலனை செய்து பரிந்துரை செய்ததன் பேரில், டிராக்டர்களில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இன்னமும் அந்த டிராக்டரில் உழவர்கள் சுட்டிக்காட்டும் கோளாறுகளை அவ்வப்பொழுது பொறியாளர்கள் சரி செய்து கொடுத்து வருகின்றனர்.

உ. ஆ.: தமிழ்நாடு வேளாண்மைத்தொழிற் கழகத்தின் எதிர்காலத் திட்டம் என்ன?

த.: நைலான் மீன்வலை தயாரித்தல், இயந்திரக் குளிர் சாதனங்கள் மூலம் மீனைப் பாதுகாத்தல், (Cold Storage of Fish) இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சில பொருள்களை உமியினின்று தயாரித்தல், பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தயாரித்தல், தோல் பதனிடப்பயன்படும் டேனின் (Tannin) என்ற இரசாயனப் பொருள்களைத் தயாரித்தல், மக்காச் சோளத்தினின்று பல்வேறு பொருள்கள் தயாரித்தல் போன்ற பல புதிய திட்டங்களை மேற்கொள்ள இக்கழகம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் உள்ளன.

"மாநில மைய அரசுகளின் முழு ஆதரவுடனும், உழவர்கள் பொதுமக்கள் ஒத்துழைப்புடனும், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் விரைவில் பெருமளவில் மிக விரைந்து பணியாற்றும் என்று உறுதியாக நம்புகிறேன்".

[வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் அவர்களின் நம்பிக்கையும், தொண்டும் வேளாண்மைத் துறைக்கு உறுதுணைகளாக இருக்கும் என்பது உறுதி.]

—ஆர்.எம்.



வருந்துகிறோம்

"தமிழன் என்றொரு இனம் உண்டு;
தனியே அவர்க்கொரு குணம் உண்டு"

என்று பெருமிதத்தோடு பாடி, அத் தனிப் பெருந் தமிழினத்தின் தகைமைசால் பெருமைகளையெல்லாம் நிரலே தொகுத்தும், உத்தமர் காந்தியடிகளின் உன்னதமான தத்துவங்களையெல்லாம் விளக்கியும் தமிழ்க் கவிதை வெள்ளம் பாய்ந்து பெருக்கெடுத்தோடச் செய்து கவிதைத் தொழில் புரிந்த நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள், தமது 85-ஆம் வயதில், 24—8—72-ஆம் நாள் காலையில் சென்னையில் இயற்கை எய்தினார்கள்.

நாமக்கல் கவிஞர் அவர்கள் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டு திகழ்ந்தார். இந்த நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டு, இருமுறை சிறைக்குச் சென்றார்.

இந்த நாடு விடுதலையடைந்ததும் 1947-ல் அவர் தமிழ் நாட்டின் அரசவைக் கவிஞராக நியமனம் செய்யப்பட்டார். பின்னர், இரு முறை தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினராக, நியமனம் செய்யப்பட்டார்.

தமிழக அரசு, நாமக்கல் கவிஞர் அவர்களின் தியாக உணர்வையும், நாட்டுப் பணியையும் பாராட்டித் திங்கள் தோறும் 250 ரூபாய் வழங்கிச் சிறப்பித்திருக்கிறது.

'கை குவித்து வணங்குவோம்' என்னும் தலைப்பில் அவர் எழுதிய கடைசிக் கவிதை, 'தமிழரசு' விடுதலை வெள்ளி விழாச் சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. அவர், அந்தக் கவிதையைப் படித்தவாறே உயிர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் கவிஞர் அவர்களின் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கும், கவிதையன்பர்களுக்கும் நமது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கண்ணகியே மங்கலதேவி

பேராசிரியர் சி. கோவிந்தராசனார்

மங்கலதேவிக் கோட்டத்தினுள் நான்கு கோயில்கள் ஓரளவு சிதைந்த நிலையில் இருக்கக் கண்டேன். கோயில்கள் என்று குறிப்பது, ஆகமச் சிற்ப சாத்திரங்களின் முறைப்படி கட்டப்பட்ட கோயில்கள் அல்ல. கட்டடக்கலை முறைக்கு ஆகம விதிகளைப் பின்பற்றாத முறையில் முன்னரே கட்டப்பட்ட கோயில்கள். அதனாலேதான் கருங்கற்களால் சிறியதும், பெரியதுமாக, அங்கொன்றும், இங்கொன்றுமாக அவைகள் அறைகளைப்போன்ற அளவில், அதிக உயரமில்லாமல் நான்கு பட்டை விமானங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட கோயிலும் இதில் இருக்கின்றது என்பதைப்புதரடைந்து கிடக்கும் பாழிடங்களில் உள்ள பழைய செங்கற்கள் தெரிவிக்கின்றன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவை என்று கருதப்பெறும் முதலிரண்டு கோயில்களுள் முதலாவது கோயிலில் பீடமும், இரண்டாவது கோயிலில் கண்ணகி சிலையும் (சிதைந்த நிலையில்) இருந்ததை முன்னர் கூறியுள்ளேன். கண்ணகிக் கோயிலுக்கு எதிராக அமைக்கப்பட்ட முதற்கோயில் கோவலனுக்கு நினைவாக அமைக்கப்பட்டதாகும். இதனை, மணிமேகலை, வஞ்சிநகர் புக்க காதையில், மணிமேகலை, தன் தந்தை கோவலனுக்கும், தாய் கண்ணகிக்கும் படிமம் எழுதிய கோயிலைக் காண விழைந்து மாமலை மீதுள்ள கோயிலில் கண்டதாகக் கூறப்பெறும் செய்தி உறுதி செய்கின்றது.

கோயில்களின் அமைப்புமுறை, தமிழகத்திலுள்ளதும் ஆகம விதிகளின்படி கட்டப்பட்டதுமாகிய கோயில்களைப் போல இல்லை. பழைய கிராமங்களில் கிராம தேவதைகட்கு அக்கால மக்கள் திடல்களிலும், தோப்புகளிலும், குறிப்பிட்ட இடத்தை எல்லை கோலி வளைத்து, இடையே கோயிலை அமைத்திருப்பதைப் போன்ற பாங்கில் அவைகள் இருக்கின்றன. தென்னிந்தியாவில் பண்டைக்காலத்தில் இருந்த சதுரக் கோயில்கள் (Dolmens) அமைப்பிலேயே கட்டப்பட்டிருந்தன.

விமான வகைகள் தென்னிந்தியாவில் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னரே கட்டடக் கலை வளர்ச்சிக்குரியதாக இருந்தன. அவை சதுரத்தில் மேல் சதுர வடிவில் நான்கு பட்டையாக எழுப்பித் தலைப்பை ஒரு முகமாகக் குவித்துச் சேர்த்து நிற்கும் தோற்றமுடையன. (i bid pp 72—79) பழைய கோயில்கள் நீளச் சதுர அறையமைப்பில் இருந்தன. அம்முறையிலேயே எத்தகைய பதுமைகளோ கருங்கற் சிற்ப, வேலைப்பாடுகளோ இல்லாமல், தூண்களும் இல்லாமல் மங்கலதேவிக் கோட்டத்திலுள்ள முதலிரண்டு கோயில்களும் உள்ளன.

விமான முகப்புப் பட்டைகளில், முகப்புக்கொன்றாக நான்கு வளைவுக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்முறை, தமிழகத்தின் கோயிற் கட்டடக் கலையின் விமான அமைப்புக்குரிய பழமையை நன்கு தோற்றுவிக்கின்றன. அப்பரடிகள் காலத்திலேயே விமானங்களுடன் கோயில்கள் இருந்தன என்பதைப் பெண்ணாகடம் தூங்கானை விமானக் கோயில் உணர்த்துகின்றது. அக்காலத்திலேயே இளங்கோயில், பெருங்கோயில், கரக்கோயில், ஆலக் கோயில் போன்ற கோயில் வகைகள். இருந்தனவென்று அப்பரடிகள் குறிப்பிடுவதனால், அவ்வகையில் வளர்ச்சியுற்ற தமிழகக் கோயில்களுக்கு மூலமான கோயில்கள் யாவை? அவைகளே தமிழகச் சிற்பியர் தனித்தன்மையுடன் தோற்றுவித்த மங்கலதேவிக் கோட்டக் கல்லறைக் கோயில்களாகும்.

இக்கருத்திற்கு ஏற்பப், பேராசிரியர், துப்ரேல் அவர்கள் தமது "திராவிடரின் கட்டடக் கலை" என்னும் நூலில் (Prof Dwbreiwl's Dravidian Architecture pp 1—10) "தென்னாட்டுக் கட்டடக்கலை அமைதியாகவும் செம்மையாகவும் வளர்ச்சி பெற்று வந்ததாகும்" என்று கூறியுள்ளார். மற்றும் 1914-ல் வெளியிடப்பட்டுள்ள தென்னிந்தியப் பழம்பொருள் ஆராய்ச்சியாளரின் ஆண்டு அறிக்கை பக்கம் 34-ல்,

'' தென்னிந்தியாவில் இருந்த பண்டைக் கோயில்களைப் பார்த்தே பௌத்தரும் சமணரும் கோயில்களை அமைத்துக் கொண்டனர் '' என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு, தமிழகத்தில் மிகப் பழங்காலத்திலிருந்து தமிழர் தனித்தன்மையுடன் கட்டடக் கலையை வளர்த்து வந்துள்ளனர் என்று மேனாட்டறிஞர்கள் அறுதியிட்டு உறுதியாக ஆராய்ந்து எழுதியிருந்தும், 'கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர் தமிழர் சிற்பக் கலையையும், கருங்கற் கட்டடக் கலையையும் அறியாதிருந்தனர். பின்னர், குப்தவாகாடக முறையைப் பல்லவர்கள் பின்பற்றினர்' என்றே தமிழகத்திலுள்ள சில ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். (இத்தகையாரின் ஆராய்ச்சிக்கு முன்னர் எனது கண்ணகிக் கோட்டக் கண்டு பிடிப்பிடம் என்ன தகுதியைப் பெறும் என்பதை வாசகர்களே சிந்திக்கின் புலனாகும்.)

கோட்டத்திலுள்ள நான்கு கோயில்களும் நான்கு வகையாக இருக்கின்றன. அடிப்படையின்றி மலைத்தளத்தின்மீது அமைக்கப்பட்டுள்ள முதலிரண்டு கோயில்களுடன் சிதைவுக் கற்குவியலுக் கிடையே நிற்கும் கம்பச் சின்னமும் கருங்கல்லில் துளையிட்டுள்ள சதுரச் சாளரமும் சமணச் சார்புடைய சின்னங்களாகக் கருத இடமுள்ளது. கோவலன் சமணச் சமயச் சார்புடையவனெனச் சிலப்பதிகாரம் தெளிவாக உரைக்கின்றது. ஆதலினால், அருக சமயக் கோயிலமைப்புப்படி பல அறைக் கோயில்கள் அங்குத் தோன்றியுள்ளன என்பதாகும். மலைமீது கட்டவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டதால், மலைப்பாறைகளை உடைத்துக் கோயில் கட்டும் முயற்சியை அக்காலத் தமிழகச் சிற்பியர் கையாண்டு வெற்றி கண்டுள்ளனர்.

கோட்டம் என்பது பல உள் அமைப்புடன் அமைக்கப் பெறுவது என்பதையும், தரையின் மீது கட்டப்பட்ட அக்காலக் கோயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டன என்பதையும், மணிமேகலை சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில், '' அருந்தவர்க் காயினும் அரசர்க்காயினும் ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க்காயினும் நால்வேறு வருணப் பால்வேறு காட்டி, இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த குறியவும், நெடியவும் குன்று கண்டன்ன சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்'' என்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ் விளக்கத்தினைக் கொண்டு மங்கலதேவிக் கோட்டத்தின் பழமையினை ஒப்பிட்டு அறியத் தக்கதாகும்.

பலி பீடிகை

இரண்டாவது கோயிலாகும் கண்ணகிக் குரிய கோட்டத்தின் திருமுற்றத்தில் நாட்பலி பீடிகை அமைக்கப்பட்டுள்ளது. கண்ணகிக் கோட்ட விழாவில் கலந்துகொண்ட '' இலங்கை கயவாகு வேந்தன் தன்னாட்டில், கண்ணகிக்கு நாள்தோறும் பலிகொள்ளும் பலிபீடத்தை முற்படச் செய்து, பின்பு கோட்டம் அமைத்து, ஆடித் திங்களில் விழாச் செய்தான் '' என்று சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை உணர்த்துகின்றது. சிலம்பு குறிக்கும் இவ்வகைச் சான்றிற்கு ஏற்ப, கண்ணகிக் கோயிலில் முன்னர் நாட் பலி பீடிகை அமைக்கப்பட்டுள்ளது.

"தமிழரசு இதழில் வெளிவந்த 'கண்ணகிக் கோட்டம்' ஆராய்ச்சிக் கட்டுரையைப் பாராட்டி, இலக்கிய ஆர்வத்தோரே ஏராளமானவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். அந்தத் தமிழ் நெஞ்சங்கள் மகிழும் வகையில் கண்ணகியே—"மங்கலதேவி" என்ற ஆராய்ச்சியை அகச்சான்று காட்டி இங்கு விளக்கியுள்ளார்—கண்ணகிக் கோட்டம் கண்டுபிடித்த கரந்தைப் பேராசிரியர் சி. கோவிந்தராசனார்.

கோயில் சிற்ப வேலைப்பாடு எதுவுமின்றிக் கல்லறைக் கோயிலாக இருக்க அதற்குரிய பலிபீடம் மட்டும், சிற்பத்திறனுடன் அழகாக அமைக்கப்பட்டிருப்பதற் குரிய காரணத்தினை ஆராய்ச்சி செய்தேன்.

கோட்டம் தோன்றிய போது அமைக்கப்பட்ட பழைய பலிபீடிகையை, கி. பி. பத்தாம் நூற்றாண்டில், தாமரை இதழ்ப் பட்டிகையுடன் கூடிய பீடம் எழுப்பி அதன்மேல் அமைத்துள்ளனர். இதனை, கி. பி. பத்தாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வளர்ச்சியடைந்த சிற்பச் சாயலுடன் கூடிய அடிபீடத்தின் மேல், முகப்பளவில் உள்ள பழைய பலிபீடிகை பொருத்தப்பட்டிருப்பது நன்கு உணர்த்துவதாக இருக்கின்றது.

விநாயகர் சிலை

கண்ணகி இறந்த இடத்தில் நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்டுக் காலப் போக்கில் விரிவடைந்துள்ள மங்கலதேவிக் கோட்டத்தில், ஓரிடத்தில் புதர்களுக்கிடையே விநாயகர் சிலையொன்று சிதைவுகளுடன் இருந்ததாக வேட்டைக்காரர் கண்டு கூறியதாக முன்னர் கூறியுள்ளேன்.

இச்சிலையைக் கண்ட அளவில் ஒரு சில ஆராய்ச்சியாளர்கள், மங்கலதேவிக் கோட்டமே கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்று கூறியுள்ள செய்தி 5—1—72, இந்து நாளிதழில் வெளிவந்துள்ளது. இக்கருத்தையே மற்றையவரும் தொடர்ந்து கூறுவர்.

விநாயகர் வழிபாடு தமிழகத்தில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் நரசிம்ம பல்லவனின் வாதாபி படையெடுப்பின் வழியே, பல்லவ சேனாதிபதியான பரஞ்சோதியாரின் முயற்சியால் தமிழகத்தில் இடம்பெற்று வளர்ச்சியுற்ற தெய்வ வணக்கமாகும். பிற்காலச் சோழ, பாண்டியரே அவ்வணக்கத்தை ஆட்சியில் இடம்பெற்ற ஆச்சாரியரின் முயற்சியாலும், ஆகம புராண விசேடத்தாலும் பேணி வளர்த்துள்ளனர். அக்காலத்தில் அதாவது கி.பி. 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டில் மங்கலதேவிக் கோட்டத்தில் மூன்றாவது கோயிலுடன் அதைச் சார்ந்த கிழக்கு வாயிலையும், திருப்பணி செய்துள்ள பாண்டிய மன்னனொருவனால் விநாயகர் சிலையும், அங்குப் பிரதிட்டை செய்யப் பெற்றுள்ளது. இவ்வுண்மையான வரலாற்றுக் குறிப்பைத் தவிர, 1800 ஆண்டுகட்கு முற்பட்ட பழமைகளோடு விளங்கும் மங்கலதேவிக் கோட்டத்தில் விநாயகர் சிலை இடம் பெறுவதற்கு வேறு ஏது இல்லை.

கல்வெட்டுச் சான்றுகள்

மங்கலதேவிக் கோட்டத்தின், மேற்கு வாயிலுக்கு அருகே முதலாவது என்று யான் குறிப்பிடும் கோயிலுள்ளது. அதன் வாயிலின் வலதுபுற நிலைச் சட்டக் கல்லில் பழைய தமிழெழுத்தாலாகிய வட்டெழுத்துக்களில் கல்வெட்டொன்று இருக்கின்றது. தமிழகத்தின் வரலாற்றினை நன்கு ஆராய்ச்சி செய்து வெளியிட்ட மேனாட்டு அறிஞர் பர்னல், பெர்கூசன் போன்ற பெருமக்களின் '' தமிழின் பழைய எழுத்து '' என்ற ஆராய்ச்சிக் குறிப்புப்படி, இக்கல்லெழுத்துக்கள் சிலப்பதிகார காலமாகும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிக் குரியவை என்பதில் ஐயமில்லை. கல்வெட்டு, வரிக்கு ஆறு அல்லது ஏழு எழுத்துக்களுடன் மேலிருந்து கீழாகத் தொடர்ந்து முப்பது வரிகள் அளவில் இருக்கின்றது. கல்லெழுத்துக்களில் ஒரு பகுதி வரிசையாகச் சிதைவு பெற்றிருப்பதால் செய்தியினைத் தெளிவாக அறிய இயலவில்லை.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக் குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் இரண்டு—மூன்றாவது கோயிலின் முற்றத்திலுள்ள கட்டைச் சுவரின் கற்களில் உள்ளன. பொறிவு மிகுந்த முகப்பில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததனால் படியெடுக்க இயலவில்லை. ஆயினும் பாண்டிய மன்னனொருவன் மங்கலதேவி அம்மனுக்குச் செய்துள்ள அறச் செயல்களை அவைகள் உணர்த்துவனவாக இருந்தன.

என் ஆராய்ச்சிக் குரியதாக கிடைத்தகல் வெட்டுக்கள் பற்றிக் கூறுவோமானால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல், கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரைக்கும் பல்வேறு காலங்களில் உண்டான கல்வெட்டுகள் மங்கலதேவிக் கோட்டத்தில் (கண்ணகிக் கோட்டம்) உள்ளன என்பது தெளிவாகும். (5-1-1972) இந்துப் பத்திரிகையில், அங்கு ஏதோ சில கல்வெட்டுக்கள் புதரடைந்து இருப்பதாக மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது)

கண்ணகியே மங்கலதேவி

கண்ணகியே மங்கலதேவி என்பதற்குரிய சான்றுகள் :—

கண்ணகி நிலைகுலைந்த உடலுடன் நெடுவேள் குன்றத்தின் சிகரப் பரப்பிடத்தில், வேங்கை மர நிழலில் நின்றபோது, நேரில் கண்டவர்கள் அம் மலையில் வாழும் பழங்குடி மக்களாகிய குறவர்களே என்று இளங்கோவடிகள் தெளிவாகக் கூறியுள்ளார்.

இச்செய்தியைத் தவிரக் குறவரிடம் கண்ணகி தன் பெயரைச் சொன்னதாகவோ அன்றி அவர்கள் அறிந்ததாகவோ சிலப்பதிகாரத்தில் செய்திகள் இல்லை. கண்ணகி அங்கு இறந்த பின்னர் தாம் தெய்வமாகக் கருதிய பெண்ணை, நடுகல் நாட்டி வழிபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒரு நாள், அருகில் ஓடும் பேரியாற்றங்கரைக்குத் தங்கள் நாட்டு அரசனாகிய சேரன், செங்குட்டுவன் மலைவளங்காண மனைவியுடனும் அரசியல் அதிகாரிகளுடனும் வருகின்றான். மன்னனை மரியாதைப் பொருள்களுடன் வரவேற்ற குறமக்கள் தலைவன், கண்ணகி தெய்வமான நிகழ்ச்சியை மன்னனிடம் தெரிவித்தான். இப்பகுதியில் நூலாசிரியர்,

'' கான வேங்கைக்
கீழோர் காரிகை,
தான்முலை இழந்து
தனித்துய ரெய்தி
வானவர் போற்ற
வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல் ?
யார்மகள் கொல்லோ ?
நின்னாட்டில் யாங்கள்
நினைப்பினும் அறியோம்''

(காட்சிக்காதை—வரி 57—61)

என்று, குன்றக் குறவர் அரசனிடம் கூறியதாகக் கூறியுள்ளனரே தவிர, கண்ணகியின் இயற்பெயரை அறிந்ததாகச் செய்தியில்லை. புகார் நகரில் கண்ணகியைப் பிரிந்து கோவலன் மாதவியோடு இருந்த போது, '' கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினளாக '' இருந்ததோடு '' மங்கல நாண் (தாலி) அன்றி மற்றை நாண் '' அணியாளாகவும் இருந்தாள் என்று, அடிகள் தெளிவாகச் சிலம்பில் கூறியுள்ளார்.

இந்நிலையில் கோவலனோடு மதுரைக்கு வந்த கண்ணகி, கணவனை இழந்ததனால், தான் போற்றிப் பேணும் மங்கல அணியையும் இழந்து வாழ மனம் கொள்வாளா ? எனவே, மங்கல நாணுடனேயே (தாலியுடன்) இறக்கத் துணிந்த தன் செயலே, முலைமுகம் திருகி மதுரை மீது எறிந்த வெறியுணர்ச்சியாகும். அந்நிலையுடனேயே நெடுவேள் குன்றத்தின் மீது வேங்கை மர நிழலில் நின்றாளாதலின், கண்ணகி என்ற இயற்பெயரை அறியாத குன்றக் குறவர்கள், தாம் நேரில் கண்ணால், கண்கண்ட காட்சியையே நினைவாகக் கொண்டு, அவள் இறந்த இடத்தில் தெய்வமாக வழிபடும்போது, மங்கலநாண் கழுத்தில் அணிந்திருந்த சிறப்பை வைத்து '' மங்கலதேவி '' என்று காரணப் பெயரிட்டு, நடுகல்வைத்து, வணங்கியுள்ளனர். பின்னர், அவ்வீரப் பத்தினி வழிபாட்டிடம் சேர மன்னனால் கோயிலாக்கப்பட்டது.

காலப்போக்கில், மங்கலதேவி, மங்கலா தேவி என்று அழைக்கப்பட்டிருப்பதுடன், மங்கலா தேவி அம்மன் என்ற தெய்வக் குறிப்புடனும் பெயர் பெற்றுள்ளதை மேலக்கூடலூர் கல்வெட்டு அறிவிக்கின்றது. மங்கலதேவி கோயில் உள்ள மலையும் மங்கலதேவி மலை என்று பெயர் பெற்று, இன்றும் மாறாமல் நிற்கின்றது. மற்றும், மலைமேல் உள்ள கண்ணகிக் கோட்டத்திற்குப் பிரதியாக, அடிவாரப் பள்ளத்தாக்கிலுள்ள ஆங்கூர் பாளையத்திற்கு அருகில் '' பத்தினிக் கோட்டம் '' என்ற கோயில் இருப்பது சிறந்த சான்றாகும்.

மங்கலதேவியே கண்ணகி என்பதற்குச் சிலப்பதிகாரத்திலும், அகச்சான்று உண்டு. சிலம்பு—வரந்தருகாதை--வரி 53-ல் குறிப்பிடப்படும் '' மங்கல மடந்தைக் கோட்டம்''என்பதற்கு, மங்கலா தேவிகோயில், மங்கல மடந்தை கண்ணகி, என்று உரையாசிரியர் குறித்துள்ளார். மற்றும் 12—1—72-ல் இந்து ஆங்கில நாளிதழில், ஆசிரியருக்குக் கடிதமாக, இந்தியக் கல்வெட்டுத் துறை அதிகாரி திரு கே. ஜி. கிருட்டிணன் அவர்கள் எழுதியுள்ள செய்தியில், '' மங்கல தேவி அம்மன் கோயிலிலுள்ள கல்வெட்டுச் செய்திகளும், கோயிலின் அமைப்பும், கோட்டம் அமைந்துள்ள இடமும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளன '' என்று கூறியுள்ளார்.

மேலே கண்ட விளக்கத்தினாலும், சான்றுகளினாலும், மங்கலா தேவி அம்மனே கண்ணகி தெய்வமாகுமென்பது, குன்றின் மேலிட்ட விளக்கொளிபோலத் தெளிவானதாகும்.

ஆராய்ச்சியாளரின் குழப்பம்

கண்ணகி இறந்து தெய்வமான இடம் சங்க காலத்தில் நெடுவேள் குன்றம் என்று

Power Spin-offs

The growth of ancillary industries for the manufacture of boiler equipment

The projected estimates for power generation over the next ten years are high indeed, requiring boiler equipment upto unit sizes of 500 MW.
There is tremendous scope, here, for the organisation and development of ancillary industries, both product and process-oriented, for the wide range of components needed: raw materials, semi-finished products, finished products, sub-deliveries, etc.
Many such units already exist at Tiruchi, in and around the Boiler Plant, but more will be needed to meet anticipated boiler production, providing considerable opportunities for entrepreneurs, as well as for employment.

BHARAT HEAVY ELECTRICALS LTD.
(A Government of India Undertaking)
Unit: High Pressure Boiler Plant, Tiruchirapalli 14.
Regd Office: No. 5, Parliament Street, New Delhi 1

BHEL: Power to the people

பெயர் பெற்றிருந்த சுருளி மலைத் தொடரிலுள்ள ஒரு மலையின் சிகரப் பரப்பிடமே ஆகுமென்பதையும், அப்பகுதி சேர நாட்டின் கிழக்கு எல்லைக்குட்பட்ட மலைப்பகுதி என்பதையும், அம் மலைக்குப் பக்கமாகவே பேரியாறு ஓடுகின்றதென்றும் சிலப்பதிகாரம் தெளிவாகக் குறிக்கின்றது.

இக்கருத்திற்கு எவ்வகையிலும் மாறுபடாத நிலையில், சங்க காலப் பழமைகளோடு உள்ளதே யான் கண்டுபிடித்து வெளியிட்டுள்ள மங்கலதேவி அம்மன் கோட்டமெனும் கண்ணகிக் கோட்டமாகும் என்பதைத் தக்க சான்றுகளுடன் மேலே நிறுவியுள்ளேன்.

ஆனால், கேரள நாட்டுப் பழம்பொருள் ஆராய்ச்சியாளர், அந்நாட்டு மேலைக் கடற்கரைப் பகுதியிலுள்ள கிராங்கனூர், திருவஞ்சிக்குளம் குறும்பா பகவதி கோயில் சங்ககாலக் கோயிலென்கின்றனர்.

குறும்பா பகவதி அம்மன் கோயில், கேரளநாட்டு மக்களால் பெரிதும் மதிக்கப்பெறும் தெய்வமாகும். பகவதி அம்மன் கண்ணகி தெய்வமேயாகும். ‘ஒற்றை முலைச்சி’ என்ற சிறப்புத் திருநாமமும் அத்தெய்வத்திற்கு உண்டு. இக்கோயில் சேரநாட்டில் பத்தினித் தெய்வ வழிபாடு வளர்ச்சி பெற்றபோது ஆங்காங்கேகட்டப்பட்ட பழைய கோயில்களுள் ஒன்றாகும். அருக சமயச் சார்புடைய கோவலனின் மனைவி கண்ணகியாதலினால் சமணச் சமயச் சார்பில் “பகவதி” என்று பெயர் சூட்டப்பெற்று விளங்கும் கண்ணகி தெய்வமேயாகும் என்பதில் ஐயமில்லை. இதைப்போல் சேர நாட்டில் செங்கனூரிலும் பகவதி அம்மன் கோயிலுள்ளது. கோழிக்கோட்டிற்கு அருகே உள்ள, அங்காடிபுரம் தாலியம்மன் சிலையும் கண்ணகி வழிபாட்டின் சின்னமென்று கொள்ளலாகும்.

பத்தினிக் கோட்டம்

ஆனால், யான் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளதும், தமிழக மக்கள் அரசு வழியே விரும்புவதும், கண்ணகி இறந்து தெய்வமான மலைமேல் முதன் முதலாகக் குன்றக் குறவரால் நிறுவப் பெற்ற பத்தினிக் கோட்டமேயாகும்.

கண்ணகி—செல்லியம்மன்

மங்கலாதேவி அம்மன் என்ற பெயர் மலைநாட்டில் கண்ணகிக்குக் குன்றக் குறவர் இட்ட பெயராக விளங்கி வந்தது. மதுரையில் மாதரியின் செல்வ மகளைப் போல அடைக்கலமாக ஆதரிக்கப் பெற்ற கண்ணகிக்கு ஆயரும், பாண்டியனும், சிலையெடுத்து வழிபட்ட காலத்தில் “செல்லிஆயி” என்றும் செல்லியம்மன் என்றும் பெயரிட்டுள்ளனர்.

கண்ணகி—பகவதி

பத்தினி வழிபாடு பரவலாக நாட்டில் வளர்ச்சி பெற்றபோது, சேரநாட்டின் உட்பகுதிகளில் கண்ணகிக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டன என்பதைப் பகவதி அம்மன் கோயில்களால் அறியலாகும். பகவதி என்னும் பெயர் சமணச் சமயச் சார்பில் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்ட போது இடப்பட்ட பெயர் என்று தெரிகின்றது. காரணம், கண்ணகி சமணச்சமயச் சார்புடைய கோவலன் மனைவி என்பதேயாகும். பகவன், பகவதி என்ற பெயர்கள் சமணர் வழங்கிய தெய்வப் பெயர்களாகும்.

கண்ணகி—மாரியம்மன்

கண்ணகி இறந்த காலத்தைத் தொடர்ந்து பாண்டிய நாட்டில் பருவமழை பெய்யாமல், வெப்பமும், வறட்சியும் ஏற்பட்டுள்ளது. அதனால் மக்கள் கொடிய வெப்பநோய்களினால் துன்புற்றுள்ளனர். அப்பொழுது, பாண்டியன் கண்ணகியின் கோபமே அதற்குக் காரணம் என்று கண்டு, சாந்தியாகக் கண்ணகிக்கு வழிபாடு செய்துள்ளான். அதன் பின்னர் நல்ல மழை பெய்து நாடு செழித்துள்ளது. இதனால், கண்ணகி அம்மனின்அருளால்மழை பெய்து நலம்விளைந்தது என்பதே மக்கள் கண்ட அனுபவ உண்மை என்பது தெளிவாகும். எனவே, மழையைப் பெய்வித்து நாட்டுக்கு நலம் விளைவித்த அம்மையாகிய கண்ணகியை,

“மாரி-மழை ; அம்மை-ஆயி” என்னும் பொருள் நிறைந்த பெயரில், மாரியாயி, மாரியம்மன் என்று பெயரிட்டு வழிபடும் சிறப்பு, தமிழகத்தில் எங்கும் வழக்காகப் பெருகி வளர்ந்துள்ளது.

கண்ணகி—காளி

கண்ணகி வரலாறு, பிற்காலத்தில் நாடகமாக்கப்பட்ட போது, கண்ணகி, காளி வடிவெடுத்துப் பாண்டியனைப் பழி வாங்கியதாக நாடக ஆசிரியர்கள் கற்பனை செய்து காலத்திற்

கேற்ப வீரச் சுவையாய் மாற்றி அமைத்து விட்டனர். இச்செயலினால், பிற்காலத்தில் தொடர்ந்த கண்ணகி வழிபாடு காளியம்மன் வழிபாடாகவும் மாறியிருக்கின்றது எனலாகும். மனித வடிவிலமைந்த பழைய கண்ணகி அம்மனின் சிலையும், காலப்போக்கில் காளி வடிவாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் மக்களின் மனப்போக்கைப் பின்பற்றியதாகச் சிற்பியர் அமைத்த தெய்வ வடிவேயாகும். (இதற்குச் சான்று, மதுரையிலுள்ள செல்லத்தம்மன் சிலையின் நிலையேயாகும்.)

பத்தினி வணக்கம்

‘சேரன் செங்குட்டுவன் கி.பி’ இரண்டாம் நூற்றாண்டில் கண்ணகிக்குச் சிலையமைத்துப்பத்தினிக் கோட்டமும் அமைத்து விழா நிகழ்த்தியபோது அவ்விழாவிற்குச் சோழ மன்னர் பெருங்கிள்ளி, பாண்டியமன்னர் வெற்றிவேற் செழியன், கொங்கிளங் கோசர், இலங்கை கயவாகு வேந்தன் ஆகிய மன்னர்கள் வந்திருந்தனர். அவர்கள் மீண்டும் தங்கள் நாட்டிற்குச் சென்றவுடன் பத்தினி வணக்கத்தினைத் தத்தமது நாட்டில் வளரச் செய்துள்ளனர். அதனால் அவர்கள் நாட்டில் மழை பொழிந்தது.

பத்தினி வணக்கத்திற்குரியதாகப் பழங்காலத்தில் அரசரும், மக்களும் அமைத்த கோயில்களும், சிலைகளும், நாளடைவில் பெயரும், இடமும் மாற்றமடைந்து வெவ்வேறு பெயர்களுடன் நாடெங்கும் விளங்குகின்றன.

இவ்வாறு பத்தினி வணக்கம் பரவலாகச் சிறப்புடன் தமிழ் நாடெங்கணும் வளர்வதற்கு மூலமானதும், முதன்மையானதும், நெடுவேள் குன்றத்தின் மீது வேங்கைக் கானலில் உள்ள மங்கலதேவிக் கோட்டமென்ற பெயருடன் விளங்கும் கண்ணகிக் கோட்டமேயாகும்.



தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தேமதுரத் தமிழ் மொழியின் வரலாற்றேட்டில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு புகழ்மிக்க ஆண்டு 1968-ஆம் ஆண்டு. ஆம், அந்த ஆண்டுத் தொடக்கத்தில்தான் இன்பத் தமிழ் மொழியின் இணையிலாச் சிறப்பினை இந்த உலகுக்கே எடுத்துணர்த்தும் வகையில், தமிழகத்தின் தலை நகரான சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ்மாநாடு நடைபெற்றது. அதனையடுத்த சில நாட்களிலேயே, அதாவது அதே சனவரித் திங்கள் 23-ஆம் நாள், தமிழ்நாடு சட்டப் பேரவையில்,

"தமிழ்நாட்டில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிருவாக மொழியாகப் பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நடை முறைக்கு வருவதற்கான விரைந்த நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பிறகு, 1969-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றுவதில் இரு திருப்பங்கள் ஏற்பட்டன.

27—9—1969 முதல், துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் தமக்குள் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, 27—12—69- அன்று தமிழ்நாடு வெளியிட்ட ஆணையின் வண்ணம், தலைமைச் செயலகத்தில் சட்டம், நிதி, சட்ட மன்றம் ஆகிய துறைகள் தவிர மற்றத் துறைகளில் ஒரு சில விதி விலக்குகளுக்குட்பட்டுத் தமிழ் மொழியை விரிவடையச் செய்ய வழிவகுக்கப்பட்டது.

" தமிழறியான் தமிழர்நெறி, தமிழர்களின் தேவை, வாழ்வு தம்மையறிதல் உண்டோ ? எந்நாளும் இல்லை" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். தமிழர் தம் நிலை, நெறி, தேவை, வாழ்வு இவை அனைத்தும் ஒருங்கறிந்து அவர்தம் வாழ்வு வளங்கொழிக்க வழி வகுக்க அரசு அலுவலர்கள் அனைவரும் தமிழில் நல்லுணர்வும், நல்லறிவும் பெற வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் 1970-ஆம் ஆண்டு வரை பொதுத் (தமிழ் வளர்ச்சித்) துறையாக இயங்கி வந்த தமிழ் வளர்ச்சித் துறை 1971-ஆம் ஆண்டு முதல், தமிழ் வளர்ச்சி இயக்ககம் எனத் தனியே பிரித்து அமைக்கப் பெற்று, ஒல்லும் வகையான் பல்துறைகளிலும் செயலாற்றி வருகிறது.

மொழி பெயர்ப்பு

அரசு அலுவலகங்களில் வரைவுகளை ஆங்கிலத்திலேயே எழுதிப் பழகி வந்த பணியாளர்கள் வரைவுகள் அனைத்தையும் தமிழில் வரைய எல்லா அலுவலகங்களிலும் பயன்படுத்தப் பெறும் பொதுவான ஆங்கிலச் சொற்களுக்கும், அவ்வத் துறைகளில் பயன்படுத்தப் பெறும் சிறப்புச் சொற்களுக்கும் உரிய தமிழ் கலைச் சொற்கள் தேவையன்றோ ? அச்சொற்களைப் பெற அவர்கள் ஒவ்வொரு முறையும் அகராதியைப் புரட்டி அல்லலுறின் அரசுப் பணி நடைபெறுமா? எனவே, தமிழ் வளர்ச்சித் துறையினர், அரசுப் பணியாளர்கள் அன்றாடம் நடைமுறையில் பயன்படுத்தும் சொற்களை மட்டும், மொழிபெயர்த்துத் தொகுத்து 'ஆட்சிச் சொல் அகராதி' என்னும் பெயரில் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். மேலும், இவ்வியக்ககத்திலுள்ள மொழி பெயர்ப்புப் பிரிவினால் எல்லாத் துறைத் தலைவர்களாலும் . அனுப்பப்படும் சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள் படிவங்கள் முதலியன மொழி பெயர்க்கப்படும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.



ஆய்வுப் பணி

தமிழ் மொழியை அரசு அலுவலகங்களில் விரைந்து செயல் படுத்த வேண்டுமென்ற அரசின் தூய நோக்கு எந்த அளவு செயல் படுத்தப்படுகிறது என்பதை ஆயவும், அவ்வாறு செயற்படுத்தும் போது ஏற்படும் இடையூறுகளைக் களைந்து அவர்களுக்கு வழிகாட்டவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு ஆய்வுத் தனி அலுவலரை நியமித்து ஆய்வு நிகழ்த்தி ஆணையிட்டுச் செயற்பட்டு வருகிறது.

தமிழ்நூல் விவர அட்டவணைப் பிரிவு

1867-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்களின் விவர அட்டவணை தொகுக்கும் நோக்குடன் தமிழ்நூல் விவர அட்டவணைப் பிரிவு என்ற இப்பிரிவு தொடங்கப் பெற்றது. 1867-ஆம் ஆண்டு முதல் வெளியாகிப் பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்கள் அனைத்தும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் அந்நூல்கள் அனைத்தும் பொருட் பாகுபாடின்றிப் பதிவு செய்யப்பட்ட கால அடிப்படையில் ஒருங்கே கட்டி வைக்கப்படுகின்றன. இவை ஆவணக் காப்பகத்திலிருந்து, பெறப்பட்டுப்பொருட் பாகுபாடு செய்யப்பட்டு, நூல்களைப் பற்றிய குறிப்புகளுடனும், நூல் அகராதி வரிசை, ஆசிரியர் அகர வரிசை முதலியவற்றுடனும், தமிழ் நூல் விவர அட்டவணை என்ற பெயரில் வெளியிடப் பெற்று வருகிறது. 1867-முதல் 1900 வரை பதிவு செய்யப்பட்ட நூல்கள் பற்றிய குறிப்புகள் ' முதல் தொகுதி ' என்ற பெயரிலும், 1901 முதல் 1910 வரை பதிவு செய்யப்பட்டவை ' இரண்டாம் தொகுதி ' என்ற பெயரிலும் வெளியிடப் பெற்றன. மூன்று, நான்கு, ஐந்து தொகுதிகள் அச்சிடப் பெற்று வருகின்றன. 1867-ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியான தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய ' மர்டாக் ' நூல்கள் அட்டவணையுடன், ' டெய்லர் ' நூல் அட்டவணை, பிரிட்டன் தொல் பொருட் காட்சிச் சாலையிலுள்ள . தமிழ் நூல்களின் அட்டவணை ஆகியவற்றையும் இணைத்து வெளியிட்டுள்ளது.

நூல் வெளியீட்டுத் திட்டம்

" செந்தமிழில் புதுப்புது நூல் விளைத்தற்குச் செல்வத்தைச் செலவு செய்தால் நம் தமிழ்நாடு உயராதோ, நலிவெல்லாம் தீராவோ " என்று வினவினார் பாவேந்தர் பாரதிதாசன். அவ் வினாக்களுக்கு விடையிறுக்கும் வகையில் தமிழ்நாடு அரசு இவ்வியக்ககத்தின் வாயிலாகச், சிறந்த தமிழ்நூல் வெளியிடுவோர்களுக்குப் பொருளுதவி புரிந்து வருகிறது. அச்சிடத் தகுந்ததென வல்லுநர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்ற நூலை அச்சிட ஆகும் செலவில் பாதி அல்லது ரூபாய் 2,000 வழங்கித் தமிழில் புதுப்புது நூல் வெளிவர வழி வகுக்கின்றது.

நூல்களுக்குப் பரிசளிப்பு

தமிழ்மொழிக்கு ஆக்கம் தேட விரும்பிய பாரதியார், ' இறவாத பெரும் நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்' என்று ஆணையிட்டார். புற்றீசல் போல் நாள் தோறும் ஆயிரக் கணக்கான நூல்கள் வெளி வருகின்றன. ஆனால், அவற்றுள் சிலவே காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாத நிலையில் எதிர்நீச்சல் போட்டுக் காலத்தை வென்று நின்று வாழ்கின்றன. இத்தகு சீரிய திட்பமும், நுட்பமும் மலர்ந்து மணம்பரப்ப நூலாசிரியர்களாகிய சான்றோர்களை ஊக்குவிப்பது அரசின் கடமையன்றோ ? எனவே, ஆண்டு தோறும் வெளி வரும் நூல்களை 21 தலைப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு தலைப்பிலும் வெளிவந்த சிறந்த நூலைத் தேர்ந்தெடுத்து முதற்பரிசாக ரூ. 2,000, இரண்டாம் பரிசாக ரூ. 1,000 வழங்குவதென முடிவெடுத்துச் செயலாக்கிக் கொண்டு வருகிறது.



தமிழில் சிறந்த வரைவுகள் எழுதுவோருக்குப் பரிசு

தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் வரைவுகளைத் தமிழில் எழுதித் தமிழ் வளர்ச்சி இய

க்கம் வழிவகுத்து வருவது யாவரும் அறிந்ததே! அவ்வாறு எழுதும்போது எழுதுகின்ற அலுவலர்கள் அவ்வரைவுகளைத் தெளிவாகவும், சீரிய முறையிலும் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். இத்துறையில் அவர்களை ஊக்குவிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த முறையில் வரைவுகளைத் தமிழில் எழுதுபவர்களுக்கு ரூ. 500 பரிசு அளித்து வருகிறது.

பயிற்சி வகுப்புகள்

அலுவலக ஊழியர்கள் வரைவுகளைத் தமிழில் எழுதப் பயிற்சி கொடுப்பதற்காக மிகுந்த அளவில் ஊழியர்கள் பணி புரியும் மின்வாரியம், தலைமைச் செயலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் போன்ற இடங்களில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. இவ் வகுப்புகளில் வரைவுகளைத் தமிழில் எழுதும் முறைகளும், தமிழில் எழுதும் போது ஏற்படும் சிக்கல்களை நீக்கும் வழி வகைகளும் விளக்கப்படுகின்றன.

வரலாற்று வெளியீட்டகம்

' கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி ' என்பார்கள் ; ஆம். தமிழினம் காலத்தாலும், கருத்தாலும் மிகமிக மூத்த இனம்.

' தொன்று நிகழ்ந்தது
அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள்
என்றுணராத
இயல்பினளா மெங்கள்தாய்'

என்று பாரதியார் கூறியது தமிழுக்கும், தமிழினத்திற்கும் சாலப் பொருத்தமுடையதாகும்.

பொதுவாக இந்திய வரலாற்றின் தொடக்கமும், நாகரிகமும் தொடங்க வேண்டிய இடம் காவிரிக்கரையே தவிர கங்கைக் கரையன்று. உயர்ந்த நாகரிகத்தின் பிறப்பிடமும் தமிழகமே என்பதை வரலாற்று வல்லுநர் பலரும் ஒத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், தமிழகத்தின் தொன்மையான வரலாறு—தொடர்பான வரலாறு இதுகாறும் தொகுக்கப்படவில்லை என்பது ஒரு மாபெருங் குறையாகும். தொன்மைச் சிறப்புடைய தமிழக வரலாறு, இந்திய வரலாற்றில் ஆங்காங்கே சில இடங்களில் நிழலாக இழையோடிக் காணப்படுகின்றன. அவ்வளவுதான்.

மாவட்ட திட்டப் பிரிவுகள்

கீழ் மட்டத்திலிருந்தே திட்டமிடும் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே திட்டமிடும் பணி பயனுள்ள வகையில் உருவாக முடியும் என்பதை முழுமையாக உணர்ந்து, மாநிலத் திட்டக் குழுவின் ஒரு பகுதியாக, மாவட்ட திட்டப் பிரிவுகளை நாம் அமைத்துள்ளோம். இதற்காகும் செலவுக்காக ''மானியம் 8''ன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(1972–73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து.)

தமிழக மூவேந்தர்களான சேர, சோழ பாண்டியர் தம் ஆட்சிக் காலத்தையும், அவர் தம் ஆட்சியின் போது தமிழகம் தகுதி, சிறப்புப் பெற்றிருந்தது. உலகோடு தொடர்பு கொண்டு உலகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தது என்பதனையும், தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்குக் காணப்பெறும் சில குறிப்புகளைக் கொண்டு நாம் உணர முடிகிறதே தவிர, வரலாற்றுப் பெருமை முழுவதையும் நாம் அறிய முடியவில்லை. அறிய வாய்ப்பில்லை—ஆதாரப் பூர்வமான வரலாறு எழுதப்படவில்லை. இந்திய வரலாற்றைத் தொகுதியாக எழுதிய பல வரலாற்றுப் பேராசிரியர்கள் கூடித் தொன்மை மிக்கத் தமிழக வரலாற்றைப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே பார்புகழும் பேறு பெற்ற தமிழ் நாகரிகத்தை ஒரு சில பக்கங்களில் தொட்டுக் காட்டிச் சென்றுள்ளனர். அவ்வளவுதான் !

மறுவாழ்வு இல்லங்கள்

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு வட ஆர்க்காடு மாவட்டத்திலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் சிறப்புக் காப்பு மறுவாழ்வு இல்லங்கள் இரண்டினை நிறுவ அரசு அனுமதித்துள்ளது. இதற்கு ''மானியம் 42''ன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(1972–73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து.)

மேனாட்டுக் கொலம்பசும், மெகல்லனும் கடற்பயணம் மேற்கொள்ளு முன்பே, முதன் முதலாக நியூசிலாந்து நாட்டைக் கண்டு பிடித்தவர்கள் தமிழர்களே என்ற உண்மையை ரஷ்யர்கள் கண்டுபிடித்துக் கூறிய பின்னரே நாம் நமது கப்பல் கட்டும் கலையின் மூப்பை எண்ணி வியக்கின்றோம் !

தமிழகத்திற்குத் தனி வரலாறு—தமிழகத்தின் வரலாறு எழுதப்படவில்லை என்ற குறை பலகாலமாக இருந்து வந்தாலும், இவ் வரலாறு எழுதப்பட வேண்டும் என்னும் கோரிக்கை அவ்வப்போது பலரால் வற்புறுத்தப்பட்டு வந்திருந்தாலும், பல ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சிக் கழகம் இதனை வலியுறுத்தி வந்திருந்தாலும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டிய போது, தென்னகத்திற்கென்று தனி வரலாறு எழுதப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில், சில பேராசிரியர்களும், தமிழ் அறிஞர்களும் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இதற்கென 7 இலட்ச ரூபாயையும் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்றுப் பிரிவின் கீழ்ச் செயற்படும் இக்குழு, 'வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் , என்னும் தலைப்பில் நில அமைப்பின் வரலாறு' பழைய கற்காலம், புதிய கற்காலம், பெருங் கற்காலமும் உலோகக் காலமும், இன மரபு வரலாறு, அரப்பா நாகரிகம் ஆகிய பொருள்களில் கட்டுரை முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குழுவின் முயற்சிக்கு வெற்றி பெற வாழ்த்துவதன் மூலம், வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தை நாம் கண்டு மகிழ்வோமாக !

—சாமிபழ.

உண்மையின் சங்கநாதம்

⑧

சோம. மகாதேவன்.

சூழ்ந்து வரும் பொல்லாங்கு

“என்னங்க எடுத்து வச்சு எவ்வளவு நேரமாகுது. வந்து சாப்பிடாம, திண்ணையிலே குந்திக்கிட்டிங்களே?''

'' ஊரே வெந்துக் கிட்டிருக்கு. நீ சோத்துலேயே நில்லு''.

'' நீங்கதான் வாசல்லே நின்னு என்ன செய்யப் போறிங்களாம்.''

''அடிப்படையிலேயே பலமா ஆரம்பிச்சிருக்கே. நாமதான் செய்யறதுக்கு என்ன இருக்கு?''

'' அது என்னமோ?—மேலே போறவனுக்குத்தான் வெளிச்சம். அந்த மாதிரி ரெண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு, அந்தச் சீக்காளி பொன்னையாவை—ரெத்தம் கக்கும் படியா அடிச்சாங்கன்னு என்னாலே நம்ப முடியலைங்க.''

'' பொல்லாக் கண்டவளாட்டம் பேசுறேயாக்கும். அடிச்சுக் கீழே தள்ளிப் போட்டு, பாண்டியனும்-லிங்கமும் ஓடுறதைக் கண்ணாலே பார்த்திருக்காங்க. இனிமே இல்லையின்னு போயிடுமா ? அதுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே, முல்லைக்கால் கரையிலே போய்க்கிட்டிருந்த பெரிய வீட்டு வண்டியை ரெண்டு பேருமே முன்னாலே நின்னு மறிச்சிருக்காங்க. ' நீ ' ' நான்'ங்கிற அளவுக்குத் தகராறு நடந்திருக்கு. எல்லாத்துக்கும் சாட்சி இருக்காம். ''

'' தெருவுக்குத் தெரு குழாய் போடப் போறாங்கன்னு நினைச்சுக்கிட்டிருக்கறப்ப, இப்படி வந்து சேர்ந்திருக்கே.''

'' இனிமே ஒரு மொத்தமா வந்து சேரும், காத்துக்கிட்டே இரு. பக்கத்துக் கிராமங்களிலேயிருந்து ஆணும் பெண்ணுமா வந்து கூடி இருக்காங்க. ஊரைச் சுத்தி மந்தைத் தோப்பெல்லாம் அவங்க தலைகளாத்தான் தெரியுது. புதுசா தலையெடுத்திருக்கானே, அவன் சொன்னாப் போதும். அடுத்து என்னென்ன நடக்கணும்னு இருக்கோ· ''

'' என்னமோ நடந்திட்டுப் போகுது. நீங்க வாங்க. எங்கே நீங்க எந்திருச்சு வாசலுக்குப் போறீங்க.''

'' பொன்னையாவைத் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போன வண்டி வருது பாரு. முத்தையாதான் போயிட்டு வாராரு. ''

'' என்ன ஆச்சோ தெரியலையே? ''

'' வண்டிக் கூடவே பெரிய வீட்டுக்குப் போயிட்டுவரேன். அப்பத்தான் விவரம் புரியும்.''

'' ஊரெல்லாம் கும்பலும் கூச்சலுமா இருக்கு, வேறெ எங்கேயும் போயிராதிங்க. ''

* * *

தனித்தனியே நினைத்து, அதிலேயே லயித்து விட்ட மௌனம் அங்கு நிலவுகிறது.

மேல்மாடியில், முன் அறையில், சாய்வு நாற்காலியில் உத்திரத்தைப் பார்த்தவாறு குருபாதம் சாய்ந்திருக்கச் சற்றுத் தள்ளி, வேலாயுதமும், மற்றவர்களும் அமர்ந்துள்ளனர். சிலர் சுவரோரமாக நின்று கொண்டிருக்கின்றனர்.

கீழே திண்ணைகள் கொள்ளும் மட்டும், நெருக்கியடித்துச் சேர்ந்து விட்ட கும்பலிருந்து வரும் 'சலசலப்பு' மேலேயும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

யாரோ-வேற்றூரான் படையெடுத்து வந்து, ஊருக்குள்ளேயே பாசறை அமைத்திருப்பது போலவும், இந்த எதிரிகளை முறியடிக்க என்னென்ன செய்யலாம் என்பதில், இங்கே, இப்படியொரு தீவிரம் நிறைந்திருக்கிறது.

முன்பெல்லாம் சுற்றுப் பட்டிக்காரர்கள், இந்தப் பெரிய வீட்டின் வாசலிலே, வாய் மொழியை எதிர்பார்த்து விழுந்து கிடப்பார்கள். இன்றைக்குக் கிடைத்ததை எடுத்துக் கொண்டு, ஊருக்குள்ளேயே வந்து நிற்கிறார்கள். இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் நிம்மதியாகக் குடி இருக்க முடியுமா ?

மேலே சேர்ந்திருப்பதும் ஊருக்குள் குறிப்பிடத் தக்க புள்ளிகள் தான். இதற்கு முன்பாக, எதற்காகவும், குருபாதத்தோடு இந்த அளவுக்கு ஒட்டி உட்கார்ந்தவர்களும் அல்ல.

எல்லாருடைய பார்வையும், குருபாதத்திடமே லயித்திருந்தது. குருபாதம் உடலைக் குலுக்கிய பெரு மூச்சோடு திரும்பித் தம்பியைப் பார்த்தார்.

இதை எதிர் பார்த்திருந்ததைப் போல, வேலாயுதம் மெதுவான குரலிலே ஆரம்பித்தார்.

'' வண்டியை மறிச்சு நிறுத்தினப்பவே ' கீழே இறங்கு'ன்னு சொல்ற அளவுக்கு நின்னான். அதிகமாகப் பேச்சு வச்சுக்காமலே விலகிப் போயிட்டோம். பின் தொடர்ந்தே வந்து இப்படிச் செய்வான்னு யாருமே எதிர்பார்க்கலே. பார்த்திருக்க, பொன்னையா ரெண்டுதடவை இரத்தமாகக் கக்கிட்டான். அடிபட்டுப் பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறவனை, வீட்டுக்குள்ளேயே வச்சு வைத்தியம் செய்துக் கிட்டிருக்க முடியுமா ? இதையெல்லாம் நினைச்சுத்தான், அவசரத் தோட, மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி வந்திச்சு. '' என்று சொல்லி நிறுத்தினார் ·வேலாயுதம்.

குருபாதம், நெற்றியில் அரும்பியிருந்த வேர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டார். உள்ளுக் குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த ஆவேசம் பொங்கித் தட்டியது.

'' மெத்தப் படிச்சவன். அவனுக்கு எல்லா வித்தையும் தெரியும். அதான் அவன் தலையெழுத்தை அவனே எழுதிக்கப் போறான். எல்லாமே கண் முன்னாலே நடக்கணும்னு இருக்கிறப்ப, இடையிலே நிக்குமா? நடக்கட்டும். '' என்றார் ஆங்காரமான குரலில்.

வேலாயுதம் பக்குவமாக மேலும் சொன்னார்.

"இதுக்கு மேலேயும், ஊருக்குள்ளே பெரும் கலகத்தை மூட்டி விடவும் தயாரா நிக்கிறான்." என்றார்.

குருபாதம் நிமிர்ந்து பார்த்தார். அவரது விழிகள் கோவைப் பழங்களாகச் சிவந்திருந்தன.

"அவன் இவ்வளவுக்குத் துணிஞ்சு, மேலே வந்து விழும் போது, நான் குறுக்கே நிப்பேன்னு நினைக்கிறியா? எனக்கு அப்படியொரு மகனே பிறக்கலையின்னு எப்பவோ முடிவு செய்திட்டேன். இனி எதுவுமே பாக்கி இல்லை. வெட்டுக் குத்துன்னு தொடங்கியிருக்கும் போது, தலை குனிஞ்சு போக வேண்டிய அவசியமும் இல்லை." என்றார் படபடப்புடன்.

வேலாயுதம் வலப்பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்.

நெருங்கி உட்கார்ந்திருந்த, ஐயம் பெருமாளுக்கு வயது, ஐம்பதுக்கு மேலிருக்கும். மண்டையில் பாதி நெற்றியாக வழித்து விட்டிருப்பார். எதையும் கிண்டலும், கேலியுமாகப் பேசிக்கொண்டிருப்பது அவருக்குக் கைவந்த கலையாகும். அவசரக் கோலத்தில், ஊராட்சியிலும் உறுப்பினராகி, வேலாயுதத்துக்குப் பக்க பலமாக உட்கார்ந்திருப்பவர்.

அவரும் இடையிலே புகுந்து வேறொரு முத்திரை குத்தினார்.

"இந்த லிங்கத்தோட அப்பன் காடுபட்டியான், நானும் பார்த்திருக்கேன், இந்த வீதி வழி நடக்கவே அஞ்சுவான். அவன் பெத்த மகனுக்கு, வண்டியை மறிச்சு நிறுத்துற அளவுக்குத் தைரியம் வந்திருக்கு. ஏன்னா, அவனை இப்பவும் இங்கே கண்ணுக்கு முன்னாலே குடி இருக்க விட்டிருக்கோமில்ல .... அதுனாலே. பொன்னையாவையும் அடிச்சுக் குற்றுயிராத் தூக்கிப் போட்டதுமில்லாம, ஆளுகளைக் கொண்டாந்து வச்சு, ஊரையே கொள்ளையடிக்கிற அளவுக்கு வந்து நிக்கிறான்." என்றார் ஒரே மூச்சில். எங்கே தட்டினால் குருபாதம் சீறியெழுவார் என்பது அவருக்குத் தெரியும். இந்தப் பெரிய வீட்டிலே பிறந்து, அரசியாகவே வாழ்ந்த மகளை, சிறையெடுத்தல்லவா சென்றிருக்கிறான். ஊருக்கே, இனத்துக்கே தலை குனிவு அன்றைக்கே ஆரம்பித்து விட்டதே!

"இன்னும் என்ன பாக்கி, இருக்குன்னு இவன் இதை ஆரம்பிச்சிருக்கானோ?" என்றார் வேலாயுதம் பெருமூச்சோடு.

"இப்ப ஆவரம்பட்டி—கருத்தாண்டிபட்டிக்காரங்க அத்தனைப் பேரும் ஊருக்குள்ளேதான் இருக்காங்க. உயிரைக் கொடுக்கத்தான் வந்திருக்காங்களாம். சொல்லிக்கிறாங்க." என்றான் பின்னால் நின்று கொண்டிருந்த சொக்கையா இவனுமொரு கைகாரன்.

"திமிராப் பேசுறவனை வெட்டுங்கடா—வர்றது வந்திட்டுப் போகுது. ஏன் சொல்லிக்கிட்டே இருக்கே" என்றார் குருபாதம் எரிச்சலோடு.

அப்போது வாசலில் வண்டி வந்து நிற்கும் சந்தடியும், பலர் பேசும் குரலும், ஒன்றும் புரியாதபடி மாடிக்குக் கேட்டது. கீழிருந்து மேல் மூச்சோடு மாடிக்கு ஓடிவந்து, "முத்தையா வந்திட்டாரு" என்று முன்னதாகச் சேதி கொண்டு வந்தான், ஒருவன்.

சற்றுக் கழித்துப் படியேறி வந்த முத்தையாவை எல்லாரும் ஆவலுடன் திரும்பிப் பார்த்தனர்.

உருட்டி முத்தையாவின் முகம் வாடியிருந்தது. செத்துக்கொண்டிருப்பவனையும் தூக்கிப் போட்டுக் கொண்டு, வண்டியில் போய் வந்த களைப்பாக இருக்கலாம். அதிலும், குருபாதத்தோடு, என்றைக்குமே ஒட்டி உறவாடியதில்லை. இன்றைக்குத் தலையில் சுமந்து கொண்டிருக்கும் போது, விலகிப் போக முடியுமா?

வந்து நிற்கும் மாமனுக்குப் பக்கத்திலே இடம் கொடுத்து, "பொன்னையா எப்படி இருக்கான்?" என்று ஆவலோடுதான் கேட்டார் வேலாயுதம்.

H23

முத்தையா, முகத்தைத் துடைத்துக் கொண்டு குருபாதத்தை ஏறிட்டுப் பார்த்தார். துடைத்துவிட்ட முகம் மீண்டும் 'குப்' பென்று வியர்த்தது.

"என்ன ஆச்சு?" என்று குருபாதம் அதட்டலாகவே கேட்டார்.

முத்தையா தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"பொன்னையாவுக்கு அடி பலமாகத்தான் விழுந்திருக்கு. நுரையீரல் சேதப்பட்டு, நெஞ்சுக்குள்ளே ரெத்தம் கட்டியிருக்காம். போலீசிலேயும் இதே வாக்கு மூலம் கொடுத்திருக்கான். அதுக்குப் பிறகு சரியான நினைவே வரலே அவனுக்கு" என்று சொல்லி நிறுத்தினார் முத்தையா.

"உயிருக்கு ஆபத்துன்னு சொன்னாங்களா?" என்று அவசரத்துடனே கேட்டார் குருபாதம்.

"நெஞ்சிலே ரெண்டு எலும்புக வேறே முறிஞ்சு போயிருக்காம். எதையும் உறுதியாச் சொல்ல முடியாதுன்னு டாக்டர் சொல்றார். அவன் பெண்சாதியும், இன்னம் ரெண்டு பேரும் பக்கத்திலே இருக்காங்க. போலீசும் இருக்கு" என்றார் முத்தையா.

ஒருவரும் பேசவில்லை.

குருபாதம் முன்னால் கவிழ்ந்து அசையாமல் உட்கார்ந்து விட்டார்.

"அடுத்து என்ன செய்யறது?" என்று மெதுவான குரலில் கேட்டார் வேலாயுதம்.

குருபாதம் தலை நிமிர்ந்தார்.

"தகப்பன் பிள்ளைங்கிறதையெல்லாம் இந்தக் கட்டத்திலே நினைக்க வேண்டியதே இல்லை. இடையிலே எளியவன் அடிபட்டுக்கிடக்கான். அதுக்கு ஆக வேண்டியதைப் பாரு" என்றார் அப்போதைக்கு ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல.

இவ்வளவு போதும் என்பது, போல உருட்டி முத்தையா முன்னதாகவே எழுந்தார்.

"அப்ப நானும் வாரேன்" என்று சொல்லிவிட்டு வேலாயுதமும் புறப்பட்டார். மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்து போய் விட்டனர்.

தனிமை. இதுவே எப்பொழுதும் தேவையாகி விட்டது.

நினைத்து நினைத்து இப்படியே இற்றுப் போய். . . .

அதுவரையிலும் இந்த மண்ணிலே விழுந்து புரண்டு கொண்டே இருக்க வேண்டுமா?

ஆயாசத்தோடு முன்னால் கவிழ்ந்து, நெற்றியை விரல்களால் அழுத்திக் கொண்டார், குருபாதம்.

வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது அவருக்கு.

பெற்ற மகள் — சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போனதிலிருந்துதான் இந்தக் கோழைத்தனம் வந்து கூடிவிட்டது. நெஞ்சிலே அடிப்பதற்கு, அதைத் தானே தொட்டுக் காட்டிப் பேசுகிறான் வருகிறவனெல்லாம்.

ஒன்றல்ல, இரண்டுமே போய் விட்ட பிறகு, தனிமையில் இந்த அறைக்குள்ளே விழுந்து கிடக்கும் போது, பின் தொடர்ச்சியாக என்னவெல்லாம் நடக்க இருக்கிறது?



இந்த மண்ணை விட்டு, எதுவுமே காதில் விழாத இடத்துக்கு எட்டிப் போய்விட வேண்டும். அங்கேயும் நிம்மதி இருக்குமா ?

நாளை பொன்னையா கண்ணை மூடினால் ஆகப் போவது கொலை வழக்கு. ஊரறிய நடந்ததைத் திரை போட்டு மறைக்க முடியுமா ? அதையும் கண்ணால் பார்த்து....

குருபாதத்துக்கு இருமல் வந்தது. தொடர்ந்து உடல் குலுங்க இருமினார்.

வேறிரு கரங்கள் அவரது தலையைத் தாங்கிக் கொண்டன. ஓய்ந்து திரும்பிய போது, தலைக்கு மேல் குனிந்து கொண்டிருந்த ஐயனு, "மருந்து எடுத்தாரட்டுமா ? " என்று கேட்டான்.

"போடா......நீயொரு வெட்டிப்பய...தம்பி, தம்பின்னு திரிவியே. இப்ப என்னடா ஆச்சு?" என்று படபடப்போடு கேட்டார் குருபாதம்.

ஐயனு அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஊரே கூடி வந்து எவ்வளவோ சொல்லிச் சென்றிருக்கும்போது, அந்தக் கொதிப்பு எளிதில் அடங்குமா ?

"என்னடா ?" என்று மேலும் கேட்டார் குருபாதம்.

ஐயனுவின் கண்கள் கலங்கின.

"நம்ம தம்பி—இந்தக் காரியத்தைச் செய்திருக்காதுங்க. திட்டம்போட்டுச் சதி செய்யிறாங்க." என்றான் உதடுகள் துடிக்க.

குருபாதம் கோபத்தோடு எழுந்தார்.

"இப்படியே சொல்லி வழிவிட்டுத்தானடா அவனைக் கூண்டிலே நிறுத்தி இருக்கீங்க. அடிபட்டவன் தெளிவா வாக்குமூலம் சொல்லி இருக்கான். அடிச்சிட்டு ஓடுறதைப் பார்த்திருக்காங்க. வேறே என்னடா வேணும்?" என்ற குருபாதம், நிலைப்படியோரமாகப் போய் நின்று, சற்றுநேரம் வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர், சிவகாமியம்மாளின் நினைவு வந்தவராகக் கீழே போகத் திரும்பினார்.

ஐயனுவும் ஒன்றும் சொல்லாமலே அவரைப் பின் தொடர்ந்தான். அவனும் அறியாமல், கீழே அப்படியொரு அதிர்ச்சி காத்திருக்குமென அவன் எதிர்பார்க்கவே இல்லை.

பின் கட்டிலிருந்து 'சிவகாமி' என்றழைத்துக் கொண்டே முன் பக்கம் வந்தார் குருபாதம்.

வீட்டில் எங்கும் சிவகாமியம்மாளைக் காணவில்லை. பக்கத்து வீடுகளுக்குக் கூடப் போய் நிற்கும் பழக்கமும் இல்லையே.

'சிவகாமி' என்று ஆவேசத்தோடு அழைத்த குருபாதம், கோபம் கொந்தளிக்கப் பின்னால் நின்ற ஐயனுவின் பக்கமாகத் திரும்பினார்.

"எங்கேடா—அவள் யெங்கே? நீயும் போடா—அவளை மகன் கிட்டேயே இருக்கச் சொல்லு. நான் தனியாவே கண்ணை மூடிக்கிறேன்." என்று படபடப்போடு சொன்னவர், ஒரு நொடியில் உடலே தளர்ந்து விட, நிதானமில்லாமல் பக்கச் சுவரில் சாய்ந்தார்.

பதறிப்போன ஐயனு, "ஐயா" என்றலறியவாறு அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

(வளரும்)

காலக் கண்ணாடி

[illegible] திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், சில தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

[illegible] நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது [illegible] காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் [illegible] ஆராய்ச்சிப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்.
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

எழில் கொஞ்சும் பூண்டி

வை. நாமதேவன்

அன்று ஞாயிற்றுக் கிழமை.

மணிமாறனின் சிந்தையில் சிறு எண்ணக்கதிர் ஒன்று பளிச்சிட்டது. 'கனிமொழி! இன்றே, இப்பொழுதே, ஒரு எழில் மிக்க இடத்திற்கு உன்னை அழைத்துச் செல்கிறேன். குற்றாலத்திற்கல்ல. ஆனால், குற்றாலத்தின் இனிமையும், உதகையின் உல்லாசமும், கோடைக் கானலின் அமைதியும் தவழும் இடம் அது!'

கனிமொழியின் பூவிழிகள் சற்றுநிமிர்ந்தன, எங்கேஎன்பது போல். ....

'பூண்டி!" என்றான் மணிமாறன்.

"பூண்டியா? ...."

"கனிமொழி! உணவு சிறிது சமைத்து எடுத்துக்கொள். இன்று காலை முதல் மாலை வரை அங்குதான் முகாம்".

மணிமாறன் அவளுக்கு உற்சாகமூட்டினான்.

சுவர்க் கடிகாரத்தில் சிறிய முள் மூன்று விரல் அகலத்தைக் கடந்தது. "காரியரில்" உணவை எடுத்து வந்து பின் இருக்கையில் வைத்து விட்டுக் காரில் அவனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள் கனிமொழி.

"கனிமொழி ! என்ன இவ்வளவு எளிமையா உடுத்திருக்கிறாய் ! புதுப் புடவைகள், சோளிகள் உனக்குக் கிடைக்கவில்லையா?" என்றான் மணிமாறன்.

இந்தப் பூண்டிக்கு இந்தப் புடவை போதாதோ என்பது போல் இருந்தது அவள் பார்வை !

" எளிமையாக உடுத்தாலும் நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?"

அவளுடைய சிரிப்பு.........
அதில் மிதக்கின்ற சிலுசிலுப்பு.. குற்றாலத்தின் குளிர்ச்சி சாரல் தான் என்ன செய்யும்? அவனுக்கு இதமாகத்தான் இருந்தது. ஆனால் போகும் இடத்தை நினைத்துக் கொண்டாள் உடன் ஏமாற்றம் வந்து கவ்வியது.

பூண்டியாமே! ....

எழில் கொட்டிக் கிடக்குமோ?

வெறும் ஏரிதானே! ....

பரபரப்பு மிக்க மாநகரின் சாலைகளைக் கடந்து தமிழக நெடுஞ்சாலைத் துறையினரால் உருவாக்கப்பட்ட திண்மையும், அழகும் மிக்க பாதையொன்றில் கார் பறந்து கொண்டிருந்தது.

இருபுறமும் வயல்கள்......
என்றும் மனிதனின் வறுமை உணர்வை எண்ணிச் சிரிக்கும் வெட்டவெளிகள்.... ..மரங்கள் ......கிராமங்கள்......தோன்றி மறைந்தன.

திருவள்ளூருக்கு முன்னால் ஒரு திருப்பம். சென்னையிலிருந்து 59-வது கிலோ மீட்டரில் இருக்கும் பூண்டியைக் கார் நெருங்குகிறது..

சிறு எக்கர்கள், குன்றுகள் தோன்றுகின்றன. அரசினரின் ஆக்கத் திட்டங்கள் நடைபெறும் இடத்திற்குச் செல்கிறோம் என்ற சூழ்நிலை எழுகிறது. வலதுபுறம் ஓர் அழகிய கோயில்....அதனைக் கடந்து செல்லும்பொழுது இடது புறம் ஒரு சிறிய பூங்கா தோன்றுகிறது. பின்னர் இருபுறமும் வகை வகையான வண்ண மலர்களும், பசுமையான புல் வெளிகளும், அழகாகக் கத்தரித்து விடப்பட்ட மரங்களும் வனப்பினைச் சொரியும் சோலைகளும் தென்படுகின்றன.

"அத்தான்! இதுதான் பூண்டியா?"

"இது பூண்டியின் வாயில் கனிமொழி!"

சிறுவர்கள், பெரியவர்கள் குழுக்களாக அமர்ந்து கும்மாளமிடுவது தெரிகிறது.

ஆங்காங்கே, கார்களும், பேருந்துகளும், ஸ்கூட்டர்களும் பளிச்சிடுகின்றன.

பூண்டியைக் காண இவ்வளவு கூட்டம் வருவதுண்டா?

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அத்தான், நிறுத்துங்கள்!"

காரை நிறுத்தினான் மணிமாறன்.

"அது என்ன?"

"நம்மை மேளதாளத்துடன் வரவேற்கிறார்கள். நாதசுரக் குழு".

" இசை கேட்கவில்லையே என்று நினைக்கிறாயா? அவர்கள் எல்லாம் சிலைகள் ! அத்தனை உயிரோவியமாக வடித்திருக்கிறார்கள்!"

'களுக்' கென்ற சிரிப்புடன் காரிலிருந்து குதித்தாள் கனிமொழி.

"யானை! யானை!" என்று மகிழ்ச்சியால் கூவினாள் அவள்:
கல்லால் வடித்த யானைகள் அங்கே வரிசையாக நின்று கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று பாவம் சிதைந்த கோலத்தில் இருந்தது. அதனைச் செப்பனிடாமல் அதனருகே ஒரு பலகையைத் தொங்கவிட்டிருந்தார் நிருவாகி. "பள்ளிப்பையன் ஒருவன் இந்த யானையைக் கொன்றுவிட்டான். இதன் கதி மற்ற யானைகளுக்கும் நேர வேண்டாம்!"

நிருவாகிக்குப் பொறியியலோடு உளவியலும் தெரியும்போலும்.

சற்று நேரம் அங்கிருந்தால் கனிமொழி அழுதே விடுவாள் போலிருந்தது.

மணிமாறன் அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு வேறிடம் சென்றான் .

"அத்தான், இந்தப் பூங்கா, இங்கு மலரும் புது மலர்கள், விரிந்து கிடக்கும் புல் வெளிகள் எல்லாம் எவ்வளவு அழகாக இருக்கின்றன! குழந்தைகளும், இளையோரும் இங்குக் குதூகலமாக பவனி வருவதில் வியப்பேது?" கனிமொழியின் மனத்தில் சுமை குறைந்தது அது பூண்டியின் இனிமையில் சிறகடித்துப் பறக்கத் துவங்கி விட்டதை எண்ணி மகிழ்ந்தான் மணிமாறன்.

சிலைவடிவில் ஆங்காங்கு மனிதர்கள் . விலங்குகள், பறவைகளும் எழிலூட்டின.

"அத்தான் இங்கே மான் இருக்கிறதா?"

''இருக்கிறதே!'' என்று அவளையே பார்த்தான் மணிமாறன்.

'குப்'பென்று அவள் கன்னங்களில் இரண்டு செம்பருத்திப் பூக்கள் பூத்தன. தோட்டத்தின் நடுவே, மரத்தாலான ஒரு பெரிய கூண்டு. அதனைச் சுற்றி பலர் நிற்கின்றனர். மணிமாறனும் கனிமொழியும் அங்கு விரைகின்றனர். உள்ளே, இராட்டினம் போன்ற ஓர் அமைப்பு. அது சுற்றுகிறது.

அடடே! ....

குழந்தையைப் போலக் கைகொட்டிச் சிரிக்கிறாள் கனிமொழி!

''ஏரியைப் பார்க்கலாம் வா'' என்று அவளை மணிமாறன் அழைத்துச் சென்றான். கண்ணுக் கெட்டிய தூரம் தெள்ளத், தெளிந்த நீர் தேங்கிக் கிடக்கும் அழகுதான் என்னே! இயற்கையின் திறனை எதிரே நீர் பறைசாற்றிக் கொண்டிருக்க, மனிதனின் அறிவிற்கும் அரைகூவலாகக் கம்பீரமான அணை நின்று கொண்டிருந்தது. அணையின் மேல் மெள்ளக் காரில் சென்றவாறே இருபுறத்து இனிமையையும் பருகினர் மணிமாறனும் கனிமொழியும். அணையைக்கடந்ததும், குடைபோன்ற அமைப்பில் வட்டமான மேடை, அதன் அருகே குழாய் ஒன்று. அதனைத் திறந்தபொழுது, வியப்பால் கனிமொழி மெய்சிலிர்த்துப் போனாள். மென்மையான வெறும் நுரை ''புஸ்''சென்று வெளி வந்தது. தன் உள்ளங்கைகளில் அவற்றை ஏந்திய பொழுது அதுநீராக மாறியதைக் கண்டாள் கனிமொழி. சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தைகள் கூட்டம் அங்கே வந்து விட்டது.

பின்னர் குழாயடியில் ஒரே குதூகலம்தான்! வேறென்ன!

ஆண்களும், பெண்களும், பெரியோரும், சிறியோரும் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

நண்பகல் நேரம் அது!

கனிமொழி ''காரியரை'' எடுத்து உணவுப் பொட்டலங்களைப் பிரித்தாள்.

''அந்தான்! என்னை மன்னிக்க வேண்டும். பூண்டிதானே என்று ஏதோ அவசரமாகச் சுவையில்லாமல் சிலவற்றைச் சமைத்துக்கொண்டு வந்து விட்டேன். அடுத்தமுறை வரும் பொழுது, பிரமாதமாக, இன்னும் சிறப்பாக..'' அவள் முடிக்கவில்லை.

இந்த
இதழுடன்
இலவச
இணைப்பு

அரவிந்தர்
வரலாறு

''அமுதும் தேனும் எதற்கு? நாம் பூண்டியில் இருக்கையிலே நமக்கு?'' என்றான் அவன்!

''கனிமொழி! புதுமைகளுக்கெல்லாம் சிகரமான ஓர் இடத்தைக்காட்டுகிறேன்! வா!'' என்றுஅழைத்தான் மணிமாறன்.

அது பூண்டி நீரியல் ஆராய்ச்சி நிலையம்! பூண்டி நீர்த்தேக்கத்திற்கு மறுபுறத்தே அமைந்த அறிவியற் கூடம்!

''அத்தான் இதெல்லாம் என்ன?''

''கனி மொழி! 1945-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தக் கூடத்தில் நீரியல் துறையில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன''

'' அப்படியா?''

''கனிமொழி! நம்முடைய நாடு விவசாய நாடு. நம் வாழ்வுயர வரப்புயர்ந்தால் மட்டும் போதாது. அங்கு நீர் உயர, நீரினை எப்படிச் சேதமின்றிச் சேகரித்துப் பயன்படுத்த வேண்டும் என்ற அறிவு உயர வேண்டும். அந்தப் பணியினைச் செய்கிறது இந்த நிலையம்.''

''கனிமொழி! தமிழகத்தைச் சுற்றியுள்ள கடலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆறுகள் சென்று கலக்கின்றன என்ற சேதி தெரியுமா உனக்கு? இந்த ஆறுகளில் பாயும் நீரைச் சிறப்பானவழிகளில்சேகரிக்க இந்தநிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாகத் தமிழகத்தில் மட்டுமின்றி அகில இந்தியாவிலும் அரும்பயன்கள் விளைந்திருக்கின்றன. இந்த நிலையத்தின் ஆராய்ச்சிக் குறிப்புகள், உலக நீரியல்துறை நூல்களிலும் இடம் பெற்றுப் பலரின் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றன''.

கனி மொழியின் ஆர்வம் பெருகிக்கொண்டே போயிற்று.

''நீர்த் தேக்கங்களில் வெள்ளம் புரளும் பொழுது, மிகுதியான நீர் வடிகால்கள் வழியாக வெளியேறும். இந்த வடிகால்களின் திருப்பங்களில் குமிழிகளும் வெற்றிடங்களும் தோன்றி நீரின் வேகம் அதிகமாகி வடிகால்களையே சேதப்படுத்திவிடும். இதனைத் தவிர்த்துச் சரியான முறையில் வடிகால்களை அமைக்க இங்கு வியத்தகு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.''

''முப்பது முதல் நூறு மீட்டர் உயரத்திலிருந்து வடிகால்கள் மூலமாக நதிப்படுகையை அடையும் நீர், இயக்க ஆற்றலைப் பெறுகிறதல்லவா? அந்த வேகத்தால் நதியின் கங்குகரைகள் அழிக்கப்படுவது உண்டு. எனவே, வடிகால்களில் வெளியேறும் நீரின் வேகத்தைச் சிதறடிக்க இந்தப் பூண்டி நீரியல் ஆராய்ச்சி நிலையத்தில் பல வெற்றிகரமான கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டன.''

''கனிமொழி! மதகுகள் என்றால் அறிவாய் நீ! நீர்த்தேக்கத்தில் தேங்கியுள்ள நீர் பாசனத்திற்காக வெளியேற்றும் வழிஅது. மதகுகளை நீரின் போக்குவரத்தால் சேதமுறாது செம்மையாக அமைக்கவும் இங்கே ஆராய்ச்சிகள் நடக்கின்றன. மாதிரி மதகுகளும், கண்மாய்களும் இங்கே உருவாக்கப்படுகின்றன. அவற்றில் சிறந்தவையாகத் திகழ்பவை தமிழகத்தில் மட்டுமன்றி ஆந்திரத்திலும், கேரளத்திலும் பல அணைக்கட்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மதகுகள் ஒரேவேளை திறக்கப்படும்பொழுது, அணையின் வாயில்களில் பெரும் அதிர்ச்சிகள் ஓசை மிக்கதாய்ச் சில நேரங்களில் பூகம்பத்தைப் போன்றதாய் இருக்கும். இதனால் அணையின் கட்டுமானம் பலவீனப்பட்டுப்போகும். எலக்ட்ரானிக் சாதனங்களைக் கொண்டு இந்த அதிர்வுகளைப் அளந்து, இவற்றைக் குறைப்பதற்கான வழி வகைகளை பூண்டி நிலையம் முயன்று வருகிறது.''

''நீர்த் தேக்கத்திற்கு அருகே, நீரின் இயக்க ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் நிலையங்களும் உண்டே! அத்தகைய மின் நிலையங்களை நோக்கிப் பாய்கின்ற கணவாய்கள் எப்படி அமையவேண்டும் என்பதிலும் பூண்டி நிலையம் தீவிரக் கருத்துச் செலுத்துகிறது.''

''கண்மாய்களில் வயல்களை நோக்கி அணையிலிருந்து பெறுகின்ற நீர்பாயும் பொழுது, நீரில் கலந்து வந்த மண்ணும் வண்டலும் கண்மாய்களில் படிந்துவிடும். இதனால் கண்மாய்களின் கொள்ளளவு குறைந்து போகும். இதனைத் தவிர்க்கப் பூண்டியில் நிகழ்ந்த ஆராய்ச்சிகளின் விளைவாகத் தலைமை மதகுகளின் முன்னால் வண்டல் வடிப்பான்களும், கண்மாய்களில் ஆங்காங்கே வண்டலைத் தவிர்க்கும் பொறிகளும் பொருத்தப்படுகின்றன. இவ்வகையில் கல்லணைக் கண்மாயும், மணியாறு கண்மாயும் பூண்டி நிலையம் தரும் புகழ்மிக்க சான்றுகளாகும். கண்மாய்களின் அமைப்பு, அது தாங்கி வரும் நீரின்வேகத்தையும், ஓடுகின்ற மண்ணின் தரத்தையும், பாய்கின்ற நிலத்தின் ஏற்றத் தாழ்வையும் அவற்றிற்கு அருகே உள்ள நீர் நிலையங்களின் மட்டத்தையும், கண்மாய்களில் ஏற்படக் கூடியநீர்க்கசிவையும் ஆவியாதலையும் பொருத்ததாகும். கடந்த 25 ஆண்டுகளாகத் திட்டங்கள் நிறைவேறும் இடங்களில் உள்ள மேற்கூறிய சூழ்நிலைகளுக்கேற்ற கண்மாய்களின் வடிவமைப்புகளின் மாதிரிகளைப் பூண்டி நிலையம் உருவாக்கி உரிய கருத்துரைகள் வழங்கி வருகிறது.''

''ஆறுகளில் அதிகமாக நீர் பாயும் பொழுது, அவற்றின் கரைகள் உடைந்து கிராமங்கள் மூழ்குவதும் உண்டு. பூண்டி நிலையம் ஆறுகளின் கரைகளைக் காக்கும் வழிகளை வகுத்துத் தருகிறது. பரந்து கிடக்கும் நீர் கதிரவனின் வெப்பத்தால் ஆவியாவது இயற்கைதானே! ஆனால், பூண்டியில் மட்டும் அவ்வாறு ஆவியாகின்ற நீரின் மதிப்பு ஒரு கோடி ரூபாய் என்றால் பொறுக்குமா, பொறியியல் வல்லுநரின் நெஞ்சம்! பகலவனிடமிருந்து நீரைக்காக்க இங்கே பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. ''ஹெக்சாடிகனால்'' என்ற இரசாயனத்தை நீரின் மீது தூவி விடுகிறார்கள். நீரின்மேல் ஒரு மிக மெல்லிய திரை படிந்து விடுகிறது. இதனால் அருந்தும் நீருக்கோ, நீர் வாழ் இனங்களுக்கோ ஒரு கேடும் இல்லை. நீரும் பெருமளவு ஆவியாவதில்லை. இந்த இரசாயனனத்தை உண்டாக்கும் நிலையத்தை, ஒவ்வொரு பெரிய நீர்த் தேக்கத்திற்கும் அருகே அமைக்க வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழுவிடம் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.''

கனிமொழியின் கண்களில் தோன்றிய ஆச்சரியத்திற்கோர்



அளவில்லை. மணிமாறன் தொடர்ந்தான்.

''நீர்த் தேக்கங்களில் வண்டல்கள் படிந்து, அணையின் பயனைக் குறைத்து வருகின்றன; எதிரொலியின் மூலம் இந்த வண்டல் படிவின் அளவை அறிந்து, அதனைத் தவிர்க்கவும் ஆராய்ச்சிகள் கீழ் பவானி நீர்த் தேக்கத்தில் நடந்து வருகின்றன.

''கடலோடு கலக்கின்ற ஆறுகள் வண்டலையும், மண்ணையும் கொணர்ந்து கடலில் கொட்டுவதுண்டு. அலைகளால் அலைப்புண்டு இவை மணல் திட்டுகளாக ஆறுகலக்கும் கடல் முகங்களில் வருகின்றன. பூண்டி நிலையம் இவற்றை எவ்வாறு தவிர்க்க முடியும் என்பது குறித்தும் ஆராய்ச்சி நிகழ்த்துகிறது.

செயற்கைத் துறைமுகங்களை உருவாக்கும் பொழுது அணைக் கரைகளை எழுப்புவது அவசியமாகிறது. சிறந்த முறையில் அவற்றை அமைக்க மாதிரி வடிவங்கள் பூண்டி நிலையத்தில் உருவாக்கப்படுகின்றன. தூத்துக்குடி, கொளச்சல், கடலூர் துறைமுகத் திட்டங்கள், பூண்டியின் இத்தகு ஆராய்சிகளால் பெரும் பயன் உற்றன.''

''கனிமொழி! நிலத்தின் பரப்பில் பாய்கின்ற நீர்களையெல்லாம் நம் தமிழ்நாட்டில் முழு அளவு பயன்படுத்திவிட்டோம். எனவே, நிலத்திற்குள்ளேயிருந்து நீர் பெறும் முயற்சியிலும் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். இந்திய வேளாண்மைத் துறை ஆராய்ச்சி நிலையம் தரும் பண உதவியுடன், இந்தத் துறையில் பூண்டி நிலையம் மிகவும் கருத்தூன்றி ஆராய்ச்சிகள் பல நடத்தி வருகிறது.

''இந்தியாவிலும், உலகிலும் உள்ள நீரியல் துறை விற்பன்னர்களின் கவனத்தைக் கவர்ந்த பூண்டி நிலையத்தில், கடந்த சூன் திங்கள் 22-ஆம் நாள் நம் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்திய நீர்ப் பாசன வாரியத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்ட 42-வது அகில இந்திய ஆராய்ச்சி அரங்கினைத் தொடங்கி வைத்தார். பூண்டி நிலையம் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் முடிந்து விட்டதால் வெள்ளி விழாவில் டாக்டர் எம். விஸ்வேஸ்வரய்யா நினைவுச் சொற்பொழிவும் இந்த ஆண்டு தொடங்கியது கனிமொழி! அறிஞர் அண்ணா அமெரிக்கா சென்ற பொழுது, அங்குத் தூதுவராக இருந்த திரு ஜி. பார்த்தசாரதி இல்லத்தில் பொறியியல் வல்லுநரும், தற்சமயம் பூண்டி நிலையத்தில் இயக்குநராக பொறுப்பேற்றுள்ள திரு பி. குமாரசாமி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ''தமிழகத்தில் நீர்ப்பயன்பாட்டு ஆராய்ச்சி'' பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

அந்தத் துறையில் தமிழகம் தீவிர ஆர்வம் பெற வேண்டும் என்று அவர் விரும்பினார். அதன் விளைவாக வெறும் நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையமாக இருந்த பூண்டி நிலையம், நீர் இயக்கம் மற்றும் நீரியல் துறைகளில் ஆய்வு நடத்தும் நிறுவனமாக மாறி இத்தகைய சூழ்நிலைகளைப் பெற்றிருக்கிறது.''

''அத்தான்! நீரியல் துறையில் தான் எத்தனை விந்தைகள்! பூண்டியில் பூங்காவும், நீர்த்தேக்கமும் கண்ணுக்கு விருந்துஎன்றால் இந்த நிலையம் அறிவுக்கும் ஒரு விருந்து!

''கனிமொழி! இந்த நிலையத்தின் இயக்குநர், இலக்கியத் துறையிலும் ஈடுபாடு உடையவர் போலிருக்கிறது.! அறைகளுக்கெல்லாம், நிலம், நீர், காற்று, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார். பார்த்தாயா?''

''ஆமாம் அத்தான்! நன்றி மறவாதவரும் கூட, இங்குள்ள சாலைகளுக்கும், கூடங்களுக்கும், பொறியல் துறை விற்பன்னர்களின் பெயர்களைச் சூட்டியிருக்கிறார்!

''கனிமொழி, உனக்கு இன்னும் ஓர் புதிய இடத்தைக் காட்டப்போகிறேன்.''

கனிமொழி மணிமாறனுடன் விரைந்தாள்! அம்மாடி!

இது என்ன? இவ்வளவு பெரிய பாம்பு படமெடுத்துக் கொண்டிருக்கிறதே! 450 அடி நீளமாமே! ஓகோ! இதுவும் ஒரு சிலையோ? ஆம்! பலவகையான பாம்புகள் உலவும் பண்ணையாக அதனை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உல்லாசப் பயணிகளின் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

''அத்தான் பயமாக இருக்கிறது! என்று அவன் கழுத்துக்களை தன் நீண்ட கரத்தால் பாம்பைப் போல் சுற்றிக் கொண்டாள் அவ்ள். ஆகா! அந்தப் பயத்தில் தான் எத்தனை இனிமை! சுகம்! உதகையையும், கோடைக்கானலையும், குற்றாலத்தையும் வேண்டி நின்றவள், பூண்டியில் நிறைவைக் கண்டு விட்ட அடையாளம் அது!

தமிழகத்தின் நெடுஞ்சாலைத் துறையினரால் உருவாக்கப்பட்ட திண்மையும், அழகும் மிக்க சாலைகளைக் கடந்து, பரபரப்பு மிக்க மாநகரத்துப் பாதைகளை நோக்கிக் கார் பறந்து கொண்டிருக்கிறது . . . .



வெற்றி உலா வரும் சுற்றுலாத்துறை

தமிழகம்,

இயற்கை எழிலின் பிறப்பிடம்!

கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகளின் இருப்பிடம்.

அதனாற்றானோ என்னவோ, ஏராளமான வெளிநாட்டுப் பயணிகளை இது கவர்ந்த வண்ணமிருக்கிறது.

சுற்றுலா வருவதற்குச் சுகமான இடம் தமிழ்நாடு என்று மேலை நாட்டினரால் போற்றிப் புகழப்படும் அளவுககுத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.

1971-ஆம் ஆண்டு. ரூ. 50 இலட்சம் மூலதனத்தோடு துவக்கப்பெற்ற இது, சுற்றுலாப் பயணிகளுக்கு எல்லாவிதமான வசதிகளும், சலுகைகளும் தந்து அவர்களை மகிழ்விக்கும் நோக்கோடு செயலாற்றி வருகிறது.

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா மாளிகைகளும், குடில்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன; மேலும் பல இடங்களில் அமைக்கப்பட்டும் வருகின்றன. இத்துறை மேலும் வளரத்தக்க வகையில் பல திட்டங்களையும் இந்நிறுவனம் தீட்டி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க விதத்தில் நவீன மாளிகைகள், விடுதிகள் முதலானவைகளைக் கட்ட இந்நிறுவனம், எல்.ஐ.சி. வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வாங்கித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது ஆறு சுற்றுலா மாளிகைகள் இருக்கின்றன. திருச்சி, மதுரை, திருச்செந்தூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும், கன்னியாகுமரியில் இரண்டும் உள்ளன.

பயணிகள் கார்களுடன் தங்குவதற்கு வசதியாக மூன்று விடுதிகளும் அமைக்கப்படவிருக்கின்றன. மதுரைக்கும் திருமங்கலத்துக்கும் இடையே ஒன்றும், சென்னைக்கும் விழுப்புரத்திற்கும் இடையே விழுப்புரம் அருகில் ஒன்றும், சென்னை—பெங்களூர்ச் சாலையில் கிருஷ்ணகிரி அருகே ஒன்றும் ஆக மூன்று விடுதிகள் அமைக்கப்படும். இவற்றில் சிற்றுண்டிச் சாலைகளும், பயணிகள் தங்கும் அறைகளும் இருக்கும்.

கோடைக்கானலில் ரூ. 15 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டும் பணி இவ்வாண்டு மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதற்காக 7½ ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது.

குன்னூரில் அமைக்கப்பட்டுள்ள எட்டு எழில் மிகு குடில்கள், சுற்றுலாப் பயணிகளுக்குச் சுகமான இடங்களாகும். இயற்கைச் சூழல் மிக்க இந்தக் குடில்களைப் பொதுப் பணித்துறை கட்டியிருக்கிறது. ரூ. 2 இலட்சம் செலவில் கட்டப்பட்ட இந்தக் குடில்களில் குடும்பத்தோடு தங்கிச் சமையல் செய்து சாப்பிட நல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

எழில்மிகு ஏர்க்காட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் ஒரு மாளிகை ஒன்று ரூ. 2 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. இது விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

இந்தச் சுற்றுலா மாளிகைகளை நிருவகிக்க நல்ல திறம் வாய்ந்தவர்கள் வேண்டுமல்லவா? சென்னை அடையாறிலுள்ள சமையல் இயல் கலைப்பயிற்சி நிறுவனத்தில் படித்த மாணவர்களே இங்கு மேலாளராக நியமிக்கப்படுகிறார்கள். சுற்றுலா மாளிகையின் ஒவ்வொரு அறையிலும் தொலைபேசி இணைப்பு, இன்னிசை போன்ற. வசதிகள் செய்யப்படும்.

சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வந்த வண்ணமிருப்பதால், மாளிகைகள் பலவற்றில் இடமில்லாத நிலை நீடித்துக் கொண்டேயிருக்கிறது. இக்குறையைப் போக்கத் திருச்சி, மதுரையிலுள்ள மாளிகைகள் மேலும் பல அறைகள் கொண்டதாக விரிவாக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் பயணிகளைக் கவரத்தக்க இடங்கள் எங்கெங்கு உள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள இந்நிறுவன அதிகாரிகள் மாவட்டந் தோறும் முகாம் செய்கிறார்கள். அங்குத் தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பிறகு மனங்கவரும் மாட மாளிகைகள் எழுப்பத் திட்டமிடுகிறார்கள்.

உகல நாடுகளிலிருந்து வரும் பல மொழிகள் பேசும் பயணிகள் இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் வருகிறார்கள். அவர்கள் இங்கு இருந்து, கண்டு, கேட்டு மகிழ்ந்த செய்திகளைத் தம் நாடு திரும்பியதும் அங்கெல்லாம் சொல்வார்களல்லவா? அவர்கள் எல்லாரும் கண்குளிரக் காணும் வகையில் நமது தமிழகத்தை எழில் கொஞ்சும் இடமாக — இல்லமாக அமைக்கவும், அவர்கள் மன நிறைவோடு இருந்து களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும் சுற்றுலா வளர்ச்சிக்

கழகம் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. பொதுவாக, மாவட்டந் தோறும் சுற்றுலா மாளிகைகள் எழுப்புவதற்கான சிறந்த திட்டங்களையும் இந்நிறுவனம் தீட்டி வருகிறது.

சிற்பக் கலையின் மேன்மையினை உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் மாமல்லபுரம், இன்று மேலைநாட்டினரைப் பெருமளமில் கவர்ந்திருக்கிறது—கவர்ந்திழுக்கிறது என்றால், அது அலைகடலோரத்தில் பண்டைக் கால நாகரிகச் சிறப்பையும், நந்தமிழர் கைத்திறமையும் காட்டும் சிற்பங்கள் அல்லவா? இத்தகைய சிறப்பு மிக்க இடத்தில்தான் ஓர் அரும் பொருட் காட்சியகம் உருவாகவிருக்கிறது.

தமிழ்நாட்டில் சுற்றுலா அரும்பொருட் காட்சியகம் ஒன்றை அமைக்கச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது. ரூ. 1 கோடி செலவில் மாமல்லபுரத்தில் இது அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் பற்றிய கணக்குகள் எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கான மாபெரும் திட்டம் ஒன்றை இக்கழகத் தலைவர் திரு ஏ. வி. பி. ஆசைத் தம்பி தயாரித்துள்ளார். இந்தத் திட்டத்திற்குச் சுமார் 100 கோடி ரூபாய் செலவாகும்.

தமிழ்நாட்டிற்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 54 சதவிகிதம் இது அதிகரித்துள்ளது. வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும், வட இந்தியாவிலும் சுற்றுலா விளம்பரங்களைப் புதிதாகச் செய்ததால் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் 15 கோடி மதிப்புள்ள ஓர் உல்லாசக் கப்பலில்வந்த அமெரிக்கக் கோடீசுவரர்கள் இந்தியாவில் எந்தத் துறை முகத்திலும் இறங்காமல் சென்னைத் துறைமுகத்தில் மட்டுமே இறங்கினார்கள். ஒரே நாளில் 4½ இலட்சம் மதிப்புள்ள பொருள்களை அவர்கள் சென்னை நகரில் வாங்கினார்கள். மாமல்லபுரம் போவதற்கு மட்டும் 120 'குளுகுளு' கார்கள் அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரில் மெழுகுக் கண்காட்சி ஒன்று அமைக்கப் படவிருக்கிறது. இலண்டனில் இருக்கும் உலகப்புகழ் பெற்ற 'டிஸ்சாட்' மெழுகுக் கண்காட்சியைப் போல இது அமைக்கப்படும். இதற்காக அந்தக் கண்காட்சிச் சாலைகளுடனும் இத்துறையினர் தொடர்பு கொண்டுள்ளனர். இது அமைக்கப்பட்டால், இம்மாதிரியான கண்காட்சி இந்தியாவில் இதுவே முதலாவதாக இருக்கும்.

சென்னையிலிருந்து மாமல்லபுரத்துக்குச் செல்ல ஓர் உல்லாசப் படகு வாங்கவும் இத்துறை திட்டமிட்டுள்ளது. 'ஓவர்கிராப்ட்' என்ற வகையைச் சேர்ந்த இந்தப் படகு பறந்து செல்லும் அமைப்புடையது. வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அண்ணா நகரில் உள்ள கோபுரத்தில் ஒரு சுழலும் ஓட்டல் கட்டவும் திட்டமிட்டிருக்கிறது.

தீவுத்திடல் அருகில் கூவம் கரையில் பிரம்மாண்டமான நீரூற்று ஒன்று அமைக்கப்படும் வேலை நடந்து வருகிறது. இது மிக விரைவில் முடிந்துவிடும். 300 அடி உயரத்துக்கு இதில் நீர் எழும்பி வீழும். இம்மாதிரியான நீரூற்று ஆசியாவிலேயே வேறு எங்கும் இல்லை. இந்த நீரூற்றைக் கிழக்கு ஜெர்மனியில் உள்ள " ஹாலே " நகர மேயர் சென்னை மேயருக்குப் பரிசாகத் தந்திருக்கிறார். அதனை அரசு வாங்கி அமைத்திருக்கிறது.

ஊட்டியில் 8 இலட்சம் செலவில் கூடுதல் மாளிகைகள் கட்டப்பட்டு வருகின்றன. இங்கே பொதுமக்களுக்குக் குறைந்த வாடகையில் காற்று வசதியுடன் கூடிய அறைகள் கிடைக்க வசதி செய்யப்படும்.

கன்னியாகுமரி 'கேப்' விடுதி இன்னும் அதிக நவீனமயமாக்கப்பட்டு, ஐரோப்பியப் பயணிகள் தங்க வசதியாக அமைக்கப்படும். இங்கு மதுபானக்கடையும் (பார்) உண்டு. கோடைக்கானல், ஊட்டி சுற்றுலா மாளிகைகளிலும் மதுபானக்கடைகள் உள்ளன.

இவை தவிர இந்தக் கழகம் 174 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் குறுகிய கால இரண்டாண்டுத் திட்டம் ஒன்று தீட்டி, இந்த ஆண்டு முதல் அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மட்டும் இதில் 87 இலட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபாய் செலவிடப்படும். இத்திட்டத்தின் படி எல்லா மாவட்டத் தலை நகரங்களிலும் உல்லாசப் பயண முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படும்.

தூத்துக்குடி, நாகப்பட்டினத்தில் 35 படுக்கைகள் கொண்ட மாளிகைகளும், சிதம்பரம், ஒகேனக்கல், குற்றாலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றில் 100 படுக்கை கொண்ட மாளிகைகளும் கட்டப்படும்.

மாமல்லபுரத்தில் 38 ஏக்கரில் 250 படுக்கைகளும், 100 அறைகளும் கொண்ட மாளிகையும், ஓர் உல்லாசக் கடற்கரையும் அமைக்கப்படும்.

திருச்சி, மதுரை சுற்றுலா மாளிகைகளில் தொலைபேசி, சுடுநீர் வசதி, சலவை இயந்திரங்கள், நவீன மின் சாதன வசதிகள் முதலியன பொருத்தப்படும்.

சொகுசு வண்டியில் சுற்றுலா வருகிறீர்களா ?

கழகத்தின் சார்பில் நவீன வசதிகள் கொண்ட சுற்றுலாப் பேருந்துகள் இரண்டு உள்ளன. இதில் பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் உடன் வருவர். இப்பேருந்தில் மின் விசிறி, ஒலிபெருக்கி, குடிநீர் முதலிய வசதிகள் இருக்கின்றன. இந்தச் சுற்றுலாப் பேருந்து மூன்று வழிகளில் செயல் படுகிறது.

1. சென்னையிலிருந்து காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரத்திற்குச் செல்லுதல், 2. சென்னை நகரம் மட்டும் சுற்றி வருதல், 3. சென்னையிலிருந்து கோவளம், மாமல்லபுரம் சென்று வருதல்.



கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலா மாளிகை

குறைந்த கட்டணத்தில் இந்தச் சொகுசுச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் தக்கச் சலுகைகள் இருக்கின்றன. இதே போன்ற சுற்றுலாப் பேருந்துகள் மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படவிருக்கின்றன.

தமிழ்நாட்டிற்கு வருகிற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் பல செய்யப்பட்டு வருகின்றன. 1962-ஆம் ஆண்டில் 12,538 வெளிநாட்டினர் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். 1972-ல் 38,074 ஆக அவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. வெளி நாட்டுப் பயணிகள் மூலமாக 1962-ல் ரூ. 19·62 கோடி அயல் நாட்டுச் செலாவணி நமக்குக் கிடைத்திருக்கிறது. 1972-ல் இத் தொகை ரூ. 40·38. கோடியாக உயர்ந்திருக்கிறது. சுற்றுலா வளர்ச்சியானது பொருளாதாரத்தின் ஒரு கூறு என்பது இதன் மூலம் தெரிகிறதல்லவா ?

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 2 1 2 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கி வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

சென்னை மூர் மார்க்கெட்டில், நாள்தோறும் சுற்றுலாப் பேருந்துகளை அடிக்கடி பார்க்கிறோம். இதனால் இந்தப் பகுதியில் அசுத்தங்கள் ஏற்படுவதையும் காண்கிறோம்.

இதைத் தவிர்க்க இயலாதா?

" ஏன் இயலாது ? மூர் மார்க்கெட்டில் வருகின்ற பயணிகளுக்காக ' வரவேற்பு நிலையம் ' (Reception centre) ஒன்றைக் கட்டும் திட்டம் இருக்கிறது. அவர்கள் சுகமாகத் தங்கிப் போவதற்காகச் சென்னையிலுள்ள சத்திரங்கள், திருமண மண்டபங்கள் முதலானவற்றைப் பயன்படுத்தவும் ஒரு யோசனை இருந்து வருகிறது " என்று திரு ஏ.வி.பி. ஆசைத்தம்பி கூறுகிறார்.

மதுரையில் உள்ள சுற்றுலா மாளிகை

சுற்றுலாத் துறையினால் நமக்கு எத்தனை நன்மை! அயல் நாட்டுச் செலாவணி பெருமளவில் கிடைக்கிறது. நாட்டு மக்கள் தொடர்பு ஏற்படுகிறது. தேசீய ஒருமைப்பாடு வளர வழி வகுக்கிறது. சுற்றுலா சம்பந்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பும், போக்குவரத்து, உணவு விடுதிகள் போன்றவைகளுக்கு நல்ல வருவாயும் கிடைக்கிறது. மேலும் கைத்தறி, கலை நுட்பப் பொருட்கள் போன்றவை அதிக அளவில் விற்பனையாகின்றன.

மேலை நாடுகளிலெல்லாம் சுற்றுலா வளர்ச்சியினால் நல்ல வருவாய் கிடைப்பதால், அங்கு அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியும் சுற்றுலாத் துறை, மேலும் மேலும் ஆக்க வழிகளில் சிந்தனை செலுத்தி வருகிறது.

வெற்றி உலா வரும் சுற்றுலாத் துறைக்கு அனைவரும் ஆதரவும், அரிய யோசனைகளும் சொல்வதன் மூலம், ஒளிமயமான எதிர்காலத்தைத் தோற்றுவிக்க முடியுமல்லவா ?



பொறியியல் வல்லுநர்களே! தொழில் நுட்பம் நிறைந்தவர்களே!
சிறு தொழில் அதிபர்களே!

இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சலுகைகள் பல கிடைக்கும் கீழ்க்கண்ட கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் உங்கள் தொழில்களை தொடங்க முந்துங்கள்.
செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி ஆகிய இம்மூன்று மாவட்டங்கள் முழுவதும் மேற்படி கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் அடங்கும்.
மேற்கண்ட கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் சிறு தொழில்களை துவங்குவோர்க்கு கீழ்க்கண்ட தாராளமான சலுகைகள் அளிக்கப்படும்.

1. சிறுதொழில் தொடங்குவோர்க்குத் தேவையான தொழில் திட்டங்கள் (SCHEMES) அளிக்கப்படும்.

2. தனியார் துறையில் ஆரம்பிக்கப்படும் எல்லா சிறு தொழில்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் (3% ஆண்டுக்கு) ரூபாய் 1,00,000 வரையில் அரசாங்க தொழிற்கடன் அளிக்கப்படும். கூட்டுறவு துறையில் ஆரம்பிக்கப்படும் சிறுதொழில்களுக்கு ஆண்டொன்றுக்கு 2½% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படும்.

3. இரும்பு மற்றும் எஃகு முதலிய மூலப்பொருள்கள் முதலிடம் கொடுத்து அளிக்கப்படும்.

4. பற்றாக்குறை உள்ள மூலப் பொருள்கள் அவ்வப்போது வழங்கப்படும்.

5. அரசாங்க வங்கிகளிலிருந்து (State Bank of India Branches) ரூபாய் 5000/- வரையில் ஒவ்வொரு சிறுதொழில் நிறுவனத்திற்கும், அதிகக் கட்டுப்பாடின்றி தாராளமாகக் கடன் வழங்கப்படும்.

மேற்கொண்டு முழு விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிராமத் தொழில் திட்டப் பகுதிகளின் திட்ட அதிகாரிகளை அணுகவும்.

தொழில் வணிக கூட்டு இயக்குநர்
(கிராமத் தொழில் திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5

வ.உ.சிதம்பரனார் பாப் போட்டி

வெள்ளலை புரண்டிட வெள்ளையர் மருண்டிட
உள்ளூர மொடுகலம் ஓட்டிய தமிழ்மகன்
செக்கிழு தண்டனை சிறைமலி கொடுமையால்
நெக்குரு நெஞ்சினன் நெடும்போர்ச் சிதம்பரம்
புகழுடல் தமிழெனப் புவிமிசை நிலைக்குமே.
—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

கப்ப லோட்டிய தமிழன்; கவினுறச்
செப்பரும் தமிழ்நூல் செய்தவன்; நாட்டின்
அடிமைத் தளையினை அகற்றிட வேண்டிச்
செக்கிழுத் தோன்அவன் தீரமும் தொண்டும்
இக்குறு பாவினில் இயம்பிடல் எளிதோ?
—சிவ. மு. சிவா, வேடசந்தூர்.

செந்தமிழ் அறிஞன் திலகரின் சீடன்
நொந்தவர்க் குதவும் நுவலரும் பண்பினன்
நாட்டு விடுதலை நாடிய செயலால்
வாட்டுஞ் சிறையில் வாடிய சிதம்பரன்
கப்பல் ஓட்டிய'கன்னித் தமிழனே.
—குழ. அண்ணாமலை, கோவை மாவட்டம்.

தன்னல மின்றிப் பன்னலந் துறந்தும்
இன்னலின் உச்சியில் இருந்த போழ்திலும்
கடலில் நமது கலங்களும் சென்றிட
உடல்பொருள் ஆவி உண்மையில் ஈந்தவர்
செந்தமிழ்ச் சிற்பி சிதம்பர னாரே.
—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

நெல்லைத் தமிழா! நேற்றுநீ சிறையில்
கல்லை உடைத்தாய், கண்ணீர் வடித்தாய்
கப்பல் ஓட்டிக் கலங்கரை காட்டினாய்,
இப்பால் விடுதலை இயற்றினாய்; இன்றோ,
எங்கள் மனச்சிறை தங்கினாய்; வாழ்கவே.
—பொ. காளியப்பன், போளூர்.

நாட்டையாள் அன்னியர் நடுங்கிடக் 'கப்பல்
ஓட்டிய தமிழர்' ஒண்டமிழ்ப் புலமை
மிக்கவர்; நாட்டின் விடுதலைக் காகச்
செக்கையும் இழுத்துச் சிறையிலே தவித்தவர்
தக்கார் சிதம்பரம்! தனிப்புகழ் வாழ்கவே.
—மருதங்குடி வெங்கடேசன்.

ஒப்பிலா வுணர்ச்சி யோங்கிச் சுதந்தரக்
கப்பலை யோட்டிக் காட்டிய சிதம்பரம்,
உப்பு வரியை யூக்கமா யெதிர்த்துச்
சிறையிலே பன்னாள் செக்கையு மிழுத்து
மறைவிலா தொளிரும் மாளாச் செம்மலே.
—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

அன்னை விலங்கை அறுப்பான் வேண்டித்
தன்னை விலங்கொடு தளைத்த சீலன்
நாட்டுத் தொண்டும் நற்றமிழ்த் தொண்டும்
ஒட்டப் பிடாரத்தான் உயர்தனிக் கொள்கை
பாட்டின் பொருளாய்ப் பல்லூழி வாழ்கவே.
—செம்பியன், அமராவதி நகர், கோவை மாவட்டம்.

தக்கணம் தந்த தலைவரிற் றலைவ!
மிக்குள சுதந்தர வேட்கையால் சுதேசிக்
கப்பலை ஓட்டினீர்; கனிமொழி போற்றினீர்!
செப்பரும் மேனியைச் செக்கினால் வருத்தினீர்!
ஒப்பிலாத் தொண்டினை உலகெலாம் போற்றுமே!
—சி. முனிரத்தினம், வேட்டவலம்.

பரிசு பெற்ற பா எழுதியவர்:—
புலவர் வள்ளிவேலன்,
நாயக்கனூர்,
விசமங்கலம், (அஞ்சல்),
வட ஆர்க்காடு மாவட்டம்.

அடிமைத் தளையை அறுத்திட அந்நாள்
வெடித்த புரட்சியின் வித்தவன்; தமிழரின்
சொத்தவன்; கப்பல் செலுத்திக் கலங்கிட
வைத்தவன்; தமிழ்ச்சுவை யாய்ந்த தகையன்;
இத்திறம் கொண்டபேர் இனிது வாழ்கவே!

—வித்துவான். இலெ. சி. குப்புசாமி, கோவிந்தாபுரம்.

அயலார் ஆட்சியை அழிக்கும் கூற்ருய்ப்
புயலாய்ச் சீறிப் பொலிந்த செம்மல்,
செக்கை இழுத்துச் சிறையில் சிதைந்து
மக்கள் நெஞ்சில் மலர்ந்தாய் வாழி,
கப்பல் ஓட்டிய கலங்கரை விளக்கே!

—ஆ. கோவரசு, அரக்கோணம்-3.

நோயில் வாடினும் நொந்தா ரில்லை
ஆயுள் தண்டனைக்(கு) அச்சம் கொண்டிலர்
சிறையில் கல்லும் செக்குமே கண்டவர்
உறைவிடு வாளென ஓட்டினர் கப்பலை
விரைவில் விடுதலை வேண்டிநின் ருரே!

—வி. துரைசாமி, தேவத்தூர்.

தன்னிலம் காக்கத் தன்னலம் போக்கி
அந்நியப் பொருளை அனலிட் டழித்துச்
சொந்தக் கப்பலால் சுரண்டலை ஒழித்த,
செந்தமிழ்ச் சீமான் சிதம்பர ஞர்க்கு
வெஞ்சிறை தந்தது விஞ்சும் புகழே.

—தவமுத்து. அண்ணுமலை, தவசி.

சாதியை ஒழித்திடச் சதிபதி இருவரும்
வீதியி லிருப்பவர் வெறுக்கினும் மனமொடு
தாழ்ந்தோர் ஒருவரைத் தன்னகம் இருத்தி
ஆழ்ந்த கல்வியு மமுது மூட்டிய
சரித்திரப் புகழுறு சிதம்பரன் தமிழனே!

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

தாயக விடுதலைக் குயிரால் உடலால்
ஓயா துழைத்தனை யாயினும் அடிமை
விலங்கினை யொடிக்க வீறுகொண் டெழுந்தே
கலங்கள் கடலினில் செலுத்திய தமிழா!
கலங்குவம் யாமே நின்நினை வாலே.

—சோ. சு. யுவராசன், அரக்கோணம்.

நாவாய் ஓட்டி நற்றமிழ் உரையால்,
பாவால் விடுதலைப் பயிரினை வளர்த்தவர்
செக்கிழுத் தாலுஞ் சிறையிழுத் தாலும்
எக்குறை வாழ்வினில் ஏற்பட லாயினும்
சிந்தை கலங்கார் சிதம்பர ஞரே.

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

பிறர்நலம் பேணப் பெரிதே முயன்று
திறனெடும் உழைத்த செம்மல் சிதம்பரம்;
ஆங்கில நூல்களை அருமைத் தமிழில்
பாங்காய்ப் பெயர்த்துப் பாரிற் சுதேசிக்
கப்ப லோட்டிய விடுதலை வீரனே!

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

அந்நிய ராட்சியின் அடிமை அகற்றிட
இந்திய நாடே இணையிலா உரிமையால்
பன்னலம் பெற்றுப் பாரினில் ஓங்கிடத்
தன்சுக மிழந்து தன்னருஞ் செய்கையால்
தன்னையே ஈந்தார் சிதம்பர ஞரே!

—கா. சௌண்டையா, சாத்தாகோவில்பட்டி.

நெருப்பின் வெம்மையை நீர்வெல் வதுபோல்
பொருப்பின் வன்மையைப் பொடியுளி துளைப்பதாய்
வல்லமை மிக்க வெள்ளை யரசை
வென்றே நாடு விடுதலை யடைய
நன்றே யுழைத்த சிதம்பரம் வாழ்கவே.

—பாக்கியசாமி, பர்ஞர்டு நுண்கதிகரம்.

அரிசன மக்கட்(கு) அன்பன்; உரிமைச்
சொற்போர் ஆற்றிய துணிவினன்; சிறைவாய்ச்
சென்றுசெக் கிழுத்த செம்மல் சிதம்பரன்;
கப்ப லோட்டிய தமிழன்; கலைஞன்;
செந்தமிழ்க் கவிஞன் சீர்போற் றுதுமே.

—வை. கு. கங்காதரன், செங்காடு.

வெள்ளையர் ஆட்சியை வீழ்த்திடக் கருதிக்
கடுந்துயர்ப் பட்டுக் கப்ப லோட்டினன்
வெஞ்சிறைப் பட்டான்; விடுதலைச் சிங்கமாய்ச்
செக்கிழுத் துயர்ந்தான் செம்மல் சிதம்பரம்
அவன்புகழ் தன்னை அறைதல் அரிதே.

—சு. துளசிங்கம், திருநின்றவூர்.

''செப்பருஞ் சிறப்பின் சுதந்தரப் போரில்
இப்புவி விளங்க இருள்சூழ் சிறையில்
கடுந்துயர் கண்டுங் கலங்கா நெஞ்சொடு
கொடியோர் தம்மைக் குன்றென எதிர்த்த
வான்புகழ்ச் சிதம்பரம் வாழ்க நிலைத்தே!

—புலவர் அ. நடராசன், நாமக்கல்.

சொக்கத் தங்கச் சுதந்தரம் வேண்டிச்
செக்கும் இழுத்தார் செம்மல் நாளும்
மிக்க சுதேசி வாணிபம் செய்திட
வங்கக் கடலில் வங்கம் செலுத்தி
மங்காப் புகழுடன் வாழ்ந் திருந்தாரே!

—கே. கிருட்டிணராஜ், குளத்துப்பாளையம்.

தமிழ்நிலந் தானும் தரணியிற் புகழ்பெற
இமிழ்கடல் தன்னில் இயக்கினர் கப்பல்;
ஆங்கிலக் கொடும்படை அடைத்த சிறைதனில்
பாங்காய் விடுதலைப் பாரதம் கண்டிடச்
செக்கும் இழுத்துச் செம்மலா யினரே.

—புலவர் ஜானகி ரகுநாதன், மேற்கு மாம்பலம்.

கூற்றெதிர் வரினும் கூடிவெல் படையென
ஆற்றல் வீரர்! அடிமை விலங்கை
உடைத்திடச் சிறையில் கல்லை உடைத்தவர்;
சுடுஞ்செக் கிழுத்தவர்! கப்பலை ஓட்டினர்!
செந்தமிழ்ச் சிதம்பரம் சிலைபுகழ் நிலைக்குமே!

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

விடுதலை வேண்டி வெஞ்சிறை வீட்டில்
கடுந்துய ரேற்றுக் கால மறிந்து
கலத்தினைத் தான்மாக் கடலில் செலுத்தி
நலமுயர், நூற்பல நாட்டுக் சீந்தநம்
சிதம்பர ஞரைச் சிறப்புறப் போற்றுமே.

—சி. கைலாசம், ஈரோடு-7.

தூத்துக் குடியில் தோன்றிய பெருமான்
நாத்திறம் தன்னை நாடே அறியும்
ஒப்பிலா வகையில் கப்பல் ஓட்டிய
ஓர்தமிழ் மகனென உலகே வியக்கும்
வ.உ.சி. தன்னை வாழ்த்துவோம் நாமே.

—அ. காந்தி பி.எஸ்சி., பி.டி; தேவத்தூர்.

விடுதலை உயிரென வெம்பொடி தனிலும்
அடிபட்(டு)இழுத்தான் செக்கினை; அறப்போர்
விளைத்தான்; எதிரி வெள்ளையர் அதிர
உழைத்தான்; இந்தியர்க்(கு) உரிமை வாங்கினன்.
வ.உ.சி. யென்னும் வண்டமிழ் வீரனே.

—பாவெழிலன், குன்னம்.

வஞ்சகர் நெஞ்சின் வன்முறை யாலே
வெஞ்சிறை தன்னில் வெந்த தமிழன் ;
கருங்கடல் நாப்பண் கப்பலை யோட்டி,
நொறுங்கியே செக்கினை நொடிந்தில ணிழுத்துச்
சீர்புக ழுற்ருர் சிதம்பர ஞரே.

—நூருன்னிசா, கிருஷ்ணும்பேட்டை.

கப்பல் ஓட்டிய கண்ணியன் சிதம்பரம்
ஒப்பில் தொண்டினை உயர்வுடன் புரிந்து
பிறப்பின் உரிமையைப் பெரிதும் விழைந்து
திறமுடன் சிறையில் செக்கையும் இழுத்தவன்
இறந்தும் இறவாப் பெயர்எய் தினனே.

—வெற்றிவேல் வெங்கடேசன், சேலம்-9.

செல்வக் குடியினர் ; தெளிவுடை மதியினர் ;
வல்லவர் தீந்தமிழ் வளர்த்தவர் ; வெள்ளையர்க்
கெதிர்கலம் விட்டவர் ; செக்கினை யிழுத்தவர் ;
அதிகநாள் சிறைத்துயர் ; அடைந்தவர் சிதம்பரச்
செம்மலர் திருப்பெயர் தரணியில் நிலைக்குமே.

—வி. மு. உலகநாதன், சென்னை-2.

விடுதலை கெட்டுக் கெடுதலை ஓங்கிய
அடிமை நாட்டின் உரிமைக் குரலை
வெள்ளையர்க் கெதிராய் வீறுடன் எழுப்பினன் ;
ஓடும் குருதியும் உதிரும் வியர்வையும்
பாடும் அவன்றன் நாட்டுத் தொண்டே :

—இளையவன், திருச்சி-2.

அடிமைக் கார்முகில் ஆர்ந்திடும் வானில்
உரிமைத் திருநிலா உலவிடச் செய்யச்
செக்கினை யிழுத்துச் சீர்பெறு கப்பல்
தக்கநீர்க் கடலில் தவழ்ந்திடச் செய்தான் ;
தண்டமிழ் உள்ளச் சிதம்பரன் தானே !

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

கெடுமதி யோரின் கொடுந்துயர் நீக்க
நடுக்கடல் தன்னில் நாவாய் விட்டே
கடுந்துய ரேற்ருன் ; செக்கினை யிழுத்தே
அடுபகை தன்னைப் பொடிபடச் செய்தான்
நெடும்புகழ்ச் சிதம்பரன் நந்தா விளக்கே !

—கு. மருதமணி, அரக்கோணம்.

இந்திய மீட்சிக் கிவனின் பங்கு
விந்திய முகட்டின் விளக்கு ; கப்பல்
இலங்கைக் கோட்டினன் இலங்கிய வெள்ளையர்
கலங்கிடச் செய்த கடமை மறவன்
மக்கள் வாழச் செக்கிழுத் தனனே !

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

தேசிய உணர்ச்சிப் பிழம்பு : பரங்கியர்
பாசறை களுக்கோர் சிம்ம சொப்பனம் !
கப்பல் ஓட்டிய விடுதலைக் காதலன் !
சட்டம் படித்த கெட்டிக் காரன் !
செக்கை இழுத்த சிதம்பர ஞரே !

—பூ. அ. இரவீந்திரன், கோவை-2.

விடுதலை முழக்கமே விடுகின்ற மூச்சு
நடுபுகழ் பாரத நாடே தெய்வம்
வெஞ்சிறைச் சாலையே மிளிர்எழில் பூங்கா
செக்கிழுத் துழலுதல் சிறந்தபே ரின்பம்
மக்கள் போற்றும் வ. உ. சி. தமக்கே !

—அர்த்தநாரி, வேலூர்—சேலம்.

நாட்டு விடுதலை கேட்டு முழக்கிட
வெஞ்சிறைக் கொடுமை மிஞ்சிய போதும்
அறவழி பரவக் ''குறளுரை'' தந்தே
தாழ்குலத் தொருவன் வாழ்வினை போக்கிய
தொழிலாளர் தலைவர் எழில்சிதம் பரமே !
—கே. மருதசாமி, திண்டுக்கல்-2.

பாரத நாட்டில் பரங்கியர் ஆட்சி
மாறியே நம்மவர் மகுடம் தாங்கக்
கப்பலை ஓட்டியும், கடுஞ்சிறை புக்கும்
'வந்தே மாதரம்' மந்திரம் முழக்கிய
செந்தமிழ் வீரர் சிதம்பர னாரே !
அ. புருடோத்தமன், காவேரிப்பட்டணம்.

வள்ளுவம் பயின்ற வாலறி வுடையார்
உள்ளுவ உயர்ந்தன உழைப்பால் முடிப்பார்
சிங்கநேர் தமிழர் சீரிய சிதம்பரர்
வஞ்சின முரைத்து வாங்கிய கலங்கள்
கொஞ்சிடும் அலைமேல் கோலோச் சினவே !
—சிவ. கிருட்டிணண், கணியூர்.

மானப் பெருக்கால் மனித உணர்வால்,
ஏனெனும் கேள்வி எழுந்த துடிப்பால்,
முத்துக் குவியல் முகிழ்க்கும் துறையில்
கத்தும் கடல்மிசைக் கலமதை ஓட்டியே
நின்ருன் ! நிமிர்ந்தான் !! நிலைத்தான் !! நெடுகவே !!!!
—புலவர் பா. முனியமுத்து, மாதவரம்.

ஆங்கில ஆட்சியின் ஆணவம் அகன்றிட
சிங்கத் தமிழனுய்ச் சீர்மிகு கப்பலை
வங்கக் கடலில் வகையாய் விடுத்தே
தங்க நாட்டின் தகைமை காத்த
எங்கள் சிதம்பரம் என்றும் வாழ்கவே !
—சி. கண்ணப்பன், அம்மையார்குப்பம்.

தியாகத் தீயில் தீய்ந்த மலராம் !
தயாள குணத்தால் சரிந்த மலையாம்
சுதந்தர வேள்வியில் சொரிந்த நெய்யாம் !
சிதம்பரம் இழுத்த செக்கில்
அதிர்ஒலி சுதந்தர அன்னையின் குரலே !
'' கோன் '', திருச்சி-8.

அலைகடல் பொங்கி ஆர்த்தெழக் கப்பலைத்
தலைநிமிர்த் தோட்டித் தருக்கரை ஓட்டிய
சிதம்பரம் பிள்ளை சிறைசென் ருங்கே
நிதம்நிதம் துயரில் நீந்திலர் என்றேல்
சுதந்தர விளக்கும் சுடரொளி தருமோ !
சி. செள. கருப்பன் செட்டி, திருச்சி-15.

அற்றை நாளில் ஆங்கில ஆட்சியைச்
செற்ற சிதம்பரம் செக்கினை இழுத்தே
உற்ற துயரால் உடைந்த பாரதம்
இற்றை நாளினில் இனிய சுதந்தரம்
பெற்றே உயர்ந்தது பரவிடு நெஞ்சே.
புலவர் ந. சிவலிங்கம், ஆலங்காயம்.

விடுதலை நாமே விரைந்து பெற்றிடக்
கடலில் கலத்தைக் கடுகி விடுத்தோன்
கல்லை உடைத்தும் செக்கை இழுத்தும்
நல்ல தமிழை நாட்டில் வளர்த்த
வெல்புகழ்ச் சிதம்பரன் போற்றுதும் யாமே !
—புலவர் ந. அண்ணுமலை, நத்தம்.

விடுதலைச் சிற்பி ! வெள்ளையர் விதித்த
தடைகளை அகற்றிய தளபதி ! உடைகளைத்
தேசியம் ஆக்கிய தீவிர வாதி !
பூனைகள் தம்மைப் புலியாய் மாற்றிய
வித்தகன் சிதம்பர வேந்தனென் பானே !
—நெற்றிக்கண்ணன், பூச்சியூர்.

கண்டதும் உண்டுகொல் ! கண்டதும் உண்டுகொல் !
பண்டைய சிறப்பைப் பாரோர் காண
அடலே ருகிக் கடற்கலஞ் செலுத்தி
விடுதலைக் கெனவே கொடுமைக ளேற்றுச்
செக்கையும் இழுத்தவன் சிறப்பினுக் கிணையே !
—புலவர் இரா. இராகவன், வாணியம்பாடி.

விழிதரும் பார்வையில், வெளிவிடும் மூச்சினில்
மொழிதரும் பேச்சினில், மேவும் ஆற்றலில்
விடுதலை பெற்றிடும் வீரம் காட்டியே
கடும்பகை எதிர்த்துக் கப்பல் ஓட்டியோன்
சிதம்பர னாரைச் சிந்தைசெய் நெஞ்சே !
—ந. சொனர்த்தனன், அரக்கோணம்.

வீட்டினில் உறங்கியே விழிநிகர் உரிமையை
நாட்டினர் மறந்து நலிவுறும் வேளையில்
வெள்ளையர் நடுங்கிட வெண்ணுரைக் கடலில்
கப்பலைச் செலுத்தியே கடுஞ்சிறை புகுந்து,
செக்கும் இழுத்தனை செந்தமிழ்ச் சிங்கமே !
—செ. நாச்சிமுத்து, ஒடையகுளம்.

மக்களின் உரிமை மண்ணிடை மலரச்
செக்கினை இழுத்துச் சிறையினில் வாடி,
பிள்ளைச் சிதம்பரம் பெருந்துய ருற்று
வெள்ளை யருக்கெதிர் விட்டே கப்பலை
விடுதலை முழக்கினன் விடுமுயிர் வரையே !
—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

437

மரத்தடியிலே மகளிர்க்குப் பயிற்சி

வாலாசாபாத் .

ஒரு பெரிய ஆலமரத்தடியிலே நிறையப் பெண்கள் அமர்ந்த வண்ணம் இருக்கின்றனர். அவர்கள் கண்கள் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. அதோ ஒரு பெண்மணி வருகிருர். ஆங்கில நாட்டுச் சாயல் அவரைப் பார்த்ததும் தெரிகிறது. அவர் யார் ?

அவர்தான் அமெரிக்க அமைதிப் படைத் தொண்டர் அந்துவானத் ஸ்ட்ரோபிஞே என்னும் முப்பது வயது ஆசிரியை. இவரை 'டோனி' என்றும் அழைப்பார்கள்.

இவருக்குச் சொந்த ஊர், அமெரிக்காவிலே நியூயார்க் மாநிலத்திலுள்ளராச்செஸ்ட்டர். இந்தப் பெண்மணி அமைதிப் படையில் சேர்ந்ததும், வாலாசாபாத்துக்குப் போய்ப் பணியாற்றும்படி கேட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்டதும் அவருக்குப் பயம் உண்டாயிற்று. எங்கேயோ உள்ள தெரியாத ஊர் ஆயிற்றே என்று. ஆனுல், இன்று ? '' அமைதியான இந்த வாலாசாபாத் சூழ்நிலையை விட்டு இரைச்சல் மிக்க என் ஊருக்குப் போக விருப்பமில்லை '' என்கிருர்.

பெங்களூரில் உள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சிக் கழகத்தில் மூன்று மாதம் பயிற்சி பெற்ற இவரைத் தமிழ்நாட்டில் வாலாசாபாத்திலுள்ள அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றும்படி நியமித்தார்கள். தன் கையே தனக்குதவி என்று' அறிஞர்கள் கடைப்பிடித்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது, இந்தப் பள்ளி. இதில் 120 ஆசிரியப் பயிற்சி மாணவியர் இருக்கிருர்கள்.

இப்பள்ளியில் ஆங்கிலமும், உடல் துப்புரவும் பற்றி இவர் சொல்லிக் கொடுக்கிருர் ; இந்த இரண்டு பாடங்களையும் எப்படி எப்படிக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை இவர் இங்குக் கற்பிக்கிருர்.

தமிழ் எழுதப் பேசக் கற்றுக் கொண்ட இவர், பள்ளிக் கூடக் கட்டடத்தை அடுத்து வளர்ந்து பரந்து நிற்கும் ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலில் மிக்க ஆர்வத்தோடு வகுப்பு நடத்துகிருர்.

இவர் எப்படிப் பட்டவர் ?

வாலாசாபாத் பள்ளியின் தலைவி கூறுகிருர் : '' இவர் நட்புள்ளம் படைத்தவர்; மிகவும் கடினமாக உழைப்பவர்; நமது பண்பாட்டையும், மொழியையும் கற்றுக் கொண்டு விட்டார் ; புதியன வற்றைப் படித்துக்கொள்வதிலே இவர்க்கு மிகுந்த ஆர்வம் இருக்கிறது ''.

டோனியின் ஆர்வம் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பள்ளியிலேயே 30 கோழிகள் வைத்து வளர்க்கிருர். இப்போது புதிதாகச் சிறுவர் நூலகம் ஒன்றை உருவாக்கியிருக்கிருர் ; இன்னும் சில மாதங்களில் நூலகக் கட்டடம் எழுந்ததும், இது வாலாசாபாத்திலுள்ள 3,000 சிறுவர்களுக்கும் பயன்படும்.

இவர் இங்கு வந்து இரண்டாண்டுகள் ஆகின்றன. என்ருலும், இவரது பணிக் காலம் முடியுந் தறுவாயில் இருக்கிறது. ஆனுல், இவர் தமது பணிக் காலத்தை நீட்டிக்கும்படி எழுதிக் கேட்டுள்ளாராம் .

வாழும் சிதம்பரம்

'தென்னாட்டுத் திலகர்' என்று எந்நாட்டவராலும் போற்றிப் புகழப் பெற்ற தீரர்!

விடுதலைக்குத் தம் வாழ்க்கையையே நன்கொடையாக வழங்கிட்ட வீரர்!

வெள்ளையருக்கு எதிராகக் கப்பலோட்டி அவர்களைக் கதிகலங்க வைத்த தமிழர்!

இப்படியெல்லாம் இல்லந்தோறும், உள்ளந்தோறும் ஒளி விளக்காய்த் திகழ்பவர்தான், ஒட்டப்பிடாரத்து ஒப்பிலாமணி வ. உ. சிதம்பரனார் அவர்கள்.

நெல்லை மாவட்டத்திலே ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறும் நாள் சிதம்பரனார் பிறந்தார். அவர் தம் பெற்றோர் உலகநாத பிள்ளை—பரமாயி அம்மையார் வருங்கால வீரனைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்தனர். சிதம்பரனாருக்குப் பிறகு ஆடவர் நால்வர், மகளிர் இருவர் பிறந்தனர்.

முதலில் திண்ணைப் பள்ளியிலே தெள்ளு தமிழ் படித்த சிதம்பரனார், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். கற்றாரும் மற்றாரும் காமுறும் வண்ணம்வளர் பிறையாய் வளர்ந்த சிதம்பரனார் ஆங்கிலத்தையும் ஐயமறக் கற்றார். தூத்துக்குடி செயிண்ட் பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளி, கால்டுவெல் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற அவர் இளம் வயதிலேயே சுதந்தர வேட்கை மிகுந்தவராக விளங்கினார்.

துடுக்குத்தனம் மிக்க சிதம்பரனாரின் தொந்தரவு பொறுக்காத அவரது தந்தையார் அவரை ஒட்டப்பிடார வட்ட அலுவலகத்தில் எழுத்தர் வேலையில் அமர்த்தினார். எழுச்சி உள்ளம் மிக்க சிதம்பரனாருக்கு எழுத்தர் வேலை மனத்தை அழுத்தியது. சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞராக வேண்டும் என்பதே அவரது திட்டம். அவர் தம் எண்ணம் நிறைவேறும் வண்ணம் தந்தையார் தக்க ஏற்பாடு செய்தார். திருச்சியிலுள்ள கணபதி ஐயர், அரிஅர ஐயர் என்ற வழக்கறிஞர்களிடம் சட்டம் பயின்று தேர்ந்து 1895-ஆம் ஆண்டில் வழக்கறிஞரானார் வ.உ.சி.

தூத்துக்குடியில் முதன் முதல் வழக்கறிஞராகப் பணியாற்றிய வ.உ.சி. சிவில்-கிரிமினல் என்னும் இரு துறைகளிலும் சிறந்து விளங்கினார் என்றாலும் கிரிமினல் துறையில் அவரது திறமை நன்கு வெளிப்பட்டது. நடுநிலை தவறாது, வாய்மையினின்று வழுவாது வழக்காடிய வ.உ.சி.-யின் நேர்மை, நீதிபதிகளிடையே பெருமதிப்பை வளர்த்தது.

சிதம்பரனார் தம் இருபத்து மூன்றாம் ஆண்டில் இல்லறமேற்றார். வள்ளியம்மை என்னும் நல்லாளை · வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற வ.உ.சி. நெடுநாட்கள் அவருடன் நல்லறம் புரிந்திட இயலவில்லை. இயற்கை அவ்வம்மையாரைத் தம்முடன் அழைத்துக் கொண்டது. துணைவியாரின் பிரிவு அவரைப் பெரிதும் வருத்தியது.

"இல்லமதில் ஒன்றுமே
இல்லை என்னாள்
எக்காலும்
நல்லுணவு தான்சமைத்து
நல்குவாள் — அல்ல
லொழித்து
இன்புறவே செய்திடுவாள்
எப்பணியும் உள்ளமுடன்
அன்புமிகு நல்லாள்
அமைந்து"

என்று அவர் பாடிய இரங்கற்பா ஒன்றே போதும் அவர் துயரினை எடுத்துக் காட்ட! பிறகு அவ்வம்மையாரின் நெருங்கிய உறவினரான மீனாட்சியம்மையாரை மணந்தார்.

திரைகடலோடியும் திரவியம் தேடியவர் அல்லவா தமிழர்கள்? பண்டைத் தமிழர்கள் கடல் வாணிகத்தில் பேரும் புகழும் பெற்று விளங்கியதைத் தமிழ் இலக்கியங்களில் நாம் படித்திருக்கிறோம். பெருமை மிக்க தமிழர்களின் கடல் வாணிகம், அந்நியர் ஆட்சி வந்துற்ற போது ஆட்டங் கண்டது. வழிவழி வந்த தமிழரின் கடல் வாணிகத்தினை வந்தவர் கைப்பற்றிக் கொண்டனர். வாளா இருக்குமா தமிழ் இனம்? சினந்தெழுந்தது. அவர்களில் முன்னணியிலே நின்றார் வீர சிதம்பரனார்!

வெள்ளையருக்கு எதிராக—தமிழ் இனக் கொள்ளையருக்கு எதிராகக் கப்பல் கம்பெனி ஒன்றை நிறுவி அவர்களைக் கதிகலங்க வைத்தார் வ.உ.சி. மக்கள் சுதேசிக் கப்பலுக்கே பேராதரவு காட்டியதைக் கண்ட வெள்ளைக் கப்பல் அதிகாரிகள் கட்டணத்தைக் குறைத்துப் பார்த்தனர்; சலுகைகள் காட்டி ஆசை காட்டினர். ஆனால் சுதந்தரத் தீ கொழுந்து விட்டெரியும் மக்கள் மனத்தை மாற்றான் வெள்ளையனால் கொள்ளை கொள்ள முடியவில்லை!

அப்பொழுது வைசிராயாக விளங்கிய கர்சான் பிரபு வங்காள மாநிலத்தை இரு பிரிவுகளாகப் பிரித்தார். இதற்கு ஒவ்வாத இந்தியர்கள் வெள்ளையரை எதிர்த்துப்போர்க் கொடி தூக்கினர். வங்கப் பிரிவினைக் கிளர்ச்சி கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. விடுதலை வேட்கை மிக்க வ.உ.சி. வாளா இருப்பாரா? வழக்கறிஞர் தொழிலைத் தூக்கி எறிந்து விட்டுத் தாய்நாடு காக்க வீறுகொண்டு எழுந்தார்.

அப்போது தூத்துக்குடிக்கும் இலங்கைக்குமிடையே வணிகப் போக்குவரத்தை ஆங்கில நாவாய்ச் சங்கமே நடத்தி வந்தது. இதனை எள்ளளவும் ஏற்காத சிதம்பரனார் 1906-ஆம் ஆண்டில் உள்நாட்டு நாவாய்ச் சங்கம் ஒன்றைத் தூத்துக்குடியில் நிறுவினார். இதனால் ஏற்பட்ட இடுக்கண்களைத் தம் பெரு முயற்சியால் களைந்து தொடர்ந்து முன்னேறினார். பம்பாய் சென்று பல இடையூறுகளுக்கிடையே காலியா, இலாவோ என்ற இரு கப்பல்களை வாங்கிக் கொண்டு தூத்துக்குடி வந்தார். வீர சிதம்பரனாரின் உறுதியையும், துணிவையும் எண்ணி எண்ணி மக்கள் பெருமிதமடைந்தனர்.

நாவாய்ச் சங்கம் நாளுக்கு நாள் வளர்வதைப் பொறாத வெள்ளையர் வயிற்றெரிச்சல் பட்டனர். உடனே அவர்கள் சிதம்பரனாரை அணுகி, 'இலட்ச ரூபாய் தருகிறோம் இந்தச் சங்கத்திலிருந்து விலகிவிடுங்கள்"! என்று வேண்டிக் கொண்டனர். வீர சிதம்பரனாரா அதற்கு விருப்பம் தெரிவிப்பார்? வசைமொழி கூறி அவர்களை வழியனுப்பி வைத்தார். இதனால் வெகுண்ட வெள்ளையர் நாவாய்ச் சங்கத்துக்குப் பல இடையூறுகளைச் செய்த வண்ணமிருந்தனர்.

அடிமைத் தளையை அகற்றிட அல்லும் பகலும் அயராதுழைத்த வ. உ. சி., வெள்ளையரை எதிர்த்து விடுதலைப் போரைத் தொடங்கிய பால கங்காதர திலகருக்குப் பக்க பலமாக இருந்து, அவரது கொள்கைகளைத் தமிழகமெங்கும் பரப்பும் தலையாய பணிக்குத் தலைமை தாங்கினார். சிதம்பரனாரின் சீரிய பணிக்குத் துணை வந்தார் சுப்பிரமணிய சிவா. இருவரும் பட்டி தொட்டிகளெல்லாம், நாடு நகரங்களெல்லாம் சென்று நாட்டுப் பற்றை வளர்த்தனர். சுதந்தரத் தீ எங்கும் ஒளிவிடத் தொடங்கியது. இது கண்ட ஆங்கிலேயர் அஞ்சினர்; வ.உ.சி-யும், சிவாவும் பொதுக் கூட்டங்களில் பேசக்கூடாது என்று தடை விதித்தனர்.

இந்தியக் காங்கிரசுப் பேரவையின் தலைவர்களுள் ஒருவரான விபின் சந்திர பாலர் என்பவர் 1908-ஆம் ஆண்டில் சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். அந்த நாள் திருவிழா நாளாக எங்கும் கொண்டாடப்பட்டது. அது சம்பந்தமான ஒரு பொதுக் கூட்டத்தில் சிதம்பரனார் சொற்பொழிவாற்ற இருந்தார். ஆனால், அவர் பேசுவதற்கு ஆங்கிலேயர் தடை விதித்தனர். அரிமா நெஞ்சம் கொண்ட வ.உ.சி. தடையை மீறி அந்தக் கூட்டத்தில் வேழமென முழங்கினார்; வெள்ளமெனத் திரண்டிருந்த மக்களிடையே வெள்ளையர் கொடுமைகளை எடுத்துக் கூறினார். உடனே சீறி எழுந்த ஆங்கிலேயர் வ.உ.சி. யைக் கைது செய்தனர்; அவரோடு அவரது நண்பர் சுப்பிரமணிய சிவாவையும் கைது செய்தது வெள்ளைப் பட்டாளம்.

சிதம்பரனார் கைதான சேதி கேட்டுத் தமிழகமே கொதித்தெழுந்தது. குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் கடைகள் எல்லாம் அடைக்கப் பட்டன. மாணவர்கள் பள்ளி செல்லவில்லை. ஆங்கிலேயரின் அடக்குமுறையைக் கண்டித்து ஊர்வலங்கள் நடந்தன. உரிமை முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. ஆங்கில அரசு ஆர்த்தெழுந்தது; அன்னை பூமியின் அடிமை விலங்கொடிக்க ஆர்ப்பரித்த ஆயிரமாயிரம் அடலேறுகளைச் சிறை செய்து சித்திரவதை செய்தது.

விடுதலை வேண்டி நின் வீர சிதம்பரனார் மீது இல்லாத குற்றஞ் சாட்டிய பொல்லாத வெள்ளை அரசு, அவருக்கு நாற்பதாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தது. உரிமை கேட்ட சிவாவுக்கோ பத்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை! இந்த வழக்கின் போது கவியரசர் பாரதியார், சிதம்பரனார் தரப்பில் சாட்சி கூறியதை இங்குக் குறிப்பிட வேண்டும். விடுதலை கேட்ட சிதம்பரனாரை "இராஜத் துரோகி" என்று வருணித்தார் நீதிபதி பின்ஹே. அவர் தமது தீர்ப்பில் கூறியதாவது: "சிதம்பரம் பிள்ளை பெரிய இராஜத் துரோகி. அவரது எலும்புக்கூடு கூட இராஜ விசுவாசத்திற்கு விரோதமானது. சிவா அவர் கையில் அகப்பட்ட ஒரு கோல். திருநெல்வேலிக் குழப்பத்திற்குக் காரணம் இவர்கள்தாம். பிள்ளையின் சொற்பொழிவையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் கூட உயிர்பெற்று எழும். புரட்சித் தீ பறக்கும்!".

சிதம்பரனார் அடைந்த தண்டனையைக் கேட்டு, அவர் சகோதரர் மீனாட்சி சுந்தரனார் சித்தம் கலங்கிப் போனார். கடுந்தண்டனையைக் கண்டித்துப் பல செய்தித்தாள்கள் தலையங்கங்கள் எழுதின. மக்கள் இக்கொடுமையை எண்ணி உள்ளம் கொதித்தனர். வீர சிதம்பரனார் தம் தண்டனையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதன் விளைவாக அவரது தண்டனை ஆறு ஆண்டுக் கடுங்காவலாகக் குறைக்கப்பட்டது.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய சிதம்பரனார் தம் தண்டனைக் காலத்தைக் கோவை, கண்ணனூர் சிறைகளில் கழித்தார். அங்கு அவர் மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டார். சிறையில் செக்கிழுத்தார். அப்போதெல்லாம் அவர் சுதந்தரத் தாயின் கோவிலைச் சுற்றி வருவதாகவே எண்ணி வேதனையை மறந்தார். அரசியல் கைதிகளுக்கான சலுகைகள் அன்று எதுவும் இல்லாததால் சிறையில் சித்திரவதைகளை அனுபவித்த சிதம்பரனார் கூழ் குடித்தார்; கல்லுடைத்தார். சிறையிலிருந்தபோது அவர் உருவாக்கிய நாவாய்ச் சங்கத்தினை அரசினர்

நசுக்கினர். அரும்பாடு பட்டு வாங்கிய இரண்டு கப்பல்கள் ஆங்கிலேயருக்கே விற்கப்பட்டன! இந்தக் கொடுமையைக் கேள்விப் பட்ட சிதம்பரனார் நெஞ்சம் உருகிக் கண்ணீர் வடித்தார்.

1912-ஆம் ஆண்டு வ.உ.சி. கண்ணனூர்ச் சிறையிலிருந்து விடுதலையடைந்தார். பிறகு அவர் சென்னை சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் பல்லாண்டுகளாகப் பொது நலப் பணி புரிந்தார். அப்போது அரசினரின் அனுமதி இல்லாததால் வழக்கறிஞர் தொழில் செய்ய முடியாத அவல நிலை அவருக்கு ஏற்பட்டது. அதனால் வறுமை அவரது வாழ்க்கையைச் சூழ்ந்து வருத்தியது. சொல்லொணாத் துயரமடைந்த சிதம்பரனார்க்கு உதவி புரிய வந்தார், சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிய இ. எச். வாலஸ் என்பவர். 1924--ல் மீண்டும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு கோவில்பட்டியில் தம் வாழ்க்கையைத் தொடர்ந்தார் வ.உ.சி.

வீர சிதம்பரனார், செந்தமிழ்ச் சிதம்பரனாராகவும் விளங்கினார். அன்னை பூமியின் அடிமை-விலங்கைத் தகர்த்தெறியப் பாடுபட்ட சிதம்பரனார், அன்னைத் தமிழ் மொழிக்கு அணிகலன் பூட்டி அழகு பார்க்கவும் முற்பட்டார். தமிழ் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களுக்கு எல்லா வசதிகளையும் தாமே செய்து கொடுத்தார். அவரிடம் கல்வி பயின்றவர்களில் குறிப்பிடத் தக்கவர் சாமி சகஜானந்தர் என்பவராவர். அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராயினும் சிதம்பரனார் சாதி மத வேறுபாடு கருதாது, அவரைத் தம் உயிர் மாணவராகக் கருதினார்.

பலாத்காரத்தைச் சிறிதும் விரும்பாதவர் சிதம்பரனார் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு; திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஆஷ் என்பவர் துணை ஆட்சியாளராக இருந்த போது பல கொடுமைகள் புரிந்தார். 1911-ஆம் ஆண்டு அவரைப் பழிவாங்கத் திட்டமிட்டான் வாஞ்சிநாதன் என்ற இளைஞன். ஆஷ், ரயிலில் கோடைக்கானலுக்குச் சென்று கொண்டிருந்த போது அவருடன் பயணம் செய்த அந்த இளைஞன் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். தம்மை யாரென்று அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி அவன் தன் வாயில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொண்டு, தற்கொலை செய்து கொண்டான்.

இதைக் கேள்விப்பட்ட சிதம்பரனார் மிகவும் வருந்தினார். "நாம் ஆங்கிலேயரை நாட்டை விட்டு வெளியேற்றத்தான் போராடுகிறோம். அவர்களைக் கொலை செய்வது முறையில்லை. இந்தப் பலாத்காரத்தால் சுதந்தரம் கிடைக்காது; கிடைக்கும் என்று எண்ணுவதும் தவறு" என்று ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

வந்தாரை வரவேற்று விருந்தோம்பும் நற் பண்பும், இல்லை என்று கேட்பவருக்கு இல்லை என்னாது வழங்கும் வள்ளல் தன்மையும் மிக்கவர் வ.உ.சி.

நாட்டுப்பற்று மிகுந்த வீர சிதம்பரனார் அயராது பணியாற்றியதன் காரணமாக உடல் வலிவிழந்தார். 1936-ஆம் ஆண்டு அவர் நோய்வாய்ப்பட்டார். அந்தச் சமயத்திலே அவர் கேட்க விரும்பிய பாடல் பாரதியாரின், "என்று தணியும் இந்தச் சுதந்தர தாகம்" என்ற பாடல்தான். அஞ்சாது, அயராது அறவழி நின்று போராடிய மாவீரன் சிதம்பரனார் தாம் இறக்குந் தறுவாயில் "இறப்பதற்கு முன்னர் சுதந்தரத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று கூறி வருந்ினாராம். பாரதியாரின் தேசீயப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தாராம்.

நவம்பர் பதினெட்டாம் நாள் நள்ளிரவு! செக்கிழுத்த செம்மல் நாட்டு மக்களையெல்லாம் கண்கலங்கச் செய்துவிட்டு மறைந்து விட்டார். அவரது நல்லியல்புகள் நமக்குத் துணையாகட்டும், அவர் காட்டிய வழி நாம் செல்லும் பயணத்துக்கு நல் வழியாகட்டும்; அவர் கொண்ட உறுதி நம் உள்ளத்துக்கும் உறுதியாகி ஒளிவீசட்டும்; வாழ்க சிதம்பரனார்! வளர்க நாட்டுப் பற்று என்று முழங்குவோமாக!

—பி.வி.ஜி.

வ.உ.சியும் முதன்முதலும்!

1895-ஆம் ஆண்டில் வ.உ.சி. சட்டத் தேர்வில் வெற்றி பெற்று வழக்கறிஞர் ஆனார். முதன் முதலில் தமது தொழிலை ஒட்டப்பிடாரத்திலேயே நடத்தினார்.

* * *

1907-ஆம் ஆண்டில் விடுதலை வீரர் வ.உ.சி. அவர்களால் தூத்துக்குடியில், முதன் முதலில் உரிமை முழக்கம் எழுப்பப்பட்டது.

* * *

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய இளம்பூரணர் உரையை 1928-ஆம் ஆண்டில் முதன் முதலாகப் பதிப்பித்தவர் வ. உ. சிதம்பரனாரே யாவர்.

விடுதலை பெற்ற இந்தியாவில் முதன்முதல் 1948-ஆம் ஆண்டில் 'ஜலப் பிரபா' என்ற கப்பலை மிதக்கவிட்ட போது, இந்தியத் துணைப் பிரதமராக இருந்த சர்தார் வல்லபபாய் பட்டேல் பேசுகையில், "முதன் முதல் வெள்ளையரை எதிர்த்துச் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைத் தோற்றுவித்தவர் வ. உ. சி" என்று பாராட்டினார்.

* * *

தென் பாண்டி வணிகர்கள், தூத்துக்குடி-கொழும்பு போக்குவரத்துக்காக வாங்கிய தம் முதற் கப்பலுக்கு 'வி. ஓ. சிதம்பரம்' என்று பெயரிட்டனர்.

வழிகாட்டி வ.உ.சி

"இனிமேல் தவறுகள் செய்வாயா?" என்று அச் சிறுவனைப் பிரம்பால் அடி அடியென்று அடித்தார் தந்தை.

வலி பொறுக்க முடியாத அந்தச் சிறுவன் 'ஓ' வென அழுதான். அதோடு விட்டானா? பட்டினத்தாரைப் போலத் துறவியாகி எங்கேயாவது ஓடிப் போக வேண்டியதுதான் என்று முடிவும் செய்தான்!

ஒரு நாள் அவன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். ஆம். மொட்டையடித்துக்கொண்டான். வெறும் கோவணத்தைக் கட்டிக் கொண்டான். 'பாதயாத்திரை' கிளம்பி விட்டான்! எங்கு? கால் போன போக்கில்!

தந்தையார் அடித்தார் என்பதற்காகக் கோபங் கொண்டு கோவணத்தோடு சென்ற அந்தச் சிறுவன் பல நாட்கள், உணவு, உறக்கமின்றி ஊர் ஊராகச் சுற்றிக் கடைசியில் மதுரை வந்து சேர்ந்தான்.

தான் செய்தது தவறு என்பதை உணர்ந்தானோ என்னவோ, அவன் வீடு திரும்ப எண்ணினான். உடனே தன் நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதினான்.

இதற்குள் அவன் தந்தையார் தன் அருமை மகனை அடித்து விட்டோமே என வருந்தித் தேடித் தேடி அலைந்தார். பிறகு மதுரையில் அவன் இருக்கும் தகவல் அறிந்து ஓடோடிச் சென்றார். மகனைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அன்பு மிகுதியால் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார். "வீட்டில் இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் கோபித்துக் கொண்டு ஊர் சுற்றலாமா? உன்னைக் கண்டிப்பது, அடிப்பது எல்லாம் உன் நலனுக்காக அல்லவா?" என்று அவனுக்குப் புத்திமதி சொல்லி வீட்டுக்கு அழைத்து வந்தார்.

தந்தையிடம் கோபித்துக் கொண்டு, தற்காலிகத் துறவியான அந்தச் சிறுவன் யார் தெரியுமா?

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், விடுதலை வீரர் என்றெல்லாம் போற்றிப் புகழப் பட்ட வ.உ.சி.! ஆம். வ.உ. சிதம்பரனார்!

திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரம் கிராமத்தில் பிறந்த இவர், முதலில் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்தார். அப்போது அவருக்கு ஆசிரியராக இருந்தவர் வீரப் பெருமாள் அண்ணாவி என்பவர். தன் மகனுக்குத் தமிழோடு ஆங்கிலமும் கற்பிக்க அவர் தந்தை விரும்பினார். அப்போது ஒட்டப்பிடாரத்தில் ஆங்கிலப் பள்ளி எதுவுமில்லை. அதனால் வசதி மிக்க வ.உ.சி.யின் தந்தை என்ன செய்தார் தெரியுமா? தன் மகனுக்காகவே ஒரு புதிய பள்ளிக் கூடத்தைக் கட்டி விட்டார்! பிறகு அந்தப் பள்ளி பலருக்கும் பயன்படுவதாயிற்று.

"ஓடி விளையாடு பாப்பா! என்று பாரதி சொன்னதுபோல வ.உ.சி. சிறுவயதில் விளையாட்டு விரும்பியாக விளங்கினார். நீந்துதல், கம்பு சுற்றுதல், கத்தி வீசுதல், மற்போர் முதலிய விளையாட்டுகளில் அவர் சிறந்து விளங்கினார்.

வ.உ.சி. விடுதலை வீரர் மட்டுமல்ல; சிறந்த தமிழறிஞர்; கவிஞர்; பேச்சாளர்; பண்டைத் தமிழ் நூலாம் தொல்காப்பியம் இளம் பூரணர் உரையை முதன் முதலில் பதிப்பித்தவர். திருக்குறளுக்கு உரை எழுதியவர். இத்தனைச் சிறப்புமுள்ள அவர், சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்தார். பணத்துக்கு ஆசைப்பட்டு பொய் வழக்காடவில்லை அவர். நியாயத்துக்கும், நேர்மைக்கும் பாடுபட்டார். உண்மை வென்றே தீரும் என்பதை அவர் பல வழக்குகளில் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்.

ஒரு சமயம் ஒரு போலீஸ் அதிகாரியைச் சிலர் சுட்டுக் கொன்று விட்டனர். அவரைச் சுட்டவர்கள் யார் என்பதைப் போலீசாரால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகவே, போலீசார் சம்பந்தமில்லாத சிலரைப் பிடித்து வந்து அவர்கள் மீது வழக்குப் போட்டார்கள்!

ஏழைகளுக்காகவே வாதாடி அவர்களைத் தண்டனையிலிருந்து விடுவிப்பவர் வ.உ.சி. என்று அனைவரும் அறிந்திருந்தனர். ஏழைகளுக்கு எதிராக, உண்மைக்குப் புறம்பான வழக்கு எதுவாக இருந்தாலும் அவர்களுக்காக வாதாடி வெற்றி காண்பவர் வ.உ.சி., என்று போலீசாருக்கும் தெரியும்.

ஆகவே, இந்த வழக்கையும், அவர் கலைத்துவிடுவாரோ என்று அஞ்சிய போலீசார் ஒரு சூழ்ச்சி செய்தனர்.

'போலீஸ் அதிகாரியைச் சுட்டுக் கொல்ல வ.உ.சி.யும் சதி செய்தார்' என்ற பொய் மனுவைத் தயார் செய்தனர். அதை வ.உ.சி.யிடம் குறிப்பிட்டு "நீங்கள் இந்த வழக்கில் தலையிடாதிருந்தால் உங்கள் பெயரை நீக்கிவிடுகிறோம்!" என்று கேட்டுக் கொண்டனர். உள்ளத்தால் கொஞ்சங்கூட அவர் இதற்குச் சம்மதிக்கவில்லை. 'முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்' என்று எண்ணி அவர்களுக்குச் சரி என்று சொல்வது போலத் தலையசைத்தார்.

ஒரு நாள் இந்தக் கொலை வழக்கு விசாரணைக்கு வந்தது. குற்றம் சாட்டப்பட்ட நிரபராதிகளை ஒன்றும்புரியாமல் விழித்துக் கொண்டிருந்தனர். 'எந்தக் குற்றமும் செய்யாத எங்களுக்கு யாருமே துணை இல்லையா? என்று கேட்பது போல அவர்கள் பரிதாபமாகக் காணப்பட்டனர்.

"ஏன் இல்லை? இதோ நானிருக்கிறேன். நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம்!" என்று வ.உ.சி. எதிர்த் தரப்பு வழக்கறிஞராக வந்து அமர்ந்தார். இதைச் சற்றும் எதிர்பாராத போலீசார் உண்மைக் குற்றவாளிகளைப் போலக் கதி கலங்கினர். இந்த வழக்கில் திறமையாக வாதாடி, உண்மையை நிலைநாட்டினார் வ.உ.சி.

வழக்கு வ.உ.சி. பக்கம் வெற்றி பெற்றதைக் கண்டு போலீசார் ஆத்திரமடைந்தனர். 'சாட்சியைக் கலைத்து விட்டார்' என்று சொல்லி அவர் மீது வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கும் விசாரணைக்கு வந்தது. தூத்துக்குடி துணை நீதிபதி 'லயனல் வைப்பர்ட்டு' என்பவர் வழக்கைத் தீர விசாரித்தார். 'போலீசாரின் வழக்கு பொய்' என்று தீர்ப்புக் கூறி, அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார். அதோடு குற்றமற்ற வ.உ.சி.க்கு நட்ட ஈடு தரு மாறும் கட்டளையிட்டார். அன்று முதல் வ. உ. சி. யிடம் வம்புக்கு யாரும் வருவதில்லை!

'நன்றி மறப்பது நன்றல்ல' அல்லவா? நம்நாட்டு விடுதலைக்காக அயராது பணியாற்றிய வ.உ.சி., தமக்குத் துன்பம் வந்த காலத்தில் உதவியவர்களையெல்லாம் மறக்கவே இல்லை.

வெள்ளையருக்கு எதிராகக் கப்பலோட்டக் 'கப்பல் சங்கம்' என்ற ஒன்றை அவர் நிறுவினார். இச்சங்கத்தின் மூலமாகக் கப்பல் வாங்குவதற்காகப் பம்பாய் போயிருந்தார்; வரச் சிறிது காலம் ஆனது. அப்போது அவரது சங்கத்தையும் குடும்பத்தையும் கவனித்து வந்தவர் ஆறுமுகம்பிள்ளை என்பவர். அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் தம் இரண்டாவது மகனுக்கு ஆறுமுகம் என்ற பெயரை வைத்தார்.

சிதம்பரனார் கோயம்புத்தூர் சிறைச்சாலையில் இருந்த போது, அவருக்கு உதவிகள் பல புரிந்தவர் வழக்கறிஞர் சி. கே. சுப்பிரமணியமுதலியார் என்பவர். அவரது பெயரைத் தம் மூன்றும் மகனுக்குச் சூட்டி மகிழ்ந்தார் வ.உ.சி.

சிறையிலிருந்து விடுதலையான சிதம்பரனார் தொழில் இல்லாமல் வருந்திய சமயத்தில், இவர் மீண்டும் வழக்கறிஞர் தொழிலைச் செய்வதற்கு உதவி புரிந்தவர் இ.எச். வாலஸ் என்பவர். அவரை மறவாத வ.உ.சி. தம் கடைசி மகனுக்கு 'வாலேஸ்வரன்' என்று பெயரிட்டு அழைத்தார்.

சிதம்பரனார் சிறையிலிருந்த போதும், மற்றக் காலங்களிலும் அவருக்கு உதவி புரிந்தவர்கள் பலர். அவர்களில் வேதியப்பப் பிள்ளை என்பவர் குறிப்பிடத் தக்கவர். அவரது நினைவாகத் தம் மகள் ஒருவருக்கு வேதவல்லி என்று பெயரிட்டுப் பெருமையாக அழைத்து வந்தார்.

இப்படி வாழ்க்கையில், எல்லாருக்கும் சிறந்த எடுத்துக் காட்டாய் வாழ்ந்து காட்டியவர் வ.உ.சி. துணிவு, முயற்சி, உழைப்பு, நாட்டுப் பற்று, நேர்மை போன்ற அருங்குணங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த வ.உ.சிதம்பரனாரின் வழியைப் பின்பற்றிச் செல்வோமாக!

மத்திய அரசின் அஞ்சல்துறை சிதம்பரனாருக்கு, செப்டம்பர் 5-ஆம் நாளில் அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்வது பாராட்டுக்குரியது.

—'இ,

அடித்தளத்தில் அழுந்திக்கிடக்கும் மக்கள் வாழ்வில் ஆனந்த அருவி பாய்ந்திடச் செய்வோம்.

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு கையில் ஒரு தடியுடன், கதராடையும் அரையாடையாக உடுத்திக் காந்தியடிகள் சுதந்தர அகல் விளக்கைக் கையில் ஏந்திக்கொண்டு, சரளைக் கற்கள் நிறைந்த பாறையின் உச்சி நோக்கிக் கல்லும், முள்ளும் காலில் குத்துவதைப் பொருட்படுத்தாமல் "காற்றடிக்குது; மழை பொழியுது; ஆனாலும் கலங்க மாட்டேன்" என்று கை மலரால் விளக்கின் சுடர் அணையாமல் காத்தளித்துக் குன்றின் மீது வைத்துச் சென்றார்.

வழக்கறிஞராக வாழ்வு தொடங்கி—அந்த வாழ்வு, இந்த மண்ணின் விடுதலைக்கே ஆகட்டுமென்று அறமுரசு ஒலித்து—ஆங்கிலேயர் ஆட்சிதனை அகற்றிக் காட்டி, அடிமை விலங்கொடித்த காந்தியண்ணல் கண்ட கனவு, விடுதலைக்குப் பின் புதிய இந்தியா எனும் புனிதக் கனவாகும்!

அந்தக் கனவு பலித்திடத் தாயகத்தின் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களின் கரங்கள் உயர்ந்து நிற்கின்றன.

அந்தக் கரங்கள் மிகப் பெரும்பாலும் உழைக்கும் கரங்கள்!
சம்மட்டி பிடித்துத் தழும்பு கொண்ட கரங்கள்!

ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய கரங்கள்!
ஆலையின் சக்கரம் சுழற்றிடும் கரங்கள்!
நாற்று நடுகின்ற கரங்கள்!
நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள்!

பாப் கிண்ணம் ஏந்தும் கரம்—

பழரசக் கோப்பை எடுக்கும் கரம்—
பாதாம்—பிஸ்தா—பச்சை முந்திரி—
பொறுக்கும் கரம்—மிக மிகக் குறைவு!

எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே! அவற்றில் சில கரங்களாகவும், பல மரங்களாகவும் இருப்பானேன்?

ஏற்றத் தாழ்வு இன்னும் இருந்திடவா இந்தச் சுதந்தரம் பெற்றோம் அன்று? இல்லை—இல்லை—இல்லவே இல்லை.

முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பானேன்? காலில் குத்தித் தொல்லை பல தருவானேன்?

இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம் சபதம்!

இனி நம் நாட்டில் இல்லார் இல்லை—
கல்லார் இல்லை—நல்லார் மீது
பாய்கின்ற வல்லார் இல்லை!
எங்கும் புதுமை! எதிலும் புதுமை!
அனைத்தும் பொது உடைமை!

அந்நிலை நோக்கிப் படிப்படியாக—ஆனால் உறுதியாக நடைபோடும் நம் அரசு என்பதை நாடறியும்!

அடித் தளத்தில் அழுந்திக் கிடக்கின்ற மக்களுக்கு வாழ்வில் ஆனந்த அருவி பாய்ந்திடச் செய்வதுதான் சுதந்தரம் பெற்றதன் பயன் என்பதை அறிந்து செயலாற்றி வருகின்றோம். சுதந்தரத்திற்குத் தந்த விலை, மதிப்பில்லாதது! உண்மைதான்! ஆனால் தியாகிகளைப் பாராட்டும் அதே நேரத்தில் அது ஒன்றுதான் நம் வேலை என்று எண்ணிடாமல் எதற்காகச் சுதந்தரம் கேட்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறச் செயலாற்ற முனைதல் வேண்டும்.

புரட்சிக் கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன—களிப்பூட்டும் வகையில்!

போரின் கோரத் தாண்டவத்தால் அழிந்து விட்ட நாடுகளின் ஏற்றமும் எழிலும் எவ்வளவு விரைவில் பூத்துக் குலுங்குகின்றன என்று வியந்திருக்கின்றோம்.

இங்கு அடிமை ஒழிந்து ஆண்டுகள் பல வாயினும் அகிலத்தில் தலை தூக்கிச் செழுமை மிகுந்த சித்திரப் புன்னகையைக் காட்ட முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றோமே; எதனால்?

சிந்திக்க வேண்டாமா?

சிந்தித்துச் செயல்பட வேண்டாமா?

"நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது. அந்த அடிப்படையில்தான் நமது பணிகள் அமைய வேண்டும். நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய

முதல்வர் கலைஞர்

புதிய சோதனைகள் ஏற்படலாம். பணிவு, எளிமை, அகிம்சை, பொறுமை ஆகிய நல்ல பண்புகளினால் அந்தச் சோதனைகளில் நாம் வெற்றி பெற்றுவிடலாம்'' என்று உத்தமர் காந்தி உரைத்திட்டார் பல முறையும்!

அந்த அண்ணல் வழிதான் அண்ணன் தந்த வழியென்று, நம் அயராத உழைப்பையெல்லாம், சிற்றூரிலும் வரப்பெடுத்த வயல்களிலும், ஆறு தேக்கிய நல்வாய்க்கால்களிலும் வகைப்படுத்திப் பசுமைப் புரட்சி செய்து, தீவிரச் சாகுபடி மூலம் உணவிலே தன்னிறைவு பெற்றிருக்கிறோம்.

நகரத்தின் வசதிகள், கிராமங்களை அலங்கரிக்க வேண்டுமென்பதற்காக மின் விளக்கில்லாத கிராமங்களே இருத்தலாகாது என்று உறுதியெடுத்து அந்தப் பணியினைப் பெரும் பகுதி முடித்துவிட்டோம்.

இணைப்புச் சாலைகள் மாநிலம்—முழுதுமுள்ள எல்லாக் கிராமங்களையும் சில ஆண்டுகளில் இணைத்துவிடும்.

குடிநீர் வாரியத்தின் பணியும், உள்ளாட்சித் துறையின் பணியும் விரைவுபடுத்தப்பட்டு ஆங்காங்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேவை வேக வேகமாகத் தீர்க்கப்பட்டு வருகின்றது.

அரிசன மக்களின் காலனிகள் பல்லாண்டுக் காலமாக இருண்டு கிடந்திருந்த நிலை மாற்றி, அவர் தம் இருபதாயிரம் காலனிகளில் முக்கால் பங்கிற்கு மேல் ஒளி விளக்கு அமைத்து விட்டோம்!

சம தர்மத் திட்டங்களின் புது நோக்கோடு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்! ஏற்கெனவே இருந்த விதி விலக்குகள் ரத்து!

ஐந்தாண்டுகளுக்குள் பேருந்துத் தொழில் முழுவதையும் பொதுத் துறையாக மாற்றுகின்ற திட்டம்!

பொதுத் துறையில் தொழிலாளர்களுக்கு, முதலீட்டில் இருபத்து நான்கு சத விகிதம் பங்கு ஒதுக்கப் பெறும் என்ற முடிவு!

இது போன்ற நற்பணிகள், நமது மாநிலத்து மக்களின் மனத்தில் புதிய உணர்ச்சியை உருவாக்கியுள்ளன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அந்த உணர்ச்சிப் பெருக்கை நாம் எடுக்கும் விடுதலை வெள்ளி விழாவிலே காணுகிறோம். அறிஞர் அண்ணா கூறியது போல் “1947 ஆகஸ்டு 15—கணக்குத் தீர்த்த நாள்! ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகிற விடுதலை நாள், கணக்குப் பார்க்கும் நாள்!”

ஆம்—அந்தக் கணக்கைப் பார்த்து அகமகிழும் காரணத்தால்தான்—இந்த ஆண்டு மட்டும் தமிழகத்தில் ஒரு இலட்சம் ஏழை மக்கள் கண் ஒளி பெறப் போகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்துக் களிப்படையும் காரணத்தால்தான்—விழாச் சிறப்பை எங்கணும் காணுகிறோம் தமிழகத்தில்! இன்று, சென்னையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரும் நானும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ளும் விழா! இதுபோல் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நமது மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தியாகிகளுக்குப் பாராட்டும், விருந்தும் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தில்லி மாநகர் சென்ற தியாகச் செம்மல்களைச் சென்னை ரயிலடிக்குச் சென்று மாலையிட்டு வழியனுப்பி வைத்தேன். அவர்கள் கண்களில் '' ஆனந்த பாஷ்யம் '' என்பார்களே, அதனைக் கண்டேன்.

தியாகிகளை மதிக்கும் அரசு இது! அதனால்தான் ஏழாயிரம் தியாகிகட்கு மாதம் ஐம்பது ரூபாய் மானியம் வழங்குகிறோம்! இனிமேல் அதனை 75 ரூபாயாக அளிக்க இருக்கிறோம்.

பாரதிக்கு, வ.உ.சி.க்கு மற்றும் பல வீரத் தளபதிகட்குச் சிலையெடுத்தோம். வள்ளியம்மை பெயராலே நகர் ஒன்றை ஏழு இலட்ச ரூபாய் செலவில் தில்லையாடியில் அமைத்துள்ளோம்.

வாஞ்சிநாதன் குடும்பத்துக்கு மானியம், கட்டபொம்மன் சந்ததிக்கு மானியம், நாமக்கல்லார், நெல்லையப்பர் குடும்பத்திற்கு மாதாந்தர உதவித் தொகை, சங்கரலிங்க நாடார் குடும்பத்திற்கு நிதி உதவி.

இத்தனையும் செய்திட்ட இந்த அரசு—கோவைச் சிறையில் சிதம்பரனார் இழுத்திட்ட செக்குதனைச் சென்னையிலே கண் காட்சிப் பொருளாக ஆக்குதற்கும் திட்டம் தீட்டியுள்ளது.

தியாகத்தைப் போற்றுகின்றோம்;

தியாகிகளைத் தெய்வமெனத் தொழுகின்றோம்;

அவர்கள் எதற்காகத் தியாக வேள்வி வளர்த்தனரோ! அந்த நோக்கம் பாழ்படாது பணியாற்றுவோம்!

சமதர்மம்—வெறும் உதட்டு உச்சரிப்பாக இல்லாமல் செயல்படுத்தப்பட வேண்டும்!

கவர்ச்சிகரமான முழக்கங்கள் எளிது! அதனை உளத் தூய்மையுடன் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

முற்போக்குக் கொள்கை வழி நின்று இந்தியா முன்னேற வேண்டும்! ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கையுள்ள தமிழகம், அந்த முற்போக்கு முகிழ்ப்பதற்கு வழிகாட்டியாகத் திகழ்கின்ற அளவுக்கு—பாமரப் பாட்டாளி மக்கள்—பட்டிக்காட்டு மக்கள்—வாழ்வை மையமாக வைத்துச் செயலாற்றி வருகிறது!

மேலும் அத்தொண்டு சிறந்திட—தொல்லைகள் அகற்றிட—தூய நெஞ்சங் கொண்டோர் அனைவரும், இந்நாளில் உறுதியெடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

வணக்கம்.

[இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி, 15-8-1972 மாலை 6-30 மணிக்கு முதல்வர் கலைஞர் வானொலியில் ஆற்றிய உரை.]

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

பொதுப்பணித் துறை

சென்னை செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்.—சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள கல்வித் துறை இயக்குநர் அலுவலகத்தில் அரசினர் தேர்வுத் துறை ஆணையர் அலுவலகங்களுக்காக தேர்வுக் கட்டடத்தில் (Examination Hall) மேல் இரண்டாவது மாடி கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும், மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29-9- 972 மாலை 3-00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சென்னை செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால், வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அங்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 20-9-1972 முதல் 28-9-1972 முடிய எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

1 ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

2 கட்டுத் தொகை.—ரூ. 3,450.

3 வேலையை முடிப்பதற்கான காலம்.—3 (மூன்று) மாதங்கள்.

4 ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்களின் விலை.—ரூ. 20-ம் விற்பனைவரி 3½ சதவீதம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை திருப்பித்தரமாட்டாது.

“P.W.D. Remittances III other remittances” என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடகோட்டம் எண் 1 அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி (3½ சதவீதம்) அதே சலானில் “ XII Sales tax b. receipt under State Sales tax Act. General sales tax ” என்ற தலைப்பில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான மனுக்கள் மேற்கண்ட சலான்களில் அசலுடன் அனுப்பப்படவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கற்பட்டு வட்டம், அவர்கள் எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ அல்லது ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அறிந்து கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்,
சென்னை-5.

(த. 29)

நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம் புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 7-9-1972 அன்று பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்ளுவார். இந்த ஒப்பந்தப்புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கு திறக்கப்படும்.

எண்.—1. மதுரை மாவட்டம்.

வேலையின் பெயர்.—பெரியகுளம் குமிளி சாலை கி. மீ. 15/6-ல் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் வேலை.

கட்டுத்தொகை.—ரூ. 7,000.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்.—கோட்டப் பொறியாளர் (நெ. கி. ப.) மதுரை-2.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.75 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதின் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) மதுரை-2 விலாசத்திலிருந்து 23-8-1972 முதல் 6-9-1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள் ஷெடியூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலைக் கிராமப்பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் “ரெவின்யூ டெபாசிட்” என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல்டு பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத்தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்.
கண்காணிப்புப் பொறியாளர் (நெ. கி. ப.),
திருச்சிராப்பள்ளி-20.

(த. 25.)

அரசினர் கஸ்தூர்பாகாந்தி தாய்-சேய் மருத்துவமனை

சென்னை-5.

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய் சேய் மருத்துவமனை, சென்னை-5க்கு 1-10-1972 முதல் 31-3-1973 வரை தேவையான மருந்து வகைகள் ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனை கண்காணிப்பாளர் அவர்களால் 8-9-1972 காலை 11-00 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், கொடுக்கப்பட வேண்டிய மருந்து பட்டியல் ஆகியவற்றை மேற்படி மருத்துவமனையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதற்கான விலை ரூ. 5, “XXIII Medical (g) Miscellaneous other receipts” என்ற தலைப்பிலும் மற்றும் விற்பனை வரி 0-19 காசு “ XII Sales Tax Receipts under State Sales Tax Act—General Sales Tax ” என்ற தலைப்பிலுமாக ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ சலான்களை தாக்கல் செய்து, கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, ஒப்பந்த நகலைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் படிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன் சுயமுகவரியுடன் கூடிய ரூ. 1-50 மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையும் அனுப்பப்படவேண்டும்.

கண்காணிப்பாளர்.

(த. 23.)

தஞ்சாவூர் நகராட்சி

தஞ்சாவூர் நகராட்சியின் 5 மருந்தகங்களுக்கும் 1972-73-ம் ஆண்டிற்குத் தேவையான வருடாந்திர மருந்து தேவையை சப்ளை செய்வதற்குக் குறைந்த பட்ச மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி 13-9-1972 மாலை 4 மணிக்குள் பெற்றுக்கொள்ளப்படும். தேவையான மருந்து விவரப் பட்டியல் இதர விவரங்கள் தஞ்சாவூர் நகராட்சி அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

ஆ. சேவுகபாண்டியன், பி.ஏ.,
ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி.

(த.1)

பொதுப் பணித்துறை

செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர்.—செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் நிருவாகப் பொறியாளர் உதவிப் பொறியாளர் ஆகியோருக்கு ஒருங்கிணைந்த அலுவலகங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 14—9—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தமுறை.—மொத்த தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 4,400.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்.—ரூ. 20 விற்பனை வரி 3½ சதவீதம்.

முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டமேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 30—8—1972 தேதி முதல் 12—9—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20· (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் " P. W. D.— Remittances, — Other Remittances " என்ற தலைப்பின் கீழ் " நிர்வாகப் பொறியாளர், பொ. ப. துறை கட்டிடக் கோட்டம் காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப் பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் " XII—Sales Tax (b)Receipts Under State Sales Act—General Sales—Tax " என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்தச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு, வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் " டிமாண்ட் டிராப்டாகவோ " ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் " ஷெடியூல்டு பாங்குகளின் " டிமாண்டு டிராப்ட்கள் " செய்தி பொறியாளர் பொ. ப. து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும், மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர். செல்வராசன்,

மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 22).

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை,) திருச்சிராப்பள்ளி, அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 7—9—1972 அன்று பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கிருத் திறக்கப்படும்.

எண்ணும், வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்குமிடம்.
1. தஞ்சாவூர் மாவட்டம்—		
முத்துப்பேட்டை-மீமிசல் சாலை மைல் 15/1 (கி.மீ. 24/2ல்) பாலத்தைத் திரும்பக் கட்டுதல்.	3,550	கோட்டப் பொறியாளர் (நெகிப), தஞ்சாவூர்.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 28—8—1972முதல்6—9—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும்,12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும், ஷெட்யூல்டு பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ்பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளி கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,

கண்காணிப்புப் பொறியாளர் (நெ.கி.ப.),
திருச்சிராப்பள்ளி-20.

(த. 20).

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன், சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15—9—1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—திருச்சி வடிகால் திட்டம்—மூன்றும் நிலை பிரிவு 1—மண்டலம் மூன்றில் வீட்டு இணைப்பு வசதிகளை செய்து கொடுத்தல்.

ஒப்பந்த வகை : மொத்த தொகை.

முன் வைப்புத் தொகை : ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும். (ரூ. 2,500).

இத்தொகை ஏதேனும் ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற்கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற்கோட்டம்) அவர்களிடமிருந்து பி. 15, தில்லைநகர், மெயின்ரோடு, திருச்சி-18 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 12—9—1972 மாலை 5-00 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஜி. சீனிவாசன்,

மேற்பார்வைப் பொறியாளர், செயல்
வட்டம், த. கு. வ. வா., மதுரை-2.

(த. 14).

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை), திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 14—9—1972 அன்று பிற்பகல் 3·30 மணி (அலுவலக கடிகாரப்பட்டி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார்கள். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3·35 மணிக்குத் திறக்கப்படும்.

எண்.	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்த ஷெட்யூல் விலை ஒன்றுக்கு.
(1)	(2)	(3)	(4)
		ரூபாய்.	ரூ. காசு.
1	மதுரை தொண்டிசாலை மைல் 45/6 (கி.மீ. 73/2) உள்ள பாலத்தைத் திரும்ப கட்டுதல்	5,620	20 70
2	பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னியவாய்கா லிலிருந்து பாண்டிகண்மாய் ரயில்வே நிலையத்திற்குச் சாலை அமைத்தல் கி.மீ. 0·0 முதல் 2·0 வரை	2,340	15·53
3	ஷை கி.மீ. 2·0 முதல் 4·0 வரை	2,440	15·53
4	ஷை கி.மீ. 4·0 முதல் 6·0 வரை	2,455	15·53
5	ஷை கி.மீ. 6·0 முதல் 8·0 வரை	2,575	15·53
6	ஷை கி.மீ. 8·0 முதல் 10·0 வரை	2,500	15·53
7	ஷை கி.மீ. 10·0 முதல் 12·0 வரை	2,465	15·53
8	ஷை கி.மீ. 12·0 முதல் 14·0 வரை	2,405	15·53
9	ஷை கி.மீ. 14·0 முதல் 16·0 வரை	2,460	15·53
10	ஷை கி.மீ. 16·0 முதல் 18·0 வரை	2,425	15·53
11	ஷை கி.மீ. 18·0 முதல் 20·0 வரை	3,045	15·53

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட மேலே குறிப்பிட்டபடி பணம் செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை), சிவகங்கை விலாசத்திலிருந்து 1—9—1972 முதல் 13—9—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சாரவாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

தி. ப. கந்தசாமி,

கண்காணிப்புப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை),
திருநெல்வேலி-2.

(த.9)

மின்சார வாரியம்

கே-2

தமிழ்நாடு மின்சார வாரியம்—சுருளியாறு நீர் மின் திட்டம்—குறிப்பிடுகை எண் SUR 1B, SUR 3B, SUR 4B—சுருளியாறு கீழ் முகாமில் நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவது.

1. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன், ஒப்பந்ததாரரின் பெயரும், மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட தேதிகளில் பிற்பகல் 3·00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ் வலுவலகத்தில் பிற்பகல் 4·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன் திறக்கப்படும்.

குறிப்பிடுகை எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்தப் பிரதியின் விலை (விற்பனை வரி உட்பட).	கட்டுத் தொகை.	ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளும் கடைசி தேதி.
(1)	(2)	(3)	(4)	(5)
		ரூ. காசு.	ரூபாய்.	
(1) SUR 1B ..	சுருளி ஆறு கீழ்முகாமில் நிரந்தர 2G டைப் கட்டடம் 6 பிளாக்குகள் கட்டுவது.	10 35	2,600 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்).	6—9—1972
(2) SUR 3B ..	சுருளி ஆறு கீழ்முகாமில் நிரந்தர 2F டைப் கட்டடம் பிளாக் 1-ம், 2-ம்.	10 35	1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்).	8—9—1972
(3) SUR 4B ..	சுருளி ஆறு கீழ்முகாமில் நிரந்தர 2F டைப் கட்டடம் கட்டுவது பிளாக் 3-ம், 4-ம்.	10 35	1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்).	8—9—1972

2. ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் 10·35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தி ஐந்து மட்டும்) விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலோ அல்லது நிருவாகப் பொறியாளர், சிவில், சுருளியாறு மின் திட்டம், கடலூர் மதுரை மாவட்டம் அவர்கள் அலுவலகத்திலோ ஒப்பந்தப் பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை எந்த காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

3. மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கட்டுத்தொகை (Earnest Money Deposit) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காசோலைகள் (Cheques) ஏற்கப்படமாட்டா. கட்டுத்தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் (Demand Draft) அனுப்புவதினால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத்தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டப்பட்ட தொகையையோ, வேறு தொகையையோ ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ்வலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களுக்கு பிணை வைப்புத் தொகையை (Security Deposit) செலுத்த வேண்டும். இப்பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து வேலைக்கான மதிப்பில் 5 சதவிகிதம் (ஐந்து சதவிகிதம்) இருக்கும். இந்த பிணை வைப்புத் தொகைக்கும் கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்பட மாட்டாது. இந்த மொத்தத் தொகையையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி திருப்திகரமாக வேலை முடித்தபின் திருப்பித்தரப்படும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும் ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டபிறகு ஒப்பந்தப்படி வேலை செய்வதலிருந்து பின் வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

5. இவ்வலுவலகத்தின் மனுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளிவரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. மேலே குறிப்பிட்ட வேலையை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்க கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமை உண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகளை சாதாரணத் தபாலிலேயோ அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் கால தாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதி தபாலில் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரம் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதற்கு உரியதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7.

(த.37)

பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 14—9—1972 மாலை 4·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4·30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரமும் வரைபடங்கள், விதிமுறைகள் முதலியன ரூ. 30·00 விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டுடன் நகராட்சி பொறியியல் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 12—9—1972-ம் தேதி முடிய பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு நகராட்சி பொறியியல் பொறியர் அவர்களிடம் அலுவலக நேரங்களில் விசாரிக்கவும்.

வரிசை எண்.	கட்டிடன் நடப்பு. எண்.	வேலை விவரம்.	மதிப்பீடு தொகை.	முன் வைப்புத் தொகை.	வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			ரூபாய்.	ரூபாய்.	
1	இ1/15116/70 ..	.. கோட்டூர் ரோடிலுள்ள தெப்பக் குளம் வழி ஆரம்பப் பள்ளிக்குப் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுதல்.	1,15,586	2,390	6 மாதம்.

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

குடிநீர்வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல்வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால்13—9—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : மேலூர் குடிநீர்த்திட்டம்—முதல் நிலை—நீர் கொணரும் குழாய்ப் போக்கிற்கென உறுதிபெறுகற்காரைக் குழாய்களையும் தனி உறுப்புகளையும் பதித்து இணைத்தல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 8,940 (ரூபாய் எட்டு ஆயிரத்து தொளாயிரத்து நாற்பது மட்டும்).

இத்தொகை எதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாவதம் இவற்றில் எதாவது ஒரு, வடிவில் நிருவாகப்பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். மதுரை செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : பன்னிரண்டு மாதங்கள்

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 15·56 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், (நிருவாகப் பொறியாளர் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 8—9—72 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு.—இந்த ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரருக்கு முன் தொகையாக ரூபாய் 35,000 (ரூபாய் முப்பத்தி ஐந்து ஆயிரம்) வரை 9 சதவீத வட்டியில் வழங்கப்படும். ஒப்பந்ததாரர் இத்தொகைக்கான தேசிய வங்கி ஒன்றின் உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 11)

வனத்துறை—சேரங்கோடு தேயிலைக் கோட்டம்—கூடலூர் பஜார் அஞ்சல், நீலகிரி மாவட்டம்

கீழ்க்காணும் வேலைகளை மேற்கொள்ளுவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேன்மை தங்கிய தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக சேரங்கோடு தேயிலைக் கோட்ட வன அலுவலர் அவர்களால் 20—10—1972ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வேலை விவரம் வருமாறு :—

வரிசை எண்.	வேலைகளின் விவரம்.	மதிப்பீட்டுத் தொகை.	வைப்புத் தொகை.
		ரூ.	ரூ.
1	சேரங்கோடு மெயின் ரோடில் 1½" அளவுள்ள கருங்கல் ஜல்லி போடுதல் 800 மீட்டர் தூரம் வரை.	6,900	200
2	வேலையாட்கள் மனை "எல்" முதல் "யூ" வரை தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஒரு சிறிய அணை கட்டல்.	7,000	175
3	கோட்ட வன அலுவலரின் குடியிருப்பு, அலுவலகம் மற்றும் சிப்பந்திகள் தங்கும் விடுதிகட்கு தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஒரு சிறிய அணை கட்டல்.	5,000	125
4	லாரிகள் நிறுத்த கேரேஜ் (garage) கட்டல்.	7,000	175

ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் மேற்குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31-3-1973க்குள் முடிக்கப்பட்வேணடும். ஒப்பந்த நமூனவும், மற்ற விவரங்களும் கோட்ட வன அலுவலகத்திலிருந்து நேரிலோ அல்லது மணியார்டர் மூலமாகவோ ரூ. 4·12 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

க. க. சோமசுந்தரம்,
கோட்ட வன அலுவலர்.

(த. 10)

பொதுப்பணித் துறை

சென்னை-செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர் : சென்னை கன்னிகாபுரத்தில் அரிசன நல உயர் நிலைப்பள்ளிக்கான கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 29—9—1972 மாலை 3-00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர் பொதுப்பணித்துறை சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அங்கே வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கீழ்க்கண்ட அலுவலகத்தில் 19—9—72 முதல் 28—9—72 முடிய எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

2. கட்டுத்தொகை : ரூ. 14,000.

3. வேலையை முடிப்பதற்கான காலம் : 9 மாதங்கள்.

4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 20 (விற்பனை வரி 3½ சதவீதம்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களில் விலை திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை "P.W.D. Remittances III other remittances " என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடக்கோட்டம் எண் II அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ, ரிசர்வ் பாங்கியிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி (3½ சதவீதம்). அதே சலானில் "XII Sales tax b-receipt under State Sales tax act-General Sales tax". என்ற தலைப்பில் கருவூலத்திலோ ரிசர்வ் வங்கியிலோ கட்ட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி பத்திரத்துக்கான மனுக்கள் மேற்கண்ட சலான்களில் அசலுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் பொதுப்பணித்துறை சென்னை-செங்கற்பட்டு வட்டம் அவர்கள் எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ (அல்லது) எதாவது ஒரு ஒப்பந்தப்புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அறிந்து கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம், சென்னை-5.

திரு பரிமளரெங்கநாதர் ஆலயம், திருஇந்தளூர், மாயூரம், தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திரு நந்தவனத்தின் காலி இடத்தில் திருமண மண்டபம் ஒன்று புதிதாக கட்டுவதற்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நிருவாக அதிகாரியால் 29—9—1972 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்த நமூனக்கள் திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஷை ஒப்பந்தப் புள்ளிகளை அன்று பகல் 12-30 மணிக்கு ஷை ஆலய அலுவலகத்தில் அறங்காவலர்கள், ஆய்வர், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அறநிலைய ஆட்சித்துறை அங்கீகாரத்திற்குட்பட்டது. மற்ற வேண்டும் விவரங்களை திருக்கோயில் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரம்.	மதிப்பீடு தொகை.	ஒப்பந்த நோட்டீஸ் கிரயம்.	ஒப்பந்தக் கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.	ரூ.
திருமண மண்டபம் புதிதாக கட்ட ..	1,95,000	5	5,000

எஸ். ராமசாமி,
நிர்வாக அதிகாரி.

(த. 30)

மர ஏல விற்பனை

வனத் துறை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் கூடலூர் தாலுக்கா, நெல்லியாளம் கிராமம், மேபீல்டு எஸ்டேட், நெலக்கோட்டா அஞ்சலில் நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ 5–9–1972 அன்று ஏலம் நடத்தப்படும். ஏலம் காலை 11 மணிக்கு ஆரம்பமாகும்.

மரங்களின் அளவு.

ஈட்டி	19.025 கனமீட்டர்.
வேங்கை, தடசு, நந்தி, மத்தி, வாகை ..	115.587 கனமீட்டர்.
	134.612

மற்றும் 10 டிராக்டர் பாரம் விறகு.

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலருக்கோ அல்லது கூடலூர் உதவி வனப் பாதுகாப்பாளருக்கோ எழுதி பெறவும்.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குக் கோட்டம்.

(த. 4.)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண் 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை–2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 14–9–1972 வியாழக்கிழமை பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3–30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—மேலூர் குடிநீர்த் திட்டம். இரண்டாம் நிலை—ஏழு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதிபெறு கற்காரை நீர்தாங்கி ஒன்றினைக் கட்டுதல்.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 3,660.

இத்தொகை ஏதாவது ஒரு தேசீய வங்கியின் பணஉத்திரவுச்சீட்டு அல்லது உத்திரவாதம் வடிவில் நிருவாகப்பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற்கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டுஅதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 10–35 (விற்பனை வரி உட்பட) திருப்பித்தரப்பட மாட்டாது.

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற்கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை–2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 12–9–1972 செவ்வாய்க்கிழமை மாலை 5–00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு.—இந்த ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரருக்கு முன்தொகையாக ரூ. 14,000 (ரூபாய் பதினான்காயிரம் மட்டும்) வரை 9 சதவீத வட்டியில் வழங்கப்படும். ஒப்பந்ததாரர் இத் தொகைக்கென தேசீய வங்கி ஒன்றின் உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை–2.

ஒப்பந்தப் புள்ளி

கரூர் நகராட்சி

	கட்ட வேண்டிய கட்டுத் தொகை. ரூ.
(1) 7·5 குதிரை சக்தியுள்ள எலக்டிரிக் மோட்டாரை பழுது பார்த்து ரிவைண்டிங் செய்தல்.	25·00
(2) சிமெண்ட் கலவை இயந்திரத்தைப் பழுது பார்த்தல். ..	25·00

மேலே கண்டுள்ள இரண்டு வேலைகளுக்கும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13–9–1972–ம் தேதி மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

(3) நகராட்சிக்குச் சொந்தமான பழைய இரும்பு மடக்கு சேர்கள் 150–ஐ ஆணையர் அவர்களால் 13–9–1972–ம் தேதி காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலம் விடப்படும். ஏலம் எடுப்பவர் ரூ. 25 முன் பணம் கட்டி ஏலம் கோர வேண்டும். மேலே கண்டுள்ளவைகளுக்கான முழு விவரங்கள் ஒப்பந்த கண்டிஷன் உட்பட பொறியருக்கு விண்ணப்பித்துத் தெரிந்துகொள்ளலாம்.

பி. குமாரசாமி,
ஆணையர்.

(த.3)

ஒப்பந்தப் புள்ளி

சிவகாசி நகராட்சி

(இ. 2. 4433/72).

கீழ்க்காணும் சாமான்கள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20–9–1972 மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். மேலுறையின் மீது “வார்ப்பு இரும்புக் குழாய்கள் வழங்க” எனக் குறிப்பிட வேண்டும். கிடைக்கப் பெறும் ஒப்பந்தப் புள்ளிகளை அன்று மாலை 4–30 மணிக்கு ஆணையர் அவர்களால் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளியுடன் ரூ. 200 கட்டுத் தொகை நகராட்சி கருவூலகத்தில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைத்து அனுப்பப்பட வேண்டும். அல்லது பாங்க் டிராப்டுகள் இணைத்து அனுப்பலாம். காசோலைகளுடன் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்வது நகர மன்றத்தின் முடிவுக்கு உட்பட்டதாகும். இதர விவரங்கள் வேண்டுவோர் நகராட்சிப் பொறியாளரிடம் அலுவலக நேரங்களில் அறியலாம்.

1.	12" C. I (S/S) PIPE 18' —O" Long	10 Nos.
2.	12" C. I. Collars ...	12 Nos.
3.	PIG LEAD	200 Kgms.
4.	LEAD WOOL (Best Quality)	100 Kgms.

எஸ். அரங்கநாதன், எம்.ஏ.,
ஆணையர்.

(த.2)

மனைகள் விற்பனை

வீட்டு வசதி வாரியம்—சேலம் வீட்டுவசதிப் பிரிவு

தருமபுரி மாவட்ட A. ஜெட்டிஹள்ளி கிராமத்தில் பட்டா எண். 217–ல் , தமிழ்நாடு வீட்டுவசதிப் பிரிவின் “புறநகரமைப்பு” திட்டத்தின் கீழ் தவணைமுறையிலோ அல்லது முழு விற்பனை முறையிலோ மனைகள் விற்கப்படும்.

ஒரு மனையின் அளவு சுமார் 5 செண்டுகள், விலை சுமார் 3,000 ரூபாய்.

தருமபுரி மாவட்டம் அல்லது தருமபுரி மாவட்டத்தின் வெளியில் சொந்தமாக வீடு இல்லாதவர்கள் மட்டும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விருப்பமுள்ளோர் கீழே கையொப்பம் இட்டுள்ளவரிடமிருந்து ரூ. 1-ஐ மணியார்டர் மூலமோ அல்லது நேரிடையாக அலுவலக நேரங்களில் இவ்வலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி விண்ணப்பங்கள் 15—9—1972-க்குள் இவ்வலுவலகத்தில் வந்து சேரவேண்டும்.

பி. செங்கோடன்,
நிருவாகப் பொறியாளர்,
நிருவாக அதிகாரி,
சேலம் வீட்டுவசதிப் பிரிவு,
சேலம்.

(த. 21)

பயிற்சி

மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3

கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் உபயோகிப்பது, சிறிய படகுகளைப் பராமரிப்பது, மரைன் என்ஜின்களுள்ள இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடித்தல்—அவைகளில் பத்து மாத காலத்திற்குப் பயிற்சிப் பெறுவதற்காக உள்ள பாரங்களில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் 35 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் 18 வயதிற்கு குறையாதவர்களாகவும், குறைந்தது 5 வருடம் கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும், எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஆனால் எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பது தகுதியற்றதாக கருதப்படமாட்டாது.

பயிற்சி காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூபாய் 50 (ஐம்பது மட்டும்) உபகாரச் சம்பளமும் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லும் தினங்களில் நாள் ஒன்றுக்கு 0-50 காசு (ஐம்பது காசு மட்டும்) படியும் அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த இலாக்காவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மட்டுமே கடலூரில் நடத்தப்படும் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

விண்ணப்பப் பாரங்கள், சேர்ப்பதற்கான தகவல்கள் குறிப்பீடுகளும் வேண்டியவர்கள் மீன்துறை உதவி இயக்குநர், மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3 அவர்களிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளவும். விண்ணப்பத்தாளின் தலைப்பில் “நவீன மீன்பிடி பயிற்சி” என்று எழுத வேண்டும். நேர்முகத் தேர்வின் தேதியும், இடமும் அவர்களுக்கு முன் கூட்டியே தெரிவிக்கப்படும்.

பயிற்சி நிலையத்தில் மீன் பிடிப்பதற்காக படகுகளில் போகும்போது ஏற்படக்கூடிய எதிர்பாராத விபத்திற்கு அரசு பொறுப்பல்ல.

விண்ணப்பங்கள் மீன்துறை உதவி இயக்குநர், மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3 என்ற விலாசத்திற்கு 8—9—1972 மாலை 4 மணிக்குள் தபாலின் மூலம் கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும்.

துணை இயக்குநர்,
மீன்துறை,
(மண்டலம்), சென்னை-6.

(த 44)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 20—9—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: கோவில்பட்டி குடிநீர்த்திட்டம்—நகர் அழுத்த நீரேற்று நிலையம்—நீரேற்றிகளும் அதன் சாதனங்களும் அளித்தல் நிர்மானித்தல்.

ஒப்பந்த வகை: மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை: ரூ. 2,950 (ரூபாய் இரண்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பது மட்டும்).

இத்தொகை, பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்திரவாதம் இவற்றில் ஏதாவதொரு வடிவில் மட்டும் கோவில்பட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு: ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 15·55. (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் கோவில்பட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்காக மேற்குறித்த விலையினைச் செலுத்தி 16—9—1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 42)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண் SE/ETS/6/72–73.

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் “தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்—உபயோகப்படுத்தப்பட்ட (கட்டுமான) தளவாடங்கள்” வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி குறிப்பு எண் SE/ETS/6/72–73 எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, எண்ணூர் அனல் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 29—9—1972 மாலை 3-30 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) விற்பனைக்குள்ள (கட்டுமான) தளவாடங்கள், ஏர் கம்பரசர், காங்கிரீட் மிக்சர், பம்பு செட்டுகள் மோட்டாருடன் இணைக்கப்பட்டது அல்லது இணைக்கப்படாதது, வேகன் டிரில், டீசல் எஞ்சின்கள், டிரெய்லர்கள், ஒர்க்ஷாப் எந்திரங்கள், பார்கோ டிப்பர் இன்னும் பிற.

(3) ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) எண்ணூர் அனல் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இந்தத்தொகை யாதொரு காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதிகமாக 1 ரூபாய் (மேற்கூறிய ஒப்பந்தப் பிரதிகள் தொகையைத் தவிர) செலுத்த வேண்டும்.

(4) இந்த வேலைக்கான, முன்பணம் ஒப்பந்தப்புள்ளிப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும்.

(5) மின்சார வாரியத்தைச் சேர்ந்த நமூனாக்கள் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகளும் இறுதித்தேதிக்கும் நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது தள்ளுபடி செய்வதற்கும் ஒப்பந்தங்களைப் பிரித்துக் கொடுக்கவும் எண்ணூர் அனல் மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

(6) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் தாமதமாக வந்து சேரும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

(த. 41)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—9—1972 மாலை 3 மணிவரை நகராட்சி பொதுப் பணிப் பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 12—9—1972-ம் தேதி மாலை 3·30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியாளர், அவர்களால் திறக்கப்படும். இவ் வேலைக்கான ஷெட்யூல் பாரங்கள் நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை, ரூ.10·35 நகராட்சிக்கருவூலத்தில் செலுத்தி, பொதுப்பணி பொறியாளர், அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	பட்டியல் தொகை. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	முடிக்க வேண்டிய காலம்.
(1) கோவை ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் ஆபீசும் கட்டுதல்.	55,000	1,130	4 மாதம்.

ஆணையர்.

(த-38)

நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

சாத்தூர் கோட்டம்.

கோட்டப் பொறியாளர் (நெகிப) சாத்தூர் அவர்களால் கீழே கொடுக்கப்பட்டுள்ள மைல்டு எஃகு கம்பிகளுக்கு (பரிசோதிக்கப்பட்ட) அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 13—9—1972 தேதியன்று பிற்பகல் 3-30 மணிவரையிலும் கோரப்படுகின்றன.

பொருட்களின் விவரம்.	தேவையான அளவு (சுமாராக) மெட்ரிக் டன்.
6 மில்லி மீட்டர்	0·70
10 மில்லி மீட்டர்	5·80
12 மில்லி மீட்டர்	1·73
16 மில்லி மீட்டர்	2·30
20 மில்லி மீட்டர்	1·32
25 மில்லி மீட்டர்	7·07

குறிப்பு.—

(1) ஒப்பந்த அறிக்கை, நிபந்தனை, ஒப்பந்த விவரம் முதலியவைகளை கோட்டப் பொறியாளர் (நெகிப) அலுவலகத்தில், அலுவலக நாட்களில், ரூ. 5·15-ஐ தொகையாக செலுத்தி (விற்பனைவரி உட்பட) 5—9—1972 மாலை 5·00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஒப்பந்தங்கள் குறிப்பிடப்பட்ட நமூனாவில்தான் இருத்தல் வேண்டும். மற்ற நமூனாக்களில் கொடுக்கப்படும் ஒப்பந்தங்கள் முழுமையாக நிராகரிக்கப்படும்.

(3) பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட கம்பிகளுக்குத்தான் விலை கேட்கப்படல் வேண்டும்.

கோட்டப் பொறியாளர் (நெகிப),
சாத்தூர் கோட்டம்.

(த. 12)

பல்லவா போக்குவரத்துக் கழகம் அண்ணாசாலை சென்னை-2

வரும் இரண்டு ஆண்டுகளுக்கு பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் அசோக் நகர் பெருந்து நிலையத்திலுள்ள சிற்றுண்டிச் சாலை ஒன்று குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட கவர்கள் 13—9—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அந்த சிற்றுண்டி சாலையின் அளவு 30 × 20 அடி. முத்திரையிட்ட கவர்கள் அதே நாள் 13—9—1972 மாலை 3-15 மணிக்கு செயலாளரால் திறக்கப்படும். ஒப்பதத விதிமுறைகள் சென்னை பல்லவா போக்குவரத்துக் கழகம், செயலாளர் அவர்களிடம் ரூ. 1·04 கட்டி, ஆபீஸ் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 19)

கரூர் நகராட்சி

நகராட்சியால் சப்ளை செய்யப்படும் " பர்கோ " லாரி சேசிசில் கேபின் கட்டவும், இலாக்கா மூலம் சப்ளை செய்யப்படும் 1,000 காலன் கொள்ளளவுள்ள இரும்பு டாங்கை பைப்கனெக்ஷன் போட்டு பிட்டிங் செய்து கொடுக்கவும் 14—9—1972 தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். டேங் பிட்டிங் செய்வதற்கான முழு விவரமும், கேபின் கட்டுவதற்கான முழு விவரமும் ஒப்பந்த கண்டிஷனுக்கும் பொறியருக்கு விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தம் கொடுப்பவர்கள் கட்டுத் தொகை ரூ. 250 செலுத்தி ஒப்பந்தம் கொடுக்க வேண்டும்.

பி. குமாரசாமி,
ஆணையர்.

(த. 33).

எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண். AEP 109.

1. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் உறையில் Ennore Thermal Scheme, Supply Enamel Grey Paint AEP 109 எனவும் மற்றும் ஒப்பந்ததாரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க் கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 2-30 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) தேவையான பொருட்கள், குறிப்பு எண், முன்பணம், முடிவு தேதி முதலியன கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Description.	Spem No.	EMD Payable.	Cost of Tender Set.	Due date.
Enamel Grey Paint to IS 2932/64.	AEP 109.	Rs. 500.	Rs. 5.	15-9-1972

(3) ஒப்பந்தப் பத்திரங்கள் கீழ்க்கையொப்பமிட்டவரிடமிருந்து 20-8-1972 தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(4) துறையினரைச் சார்ந்த நமூனாக்களில்லாத ஒப்பந்தங்களும், முடிவு தேதியிலும், நேரத்துக்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

(5) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின்திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண் 59556 (5 Lines Ext. 18)
தந்தி : Entermal
(த. 34)

கோதையாறு நீர் மின்திட்டம்

1. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அதன் முக உறையின் மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர்மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்பட்டு வருவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3·00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் மாலை 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

எண்—1.
குறிப்பிடுகை எண்—1/72.
வேலையின் பெயர்—20 வகையான புத்தகங்களையும் பாரங்களையும் பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு.
ஒப்பந்த செட்டின் விலை (விற்பனை வரி உள்பட)—ரூபாய் 3·00
கட்டுத் தொகை—ரூபாய் 200.
ஒப்பந்தப்புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசி தேதி—15—9—1972.

2. ஒப்பந்த செட்டுகளின் நகல்களை (மாற்றத்தக்கவை அல்ல) குறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

3. இவ்வலுவலகத்தின் மறுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தப்புள்ளிகளையும் கட்டுத் தொகை (Earnest Money Deposit) ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை (Demand Draft) முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தம் அனுப்பக் கூடாது.

4. தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட நிபந்தனைகள் படி அல்லாத முழுமை பெறாத ஒப்பந்தப்புள்ளிகள் கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் மேற்படி கட்டுத் தொகை கட்டாததின் காரணத்துடனும் வேறு வேலைகளுடன் கட்டுத்தொகை கட்டியதை இணைத்துக் கொள்ள கூறப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலையை காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப்பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு மின்மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7.

(த-39)

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் இராமநாதபுரம் மாவட்டம், மதுரை-1

ந. க. 23819/72 வ. 8. நாள் 10—8—1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப்பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்றோர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 8–9–1972 மாலை 4 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்.	வேலைகளின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் படிவம்.	ஒப்பந்தப்புள்ளியின் விலை.
	பெரியாறு மண் அணை			
		ரூ.		
1	மண் அணையின் பின்புறத்தில் வடிகட்டும் அமைப்பு வேலை, கசிவு நீர் தாங்கிச் செல்லும் வாய்க்கால் வேலை ஆகியவைகளைச் செய்தல் எல். எஸ். 0 மீட்டர் முதல் 110-வது மீட்டர் முடிய எல்.எஸ். 230-வது மீட்டர் முதல் 310-வது மீட்டர் முடிய	2,130	கே. 2	ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70
2	மண் அணையின் முன்புறத்தில் அலைகல் பாவுதலும், சரள் மண் அடுக்குதலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 0 மீட்டர் முதல் 300-வது மீட்டர் முடிய	4,250	கே. 2	ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70
3	மண் அணையின் முன்புறத்தில் அலைகல் பாவுதலும், சரள் மண் அடுக்குதலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 300-வது மீட்டர் முதல் 555-வது மீட்டர் முடிய	6,000	கே. 2	ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70
	கோவிலாறு மண் அணை			
1	மண் அணையின் பின்புறத்தில் வடிகட்டும் அமைப்பு வேலை, கசிவு நீர் தாங்கிச் செல்லும் வாய்க்கால் வேலை ஆகிய பணிகளைச் செய்தல் எல். எஸ். 60-வது மீட்டர் முதல் 150-வது மீட்டர் முடிய எல்.எஸ். 240-வது மீட்டர் முதல் 660-வது மீட்டர் முடிய	3,500	கே. 2	ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70
2	மண் அணையின் முன் புறத்தில் அலைகல் பாவுதலும் சரள் மண் அடுக்குதலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 0 மீட்டர் முதல் 300-வது மீட்டர் முடிய	4,750	கே. 2	ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70
5	மண் அணையின் முன்புறத்தில் அலைகல் பாவுதலும் சரள் மண் அடுக்குதலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 300-வது மீட்டர் முதல் 660-வது மீட்டர் முடிய	3,430	கே. 2	ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 8–9–1972 அன்று மாலை 4-30 மணிக்கு வந்த ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மேற்படியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தத்திற்கான தொகை ரூ.20·70 அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை-1 என்ற விலாசத்தில் மனு செய்தால் மேற்படி வேலைக்கான ஒப்பந்தப் பட்டியல் விதிகள் வரைபடங்கள் முதலியவைகள் ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 20-ஐ பி.டபிள்யூ.டி.111 ஓ.ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை பிளவுக்கல் கோட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கான ரூ. 0·70 காசை " 12 விற்பனை வரி " என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித் தனியாக செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும்பொழுது உறையில் மேல் வேலையின் பெயரும் கருவூலத்தில் ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில்தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொ.ப.து.) இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை அலுவலகத்தில் 30–8–1972 முதல் 6–9–1972 வரை விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 6–9–1972 மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். இதற்குப்பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கு அல்லது இழப்பிற்கு இத்துறையினர் பொறுப்பாகமாட்டார்கள். இது போன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டுகள் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்கள் அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்லது தற்போதைய மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமான வரி விற்பனை வரி முதலியவைகளை செலுத்தியதற்கு அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதாரர்கள் பங்கு எடுத்துக்கொண்டால் டிப்டி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து சொத்து உரிமை சர்டிபிகேட்டும் இத்திட்டத்தில் பயன் பெறும் கண்மாயில் ஆயக்கட்டுதார் என்பதற்கும் அத்தாட்சி வாங்கி ஒப்பந்தத்துடன இணைக்க வேண்டும்.

கட்டுத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டு கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப்பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

கே. எஸ். இராமசாமி,
மேற்பார்வைப்பொறியாளர், பொ.ப.து.,
இராமநாதபுரம் வட்டம், மதுரை.

(த. 52)

வேலை வாய்ப்பு

சென்னை வட்டத்தில் தமிழ்நாடு கல்வி சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியர்கள், மற்றும் சிறப்பாசிரியர்கள் அலுவலர் இடங்களுக்கு நியமனங்கள்

சென்னை வட்டத்தில் உள்ள "ஏ" பிரிவு அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில், சென்னை வட்ட மகளிர் பள்ளி ஆய்வாளரின் நியமன வரம்பிற்குட்பட்ட கீழ்க்கண்ட அலுவல் இடங்களுக்கு ஆசிரியர்களை நேரிடையாகத் தேர்வு செய்து நியமனம் செய்ய வேண்டித் தகுதியுள்ள பெண் வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எதிர்பார்க்கும் காலியிடங்களின் எண்ணிக்கை.

1.	இடைநிலை ஆசிரியர்கள் தமிழில் போதனை செய்யக் கூடியவர்கள்	2
2.	இரண்டாம் நிலை தமிழ்மொழிப் புலவர்	3
3.	இரண்டாம்நிலை உருது மொழிப் புலவர்	2
4.	இசை ஆசிரியை	1
5.	இரண்டாம்நிலை உடற்பயிற்சி ஆசிரியை .. — ..	1

குறிப்பு.—பெண் வேட்பாளர்கள் மட்டுமே மேற்கண்ட அலுவல் இடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

2. மேற்கண்ட அலுவல் இடங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தகுதிகளும், ஊதிய அளவு வீதமும்.

(அ) இடைநிலை ஆசிரியை (தமிழ்)

தகுதி :—இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது முதுநிலை ஆசிரியர் ஆதாரப் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேணடும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

(ஆ) இரண்டாம் நிலை தமிழ்மொழிப் புலவர்

தகுதி :—சென்னை, மதுரை அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியில் கீழ்த்திசை பயிற்சி நூல் பட்டம் பெற்றவராகவும், இடைநிலை அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவராகவோ அல்லது பண்டிதப் பயிற்சி முறையினை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழ் பெற்றவராகவோ, அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கும் கற்பித்தலுக்கான டிப்ளமா பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

(இ) இரண்டாம் நிலை உருது மொழிப் புலவர்

தகுதி :—அடிப—இ—பஸில் என்ற உருது மொழி கீழ்த்திசை பயிற்சிப் பட்டம் பெற்றவராகவும், இடைநிலை அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவராகவோ அல்லது பண்டிதப் பயிற்சி முறையினை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழ் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

(ஈ) இசை ஆசிரியை

தகுதிகள் :—உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதியவராகவும், மத்திய கர்நாடக இசைக் கல்லூரியில் வழங்கப்பட்ட சங்கீத வித்வான் பட்டமோ அல்லது இந்திய இசையில் டிப்ளமா பட்டமோ அல்லது சென்னை பல்கலைக் கழகம் வழங்கும் சங்கீத சிரோன்மணி பட்டமோ அல்லது அண்ணாமலை பல்கலைக் கழகம் வழங்கும் சங்கீத பூஷண பட்டமோ அல்லது இந்திய இசையில் ஹையர் கிரேடு சான்றிதழோ பெற்றவராகவும் உயர்நிலைத்தர கைத்தொழிலாசிரியர் சான்று ஒன்றோ பெற்றவராக இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

(உ) இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியை

தகுதிகள் :—மாநில அரசினரால் வழங்கப்பட்ட கீழ்நிலை (லோயர் கிரேடு) உடற் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்

3. வயது :—மேற்குறித்த அலுவல் இடங்களுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் 1—7—1972 ஆம் நாளன்று, 30 வயதுக்கும் மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

4. தமிழ்மொழியில் போதிய அறிவு பெற்றவராக இருக்கவேண்டும்.

விளக்கம் :—இவ்விதியின் கருத்தில், தமிழில் போதுமான அறிவு வாய்ந்த (i) உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழ் அறிவு பெற்றிருப்பவர் அல்லது (ii) ஒருவரது தாய்மொழி தமிழாயிருப்பினும் அவ்வாறு இல்லையெனினும், தமிழில் பேச வாசிக்க எழுதத் திறமை உள்ளவர் அல்லது (iii) "தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில்" தேறியிருப்பவர் ஆவார்.

குறிப்பு :—தமிழில் போதுமான அறிவு பெறாதவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால், தகுதிகாண் பருவத்திற்குள், அல்லது நியமன தேதியிலிருந்து, நான்காண்டுகளுக்குள்ளாக, தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி அடைய வேண்டும். இல்லையேல் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர்.

விண்ணப்பங்கள் இந்த அறிவிப்பின் அட்டவணையில்கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் எண். 481, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-84ல் உள்ள மகளிர் பள்ளி ஆய்வாளர் அவர்களுக்கு 30—9—1972ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ சேரும்படியாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொது, தொழில் மற்றும் தொழில் நுணுக்கச் சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்கள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படவேண்டும்.

பொறுப்பு வாய்ந்த இரண்டு நபர்களிடமிருந்து 1—1—1972-க்குப் பின்னர் பெற்ற நன்னடத்தைச் சான்றிதழ்களை அசலாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

அரசு, உள்ளாட்சி மன்றம், மற்றும் தனியார் பள்ளிகளில் தற்காலிக நியமனத்தின் கீழ் ஏற்கெனவே நியமனம் ஆகி, பணியில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை பள்ளித் தலைமை ஆசிரியைகள் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளரும், அரசாங்கக் கருவூலத்தில் ரூபாய் 10-ஐ (பத்து ரூபாய்) "22 கல்வி—இ—பொது—பலவகை—மற்ற இனங்கள்— என்ற தலைப்பில் செலுத்தி, அசல் செல்லுச் சீட்டினை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செலுத்தப்பட்ட தொகையைத் திரும்ப அளிக்க இயலாது.

வேட்பாள்ர்களுடன் நேர் காணல் நடத்தியமுடிவுகளின் அடிப்படையில் சென்னை மகளிர் பள்ளி ஆய்வாளரால் நியமனங்களுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். நேர் காணலுக்கு அழைக்கப்படும்போது வேட்பாளர்கள் தங்கள் சொந்தச் செலவில் வரத் தயாராக இருக்க வேண்டும்.

தேர்வும் அதற்குப்பின்னர் நியமனமும் அரசுப் பணிக்கு உட்படுத்திக் கொள்ள இறுதியானது என உரிமை கொள்ள முடியாது.

அலுவலக உறுப்பினர்கள் மூலமாகவோ, நேரடியாகவோ, அல்லது நண்பர்கள், உறவினர்கள் ஆதரவாளர்கள், அலுவலர்கள் போன்றவர்கள் மூலமாகவோ, ஆதரவு தேடும், அல்லது மகளிர் பள்ளி ஆய்வாளரிடம் செல்வாக்கு கொண்டுவர முயற்சி செய்யும் வேட்பாளர்கள் எந்த காரணத்தையும் குறிப்பிடாமலே எப்படியிருந்தாலும் தேர்வு செய்வதிலிருந்து, முழுவதுமாக தகுதியற்றவர்களாக ஆக்கப்படுவார்கள்.

போதிய தகுதிகள் இல்லாதவர்களும், அறிவிப்பில் கண்ட நிபந்தனைகளுக்குட்படாத வேட்பாளர்களும், விண்ணப்பிக்கவேண்டியதில்லை.

உரிய இணைப்புகளுடன் கூடிய விண்ணப்பத்தை அனுப்பும் போது உறையின் மீது "................................" ஆசிரியர் அலுவலர் பணிக்கு விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

தமிழ்நாடு கல்விச் சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியைகள் மற்றும் சிறப்பு ஆசிரியைகள் அலுவல்களுக்கு நேரடி நியமனம் கோரும் விண்ணப்ப நமூனா.

1. விண்ணப்பிக்கும் அலுவல் இடத்தின் பெயர்

2. விண்ணப்பதாரரின் பெயர்.

3. (அ) தகப்பனார் பெயரும், அலுவல் அல்லது தொழில்.

(ஆ) மணமானவரானால் கணவர் பெயரும், அவருடைய அலுவல் தொழில்.

4. விண்ணப்பதாரர் கல்வி பயின்ற நிலையங்கள்.

கல்வி நிலையத்தின் பெயர் .. ..

வகுப்பு அல்லது படிவம் .. ..

படித்த வருடம் — — —

தாய் மொழி .. — — —

6. (அ) தேசிய இனம் .. .. ..

(ஆ) மதம், ஜாதி மற்றும் இனம் ..

(இ) விண்ணப்பதாரர் அட்டவணையில் கண்ட இனங்கள்/அட்டவணையில் கண்ட பழங்குடியினர்/பிற்பட்ட வகுப்பினர் அல்லது கிருஸ்துவ மதத்திற்கு மாறிய இனத்தைச் சேர்ந்தவரா? (ஆம் எனில் குறிப்பிடுக).

7. பிறந்த தேதி .. ..

8. (அ) மிக அதிகமாகப் பெற்ற பொதுக் கல்வித் தகுதி.

(சான்றிதழ் எண். வருடம் எஸ்.எஸ்.எல்.சி. யில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற மதிப் பெண்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) தொழில் மற்றும் தொழில் நுணுக்கத் தகுதிகள் சான்றிதழ் எண்., வருடம், தேறிய வகுப்பு அல்லது தரம் ஆகியவைகளைக் குறிப்பிடப்பட வேண்டும்.

9. எஸ். எஸ். எல். சி. அல்லது இதர பள்ளியில் படித்த பாட மொழி.

10. தெரிந்த இதர மொழிகள் (பேசவும், எழுதவும், படிக்கவும் தெரியுமா என்பதைக் குறிப்பிடுக).

11. முன் அனுபவம் இருப்பின் அதுபற்றிய விவரம்.

பள்ளியின் பெயர் .. .. ..

வகித்த பதவி .. ..

ஊதியம் .. ..

ஊழிய காலம்.

தேதி முதல் தேதி வரை .. ..

நீங்கியதற்கான காரணம் .. ..

12. விளையாட்டு, என். சி. சி., ஏ. சி. சி. முதலியவைகளில் வேட்பாளர்களின் பங்கு பணிகள் பற்றிய விவரம் ..

13. சரியான முழு அஞ்சல் முகவரி ..

14. ரூபாய் 10 செலுத்திய கருவூலத்தின் பெயரும் செல்லுச் சீட்டின் எண்ணும் தேதியும் .. ..

15. நன்னடத்தைச் சான்றிதழ் அளித்துள்ள நபர்களின் பெயர்கள் .. ..

சான்றிதழ் அளித்த நபரின் பெயர் —

முழு விலாசம் .. ..

சான்றிதழின் தேதி .. .. ..

உறுதி மொழி

திருமதி/செல்வி.................................. ஆகிய நான், இதற்கு முன்னர் எப்போதாவது, அரசு ஊழியத்திற்குத் தகுதி இல்லையென மருத்துவ அதிகாரிக் குழுவினால் ஆக்கப்படவில்லை எனவும், இந்த விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரை உண்மையானவை என்றும் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

கௌசல்யா கோவிந்தராஜன்,
மகளிர் பள்ளி ஆய்வாளர்,
சென்னை வட்டம், சென்னை.

(த.54)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—சேலம் மாவட்டம், ராசிபுரம், திருவள்ளூர் அரசு கலைக் கல்லூரிக்கு விடுதிக் கட்டடம் (Hostel Building) கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சேலம்—தருமபுரி வட்டம், சேலம்-4 அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27—9—1972 மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 10,000

(சலான் வடிவிலோ அல்லது தேசிய சேமிப்பு சர்டிபிகேட் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டெபாசிட் அட் கால் ரிசிப்ட்ஸ் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்டுகள் அல்லது மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் அல்லது சென்னை மாநில மின்வாரியப் பத்திரங்கள் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும்).

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 25·00.

(கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "P.W. Remittances III Other Remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கட்டடக் கோட்டம், சேலம்-4 அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0.88.

(XII Sales-tax (d) Miscellaneous) என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—12 மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, சேலம்—தருமபுரி வட்டம், சேலம்-4-ல் ஒப்பந்தப்பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் நாள்—11—9—1972 முதல் 25—9—1972 வரை.

மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் மற்றும் மாநிலப் மின்வாரியப் பத்திரங்கள் உண்மை மதிப்பில் 25 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

டெபாசிட் கால் ரிசிப்டுகள் மற்றும் பிக்ஸட் டெபாசிட் ரிசிப்ட்கள் கட்டுத் தொகையாக ஒப்பந்தப்புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
சேலம், தருமபுரிவட்டம்,
சேலம்-4.

(த.13)

திருச்செங்கோடு நகராட்சி, சேலம் மாவட்டம்

கீழ்க்கண்ட பொருட்கள் விநியோகம் செய்ய ரூ, 200 காப்புத் தொகை செலுத்திய மூடிய முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க் கையொப்பமிட்டவரால் 19-9-1972-ம் நாள் மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மற்ற நிபந்தனைகள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(1) மூன்று பெரிய இரும்பு பீரோக்கள்.
(2) 19 எஸ்டைப் காட்ரேஜ் நாற்காலிகள்.
(3) ஒரு ஆர்னமெண்டல் நாற்காலி (மன்றத் தலைவருக்கு).

ப. பத்மநாபன்,
ஆணையர்.
திருச்செங்கோடு.

(த. 64)

தொழில் நுட்பக் கல்வித் துறை

சென்னை—25

தோல் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு 1972-73ஆம் ஆண்டிற்கு, ரா ஹைட்ஸ் மற்றும் ஸ்கின்ஸ்வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 11—9—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்ந்தப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்கள் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை—25 அவர்களிடம், இரண்டு தனித் தனிச் சலான்களில் ஒன்றில் ரூபாய் 5 ஒப்பந்தப் பத்திரக் கட்டணமாகத் தமிழ்நாடு அரசின் கணக்கில் " XXII Education—E. Technical Education—a fee and other charge" என்ற தலைப்பிலும் மற்றொன்றில் ரூபாய் 0.15 காசு விற்பனை வரியாக " XII other taxes and duties" தலைப்பிலும் செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை எந்த சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஒப்பந்தப் பத்திரங்களின் விலையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி.

(த.16)

ஒப்பந்தப் புள்ளி

உணவுப் பொருள் வழங்குதுறை
காலி சாக்குபைகள் விற்பனை

வேலூர் தாலுக்கா அரசினர் கிடங்கிலும், மற்றும் இதர தாலுக்காக்களில் தாலுக்கா உணவு விநியோக அதிகாரிகளிடம் வைக்கப்பட்டுள்ள உபயோகப்படுத்தக்கூடிய நல்ல நிலையில் உள்ள காலி சாக்குகள், ஒட்டுப் போட்ட உபயோகப்படக்கூடிய சாக்குகள், பழுதடைந்த சாக்குகளை வடார்க்காடு மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களிடமிருந்து ஒப்பந்தம் மூலமாக விலைக்கு வாங்குவதற்காக அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளடங்கிய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் (சிவில் சப்ளை பிரிவு) பெற்றுக்கொள்ள வேண்டியது.

2. ஒப்பந்தப் படிவங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கிடைக்கும். ஒப்பந்தப் படிவத்தின் விலை ரூ. 5-ம் 3½ சதவிகிதம் விற்பனை வரியும் ஆக ரூ. 5·18 கருவூலத்தில் " P.D. Account of the Commissioner of civil supplies Madras " என்ற தலைப்பில் செலுத்தி செலானை இவ்வலுவலகத்தில் கொடுத்து மேற்படி படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டியது. ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடன் கட்டுத் தொகைக்காக ரூ. 2,000-த்துக்கு டிமாண்ட் டிராப்ட் வாங்கி அனுப்ப வேண்டியது.

3. அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 4—9—1972 பிற்பகல் 1 மணி வரை முதுநிலை கணக்கு அலுவலர், அல்லது மாவட்ட விநியோக அதிகாரி அல்லது மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று அதாவது 4–9–1972 மாலை 3 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் ஆஜராகி இருப்பின் அவர்கள் முன்னிலையில் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியால் பிரிக்கப்படும்.

4. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் மாநில உணவு விநியோக கமிஷனர் (commissioner of civil supplies Madras.) ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்படும்

கு. சண்முகம்,
மாவட்ட வருவாய் அதிகாரி.

(த. 46)

ஒப்பந்தப் புள்ளி

பாளையங்கோட்டை நகராட்சி

பாளையங்கோட்டை நகர்மன்றத்திற்குத் தேவையான 50 புதிய கஃகடப்பாக்கள் வழங்க நகர்மன்ற ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15–9–1972-ம் தேதி மாலை 4 மணி வரை டிபாசிட் ரூ. 150 உடன் வரவழைக்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 15–9–1972 மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். கஃகடப்பாக்கள் அளவு விவரம் முதலியவைகளை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 47)

ஏல அறிவிப்பு

மாயூரம் நகராட்சி

1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் தேதி காலை 10 மணிக்கும் அதன் பிறகு ஒத்திவைக்கப்படும் தேதிகளிலும் மாயூரம் நகராட்சி அலுவலகத்தில் துலாஉற்சவ காலத்தில் (12–10–1972 முதல் 20–11–1972 முடிய) சுங்கச் சாவடிகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமையை ஆணையர் அவர்களால் பொது ஏலத்தில் விடப்படும்.

ஏல நிபந்தனைகளையும் இதர விவரங்களையும் அலுவலக நேரங்களில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

வி. டி. உமாபதி,
ஆணையர்.

(த. 51)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3–30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—மேற்கண்ட குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—நான்கு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதி பெறு [illegible] நீர்த்தாங்கி ஒன்றினைக் கட்டுதல்.

ஒப்பந்த வகை :—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை :—ரூ. 2,140 (ரூபாய் இரண்டாயிரத்து நூற்று நாற்பது மட்டும்.)

இத்தொகை, ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு அல்லது உத்தரவாதம் வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அருப்புக்கோட்டை செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு :—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை :—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட) ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அருப்புக்கோட்டை செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து 18–8–1 நகராட்சிப் பயணிகள் விடுதி சாலை, அருப்புக்கோட்டை என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் தேதி சனிக்கிழமை மாலை 5–00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
செயல் வட்டம்,
குடிநீர் வடிகால்
வாரியம், மதுரை-2.

(த. 43)

ஏல விற்பனை

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊட்ட உணவுத் திட்ட தோட்டங்களிலிருந்து எடுத்து வரப்பட்ட 8 (எட்டு) எண்ணை நீர் இறைவை இயந்திரங்களை ஊராட்சி ஒன்றிய ஆணையராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 20–9–1972-ம் நாள் புதன்கிழமை மாலை 3–00 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும் ஏலம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டது.

ஏல நிபந்தனைகள்.

(1) ஏலம் எடுக்க விரும்புபவர்கள் ஒவ்வொரு இயந்திரத்திற்கும் பிணைப்புத் தொகை முன் பணமாக ரூ. 500-ஐ செலுத்த வேண்டும்.

(2) ஏலம் முடிந்தவுடன் ஏலம் கோரிய முழுத் தொகையையும் செலுத்திவிடவேண்டும்.

(3) ஷை ஏலம் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அனுமதிபெற்ற பின்புதான் ஊர்ஜிதம் செய்யப்படும்.

(4) ஏலத்தை நிறுத்தவோ மறு ஏலம் போடவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

(5) ஷை ஆயில் இன்ஜின்களைப் பார்க்க விரும்புபவர்கள் தே. கல்லுப்பட்டி, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவல் நேரங்களில் பார்வையிடலாம்.

தா. பாலசுப்ரமணியம், பி. ஏ.,
ஆணையர்.

(த. 66)

ஒப்பந்தப் புள்ளி

வேலூர் நகராட்சி

1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதி மாலை 4 மணி வரை 60 வட்டவடிவமுள்ள சிமெண்ட் கான்கிரீட் குப்பைத் தொட்டிகள் சப்ளை செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும்.

கட்டுத் தொகை ரூ. 150 நகராட்சி கருவூலத்தில் கட்டி செலானை ஒப்பந்தத்துடன் அனுப்பவேண்டும். செக்கும், டிராப்டும் கூடஅனுப்பலாம்.

ஒப்பந்த நிபந்தனைகள், வரை படம், அளவுகள் முதலியன ரூ. 2 கட்டி பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஜோசப்,
ஆணையர்.

(த. 65)

வேலை வாய்ப்பு

உடுமலைப்பேட்டை நகராட்சி

கீழ்க்கண்ட பதவிக்காக 15–9–1972 மாலை 5–00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

பொறியர் பிரிவில் டிராப்ட்ஸ்மேன் கிரேடு—2.

விருத்தாசலம் அரசினர் கலேத்திறன் மட்பாண்ட தொழில் நிலேயத்தில் கலேத்திறன் அமைந்த பீங்கான் பொருள்கள் செய்வதற்கான ஓராண்டுப் பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு பிரதி மாதம் ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உதவிப் பணம் பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்படும். பெண்களும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் உருப்படிவம், வண்ணம் தீட்டுதல் அல்லது வேறு விதமான கலேத்திறன்களில் தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும். எட்டாம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். 18 முதல் 25 வயது உடையவர்களாக இருக்கவேண்டும்.

வேண்டப்படும் போது விண்ணப்பதாரர்கள் விருத்தாசலத்திற்கு தகுதி தேர்வுக்காக அவருடைய சொந்தச் செலவில் வர வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தங்களுடைய வயது, படிப்பு முதலிய தகுதிகளே 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதிக்குள்ளாக, முதல்வர், அரசினர் பீங்கான் பயிற்சி நிலேயம், விருத்தாசலம், தென் ஆர்க்காடு மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் கைப்பட எழுதி இருக்க வேண்டும். இப்பயிற்சி அரசினர் மட்பாண்ட நிலேயங்களில் வேலே பெற உத்தரவாதம் அளிக்காது.

இயக்குநர்,
தொழில் வணிகத்துறை, சென்னே–5.

(த. 55)

வேலே வாய்ப்பு

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், தமிழ்நாடு சென்னே-25.

ஹைட்ராலிக்ஸ் மற்றும் நீர் வழங்கு துறை, பொறியியல் கல்லூரி, கிண்டி, சென்னே-25 "DIGITAL SIMULATION OF DRAINAGE" BASING சி.எஸ்.ஐ. ஆர். திட்டத்தில் ஒரு சீனியர் ரிசர்ச் பெல்லோ பதவியில் வேலே செய்வதற்கு மனுக்கள வரவேற்கப்படுகின்றன.

காலம் :—நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து 2 ஆண்டுக்காலத்திற்கு இப்பதவி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

சம்பளம் :—ரூ. 400 மாதம் ஒன்றுக்கு (திட்டவட்டமானது).

தகுதி அனுபவம் :—மனுதாரர் ஹைட்ராலிக் பொறியல் அல்லது சாயில் மெக்கானிக்ஸ் மற்றும் பவுண்டேசனில் எம்.எஸ்.சி. அல்லது எலெக்ட்ரிகல் அல்லது எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிக்கேஷன் பொறியியலில் எம்.எஸ்சி. பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது :—1—4—1972-ல் மனுதாரர் 35 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கலாகாது.

மனுக்கள் வயது, தகுதி, அனுபவம், வெளியீட்டுப் பட்டியல் இருந்தால் வெள்ளேத் தாளில் குறிப்பிட்டு உண்மையான விவரங்களுடன் பட்ட மேற்படிப்பு டீன், பொறியியல் கல்லூரி, சென்னே–25 அவர்களுக்கு 9—9—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.

(த. 57)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்

122, அண்ணுசாலே, சென்னே-6

(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள)

வகை எண் 1 :—(SIDCO) சிட்கோ, தொழிற் பேட்டை அம்பத்தூரில் தொழிற் கூடங்கள், 5 எண்ணிக்கை 90' 40' 2 எண்ணிக்கை 80' 40' 1. எண்ணிக்கை 65' 30' 3 எண்ணிக்கை 60' 40' மற்றும் 1 எண்ணிக்கை 36' 30' என்ற விஸ்தீரண அளவுகளில் கட்டுதல்

வகை எண் 2 :—சிட்கோ தொழிற் பேட்டை, அம்பத்தூரில் தொழிற் கூடங்கள் 5 எண்ணிக்கை 90' 40' 3 எண்ணிக்கை 80' 40' 2 எண்ணிக்கை 60' 40' 1 எண்ணிக்கை 50' 30' மற்றும் 2 எண்ணிக்கை 36' 30' என்ற விஸ்தீரண அளவுகளில் கட்டுதல்.

மேற்கண்ட வேலேகளுக்காகத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்டின் பொது மேலளார் அவர்களால், மாநிலம் மற்றும் மத்திய அரசுகளில் பதிவுசெய்து கொண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—9—1972 மாலே 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள்அதே நாள் மாலே 3–30 மணிக்குப் பொது மேலாளர், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட், கணணம்மை கட்டடம் 7–வது அடுக்கு, 122 அண்ணுசாலே, சென்னே-6 அவர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலேயில் திறக்கப்படும்.

	வகை எண் 1.	வகை. எண் 2.
அ. ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.
ஆ. கட்டுத்தொகை	ரூ. 15,000	ரூ. 15,700.
இ. ஒப்பந்தப் பத்திரங்கள் விலே வரைப்படங்களுடன்	ரூ. 20 + வி. வரி ரூ. 0.75	ரூ. 20 + வி. வரி 0·75.
ஈ. வேலே முடிக்க வேண்டிய காலம்.	6 மாதங்கள்.	6 மாதங்கள்.
உ. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் நாள்.	28—8—1972	28—8—1972
ஊ. பதிவு செய்யப்பட்ட உரிய பிரிவு ஒப்பந்ததாரர்கள்.	இரண்டாவது வகுப்பு மற்றும் மேலும்.	இரண்டாவது வகுப்பு மற்றும் மேலும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலே விற்பனே வரி உட்பட ரூ. 20·75 பணமாகச் செலுத்தப்பட வேண்டும் (திருப்பித்தரப்பட மாட்டாது).

கட்டுத் தொகை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகம் லிமிடெட் பெறும்வகையில் பாங்கு காரண்டி வடிவில் மட்டுமே எற்றுக்கொள்ளப்படும். எற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலேயில் குறைந்தது 3 ஆண்டு அனுபவமாவது பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாடு சிறுதொழிற் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்டின் தலேவர் மற்றும் நிருவாக இயக்குநர் அவர்களுக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளேயும் எக் காரணமும் கூறுமல் நிராகரிக்க உரிமை உண்டு.

பொது மேலாளர்,
தமிழ்நாடு சிறு தொழில்
வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னே-5.

(த. 56

1972 ஆகஸ்டுத் திங்கள் 18-ஆம் நாள்
சட்டமன்றத்தில்
முதல் அமைச்சர் அளித்த
அறிக்கை !

இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளையொட்டி அரசு எடுத்த முடிவுகளில் தென்பட்ட முரண்பாடுகளைப் பற்றி ஆராய தனி நபர் குழு ஒன்றை அரசு நியமித்ததை உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் அக்குழு சமர்ப்பித்த அறிக்கையினையும், பல்வேறு அலுவலர் சங்கங்கள் கொடுத்த விண்ணப்பங்களையும் அரசு ஒரு சேர ஆய்வு செய்தது. அதையொட்டி அரசு எடுத்த முடிவுகளை அறிவிக்க விரும்புகிறேன்.

2. பட்டதாரி ஆசிரியர்களது சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 275—10—375—15—450 என்பதிலிருந்து ரூ. 300—10—350—15—500 ஆக மாற்றி உயர்த்தப்படும். இதனையொட்டி, நேர்முகத் தேர்வுக்குப் பட்டப் படிப்பு தகுதியாக அமைந்துள்ள, முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைச் செயலக உதவியாளர்கள், மொழிபெயர்ப்பு உதவியாளர்கள் ஆகியோர் சம்பள விகிதங்களும் தற்போதுள்ள ரூ. 275—10—375—15—450 என்பதிலிருந்து ரூ. 300—10—350—15—500 என மாற்றி உயர்த்தப்படும். இந்த உயர்வினால், பட்டதாரி ஆசிரியர் 25,000 உட்பட 31,000 பயன் பெறுவர்.

3. கால்நடை உதவி மருத்துவர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 400—15—475—20—575—25—650 என்பதிலிருந்து ரூ. 425—20—525—25—700 என மாற்றி உயர்த்தப்படும். அதன் பயனாக ஏறத்தாழ 900 பேர் பயனடைவர்.

4. இளம் பொறியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 400—15—475—20—575—25—650 என்பதிலிருந்து ரூ. 425—20—525—25—700 என மாற்றி உயர்த்தப்படும். இதன் விளைவாக ஏறத்தாழ 1900 பேர் பயன் பெறுவர்.

5. இளநிலை உதவியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 200—5—250—300 என்பதிலிருந்து ரூ. 210—5-245—10—325 என மாற்றி உயர்த்தப்படும். இதன் பயனை ஏறத்தாழ 30,000 பேர் அடைவர்.

6. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் உதவியாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 250-10-400 என்பதிலிருந்து ரூ. 250—10—300—15—450 என மாற்றி உயர்த்தப்படும்.

7. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் கண்காணிப்பாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 350—15—500—20—600 என்பதிலிருந்து ரூ. 350—15—425—25—600 என மாற்றியமைக்கப்படும். இதன் பயனை ஏறத்தாழ 1100 பேர் பயன் அடைவர்.

8. வருவாய்த் துறையின் கீழ் வரும் கிராம அதிகாரிகள் ஊழியர்கள் மதிப்பூதியம் (Honorarium) மாதமொன்றுக்கு ரூ. 7 வீதம் உயர்த்தப்படும். மொத்தம் 54,000 பேர் இதன் பயனை எய்துவர்.

9. இடைநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 225—5—250—10—350 என்பதிலிருந்து ரூ. 250—10—400 என மாற்றி உயர்த்தப்படும். இத்துடன் தேர்வு நிலை ஆசிரியர்களிடமிருந்து தலைமையாசிரியர்களை வேறுபடுத்திக்காட்ட சிறப்பூதியமாக மாதம் ரூ. 15 அளிக்கப்படும். இதனால் 4900 தலைமை ஆசிரியர்கள் பலனடைவர்.

10. சம்பள விகிதங்கள் தற்போது மாற்றியமைக்கப்படும் பதவிகள் தவிர்த்த, மற்றப் பதவிகளில், புதிய விகிதங்களில் சம்பளத்தை நிர்ணயிக்கும் முறை மாற்றியமைக்கப்படும். இதன்படி பழைய பணிக்காலத்திற்கு இரண்டு மூன்று, ஆண்டுகள் பணிக்கு ஒரு உயர்வு வீதம் என நான்கு உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும். கடைநிலை ஊழியர்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு இரண்டாண்டுக்கும் ஒரு உயர்வு எனக் கொண்டு, ஐந்து உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

இவை தவிர, தனி நபர் குழு சொல்லியுள்ள பல்வேறு பரிந்துரைகள் மீது அரசு விரைவில் ஆய்வு செய்து ஆணைகள் பிறப்பிக்கும்.

இச்சலுகைகள் வரும் செப்டம்பர்த் திங்கள் முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும். எனினும் சம்பள விகிதங்களைக் கணக்கிடுவதற்கு 2—10—70 அடிப்படைத் தேதியாகக் கொள்ளப்படும்.

தனி நபர் குழு பரிந்துரைகள் உள்ளிட்ட இச் சலுகைகளின் விளைவாகத் தற்போது ஆண்டொன்றுக்கு நான்கு கோடி ரூபாய் கூடுதல் செலவும், இறுதியில் ஆண்டொன்றுக்கு ஐந்தரைக்கோடி ரூபாய் கூடுதல் செலவும் ஆகும். தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அரசு மனமுவந்து அளித்துள்ள இச்சலுகைகளை அனைவரும் வரவேற்றிடுவீர் என்றும், இந்த அவை தனது ஆதரவை நல்கும் என்றும் நம்புகிறேன்.

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் கோட்

வண்ணத்துப்பூச்சி தரும் உன்னத பட்டுகள்

"நீலவான் ஆடைக்குள்
நடமாடும் விண்மீன்கள்;
வண்ணங்கள் பலகோடி
எண்ணங்கள் இன்பம் தரும்;
தறியில் பிறக்கின்ற
ஆடைகளைக் கண்டிடுவீர்!
உங்களைக் கவர்ந்திடும் ஓர்
கோ-ஆப்டெக்ஸ் புடவை!"

கோ-ஆப்டெக்ஸ்

CriterionCO.2678TM B



தமிழரசு

செப் 16.1972

40 காசு

R.R.No. 726/SS/72

7784/SS.



நமது இலட்சியம் ஈடேற....

குடிசைகள் அடுக்குமாடி வீடுகளாக
அமைக்கப்பட்டு வருகின்றன
நமது அரசின் திட்டங்களால்!

குடிசை வாழ் மக்களுக்காக அண்மையில் சென்னை
கோட்டூர்புரத்தில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய்
செலவில் 1848 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இதுபோன்று நாள்தோறும் புதிய புதிய திட்டங்களால்
புதிய புதிய வசதிகள்,

திட்டமிட்ட குடும்பமே சிறந்தது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



அரசு - மிகவுயர்ந்த தரமான

போர்ட்லேண்ட் சிமேண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

[illegible]

[illegible]

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

[illegible]

அரசு - வலிவும் வனப்பும் வாய்ந்தது

ARASU CEMENT
TIDCO

R.R. NO: 726/55/72

தமிழரசு



தூத்துக்குடியில்
கப்பலோட்டிய செம்மல்
வ.உ.சிதம்பரனாரின் சிலையை
செப்டம்பர் 5 ஆம் நாள்
முதல்வர் கலைஞர் தலைமையில்
தலைமையமைச்சர்
இந்திரா காந்தி
திறந்து வைத்தார்

வ.உ.சி நூற்றாண்டு
விழாக்களில் கலந்து
கொள்ளத் தமிழகம்
வந்த
தலைமையமைச்சருக்குச்
சிறப்பான வரவேற்பு
அளிக்கப்பட்டது!



திருநெல்வேலி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி,
திருவனந்தபுரம்
ஆகிய நான்கு நகரங்களை
இணைக்கும் புதிய
இருப்புப்பாதை
அமைக்கும் பணி
செப்டம்பர் 6 அன்று
தலைமையமைச்சரால்
தொடங்கி
வைக்கப்பட்டது.

முதல்வரின் முத்துக்கள்

பொதுவாக, பத்திரிகை நடத்துபவர்கள் எவ்வளவு பெரிய பணம் படைத்த சீமான்களாக இருந்தாலும், அந்தப் பத்திரிகைக்கான வசதிகள் வாய்ப்புகள் எந்த அளவுக்கு வளம் பொருந்தியதாக இருந்தாலும், பத்திரிகையின் பிரதான தலைமை ஆசிரியர்—தலையங்கம் தீட்டுகிறவர் எவ்வளவு திறமை உடையவராக, அகில உலக அரசியல் விஷயங்களை எல்லாம் தெரிந்தவராக இருந்தாலும் ஒரு பத்திரிகை முழுமை பெற வேண்டுமானால் அது தலையங்கத்தால் மாத்திரம்—கவர்ச்சி மிக்க-வனப்பு மிக்க—அழகு ஓவியங்களால் மாத்திரம்—புகழ் பெற்றுவிட முடியாது. பத்திரிகையின் செய்திகள்-அவைகளை திரட்டித் தருகிற நிருபர்கள் பத்திரிகையின் நாடி நரம்புகளாக இருக்கின்றார்கள்.

• • •

சென்னை மாநகரத்திலே ஒரு பகுதி—நீண்ட நெடுங்காலமாக 'ஜார்ஜ் டவுன்' என்று அழைக்கப்பட்டு வருகிறது. அந்த ஜார்ஜ் டவுன் பகுதியை 'சிதம்பரனார் நகர்' என்று மாற்ற வேண்டுமென்று 1947-ல் இருந்து ஒரு கோரிக்கை இருந்து வருகிறது.

அந்தக் கோரிக்கையும் வெகு விரைவிலே நிறைவேற்றப்பட்டு—சென்னையில் உள்ள ஜார்ஜ் டவுன் சிதம்பரனார் நகராக மாறும் என்கின்ற அந்த அறிவிப்பையும் நம்முடைய பிரதமர் அவர்களுடைய முன்னிலையிலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயர் மாற்றுவதா? இது ஒரு பெரிய அறிவிப்பா என்று கேட்கக்கூடும். இலட்சியங்களுக்காகப் பெயர் மாற்றுவது முக்கியமானது என்பது அண்மையிலே பிரதமர் அவர்கள் சிம்லா மாநாட்டிற்குச் சென்றபோது—அங்கே ஒரு கட்டடத்திற்கு இடப்பட்ட பெயர்-இலட்சிய நோக்கத்தோடு மாற்றச் சொன்னார்கள் என்கின்ற காரணத்தினாலேதான் அவர்களுடைய முன்னிலையிலே இந்தப் பெயர் மாற்றத்தை நான் இங்கே தெரிவிக்கின்றேன்.

வ.உ.சி.யினுடைய பெயர்—என்றும் நின்று நிலவக்கூடிய பெயர்.

வ. உ. சி.—

'வ'—வழக்கறிஞர்.

'உ'—உரிமைக்காக வாதாடிய வழக்கறிஞர்.

'சி'—உரிமைக்காக வாதாடி-சிறை புகுந்த வழக்கறிஞர்.

• • •

மின்சார ரயில்களுக்கு 1985-ம் ஆண்டு வரை மின்சக்தி வழங்கிடத் தமிழக அரசின் சார்பில் நாங்கள் ஏற்கெனவே உத்தரவாதம் அளித்து விட்டோம். முதலில் ஒப்புக்கொண்ட கட்டணமான 8·5 காசு கட்டணம் அல்லாமல் யூனிட் ஒன்றுக்கு 7 காசுகளுக்கு சென்னை-திருவள்ளூர் மார்க்கத்தில் 1975 முதல் 1980 வரையிலான ஆண்டுகளில் மின்சார ரயில் விடத் தேவையான மின்சக்தி வழங்கிடத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் இந்தத் தீர்மானத்துக்குக் காரணம் இந்த மின்மயத் திட்டத்தின் அவசரமும் முக்கியத்துவமுமே யாகும்.

முதல்வர் டாக்டர் கலைஞர்

கரூர்—திண்டுக்கல், மதுரை வழியில் புதிய பிராட்கேஜ் இருப்புப்பாதை அமைப்பதும், மதுரை—மணியாச்சி—தூத்துக்குடி மார்க்கத்தில் மீட்டர் கேஜை, பிராட்கேஜாக மாற்றுவதும் மத்திய அரசினரால் கவனித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ள இதர திட்டங்களாகும்.

• • •

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் தமிழிசையைப் பரப்புவதற்கே அரும்பாடு படவேண்டியிருந்தது என்பதற்காக ஒவ்வொரு தமிழனும் வெட்கித் தலை குனிய வேண்டும். தமிழ் நாட்டில் தமிழிசையைப் பாட மாட்டோம் என்று கூறிய தமிழால் தமிழ் நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த சிலர் மத்தியில் தமிழிசையைப் பரப்பச் செட்டிநாட்டார் போன்றோர்களும், பல புலவர் பெருமக்களும் பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதைத் தமிழ் நாட்டில்தான் சொல்லிக்கொள்ள முடியும். அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா போன்ற வெளி நாடுகளுக்கு நாம் போய் நீங்கள் தமிழ் நாட்டில் என்ன செய்தீர்கள் என்று அவர்கள் நம்மைக் கேட்டுத் தமிழ் நாட்டில் தமிழிசையைப் பரப்பினோம் என்று சொன்னால் "உங்களுக்கு வெட்கமில்லையா?" என்றுதான் கேட்பார்கள்.

வந்து பார்த்தால்தான் அது எவ்வளவு பெரிய முயற்சி, அதில் வெற்றி பெற எத்தனை இன்னல்களைத் தாங்க வேண்டியிருந்தது என்பது தெரியும்.

தமிழால்-தமிழ்ப் பதங்களால் நடனம், இந்த நாட்டில் கற்பிக்கப்பட்டால்தான் எதற்காகக் கை அசைகிறது, எதற்காக விழி அசைகிறது, எதற்காகத் தலை அசைகிறது என்பதன் பொருள் எதிரே இருப்பவர்களுக்கு விளங்கும். அப்போதுதான் உண்மையான அழகை அவர்களால் புரிந்துகொள்ள முடியும்.

• • •

சில பத்திரிகைகள் கண்ணொளி வழங்கும் திட்டத்தைப் பாராட்டுவதற்குப் பதிலாக ஒரு கண்ணாடியின் விலை 15 ரூபாய் என்றால், ஆயிரம் கண்ணாடிகள் வழங்குவதற்கு 15,000 ரூபாய்தான் செலவு; இதற்குப் போய் ஒரு இலட்சம் ரூபாய் செலவா என்று எழுதுகிறார்கள்.

கண்ணாடி என்பது கண் சிகிச்சை முடிந்து ஒரு வாரத்திற்குப்பிறகோ, பத்து நாளைக்குப் பிறகோ இறுதியாக நடைபெறுகிற நிகழ்ச்சியாகும். அதற்கு முன்புஅங்குள்ள நோயாளிகளுக்கு தகுந்த வசதிகள் அளித்து, அவர்களுக்கு உணவு, உறையுள் போன்ற வசதி வாய்ப்புகள் அளித்து, அறுவைச் சிகிச்சை செய்து, அதற்குப் பணியாளர்கள் மற்றும் அங்கு ஊழியம் புரிய அந்தந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற தொண்டர்கள் இவர்களுக்கெல்லாம் ஆகின்ற செலவுகளையும் வைத்துப் பார்த்தால் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ஒரு நோயாளிக்கு 50 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரை செலவாகும் நிலை இருக்கிறது. ஆகவே, ஆயிரம் பேருக்கோ இரண்டாயிரம் பேருக்கோ முகாமில் கண்ணொளி வழங்குவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். ஏதோ வெறும் கண்ணாடி வழங்கி விடுவதால் கண்ணொளி வந்து விடாது. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகுதான் கண்ணாடியைப் பயன்படுத்தமுடியும்.

* * *

இந்த ஆண்டு மேலும் 5,000 ஹயர் கிரேடு ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளம் இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

2,000 இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்களுடைய ஊதியம் வழங்கப்படுகிறது. இதையும் மறந்து விடக்கூடாது.

மருத்துவ வசதி, நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப் படி போன்ற வசதிகளைத் தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் உட்பட அனைவரும் பெறுகின்ற வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியது இந்த அரசு.

பி.டி. ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடை உருவாக்கியது இந்த அரசு.

செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடை உருவாக்கியது இந்த அரசு.

தலைமை ஆசிரியர்களுக்குத் தனிச் சம்பளம் என்பதை இந்த அரசுதான் அறிவித்திருக்கிறது.

தாராளமாகப் பல்வேறு பென்ஷன் வசதிகளை ஆசிரியச் சமுதாயத்திற்கு இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது.

* * *

வேலையின்மைத் துயரைத் தணிக்கும் பொருட்டு ஏற்கெனவேயுள்ள திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ. 438 இலட்சம் செலவில் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றையும் நாம் மேற்கொண்டுள்ளோம். இதில் ரூ. 3 கோடி செலவாகும் கிராமச் சாலைத் திட்டமும் அடங்கும். இதன் மூலம் 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையுடைய கிராமங்கள் அனைத்திற்கும் தார்ச் சாலைகள் வடிவில் எல்லாப் பருவ நிலைக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் பயிற்சியேதும் பெற்றிராத 15,000 பேர்களுக்கும், பொறியாளர்கள், நிருவாகப் பணியாளர்கள் அடங்கியமேற்பார்வைப் பணியாளர்களுக்கும் வேலையளிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக "மானியம் 21"-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தில் இளைஞர் அணிக்குக் கூடுதலாக 1,450 ஆண் தொண்டர்களையும் 150 பெண் தொண்டர்களையும் சேர்ப்பதும் அடங்கும்.

• • •

தோற்றத்தால்—பிறந்த குடி ஏற்றத்தால் அப்படிப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டாலும் சாதாரண ஏழை எளியவர்கள்— தொழிலாளர்கள் — பாட்டாளிகளிடையே நிரம்ப நம்பிக்கையைப் பெற்றிருக்கிறவர்கள் நாங்கள் என்பதற்கு அடையாளச் சின்னங்கள்தான் ஆங்காங்கே எழுந்திருக்கின்ற அழகழகான வீடுகளாகும்!

ஏழாண்டுகளில் இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டு வேகமான பயணத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற குடிசைமாற்றுத் திட்டமாகும்.

அப்படியென்றால் அங்கெல்லாம் குடிசைகளே இல்லையா என்றால் நிரம்ப உண்டு. ஆனால் அந்தச் சிந்தனை—குடிசைகளை மாற்றிக் அமைக்க வேண்டும் என்ற எண்ணம்—குடிசை வாழ் மக்களுக்கு வசதி செய்து தர வேண்டும் என்ற மனப்பான்மை நமக்கு எழுந்ததால் நம்மால் இப்படிப்பட்ட பணி துவக்கப்பட்டது.

அடுத்த இதழில் . . . . .

- காலத்துக்கு ஏற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு
- சோயா மொச்சை—சிறப்புக் கட்டுரை
- காணவாரீரோ காந்தி இல்லம்!
- சிறுவர் சோலையிலே.........!

இன்னும் சுவையான புதிய செய்திகள்.

அண்ணன் மார்க்கம்

கலைஞர் கருணாநிதி

தாழை. கள்ளி இரண்டிற்கும் முட்கள் உண்டு:
தாழை மலர் மணம்போலக் கள்ளிக் குண்டோ?
வாழைகளில் செவ்வாழைப் பழத்தைப் போன்றாய்!
வாழையடி வாழையாகத் தழைத்து வந்தோம்!
மோழைகளும் முழுமனித ராகச் செய்தாய்;
மோனத்தால் ஞானத்தைப் போதிக் கின்றாய்!
"ஏழைகளின் சிரிப்பினிலே இறைவன் உள்ளான்"
எனுங்கொள்கை ஈடேற்ற வாழ்வோம் யாமே!

படிப்படியாய்ப் பிற்படுத்தப் பட்டோர் மேலும்
பயனுறவே நயந்துபல நலன்கள் செய்யும்
அடிப்படையை உணராதோர். துடிப்புக் கொண்டே
ஆராய முனைகின்றார் குறைகள் நாடி!
இடிப்பாரை வேண்டாமென் றுரைக்க வில்லை!
ஏராளக் காரியங்கள் ஏழ்மை போக்க
முடிப்பதனைக் கண்திறந்து பார்க்க வேண்டும்!
முயல்வதிலே தவறிருந்தால் திருத்திக் கொள்வோம்!

ஆற்றுகின்ற நல்வினைகள் சென்று யாரை
அடையவேண்டும்? அவரெல்லாம் நல்ல வண்ணம்
போற்றுமாறு. புரிகின்ற வகையில் சொல்லிப்
பூரிக்கச் செய்வதன்றோ உயர்ந்த நோக்கம்!
ஏற்றிவிட்ட ஏணிதன்னை மறக்க லாமோ?
எல்லாமே ஏழையிட்ட பிச்சை யன்றோ?
மாற்றமின்றித் தம்பிசெல்லும் அண்ணன் மார்க்கம்
மக்களாட்சி மலர்குலுங்கும் பூக்கா டாகும்!

அஞ்சல் தலையில் அன்னைத் தமிழகம்

'வாணிபத்தின் மூலம் இந்திய நாட்டையே கையகப்படுத்தி, இங்கு ஆதிக்கம் செலுத்திய வெள்ளையரின் ஏகாதிபத்தியம் வேரோடும் வேரடி மண்ணோடும் கல்லியெறியப்பட வேண்டும்; இந்திய நாடு விடுதலை பெற்று விளங்கவேண்டும்' என்று 1906-ல் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்துக் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரை 'இந்தியக் கடல் வாணிபத்தின் தந்தை' என்று குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதே யாகும்.

வ. உ. சிதம்பரனார் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார். அவரது தந்தையார் உலகநாதபிள்ளை; தாயார் பரமாயி அம்மாள். வ.உ.சி. தனது ஆரம்பக்கல்வியைப் புதியம்புத்தூர் கிராமத்திலும், மெட்ரிக் படிப்பை தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியிலும் படித்துப் பின்னர் திருச்சி சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞரானார். அவர் தலைசிறந்த கிரிமினல் வழக்கறிஞராக விளங்கினார்.

அப்போது, பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டதால், நாட்டு மக்களிடையே தேசீய உணர்ச்சி பீறிட்டெழுந்தது. அப்போதுதான், மேலே கூறியபடி, வ.உ.சி. வெள்ளையர் ஆதிக்கத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் கல்லியெறியவேண்டும் என்ற முடிவோடு, பொது மக்களிடம் பங்கு திரட்டி, 'சுதேசிக் கப்பல் கம்பெனி'யை நிறுவினார். இதற்காக லாவோ, கால்வியா என்ற இரு கப்பல்களும் நீண்டகால வாடகைக்கு அமர்த்தப்பட்டன. இவை தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே சரக்குப் போக்குவரத்துக்குப் பெரிதும் பயன்பட்டன. இதனால், ஆத்திரமுற்ற வெள்ளை ஏகாதிபத்தியம், அவரைச் சூழ்ச்சியால் சிறைப்பிடித்து அவர் மீது பலவித வழக்குகள் ஜோடிக்கப்பட்டு, இறுதியில் இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்பீலில் இது 6½ ஆண்டாகக் குறைக்கப்பட்டது. ஆனாலும் 5 ஆண்டுகளில் 1912 டிசம்பரில் அவர் விக்டோரியாப் பேரரசியார் பட்டமேற்பு விழாவையொட்டி விடுதலை செய்யப்பட்டார்.

வ.உ.சி. இந்த ஐந்தாண்டுச் சிறைத் தண்டனையை நெல்லை, கண்ணனூர், கோவை ஆகிய ஊர்களின் சிறைச்சாலைகளில் கழித்தார். கோவைச் சிறையில் அவர் இருந்தபோதுதான், மாட்டுக்குப் பதிலாக அவரையே செக்கில் மாடாகக் கட்டி இழுக்கச் செய்தார்கள்; கட்டடம் கட்டுவதற்காகக் கல் உடைக்கச் செய்தனர்.

அன்று, வ.உ.சி. சிறையிலே இழுத்த செக்கு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க இப்போது சென்னைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அது, விரைவில் காட்சிப் பொருளாக வைக்கப்பட இருக்கிறது.

அன்று, சிதம்பரனார் கை நோகக் கல்லுடைத்தார். அந்தக் கல் நொறுங்கியதுபோல, அந்நிய ஏகாதிபத்தியமும் இந்திய அடிமைத்தளையும் நொறுங்கிச் சிதறின.

சிறையில், தமிழ் வகுப்பு நடத்தித் தன்னுடனிருந்தவர்களுக்குத் தமிழறிவு புகட்டினார். திருக்குறள் வகுப்புகள் நடத்தினார். அவர் விரும்பியவாறு, இந்தியா சுதந்தரமடைந்து, இன்று தமிழகத்தில் துறைதோறும் செந்தமிழே செழித்து வளரக் காண்கிறோம்.

வ.உ.சி. சிறந்த சீர்திருத்தவாதியாகவும், ஆலய நுழைவு, கைம்மை மணம், ஒன்றாக இருந்து உண்ணல் ஆகியவற்றில் தீவிர வாதியாகவும் விளங்கினார். அரிசனத் துறவி ஒருவரை வீட்டில் சேர்த்து வைத்து உணவு வழங்கியதற்காக வ.உ.சி.யைச் சமூகத்திலிருந்தே தள்ளி வைத்த 'பெருமையுடைய சமுதாயம்', இன்று அவருக்கு நடைபெறும் நூற்றாண்டு விழாவைக் கண்டு மகிழ்கிறது!

வ.உ.சி. அன்று கனவு கண்டபடி இன்று சுதந்தர நாட்டுக் கப்பல் சென்று கொண்டிருக்கிறது. பல துறைகளிலும் அவர் கனவு நனவாகி வருகிறது.

தமிழக அரசு, தமிழகத்தின் தலைநகரில் சீரோடும் சிறப்



VOLTAS

பருத்திப்பயிர்
களுக்குப்
பாதுகாப்பளிக்க
மிகச் சிறந்தது

ஜோலோன்®
மூலப் பொருள்
'ரோன்-பொலெங்க்'
பாரீஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால்
கண்டுபிடிக்கப்பட்ட போஸலோன்
பூச்சி மருந்து

RHÔNE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு ரோன்—பொலெங்க் நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட ஜோலோன் பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயிகளுக்கு நோயற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள், வண்டுகள் முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, ஜோலோன் பருத்திப்பயிர்களைக் காய்ப்புழுக்கள் தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் ஜோலோன் பயிர்ச்சிலந்தியை ஈடற்ற முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் ஸல்பர் அல்லது வேறு எந்தப் பூச்சி மருந்தோ உபயோகப்படுத்தத் தேவையில்லை.

காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு கில்வால் (மூலப்பொருள் வேமிடோதியோன் ஸிஸ்டமிக் (Systemic) பூச்சிமருந்து) மிகச்சிறந்தது.

பாரதத்தின் பசுமைப் புரட்சியைப்
பாதுகாப்பது
'ரோன்-பொலெங்க்'
பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரிக்குத் தயவுசெய்து தொடர்பு கொள்க:
வோல்டாஸ் லிமிடெட்
கெமிக்கல்ஸ் டிவிஷன்,
19, கிரஹாம் ரோடு, பெல்லார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.

போடும் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில் அந்தப் பெருமகனுக்குச் சிலையெடுத்துச் சிறப்புச் செய்தது. அண்மையில், சுதந்தர தின வெள்ளி விழாவில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, அன்று சிதம்பரனார் கையும் மெய்யும் நோகச் சிறையிலே இழுத்த செக்கு, இன்று சென்னைக்குக் கொண்டுவரப் பட்டுவிட்டது.

அடுத்து, செப்டம்பர் 5-ஆம் தேதியன்று, அவரது நூற்றாண்டு விழாவையொட்டித் தூத்துக்குடியில் தமிழக முதல்வர் தலைமையில், இந்தியப் பிரதமர், திருமதி இந்திரா காந்தி அவர்கள், வ.உ.சி.யின் முழு உருவச் சிலையைத் திறந்து வைத்துப் பாராட்டினார். திருமதி இந்திரா காந்தி அவர்கள் பேசுகையில், தூத்துக்குடித் துறைமுகத்தில் முதல் கப்பல் கட்டும் துறைக்கு வ.உ. சிதம்பரனாரின் பெயரிடப்படும் என்றார்;

தமிழக முதல்வர் கலைஞர் தமது தலைமை உரையில், சென்னையிலுள்ள ஜார்ஜ் டவுன் வ.உ.சி. நகர் என்று பெயர் மாற்றப்படும் என்று அறிவித்தார்.

இந்த நூற்றாண்டு விழாவையொட்டி, 5—9—1972-ல் இந்திய அஞ்சல் துறை, கப்பலைப் பின்னணியாகக் கொண்ட வ.உ.சி. யின் திருவுருவம் பொறிக்கப்பட்ட 20 காசு விலையுள்ள 30 லட்சம் அஞ்சல் தலைகளை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது. தூத்துக்குடியில், திருமதி இந்திரா காந்தி இதனை வெளியிட்டு, முதல் அஞ்சல் தலையை-அஞ்சல் தலை அடங்கிய ஆல்பத்தைத் தமிழக முதல்வர் கலைஞருக்கு வழங்கினார். இவ்விழாவிற்கு தமிழக ஆளுநர் திரு கே.கே. ஷா தலைமை தாங்கினார்.

உலகத் தமிழ் மாநாடு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இலக்கிய மொழியாகவும், பேச்சு மொழியாகவும் வாழ்ந்து வரும் ஒரே மொழி தமிழ்தான் என்பது மொழி வரலாறு காட்டும் முற்றமுடிந்த முடிபாகும். எனினும் தமிழ் மொழி ஆராய்ச்சியில் உலக மொழி வல்லுநர்கள் பலரும் போதிய அக்கறை காட்டாமலே இருந்து வந்தனர்.

1786-ஆம் ஆண்டில் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வட மொழிக்கும், கிரேக்கம், லத்தீன் போன்ற ஐரோப்பிய மொழிகளுக்கு மிடையே உள்ள ஒற்றுமையைச் சுட்டிக் காட்டினார். அதன் பிறகுதான் இந்திய மொழிகளின் ஆராய்ச்சியில் மேலை நாட்டு மொழி வல்லார் எல்லாரும் ஆர்வம் காட்டத் தொடங்கினர். என்றாலும், வடமொழியை ஆராய்வதே இந்திய மொழிகள் எல்லாவற்றையும் ஆராய்வதற்கு ஒப்பாகும் என்று கருதி விட்டனர். தமிழும் பிற திராவிட மொழிகளும் வடமொழியிலிருந்தே தோன்றியவை என்னும் தவறான நம்பிக்கையிலேயே இப்படிக் கருதிக் தமிழ் மொழி ஆராய்ச்சியை ஒதுக்கினர்.

காலப் போக்கில் திராவிட மொழிகளின் தனித் தன்மை இந்த ஆராய்ச்சியாளர்களுக்குப் புலப்பட்டது. உலகின் பல பகுதிகளிலும் தமிழ் பரவியுள்ளதைக் கண்டனர். தனியார்வம் கொண்டு தமிழின் சிறப்புக்களை ஆராயத் தொடங்கினர். தமிழர்களின் தியாகச் சிறப்பினைக் கண்ட காந்தியடிகள் தமிழின் சிறப்பையும் கண்டார்; வியந்து பாராட்டினார்; அதைக் கற்றார்.



அனைவரும் கற்கும்படி கூறினார்.

உலக மொழியியல் அறிவாளர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் 1964-ல் வல்லுநர் பலரால் அமைக்கப்பட்டது. முதல் அனைத்துலகத் தமிழ் மாநாடு 1966-ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்றது. மலேசிய அரசின் ஒத்துழைப்பும், மலேசியப் பல்கலைக் கழகத்தின் ஈடுபாடும் இம் மாநாட்டின் வெற்றிக்குத் துணை நின்றன. இம் மாநாட்டில் 25 நாடுகளைச் சார்ந்த 200 ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968-ஆம் ஆண்டு சனவரி 3 முதல் 10 ஆம் நாள் வரை தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில் நடைபெற்றது. இம் மாநாடு கற்றறிந்த புலவர்களை மட்டுமல்ல, மற்ற மக்கள் அனைவரையும் கூட்க் கவர்ந்தது. ஈர்த்துப் பிடித்த இதய நாடிகளில் தமிழின் இன்ப நாதத்தை எழுப்பியது; இனப் பெருமையை இனிதே உணர்த்தியது. தமிழினத்தின் புகழ்மிக்க வரலாற்றை உயிரோவியமாக மக்கள் முன் நிறுத்திய ஒரு மாபெரும் ஊர்வலம், தமிழின் சிறப்பைத் தரணிக்கு எடுத்துக் காட்டிய புலவர் பெருமக்களுக்கு வள்ளுவர் முதல் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வரை அனைவருக்கும் சிலை எழுப்பிச் சிறப்புச் செய்தமை, ஒரு வாரகாலம் சிறப்புச் சொற்பொழிவுகளும், இலக்கியப் பட்டி மன்றங்களும் கவியரங்கங்களும் மக்கள் உள்ளமெல்லாம் தமிழ் இன்பம் பாய்ச்சிப் பரவசப்படுத்திய எழிற்கோலம் ஆகிய அத்துணைச் சிறப்புக்களும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தனிச் சிறப்புக்களாகும்.

இத்தகு சிறப்புப் பெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாகவும், எழில்மிகு தமிழின் ஈடற்ற பெருமையை வையகம் எங்கும் வாரி இறைத்திடவும் உலகமும் கோபுரமும் திருக்குறள் புத்தகத்தின் மேல் அமைந்திருப்பது போல வடிவமைத்து, இந்திய அஞ்சல் துறை 15 காசு விலையுள்ள 20 இலட்சம் அஞ்சல் தலைகளை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

—சாமி.பழ

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமையாக்குதல்) சட்டத்தின் மூலம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு போன்ற நிலங்களை உடைமையாக்க முடிந்தது என்பதை மதிப்புக்குரிய உறுப்பினர்கள் அறிவர். இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தும்போது எடுத்துக் கொள்ளப்படும் நிலங்களுக்காக இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காகும் ரூ. 15.1 இலட்சம் செலவிற்கு ''36-வது மானியம்'' வகை செய்கிறது.

(1972—73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து).

லைதியான்
கால்நடைகளுக்கும், கோழி முதலிய பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளிலிருந்து முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு

மிருகஙகள் புழு பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவு— இலாபமின்மை.

ஆனல் இப்பொழுது கால்நடைகளுக்கும், பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சி களற்ற ஆரோக்கியமான வாழ்வளிக்க லைதியான் இருக்கிறது.

மிகவும் அபாயக்குறைவான இந்த பூச்சிக் கொல்லி கெடுதலற்று கையாளக் கூடியது. உபயோகிக்கச் சிக்கனமானது.

மிருகங்களின் மேலும் அவற்றைச் சுற்றியும் லைதியான் தூவுவதன் மூலம், அவைகளுக்கு ஈடுசெய்ய முடியாத கெடுதல் விளைவதைத் தடுக்கலாம்.

லைதியான் ஸயனமைட் தயாரிபபு.

லைதியான்
90 வெவ்வேறு வகையான பயிர்களைத் தாக்கும் 100 வகை புழுபூச்சிகளைப் பயனுள்ள முறையில் கட்டுப்படுத்துகிறது

புழு பூச்சிகளால் உங்கள் தானியப் பயிர்கள் நாசமாகிவிடக்கூடும்.

உங்கள் இலாபமும கூட

இப்பொழுது உங்கள் பயிர்களை புழு பூச்சிகளினின்று சக்திவாய்ந்த முறையில பாதுகாக்க

லைதியான் உபயோகியுஙகள்.

அபாயக் குறைவான, சக்திமிக்க பூச்சிக் கொல்லியான லைதியான் படடதும் பூச்சிகள் நசித்துவிடுகின்றன எனவே, இது பயிர்களுக்கு சொல்ல முடியாத சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கிறது

உபயோகிக்கக் கெடுதலற்ற, திறன் மிக்க, சிக்கனமான லைதியான் அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு உபயோகிக்கப்படலாம். இதனல் முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கு ஒரு விதமான கெடுதலும் விளைவதில்லை.

லைதியான் ஸயனமைட் தயாரிப்பு.

லைதியான்
5 வெவ்வேறு வகையான 50 காய்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் தாக்கும் 75க்கு மேற்பட்ட புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது

உங்கள் காயகறி மற்றும பழப் பயிர் களுககு புழு பூசசிகளால் ஆபத்து விளையும்போது, சேதத்தைத தவிர்க்க ஒரே ஒரு வழிதான் உள்ளது

அதுவே லைதியான்.

கையாளுவதற்கு அபாயக் குறைவான, சக்திமிக்த பூச்சிக் கொல்லியான லைதியான் படடதும் புழு பூச்சிகள் மடிநதுவிடுகின்றன. சொல்ல முடியாத சேதம் த்விர்க்கப்படுகிறது.

பயிர்களின் மீது கெடுதலான விளைவுகள் எதுவுமின்றி, அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு லைதியான் உபயோகிக்கலாம்

லைதியான் ஸயனமைட தயாரிப்பு.

லைதியான்
பூச்சிகொல்லி
தி ப்ரீமியம் கிரேட் மெலாதியான்

விவசாயப் பிரிவு.
ஸயனமைட் இந்தியா லிமிடெட்.
த.பெட்டி எண் 9109, பம்பாய்-25.

CYANAMID
உலகெங்கும் விவசாயத்திற்குப பணிபுரிகிறது
அமெரிக்கன் ஸயனமைட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்]

SISTA'S-CIL-374 TAM

கற்புத்திறத்தில் கண்ணகி திறம்

கோவை இளஞ்சேரன்

பெண்ணின் பெருமை கற்பிலே தொடங்கிக் கற்பிலேயே நிறைவடைகின்றது. அவளது சிறுமைக்கும் கற்பே கட்டளைக் கல். கற்பு ஒரு வியப்பான மின்னாற்றல். ஒரு காளை ஒரு கன்னியை உள்ளத்தால் தொட்ட அளவில் அவள் கற்பு என்னும் மின்னாற்றல் பெற்றவள் ஆவாள்; தங்கக் கம்பியாய்த் தகதகத்து நிற்பாள். அவளைப் பற்றிய காம நினைவு மற்றொருவனது நெஞ்சத்தில் பட்ட அளவிலே அவளது மின்னாற்றல் வழிந்து போகின்றது; இந்நிலையில் தகரத் தகடாய்த் தரையில் கிடப்பாள். "கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்" என்பது தமிழ் மரபு.

கற்பின் திறத்தைக் கணவன் இறப்பிலே கண்டனர் தமிழர். கணவன் இறந்ததும் "தன்னுயிர் கொண்டு அவன் உயிர் தேடினள் போல்" இயற்கையில் இறப்பது "தலையாய கற்பு" எனப்பட்டது. கணவன் இறப்புடன் நிறை நெஞ்சோடு நெருப்பில் இறங்கியோ, மலையிலிருந்து வீழ்ந்தோ மடிவது "இடையாய கற்பு" எனப்பட்டது. கணவன் இறப்பால் வெம்பி நைந்து கைம்பெண்ணாய் முடிவது "கடையாய கற்பு" எனப்பட்டது.

சிலப்பதிகாரம் இம்மூன்றையும் காட்டும். பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்ததும் உடன் இறந்த கோப்பெருந்தேவிபால் தலையாய கற்பினைக் காண்கின்றோம். கொலைக்களப்பட்ட சங்கமன் என்பானது மனைவி நீலி என்பாள் மலைமேலிருந்து வீழ்ந்து மடிந்தாள். இக்கதையை மதுராபதித் தெய்வம் கூறுவதில் இடையாய கற்பைக் கேட்கின்றோம். கோவலன் இறந்ததும் துறவை மேற்கொண்டு கைம்பெண்ணாகி முடிந்த மாதவிபால் கடையாய கற்பைக் காண்கின்றோம்

இவற்றையெல்லாம் மீறியதாய்ச் "சீறிய கற்பு" ஒன்றினைச் சிலம்பு செம்மையாய்க் காட்டுகின்றது.

சீறிய கற்பு

கோவலன் கொலையுண்டதும் சீறி எழுந்தாள் கண்ணகி. இச்செயலால் முன்னர் குறிக்கப்பட்ட மூன்று வகைக் கற்பையும் "ஆறிய கற்பு" என்றாக்கினாள் கண்ணகி, "சீறிய கற்பு" என்றொரு தனித்தன்மையைத் தோற்றுவித்தவள் ஆனாள். அச்சீறிய கற்பே சிலப்பதிகாரம் ஆயிற்று.

இது என்ன? கற்பிலேயும் உயர்வு தாழ்வா? அதில் தரம் வேறா? திறம் வேறா? இவ்வாறு எண்ணத் தோன்றும். இவ்வினாக்கள் அமைதி காணத்தக்கவை. அதற்கு உளவியல் வழி செல்ல வேண்டும். கற்புக்கு ஆணி வேர் அன்பு. அன்பின் அடித்தளம் உள்ள உணர்வு. அன்பு தோன்றுவதற்கும், வளர்வதற்கும், நிறைவு பெறுவதற்கும் அதன் அடித்தளமான உணர்வின் காரணமும் வலிமையானதாக வேண்டும். அவ்வுணர்வு வண்ணமாய் வளர வேண்டும்; திண்ணிதாய் நிலைக்க வேண்டும். இந்நிலைகளைக் காதல் உணர்வால் காணக் கூடும்.

ஆண் பெண் ஒருவரையொருவர் காணாத நிலையில் பண்பு நலங்களைக் கேட்டு உணர்வு ஊறப்பெறுவர்; அவ்வுணர்வால் அன்பு உயிர்க்கும். உயிர்த்த அன்பால் நினைவு ஒன்றுவர். பின்னர் ஒருகால் நேரே கண்டு அன்பில் தோய்வர். 'நீயே நான்; நான் இன்றேல் நீ இல்லை' என உணர்வு ஒன்றுவர்; ஈருயிரும் ஒருயிர் ஆகும். இவ்வன்பு 'உயிர் ஒன்றிய அன்பு'.

உயிர் ஒன்றிய அன்பு, ஓர் உயிர் போனால் ஒன்றிய மற்றைய உயிரையும் போகச் செய்யும். இந்நிலை தலையாய கற்பு'எனப்பட்டது.

ஒருவரையொருவர் கண்ணால் கண்டு தோற்றப் பொலிவாலும் மாற்றமில்லாத குண நலன்களாலும் அன்பு தோன்றப் பெறுவர். ஒருவருக்கொருவர் இன்றியமையாதவராய் அமைவர். 'உன்னோடு நான்; என்னோடு நீ' என்று உணர்வு பொருந்திய அன்பு ஆழமாய்ப் பாயும். இவ்வன்பு 'ஆழ்ந்த அன்பு'.

ஆழ்ந்த அன்பு, ஒருயிர் பிரிந்தால் மற்ற உயிர் பிரிவுத் தவிப்பால் உடலில் உலவ விரும்பாமல் போக்கிக்கொள்ளும். இஃது 'இடையாய கற்பு' எனப்பட்டது.

பெற்றோராலோ மற்றவராலோ ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டு, உடல் உறவாலும், பழக்க ஆர்வத்தாலும் அன்பு பிறக்க நிற்பர். நின்று, 'ஒருவருக்கு ஒருவராய்' 'உனக்கு நான்; எனக்கு நீ' என்று உணர்வு கூட அன்பு இணையும். இவ்வன்பு 'இணைந்த அன்பு'.

இணைந்த அன்பு, ஓர் உயிர் பிரிந்தால் மற்றைய உயிர் பிற கடமைகளின் நினைவால் பிரிவுத் துன்பத்தைத் தாங்கச் செய்யும். செய்து, உடலை உலவவைக்கும். இது கடையாய கற்பு எனப்பட்டது.

இம்மூன்றிலும் தலையாய கற்பு, இடையாய கற்பு ஆகிய இரண்டால் ஓர் உயிரோடு மறு உயிரும் போகும். இவை இரண்டும் அன்பு, ஆற்றிய கடமை. எனவே இவை இரண்டும் "அன்புக் கடன்" (அற்புக் கடன்) என்று கூறப்பட்டன.

கடையாய கற்பு மன வலிமையால் நோன்பு வாழ்வை மேற்கொள்வது. இது 'கைம்மை நோன்பு' அல்லது 'வாழ்வுத் தவம்' எனப்பட்டது.

கணவன் இறந்ததும், அவன் இறப்பு பழியால் நேர்ந்திருப்பின் சீறி எழுந்து அதனைத் துடைத்துப் பழி தீர்த்தல் கற்புடைய மனைவியின் கடமை ஆகின்றது. இவ்வாறு கற்பை வெளிப்படுத்துவது ''கற்புக் கடன்'' எனப்பட்டது. சீறி எழுந்து கற்புக் கடன் ஆற்றியவள் கண்ணகி.

முன்னையவை அன்புக் கடனாய் மிளிர்வன. சீரிய கற்புதான் ''கற்புக்கட''னாய் ஒளிர்வது. இதுகொண்டுதான்,

'' கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ
மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்'

—என்று கவுந்தியடிகளால் குறிக்கப்பட்டாள் கண்ணகி. மணிமேகலைக் காப்பியமும்,

'' அற்புக் கடன் நில்லாது, நற்றவம்
(கைம்மை) படராது
கற்புக் கடம் பூண்டு''

—என்று கண்ணகியைக் குறிக்கின்றது.

அற்புக் கடனிலும் கற்புக்கடனே சிறந்தது என்பதை அச்சொல்லே சொல்லுகின்றது. 'ஆம், மேம்பட்டதே' என்று மணிமேகலைக் காப்பியம் மாதவி வாயிலாகப் பின்வருமாறு விரிவாகப் பகர்கின்றது.

'மணிமேகலையைக் கணிகையர் குல ஒழுக்கத்தில் பரத்தையாக்கக் கூடாது; துறவறத்தில் செலுத்த வேண்டும்' என்பது மாதவியின் கருத்து. அவள் தன் கருத்துக்குக் காரணம் ஒன்றைக் கூறுகின்றாள். மணிமேகலை தன் வயிற்றில் பிறந்திருந்தாலும் அவளைத் தன் மகளாகக் கூறிக்கொள்ள அவள் விரும்பவில்லை. ஏன் எனில், தான் ஒரு ஆடவனுடன் வாழ்ந்தாலும் கணிகையர் தொழிலாகிய ஆடல் பாடலை மேற்கொண்டவள். எனவே, தன் மகள் என்றால் அவளும் அத்தகையவளாகக் கொள்ளப்படுவாள் என்று கருதுகின்றாள். அதனால் மணிமேகலையைக் கண்ணகியின் மகள் என்று பேசுகின்றாள். அதனையும் ''மாபெரும் பத்தினி மகள்'' என்று குறிக்கின்றாள். கண்ணகி எவ்வாறு பத்தினிகளில் மிகச் சிறந்தவள்—'' மாபெரும் பத்தினி ''— என்பதை மாதவி வாயிலாகச் சீத்தலைச் சாத்தனார் கூறும் விளக்கம் வருகிறது:

பத்தினிப் பெண்டிர் காதலர் இறப்பின்,
''இன்னுயிர் ஈவர் (தலையாய கற்பு); ஈயார்
ஆயின்,
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
(இடையாய கற்பு);
நளியெரி புகாஅர் ஆயின், நோற்றுடம்
படுவர் (கடையாய கற்பு);
அத்திறத் தாளும் அல்லள் எம் ஆயிழை
(கண்ணகி);
கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்;
கண்ணீராடிய கதிரிள வனமுலை
திண்ணிதில் திருகித் தீயழல் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி பூட்டிய
மாபெரும் பத்தினி ''

—என்பது அது. எனவே, சீரிய கற்பு ஆறிய கற்பைவிட மேம்பட்டது; தனித்தன்மை கொண்டது. தனித்தன்மைக்கு இலக்கியமாகிய கண்ணகியது கற்பைச் சிலப்பதிகாரம் தனித்த தன்மையிலேயே போற்றுகின்றது. அதனையும் காண்பாம்:

அருந்ததிக்கு உவமை கண்ணகி

கற்பின் திறத்திற்கு வடக்குத் திக்கில் தோன்றும் விண்மீனாம் (வடமீன்) அருந்ததியின் திறத்தை உவமையாகக் கூறுதல் ஒரு மரபு. இம்மரபில்,

'' சாலி (அருந்ததி) ஒருமீன் தகையாள்''—என்றும் ''அருந்ததி அன்னாள்''—என்றும் சிலப்பதிகாரம் கண்ணகியைக் குறித்துக்காட்டுகின்றது. இவ்வாறு பின்னர் குறிக்கும் சிலம்பு கண்ணகியை அறிமுகப்படுத்தும்போது இதற்கு மாறாக ஓர் உவமையாக அமைக்கின்றது. வடமீனாம் அருந்ததியின் கற்புத் திறத்திற்குக் கண்ணகியின் கற்புத் திறத்தை உவமையாகக் காட்டுகின்றது. இது கூர்ந்து நோக்கத் தக்கது.

'' தீதிலா வடமீனின் திறம் இவள் (கண்ணகியின்) திறம் ''—என்று தனித்தன்மை கொடுத்துப் போற்றுகின்றது. அருந்ததிபால் நேராத மனத்திண்மையைக் கண்ணகிபால் காண்கின்றார் இளங்கோவடிகளார்.

''கற்பென்னும் திண்மை'' என்றார் திருவள்ளுவர், இதற்குக் கற்பு என்னும் கலங்கா நிலை'' என்று உரை வகுத்தார் பரிமேலழகர். இக்கலங்கா நிலையோடு எழுந்தவள் கண்ணகி. எழுந்து தன் கணவன் கோவலனுக்குக் களங்கம் சொன்னவனைக் கலங்க வைத்தவள் கண்ணகி.

திருவள்ளுவர் கற்புடைய மகளிரைப் ''பெண்ணிற் பெருந்தக்க யாஉள'' என்று வியந்து கூறினார். சிலப்பதிகாரத்தில் மதுராபதித் தெய்வம் இக்குறளை நினைந்து பேசுவது போன்று கண்ணகியை,

''பெருந்தகைப் பெண்'' என்று வியந்து அழைக்கின்றது.

வடுவில்லாக் கற்பு

கற்புக்கும் நெருப்புக்கும் நெருங்கிய தொடர்பு இலக்கியத்தில் உண்டு. கம்பராமாயணச் சீதை,

''தீயைச் சுட்டதோர் கற்பெனும் தீயினாள்''—எனப்பட்டாள்.

நளவெண்பாத் தமயந்தி,

'' சீறா (சீறி) விழித்தா'' ளாம்; ''சிலை வேடன் அவ்வளவில் நீறாய் விழுந்தா'' னாம். கண்ணகி,

'' ஊர்தீ யூட்டிய ஒருமகள் '' ஆனாள்.

கண்ணகியுடன் தமயந்தியையும் சீதையையும் தொடர்புபடுத்தச் சிலம்பு சிறிதளவு இடந்தருகின்றது.

மனைவியுடன் காட்டுப் பயணங்கொண்ட வகையில் இராமனும் நளனும் கோவலனோடு பொருத்திக் காட்டப்பட்டுள்ளனர். இவ்விருவரையும் சொல்லிக் காட்டிக் கோவலனுக்கு ஆறுதல் கூறுகின்றார் கவுந்தியடிகள். இராமனும் நளனும் காட்டுப்பயணத்தில் மனைவியைப் பிரிந்தவர்கள்;

''அனையையும் அல்லை நீ; ஆயிழை தன்னைப்
பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே''

—என்றார். அவர் கூற்றுப்படி மனைவியைப் பிரியாத நிலையில் கோவலன் மற்றைய இருவரினும் மேம்படுகின்றான்.

இத் தொடர்பில் சீதையும் தமயந்தியும் கண்ணகியோடு மதிப்பீட்டிற்கு உரியவராகின்றனர். சீதையும் தமயந்தியும் அவரவர் மரபிற்கேற்ப மேம்பட்ட கற்பினரே. ஆயினும், அவர் கற்பு வாழ்வில் ஏற்பட்ட இடையீடு கண்ணகி வாழ்வில் நேரவில்லை. சீதை இராவணனது நெஞ்சில் புகுந்தாள்; அல்லது புகுத்தப்பட்டாள். இது சீதையினது கற்புவாழ்வில் நேர்ந்த இடையீடு; தமயந்தி கற்பிலும் பாம்பின் வாயிலிருந்து அவளைக் காப்பாற்றிய வில்வேடன் ''பைந்தொடி, நீ என் மனைவியாக வா'' என்று அழைக்கப்பட்டாள். தமயந்தியது கற்பில் நேர்ந்த இடையீடு இது. ''கற்புடை மகளிர் பிறர் நெஞ்சு புகார்'' என்னும் தமிழ் மரபுப்படி இவ்விருவரும் இவ்விடையீடுகளால் பிறர் நெஞ்சு புகுந்தவர் இக்காரணத்தால் சிறு வடுவுடையவர் ஆகின்றனர். கண்ணகி இவ்வடுவும் பெறாதவள் இதுகொண்டே போலும்.

''வடுநீங்கு கற்பின் மனைவி''—
எனப்பட்டாள்.

சொல்லை மறுக்காத கற்பு

'' கற்பெனப்படுவது சொல் திறம்பாமை'' என்றனர். கணவன் சொல்லுக்கு எதிர் மாற்றம் சொல்லாமல் அப்படியே ஏற்பதே கற்பு என்றனர். (அக்கால மரபைக்கொண்டே இவ்விடத்தில் கற்பு மதிப்பிடப்படுகின்றது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்) கண்ணகியின் சொல் திறம்பாத திறத்தையும் காணலாம்.

புகார் நகரில் கண்ணகி கொடுத்த சிலம்பைக் கோவலன் பெற்றுக்கொண்டு 'இழந்த பொருளை ஈட்டுவேன்; என்னோடு நீயும் மதுரைக்கு எழுக' என்றான். பொருளீட்டும் பயணத்தில் மனைவி உடன் செல்லல் வாணிகர் குலமரபு அன்று; இதைக் கண்ணகி அறிந்தவள். அறிந்திருந்தும் அம்மரபையும் மீறிக் கணவன் சொல்லுக்கு மாற்றம் சொல்லாமல் உடன் புறப்பட்டாள். இதனைக் குறிக்கும் வகையில்,

''கற்புக் கடம் பூண்டு கணவன்பின் போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழியான்
கண்டீர்''

—என்று பாடப்பட்டது.

இவ்வாறு மறுக்காது புறப்பட்டதன் காரணத்தைப் பின்னர் கண்ணகியே கூறுகின்றாள். மாதரி வீட்டில் கண்ணகி சமைத்துப் படைத்த உணவைக் கோவலன் உண்டு தம்பலம் பெற்றான். அப்போது அவன் கண்ணகியை விளித்து, 'எழுக என்றதும் எழுந்தாயே' என்றான். அதுபோது கண்ணகி 'நீர் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்; ஆயினும், நும் சொல்லில்,

''யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன்
ஆதலில்
ஏற்றெழுந்தனன் யான்'' என்று கூறிக்காட்டினாள்.

கொலைக்களத்தில் உயிர்பிரியும் நிலையில் கோவலன் கண்ணகியின் கண்ணீரைத் துடைத்து அவளைப் பார்த்து (இருப்பாயாக) ''இருந்தைக்க'' என்று கூறி மறைந்தான். இச்சொல்லையும் கண்ணகி பொருள் பொதிந்ததாகக் கொண்டு ''பொருளுரையோ'' என்று புகன்றாள். புகன்று அவனுடன் விடாமல் ''இருப்பாயாக'' என்று அவன் சொன்ன சொல்லுக்கேற்ப இருந்தாள். பாண்டியனைப் பழி வாங்கினாள். வாங்கிய பின்னரும் ''இருந்தைக்க'' என்னும் சொல் அவள் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அச்சொல்லுக்குத் திறம்பாமல் உயிருடன் நின்றாள். ''இருந்தைக்க'' என்று சொன்னவனை எதிர்நோக்கி நின்றாள். சிதைந்து குருதி கசியும் மார்புடன் 14 நாட்கள் நெடுங்குன்றின்மேல் வேங்கைக் கானலில் நின்றாள். இறுதி மூச்சுள்ள வரை சொல் திறம்பாத கற்பினள் ஆயினள் கண்ணகி.

டோக்® E-25 உபயோகித்து உங்கள் வயல்களில் தோன்றும் களைப்பயிரை அகற்றி உயர்ந்த விளைச்சலைப் பெறுங்கள்.

ஆறு இந்திய விவசாயப் பல்கலைக்கழகங்களின் பண்ணைப் பரிசோதனைகள் சர்வதேச ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை ஆதரித்து டோக் E-25 அநேக களை கொல்லி மருந்துகளைவிட உயர்ந்தது என உறுதி கூறியுள்ளன.

டோக் E-25 களைகள் மண்ணில் தோன்றியபின் களைமேல் பிரயோகிக்கவும் அவைகள் முளைப்பதற்கு முன் நிலத்தின் மேல் பிரயோகிக்கக் கூடியதும், அநேக வகை தானியப் பயிர்களிலும், பழத்தோட்டங்கள், காய்கறிப்பயிர், மற்றும் [illegible] செடிகளுடன் வளரும் அகன்ற இலை, புல் இன வகையைச் சார்ந்த பல களை பயிர்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்த வல்ல ஓர் சக்தி வாய்ந்த களை கொல்லி மருந்து.

டோக் E-25 களை கொல்லி மருந்தின் பிரயோகம் சிக்கனமானதாகவும், பயனுள்ளதாகவும் கருதப்படுகிறது. டோக் E-25 சிபாரிசு செய்யப்பட்ட அளவுகளில் பிரயோகித்து சிறந்த பலன் பெறுங்கள்.

இண்டோஃபில் கெமிகல்ஸ் லிட்.,
பம்பாய்-25.

- டோக் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனி, ஃபிலடெல்ஃபியா, பா., அவர்களின் ட்ரேட் மார்க்குகள். யூ. எஸ். பேட்டண்டு ஆபீஸிலும் இதர [illegible] [illegible] செய்யப்பட்டது.



முட்டைக்கோசு, காலிஃப்ளவர், கிழங்குகள், நிலக்கடலை, கோதுமை, நெல், உருளைக்கிழங்கு, பட்டாணி, வெங்காயம், பூண்டு, சீரகம், காரட், அவரை, சோயா பீன்ஸ், பீட்ரூட், ஸ்ட்ராபெர்ரி, திராட்சை, அன்னாசி, காட்டு மரங்களின் சிறு செடிகள், நாற்றங்கால்களில தோன்றும் களை, புல், களைச் செடிகளை கட்டுப்படுத்துங்கள்.

இண்டோஃபில் கெமிகல்ஸ்—பசுமை நிறைந்த வருங்காலத்திற்கு

புகளூரில் புதிய முறை நீர்ப்பாசனம்

நாடு விடுதலை பெற்ற காலத்தில் சுமார் 33 இலட்சம் டன் உணவு உற்பத்தியைக் கொண்டு விளங்கிய தமிழகம் 1967வரை அதாவது சுமார் இருபது ஆண்டுக் காலத்தில் 55 இலட்சம் டன் உற்பத்தி இலக்கினைத் தான் எட்டிப் பிடிக்க முடிந்தது. அதாவது இருபதாண்டுக் காலத்தில் இருபத்திரண்டு இலட்சம் டன் உணவு உற்பத்திக் கூடுதலைத் தமிழகம் முயற்சியின் அறுவடையாகப் பெற்றது. பற்றாக்குறை மாநிலமாகத் திகழ்ந்து வந்தது.

ஆனால் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 1967-க்கும் 1972-க்கும் இடைப்பட்ட காலத்தில்—அரசின் சிந்தையில் மலர்ந்த, சிந்தையைக் கிளறும் சீரிய திட்டங்களாலும், விவசாயிகளின் ஒத்துழைப்பான ஒற்றுமையான கடின உழைப்பாலும் ஊக்கத்தினாலும் தமிழகத்தின் உணவு உற்பத்தி சென்ற ஆண்டே 73 இலட்சம் டன்னையும் மீறி விட்டது. தற்போது 75 இலட்சம் டன் உற்பத்தி இலக்கினை நோக்கி நமது மாநிலம் வீறுநடை போடுகிறது. பற்றாக்குறை என்ற பாரச்சுமையைத் தாங்க முடியாமல் திண்டாடிய நமது மாநிலம் இன்று தன்னிறைவு பெற்று விளங்குவதோடு அடுத்த மாநிலங்களுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு முன்னேறி இருக்கிறது என்பது நாம் பெருமைப்பட வேண்டிய ஒன்று. ஐந்தாண்டுக் காலத்தில் 20 இலட்சம் டன் உற்பத்திக் கூடுதல் என்பது வியப்பிற்குரிய சாதனை மட்டுமல்ல; விரும்பி வரவேற்றுப் பாராட்ட வேண்டிய சாதனையும் ஆகும். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' 'முயற்சி திருவினையாக்கும்' என்ற ஆன்றோர்களின் கூற்றுகளுக்கு எடுத்துக்காட்டாக இதைக் கூறலாம். இவ்வளவு பெருமுயற்சி செய்தும் தமிழகத்தில் உழவிற்குப் பயன்படும் நிலங்கள் அத்தனையும் கலப்பையின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டனவா என்றால் இல்லையென்றே பதில் சொல்ல வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். நாடும் இருக்கிறது.

தமிழகத்தில் உள்ள மொத்த நிலப்பகுதி 325 இலட்சம் ஏக்கர் அவற்றில் 184 இலட்சம் ஏக்கர் நிலந்தான் உழவு செய்யப் பயன்படக்கூடியவை. அதிலும் சுமார் 63 இலட்சம் நிலந்தான் நிரந்தரமான நீர்ப்பாசன வசதி பெற்றிருக்கிறது. அதாவது பாசனம் செய்யத் தகுந்த நிலத்திலும் சுமார் மூன்றில் இரண்டு பகுதிக்கும் கூடுதலான அளவில் 'வானம் பார்த்த' பூமியாகவே இருக்கிறது.

நமது மாநிலத்தில் எல்லா வகையிலும் கிடைக்கும் நீரின் அளவைப் பார்க்கும் போது பாசனவசதி பெறாத நிலங்கள் நிரந்தரமாகப் பாசன வசதி பெறாமலே போய்விடுமோ என்றும் அஞ்ச வேண்டியிருக்கிறது.

சிறிய ஆறுகள், பெரிய ஆறுகள், கால்வாய்கள், கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் இப்படிப்பட்ட வகையிலே நமக்குக் கிடைக்கும் நீரளவு (Surface Water) மொத்தம் 336·41 டி. எம். சி. என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதில் ஏற்கெனவே 293·42 டி. எம். சி. அளவிற்கு நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வகையில் நோக்கின் நிலப்பகுதியின் மேல் பாகத்தில் கிடைக்கும் நீரில், இன்னும் 42·93 டி.எம். சி அளவு நீர்தான் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதை விரைவில் பயன்படுத்துவதற்கு வகையில்லை, வழியில்லை என்று அந்தத் துறை வல்லுநர்களால் கருதப்படுகிறது.

எதிர்காலத் தேவை

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கள் தொகை 410 இலட்சத்தை மீறுகிறது. மக்கள் தொகைப் பெருக்கம் இதே அளவில் வேகத்தில் சென்றால் இதன் எண்ணிக்கை கி. பி. 2000-ம் ஆண்டில் 7 கோடியாக உயர்ந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. தற்போது வளர்ச்சி பெற்ற மேலைநாடுகளில் தனி மனிதன் உட்கொள்ளும் சராசரி உணவு சக்தி 3,050 கலோரியாகும். இதை அடிப்படையாகக் கொண்டு கி. பி. 2000-ம் ஆண்டில் தமிழகத்தின் உணவுத் தேவை 310 இலட்சம் டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது தமிழகத்தில் மொத்த உணவு உற்பத்தி சுமார் 75 இலட்சம் டன்களாகும். அப்படியாயின் கி. பி. 2000-ஆம் ஆண்டு அளவில் நமது மக்களும் மேலை நாட்டினர் இன்று உட்கொள்ளும் உணவுச் சத்தைச் சாப்பிட வேண்டுமானால் இன்றுள்ள உணவு உற்பத்தியை நான்கு மடங்காகக் கூட்டியாக வேண்டும். இதை அதிக நிலங்களை நிரந்தரப் பாசனத்தின் கீழ்க் கொண்டு வருவதின் மூலம், தற்கால அறிவியல்வழியில் உழவு செய்யும் முறையை விரிவுபடுத்தி வளர்ச்சி செய்வதின் மூலமும் தான் சாதிக்க முடியும்.

தமிழகத்தில் கிடைக்கும் நீரின் அளவு இன்றைய நீர்ப்பாசனத் தேவைக்கே போதுமானதாக இல்லை. இதிலிருந்து தமிழகமும் உணவு உற்பத்தியில் முன்னேற . வேண்டுமானால் குறைந்த அளவுநீரைக் கொண்டு அதிக நிலப்பரப்பை நீர்ப்பாசனம் செய்யும் முறை போற்றி வரவேற்கப்படவேண்டிய ஒன்று. இந்த வகையில் தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் (Springler Irrigation) நமது மாநிலத்திற்கு "வாராது வந்த மாமழை போல்" ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது.

தெளிப்பான் முறை நீர்ப்பாசனம்

சிக்கனமாக, சீராக நீரைப் ப்யன்படுத்த வேண்டிய கட்டாய இக்கட்டான சூழ்நிலையில் தமிழ் நாடு இருக்கிறது. இந்த வகை

யில் தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் நமக்கு ஆபத்தில் கை கொடுத்து உதவும் உற்ற நண்பனாகத் திகழ்கிறது. வாய்க்கால் வழியாக ஓடித் தானாகப் பாயும் நீர்ப்பாசனத்திற்கு (Flow Irrigation) தேவைப்படும் அளவு நீரில் அதே அளவு நிலப் பரப்பைப் பாசனம் செய்யச் சரி பகுதி நீர் இருந்தால் தெளிப்பாபான் முறை நீர்ப்பாசனம் மூலம் உழவு செய்யலாம்; செய்ய முடியும்.

தெளிப்பான் முறை நீர்ப்பாசனத்தால் இன்னொரு இலாபமும் உண்டு. உயர்ந்த ரக வித்துக்களை விவசாயம் செய்ய இந்த முறை மற்றெந்த முறையையும் விடச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. பயிர்களின் குருத்தின் மேல் நீர் விழுந்தால் பயிர்கள் விரைவில் செழித்து வளர்ந்து, அதிக அளவு விளைச்சலைக் கொடுக்கும். என்பது விவசாயிகளின் அனுபவம் முதிர்ந்த நடை முறை உண்மைக் கருத்தாகும் கணிப்பாகும் அதனால்தான் ஆற்று நீர்ப்பாசனம் பெற்றுள்ள விவசாயிகள் கூட "வானம் பெய்யாதா?" என்று ஏங்குவார்கள். இந்தக் குறைக்குத் தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் முற்றுப் புள்ளி இடுகிறது. தெளிப்பான் முறை நீர்ப்பாசனத்தால் நீரைப் பயிர்களின் மேல் மழை பெய்வது போல் பெய்ய வைப்பதால் பயிர்கள் குருத்தில் நீர் பட்டு, விரைவான வளர்ச்சி பெற்று, அதிகமான பலனும் தருகின்றன.

மேலும் இப்போது நடைமுறையில் இருக்கும் நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய நீரின் அளவின் பாதி அளவு நீர்தான் தெளிப்பான் முறைநீர்ப்பாசனத்தின் மூலம் பயிரிடத் தேவைப்படுவதால்; உழவர்களுக்கு பணச் செலவு குறைகிறது: அதனால் அவர்கள் ஆதாயம் பெருகுகிறது.

இம்முறையால் நாட்டின் பொதுவான பொருளாதாரமும் பெருமளவு பயன் அடைகிறது. குறைந்த அளவு நீரைக்கொண்டு அதிக அளவு நிலப்பரப்பு பாசனம் செய்ய வழிவகை ஏற்படுவதால் நாட்டின் உணவு உற்பத்தி இரட்டிப்பாகிறது; தண்ணீர் பற்றாக்குறையின் கடுமை தணிகிறது. நீரிறைக்கப் பயன்படுத்தப்படும் உந்து சக்தியான மின்சக்தி மீதமாகிறது. இதனால் அதிக அளவு நீரிறைக்கும் மின் குழாய்களுக்கு மின்வசதி செய்து கொடுக்க முடியும். இப்படிப் பலவாறாகப் புதிய தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் குறிப்பாக உழவர்களுக்கும், பொதுவாக நாட்டிற்கும் பயன்படுகிறது. பலன் தருகிறது.

புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனம்

தமிழகத்தை வற்றாத வளங் கொழிக்கச் செய்யும் அன்னை காவிரியின் தென்கரையில்புகளூர் உள்ளது. அங்கிருந்து ஒரு கல் தொலைவில் தெற்கே உள்ள வரலாற்றுப் பெருமை மிக்க புகளி மலையைக் கொண்டு இவ்வூர் அப்பெயர் பெற்றது. செங்கரும்பிற்குப் பெயர் பெற்ற கொங்கு நாட்டின் ஒருபகுதி இவ்வூர்.

புகளூர் காவிரிக் கரையின் அருகிலிருந்தும் இவ்வூரின் வட பகுதிதான் காவிரி அன்னையால் முப்போக விளைச்சல் பெற்று வளம் பெற்றுத் திகழ்கிறது. இந்தப் பகுதிக்கு மைய ஊராக விளங்கும் வேலாயுதம்பாளையத்தின் தெற்குப் பகுதி முழுவதும் வானம் பார்த்த பூமியாகவே இருக்கிறது இப்பகுதி நிலங்களில் வானம் பொய்த்தால் விளைச்சலும் பொய்த்துவிடும். அதனால் இந்தப் பகுதி உழவர்கள் பெரும் அவதிக்கு அடிக்கடி உள்ளாவது இயற்கை.

இந்த இழிநிலையைத் துடைக்க ஏற்பட்டதுதான் புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனக்கூட்டுறவுச் சங்கம். இவ்வமைப்பு அந்தப் பகுதிக்கே நடுநாயகமாக விளங்கும் வேலாயுதம்பாளையத்தில் இருந்து செயல்படுகிறது. இச்சங்கம் 28—11—1968 அன்று பதிவு பெற்று, 6—3—1969-ஆம் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது. 14 தனித்தனித் திட்டப் பகுதிகளை (Units) உள்ளடக்கியது இந்தச் சங்கம்.

இச்சங்கம் ஒவ்வொரு திட்டப்பகுதிக்கும் ஒரு இயக்குநர் (Director) என்ற முறையில் 14 இயக்குநர்கள் கொண்ட குழுவொன்றால் நிருவாகிக்கப்படுகிறது. இயக்குநர் குழுத் தலைவராக இயல்பாகவே நல் விதயமும் நன்னோக்கும் கொண்ட ரத்தினவேல் இருந்து வருகிறார். இந்த அதிகாரப் பற்றற்ற குழுவிற்குப் பொருளீட்டுத் துறையில் உதவி செய்ய துணைப் பதிவாளர் திரு சீனிவாசன் அவர்கள் தலைமையில் ஒரு அலுவலகமும், திட்டத் துறையில் செயல்புரிய பொதுப் பணித்துறையினர் குழுவொன்றும் இங்கு இருக்கின்றன.

வரலாறு

இச்சங்கத்தில் 14 தனித்தனி திட்டப் பகுதிகள் இருக்கின்றன; இந்தத் திட்டப் பகுதிகள் ஒவ்வொன்றும் 1960-ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் தனித்தனி நபர்களால் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. ஆனால் இந்தத் திட்டப் பகுதிகளின் நிலங்களுக்குத் தேவையான நீர் காவிரியிலும் அதை அடுத்துள்ள காவிரிக் கரை கால்வாயிலும் இருந்து எடுக்கப்பட வேண்டி இருந்ததால் அரசாங்கத்தின்முன் அனுமதி பெற வேண்டியிருந்தது. அரசின் அனுமதி பெறுவதற்காக 1967-ம் ஆண்டு வரை பெரு முயற்சி செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஓரத்தை முத்துசாமி, கரப்பாளையம் சீரங்கசாமி ஆகியோராவர்.

தலைவரின் பணி

1967 ஆம் ஆண்டு புதிய திருப்பம் ஏற்பட்டது. இன்றைய இச் சங்கத்தின் தலைவராகத் திகழும் திரு வை. இரத்தினவேலு இத்திட்ட விஷயத்தில் ஈடுபாடு கொண்ட பின்தான் தனித்தனியாகப் பிரிந்து செயல்பட்டு வந்த 14 திட்ட அமைப்புகளும் ஒருங்கிணைந்து ஒன்றாக ஒரே அமைப்பின் கீழ் செயல்படும் திட்டம் உருவானது. அவரே இத் திட்டத்தின் மூலையாகவும், மூல சக்தியாகவும் விளங்குகிறார் என்றால் அது மிகைபடக் கூறியதாகாது. அதன் பலனாகத்தான் இன்று 14 திட்டங்களும் ஒருங்கிணைந்து புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் உருவானது.

இந்தியாவில் முன்னோடித் திட்டம்

இத்திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே கூட்டுறவு நீர்ப் பாசனச் சங்கங்களின் மாதிரியாகவும், முன்னோடியாகவும் திகழ்கிறது. பெருமளவில் உள்ள புன்செய் நிலங்களைப் பாசன வசதி பெறச் செய்து, பயிர் விளைவித்து, உணவுப் பொருட்களைப் பெருக்கி, பசுமைப் புரட்சியினை மலரச் செய்வதற்காகக்கூட்டுறவு முறையில் நடத்தப்படும் ஒரு வெற்றி மிகு துணிகரத் திட்டமாகவும் இது கருதப்படுகிறது.

இப்பகுதியில் புகளூர் கால்வாயின் வலது கரையில் பெரும் பகுதியான புன்செய் நிலங்கள் மேட்டுப் பகுதியில் இருப்பதால் அவை பாசன வசதி பெறாமலே இருந்து வந்தன. ஒரு சில பொருளாதார் பலம் பெற்றிருந்த வேளாண்மையாளர்கள் அரசினரிடமிருந்து அனுமதி பெற்று நீரேற்று இயந்திரங்கள் மூலம் தண்ணீரை ஆற்றிலிருந்தும் கால்வாயிலிருந்தும் எடுத்துச் சென்று பாசனத்திற்குப் பயன்படுத்த முனைந்து வெற்றி கண்டனர்.

இதனால் தூண்டப்பட்ட திருக்காட்டுத் துறை, சேமங்கி போன்ற சிற்றூர்களைச்சார்ந்த பல வேளாண்மையாளர்கள் ஒன்று சேர்ந்து அரசினரிடமிருந்து அனுமதி பெற்று நீரேற்று இயந்திரங்கள் மூலம் பாசன வசதி பெற்றுக் கூட்டு முறையில் பலனடைந்து வருகின்றனர்.

இதைக் கண்ணுற்ற பல பண வலிமையற்ற சிறு வேளாண்மையாளர்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து பாசன வசதி பெறுவதற்கும், பண உதவி கிடைப்பதற்கும் ஒரு கூட்டு நிறுவனம் தேவையென்று உணர்ந்ததன் காரணமாகப் புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் சிறு சிறு ஊர்கள் ஒருங்கிணைந்த 14 ஊர்களில் உள்ள நிலங்களுக்கு காவிரி, நொய்யல், புகளூர் கால்வாய் போன்றவற்றிலிருந்து தண்ணீர் எடுத்துப் பாசனம் செய்யத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்திருந்தது. இந்த 14 ஊர்களும் தற்போது சங்கத்தின் 14 திட்டப் பகுதிகளாக (Units) இருந்து வருகின்றன.

பதினான்கு திட்டங்களில் புங்கோடை காளிபாளையம், ஓரம்புப் பாளையம், முத்தனூர், கவண்டர்புதூர் 1, கவண்டன்புதூர் 2, நடையனூர், கரப்பாளையம், புஞ்சைப் புகளூர், வேட்டமங்கலம், வெள்ளியம்பாளையம், மரவாபாளையம் ஆகிய திட்டங்களுக்குக் காவிரியிலிருந்து நேரிடையாகத் தண்ணீர் எடுக்கப் படுகின்றது.

கோவிந்தம்பாளையம், தளவாய்பாளையம், ஓரத்தை ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் புகளூர் கால்வாயிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

மரவாபாளையம், தென்னிலை கிழக்கு ஆகிய திட்டங்கள் நொய்யல் ஆற்றின் நீரைக் கொண்டு செயல்படுத்தப்படஇருக்கின்றன.

இப்பதினான்கு திட்டங்களிலும் அடங்கியுள்ள சங்கத்தின் 1,383 நில உடைமையாளர்களுக்குச் சொந்தமான 3,680 ஏக்கர் நிலங்களுக்குச் சுமார் 1·25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழாய்கள் மூலம் நடைநீர் பாசன வசதியளிக்க அரசு அனுமதியளித்தது.

தற்பொழுது மேற்கூறிய 3,680 ஏக்கர் நிலங்களுடன் மேலும் 3,680 ஏக்கர் நிலங்களைச்சேர்த்து அனைத்துப் பகுதிக்கும் தெளிப்பான் முறை மூலம் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டு அளவில் பாசன வசதியளிக்க அரசின் ஆலோசனைக்கிணங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சுழல் நீர் தெளிப்பான் முறை எளிமையும் ஏற்றமும் மிக்கதோடு, சிக்கனமும், சேமிப்பும் வாய்ந்ததாகவும், தண்ணீரைச் சேமித்து பயிர் வளத்தைப் பெருக்குவதாகவும் உள்ளது.

மேலும் நடைநீர்ப்பாசனத்தின் மூலம் பாசன வசதி பெறும் நிலப் பரப்பைப் போன்று இருமடங்கு நிலம் அதே அளவு தண்ணீரால் தெளிப்பான் முறை மூலம் பாசன வசதி பெற இயலும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பாசன முறை மூலம் கரும்பு, கடலை, கம்பு சோளம், புளிச்சிக் கீரை, அகத்தி போன்ற புன்செய்ப் பயிர்களை வளமுடன் விளைவிக்க முடியும்.

நிதிகள்

திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய நிதிகள் அனைத்தும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கியிலிருந்து கரூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கி மூலம் சங்கத்திற்கு அளிக்கப்பட்டு வருகிறது.

பணிகள்

பதினான்கு பகுதிகளும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் மூன்று கட்ட வேலைகளாகப் பிரிக்கப்பட்டு முதல் கட்ட வேலையில் 5 பகுதிகளும், 2-ஆவது கட்ட வேலையில் 5 பகுதிகளும், மூன்றாவது கட்ட வேலையில் 4 பகுதிகளுமாக எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப் பட உள்ளன.

முதல் கட்டமாகப் புஞ்சைப் புகளூர், ஒரத்தை, நடையனூர், தளவாபாளையம், கோவிந்தம்பாளையம் ஆகிய திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த ஐந்து பகுதிகளும் 53,86,500 இலட்சம் மதிப்பீட்டில் 1,098 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவிருக்கின்றன.

சங்கப் பணி முன்னேற்றம்

முதல் ஐந்து திட்டப் பகுதிகளான புஞ்சைப் புகளூர், ஒரத்தை,. நடையனூர், தளவாபாளையம், கோவிந்தம்பாளையம், ஆகிய திட்டங்களில் குழாய்கள் பதிக்க வாணிகள் வெட்டப்பட்டு உள்ளன. ஒரத்தை, தளவாபாளையம் நடையனூர் ஆகிய பகுதிகளில் மூழ் கிணறு (Sump well) வெட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன. நீரேற்று மின் இயந்திரங்கள் அமைப்பதற்கு நிலம் வாங்கப்பட்டு கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடன் பெறுதல்

அனுமதிக்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ. 53,96,500-ல் இதுவரை ரூ. 3,15,675 கரூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கி மூலம் பெறப்பட்டுள்ளது. இத்தொகை திட்டச் செலவு முழுவதையும் சங்கமே ஏற்றுக்கொண்டு பணிபுரிய பயன்படுத்தப்படுகிறது. அதுவன்றி ஒவ்வொரு விவசாயிக்கும் ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 600 வீதம் நிலத்தை மேடுபள்ளம் திருத்தி பதப்படுத்தவும் தரப்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரும் பாரமாகக் கருதி வந்த பணத் தொல்லை அவர்களை விட்டகன்றது.

குழாய்கள் பதிப்பதற்கான புதை குழிகள் வெட்டும் வேலையும் நீரேற்று இயந்திர அறை அமைத்தல், இறைவைக் கிணறு தோண்டுதல் ஆகிய பணிகள் ஒப்பந்தக்காரர்களின் வாயிலாக சீரியமுறையில் வளர்ந்து வருகின்றன. தேவையான குழாய்களில் பெரும்பகுதி தருவிக்கப்பட்டு விட்டன. இயந்திரங்களும் சாதனங்களும் தருவிக்கப்படும் தறுவாயில் உள்ளன. இவை நீங்கலாக உள்ள 9 பகுதிகளில் நில மட்ட அளவு எடுத்தல், மதிப்பீடு தயாரித்தல் போன்ற களப்பணிகள் செவ்வனே செயல்பட்டு வருகின்றன.

மாலைக்கு முதற் பொருள் மணமுள்ள மலர். அதுபோலப் பேச்சுக்கு முதற் பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

—அண்ணா.

அரசு உதவி

அரசு சங்கத்தின் நிருவாகத்தைக் கவனிப்பதற்கு ஒரு துணைப் பதிவாளர், இரு கூட்டுறவு உப-பதிவாளர்கள் ஒரு முதுநிலை ஆய்வாளர், மற்றும் களப் பணியை நிர்வகிக்க ஒரு (பொதுப்பணித்துறை) உதவிப் பொறியாளர், மற்றும் இரு பொதுப்பணித்துறை மேற்பார்வையாளர்கள் போன்றோர்களின் பணியை இனமாக அளித்து வருகிறது.

மேலும் தற்போது அரசு ஒரு பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகத்தை நிறுவி அதற்குரிய அலுவலர்களையும் ஒரு நிருவாகப் பொறியாளரையும் நியமித்து சங்கத்தின் திட்டங்களை விரைவில் செவ்வனே முடிக்க ஆவன செய்துள்ளது. இவர்களின் ஒரு நிர்வாகப் பொறியாளர், இரண்டு உதவிப் பொறியாளர்கள், 8 இளநிலைப் பொறியாளர்கள், 8 மேற்பார்வையாளர்கள், ஒரு வரைவாளர், 2 உதவியாளர்கள் ஆகியோர் தற்பொழுது கோட்ட அலுவலகத்தில் பணி புரிந்து வருகின்றனர்.

மற்றும் சங்க உபயோகத்திற்குப் பொறியியக்கக் கருவி (Jeep) வாங்குவதற்கு அரசு ரூ. 35,500 கடனுதவி அனுமதித்துள்ளது.

புளிச்சக் கீரை பணப்பயிர்களிலேயே பணங் கொழிக்கும் பயிர்களில் ஒன்றாக இருப்பதால் இப்பகுதியில் கூட்டுறவுக் காகித ஆலை ஒன்றை நிறுவும் உத்தேசம் தமிழ்நாடு அரசிடம் இருந்து வருகிறது. திட்ட வேலைகள் அனைத்தும் 1972 டிசம்பர் மாதத்திற்குள் முடிவு பெறுவதற்கான அனைத்து முயற்சிகளும் தற்பொழுது எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் சீரிய முறையில் செயல்பட்டு வந்தாலும், நீர்ப்பாசன முறை விவசாயிகளுக்குப் புதியதாகவும், புதிரானதாகவும் இருப்பதால் ஒரு சில விவசாயிகள் இடையே அச்ச உணர்வு தோன்றி இருப்பதாகத் தெரிகிறது. . அச்சந் தவிர்த்து அரசின் உதவியால் இச்சங்கம் செய்யும் நவீன விவசாய நீர்ப் பாசனத் திட்டங்களுக்கு இட்டத்தால் பயனடையும் விவசாயிகள் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தங்கள் செயல்முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய செயல் அவர்களின் வழ்க்கையில் வளத்தையும் வளர்ச்சியையும் சேர்ப்பதோடு தமிழக அரசின் விரைவான, விவேகமான உணவு உற்பத்தித் திட்டங்களுக்குப் பெரும் உதவி புரிவதாகவும் இருக்கும் என்பதை அந்தப் பகுதி உழவர்கள், உழைக்கும் பெருமக்கள் உணர வேண்டும்.

'நாடு நமக்காக' என்ன செய்தது என்பதைவிட நாட்டிற்காக நாம் என்ன செய்தோம்' என்ற கென்னடியின் பொன்மொழிக்கிணங்க அப்பகுதியில் வசிக்கும் ஒவ்வொரு குடிமகனும் செயல்பட வேண்டும்; செயல்படுவார்கள் என்றே நம்புகிறோம்.

எல்லாத் தரப்பினரின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு இருந்தால் விரைவில் அத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு நாடும், நாட்டு மக்களும் விரும்பும் நல்ல பலன்கள் கைவரப்பெறும் என்பதே நமது திண்ணிய கருத்தும், விருப்பமுமாகும்.

— இராஜு



அண்ணா மொழி கேளீர்!

பாட்டாளிகளுடைய கடமை சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்தமாதிரி முயற்சி எடுத்துக்கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

* * *

“முழு வயிறு காணாதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணார், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர்—இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய்க் கொடிமரமாய்ப் பாதையாய்ப் பகட்டுக்களாய், அமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவுபெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

வியர்வை பணமாகிறது—வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிகள் வரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை, எத்தனை ஏழ்மை இடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றனர் என்பதனை மாணவர் உணர்ந்திடின் அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும். ஏற்புடைய் செயலில் ஈடுபடுவதே இத்தனையும் தந்திடும் ஏழை மக்களுக்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்”.

* * *

“எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, தீது இது, மரபு இது, மருள் இது என்பதனை ஆராய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மரபினைப் பெற்றிடச்செய்வதற்கும்,ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திடவேண்டும்.”

* * *

“எங்கோ ஏற்பட்ட கிறல்களிலிருந்து சிக்கல் எழுவது போன்ற தன்மை வாய்ந்ததல்ல, நமது பிரச்சினை. அவ்விதம் இருக்குமாயின், அந்தப் பிரச்சினையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது.

ஆனால், நமது பிரச்சினைகள் இதயத்தில் ஏற்படும் மண் அரிப்புப் போன்ற செயலால் ஏற்படும்.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போக வேண்டிய அவசியமில்லை—இருக்கிற வயலில் உரம் போட்டு—உழவு செய்யும் நிலைமையில் இருக்கிறோம்.

ஆம்; தத்துவங்களைத் தேடிச் செல்லவேண்டிய அவசியமில்லை—அதை விடக் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். இருக்கின்ற தத்துவங்களை வகைப்படுத்தித்—தொகைப்படுத்தித் தணிக்கைபடுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக் கூடுகளை அகற்றிக் கலந்துவிட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

கண்ணிய மிக்க எல்லாவற்றிற்கும் காவலர்கள் நாம்.

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே கண்டு கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். நமது சிந்தனைக் கட்டடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

* * *

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய மாணவர்கள் இந்தச் சமுதாயத்தை வளப்படுத்தும் பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் அவர்கள் காணும் வெற்றியில்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.”

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை . மனிதனைக் குடிசையில் வாழும் சாமானிய மனிதனை, தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் மாணவர் சமுதாயம் ஈடுபட வேண்டுகிறேன்.

தமிழகத்தில்

எலக்ட்ரானிக்-ரசாயனத் தொழில்கள் பெருகும்

“தொழில் ஆயிரம் மாண்புறச் செய்வோம்” என்று சொன்னார் பாரதியார்; விடுதலை பெற்ற இந்தியாவில் உள்ள மாநிலங்களிடையே நமது ‘தமிழகம்’ தொழில் துறையில் இப்போது மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்த வரை பெருந்தொழில்களும் சிறு தொழில்களும் தொய்வில்லாமல் தொடர்ந்து பல்வேறு இடையூறுகளுக்கிடையேயும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. எனினும் சிலவகையான தொழில்களில் தமிழகம் உரிய வளர்ச்சி பெறவில்லை—குறிப்பாக இரசாயனம் எலக்ட்ரானிக் போன்ற துறைகளில் நாம் மிக மிகப் பின் தங்கிய நிலையில்தான் இருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, புதிய துறைகளான இரசாயனம், எலக்ட்ரானிக் தொழில்களில் நாம் சற்று முனைப்பாக ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி ஈடுபடும்போது, தொய்வும் துவள்தலும் ஏற்படாத வண்ணம் திட்டங்கள் தீட்டிச் செயற்படுவது இன்றியமையாததாகிறது.

பொதுவாக எலக்ட்ரானிக் துறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மாறும் தன்மை உடையது. அறிவியல் துறையில் ஏற்படும் சிறு மாற்றமும் எலக்ட்ரானிக் துறையில் பெரிய சலனத்தை—சலசலப்பை உண்டாக்குந்தன்மையது. மக்களின் மாறுபட்ட விருப்பத்திற்குத் தக்கவாறு மாறுபட்ட பொருட்களையும் எளிதில் தயாரிக்கக் கூடிய அளவில் எலக்ட்ரானிக் தொழிற்சாலைகளின் கட்டுமானம் இருக்க வேண்டும். இத்துறையில் தயாரிக்கப்படும் எந்த ஒரு பொருளும் இரண்டொரு ஆண்டுகளுக்கு மேல் நிலையான மார்க்கெட் பெற்றிருப்பதில்லை. நேற்று ரேடியோ, இன்று டிரான்விஸ்டர் — நாளை டெலிவிஷன் — அதற்கு அடுத்து என்னவோ என்ற நிலையில் விரைவான மாற்றங்களைப் பெற்றிருப்பது இத்துறை. இத்துணை நுட்பத்தையும் உள்ளடக்கி, எலக்ட்ரானிக் துறை வளர வேண்டியுள்ளது. அதனால் இதற்குக் கன்சல்ட்டன்சி முறை கிடையாது. நிலையான ஒரே வகையான பொருட்களைத் தயாரிக்க எந்த எலக்ட்ரானிக் தொழிற்சாலை முனைந்தாலும் அது விரைவில் தோல்வியையே தழுவிக் கொள்ள வேண்டிய நிலைமை தான் ஏற்படும்.

இந்தத் துறையில் தமிழகம் வளர்ச்சி பெறத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியிருக்கிறது. சிட்கோ இதற்கென்று வல்லுநர் குழு ஒன்றை நிறுவியுள்ளது. அக்குழு மாதமொரு முறை கூடி விவாதிக்கும்.

தற்போது தமிழகத்தில் இரசாயனத் தொழிற் கூடங்கள் நிறுவுவதற்காக ஆறு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (1) சென்னை—அதன் சுற்றுப்புறம், (2) கோவை—மேட்டுப்பாளையம் புறநகர்ப்பகுதி, (3) மேட்டூர்—அதன் சுற்றுப்புறம்: (4) தூத்துக்குடி — சாகுபுரம் பகுதிகள். (5) நெய்வேலி—பண்ணுருட்டிப் பகுதிகள், (6) காரைக்குடி — மானாமதுரைப் பகுதிகள். இந்த ஆறு இடங்களிலும் ஆங்காங்கே உள்ள தொழிற் சாலைகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, அந்தப் பகுதிகளில் உள்ள தொழிலகங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களைத் தயார் செய்யக்கூடிய இரசாயனத்தொழிற்சாலைகள் தொடங்குவது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிந்து செயல்பட ‘சிட்கோ’ (Small Industries Development Corporation) திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வருகிறது. இந்த ஆறுதிட்டங்களுக்கும் கன்சல்ட்டன்சி (Consultancy) ஏற்படுத்தப்பட்டு விட்டன. ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட திட்டங்கள் ஒரே கன்சல்ட்டன்சி நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டால் அதற்காகப் பொருள் அளவில் சில சலுகைகள் உண்டென்பதால் இந்த ஆறு திட்டங்களும் ஒரே ஒரு கன்சல்ட்டன்சியிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

‘தமிழரசு’ சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு.

16-9-72 இதழிலிருந்து ‘தமிழரசு’ தமிழ் இதழுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 10 அரையாண்டுச் சந்தா ரூ. 5 ஆக மாறுவதால் பழைய சந்தாதாரர்களுக்கு 1-9-72 வரை அனுப்பிய இதழுக்கு 35 காசு வீதம் கணக்கிட்டு மீதமுள்ள சந்தாவுக்கு 40 காசு வீதம் 16-9-72 இதழிலிருந்து இதழ் அனுப்பப்படும்.

ஆங்கில இதழ் சந்தாதாரர்களுக்கு.

மாதம் இருமுறையாக வெளிவந்த ஆங்கில இதழ் 1-9-72 இதழிலிருந்து மாத இதழாக மாற்றப்படுகிறது. ஆங்கில இதழுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 5 அரையாண்டுச் சந்தா கிடையாது. ஆதலால் பழைய சந்தாதாரர்களுக்கு 1-9-72 வரை அனுப்பிய இதழ்களுக்கு 35 காசு வீதம் கணக்கிட்டு மீதமுள்ள சந்தாத் தொகைக்கேற்ப இதழ் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சந்தாவை உடன் புதுப்பித்தால் இதழ் அனுப்பப்படும். சந்தாவைப் புதுப்பிக்கும்போது சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதவும்.

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
சென்னை-2.

மேலும், இத்திட்டங்கள் சிறந்த முறையில் செயல்பட 14 வல்லுநர்கள் அடங்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அகில இந்திய அளவில் இரசாயனத் துறையில் உள்ள பல உள்துறைகளிலும் சிறப்புற்று விளங்குபவர்களும் அதிகாரப் பற்றற்றவர்களும் இடம் பெற்றுள்ளனர். இக்குழு இரண்டு திங்களுக்கு ஒரு முறை கூடி, அதுவரை எடுக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டவைகளின் மீதும், மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சிட்கோவுக்கு அறிவுரைகள் கூறும்.’

மேற்குறித்த புதிய ஏற்பாடுகளால், தமிழகத்தில் இரசாயனம், எலக்ட்ரானிக் தொழில் வளம் பெரிதும் வளர்ந்து பெருகுவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

—சாமி

செய்தியே சித்திரமே


இந்த ஆண்டு தமிழ்நாட்டில் இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்தில் சூரியகாந்தி பயிரிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
சூரியகாந்தி எண்ணெயில் தயாரித்த மிட்டாய்கள் முறுக்கு உருளைக் கிழங்கு வறுவல் கிடைக்கும்


தமிழ்நாடு அரசின் நன்கொடையாக மொரிஷியஸ் தீவிலுள்ள மக்கள் படிக்கப் பத்தாயிரம் தொடக்கப் பள்ளி தமிழ் நூல்களைப் பாடநூல் வெளியீட்டு நிறுவனம் அனுப்பியுள்ளது.
மொரிஷியஸ் தீவு

முயற்சி திருவினையாக்கும்

பன்னிரண்டு
ஆண்டுகளில் வருவாய்
இரட்டிப்பாக
தமிழக மாநிலத் திட்டக்
குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய
அமைப்பை
உருவாக்கும்
அரசின்
பணிகள்
செயல்திட்டங்கள்.

இப்படி
எங்கு
நோக்கினும்
நமது
நல்வாழ்வுக்காக
புதியபுதிய
திட்டங்கள்

இன்னும்
ஐந்தாண்டுகளில்
தமிழ்நாட்டில்
பேருந்துவழித்
தடங்கள்
அனைத்தும்
நாட்டுடைமை.

இவைகளால் புதுவாழ்வு
மலர நாம் ஆற்றவேண்டிய
கைம்மாறுதான்

அளவான குடும்பம்!

பெருகிடும் மக்கள்தொகையே இன்றையப்பெரும் பிரச்சினை?

▼ **குடும்ப நலத்திட்டம்**
- நமக்கும் நல்லது
- நாட்டுக்கும் நல்லது !

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்!



அதிக உரமேற்று அமோக விளைச்சல் தரும் நெல் வகைகள் விரும்பத்தக்க பயிரின் அமைப்பு, ஒரே சமயத்தில் சீராகப் பூத்து விளையும் தன்மை, உறுதியான தூர்கள் மற்றும் ஒளி நிலைக்கு ஏற்ற தோற்றம் ஆகிய மேம்பட்ட குணங்களை உடையதாக இருக்கின்றன. இந்த நெல் வகைகளின் வயது 105 முதல் 145 நாட்கள் வரையாகும். அமோக விளைச்சல் தரும் நெல் வகைகளின் மகசூல் கொடுக்கும் திறன், அவைகளுக்கு ஏற்ற பட்டம், ஆகியவற்றை நிர்ணயிக்கும் பொருட்டு, ஐ.ஆர். 8, ஐ. ஆர். 20, ஐ.ஆர். 22 ஆகிய நெல் வகைகள், கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நெல் ஆராய்ச்சிப் பிரிவில் 15 நாட்களுக்கு ஒரு முறை விதைத்துப், பிறகு நடவு செய்து, ஒரு ஆண்டு முழுவதும் பரிசீலனை செய்யப்பட்டது.

ஐ.ஆர். 8

" அதிசய நெல் ஐ.ஆர். 8 " அமோக விளைச்சல் கொடுக்கும் நெல் வகைகளில் தலை சிறந்தது. ஜூன் மாதம் இரண்டாவது வாரம் முதல் ஆகஸ்டு மாதம் முதல் வாரம் வரை விதைத்து நடவு செய்தால் ஒரே சீராக ஹெக்டேருக்கு 6,500 முதல் 7,500 கிலோ வரை மகசூல் கொடுக்கவல்லது. ஆனால் செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாற்று விட்டு, ஐ.ஆர். 8 பயிர் செய்தால் மகசூல் குறைந்து, ஹெக்டேருக்கு 1,000 கிலோ வரை கிடைப்பதைத் தவிர, பயிரின் வயது 135 நாட்களிலிருந்து 148 நாட்களாக அதிகரிக்கின்றது. ஆகவே, ஐ.ஆர். 8 நெல் வகையானது பின் பட்டத்திற்கு ஏற்றது அல்ல என்று நிரூபிக்கப்படுவதுடன் இவ் வகைக்குக் குளிர் பருவத்தைத் தாங்கும் தன்மை இல்லை என்று தெளிவாகிறது.

முதல் பட்டத்தின் பிற்பகுதியில் அல்லது காலதாமதமாக நாற்று விட்டுப் பயிர் செய்த ஐ.ஆர். 8 நெற் பயிர் குருத்துப் பூச்சி, இலைச் சுருட்டும் புழு போன்ற பூச்சி வகைகளாலும், இலைக் கருகல் நோய் (பிளாட்), இலைப் புள்ளி நோய் போன்ற நோய்களாலும் தாக்கப்படுகிறது. குலை நோயை அல்லது கொள்ளை நோயை ஓரளவு இவ் வகை தாங்கும் தன்மை படைத்துள்ளது.

நவரைப் பட்டத்தில் அதாவது கோடைப் பட்டத்தில் (ஜனவரி அல்லது பிப்ரவரி விதைப்பு) இவ் வகை ஹெக்டேருக்கு 7.5 முதல் 8.2 டன் வரை அமோக விளைச்சல் தரவல்லது. அப் பட்டத்தில்தான் கிணற்றுப் பாசனத்தில் — சிறப்பாகக் கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் இவ் வகை பெருவாரியான நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது.

ஐ.ஆர். 20

முதல் பருவத்தில் (ஜூன்—ஜூலை) விதைத்துப் பயிர் செய்யப்படும், ஐ.ஆர். 20 என்ற தரமான நெல் வகை ஹெக்டேருக்கு 5.5 முதல் 6.00 டன் வரை நிலையான மகசூல் கொடுக்கிறது. அதன் வயது 127 முதல் 147 நாட்களாகும். ஏப்ரல் மாதத்தில் விதைத்துப் பயிர் செய்ததில் உச்ச அளவு மகசூலாக 7.7 டன் கிடைத்திருக்கிறது. இவ் வகை நெல், குருத்துப் பூச்சியையும், கொள்ளை நோய் , இலைக் கருகல் நோய் ஆகியவற்றையும் தாங்கும் சக்தி வாய்ந்ததாக இருப்பதால் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நாற்று நட்டுச் சாகுபடி செய்ய ஐ.ஆர். 20 நெல் ஐ.ஆர். 8-ஐ விட மிகவும் சிறந்தது. மேலும், நீர்ப்பாசன வசதியுள்ள ஆயக்கட்டுப் பகுதிகளில் எல்லாப் பருவத்திற்கும் பல்வேறு சூழ்நிலையில் கையாளுவதற்கு ஏற்ற ரகமாகும்.

ஐ.ஆர். 22

இதுவும் ஐ.ஆர். 20 வகையைப் போல ஒரு தரமான நெல் வகையாகும். ஏப்ரல் மாதத்தில் நாற்று விட்டு சாகுபடி செய்தால் ஹெக்டேருக்கு 7.0 டன் வரை மகசூல் கொடுக்க வல்லது. இதன் வயது 118 நாட்கள் முதல் 139 நாட்கள் வரையாக உள்ளது. முதல் பட்டத்தின் துவக்கத்தில் (அதாவது ஜூன்—ஜூலை விதைப்புகள்) ஹெக்டேருக்கு 2.9 டன் மகசூல்தான் கொடுக்கிறது. நவரைப் பட்டத்தில் அதாவது, கோடைப் பட்டத்தில் இதனுடைய விளைச்சல் நிலையாக இருக்கும் காரணத்தால் பாசன வசதியைப் பொறுத்தே, பரிந்துரைக்கப்படுகிறது.

அமோக விளைச்சல் வேண்டுவோர் அதிசய நெல் ஐ.ஆர். 8 நெல் வகையைத் தேர்ந்தெடுக்கலாம்!

தரமான அரிசியை விரும்புகின்றவர்கள் ஐ.ஆர். 20 அல்லது ஐ.ஆர். 22 நெல் வகைகளைப் பயிரிடலாம்.

* * *

அமோனியம் குளோரைடு அமோனியம் சல்பேட்டைப் போன்று ஒரு சிறந்த தழைச் சத்தைக் கொடுக்கும் இரசாயன உரம் என்று கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து தெரியவந்தது. அமோனியம் குளோரைடில் 25 சத தழைச் சத்து உள்ளது. ஆனால், அமோனியம் சல்பேட்டில் 20 சத தழைச் சத்து மட்டுமே உள்ளது. அமோனியம் குளோரைடு அமோனியம் சல்

பேட்டை விட விலையும் மலிவானது. அமோனியம் குளோரைடு போடப்பட்ட நிலத்தில் அறுவடைக்குமுன்புஎடுத்துப் பரிசோதித்த மண்ணில் குளோரைடு அயனிகள் அடர்த்தி குறைந்து காணப்பட்டது இவ்வுரத்தின் இன்னொரு முக்கிய சிறப்பாகும்.

எனவே, இந்த உரத்தை உழவர்களுக்குப் பரிந்துரைக்கும் முன்பு, சோதனை நிருபணங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் உழவர்களின் நிலத்தில் சோதனை, செயல் விளக்கங்களை நடத்தத் திட்டமிட்டுக் கீழ்க் கண்டவர்களின் வயல்களில் செயல் விளக்கங்கள் அமைக்கப் பட்டன.

(1) திரு எஸ். பாண்டுரங்கம், சேசங்கனூர், கண்டமங்கலம் வட்டாரம், தென்ஆர்க்காடு மாவட்டம்.

(2) திரு பரந்தாமன், பி.கே புரம், கே.வி. குப்பம் வட்டாரம், வடஆர்க்காடு மாவட்டம்.

(3) திரு பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி (வடக்கு) வட்டாரம், கோவை மாவட்டம்.

(4) திரு குமாரசாமி, நெய்க்காரப்பட்டி, பழனி வட்டாரம், மதுரை மாவட்டம்.

(5) திரு ஏகாம்பரம், சில்லவட்டம், மதுராந்தகம் வட்டாரம், செங்கற்பட்டு மாவட்டம்.

(6) திரு ஏ.பாலகிருஷ்ணன், குட்டியன்குண்டு, திருப்பரங்குன்றம் வட்டாரம், மதுரை மாவட்டம்.

இந்த உழவர்களின் நிலத்தில், கேழ்வரகு (ராகி) பயிரில் நடத்திய சோதனையில் அமோனியம் குளோரைடு உரமானது அமோனியம் சல்பேட்டை விட 2.73 சதம் முதல் 38.29 சதம் வரை அதிக விளைச்சல் கொடுத்துள்ளது. அதாவது அமோனியம் குளோரைடு சராசரியாக 20.74 சதம் அதிக மகசூல் கொடுத்துள்ளது.



இந்தச்சோதனை நிருபணத்தின் முடிவிலிருந்து அமோனியம் குளோரைடு கேழ்வரகு பயிருக்குத் தலைசிறந்த தழைச் சத்தை கொடுக்கக்கூடிய இரசாயன உரமாகப் பரிந்துரைக்கப்படுகிறது. இதைத் தவிரக் குறைந்த செலவில், அமோனியம் சல்பேட்டை விட, அதிக மகசூலைக் கொடுக்க வல்லது எனவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:—100 கிலோ அமோனியம் சல்பேட் விலை ரூபாய் 63.70.

100 கிலோ அமோனியம் குளோரைடு விலை ரூபாய் 52.00.

• • •

சப்போட்டா சற்றுக் கடினத் தன்மையுள்ள ஒரு பழ வகையாகும். கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பல்லாண்டுகளாக 13 சப்போட்டா ரகங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவற்றில் 'கிரிக்கெட் பந்து' (Cricket Ball) என்ற ரகம் அதனுடைய பெரிய அளவிற்குப்(பருமன்)பெயர்பெற்றது. ஆனல் பழத்தின் தரம் மற்றவைகளுக்கு ஒப்பானதாக இல்லை. 'ஓவல்' என்ற ரகம், சுவையுள்ள பழத்தையும், அதிக மகசூலையும் கொடுக்க வல்லது. ஆனல், பழத்தின் பருமன் மிகச் சிறியது என்ற ஒரு குறை மட்டும் உள்ளது.

அதிக மகசூலையும், பழத்தின் பருமனையும் ஒருங்கிணைத்து ஒரு ரகம் கண்டுபிடிக்கக் 'கிரிக்கெட் பந்து', 'ஓவல்' ஆகிய இரு ரகங்களையும் ஒட்டுச் சேர்த்து, ஒரு புதுரகத்தை உருவாக்க 1953ஆம் ஆண்டிலிருந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒட்டுகளில் தலைசிறந்த ஓர் ஒட்டு ரகத்திற்குக் ''கோ. 1 சப்போட்டா'' என்று பெயரிடப்பட்டது.

கோ:—1 வீரிய சப்போட்டா ரகமானது 'கிரிக்கெட் பந்து' ரகத்தின் பழப் பருமனையும், 'ஓவல்' ரகத்தின் தரத்தையும் கொண்டுள்ளது. இந்த ஒட்டு ரகம் நான்காவது ஆண்டிலேயே பலன் தர ஆரம்பித்துவிடும். அதனுடைய பழமானது நடுத்தரப் பருமனும், முட்டை வடிவமும், கவர்ச்சியான செம்பழுப்பு நிறச் சதையும் கொண்டது. சராசரியாக ஒரு மரத்திற்கு 40 கிலோ பழம் 1971-ஆம் ஆண்டில் கொடுத்திருப்பினும், சில மரங்கள் 84 கிலோ பழங்களைக் கொடுத்துள்ளன. மரத்தின் வயது அதிகரிக்கும்போது அதிகமாக மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வீரிய ரகத்தின் ஒட்டுகள் 1973-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கோவை கல்லூரிப் பழத் தோட்டத்திலிருந்து பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

(தகவல்: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்-3.)

197



தமிழக அரசின் சீரிய திட்டங்களில் ஒன்று இளைஞர் அணித் திட்டம். படித்துப் பட்டம் பெற்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் சமுதாய மறு மலர்ச்சிக்கு உதவுவதும் இதன் அடிப்படைத் திட்டமாகும்.

தற்போது தமிழகமெங்கும் 1,643 இளைஞர் அணி ஆண் தொண்டர்களும், 194 மகளிரும் உள்ளனர். இவர்கள் மக்கள் நலத் துறை உதவியுடன் கிராமங்களில் அம்மை ஊசிகள் போடுகின்றனர். குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடுகின்றனர்.

இளைஞர் அணியில் சேர்ந்துள்ள மகளிர், அரசு மருத்துவ மனைகளில் மருத்துவர்களுக்கும், நோயாளிகளுக்கும் உதவி வருகின்றனர். இவையன்றி, மாவட்டங்கள் தோறும் முதியோர் கல்வி வகுப்புகள் நடத்தல், இளைஞர் மன்றம் அமைத்தல், கிராமப் புறங்களில் கழி பிறைகள் அமைத்தல், வேளாண்மைக்குப் புதிய கருவிகளைப் பயன்படுத்துவது குறித்து உழவர் குடிமக்களுக்கு எடுத்துரைத்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இளைஞர் அணிக்குக் கூடுதலாக 1,450 ஆண் தொண்டர்களையும், 150 பெண் தொண்டர்களையும் சேர்க்கும் திட்டம், அரசின் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தில் அடங்கும்.

பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலவாக்கம், பெருங்குடி, வேங்கை வாசல், ஒட்டியம்பாக்கம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் இளைஞர் அணியினரின் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு ஆகஸ்டு, 1971 முதல் ஜூன் 1972 முடிய, பாலவாக்கத்தில் 37 பேரும், பெருங்குடியில் 25 பேரும், வேங்கை வாசலில் 20 பேரும், ஒட்டியம்பாக்கத்தில் 12 பேரும் வயது வந்த பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கும் திட்டத்தின் கீழ்ச் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள்.

அது போல இவ்வாண்டு முதியோர் வகுப்பில் 4 ஊராட்சிகளிலுமாக 45 பேர் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். இவர்களுக்கான 136 வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

நான்கு ஊராட்சிகளிலுமாக மொத்தம் 33 கழிவு நீர்ப் பிறைகள் (கக்கூசுகள்) அமைக்கப்பட்டுள்ளன. இதில், கிராம மக்களுக்குப் போதுமான பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

கிணற்றுச் சுற்றுப்புறங்களைச் சுத்தப்படுத்தும் திட்டத்தின் கீழ் 18 கிணறுகளின் சுற்றுப்புறங்கள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

பொது இடங்களைச் சுத்தம் செய்யும் திட்டத்தின் கீழ் 20 இடங்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

நான்கு ஊராட்சிகளிலுமாக 36 வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 5 கோழிப் பண்ணைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறு சேமிப்புத் துறையில் 22 பேர் சேர்க்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆங்காங்கு இளைஞர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, 62 இளைஞர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டுக்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டுவருவதோடு, சமூக ஒப்புரவு நெறியும் கற்பிக்கப்பட்டு வருகிறது.

கிராம மக்களுக்கு முக்கியமான செய்திகளை அறிவிப்பதற்கும், முக்கியமான் பிரச்சினைகளில் அவர்கள் பரிகாரம் காண்பதற்குமாக இளைஞர் அணியின் சார்பில் 21 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

அண்மையில் கடந்த 3—6—1972-ல் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் விழாவையொட்டி, மேற்குறிக்கப்பட்ட 4 ஊராட்சி மன்றங்களிலும் இளைஞர் அணித் தொண்டர்களின் அரு முயற்சியால் விளையாட்டுப் போட்டிகளும், குழந்தை வளர்ப்புப் போட்டிகளும் நடத்தப் பெற்றன. மேலும், பலருக்கு அம்மை தடுப்பு ஊசியும், குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன.

பாலவாக்கம் கிராமத்தில் எழுச்சூர் முதல்நிலை நல்வாழ்வு நிலையப் பணியாளர்கள் 360 பேர்களுக்கு மறு முறையாக அம்மைத் தடுப்பு ஊசிகளும் 9 பேருக்கு முதல் தடவையாக அம்மைத் தடுப்பு ஊசிகளும், 31 பேர்களுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன.

பெருங்குடி, ஒட்டியம்பாக்கம் கிராமங்களில் வேளச்சேரி முதல் நிலை நல்வாழ்வு நிலையப் பணியாளர்களால் அம்மைத் தடுப்பு ஊசியும், முத்தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன. பெருங்குடி கிராமத்தில், 345 பேருக்கு மறு முறையாக அம்மைத் தடுப்பு ஊசியும், 130 பேர்களுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போட்டனர்.

ஒட்டியம்பாக்கம் கிராமத்தில் 233 பேர்களுக்கு மறு முறையாகவும், 6 பேர்களுக்கு முதன் முறையாகவும் அம்மைத் தடுப்பு ஊசிகளும், 60 பேர்களுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போட்டனர்.

வேங்கைவாசல் கிராமத்தில், போரூர் முதல்நிலை நல்வாழ்வு நிலையப் பணியாளர்களால் 367 பேர்களுக்கு மறு முறை அம்மைத் தடுப்பு ஊசியும், 14 பேர்களுக்கு முதல் முறை அம்மைத் தடுப்பு ஊசியும் போடப்பட்டன.

இவ்வாறு தடுப்பு ஊசிபோட்டுக் கொள்வதற்காகக் குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதிலும், இன்ன பிற வகைகளிலும் இளைஞர் அணித் தொண்டர்களின் ஈடற்ற பணியைக் மக்கள் பாராட்டுகிருர்கள்.

—பழ.

நாட்டின் வளமும்
உங்கள் நலனும்
எங்கள் விருப்பம்

கரூர் வைஸ்யா பாங்கு லிட்.,

தமிழகத்தின் தலைசிறந்த வங்கி

உங்களுக்குச் சேவை செய்யக் கீழ்க்கண்ட கிளைகள் விரைவில்
திறக்கப்படவிருக்கின்றன.

1. பேங்களூர்   2. சித்தூர்   3. கடலூர்   4. தாம்பரம்

G. S. அண்ணுசாமி,
சேர்மன்.

தயாரிப்பாளர்களுக்கு 1968-69-ம் ஆண்டில் ஏற்றுமதியில் சிறப்புற்று விளங்கியதற்காக இந்திய அரசின் பாராட்டு இதழ் கிடைத்துள்ளது.
தரம், நீண்டகால சேவை, பாறை போன்ற உறுதி ஆகிய சிறப்பு அம்சங்கள் பொருந்திய சங்கர் சிமெண்ட் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயைப் பெருக்குவதிலும் முன்னணியில் நிற்கிறது.

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
தன் பில்டிங், சென்னை 2
25 ஆண்டுகள் நிலைத்து, இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது!
இலவசத் தொழில் நுட்ப ஆலோசனைக்கு:
சிமெண்ட் சர்வீஸ் பீரோ, குரோவ்,
சென்னை-18

தற்கொலை !

தற்கொலை என்பது கோழைத்தனத்திலும் கடைந்தெடுத்த கோழைத்தனமாகும். வாழ்க்கையில் எல்லா நிலைகளையும் கடந்து வாழ்பவன்தான் உண்மையில் மனிதன். எனவே, வாழ்க்கையைக் கற்கண்டு என்று தவருக எடை போட்டுவிட்ட சிலருக்கு இந்தச் சக்தி இருப்பதில்லை. அதனுல்தான் அவர்கள் கோழைகளாகித் தம்மைத் தாமே அழித்துக் கொள்கிருர்கள்.

இதோ ஒரு சோகக் கதை !

ஆனுல், இது உண்மைக் கதை!

மாலை மணி 6.

வாழ்க்கையில் வெறுப்படைந்த—அதாவது மேற்சொன்ன வகையைச் சேர்ந்த ஒருவர்—தான் குடியிருக்கும் வீட்டில்—தமது அறைக்குள்ளே ....

மாலை மணி 6.05

'' ஹலோ .... ''

தொலைபேசியில் பேசியவருக்கு டயல் நெ. 100-லிருந்து பதில் வருகிறது.

குட்மார்னிங் சார், எமர்ஜென்சி போலீஸ். ரெடி டு—சர்வ் யூ.

'' ஹலோ ! ... .நான் திருமாவளவன் தெருவிலிருந்து பேசுகிறேன் ......எங்கள் வீட்டில் ஓர் ஆள் ....ஆமாம், ஓர் ஆள் தூக்குப் போட்டுக் — ''

'டயல் நெ. 100. போலீஸ் வேன்' காற்ருய்ப் பறக்கிறது.

மணி 6.10.

'தடதட'வென்று காவலர்கள் அந்த அறையின் கதவை உடைத்து உள்ளே நுழைகிருர்கள்.

அங்கே—

தொங்கிய கயிறு.

அந்தக் கயிற்றில் தலையை நுழைக்கும் நேரம் !

உடனே ஆளைப்பிடித்துக் கீழே இறக்கிவிடுகிருர்கள் காவலர்கள்!

பிரியப்போகும் ஓர் உயிரைக் பிணமாகப் போகும் ஒரு மனிதரை, அந்த இக்கட்டான சமயத்தில் விரைந்து வந்து காப்பாற்றி விடுகிருர்கள் காவலர்கள்.

அந்தச் சமயத்தில் காவலரின் இத்தனை விரைவும், துடிப்பும், தக்க நடவடிக்கையும் மட்டுமே நாம் அறிகிருேம். ஆனுல், புகார் வந்ததற்குப் பிறகு பின்னணியில் என்ன நடக்கிறது என்பதை அறிவோமா?

''அவசரப் போலீஸ் உதவிக்கு டயல் நெ. 100-க்குப் போன் செய்யுங்கள் ''

இந்த அறிவிப்பை நாம் பல இடங்களில் பார்த்திருக்கிருேம்.

இந்த டயல் நெ. 100 வண்டியை நகரத் தெருக்களிலும் அடிக்கடி கண்டிருக்கிருேம்.

நகரின் எங்கோ ஒரு மூலையில் சண்டை நடக்கிறது ; சச்சரவுகள் ஏற்படுகின்றன ; கலகங்களும், போராட்டங்களும் நிகழ்கின்றன ; பொதுமக்கள் அவதிக்குள்ளாகின்றனர் ; நிலைமை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மோசமாகிறது.

உடனே ஒருவர், தொலைபேசியில் நெ. 100-க்குப் புகார் கொடுக்கிருர்.

சில நிமிடங்களில் போலீஸ் வேன், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து வருகிறது !

இது எப்படி நடக்கிறது ?

அது ஒரு கதை.

அவசரப் போலீஸ் உதவிக்கு டயல் நெ. 100-க்குப் புகார் செய்யும் போது, எழும்பூர் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திலுள்ள 'கண்ட்ரோல் அறையின்' (control room) காவலர்கள், உடனே புகாரைப் ஒரு புத்தகத்தில் பதிவு செய்து கொள்கிருர்கள்.

கண்ட்ரோல் அறையில் 'டயல் நெ. 100' பொருத்தப்பட்ட தொலைபேசிகள் மொத்தம் ஏழு இருக்கின்றன ; அதாவது இந்த ஏழு தொலைபேசிகளும் நெ.100-க்காகப் பணியாற்றுகின்றன.

ஒரே சமயத்தில் பல இடத்திலிருந்து வரும் புகார்களைக் கவனிக்கவே இத்தனைத் தொலைபேசிகளும் இங்கே பொருத்தப்பட்டிருக்கின்றன.

புகார் வந்ததும் போலீசார் என்ன செய்கிருர்கள் ?

புகார் வந்ததும் ஒரு காவலர் அந்தப் புகாருக்கு ஒரு தொடர் எண் கொடுத்துப் புத்தகத்தில் எல்லா விவரங்களையும் பதிவு செய்து கொள்கிருர். பிறகு 'மாஸ்டர்' கண்ட்ரோல் அறை (Master control room) யிலுள்ளவர்களுக்குத் தகவல் தருகிருர். அவர்கள் நகரத்தின் பல பகுதிகளில் சுற்றிக் கொண்டிருக்கும் 'டயல் நெ. 100' வண்டியோடு தொடர்பு கொண்டு இந்த இடத்தில், இன்ன சம்பவம் நடக்கிறது என்ற தகவல் தருவார்கள். உடனே அந்த வண்டி இரண்டு மூன்று நிமிடங்களில் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று தக்க நடவடிக்கை எடுக்கும். இந்த வண்டியில் ஒரு தலைமைக் காவலர், மூன்று காவலர்கள், ஒரு ஓட்டுநர் இருப்பார்கள். அனைவரும் கையில் கேடயம் வைத்திருப்பார்கள்.

புகார் வந்த சமயம், இங்குள்ள தொடர்பகத்தின் மூலம் சம்பவம் நடந்த வட்டத்தின்

காவல் நிலையத்துக்கும் தகவல் தருவார்கள். அவர்களும் அந்த இடத்திற்கு வருவார்கள்.

சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற போலீஸ் வேனில் உள்ளவர். அங்குள்ள நிலைமைகளை வண்டியில் இருந்து கொண்டே கண்ட்ரோல் அறைக்குத் தெரிவிக்கிறார். கண்ட்ரோல் அறையில் பொருத்தப்பட்டிருக்கும் ரேடியோ அத்தகவல்களை ஒலிபரப்புகிறது. நகரத் தெருக்களில் எந்த மூலை முடுக்கில் சென்றாலும், ஓடும் வண்டியிலிருந்து கொண்டே கண்ட்ரோல் அறைக்குத் தகவல்களைத் தரமுடியும்; அதேபோலக் கண்ட்ரோல் அறையிலிருந்தும் வண்டியோடு தொடர்பு கொள்ளமுடியும்.

சம்பவம் நடந்த இடத்திற்குப் போனதும் போலீசார், என்ன செய்கிறார்கள் ?

1. 'போக்கு வரத்து விபத்து' சம்பந்தமாக இருந்தால், போக்கு வரத்துப் போலீசார் உதவியோடு, விபத்து நடந்த இடத்தை 'மார்க்' செய்துவிட்டுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் வசதி செய்வார்கள். பிறகு போக்குவரத்துப் போலீசாரிடம் பொறுப்பை ஒப்படைப்பார்கள். விபத்தில் யாருக்கேனும் காயம் ஏற்பட்டிருந்தால் அவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதும் டயல் நெ. 100 போலீசாரின் கடமையாகும்.



நெ. 100 ஊர்தி, சம்பவம் நடந்த இடத்துக்குப் புறப்படத் தயாராகிறது.

2. களவு, கொள்ளை போன்ற சம்பவங்கள் நடந்தஇடத்திற்குச் சென்றதும், சம்பவம் பற்றிய விசாரணைகள் நடத்துகிறார்கள்; விசாரணையில் கிடைத்த தகவல்களைப்பெரிய போலீஸ் அதிகாரிக்குத் தெரிவிக்கிறார்கள். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், அந்த இடத்தைத் துப்புத் துலக்கவும் துப்பறியும் நாய்கள் அவசியமானால் அனுப்புவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். அது சம்பந்தமாகப் புலன்விசாரணைகளைக் கவனிக்க குற்ற இலாகா (crime Department) பொறுப்பேற்றுக் கொள்கிறது.

3. சட்டம், ஒழுங்கு, (Law and Order) இவைகளை மீறுவதாயிருந்தால், போலீசார் முதலில் அங்கு அமைதியை உண்டாக்கப் பாடுபடுகிறார்கள். அப்படியும் அமைதிக்குப் பங்கம் ஏற்படுமானால் — தங்களால் சமாளிக்க முடியாது போனால்— கண்ட்ரோல் அறையுடன் தொடர்புகொண்டு, பெரிய வேன் மூலம் மேலும் போலீஸ் உதவியைக் கோருகிறார்கள்.

இப்படி மூன்று வழிகளில் 'டயல் நெ. 100' செயலாற்றுகிறது.

ஒரு நாளைக்குச் சுமார் 25 அல்லது 30 புகார்கள் வருகின்றன. தேர்தல் போன்ற காலங்களில் அதிகப் புகார்கள் வரும். இரவும் பகலும் 24 மணி நேரமும் இந்தப் பிரிவு மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறது. நாள்தோறும் மூன்று ஷிப்டுகள் பணியாற்றுகின்றன. ஒரு ஷிப்டில் 22 பேர் பணி புரிகின்றனர். பன்னிரண்டு வண்டிகள் (Petrol Vehicles) நகரத்தில் சுற்றிக் கொண்டே இருக்கின்றன.

கண்ட்ரோல் அறை நெ. 100 ஊர்திகளைக் கண்காணிக்கிறது.

கிணற்றில் விழுந்துவிட்டாரா?

குழந்தை காணாமல் போய் விட்டதா ?

பாம்பு வீட்டில் புகுந்து விட்டதா? களவாடல் செய்து விட்டார்களா?

எல்லாவற்றுக்கும் இந்த 100 நமக்கு உதவி செய்ய ஓடி வருகிறது !

தனிப்பட்ட நபர்களுக்குள் சண்டை சச்சரவு ஏற்பட்டால் 'டயல் நெ. 100' என்ன செய்யும்?

சம்பவம் நடந்த இடத்திலேயே விசாரணை செய்து, அந்த வட்டக் காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்டவர்களை ஒப்படைக்கிறது.

இவை மட்டுமா ?

கண்ட்ரோல் அறையிலிருந்து காவல் நிலையங்களுக்குத் தகவல்களைத் தரவும், அங்கிருந்து தகவல்களைச் சேகரிக்கவும் போலீஸ் எக்ஸ்சேஞ் (Police Exchange) தொலைபேசிகள் இருக்கின்றன. இதனால் புகார்களை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்ய மிக்க உதவியாக இருக்கிறது.

சிறையிலிருந்து கைதி தப்பி விடுகிறான்.

போலீஸ் காவலிலிருந்து கைதி ஓடிவிடுகிறான்.

அப்போது அவனை எங்கிருந்தாலும் கண்டுபிடிக்க நகரத்தின் எல்லாக் காவல் நிலையங்களுக்கும் 'ஒரே நேரத்தில்' தகவல் தர வேண்டும். அது முடியுமா ?

அதற்கும் கண்ட்ரோல் அறையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. (Telephone Broadcast) என்னும் கருவி இந்த வேலையை எளிதில் செய்து முடித்து விடுகிறது.

வீடு தீப்பற்றி எரிகிறது. டயல் நெ. 101-க்குத் தெரிவிக்கிறார் ஒருவர்.

தீயணைப்புத் தலைமை நிலையத்தின் ஆணைப்படி தீயணைக்கும் படையினர் விரைகின்றனர். உடனே தீயணைக்கும் பிரிவு அதிகாரி, டயல் நெ. 100-க்கும் இந்தத் தகவல்களைத் தருகிறார். தகவல் கிடைத்ததும் 'டயல் நெ. 100' சம்பவம் நடந்த இடத்திற்கு விரைகிறது. அங்கு போலீசாரின் கடமை என்ன தெரியுமா ?

1. தீப்பிடித்த வீட்டிலிருந்த பொருள்கள் கொள்ளை போகாமல் பாதுகாத்தல்..

2. கலவரம் ஏற்படாமல் அமைதி உண்டாக்குதல்.

3. மருத்துவ மனைக்குத் தகவல் தருதல்; தீயினால் காயம் அடைந்தவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு போதல், ஆம்புலன்ஸ் வண்டியை வரவழைத்தல். அவசரச் சமயங்களில் இந்த வண்டிகள் சிவப்பு விளக்குடனும், அபாயச் சங்கு ஒலியுடனும் செல்லும்.

மேலும் கொலை, கொள்ளை, விபத்துகள், கல்லெறி போன்ற வன்முறைச் சம்பவங்களின் போது இங்கிருந்து புகைப்படக்காரர்களும் அனுப்பப்படுகின்றனர்.

டயல் நெ. 100 வானொலிப் பணிமனை.

கண்ட்ரோல் அறையிலும், ஆணையாளர் அறையிலும் சென்னை நகரப் படம் வரையப்பெற்ற ஒரு பலகை இருக்கிறது. அதில் சிறு சிறு மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஓர் இடத்தில் தீயோ, அல்லது கார் திருட்டோ நடந்தால் அது எந்த வட்டத்தில் நடந்திருக்கிறது என்பதை இப்பலகை விளக்கு எரிவதன் மூலம் காட்டுகிறது.

மேலும், ஒரு நாளைக்கு எத்தனை புகார்கள் வருகின்றன? அந்தப் புகார்களைக் கவனித்து நடவடிக்கைகள் எடுக்க எவ்வளவு நேரங்கள் , ஆயின? என்பதையும் இது காட்டுகிறது. அதாவது ஒரு நாளையப் புகார்களும், அவற்றுக்காக ஏற்பட்ட சராசரி நேரமும் இந்தப் பலகையில் நாள் தவறாமல் குறிக்கப்படுகிறது;

புகார்கள் எந்த நேரத்தில் வந்தன ? எந்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டன என்பதெல்லாம் அவ்வப்போது கண்காணிக்கப்படுகின்றன. காவல் துறை உதவி, துணை ஆணையாளர்கள் வெளியில் செல்லும் போது, தம்மை யாரென்று காட்டிக் கொள்ளாமல் நெ. 100-க்குப் போன் செய்வார்கள். கண்ட்ரோல் அறை சரியாக இயங்குகின்றனவா என்பதை அறியவே இப்படிப் பரிசோதனை செய்வது வழக்கமாம். வானொலிப் பணிமனை (Radio workshop) இதோடு இணைந்திருக்கிறது. கண்ட்ரோல் அறை சரிவர இயங்கவும், வயர்லஸ் பொருத்தப்பட்ட சுமார் 80 ஊர்திகளைக் கண்காணிக்கவும், பழுது பார்க்கவும் இப்பிரிவு துணை செய்கிறது. மற்றும் சாலைப் போக்குவரத்தில் ஊர்திகளின் வேகத்தைக் கணக்கிடும் 'ராடார்' என்னும் கருவியைப் பயன்படுத்துவதும் இப்பிரிவின் வேலையாகும்.

" ஹலோ ! ஹலோ ! நாளை தான் பேசறேன் ! இங்குக் கலாட்டா உடனே வாருங்கள் ! "

டயல் நெ. 100 வண்டி விரைந்து போகிறது. அங்கே கலாட்டாவுமில்லை. கத்தரிக்காயுமில்லை !

விளையாட்டுக்காக, வேலையற்ற ஒருவர் தந்த பொய்ப் புகாரினால் காவலருக்கு ஏற்படும் கால விரயமும், தொந்தரவும் தான் எத்தனை ! எத்தனை ! ! இதனை உணர்பவர்கள் இப்படிப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வார்களா ?

—பி.வி.ஜி

பருத்தி விவசாயிகள் கவனிக்கவும்.

5A/152 (760)

உங்கள் பயிரை சார் உறுஞ்சி நாசம் விளைவிக்கும் பூச்சிகளிலிருந்து

பாதுகாக்க **மெடாஸிஸ்டாக்ஸ்**

கடித்து மென்று பயிருக்கு தீங்கிழைக்கும் பூச்சிகளை

:.பாலிடால்

சிறந்த முறையில் கட்டுப்படுத்துகிறது.

காய்ப் புழுக்-
களுக்கு ஏற்றது விசேஷ பூச்சி மருந்து

மெடாஸிட்காம்பி

அடைப்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் உபயோகிக்கும் முறைகளின் படி ..பாலிடால், மெடாஸிஸ்டாக்ஸ், மெடாஸிட்காம்பி மருந்துகளை என்றும் உபயோகியுங்கள்.

பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகளினால் ஏற்படும் நஷ்டத்திற்கு முடிவு காணவும். பண விரயத்தை தவிர்க்க

BAYER

பாயரின் தரமான
பூச்சி மருந்துகள்

பார்த்தோம் படித்தோம்



அரிய விருந்து

தமிழரசில் வெளிவந்த கண்ணகிக் கோட்டம், கண்ணகியே மங்கலதேவி முதலிய ஆராய்ச்சிக் கட்டுரை தமிழன்பர்களுக்கு அரிய விருந்து. தொடர்ந்து இது போன்ற அரிய கட்டுரைகளைத் ‘தமிழரசு’ வெளியிட்டுத் தமிழுலகுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

—பி. கிருஷ்ணகுமார். கும்பகோணம்.

பாராட்டுகள் ஏராளம்

அரவிந்தர் வாழ்க்கை வரலாற்று நூலை இலவச இணைப்பாகத் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறை வெளியிட்டிருப்பதை என்னுடைய வங்காளி நண்பர்களுக்கு எடுத்துரைத்து நூலைப் படித்து வங்காளியில் எடுத்துரைத்தேன். தமிழக அரசின் பணியினை எல்லாரும் பாராட்டினார்கள்.

—ஆர். ஆர். கோபால். கல்கத்தா.

பெருமையுண்டு

நாமக்கல் கவிஞர் கடைசியாக எழுதிய கவிதை தமிழரசில் வெளியாகியது என்ற பெருமை தமிழரசுக்கு உண்டு! இறுதிக் காலம் வரை அவருக்கு உதவிய பெருமை தமிழக அரசுக்கு உண்டு.

—முத்து, செல்லப்பன். சேலம்.

கவரும் முகப்பு

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரின் படத்தை கண்ணைக் கவரும் வகையில் தமிழரசு அட்டையில் வெளியிட்டிருந்தீர்கள். இதுபோன்று பெரிய அளவில் அட்டையில் படங்களை வெளியிடுங்கள். சிறிய படங்களாக வெளியிடுவது எடுப்பாக இல்லை.

துரை. கோவிந்தன். திருச்சிராப்பள்ளி.

அறிவூட்டும் ஆசான்

விடுதலைத் திருநாள் வெள்ளி விழா மலர் இளைய தலைமுறையினருக்கு அறிவூட்டும் ஆசான் என்றே சொல்ல வேண்டும். யோகி சுத்தானந்த பாரதியார் கட்டுரையிலிருந்து விடுதலைப் போராட்ட தியாக வரலாற்றில் இதுவரை தெரிந்து கொள்ளாத செய்திகளை அறிந்து கொண்டோம்.

எஸ். எஸ். தேவநாதன். மதுரை.





குறளோவியம்

முதல்வர் கலைஞர்

காலை அரும்பியதும் பூந்தாது உண்டு, மடல் விரிந்த தாமரையினுள்ளே மாலைத் துயில் கொண்டு, மெய்யின்பம் நுகரும் கருவண்டு—

அதுபோல்,

காதலனோடு; பூம்பொழிலாம் மதிமுக மங்கையின் பேருருவம் கண்டு; குழலும் யாழும், அமிழ்தும் குழைத்த அவளது மழலைக் கிளவி கேட்டு; தொட்டு, மூவா மருந்தாம் அந்தத் தேவாமிருத இதழ்களைத் தேனென உண்டு, அகிலின் புகைக்கு நறுமணம் சேர்க்கும் "கருப்பு நீர்வீழ்ச்சியாம்" அவளது கூந்தலை முகர்ந்து; ஐம்புலனையும் அனுபவிக்கிறான்; இன்பத்துப் பாலுக்குப் புதியதொரு இலக்கியம் சமைக்கிறான்! கண் நிறைந்த காரிகையின் கூட்டுறவால் மண் திணிந்த ஞாலத்தில் பிறந்ததன் பயனையே அறுவடை செய்கிறான்!

அய்யகோ! அந்தப் பேரின்பத் திருவூற்றின் கண்களைப் "பிரிவு" என்னும் பொடி மணல், சரிந்து தூர்க்கிறது. நீலம் வீழ்ந்ததொரு மீனாய்— கலம் பறிகொடுத்ததொரு வணிகனாய்க் காதலன் ஓலமிடுகிறான்! கோதையைப் பிரிந்த காலமெல்லாம் அவனுக்கு ஒரே வாதை—தான்!

ஓசை சிறிதுமின்றி ஊர்ந்து செல்லுமே நச்சரவு, அதைப்போல இரவு நடந்த இன்பக் காட்சிகள் அவன் நினைவிலே ஊர்கின்றன "நஞ்சிலும் அதிகமாய்க் கொடுமை செய்கிறதே இந்த நங்கையின் நினைவு"—என்று சஞ்சலப் படுகிறான்.

வேங்கையைத் தழுவுவேன்; இனிமேல் என் விழி நிறைந்தவளைத் தழுவுவேன்— என்று சொல்லத் தோன்றும் அளவுக்கு அவனது விரகதாபம் மேலிட்டெழுகிறது.

தங்கச் சிலையின் அங்க அசைவுகள் ஒவ்வொன்றும் மின்னல் கொடி போல் தோன்றி மறைந்து மீண்டும் இன்னல் தருகிறது.

என்னதான் செய்வான், அவன்? ஆசை வல்லியைக் கண்ட மாத்திரத்தில் அகண்டு மலர்ந்த விழிகளும் 'அவளைத் தவிர வேறெதையும் பாரேன்' என்று தொட்டாற் சுருங்கியைப் போல் ஒடுங்கி விட்டதே!—எது செய்வதென்பதறியாது நிலை தடுமாறுகிறான், ஏதேதோ சொல்லி உள்ளம் புகுந்தவளைத் திட்டித் தீர்க்கிறான்!

"இன்ப உலகிற்கு வழி கேட்டு வந்த என்னை வாரி அணைத்தாய்; பின் பிரிந்தாய்; இப்போது திசைதவறித் தடுமாறுகிறேன்"—என்று வசை பாடுகிறான்.

"குடுமி கோதி, முத்தம் ஈந்தாய்; இதழ் பிரிந்த என் இதழ்கள் இப்போது கருகி விட்டனவே—" என்றும் புலம்புகிறான்.

கோமகனின் குளிர்ப்பிடியிலே அடைபட்டுக் கிடந்த அவளது மலை நிகர்த்த மேனி எரிதழல்போல் தகிக்கிறது. "நெருங்கியபோது குளிராய், பின் நீங்கியபோது பெரும் நெருப்பாய் விளங்கும் இதுபோன்ற புதுமையை நீ எங்கிருந்து பெற்றாய்?" என வியக்கிறான்.

அந்த வியப்பை—விரகதாபத்தின் வேகத்தை இதோ வள்ளுவர் விளக்குகிறார்; பாருங்கள்

நீங்கின் தெறூஉம்
குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்?

அவன்தான் இப்படி! அவள் மட்டும் என்ன, பிரிவினால் இன்பமா துய்க்கிறாள்? இல்லை; இல்லை;

நெருப்பு தன்னைத் தொட்டால்தான் சுடும்; காதல் நோய் போல் இது தன்னை விட்டு நீங்கியபோது சுடவல்லதாகுமோ? —என்று சொல்லிக் கடிந்துகொள்கிறாள்.

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ!

விஞ்சு புகழில் - விளங்கக் காண்பாரே!

இவரியா ரென்குவை யாயின் இவரே
தொண்டைநந் நாட்டின் துறைதோறும் கலங்கள்.
ஆடி அசைந்து பாடிடு கடல்மேல்
அணிஅணி யாக அண்டிடு படகில்
வந்து குவியும் மணிபோன் செந்நெல்
முத்துத் தந்தம் முதிர்மலைத் தேக்கு
நிறைத்துப் பொருளை நிறைத்துப் புகழைத்
தமிழக மிருந்தே தடங்கடல் தாண்டி
உலகுக் களித்த ஒப்பிலாப் பல்லவர்
ஆண்ட காஞ்சி அளித்த அண்ணு !
தென்னகம் ஆண்ட முன்னுள் முதல்வர் !
உலகம் வியக்கும் ஒப்பிலா அறிஞர் !
பிறர்வாய் அடக்கும் பேச்சிற் பெரும்புலி !
வள்ளுவர் குறளின் உள்ளுறை உவமம் !
சங்க இலக்கியத் தீந்தமிழ்ச் சாறு !
குறுந்தொகை மெய்ப்பொருள் கூட்டும் தென்றல் !
தம்பியர் கண்ட தானைத் தலைவர் !

கவிஞரேறு
வாணிதாசன்

வரியைக் குறைத்து வறுமை குறைத்து
நெறியோ டாண்ட நீள்புகழ் மன்னர்
வளர்த்த சங்கத் தமிழின் மாண்பை
உலகத் தமிழர்க் குணர்த்திய செம்மல் !
இனியர் ! எளியர் ! எவர்க்கும் என்றும்
பணிவுடன் இன்சொல் பகரும் மேதை !
வான்தொடு மலையும். மலையின் சாரல்
மானை வீழ்த்த வாங்கிய சிலையின்
கால்வழி செந்தேன் பாயப் பழுக்கும்
கனிமரத் தோப்பும் கதிர்முனை சாய்ந்த
செந்நெல் வயலும் செழுமலர்க் காடும்
புன்னை மணக்கும் நெய்தற் பொருளும்
தன்னகம் கொண்ட தமிழக அரசை
உலகம் புரக்கும் பரிதியை ஒப்ப
முன்னுள் காத்த முதல்வர் ! அண்ணு !
அமைச்செனப் பட்டது நினதே அத்தை !
தமிழகம் வாழும் தம்பியர் மக்கள்
நெஞ்சம் திறப்போர் நின்னுரு
விஞ்சு புகழில் விளங்கக்காண் பாரே !

திணை - பாடாண் திணை துறை - இயன்மொழி வாழ்த்து



507

செய்திகள் செய்திகள் செய்திகள்!

நமது மாநிலத் திட்டக்குழு, மாவட்ட திட்டச் சிறு குழு என்று மாவட்டந்தோறும் திட்டச் சிறு குழுவை அமைத்து ஆங்காங்குள்ள வாய்ப்புகளுக்கு ஏற்ப அடித்தளத்திலிருந்து திட்டங்களை வகுத்திருக்கிறது; ஆசிய நாடுகளிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில்தான் இப்படி அமைக்கப்பட்டுள்ளது என்று பொருளாதார வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

• • •

உலகத்திலே மிக அழகான கடல் பசிபிக் பெருங்கடல் தான். பிலிபைன்ஸ் பகுதியில் மிக அதிகமான பசிபிக் பெருங்கடலின் ஆழம் 36,198 அடி.

அட்லாண்டிக் பெருங்கடலின் மிக அதிகமான ஆழம் 27,498 அடி.

இந்து மாக்கடலின் மிக அதிகமான ஆழம் 26,400 அடி.

ஆர்ட்டிக் பெருங்கடலின் மிக அதிகமான ஆழம் 17,850 அடி.

• • •

உலகிலேயே மிகப் பெரிய அளவு பரப்பளவு கொண்ட நாடு சோவியத் ரஷ்யாதான்; தென் அமெரிக்காக் கண்டத்தைவிடச் சோவியத் ரஷ்யா பெரியது.

உலகிலேயே பெரிய நகரம் டோக்கியோதான். இங்கு வாழும் மக்களுக்கு இணையான மக்கள் தான் ஆஸ்திரேலியா கண்டம் முழுவதும் வாழ்கிறார்களாம்.

பூமத்தியரேகையைக் கணக்காக வைத்து, உலகத்தின் சுற்றளவைக் கணக்கிட்டால் 24,901·8 மைல் ஆகும்.

தென் துருவத்திற்கும் வட துருவத்திற்கும் உள்ள தொலைவு 7,900 மைல்.

• • •

டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் சீவக சிந்தாமணியையும், சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் அச்சேற்றி, நூலாக வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தவர், சேலம் இராமசாமி முதலியார் அவர்கள். அவர் தான் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களின் கையெழுத்துப் படிகளைச் சாமிநாதய்யருக்குக் கொடுத்தார்.

"அவருடைய தூண்டுதல் இராவிட்டால் சிந்தாமணியை அச்சிடுவது எங்கே? சங்க நூல்களின் பெருமையை உணர்ந்து இன்புற்று வெளிப்படுத்தும் முயற்சிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"—என்று டாக்டர் உ. வே. சாமிநாதய்யரே எழுதியுள்ளார்.

• • •

அண்ணல் காந்தியடிகளைவிட வயதில் மூத்தவர் மோதிலால் நேரு.

• • •

சக்திதாசன், காளிதாசன் என்ற பெயர்களில் 1916-ஆம் ஆண்டு முதல் 1921-ஆம் ஆண்டு வரை ஏராளமான கட்டுரைகளை பாரதியார் எழுதியுள்ளார்.

• • •

தமிழ்நாட்டில் இரயில் பாதை இல்லாத மாவட்டம் என்று இது வரை அழைக்கப்பட்டது கன்னியாகுமரி மாவட்டம். செப்டம்பர் ஆறும் நாளிலிருந்து அந்தக் குறையை அகற்றிடும் முயற்சி தொடங்கிவிட்டது. ஆமாம், அகன்ற ரயில்பாதை போடும் பணியைத் தலைமை அமைச்சர் துவக்கி வைத்து விட்டாரே.

• • •

காச நோயைக் குணப்படுத்தும்; கண்ணில் ஏற்பட்டிருக்கும் புகைப் படலத்தைக் கலைத்து, நல்ல சுத்தமான பார்வையைத் தரும்; புண்களை ஆற்றிடும்; உடலில் ஏற்பட்டுள்ள வீக்கம் வாடிவிடும்; விஷத்தை முறித்துவிடும்; பித்த சம்பந்தமான வியாதிகள் குணமாகும்.

சிறு கீரை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மையைத்தான் ஒரு மருத்துவப் புத்தகம் மேற்கண்டவாறு விவரிக்கிறது.

தொகுப்பு—செய்திக்கினியன்.

மாணவர் அரங்கம்

செந்தமிழ்ச் செம்மல்கள்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

நமது தமிழ் நாட்டு அரசின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை எழுதியவர் பேராசியர் சுந்தரம் பிள்ளை அவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அருந்தமிழ் வளர்த்த அறிஞர் பெருமக்களில் ஒருவர் ஆவார்.

இப்பொழுது கேரள மாநிலத்திலுள்ள ஆலப்புழையில் 1885-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சுந்தரம் பிள்ளை பிறந்தார். இவருடைய பெற்றோர் திரு பெருமாள் பிள்ளையும் மாடத்தி அம்மையாரும் ஆவர்.

சுந்தரம் பிள்ளையின் முன்னோர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஆலப்புழையில் குடியேறினவர்கள்; ஆலப்புழையில் பெருமாள் பிள்ளை பெரிய துணி வணிகராகத் தொழில் செய்து வந்தார்.

சுந்தரம் பிள்ளை ஆலப்புழையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் படித்து முடித்தவுடன் திருவனந்தபுரம் சென்று மகாராஜா கல்லூரியில் பி.ஏ. கல்வி கற்று பி.ஏ. பட்டப் படிப்பில் முதல்வராகத் தேர்வு பெற்றார்.

அக் கல்லூரியில் முதல்வராக இருந்த ரோஸ் என்பார் சுந்தரம் பிள்ளையைத் தம் கல்லூரியிலேயே பேராசிரியராகச் சேர்த்துக் கொண்டார்.

1877-ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் ஓர் ஆங்கிலத் தமிழ்க் கல்விக் கூடம் அமைந்தது. திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி முதல்வர் ரோவின் பரிந்துரையால் சுந்தரனார் அவ்வுயர்நிலைப் பள்ளியின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவ் வாண்டில் தான் சுந்தரனார் சிவகாமி அம்மையாரை வாழ்க்கைத் துணை நலமாக ஏற்றுக் கொண்டார்.

சுந்தரனார் பெரும் முயற்சியால் அந்த உயர்நிலைப் பள்ளி இடைநிலை வகுப்புகளை உடைய இரண்டாந்தரக் கல்லூரியாக உயர்ந்தது. அதன் முதல்வராகப் பணியாற்றினார் சுந்தரனார். அக் கல்லூரிதான் இன்று திருநெல்வேலியில் புகழுடன் விளங்கும் இந்துக் கல்லூரி.

1879-ஆம் ஆண்டு வரை சுந்தரம் பிள்ளை திருநெல்வேலியில் பணியாற்றினார். அவ்வாண்டில் மீண்டும் திருவனந்தபுரம் கல்லூரியில் பேராசியர் பதவி கிடைத்ததால் அங்குச் சென்று பணியாற்றினார். 1880-ஆம் ஆண்டில் சுந்தரனார் எம்.ஏ. பட்டம் பெற்றார்.

திருநெல்வேலிக்கு மேற்கே எட்டு மைல் தொலைவில் பொருநையின் வட கரையில் கோடகநல்லூர் உள்ளது. அவ்வூரில் சுந்தர முனிவர் என்ற அறிஞர் பெருமகன் வாழ்ந்து வந்தார். சுந்தரனார் விடுமுறைக் காலங்களில் எல்லாம் சுந்தர முனிவரிடம் சென்று ஞான நூல்களைக் கற்றார். சுந்தரம் பிள்ளைதான் சுந்தர முனிவருடைய "நிசானந்த விலாசத்"தை அச்சியற்றி வெளியிட்டார்.

மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் முதலியன சுந்தரனார் எழுதிய சிறந்த நூல்களாகும். நூற்றொகை விளக்கம் 1888-ஆம் ஆண்டிலும் மனோன்மணீயம் 1891-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

பத்துப் பாட்டிலுள்ள திருமுருகாற்றுப்படை முதலிய மூன்று பாடல்களை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருப்பதோடு பத்துப் பாட்டைப் பற்றி ஆங்கிலத்தில் ஓர் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரையையும் எழுதியிருக்கிறார்.

மாணவர் அரங்கம் பகுதியில், அருந்தமிழ் வளர்த்த அறிஞர்களின் வரலாறு, 'செந்தமிழ்ச் செம்மல்கள்' என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும்.

சுந்தரனார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள திருஞான சம்பந்தர் காலம் என்ற நூலும் திருவிதாங்கோட்டுப் பண்டைய அரசர் காலம் பற்றிய ஆராய்ச்சியும் இவருக்கு F. R. H. S. (Fellow of the Royal Historical Society) என்ற பட்டத்தையும் M. R. A. S. (Member of the Royal Asiatic Society) என்ற பட்டத்தையும் அளித்தன.

சுந்தரனார் 1891-ல் சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினரானார். 1896-ல் இவருக்கு இராவ்பகதூர் பட்டம் கிடைத்தது.

சுந்தரனார் அவர்கள் இளமையில் தமிழ் கற்ற நாகப்பட்டினம் புத்தகக் கடை நாராயணசாமிப் பிள்ளை அவர்களிடமே நிறைதமிழ் ஆய்ந்த மறைமலை அடிகளாரும் தமிழ் படித்தார்கள்.

இச் செய்தியைச் சுந்தரனாருக்கு மறைமலை அடிகள் எழுதித் தெரிவித்ததால் மிகுந்த மகிழ்வுடன் அவரையும் தம் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையையும் திருவனந்தபுரத்திற்கு அழைத்து விருந்தோம்பினார்.

திருவனந்தபுரத்திலேயே மறைமலை அடிகள் தமிழாசிரியராகப் பணியாற்ற உதவினார் சுந்தரனார்.

இவர் மறைமலை அடிகளுக்கு அளித்த சான்றிதழினாலேயே சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் மறைமலை அடிகளாருக்குத் தமிழ்ப் பேராசியர் பதவி கிடைத்தது.

தமிழிலும் வரலாற்றிலும் அறிவு நூலிலும் தேர்ந்து சிறந்த பணியாற்றிய பேராசியர் சுந்தரனார் தமது நாற்பத்திரண்டாவது வயதிலேயே 2–4–1897-ல் புகழுடம்பெய்தினார்.

வெண்பாப் போட்டி-43.

ஈற்றடி :

கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

முடிவு நாள்: 3–10–1972.

பரிசு : ஓராண்டு ''தமிழரசு'' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

எனினும் காலத்தால் அழியாத சுந்தரனாரின் தமிழ்ப் பணிகளால் என்றும் தமிழ் கூறும் நல்லுலகு முழுதும் அவர் பெயர் நிலைத்து நிற்கும்.

—நம்பியின் தம்பி

வேளாண்மைத் தொழிற் கழகத்தின் வழியாக டிராக்டர் பெறுவது எப்படி ?

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தின் மூலம் டிராக்டர் வாங்க விரும்புகின்றவர்களுக்கு 10 ஏக்கர் புன்செய் அல்லது 5 ஏக்கர் நன்செய் நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின், டிராக்டர் பெற விரும்புகின்றவர்கள், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தில் ரூபாய் 10 செலுத்தி மனுத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மனுத்தாள்களைக் குறையின்றிப் பூர்த்தி செய்ய வேண்டும். மனுதாரர் தம் விருப்பத்திற்கேற்ற 3 வகை டிராக்டர்களை, மனுத் தாள்களில் குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிடும் 3 வகை டிராக்டர்களில் ஏதேனும் ஒன்றை மனுதாரர் பெற்றுக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

மனுதாரர், அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் தன் பெயரில் 1,000 ரூபாய்க்குச் சேமிப்புக் கணக்குத் துவங்கி, சேமிப்புக் கணக்குப் புத்தகத்தைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தின் சம்பந்தப்பட்ட மண்டலப் பொறியாளர் பெயருக்கு மாற்ற வேண்டும். இத்தொகையை டிராக்டர் பெற்றுக் கொள்ளும் பொழுது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்த மனுத்தாள்களைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்திற்கு அனுப்ப வேண்டும். அத்துடன், மாவட்ட வேளாண்மை அலுவலர் அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களிடமிருந்து 'மனுதாரர் ஓர் உழவரே என்றும், அவர் வாங்க விருக்கும் டிராக்டர் அவருடைய சொந்த வேளாண்மை வேலைகளுக்கே தேவைப்படுகிறது என்றும்' ஒரு சான்றிதழ் பெற்று தொழிற் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

குறையேதும் இல்லாத மனுக்களை பதிவு செய்து கொண்டு மனுதாரர்களுக்கு வேளாண்மைத் தொழிற் கழகம் தகவல் அனுப்பும்.

மனுதாரர் முழுத் தொகையையும் செலுத்தி விட்டு, டிராக்டரைப் பெற்றுக்கொள்ளலாம்.



மகளிர் சீர்திருத்தப்பள்ளி

தவறு செய்வது மனித இயல்பு. செய்த தவற்றை உணர்ந்து திருந்தி விடுபடுவதும் மனித இயல்பிற்கு அப்பாற்பட்டதல்ல. வறுமையில் உள்ளோர், ஆதரவற்றோர், அனாதைகள், சூழ்நிலையால் வாழ்க்கைப் பாதையிலிருந்து வழிதவறிச் சென்றுவிடுவதுண்டு ; அவர்களை இச்சமுதாயம் வாழாவெட்டியாக்கி விடுகிறது ; சமுதாயத்தோடு இணங்கி இணைந்து வாழ முடியாதவர்களாக்கிவிடுகிறது. தடம் புரளும் ரயிலைக் கூட மீண்டும் ஓடவைக்கும் மனித இயல்பு, ஏனோ சூழ்நிலையில் வாழ்க்கைத் தடத்தில் வழி தவறிச் சென்று விட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க மறுக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்து மீண்டும் அவர்களை வாழும் மனிதர்களாக உலாவ விடுவது தனி மனிதனின் கடமைமட்டுமல்ல ; நல்ல அரசின் தவிர்க்க முடியாத பணியுமாகும்.

கணவனை இழந்த கைம்பெண்கள், பருவ வயதில் எண்ணத்தில் கோளாறு கொண்ட பெண்கள், ஏழ்மை, ஆதரவின்மை இவற்றால் தவிக்கும் பெண்கள், தங்களின் முறை கடந்த செயல்களால் தங்கள் வாழ்க்கையை முடமாக்கி இருளடையச் செய்து கொள்கிறார்கள். காரிருளை நீக்கக் கதிரவன் வருவதுபோல், வாழ்க்கையில் தவறித் திக்குத் தெரியாமல் தவிக்கின்ற பெண்களின் வாழ்வில் ஒளியேற்ற வகை செய்ய வேண்டாமா? மறுமலர்ச்சி ஏற்பட முயல வேண்டாமா?

தவறியோர் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பாகவும், செய்வதற்கு ஒரு தொழில் கற்றுத் தருவதற்காகவும், வாழ்வில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு எதிர்காலத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகத்தான் வேலூரில் அரசினர் மகளிர் சீர்திருத்தப்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது.

வாழ்வுக்கு வழி காட்டவும் இப்பள்ளி தன் சீரிய சிறப்பான பணியினைச் செய்து வருகிறது. இப்பள்ளியில் பெண்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் பெண்களின் கைவண்ணமும், தொழில் திறமையும் பாராட்டப்பட வேண்டியவர்களால் பாராட்டப்பட்டுள்ளன.

இங்குத் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள் சிறப்பானவை மட்டுமல்ல ; சிக்கனமானதாகவும் இருக்கின்றன. அத்தோடு பலதிறப்பட்ட பல நோக்குடைய மக்களின் பலவித ஆவலைத் தூண்டி இழுத்துக் கவரும் வண்ணம் பலவித எழிற் கோலங்களில், விதவிதமான அமைப்புகளில், விதவிதமான ஆடை வகைகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் தயாரிப்புகள் இருந்தும், விற்பனைக்குப் போதுமான ஏதுக்கள் இல்லாததால் இந்த இல்லத்தில் தயாரிக்கப்படும் ஆடைகளின் அருமை பெருமைகள் இதுவரை குடத்திலிட்ட விளக்காகவே இருந்து வந்தன. அந்தக் குறையைத் தீர்க்கவும், தங்களின் தயாரிப்புகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து வெளி உலகைக் கவரவும் இப்பள்ளியின் துணை அங்கமான விற்பனை அங்காடி ஒன்று கடந்த 2—7—1972 அன்று திறக்கப்பட்டது.

சீர்திருத்தப்பள்ளி மாணவிகள் பயிற்சிக் கூடத்தில் தயாரிக்கப்படும் பொருள்களை விற்க, விற்பனை அங்காடி ஒன்றை, வேலூர் அண்ணா கலையரங்கின் எதிரில் உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 2—7—1972 அன்று மாலை 5-00 மணி அளவில் திறந்து வைத்துப் பொருட்களைப் பார்வையிட்டார். கண்காட்சியைத் திறந்து வைத்து அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

'' இத்திட்டம் இப் பெண்களின் வாழ்வுக்கு வழிகாட்டும் சிறந்த ஏற்பாடாகும். இதன் மூலம் பெண்களுக்குப் பாதுகாப்பான தொழில் கிடைக்கிறது. இலாபத்தைக் கருதாமல் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஏழைப் பெண்கள்-வாழ்க்கையில் வழியற்றுப் போனவர்கள் ஆகியோருக்கு இத்தொழிலும் அங்காடியும் உதவியாக அமையும்.

பள்ளியின் வரலாறு

தமிழ் நாட்டிலுள்ள சீர்திருத்தப் பள்ளிகள், மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணி இல்லங்கள், பெண்டிர் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றில் தங்கள் பயிற்சிகளை முடித்துவிட்ட, தாய் தந்தையற்ற, மற்றும் ஆதரவற்ற பெண்களுக்குப் பாதுகாப்பளித்துப் பயிற்சி அளித்து, மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் வேலூரில் மகளிர் பிற்காப்பு இல்லம் அமைக்கப்பட்டது. முதலில் இப்பயிற்சி நிலையம் தொழில் வணிகத் துறையினரால் நிறுவப்பட்டுப் பின்னர் சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் நிருவாகத்திற்கு மாற்றப்பட்டது.

தமிழ்நாடு முழுவதிலும் பெண்கள் மறுவாழ்வுக்கென்று தையற் கலைப் பயிற்சி அளிக்கும் இத்தகைய நிலையம் வேலூரில் மட்டுமே உள்ளது ; வேலூர் மகளிர் பிற்காப்பு இல்லத்துப் பெண்களுக்கும், பர்மா, இலங்கை நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய பெண்கள் சிலருக்கும், மற்றும் வேலூரிலும்

சுற்று வட்டாரங்களிலுள்ள தகுதி வாய்ந்த சில பெண்களுக்கும் இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 60 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களில் முப்பது முப்பது பேர்களாக இரு கூருகப் பிரிக்கப்பட்டு மார்ச்சு மாதம் முதல் தேதி முதல் ஒரு பிரிவினருக்கும், ஆகஸ்டு மாதம் முதல் தேதி முதல் மற்றொரு பிரிவினருக்கும் இரு பயிற்சிப் பிரிவு வகுக்கப்பட்டு, இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்த மாணவிகளில் 25 சதவிகிதம் பர்மா, இலங்கை அகதிப் பெண்களுக்கென்று அரசினரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக்கென்று பெண்களைத் தேர்வு செய்வதில், கைம்பெண்கள், கணவர்களால் கைவிடப்பட்ட மனைவிகள், வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவர்கள், வேறு வகையில் வாழ வழியற்றோர் போன்ற இக்கட்டான நிலையிலுள்ள பெண்களுக்குத் தனிச் சலுகைகள் காட்டப்படுகின்றன.

இங்கு உணவு, உடை, பயிற்சி அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. அத்துடன் பயிற்சி பெறும் பெண்களுக்கு ஓர் ஆண்டுப் பயிற்சிக் காலம் முடிய மாதம் ரூ. 30 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. பர்மா, இலங்கை அகதிப் பயிற்சிப் பெண்களுக்கு மட்டும் 18 மாதக் காலப் பயிற்சிக்கும் மாதம் 55 ரூபாய் வீதம் உதவிப் பணம் வழங்கப்படுகிறது. செயல் முறைப் பயிற்சிக்குத் தேவையான துணிகள் இலவசமாக வழங்கப்பட்டு அவற்றின் மூலம் தைக்கப்பட்ட ஆடைகள் விற்பனை செய்யப்பட்டு அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

இந்த நிலையம் சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணியின் நிருவாகத்தின் கீழ் வந்தபின்னர் பயிற்சித் திட்டம் முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி 5 முதல் 8 வகுப்பு வரை கல்வி கற்றுள்ள பெண்களைக் கொண்ட இளநிலைப் பயிற்சிப் பிரிவு ஒன்றும், 8-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் கற்றுள்ள பெண்களைக் கொண்ட முதுநிலைப்பயிற்சிப் பிரிவு ஒன்றும் என இரண்டு பயிற்சி நிலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்குப் பெண்களுக்குக் கருத்தியல் திட்டம், செயல்முறை இரண்டின் மூலம் தையற்கலை நவீன முறையிலும் திட்டமிட்ட முறைப்படியும் தொழில் நுணுக்கத்துடனும் கற்றுத் தரப்படுகிறது. இதற்கெனப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தக்க மேற்பார்வையின் கீழ் போதனை நடத்துகின்றனர்.

கடனீட்டுப் பத்திரங்களுக்குக் கூடுதல் முதலீடு

மத்திய நிளவள வங்கி வெளியிட்டுள்ள கடனீட்டுப் பத்திரங்களுக்குத் தொகை அளிக்கும் வகையில் ஒரு கோடி ரூபாயைக் கூடுதலாக அரசு முதலீடு செய்துள்ளது. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகமும் உலக வங்கியும் அளித்து வருகின்ற நிதி உதவியைக் கொண்டு கடன் வழங்கும் திட்டத்தை மத்திய நிலவள வங்கி பெருமளவில் முனைப்பாகச் செயல்படுத்திவரும் இச்சமயத்தில், இப்போது செய்துள்ள முதலீடானது, வங்கி இன்னும் செவ்விய முறையில் செயல் படுவதற்குப் பேருதவியாக இருக்கும்.

[1972—73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து.]

பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பின்னர் மாணவிகளுக்குத் தனித்த விரிவான செயல் முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது பிற்காப்பு இல்ல மாணவிகள், பர்மா, இலங்கை அகதிப் பெண்கள் ஆகியோருக்கு ஆறு மாதக் காலத்திற்கும், மற்ற மாணவிகளுக்கு மூன்று மாதக் காலத்திற்கும் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் மாணவிகள் பலவிதமான ஆடைகளைத் தொடர்ந்து பல முறை தைப்பதற்கான வாய்ப்பினைப் பெறுகிறார்கள். அதனால் அவர்கள் தொழில் திறன், செய்திறன் சீர்மையும் தேர்மையும் பெறுகின்றனர்.

ஓராண்டுக் காலப் பயிற்சி முடிந்தவுடன் நிலையத்திலேயே கருத்தியல் திட்டம் செயல் முறைத் திட்டம் இரண்டிலும் விரிவான தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்வில் வெற்றி பெறும் மாணவிகளுக்கு, இத்தொழிற் துறையினரால் பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

இங்குப் பயிற்சி பெறும் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன், நிலையத்தோடு இணைந்த ஒரு உற்பத்திப் பிரிவு (Production Wing) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற 10 பெண்கள் கூட முறைப்படி உற்பத்திப் பிரிவில் இங்கு அமர்த்தப்படுவார்கள். இதனால் அப் பெண்களுக்கு வாழ வகை ஏற்படுவதுடன் அரசுக்கு வருவாயும் கிடைக்கிறது.

இதுவரை 318 பெண்கள் பயிற்சி பெற்று வெளியே அனுப்பப் பட்டுள்ளார்கள். தற்பொழுது 85 பெண்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் திருமணங்களும் செய்விக்கப்படுகின்றன. யாருமற்ற அனாதைப் பெண்களுக்குத் திருமணம் செய்து அனுப்புவதுதான் சிறந்த மறு வாழ்வாக அமைகிறது.

இப் பெண்களின் திருமணம், மகளிர் பிற்காப்பு இல்லத்தில் தான் நடைபெற வேண்டுமென்ற நியதி உண்டு. இத் தம்பதிகளுக்கு 250 ரூபாய் அன்பளிப்பாக அரசினரால் வழங்கப்படுகிறது. இத் தொகை மணமக்களின் இல்லற வாழ்விற்குத் தொடக்க முதலாகவும், அடிப்படையாகவும், அமைந்து விடுகிறது.

நமது மாநிலத்திலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் அரசு அலுவலர்கள் மற்றும் பிரமுகர்கள் பலர் இப்பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்து இதன் பயிற்சி முறையையும், பணிகளையும் பார்வையிட்டுள்ளனர். அவர்கள் யாவரும் இப்பயிற்சி நிலையம் சமூகச் சீரமைப்பில், குறிப்பாக ஆதரவற்ற நிலையில் உள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் புரிந்துவரும் தொண்டினைப் பாராட்டியுள்ளனர்.

இப்பள்ளியில் பெண்களைச் சீர்திருத்துவதுடன், பயிற்சி அளித்துப் பக்குவத்தை ஏற்படுத்தி, வாழ வழி காட்டுகிறார்கள். இருள் சூழ்ந்த இப் பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்றுவதும் இப்பள்ளியே !

வாழ்வில் வெறுப்படைந்த உள்ளங்களுக்கும், வாழ்வில் நம்பிக்கை ஒளி இழந்தவர்களுக்கும் விடிவெள்ளியாக இப்பள்ளி செயல்படுகிறது.

எம். எச்.

கொய்தவை

மக்கள் தொகையே காரணம் !

அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள் தொகையின்படி இந்தியாவில் 38 கோடி 60 இலட்சம் பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

எழுத்தறிவுள்ளவர்களின் எண்ணிக்கை 1951-ல் 16·6 சதவிகிதமாக இருந்தது. 1961-ல் இது 29·3 சதவிகிதமாக உயர்ந்தது. ஆயினும் இருபது ஆண்டுகளில் எழுத்தறிவில்லாதவர்களின் தொகை 8 கோடியே 80 இலட்சம் உயர்ந்திருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கமே இதற்கு முக்கியக் காரணம் என்று கூறப்படுகிறது.

* * *

கம்ப்யூட்டர் கை!

முன் கையின் உட்புறமாக வைக்கக் கூடிய அளவில் இலண்டனில் ஒரு புதிய கம்ப்யூட்டர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கையிழந்தவர்களுக்கு வைக்கப்படும் செயற்கைக் கையின் உள்ளே இந்தக் கம்ப்யூட்டரை வைத்தால் அசல் கையின் இயக்கங்களைப் போலவே இதனையும் இது இயக்கக்கூடியது.

நினைத்தவுடன் கட்டை விரலைக் கொண்டு எந்தப் பொருளையும் பிடிக்கலாம்; மற்ற விரல்களைத் தனித் தனியே மடக்கி நீட்டலாம்; எல்லா விரல்களையும் சேர்த்து ஒரு பொருளைப் பிடிக்க வேண்டுமானால் அதுவும் முடியும். மருந்து சீசாவைக் கையில் வைத்துப் பிடித்துக் கொண்டே சாப்பிட முடியும். பாட்டிலைக் குலுக்கவும் முடியும். இவ்வளவு இயக்கங்களும் அசல் கையில் எப்படி நிகழ்கின்றனவோ அதே போல் நிகழும்; இயக்குவது உள்ளே இருக்கும் கம்ப்யூட்டர்.

* * *

தமிழில் அரசியல் சட்டம்

அரசியல் சட்டத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலை முடிந்து விட்டது. இது போல், மலையாளம், தெலுங்கு, மராட்டியம், பஞ்சாபி, குஜராத், அசாமி ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. இவற்றை அச்சடிப்பதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அச்சடிக்கும் வேலை முடிந்ததும் இவை வெளியிடப்படும்.

* * *

ஆறாவது சரணாலயம்

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனை மலையில், வன விலங்கு சரணாலயம் அமைக்கப்படுகிறது. அக்டோபர் 1-ஆம் நாள் முதல் பொது மக்கள் இந்தச் சரணாலயத்தைப் பார்வையிடலாம். 300 சதுர மைல் பரப்பில் இந்தச் சரணாலயம் இருக்கும்.

காட்டுப் பகுதியில் வன விலங்குகள் சுதந்தரமாகத் திரிவதை இங்கு நேரில் பார்க்கலாம். இதற்காகக் காட்சிக் கோபுரங்கள் பல அமைக்கப்படும். பயணிகள் தங்குவதற்கு விடுதியும் கட்டப்படும். காட்டில் சுற்றிப் பார்க்க ஊர்தி வசதியும் இருக்கும்.

ஆனைமலை வனவிலங்கு சரணாலயத்தில் காட்டு யானைகள், காட்டெருமைகள், மான்கள் முதலியவை உள்ளன. இது தமிழ் நாட்டில் ஏற்படும் ஆறாவது சரணாலயமாகும்.

* * *

'கல்' உருவாகக் காரணம் என்ன?

சென்னைப் பல்கலைக் கழகத்தின் உயிரியல்—இரசாயனத் துறையினர் ஆராய்ச்சியில், சிறுநீர்க் குழாயில் 'கல்' உருவாவதற்கான காரணத்தைக் கண்டு பிடித்துள்ளனர். பைரிடாக்சின் (பி. 6.) என்ற உயிர்த்தாது பற்றாக்குறையாக இருப்பதால், சிறுநீரகத்திலிருந்து சிறுநீர் செல்லும் குழாயில் 'கல்' உண்டாகிறது.

உணவில் கலந்து செல்லும் ''கல்'' போய் அதில் அடைத்துக் கொள்வதாகக் கருதலாகாது. கால்சியம் பாஸ்பேட், கார்பனேட், காலிஸ்டிரால் போன்ற சில தசைப் பொருள்களும், நீரக அமிலமும் ஒன்று கலந்து ''கல்'' ஆகிறது. இதற்குச் சில வகை உணவுப் பண்டங்களும் பானங்களும், ''உடல் கொழுப்பு'' மாறுதல்களும் காரணமாகும்.

* * *

காவலர் பயிற்சிக் கல்லூரி

வேலூரில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியைச் சென்னை அருகே உள்ள அலமாதிக்கு மாற்றுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. இக் கல்லூரியின் தரத்தை உயர்த்தி அதை அகாடமியாக மாற்றத் தமிழக அரசு விரும்புகிறது. காவலர் பயிற்சிக் கல்லூரியின் பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு, இப்போது நவீனக் குற்றக் கண்டுபிடிப்பு முறைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

* * *

ஊர்திகள் உயர்ந்தது

சென்னை நகரத்தில் மோட்டார்வாகனங்களின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில்இருமடங்காக அதிகரித்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் 1965 முதல் 1971 வரையில் பொதுவாக எல்லா வாகனங்களும் அதிகரித்துள்ளன. 1965-ஆம் ஆண்டில் 5,597 என்ற எண்ணிக்கையில் இருந்த மோட்டார்கள் சைக்கிள்கள் ஸ்கூட்டர்கள், 1971-ஆம் ஆண்டில் 13,541 ஆக இருமடங்கிற்கு மேல் எண்ணிக்கையில் உயர்ந்துள்ளன. 1965-ல் டாக்சிகள் 1,710 ஆக இருந்தது. 1971-ல் 3,431 ஆகவும் 1965-ல் 198ஆக இருந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் 1971-ல் 395 ஆகவும் அதிகரித்துள்ளன.

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனால் நகரத்தில் உள்ள முக்கியமான சாலைகளில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக விபத்துகள் நிகழ்ந்துள்ளன. 1965-ல் விபத்தினால் ஏற்பட்ட சாவுகள் 88 ஆக இருந்து, 1971-ல் 184 ஆக உயர்ந்துள்ளது.

—பி.வி.ஜி.



கதர் கைத்தொழில் அங்காடி

குறளகம்
சென்னை-1

கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

வெளிநாட்டார் போற்றும்
பயன் பொருள்
கலைக்கூடம்

☎
20461
20462 20463
20464 20465

9. இடுக்கண் வருங்கால்...

இவருக்குத் தனிப்பட்ட பாசம் உண்டு. நல்லவை எனப்படுவதைத் துணிந்து செய்கிறுர்களே.

"என்ன நாட்டாமை?" என்றகுரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினுர் நாட்டாமை.

வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு நின்ருன் குருவன். உள்ளூர்க்காரன்தான். பாண்டியன் சொன்ஞல் அந்த இடத்திலேயே உயிரைக் கொடுக்கக் கூடியவன்.

"அந்தப் பய கொடுத்தவாக்கு மூலத்தை அப்படியே பதிஞ்சு அனுப்பிச்சிட்டிங்களா? நடந்தது என்ன, ஏதுன்னு யோசிக்க வேணுமா?" என்று கேட்டான் குருவன்.

உண்மையின் சந்நிதி

—சோம. மகாதேவன்.

ஊர் மந்தையில் தனித்திருக்கும் லிங்கத்தின் வீட்டை நோக்கித் திரும்பியபோது நாட்டாமை திகைத்து நின்று விட்டார். எங்குத் திரும்பினுலும் வெளியூர் ஆட்களின் தலைகள். எங்காவது ஓரிடத்தில் புகைந்தால் அதுவே சூருவளியாகி விடாதா?

நடப்பதையும், நடக்கப்போவதையும் நினைக்க நினைக்க, நெஞ்சு கனத்துக்கொண்டே இருக்கிறது நாட்டாமைக்கு.

பொன்னையாவைக் குற்றுயிராகத் தூக்கிவந்து, அவரிடமே வாக்குமூலம் கொடுத்ததும், அதை அவரே பதிவு செய்து அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டபோது உண்டாகிய நடுக்கம், அவருக்கு இன்னும் தெளியவில்லை.

சாகப் போகிறவன்—இல்லாததைச் சொல்லுவாஞ? அப்படியாஞல், பாண்டியனும், லிங்கமும் சேர்ந்தே அவனை அடித்தார்கள் என்பது உண்மையா? எதை நம்புவது?

ஊருக்குள்ளே நாட்டாமையை அப்பாவி என்பார்கள். எதிலும் தலையைக் கொடுத்துக் கொள்ளமாட்டார். பயந்த சுபாவம்.

இவ்வளவு நேரமும் வெளியே தலையைக் காட்டாது, குழப்பத்தோடு வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தவர், பொழுது சாயும் இந்த நேரத்தில் துணிச்சலோடு புறப்பட்டுவிட்டார். அடிப்படையில் அந்த இளவல்களின் மீது,

நாட்டாமை எதுவும் சொல்லவில்லை. நின்று பேசிஞல் விவகாரம் வளராதோ? இங்கேயே பெருங்கூட்டம் சேர்ந்துவிடும்.

நாட்டாமை மெதுவாக நடந்தார்.

லிங்கத்தின் வீட்டின் முன்பாக பெரும் கும்பலே சேர்ந்திருக்கிறது. நின்றும், உட்கார்ந்தும், எங்குத் திரும்பினுலும் இந்தப் பேச்சுத்தான் நிலவுகிறது. அங்கே விழுந்தாலும், இங்கே விழுந்தாலும், தாங்கப் போவது ஊராகத் தானே இருக்கப்போகிறது.

பாண்டியன் அப்படிக் கை நீட்டக் கூடிய பையனும் அல்லவே. நடந்ததாகச் சொல்லப்படுவதை நம்பவும் முடியவில்லையே. பாண்டியன் இங்கேதான் இருக்கிருஞ? இல்லையா?

வாசலில் நின்று கொண்டிருந்தவர்கள், நாட்டாமையைக் கண்டதும் ஒதுங்கி வழிவிட்டனர்.

முன் கூடத்திலே, உட்கார்ந்து, தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தவர்களையெல்லாம் கடந்து

சென்ற போது, கோடியில் மீனம்மா பாட்டி பலகையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

மீனம்மா பாட்டிக்கு, இன்றைக்குத்தான் குளிர்காய்ச்சல் வந்திருக்கிறது. தலையை மட்டும் விட்டு, உல்லன் போர்வையால் இழுத்து மூடியிருக்கிறாள்.

நாட்டாமை நெருங்கி வருவதைக் கண்ட போது "வாங்க நாட்டமை" என்று குரல் கொடுத்துக் கொண்டே எழுந்து வரவேற்ற மீனம்மா பாட்டி, "தீவினை வீடு வந்து சேர்ந்திருச்சே, நான் என்ன செய்யப் போறேன்" என்று தொடங்கினாள்.

நாட்டாமை தயங்கினார்.

அதற்குள்ளாக, நாட்டாமை ஏதோ செய்தி கொண்டு வந்திருப்பதாக நினைத்து, பலர் தொடர்ந்து வந்து கூடிவிட்டனர்.

"கச்சேரி வாசலை மிதிச்சிருப்போமா? எங்க தலையிலே இந்தப் பொல்லாங்கு வந்து சேரலாமா? இவனுக எதையோ சொல்றாங்க. எனக்கு எதுவும் புரியலையே" என்றாள் மீனம்மா பாட்டி தலையில் கைவைத்தவாறு.

பக்கத்து அறையிலிருந்து, குரல் கேட்டுப், பாண்டியனும் லிங்கமும் அரசியும் வந்துவிட்டனர்.

"ஐயா வாங்க. உங்க வீட்டுக்குத்தான் புறப்பட்டோம். நீங்களே வந்திட்டீங்க உட்காருங்க" என்று வரவேற்றவாறு முன்னால் வந்தான் பாண்டியன்.

நாட்டாமை, உட்கார்ந்துபேச மதியற்றவராக அவனது முகத்தை ஏறிட்டுப்பார்த்தார். பாண்டியனும், அவனுக்குப் பின்னால் லிங்கமும் நின்றதில், இருவர் முகங்களும் ஒன்றாகவே தெரிந்தது அவருக்கு.

இருவருக்குள்ளும் அப்படி எவ்விதக் கலக்கமும் தென்படவில்லையே.

"நாட்டாமை—அவன் என்ன தான் சொல்லிட்டுப் போய்த் தொலைஞ்சிருக்கான்" என்று இடையிலே அவசரத்தோடு கேட்டாள் மீனம்மா பாட்டி.

"ரெண்டு பேரும் சேர்ந்து அடிச்சதாகத்தான் சொல்லி இருக்கான் பொன்னையா. அதுக்கு மேலே சுய நினைவு இல்லாம வண்டியிலே தூக்கிப் போட்டுக்கிட்டுப் போனாங்க. நடந்தது இன்னதுன்னு புரியலையே" என்றார் நாட்டாமை குழப்பத்துடன்.

"நடக்கிறது. இதை நடத்தி வச்சவங்களைத் தவிர, வேறே யாருக்குமே புரியாதுங்க" என்று அமைதியாகவே சொன்னான் பாண்டியன்.

நாட்டாமைக்குத்தான் வேர்த்துப் போனது.

"நாளைக்கிப் பொன்னையா செத்துத் தொலைச்சா, இதுவே கொலை வழக்காகி, வாக்குமூலம் செம்மையா இருக்கிறப்ப, பெரிய சிக்கலாகிப் போகுமே பாண்டி. கரையடியிலே என்ன நடந்திச்சு' என்று பதட்டத்துடன் கேட்டார் நாட்டாமை.

பாண்டியன் லிங்கத்தைத் திரும்பிப் பார்த்தான்.

லிங்கம் சொன்னான்.

" நாங்க அணைப்பட்டியிலிருந்து கரை வழியா வந்துக்கிட்டிருக்கோம். எதிர் முகமா பெரிய வீட்டு வண்டி வேகமா வந்திச்சு. வர்ற வேகத்தைப் பார்த்தே நாங்க சரிவிலே இறங்கி நின்னோம். வண்டி எங்க மேலே கொடை சாயிற மாதிரி வந்தப்ப மாட்டோட மூக்குக் கயித்தை எட்டிப் பிடிச்சு, "மெதுவா வரலாமில்லன்னு கேட்டதுக்கு, பொன்னையா கிட்ட இருந்து முறை தவறிப் பேச்சு வந்திச்சு. அப்படி இருந்தும் மேலே வளத்துக்காமலே நாங்க திரும்பி வந்திருக்கோம்" என்றான்.

"வண்டி தள்ளிப் போனதுக்குப் பிறகு, கூண்டுக்கு மேலே தலையைத் தூக்கி, நாளைக்கிக் களத்து மேட்டுக்கு வா பாத்துக்கலாம்னு ஏக வசனத்திலே சொல்லிட்டுப் போனான் பொன்னையா. அப்பவே நினைச்சேன்—புதுசா ஏதோ நாடகம் ஆரம்பமாகப் போகுதுன்னு. தொடர்ந்து திட்டம் போட்டே காரியம் நடந்திருக்கு" என்றான் பாண்டியன் தொடர்ந்து.

"பிழைச்சுக்கிட்டா சரி தான். இல்லையின்னா வழக்கு கனத்துக்குமே. தெளிவா-சொல்லிப் போட்டுப் படுத்திருக்கானே பொன்னையா" என்று கவலையோடு சொன்னார் நாட்டாமை.

நினைச்சா குலை நடங்குதே. வீதி வழி போற சனியன் வீட்டுக்குள்ளே வந்திருக்கே என்று ஆத்திரத்தோடு பெருங்குரலெடுத்து இடையிலே நுழைந்தாள் மீனம்மா பாட்டி.

"நாங்க என்ன செய்தோம். என்ன வரப்போகுதுன்னு நீங்க இப்படிக் கலங்கிப் போறீங்க." என்று பாட்டியைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான் லிங்கம்.

"அடிபட்டவன் சொல்லி இருக்கானே. குறிவச்சிட்டானே எதைப் பாக்கி வைக்கப் போறானுக" என்று கைகளை அகல விரித்து அழுகை தோய்ந்த குரலில் சொன்னாள் மீனம்மா பாட்டி.

பாண்டியன் பாட்டியின் பக்கமாக வந்து, அவளது கரங்களைப் பற்றிக் கொண்டு, " பாட்டி முதல்லே நாங்க ஒரு தவறும் செய்யலைங்கிறதை நம்புங்க " என்றான்.

பாட்டி ஒன்றும் பேசவில்லை. ஆனால், பொறுமலுடன்தான் பாண்டியனைப் பார்த்தாள்.

பாட்டியின் விழிகளைச் சந்தித்த பாண்டியன், திரும்பி வாசல் பக்கமாகப் பார்த்தான். சுற்றி இருந்தவர்கள் விலகத் தலைவாசல் பக்கமிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த கிழவன் மீது அவன் பார்வை தயங்கியது.

51

"எதிலோடு சூலன் நிக்கிறாரு. கூட்டியாங்க" என்று சொல்லி ஆளனுப்பினான்.

நரைத்துப் பழுத்துப் போனவன் சூலன். நேற்று இருந்த நிலை நினைவில் இருக்கும் போது, எங்கும், எந்தச் சூழ்நிலையிலும் உள்ளே நுழைய மனம் கூசத்தானே செய்கிறது. செய்தி காதில் விழுந்த போதிலிருந்து இங்கேதான், ஒன்றிலும் நிலை கொள்ளாமல் சுற்றிக்கொண்டிருக்கிறான் சூலன். ஊராட்சித் தலைவர் தன்னை அழைத்துவரச் சொன்னதில், தன்னிடம் அவருக்கு என்ன காரியம் இருக்கும் என்பது புரியாமல், பதட்டத்துடன், மேல்துண்டை கக்கத்தில் இடுக்கிக் கொண்டவனாகத் தட்டுத் தடுமாறி உள்ளே நுழைந்து, பாண்டியனுக்கு முன்னால் கும்பிட்ட கை நடுங்க நின்றான்.

சுருக்கங்கள் நிறைந்து, மிருதுவாகி, துவண்டு விட்ட அந்தக் களைப் பாசத்தோடு பிடித்துக் கொண்ட பாண்டியன், "தாத்தா உயிருக்கே ஆபத்து ஏற்படும்படியா நானே ஒருத்தனை அடிச்சதா சொல்றாங்க. நீங்க இதை நம்புறீங்களா ? " என்று கேட்டான்.

நினைப்பதையெல்லாம் சொல்லத் துடிக்கும் வேகத்தில் கிழவனது தலை ஆடியது. பொங்கி வழியும் பாசத் துடிப்போடு கிழவன் சொன்னான்.

"எதையும் அமைதியா உக்காந்து பேசுங்க. எதுக்காகவும், கூட வாழ்றவங்களோட அடிச்சுக்காதீங்கன்னு அடிக்கடி சொல்லுவீங்களே ஐயா. நீங்களே இப்படிச் செய்தீங்கன்னு சொல்றதை நம்ப முடியுமுங்களா? தர்மம் செத்துப் போயிருமா? இது அடுக்காதுங்க" என்றபோது குழி விழுந்த கண்களில் தேங்கி நின்றிருந்த கண்ணீர், சொற சொறத்த கன்னங்களில் வழிந்தது.

"உலகமே எதுத்து நின்னாலும் நிக்கட்டும். உங்க நம்பிக்கை ஒண்ணு போதும் எனக்கு" என்று உணர்ச்சிப் பெருக்கோடு சொன்ன பாண்டியன், பாட்டியின் பக்கமாகத் திரும்பி, "பாட்டி, நானும் லிங்கமும் உங்க மடியிலே வளந்தவங்க. இவருக்கு என்மேலே நம்பிக்கை இருக்கிற அளவுக்கு, உங்களுக்கு ஏற்படலையா? நாங்க இந்தக் காரியத்தைச் செய்யலைங்கிற உறுதி இருக்கும் போது எதை நினைச்சும் எதுக்காகக் கலங்கணும்" என்று கேட்டான்.

பாட்டி ஒன்றும் பேசவில்லை.

'எந்த நேரத்தில் தான் சிவகாமி இந்த மகனைப் பெற்றெடுத்தாளோ!' என்பதை நினைத்து, நாளைக்கு முறைப்படி நடக்கப் போவதையும் எண்ணி மறுகியவாறு பக்கத்து அறைக்குள்ளே நுழைந்து விட்டாள் மீனம்மா பாட்டி.

பாட்டியின் தலை மறைந்ததும், "பொன்னையாவுக்கு அடி எங்கே விழுந்திருக்கு. வாக்குமூலம் கொடுக்கிறப்ப, பார்த்



''இருப்பீங்க இல்லையா?'' என்று நாட்டாமையைப் பார்த்துக் கேட்டான் பாண்டியன்.

இவனே அடித்ததாக, அடிபட்டவன் சொல்லியிருக்கும்போது, இவனே இந்தக் கேள்வியை அமைதியாகக் கேட்பதை உணர்ந்த நாட்டாமையின் மெய் சிலிர்த்தது.

''நெஞ்சிலே ஊமையடியா விழுந்திருக்கு; அவனுக்கு எதுவுமே நேராமல் இருக்கணும். இப்ப இதுதான் முன்னாலே நிக்கிற சிக்கல். போலீசிலேயும் இங்கே சொன்னதை அப்படியே திருப்பிச் சொல்லி இருக்கான்'' என்று சொல்லி பாண்டியனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார் நாட்டாமை.

''மனப்பாடமே செய்து வச்சிருப்பாங்க'' என்று சொல்லிச் சிரிக்கத்தான் செய்தான் பாண்டியன்.

''உருட்டி முத்தையா திட்டம் போட்டே இறங்கி இருக்காரு. இதிலேதான் அவரு சாயம் வெளுக்கப் போகுது'' என்றான் லிங்கம்.

''உடனடியா அடுத்து ஆக வேண்டிய காரியத்தைப் பாக்கணும் தம்பி. எதையும் சுலபமா நினைக்கக்கூடாது'' என்றார் நாட்டாமை.

''செய்யாத,—அப்படிக் கனவிலே கூட நினைக்காத காரியத்தைச் செய்ததாகச் சொல்றாங்க. சிறு வயசிலேயிருந்து, ஒரு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்காம, ஊரெல்லாம் எனக்கு உற்றம் சுற்றம்ன்னு பழகினதுனாலே, இதை நினைச்சு எனக்குப் பயப்படவே தோணலே. என்ன நடக்கப் போகுது? எங்க ரெண்டு பேரையும் உடனே தூக்கிலே போட்டுடப் போறாங்களா? அதுக்கு மத்தியிலே எவ்வளவோ இருக்கு. உண்மையும் புதைஞ்சு கிடக்கு. எத்தனை ஆண்டுகளானாலும் அது மக்கிப் போகாது. தன்னாலே முன்னால் வரத்தான் செய்யும்'' என்று அமைதியாகவே சொன்னான் பாண்டியன்.

நாட்டாமை வாசல் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்.

சற்று எட்டி நின்றவரை ''அம்பலம்'' என்றழைத்தான் பாண்டியன்.

அம்பலம் ஊராட்சியில் உறுப்பினர். பாண்டியன் மீது உயிரையே வைத்திருப்பவன். இப்படியொரு போராட்டம் சூழ்ந்து வரும்போது, எல்லையைக் காணாமல் அம்பலத்துக்குக் கண்ணுறக்கம் வருமா?

அம்பலம் பாண்டியனுக்குப் பக்கமாக வந்தான்.

'' வந்த கூட்டம் அப்படியே விலகாம இருக்கு. பொழுதும் போயிருச்சு, எல்லாரையும் அப்படியே திரும்பச் சொல்லுங்க. எங்கேயும் எந்தப் புகைச்சலும் இருக்கக் கூடாதுன்னு சொல்லுங்க.'' என்றான் பாண்டியன் அம்பலத்தைப் பார்த்து.

'' மத்தவங்களை அனுப்பி வச்சிட்டு, நாங்க ஊருக்கு ரெண்டு பேரா இங்கே இருக்கோம். எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிட்டு உங்களை ஒரு பொழுதுக்கு உள்ள போய் உக்கார விடுவமா ? அப்புறம் இந்த ஆறு கிராமமும் ஒருமிக்க உள்ளே இருந்திட்டுப் போகுது.'' என்றான் அம்பலம் உணர்ச்சி பொங்க.

'' முதல்லே முன்னாலே நிக்கிறவங்க அமைதியா இருக்கணும். எதிலேயும் ஆத்திரமும், அதையொட்டி அவசரமும் இருக்கப்படாது. நடக்கப் போறது நல்லதுக்குன்னு நினைக்கணும்.'' என்று பாண்டியன் சொல்லி வந்வந்தபோது, கும்பலை விலக்கிக் கொண்டு பரபரப்போடு முன்னால் வந்து நின்றான் ஊராட்சிக் கணக்கன் கன்னையா.

பாண்டியன் திரும்பினான்.

'' அம்மா வந்திருக்காங்க. உங்களைக் கூட்டியாராச் சொன்னாங்க.'' என்று அவசரத்துடனே தகவல் சொன்னான் கன்னையா.

இந்த நிலையிலும், எல்லை கடந்து அம்மா தன்னைக் காண வந்திருப்பது வியப்புக்குரியதாகவே இருந்தது. மகனைப் பார்க்கவும், பேசவும் அப்பாவே அனுமதி கொடுத்துவிட்டாரா ?

இடையில் தங்கையின் நினைவு வந்து திரும்பினான் பாண்டியன்.

' அம்மா ' என்ற சொல் காதில் விழுந்ததுமே இரண்டடி முன்னால் வந்து விட்டாள் அரசி.

அவள் விழிகளிலே நீர் கோத்திருந்தது.

இவளுக்குத் தாயைக் காண வேண்டுமென்ற துடிப்பு. என்ன செய்வது, அம்மாவுக்கும் மகளைக் காணும் ஆவல் இருந்தால் இங்கே யல்லவா வந்திருக்க வேண்டும்! அந்த நிலை இந்த பரபரப்பான சூழ்நிலையிலும் ஏற்படவில்லையே.

'' நானும் வரட்டுமா அண்ணா ?'' என்று குழந்தையைப் போல் கண்களைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் அரசி.

பாண்டியன் சிரித்தான்.

'' மகளை மட்டும் பார்க்கத்தான் அம்மாவுக்கு இப்பத் துணிவு வந்திருக்கு. ஒரு நாள் உன்னைப் பார்க்கவும் நிச்சயமா இங்கேயே வருவாங்க.'' என்று சொன்ன பாண்டியன், லிங்கத்தைத் திரும்பிப் பார்த்து '' நான் போயிட்டு வரேன் '' என்றான்.

'' நானும் வரேன் '' என்று சொல்லி லிங்கமும் புறப்பட்டான்.

'' எனக்கு ஆபத்து வந்தாலும் அது தனியா வராது. நீயும் இருக்கும் போதுதான் வரும் '' என்று சொல்லிவிட்டுப், பாண்டியன் தலைவாசலை நோக்கி நடந்தான். நாட்டாமையும், மற்றவர்களும் அவனைத் தொடர்ந்தனர்.

லிங்கம், தனித்து நின்ற அரசியைத் திரும்பிப் பார்த்தான்.

அவளும் திரும்பினாள். அவளது பிஞ்சு நெஞ்சில் தேங்கி நின்றிருக்கும் துயரத்தில் உதடுகள் துடித்தன.

'' நினைக்காததெல்லாம் நடக்குது. என்னாலே உங்களுக்கு எவ்வளவு துன்பம்.'' என்றாள் கலங்கிய குரலில்.

லிங்கம் அவளுக்குப் பக்கமாக வந்தான்.

'' இது உன்னாலே மட்டும் வரலே அரசி. பின் தொடர்ச்சி தன்னாலேதான் வந்திருக்கு. இதுக்கும் ஒரு எல்லை இருந்துதானே ஆகணும். அது நல்லதாகவே இருக்கும். '' என்ற லிங்கம், அவளது புடவைத் தலைப்பை எடுத்து, புன்னகையுடன் அவள் கண்களைத் துடைத்து விட்டான்.

அவனது கரங்களைப் பற்றிக் கண்களிலே ஒற்றிக் கொண்டு, வியப்போடு அவன் முகத்தைப் பார்த்தாள் அரசி.

உள்ளத்திலே தாங்கொணாத சுமை நிறைந்து வரும்போது, அனைத்தையும் கடந்து, மறந்து, சிரிக்கும் அண்ணனைப் போலவேதான் இவருக்கும் சிரிப்பு வருகிறது.

'' என்ன அரசி ?'' என்றான் லிங்கம் குனிந்து பார்த்து.

அப்போது பக்கத்து அறைக்குள்ளிருந்து, மீனம்மா பாட்டி கூப்பிடும் கடுகப்பான குரல், இருவரையுமே திடுக்கிட வைத்தது.

(வளரும்)

மகளிர் பகுதி

பெண்கள் உடலின் அழகைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அதனால் உணவு வகையில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் பரவலாகப் பெண்களிடத்தில் காணப்படுவது இயற்கை.

ஆண்களைவிடப் பெண்களுக்கு இரும்புச் சத்துக் கலந்துள்ள உணவு கூடுதலாகத் தேவைப்படுகிறது. இயற்கையின் நியதிப்படி இது. அவசியமாகிறது என்று மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர்.

கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு உணவு கூடுதலாகத் தேவைப்படுகிறது.

எல்லாச் சத்துக்களும் நிரம்பிய உணவுகளையே உட்கொள்ள வேண்டும். கருவுற்றிருக்கும் தாய்மார்கள் உண்ண வேண்டிய உணவுகளின் அளவை மக்கன்சி என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். கருவுற்றிருக்கும் பெண்கள் நாளொன்றுக்கு உட்கொள்ள வேண்டிய உணவுச் சத்துக்களின் விவரம் :

மொத்த வெப்ப அளவு எண் : 2,500

புரதம்	900 கிராம்.
சுண்ணாம்புச்சத்து-	1.5 கிராம்.
பாஸ்வரம்	2 கிராம்.
இரும்பு	20 மி.கிராம்.

பால், பசுமை நிறக்கீரைகள், காய்கறிகள், பழங்கள், தானியங்கள் (அரிசி, கோதுமை), நெய், தயிர், மீன், முட்டை, பருப்பு ஆகியவைகளைச் சிறந்த முறையில் உண்பதால் உடல் நலம் சிறந்த நிலையில் இருக்கும்.

குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களுக்கு மேற்கூறிய உணவு பழக்கமே நல்லது; வைட்டமின்கள் ஏ.பி.சி. முதலியவற்றின் அளவு கூடுதலாக இருக்க வேண்டும்.

'' சாதாரண நாட்களில் உண்ணும் உணவைவிட அதிக அளவு சத்துள்ள உணவுகளையே குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்கள் உண்ண வேண்டும்'' என்று அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆராய்ச்சிக் குழுவினர் கருத்து அறிவித்துள்ளனர்.

குழந்தை தாய்ப் பால் குடிக்கும் காலம் அதாவது பிறந்ததிலிருந்து ஒன்பது மாதம் வரை.

தாய்ப்பால் குடிப்பதைக் குறைக்கும் காலம் 7 முதல் 12 மாதம் வரை.

9 மாதம் முதல் 12 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கான உணவு :—

முதல் உணவு வேளை : காலை 7-30 மணி; குறுணைக் கஞ்சி, பாசிப் பருப்புக் கஞ்சியுடன் பால் சேர்த்துக் கொள்ளலாம்.

இரண்டாவது உணவு: 10-30—11 மணி : காய்ச்சிய பால்; ஒரு வாழைப்பழம்.

மூன்றாவது உணவு : பிற்பகல் 1-30 மணி : சிறிது சோறு, நன்றாகச் சமைத்த பருப்பு, இவற்றை நெய்யுடன் கலந்து பிசைந்து சிறிதளவு பசிய இலைக் காய்கறிகள் ஆகியவற்றுடன் கொடுக்கலாம் ; பாலும் கொடுக்கலாம்.

நான்காவது வேளை உணவு : மாலை 4-30—5-00 மணி; பால். தக்காளி அல்லது ஆரஞ்சுச்சாறு கொடுக்கலாம்.

ஐந்தாவது வேளை உணவு : இரவு 700—7-30 மணி; காய்ச்சிய பால் நாள் ஒன்றுக்கு 40 அவுன்ஸ் பாலுக்கு மேல் கொடுக்கக்கூடாது. தாகத்தைப் போக்க உணவு வேளைகளுக்கிடையில் தண்ணீர் கொடுக்கலாம். 8-ஆம் மாதத்திலிருந்து மெல்லும் பொருட்டு ரஸ்க், பிஸ்கட் போன்ற பொருள்களை இடையே கொடுப்பது நல்லது.

12 முதல் 18 மாதம் வரையிலுள்ள குழந்தைகளுக்கான உணவு :

முதல் வேளை : காலை 7-30 மணி : பாசிப்பருப்பு, குருணை ஆகியவற்றாலான கஞ்சியுடன் பால் சேர்த்துக் கொடுக்கலாம். இதனுடன் ரஸ்க், பிஸ்கட் ஆகியவற்றையும் கொடுக்கலாம்.

இரண்டாவது வேளை : 11 மணி : காய்ச்சிய பாலும் ஒரு வாழைப் பழமும் நன்கு சமைக்கப்பட்ட சிறிது சோறு, அல்லது கோதுமை,பருப்பு, நெய்,உருளைக் கிழங்கு, கீரை கொடுக்கலாம். புலால் உணவு உண்பவர்களானால், முட்டையின் மஞ்சட் கரு, மீன்முதலியனவும் சிறிதளவு கொடுக்கலாம்.

மூன்றாவது வேளை உணவு : பிற்பகல் 1-30 மணி.

நான்காவது வேளை உணவு : மாலை 5 மணி : வாழைப்பழம் அல்லது பிஸ்கட், பால் கொடுக்கலாம்.

18 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரையில் :—

முதல் வேளை உணவு : காலை 8 மணி : இட்டலி அல்லது ரொட்டி.

இரண்டாவது வேளை உணவு: நடுப்பகல் 12-00—12-30 மணி : நன்கு சமைக்கப்பட்ட சோறு, அல்லது கோதுமைச் சோறு, பருப்பு, நெய்; காய்கறிகள், கீரைகள் முதலியன. காய்கறிகளையும், கீரைகளையும் நன்றாகச் சமைக்க வேண்டும். மோரும் சேர்த்துக் கொள்ளலாம். புலால் உண்பவர்கள் கொதித்த முட்டை, சிறிது நேரம் சமைக்கப்பட்ட மாமிசம் முதலியவற்றையும் கொடுக்கலாம்.

மூன்றாவது நேர உணவு : மாலை 4-30 மணி : பால் அல்லது ஓவல்டின், வாழைப் பழங்கள், ரொட்டி அல்லது பிஸ்கட், தக்காளி அல்லது ஆரஞ்சு சாறு.

நான்காவது நேர உணவு : இரவு 8 மணி : சிறிது சோறும் பாலும் ; சோற்றையும் பாலையும் கலந்து, சிறிது சர்க்கரை சேர்த்து ஊட்டலாம்.

நாள்தோறும் பாலுடன் சிறிதளவு காட்லிவர் எண்ணெய்யும் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

காலச் சூழ்நிலை, பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப உணவுப் பழக்கம் மாறினாலும், நல்ல வகையில் குழந்தைகளை வளர்க்க மேலே குறிப்பிட்டிருக்கும் உணவு வகைகளை ஒட்டி, நமது வசதி வாய்ப்புக்கு ஏற்பக் குழந்தைகளுக்கு உணவு அளித்தல் நலம்.

—' அஞ்சனா '

நான்கு நண்பர்கள்

பூங்கொடி

நீதிக்கு ஒரு கதை

திருவிழா என்றால் கேட்கவா வேண்டும்? மக்கள் கூட்டங் கூட்டமாகச் செல்வார்கள்; பக்கத்து ஊர்களில் இருப்பவர்கள் நடந்து வருவார்கள்; வெளியூர்க்காரர்கள் காரிலும், பஸ்ஸிலும் வருவார்கள். சிலர் குடும்பமாக மாட்டு வண்டியில் போவார்கள்.

இரவு நேரத்தில், பால் போன்ற நிலவு வெளிச்சத்தில் மாட்டு வண்டியில் சலங்கை ஒலியுடன் செல்வதே தனி இன்பம் அல்லவா?

திருவிழா என்றால் கொண்டாட்டம் தானே? வழி நெடுக பேசிக் கொண்டும், பாடிக் கொண்டும் அன்று வருவதில் அவர்களுக்குக் கொள்ளை ஆசையல்லவா?

அன்று அந்த ஊரில் திருவிழா.

விதவிதமான விளையாட்டுச் சாமான் கடைகளும், மிட்டாய்க் கடைகளும், குடை ராட்டினமும், கண்ணைக் கவரும் வண்ண பலூன்களும் காட்சி அளித்தன. சின்னஞ்சிறு பிள்ளைகள் அவைகளை வாங்கித் தரும்படி தம் பெற்றோர்களை வற்புறுத்தினர்.

நான்கு நண்பர்கள் ஒரு மாட்டு வண்டியில் அமர்ந்து கொண்டு, திருவிழாக் காணச் சென்றார்கள். அவர்களில் ஒருவன் முறுக்கு மீசை வைத்திருந்தான். ஒருவன் தலைப்பாகைக் கட்டி இருந்தான். மற்றவன் மொட்டை அடித்து இருந்தான். இன்னொருவனோ பானை வயிற்றுடன் காட்சி அளித்தான்.

நால்வருக்கும் சொந்தமான நான்கு கோணி மூட்டைகள் வண்டியில் இருந்தன. மாட்டு வண்டி சலங்கை ஒலியுடன், 'கலகல'வென ஓடிக் கொண்டிருந்தது.

இரவு நேரம்.

பால்போன்று வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. சாலையின் இரு புறங்களிலும்அடர்ந்த மரஞ்செடி கொடிகள் இருந்தன. மரங்களுக்கு இடை இடையே வெள்ளித்தட்டு போல நிலவு தெரிந்தது. நான்கு நண்பர்களும் மிக்க இன்பமுடன் பயணம் செய்து கொண்டிருந்தனர். சில்லென்ற காற்றும், கலகலவென்ற இனிமையான சலங்கை ஒலியும் அவர்களை உறங்க வைத்தன. தாலாட்டுவது போல வண்டி அசைந்தாடிக்கொண்டுசென்றது. அவர்கள் நன்றாகத் தூங்கிவிட்டனர்.

அப்போது—

நிலவுகூட உறக்கங் கொள்ளச் சென்றதோ என்னவோ, எங்கும் இருள் மயம். வேகமாகச் சென்று கொண்டிருந்த மாட்டு வண்டி திடீரென நின்றது. மேலும் போக வழியில்லாமல் மாடு மிரள மிரள விழித்தது. வண்டிக்காரன் கீழே இறங்கிப் பார்த்தான். ஒரு பெரிய பனை மரத் துண்டு சாலையின் குறுக்கே கிடந்தது. உடனே வண்டிக்காரன் அதனை அகற்ற, வண்டியில் தூங்கிக் கொண்டிருந்த நால்வரையும் எழுப்பினான். அவர்கள் கண்களை கசக்கிக் கொண்டே கீழே இறங்கினார்கள்.

பனை மரத்துண்டை அவர்கள் ஐவரும் தூக்கக் கீழே குனிந்த போது, எங்கிருந்தோ பத்து முரடர்கள் அங்கு ஓடி வந்து. அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அந்த முரடர்கள் பார்க்கப் பயங்கரமாக இருந்தார்கள். முறுக்கிய மீசையுடன் கண்களை உருட்டிப் பார்த்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் குண்டாந்தடி இருந்தது.

"அப்படியே நில்லுங்கள்..... அசைந்தால் நொறுக்கி விடுவோம்" என்று ஐவரையும் மிரட்டினார்கள்.

நான்கு நண்பர்களும், மாட்டு வண்டிக்காரனும் அப்படியே செயலற்று நின்றுவிட்டார்கள்.

"மரியாதையாக அந்த மூட்டைகளைக் கொடுத்துவிடுங்கள். இல்லையேல் நீங்கள் அனைவரும் பிணமாவீர்கள்", என்று அந்த முரடர்கள் பயமுறுத்தினார்கள்.

நண்பர்கள் நால்வரும் அவர்களை நன்றாகப் பார்த்தார்கள்; அவர்கள் ஒரு பயங்கரக் கொள்ளைக்காரர்கள் என்று புரிந்து கொண்டார்கள். கூப்பிட்டாலோ அல்லது கத்தினாலோ அக்கம் பக்கத்திலிருந்து ஓடிவர ஆட்களும் இல்லை. அருகில் வீடுகளும் இல்லை. நேரமோ நள்ளிரவு. அந்தச் சமயத்தில் என்ன செய்வதென்றே நண்பர்களுக்குத் தோன்றவில்லை. கூச்சல் போட்டாலோ அந்த முரடர்கள் கழுத்தை நெறித்துவிடுவார்களே!

அப்போது அவர்களில் ஒருவனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஒருவன் அந்த முரடர்களை நோக்கி, "ஐயா! உங்கள் போக்கே விசித்திரமாக இருக்கிறது. நாங்களும் உங்கள் இனத்தைச் சேர்ந்த திருடர்கள் தான். கொள்ளை அடித்த பொருட்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறோம். திருடர்களிடத்திலேயே நீங்கள் திருட வரலாமா? என்ன இருந்தாலும் நாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? வாருங்கள் வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள்!" என்றான் நயமாக.

உடனே முரடர்களில் ஒருவன் "அப்படியா? இதை முதலிலேயே சொல்லி இருக்கக் கூடாதா? அப்படியானால் எங்களுக்கும் அந்தப் பொருட்களில் கொஞ்சம் பங்கு தருவீர்களா? இன்றைக்கெல்லாம் ஒரு காசு கூட வருமானம் இல்லை" என்றான் கரகரப்பான குரலில்.

அதற்குள் இன்னொருவன், "ஆமாம், நாங்கள் பத்துப் பேர் இருக்கிறோமே வண்டி கொள்ளுமா?" என்று கேட்டான் மீசையை முறுக்கியவாறே.

"இப்பொழுது நாங்கள் திருடுவதற்காக இன்னொரு இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அந்த இடம் ஒரு அரை பர்லாங் தூரம் தான் இருக்கும். நேரமோ ஆகிவிட்டது. பொழுது விடிவதற்குள் அங்குப் போயாக வேண்டும். பேசிக் கொண்டிருப்பதற்கு இது நேரமில்லை. ஆகையால் நீங்கள் எங்களைப் பின் தொடர்ந்து வாருங்கள். கொஞ்ச தூரமே இருப்பதால்உங்களுக்கும் சிரமம் இருக்காது" என்றான் மொட்டைத் தலையன்.

அந்த முரடர்களும் இவர்கள் நயமான பேச்சில் மயங்கி, சரியென்று ஒப்புக்கொண்டு குறுக்கே கிடந்த பனை மரத் துண்டை அகற்றினார்கள். மாட்டு வண்டி 'மடமட'வெனச் சென்றது. முரடர்கள் மூச்சு வாங்கப் பின்னால் ஓடிவந்தார்கள்.

மாட்டு வண்டி ஒரு பெரிய மாடி வீட்டு முன்னால் வந்து நின்றது. நான்கு பேரும் சுவரைத்தாண்டி உள்ளே குதித்தார்கள்; அதேபோல பத்துப்பேரும் அவர்களைத் தொடர்ந்து குதித்தார்கள்.



"நீங்கள் அனைவரும் இந்தத் தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு மாடிக்குப் போங்கள். அங்குதான் பணப் பெட்டி இருக்கிறது. நாங்கள் கீழே உள்ள வெள்ளிச் சாமான்களைக் கொண்டு வருகிறோம்!" என்றான் நால்வரில் ஒருவன் ரகசியமாக.

முரடர்கள் பத்துப் பேரும் ஒருவர் பின் ஒருவராகத் தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு மாடிக்குச் சென்றனர்.

கீழே தாழ்ப்பாள் போட்டிருந்த கதவை மெல்லத் தட்டினான் நால்வருள் ஒருவன்.

"ஐயா! ... ... ஐயா! ... ... கதவைத் திறவுங்கள்" என்று சன்னலுக்கு வெளியே இருந்து மெல்லக் கூப்பிட்டான். உள்ளே தூங்கிக் கொண்டிருந்த ஒரு பருத்த ஆள் எழுந்து வந்து, "யாரது? யார் நீங்கள்?" என்று கேட்டார். உடனே அவர்கள் நால்வரும் அவருக்கு நன்றாகத் தெரியும்படி சன்னல் பக்கம் வந்து நின்றார்கள். உள்ளே இருந்தவர் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்துவிட்டு, "ஓ, நீங்களா? என்ன இந்த இரவு நேரத்தில் ?" என்று கேட்டுக் கொண்டு கதவைத் திறந்தார். நால்வரும் உள்ளே சென்று, அவரிடம் காதோடு காதாக ஏதோ பேசினார்கள்.

உடனே அந்தப் பருத்த ஆள், மாடியை நோக்கிப் பூனையைப் போலப் பதுங்கிப் பதுங்கிச் சென்றார். நால்வரும் வீட்டுக்கு வெளியே வந்து நின்று கொண்டனர்.

மேலே சென்றவர் எல்லா விளக்கையும் போட்டார். தனது கைத்துப்பாக்கியால் 'டுமீல் டுமீல்',என்று வானத்தை நோக்கிச் சுட்டார். துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்ட பத்துத் திருடர்களும் மிரண்டு போனார்கள். உடனே வெளியே ஓடித் தப்பிக்க முயன்றார்கள். ஆனால் அவர்களைக் குறிபார்த்தது அந்தக் கைத் துப்பாக்கி. அனைவரும் அப்படியே கைகளைத் தூக்கிக் கொண்டு ஒரு அறையினுள் பின்

வாங்கினார்கள். உடனே பருத்த ஆள் சட்டெனக் கதவைச் சாத்திப் பூட்டினார்.

'மடமட'வெனக் கீழே இறங்கி வந்து தொலைபேசியில் தகவல் சொன்னார். பிறகு வெளியே திருடர்கள் தப்பிப் போகாதவாறு காவல் காத்துக் கொண்டிருந்த நால்வரையும் அழைத்து. ''பலே ஆளய்யா நீங்கள்! பத்துத் திருடர்களையும் பத்திரமாகப் பிடித்துக் கொடுத்துவிட்டீர்களே? உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்! ஆமாம்.... நீங்கள் வழக்கம் போல் திருவிழாவுக்குக் கடை வைக்க வந்தீர்களா?" என்று கேட்டார்.

''ஆமாம் சார், நாங்க கடை வைக்கிறதுதான் வழக்கமாச்சுங்களே. இந்த ஆண்டும் நாங்க பித்தளைச் சாமான்களை எல்லாம் எடுத்துக்கிட்டு மாட்டு வண்டியிலே வரும்போது இந்தப் பத்து முரடர்களும் எங்களை வழி மறிச்சிப் பயமுறுத்தினாங்க. அப்போதுதான் எங்களுக்கு இந்த யோசனை தோணுச்சி. நாங்களும் திருடர்களா நடிச்சோம்.. ... ...'' என்று முறுக்கு மீசைக்காரன் நடந்த கதையைத் தெளிவாகச் சொன்னான்.

அப்போது காற்று வேகத்தில் வந்த ஒரு போலீஸ் ஜீப் வாசல் முன் வந்து நின்றது. அதிலிருந்து போலீஸ் அதிகாரியும், போலீஸ்காரர்களும் 'தட-தட' வென்று உள்ளே வந்தார்கள்.

''என்ன சார்? உங்கள் வீட்டிலா திருட்டு நடந்தது?'' என்று கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

''ஆமாம். திருடிக் கொண்டு ஓடுவதற்குள்ளேயே அவர்களை மடக்கிப் பிடித்து விட்டேன்.

''அப்படியா? இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்.

''அதோ, மேல் மாடியில் உள்ள அறைக்குள்.

''சாமர்த்தியசாலி சார் நீங்கள்'' என்று பாராட்டிக் கொண்டே அனைவரும் மேல் மாடிக்குச் சென்றார்கள். அவர்களுடன் நான்கு நண்பர்களும் சென்றார்கள்.

''இந்த நால்வர் யார்?'' என்று அவர்களைச் சுட்டிக் காட்டிக் கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

''இவர்களால்தான் இந்தத் திருட்டுக் கூட்டமே அகப்பட்டது. இவர்களின் சமயோசிதப் புத்தியால், பல நாள் நமக்கு அகப்படாமலிருந்த ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தையே சுடத்தி வந்து விட்டார்கள். எல்லாப் பாராட்டும் இவர்களைத்தான் சாரும். இவர்கள் பித்தளைச் சாமான் வியாபாரிகள்'' என்று சொன்னார் பருத்த ஆள்.

இந்தப் பருத்த ஆள் யார் தெரியுமா?

அவர்தான் இன்ஸ்பெக்டர், வேம்பு.

மறுநாள் செய்திப் பத்திரிகைகளில் கொள்ளையர் பிடிபட்ட செய்தியும், அவர்களைப் பிடிக்க உதவிய நால்வரின் பெயர்களும் வெளி வந்தன. அவர்களின் சமயோசிதப் புத்தியைப் பாராட்டிக் காவல் துறை சார்பில் அவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டது.



வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்

- செல்வி. கு. சுலோசனா,
பதினொன்றாம் வகுப்பு,
ம.இ.உ.பள்ளி, தேவத்தூர் அஞ்சல்,
பழனி வட்டம்.

40. காவலரே நாட்டிற்குக் கண்

குண்டுபட்டுச் செங்குருதி கொட்டுகின்ற வேளையிலும்
சண்டையிட்டுத் தாய்நாட்டுச் சந்ததியார்—மண்டியிட்டுக்
கேவலமாய் வாழாமல் கேடறுத்துத் தான்மாளும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கு. சுலோசனா, தேவத்தூர்.

குண்டோசை கேட்டவுடன் குன்றி உடல்முடக்கித்
திண்டாடும் கோழையினால் சீர்வெற்றி—உண்டாமோ?
பாவேந்தர் சொல்லைப்போல் பாய்ந்து பொடியாக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கு. தேவகி, மதுரை.

வெண்டைக்காய் வெட்டுவதும் வீரமென் றாகியபின்
சண்டைக்கா சென்று சமர்வெல்வான்?—பெண்டிர்காள்!
பாவேந்தர் சொல்லாய்ப் பதமாக்கி நீர்வளர்க்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் 'பொழிலன்', அயன் சித்தவேந்தல்.

சட்டம் ஒழுங்கெல்லாம் சற்றுங் குறையாமல்
திட்டம் பலவற்றைத் தீட்டியே—இட்டமுடன்
யாவருக்கும் மேதினியில் ஏற்றமுடன் வாழ்வளிக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—இராம. மறைமுதல்வன், வடபாதிமங்கலம்.

கற்றாரும் மற்றாரும் கண்கெட்டுப் பெற்றாரும்
உற்ற தொழுநோயுற் றாரும்; நீப்—பற்றாது
காவலிடும் வீடதனைப் பெற்றாரும் போற்றும்நம்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பொன். இளங்கோவன், நடுமனை.

கட்டுக் கடங்காக் கயவர் திருக்கூட்டம்
மூட்டுக் கொடுத்துவரும் வன்முறைவேர்—விட்டிடாது
காவளர்க்கும் தோட்டக் கலைஞராய்த் தொண்டுசெயும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—து. ஜெயப்பிரகாஷ் நாராயணன், திருமங்கலம்

சிங்கமெனப் பாய்ந்து செருக்களத்தில் போராடி
அங்கம் முழுதும் அடிபட்டும்—தங்களின்
ஆவல் குறையாமல் ஆருயிரைத் தந்திடும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் ந. குஞ்சிதபாதம், வங்கனூர்

வன்முறையின் காலடியில் வாழுநிலை வாராமல்
நன்முறையாம் இன்முறையை நாடிநிற்கும்—மன்பதையின்
ஆவலினைத் தாங்கி அமைதியினைத் தூவிவரும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கோ. வே. இளங்கோவன், தென்னமநாடு

இன்னுயிரோ துச்சம் எதிர்ப்படையோ தூள்தூள்தூள்
பொன்னாடு காத்திடவே போர்போர்போர்—என்றார்த்துச்
சாவழங்கும் போர்புரிந்து தாயகத்தைக் காக்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் வள்ளிவேலன், நாய்க்கனூர்

உன்கண்ணார் கற்புக்கும் ஊரவரின் வாழ்வுக்கும்
கண்ணிமைபோல் காப்பளித்துக் காத்திடுவான்—புண்செய்
[யான்
ஆவலிலான் தன்னலத்தில்! ஆதரவில் தாயொப்பான்!
காவலரே நாட்டிற்குக் கண்.

—சிவ. கிருட்டிணன், க

வெண்பாப் போட்டி

மூவேந்தர் என்னும் முடிமன்னர் போற்றுதலில்,
பாவேந்தக் கற்றூர் பலருடைய—நாவிருந்தே
பூவிருக்கும் நாளும் புகழ்கொண்ட செந்தமிழின்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கணநாதன், சென்னை-14.

ஏற்றமிகு போர்வீரர் ஏர்பூட்டும் பேருழவர்
நாற்றிசையும் சுற்றிவரும் நல்வணிகர்—போற்றுமெழிற்
பாவலர்கள் ஆயிரம்பேர் பண்புடனே வாழினும்நாட்
காவலரே நாட்டிற்குக் கண்.

—அ. காந்தி, பி.எஸ்ஸி.,பி.டி., தேவத்தூர்.

மண்ணில் மதியாரை மாற்றாராய் எண்ணாமல்
புண்ணில் எரிநுழைதல் போன்றுள்ள—எண்ணிறந்த
நாவலரும் பேச்சினையும் நல்லனவாய்க் காண்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் இரா. கணபதிராசன், மதுரை.

குடும்பப் பொறுப்புணர்ந்து கூரறிவோர் போற்றக்
குடும்பப் பெருக்கைக் குறைக்கும்—வடுவில்லாப்
பாவலர்கள் பாராட்டும் பண்பார்ந்த உள்ளமுள
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் செல்வி வ. இராசரத்தினம், திருவேகம்பத்து

ஆட்சிக் கனியாய் அருளுக் கொருநிலவாய்
நாட்டுக் கொளிசெய்யும் ஞாயிறாய்—மாட்சிசெயும்
தேவி உலகாளும் செந்தமிழ்த்தாய் தாள்நிற்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் எம். மன்னு, உத்திரமேரூர்.

மைநலம் சோர்வு தகாச்சொல் விடுத்து
நயமிகு நற்கருத்து நாடி—வியனுலகின்
சேவகனாய்ச் சீரடையுஞ் செம்மையுறு கட்டிளங்
காவலரே நாட்டிற்குக் கண்.

—ந. சதாசிவம், சென்னை-4.

பாவலரே நாட்டிற்குப் பைங்குரலாம் ; பாடுபடும்
ஏவலரே இந்நாட்டின் வன்கரங்கள்—ஆவலொடும்
சவதெனும் இன்செயலால் ஏற்பாரைக் காக்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—கோ. மெய்க்காம், விளாத்திகுளம்.

வீரம், திறன்செல்வம், வெற்றி, மொழிகளெல்லாம்
பாரில் உயர்வெனினும் பாரதத்தீர்—நேர்ந்திடும்நம்
சாவினிலும், பண்பாட்டைத் தாயகத்தைக் காத்திடும்நற்
காவலரே நாட்டிற்குக் கண்.

—அரங்க வேலுசாமி, சூரியநல்லூர்.

மக்கள் குறையறிந்து மாட்சியுறும் நன்முறைகள்
எக்காலும் பின்பற்றும் ஏற்றமுடன்—தக்கவரை
ஆவலுடன் பேணி அறங்காக்கும் ஆற்றல்சேர்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பசுமலை வீர. முருகேசன், [illegible].

துணிவே துணையென்ற தூயநெஞ்சால் இன்சொல்
பணிவொடு குன்றனைய பண்பால்—அணியணியாய்
பாவலர் பாட்டில் புகழும் தகுதியுடை
காவலரே நாட்டிற்குக் கண்.

—செ. ஜெகபர் அலி, நாகப்பட்டினம்.

கன்றிழந்த ஆவின் கதறும் குரல்கேட்டுக்
கொன்றான் இளவரசைக் கோவேந்தன்—என்றென்றும்
பாவலரும் போற்றுமந்தப் பைம்புகார்ச் சோழனன்ன
காவலரே நாட்டிற்குக் கண்.

—இரத்தின மாணிக்கம், வேடசந்தூர்.

தெள்ளுதமிழ் வள்ளுவனின் தீஞ்சுவைச் சொல்லேற்று
எள்ளுதற் கில்லா இலக்கணமாய்—உள்ளுதோறும்
பாவலராய் நம்நாட்டைப் பக்குவமாய் ஆளுகின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—வே. செ, செபமணி, ஊத்தங்கரை.

இடுக்கண் வருங்கால் இதயந் தளரா
தெடுக்குஞ் செயலெல்லாம் எண்ணி—நடுக்கின்றி
நாவன்மை காட்டியே நாடாளும் நல்லரசில்
காவலரே நாட்டிற்குக் கண்.

—த. சுப்பிரமணியன், காரைக்குடி.

இடுக்கண் வரும்போ(து) இருகரங்கள் கொண்டு
தடுக்கும் எனதன்னை, தந்தை—துடுக்காக
ஏவலை மேற்கொள்ள இன்றெளிக்கண் ஈந்தநற்
காவலரே நாட்டிற்குக் கண்.

—விட்டல், கோவை-19.

கன்னித் தமிழெங்கள் கண்ணுக்கு நேரென்றே
உன்ன இனிக்கும் உயர்தமிழுக்—கின்னலெனில்
ஆவிதனை ஈந்தும் அருந்தமிழைக் காக்குமொழிக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—தெ. செல்லப்பன், கோவை.

நாடே குடும்பமாய் நல்லரசே வாழ்வியலாய்க்
காடு மலையுறைந்து கண்விழித்து—நாடிவரும்
சாவுக்கும் அஞ்சாச் சமர்புரியும் வீரப்போர்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் முத்து வேங்கடேசன், [illegible].

வெண்பாப் போட்டி

மொழியன்றோ நாடு மொழியிழந்த பின்னே
விழியிருந்தும் உண்டோநல் வீரம்—பழிவருமுன்
ஆவன செய்யும் அறிவாற்றல் மிக்கதமிழ்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பகவதிஅப்பன், [illegible].

ஏரைச் சுமந்திவனும் ஏற்றமுடன் செல்கின்றான்
யாரைவாழ் விக்க? உலகோரே—கூறிடுவீர்!
ஓவாது மற்றோர் ஒளிபெறவே ஏர்பிடிக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

சீராரும் கீழ்வங்க தேசச்சு தந்தரத்தைப்
போராடிப் பெற்றதுடன் பொன்னான—பாரதத்தை
ஆவிதந்து நம்மவர்கள் காத்தார்கள் அத்தகுசீர்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-11

கண்ணிழந்த மாந்தர்க்(கு)க் கண்கொடுத்தார் நெஞ்சத்தில்
புண்ணுழன்ற துன்பத்தைப் போக்கிவிட்டார்—கண்மூடிச்
சாவதெனினும் நான் சாற்றிடுவேன் இத்தகைய
காவலரே நாட்டிற்குக் கண்.

—இரா. வெற்றிவேந்தன், மதுரை.

வருவார் கணவரென்றும் வாராரோ என்றுந்
தெருமந்து தேய்வாளைச் சேர்ந்து—மருவுதற்கோர்
ஆவல் மனத்தடக்கி ஆங்கெல்லை காக்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—இரா. சு. முத்து, நெல்லை-2

குடிப்பதற்குக் கூழும், குடியிருக்க வீடும்
படிப்பதற்குப் பள்ளி பலவும்—குடியோம்பும்
ஏவலராய் வீட்டில் எழில்விளைய நாடாளும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—சி. சங்கரகோமதி, சம்புகுட்டப்பட்டி.

நடுக்கும் குளிர்வாடை! நள்ளிரவு வேளை!
விடுக்கும் துப், பாக்கி வெடிகள்—அடுத்தாலும்
சாவுதுரும் பென்றுபனிச் சாரல் மலைகாக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—நெற்றிக்கண்ணன், கோவை-2.

விழியிழந் தோர்க்கு விழிநல்கி, நல்ல
வழியில் இரப்போரும் வாழ—உழைப்பதிலே
ஆவல் மிகக்கொண்ட அன்புக் கலைஞரெனும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பி. எஸ். ஆனந்தன், சமீன் ஊத்துக்குளி.

கோளர் குறும்பர் கொடுவினை யாளருடன்
வாளாய் வளருமுள வாளரும்—மீளாமல்
காவல் மதிலினால் காத்திடும் செங்கோன்மைக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர். சாமி. வரதராசன், கல்லை.

தொண்டில் அசோகன்போல் தோழமையில் அக்பர்போல்
பண்பில் மனுநீதிச் சோழன்போல்—மண்ணகத்தில்
நோவார் பிணிதீர்க்கும் நன்மருந்தாய், நாடாளும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பி. சத்தியமூர்த்தி, ஊத்துக்குளி.

தங்கள் திருநாட்டைத் தங்களுயிர் மூச்சென்றே
அங்கம் குலைந்தாலும் அஞ்சாது—சிங்கம்போல்
சாவளவும் தாயகத்தைத் தாக்கும் பகையழிக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—என். சுந்தரேசன், [illegible]

நாட்டின் நிலையுயர நல்லோர் கலைவளர
வீட்டின் வளம்நிறைய வித்தகரின்—கூட்டுறவால்
மேலவரும் பாராட்ட மேன்மையுடன் கோலோச்சும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் த. சு. இலட்சுமணப்பிள்ளை, மதுராந்தகம்.

செஞ்சாந்துப் பொட்டிட்டுச் செல்விழியில் மைதீட்டிப்
பிஞ்சு மொழிபேசும் பெண்டிர்யார்?—மஞ்சுதவழ்க்
காவலரும் பூமலரின் காதலரே! கார்வண்டுக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—நாஜிபால், [illegible]

உயிருடைமை சட்டம் ஒழுங்குமுறை காத்துச்
செயிர்நீக்கி மக்களெலாம் செம்மை—பயிலுதற்கே
தூவழியைக் காட்டித் துணைநிற்கும் பெற்றியதால்
காவலரே நாட்டிற்குக் கண்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-1.

மன்னுயிர் எல்லாம் மகிழ்வுறத் தொண்டாற்றித்
தன்னுயிர் வாழ்வினைத்தான் பேணாமல்—இன்னுயிர்
போவதே யானாலும் போகட்டும் என்றெண்ணும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் மதி, நாகை.

எக்கேடு கெட்டாலென்! என்றே இருக்காமல்
முக்காலும் மக்கள் முறையீட்டைத்—தக்கவணம்
ஆவலுடன் கேட்டறிந்து அல்லல்தனை நீக்கிவிடும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—அ. கருளியாண்டிப்பாவலர், [illegible]

வெண்பாப் போட்டி

கண்ணொளி நல்கல் கடமை யெனக்கொண்ட
கண்ணியன் நன்மனம் காணீரோ !—தண்ணொளியே !
ஏவலராய் வாழ்கின்ற ஏழைக்(கு) ஒளிதரும்நற்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதி நகர்.

மண்மனையில் வார்'பட்டா' பெற்று மனமகிழ,
கண்ணிழந்தோர் பெற்றுக் கலகலக்கப்—புண்ணுடனே
யாவிடமும் சென்றேற்றோர் வாழ்வடைய நன்றாற்றும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—த. மு. அகமது, கடையநல்லூர்.

துப்பாக்கி ஏந்தித் துணிந்து பகைகெடுக்குந்
தப்பாத காவலர்க்குத் தாம்காவல்—இப்பாரில்
நாவலிமை யாலே நலஞ்சூழ்வார் நல்லாட்சிக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—இரா. இராசாராம் சுடலைமுத்து, பாளையங்கோட்டை.

பாவலர்கள் நாட்டின் பயன்மிக்க மூளையெனின்
நாவலர்கள் நாட்டிற்கு நாவாகும்—ஆவிதந்தே
மேவும் பகைநீக்கி மேன்மை தனைச்சேர்க்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் கருப்பசாமி, அருப்புக்கோட்டை.

நல்வாழை போன்றென்றும் நன்மை மிகுசெய்யும்
எல்லார்க்கும் ஏவலனாய் ஏற்றமுடன்—நல்லதமிழ்ப்
பாவலரின் நாவில் புகழ்பாடி வாழும்செங்
காவலரே நாட்டிற்குக் கண்.

—இளந்தென்றல், அரக்கோணம்.

நாற்பண்பை, நாயகனை நல்லதமிழ்ப் பண்பாட்டைக்
காப்பவளே வீட்டிற்குக் கண்ஆவாள் ;—மாப்புகழ்சேர்
நாவலராய்ப் பாவலராய் நந்தாய் மொழிகாக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—மு. சிவலிங்கம், பி. எஸ்சி., வேடசந்தூர்.

ஞாயிறும் திங்களும் ஞாலத் திருகண்கள்
தாயிற் சிறந்த தமிழ்எங்கண்—சேயிழையே
பாவலர்க்கு ஞானக்கண் பாவையர்க்குக் காதலர்கண்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் சொ. இராமச்சந்திரன், அம்பத்தூர்.

தன்னல எண்ணமின்றித் தன்குல வண்ணமின்றி
இன்னலிற் கார்மழையாய் யாவருக்கும்—முன்னுதவி
நாவன்மைச் சீரால் நடுநிலைமை காணுகின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—பரிதியார், சென்னை-81.

வீதி விளக்குகள் மின்னுவதும் மற்றிங்கே
பூதவியல் விந்தை புரிவதும்—சோதிமதி
போவதும் யாரால் ? புதுயுகத்தின் விஞ்ஞானக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—ஜெயபால், சென்னை-1.

செங்குருதி சிந்திச் சிறைசென்று சீரிழந்து
மங்காத் தமிழ்க்காக்க மாய்ந்தோரே—இங்குநம்
ஆவியில் ஒன்றுனார் அந்தப் பெருந்தமிழ்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பி. சி. அசனலி, அரக்கோணம்.

மக்களினம் சோர்வின்றி மாநிலத்தில் வாழ்ந்திடவே
தக்கநெறி காட்டித் தகைமையாய்—மிக்கான
காவலுடன் செங்கோலைக் கண்ணியமாய் ஓச்சிடும்
காவலரே நாட்டிற்குக் கண் .

—வெற்றிவேல் வெங்கடேசன், சேலம்-1.

நாவலர், பேராசிரியர், நல்லதமிழ்ப் பேரறிஞர்,
பாவலர்கள், பல்கலைஞர், பார்வாழ—ஏவலிடின்
ஆவலொடும் அப்பணியை ஆண்மையுடன் ஆற்றுகின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் நா. தண்டபாணி, [illegible]

செந்நெல் வயல்கள் செவ்வாழைத் தோட்டங்கள்
கன்னல் இளந்தெங்கு கனிமரங்கள்—இன்னும்
பாவலர் போற்றும் பயன்கள் தரச்செய்யும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—இ. சம்பத், [illegible]

இல்லிற்குக் கண்ணாகும் இல்லாளே ! அன்னவட்கு
எல்லாமுந் தன்கணவன் தானாகும்—மெல்லியலாள்
பாவலரே பாக்களுக்குப் பண்ணவர் போலுமே
காவலரே நாட்டிற்குக் கண்.

—க. இராசரத்தினம், சேலம்.

மக்களுக்குக் கல்வியே ! மங்கைக்கு நற்கணவன்
தக்க இலக்கணமே தாய்மொழிக்காம்—மிக்குபுகழ்ப்
பாவலரே பைந்தமிழுக் காம்பாலில் நன்னடைக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் கா. நாச்சியப்பன், தாராபுரம்.

வீட்டை மறந்து வெயில்மழையென் றஞ்சாது
நாட்டுக்கு நலத்தினை நாடியே—வாட்டமின்றிச்
சேவை புரிகின்ற சிங்கங்க ளாமெல்லைக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—ம. சண்முகானந்தம், பி. எஸ்ஸி., பி. [illegible], [illegible]



தமிழ்நாட்டில் தொழிற் பேட்டைகள்—சில தகவல்கள்

தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து விரைவு படுத்துவதற்காகவே தமிழ் நாட்டில் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நீர், மின்வசதி, போக்குவரத்து வசதி, சாலைகள் முதலிய வசதிகளுடன் கூடிய நன்கு திட்டமிடப்பட்ட இடவசதியைச் சிறு தொழில் அதிபர்களுக்கு அளிப்பதே, தொழிற் பேட்டைகளை நிறுவுவதன் முக்கியக் குறிக்கோளாகும். தற்பொழுது தமிழகத்தில் 4 வகையான தொழிற் பேட்டைகள் இருக்கின்றன. அவைகளின் விவரம் வருமாறு :

(1) பல்வேறு வகையான தொழிற்சாலைகள் உள்ள பல தொழிற்பேட்டைகள். (Conventional Industrial Estates).

(2) தோல், மின்சாரம், மின்னணுவியல், மட்பாண்டத் தொழிற்சாலை போன்ற சிறப்புத் தொழிற்சாலைகளின் தேவைகளை மட்டுமே வழங்குகின்ற சிறப்புவகைத் தொழிலுக்கான தொழிற் பேட்டைகள்(Functional Industrial Estates)

(3) பெருந்தொழில்களுக்கான துணைப் பிரிவுகளின் தேவையை ஈடுசெய்யும் துணைத் தொழிற்பேட்டைகள் (Ancillary Industrial Estates).

(4) கூட்டுறவு, தனியார் தொழிற்பேட்டைகள் (Co-operative and private Industrial Estates).

பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்

பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகளில், எல்லாவகையான சிறு தொழில்களும் இடம் பெற்றுள்ளன. ஆனல் சிறப்பாகத் தொழியில் தொழிற்சாலைகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்பொழுது 27 தொழிற் பேட்டைகள் இருக்கின்றன. ஆனல், 26 தொழிற் பேட்டைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. அவைகளில் 9 தொழிற்பேட்டைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலும், 11 தொழிற் பேட்டைகள் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், 6 தொழிற் பேட்டைகள் 1966-67, 1967-68, 1968-69-ஆம் ஆண்டுகளில் செயல் படுத்தப்பட்ட ஆண்டுத்திட்ட (Annual plans) காலத்திலும் ஒப்பளிக்கப் பட்டதாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டான 1969-70-ஆம் ஆண்டில் நாமக்கல்லில் ரூபாய் 6.22 இலட்சம் செலவில், 6 பிரிவுகள் கொண்ட ஒரு தொழிற்பேட்டைத் துவங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்தொழிற் பேட்டைகளில் 31—3—1971 வரை 628 பிரிவுகள் இயங்க அரசு அனுமதித்துள்ளது. அதில் 31—3—1971 வரை 492 பிரிவுகள் கட்டி முடிக்கப்பெற்றுள்ளன. கீழ்க்கண்டவாறு 488 பிரிவுகளும் சிறுதொழில் அதிபர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன.

	தொழிற்பேட்டை அமைந்துள்ள இடம்.	அரசால் அனுமதிக் கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	கட்டப் பெற்ற தொழிற் பிரிவு களின் எண்ணிக்கை.	சிறு தொழிலதிபர்க ளுக்கு ஒதுக்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.
1	கிண்டி	136	129	129
2	மதுரை	54	40	40
3	விருதுநகர்	15	15	13
4	பேட்டை	12	12	12
5	ஈரோடு	11	11	11
6	காட்பாடி	26	16	16
7	தஞ்சாவூர்	6	6	6
8	திருச்சிராப்பள்ளி	29	29	29
9	மார்த்தாண்டம்	5	5	5
10	அம்பத்தூர்	147	117	117
11	தேனி	12	7	7
12	திண்டுக்கல்	25	18	18
13	காரைக்குடி	18	12	11
14	கோவில்பட்டி	18	11	11
15	கிருஷ்ணகிரி	18	12	12
16	புதுக்கோட்டை	18	12	12
17	அரக்கோணம்	18	8	8
18	சிவகங்கை	6	6	6
19	நாகர்கோவில்	12	6	6
20	கும்பகோணம்	6	4	4
21	மேட்டூர்	4	4	4
22	காஞ்சிபுரம்	4	4	4
23	கரூர்	4	4	4
24	நாகப்பட்டினம்	6	4	3
25	ஒசூர்	6	..	..
26	கடலூர்	6	..	..
27	நாமக்கல்	6	..	..
	மொத்தம்	628	492	488

கடந்த ஆண்டில் (1971–72) மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் 68 பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அவைகளில் 40 பிரிவுகள் கட்டப்பெற்று ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே 31—3—1972 நிலவரப்படி மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் 696 பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, 536 பிரிவுகள் கட்டி முடிக்கப்பெற்று, 528 பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும், ஒரு தொழிற்பேட்டை இருக்க வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969–70 முதல் 1973–74 வரை 10 வருவாய்க் கோட்டங்களில் புதிதாக 10 தொழிற்பேட்டைகளைத் துவக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. குமராபாளையம், தருமபுரி, திருவண்ணமலை ஆகிய வருவாய்க் கோட்டம் ஒவ்வொன்றிலும், ஒரு தொழிற்பேட்டையை நிறுவ நடவடிக்கை துவக்கப்பட்டுள்ளது.

1970–71-ஆம் ஆண்டில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 30 கூடுதல் பிரிவுகளும் (Additional units) கிண்டி தொழிற்பேட்டையில் 7 கூடுதல் பிரிவுகளும் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பெற்றது. முன்பு உள்ள தொழிற்பேட்டைகளில், தேவையுள்ள இடங்களில் கூடுதல் பிரிவுகளைக் கட்டிக் கொடுக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

ஊட்டச் சத்துணவுத் திட்டம்

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டமாகிய ஊட்டச் சத்துணவுச் சிறப்புத் திட்டத்தை, சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் வெளியூர்களுக்கும் நீட்டிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது வரை 3 வயதுத் தொகுதிச் சிறுர்கள் மட்டுமே இத் திட்டத்தினல் பயனடைந்தனர். எனினும் இந்த ஆண்டு, கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும். 3 முதல் 6 வயது வரை உள்ள சிறுர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறக் குடிசைப் பகுதியைச் சேர்ந்த 2,10,00 சிறுர்களும், 40,000 தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயனடைவர். இத்திட்டத்திற்கு ரூ. 83 இலட்சம் செலவாகும்.

(1972—73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து)

சிறப்புவகைத் தொழிலுக்கான தொழிற்பேட்டைகள்

சிறப்பு வசதிகள் வேண்டியுள்ள தோல்தொழில், மட்பாண்டத் தொழில், மின் தொழில், உணவு மற்றும் பழ அடிப்படையில் அமைந்த தொழில், கருவிகள் உற்பத்தி தொழில், மின்னணுத் தொழில் போன்ற மேம்பட்ட நுட்பத்திறம் வாய்ந்த சிறப்பு வகைத் தொழில்களை வளர்ப்பதற்காக, இத் தொழில்களுக்கென்றே சிறப்பான தொழிற்பேட்டைகளை நிறுவத் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்தகைய சிறப்புத் தொழில்களைத் தனித்தனியே ஒரே இடத்தில் தொகுதியாக அமைக்கத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது.

மூன்ருவது திட்டக்காலத்தில் விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழிலுக்காக ஒன்றும், மாதவரத்தில் தோல் தொழிலுக்காக ஒன்றும் ஆக 2 சிறப்புத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன, 1966–67, 1967–68 ஆண்டுத் திட்டக்காலத்தில் மேற்கொண்டு இத்தகைய 5 தொழிற்பேட்டைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

தற்பொழுது தமிழ்நாட்டில் 6 சிறப்புத் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அவைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகள், கட்டப்பெற்ற பிரிவுகள், ஒதுக்கப்பட்ட பிரிவுகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழேகொடுக்கப்பட்டுள்ளன.

தொழிற்பேட்டை அமைந்துள்ள இடமும், தொழிலும். (1)	ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. (2)	கட்டப்பெற்ற பிரிவு களின் எண்ணிக்கை. (3)	ஒதுக்கப்பட்ட பிரிவு களின் எண்ணிக்கை. (4)
1 விருத்தாசலம் (மட்பாண்டதொழில்கள்)	41	30	26
2 மாதவரம் (தோல் தொழில்கள்)	25	18	18
3 காக்களூர் (மின் தொழில்கள்)	16	10	10
4 வத்தலகுண்டு (உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில்கள்)	26	4	4
5 அடையாறு (கருவிகள் தொழில்கள்) மின் அணுத் தொழில்கள்.	45	12	8
6 அம்பத்தூர் (மருந்துக் கலவைத் தொழில்)	25	..	...
	178	74	66

இச்சிறப்புத் தொழில்களில் முனைவோருக்குத் தவணைக் கொள்முதல் முறையில் தொழிற்சாலைக் கொட்டகைகளை ஒதுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டில் (1972–73) மின்னணுக் கருவிகள், மின் கருவிகள் குறித்த 2 தொழிற்பேட்டைகளைக் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் நிறுவுவது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இராஜஸ்தானைச் சேர்ந்த 'பிலானி' என்ற இடத்திலுள்ள மைய மின்னணுவியல், பொறியியல், ஆராய்ச்சி நிறுவனம், 'விரிவுப் பணி நிலையங்களில் ஒன்றைச் சென்னையில் அமைக்க வேண்டும்' என்று தமிழ்நாடு அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்திய அரசு, தோல்—மிதியடித் தொழில் பணியாளர்களுக்கான தொடக்க வடிவ உற்பத்தி பயிற்சி நிலையங்கள் 5 நிறுவ முடிவு செய்துள்ளது, அவற்றில் ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்படும் ; அதனை அமைப்பதற்காக, அம்பத்தூரில், பாதி விலையில் சுமார் 20 ஏக்கர்களை ஒதுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

துணைத் தொழிற்பேட்டைகள்

தமிழ்நாட்டின் முக்கிய இடங்களில் பெருந் தொழிற்சாலைகள் பல அமைந்துள்ளன. அவற்றிற்கு வேண்டிய பொருள்களை வழங்குவதற்காக, அப்பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் காரணமாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூரில் ஒரு தொழிற் பேட்டையும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வடலூரில் மற்ரென்றுமாக 2 துணைத் தொழிற்பேட்டைகளைத் தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது.

திருச்சி மிகு அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு கூட்டு உறுப்புகள், உதிரிப் பகுதிகள் ஆகியவற்றைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்காகத் திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டும் பணிகள் முடிந்துவிட்டன. தகுந்த தொழில் முனைவர்களுக்கு, இத் தொழிற்பேட்டையில் பிரிவுகள் முன்பே ஒதுக்கப்பட்டுள்ளன.

மட்பாண்டத் தொழிலுக்கான பொருள்களைத் தயாரிப்பதற்காக வடலூரில் ஒரு துணைத் தொழிற்பேட்டையை அமைக்க, 1967–68-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அத் தொழிற்பேட்டை, பீங்கான், மற்றும் துப்புரவுச் சாதனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள இரு பெரும் நிறுவனங்களான திருவாளர்கள் சேஷசாயி தொழிற்சாலைகள் நிறுவனம், நெய்வேலி பீங்கான் மற்றும் அதிகச் சூடு தாங்கும் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

இதேபோன்று, இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதகமண்டலத்தில் ஒரு துணைத் தொழிற்பேட்டையைத் துவங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனம், தங்களது தேவைகளுக்காகவென்றே ஒரு துணைத் தொழிற்பேட்டை நிறுவத் தயங்குவதால், இத் திட்டத்தைச் செயல் படுத்த முடியவில்லை. தற்பொழுது உதகமண்டலத்தில் துணைத் தொழில் பேட்டைக்குப் பதிலாகப் பல தொழில்களுக்கான தொழிற்பேட்டை ஒன்றை நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தனியார் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்

தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்குத் தமிழ்நாடு அரசு 1971-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் வரை பின்கண்டபடி ரூபாய் 108·79 இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது.

கடன் உதவி பெற்ற தொழிற்பேட்டையின் பெயர்.	அளிக்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
1 கே. ஆர். சுந்தரம் தனியார் தொழிற்பேட்டை, திருவொற்றியூர்.	13·46
2 கோயம்புத்தூர் தனியார் தொழிற்பேட்டை., கோயம்புத்தூர்.	32·00
3 தூத்துக்குடி கூட்டுறவுப் பேட்டை, தூத்துக்குடி.	12·61
4 சக்தி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை.	16·00
5 சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி.	8·00
6 வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, வியாசர்பாடி.	24·50
7 சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டை சேலம்.	2·22
மொத்தம் ..	108·79

மேற்கண்ட தொழிற்பேட்டைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகள், அவைகளில் கட்டி முடிக்கப்பட்ட பிரிவுகள், ஒதுக்கப்பட்டப் பிரிவுகள் ஆகியவை 31—3—1971 நிலவரப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிற்பேட்டையின் பெயர். (1)	ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பிரிவுகள். (2)	கட்டிமுடிக்கப்பெற்ற பிரிவுகள். (3)	ஒதுக்கப்பட்ட பிரிவு கள். (4)
திருவொற்றியூர் ..	22	20	20
கோயம்புத்தூர் ..	100	42	42
தூத்துக்குடி ..	40	20	20
பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை.	20	20	20
சிவகாசி	20	20	20
வியாசர்பாடி ..	100	53	53
சேலம்	35	12	12
மொத்தம் ..	337	187	187

தமிழ்நாடு அரசு அளித்த உத்தரவாதத்தின் பேரில், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக்கழகம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாகத் திட்டச் செலவில் 60 சதம் வரை கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. 1968–69-ஆம் ஆண்டில் சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூபாய் 6·66 இலட்சமும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூபாய் 8·69 இலட்சமும், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

சென்ற ஆண்டில் (1971–72) மேற்கண்ட தொழிற் பேட்டைகளில் புதிதாக 22 பிரிவுகள் கட்டப்பெற்று, அவைகள் அனைத்தும் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே 31—3—1972 நிலவரப்படி தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளில் 209 பிரிவுகள் கட்டப்பெற்று, அவை அனைத்தும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதுகாறும் கூறியவற்ருல், தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க அதற்காகத் தமிழ்நாடு அரசு, பல்வேறு தொழிற்பேட்டைகளைத் துவக்கியுள்ளதுடன், மேலும் பல தொழிற்பேட்டைகள் விரைவில் துவக்கியுள்ளதுடன், மேலும் பல தொழிற்பேட்டைகள் விரைவில் துவக்கிடவும் முயன்றுவருகிறது என்பது தெள்ளிதின் தெரிகிறது. —ஆர். எம்.

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

தொழில்
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இரும்பு, டிசிசி கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசையேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- சிங்காரப் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- [illegible] தரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

நன்கொடை வழங்கியோர் பட்டியல்

வழங்கியவர் பெயர்.	தொகை ரூ.,	காசு
திரு கே. எஸ். சொக்கப்பர்	101	00
திரு அறிவுடைநம்பி	101	00
ஸ்ரீ வேதகிரீஸ்வரர் தேவஸ்தானம்	250	00
திரு எஸ். வெங்கடரமணன்	101	00
தமிழ்நாடு அரசிதழ் பதிவிலா ஊழியர் சங்கம்.	51	00
பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் வழங்கியது.	100	00
திரு பி. சோமசுந்தரம், கதர்த் துறை இயக்குநர்.	101	00
அண்ணு திரை அரங்கு	1,001	00
திரு டி. கே. ஓஸா.	51	00
ஹோட்டல் குரு	104	00
கம்மர்ஷியல் வயர் நெயில்ஸ் பாக்டரி.	201	00
குடிசை மாற்று வாரிய ஊழியர்கள் கணக்கு அலுவலர் மூலம்.	1,248	00
த.நா.வீ.வ. வாரியம் தெற்கு டிவிஷன் நிருவாகப் பொறியாளர், சென்னை மூலம்.	1,000	00
சக்தி அற நிறுவனங்கள்	25,000	00
சக்தி சர்க்கரை ஆலை	25,000	00
பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் வழங்கியது.	10	00
அம்பலவாண பண்டார சந்நிதி	5,001	00
தர்மபுரம் ஆதீன தேவஸ்தானம்.	5,001	00
சென்னை ஆட்டோ—ரிக்ஷா ஓட்டுவோர் கூட்டுறவுச் சங்கம்.	101	00
ஜூலியட் லாரனஸ்	501	00
ராமகிடம் ஸ்ரீ வெங்கடேஸ பெருமாள் தேவஸ்தானம்.	501	00
பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் வழங்கியது (5-6-72).	101	00
இந்தியன் எக்ஸ்பிரஸ், மதுரை	2,001	00
அண்ணு திரை அரங்கம்	1,001	00
பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் 5-6-72-ல் வழங்கியது.	100	00
தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம்.	1,151	00
சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை	1,001	00
பெயர் அறிவிக்காத ஒருவர் 5-6-72-ல் முதல்வரிடம்வழங்கியது.	49,000	00
ஸ்ரீமத் தெய்வசிகாமணி அருணசல தேசிகர் மகாசந்நிதானம்.	101	00
சென்னை இந்து அறநிலைய நிருவாக ஆணையர் 102 காசோலைகள் மூலம் (இந்து கோயில்கள் நன்கொடைகள்)	2,11,550	00
5-6-72-ல் முதல்வர் பிறந்த நாளன்று அவரிடம் வழங்கப்பட்ட நன்கொடை.	34,382	78
திரு டி. எஸ். யூசுப், திருச்சி	201	00
வீனஸ் பிக்சர்ஸ்	5,000	00
திரு பி. நாகி ரெட்டி	10,000	00
அஞ்சுகம் பிக்சர்ஸ்	25,000	00
ஏ.வி.எம். அற நிறுவனங்கள்.	25,000	00
சர். எம். சி. டி. முத்தையா செட்டியார், குடும்ப டிரஸ்ட்.	25,000	00
திரு எம். ஏ. எம். ராமசாமி சென்னை, தென்னிந்தியா கார்ப்பரேஷன்.	25,000	00
திரு தட்சிணமூர்த்தி, குறிஞ்சிப்பாடி	10	00
திரு எஸ். கே. சிவனையா, ஆவுஇடயனூர்.	6	00
திரு சிறைமீட்டான் எம.எல்.ஏ.; பரமக்குடி.	50	00
திரு சீனிவாசன், நெய்வேலி	10	00
திரு கே. எஸ். சீரங்க கோனர் மங்களூர், தெ.ஆ.	10	00
திரு எம். கே. குலாப் பாஷா திருவான்மியூர்.	10	00
திரு டி. முனுசாமி, திருவான்மியூர்.	10	00
திரு சி. வாசுதேவன், சின்ன சேலம்.	22	00
திரு எம். பி. குப்புசாமி, குடியாத்தம்.	2	00
தமிழ்நாடு வேளாண்மை அப்பர் சப்பார்டினேட் பணியாளர் சங்கம், தஞ்சாவூர்.	10 10	00 00
திரு கேசவ ரெட்டி, போளூர்	10	00
திரு கே. எஸ். மனோகரன், கடையநல்லூர்.	25	00
திரு எம். சுந்தரம், திட்டக்குடி	10	00
எடமலை கூட்டுறவு பால்வழங்கு சங்க ஊழியர்கள்—வேளாண்மை அமைச்சர் மூலம்.	25 25	00 00
அருப்புக்கோட்டை ஜெயவிலாஸ்.	5,001	00
திரு சங்கரலிங்கம், எம்.எல்.சி. நாகர்கோயில்.	25	00
பார்வதி ராஜரத்தினம் நர்சரி பள்ளி, சென்னை-10.	10	00
பாலவிகார் குழந்தைகள், சென்னை-10.	10	00
திரு டி. கே. சீனிவாசன், எம்.பி.	50	00
பி. ஆர். தர்மிஜா டிரேடு லிங்க்ஸ், சென்னை-2.	101	00

திரு சர்துல் சிங் சேத்தி ஏ. வி. எம். ஸ்டுடியோ.	51	00
மேட்டூர் கெமிகல் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்.	25,000	00
திரு வி. ஆறுமுகம், கலெக்டர், வட ஆர்க்காடு.	202	00
திரு டி. ஆர். வி. பாண்டுரங்கம்.	10	00
பெத்தமபட்டி, தி.மு.க. கிளை	10	00
திரு எஸ். ராதாகிருஷ்ணன், குடந்தை.	10	00
திரு டிமடில்லஸ், புதுவை	10	00
திரு ஜே. தாமஸ், சென்னை-8	2,500	00
௸	2,500	00
திரு ஜே. தாமஸ், நெல்லைம்பதி டீ பிராட்யூஸ் கம்பெனி.	2,500	00
௸	2,500	00
திரு எஸ். சொக்கலிங்கம், எடமலையூர்.	1,001	00
திரு ஆர். எஸ். ராமலிங்கம், அனமலையம்பட்டி.	25	00
திரு வி. மலைக்கண்ணன், எம்.எல்.ஏ. வண்டல்.	100	00
திரு எம். ராமச்சந்திரன், பிரான்மலை.	101	00
கூட்டுறவு ஆடு வளர்ப்புச் சங்கம், சிட்டாங்காடு.	10	00
௸	10	00
௸	10	00
கூட்டுறவு ஆடு வளர்ப்புச் சங்கம், கிழைச்சேரி.	10	00
௸	10	00
௸	10	00
கோழிப் பண்ணை, அறந்தாங்கி.	10	00
௸	10	00
கூட்டுறவு ஆடு வளர்ப்பு நிலையம் நாட்டுமங்கலம்.	10	00
௸	10	00
௸	10	00
சீமைப் பன்றிப் பண்ணை திருக்காட்டுப்பள்ளி.	10	00
௸	10	00
௸	10	00
கோழிப்பண்ணை, தஞ்சாவூர்	10	00
௸	10	00
கோழிப்பண்ணை, அறந்தாங்கி	10	00
கோழிப்பண்ணை, தஞ்சாவூர்	10	00
சீமைப் பன்றிப் பண்ணை, வேளாங்கண்ணி.	10	00
௸	10	00
௸	10	00
மன்னார்குடி கோழிப் பண்ணை உறுப்பினர்கள்.	10	00
௸	10	00
௸	10	00
மன்னார்குடி சீமைப் பன்றிப் பண்ணை உறுப்பினர்கள்.	10	00
௸	10	00
சீமைப் பன்றிப் பண்ணை, திருத்துறைப்பூண்டி.	10	00
கோழிப்பண்ணை, நாகப்பட்டினம்	10	00
சீமைப்பன்றிப் பண்ணை, பொறையார்.	10	00
௸	10	00
௸	10	00
கோழிப்பண்ணை, நாகப்பட்டினம்	10	00
௸	10	00
சீமைப்பன்றிப் பண்ணை, பெரும்பண்ணையூர்.	10	00
௸	10	00
௸	10	00
சீமைப்பன்றிப் பண்ணை திருத்துறைப்பூண்டி.	10	00
௸	10	00
கோழிப்பண்ணை, குடந்தை.	10	00
௸	10	00
கூட்டுறவுக் கோழிப்பண்ணை, திருச்சி.	10	00
௸	10	00
௸	10	00
௸	10	00
கூட்டுறவுக் கோழிப் பண்ணை, ஒரத்தநாடு.	10	00
௸	10	00
௸	10	00
கூட்டுறவுக் கோழிப் பண்ணை, பட்டுக்கோட்டை.	10	00
௸	10	00
௸	10	00
கூட்டுறவு ஆட்டுப் பண்ணை, அழியா நிலை.	10	00
௸	10	00
௸	10	00
சீமைப் பன்றிப் பண்ணை, தஞ்சாவூர்.	10	00
௸	10	00
௸	10	00
ஊராட்சி ஒன்றியக் கிராம சேவக்குகள் சங்கம், நாகப்பட்டினம்.	51	00
திரு ஏ. நடராசன், போஸ்டல் யூனிட்.	10	00
திரு ஆர். கோவிந்தன், நாகபுரி-6.	10	00
திரு கே. சுப்பிரமணியன், சிருகமணி, மதுரை மேயர் மூலம்.	5	00
டாக்டர் சங்கரலிங்கம், கோபாலபுரம், சென்னை-6.	11	00
திரு ஏ. தண்டபாணி, ஈரோடு ..	10	00
திரு சின்னசாமி, காரமடை ..	10	00
திரு ஏ. ஆர். குலாம் காதர், பொன்னேரி.	10	00
திரு சாஹுத்தீன் கிரனூர்	5	00
திரு எஸ். கே. ராஜாமணி, சிறுகடம்பூர்.	10	00
சேத்துப்பட்டு பிருந்தாவன் ஹரிஜன, கட்டடக் குழு சார்பில்.	601	00
திரு வி. பி. ராமன், சென்னை-6 ..	170	00
திரு டி. எஸ். கலியாணசுந்தரம், திருத்துறைப்பூண்டி விவசாய பாங்க் ஊழியர்கள் சார்பில்.	101	00
திரு தஞ்சாவூர் மாணிக்க வாசகம்.	100	00
திரு எஸ். என். குருமூர்த்தி, மாயூரம்.	51	00
மறைதிரு இரா. அருளப்பா, ஆர்ச் பிஷப், இல்லம், சென்னை-4.	1,000	00
திரு டி. வி. சம்பத், எம்.எல்.ஏ., திருவெண்காடு சுவதரனையேஸ்வர்சாமி தேவஸ்தானம், டிரஸ்டிகள் சார்பில்.	1,000	00
திரு ஆர். எஸ். தியாகராஜா, சென்னை-22.	50	00
ஏ. பி. என். நர்சிங்ஹோம், ஈரோடு.	1,001	00
திரு ஜெயராமன், சென்னை-17	101	00
திரு கே. எம். இளங்குமரன், புதுக்கோட்டை.	11	00
திரு இ. கே. அப்பாச்சி கவுண்டர், எல்லப்பாளையம்.	100	00
எல்லம்பாளையம், கிராம மக்கள்.	302	00
திரு டி. யு. மாணிக்கம், ஹோமியோபதி, யூனியன்.	51	00
சித்தோடு மருத்துவமனை கட்டடக் குழு.	125	00
திரு ஆர். மாரியப்பன், தாரமங்கலம்.	25	00
அமரர் அண்ணா மன்றம், தாரமங்கலம்.	10	00
திரு எல். கணேசன், சென்னை-34.	5	00
திரு பொன். ராமசாமி, மேல் கொடையாறு.	10	00
திரு தம்பிராசன், தி. மு. கழகம்	10	00
திருமதி ஜி. கரோலின், சென்னை-1.	10	00
வாசன் தர்ம டிரஸ்ட். சென்னை-4.	10,000	00
திரு நாராயணசாமி, சின்னகல்லபாடி.	10	00
திரு ராமலிங்கம், திருவண்ணாமலை.	1	00
திரு கண்ணபிரான், பன்னித்திரம்	10	00
திரு பன்னீர் செல்வன், திருவண்ணாமலை.	5	00
போக்குவரத்து அமைச்சர் சுற்றுப் பயணத்தின் போது கிடைக்கப் பெற்ற நன்கொடைகள் (பெங்களூர் காந்தி நகரில் 1,049-49 கௌதம் நகர் கண்ணன் 5-00, திருநெல்வேலி கூட்டத்தில் 10-00).	1,064	49
திரு கே. ஆறுமுகம் பிள்ளை, அமரவிளை, நெய்யாட்டின்கரை.	10	00
திரு ஆர். எம். சிவராஜ், திருச்சி-1.	20	00
திரு ரத்தினபால குருசாமி ..	10	00
பளையகுப்பம், கிராமவாசிகள் ..	10	00
மரப்பூர் ஊராட்சி ஒன்றியம் .. ஆணையர் மூலம்.	3,000	00
௸	2,000	00
வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம்.	1,050	00
ஹரூர் ஊராட்சி ஒன்றியம்	1,000	00
நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்	1,000	00
காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம்.	3005	00
பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியம்.	1,000	00
பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம்.	3,005	00
பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம்.	2,500	00
தருமபுரி ஊராட்சி ஒன்றியம் ..	1,000	00
பர்கூர் ஊராட்சி ஒன்றியம் ..	2,000	00
கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம்	5,001	00
கிழமங்கலம் ஊராட்சி ஒன்றியம்.	2,250	00
தெங்கணிக்கோட்டை தாசில்தார் மூலம்.	5,000	00
ஹோசூர் தாசில்தார் மூலம்	2,500	00
௸	2,500	00
பாலக்கோடு தாசில்தார் மூலம்	4,510	00
ஊத்தங்கரை தாசில்தார் மூலம்	3,500	00
தருமபுரி தாசில்தார் மூலம்	1,571	00
௸	1,929	00
ஹரூர் தாசில்தார் மூலம் ..	5,000	00
கிருஷ்ணகி தாசில்தார் மூலம்	6,031	00
நந்திவரம் திரு நாராயணசாமி.	11	00
கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றம், வண்ணையம்பதி, சென்னை.	101	00
கிராம சேவக்குகள் சங்கம், திருத்துறைப்பூண்டி.	51	00
தமிழ்நாடு கிராம சேவக்குகள் சங்கம், தருமபுரி மாவட்டக்கிளை.	101	00
திரு டி. பி. செல்வம், பர்கூர் ..	101	00
திரு கமலநாதன், எம்.பி.	500	00
திருத்துறைப்பூண்டி டவுன் பாங்க் செயலாளர் திரு வாசுதேவ கணபதி மூலம்.	123	00
பர்கூர், விழியற்றோர் பள்ளி ..	12	00
திரு கே. யு. ராமையா, காட்டூர்.	2,000	00
பர்கூர், அரசினர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மூலம்.	150	00
என்.ஜி.ஓ. சங்கம், தருமபுரி மாவட்டம்.	50	00
திரு சேலம் நடராஜன்	51	00
திருமதி கமலம் மாணிக்கம் ..	10	00
தருமபுரி தி.மு.க. மாநாட்டில் ..	2	00
தருமபுரி தி.மு.க. மாநாட்டில் திரு எம்.ஜி.ஆர். மூலம் ..	38	00
தருமபுரியில் ஊர்வலத்தின்போது	40	01
முதலமைச்சர் அவர்களின் சுற்றுப் பயணத்தின் போது வழங்கப்பட்டது.	5	01
சென்னை மாவட்ட மருத்துவ ராஜகுல சங்கம், சென்னை-28 ..	10	00
எச். சி. கோத்தாரி, சென்னை-34.	10,000	00
டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை-2.	5,000	00
மாங்காடு பேரூராட்சி.. ..	101	00
குன்றத்தூர் பேரூராட்சி ..	501	00
திருத்துறைப்பூண்டி அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்.	267	00
போரூர் ஊராட்சி ..	301	00
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை.	1,001	00
கலைஞர் கருணாநிதி மன்றம், பூவை.	101	00
கலைஞர் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், குன்றத்தூர்.	25	00
திரு எம். டி. சுப்பிரமணியன், சென்னை-15.	100	00
சிக்கராயபுரம் ஊராட்சி ..	101	00
குன்றத்தூர் மகளிர் மன்றம்	10	00
குன்றத்தூர் மகளிர் நலக்குழு..	10	00
திரு கரிகாலன், தி.மு.க. பூந்தமல்லி.	51	00
குன்றத்தூர் பொதுக்கூட்டத்தின் போது வசூல்.	2	00
கோலூர் ஊராட்சி ஒன்றியம் ..	101	00
மணப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்.	50	00
திருமுடிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்.	100	00
பொதுக்கூட்ட வசூல் ..	5	00
கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம்.	200	00
அச்சரப்பாக்கம் ஆரம்பச் சுகாதார நிலைய ஊழியர்கள்.	201	00
ஓசூர் ஊராட்சி ஒன்றியம் ..	501	00
சூலகிரி ஊராட்சி ஒன்றியம் ..	550	00
தருமபுரி தாசில்தார் மூலமாக வசூல்.	500	00
சங்கராபுரம், வடஆர்க்காடு மாவட்டம்.	10	00

அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள்.	101	00
வீரமங்கலம் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள்.	100	00
பொதுக்கூட்ட வசூல்	26	05
திரு காமாலுதீன், கடைநிலை ஊழியர் சங்கம்.	5	03
துறைமுகக் கூட்டத்தில் வசூல்.	10	00
திரு தங்கராஜ், விளாம்பட்டி உயர்நிலைப்பள்ளி.	25	00
ஒலிம்பிக் பொழுதுபோக்கு சங்கம், சென்னை-17.	101	00
தென்னார்க்காடு கூட்டுறவு நூற்பாலை, வேலூர்.	1,001	00
உரிமையாளர் திரு வெங்கடேஸ்வரா நிறுவனம், திருப்பத்தூர்.	505	00
திருப்பத்தூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்.	1,001	00
திருப்பத்தூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.	1,001	00
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய ஊழியர் சங்க முன்னணி, வேலூர்.	1,001	00
குடியாத்தத்தில் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டிய வகையில்.	6	00
தாரணம்பேட்டை வணிகர்கள்.	51	00
திரு அப்துல்சுக்கூர் அண் கோ., ஆம்பூர்.	1,001	00
திரு டி. அமீர்பாட்சா, திரு டி. அப்சல் பாட்சா, நரியாம்பட்டி.	101	00
ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	1,001	00
திரு கிருஷ்ணன் எம். எல். ஏ., நரியாம்பட்டி.	101	00
திரு ரவிச்சந்திரன், முனிசாமி லாட்ஜ், திருப்பத்தூர்.	15	00
முதல்வர் சுற்றுப் பயணத்தின் போது.	382	00
உரிமையாளர், பாக்கியலட்சுமி பேருந்து நிறுவனம், திருப்பத்தூர்.	101	00
திரு குப்புசாமி	30	00
திரு எம். அய்சத்நஜியா, சென்னை-6.	10	00
இராமநாதபுரம் சமஸ்தானம்..	5000	00
பட்டுக்கோட்டை என். சாமிநாதன்.	100	00
இஸ்லாமியா நற்பணி மன்றம், தாம்பரம்.	301	00
காதர்பாட்சா	10	00
முதலமைச்சர் இல்லத்தில் வழங்கப்பட்டது.	10	00
திரு பங்காரப்பா, எம். எல். ஏ., பெங்களூர்.	10	00
திரு டி. கே. கோவிந்தசாமி அரிசுந்தையார், தஞ்சை.	101	00
டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, சென்னை.	500	00
'சிட்கோ' தொழிற்பேட்டை, தொழிற்கூட அதிபர்கள் சார்பில் திரு பழனியப்பன்.	1,001	00
திரு ஆர். வெங்கடசாமி நாயுடு, தென்னிந்திய விஸ்கோஸ், கோவை.	15,000	00
திரு சிவரத்தன் கோயங்கா கல்கத்தா.	1,000	00
திரு அன்பானந்தம், சென்னை-6.	102	00
திரு என். கோதண்டபாணி, மின்வாரியத் தலைமைப் பொறியாளர்.	101	00
டால்மியா சிமெண்ட், டால்மியாபுரம்.	15,000	00
புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்கள்.	702	51
புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு வங்கி.	35,000	00
புதுக்கோட்டை தேவஸ்தானம்.	1,001	00
திரு வி. ஏ. வைரவன் செட்டியார் விசாலம், திருச்சி.	1,001	00
புதுக்கோட்டை பகுதி இசை வேளாளர் முன்னேற்ற சங்கம், புதுக்கோட்டை.	101	00
புதுக்கோட்டை பொதுக்கூட்ட வசூல் (12—7—72).	37	55
தென்னேரி பூண்டி கிராமங்களில் பொதுப்பணித்துறை அமைச்சரிடம் வழங்கியது.	20	00
இளைஞர் அணித் தொண்டர்கள் மண்டைக்காடு குடுந்தன்கோடு வட்டாரம்.	73	00
திரு மாணிக்கவாசகம், தேவராயபுரம்.	55	00
திரு எம். ரோச், தி. மு. கழகம், கள்ளிகுளம்.	51	00
காஞ்சி, அழகிரி நினைவு மன்மன்றம்.	10	00
காஞ்சி கல்யாணசுந்தரம், எம். பி.	100	00
திரு முத்துசுப்பிரமணியம்., மேட்டூர் அணை.	5	00
தமிழ்நாடு ஹோமியோபதிமன்ற உறுப்பினர்கள், சென்னை.	1,201	00
திரு ஆர். கோவிந்தன், இளநிலைப்பொறியாளர், நாகபுரி-6.	10	00
27—7—72 அன்று திண்டிவனம் பொதுக்கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சரிடம் நகர தி.மு.க. உறுப்பினர்கள் வழங்கியது	30	13
திரு வேம்லத்துர் சா. பழ. வி. கிருஷ்ணன்.	5	00
திரு கருணாநிதி	10	00
திருமதி எஸ். எஸ். வேதவல்லி.	10	00
நாமக்கல் கலைஞர் கருணாநிதி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவியர்	300	00
இராசிபுரம் வி. ஆர். சின்னச்சாமி, அண் கோ.	101	00
நாமக்கல் வட்டம் வட்டிக் கடைக்காரர் சங்கம். முதல்வரிடம் வழங்கப்பெற்றது.	500 21	00 00
ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்.	1,97,577	50
பல்லக்காப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்.	5	00
குமாரபாளையம், ஒன்றியப்பள்ளி தலைமை ஆசிரியர்.	25	00
திரு நமசிவாயம், ஊராட்சி ஒன்றியத் துணைத்தலைவர், குமாரபாளையம்.	50	00
குமாரபாளையம் தி.மு.க.	12	00
மொத்தம் ..	9,08,989	57

(தொடரும்)


ஆராய்ச்சி மணி 10
கதை: இளவல்
நடுக்காட்டில் யாருமே செல்ல முடியாத இடத்தில
அந்தப் பையன் மணியை வைத்துக் கொண்டு போலீசார் நம்மை எப்படி எப்படி விரட்டிப் பிடிக்கிறாங்க... அந்தப் பயலை என்ன செய்யணும் தெரியுமா?
பொன்மலை, ஆபத்து வரும் பொழுதுதான் நம்முடைய அறிவுக் கூர்மையா வேலை செய்யணும் இருந்து இருந்து அந்தப் பொடியனா நமக்கு எதிரி?
நம்முடைய ஆட்கள் பிடிபட இந்தப் பொடியன் தானே காரணமில்லையா? போலீஸ்காரர்கள் அவனுக்குப் பெரிய துப்பறியும் மேதை என்று விளம்பரம் தருகிறார்களே.. இரண்டு நாட்களுக்கு முன்னர் கூட கள்ளக் கடத்தல் வைரத்தைக் கண்டுபிடித்தானாமே அந்த மணிதான் நம் ஆட்கள் பிடிபட்டதற்கு முழுக் காரணமும்
பொன்மலை இன்னும் புரியாமே பேசறீங்க. அந்தப் பொடியனை 'துப்பறியும் சாம்பு'வாக காட்டி ஊரை ஏமாத்துறாங்க போலீசார். சாட்டை இல்லாமே பம்பரம் சுழலுமா? நம்மைக் காட்டிக் கொடுத்தது மணி இல்லை. அவன் அப்பா திருஞானம்
அந்த அப்பாவி மனிதரா காட்டிக் கொடுத்திருப்பார்? என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் தான் திருஞானம். எனக்கு அவரை சந்தேகப்பட முடியவில்லை...
அதுதான் நமது போலீசார் திறமை... முள்ளை முள்ளால எடுப்பதுபோல் சூழ்ச்சியை சூழ்ச்சியால் வெல்ல நினைக்கிறார்கள். நாம் நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாதுன்னு நிரூபிக்கணும். அதற்கான திட்டத்தோடுதான் இங்கு வந்தேன்.
மதுரை விருந்தினர் வீட்டில்...
கயல்விழி என்னைப் பார்க்கிறவங்க எல்லாம் நம்ப மணியைப் பற்றி என்னமாய்ப் புகழுறாங்க தெரியுமா?
மணிக்குக் கிடைக்கிற புகழ் எல்லாம் நாளைக்கு போய்விடுமோன்னு பயமா இருக்கு அப்பா! அந்தளவுக்கு அவன் நடந்துக்கிறான்...
நீ எதற்கும் பயப்பட வேண்டாம் கயல்விழி! மணி எவ்வளவு சிறுவனாக இருந்தாலும் அவ்வளவுக்கு அவ்வளவு கெட்டிக்காரனாக இருக்கிறான். அவன் புத்திசாலித்தனத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையா?
அப்பா.. மணி என் தம்பிதான். குறும்புத்தனமான செய்கைகளால் எப்படியோ அவனுக்குப் புகழ் கிடைக்கிறது... இதை உண்மை என்று நம்பினால் நாம்தான் முட்டாள்களாகி விடுவோம்! இந்தக் கடிதத்தைப் பாருங்கள்!
'கடிதத்தைப் படித்த திருஞானத்தின் முகம் பெரும் மாறுதலடைந்தது'...
கயல்விழி நாம் உடனே ஊருக்குப் புறப்பட வேண்டும். இந்தக் கடிதத்தை உன்னிடம் யார் கொடுத்தார்?
ரொம்ப ரகசியமா சேகர் சார் கொடுத்தாரு. வேறு யாருக்கும் தெரிய வேண்டாம் என்று சொன்னாரு.
சேகருக்கு யார் கொடுத்தார்கள்? சேகர் கூடத்தானே மணியையும் மாணிக்கத்தையும் அனுப்பி வைத்தேன்.
எங்கே போயிருக்காங்க மணியும் மாணிக்கமும்?

சேகருடைய சிநேகிதர் ஒருத்தர் இரவலா கார் கொடுத்தாராம். அந்தக் காரில் ஏறிக்கொண்டு அழகர் கோவிலைப் பார்த்துவிட்டு வர்றோம்னு போறாங்க.....
மதுரையிலிருந்து அழகர் கோவிலுக்குச் செல்லும் சாலையில் ...
மணி, பயணம் எப்படி இருக்கு?
சினிமாவிலே வர்றமாதிரி எழுந்துநின்னு பாடிக்கிட்டு வரணும்னு தோணுது. அவ்வளவு ஜாலியா இருக்குது.
டேய் மணி! நீ வேறெ பாடாதேடா. இந்தக் கார் போற சத்தமே பயமா இருக்கு. நீ வேற ஏண்டா
ரொம்ப வேடிக்கையாகப் பேசிக்கிட்டு வர்றீங்களே நான் முதல்லே சொன்ன மாதிரி கள்வர்கள் குகையை முதலில் பார்த்துவிட்டு வருவோம்...
இங்கே என்னென்ன சார் பார்க்கணும்?
நேரேபோனால் அழகர் கோவில் பழமுதிர் சோலை முதலிய இடங்களுக்குப் போகலாம். முதலில் கள்வர் குகைப் பார்க்கணும். அங்கே பார்த்தவுடனே உங்களுக்கு அதிசயமா இருக்கும்.
என்னசார் அதிசயம்?
என்ன சார் அதிசயம்....
நேரே போனால் அழகர் கோவில் பழமுதிர் சோலை முதலிய இடங்களுக்குப் போகலாம். முதலில் கள்வர் குகைப் பார்க்கணும் அங்கே பார்த்தவுடனே உங்களுக்கு அதிசயமா இருக்கும்...
என்ன சார் அதிசயம்...
ஹாஹா ஹா.... டேய் வாசு! இந்த லெட்டரைப் பாருடா. கன்னு முன்னு எழுதியிருக்கிறார். சினிமா டயலாக் நிறைய எழுதியிருக்கிறார் ஒரே தமாஷா இருக்கு....

"பெப்டிக் அல்சர்" என்று நாம் பொதுவாகச் சொல்லும் குடற்புண், உலகத்திலேயே நமது நாட்டில்தான் அதிகமாக ஏற்படுகிறது. அதுவும் குறிப்பாகத் தென்னிந்தியாவில்தான் அதிகம். இந்த நோய் அவ்வளவு கடுமையானது அல்ல. புண் இயற்கையிலேயே ஆறும் தன்மை உள்ளது. மருத்துவத்தாலும் ஆற்றலாம்.

புரதச் சத்து அதிகம் இல்லாத உணவை உட்கொள்ளுவது, சூடாகச் சாப்பிடுவது, நிறையக் காரப் பொருட்கள் சேர்த்துக்கொள்வது, வேளை தவறிச் சாப்பிடுவது இவை எல்லாம் இந்நோய் ஏற்படக் காரணமான உணவுப் பழக்கங்கள்.

புகை பிடிப்பது, மது அருந்துவது, அதிகமாகக் காப்பி, தேநீர் அருந்துவது, பசித்த வயிற்றில் புகையிலை போட்டுக்கொண்டோ, தேநீர் அல்லது காப்பி அருந்தியோ பசியை அடக்க முயல்வது ஆகியவை முக்கியமாக இந்தப் புண்ணை ஏற்படுத்தும்.

இந்தக் காரணங்களால், ஆண்களுக்குக் குறிப்பாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, இது அதிகம் நேருகிறது. தலைமுறை வழியாக வருவதில்லை. இருபது முதல் நாற்பது வயதுவரை வழக்கமாக ஏற்படுகிறது. இரத்தத்தில் 'ஓ' பிரிவு உள்ளவர்களுக்கு இது ஏற்படக் கூடிய வாய்ப்பு அதிகம் உண்டு. மரக்கறி உணவு சாப்பிடுபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே தனியான வித்தியாசம் எதுவும் இல்லை. மனக்கவலை இதை அதிகரிக்கச் செய்யும்.

வயிற்றின் மேற்பகுதியில், குடைவது போன்ற வலியை உணரலாம். சிறிது உணவு உட்கொண்டால் அந்த வலி குறைகிறது. இந்த வயிற்று வலி முதுகுவரை பரவும். இது ஆரம்ப அடையாளம். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, இந்த வலி இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தொடங்குகிறது. எந்த உணவை உட்கொண்டாலும் வாந்தி எடுக்கிறது.

இந்த நிலையில்தான் பெரும்பாலும் நோயாளிகள் டாக்டரிடம் வருகிறார்கள். வலி ஏற்படும் இடம், வலியின் தன்மை, இடைவெளி, இரவில் வலி ஏற்படுதல், வலி பரவுதல், உணவு உட்கொண்டதும் அல்லது பசி ஏற்படும் போது வலி, அமிலமாற்று மாத்திரைகள் உட்கொண்டால் வலிகுறைவது, மலம் கழிப்பது, மார்பு எரிச்சல் ஏற்படுவது ஆகியவற்றைப் பற்றியும் டாக்டர் விசாரிக்கிறார்.

சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் இரைப்பை குடல்நோய் பிரிவின் முதல்வராக இருக்கும் டாக்டர் திரு என். ரங்கபாஷ்யம், எம்.பி.பி.எஸ்., எப்.ஆர்.சி.எஸ்., எப்.ஏ.சி.எஸ்., எப்.ஐ.சி.எஸ்., புகழ்மிக்க அறுவை மருத்துவராவார். ஜப்பானுக்குக் கௌரவப் பேராசிரியராகச் சென்று மருத்துவத்தில் மேலும் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளார். வயிற்றில் ஏற்படும் புற்று நோயைத் தொடக்கத்திலேயே கண்டு பிடிக்கும் ஆய்வில்' தேர்ச்சி பெற்றுள்ளார்.

டாக்டர் ரங்கபாஷ்யம் அவர்களின் தலைமையில் இயங்கும், மருத்துவ ஆய்வு நிலையத்தில் டாக்டர் கிருஷ்ணராஜ், எம்.எஸ். டாக்டர் இராமகிருஷ்ணன், எம்.டி., ஆகியோரும் மேலும் பல அறுவை மருத்துவர்களும், பயிற்சி பெறும் இள மருத்துவர்களும் உள்ளனர். இது வரை 1,000 நோயாளிகளை ஆய்ந்து சிகிச்சை அளித்துள்ளனர். அவர்களில் 600 பேருக்கு அறுவைச் சிகிச்சை இல்லாமலே குணப்படுத்தியுள்ளனர். தேவைப்பட்டால், தவிர்க்க முடியாத நிலையில் மட்டுமே அறுவை செய்கின்றனர். அறுவைச் சிகிச்சை வியக்கத்தக்க வகையில் வெற்றியாகவே முடிகிறது.

குடல் அறுவை, உணவுக் குழாயின் நீளத்தைக் குறுக்குதல், இரைப்பையை இடத்தை விட்டு மேலே தூக்கி வைப்பது போன்ற செயல்களைச் செய்து சாதனை புரிகின்றனர்; சாகக் கிடப்போரையும் காப்பாற்றுகின்றனர்.

வயிற்று நோய் இந்தியாவில்தான் அதிகமாக உள்ளது; ஏழைகளிடமே அதிகம் காணப்படுகிறது; போதிய அளவு சத்துணவு பெறமுடியாத ஏழ்மையே அதற்குக் காரணம் என்கிறார், டாக்டர் ரங்கபாஷ்யம்.

மலம், சிறு நீர், இரத்தம், சர்க்கரைப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. எக்ஸ்-ரேயும் எடுக்கப்படுகிறது. குடற்புண் ஏற்பட்டிருப்பதுதான் நோய்க்குக் காரணமா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள இவை உதவுகின்றன. புற்றுநோய் இருந்தாலும் இவற்றில் சில அடையாளங்கள் இருக்கலாம். 'அமீபியாசிஸ்' போன்ற குடல்நோய், உருக்கி நோயின் தொடக்கம், மூலவியாதி ஆகியவை இருக்கிறதா என்பதனையும் தெரிந்துகொள்ள வேண்டும். பித்த நீர்ப் பையில் கற்கள் சேர்ந்து அடைத்துக் கொண்டாலும் இது போன்ற சில அடையாளங்கள் இருக்கும். கூடவே சில சமயம் சாமாலை நோயும் உண்டாகும்.

ஆரம்ப நிலையில் மருந்துகள் உட்கொள்வதும் உணவுப்

31

பழக்கங்களைச் சரி செய்து கொள்வதும் மிகுந்த பலன் அளிக்கும். மருந்துகள் மாத்திரையாகவோ, பொடியாகவோ, கலவை நீராகவோ இருக்கும். அதிக நோய் வரும்போது அவற்றைப் பயன்படுத்துவது நல்லது. இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்குஒரு தடவை உணவு உட்கொள்ளும் இடை வேளைக்ளிலும், இரவிலும் மருந்தை உட்கொள்ளலாம். மாத்திரையாக இருந்தால் மென்று தின்பது நல்லது. வேறு சில மருந்துகளையும் மருத்துவர் உங்களுக்குக் கொடுப்பார். இவை சிறிதளவு கசப்பாக இருக்கும். அவற்றை இரவில் உட்கொள்வது நல்லது. மேலும் அம்மருந்துகளை உபயோகிக்கும் முறைகளை மருத்துவர் சொல்வார். காலையில் எழுந்திருக்கும்போது, நாக்கு வறட்சியாக ஆகும் வரை, அம்மருந்தின் அளவை அதிகரிக்க வேண்டும். அந்த நிலை வந்தபின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம்.

இப்படி மருந்துகளினால் குணமாகாவிட்டாலும், புண் முற்றிப் போய் அதனால் இரத்த வாந்தி அல்லது இரத்த பேதி ஏற்பட்டாலும், அறுவைச் சிகிச்சை அவசியமாகிறது. குடற் பகுதியில் சில அணுக்கள் அமிலங்களை உற்பத்தி செய்பவை. இந்த அணுக்கள் அதிகமாகலாம். அல்லது அவற்றின் அமில உற்பத்தித் திறன் கூடுதல் ஆகலாம். புகை பிடித்தல், வாசனைப் பொருட்கள் இவற்றினால் அமில உற்பத்தி அதிகப்படுகிறது. இந்த அமில உற்பத்தியை மருந்தால் குறைக்கலாம். அல்லது அறுவை மூலம் இரைப்பையின் இறுதிப் பகுதியை எடுத்து விடலாம். உரிய மருந்துகளைச் சாப்பிட்டு, நல்ல உணவு உட்கொண்டால் அறுவைச் சிகிச்சை தேவைப்படாமற் போகலாம்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு சரியான பழக்கங்களை அமைத்துக் கொண்டால், நலமாக வாழ முடியும். பெண்களுக்குக் கருவுற்ற காலத்தில் குடற் புண்ணின் வலி குறையும். இந்த அறுவைச் சிகிச்சையால், அவர்களுடைய தாய்மையை ஏற்கும் தகுதிக்கு எந்தக் கெடுதலும் நேர்வதில்லை.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு வயிற்றில் செரிப்பு, மலப்போக்கு ஆகியவற்றை எக்ஸ்ரே மூலம் ஆராய்கிறார்கள். நூற்றுக்கு எண்பது பங்கு திருப்திகரமான பலன்கள் கிடைக்கின்றன. அப்படிச் சரியாகாதவர்களுக்கு மறுபடி அறுவை சிகிச்சை செய்ய வேண்டி நேரலாம். சிகிச்சைக்குப் பிறகு அமில அளவு, உடல் நிறை ஆகியவற்றைச் சோதித்துக் கொள்ள வேண்டும். மருத்துவரிடம் ஆலோசனை பெற, கொஞ்ச நாட்களுக்குத் தொடர்ந்து மருத்துவமனைக்கு வந்து போவது நல்லது. உட்கொள்ள வேண்டிய உணவு, டானிக் ஆகியவற்றைப் பற்றியும் மருத்துவர் எடுத்துச் சொல்ல இது வசதி செய்யும்.

எந்த வகை உணவையும் நீங்கள் உட்கொள்ளலாம். ஆனால் எது உங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை என்பது அனுபவத்தில் தெரியும். அவற்றை விலக்கி விடுங்கள். காரமான உணவு, கடினமாகச் சீரணமாகும் உணவு, காபி போன்ற பானங்கள் ஆகியவை நோய்க்குக் காரணமாகச் சிலருக்கு இருப்பது உண்டு. அவற்றை அவர்கள் தவிர்க்க வேண்டும். புகைபிடிப்பதும், மது அருந்துவதும் கெடுதி செய்பவை. அவற்றை முழுவதும் நீக்கிவிட வேண்டும். மனக் கவலையும் பதட்டமும் இருக்கக் கூடாது. இதனால் புண் ஏற்படுவதும் அதிகரிப்பதும் நேருகிறது.

உணவைச் சிறு அளவில் எத்தனை தடவை உட்கொள்ள முடியுமோ அத்தனை தடவை உட்கொள்ள வேண்டும். அரிசிச் சாதம், கஞ்சி, வாழைப்பழம், ரொட்டி போன்றவற்றுடன் பால் போன்ற பானங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்கு ஒரு தடவை சிறு அளவில், உணவு உட்கொள்வதில் நிதானம் காட்டி, நன்றாக மென்று மென்று சாப்பிட வேண்டும். இரவில் நல்ல தூக்கமும், பகலில் சாப்பிட்ட பின் சிறிது ஓய்வும் அவசியம். பருப்பு, முட்டை, உடைத்த கடலை, பால் போன்ற புரதச் சத்துள்ள உணவு நன்மை தருவதாகும்.

சென்னையில் ஸ்டான்லி மருத்துவ மனையில் இதற்கான சிறப்புச் சிகிச்சைப் பகுதி இருக்கிறது. அங்கே இதற்கான ஆராய்ச்சிகளையும், மருத்துவ முறைகளையும் செய்வதோடு, ஆறு ஆண்டுகளுக்கு மேலாகக் கண்டறிந்த நோயாளிகளின் விவரங்களையும் தொகுத்து வைத்திருக்கிறார்கள். பிற நோயாளிகளின் மருத்துவத்துக்கு உதவுவதோடு, சிகிச்சை செய்து கொண்டவர்களைப் பின்பு தொடர்ந்து கவனிக்கவும் இம்முறை மிகவும் பயன்படுகிறது.

நல்ல உணவு, நிதானமாக உட்கொள்ளும் உணவு, வேளா வேளைக்குச் சாப்பிடும் உணவு உங்களைக் குடல் புண்ணிலிருந்து காப்பாற்றும். மனக்கவலை, புகை, பிடிப்பது, பசி வேளையில் காபி, தேநீர் போன்ற பானங்களை அருந்துவது ஆகியவற்றைத் தவிர்ப்பது பெரிதும் உதவும். எதற்கும், ஆரம்ப நிலையிலேயே மருத்துவரை அணுகுங்கள்.

டாக்டர் ரங்கபாஷ்யம் குழுவினர் இந்த நோயாளியின் இரைப் பையை மேலே தூக்கி வைத்து அவரைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.

கண்கவர் வண்ணங்களில், எண்ணில் அடங்கா டிசைன்களில், சகாய விலையில், காஞ்சீபுரம் பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க சிறந்த இடம்

கோ-ஆப்டெக்ஸ்

குறளகம், தி. நகர், லஸ், மற்றும் காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி.

CriterionCO2753TM A

பதிவு எண். M. 8676

தமிழரசு

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்திற்கு என் நன்றி.

"இதன் உதவியால் நானும் ஒரு நாள் டாக்டராவேன்!"

(தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய், கல்வி, மருத்துவம், வீட்டு வசதி போன்ற சமுதாய முன்னேற்றத்துக்கான பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது)

ரூ. ஒரு லட்சம் பரிசு பெறலாம்

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,00,000

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய் (ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்: 30-9-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்